ஓம்

தத்ஸத் ப்ரஹ்மணேநம:

சாது ஸ்ரீ நிச்சலதாஸர் அவர்கள்

இயற்றி அருளிய

ஸ்ரீ விருத்திப் பிரபாகரம்

THE * TANJORE. *

இஃது

தஞ்சை பிரம்ம நிஷ்ட [illegible] ப்புஸ்வாமி ராஜு

என்னும் பூர்வாசிரம நாமம் பூண்ட

ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள்

அவர்களால் ஹிந்தி பாஷையிலிருந்து தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை

1926

விலை ரூபா 5

[All Rights Reserved]

ஓம்



தஞ்சை பிரம்மநிஷ்ட பண்டித வே. குப்புஸ்வாமி ராஜு

என்னும் பூர்வாசிரம நாமம் பூண்ட

ஸ்ரீலஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள்.

உ

ஸ்ரீகணேசாயநமஃ

முகவுரை

"அகம்பிரமாஸ்மி" என்னும் விருத்திவடிவப் பிரமை ஞானத்தான் விஷயத்தோடு கூடிய அப்பிரமை ஞான வடிவப் பந்தத்தின் நீக்கமும் பரமாநந்தப் பேறுமாய மோக்ஷமுண்டா மென்பது வேதாந்த சித்தாந்தம். ஆண்டுப் பொதுவாய் விருத்தி யின் சொரூபம் காரணம் பயன் என்பவற்றை அறிந்தாலன்றி முற்கூறிய விருத்தியின் சொரூபம் காரணம் பயன் என்பவை அறியப்படாவாகலின், அம் மூன்று வஸ்துக்களின் நிரூபணம் அவசியம் செய்யற்பாற்றும். பிரமாணாதிகளை அநாத்ம பதார்த் தங்களென் றறிந்து அவற்றைப் பிரதிபாதித்தலில் சுருதியும் சூத்திரகார பாஷியகாரார்களும் உதாசீனமாயிருக்கினும், அவற் றின் பிரதிபாதனம் மோக்ஷகாமிகளுக்கு வேதாந்தப்பொரு ளைச் சிந்தித்தலில் மிக்க உபயோகமுள்ளதாமாகலின் விருத்தி யின் சொரூபம், பிரமை அப்பிரமை முதலிய வேறுபாடுகள், காரணம், பயன் என்பவற்றை நிரூபித்தல் தகுதியாம். முற் கூறிய பொருள்களின் நிரூபணம் நியாயாதி அநேக நூல்களில் நிரூபிக்கப்பட்டிருத்தலோடு வேதாந்தபரிபாஷை தத்துவாநு சந்தானம் பேததிக்கார முதலிய வேதாந்த நூல்களினும் இவ் விசாரம் செவ்வையாய் எழுதப்பட்டுளது. அங்ஙனமாயினும் அவை சம்ஸ்கிருத பாஷை யுணர்ச்சி யுடையாருக் குபயோக மாதலே யன்றிப் பிராகிருதபாஷைமாத்திர முணர்ந்தார்க் குப யோகமாதலில்லையென் றுணர்ந்து பரமகாருணிகரும், தீவிர புத்திசாலியும், ஷட்சாத்திர முணர்ந்தவரும், சுரோத்திரியப் பிரஹ்ம நிஷ்டரும், அநேக குணகணங்களா லலங்கரிக்கப்பட்ட ஆசாரியகோடியிலிருப்பவரும், ஸ்ரீதாதுஜீ அவர்களின் சம்பிர தாயமாகிய ஆகாயமண்டலத்தில் தினமணியாய் விளங்கியவரு மாகிய ஸ்ரீ நிச்சலதாசரென்பவர் நரமொழியுணர்ந்தார்மாட் டன்புகூர்ந்து முதலிற் றனது நிஷ்டையைச் சூசிப்பிக்கும் ஸ்ரீ விசாரசாகர மென்னும் நூலை யியற்றியருளிப், பின்னர் எழு

வருடபரியந்தம் மெல்ல மெல்ல இருபத்தேழு லக்ஷம் சுலோ
கக் கணக்குள்ள நூல்களைத் தான் சங்கிரகம் செய்து அவற்றை
விசாரித்து, தீவிர புத்திமான்களாகிய ஹிந்திபாஷை யுணர்ச்சி
யுள்ளார் பொருட்டு எல்லாவற்றின் நிர்ணய வடிவ ஸ்ரீ விருத்
திப்பிரபாகர மென்னும் நூலினை யியற்றியருளினர். அதன்கண்
விருத்தியின் சொரூபம், பிரமை அப்பிரமை வடிவ அதன்
பேதம், பிரமாணமுதலிய வடிவ அதன் காரணம், வியவகார
சித்தியும் மோக்ஷசித்தியுமாகிய அதன் பயன் என்பவை நிரு
பிக்கப்பப்பட்டுள. அதனை நூலாசிரியர், வித்துவான் என்னும்
பட்டம் பெற்ற ஸ்ரீ ராம்சிம்ஹஜீ என்னும் பூந்திகோட்டை யரச
னிடத்து வசிக்குங்காலத்து, நியாய வேதாந்த முதலிய
பொருள்களா லமையப்பெற்றதாய், விருத்தியின் சொரூபத்தை
யும் காரணத்தையும் நிரூபிக்கும் ஏழாவது பிரகாசம் வரையிற்
செய்து முடித்து "விருத்தி தீபிகை" என்னும் பெயரிட்டிருந்
தார். அதனை அவ் விடத்திற்றானே அவ்விராஜா பதிப்பித்திருந்த
னர். பின்னர்க் கேவல வேதாந்த சித்தாந்தத்தின் சித்தாந்தலேச
முதலிய நூல்களின் பொருள்களால் அமையப்பெற்றதும்
விருத்தியின் பயனை நிரூபிப்பதுமாகிய இதன் எட்டாவது பிர
காசத்தைச் செய்து, விக்கிரமசகாப்தம் 1920 - ல் டில்லியில்
பரப்பிரஹ்ம சமரசபர்வத்திற்கு அடுத்த முற்காலத்தில் தம்
மாணுக்கர்களைப் பிரேரித்தல்வாயிலாக எட்டாவது பிரகாசத்
தைச் சேர்த்தலால் இந் நூலிற்கு "விருத்திப்பிரபாகரம்" என்
னும் பெயரைக் கற்பிக்கலாயினர். இந்நூல் பண்டிதர் ஸ்ரீ நிச்
சலதாஸரவர்களது பாண்டித்தியத்தின் பிரக்கியாதிக் கேது
வும், முமுக்ஷுக்களது மதியின் புஷ்டியைத் தரும் நல்லௌ
ஷதமும், அநேக நூல்களைப் பார்த்தலாகிய ஆசைக்குச் சாந்தி
வடிவ சந்தோஷத்தின் சரணியு (மார்க்கமு) மாம். இந்நூல் ஏற்
பட்ட பின்னர் ஹிந்தி பாஷையை யப்பியசித்தவர்களிற் பலர்
பண்டிதராய்விட்டனர். ஆதலால், ஸ்ரீநிச்சலதாசர்: ஸ்ரீவிசார
சாகரம் ஸ்ரீவிருத்திப்பிரபாகர மென்னும் இரண்டு நூல்களை
யும் இயற்றி ஜீவர்களிடத்து மிக்க அநுக்கிரகம் செய்திருக்கின்
றனர். ஸ்ரீவிருத்திப்பிரபாகரத்தை அறிதலிற் சாமர்த்தியமின்
றிய அற்ப மதியினராகிய அதிகாரிகளின் பொருட்டுப் பண்டி
தர் ஸ்ரீபீதாம்பரஜீயானவர் "ஸ்ரீவிருத்திரத்நாவலி" என்னும்

நூலைச் செய்திருக்கின்றனர். அதுவும் விருத்திப்பிரபாகரமென்னும் மஞ்சத்திற்கு நிச்சிரேணி (ஏணி) யாம். வெகு காலத்திற்குமுன், உதாசீன பரமஹம்ஸரும்; சாதுக்கூட்டங்களின் சிரோமணியும், சாஸ்திரங்களிற் கூறிய சகல சற்குணங்களமைந்தவரும், நிரந்தர வேதாந்தவிசாரதற்பரரும், பிரபஞ்சோபரதரும், ஸ்ரீநிச்சலதாசர் மாணாக்கருமாகிய ஸ்வாமி திரிலோகராம்ஜீ என்பவர் பிரயாசையுடன் இந்நூல் முழுவதையும் சுத்தமாய் எழுதுவித்து, மும்பயி (பம்பாய்) நகர்க் கெழுந்தருளி அங்குப்பதிப்பித்து, பண்டித பீதாம்பரர் முதலிய சற்சனர்களுக்குச் செவ்வையாய்ச் சிரவணஞ் செய்வித்து, விக்கிரமசகம் 1925-ல் அங்கிருந்து புறப்பட்டு மகிமண்டலத்தில் வசிக்கொண்டிருந்தனர். வெகுகாலத்திற்குப் பின்னர்ப் பிரஹ்மநிஷ்டபண்டித ஸ்ரீ பீதாம்பரஜீ அவர்கள் இதனைச் செவ்வைபாய்ப் பரிசோதித்து சில முக்கியப் பிரசங்கங்களும் அநேக மத்தியப்பிரசங்கங்களுமாகப் பிரித்து அமைத்துக்கொடுக்க அவ்வாறே பதிப்பிக்கப்பட்டுளது. விசாரசாகரம் விருத்திப்பிரபாகரமென்னும் இரண்டனையும் செவ்வையாய் ஆய்ந்துணர்ந்தோர்: பிரஹ்மசூத்திர பாஷியமுதல் ஸ்ரீ அப்பயதீக்ஷிதஸ்வாமிகளா லியற்றப்பட்ட சித்தாந்தலேசமுதலிய அத்வைத நூல்களையும், நியாயமுதலிய ஏனைய நூல்களிற் பலவற்றையும் பலநாள் முயன்று கற்பதனுலாம் பயனை எளிதிற் பெறுவதோடு, நல்லாசிரியர்வாயிலாகக் கேட்டலால் நிரதிசயாநந்தத்தையு முறுவரென்பது திண்ணம்.

ஆனால், இந் நூல்கள் பிறமொழியி லிருத்தலால் இத் தமிழ் நாட்டாருக் குபயோகமாகா திருத்தல்கண்டு, அவற்றைத் தமிழ் நாட்டாருக் குபயோக மாக்குவிப்பான் முயன்றகாலத்து, அவற்றுள் முன்னையதாகிய விசாரசாகர மென்னும் நூல் முன்னமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருத்தலின், அதனை விட்டுப் பின்னையதாகிய இவ் விருத்திப்பிரபாகரமென்னு நூல் மொழிபெயர்க்கப்பட்டது. இந் நூலாசிரியர் இவ்வரிய நூலை மிக வெளிய நடையில் வசனரூபமாக எழுதியிருத்தல்பற்றி அவ்வாறே இங்கும் யாவரும் எளிதி லுணருமாறு இஃது எளிய தமிழ்நடையில் மொழிபெயர்க்கலாயிற்று. இதனைக் கண்ணுறும் நல்லோர் யாரும் பிரமாதத்தா லேற்படும் எழுத்துப்பிழை சொற்பிழை முதலியவற்றைக் கருதாது, இவ்வரிய

பொருள் வெளிப்பட நேர்ந்த திருவருட்பார்வைகை நோக்கி யெமது குற்றத்தைப் பொறுத்தருள்வாராக.

பிரத்தியக்ஷமுதல் அறுவகைப் பாகியம் சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் ஆந்தரம் ஈசுவராசிரிதம் என்னும் வேறுபாட்டால் எண்வகைப் பிரமாவிருத்தியும், சம்சயம் பிரமம் தர்க்கம் சொப்பனப் பிரமவிருத்தி அயதார்த்த ஸ்மிருதி யென்னும் வேறுபாட்டால் ஐவகை அயதார்த்த அப்பிரமா விருத்தியும், யதார்த்த ஸ்மிருதி யென்னும் யதார்த்த அப்பிரமையுமாய இவை விருத்தி ஞானவடிவ பதினான்கு இரத்தினங்கள். இவற்றை இந்நூல் சூரியன்போல் விளக்குவதா யிருத்தலின் இதற்கு விருத்திப்பிரபாகர மென்றும், இதன் எட்டுப்பிரகரணங்களுக்கும் பிரகாச மென்றும் பெயரிடப்பட்டது. இதன்கண் உள்ள விஷயங்களை இதன் அநுக்கிரமணிகையினால் தெரிந்துகொள்ளலாம்.

இந் நூலாசிரியர் ஸ்ரீ நிச்சலதாஸர்சரித்திர முழுவதனையும் எழுதுவதற்குத் தக்க ஆதாரம் அகப்படாமையின் ஈண்டுச் சிறிது வரையப்படுகின்றது:—

ஸ்ரீ நிச்சலதாஸரது ஜன்மகாலமும் இடமும் அறியப்படவில்லை. வித்தியாப்பியாசத்தில் இவருக்கு மிக்க விசுவாசமிருந்தது. 14-வது வருஷமுதல் 70-வது வருஷபரியந்தம் வித்தியாப்பியாசத்திலேயே காலத்தைக் கழித்தனர். அது விசாரசாகரத்தின் 526-வது பிரசங்கத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய அப்பியாசமுடையோர் இக்காலத்து அரிதாய்க்காணப்படுகின்றனர். விசாரசாகரத்தினானே அவரது அற்புத நிஷ்டை அநுமிக்கற்பாற்று. என்னை, சித்தாந்தக் கூற்றெதனையும் ஓரிடத்தும் ஒளித்துக் கூறினாரில்லை; அன்றியும், மோக்ஷகாமருக்கு நிஷ்டை கூடுதற் றன்மையினையும் செவ்வனே அதன்கண் அமைத்திருக்கின்றனராகலின்.

அவர் வியவகாரம் மிக உத்தமமானதும் சங்கை யில்லாததுமா யிருந்தது. சிலர் ஞானித்தன்மை யபிமானத்தைக் கொண்டு தேகாபிமான முதலியவற்றில் அமிழ்ந்திருக்கின்றனர். அவ்வாறு இம் மகாத்ம புருஷ ரிருந்தாரில்லை. மகாவிரக்த நிலை

யினை யுடையராய்ப் பெருத்த பிரஹ்ம நிஷ்டராயிருந்தனர். பிரஹ்மாகார விருத்தியிலேயே எப்போதும் மூழ்கியிருப்பர்.

நியாய வியாகரண முதலியன புத்தியைத் தீவிரமாக்குகின்றன. தீவிரபுத்தி வேதாந்தத்தில் உபயோகமாம். அங்ஙனமாயினும் அதிகமாய்ப் படித்தலால் அவை அநாத்மாவின் (துவைதத்தின்) கண் புத்தியைச் சேர்ப்பித்து மதியை மலினமாக்கி விடும் என்று கூறுவர். அதாவது, நூறு மடங்கு வேதாந்தத்தை விசாரித்தால் அப்போது நியாயத்தாற் றூஷிக்கப்பட்ட புத்தி சாந்தியை யடையும் என்று முதியோர் மொழிவர். ஸ்ரீ நிச்சலதாஸர்: வியாகரணம் நியாய முதலியவற்றில் மிக்கச் சமர்த்தராயினும் அவருக்கு வேதாந்தத்தின்கண்ணேயே பிரபல நிஷ்டையிருந்தது.

தாம் சிற்சிலருக்கு நியாயாதி சாஸ்திரங்களைப் படிப்பித்துக்கொண்டிருப்பர். ஆங்கு எவரேனும் காலையில் நியாய முதலியவற்றைப் படிக்க வருவரேல், அவர்களைப் படிப்பிக்காது "காலையில் யாம் அநாத்மப் பிரதிபாதக நூல்களைப் படிப்பியேம்" என்று பகர்வர்.

இத் திருஷ்டாந்தங்களால் நிச்சலதாஸர் அற்புத நிஷ்டையுடையவரா யிருந்தனரென்பது பெறப்பட்டதாகின்றது.

ஸ்ரீ நிச்சலதாஸரது பாண்டித்தியம் மிக அற்புதமான தென்பது அவரது அப்பியாசத்தினுலே பெறப்படுகின்றது. விருத்திப்பிரபாகர நூலைப்பார்த்துப் பெரிய பெரிய வித்துவான்களும் அவரது பாண்டித்தியத்தைப் புகழ்கின்றார்கள். அதிகமாய்ச் சொல்லுவதினு லென்னை? அவர் காலத்திலும் இப்போதும் சாது புருஷர்களில் பரிபக்குவ வித்தையினை யுடைய பண்டிதர் ஸ்ரீ நிச்சலதாஸருக்குச் சமானமானவர் ஒருவரும் இல்லை.

ஸ்ரீ நிச்சலதாஸர் பிருதிவியின்கண் யாண்டுச் சரித்துக்கொண்டிருந்தனரோ, ஆண்டுத் தினந்தோறும் வேதாந்த சாஸ்திரத்தின் கதை செய்துகொண்டிருப்பர். விசாரசாகரத்தையும் தாம் அநேகமுறை கதை செய்திருக்கின்றனர். அவர் சிரவணம் செய்வித்துக்கொண்டிருந்த விடங்கள்தோறும் சிரவணத்தின்

பொருட்டு அநேக சாதுக்களின் சபை சேர்ந்து அதிரஸிக பாஷணத்தைக் கேட்டு ஆநந்த முடையராவர்.

அநேகமாய் ஸ்ரீ நிச்சலதாஸர் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திலேயே வசித்தனர். அங்குத் தாமும் சில சிரவணங்களிற் செல்லுவர். ஒரு சமயம் ஸ்ரீ காசியில் இராமாயண கர்த்தாவின் விலக்ஷணரான மஹாத்மா ஸ்ரீ துளஸிதாஸ ரென்பவர் கதை செய்துகொண்டிருந்த விடத்துத் தாம் சென்றார். தொடர்பாட்டால் ஸ்ரீ துளஸிதாஸர் "ஈசுவரனிடத்து ஆவரண சக்தியில்லை, விக்ஷேபசக்தி யுண்டு" என்று சொல்ல, அதனை ஸ்ரீ நிச்சலதாஸர் கேட்டு "ஈசுவரனிடத்து இரண்டுமில்லை" என்றார். இவ் விஷயமாய்ச் சிலநேரம் வார்த்தை நடந்தது. அதன்பின் அவர் அம் மகாத்மாவின் கதைக்குப் போனாரில்லை. காரணம் யாதெனின், நம்முடைய வார்த்தையினால் யாருக்கும் துன்ப முண்டாகலாகாது என்பதாம். ஆனால், அம் மகாத்மாவின் நிஷ்டையைப்பற்றித் தாம் புகழ்ந்து பேசுவர். அவ்வாறே துளஸிதாஸரும் நிச்சலதாஸரது பாண்டித்தியத்தையும் அற்புத நிஷ்டையினையும் அடிக்கடி ஸ்துதி செய்வார். "ஈசுவரனிடத்து ஆவரண சக்தி, விக்ஷேப சக்தி இரண்டுமில்லை" என்பது விசாரசாகரத்தின் 206, 207 - வது பிரசங்கங்களிற் செவ்வையாய்ப் பிரதிபாதனஞ் செய்யப்பட்டுளது. விசாரசாகரமென்னு நூலைச் செய்யுங்காலத்து எந் நூலின் சகாயமுமின்றி ஒருவர் சகசமாய் நிரூபம் எழுதுவதுபோலச் செய்து முடித்தனர். விருத்திப்பிரபாகரத்தைச் செய்யுங் காலத்தில் வேறு நூல்களைப் பார்ப்பர். அதுவும் தமது நூலைத் தோஷமின்றிய தாக்குதற் பொருட்டாம். விருத்திப்பிரபாகரத்தில் அநேக பிரமாணமுடைய நூல்களின் பிரமாணங்கள் காட்டப்பட்டன. அதன்கண் நூல்களின் தோஷமும் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டுளது. இப்போதும் சிற்சில சமஸ்கிருத முணர்ந்த பண்டிதர்கள் அந் நாட்டில் விருத்திப்பிரபாகரத்தை மறைவாக வைத்து வாசித்து வருவ தென்னை? சமஸ்கிருதவுணர்ச்சியுடையோராயிருந்தும் பாஷை நூலின் சகாயத்தைக் கொள்ளுதல் அவர்களுக்கு நாணமா யிருத்தலின் என்க. ஆனால், மிக்க மேன்மை யுடையதா யிருத்தலின் அதன் சகாயத்தைக் கொள்ளுகின்றனர். விருத்திப்பிரபாகரத்தில் நியாயமுகலியெ

அநேக பாண்டித்திய மதங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. கடைசிப் பிரகரணத்தில் சகல மதங்களையும் கண்டித்து வேதாந்த மதத்தைப் பிரதிபாதனம் செய்திருக்கின்றனர்.

ஹிந்துஸ்தானத்தில் புந்தீயென்னும் நகரத்தில் ராமசிம்ஹ ராஜாவானவர் நிச்சலதாசரை மிக்க ஆதரவோடு தம்மிடத்து வைத்திருந்தனர். இராஜா இராணி இருவரும் அவரிடம் குரு பாவம் வைத்திருந்தனர். நிச்சலதாஸரது சேர்க்கையினால் அவ் விராஜா பண்டிதபதவியை யடைந்தனர். இராஜாவானவர் ஒரு கால் பெரிய பண்டிதர்களின் சபை சேர்த்திருந்தார். அதில் சாஸ்திரார்த்தங்கள் நிகழ்ந்தன. அதனை இராஜா உள்ளவாறே பரீக்ஷித்தனர். அன்றுமுதல் பண்டிதர்கள் யாவரும் அவ்வரச னுக்கு வித்துவானென்று பெயர்வைத்தனர். அவ் வரசன் நிச்சல தாசரை வணங்கி "ஹிந்துஸ்தானி பாஷையில் பண்டிதர்களுக் குபயோகமாகத்தக்க வேதாந்த நூல்கள் ஒன்றுமில்லை யாக லின் தாம் செய்யுமிடத்து அது சகஜமாயாகும்" என்று பிரே ரிக்க, தாம் பாஷை யுணர்ச்சி உடையாரிடத்துக் கிருபா நோக் கத்தால் விருத்திப்பிரபாகரத்தைச் செய்தருளினர். ஸ்ரீ நிச்சல தாசர் ஸ்ரீ காசியி லிருந்துகொண்டு 2700000 சம்ஸ்கிருத சுலோகங்களைச் சங்கிரகித்தார். தாம் சம்ஸ்கிருத வுணர்ச்சியில் வல்லவராயினும், பாஷை யுணர்ச்சி உள்ளார்பொருட்டு இரண்டு உத்தம நூல்களை வெளிப்படுத்தினா ரென்பது விசாரசாகரத் தில் 526-வது பிரசங்கத்தாற் தெரியவருகின்றது.

ஸ்ரீ நிச்சலதாஸர் ஸ்ரீகடவல்லி யுபநிஷத்தின்பேரில் சம்ஸ் கிருத வியாக்யானமும் வைதிக சாஸ்திரத்தின் ஒரு நூலும் செய்திருப்பதாகக் கேள்விப்படுகின்றோம். 39 யுக்திகளுள்ள யுக்திப்பிரகாசமென்னும் நூலும் செய்திருப்பதாகத் தெரியவரு கின்றது. காவ்விய சாஸ்திரங்களிலும் சமர்த்தரென்பது அவர் செய்த விசாரசாகர நூலின் சந்தசுகளினாலேயே விளங்கும்.

ஸ்ரீ சுந்தரவிலாச மென்னும் நூலின் கர்த்தாவாகிய ஸ்ரீ சுந்தரதாஸரும் ஸ்ரீ நிச்சலதாஸரும் சேர்ந்து ஸ்ரீ தாதூஜீ அவர்கள் மார்க்கத்தை (சம்பிரதாயத்தை) மிகப் பிரகாசப் படுத்தினர்.

ஸ்ரீ நிச்சலதாஸருக்குச் சம்பிரதாயத்தின் அபிமான மிருந்ததில்லை. அவர் பெரிய நிரபிமானியா யிருந்தார். பாலியா வஸ்தையிற்றும் சாதுதசையிலேயே யிருந்தனர். அதில் பெருத்த வித்தியாப்பியாசத்தைச் செய்து, பின்னர்ப் பெரும்பா லும் பிரஹ்ம சிந்தனத்திலேயே அமிழ்ந்தியிருப்பர். விக்கிரம சகம் ககூஉ0-ல் டில்லிப் பட்டணத்தில் தேகவியோக மெய்தி னர். அவருக்கு ஸ்ரீ கிஹடோலியில் யாண்டு விசாரசாகரம் சமாப்தி யடைந்ததோ ஆண்டுக் குரு சம்பிரதாயமு மிருக்கின் றது. இப்போதும் அங்கு அவர் சிஷ்யர்களு மிருக்கின்றார்கள். இம் மகாத்மாவின் சரித்திரம் சம்பூரணமாய்க் கிடைக்குமாயின் அப்போது விஸ்தாரமாய் எழுதிப் பிரசுரிக்கப்படும்.

பரோபகாரத்தையே தமக் கங்கமாகக் கொண்டொழுகிய ம-ா-ா-ஸ்ரீ சை. இரத்நசெட்டியார் அவர்கள் ஜீவர்கள் சம்சய விபரீதங்க ளொழிந்து நிரதிசயாநந்த முறுதற்பொருட்டு இந் நூலை அச்சியற்றி வெளிப்படுத்த வேண்டுமென் றெண்ணி முயன்றவாறு முடிவுபெறச்செய்த ஈசனுகிய எம்பெருமான் இந் நூல் இந் நிலவுலகில் என்று நிலைபெறும்படி அருள்புரிவாராக.

☞ தஞ்சை - வெ - குப்புஸ்வாமி ராஜு.

ஸ்ரீ விருத்திப்பிரபாகரத்தின் அநுக்கிரமணிகை

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
	முதற் பிரகாசம்	
	பிரத்தியக்ஷப் பிரமாண நிரூபணம்	
1	விருத்தியின் சமானிய லக்ஷணமும் பேதமும் ...	1
2	பிரமாண பேதம் ...	5
3	கரண லக்ஷணம் ...	6
4	பிரத்தியக்ஷப் பிரமையின் பேதம் ...	7
5	பிரத்தியக்ஷப் பிரமையின் சுரோத்திரஜப் பிரமையின் நிரூபணம் ...	8
6	துவாசப்பிரமையின் நிரூபணம்	15
7	சாக்ஷுஷப்பிரமையின் நிரூபணம் ...	21
8	இராசனப்பிரமையின் நிரூபணம் ...	25
9	கிராணஜப்பிரமையின் நிரூபணம் ...	26
10	மானசப்பிரத்தியக்ஷப் பிரமையின் நிரூபணம் ...	28
11	பிரத்தியக்ஷப் பிரமையினது கரணத்தின் விசாரம் ...	33
12	ஞானத்தின் ஆசிரயத்தைக் கூறுதல் ...	34
13	நியாயமதத்தின் அநுசாரமான பிரமத்தின் தன்மை	35
14	வஸ்துவின் ஞானத்தில் விசேஷணஞானம் ஏதுவாதல்	,,
15	விசேஷண விசேஷியங்களின் சொரூபம் ...	39
16	விசேஷண விசேஷியங்களினது ஞானத்தின் பேத பூர்வகமான நியாயமதத்தினது பிரமஞானத்தின் சமாப்தி ...	42
17	வேதாந்த சித்தாந்தத்தின் அநுசாரமாக இந்திரிய ஜந்நியமாகாத பிரமஞானத்தின் தன்மை ...	46
18	நியாயத்திற்கும் வேதாந்தத்திற்குமுள்ள அந்நிய வேற்றுமை ...	48
19	சாரக்கிராகி (சாரத்தைக் கிரகிக்கும்) திருஷ்டியினால் வாசஸ்பதி மதத்தின் (மனதினது இந்திரியத் தன்மையின்) அங்கீகாரம் ...	49
20	நியாயத்திற்கும் வேதாந்தத்திற்கும் பிரத்தியக்ஷ விசாரத்திலுள்ள பேதம் ...	54
21	பிரத்தியக்ஷப் பிரமையின் உபசங்காரம் ...	56
	இரண்டாவது பிரகாசம்	
	அநுமானப் பிரமாண நிரூபணம்	
22	அநுமிதியினது சாமக்கிரியின் பேதமும் சொரூபமும்	57
23	அநுமிதிஞானத்தில் வியாப்தியினது ஞானம் அபேக்ஷிக்கப்படுமாறு ...	62
24	சகல நையாயிக மதத்திலுமுள்ள அநுமிதியின் கிரமம்	64
25	அநுமிதியின்கண் மீமாம்ஸை மதம் ...	66
26	அத்வைத மதாநுசாரமான அநுமிதியின் கிரமம் ...	,,
27	வியாப்தியினது ஸ்மிருதியின் வியாபாரத்தன்மையும் சம்ஸ்காரத்தின் அவ்வியாபாரத்தன்மையும் ...	68

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
28	சுவார்த்தாநுமிதி அநுமானங்களின் சொரூபம் ...	70
29	பரார்த்த அநுமானம், அநுமிதி, தர்க்கமென்பவற்றின் சொரூபம் ...	71
30	வேதாந்தமதத்தில் தர்க்கத்தோடு கூடிய பரார்த்தாநுமானத்தின் சொரூபம் ...	74
31	வேதாந்தத்தில் அநுமானத்தின் பிரயோஜனம் ...	75
	மூன்றவது பிரகாசம்	
	சப்தப்பிரமாண நிரூபணம்	
32	சாப்திப்பிரமையின் பேதம் ...	76
33	சாப்திப்பிரமையின் தன்மை ...	77
34	சப்தத்தின் சக்திவிருத்தியைக் கூறுதல் ...	80
35	சாப்திப்பிரமையின் கிரமபூர்வகமாகச் சத்தியில் விவாதம் ...	82
36	வாக்கியங்களின் பேதம் ...	89
37	சத்தத்தின் சக்திவிருத்தி லக்ஷணாவிருத்திகளைச் சுருக்கமாகக் கூறுதல் ...	90
38	வாக்கியார்த்த ஞானத்தின் கிரமம் ...	92
39	இலக்ஷணையின் றன்மை ...	95
40	கௌணிவிருத்தியைக் கூறுதல் ...	108
41	நான்காவது வியஞ்சனாவிருத்தியைக் கூறுதல் ...	,,
42	இலக்ஷணையின் பேதத்தைக் கூறுதல் ...	110
43	சாப்தஞானத்திற்கு ஏதுவாந்தன்மையின் விசாரம் ...	116
44	மகாவாக்கியத்தில் இலக்ஷணையின் உபயோகமும் அதன்கண் சங்கை சமாதானங்களும் ...	120
45	இலக்ஷணையின்றிச் சக்திவிருத்தியால் மகாவாக்கியத்திற்கு அத்வைதப் பிரஹ்மத்தை யறிவிக்குந் தன்மை யுளதெனல் ...	123
46	மீமாம்ஸக மதம் ...	134
47	பிராசீனவிருத்திகாரர் மதம் ...	135
48	ஆறு வைதிக வாக்கியங்களினது தாற்பரியத்தின் இலிங்கம் ...	140
49	அவாய்நிலைமுதலிய நான்கும் சாப்தபோதத்தின் சககாரிகளாமெனல்	142
50	தீவிரமான ஞானவிருப்பம் போதத்திற்கு ஏதுவாதல்	152
51	வேதாந்தத்தின் தாற்பரியமும், வேதத்தினையும் சொல்வினையும் விசாரித்தலும் ...	156
	நான்காவது பிரகாசம்	
	உவமானப்பிரமாண நிரூபணம்	
52	கிரமபங்கத்தின் அபிப்பிராய பூர்வகமான இரண்டு நியாயக் கிரமத்தான் உவமான உவமிதிகளின் இருவகைச் சொரூபம்	164
53	வேதாந்தத்தின்படி உவமானஉவமிதிகளின் சொரூபம்	167
54	விசாரசாகரத்தில் நியாயக்கிரமமாய் உவமிதியைச் சொல்லுதலின் அபிப்பிராயம்	168

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
55	முற்கூறிய வேதாந்தக்கிரம நியாயக்கிரமங்களின் விலக்ஷணமான உவமிதி உவமானங்களின் இலக்கணம்	170
56	வேதாந்த பரிபாஷையினும் அதனுரையினும் கூறியதன் கண்டனம் ...	171
57	காரணத்தினது இலக்ஷணத்தின் நிர்ணயம் ...	176
	ஐந்தாவது பிரகாசம்	
	அர்த்தாபத்திப் பிரமாணம்	
58	நியாயமதத்தில்அர்த்தாபத்தியின் அங்கீகாரமின்மையும், மூவகை அனுமானங்களின் வர்ணனமும்	180
59	வேதாந்தத்தின்படி ஒரே அந்நுவயி (அந்நுவயிவெதிரேகி) அநுமானமும், அர்த்தாபத்தியைக் கொள்ளுதலும் ...	183
60	அர்த்தாபத்திப்பிரமாண பிரமைகளின் சொரூபபேதமும், உதாரணமும் ...	185
61	அர்த்தாபத்தியின் ஜிஞ்ஞாசுவுக் கநுகூலமான உதாரணம் ...	190
	ஆறவது பிரகாசம்	
	அநுபலப்திப் பிரமாணம்	
62	அபாவத்தின் சாமானிய லக்ஷணமும் பேதமும் ...	193
63	பிராசீன நியாயமதத்தில் அபாவங்களின் ஒன்றற்கொன்றுள்ள விலக்ஷணத்தன்மையின் சாதகவுணர்ச்சி	196
64	நவீன நியாயமதத்தில் அபாவங்களின் ஒன்றற்கொன்றுள்ள விலக்ஷணத்தன்மையின் சாதகவுணர்வு ...	197
65	அபாவத்தின் இரண்டாவது இலக்கணமும் விலக்ஷண வுணர்வும் ...	198
66	அந்நியோந்நியாபாவ லக்ஷணமும், அதிற் சங்கை சமாதானமும் ...	199
67	நவீனக்கிரமமாகச் சம்சர்க்காபாவத்தின் நான்கு பேதமும், அவற்றி னிலக்கணமும், பரீக்ஷையும்	204
68	நான்கு சம்ஸர்க்காபாவங்களுக்கும் பிரதியோகியோடு விரோதமும், அந்நியோந்நியாபாவத்திற்கு அவிரோதமு முண்டெனல்	212
69	நால்வகைச் சம்ஸர்க்காபாவங்கட்கும் ஒன்றற்கொன்றுள்ள விரோதமும், அந்நியோந்நியாபாவத்திற்கு அவற்றோடுள்ள அவிரோதமும் ...	216
70	பிராசீனமதத்தில் அபாவங்களுக்கு ஒன்றற்கொன்றும் பிரதியோகியோடு முள்ள விரோதாவிரோதங்களை விரிவாய்க் கூறுதல் ...	217
71	நவீன தார்க்கிகர் சாமயிகாபாவஸ்தானத்தில் அநித்திய அத்தியந்தாபாவத்தை யங்கீகரித்தலும், அதிற் சங்கை சமாதானமும் ...	236
72	நவீன தார்க்கிகரது முற்கூறிய மதத்தின் கண்டனம்	238
73	நியாய சம்பிரதாயத்தில் கடப்பிராத்துவம்சத்தின் பிராகபாவம் கடமும் கடப்பிராகபாவமுமாமெனல் ...	242

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
74	முற்கூறிய மதத்தின் கண்டனமும், கடப்பிரத்துவம் ஸத்தினது அபாவப்பிரதியோகியினையுடைய பிராக பாவத்தின் சித்தியும் ...	243
75	சாமயிகாபாவத்தின் பிராகபாவம்அபாவப் பிரதியோகி யினை யுடையதாதல் ...	244
76	பிராசீனர் பிராகபாவத்தினது பிரத்துவம்ஸம் பிரதியோகிப் பிரதியோகியிலும் பிரதியோகிப் பிரதியோகியின் துவம்ஸத்திலும் அடங்குமென்றல் நவீனரால் கண்டிக்கப்படுதலும், அதன் அபாவப்பிரதியோகித்தன்மையும் ...	,,
77	கடாந்நியோந்நியாபாவத்தினது அத்தியந்தாபாவத்தின் கடத்தன்மைவடிவாந்தன்மையும், அதில்தோஷமும்	246
78	அத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவம் முதலத்தியந்தாபாவத்தின் பிரதியோகிவடிவினதாதலைப் பிரதிபாதித்தலும், அதன் கண்டனமும்	247
79	அபாவப்பிரதியோகியினையுடைய அந்நியோந்நியாபாவத்தின் உதாரணமும், முற்கூறிய அர்த்தத்தின் அநுவாதமும் ...	250
80	முற்கூறிய நியாயமதத்தில் வேதாந்தத்திற்கு விருத்தமான ஆசங்கையைக் காட்டலும், அநாதிப்பிராகபாவத்தின் கண்டனமும் ...	251
81	அநந்தப்பிரத்துவம்ஸாபாவத்தின் கண்டனம் ...	258
82	அந்நியோந்நியாபாவத்திற்கு ஸாதி ஸாந்தத் தன்மையையும், அநாதித்தன்மையையும் அங்கீகரித்தல் ...	259
83	அபாவப்பிரமைக்கு ஏதுவாகிய பிரமாணத்தின் நிரூபணமும், அபாவஞானத்தின் பேதபூர்வகமாக நியாய மதத்தில் பிரமப்பிரத்தியக்ஷத்தில் விஷயாபேக்ஷையின்மையும் ...	261
84	சித்தாந்தத்தில் பரோக்ஷப்பிரமத்தில் விஷயத்தின் அபேக்ஷையின்மையும், அபரோக்ஷப்பிரமத்தில் அதன் அபேக்ஷையுண்மையும் ...	262
85	சித்தாந்தத்தில் அபாவப்பிரமமுதலிய விடங்களில் அந்நியதாக்கியாதியின் அங்கீகாரம்	,,
86	பிரத்தியக்ஷ பரோக்ஷ யதார்த்தப் பிரமரூபஅபாவப்பிரமைக்கு இந்திரியமும் அநுபலம்பமுதலியனவும் சாமக்கிரியாதலைக் கூறுதல் ...	265
87	ஸ்தம்பத்தில் பிசாசின் திருஷ்டாந்தத்தால்சங்கைசமாதான பூர்வகமான அநுபலம்பத்தின் நிர்ணயம் ...	270
88	உபலம்பத்தை ஆரோபித்தலாலும் ஆரோபியாமையாலும்அபாவத்தின்பிரத்தியக்ஷமும் அப்பிரத்தியக்ஷமுமுண்டாமென்பதில் உதாரணம் ...	281
89	எவ் விந்திரியத்தால் உபலம்பத்தின் ஆரோபமுண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தினால் உபலம்பத்தை ஆரோபித்தலால் அபாவம் பிரத்தியக்ஷமாமெனல்	284

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
90	நியாயமதத்தில் சாமக்கிரியையோடுகூடிய அபாவப் பிரமையைக் கூறுதல் ...	288
91	பட்ட வேதாந்த மதங்களில் நியாயமதத்தினும் அபாவப்பிரமையின் சாமக்கிரியிலுள்ள வேறுபாடு ...	291
92	வேதாந்த முறைப்படி இந்திரியத்தாற் பெறப்படாத பிரத்தியக்ஷ லக்ஷணத்தின் நிர்ணயம் ...	293
93	பிரத்தியபிஞ்ஞைப் பிரத்தியக்ஷ ஞானம், அபிஞ்ஞைப் பிரத்தியக்ஷ ஞானம், ஸ்மிருதிமுதலிய பரோக்ஷஞானம் என்பவற்றைச் சாமக்கிரியோடு நிர்ணயித்தல்	295
94	இந்திரிய ஜந்நியத்தன்மையின் நியமமின்றிய பிரத்தியக்ஷ ஞானத்தின் அநுசந்தானம் ...	300
95	அபாவத்தின் ஞானம் யாண்டும் பரோக்ஷமாமென்பதின் நிர்ணயம் ...	302
96	அநுபலப்திப் பிரமாணத்தை அங்கீகரித்தலில்லையாயிகர் சங்கையும் சித்தாந்தியின் சமாதானமும் ...	307
97	அநுபலப்திப் பிரமாணத்தின் நிரூபணம் ஜிஞ்ஞாசுவுக்கு உபயோகமாமாறு ...	318

ஏழாவது பிரகாசம்

விருத்திபேதமும் அநிர்வசனீயக் கியாதியின் மண்டனமும், கியாதிகண்டனமும், தானே பிரமாணமாந்தன்மைப் பிரமாண நிரூபணமும்

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
98	உபாதானம் (சமவாயி), அசமவாயி, நிமித்தகாரணம், சையோகம் என்பவற்றின் இலக்கணம் ...	319
99	இரண்டு காரணங்களை அங்கீகரித்தலோடுமூன்றாவது அசமவாயி காரணத்தைக் கண்டித்தல் ...	326
100	விருத்திஞானத்தின் உபாதான நிமித்த காரணங்களும், சாமானிய லக்ஷணமும் ...	332
101	பிரத்தியக்ஷத்தினது இலக்ஷணத்தோடு பிரமை அப்பிரமை வடிவினதாகிய விருத்திஞானத்தின் பேதம்	335
102	சம்சயவடிவமான பிரமத்தின் இலக்ஷணமும் பேதமும்	348
103	நிச்சய வடிவமான பிரமஞானத்தின் இலக்ஷணம் ...	353
104	அத்தியாசத்தின் இலக்ஷணமும் பேதமும் ...	354
105	அந்நியோந்நியாத்தியாசத்திற் சங்கை சமாதானம் ...	357
106	அநாத்மாவில் அத்தியஸ்தமாகிய ஆத்மாவிற்குப்பரமார்த்த சத்தையில் தாற்பரியம் ...	359
107	அத்தியாசத்தின் வேறு இலக்கணம் ...	361
108	ஒரு அதிகரணத்தில் பாவாபாவங்கட்கு விரோதமுளதெனும் சங்கையும் சமாதானமும் ...	,,
109	அத்தியாசப்பிரசங்கத்திலுண்டாகும்நான்குசங்கைகள்	363
110	முற்கூறிய நான்கு சங்கைகளின் சமாதானம் ...	364
111	முற்கூறிய அத்தியாசத்தினது பேதத்தின் அநுவாதமும் அதில் உதாரணமும் ...	368

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
	112-136. சித்தாந்த சம்மதமான அநிர்வசநீயக்கியாதியின் கிரமம்	
112	சாம்பிரதாயிக மதம் ...	372
113	முற்கூறிய அநிர்வசநீயக்கியாதி வடிவமாகிய அர்த்தத்தில் சங்கையும், சம்க்ஷேபசாரீரகத்தின் சமாதானமும் ...	375
114	கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹபட்டோபாத்தியாயரது மதத்தின் அநுவாதமும் அநாதரமும் ...	376
115	அத்தியாசத்தின் காரணத்தன்மையில் பஞ்சபாதிகை விவரணங்களின் மதம் ...	378
116	பஞ்சபாதிகை சம்க்ஷேப சாரீரகங்களினது மதத்தின் விலக்ஷணத்தன்மையும் அதில் இரகசியமும் ...	379
117	விஷயவுபகித விருத்தியுபகித சேதனங்களின் அபேதத்தில் சங்கை சமாதானம் ...	381
118	இரஜ்ஜுமுதலியவற்றின் இதுவெனும் வடிவப்பிரமையினால் சர்ப்பமுதலியவற்றின் பிரமஞானமுண்டாவதிலுள்ள இரண்டு பக்ஷம் ...	384
119	கவிதார்க்கிக சக்கரவர்த்திநிருசிம்ஹ பட்டோபாத்தியாயர் மதம் ...	387
120	உபாத்தியாயரது மதத்தில் சாமாநியஞான (தர்மிஞான) வாதியின் சங்கையும் சமாதானமும் ...	389
121	பிராசீன ஆசாரியராகிய தர்மிஞானவாதியின் மதம்	393
122	தர்மிஞானவாதியின் மதத்தில் உபாத்தியாயரது சங்கையும் சமாதானமும் ...	395
123	உபாத்தியாயர் சாதிருசிய ஞானம் அத்தியாசத்திற்குக் காரணமாதலைக் கண்டித்தல் ...	398
124	தர்மிஞானவாதியினால் உபாத்தியாயரது மதத்தில் தோஷமும் அதன் பரிகாரமும் ...	400
125	உபாத்தியாயரது மதத்தில் தர்மிஞான வாதியின் சங்கையும் சமாதானமும் ...	403
126	உபாத்தியாயரது மதத்தில் சங்கையும் சமாதானமும்	406
127	தர்மிஞானவாதி அத்தியாசத்தில் பரம்பரையாகநேத்திரத்தின் உபயோகமுளதெனலும், உபாத்தியாயர் சங்கின் பீதத்தன்மை அத்தியாசத்தில் நேத்திரத்தின் சாக்ஷாத் உபயோக முளதெனலும் ...	408
128	தர்மிஞானவாதி கூறும் சங்குப் பொன்மையின் அத்தியாச அபாவமும், உபாத்தியாயர் கூறும் அதன் அநுவாதமும், தோஷமும் ...	409
129	முற்கூறிய தோஷத்திற்குத் தர்மிஞான வாதியினாற் சொல்லப்படும் (இருமுறை) சமாதானமும், உபாத்தியாயரால்சொல்லப்படும்(இருமுறை) தோஷமும்	412
130	மதுரமாகிய பாலில் கைப்பிரசாத்தியாசத்தின் இரஸனையால் கோசரிக்குந்தன்மை பூர்வகமான உபாத்தியாயரது மதத்தின் நிச்சயம் ...	414

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
131	ஆசாரியாது வாக்கியத்திற்கும் உபாத்தியாயரது மதம் விரோதப்படுதலும், தர்மிஞான வாதியின் மதத்திற் கூறிய தோஷத்திற்குச் சமாதானமும் ...	416
132	கைப்பிரசாத்தியாசத்தில் சிலரது வேறுவார்த்தையும் கண்டனமும் ...	419
133	முக்கிய சித்தாந்தத்தைக் கூறுதல் ...	420
134	தர்மிஞானவாதத்தில் ஆகாயத்தில் நீலத்தன்மையத்தியாசத்தின் அசம்பவமும் அதன் பரிகாரமும் ...	421
185	சர்ப்பமுதலிய பிரமஸ்தலத்தில் நான்கு மதங்களும், நான்காவது மதத்தில் உள்ள தோஷமும் ...	423
136	அநிர்வசநீயக்கியாதியில் முற்கூறிய நான்கு மதங்களின் அநுவாதமும், அதன் சமாப்திச் செய்யுளும்.	428
137	பிறநூல்களிற் கூறிய ஐந்து கியாதிகளின் பெயர் ...	429
	138-144. சத்கியாதியின் கிரமம்	
138	சத்கியாதிவாதியின் சித்தாந்தம் ...	,,
139	சத்கியாதிவாதத்தின் கண்டனம் ...	430
140	சுத்தியில் சத்திய ரஜதத்தினது சாமக்கிரியின் அங்கீகாரமும் கண்டனமும் ...	431
141	சத்கியாதிவாதியினுல் முற்கூறிய தோஷத்தின் பரிகாரமும் அதன் கண்டனமும் ...	432
142	இரஜதஞானத்தின் நிவிருத்தியினுல் பிராதிபாஸிகமும் வியாவகாரிகமுமாகிய இரஜதத்தின்நிவிருத்தியும் அதன் கண்டனமும் ...	433
143	சத்கியாதிவாதத்துள்ள பிரபல தோஷம் ...	434
	144-148. மூவகை அசத்கியாதியின் கிரமம்	
144	சூனியவாதியின் கிரமமாக அசத்கியாதிவாதத்தின் கண்டனம் ...	436
145	ஓர் தாந்திரிகரது கிரமமாக அசத்கியாதிவாதம் ...	437
146	நியாயவாசஸ்பதிகாரர் கிரமப்படி அசத்கியாதிவாதம்	439
147	இருவகை அசத்கியாதிவாதத்தின் கண்டனம் ...	440
	148-154. ஆத்மக்கியாதியின் கிரமமும் கண்டநமும்	
148	ஆந்தர பதார்த்தங்களை அங்கீகரிக்கும் ஆத்மக்யாதிவாதியின் அபிப்பிராயம் ...	441
149	ஆந்தர பதார்த்தத்தை அங்கீகரிக்கும் ஆத்மக்கியாதிவாதியினது மதத்தின் கண்டனம் ...	442
150	சௌகதர்களது இரண்டு பேதங்களில் பாகியபதார்த்தவாதிகளது ஆத்மக்யாதியின் அநுவாதம் ...	,,
151	பாகிய பதார்த்தத்தை அங்கீகரிக்கும் ஆத்மக்கியாதிவாதியினது மதத்தின் கண்டனம் ...	444
152	ஆத்மக்யாதி வாதத்தின் விலக்ஷணமான அத்வைதவாதத்தின் சித்தாந்தம் ...	445
153	சித்தாந்தத்திற் கூறிய கௌரவ தோஷத்தின் பரிகார பூர்வகமாக இருவகை விஞ்ஞானவாதத்தின் அசம்பவம் ...	447

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
170	பிரபாகரருமதத்தில் சகல ஞானங்களினாலும் திரிபுடி பிரகாசித்தல் ...	509
171	முராரி மிசிரர் மதம் ...	,,
172	பட்டர் சித்தாந்தம் ...	,,
173	நியாய வைசேஷிகமத நிச்சயம் ...	511
174	நியாயவைசேஷிகமத கண்டநம் ...	513
175	முராரிமிசிரர் மதத்தின் கண்டநம் ...	516
176	பட்டமத கண்டனம் ...	,,
177	பிரபாகரர் மதத்தின் கண்டநம் ...	517
178	தன்னாற் பிராமாணியவாதத்தின் அங்கீகாரமும், சித்தாந்தமதத்தில் முற்கூறிய சம்சயத்தின் அநுபபத்தி வடிவதோஷத்தின் பரிகாரமும் ...	518
179	நியாயமதத்தில் (பிறிதாற் பிராமாணிய வாதத்தில்) தோஷம் ...	520
180	அக்கியாதிவாதியினது வசனத்தின் பரிகாரம் ...	521
181	பிராந்திஞானத்தின் மூவகைத்தன்மையும், விருத்திபேதத்தின் பரிகாரமும் ...	523

எட்டாவது பிரகாசம்

ஜீவேசுவரசொரூப விருத்திப்பிரயோஜனத்தோடு கற்பித நிவிருத்தி சொரூப நிரூபணம்

182-187. அஞ்ஞானத்தில் விசாரம்

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
182	விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதலின் பிரதிஞ்ஞை ...	524
183	அஞ்ஞானத்தின் ஆசிரயமும் விஷயமும் ...	,,
184	அஞ்ஞானத்தின் நிரூபணம் ...	525
185	அஞ்ஞானத்தின் அநாதிபாவரூபத்தன்மையில் சங்கை	,,
186	முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் ...	527

187-203. ஜீவேசுவரர்களிடத்து விசாரம்

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
187	மாயை அவித்தை பூர்வகமாக ஜீவேசுவரர்களது வடிவத்தில் நான்குபக்ஷம் ...	528
188	முற்கூறிய நான்கு பக்ஷங்களிலும் முக்தஜீவர்களுக்குச் சுத்தப் பிரஹ்மத்தோடு அபேதமுளதாதல்...	530
189	முற்கூறிய நான்குபக்ஷங்களிலும் ஆறு அநாதிபதார்த்தங்களைக் கூறி, மூவகைச் சேதனத்தை அங்கிகரித்தல் ...	,,
190	சித்திரதீபத்தில் வித்தியாரண்ய சுவாமிகளாற் சொல்லப்பட்ட சேதனத்தின் நான்கு பேதம் ...	531
191	பிம்பப்பிரதிபிம்பவாதத்தோடு ஆபாசவாதத்திற்குள்ள பேதம் ...	532
192	ஆபாசவாதத்தின்படி ஜீவப்பிரஹ்மங்களின் அபேதவாக்கியங்களில் பாதசமானாதிகரணமுளதெனல்	,,

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
193	கூடஸ்தப்பிரஹ்மங்களின் அபேதஸ்தலத்தில் அபேத (முக்கிய) சமாஞதிகரண முளதெனல் ...	533
194	முற்கூறிய பாதசமாஞதிகரணத்தில் விவரணகாராது வசனத்தோடு விரோதமின்மை ...	,,
195	விவரணத்திற்கூறிய ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடுள்ள முக்கிய சமாஞதிகரணமும், வித்தியாரணியரது வாக்கியத்தின் பிரௌடிவாதத்தன்மையும் ...	534
196	வித்தியாரணியர் கூறிய சேதனத்தின் நான்குபேதங்களது அநுவாதம் ...	535
197	வித்தியாரணியசுவாமிகள் கூறிய புத்திவாசனையிலுள்ள பிரதிபிம்பத்தினது ஈசுவரத்தன்மையின் கண்டநம் ...	536
198	வித்தியாரணியசுவாமி கூறிய ஆநந்தமய கோசத்தினது ஈசுவரத்தன்மையின் கண்டநம் ...	537
199	மாண்டூக்கிய உபநிஷத்தில் கூறிய ஆநந்தமயனது சர்வஞ்ஞத்தன்மை முதலியவற்றின் அபிப்பிராயம்	538
200	ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மையில் வித்தியாரணிய சுவாமிகளுக்குத் தாற்பரிய மில்லாமை ...	540
201	சேதனத்தின் மூன்று பேதங்களை வித்தியாரணிய சுவாமியோடு எல்லோரும் அங்கீகரித்தல் ...	541
202	ஜீவனுக்கு மோக்ஷதசையில் முற்கூறிய பக்ஷங்களில் சுத்தப்பிரஹ்மத்தோடும்,விவரணபக்ஷத்தில் ஈசுவரனோடும் அபேத முண்டெனல் ...	542
	203-210. வேதாந்தத்தின் சித்தாந்தத்தில் பிரக்கிரியையின் பேதம்	
203	விவரணகாரர்மதத்தில் அஞ்ஞானத்தில் பிரதிபிம்ப ஜீவனையும் பிம்ப ஈசுவரனையும் நிரூபித்தல் ...	,,
204	அவச்சேதவாதியினல் ஆபாசவாதத்தின் கண்டநமும் தனது மதத்தின் நிரூபணமும் ...	544
205	அவச்சேதவாதத்தின் கூற்று ...	546
206	அந்தக்கரண அவச்சின்ன சேதனம் ஜீவன், அநவச்சின்னசேதனம் ஈசுவரன் என்னும் பக்ஷத்தின் கண்டநம் ...	547
207	திருப்திதீபத்தில் வித்தியாரணிய சுவாமிகள் கூறிய அந்தக்கரணத்தின் சம்பந்தம் அதன் அபாவம் என்பவற்றினது உபாதித்தன்மையின் அபிப்பிராயம்	,,
208	அவச்சேதவாதத்தின் பேதபூர்வகமாக அதன் சமாப்தி	548
209	சித்தாந்தமுக்தாவலி முதலியவற்றிற் கூறிய ஏகஜீவ (திருஷ்டி சிருஷ்டி) வாதத்தின் நிரூபணம் ...	,,
	210-216. வேதாந்தசித்தாந்தத்தின் நாநாப் பிரக்கிரியைகளின் தாற்பரியம்	
210	சகல அத்வைதக்கிரந்தங்களினது தாற்பரியத்தின் விஷயம் ...	552

பிரசங் கம்	விஷயம்	பக்கம்
211	ஜீவேசுவரர்களிடத்துச் சகல நூலாசிரியருடைய சம்மதியின் ஒருமித்த நிச்சயம் ...	552
212	விவரணகாரர் முறைப்படி பிரதிபிம்பத்தின் சொரூபத்தை நிரூபித்தல் ...	553
213	வித்தியாரணியசுவாமி விவரணகாரர்களது மதங்களின் வேற்றுமை ...	554
214	இருவர் பக்ஷங்களும் கொள்ளத்தக்கனவாமெனல்	556
215	பிம்பப் பிரதிபிம்பங்களின் அபேதபக்ஷத்தின் கிரமம் அபேதத்தை அறிவித்தலில் எளிதாமெனல் ...	,,
	216-237. பிரதிபிம்பத்தில் விசாரம்	
216	ஆபாசவாதம் பிரதிபிம்பவாதத்தினும் சிறிது பேதமாமாறு ...	557
217	பிரதிபிம்பத்திற்கு நிழல்வடிவத்தன்மையை நிஷேதித்தல் ...	,,
218	பிரதிபிம்பம் பிம்பத்தினும் வேறாகிய வியாவகாரிகத் திரவியவடிவமா மென்பதை நிஷேதித்தல் ...	558
219	ஆபாசவாதப் பிரதிபிம்பவாதங்களின் யுக்தியோடு கூடிய தன்மையைக் கூறி, இரண்டு பக்ஷங்களிலும் அஞ்ஞானம் உபாதானமாதலைக் கூறுகின்றார் ...	560
220	மூலாஞ்ஞானத்திற்கு அல்லது தூலாஞ்ஞானத்திற்குப் பிரம்பிம்பத்தின் அல்லது அதன் தர்மங்களின் உபாதானத்தன்மை சம்பவியாமையின் சங்கை	,,
221	முற்கூறிய சங்கைக்கு ஓர் நூலாசிரியரது கிரமப்படி சமாதானம் ...	561
222	முற்கூறிய சங்கைக்குப் பிற நூலாசிரியர் முறைப்படி சமாதானம் ...	,,
223	மூலாஞ்ஞான தூலாஞ்ஞானங்களின் பேதத்தில் சிறிது விசாரம் ...	562
224	ஆபாசவாதப் பிரதிபிம்பவாதங்களில் தர்மி அல்லது தர்மத்தின் அத்தியாசத்தினது உற்பத்திக்கு உபாதானமாகத் தூலாஞ்ஞானத்தைக்கொண்டு அதிஷ்டானத்திற்குப் பேதங் கூறுதல் ...	563
225	இரண்டு பக்ஷங்களிலும் மூலாஞ்ஞானத்திற்கு உபாதானத்தன்மையை அங்கீகரித்து, அதிஷ்டானத்திற்குப் பேதமும் மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்திற்கு உபாதானமாந்தன்மையின் யோக்கியதையும் கூறுதல் ...	,,
226	தூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையைக் கூறுவோர் மதம் ...	564
227	முற்கூறிய மதத்தை நிஷேதித்தலோடு மூலாஞ்ஞானமே பிரதிபிம்பாத்தியாசத்திற்கு உபாதானமெனல் ...	565

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
228	மூலாஞ்ஞானம் உபாதானமாம் என்னும் பக்ஷத்திற் சங்கை ...	566
229	இச் சங்கைக்குச் சமாதானம் ...	567
230	ஏகதேசியின் கிரமமாகப் பாதத்தின் இலக்ஷணம் ...	568
231	அநேக நூலாசிரியர்கள் மதப்படி பாதத்தின் இலக்ஷணமும், பிரஹ்மஞானமின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தினது பாதத்தின் சித்தியும் ...	,,
232	முகம் கண்ணாடி முதலிய அதிஷ்டானத்தின் ஞானம் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்திக்கு ஏதுவாதல். ...	570
233	முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானத்திற்கு மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தைக் கெடுக்குந் தன்மை ...	,,
234	முற்கூறிய பக்ஷத்தில் பத்மபாதாசாரியாரற் செய்யப்பட்ட பஞ்சபாதிகையின்படி தூலாஞ்ஞானத்திற்கு அத்தியாசத்தின் ஏதுத்தன்மையைக் கூறும் வாதியின் சங்கை ...	573
235	முற்கூறிய சங்கை பொருந்தாமை ...	574
236	மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தினது ஏதுத்தன்மையை யங்கீகரிக்கின் பஞ்சபாதிகையின் வசனத்தோடு விரோதமும், மூலாஞ்ஞானத்திற்கு ஏதுவாந்தன்மையை அங்கீகரிக்கின் அவிரோதமும் உளதாதல் ...	576
237	பிரதிபிம்பாத்தியாசத்தின் வியாவகாரிகத்தன்மை பிராதிபாஸிகத்தன்மைகளின் விசாரபூர்வகமான சொப்பனாத்தியாசத்தினது உபாதான விசாரத்தின் பிரதிஞ்ஞை ...	579

238 - 257. சொப்பனத்தில் விசாரம்

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
238	தூலாஞ்ஞானம் சொப்பனத்திற்கு உபாதானமாதவின் கிரமம் ...	580
239	முற்கூறிய பக்ஷத்திற் சங்கை ...	581
240	முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் ...	582
241	வியாவகாரிக ஜீவனும் ஜகத்தும் சொப்பனத்தின் பிராதிபாஸிக ஜீவனுக்கும் ஜகத்திற்கும் அதிஷ்டானமாதல் ...	,,
242	முற்கூறிய பக்ஷத்தின் பொருத்தமின்மையோடு சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மை ...	583
243	அகங்காராவச்சின்ன சேதனத்தைச் சொப்பனத்தின் அதிஷ்டானமாகக் கொண்டு தூலாஞ்ஞானம் அதற்கு உபாதானமாதலும், ஜாக்கிரத்தின் ஞானத்தால் அதன் நிவிருத்தியும் கூறுதல் ...	,,

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
244	அகங்கார அநவச்சின்ன சேதனத்தைச் சொப்பனத்தின் அதிஷ்டானமாகக் கொண்டு மூலாஞ்ஞானத்திற்கு அதன் உபாதானத்தன்மையும், உபாதானத்தில் விலயவடிவமான அதன் நிவிருத்தியுங்கூறுதல்	584
245	அகங்கார அநவச்சின்ன சேதனத்தினையே அதிஷ்டானமெனக் கொண்டு விரோதிஞானத்தினுல் அஞ்ஞானத்தின் விக்ஷேப ஏதுவான சத்தி ஒன்றனது நாசத்தின் அங்கீகாரம் ...	”
246	முற்கூறிய சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டான வாதத்திலும் சரீரத்தின் உள்ளிடத்திருக்கும் சேதனத்திற்கே அதிஷ்டானத்தன்மை சம்பவித்தல் ...	585
247	சரீரத்தின் உள்ளிடத்திருக்கும் அகங்கார அநவச்சின்ன சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையின் யோக்கியதை ...	”
248	வெளியும் உள்ளும் சாதாரணமான தேசத்திருக்கும் சேதனத்தில் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையைக் கூறுதலில் கௌடபாதர் பாஷியகாரர் முதலியோரது வசனத்திற்கு விரோத மூளாதாதல்	586
249	அகங்கார அநவச்சின்ன சேதனம் அவித்தையில் பிரதிபிம்பமும் பிம்பமுமாகிய இரண்டுமாம். அவற்றில் பிரதிபிம்பவடிவ ஜீவசேதனத்திற்கு அதிஷ்டானத்தன்மையின் சம்பவம் ...	587
250	முற்கூறிய பக்ஷத்தில் சம்க்ஷேப சாரீரகத்திற் கூறிய அத்தியாசத்தின் அபரோக்ஷத்தன்மையின் பொருட்டு அதிஷ்டானத்தின் மூவித அபரோக்ஷத்தன்மை	588
251	முற்கூறிய பக்ஷத்தில் சங்கை சமாதானபூர்வகமான ஜீவசேதன வடிவ அதிஷ்டானத்தின் சொரூபப் பிரகாசத்தினுல் சொப்பனத்தின் பிரகாசம் ...	”
252	அத்வைததீபிகையில் நிருசிம்ஹாசிரம ஆசாரியர் கூறிய ஆகாச கோசர சாக்ஷுஷ விருத்தியை நிரூபித்தலோடு சம்க்ஷேபசாரீரகத்திற் கூறிய ஆகாச கோசரமானச் விருத்தியின் அபிப்பிராயம் ...	589
253	இரண்டு மதங்களையும் அங்கீகரித்தலோடு அத்வைத தீபிகையிற் கூறிய தன்மை நலமுடையதெனல் ...	590
254	இரஜ்ஜு சர்ப்ப முதலியவற்றிற்கு எல்லா மதங்களினும் தூலாஞ்ஞானமே உபாதானமாதல் ...	591
255	சொப்பனத்தின் அதிஷ்டானமாகிய ஆத்மாவின் சுயம்பிரகாசத்தன்மையில் பிரமாண வடிவமாயுள்ள பிரகதாரணிய சுருதியின் அபிப்பிராயம் ...	592
256	சொப்பனத்தில் இந்திரிய அந்தக்கரணங்கள் ஞானசாதன மாகாமையைக் கூறி, தானே அபரோக்ஷமாம் ஆத்மாவினுல் சொப்பனத்தின் அபரோக்ஷத்தன்மையைக் கூறுதல் ...	”

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
	257-259. திருஷ்டி சிருஷ்டி, சிருஷ்டி திருஷ்டி வாதங்களின் பேதம்	
257	திருஷ்டி சிருஷ்டி வாதத்தில் சகல அநாத்மாக்களின் ஞாதசத்தை (சாக்ஷிபாஷ்யத்தன்மை)யைக் கூறி, திருஷ்டி சிருஷ்டி பதத்திற்கு இரண்டு பொருள் கூறுதல் ...	593
258	சிருஷ்டி திருஷ்டிவாத (வியாவகாரிகபக்ஷ)த்தைக் கூறுதல் ...	594
	259-266. மித்தியாப்பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையின் சங்கை சமாதானம்	
259	முற்கூறிய இரண்டு பக்ஷங்களிலும் மித்தியாபதார்த்தங்களின் மித்தியாத்தன்மைத் தர்மத்தில் துவைதவாதிகளின் ஆக்ஷேபம் ...	595
260	முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு அத்வைததீபிகையிற் கூறிய சமாதானம் ...	596
261	மித்தியாப்பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மைத் தர்மத்தில் வேறு வகையால் துவைதவாதிகளின் ஆக்ஷேபம் ...	597
262	முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு முற்கூறிய சமாதானமே பொருந்துமாறு ...	598
263	அத்வைததீபிகையிற் கூறிய சமாதானம் சத்தையின்பேதத்தை அங்கீகரிக்கிற் சம்பவித்தலும், ஒரு சத்தையை அங்கீகரிக்கின் சம்பவியாமையும்	599
264	முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு நூலாசிரியர் நிச்சலதாசர் கூறிய சமாதானம் ...	,,
265	முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு வேறு நூலாசிரியர் கூறிய சமாதானம் ...	600
	266-271. மதபேதத்தால் ஐந்துவகைப் பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம் (திரஸ்காரம்)	
266	தத்துவசுத்திகாரர் கிரமப்படி பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம் ...	601
267	பிறநூலாசிரியர் கிரமப்படி பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம் ...	602
268	நியாயசுதாகாரர் கிரமப்படி பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம் ...	603
269	வேறு ஆசிரியர் கிரமப்படி பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம் ...	604
270	சம்க்ஷேப சாரீரகத்தின்படி பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம் ...	605

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
	271 - 280. கர்மம் ஞானசாதனமாதலில் விசாரம்	
271	மித்தையாகிய பிரபஞ்சத்தின் நிவிருத்தியில் கர்மத்தின் உபயோக மின்மையை அநுவதித்தலோடு சித்தாந்தத்தின் இருவகைச் சமுச்சயத்தை நிச்சயித்தல் ...	606
272	பாஷ்யகாரர் கூறிய சாதனத்தன்மை ...	,,
273	வாசஸ்பதிமிசிரர் ஞானவிருப்பத்திற்குச் சாதனமாமெனல் ...	607
274	விவரணகாரர் கூறிய கர்மம் ஞானத்திற்குச் சாதனமாந் தன்மை ...	,,
275	வாசஸ்பதி விவரணகாரர்களது மதத்தின் விலக்ஷணத் தன்மையிற் சங்கை ...	609
276	முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் ...	,,
277	ஓர் ஆசிரியர் மதப்படி வர்ணமாத்திரத்தின் தர்மங்கள் வித்தையில் உபயோகமாமெனல் ...	610
278	கல்பதருகாரர் மதப்படி சகல நித்திய கருமங்களும் வித்தையில் உபயோகமாமெனல் ...	611
279	சம்க்ஷேப சாரீரக கர்த்தாவின் மதப்படி காமியமும் நித்தியமுமாகிய சகல சுபகர்மங்களுக்கும் வித்தையில் உபயோக முண்டெனல் ...	,,
	280-283. சந்நியாசம் ஞானத்திற்குச் சாதனமாமென்பதில் விசாரம்	
280	பாவ நிவிருத்திவாயிலாக ஞானத்திற்கு ஏதுவாதலால் கிரமமாகக் கர்மமும் சந்நியாசமுமாகிய இரண்டும் கர்த்தவ்வியமாமெனல் ...	612
281	ஓர் ஆசாரியர் மதத்தில் சந்நியாசத்திற்குப் பிரதிபந்தகமாகிய பாவத்தின் நிவிருத்தியும், புண்ணியத்தின் உற்பத்திவாயிலாகச் சிரவணத்தின் சாதனத்தன்மையும் ...	,,
282	விவரணகாரர் மதத்தில் சந்நியாசம் ஞானப்பிரதிபந்தக விக்ஷேபத்தின் நிவிருத்திவடிவ திருஷ்ட பலத்திற்கு ஏதுவாதல் ...	613
	283-291. க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்திலும் சிரவணத்திலும் அதிகாரத்தை விசாரித்தல்	
283	க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்திலும் சிரவணத்திலும் உள்ள அதிகார விசாரத்தின் பிரதிஞ்ஞை ...	614
284	ஓர் நூலாசிரியரின் மதப்படி சந்நியாசத்திலும், அங்ஙனமே பிரஹ்ம சிரவணத்திலும் பிராஹ்மணனுக்கே அதிகார முண்டு; க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகார மில்லையெனல் ...	,,

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
285	வேறு நூலாசிரியர் மதப்படி சந்நியாசத்தில் கேவலம் பிராஹ்மணனுக் கதிகார முண்டு; க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தைவிட்டுக் கேவலம் பிரஹ்ம சிரவணத்தில் அதிகார முண்டெனல் ...	614
286	அவர்களினும் வேறு நூலாசிரியர் மதப்படி க்ஷத்திரிய வைசியர்களுக்குப் பிரஹ்ம சிரவணத்திற் போல வித்வத் ஸந்நியாசத்திலும் அதிகார முண்டெனல் ...	615
287	வார்த்திககாரர் மதத்தில் விவிதிஷா ஸந்நியாஸத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக் கதிகார முண்டெனல் ...	,,
288	வேறோர் நூலாசிரியர் மதப்படி பிராஹ்மணர்களுக்கு ஞானத்தில் சந்நியாசத்தின் அபேக்ஷையும், க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தில் அதிகாரமின்மையும், ஞானத்திற்கு உபயோகமுள்ள கர்மத்திலும் வேதாந்த சிரவணத்திலும் அதிகார முண்மையும் ...	616
289	ஓர் நூலாசிரியர் மதத்தில் சூத்திரனுக்குச் சிரவணத்தி லதிகார முண்டெனல் ...	618
290	வேறு நூலாசிரியர் மதப்படி சூத்திரனுக்கும் வேதத்திற் கந்நியமான புராண இதிகாச முதலிய வடிவ அத்யாத்ம நூல்களின் சிரவணமுதலியவற்றி லதிகார முண்டெனல் ...	,,

291 - 293. மனிதர்மாத்திரத்திற்குப் பக்தி ஞானங்களின் அதிகார முண்டெனல்

291	அந்தியஜர்முதலிய மநுஷர்களுக்கு தத்துவ ஞானத்தி னதிகாரம் ...	619
292	தத்துவஞானத்தில் தெய்வசம்பத்தை அபேக்ஷித்தலோடு மநுஷமாத்திரத்திற்குப் பகவத்பக்தி தத்துவ ஞானங்களின் அதிகாரத்தினது நிச்சயம் ...	620

293-295 தத்துவஞானத்தினால் சுவ (தனது) ஏதுவான அஞ்ஞானத்தின் நிவிருத்தியில் சங்கை சமாதானம்

293	அஞ்ஞானத்தின் காரியமான அந்தக்கரணத்தின் விருத்திவடிவ தத்துவஞானத்தினால் அதற்குக்காரணமான அஞ்ஞானத்தின் நிவிருத்தியிற் சங்கை.	621
294	முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் ...	,,

295-303. அவித்யாலேச சம்பந்தியின் விசாரம்

295	தத்துவஞானத்தினால் அவித்தை வடிவ உபாதானத்திற்கு நாச முண்டானபின் ஜீவன்முக்தியுடைய வித்வானது தேகஸ்திதியின் சங்கை ...	623

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
296	முற்கூறிய சங்கைக்கு ஓர் ஆசிரியரின் இர்மப்படி சமாதானம் ...	623
297	முற்கூறிய சமாதானத்தின் அசம்பவம் ...	,,
298	அவித்தியாலேசத்தின் மூவகை ...	,,
299	இவ் வர்த்தத்தில் சர்வஞ்ஞாத்மமுனிவர் மதம் ...	624
300	முற்கூறிய மதத்திற்கு ஞானியின் அநுபவத்திலுள்ள விரோதம் ...	,,
301	அவித்தையின் நிவிருத்திகாலத்தில் தத்துவஞானத்தின் நிவிருத்திக்கிரமம் ...	625
302	பிரகிருத அர்த்தத்தில் பஞ்சபாதிகைக்காரர் மதம்...	,,
	303-309. தத்துவஞானத்தின் காரணமும் சககாரியுமாகிய சாதனத்தில் விசாரம்	
303	உத்தம மத்திம அதிகாரிகளின் பேதத்தால் தத்துவ ஞானத்தின் இரண்டு சாதனங்களைக் கூறுதல் ...	626
304	முற்கூறிய இரண்டு பக்ஷங்களிலும் பிரசங்கியானத்தைத் தத்துவஞானத்திற்குக் காரணமாகிய பிரமாண மெனல் ...	,,
305	பாமதீகார வாசஸ்பதியின் மதத்தில் பிரசங்கியானத்திற்கு மனதின் சககாரியாதலும் மனம் பிரஹ்ம ஞானத்திற்குக் கரணமாதலும் ...	627
306	அத்வைதக் கிரந்தங்களின் முக்கிய மதம் ...	,,
307	சப்தத்தினால் அபரோக்ஷஞானத்தின் உற்பத்தியில் சங்கை சமாதானம் ...	629
308	வேறு நூலின்படி சப்தத்திற்கு அபரோக்ஷஞானத்தை யுண்டுபண்ணுந் தன்மை ...	630
	309-325. விஷய ஞானங்களின் அபரோக்ஷத் தன்மையில் விசாரம்	
309	வேறு நூலாசிரியர் மதப்படி ஞானமும் விஷயமுமாகிய இரண்டிலும் அபரோக்ஷத்தன்மை வியவகாரத்தைக் கூறுதல் ...	,,
310	முற்கூறிய அர்த்தத்தில் சங்கை சமாதானம் ...	631
311	விஷயத்தில் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகளைச் சம்பாதிக்கும் பிரமாத்ருசேதனத்தின் பேத அபேதத்தோடு விஷயத்தின்கண் உள்ள பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத் தன்மைகளின் அதீனமே ஞானத்தின் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகளா மென்பதின் நிரூபணம் ...	632
312	முற்கூறிய மதத்தில் அவாந்தரவாக்கிய ஜந்நிய பிரஹ்மஞானத்தினது அபரோக்ஷத்தன்மையின் பிராப்தி வடிவ தோஷம் ...	633

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
313	முற்கூறிய தோஷத்தினால் அபரோக்ஷத்தன்மைக்கு வேறு இலக்கணம் ...	634
314	அபரோக்ஷ ஞானத்தில் சர்வஞ்ஞாத்ம முனிவரது மதத்தின் அநுவாதம் ...	635
315	சமீபத்திலேயே தூஷிக்கப்பட்ட விஷயத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையின் அதீனமாம் ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மை என்னும் மதத்தின் அநுவாதம் ...	,,
316	அத்வைத வித்தியாசாரியர் மதப்படி விஷயத்தின்கண் உள்ளதும் ஞானத்தின்கண் உள்ளதுமான அபரோக்ஷத்தன்மையை வேறுவிதமாகச் சொல்லுதலும், தூஷிக்கப்பட்ட முற்கூறிய மதத்தில் வேறு தூஷணத்தைச் சொல்லுதலும் ...	636
317	அபரோக்ஷத்திற்கு முற்கூறிய இலக்ஷணம் சம்பவியாதென்பதை அநுவதித்தல் ...	637
318	முற்கூறிய தோஷமின்றிய அபரோக்ஷத்தின் இலக்ஷணம் ...	,,
319	விருத்திவடிவப் பிரத்தியக்ஷ ஞானத்தில் முற்கூறிய அபரோக்ஷத்தின் இலக்ஷணத்தினது அவ்வியாப்தி.	638
320	முற்கூறிய அவ்வியாப்திக்கு அத்வைத வித்தியாசாரியர் முறைப்படி பரிகாரம் ...	639
321	முற்கூறிய பக்ஷத்திற் சங்கை ...	640
322	முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் ...	,,
323	முற்கூறிய பக்ஷத்தில் வேறு சங்கை ...	,,
324	முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் ...	641
325	சப்தத்தினால் அபரோக்ஷ ஞானத்தின் உற்பத்தியில் சொல்லப்பட்ட மூன்று மதங்களில் முதல் மதத்தின் நலமுடைமை ...	642
	326 - 342. விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல்.	
326	கிரந்தத்தின் ஆரம்பத்திற் கூறிய மூன்று வினாக்களையும் அவற்றிற் சொல்லப்பட்ட இரண்டன் விடையையும் அநுவதித்தல் ...	643
327	விருத்தியின் பிரயோஜன சம்பந்தியாகிய மூன்றாவது வினாவினது விடையின் ஆரம்பம் ...	643
328	விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறும் அவசரத்தில் ஜாக்கிரத்தின் இலக்ஷணம் ...	,,
329	சில நூலாசிரியர் மதப்படி ஆவரணத்தின் அபிபவம் விருத்தியின் பிரயோஜனமாமெனல் ...	644

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
330	சமஷ்டி அஞ்ஞானம் ஜீவனது உபாதியாகும்பக்ஷத்தில் பிரஹ்ம, அல்லது ஈசுவர, அல்லது ஜீவசேதனங்களின் சம்பந்தத்தால் ஆவரணத்தினது அபிபவம் சம்பவியாமை ...	644
331	இப் பக்ஷத்தில் அபரோக்ஷ விருத்தியினுல் அல்லது அபரோக்ஷ விருத்தி விசிஷ்டசேதனத்தினுல் ஆவரணத்தினது அபிபவத்தின் சம்பவம் ...	645
332	முற்கூறிய பக்ஷத்தின்படி ஆவரண நாசமாகிய விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல் ...	646
333	இரண்டாவது பக்ஷத்தின்படி ஜீவசேதனத்தோடு விஷயத்தின் சம்பந்தமாகிய விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல் ...	,,
334	அந்தக்காண விசிஷ்டசேதனம் ஜீவனுமென்னும் பக்ஷத்தில் விஷய சம்பந்தத்தின் பொருட்டு விருத்தியின் அபேக்ஷை உண்டெனல் ...	647
335	முற்கூறிய இரண்டு பக்ஷங்களின் விலக்ஷணத்தன்மை.	648
336	மதபேதத்தால் சம்பந்தத்தில் விலக்ஷணத்தன்மையைக் கூறுதல் அசங்கதமாமெனல் ...	,,
337	நான்கு சேதனங்களைக் கூறுதலோடு முற்கூறிய பொருளின் சித்தி ...	649
338	ஜாக்கிரத்தில் உண்டாவதாகிய விருத்தியின் அநுவாதத்தோடு சொப்பனுவஸ்தையின் இலக்ஷணம் ...	650
339	சுழுத்தியவஸ்தையின் இலக்ஷணம் ...	,,
340	சுழுத்தி சம்பந்தமுள்ள பொருளினைக் கூறுதல் ...	651
341	முற்கூறிய அவஸ்தையின் பேதம் விருத்தியின் அதீனமாமெனல் ...	,,
342	விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல் ...	,,
	343 - 352. கற்பிதத்தின் நிவிருத்தியில் விசாரம்.	
343	கற்பிதத்தினது நிவிருத்தியின் அதிஷ்டான வடிவத்தன்மை பூர்வகமாக மோக்ஷத்தில் துவைதாபத்தி (துவைதம் நேர்தல்) தோஷத்தைக் கூறுதலின் அயுக்தத்தன்மை ...	652
344	நியாயமகரந்தகாரர் கூறிய அதிஷ்டானவடிவ கற்பிதத்தின் நிவிருத்திபக்ஷத்தில் தூஷணம் ...	,,
345	நியாயமகரந்தகாரர் முறைப்படி அதிஷ்டானத்திற்கு வேருகிய கற்பிதத்தினது நிவிருத்தியின் நிருபணம். ...	654

பிரசங்கம்	விஷயம்	பக்கம்
346	நியாயமகரந்தகாரர் கிரமப்படி கற்பித நிவிருத்தியினது சொரூப நிச்சயத்தின்பொருட்டு அநேக விகற்பங்களை எழுதுதல் ...	654
347	நியாயமகரந்தகாரர் கிரமப்படி முற்கூறிய நான்கு விதத்தினும் விலக்ஷணமானதும் பிரஹ்மத்திற்கு வேறானதுமான ஐந்தாவது வகையாகிய கற்பித நிவிருத்தியின் சொரூபம் ...	657
348	நியாயமகரந்தகாரர் மதத்தின் நலமின்மை ...	,,
349	நியாயமகரந்தகாரர் ஞாத அதிஷ்டான வடிவ கற்பிதத்தின் நிவிருத்திபக்ஷத்தில் கூறிய தோஷத்தின் பரிகாரமும், பிரசங்கத்தால் விசேஷண உபாதி உபலக்ஷணங்களின் லக்ஷணமும் ...	658
350	அதிஷ்டான வடிவ நிவிருத்தியின் பக்ஷத்தில் ஐந்தாவது வகை வாதியின் சங்கை ...	661
351	முற்கூறிய சங்கையின் சமாதானம் ...	,,
352	நியாயமகரந்தத்திலும் வேறுவகையாக அதிஷ்டானத்திற்கு வேறான கற்பித நிவிருத்தியின் சொரூபம் ...	662
353	முற்கூறிய மதத்தில் புருஷார்த்தத்தின் சொரூபம் (துக்காபாவம் அல்லது கேவல சுகம்) ...	663

விருத்திப்பிரபாகரத்தின்

அநுக்கிரமணிகை முடிந்தது.

SECOND EDITION] 1926 [1000 COPIES

ஓம்

தத்ஸத் ப்ரஹ்மணே நம:

ஸ்ரீ

விருத்திப் பிரபாகரம்

முதற் பிரகாசம்

பிரத்தியக்ஷப் பிரமாண நிரூபணம்

மங்கலம்

சத்திய ஞான நந்தத் தனிப்பெருஞ் சுடரே மேலாந்
தத்துவ முணர்த்து மாறு சங்கரா சார்ய னென்னு
மெய்த்தனிப் பெயர்பூண் டிந்த மேதினி தன்னில் வந்த
தத்தகு பொருளை யாமு மநுதினஞ் சிந்தை செய்வாம்.

நூல் வரலாறு

பெருத்த மாயை யழியவெய்தும் பேரின் பமியான் பிரமமெனும்
விருத்தி யதனுற் பெறுவதென வேதம் விளம்பு மதனலவ்
விருத்தி ஹேது பயன்யாதென் வினவின் விடையாத் தமிழ்மொழியில்
விருத்திப் பிரபா கரமெனுநூல் விளம்பப் படுமால் விளக்கமுற.

அகம் *பிரஹ்மாஸ்மி (யான் பிரஹ்மம்) என்னும் விருத்தியால் காரியத்தோடு அஞ்ஞானத்தின் நிவிர்த்தியும், பரமாநந்தப் பிராப்தியு முண்டாகின்றன வென்பது வேதாந்த சித்தாந்தம். ஆண்டு, 'விருத்தி யென்பது யாது? அதன் காரணம் யாது? அதன் பிரயோஜனம் யாது?' என் றிவ்வாறு அறியும் வேட்கை யுண்டாக, அக் காரணமாய் இவ் "விருத்திப் பிரபாகரம்" என்னும் நூல் சொல்லப்படுகின்றது.

1. விருத்தியின் சாமானிய லக்ஷணமும் பேதமும்

அந்தக்கரண அஞ்ஞானங்களின் பரிணாமம் விருத்தி யெனப்படும். குரோதம் சுகம் முதலியன அந்தக்கரணத்தின் பரிணாம

* இந்நூலில் யாண்டும் ब्रह्मं - ப்ரஹ்மம் என்னும் பதத்திற்குப் பிரஹ்மம் என்றும், भ्रमं - ப்ரமம் என்னும் பதத்திற்குப் பிரமம் என்றும், भ्रमा - ப்ரமா என்னும் பதத்திற்குப் பிரமை யென்றும் வழங்கப்படும்.

மாகவும், ஆகாயாதிகள் அஞ்ஞானத்தின் பரிணாமமாகவு மிருக்கின்றன; என்றாலும் அவற்றை விருத்தியென்று சொல்லுவதில்லை. விஷயத்தை விளக்கும் அந்தக்கரண அஞ்ஞானங்களின் பரிணாமம் எதுவோ, அது விருத்தி யெனப்படும். குரோதம் சுகம் முதலிய வடிவினவாகிய அந்தக்கரண பரிணாமங்களால் எப்பொருளின் விளக்கமு முண்டாகிறதில்லை. அவ்வாறே, ஆகாய முதலியவற்றானும் விளக்க முண்டாகிறதில்லை. ஆதலால், அவை விருத்தியன்று; ஞானரூப பரிணாமத்தால் விளக்க முண்டாகின்ற தாகலின், அதனையே விருத்தி யென்பார். சுகம், துக்கம், காமம், திருப்தி, குரோதம், பொறை, தைரியம், அதைரியம், நாணம், பயமுதலிய எத்துணை அந்தக்கரண பரிணாம முளவோ, அவை யனைத்தும் அநேக விடங்களில் விருத்தியென்னுஞ் சொல்லால் விவகரிக்கப்பட் டிருக்கின்றன; என்றாலும், "தத்துவாநுசந்தானம்" "அத்துவைத கௌஸ்துபம்" முதலிய நூல்களில் விளக்க பரிணாமமே விருத்தி யெனப்பட்டது. ஆகலின், மாயை யந்தக்கரணங்களின் ஞானரூப பரிணாமமே விருத்தி யென்னுஞ் சொல்லிற்கு அத்துவைத மதத்தில் பாரிபாஷிகப் பொருளாம்.

அவ் விருத்தி ஞானமும் (1)பிரமை வடிவினது, (2)அப்பிரமை வடிவினது என இருவகைத்தாம். பிரமாண ஜந்நிய(அவ்வையாற் றோன்றிய) ஞானத்தைப் பிரமை யென்பர்; அதனின் வேறாயதை அப்பிரமை யென்பர். பிரமை ஞானம் யதார்த்தமேயாம். அப்பிரமை ஞானம் இருவகையாம்:—ஒன்று: யாதார்த்தம், மற்றையது: பிரமம் (ஞ ௩௦). தோஷத்தாற் றோன்றியதனைப் பிரம மென்பர். தோஷத்தாற் றோன்றிய தாகாது, இந்திரிய வநுமான முதலிய பிரமாணங்களாலேனும் வேறு எக்காரணங்களாலேனும் முண்டாவ தெதுவோ, அது யதார்த்த மெனப்படும். சுத்தியில் இரசத ஞானம் சாதிருசிய (ஒப்புமைத்) தோஷத்தாற் றோன்றியதாகலின் பிரம (ஞ ௩) மாம். கற்கண்டில் கைப்புணர்வு பித்த தோஷத்தா லாயது; சந்திரனிடத்து இலகுத் தன்மையின் ஞானமும், அநேக விருக்ஷங்களினிடத்து ஒருமை யுணர்ச்சியும் சேய்மைத் தோஷத்தா லாகியனவாம்; ஆதலால், அவை பிரமமாம். விசாரசாகரத்தில் தோஷம் அத்தியாச வேதுவாகாதெனக் கண்டிக்கப்பட்டுள்ளது. அதனபிப்பிராயம் இதுவாம்:—

பிரமாதா பிரமாணம் பிரமேய மென்பவற்றின் மூன்று தோஷமும் அத்தியாசத்திற் கேது வல்ல; யாதேனு மோர் தோஷ மிருந்தால் அத்தியாச முண்டாகு மென்பதாம். எத் தோஷங்களு மின்றி யத்தியாச முண்டாமெனக் கூறியது * பிரௌடி வாதத்தாற் கூறியதாம். யாண்டு வேறெத் தோஷமு மில்லையோ, ஆண்டு அவித்தையே தோஷமாம். ஆதலால், தோஷத்தாற் றோன்றியதனையே பிரம மென்பர்.

ஸ்மிருதி ஞானமும், சுக துக்கங்களின் பிரத்தியக்ஷ ஞான மும், ஈசுவர விருத்தி ஞானமும் தோஷத்தாற் றோன்றியவன் றாகலின் பிரமமும் அன்று; பிரமாண ஜந்நிய மன்றாகலின் பிரமை யும் அன்று; பிரமப் பிரமைகளின் வேறாம்; ஆனால், யதார்த்த மாம். ஏனெனின், எவ் வுணர்ச்சியின் விடயத்திற்குச் சம்சார காலத்தில் ¶ பாத (வாய) மாத லில்லையோ, அது யதார்த்த மெனப்படுதலால்.

ஸ்மிருதி ஞானத்திற் கேது சம்ஸ்கார வாயிலாகப் பூர்வ அநுபவமாம். யாண்டு யதார்த்த அநுபவத்தால் ஸ்மிருதி யுண் டாகின்றதோ, ஆண்டு ஸ்மிருதி யதார்த்தம்.

பிரமவடிவ அநுபவத்தின் சம்ஸ்காரத்தா லுண்டாகும் ஸ்மிருதி அயதார்த்தமாம்.

தர்ம முதலிய நிமித்தத்தால் அநுகூலப் பிரதிகூல பதார்த் தங்களின் சம்பந்த முண்டாதலின், அந்தக்கரணத்தின், சத்துவ குண இரஜோ குணங்களின் பரிணாமமாகிய சுக துக்கங்க ளுண் டாகின்றன. சுக துக்கங்களுக்கு நிமித்தம் யாதோ, அந் நிமித்தத் தானே சுக துக்கங்களை விஷயஞ் செய்யும் அந்தக்கரண விருத்தியு முண்டாகின்றது. அவ் விருத்தியில் ஆரூட (ஏறியுள்ள) சாட்சி சுக துக்கங்களை விளக்குகின்றது. சுகாகார துக்காகார அந்தக் கரண விருத்தி பிரமாணஜந்நிய மன்று; அதனால் பிரமை யன்று.

ஈசனது இச்சா ஞானக் கிரியைகள் நியாயமதத்திலோ நித் தியமாம். ஆனால், சுருதியில் ஈசுவரனது ஞான முதலியவற் றிற்கு உற்பத்தி கூறப்பட்டிருத்தலால் நித்திய மன்று. ஆனால்,

* பிரௌடி - தனது மேன்மையின்பொருட்டு, வாதம் - சொல்லு தல் பிரௌடி வாதமாம்.

¶ பாதம் - மித்தியாத்துவ நிச்சயம் (பொய்யெனத் துணிதல்).

பிராணிகளது கர்மாநுசாரமாகச் சிருஷ்டியின் ஆதிகாலத்தில் சருவ பதார்த்தங்களேயும் விஷயஞ் செய்யும் ஈசுவரனது ஞானம் உண்டாயிருக்கின்றது. அந்த ஞானம் பூத பவிஷ்யத வர்த்த மான காலத்துச் சகல பதார்த்தங்களின் சாமாநிய விசேஷத் தன்மைகளேயும் விஷயஞ் செய்கின்றது; பிரளய பரியந்தம் நிற்பதாயு மிருக்கின்றது. ஆதலால், அந்த ஞானத்தை ஏகமென் றும் நித்தியமென்றும் கூறுவர். அங்ஙனமே இச்சையும் கிரியை யும் உற்பத்தி யுடையனவும் நிலேயுள்ளனவுமாம். ஆதலால், பிர ளய பரியந்தம் ஒவ்வொரு * வியக்தி யிருக்கின்றது. இதன்கண் "ஈசுவரனது இச்சை பிரளயபரியந்தம் நிற்பதாகுமாயின் மழை வெயில் குளிர் என்பன ஈசுவரனதிச்சையால் உண்டாகின்றன வாகலின், பிரளய பரியந்தம் மழை, அங்ஙனமே வெயில், அல் லது குளிர் என்பன உண்டாதல் வேண்டும்" எனச் சங்கை யுண்டாயின், அச் சங்கை பொருந்தாது. ஏனெனின், ஈசுவர னது இச்சையாகிய வியக்தி நாநாவாயும் நித்தியமாயு மிருக்கு மாயின், அப்போது இத் தோஷ முண்டாம். அவ் வீசுவரனது பிரளய பரியந்தம் நிற்கும் இச்சையாகிய வியக்தி நாநாவன்று; ஏகமாம். அவ்வொரு இச்சை சகல பதார்த்தங்களேயும் எவ் வகையாக விஷயஞ் செய்கின்றதோ, அவ்வகையாக, அவை யுண் டாகின்றன. "இவ்வளவு காலம் மழை யுண்டாகுக, இவ்வளவு காலம் குளி ருண்டாகுக, இவ்வளவு காலம் வெயி லுண்டாகுக." என் றிவ்வாறு ஈசுவரனது இச்சை பதார்த்தங்களே விஷயஞ் செய்கின்றது. ஆதலால், சகல பதார்த்தங்களும் ஓர் காலத்தி லுண்டாகின்றன. பிரளய பரியந்தம் நிற்கும் இச்சை யொன்று மென்னும் இப் பக்ஷத்தில் தோஷ மின்று.

சுருதியில் இச்சா ஞானக் கிரியைகளுக்கு உற்பத்தி சொல் லப்பட் டிருக்கின்றது. ஆதலால், ஞான முதலியன உற்பத்தி யுடையனவாய் ஆகாயத்தைப்போல மகாப்பிரளய பரியந்தம் நிற்பனவாம். ஒருவன் ஈசனது ஞானத்திற்குப் பிரபஞ்ச ஸ்திதி காலத்தில் அநேக முறை உற்பத்தி நாச மொப்புவானாயின், அவனே "ஈசுவரனிடத்து ஏதோ ஓர் ஞானவியக்தி பிரபஞ்சத் தின் ஸ்திதி காலத்தில் எப்போதும் பொருந்தி யிருக்கின்றதா? அல்லது, பிரபஞ்ச மிருக்க ஓர் காலத்தில் ஞான மின்றிய ஈசு

* சாதிக்கு ஆசிரயமா யுள்ளது வியக்தி.

வா னிருக்கின்றுஞ?'' என்று இவ்வாறு வினவுவாம். ஞான மின்றிய ஈசுவரன் ஓர்காலத்தி லிருக்கின்றுனெனின், அக்காலத்து ஈசுவரன் அஞ்ஞனுவன். ஓர் ஞான வியக்தி ஈசுவானிடத்து என்று முளதெனின், அநந்த ஞானத்திற்கு அநந்த உற்பத்தி அநந்த நாச மொப்புதல் நிஷ்பலமாம். ஒரு ஞானமே சிருஷ்டியின் ஆதிகாலத்தி லுண்டாய் மகாப்பிரளய பரியந்தம் நிற்பதா யிருக்கின்றது.

அவ் வீசுவரனது இச்சா ஞானக் கிரியைகள் விசம்வாதி யன்று; சம்வாதியாம். நிஷ்பலப் பிரவிருத்தியைப் பிறப்பிக்கும் இச்சை முதலியன விசம்வாதி யெனப்படும்; அதனின் வேருயவை சம்வாதி யெனப்படும். ஜீவனது இச்சா ஞானக் கிரியைகள் சம்வாதி விசம்வாதி யென இரு வகையாம். ஈசுவரனது இச்சா ஞானக் கிரியைகள் நிஷ்பலப் பிரவிருத்தியை யுண்டுபண்ணுவன வாகாமையின், விசம்வாதி யன்று, சம்வாதி யாம்.

விசம்வாதி ஞானத்தைப் பிரம மென்பர்.

சம்வாதி ஞானத்தை யதார்த்த மென்பர்.

பிரமாண ஜந்நிய யதார்த்த ஞானத்தைப் பிரமை யென்பர்.

ஜீவனது ஞானம் அந்தக்கரண விருத்தி வடிவமாம்; அதுபோல, ஈசுவரனது ஞானம் மாயையின் விருத்தி வடிவமாம்; ஜீவர்களது அதிருஷ்டத்தாற் ருேன்றியதாம்; பிரமாண ஜந்நிய மன்று. ஆகலின், பிரமை யன்று; தோஷத்தாற் ருேன்றியது மன்று; நிஷ்பலப் பிரவிருத்தியை யுண்டுபண்ணுவது மன்று; ஆகலின், பிரமமு மன்று; யதார்த்தமாம். பிரமாண ஜந்நிய ஞானத்தைப் பிரமை யென்பர்.

2. பிரமாண பேதம்

பிரமாணம்: (1)பிரத்தியக்ஷம், (2)அநுமானம், (3)சப்தம், (4)உவமானம், (5)அருத்தாபத்தி, (6)அநுபலப்தி யென ஆறும்.

(1) பிரத்தியக்ஷப் பிரமையின் காரண மெதுவோ, அது பிரத்தியக்ஷப் பிரமாண மெனப்படும்.

(2) அநுமிதிப் பிரமையின் காரணத்தை அநுமானப் பிரமாண மென்பர்.

(3) சாப்திப் பிரமையின் காரணத்தைச் சப்தப்பிரமாண மென்பர்.

(4) உவமிதிப் பிரமையின் காரணத்தை உவமானப் பிரமாண மென்பர்.

(5) அருத்தாபத்திப் பிரமையின் காரணத்தை அருத்தாபத்திப் பிரமாண மென்பர்.

(6) அபாவப் பிரமையின் காரணத்தை அநுபலப்திப் பிரமாண மென்பர்.

பிரத்தியக்ஷ அருத்தாபத்திப் பிரமாணங்களுக்கும் பிரமைகளுக்கும் பெயர் ஒன்றேயாம். பட்டர் மதத்தில் ஆறு பிரமாணங்கள் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றன. வேதாந்த நூற்களிலும் ஆறு பிரமாணங்களே எழுதப்பட்டிருக்கின்றன. * சூத்திரகார பாஷியகாரர்கள் பிரமாண சங்கையை எழுதாவிடினும் சித்தாந்தத்திற்கு விரோத மின்றிய பட்டர் மதத்தினை அத்வைத வாதத்தில் அங்கீகரித்திருக்கின்றனர். ஆதலால், வேதாந்த பரிபாஷை முதலிய நூல்களில் ஆறு பிரமாணங்களே எழுதப்பட் டிருக்கின்றன.

3. கரண லக்ஷணம்

நியாய சாஸ்திரத்தில் நான்கு பிரமாணங்களை அங்கீகரித்திருக்கின்றனர். அருத்தாபத்தி யநுபலப்திகளை யங்கீகரிக்கவில்லை. ஆண்டு நியாய சாஸ்திரத்தின் மதம் இதுவாம்:—

பிரமையின் காரணம் பிரமாண மெனப்படும். பிரத்தியக்ஷப் பிரமையின் காரணம் நேத்திர முதலிய இந்திரியங்களாம். ஆகவின், நேத்திராதி இந்திரியங்களைப் பிரத்தியக்ஷப் பிரமாண மென்பர்.

வியாபாரமுடைய அசாதாரண காரணம் கரணமெனப்படும்.

(1) ஈசுவரன், (2) அவனது இச்சை, (3) ஞானம், (4) கிரியை, (5) திக்கு, (6) காலம், (7) அதிருஷ்டம், (8) பிராகபாவம், (9) பிரதிபந்தகாபாவ மென்னு மிவை யொன்பதும் சாதாரண காரணமாம்.

* சூத்திரகாரர் - வியாசர். பாஷியகாரர் - சங்கரபகவத்பாதர்.

இவற்றிற்கு வேறாய காரணம் அசாதாரண காரண மென்ப் படும்.

அசாதாரண காரணமும் வியாபார முடையது, வியாபார மின்றியது என இரு வகையாம்.

காரணத்திற் றோன்றிக் காரியத்தைத் தோற்றுவிப்ப தெது வோ அது வியாபார மெனப்படும். எங்ஙனம்:—கபாலம் கடத்திற் குக் காரணம். கபால மிரண்டின் சையோகமும் கடத்திற்குக் காரணம். ஆண்டுக் கபாலங் காரணமாதலிற் சையோகம் வியா பாரமாம். ஏனெனின், கபால சையோகம் கபாலத்திற் றோன்றிக் கபாலத்தின் காரியமாகிய கடத்தைத் தோற்றுவிக்கின்றது. ஆக லின், சையோகரூப வியாபாரமுடைய காரணம் கபாலமாம். காரியத்தை ஒன்றன் வாயிலாகத் தோற்றுவியாது தானே தோற்றுவிப்பது எதுவோ, அது வியாபார மின்றிய காரண மெனப்படும்.

ஈசுவரன் முதலிய ஒன்பது சாதாரண காரணங்களுக்கும் வேறாகிய வியாபாரமுடைய காரணம் கரண மெனப்படும். அத் தன்மையது கபாலமாம். ஆகலின், கடத்திற்குக் கபாலம் கரண மெனப்படும். கபாலத்தின் சையோகம் அசாதாரணமாயினும், வியாபார முடைய தன்று. ஆகலின், கரண மெனப்படாது, கேவலம் காரண மென்றே சொல்லப்படும்.

4. பிரத்தியக்ஷப் பிரமையின் பேதம்

அங்ஙனமே பிரத்தியக்ஷப் பிரமைக்கு நேத்திர முதலிய இந்திரியங்கள் கரணமாம். ஏனெனின், நேத்திர முதலிய இந் திரியங்களுக்குத் தத்தம் விஷயங்களோடு சம்பந்த முண்டாகா வீடின் பிரத்தியக்ஷப் பிரமை யுண்டாகிறதில்லை. இந்திரிய விஷய சம்பந்த முண்டாகும்போ துண்டாகின்றது. ஆகலின், இந்திரிய விடயங்களின் சம்பந்தம் இந்திரியத்திற் றோன்றிப் பிரத்தியக்ஷப் பிரமையைத் தோற்றுவித்தலால் வியாபாரமாம்.

சம்பந்த ரூப வியாபாரமுடைய பிரத்தியக்ஷப் பிரமையின் அசாதாரண காரணம் இந்திரியமாகலின் இந்திரியங்களைப் பிரத்தியக்ஷப் பிரமாண மென்பர்.

இந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானத்தை நியாய மதத்திற் பிரத்தியக்ஷப் பிரமை யென்பர்.

பிரத்தியக்ஷப் பிரமையின் கரணமாகிய இந்திரியம் ஆறாயிருத்தலின் பிரத்தியக்ஷப் பிரமையும் அறுவகையாம்.

(1)சுரோத்திரம், (2)துவக்கு, (3)நேத்திரம், (4)இரசனை, (5)கிராணம், (6) மனமென்னும் ஆறும் இந்திரியங்களாம்.

சுரோத்திர ஜந்நிய யதார்த்த ஞானம் சுரோத்திரப்பிரமையாம்.

துவக்கிந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானம் துவாசப் பிரமையாம்.

நேத்திரேந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானம் சாக்ஷுஷப் பிரமையாம்.

இரசனேந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானம் இராசனப் பிரமையாம்.

கிராணேந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானம் கிராணஜப் பிரமையாம்.

மன இந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானம் மானசப் பிரமையாம்.

நியாயமதத்தில் சுத்தி ரசித முதலிய பிரமமும் இந்திரிய ஜந்நியமாம். ஆனால், கேவல இந்திரிய ஜந்நிய மன்று; தோஷத்தோடு கூடிய இந்திரிய ஜந்நியமாம். விசம் வாதியாம்; யதார்த்த மன்று. ஆகலின், சுத்தியில் இரசதஞானம் சாக்ஷுஷ ஞானமாயினும் சாக்ஷுஷப் பிரமை யன்று. இவ்வாறு மற்ற இந்திரியத்தா லுண்டாகும் பிரமம் யாதோ. அது பிரமை யன்று.

5. பிரத்தியக்ஷப் பிரமையின் சுரோத்திரஜப் பிரமையின் நிரூபணம்

சுரோத்திரேந்திரியத்தால் சத்தத்தின் ஞானமும், சத்தத்திலுள்ள சத்தத்தன்மைச் சாதியின் ஞானமு முண்டாகின்றன. அவ்வாறே, சத்தத்தன்மையின் வியாப்பியமான கத்துவ (ககரத் தன்மை) முதலியவற்றின் ஞானமும், *தாரத்துவ முதலியவற்றின் ஞானமு முண்டாகின்றன; அங்ஙனமே, சப்தாபாவத்தின் ஞானமும், சப்தத்தில் தாரத்தன்மை முதலியவற்றின் அபாவ ஞானமு முண்டாகின்றன.

* தாரம் - உச்ச ஸ்வரம்.

சுரோத்திரேந்திரியத்தால் எதன் ஞான முண்டாகின்றதோ, அவ் விடயத்தோடு சுரோத்திரேந்திரியத்திற்குச் சம்பந்தஞ் சொல்லவேண்டியதாகலின் சம்பந்தம் சொல்லப்படுகின்றது.

நியாயமதத்தில் நான்கிந்திரியங்களுமோர் முறையே (1) வாயு, (2) அக்கினி, (3) ஜலம், (4) பிருதிவி யென்பவற்றினின்றும் உண்டாயின. சுரோத்திரமும் மனமும் நித்தியமாம். கர்ணகோளகத்திலுள்ள ஆகாயத்தைச் சுரோத்திர மென்பர்.

வாயு முதலியவற்றினின்றும் துவக்கு முதலியன உண்டாயிருப்பதுபோல ஆகாயத்தினின்றும் சுரோத்திர முண்டாயிருக்கின்றதென நையாயிகர் கொள்ளார். கர்ணத்திலுள்ள ஆகாயமெதுவோ, அதனையே சுரோத்திர மென்பர். குணத்திற்குக் குணியோடு சமவாய சம்பந்தங் கூறுவர்.

சத்தம் ஆகாயத்தின் குணமாம். ஆதலால், ஆகாய வடிவமாகிய சுரோத்திரத்தோடு சத்தத்திற்குச் சமவாய சம்பந்தமுண்டு. பேரிமுதலிய விடங்களிலுள்ள ஆகாயத்தில் சத்தமுண்டாகின்றது. கர்ண உபகித (காதில் விளைப்பட்ட) ஆகாயத்தைச் சுரோத்திர மென்பாராகலின், பேரி முதலியவற்றுன் உபகித ஆகாயத்தில் சப்தத்தின் சம்பந்த முள்ளது. கர்ண உபகித ஆகாயத்தி லில்லை; என்றாலும், பேரி தண்டங்களின் சையோகத்தால் பேரி யுபகித ஆகாயத்தில் சப்த முண்டாகின்றது. அதற்குக் கர்ண உபகித ஆகாயத்தோடு சம்பந்தமில்லை யாகலின் பிரத்தியக்ஷ மாகிறதில்லை. ஆனால், அச்சப்தத்தினின்றும் வேறு சப்தங்கள் பத்துத் திசைகளான் உபகிதமாய் ஆகாயத்தில் உண்டாகின்றன. அவற்றினின்றும் வேறு (சத்தங்கள்) உண்டாகின்றன. கர்ண உபகித ஆகாயத்திலுண்டாகும் சத்தத்தின் பிரத்தியக்ஷ ஞான முண்டாகுமேயன்றிப் பிறவற்றின் ஞான முண்டாவதில்லை. சத்தத்தின் பிரத்தியக்ஷப் பிரமை பலம். சுரோத்திரேந்திரியம் காணம். துவாச முதலிய பிரத்தியக்ஷ ஞானத்திலோர் சகல விஷயங்களுக்கும் இந்திரியத்தோடுள்ள சம்பந்தமே வியாபாரமாம். சுரோத்திரப் பிரமையில் விஷயத்தோடு இந்திரியத்திற்குள்ள

வியாபாரம் சம்பந்தமாதல் இல்லை. ஏனெனின், பிற விடங்களில் விடயங்களுக்கு இந்திரியங்களோடு சையோக சம்பந்த முளது. சத்தத்திற்குச் சுரோத்திரத்தோடு சமவாய சம்பந்த முளது. நியாயமதத்தில் சையோகம் ஜந்நியமாம், சமவாயம் நித்திய மாம். துவக்கு முதலிய இந்திரியங்களுக்குக் கடாதிகளோடுள்ள சையோக சம்பந்தம் துவக்கு முதலிய இந்திரியங்களினின்றுந் தோற்றிப் பிரமையை யுண்டாக்குகின்றமையால் வியாபாரமாம். அவ்வாறு சத்தத்திற்குச் சுரோத்திரத்தோடுள்ள சமவாயசம் பந்தம் சுரோத்திர ஜந்நியமன்று; ஆதலால், வியாபார மாகாது; சுரோத்திர மனதுகளுக்குள்ள சையோகம் வியாபாரமாம். சையோகம் இரண்டினை ஆசிரயித்திருக்கும். எவற்றை யாசிர யித்துச் சையோக மிருக்குமோ, அவ் விரண்டும் சையோகத் திற்கு உபாதான காரணமாம். சுரோத்திர மனதுகளின் சையோகத்திற்கு உபாதான காரணம் சுரோத்திரம் மனமெனும் இரண்டுமாம். சுரோத்திர மனதுகளின் சையோகம் சுரோத் திரத்தாற் றோன்றிச் சுரோத்திரத்தாற் றோன்றும் ஞானத் தைத் தோற்றுவிப்பதாயிருத்தலின் வியாபாரமாம்.

இதில், 'சுரோத்திர மனதுகளின் சையோகம் சுரோத்தி ரத்தாற் றோன்றியதாயினும் எங்ஙனம் சுரோத்திர ஜந்நிய பிரமையை யுண்டாக்குவதாம்?' எனச் சங்கை நிகழுமாயின், அதற்குச் சமாதானம் வருமாறு:—

ஆன்ம மனதுகளின் சையோகமோ சகல ஞானத்திற்கும் சாதாரண காரணமாம். ஆகலின், ஞானத்தின் சாமாநிய சாமக் கிரி ஆன்ம மனதுகளின் சையோகமாம். பிரத்தியக்ஷ முதலிய ஞானத்தின் விசேஷ சாமக்கிரி இந்திரிய முதலியனவாகலின், சுரோத்திர ஜந்நியப் பிரத்தியக்ஷ ஞானத்திற்கு முன்னும் ஆத்ம மனதுகளுக்குச் சையோக முண்டாகின்றது; அங்ஙன மே மனதிற்கும் சுரோத்திரத்திற்கும் சையோக முண்டாகின் றது. மனதிற்கும் சுரோத்திரத்திற்கும் சையோக முண்டாத லின்றிச் சுரோத்திர ஜந்நிய ஞான முண்டாகிறதில்லை. ஏனெ னின், அநேக இந்திரியங்களுக்குத் தத்தம் விஷயங்களோடு ஒரு காலத்திற் சம்பந்த முண்டாகியும், ஒரு காலத்தில் அவ் வெல்லா விஷயங்களின் ஞானமும் இந்திரியங்களால் உண்டாத லில்லை. அதன்கண் இஃது ஏதுவாம்:—

மனதின் சையோகமுடைய இந்திரியத்திற்கு விஷயத்தோடு சம்பந்த முண்டாகுங்கால் ஞான முண்டாகின்றது. மனதோடு கூடாத இந்திரியத்திற்குத் தனது விஷயத்தோடு சம்பந்த முண்டாயினும் ஞான முண்டாகிறதில்லை.

நியாயமதத்தில் மனம் பரமாணுவாகலின் ஒருகாலத்தில் அநேக இந்திரியங்களோடு மனதிற்குச் சையோகம் சம்பவிப்பதில்லை. இக் காரணத்தால் அநேக இந்திரியங்களால் ஒரே காலத்தில் அநேக விடயங்களின் ஞான முண்டாத வில்லை. ஞானத்திற்கு ஏது இந்திரிய மனதுகளின் சையோக மன்றெனின், ஒரே காலத்தில் அநேக இந்திரியங்களுக்கு விஷயங்களோடு சம்பந்த முண்டாகி ஏக காலத்தில் அநேக ஞானம் உண்டாதல்வேண்டும். இவ்வாற்றால் சக்ஷுமுதலிய இந்திரியங்களுக்கு மனதோடுண்டாகுஞ் சையோகம் சாக்ஷுஷ முதலிய ஞானங்களுக்கு அசாதாரண காரணமாம்.

துவாச ஞானத்தில் துவக்கு மனதுகளின் சையோகம் காரணம்.

இராசன ஞானத்தில் இரசனை மனதுகளின் சையோகம் காரணம்.

அங்ஙனமே சாக்ஷுஷஞானத்தில் நேத்திர மனதுகளின் சையோகமும், கிராணஜ ஞானத்தில் கிராண மனதுகளின் சையோகமும், சுரோத்திரஜ ஞானத்தில் சுரோத்திர மனதுகளின் சையோகமும் காரணமாம்.

இவ்வாற்றால் சுரோத்திர மனதுகளின் சையோகம் சுரோத்திரத்திற் றோன்றிச் சுரோத்திரத்திற் றோன்றும் ஞானத்தைத் தோற்றுவிப்பதா யிருத்தலின் வியாபாரமாம். ஆன்ம மனதுகளின் சையோகம் சகல ஞானத்திலும் ஏதுவாம். ஆகவின், முதலில் ஆன்ம மனதுகளின் சையோக முண்டாகி, அதன்பின் எவ்விந்திரிய ஜந்நிய ஞான முண்டாகுமோ அவ்விந்திரியத்தோடு ஆத்ம சையுத்த மனதிற்குச் சையோக முண்டாகின்றது; பின்னர் மனசை யுக்த இந்திரியத்திற்கு விஷயத்தோடு சம்பந்த முண்டாய்ப் பாகியப் பிரத்தியக்ஷ ஞான முண்டாகின்றது. இந்திரிய விஷயங்களின் சம்பந்த மின்றிப் பாகியப் பிரத்தியக்ஷ ஞான முண்டாகிறதில்லை.

விஷயத்திற்கு இந்திரியத்தோடுள்ள சம்பந்தம் அநேக விதம்:—

யாண்டுச் சுரோத்திரத்தால் சப்தத்தின் பிரத்தியக்ஷ ஞான முண்டாகின்றதோ, ஆண்டுச் சப்தமாத்திரமே சுரோத்திர ஜந்நிய ஞானத்திற்கு விடயமன்று; சப்தத்தின் தர்மமாகிய சப்தத்தன்மை முதலியனவும் அந்த ஞானத்திற்கு விஷயமாம்.

சப்தத்திற்கோ சுரோத்திரத்தோடு சமவாயசம்பந்தமுளது; சத்தத்தின் தர்மமாகிய சத்தத்தன்மை முதலியவற்றோடு சுரோத்திரத்திற்குச் சமவேத சமவாய சம்பந்த முளது. ஏனெனின், குண குணிகளுக்குப்போல ஜாதிக்குந் தனது ஆசிரயத்தில் சமவாய சம்பந்த முண்டு. அதனால் சத்தத்தன்மைச் சாதிக்குச் சத்தத்தில் சமவாய சம்பந்த முண்டு. சமவாய சம்பந்தத்தோ டிருப்ப தெதுவோ, அதனைச் சமவேத மென்பர்.

சுரோத்திரத்தில் சமவாய சம்பந்தத்தாலிருக்கும் சப்தம் எதுவோ அது சுரோத்திர சமவேதமாம். அச் சுரோத்திர சமவேத சத்தத்தில் சத்தத்தன்மையின் சமவாய மிருத்தலின் சுரோத்திரத்திற்குச் சத்தத்தன்மையோடு சமவேத சமவாய சம்பந்த முளது.

அங்ஙனமே சுரோத்திரத்தில் சத்தஞான முண்டாகாத காலத்துச் சத்தாபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டுச் சத்தாபாவத்திற்குச் சுரோத்திரத்தோடு விசேஷணத்தன்மைச் சம்பந்த முளது.

எவ் வதிகாணத்தில் பதார்த்தத்தின் அபாவ முண்டாகின்றதோ, அவ் வதிகாணத்துள்ள பதார்த்தத்தின் அபாவத்திற்கு விசேஷணத்தன்மைச் சம்பந்தம் சொல்லப்படுகின்றது.

வாயுவில் உருவ மில்லையாகலின் வாயுவில் உருவ மின்மையின் விசேஷணத்தன்மைச் சம்பந்த முளது.

யாண்டுப் பிருதிவியில் கட மில்லையோ, ஆண்டுப் பிருதிவியில் கடாபாவத்திற்கு விசேடணத் தன்மைச் சம்பந்த முளது. இவ்வாற்றால் சத்த சூனிய சுரோத்திரத்தில் சத்தாபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்த முளது.

ஆகலின், சுரோத்திரத்தோடு சத்தாபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்தம் சத்தாபாவத்தின் பிரத்தியக்ஷஞானத்திற்கு ஏதுவாம்.

சுரோத்திரத்தினால் ககரமுதலிய சத்தத்தின் பிரத்தியக்ஷமுண்டாகுமிடத்துச் சமவாய சம்பந்த முளது. அவ்வாறே ககரமுதலியவற்றிலுள்ள கத்துவமுதலிய சாதிகளின் பிரத்தியக்ஷஞானம் சமவேத சமவாய சம்பந்தத்தா லுண்டாகின்றது.

சுரோத்திரத்தில் சத்தாபாவத்தின் பிரத்தியக்ஷம் விசேஷணத் தன்மைச் சம்பந்தத்தா லுண்டாகின்றது. அவ்வாறே, சுரோத்திர சமவேத ககரத்தில் * நத்துவாபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டுச் சுரோத்திரத்திற்கு நத்துவாபாவத்தோடு சமவேத விசேஷணத்தன்மைச் சம்பந்த முளது.

ஏனெனின், சுரோத்திரத்திற் சமவேதித்திருக்கும் ககரத்தில் நத்துவாபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. இதுமுதல் அநேக சம்பந்தங்கள் அபாவப் பிரத்தியக்ஷத்தில் சுரோத்திரத்தோ டிருக்கின்றன. ஆனால், விசேஷணத் தன்மைத் தன்மை சகல அபாவங்களின் சம்பந்தத்திலு முளது. ஆதலால், அபாவப் பிரத்தியக்ஷத்தில் சுரோத்திரத்திற்கு ஒரே விசேஷணத் தன்மைச் சம்பந்த முளது. இவ்வாற்றால் சுரோத்திர ஜந்நியப் பிரமைக்கு ஏது மூன்று சம்பந்தமாம்.

சத்தத்தின் ஞானத்திற்கு ஏது சமவாய சம்பந்தமாம்.

சத்தத்தின் தர்மமாகிய சத்தத் தன்மை கத்தன்மை முதலியவற்றின் ஞானத்திற்கு ஏது சமவேத சமவாய சம்பந்தமாம்.

அபாவத்தின் சுரோத்திர ஜந்நிய ஞானத்தில் விசேஷணத் தன்மைச் சம்பந்தம் ஏதுவாம்.

அவ் விசேஷணத் தன்மை பல வகைப்படும். சப்தாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சுத்த விசேஷணத்தன்மைச் சம்பந்த முண்டு.

ககரத்தில் நத்துவாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சமவேத விசேஷணத் தன்மை யுண்டு.

* நத்துவம் - நகரத் தன்மை.

விசேஷணத் தன்மைச் சம்பந்தத்திற்கு அநேக வேறுபாடுக ளுளவாயினும், எல்லாவற்றிலும் விசேஷணத் தன்மைத் தன்மைச் சமமாதலின் விசேஷணத் தன்மை ஒன்றே யெனப்படுகின்றது.

சத்தம் இரண்டு வகையாம்:—ஒன்று: பேரி முதலிய விடத்தி லுண்டாகும் துவனி வடிவினதாகிய சத்தம்.

மற்றென்று: கண்டமுதலிய விடத்து வாயுவின் சையோகத்தா லுண்டாகும் வர்ண (எழுத்து) வடிவினதாகிய சத்தம்.

சுரோத்திரேந்திரியத்தால் இருவகைச் சத்தத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. வர்ண ரூப சத்தத்தில் எங்ஙனம் கத்துவமுதலிய சாதிகளின் பிரத்தியக்ஷம் சமவேத சமவாய சம்பந்தத்தா லுண்டாகின்றதோ, அங்ஙனமே துவனிரூப சத்தத்தி லுள்ள தாரத்துவ மந்தத்துவ முதலிய தர்மங்களின் பிரத்தியக்ஷமும் சுரோத்திரத்தின லுண்டாகின்றது. ஆனால், கத்துவ முதலியனவோ வர்ணங்களின் தர்மமாகிய ஜாதிரூபமாம். ஆதலால், கத்துவாதிகளுக்குக் ககர முதலிய வடிவினவாகிய சத்தங்களோடு சமவாய சம்பந்த முண்டு. துவனிரூப சத்தத்தின் தாரத்துவ முதலிய தர்மம் ஜாதி ரூபமன்று; நியாயமதத்தில் உபாதி ரூபமாம். ஆகலின், தாரத்துவ முதலியவற்றிற்குத் துவனிரூப சத்தத்தில் சமவாய சம்பந்த மில்லை; சுவரூப சம்பந்த முளது.

ஏனெனின், நியாயமதத்தில் சாதிரூப தர்மத்திற்கும் குணத்திற்கும் கிரியைக்கும் தமது ஆசிரயத்தில் சமவாய சம்பந்தம் கூறுவர்.

சாதி குணக் கிரியைகளின் வேறாகிய தர்மத்தினை உபாதி யென்பர்.

உபாதிக்கும் அபாவத்திற்கும் அதனதன் ஆசிரயத்தோடுள்ள சம்பந்தத்தைச் சொரூப சம்பந்த மென்பர்.

சொரூபத்தையே விசேஷணத்தன்மை யென்பர்.

ஆகலின், சாதிக்கு வேறாகிய தாரத்துவ முதலிய தர்மங்களுக்குத் துவனி ரூப சத்தத்தோடு சொரூப சம்பந்த முண்டு. அதனையே விசேஷணத்தன்மை யென்பர்.

ஆதலால், சுரோத்திர சமவேதமாகிய துவனியில் தாரத்துவ மந்தத்துவங்களின் விசேஷணத் தன்மைச் சம்பந்தமிருத்தலின், சுரோத்திரத்திற்கும் தாரத்துவ மந்தத்துவங்களுக்கும் சுரோத்திர சமவேத விசேஷணத் தன்மைச் சம்பந்தமுண்டு.

இவ்வாற்றால் சுரோத்திரேந்திரியம் சுரோத்திரப் பிரத்தியக்ஷப் பிரமையின் கரணமும், சுரோத்திர மனதுகளின் சையோகம் வியாபாரமும், சத்த முதலியவற்றின் பிரத்தியக்ஷப் பிரமையாகிய ஞானம் பலமுமாம்.

6. துவாசப் பிரமையின் நிரூபணம்

துவக்கிந்திரியத்தால் ஸ்பரிசத்தின் ஞான முண்டாகின்றது; அப்படியே ஸ்பரிசாசிரயத்தின் ஞானமு முண்டாகின்றது. அன்றியும், ஸ்பரிசத்தின் ஆசிரிதமான ஸ்பரிசத்துவ ஜாதியின் பிரத்தியக்ஷமும் ஸ்பரிசாபாவத்தின் பிரத்தியக்ஷமும் துவக்கிந்திரியத்தி னுண்டாகின்றன.

ஏனெனின், எவ்விந்திரியத்தால் எப் பதார்த்தத்தின் ஞானமுண்டாகின்றதோ, அப் பதார்த்தத்தின் அபாவத்தினது ஞானமும் அப் பதார்த்தத்தினது ஜாதியின் ஞானமும் அவ்விந்திரியத்தால் உண்டாகும்.

பிருதிவி ஜலம் தேயு வென்னும் மூன்று திரவியங்களின் பிரத்தியக்ஷ ஞானமும் துவக்கிந்திரியத்தி னுண்டாகின்றது. வாயுவின் பிரத்தியக்ஷஞான முண்டாகிறதில்லை. ஏனெனின், பிரத்தியக்ஷ யோக்கிய ரூபமும் பிரத்தியக்ஷ யோக்கிய ஸ்பரிசமுமாகிய இரண்டும் எத் திரவியத்தி லிருக்கின்றனவோ, அத் திரவியத்தின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாம். வாயுவில் ஸ்பரிசமோ இருக்கின்றது; ஆனால் உருவம் இல்லை. ஆகலின், வாயுவின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. வாயுவினது ஸ்பரிசத்தின் பிரத்தியக்ஷம் துவக்கிந்திரியத்தான் உண்டாகின்றது; ஸ்பரிசத்தின் பிரத்தியக்ஷத்தால் வாயுவின் அநுமிதி ஞான முண்டாகின்றது.

மீமாம்ஸா மதத்தில் வாயுவின் பிரத்தியக்ஷ முண்டாகிறதென்பதின் அபிப்பிராயம் இதுவாம்:—

பிரத்தியக்ஷ யோக்கிய ஸ்பரிசம் எத் திரவியத்தி லிருக்கின்றதோ அத் திரவியத்தின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. துவக்கிந்திரிய ஜந்நிய திரவியத்தின் பிரத்தியக்ஷத்தில் உருவத்தின் அபேக்ஷை யில்லை. கேவல ஸ்பரிஸத்தின் அபேக்ஷை யிருக்கிறது.

எங்ஙனம்: திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத வுருவத்தின் அபேக்ஷை யுண்டு; ஸ்பரிசத்தின் அபேக்ஷை யில்லை. எனெனின், திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத ஸ்பரிசத்தின் அபேக்ஷை யிருக்குமாயின், தீபத்தின் பிரபையிலும் அங்ஙனமே சந்திரனது பிரபையிலும் உற்பூத ஸ்பரிசமில்லை யாகலின், அவற்றின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகாது; பிரத்தியட்சமோ உண்டாகிறது.

அன்றியும் (திரி) அணுகத்தில் ஸ்பரிசமோ விருக்கின்றது; ஆனால், உற்பூத ஸ்பரிச மில்லை. ஆகலின், துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை; கேவலம் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிறது. ஆதலாற் கேவல உற்பூத ரூபமுடைய திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

அங்ஙனமே, கேவல உற்பூத ஸ்பரிசமுடைய திரவியத்தின் துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாகின்றது. வாயுவில் உருவமோ இல்லை; உற்பூத ஸ்பரிச மிருக்கின்றது. ஆகலின், வாயுவின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை; துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

மற்றும் எல்லா ஜனங்களுக்கும் 'எனக்குத் துவக்கினால் வாயுவின் பிரத்தியக்ஷ முண்டாகின்ற' தென்று அநுபவ முண்டாகின்றது. ஆகலின், வாயுவின் பிரத்தியக்ஷமும் துவக்கிந்திரியத்தின லுண்டாகின்ற தென்பது மீமாம்ஸாமதமாம்.

ஆனால், நியாயசித்தாந்தத்தில் வாயு பிரத்தியக்ஷ மன்று. பிருதிவி ஜல தேயுக்களினும் யாண்டு உற்பூத உருவமும் உற்பூத பரிசமு முண்டோ, ஆண்டு அவற்றின் துவாசப்பிரத்தியக்ஷ முண்டாகின்றது; மற்றவற்றின் துவாசப்பிரத்தியக்ஷ முண்டாத லில்லை.

பிரத்தியக்ஷ யோக்கியமாகிய உருவமும் பரிசமும் உற்பூதமெனப்படும். கிராண ரசன நேத்திரங்களில் உருவமும் பரிசமு

மிருக்கின்றன; ஆனால், அவை உற்பூத மன்று. ஆகலின், பிருதிவி ஜல தேயு வடிவான அவ் விந்திரியங்களின் துவாசப் பிரத்தியக்ஷமும் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை.

அன்றியும், சாளரத்திற் றோன்றும் அதி நுட்பமான துகள் எதுவோ அது அணுகரூபமான பிருதிவியாம். அதில் உற்பூத உருவம் இருக்கின்றது. ஆகலின், அணுகத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமோர் உண்டாகின்றது; உற்பூத பரிச மின்மையான் துவாசப்பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. அணுகத்தில் பரிசமு மிருக்கின்றது; ஆனால், அப் பரிசம் உற்பூத மன்று.

வாயுவில் உற்பூத பரிசமோர் இருக்கின்றது; உருவ மில்லை. ஆகலின், வாயுவின் துவாசப் பிரத்தியக்ஷமும் அங்ஙனமே சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை.

இதனால் திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத வுருவம் ஏதுவா மென்பதும், திரவியத்தின் துவாசப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத வுருவமும் உற்பூத ஸ்பரிசமுமாகிய இரண்டும் ஏதுவா மென்பதுஞ் சித்தித்தன.

எத் திரவியத்தில் உற்பூத வுருவமும் உற்பூத ஸ்பரிசமு முளவோ அத் திரவியத்திற்கே துவாசப் பிரத்தியக்ஷ முண்டாம்.

எத் திரவியத்தின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, அத் திரவியத்தின் பிரத்தியக்ஷ யோக்கிய ஜாதியின் துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாகின்றது.

எங்ஙனம் கடத்தின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகு மிடத்துக் கடத்திலுள்ள பிரத்தியக்ஷ யோக்கிய ஜாதியாகிய கடத்தன்மையின் துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாகின்றதோ, அங்ஙனமே திரவியத்தி லுள்ள ஸ்பரிசம், சங்கை, பரிமாணம், சையோகம், விபாகம் முதலிய யோக்கிய குணங்களின் துவாசப் பிரத்தியக்ஷமும், ஸ்பரிச முதலியவற்றின்கணுள்ள ஸ்பரிசத்தன்மை முதலிய ஜாதிகளின் துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாகின்றன.

மென்மைத் திரவியத்தில் வன்மைப் பரிசத்தின் அபாவமும், குளிர்ந்த ஜலத்தில் உஷ்ண ஸ்பரிசத்தின் அபாவமு

மிருக்கின்றன: அவற்றின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகு மிடத்துக் கடமுதலிய திரவியங்களோடு இந்திரியத்திற்குச் சையோக சம்பந்த மிருக்கின்றது.

கிரியையாற் றோன்றுவது சையோகமாம். திரவியத்திற் கோர் சையோக முண்டாகின்றது. துவக்கிந்திரியம் வாயுவின் பரமாணு ஜந்நியமாகலின் அது வாயுவடிவ திரவியமாம்; கடமும் பிருதிவிவடிவ திரவியமாம்.

சிலவிடத்தில் துவக்கிந்திரியத்தின் கோளகமாகிய சரீரத்தின் றொழிலால் துவக்கிற்கும் கடத்திற்கும் சையோக முண்டாகின்றது.

சிலவிடத்துக் கடத்தின் றொழிலால் துவக்கிற்கும் கடத்திற்கும் சையோக முண்டாகின்றது.

சிலவிடத்து இரண்டின்கண்ணு முண்டாகும் தொழிலால் சையோக முண்டாகின்றது.

நேத்திரத்திலோ கோளகத்தைவிட்டுக் கேவல இந்திரியத்தில் கிரியை யுண்டாகின்றது.

துவக்கிந்திரியத்தில் கோளகம் விட்டுச் சுவதந்திரத்தில் கிரியை ஒருநாளும் உண்டாத தில்லை.

ஆகலின், துவக்கிந்திரியத்தின் கோளமாகிய சரீரத்தின் றொழிலாலேனும், அல்லது கடமுதலிய விஷயங்களின் றொழிலாலேனும், அல்லது அவ் விரண்டின் றொழிலாலேனும் துவக்கிற்குக் கடமுதலிய திரவியங்களோடு சையோக முண்டாகின்றது. அப்போது துவாசஞானம் உண்டாகின்றது. ஆண்டுத் துவாசப் பிரத்தியக்ஷப் பிரமை பயன்; துவக்கிந்திரியம் காரணம்; துவக்கிந்திரியத்திற்குக் கடத்தோடுள்ள சையோகம் வியாபாரமாம்.

ஏனெனின், துவக்கிற்கும் கடத்திற்கு முள்ள சையோகத்திற்கு உபாதான காரணம் கடமும் துவக்குமாகிய இரண்டுமாம். ஆகலின், அச் சையோகம் துவக்கிந்திரிய ஜந்நியமாம். துவக் கிந்திரியத்தின் காரியமாகிய துவாசப்பிரமையை யுண்டாக்குவதா யிருத்தலால் துவக்கிற்குக் கடத்தோடுள்ள சையோகம் வியாபாரமாம்.

யாண்டுத் துவக்கினுல் கடத்தின் கடத்துவ சாதி, ஸ்பரிச முதலிய குணங்கள் என்பவற்றின் துவாசப் பிரத்தியக்ஷமுண்டாகின்றதோ, ஆண்டுத் துவக் கிந்திரியம் காணம்; பிரத்தியக்ஷப் பிரமை பயன்; சையுத்த சமவாய சம்பந்தம் வியாபாரமாம்.

ஏனெனின், துவக்கிந்திரிய சையுத்த (துவக்கிந்திரியத்தோடு சையோகமுடைய) கடத்தில் கடத்தன்மைச்சாதி ஸ்பரிச முதலிய குணங்கள் என்பவற்றின் சமவாய மிருக்கின்றது. அங்ஙனமே கடமுதலியவற்றின் ஸ்பரிச முதலிய குணங்களிலுள்ள ஸ்பரிசத்துவமுதலிய ஜாதிகளின் துவாசப்பிரத்தியக்ஷமாகிய பிரமை யுண்டாகின்றது. ஆண்டுத் துவக்கிந்திரியம் காணம்; ஸ்பரிசத்தன்மை முதலியவற்றின் பிரத்தியக்ஷப் பிரமை பயன்; ஸசையுத்த சமவேத சமவாய சம்பந்தம் வியாபாரமாம்.

ஏனெனின், துவக் கிந்திரியத்தோடு சையுக்தமான கடத்தில் சமவேதமாகிய (சமவாய சம்பந்தத்தா னிருக்கும்) ஸ்பரிச முதலியவற்றில் ஸ்பரிசத்துவ முதலிய சாதியின் சமவாய மிருக்கின்றது.

சையுத்த சமவாயமும் சையுத்தசமவேத சமவாயமுமாகிய இரண்டு சம்பந்தங்களினும் சமவாயபாகமோ நித்தியமாய் இந்திரியஜந்நிய மாகாததா யிருக்கின்றது; என்றாலும், சையோக முடையதனைச் சையுத்த மென்பர். அச் சையோகம் ஜந்நியமாம்.

ஆதலால், துவக்கிந்திரியத்தின் சையோகம் துவக்கு ஜந்நியமா (துவக்காற் றோன்றியதா) யிருத்தலின், துவக்கு சையுத்த சமவாயமும் துவக்கு சையுத்த சமவேத சமவாயமும் துவக்கிந்திரிய ஜந்நியமும், துவக்கிந்திரிய ஜந்நியமாகித் துவாசப் பிரமையை யுண்டுபண்ணுவனவுமாம். ஆதலால் வியாபாரமாம்.

யாண்டுப் புஷ்பமுதலிய மென்மைத் திரவியத்தில் வன்மைப் பரிசாபாவத்தின் துவாசப் பிரத்தியக்ஷமும், குளிர்ந்த ஜலத்தில் உஷ்ண ஸ்பரிசாபாவத்தின் துவாசப் பிரத்தியக்ஷமு முண்டாகின்றனவோ, ஆண்டுத் துவக்கிந்திரியம் காணமும், அபாவத்தின் துவாசப் பிரமை பயனுமாம்.

இந்திரியத்தோடு அபாவத்திற்குத் துவக்கு சையுத்த விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. அது வியாபார மாம். ஏனெனின், துவக்கிந்திரியத்திற்குக் கட முதலிய திரவி யங்களோடு சையோக மிருக்கின்றது. ஆகலின், துவக்கு சை யுத்த மென்மைத் திரவியத்தில் வன்மைப் பரிசாபாவத்தினது விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

அதுபோலத் துவக்கு சையுத்த குளிர்ந்த ஜலத்தில் உஷ்ண ஸ்பரிசாபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின் றது. யாண்டுக் கட ஸ்பரிசத்தில் உருவத் தன்மை அபாவத் தின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுத் துவக்கு சையுத்த கடத்திற் சமவேதமான ஸ்பரிசத்தில் உரு வத்தன்மை யபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்த மிருத்தலின், துவக்கு சையுத்த சமவேத விசேஷணத் தன் மைச் சம்பந்த மிருக்கின்றது.

இவ்வாற்றால் துவாசப் பிரத்தியக்ஷத்தில் நான்கு சம்பந்தங் கள் ஏதுவாம். அவை:—

(1) துவக்கு சையோகம், (2) துவக்கு சையுத்த சமவா யம், (3) துவக்கு சையுத்த சமவேத சமவாயம், (4) துவக்கு சம்பந்த விசேஷணத் தன்மை என்பனவாம்.

துவக்கோடு சம்பந்தமுடையதனைத் துவக்கு சம்பந்த மென்பர்.

யாண்டு மிருதுவான திரவியத்தில் கடின ஸ்பரிசாபாவ முளதோ, ஆண்டுத் துவக்கின் சையோக சம்பந்தமுடைய மென்மைத் திரவிய மிருக்கின்றது. அத் துவக்கு சம்பந்த முடைய மென்மைத் திரவியத்தில் கடின ஸ்பரிசாபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்தம் வெளிப்படையா யிருக்கின்றது.

யாண்டு ஸ்பரிசத்தில் உருவத்தன்மை யபாவத்தின் பிரத் தியக்ஷ முளதோ, ஆண்டுத் துவக்கிற்கு ஸ்பரிசத்தோடு சையுக்த சமவாய சம்பந்த முளது. துவக்கோடு சையுக்த சமவாயு சம்பந்த முடையதாயிருத்தலின் துவக்கு சம்பந்தம் ஸ்பரிசம்; அதன்கண் உருவத்தன்மை யபாவத்தின் விசேஷணத் தன்

மைச் சம்பந்த மிருக்கின்றது. இவ்வாற்றால் துவாசப் பிர மைக்கு ஏது சையோகாதி நான்கு சம்பந்தங்களாம்.

7. சாக்ஷுஷப் பிரமையின் நிரூபணம்

அதுபோலச் சாக்ஷுஷப் பிரமைக்கு (1) நேத்திர சையோ கம், (2) நேத்திர சையுக்த சமவாயம், (3) நேத்திர சையுக்த சமவேத சமவாயம், (4) நேத்திர சம்பந்த விசேஷணத்தன்மை என்னும் நான்கு சம்பந்தமும் ஏதுவாம்; அதுவே (சம்பந்தமே) வியாபாரமாம்.

யாண்டு நேத்திரத்தால் குடமுதலிய திரவியங்களின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டு நேத்தி ரத்தின் கிரியையால் திரவியத்தோடு சையோக சம்பந்த முண் டாகின்றது. அச் சையோகம் நேத்திர ஜந்நியமும், நேத்திரத் தாற் றோன்றுஞ் சாக்ஷுஷப் பிரமையைத் தோற்றுவிப்பது மாம்; ஆகலின் வியாபாரமாம்.

யாண்டு நேத்திரத்தால் திரவியத்தின் குடத்தன்மை முத லிய ஜாதியின் பிரத்தியக்ஷமும், உருவம் சங்கை முதலிய குண ங்களின் பிரத்தியக்ஷமு முண்டாகின்றனவோ, ஆண்டு நேத்திர சையுக்த திரவியத்தில் கடத்தன்மை முதலிய ஜாதி, உருவம், சங்கை முதலிய குணங்கள் என்பவற்றின் சமவாயசம்பந்த மிருக்கின்றது. ஆகலின், திரவியத்தினது ஜாதி குண மென்ப வற்றின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் நேத்திர சையுக்த சம வாய சம்பந்த மிருக்கின்றது.

யாண்டுக் குணத்தி லிருப்பதாகிய ஜாதியின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டு உருவத்தன்மை முத லிய ஜாதியோடு நேத்திரத்திற்குச் சையுக்த சமவேத சமவாய சம்பந்த மிருக்கின்றது.

ஏனெனின், நேத்திரத்தோடு சையுக்தமான கடமுதலிய வற்றின் சமவேதமான உருவமுதலியவற்றில் உருவத்தன்மை முதலியவற்றிற் சமவாயம் இருக்கின்றது. நேத்திரத்தோடு சையோகம் சகல திரவியங்களுக்கும் சம்பவிக்குமாயினும், உற் பூத வுருவமுடைய திரவியத்தோடு நேத்திரத்திற் குண்டாகும் சையோகம் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாம். மற்றத்

திரவியங்களோடு நேத்திரத்திற் குண்டாகும் சையோகம் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாகாது.

பிருதிவி ஜலம் தேயு வென்னும் இம் மூன்றும் உருவ முடையனவாம்; மற்றவை யுருவமுடையன வன்று. ஆகவின், பிருதிவி ஜல தேயுக்கள் மாத்திரத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாம்.

இவற்றினும் யாண்டு உற்பூத உருவ மிருக்கின்றதோ ஆண்டு அதன் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாம்.

எதன்கண் அநுற்பூத வுருவ முள்ளதோ, அதன் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாத லில்லை.

எங்ஙனம்: கிராணம், இரசனம், நேத்திர மென்னு மிம் மூன் றிந்திரியங்களும் முறையே பிருதிவி ஜல தேயு வடிவங்களாம். இம்மூன்றன்கண்ணும் உருவ முளது. ஆனால், இவற்றின் உருவம் அநுற்பூதமாம்; உற்பூத மன்று. ஆகவின், இவற்றின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

இதனால் உற்பூத உருவமுடைய பிருதிவி ஜல தேயுக்களே சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திற்கு விஷயமா மென்பது சித்தமாயிற்று. அவற்றிற் சில குணம் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ யோக்கியமாம்; சில சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ யோக்கிய மன்று.

எங்ஙனம்: பிருதிவியில் (1) உருவம், (2) இரசம், (3) கந்தம், (4) பரிசம், (5) சங்கை, (6) பரிமாணம், (7) வேற்றுமை, (8) சையோகம், (9) விபாகம், (10) பரத்துவம், (11) அபரத்துவம், (12) குருத்துவம், (13) திரவத்துவம், (14) சம்ஸ்காரம் என்னும் பதினன்கு குணங்க ளுள.

இவற்றுள் கந்தத்தைவிட்டுச் சிநேகத்தைச் சேர்க்கின் பதினன்கு குணங்கள் ஜலத்திற் குரியனவாம்.

இவற்றுள் இரசம், கந்தம், குருத்துவம், சிநேகமென்பவை யொழிந்த பதினேரு குணங்கள் தேயுவிற் குரியனவாம்.

இவற்றுள் உருவம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவ

மென்னும் குணங்கள் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ யோக்கியமாம்; மற்றவை யாகா.

ஆகலின், நேத்திர சையுத்த சமவாயரூப சம்பந்தமோ சர்வ குணங்களோடு முண்டு; யாவும் நேத்திர யோக்கியமல்ல.

எத்துணை நேத்திர யோக்கியமோ, அத்துணைக் குணங்களின் பிரத்தியக்ஷமே நேத்திர சையுத்த சமவாய சம்பந்தத்தா னுண்டாகின்றது.

ஸ்பரிசத்தில் துவக்கிந்திரியத்திற்கு யோக்கியதை யிருக்கின்றது; நேத்திரத்திற் கில்லை.

உருவத்தில் நேத்திரத்திற்கு யோக்கியதை யிருக்கின்றது; துவக்கிந்திரியத்திற் கில்லை.

சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவ மென்பவற்றில் துவக்கு நேத்திர மென்னு மிரண்டற்கும் யோக்கியதை யிருக்கின்றது.

ஆகலின், துவக்கு சையுத்த சமவாயம் நேத்திர சையுத்த சமவாய மென்னும் இரண்டு சம்பந்தமும் சங்கை முதலியவற்றின் துவாசப் பிரத்தியக்ஷத்திற்கும் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திற்கும் ஏதுவாம்.

இரசத்தில் இரசனை மாத்திரத்திற்கு யோக்கியதை யிருக்கின்றது; மற்ற விந்திரியங்களுக் கில்லை.

கந்தத்தில் கிராணத்திற்கு யோக்கியதை யிருக்கின்றது; மற்றவற்றிற் கில்லை.

எவ் விந்திரியத்தின் யோக்கியதை எக் குணத்தி லிருக்கின்றதோ, அவ் விந்திரியத்தான் அக் குணத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. பிறவற்றோடு இந்திரியத்திற்குச் சம்பந்த முண்டாயினும் பிரத்தியக்ஷ மாகிறதில்லை.

அதுபோலக் கடமுதலியவற்றிலுள்ள உருவ முதலியன சாக்ஷுஷ ஞானத்திற்கு விஷயமாம். அவற்றின் உருவத் தன்மை முதலிய ஜாதியினது சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் நேத்திர சையுத்தசமவேத சமவாயத்தால் உண்டாகின்றது.

சாக்ஷுஷ ஞானத்திற்கு விஷயமாகாத இரசமுதலியவற்றில் இரசத்துவமுதலிய ஜாதியோடு நேத்திரத்திற்குச் சையுக்த சமவேத சமவாய சம்பந்த மிருக்கினும் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

இதனால் உற்பூத வுருவமுடைய திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் நேத்திர சையோகத்தானும், உற்பூத வுருவ்முடைய திரவியத்தினது நேத்திர யோக்கிய ஜாதி, நேத்திர யோக்கிய குணமென்பவற்றின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் சையுக்த சமவாய சம்பத்தத்தானு முண்டாகின்றன வென்பது சித்தித்தது.

அங்ஙனமே, நேத்திர யோக்கிய குணம் உருவத் தன்மை முதலிய ஜாதி யென்பவற்றின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் நேத்திர சையுக்த சமவேத சமவாய சம்பந்தத்தா னுண்டாகின்றது.

அங்ஙனமே, அபாவத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் நேத்திரசம்பந்தத்தா னுண்டாகின்றது.

யாண்டுப் பூதலத்தில் கடாபாவத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுப் பூதலத்தில் நேத்திரத்தின் சையோக சம்பந்த மிருக்கின்றது. ஆகலின், நேத்திர சம்பந்தமுடைய பூதலத்தில் கடாபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

அங்ஙனமே, நீலகடத்தில் பொன்மை யுருவத்தினது அபாவத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டு நேத்திரத்தோடு சையோக மிருத்தலின் நேத்திர சம்பந்தமுடைய நீலகடத்தில் பொன்மை யுருவத்தினது அபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

அங்ஙனமே, கடத்தின் நீலவுருவத்தில் பொன்மைத் தன்மைச் சாதி அபாவத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டு நேத்திரத்தோடு சையுக்த சமவாய சம்பந்தமுடைய நீல வுருவ மிருக்கின்றது.

"ஆகலின், நேத்திர சம்பந்தமான நீல வுருவத்தில் பொன்மைத் தன்மை யபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த

மிருத்தலான், நேத்திர சம்பந்த விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

இவ்வாற்றால் (1) நேத்திர சையோகம், (2) நேத்திர சையுக்த சமவாயம், (3) நேத்திர சையுக்த சமவேத சமவாயம், (4) நேத்திர சம்பந்த விசேஷணத்தன்மை யென்னும் நான்கு சம்பந்தமும் சாக்ஷுஷப்பிரமைக்கு ஏதுவாம். அதுவே வியாபாரமாம்; நேத்திரம் கரணமும் சாக்ஷுஷப்பிரமை பயனுமாம்.

8. இராசனப்பிரமையின் நிரூபணம்

துவக்கினாலும் நேத்திரத்தினாலும் திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாவதுபோல இரசனேந்திரியத்தால் திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஆனால் இரசம், இரசத்துவ மதுரத்துவ முதலிய இரசத்தினது ஜாதி, அங்ஙனமே இரசாபாவம், மதுரமுதலிய இரசத்தில் புளிப்புத் தன்மை முதலிய ஜாதியின் அபாவ மென்பவற்றின் இராசனப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

ஆகலின், இராசனப் பிரத்தியக்ஷத்திற் கேது, இரசனேந்திரியத்தோடு விஷயங்களுக் குண்டாகும் இரசன சையுக்த சமவாயம், இரசன சையுக்த சமவேத சமவாயம், இரசன சம்பந்த விசேஷணத் தன்மையென்னும் மூன்று சம்பந்தமுமாம்.

யாண்டுப் பழத்தினது மதுரரசத்தின் இராசனப் பிரத்தியக்ஷம் இரசனேந்திரியத்தா லுண்டாகின்றதோ, ஆண்டுப் பழத்திற்கும் இரசனத்திற்கும் சையோக சம்பந்த மிருக்கின்றது. ஆகலின், இரசன சையுக்த பழத்தின்கண் இரச குணத்தின் சமவாய மிருத்தலால் இரசத்தின் இராசனப் பிரத்தியக்ஷத்தில் சையுக்த சமவாய சம்பந்தம் இருக்கின்றது; அது வியாபாரமாம்.

ஏனெனின், சையுக்த சமவாய சம்பந்தத்திலுள்ள சமவாயக் கூறே நித்தியமாம்; இரசனத்தாற் றோன்றிய தன்று. ஆனாற் சையோகக் கூறு இரசனத்தாற் றோன்றியதும், இரசனேந்திரியத்தாற் றோன்றும் இரசத்தின் இராசன சாக்ஷாத்காரமெதுவோ அதனைத் தோற்றுவிப்பதுமா மாகலின் வியாபாரமாம்.

அவ் வியர்பார முடைய இரார்சனப் பிரத்தியக்ஷ அசாதா ரண காரணம் இரசனேந்திரியமாம்; அது கரணமா யிருத்த லின் பிரமாணமாம்; இரார்சனப் பிரமை பயனும்.

அங்ஙனமே, இரசத்திலுள்ள இரசத்தன்மைச் சாதி: (1) மதுரத் தன்மை, (2) புளிப்புத் தன்மை, (3) உவர்ப்புத் தன் மை, (4) கைப்புத் தன்மை, (5) துவர்ப்புத் தன்மை, (6) உறைப் புத் தன்மைகளாகிய ஆறு தர்மங்கள் என்னு மிவற்றின் இரா சனப் பிரத்தியக்ஷம் இரசனேந்திரியத்தான் உண்டாகின்றது. ஆண்டு இரசனத்தோடு பழ்முதலிய திரவியத்திற்குச் சையோ கம் இருக்கின்றது. அத் திரவியத்தில் இரசம் சமவேதமாம்.

ஆகலின், இரசன சையுத்த திரவியத்தில் சமவேதமான (சமவாய சம்பந்தமுடைய) இரசத்தில் இரசத்தன்மை இரசத் தன்மையின் வியாப்பியமான மதுரத்தன்மை முதலியன வென்னு மிவற்றின் சமவாய மிருத்தலால் இரசன சையுக்த சமவேத சமவாய சம்பந்தம் இருக்கின்றது.

அங்ஙனமே பழத்தின் மதுர ரசத்தில் புளிப்புத் தன்மை யபாவத்தின் இராசனப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது.

ஆண்டு இரசனேந்திரியத்திற்குப் புளிப்புத் தன்மை யபாவத்தோடு சுவ (ரசன) சம்பந்த விசேஷணத்தன்மைச் சம் பந்த மிருக்கின்றது.

ஏனெனின், சையுக்த சமவாய சம்பந்தத்தான் இரார்சன சம்பந்தமுடையது மதுர ரசம்; அதன்கண் புளிப்புத் தன்மை யபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

ஆகலின், இரசனேந்திரியத்திற்குப் புளிப்புத் தன்மை யபாவத்தோடு சையுத்த சமவேத விசேஷணத் தன்மைச் சம் பந்த மிருக்கின்றது. இரசனேந்திரியத்தாற் றோன்றிய இரார்ச னப் பிரத்தியக்ஷத்திற் கேது மூன்று சம்பந்தமாம்.

9. கிராணஜப் பிரமையின் நிருபணம்

அங்ஙனமே கிராணஜ (கிராணேந்திரியத்தாற் றோன்றும்) பிரத்தியக்ஷப் பிரமை யுண்டாகுமிடத்தும் கிராணத்திற்கு விஷ யங்களோடுள்ள மூன்று சம்பந்தங்கள் ஏதுக்க ளாகின்றன. அவையாவன:—

(1) கிராண சையுக்த சமவாயம், (2) கிராண சையுக்த சமவேத சமவாயம், (3) கிராண சம்பந்த விசேஷணத் தன்மை யென்பனவாம்.

கிராணேந்திரியத்தால் திரவியத்தின் பிரத்தியக்ஷமோ உண்டாகிறதில்லை; ஆனால், கந்தகுணத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாகுமாயின் கிராணத்தின் சையோக சம்பந்தம் பிரத்தியக்ஷத்தில் காரணமாம். திரவியத்தின் பிரத்தியக்ஷம் கிராணத்தால் உண்டாகிறதில்லை.

ஆகலின், கிராண சையோகம் பிரத்தியக்ஷத்திற் கேதுவன்று. கந்தத்திற்குக் கிராணத்தோடு நேரே சம்பந்த மில்லை.

ஆனால், புஷ்பமுதலியவற்றில் கந்தத்தின் சமவாய சம்பந்த மிருக்கின்றது. கிராணத்தோடு புஷ்ப முதலியவற்றிற்குச் சையோக சம்பந்தம் இருக்கின்றது.

ஆகலின், கிராண சையுத்த சமவாய சம்பந்தத்தாற் கந்தத்தின் கிராணஜப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. கிராணத்தால் மற்றக் குணங்களின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

ஆனால், கந்தத்திலுள்ள கந்தத்தன்மைச் சாதி, கந்தத்தன்மை வியாப்பியமான நற்கந்தத் தன்மை துர்க்கந்தத் தன்மை யென்பவற்றின் பிரத்தியக்ஷம் உண்டாகின்றன.

அங்ஙனமே கந்தாபாவத்தின் கிராணஜப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

எவ் விந்திரியத்தால் எப் பதார்த்தத்தின் உணர்ச்சி யுண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தால் அதனது ஜாதியின் உணர்ச்சியும் அதன் அபாவத்தின் உணர்ச்சியும் உண்டாகும்.

யாண்டுக் கந்தத் தன்மை, நற்கந்தத் தன்மை துர்க்கந்தத் தன்மை யென்பவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுக் கிராண சையுக்த சமவேத சமவாய சம்பந்தம் கிராணஜப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாம்.

ஏனெனின், கிராண சையுத்தமான புஷ்ப முதலியவற்றில் சமவேதம் கந்தம்; அதிற் சமவாயம் கந்தத்துவ முதலியவற்றிற் குளது.

அங்ஙனமே, புஷ்பத்தின் நற்கந்தத்தில் துர்க்கந்தத் தன்மை யபாவத்தின் கிராணஜப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. ஆண்டுக் கிராணத்திற்குத் துர்க்கந்தத் தன்மை யபாவத்தோடு சுவ (கிராண) சம்பந்த விசேஷணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

ஏனெனின், சையுத்த சமவாய சம்பந்தத்தால் கிராண சம்பந்தமுடைய நற்கந்தத்தில் துர்க்கந்தத்தன்மை யபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்தம் இருக்கின்றது.

யாண்டுப் புஷ்ப முதலியன தூரத்திலிருக்கக் கந்தத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகின்றதோ, ஆண்டுப் புஷ்பத்தில் கிரியை காணப்படுகிறதில்லை யாகலின், புஷ்ப முதலியவற்றிற்குக் கிராணத்தோடு சையோக மின்மையால் கிராண சையுத்த சமவாய சம்பந்தம் சம்பவியாது. என்றாலும் கந்தமோர் குணமாகலின் கந்தத்திற் கிரியை யுண்டாகாது. ஆனால், கந்தத்திற் காசிரயமான புஷ்ப முதலியவற்றின் சூக்ஷ்ம அவயவங்களிற் கிரியை யுண்டாய்க் கிராணத்தோடு சையோக முண்டாகின்றது.

ஆதலாற் கிராண சையுத்த புஷ்ப முதலியவற்றின் அவயவங்களில் கந்தத்தின் சமவாய மிருத்தலின் கிராண சையுக்த சமவாய சம்பந்தமே கந்தத்தின் கிராணஜப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாம்.

இவ்வாற்றால் கிராணஜப் பிரத்தியக்ஷத்திற் கேது மூன்று சம்பந்தங்களாம்; அவை வியாபாரமாம். கிராணேந்திரியம் காரணமும், கிராணஜப் பிரத்தியக்ஷப் பிரமை பயனுமாம்.

இவ்வாற்றாற் சுரோத்திரமுதலிய ஐந்திந்திரியங்களாற் புறப்பொருள்களின் ஞான முண்டாகின்றது.

10. மானசப் பிரத்தியக்ஷப் பிரமையின் நிருபணம்.

ஆத்மா, ஆத்மாவின் சுகமுதலிய தர்மங்கள், ஆத்மத் தன்மைச் சாதி, அங்ஙனமே சுகத்தன்மை முதலிய சாதி யென்னு மிவற்றின் பிரத்தியக்ஷம் சுரோத்திர முதலியவற்றா லுண்டாகிறதில்லை. ஆனால், ஆத்மா முதலிய உட் பதார்த்தங்களின் பிரத்தியக்ஷத்திற் கேது மன விந்திரியமாம்.

ஆன்மாவிற்கும் அதன் தர்மமாகிய சுக முதலியவற்றிற்கும் வேருயவற்றைப் பாகிய (வெளி) மென்றும், ஆத்மாவையும் அதன் தர்மங்களையும் ஆந்தரம் (உள்) என்றும் கூறுவர்.

எங்ஙனம் பாகியப் பிரத்தியக்ஷப் பிரமைக்குக் கரணம் சுரோத்திர முதலிய விந்திரியங்களோ, அங்ஙனமே ஆந்தரமாகிய ஆத்மா முதலியவற்றின் பிரத்தியக்ஷப் பிரமைக்குக் கரணம் மனமாம்; ஆகலின், மனமும் பிரத்தியக்ஷப் பிரமாணமாம், இந்திரியமுமாம்.

மனதிற் கிரியை யுண்டாய் ஆத்மாவோடு சையோக முண்டாகுங் காலத்து ஆத்மாவின் மானசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

ஆண்டு ஆத்மாவின் மானசப் பிரத்தியக்ஷமாகிய பயனே பிரமையாம், ஆத்ம மன சையோகம் வியாபாரமாம்; ஏனெனின், ஆத்ம மன சையோகம் மனோ ஜந்நியமும் மனோஜந்நியமான ஆத்மாவின் பிரத்தியக்ஷப் பிரமையை யுண்டுபண்ணுவதுமா மாகலின் வியாபாரமாம்.

அச் சையோகமாகிய வியாபாரத்தையுடைய ஆத்மாவினது பிரத்தியக்ஷப் பிரமையின் அசாதாரண காரணம் மனம்; அது பிரமாணமாம்.

ஞானம், இச்சை, பிரயத்தனம், சுகம், துக்கம், துவேஷ மென்பவை ஆத்மாவின் குணங்கள். அவற்றின் சாக்ஷாத்காரத்திற்கும் ஏது மனமாகிய பிரமாணமாம். ஆண்டு மனதோடு ஞான முதலியவற்றிற்குச் சாக்ஷாத் (நேர்) சம்பந்தமோ வில்லை; ஆனால், பரம்பரைச் சம்பந்த மிருக்கின்றது.

தனது சம்பந்தியின் சம்பந்தம் பரம்பரைச் சம்பந்த மெனப்படும்.

ஞான முதலியவற்றிற்கு ஆத்மாவினிடத்துச் சமவாய சம்பந்த மிருக்கின்ற தாகலின் ஞான முதலியவற்றின் சம்பந்தியாத்மாவாம். அதனோடு மனத்திற்குச் சையோக மிருத்தலின் மனதோடு ஞானதிகளுக்குப் பரம்பரைச் சம்பந்த மிருக்கின்றது.

அந்த ஞான முதலியவற்றிற்கு மனதோடு சுவசமவாயி சையோக சம்பந்த மிருக்கின்றது. (சுவ என்பது ஞான முதலியன; அவற்றின் சமவாயி என்பது சமவாயமுடைய ஆத்மா; அதற்கு மனதோடு சையோக மிருக்கின்றது.)

அங்ஙனமே மனதிற்கு ஞான முதலியவற்றோடும் பரம்பரைச் சம்பந்த மிருக்கின்றது. அது மன சையுக்த சமவாயமாம். (மனதோடு சையுக்த என்பது சையோகமுடைய ஆத்மா; அதன்கண் ஞானாதிகளுக்குச் சமவாய சம்பந்த மிருக்கின்றது.)

அங்ஙனமே (1) ஞானத் தன்மை, (2) இச்சைத் தன்மை, (3) பிரயத்தனத் தன்மை, (4) சுகத் தன்மை, (5) துக்கத் தன்மை, (6) துவேஷத் தன்மை யென்பவற்றின் பிரத்தியக்ஷம் மனதினால் உண்டாகின்றது.

ஆண்டு மனதோடு ஞானத்தன்மை முதலியவற்றிற்குச் சுவாசிரய சமவாயி சையோகசம்பந்த மிருக்கின்றது.(சுவ என்பது ஞானத்தன்மை முதலியன; அவற்றின் ஆசிரயம் என்பது ஞான முதலியன; அவற்றின் சமவாயி என்பது சமவாயமுடைய ஆத்மா; அதற்கு மனதோடு சையோக மிருக்கின்றது.)

அங்ஙனமே மனதிற்கு ஞானத்தன்மை முதலியவற்றோடு மனசையுத்த சமவேத சமவாய சம்பந்த மிருக்கின்றது.

ஏனெனின், மனசையுத்த ஆத்மாவின்கண் சமவேதமான ஞான முதலியவற்றில் ஞானத் தன்மை முதலியவற்றின் சமவாய சம்பந்த மிருக்கின்றது.

அங்ஙனமே, ஆத்மாவினிடத்துச் சுகாபாவ துக்காபாவங்களின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டு மன சம்பந்தமுடைய விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

ஏனெனின், மனதோடு சம்பந்தமுடைய அதாவது சையோக சம்பந்தமுடைய ஆத்மாவின்கண் சுகாபாவ துக்காபாவங்களின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது; அன்றியும், சுகத்தில் துக்கத்தன்மை யபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

ஆண்டு மனசையுக்த சமவாய சம்பந்தத்தால் மன சம்பந்தமுடைய சுகத்தில் துக்கத்தன்மை யபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது

ஏனெனின், மனதோடு ஸையுக்தமான ஆத்மாவினிடத்துச் சுகமுதலிய குணங்களின் சமவாய சம்பந்த மிருக்கின்றது. அபாவத்திற்கு விசேஷணத் தன்மைச் சம்பந்தமே யுண்டாகின்றது.

இவ்வாற்றால் அபாவத்தோடு மானசப் பிரத்தியக்ஷத்திற் கேது மன சம்பந்த விசேஷணத் தன்மை யொன்றேயாம்.

யாண்டு ஆத்மாவின்கண் சுகாபாவ முதலியவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுச் ஸையோக சம்பந்தத்தால் மன சம்பந்தமுடைய ஆத்மாவின்கண் சுகாபாவ முதலியவற்றின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. சுகமுதலியவற்றில் துக்கத் தன்மை யபாவ முதலியவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

ஆண்டுச் ஸையுக்த சமவாய சம்பந்தத்தான் மன சம்பந்தமுடையன சுகாதிகள்; அவற்றில் துக்கத்தன்மை யபாவ முதலியவற்றின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

சிலவிடத்துச் சாக்ஷாத் சம்பந்தத்தால் மன சம்பந்தமுடையவற்றின்கண்ணும், சிலவிடத்துப் பரம்பரைச் சம்பந்தத்தான் மன சம்பந்த முடையவற்றின்கண்ணும் அபாவத்தின் விசேஷணத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

இவ்வாற்றான் மானசப் பிரத்தியக்ஷத்திற் கேது நான்கு சம்பந்தங்களாம். அவையாவன:—

(1) மனஸையோகம், (2) மனஸையுக்த சமவாயம், (3) மனஸையுக்த சமவேத சமவாயம், (4) மன சம்பந்த விசேஷணத் தன்மை யென்பனவாம்.

மானசப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாகிய நான்கு சம்பந்தமும் வியாபாரமாம்; சம்பந்தரூப வியாபாரமுடைய அசாதாரண காரணமான மனம் கரணமாம்; ஆதலாற் பிரமாணமாம். ஆத்ம சுகமுதலியவற்றின் மானச சாக்ஷாத்காரமான பிரமை பயன்.

எங்ஙனம் ஆத்மாவின் குணமாகிய சுகமுதலியவற்றின் பிரத்தியக்ஷத்திற் கேது ஸையுக்த சமவாய சம்பந்தமோ, அங்ஙனமே தர்மம் அதர்மம் சமஸ்கார முதலியனவும் ஆத்மாவின் குணங்களாகலின், அவற்றோடு மனதிற்குச் ஸையுக்த சமவாய

சம்பந்தம் இருக்கின்றது. ஆனால், தர்ம முதலிய குணங்கள் பிரத்தியக்ஷ யோக்கிய மன்று. ஆகலின், தர்ம முதலியவற்றின் மானசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

பிரத்தியக்ஷ யோக்கியதை எதன்க ணில்லையோ, அதன் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

யாண்டு ஆசிரயத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுச் சையோகத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. எங்ஙனம்: இரண்டு விரல்கள் சையோகத்திற் காசிரயமாம்.

விரல்க ளிரண்டின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகுங் காலத்துச் சையோகத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

விரல்களின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகும் காலத்து விரல்களினது சையோகத்தின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

அங்ஙனமே, ஆத்ம மன சையோகத்தால் ஆத்மாவின் மானசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

ஆண்டுச் சையோகத்திற் காசிரயம் ஆத்மாவாகலின், சையோகத்தின் மானசப் பிரத்தியக்ஷமு முண்டாதல் வேண்டும்.

என்றாலும் சையோகத்திற் காசிரயம் இரண்டாம், யாண்டு இரண்டும் பிரத்தியக்ஷ மாகின்றனவோ ஆண்டுச் சையோகத்தின் பிரத்தியக்ஷ முண்டாகும்,

யாண்டு ஒன்றன் பிரத்தியக்ஷ முண்டாய் மற்றொன்றின் பிரத்தியக்ஷ முண்டாகவில்லையோ, ஆண்டுச் சையோகத்தின் பிரத்தியக்ஷ முண்டாத லில்லை.

எங்ஙனம்: இரண்டு கடங்களின் பிரத்தியக்ஷ முண்டாகின்ற தாகலின் அவற்றினது சையோகத்தின் பிரத்தியக்ஷமு முண்டாகின்றது.

அன்றியும், கடத்தின் கிரியையால் கடத்திற்கும் ஆகாசத்திற்கும் சையோக முண்டாகின்றது. ஆண்டுச் சையோகத்திற் காசிரயம் கடமும் ஆகாசமுமாம். அவற்றுள் கடமோ பிரத்தி

யக்ஷம், ஆகாயம் பிரத்தியக்ஷ மன்று. ஆதலால், அவற்றின் சையோகமும் பிரத்தியக்ஷ மன்று.

இவ்வாற்ருல் ஆத்ம மன சையோகத்திற் காசிரயம் ஆத்மாவும் மனமுமாம். அவற்றுள், ஆத்மாவின் மானசப்பிரத்தியக்ஷ முண்டாகின்றது, மனதின் மானசப் பிரத்தியக்ஷ முண்டாகிற தில்லை யாகலின், ஆத்ம மன சையோகத்தின் மானசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

ஆத்மா, ஞானம் சுகமுதலியன வென்னு மிவற்றின் மானசப் பிரத்திக்ஷ முண்டாகின்றது. ஆண்டு ஞானம் சுக முதலியவற்றை விட்டு ஆத்மாமாத்திரத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

ஆத்மாவை விட்டுக் கேவலம் ஞானம் சுகமுதலியவற்றின் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை.

ஆனல், ஞானம், இச்சை, கிரியை, சுகம், துக்கம், துவேஷமென்னும் குணங்களுள் யாதேனும் ஓர் குணத்தின் மானசப் பிரத்தியக்ஷமும் ஆத்மாவின் மானசப் பிரத்தியக்ஷமு முண்டாகின்றன.

யான் அறிகிறேன், யான் இச்சையுடையவன், முயற்சியுடையவன், சுகி, துக்கி, துவேஷமுடையவன் என் றிவ்வாறு யாதேனும் ஓர் குணத்தை விஷயஞ் செய்வதாய் ஆத்மாவின் மானசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

இவ்வாற்ருல் இந்திரிய ஜந்நியப் பிரத்தியக்ஷப் பிரமைக்கது இந்திரியத்தின் சம்பந்தமாம்; அது வியாபாரமாம்; இந்திரியம் பிரத்தியக்ஷப் பிரமாணமாம்; இந்திரிய ஜந்நிய சாக்ஷாத்காரமாகிய பிரத்தியக்ஷப் பிரமை பயனும். இது நியாய சாஸ்திரத்தின் சித்தாந்தம்.

11. பிரத்தியக்ஷப் பிரமையினது கரணத்தின் விசாரம்

கௌரிகாந்த பட்டாசாரியர், "பிரத்தியக்ஷப் பிரமைக்கு இந்திரியம் கரண மன்று. ஆனல், இந்திரியத்தின் சம்பந்தமாகிய அதனை வியாபாரமெனக் கூறுகின்ருர்களோ, அது கரணமாம்; இந்திரியம் காரணமாம்; கரண மன்று" என்றிவ்வாறு எழுதியிருக்கின்றனர்.

அதன் அபிப்பிராயம் இதுவாம்:—

வியர்பாரமுடைய காரணம் கரண மெனப்படுவதில்லை. ஆனால், எதுண்டாகவே காரியத்தில் விலம்ப (தாமத) முண்டா கிறதில்லையோ, மறைப்பின்றிய பிற்கணத்தில் காரிய முண்டா கிறதோ, அப்படிப்பட்ட காரணம் கரண மெனப்படும்.

இந்திரியத்தின் சம்பந்த முண்டாகவே பிரத்தியக்ஷப் பிரமையாகிய காரியத்தில் விலம்ப முண்டாகிறதில்லை. இந்திரிய சம்பந்தத்தான் மறைப்பின்றிய பிற்கணத்தில் பிரத்தியக்ஷப் பிரமையாகிய காரியம் அவசிய முண்டாகின்றது.

ஆதலால், இந்திரியத்தின் சம்பந்தமே கரணமா யிருத்த லின் பிரத்தியக்ஷப் பிரமாணமாம்; இந்திரியம் பிரமாண மன் றென்னும் மதத்தில் கடத்தின்காரணம் கபால மன்று; ஆனாற் கபாலத்தின் சையோகம் கரணமாம். கபாலமோ கடத்தின் காரணமாம், கரண மன்று.

அங்ஙனமே, படத்தின் கரணமும் தந்துவன்று; ஆனால், நூலின் சையோகம் கரணமாம்.

தந்துவோ படத்திற்குக் காரணமாம், கரண மன்று.

இவ்வாற்றால் முதற் பக்ஷத்தில் எதனை வியர்பார வடிவ காரண மென்று கொண்டிருக்கின்றார்களோ, அதுவே சபக்ஷத் தில் கரணமாம். எதனைக் கரணமாகக் கொண்டிருக்கின்றார் களோ அது கேவல காரணமாம்.

12. ஞானத்தின் ஆசிரயத்தைக் கூறுதல்.

பிரத்தியக்ஷ ஞானத்திற் காசிரயம் ஆத்மாவாம், அது கர்த்தாவாம். அதனையே பிரமாதா வென்றும், ஞாதா வென்றும் கூறுவர்.

பிரமை ஞானத்தின் கர்த்தா பிரமாதா வெனப்படும்.

ஞானத்தின் கர்த்தா ஞாதா வெனப்படும்.

அந்த ஞானம் பிரம மாயினு மாகுக, அல்லது பிரமை யாயினு மாகுக.

நியாய சித்தாந்தத்தில் எங்ஙனம் பிரமைஞானம் இந்திரிய ஜந்நியமோ, அங்ஙனமே பிரமஞானமும் இந்திரிய ஜந்நிய மாம்.

ஆனால், பிரமஞானத்தின் காரணமாகிய இந்திரிய மெது வோ, அது பிரமஞானத்தின் காரண மெனப்படும்; பிரமாண மெனப்படுகிறதில்லை; பிரமையின் அசாதாரண காரணம் பிரமாண மெனப்படுதலான்.

பிரமஞானத்தின் விசாரம் **13-17.**

13. நியாயமதத்தின் அநுசாரமான பிரமத்தின் தன்மை

யாண்டுப் பிரம முண்டாகின்றதோ, ஆண்டு நியாயமதத்தில் இது கிரமமாம்:—

தோஷத்தோடு கூடிய நேத்திரத்தின் சையோகம் இரஜ்ஜுவினோடு எப்போதுண்டாகின்றதோ, அப்போது இரஜ்ஜுத் தன்மைத் தர்மத்தோடு நேத்திரத்திற்குச் சையுத்த சமவாய சம்பந்தம் இருக்கின்றது.

ஆனால், தோஷத்தின் வலியால் இரஜ்ஜுத்தன்மை தோற்றுகிறதில்லை, இரஜ்ஜுவில் சர்ப்பத் தன்மை தோற்றுகின்றது.

சர்ப்பத் தன்மையோடு நேத்திரத்திற்குச் சையுக்த சமவாய சம்பந்த மில்லையாயினும், இந்திரிய சம்பந்த மின்றியே தோஷ வலியால் சர்ப்பத் தன்மையின் சம்பந்தம் இரஜ்ஜுவில் நேத்திரத்தால் தோற்றுகின்றது.

ஆனால், எவனுக்குத் தண்டத்தன்மையின் ஸ்மிருதி முன்னுளதோ, அவனுக்கு இரஜ்ஜுவில் தண்டத் தன்மை தோற்றுகின்றது.

எவனுக்குச் சர்ப்பத் தன்மையின் பூர்வ ஸ்மிருதி யுளதோ, அவனுக்கு இரஜ்ஜுவில் சர்ப்பத்தன்மை தோற்றுகின்றது.

14. வஸ்துவின் ஞானத்தில் விசேஷணஞானம் ஏதுவாதல்

யாண்டுத் தோஷமின்றிய இந்திரியத்தால் யதார்த்த ஞான முண்டாகின்றதோ, ஆண்டும் விசேஷணத்தின் ஞானம் ஏதுவாம்.

ஆகலின், இரஜ்ஜு ஞானத்திற்கு முன் இரஜ்ஜுத் தன்மையின் ஞான முண்டாகின்றது.

ஏனெனின், வெள்ளைப் பாகையும் வெள்ளைக் கஞ்சுகமு (சட்டையு) முடைய தண்டந் தாங்கிய பிராமணனோடு நேத்திரத்திற்குச் சையோக முண்டாகின்றது.

ஆண்டு ஓர்காலத்து மனிதன் என்னும் ஞானமும்,

ஓர் காலத்துப் பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்துத் தண்டந் தாங்கிய பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்துச் சட்டையுடைய பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்து வெள்ளைச் சட்டையுடைய பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்துப் பாகையுடைய பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்து வெள்ளைப் பாகையுடைய பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்துப் பாகையும் சட்டையுமுடைய தண்டந் தாங்கிய பிராமண னென்னும் ஞானமும்,

ஓர் காலத்து வெள்ளைப் பாகையும் வெள்ளைச் சட்டையுமுடைய தண்டந் தாங்கிய பிராமண னென்னும் ஞானமு முண்டாகின்றன.

ஆண்டு நேத்திர சையோகமோர் எல்லா ஞானங்களுக்கும் சாதாரண காரணமாம். ஞானங்களின் விலக்ஷணத் தன்மையில் இஃது ஏதுவாம்:—

யாண்டு மனிதத் தன்மையாகிய விசேஷணத்தின் ஞானமும் நேத்திர சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டு மனிதனென்னும் சாக்ஷுஷஞான முண்டாகின்றது.

யாண்டுப் பிராமணத் தன்மையின் ஞானமும் நேத்திர சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுப் பிராமண னென்னும் சாக்ஷுஷஞான முண்டாகின்றது.

யாண்டுத் தண்ட பிராமணத் தன்மைகளின் ஞானமும் நேத்திர சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுத் தண்டந்

தாங்கிய பிராமண னென்னும் சாக்ஷுஷஞான முண்டாகின்றது.

யாண்டுச் சட்டை பிராமணத் தன்மை யென்னும் இரண்டு விசேஷணங்களின் ஞானமும் நேத்திரத்தின் ஸையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுச் சட்டையுடைய பிராமண னென்னும் சாக்ஷுஷஞான முண்டாகின்றது.

யாண்டு வெண்மையோடு கூடிய சட்டை வடிவமும் பிராமணத் தன்மை வடிவமுமாகிய விசேஷணங்களின் ஞானமும் நேத்திர ஸையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டு வெள்ளைச் சட்டையுடைய பிராமண னென்னும் சாக்ஷுஷஞான முண்டாகின்றது.

யாண்டுப் பாகை பிராமணத்தன்மை யென்னும் இரண்டு விசேடணங்களின் ஞானமும் நேத்திரஸையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுப் பாகையுடைய பிராமண னென்னும் சாக்ஷுஷஞான முண்டாகின்றது.

யாண்டு வெண்மையோடு கூடிய பாகையும் பிராமணத்தன்மையு மாகிய விசேஷணங்களின் ஞானமும் நேத்திரஸையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டு வெள்ளைப் பாகையுடைய பிராமண னென்னும் சாக்ஷுஷ ஞான முண்டாகின்றது.

யாண்டுப் (1) பாகை, (2) கஞ்சுகம், (3) தண்டம், (4) பிராமணத்தன்மை யென்னும் நான்கு விசேஷணங்களின் ஞானமும் நேத்திர ஸையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுப் பாகையும் சட்டையுமுடைய தண்டந் தாங்கிய பிராமண னென்னும் ஞான முண்டாகின்றது.

யாண்டு வெண்மை யடுத்த பாகை வெண்மையடுத்த கஞ்சுகம் தண்டம் பிராமணத் தன்மை யென்னும் விசேஷணங்களின் ஞானமும் நேத்திர ஸையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டு வெள்ளைப்பாகையும் வெள்ளைக் கஞ்சுகமுமுடைய தண்டந் தாங்கிய பிராமண னென்னும் ஞான முண்டாகின்றது.

இவ்வாற்றால் எவ் விசேஷண பூர்வகமான ஞான முண்டாகின்றதோ, அவ் விசேஷண விசிஷ்டத்தின் ஞானம் இந்திரியத்தா லுண்டாகின்றது. ஆண்டு இந்திரியத்தின் சம்பந்தமோ முழுதும் சமமாம்.

விசிஷ்டப் பிரத்தியக்ஷத்தின் விலக்ஷணத் தன்மைக்கு ஏது விலக்ஷண விசேஷண ஞானமாம். விலக்ஷண விசேஷண ஞானத்தைக் காரணமென அங்கீகரியாவிடின், நேத்திர சையோகத்தால் பிராமணனது சகல ஞானமும் சமமாதல் வேண்டும்.

யாண்டுக் கடத்தோடு நேத்திரத்திற்கும் அங்ஙனமே துவக்கிற்கும் சையோக முண்டாகின்றதோ, ஆண்டு ஓர் காலத்துக் கட மிருக்கின்ற தென்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது;

ஓர்காலத்து மண்ணிருக்கின்ற தென்னும் ஞான முண்டாகின்றது;

ஓர்காலத்துக் கடமண் ணிருக்கின்ற தென்னும் ஞானம் உண்டாகின்றது.

யாண்டுக் கடத்தன்மையாகிய விசேஷணத்தின் ஞானமும் இந்திரிய சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுக் கட மிருக்கின்ற தென்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

யாண்டு மண்டன்மையாகிய விசேஷணத்தின் ஞானமும் இந்திரிய கட சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டு மண் ணிருக்கின்ற தென்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

யாண்டுக் கடத்தன்மை மண்டன்மை யென்னும் இரண்டு விசேஷணங்களின் ஞானமும் இந்திரிய சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுக் கடமண் என்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

இவ்வாற்றுல் கடத்தோடு இந்திரியத்தின் சையோகமாகிய காரணம் ஒன்றும்; விஷயமாகிய கடமும் ஒன்றும்.

கடத்தன்மை மண்டன்மைச் சாதிகள் கடத்தில் என்று மிருக்கின்றன; என்றுலும் ஓர்காலத்துக் கடத்தன்மையோடு கூடிய கடமாத்திரத்தை ஞானம் விஷயஞ் செய்கின்றது.

திரவியத் தன்மை மண்டன்மை முதலிய ஜாதிகளையும் உருவமுதலிய குணங்களையும் கடமிருக்கிற தென்னும் ஞானம் விஷயஞ் செய்கிறதில்லை.

ஓர் காலத்து மண்ணிருக்கின்ற தென்னும் கடஞானம் கடத்தில் கடத்தன்மையையும் விஷயஞ்செய்கிறதில்லை; ஆனால்,

மண்டன்மையையும் கடத்தையும் அங்ஙனமே மண்டன்மையின் சம்பந்தத்தையும் விஷயஞ் செய்கின்றது;

ஓர் காலத்து மண்டன்மை கடத்தன்மைச் சாதிகளையும், அவற்றிற்குக் குடத்திலுள்ள சம்பந்தத்தையும், அங்ஙனமே கடத்தையும் விஷயஞ் செய்கின்றது.

இவ்வாற்றால் ஞானத்தின் பேதம் சாமக்கிரிகளின் பேதமின்றிச் சம்பவியாது. ஆண்டு விசேஷண ஞானமாகிய சாமக்கிரியின் பேதமே ஞானத்தின் விலக்ஷணத்தன்மைக்கு ஏதுவாம்.

யாண்டுக் கட மிருக்கின்றதென்னும் ஞான முண்டாகின்றதோ, ஆண்டுக் கடமும், கடத்தன்மையும், கடத்தில் கடத்தன்மையின் சமவாய சம்பந்தமும் விளங்குகின்றன.

யாண்டு மண்ணிருக்கின்றதெனக் கடத்தின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டுக் கடமும், மண்டன்மையும், கடத்திலுள்ள மண்டன்மையின் சமவாயசம்பந்தமும் விளங்குகின்றன.

15. விசேஷண விசேஷியங்களின் சொரூபம்

ஆண்டுக் கடத்தன்மை மண்டன்மைகள் விசேஷணமும், கடம் விசேஷியமுமாம்.

ஏனெனின், சம்பந்தத்தின் பிரதியோகி விசேஷணமெனப்படும்.

சம்பந்தத்தின் அநுயோகி விசேஷிய மெனப்படும்.

எதன் சம்பந்த முண்டாகின்றதோ அது சம்பந்தத்தின் பிரதியோகி யெனப்படும்.

எதிற் சம்பந்த முண்டாகின்றதோ அது அநுயோகி யெனப்படும்.

குடத்தன்மை மண்டன்மைகளின் சமவாய சம்பந்தம் கடத்திற் காணப்படுகின்றது.

ஆகலின், குடத்தன்மை மண்டன்மைகள் சமவாயசம்பந்தத்தின் பிரதியோகியா யிருத்தலின் விசேஷணமாம்; சம்பந்தத்தின் அநுயோகி கடமாகலின் விசேஷியமாம்.

யாண்டுத் தண்டி புருஷனென்னும் ஞான முண்டாகின்ற தேர், ஆண்டுத் தண்டத்தன்மை விசிஷ்டதண்டம் சையோகசம் பந்தத்தால் புருஷத்தன்மை விசிஷ்ட புருஷனிடத்துக் காணு கின்றது. அதன் ஞானமே காஷ்டமுடைய மனிதனென உண் டாகின்றது. ஆண்டுக் காஷ்டத்தன்மை விசிஷ்ட தண்டம் மனி தத்தன்மை விசிஷ்ட புருஷனிடத்துச் சையோகசம்பந்தத்தால் தோற்றுகின்றது.

முதல் ஞானத்தில் தண்டத்தன்மை விசிஷ்டதண்டம் சையோகத்தின் பிரதியோகியா யிருத்தலின் விசேஷணமாம்; புருஷத்தன்மை விசிஷ்ட புருஷன் சையோகத்தின் அநு யோகியா யிருத்தலின் விசேஷியமாம்.

இரண்டாவது ஞானத்தில் காஷ்டத்தன்மை விசிஷ்டதண் டம் பிரதியோகியாம், மனிதத்தன்மை விசிஷ்ட புருஷன் அநு யோகியாம்.

இரண்டு ஞானங்களினும் தண்டம் விசேஷணமும் புரு ஷன் விசேஷியமுமா யிருக்கினும், முதல் ஞானத்திலோ, தண் டத்தில் தண்டத்தன்மை தோற்றுகின்றது; காஷ்டத்தன்மை தோன்றுகிறதில்லை. புருஷனிடத்துப் புருஷத்தன்மை தோற்று கின்றது; மனிதத்தன்மை தோற்றுகிறதில்லை.

அங்ஙனமே இரண்டாவது ஞானத்திலும் தண்டத்தில் காஷ்டத்தன்மை தோற்றுகின்றது; தண்டத் தன்மைதோற்று கிற தில்லை. புருஷனிடத்து மனிதத்தன்மை தோற்றுகின் றது; புருஷத்தன்மை தோற்றுகிறதில்லை.

தண்டத்தன்மையும் காஷ்டத் தன்மையும் தண்டத்தின் விசேஷணங்களாம்.

ஏனெனின், தண்டத்தன்மை முதலியவற்றிற்குத் தண்ட த்திலுள்ள சம்பந்தமெதுவோ, அதன் பிரதியோகி தண்டத் தன்மை முதலியனவாம்.

தண்டத்தன்மை முதலியவற்றிற்குத் தண்டத்தில் சம்பந்த மிருக்கின்றது. ஆகவின், சம்பந்தத்திற்கு அநுயோகியா யிரு த்தலின் தண்டம் விசேஷியமாம்.

இவ்வாற்றால் தண்டத்தன்மைக்குத் தண்டம் விசேஷிய மாம்; புருஷனுக்குத் தண்டம் விசேஷணமாம்.

ஏனெனின், தண்டத்திற்குப் புருஷனிடத்திலுள்ள சையோகசம்பந்தமெதுவோ, அதன் பிரதியோகி தண்டமாம்.

ஆகலின், அது புருஷனுக்கு விசேஷணமாம்; அச் சையோகத்திற்குப் புருஷன் அநுயோகியாகலின் விசேஷியமாம். புருஷனுக்குத் தண்டம் விசேஷணமாதல் போலப் புருஷத்தன்மை மனிதத் தன்மைகளும் புருஷனுக்கு விசேஷணங்களாம்.

ஏனெனின், தண்டத்திற்குப் புருஷனோடு சையோக சம்பந்தம் தோற்றுவதுபோலப் புருஷத்தன்மை முதலிய சாதிக்குச் சமவாய சம்பந்தந் தோற்றுகின்றது. அச் சம்பந்தத்திற்குப் புருஷத்தன்மை முதலியன பிரதியோகியா யிருத்தலின் விசேஷணமும், புருஷன் அநுயோகியா யிருத்தலின் விசேஷியமுமாம். ஆனால், இத்துணைப் பேதமுண்டு:—

புருஷனது தர்மமாகிய புருஷத்தன்மை மனிதத்தன்மை முதலியன எவையோ, அவை கேவலம் புருஷவியக்தியின் விசேஷணங்களாம்.

புருஷத்தன்மைமுதலிய தர்மவிசிஷ்ட புருஷவியக்தியில் தண்டமுதலியன விசேஷணமாம்.

தண்டமுதலியனவும், தண்டத்தன்மைமுதலிய தர்மங்களின் விசேஷியமும், புருஷத்தன்மை முதலியவற்றின் விசேஷணமுமாம்.

ஆனால், தண்டத்தன்மைமுதலிய விசேஷணங்களின் சம்பந்தத்தைக் கொண்டு புருஷன் முதலிய விசேஷியத்தின் சம்பந்தி உத்தர காலத்தில் தண்டாதிகளாம்.

இவ்வாற்றால் கேவல வியக்தியில் புருஷத்தன்மை மனிதத் தன்மைகள் விசேஷணமாம்.

புருஷத்தன்மை அல்லது மனிதத்தன்மை விசிஷ்ட புருஷவியக்தியில் தண்டத்தன்மை அல்லது காஷ்டத்தன்மை விசிஷ்டதண்டம் விசேஷணமாம்.

கேவல தண்டவியக்தியில் தண்டத்தன்மை யல்லது காஷ்டத்தன்மை விசேஷணமாம்.

இவ்வாற்றால், ஞானத்திற்கு விஷயமாதலை விசாரிக்கின் வெகு சூக்ஷ்மமாம். இதனைச் சக்கரவர்த்தி கதாதர பட்டாசாரியர், சங்கதி யென்னும் நூலில் எழுதியிருக்கின்றனர்.

ஜயராம பஞ்சானன பட்டாசாரியரும், அங்ஙனமே இரகுநாத பட்டாசாரியரும் விஷயத்தன்மைவிசார மென்னு நூலில் எழுதி யிருக்கின்றனர்.

சூக்ஷ்ம பதார்த்தங்கள் சம்ஸ்கிருத வாக்கானன்றி எழுதப் படா; அறிதற் கரியனவுமாம். அதுபற்றி மிகவும் ஸ்தூலமான விதமாத்திரம் ஈண்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

16. விசேஷண விசேஷியங்களினது ஞானத்தின் பேதபூர்வகமான நியாயமதத்தினது பிரமஞானத்தின் சமாப்தி

இவ்வாற்றால், விசிஷ்ட ஞானத்திற்கு ஏது விசேஷண ஞானமாம்; அவ் விசேஷணத்தின் ஞானம் சிலவிடத்து ஸ்மிருதி ரூபமாம், சிலவிடத்து நிருவிகற்பமாம். சிலவிடத்து விசிஷ்ட ஞானமே விசேஷணமாம்.

விசேஷியத்திற்கு முன் விசேஷண மாத்திரத்தோடு இந் திரியத்திற்குச் சம்பந்த முண்டாகின்றது. ஆண்டு விசேஷணம் விசேஷண மாத்திரமாக இந்திரிய சம்பந்த ஜந்நியமாம். அது வும் விசிஷ்டப் பிரத்தியக்ஷமேயாம்.

யாண்டுப் புருஷனின்றிக் கேவல தண்டத்தோடு இந்திரி யத்திற்குச் சம்பந்த முண்டாய்ப் பிற்கணத்தில் புருஷனோடு சம்பந்த மாகின்றதோ, ஆண்டுத் தண்டரூப விசேஷணத்தின் ஞானம் விசேஷணமாத்திரத்தின் சம்பந்தத்தா னுண்டாகின் றது. அதற்குப் பிற்கணத்தில் தண்டிபுருடன் என்னும் விசிஷ் டத்தின் ஞான முண்டாகின்றது.

கடமிருக்கிற தென்னும் முதல் விசிஷ்டஞான மெதுவோ, அதற்குமுன் கடத்துவரூப விசேஷணத்தின் நிர்விகற்ப ஞானம் இந்திரிய சம்பந்தத்தா னுண்டாகின்றது. பிற்கணத்தில் கட மிருக்கிற தென்னும் கடத்துவ விசிஷ்ட கடஞானம் உண்டாகின் றது. எவ்விந்திரிய சம்பந்தத்தால் கடத்தன்மையின் நிர்விகற்ப

ஞான முண்டாகின்றதோ, அவ் விந்திரிய சம்பந்தத்தாற்றுனே கடத்துவ விசிஷ்ட கடத்தின் சவிகற்ப ஞான முண்டாகின்றது.

கடத்தன்மையின் நிர்விகற்ப ஞானத்தில் இந்திரியம் காரணமும், இந்திரியத்தின் சையுக்த சமவாய சம்பந்தம் வியாபாரமுமாம்.

கடத்தன்மை விசிஷ்ட கடத்தின் சவிகற்ப ஞானத்தில் இந்திரியத்தின் சையுக்த சமவாய சம்பந்தம் காரணமும், நிருவிகற்ப ஞானம் வியாபாரமுமாம்.

இவ்வாறு ஓர் ஆதுனிக (நவீன) நையாயிகர் நிர்விகற்பக சவிகற்பக ஞானங்களில் காரணத்தின் பேதம் கூறியிருக்கின்றனர்.

அது சம்பிரதாயத்திற்கு விருத்தமாம். ஏனெனின், வியாபாரமுடைய அசாதாரண காரணம் கரணமெனப்படுமென்னும் மதத்தில் பிரத்தியக்ஷ ஞானத்திற்குக் காரணமாயிருத்தலால் இந்திரியமே பிரத்தியக்ஷப் பிரமாணமெனப் படுகின்றது.

ஆதுனிகர் கிரமப்படி சவிகற்பக ஞானத்தின் காரணமாயிருத்தலால், இந்திரியத்தின் சம்பந்தத்தையும் பிரமாணமெனல் வேண்டும்.

சம்பிரதாயமுடையோர் சம்பந்தத்தைப் பிரமாணமாகக் கூறினாரில்லையாகலின், இரண்டு பிரத்தியக்ஷ ஞானங்களுக்கும் இந்திரியமே காரணமாம். ஆதலால், இந்திரியம் பிரத்தியக்ஷப் பிரமாணமாம்.

ஆனால், நிர்விகற்பக ஞானத்தில் இந்திரியத்தின் சம்பந்த மாத்திரம் வியாபாரமாம்.

சவிகற்பஞானத்தில் இந்திரியத்தின் சம்பந்தமும் நிர்விகற்ப ஞானமுமாகிய இரண்டும் வியாபாரமாம். இருவகைப் பிரத்தியக்ஷ ஞானத்திற்குங் காரணமாயிருத்தலால் இந்திரியம் பிரத்தியக்ஷப் பிரமாணமாம்.

தர்மதர்மிகளின் சம்பந்தத்தை விஷயஞ் செய்யும் ஞானம் சவிகற்பகஞான மெனப்படும்.

கட மிருக்கின்றது என்னும் ஞானத்தால் கடத்தில் கடத் தன்மையின் சமவாயம் விளங்குகின்றதாகலின், சவிகற்ப ஞானத்திற்குத் தர்மம் தர்மி சமவாய மென்னும் மூன்றும் விஷயமாம்.

ஆதலால், கட மிருக்கிறது என்னும் விசிஷ்டஞானம் சம்பந்தத்தை விஷயஞ் செய்தலால் சவிகற்பக மெனப்படுகின்றது. அதனின் வேருய ஞானத்தை நிருவிகற்பகஞான மென்பர்.

சவிகற்பக நிருவிகற்பக ஞானங்களின் இலக்கணம் சித கண்டியில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கின்றது.* அவ் வர்த்தம் சூக்ஷ்மமா யிருத்தலின் ஈண்டு விஸ்தாரமாய் எழுதப்படவில்லை.

இவ்வாற்ருன் முதன்விசிஷ்ட ஞானத்தை யுண்டுபண்ணும் விசேஷணஞானம் நிருவிகற்பக ஞானமாம்.

ஒருமுறை கட மிருக்கிறது என்னும் விசிஷ்டஞான முண்டாய்ப் பின்னர்க் கடத்தின் விசிஷ்டஞான முண்டாகுமிடத்து, கடத்தோடு இந்திரியத்திற்குச் சம்பந்த மிருக்கின்றது. முன் அநுபவித்த அதே கடத்தன்மையின் ஸ்மிருதி யுண்டாகின்றது. அதற்குப் பிற்கணத்தில் கடமிருக்கிற தென்னும் விசிஷ்ட ஞான முண்டாகின்றது.

இவ்வாற்ருல் இரண்டாவது முதலிய விசிஷ்ட ஞானத்திற் கேதுவாகிய விசேஷண ஞானம் ஸ்மிருதிரூபமாம்.

யாண்டுத் தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்கு இரஜ்ஜுவோடாயினும் சுத்தியோடாயினும் சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டுத் தோஷத்தின் வலியால் சர்ப்பத்தன்மையின், அல்லது இரஜதத் தன்மையின் ஸ்மிருதி யுண்டாகின்றது; இரஜ்ஜுத் தன்மை சுத்தித் தன்மைகளின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை.

விசிஷ்ட ஞானத்திற் கேதுவாகிய விசேஷண ஞானம் எத் தர்மத்தை விஷயஞ் செய்கின்றதோ, அத் தர்மமே விசிஷ்ட ஞானத்தோடு விஷயத்தில் விளங்குகின்றது.

சர்ப்பத் தன்மை இரஜதத் தன்மைகளின் ஸ்மிருதி ஞானம் இரஜ்ஜுத்தன்மை சுத்தித்தன்மைகளை விஷயஞ்

செய்கிறதில்லை; ஆனால், சர்ப்பத் தன்மை இரஜதத் தன்மைகளை விஷயஞ் செய்கின்றது.

ஆகலின், சர்ப்ப மிருக்கிறது என்னும் இரஜ்ஜுவின் விசிஷ்ட ஞானத்தால் இரஜ்ஜுவில் சர்ப்பத் தன்மை தோற்றுகின்றது.

இரஜதம் இருக்கின்ற தென்னும் சுத்தியின் விசிஷ்ட ஞானத்தால் சுத்தியில் இரஜதத்தன்மை தோற்றுகின்றது.

சர்ப்ப மிருக்கின்ற தென்னும் விசிஷ்டப் பிரமத்தில் விசேஷியம் இரஜ்ஜு, சர்ப்பத்தன்மை விசேஷணம்.

ஏனெனின், சர்ப்பத்தன்மையின் சமவாய சம்பந்தம் இரஜ்ஜுவில் தோற்றுகின்றது. அச் சமவாயத்திற்குச் சர்ப்பத் தன்மை பிரதியோகியும், இரஜ்ஜு அநுயோகியுமாம்.

அங்ஙனமே வெள்ளி யிருக்கின்றது என்னும் பிரமத்தால் சுத்தியில் இரஜதத்தன்மையின் சமவாயம் தோற்றுகின்றது. அச் சமவாயத்திற்குப் பிரதியோகி இரஜதத்தன்மையாகலின் அது விசேஷணமாம்; சுத்தி அநுயோகியாகலின் விசேஷியமாம்.

இவ்வாற்றால் சகல பிரமஞானங்களாலும் விசேஷணத்தின் அபாவமுடையதன்கண் விசேஷணம் தோற்றுகின்றது.

ஆகலின், நியாயமதத்தில் விசேஷணத்தின் அபாவமுடையதன்கண் விசேஷணந் தோற்றுதல் பிரமம் (மயக்கம்) எனப்படும். அதனையே அயதார்த்தஞான மென்பர்; அந்நியதாக்கியாதி யென்றும் கூறுவர்.

பிரமஞானத்தின்கண் சூக்ஷ்மவிசாரத்தை அந்நியதாக்கியாதி வாத மென்னும் நூலில் சக்கரவர்த்தி கதாதரபட்டாசாரியர் எழுதி யிருக்கின்றனர். அஃது அறிதற்கரியதாகலின் ஈண் டெழுதப் படவில்லை.

இவ்வாற்றால் நியாய மதத்தில் சர்ப்பமுதலிய பிரமத்திற்கு விஷயம் இரஜ்ஜுமுதலியனவாம்; சர்ப்பாதிக ளன்று. பிரத்தியக்ஷவடிவமான பிரம (மயக்கம்) ஞானமும் இந்திரிய ஜந்நியமாம்.

17. வேதாந்த சித்தாந்தத்தின் அநுசாரமாக இந்திரிய ஜந்நியமாகாத பிரமஞானத்தின் தன்மை

வேதாந்த சித்தாந்தத்தில் சர்ப்பப் பிரமத்திற்கு விஷயம் இரஜ்ஜுவன்று; அநிர்வசனீய சர்ப்பமாம். பிரமஞானம் இந்திரிய ஜந்நிய மன்று.

நியாய மதத்தில் சகல ஞானங்களுக்கும் ஆசிரயம் ஆத்மாவாம்.

வேதாந்த மதத்தில் ஞானத்திற் குபாதான காரணம் அந்தக்கரணமாகலின் அந்தக்கரணம் ஆசிரயமாம்.

நியாயமதத்தில் சுகமுதலியவற்றை ஆத்மாவின் குணமென்பார்.

அவை முழுவதும் அந்தக்கரணத்தின் பரிணாமமாம். ஆகலின், அந்தக்கரணத்தின் தர்மமாம். ஆத்மாவின் தர்ம மன்று.

ஆனால், பிரமஞானம் அந்தக்கரணத்தின் பரிணாம மன்று: அவித்தையின் பரிணாமமாம். இதனை விசாரசாகரத்தில் எழுதியிருத்தலால், ஈண்டு எழுதுவதனாற் பய னில்லை.

பிரமஞானத்தின் சுருக்கமாகிய தன்மை இதுவாம்:—

சர்ப்ப சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனது தோஷ சகித நேத்திரத்திற்கு இரஜ்ஜுவுடன் சம்பந்த முண்டாகுங்காலத்து இரஜ்ஜுவின் விசேஷ தர்மமாகிய இரஜ்ஜுத் தன்மையும் தோற்றுகிறதில்லை; இரஜ்ஜுவிலுள்ள வைக்கோல் வடிவமாகிய அவயவம் யாதோ அதுவும் தோற்றுகிறதில்லை; ஆனால், இரஜ்ஜுவில் சாமானிய தர்மமாகிய இதந்தை (இதுவெனுந் தன்மை) தோற்றுகின்றது.

அங்ஙனமே சுத்தியில் சுத்தித்தன்மையும், கருமுதுகுடைமையும், முக்கோணத் தன்மையும் தோற்றுகிறதில்லை; ஆனால், சாமானிய தர்மமாகிய இதந்தை தோற்றுகின்றது.

ஆகலின், நேத்திர வாயிலாக அந்தக்கரணம் இரஜ்ஜுவை யடைந்து இதுவென்னும் வடிவினதாகிய பரிணாமத்தை யடைகின்றது. அந்த இதுவென்னும் வடிவினதாகிய விருத்தி யுபகித்

(விருத்தியை யுபாதியாக வுடைய) சேதனத்தின்கணுள்ள அவித்தையின் சர்ப்பாகாரம் ஞானகாரமென்னும் இரண்டு பரிணாமங்க ளுண்டாகின்றன.

அங்ஙனமே, தண்ட சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனது தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்கு இரஜ்ஜுவின் சம்பந்தத்தால் யாண்டு விருத்தி யுண்டாகின்றதோ, ஆண்டுத் தண்டமும் அதன் ஞானமும் அவித்தையின் பரிணாமங்க ளாகின்றன.

மாலையும் அதன் ஞானமும், மாலைச் சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனது தோஷ சகித நேத்திரத்திற்கு இரஜ்ஜுவோடு சம்பந்த முண்டாக, எதனது இது வென்னும் வடிவினதாய விருத்தி யுண்டாகின்றதோ, அதனது விருத்தி யுபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணாம மாகின்றன.

யாண்டு ஒரு இரஜ்ஜுவோடு மூன்று புருஷர்களது தோஷத்தோடு கூடிய நேத்திரங்களுக்குச் சம்பந்த முண்டாக, சர்ப்பம் தண்டம் மாலையென்னும் ஒவ்வொன்றன் பிரமம் அவர்களுக்கு உண்டாகின்றதோ, ஆண்டு எவன் விருத்தி யுபகிதத்தில் எவ் விஷய முண்டாயிருக்கின்றதோ, அவனுக்கு அவ் விஷயமே காணப்படுகின்றது. மற்றவனுக்குக் காணப்படுகிறதில்லை.

இவ்வாற்றால் பிரமஞானம் இந்திரிய ஜந்நிய மன்று; அவித்தையின் விருத்தி ரூபமாம்.

ஆனால், எந்தவிருத்தி யுபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணாமம் பிரமமோ, அவ் விதுவென்னும் வடிவினதாய விருத்தி நேத்திரத்தோடு இரஜ்ஜு முதலிய விஷயங்களுக்குண்டாம் சம்பந்தத்தா னுண்டாகின்றது. இதனால் பிரமஞானத்தில் இந்திரிய ஜந்நியத்தன்மை தோற்றுகின்றது.

அநிர்வசனீயக்கியாதியின் நிரூபணமும் அந்நியதாக்கியாதி முதலியவற்றின் கண்டனமும் கௌடப் பிரஹ்மாநந்தராற் செய்யப்பட்ட கியாதி விசாரத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவை மிகக் கடினமாகலின் ஈண் டெழுதப்படவில்லை.

இவ்வாற்றால் வேதாந்த சித்தாந்தத்தில் பிரமஞானம் இந்திரிய ஜந்நியமன்று.

18. நியாயத்திற்கும் வேதாந்தத்திற்கு முள்ள அந்நிய வேற்றுமை.

வேதாந்த சித்தாந்தத்தில் அபாவத்தின் ஞானமும் இந்திரிய ஜந்நியமன்று. அநுபலப்தி யென்னும் வேறு பிரமாணத்தால் அபாவத்தின் ஞான முண்டாகின்றது.

ஆகவின், அபாவத்தினது பிரத்தியக்ஷத்திற் கேதுவாக விசேஷணத் தன்மைச் சம்பந்தத்தை அங்கீகரித்தல் நிஷ்பலமாம்.

ஜாதிக்கும் வியக்திக்கும் சமவாய சம்பந்த மில்லை. ஆனால், தாதாத்மிய சம்பந்த முண்டு.

அங்ஙனமே குணத்திற்கும் குணிக்கும், கிரியைக்கும் கர்த்தாவிற்கும், காரியத்திற்கும் உபாதான காரணத்திற்கும் தாதாத்மிய சம்பந்த முண்டு. ஆகையால், சமவாய ஸ்தானத்தில் தாதாத்மியத்தைக் கூறுகின்றனர்.

துவக்கு முதலிய இந்திரியங்கள் எங்ஙனம் பூத ஜந்நியமோ, அங்ஙனமே சுரோத்திரேந்திரியமும் ஆகாய ஜந்நியமாம்; ஆகாய வடிவமன்று.

மீமாம்ஸா மதத்தில் சத்தம் திரவியமாம்.

வேதாந்த மதத்தில் குணமாம்.

ஆனால், நியாயமதத்திலோ சத்தம் ஆகாயத்தின் குணமேயாம்.

வேதாந்தமதத்தில் வித்தியாரணிய சுவாமிகள் பஞ்ச பூதங்களுக்கும் குணம் கூறியிருக்கின்றார்.

வேதாந்தமதத்தில் வாசஸ்பதிமிசிரர் மனம் இந்திரிய மெனக் கொண்டிருக்கின்றார்.

மற்றைய நூலாசிரியர்கள் மனதை இந்திரியமெனக் கொள்ளவில்லை.

எவர்கள் மதத்தில் மனம் இந்திரிய மன்றோ, அவர்கள் மதத்தில் சுக துக்கங்களின் ஞானம் பிரமாண ஜந்நிய மன்று; ஆகையால், பிரமை யன்று. ஆனால், சுகதுக்கங்கள் சாக்ஷிபாஸியமாம்.

வாசஸ்பதிமிசிரர் மதத்தில் சுக முதலியவற்றின் ஞானம் மனரூபப் பிரமாண ஜந்நியமாம். ஆகையாற் பிரமையாம்.

பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானமோ இரண்டு மதங்களிலும் பிரமையாம். அது வாசஸ்பதிமிசிரர் மதத்தில் மனரூபப் பிரமாண ஜந்நியமும், மற்றையோர் மதத்தில் சப்தரூபப் பிரமாண ஜந்நியமுமாம்.

19. சாரக்கிராகி (சாரத்தைக் கிரகிக்கும்) திருஷ்டியினுல் வாசஸ்பதி மதத்தின் (மனதினது இந்திரியத்தன்மையின்) அங்கீகாரம்.

எவர்கள் மதத்தில் மனம் இந்திரிய மன்ருே, அவர்கள் மதத்தில் இந்திரிய ஜந்நியத்துவம் பிரத்தியக்ஷ ஞானத்தின் இலக்ஷணமன்று. ஆனுல், விஷய சேதனத்திற்கு விருத்தி சேதனத்தோடுள்ள அபேதமே பிரத்தியக்ஷ ஞானத்தின் இலக்ஷணமாம்.

விருத்தி சேதனத்திற்கும் விஷய சேதனத்திற்கும் அபேதமுண்டாகுந் தன்மை விசாரசாகரத்தில் ஸ்பஷ்டமாம்.

வாசஸ்பதியின் மதமும் நன்றே. ஆனுல், வாசஸ்பதியின் மதத்தில் இத் தோஷங்கள் கூறுகின்றனர்:—

(1) மனதிற்கு அசாதாரண விஷய மில்லை. ஆகவின், மனம் இந்திரிய மன்று.

(2) கீதையின் வசனத்திற்கும் விரோதமாம். கீதையின் மூன்ருவது அத்தியாயத்தின் நாற்பத்திரண்டாவது சுலோகத்தில் "மனம் இந்திரியங்களின் பரமாம் (இந்திரியங்களுக்கு மேலானதாம்)" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மனமும் இந்திரிய மாகுமாயின் இந்திரியத்தினும் மனம் பரமெனல் சம்பவியாது.

(3) "மானசஞானத்திற்குப் பிரஹ்மம் விஷய மாகா" தென்று சுருதி ஸ்மிருதிகளில் எழுதப்பட்டிருக்கின்றது.

வாசஸ்பதியானவர் மனதிற்கு இந்திரியத் தன்மையை அங்கீகரித்துப் பிரஹ்ம சாக்ஷாத்காரமும் மனரூப இந்திரிய ஜந்நியமா

மாகலின் மானசமாம்'' எனக் கூறியிருக்கின்றனர். அது விருத்தமாம்.

(4) அந்தக்கரணத்தின் அவஸ்தையை மன மென்பர். அவ் வந்தக்கரணம் பிரத்தியக்ஷ ஞானத்திற்கு ஆசிரயமா யிருத்தலின் கர்த்தாவாம். யாது கர்த்தாவாகுமோ, அது காரணமாகாது. ஆகலின், மனம் இந்திரிய மன்று.

எத் தோஷங்கள் மனதின் இந்திரியத் தன்மையில் சொல்லப்படுகின்றனவோ, அவை விசாரித்துப் பார்க்குமிடத்துத் தோஷ மாகா.

ஏனெனின், (1) மனதின் அசாதாரண விஷயங்கள் சுகம் துக்கம் இச்சை முதலியனவாம். அந்தக்கரண விசிஷ்டன் ஜீவன்.

(2) கீதையில் "இந்திரியங்களுக்குப் பரம் மனம்'' எனக் கூறப்பட் டிருக்கின்றது. ஆண்டு இந்திரிய சப்தத்தால் புற விந்திரியங்கள் கொள்ளப்படுகின்றன.

ஆகலின், புற விந்திரியங்களினும் மன விந்திரியம் பரமா மென்பது கீதாவசனத்தின் அர்த்தமாதலால் விரோத மில்லை.

(3) மானச ஞானத்திற்கு விஷயம் பிரஹ்ம மன்றெனக் கூறுதற்கு இஃ தபிப்பிராயமாம்:—

சம தமாதி சம்ஸ்கார மின்றிய விக்ஷிப்த (கலக்கமுள்ள) மனதினு லுண்டாகிய ஞானத்திற்கு விஷயம் பிரஹ்ம மன்று. மானச ஞானத்தின் பல வியாப்பியத் தன்மை பிரஹ்மத்தி லில்லை. விருத்தியிற் சிதாபாசன் பலமெனப்படுவன். அவனுக்கு (சிதாபாசனுக்கு) விஷயம் பிரஹ்மமன்று.

கடமுதலிய அநாத்ம பதார்த்தங்களை விருத்தியடையுங் காலத்து விருத்தி சிதாபாச னென்னும் இரண்டற்கும் பதார்த்தங்கள் வியாப்பிய (விஷய) மாகின்றன.

பிரஹ்மாகார விருத்தியிற் சிதாபாசனுக்குப் பிரஹ்மம் வியாப்பிய (விஷய) மன்று; விருத்திமாத்திரத்திற்கு விஷயமாம்.

இவ் விஷயம் விசாரசாகரத்தின் நான்காவது தரங்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கின்றது.

பிரஹ்மத்தினிடத்து மனதிற்கு விஷயமாந் தன்மை நிஷேதிக்கப்பட்டிருத்தல்போலச் சத்தத்திற்கு விஷயமாந் தன்மையும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது.

“யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ”

“வாக்கானது மனதோடு சென்றடையாது எதனினின்றும் திரும்புகின்றதோ,” என்பது (சுருதி) நிஷேத வசனம்.

ஆண்டுச் சத்தத்தாற் றோன்றிய ஞானத்திற்கு விஷயம் பிரஹ்மமன்று என்னும் பொருளை அங்கீகரிக்கின் மகாவாக்கியங்களுஞ் சத்தரூபமேயாம். அவற்ருனுண்டாகிய ஞானத்திற்கும் பிரமம் விஷய மாகாது; சித்தாந்தத்திற்கும் பங்க முண்டாகும்.

ஆதலால், நிஷேத வசனத்திற் கிது பொருளாம்:—

பிரஹ்மம் சத்தத்தின் சக்தி விருத்தி ஜந்நிய ஞானத்திற்கு விஷய மாகாது; ஆனுல், சத்தத்தின் இலக்ஷணவிருத்தி ஜந்நிய ஞானத்திற்கு விஷயமாகும் என்பதாம்.

அங்ஙனமே இலக்ஷண விருத்தி ஜந்நிய ஞானத்திலும் சிதாபாச ரூப பலத்திற்குப் பிரஹ்மம் விஷய மன்று. ஆனுல், ஆவரண பங்கரூப விருத்தி மாத்திரத்திற்கு விஷயமாந் தன்மை பிரஹ்மத்தின்கண் ணுளது.

சப்த ஜந்நிய ஞானத்திற்கு விஷயமாந்தன்மை முற்றிலும் நிஷேதிக்கப்படுவதில்லை.

அதுபோல, மானஸ ஞானத்திற்கு விஷயமாந்தன்மையும் முற்றிலும் நிஷேதிக்கப்படுகிறதில்லை.

ஆனுல், சம்ஸ்கார மின்றிய மனதிற்குப் பிரஹ்ம ஞானத்தில் ஏதுவாந் தன்மை யில்லை.

மானச ஞானத்திலுள்ள சிதாபாச அம்சம் எதுவோ, அதற்கு விஷயமாந் தன்மையு மில்லை.

சங்கை:—பிரஹ்மஞானத்தில் மனதிற்குக் கரணத்தன்மை யிருக்கின், பிரஹ்ம ஞானம் இரண்டு பிரமாணத்தாற் றோன்றியதா மெனல் வேண்டும்.

ஏனெனின், மகாவாக்கியங்களில் பிரஹ்ம ஞானத்தின் கரணத்தன்மை யுளதெனப் பாஷ்யகாரர் முதலியோர்களால் எங்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், அதன் நிஷேதமோ பொருந்தாது.

மனதிற்கும் காணத்தன்மை கூறுவோமாயின், பிரமையின் கரணம் பிரமாண மெனப்படு மாகலான், பிரஹ்மப் பிரமைக்குச் சத்தம் மனமென்னும் இரண்டு பிரமாணங்கள் சித்தமாகும். ஆயின் அது திருஷ்ட விருத்தமாம்.

ஏனெனின், சாக்ஷுஷ முதலிய பிரமைகளுக்கு நேத்திர முதலியன ஒவ்வொன்றே பிரமாணமாம்.

ஓர் பிரமைக்கு இரண்டு பிரமாணம் ஏதுவாதலைக் கண்டது மில்லை, கேட்டது மில்லை.

நையாயிகரும் சாக்ஷுஷமுதலிய பிரமையில் மனதிற்குச் சககாரித்தன்மையை யங்கீகரித்து, நேத்திர முதலியவற்றிற்கே பிரமாணத்தன்மை ஒப்பியிருக்கின்றனர். மனதிற் கொப்பவில்லை. சுகமுதலியவற்றின் ஞானத்தில் கேவல மனதிற்கே பிரமாணத்தன்மை யங்கீகரித்திருக்கின்றனர். மற்றவற்றிற் கில்லை.

ஆகலின், ஒரு பிரமைக்கு இரண்டினைப் பிரமாணமாகக் கூறுதல் திருஷ்ட விருத்தமாம்.

கடத்தில் நேத்திரம் துவக்கு என்னும் இரண்டிந்திரியங்களுக்கும் யோக்கியதை யிருத்தல்போல் யாண்டு ஒரு பதார்த்தத்தில் இரண்டு இந்திரியங்களுக்கு யோக்கியதை யுண்டாகின்றதோ, ஆண்டும் இரண்டு பிரமாணத்தால் ஒரு பிரமை யுண்டாகிறதில்லை.

நேத்திரப் பிரமாணத்தால் குடத்தின் சாக்ஷுஷப் பிரமையும், துவக்குப் பிரமாணத்தால் துவாசப் பிரமையு முண்டாகின்றன.

இரண்டு பிரமாணங்களால் ஒரு பிரமையின் உற்பத்தி காணப்படுகிற தில்லையென்று இவ்வாறு கூறுவோனாயின், அச்சங்கை பொருந்தாது.

ஏனெனின், பிரத்தியபிஞ்ஞா பிரத்தியக்ஷ முண்டாகுமிடத்துப் பூர்வ அநுபவமும் இந்திரியமுமாகிய இரண்டு பிரமாணங்களால் ஒரு பிரமை யுண்டாகின்றது; ஆதலால், திருஷ்ட விருத்தமாகாது.

யாண்டுப் பிரத்தியபிஞ்ஞை யுண்டாகின்றதோ, ஆண்டுப் பூர்வ அநுபவம் சம்ஸ்காரவாயிலாக ஏதுவாம். சையோக முதலிய சம்பந்த வாயிலாக இந்திரியம் ஏதுவாம்.

ஆகலின், சம்ஸ்காரரூப வியாபாரமுடைய காரணம் பூர்வ அநுபவமாம். சம்பந்தரூப வியாபாரமுடைய காரணம் இந்திரியமாம். ஆகலின், பிரமைக்குக் கரணமாயிருத்தலின் இரண்டும் பிரமாணமாம்.

அங்ஙனமே பிரஹ்மசாக்ஷாத்காரமாகிய பிரமைக்குச் சப்தம் மனமென இரண்டு பிரமாணங்களுளவெனக் கூறுதலில் திருஷ்ட விரோத மின்று.

* மானஸிக பிரஹ்மசாக்ஷாத்காரத்திற்கு மனமாகிய இந்திரியத்தாற் றோன்றிய தன்மை அங்கீகரிக்கின் பிரத்தியக்ஷத் தன்மை விவாதமின்றிச் சித்திக்கின்றது.

பிரஹ்மஞானத்திற்குக் கேவலம் சப்தத்தாற் றோன்றிய தன்மை யங்கீகரிக்கின் விவாதத்தாற் பிரத்தியக்ஷத்தன்மை சித்திக்கின்றது.

தசம திருஷ்டாந்தத்திலும் இந்திரியத்தாற் றோன்றிய தன்மை சத்தத்தாற் றோன்றிய தன்மைகளுக்கு விவாத முளது. இந்திரிய ஜந்நிய ஞானத்திற்குப் பிரத்தியக்ஷத் தன்மையில் விவாத மில்லை.

பிரத்தியபிஞ்ஞா பிரத்தியக்ஷத்தில் பூர்வ அநுபவத்தாற் றோன்றிய சம்ஸ்காரம் சககாரியும் கேவல இந்திரியம் பிரமாணமுமா மெனக் கூறின், அதற்குச் சமாதானம் இதுவாம்:—

பிரஹ்மசாக்ஷாத்காரமாகிய பிரமையினும் சத்தம் சககாரியும், கேவல மனம் பிரமாணமுமாம்.

* பிரபஞ்ச திருஷ்டி பகிர்முகமும், பிரஹ்ம திருஷ்டி அந்தர்முகமுமா யிருத்தலின், 'மானஸிக பிரஹ்மசாக்ஷாத்காரம்' என்றார்.

வேதாந்த பரிபாஷை முதலிய நூல்களில் இந்திரிய ஜந்நிய ஞானத்திற்குப் பிரத்தியக்ஷத்தன்மை கூறுதலில் எத்தோஷம் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அதற்குச் செவ்வையான சமாதானம் நியாய கௌஸ்துப முதலிய நூல்களில் எழுதப்பட்டிருக்கின்றது. அதனைத் தெரிய விரும்புவோர் அவற்றிற் கண்டு கொள்க.

(4) ஞானத்திற்கு ஆசிரயமாயிருத்தலின் அந்தக்கரணம் கர்த்தாவாம்; ஆகலின், ஞானத்திற்குக் கரண மாகாதென மனதிற்கு இந்திரியத் தன்மையில் எந்தத் தோஷம் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அந்தத் தோஷமு மில்லை.

ஏனெனின், தர்மியாகிய அந்தக்கரணம் ஞானத்திற்கு ஆசிரயமாயிருத்தலின் கர்த்தாவாம். அந்தக்கரணத்தின் பரிணாமமாகிய மனம் ஞானத்திற்குக் காணமாம். இவ்வாற்றான் மனமும் பிரமைஞானத்திறகுக் கரணமாம். ஆகலின் பிரமாணமாம்.

20. நியாயத்திற்கும் வேதாந்தத்திற்கும் பிரத்தியக்ஷ விசாரத்திலுள்ள பேதம்

யாண்டு இந்திரியத்தால் திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டு நியாய வேதாந்த மதங்களில் வேற்றுமை யில்லை. திரவியத்திற்கு இந்திரியத்தோ டுண்டாம் சையோகமே சம்பந்தமாம்.

இந்திரியத்தோடு திரவியத்தினது ஜாதி அல்லது குணத்தின் பிரத்தியக்ஷ முண்டாகுமிடத்து நியாயமதத்திலோர் சையுத்த சமவாய சம்பந்த மிருக்கின்றது. வேதாந்த மதத்தில் சையுத்த தாதாத்மிய சம்பந்த மிருக்கின்றது.

ஏனெனின், நியாய மதத்தில் எவற்றிற்குச் சமவாய முண்டோ, அவற்றிற்கு வேதாந்த மதத்தில் தாதாத்மிய சம்பந்த முண்டு.

குணத்தினது ஜாதியின் பிரத்தியக்ஷத்தில் நியாய மதப்படி சையுக்த சமவேத சமவாய சம்பந்த முண்டு.

வேதாந்த மதத்தில் சையுக்த தாதாத்மியமுடைய தாதாத்மிய சம்பந்த முண்டு. இதனையே சையுக்தாபின்ன தாதாத்மிய மென்பர்.

இந்திரியத்தோடு சையுத்தமான கடமுதலியவற்றில் தாதாத்மிய முடையன உருவ முதலியனவாம். அவற்றில், தாதாத்மிய சம்பந்தம் உருவத்தன்மை முதலிய ஜாதிக்காம்.

எங்ஙனம் உருவமுதலியன கடமுதலியவற்றில் தாதாத்மிய முடையனவோ, அங்ஙனமே கடமுதலியவற்றோடு அபின்னமுமா மென்று சொல்லப்படுகின்றன.

அபின்னத்திற்கே தாதாத்மிய சம்பந்த முண்டாகின்றது.

யாண்டுச் சுரோத்திரத்தால் சத்தத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றதோ, ஆண்டு நியாயமதத்திலோ சமவாய சம்பந்த முண்டு.

வேதாந்த மதத்தில் சுரோத்திரேந்திரியம் ஆகாயத்தின் காரியமாகலின், சக்ஷுமுதலியவற்றில் கிரியை யுண்டாவது போல, சுரோத்திரத்திற் கிரியை யுண்டாய்ச் சத்தமுடைய திரவியத்தோடு சுரோத்திரத்திற்குச் சையோக முண்டாகின்றது. அச் சுரோத்திர சையுக்த திரவியத்தில் சத்தத்தின் தாதாத்மிய சம்பந்த மிருக்கின்றது.

ஏனெனின், வேதாந்த மதத்தில் சத்தம் பஞ்ச பூதங்களின் குணமாயிருத்தலால் பேரிமுதலியவற்றினும் சத்தம் இருக்கின்றது.

ஆகலின், சுரோத்திரத்தின் சையுத்த தாதாத்மிய சம்பந்தத்தான் சத்தத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. சத்தத்தன்மையின் பிரத்தியக்ஷ முண்டாகுமிடத்துச் சுரோத்திரத்தின் சையுக்த தாதாத்மியமுடைய தாதாத்மிய சம்பந்த மிருக்கின்றது.

வேதாந்த மதத்தில் எங்ஙனம் சத்தத்தன்மை சாதியோ, அங்ஙனமே தாரத்தன்மை மந்தத்தன்மைகளும் ஜாதியேயாம். நியாயமதத்தைப்போல ஜாதிக்கு வேறாய் உபாதி யில்லை.

ஆகலின், சத்தத்தன்மை ஜாதிக்குச் சுரோத்திரத்தோடுள்ள சம்பந்த மெதுவோ, அச் சம்பந்தமே தாரத்தன்மை மந்தத்தன்மைகளுக்குமாம். விசேஷணத் தன்மைச் சம்பந்த மில்லை.

அபாவத்தின் ஞானம் அநுபலப்திப் பிரமாணத்தா லுண்டாகின்றது. எவ் விந்திரியத்தாலும் அபாவத்தின் ஞான முண்டாகிறதில்லை. ஆகலின், அபாவத்திற்கு இந்திரியத்தோடு சம்பந்தம் அபேக்ஷிக்கப்படுகிறதில்லை.

இது நியாயமதத்திற்கும் வேதாந்தமதத்திற்கும் பிரத்தியக்ஷ விசாரத்திலுள்ள பேதமாம்.

21. பிரத்தியக்ஷப் பிரமையின் உபசங்காரம்.

இவ்வாற்றால் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஆறு பேத முண்டு. அவற்றின் கரணமும் ஆறாம்.

ஆகையால், நேத்திர முதலிய ஆறு இந்திரியங்களும் பிரத்தியக்ஷப் பிரமாண மெனப்படும்.

நியாயமதத்திலும் வாசஸ்பதிமதத்திலும் ஆறாவது பிரத்தியக்ஷப் பிரமாணம் மனமாம்.

பஞ்சபாதிகை யென்னும் நூலின் கர்த்தாவாகிய பத்மபாதாசாரியரது மதத்தை யநுசரித்தவர்கள் மனதைப் பிரமாண மென்று கொள்ளவில்லை.

சுக துக்கங்களோ சாக்ஷி பாஸ்யங்களாமாகலின் அவற்றின் ஞானம் பிரமை யன்று. விசிஷ்ட ஜீவனில் அந்தக்கரண பாகம் சாக்ஷி பாஸ்யமாம். சேதன பாகம் சுவயம் பிரகாசமாம். ஆகலின், ஜீவனது ஞானமும் மானச மன்று.

பிரஹ்மவித்தையாகிய அபரோக்ஷஞானம் பிரமைவடிவமாயினும், அதன் கரணம் சத்தமாம்; மனம் பிரமாண மன்று.

ஆனால், பஞ்சபாதிகாநுசார சித்தாந்த மெதுவோ, அதன் கண்ணும் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஆறு பேத முண்டு. சப்த ஜந்நிய பிரஹ்மப் பிரத்தியக்ஷப் பிரமை ஆறாவதாம்.

அபாவத்தின் ஞானம் அநுபலப்திப் பிரமாண ஜந்நியமாயினும் பிரத்தியக்ஷமாம். இவ் வார்த்தையினை அநுபலப்திப் பிரமாண நிருபணத்திற் கூறுவாம்.

இதனாற் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஏழு பேதங்கள் சம்பவிக்கின்றன. என்றாலும், இந் நூலின்படி அபாவஞானத்தில்

பிரத்தியக்ஷத் தன்மை யில்லையர்களின், பிரத்தியக்ஷப்பிரமை க்கு ஆறுபேத முண்டு; ஏழில்லை.

சுருக்கமாகப் பிரத்தியக்ஷப் பிரமாணம் சொல்லப்பட்டது.

முதற் பிரகாசம்

பிரத்தியக்ஷப் பிரமாண நிரூபணம்

முற்றிற்று.

ஓம்

தத் ஸத் ப்ரஹ்மணே நம:

இரண்டாவது பிரகாசம்

அநுமானப் பிரமாண நிரூபணம்

22. அநுமிதியினது சாமக்கிரியின் பேதமும் சொரூபமும்.

அநுமிதிப் பிரமையின் காரண மெதுவோ அது அநுமானப் பிரமாண மெனப்படும்.

இலிங்கஞானத்தாற் றோன்றும் ஞான மெதுவோ அது அநுமிதி யெனப்படும்.

எங்ஙனம்; பருவதத்தில் புகையின் பிரத்தியக்ஷ ஞான முண்டாய் வன்னியின்ஞான முண்டாகின்றது; ஆண்டுப் புகை யின் பிரத்தியக்ஷஞானம் இலிங்கஞான மெனப்படும்.

அதனால் வன்னியின்ஞான முண்டாகின்றமையின் பருவ தத்தில் வன்னியின்ஞானம் அநுமிதியாம் எதன் ஞானத்தாற் சாத்தியத்தின் ஞான முண்டாகின்றதோ அது இலிங்க மெனப் படும்.

அநுமிதிஞானத்தின் விஷயம் சாத்திய மெனப்படும்.

அநுமிதிக்கு விஷயம் வன்னியாகலின் வன்னி சாத்திய மாம்.

தூம ஞானத்தால் வன்னியாகிய சாத்தியத்தின் ஞான முண்டாதலான் தூமம் இலிங்கமாம்.

வியாப்பியத்தின் ஞானத்தால் வியாபகத்தின் ஞான முண்டாகின்றதாகலின் வியாப்பியத்தை இலிங்க மென்பர்.

வியாபகத்தைச் சாத்திய மென்பர்.

வியாத்தியுடையதனை வியாப்பிய மென்பர்.

வியாப்தி நிரூபகத்தை வியாபக மென்பர்.

அவிநாபாவரூப சம்பந்தத்தை வியாத்தி யென்பர்.

எங்ஙனம்: தூமத்தில் வன்னியின் அவிநாபாவரூப சம்பந்த மிருக்கின்றது; அதுவே தூமத்தில் வன்னியின் வியாப்தியாம். ஆகையால், தூமம் வன்னியின் வியாப்பியமாம். அந்த வியாப்தி ரூப சம்பந்தத்தின் நிரூபகம் வன்னியாம். ஆகலின், தூமத்தின் வியாபகம் வன்னியாம்.

எஃதின்றி எது உளதாகாதோ, அதன் அவிநாபாவரூப சம் பந்தம் அதன்கண் சொல்லப்படுகின்றது.

வன்னியின்றித் தூம மிராததாகலின் வன்னியின் அவிநா பாவரூபசம்பந்தம் தூமத்தின்க ணுளது. வன்னியினிடத்துத் தூமத்தின் அவிநாபாவ மில்லை.

ஏனெனின், ஒழுகக் காய்ச்சிய இருப்புத்துண்டில் தூம மின்றி வன்னியிருக்கின்றது. ஆகையாற் றூமத்தின் வியாப்பி யம் வன்னி யன்று. வன்னியின் வியாப்பியம் தூமமாம்.

அங்ஙனமே உருவத்தின் வியாப்பியம் இரசமாம்.

பிருதிவி ஜல தேயுக்களில் உருவ மிருக்கின்றது.

பிருதிவியினும் ஜலத்தினும் இரச மிருக்கின்றது.

ஆகையால், உருவத்தின் அவிநாபாவரூப சம்பந்தம் இர சத்தின்க ணிருத்தலால் உருவத்தின் வியாப்பியம் இரசமாம்.

உருவத்தில் இரசத்தின் விநாபாவம் (இரசமின்றியிருத் தல்) இருக்கின்றது.

தேயுவில் இரசவிநாபாவம் (இரசமின்றி உருவத்தின் சத் தை) இருக்கின்றது.

ஆகையால், இரசத்தின் வியாப்பியம் உருவமன்று.

எது எதனின் வியபிசாரியா (பிறழ்வுடையதா) கின்றதோ அது அதன் வியாப்பிய மாகாது.

அதிக தேசத்தி லிருப்பது எதுவோ, அது வியபிசாரி யெனப்படும்.

தூமத்தினும் அதிக தேசத்தி லிருக்கும் வன்னி யெதுவோ, அது தூமத்தின் வியபிசாரியாம்.

இரசத்தினும் அதிக தேசத்தில் உருவ மிருக்கின்றது. ஆகையால், இரசத்தின் வியபிசாரி உருவமாம்.

அற்ப தேசத்தி லிருப்பது எதுவோ, அதன்கண் அவிநாபாவ சம்பந்த முண்டு. அதுவே வியாப்பியமாம்.

வன்னியினும் அற்பதேசத்தில் தூம முளதாம். ஆகலின், வன்னிக்குத் தூமத்தில் அவிநாபாவரூப வியாப்தி யுண்டு. அத் தூமம் வியாப்பியமாம்.

உருவத்தினும் அற்ப தேசத்தில் இரச மிருக்கின்றது. ஆகையால், இரசத்தில் உருவத்தின் வியாப்தி யுளது. அதனை யுடைய இரசம் வியாப்பியமாம்.

எங்ஙனம் அற்பதேசத்தி லிருப்பதன்கண் அதிக தேச முடையதின் வியாப்தி யுண்டோ, அங்ஙனமே இரண்டு பதார்த் தங்கள் சமானதேசத்தி லிருப்பன வாகுமாயின், அவற்றிற்கு மொன்றற்கொன்று வியாப்தி யுண்டு.

கந்தகுணமும் பிருதிவித் தன்மைச் சாதியும் கேவலம் பிருதிவியின்க ணிருப்பனவாம்.

ஆண்டுக் கந்தத்தின் வியாப்தி பிருதிவித்தன்மையிலும், பிருதிவித்தன்மையின் வியாப்தி கந்தத்திலும் உண்டு.

அங்ஙனமே, சிநேக குணமும் ஜலத்தன்மைச் சாதியும் ஜலத்தின்க ணுண்டு.

ஜலமின்றிச் சிநேகமும் ஜலத்தன்மையு மிரா. ஆகலின், சமதேசத்தி லிருப்பனவா யிருத்தலின் இரண்டும் ஒன்றற்கொன்று வியாப்தி யுடையன வாதலால் வியாப்பியமாம்.

ஏனெனின், எங்ஙனம் அற்பதேசத் திருப்பதன்கண் அவி நாபாவரூப சம்பந்த மிருக்கின்றதோ, அங்ஙனமே சமான தேசத்தி லிருப்பனவாகிய பதார்த்தங்களுக்கும் ஒன்றற் கொன்று அவிநாபாவ முண்டு.

பிருதிவித்தன்மையினும் அற்பதேசத் திருப்பது கந்தம்;

ஜலத்தன்மையினும் அற்பதேசத் திருப்பது சிநேகம்.

ஏனெனின், முதல் க்ஷணத்தில் நிர்க்குணத் திரவிய முண் டாகின்றது.

இரண்டாவது க்ஷணத்தில் குண முண்டாகின்றது.

ஜாதி முதல் க்ஷணத்திலும் திரவியத்தி லிருக்கின்றது.

ஆகலின், கடத்தின் முதல் க்ஷணத்தில் கந்தத்தின் வியபி சாரியாகிய பிருதிவித்தன்மை யிருத்தலால் அதன்கண் கந்தத் தின் அவிநாபாவ சம்பந்தமாகிய வியாப்தியின் அபாவ மிருக் கின்றது.

உற்பத்தி க்ஷணத்தி லிருப்பதாகிய ஜலத்தில் சிநேகத்தின் வியபிசாரியாகிய ஜலத்தன்மை யிருத்தலால் அதன்கண் சிநே கத்தின் அவிநாபாவரூப சம்பந்த மில்லை.

ஆதலாற் சிநேகத்தின் வியாப்திக்கு ஜலத்தன்மையில் அபாவ மிருத்தலால் சிநேகத்தின் வியாப்பியம் ஜலத்தன்மை யன்று.

இவ்வாற்றல் பிருதிவித்தன்மையின் வியாப்பியம் கந்த மாம்; கந்தத்தின் வியாப்பியம் பிருதிவித்தன்மை யன்று.

அங்ஙனமே, ஜலத்தன்மையின் வியாப்பியம் சிநேகமாம்; சிநேகத்தின் வியாப்பியம் ஜலத்தன்மை யன்று.

என்றாலும், கந்தமுடைமையும் பிருதிவித் தன்மையும் ஒன்றற்கொன்று வியாப்தி யுடையனவாம். ஆகலின், இரண் டும் ஒன்றற்கொன்று வியாப்பியமாம்.

அங்ஙனமே, சிநேகமுடைமையும் ஜலத்தன்மையுமாகிய இரண்டும் ஒன்றற்கொன்று வியாப்பியமாம்.

ஏனெனின், கந்தத்தின் அதிகரணத்தன்மையைக் கந்த முடைமை யென்பர்.

சிநேகத்தின் அதிகரணத்தன்மையைச் சிநேகமுடைமை யென்பர்.

எதன்கண் எந்தப் பதார்த்தம் எப்போதாயினு மிருக்கு மோ, அதன்கண் அப் பதார்த்தத்தின் அதிகரணத்தன்மை என்று முளதாம்.

இது வியாப்திநிரூபணத்தில் ஜகதீச பட்டாசாரியர் முதலி யோர்களால் எழுதப்பட்டிருக்கின்றது.

ஆண்டு இது பிரசங்கமாம்:—அவியாப்பியவிருத்தி பதார்த்தத்தின் அதிகரணத்தன்மை வியாப்பியவிருத்தியாம். அதி கரணத்தன்மை அவியாப்பியவிருத்தி யாகிறதில்லை.

* அவியாப்பிய விருத்தி இருவகையாம்.

தேசத்தானாகிய அவியாப்பிய விருத்தியு முண்டு.

காலத்தானாகிய அவியாப்பிய விருத்தியு முண்டு.

எது பதார்த்தத்தின் ஏகதேசத்திலிருந்து ஏகதேசத் தில்லாதிருக்கின்றதோ, அது தேசத்தானாகிய அவியாப்பிய விருத்தி யெனப்படும்.

எங்ஙனம்: பதார்த்தத்தின் ஏகதேசத்தில் சையோக முண்டாகின்றது. அது தேசத்தானாகிய அவியாப்பிய விருத்தியாம்.

ஆனால், சையோகத்தின் அதிகரணத்தன்மை பதார்த்த முழுவதினு மிருக்கும். ஏகதேசத்தி லிராது.

ஆகலின், அவியாப்பியவிருத்தி சையோகத்தின் அதி கரணத்தன்மை வியாப்பிய விருத்தியாம்; அவியாப்பிய விருத்தி யன்று. இது சித்தாந்தமாம்.

ஒருகாலத்திலிருந்து ஒருகாலத்தில் இல்லாதிருப்பதெது வோ, அது காலிக அவியாப்பிய விருத்தி யெனப்படும். முற் கூறிய விதத்தாற் கந்தமுதலிய குணங்கள் காலிக அவியாப்பிய விருத்தியாம்.

* தனது அத்தியந்தாபாவ ஸமானாதிகரணத்தன்மை அவியாப்பிய விருத்தித் தன்மையாம்.

அவற்றின் அதிகாணத்தன்மை திரவியத்தின் உற்பத்தி க்ஷணத்திலு மிருக்கின்றதாகலின் கந்தமுடைமை இரசமுடைமைகள் பிருதிவித்தன்மை ஜலத்தன்மைகளின் சமதேச சம காலத் திருப்பனவாம். இது நியாய ரீதியான சமாதானமாம்.

வேதாந்தமதத்திலோ நிர்க்குணத்திரவிய முண்டாகிறதில்லை. முதற்கண்ணே சகுண முண்டாகின்றது. ஆகலின், கந்த ரசங்களுக்கும் பிருதிவித்தன்மை ஜலத்தன்மைகள் வியாப்பிய மாம்.

23. அநுமிதிஞானத்தில் வியாப்தியினது ஞானம் அபேக்ஷிக்கப்படுமாறு

இவ்வாற்றால் அவிநாபாவரூப சம்பந்தம் வியாப்தியும், அதனையுடையது வியாப்பியமுமாம்.

எவனுக்குப் பர்வதமுதலியவற்றில் வியாப்பியமாகிய தூமத்தின் பிரத்தியக்ஷஞானம் அல்லது சத்தஞான முண்டாகின்றதோ, அவனுக்குப் பர்வதமுதலியவற்றில் அக்கினியின் அநுமிதிஞான முண்டாகின்றது.

அங்ஙனமே, இரசத்தின் ஞானத்தால் உருவத்தின் ஞான முண்டாகின்றது.

ஆனல், எந்தப் புருஷனுக்குத் தூமம் வன்னி வியாப்பியமா மென்னும் ஞானம் முன் நிகழ்ந்திருக்குமோ, அவனுக்குத் தூமஞானத்தால் வியாப்பியத்தன்மையின் ஸ்மரண முண்டாய் வன்னியின் அநுமிதி யுண்டாகின்றது.

வியாப்தியை வியாப்பியத்தன்மை யென்பர்.

அங்ஙனமே, உருவத்தின் வியாப்பியம் இரசமாமென்னும் ஞானம் எவனுக் குண்டாகின்றதோ, அவனுக்கு இரசத்தின் ஞானத்தால் இரசத்தில் உருவத்தினது ஸ்மரண முண்டாய் உருவத்தின் அநுமிதி யுண்டாகின்றது.

எவனுக்கு வியாப்பியத்தன்மையின் ஞானம் முன் நிகழ வில்லையோ, அவனுக்குத் தூமமுதலியவற்றின் ஞானத்தால் வன்னிமுதலியவற்றின் அநுமிதி நிகழாதாகலின், வியாப்தி யின் ஞானம் அநுமிதிக்குக் காரணமாம்.

வியாப்தி யுடையதனை வியாப்பிய மென்றும், வியாப்தியினை வியாப்பியத்தன்மை யென்றும் கூறுவர்.

அந்த வியாப்திஞானமும் சந்தேகரூப காரண மன்று.

ஏனெனின், தூமம் வன்னியின் வியாப்தி யுடையதா? அன்றா? என்னும் ஞானம் எவனுக்கு முன் உண்டாயிருக்கின்றதோ, அவனுக்குத் தூமஞானத்தால் வன்னியின்ஞான முண்டாகாது.

ஆனால், "தூமம் வன்னியின் வியாப்தி யுடையது" என்னும் நிச்சயரூப ஞானம் எவனுக்கு உண்டாயிருக்கின்றதோ, அவனுக்குத் தூமஞானத்தால் வன்னியின் அநுமிதியாகிய ஞான முண்டாம்.

ஆகலின், வியாப்தியின் நிச்சயம் அநுமிதிக்கு ஏதுவாம். அந்த வியாப்தியின் நிச்சயம் உடனிகழ்ச்சி ஞானத்தா லுண்டாகின்றது.

அடுக்களை முதலியவற்றில் அடிக்கடித் தூம வன்னிகளின் உடனிகழ்ச்சியைக் கண்டு "வன்னியின் வியாப்பியம் தூமமாம்" என்னும் ஞான முண்டாகின்றது.

"தூமத்தின் வியாப்பியமாம் வன்னி" என்னும் ஞான முண்டாகிறதில்லை.

ஏனெனின், அடுக்களை முதலியவற்றில் வன்னியின் உடனிகழ்ச்சி எங்ஙனம் தூமத்திற் காணப்படுகின்றதோ, அங்ஙனமே தூமத்தின் உடனிகழ்ச்சி வன்னியிற் காணப்படினும் தூமத்தின் வியபிசாரமும் வன்னியிற் காணப்படுகின்றது.

இதனால் எதன்கண் எப் பதார்த்தத்தின் வியபிசாரம் தோற்றாது உடனிகழ்ச்சி தோற்றுகின்றதோ, அதன்கண் அப் பதார்த்தத்தினது வியாப்தியின் நிச்சய முண்டாகின்றது.

தூமத்தில் வன்னியின் வியபிசாரம் தோற்றாது, உடனிகழ்ச்சி தோற்றுகின்ற தாகலின், தூமத்தில் வன்னியினது வியாப்தியின் நிச்சய முண்டாகின்றது.

வன்னியில் தூமத்தின் உடனிகழ்ச்சியும் தோற்றுகின்றது; வியபிசாரமும் தோற்றுகின்றது.

ஆகலின், 'தூமத்தின் வியாப்பியமாம் வன்னி' என்னும் நிச்சயம் உண்டாகிறதில்லை.

உடனிகழ்ச்சி யென்பது கூட விருத்தற்காம்.

வியபிசார மென்பது வேரு யிருத்தற்காம்.

நீரினது புகையின்கண் வன்னியின் வியபிசார மிருக்கின்றது.

அக்கினி அணைந்தகாலத்து அடுக்களையி லிருக்கும் தூமமெதுவோ, அதன்கண்ணும் வன்னியின் வியபிசார மிருக்கின்றது.

என்றாலும் எதன் மூலம் சேதிக்கப்படவில்லையோ, அப்படிப்பட்ட உயர்ந்த தூமரேகையில் வன்னியின் வியபிசார மில்லை.

ஆகையால், விலக்ஷணமான தூம ரேகையில் வன்னியினது வியாப்தியின் பிரத்தியக்ஷமாகிய நிச்சய முண்டாகின்றது.

அப்படிப்பட்ட விலக்ஷண தூம ரேகையின் பிரத்தியக்ஷம் பர்வதமுதலியவற்றி லுண்டாய், 'தூமம் வன்னியின் வியாப்பியமாம்' என்னும் அநுபவத்தின் சம்ஸ்காரம் எழும்புகின்றது. அதன்பின் 'வன்னியுடையது பர்வதம்' என்னும் அநுமிதியுண்டாகின்றது.

24. சகல நையாயிகமதத்திலு முள்ள அநுமிதியின் கிரமம்.

நியாயமதத்தில் அநுமானப் பிரசங்கத்தில் அநேக பக்ஷங்களுள. அவை அவர்கள் நூல்களில் ஸ்பஷ்டமாம்.

ஆனல், சகல நையாயிகர் மதத்தினும் அநுமிதியின் கிரமம் இதுவாம்:—

முதற்கண் அடுக்களை முதலியவற்றில் ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சிக் காட்சி யுண்டாகின்றது.

அதனல் ஏதுவில் சாத்தியத்தினது வியாப்தியின் நிச்சயம் உண்டாகின்றது,

அதன்பின் பர்வத முதலியவற்றில் ஏதுவின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

அதன்பின் சம்ஸ்காரத்தின் எழுச்சி யுண்டாய் வியாப்தி யின் ஸ்மிருதி யுண்டாகின்றது.

அதன்பின் சாத்தியத்தினது வியாப்தி விசிஷ்ட ஏதுவின் பிரத்தியக்ஷம் பக்ஷத்தி லுண்டாகின்றது. அதனைப் பராமரிச மென்பர்.

வன்னியின் வியாப்பிய தூமமுடையது மலையென்பது பிர சித்தாநுமானத்தில் பராமரிசத்தின் ஆகாரமாம்.

சாத்திய வியாப்பிய ஏதுவுடையது பக்ஷம் என்பது பரா மரிசத்தின் சாமானிய ரூபமாம்.

அதன் பின்னர் வன்னியுடையது பர்வதம் என்னும் அநு மிதிஞான முண்டாகின்றது. இந்த முறையாக அநுமிதி யுண் டாகின்றது.

ஆனால், பிராசீனர் (பழமையானோர்) மதத்தில் அநுமிதி யின் கரணம் பராமரிசமாம்.

மற்றெல்லா ஞானமும் அந்நியதாசித்தமாம் (பிறிதோராற் ருற் பெறப்படுவதாம்.) அவர்கள் மதத்தில் பராமரிசமே அநு மானமாம்.

பராமரிசத்தின் வியாபாரம் அகப்படாவிடினும், அவர் கள் மதத்தில் வியாபாரமின்றிய காரணத்தைக் கரண மென்பர்.

ஆகையால், பராமரிசமே அநுமிதியின் கரணமாயிருத்த லின் அநுமானமாம்.

சில நையாயிகர்: ஞான வேதுவினை அநுமான மென்பர்.

ஓர் பக்ஷத்தில் ஏதுவின் ஞானத்தை அநுமான மென்பர்.

வியாப்தியின் ஸ்மிருதியையும் பராமரிசத்தையும் வியாபார மென்பர்.

சிலர், வியாப்தியின் ஸ்மிருதி ஞானத்தை அநுமான மென் பர்; பராமரிசத்தை வியாபார மென்பர்.

இவ்வாறு நையாயிகர்களுக்கு அநேகமத முண்டு. ஆனால், எல்லோர் மதத்தினும் பார்மரிசத்தின் அங்கீகார முண்டு.

சிலர், பராமரிசத்தைக் கரண மென்பர்; சிலர், வியாபார மென்பர்.

பராமரிசமின்றி யநுமிதி யுண்டாகா தென்பது சகல நையாயிகர்களது மதமாம்.

25. அநுமிதியின்கண் மீமாம்ஸை மதம்

மீமாம்ஸை மதம் இதுவாம்:—யாண்டுப் பருவதத்தில் தூமத்தின் பிரத்தியக்ஷத்தால் வியாப்தியின் ஸ்மிருதி யுண்டாய் வன்னியின் அநுமிதி யுண்டாய்விடுகின்றதோ, ஆண்டுப் பரா மரிச மின்றியும் அநுமிதி யநுபவசித்தமாம்.

ஆகையால், யாண்டுப் பராமரிச முண்டாய் அநுமிதி யுண் டாகின்றதோ, ஆண்டும் பார்மரிசம் அநுமிதிக்குக் காரண மன்று. ஆனால், பார்மரிசம் அந்நியதாசித்த மெனப்படுகின்றது.

எங்ஙனம்: தெய்வீகமாய் வந்த கழுதை அல்லது குலால பத்தினி கடத்தில் அந்நியதாசித்தமாம். காரண சாமக்கிரியினும் புறம்பாயுள்ள தெதுவோ, அது அந்நியதாசித்த மெனப்படும்.

இவ்வாற்றான் மீமாம்ஸை மதத்தில் பார்மரிசம் காரண மன்று. அதன் அநுசாரிகளும்பார்மரிச மொன்றைவிட்டு நையா யிகர்களைப்போல அநேக பதார்த்தங்களை அநுமான மேன்பர்.

சிலர், வியாப்தியின்ஸ்மிருதியையும்; சிலர், அடுக்களை முத லியவற்றின்கண் வியாப்தியின் அநுபவத்தையும்; சிலர், பக்ஷத் தில் ஏதுவின் ஞானத்தையும் அநுமான மென்பர்.

26. அத்வைத மதாநுசாரமான அநுமிதியின் கிரமம்

அத்வைத நூலும் யாண்டு விரோத முண்டாத தில்லை யோ, ஆண்டு மீமாம்ஸையினது * பிரக்கிரியையின் அநுசார மாம். ஆதலால், அத்வைத மதத்தினும் பார்மரிசம் காரண மன்று.

* ஒரு பிரகாரமாகச் சொல்லப்படும் விஷயம் பிரக்கிரியை யெனப் படும்.

ஆனால், அடுக்களை முதலியவற்றின்கண் உண்டாகும் வியாப்தியின் பிரத்தியக்ஷமாகிய அநுபவம் யாதோ, அது அநுமிதியின் காரணமாம்.

அந்த வியாப்தியினது அநுபவத்தின் உற்புத்த (எழும்பிய) சம்ஸ்காரம் வியாபாரமாம்.

பர்வதத்தி லுண்டாகும் தூமத்தின் பிரத்தியக்ஷ மெதுவோ, அது சம்ஸ்காரத்தின் * உற்போதகமாம்.

யாண்டு வியாப்தியின் ஸ்மிருதியுண்டாய்விடுகின்றதோ, ஆண்டும் ஸ்மிருதியின் உற்பத்தியால் சம்ஸ்காரங்களினது நாசமோ உண்டாகிறதில்லை.

ஆதலால், ஸ்மிருதி சம்ஸ்காரம் என்னும் இரண்டு முண்டு. ஆண்டும் அநுமிதியின் வியாபாரரூப காரணம் சம்ஸ்காரமாம். வியாப்தியின் ஸ்மிருதி காரண மன்று.

ஏனெனின், அநுமிதியில் வியாப்தி ஸ்மிருதியினை வியாபாரமாகிய காரணமென அங்கீகரிக்கினும் ஸ்மிருதியின் காரணம் சம்ஸ்காரமென அங்கீகரித்தலும், ஸ்மிருதியில் அநுமிதியின் காரணத்தன்மையைக் அங்கீகரித்தலும் வேண்டும்.

ஆதலால், இரண்டிலும் காரணத்தன்மையைக் கற்பித்தல் † கௌரவமாம்.

ஸ்மிருதியின் காரணமா யங்கீகரித்த சம்ஸ்காரம் எதுவோ, அதனை அநுமிதியின் காரணமாக அங்கீகரிக்கின், ஸ்மிருதியின் காரணத்தன்மையை விடுதல் ‡ இலாகவமாம்.

இவ்வாற்றால் வியாப்தியின் அநுபவம் காரணமும், சம்ஸ்காரம் வியாபாரமும், அநுமிதி பயனுமாம்.

* உற்போதகம் - எழுப்புவது, புலப்படுத்துவது.

† ஒரு வஸ்துவினாலேயே ஒரு காரியம் சித்திக்கக்கூடியதாயிருக்க, அதற்குப் பல வஸ்துக்களை ஏதுவாகக் கற்பித்தலைக் கற்பனா கௌரவமென்பர்.

‡ ஈண்டுக் கூறிய இலாகவம் எளிதினின் முடிதலாம்; தோஷமின்மை

இது வேதாந்த பரிபாஷைமுதலிய அத்வைத நூல்களிற் சொல்லிய கிரமமாம்.

நையாயிகர் மதத்திற்போலப் பராமரிசம் அநுமிதியின் காரணமன்று.

27. வியாப்தியினது ஸ்மிருதியின் வியாபாரத்தன்மையும், சம்ஸ்காரத்தின் அவ்வியாபாரத் தன்மையும்

சம்ஸ்காரத்தை அநுமிதியின் வியாபாரமென அங்கீகரியாது, ஸ்மிருதியை வியாபாரமென அங்கீகரிக்கினும் சித்தாந்தத்திற்குக் கெடுதி யில்லை.

வேதாந்தபரிபாஷை முதலிய நூல்களில் விரோத மிருக்கினும், யுக்தியினால் அர்த்த நிச்சயஞ் செய்தலால் ஆதுனிக நூல்களின் விரோதத்தாற் கெடுதி யில்லை.

ஆனால், சுருதி ஸ்மிருதிகளின் விரோதத்தாலேனும், சித்தாந்த விரோதத்தாலேனும் கெடுதி யுண்டாம்.

அநுமிதியின் வியாபாரரூபகாரணம் ஸ்மிருதி அல்லது சம்ஸ்காரமா மென்னும் அர்த்தத்தில் சுருதி ஸ்மிருதிகள் உதாசீனமா யிருக்கின்றன. சித்தாந்தமும் உதாசீனமா யிருக்கின்றது.

ஆதலால், வியாப்தியின் ஸ்மிருதிக்கு வியாபாரத்தன்மையைக் கூறுதலில் விரோத மில்லை. மாறுதலான சாதகயுக்தி யுளது.

ஏனெனின், வியாப்தியின் சம்ஸ்காரத்தை அநுமிதிக்குக் காரணமாகச் சொல்லுமிடத்து, அநுற்புத்த சம்ஸ்காரத்தால் அநுமிதி யுண்டாகுமாயின், பர்வதத்தில் தூமத்தின் பிரத்தியக்ஷ மின்றியும் என்றுமே அநுமிதி யுண்டாதல் வேண்டும். அதனால் உற்புத்த (புலப்பட்ட) சம்ஸ்காரம் அநுமிதிக்கு ஏதுவாமென அங்கீகரிக்க வரும். உற்புத்த சம்ஸ்காரங்களினாலேயே ஸ்மிருதி யுண்டாகின்றது.

ஆதலால், யாண்டு அநுமிதியின் சாமக்கிரி யுளதோ, ஆண்டு நியமமாக ஸ்மிருதியின் சாமக்கிரி யுண்டு. இரண்டின்

சாமக்கிரிகளு மிருக்குங் காலத்து எந்த ஞான முண்டாகு மென்பதைத் * தர்மராஜரைக் கேட்கவேண்டும்.

ஒன்றற்கொன்று பிரதிபந்திக்கப்படுந் தன்மையும் பிரதிபந்திக்குந் தன்மையும் அங்கீகரிக்கின் கௌரவதோஷ முண்டாகும்; † விநிகமன விரஹமு முண்டாகும்; அநுபவ விரோதமு முண்டாகும்.

ஏனெனின், பர்வதத்தில் தூம தரிசனத்தால் தூமத்தில் வன்னியினது வியாப்தியின் ஸ்மரணத்திற்குப் பிற்காலத்தில் அநுமிதி யுண்டாகின்றது. இது புத்திமான்களது அநுபவசித்தமா (அநுபவத்தாற் பெறப்பட்டதா)ம்.

அநுமிதியால் வியாப்தியினது ஸ்மிருதியின் பிரதிபந்தம் அநுபவ விருத்தமாம்.

யாண்டு இரண்டு ஞானங்களின் இரண்டு சாமக்கிரிகளு முளவோ, ஆண்டு ஒரு சாமக்கிரிக்கு மற்றோர் சாமக்கிரி பிரதிபந்தகமாம்.

ஈண்டு அநுமிதியின் சாமக்கிரியும், ஸ்மிருதியின் சாமக்கிரியும் ஒரே சம்ஸ்காரமாம். அதற்குப் பிரதிபந்திக்கப்படுவது பிரதிபந்திப்பதெனுந் தன்மை பொருந்தாது.

அன்றியும், அநுமிதியால் ஸ்மிருதிக்குப் பிரதிபந்த முளதெனின், அநுமிதி பவிஷ்ய (எதிர்கால)த்ததாம்; அது உண்டாகவில்லை. அதற்குப் பிரதிபந்தகத்தன்மை சம்பவியாது.

வேதாந்த பரிபாஷையினும் அங்ஙனமே அதன் உரையினும் அநுமிதியால் ஸ்மிருதிக்குப் பிரதிபந்தம் எழுதப்படவில்லை. ஏனெனின், உரையோடு கூடிய வேதாந்த பரிபாஷையில் இஃதெழுதப்பட்டிருக்கின்றது.

தூம தரிசனத்தால் சம்ஸ்காரம் உற்புத்த மாகின்றது. அதனால் சிலவிடத்து ஸ்மிருதி யுண்டாகின்றது; சிலவிடத்து உண்டாகிறதில்லை.

* தர்மராஜர் என்பவர் வேதாந்த பரிபாஷை யென்னும் நூலின் கர்த்தா.

† இரண்டில் ஒரு பக்ஷத்தை நிச்சயிக்கும் யுக்தியின்மையை விநிகமன விரஹமென்பர்.

யாண்டு ஸ்மிருதி யுண்டாகின்றதோ, ஆண்டும் சம்ஸ்கார்ரங்களின் நாசமோ வுண்டாகிறதில்லை.

சம்ஸ்காரம் ஸ்மிருதி யென்னு மிரண்டு முள.

ஆனால், ஸ்மிருதி சூனியமான ஸ்தலத்தில் எங்ஙனம் சம்ஸ்காரம் வியாபாரமோ, அங்ஙனமே ஸ்மிருதியின் இருப்பாகிய ஸ்தலத்திலும் சம்ஸ்காரமே வியாபாரமாம்; ஸ்மிருதி யன்று. இது தர்மராஜரது நூல். அதன்கண் புத்திமான்களுக்கு இவ்வாச்சரிய முண்டாகின்றது.

உற்புத்த சம்ஸ்காரமிருக்க, ஸ்மிருதி சூனியமான ஸ்தலமெங்ஙன மிருக்கும்?

ஸ்மிருதியின் உற்பத்தியால் சம்ஸ்காரத்திற்கு நாச முண்டாகின்றது; ஸ்மிருதியால் வேறு சம்ஸ்கார முண்டாகின்றதென்பது யுக்தியோடு கூடிய பக்ஷமாம். அதன் உபபாதனம் (அடைவு) வேறு நூல்களிற் பிரசித்தமாம். இந்தப் பக்ஷத்தில் ஸ்மிருதி சம்ஸ்காரம் என்னு மிரண்டு மிருப்பதாகக் கூறுதல் முற்றும் விருத்தமாம்.

28. சுவார்த்தாநுமிதி அநுமானங்களின் சொரூபம்

ஆகையால், வியாப்தியின் அநுபவம் கரணமும், வியாப்தியின் ஸ்மிருதி வியாபாரமுமா மென்னும் இப்பக்ஷம் தோஷ மின்றியதாம்.

இவ்வாற்றால் யாண்டு அநுமிதி யுண்டாகின்றதோ, ஆண்டு அது சுவார்த்த (தன்பொருட்டு) அநுமிதி யெனப்படும்.

ஆனால், நியாயமதத்தில் தூமத்தின் பிரத்தியக்ஷமும் வியாப்தியின் ஸ்மரணமு முண்டாகியும் வன்னியின் அநுமிதி யுண்டாகிற தில்லை.

இரண்டு ஞானங்களுக்கும் பின்னர்ப் பராமரிச மென்னும் மூன்றாவது ஞான முண்டாகின்றது. அங்ஙனமே அநுமிதியு முண்டாகின்றது.

'வன்னி வியாப்பிய தூமமுடையது மலை' என்னும் ஞானத்தைப் பராமரிச மென்பர். அதனை வேதாந்தத்தில் அநுமிதியின் காரணமாக அங்கீகரிப்பதில்லை.

இவ்வாற்றான் வாக்கியப் பிரயோகமின்றி வியாத்திஞான முதலியவற்றான் எவ்வநுமிதி யுண்டாகின்றதோ, அது சுவார்த்தாநுமிதி யெனப்படும்.

அதன் காரணமாகிய வியாப்திஞான முதலியன சுவார்த்தாநுமான மெனப்படும்.

29. பரார்த்த அநுமானம், அநுமிதி, தர்க்க மென்பவற்றின் சொரூபம்

ஓர் புருடன், 'பர்வதத்தில் வன்னி, அநுமானப் பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டது,' என்கின்றான்.

மற்றொருவன், 'இல்லை' என்று சொல்லுகின்றான்.

இவ்வாறு இருவருக்கும் விவாதம் நேர்ந்தவிடத்து, வன்னி நிச்சயமுடைய புருஷன் தனது பிரதிவாதியை நிவிர்த்திக்கும் பொருட்டு வாக்கியப் பிரயோகஞ் செய்கின்றான். அதனைப் பரார்த்தாநுமான மென்பர்.

அவ்வாக்கியம் வேதாந்த மதத்தில் மூன்று அவயவங்களை யுடையதாம்.

1. பிரதிஞ்ஞை, 2. ஏது, 3. உதாகரணம் என்பன வாக்கியத்தினது அவயவங்களின் பெயர்கள்.

1. பர்வதம் வன்னியுடைத்து.

2. புகையுடைமையால்,

3. யாது யாது தூமமுடைத்து, அது அது வன்னியுடைத்து, அடுக்களைபோல வென்னு மிவ்வளவும் மகாவாக்கியமாம்.

அதன்கண் மூன்று அவாந்தர வாக்கியங்க ளுள; அவற்றிற்குப் பிரதிஞ்ஞைமுதலியன முறையே பெயர்களாம்.

சாத்திய விசிஷ்டமான பக்ஷத்தை அறிவிக்கும் வாக்கியம் பிரதிஞ்ஞை வாக்கிய மெனப்படும். இவ்வியல்பினது 'பர்வதம் வன்னியுடைத்து' என்னும் வாக்கியமாம்.

'வன்னி விசிஷ்டம் பர்வதம்' என்னும் அறிவு இவ்வாக்கியத்தா னுண்டாகின்றது. ஆண்டு வன்னி சாத்தியம், பர்வதம் பக்ஷம்.

ஏனெனின், அநுமிதிக்கு விஷயம் எதுவோ, அது சாத்திய மெனப்படும். அநுமிதிக்கு விஷயம் வன்னியாகலின் சாத்திய மாம்.

'பர்வதம் வன்னியுடைத்து' என்னும் அநுமிதி யுண்டாகின்றது. அதற்குப் பர்வதமும் விஷயமாகின்றது. அதனையும் சாத்திய மெனல்வேண்டும்.

என்றாலும் வேதாந்த மதத்தில் 'பர்வதம் வன்னியுடைத்து' என்னும் ஞானமோ ரொன்றேயாம்; ஆனல், அது பர்வத அம்சத்தில் இந்திரியஜந்நியமும், வன்னியம்சத்தில் தூமஞான மாகிய அநுமானத்தால் தோன்றியதுமாம்.

ஆகையால், ஒரு ஞானத்தில் சாக்ஷுஷத்தன்மை அநுமிதித்தன்மை என்னு மிரண்டு தர்மங்க ளுள.

சாக்ஷுஷத்தன்மையம்சத்தின் விஷயத்தன்மை பர்வதத்தினும், அநுமிதித்தன்மை யம்சத்தின் விஷயத்தன்மை வன்னியின்கண்ணு முளவாகலின், அநுமிதிக்கு விஷயம் பர்வத மன்று; கேவலம் வன்னியாம்.

எவ் வதிகரணத்தில் சாத்தியத்தை யறியும் விருப்ப முண்டாய்ச் சாத்தியத்தின் அநுமிதி வடிவ நிச்சய முண்டாகின்றதோ, அது பக்ஷ மெனப்படும். அவ் வியல்பினது பர்வதம்.

பிரதிஞ்ஞை வாக்கியத்திற்குப் பின் இலிங்கத்தை யறிவிக்கும் வசனம் எதுவோ, அது ஏது வாக்கிய மெனப்படும். அத் தன்மைய வாக்கியம் 'புகை யுடைமையான்' என்பதாம்.

ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சியை யறிவிப்பதாகிய திருஷ்டாந்தத்தைப் பிரதிபாதிக்கும் வசனம் எதுவோ, அது உதாகரண வாக்கிய மெனப்படும்.

வாதி பிரதிவாதிகளுக்கு யாண்டு விவாத முண்டாகவில்லையோ, யாண்டு இருவரானும் நிச்சயிக்கப்பட்ட அர்த்த முளதோ, அது திருஷ்டாந்த மெனப்படும். அவ் வியல்பினது அடுக்களையாம்.

இவ்வாற்றால் பிரதிஞ்ஞை முதலிய மூன்றன் சமுதாயமாகிய மகாவாக்கியத்தான் விவாதம் நிவிருத்தியாகின்றது.

மகாவாக்கியத்தைக் கேட்டும், அடுக்களை முதலியவற்றின் கண் வன்னியின் உடனிகழ்ச்சியாகிய தூம மிருக்கின்றது; பர்வ தத்தில் வன்னியின் வியபிசாரியாகிய தூம மிருக்கின்றது.

ஆகையால், பர்வதத்தில் தூம முண்டு, வன்னி யில்லை யென்று பிரதிவாதி ஆக்கிரகஞ் செய்யின், அல்லது வியபிசாரத் தின் சங்கை யுண்டாயின், தர்க்கத்தால் ஆக்கிரக சங்கை (சந் தேகங்)களின் நிவிருத்தி யுண்டாகின்றது.

அநிஷ்டத்தைச் சம்பாதித்தலைத் தர்க்க மென்பர்.

பர்வதத்தில் வன்னியின்றித் தூம மிருக்குமாயின் தூமம் வன்னியின் காரியமாகா தென்பது தர்க்கம். இதனால் தூமத்தில் வன்னியின் வியபிசார சந்தேகம் நீங்குகின்றது.

வன்னி தூமங்களுக்குக் காரண காரியத்தன்மை இஷ்ட மாம்; அவற்றின் அபாவம் அநிஷ்டமாம்.

ஆகையால், காரண காரியத் தன்மைகளின் பங்கம் சம்பா திக்கப்படுகின்றது, அக் காரண காரியத் தன்மைகளின் பங்கம் அநிஷ்டமாம்.

ஆகையால், அநிஷ்டத்தைச் சம்பாதித்தல் வடிவினது தர்க்கமாம்.

இத் தர்க்கத்தால் பிரதிவாதியின் நிவிருத்தியும், சங்கை யின் நிவிருத்தியு முண்டாகின்றன.

ஏனெனின், வன்னி தூமங்களின் காரண காரியத் தன்மை இருவருக்கும் இஷ்டமாம்; அதன் பங்கம் இருவருக்கும் அநி ஷ்டமாம்.

வன்னியின் வியபிசாரம் தூமத்திற் கூறின் அநிஷ்டத் தின் சித்தி யுண்டாகும். அப் பயத்தால் வன்னியின் வியபிசாரி யாம் தூம மென்னும் வார்த்தையைப் பிரதிவாதி சொல்லான்.

இவ்வாற்றான் மூன்றவயவங்களின் சமுதாயமாகிய மகா வாக்கிய மெதுவோ, அதனைப் பரார்த்தாநுமான மென்பர்.

அதன் பின்னர் உண்டாம் அநுமிதி யாதோ, அது பரார்த் தாநுமிதி யெனப்படும்.

அநுமானப் பிரமாணத்தால் நிச்சயஞ் செய்ய, வியபிசார சங்கை யுண்டாகுமாயின், அது தர்க்கத்தால் நிவிருத்தியாகும். ஆகையால், பிரமாணத்தின் சககாரி தர்க்கமாம்.

30. வேதாந்தமதத்தில் தர்க்கத்தோடு கூடிய பரார்த்தாநுமானத்தின் சொரூபம்.

வேதாந்த வாக்கியங்களால் ஜீவனிடத்து நிச்சயிக்கப்பட்டிருக்கும் பிரஹ்மத்தின் அபேதம் எதுவோ, அது அநுமானத்தானும் இவ்வாற்றாற் சித்திக்கின்றது:—

ஜீவன் பிரஹ்மாபின்னம், சேதனத் தன்மையால், யாண்டு யாண்டுச் சேதனத்தன்மை யுண்டோ, ஆண்டாண்டுப் பிரஹ்மாபேத முண்டு; பிரஹ்மத்திற் போல இது மூன்றவயவங்களின் சமுதாயமாகிய மகாவாக்கியமாம். ஆகையாற் பரார்த்தாநுமான மெனப்படும்.

ஈண்டுச் சீவன் பக்ஷம்,
பிரஹ்மாபேதம் சாத்தியம்,
சேதனத் தன்மை ஏது,
பிரஹ்மம் திருஷ்டாந்தம்.

ஈண்டுப் பிரதிவாதியானவன் ஜீவனிடத்துச் சேதனத்தன்மையாகிய ஏதுவோ விருக்கின்றது, பிரஹ்மாபேதமாகிய சாத்திய மில்லையென் றிவ்வாறு பக்ஷத்தில் சேதனத்தன்மையாகிய ஏதுவிற்குப் பிரஹ்மாபேதரூப சாத்தியத்தோடு வியபிசார சங்கை செய்யின், தர்க்கத்தால் அச் சங்கையை நிவிருத்தி செய்ய வேண்டும்.

ஈண்டுத் தர்க்கத்தின் சொரூபம் இதுவாம்:—

ஜீவனிடத்துச் சேதனத்தன்மையாகிய ஏதுவை யங்கீகரித்துப் பிரஹ்மாபேதமாகிய சாத்தியத்தை யங்கீகரியாவிடின், சேதனத்திற்கு அத்விதீயத்தன்மையைப் பிரதிபாதிக்கும் சுருதிக்கு விரோத முண்டாகும்.

அநிஷ்டத்தைச் சம்பாதித்தல் தர்க்க மெனப்படும். சுருதியின் விரோதம் சர்வ ஆஸ்திகர்களுக்கும் அநிஷ்டமாம்.

வியாவஹாரிகப் பிரபஞ்சம் மித்தை, ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மையால், யாண்டு யாண்டு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மை யுண்டோ, ஆண்டு ஆண்டு மித்தியாத்துவமுண்டு, இப்பி வெள்ளி முதலியவற்றிற்போல.

ஈண்டு வியாவகாரிகப் பிரபஞ்சம் பக்ஷம்,
மித்தியாத்தன்மை சாத்தியம்,
ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மை ஏது,
இப்பி வெள்ளி முதலியன திருஷ்டாந்தம்.

வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை யென்பது பிரதிஞ்ஞை வாக்கியம்.

ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மையா லென்பது ஏது வாக்கியம்.

யாண்டு யாண்டு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மை யுண்டோ, ஆண்டு ஆண்டு மித்தியாத்துவ முண்டு, இப்பி வெள்ளி முதலியவற்றிற்போலவென்பது உதாகரணவாக்கியம்.

ஈண்டும் பிரபஞ்சத்திற்கு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மையை அங்கீகரித்து மித்தியாத்தன்மையை யங்கீகரியாவிடின் சத்தி (உள்ளது)ற்கு ஞானத்தால் நிவிருத்தி பொருந்தாது. அதனால் ஞானத்தால் சகல பிரபஞ்சமும் நிவிருத்தியாதலைப் பிரதிபாதிக்கும் சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோத முண்டாமென்னும் தர்க்கத்தால் வியபிசார சங்கையின் நிவிருத்தி யுண்டாகின்றது.

31. வேதாந்தத்தில் அநுமானத்தின் பிரயோஜனம்

இவ்வாறு வேதாந்த அர்த்தத்தின் அநுசாரிகளாகிய அநேக அநுமானங்களுள.

ஆனால், வேதாந்த வாக்கியங்களால் அத்துவிதீய பிரஹ்மத்தின் எந்த நிச்சயம் சித்தித்திருக்கின்றதோ, அதன் சம்பாவனை (பொருத்தம்) மாத்திரத்திற்கு ஏது அநுமானப் பிரமாணமாம். சுவதந்திர அநுமானம் பிரஹ்ம நிச்சயத்திற் கேது

வன்று; வேதாந்தவாக்கிய மொழிந்த மற்றைய பிரமாணங்களுக்குப் பிரஹ்மத்திற் பிரவிருத்தி யில்லையென்பது சித்தாந்த மாகலின்.

சுருக்கமாக அநுமானப் பிரமாணம் சொல்லப்பட்டது.

இரண்டாவது பிரகாசம்

அநுமானப்பிரமாண நிருபணம்

முற்றிற்று.

ஓம்

தத் ஸத் ப்ரஹ்மணேநமஃ

மூன்றுவது பிரகாசம்

சப்தப்பிரமாண நிருபணம்

32. சாப்திப்பிரமையின் பேதம்.

சாப்திப் பிரமையின் கரணத்தைச் சப்தப்பிரமாண மென்பர்.

சாப்திப்பிரமை இருவகையாம். ஒன்று வியாவகாரிகம், மற்றொன்று பாரமார்த்திகம்.

வியாவகாரிக சாப்திப் பிரமையும் இருவகையாம். ஒன்று இலௌகிக வாக்கிய ஜந்நியம், மற்றது வைதிக வாக்கிய ஜந்நியம்.

'நீலக்குடம்' என்றல் முதலியன இலௌகிக வாக்கியமும், 'வஜ்ரஹஸ்தன் புரந்தரன்' என்றல் முதலியன வைதிக வாக்கியமுமாம்.

பதங்களின் சமுதாயத்தை வாக்கிய மென்பர்.

பொருளுடைய வர்ணம் (எழுத்து) அல்லது வர்ணசமுதாயம் பத மெனப்படும்.

அகாரமுதலிய வர்ணங்களும் விஷ்ணுமுதலிய பொருளுடையனவா யிருக்கின்றன.

நாராயணன் முதலிய பதங்களில் வர்ணங்களின் சமுதாயம் (கூட்டம்) அர்த்தமுடையதா யிருக்கின்றது.

நீலொவடீ:-நீலம் குடம் என்னும் வாக்கியத்தில் வியாகரணத்தின்படி இரண்டு பதங்க ளுள; நியாயமதத்தின்படி நான்கு பதங்க ளுள.

வியாகரண மதத்திலும் அர்த்தத்தை யறிவிக்குந் தன்மை நான்கு சமுதாயங்களினு முண்டு. பதம் நான்கில்லை.

33. சாப்திப்பிரமையின் தன்மை.

ஆண்டுச் சாப்திப்பிரமையின் தன்மை இதுவாம்:—

நீலம் குடம் என்னும் வாக்கியத்தைக் கேட்டகாலத்துச் சுரோதாவிற்கு (கேட்பவனுக்கு) ச் சகல பதங்களின் சிரவண ஞான முண்டாகின்றது.

பதங்களின் சாக்ஷாத்காரத்தால் பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றது.

சங்கை:— பதங்களின் அநுபவம் பதங்களின் ஸ்மிருதிக்கு ஏதுவாம்;

பதார்த்தங்களின் அநுபவம் பதார்த்தங்களின் ஸ்மிருதிக்கு ஏதுவாம்.

பதங்களின் சாக்ஷாத்காரம் பதார்த்தங்களின் ஸ்மிருதிக்கு ஏதுவாதல் பொருந்தாது.

ஏனெனின், எந்த வஸ்துவின் பூர்வ அநுபவ முளதோ, அதன் ஸ்மிருதி யுண்டாகும். மற்றொன்றின் அநுபவத்தால் மற்றொன்றின் ஸ்மிருதி யுண்டாகாது.

ஆகையால், பதங்களின் ஞானத்தால் பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாதல் பொருந்தாது.

சமாதானம்:— சம்ஸ்காரவாயிலாகப் பதார்த்தங்களின் அநுபவமே பதார்த்தங்களின் ஸ்மிருதிக்கு ஏதுவாம்;

என்றாலும் உற்பூத சம்ஸ்காரங்களால் ஸ்மிருதி யுண்டாகின்றது;

அநுற்பூத சம்ஸ்காரங்களால் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை.

அநுற்பூத சம்ஸ்காரங்களாலும் ஸ்மிருதி யுண்டாகு மாயின், அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் ஸ்மிருதி எப் போது முண்டாதல் வேண்டும்.

ஆண்டுப் பதார்த்தங்களினது சம்ஸ்காரத்தின் உற்புவத் திற்கு ஏது பதஞானமாம்.

ஏனெனின், சம்பந்திகளின் ஞானத்தால் அங்ஙனமே சாதிருசிய பதார்த்தங்களின் ஞானத்தால் அல்லது சிந்தனத் தால் சம்ஸ்காரம் உற்பூத மாகின்றது. அதனுல் ஸ்மிருதி யுண்டாகின்றது.

எங்ஙனம்: புத்திரனைப் பார்த்துப் பிதாவின் ஸ்மிருதியும், பிதாவைப் பார்த்துப் புத்திரனது ஸ்மிருதியு முண்டாகின்றன.

ஆண்டுச் சம்பந்தியின் ஞானம் சம்ஸ்காரங்களின் உற்பவத் திற்குக் காரணமாம்.

அங்ஙனமே, ஓர் தவசியைக் கண்டு முற்கண்ட மற்றோர் தவசியின் ஸ்மிருதி யுண்டாகின்றது. ஆண்டுச் சம்ஸ்காரத்தின் உற்போதகம் (புலப்படச் செய்வது) சதிருச தரிசனமா (ஒப்பு மைக் காட்சியா)ம்.

யாண்டு ஏகாந்தத்தி லுட்கார்ந்துகொண்டு, அநுபவிக்கப் பட்ட பதார்த்தங்களின் சிந்தனம் செய்யுமிடத்து, அதனுல் அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்ற தோ, ஆண்டுச் சம்ஸ்காரங்களின் உற்போதகம் சிந்தனமாம்.

இவ்வாற்றாற் சம்பந்திஞான முதலியன சம்ஸ்காரத்தின் உற்போத (எழுச்சி) வாயிலாக ஸ்மிருதிக்கு ஏதுவாம்.

சம்ஸ்காரத்தின் உற்பத்தி வாயிலாகச் சமான விஷய முடைய பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்கு ஏதுவாம்.

ஆகையால், பதார்த்தங்களின் பூர்வ அநுபவமோ பதார்த் தங்களை விஷயிக்கும் சம்ஸ்காரத்தின் உற்பத்திவாயிலாக ஏது வாம்.

பதார்த்தங்களின் சம்பந்தி பதம்; ஆதலாற் பதார்த்தங்க ளின் சம்பந்திகளாகிய பதங்கள் எவையோ, அவற்றின்

ஞானம் சம்ஸ்காரத்தின் உற்போத வாயிலாகப் பதார்த்தங்க ளின் ஸ்மிருதிக்கு ஏதுவாம்.

ஆகையாற் பதங்களின் ஞானத்தால் பதார்த்தங்களின் ஸ்மிருதி சம்பவிக்கும்.

யாண்டு ஒரு சம்பந்தியின் ஞானத்தால் மற்றொரு சம்பந்தி யின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, ஆண்டு இரண்டு பதார்த்தங் களினது சம்பந்தத்தின் ஞானம் எவனுக் குண்டாகின்றதோ, அவனுக்கு ஒன்றன் ஞானத்தால் மற்றொன்றன் ஸ்மிருதி யுண் டாகும்.

எவனுக்குச் சம்பந்தத்தின் ஞான முண்டாகவில்லையோ, அவனுக்கு ஒன்றன் ஞானத்தால் மற்றொன்றின் ஸ்மிருதி யுண் டாகாது.

எங்ஙனம்: பிதா புத்திரர்களுக்கு ஜந்நிய ஜநகபாவ சம்பந்த முண்டு.

எவனுக்கு ஜந்நிய ஜநகபாவ சம்பந்தத்தின் ஞான முண் டாகின்றதோ, அவனுக்கு ஒருவனது ஞானத்தால் மற்றொருவ னது ஸ்மிருதி யுண்டாகின்றது.

எவனுக்கு ஜந்நிய ஜநக பாவ சம்பந்தத்தின் ஞான முண் டாகவில்லையோ, அவனுக்கு ஒருவனது ஞானத்தால் மற்றொருவ னது ஸ்மிருதி யுண்டாகாது.

அங்ஙனமே, பதத்திற்கும் பொருளிற்குந் தம்மிலுள்ள சம்பந்த மெதுவோ, அதனை விருத்தி யென்பர்.

பதத்திற்கும் அர்த்தத்திற்கு முள்ள விருத்தியாகிய சம் பந்தம் யாதோ அதன் ஞானம் எவனுக் குண்டாகின்றதோ, அவனுக்குப் பதத்தின் ஞானத்தால் அர்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகும்.

பதத்திற்கும் அர்த்தத்திற்கு முள்ள விருத்திரூப சம் பந்தம் எதுவோ, அதன் ஞான மில்லாதவனுக்குப் பதத்தின் ஞானத்தால் அர்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகாது.

ஆதலால், விருத்தியோடு கூடிய பதத்தின் ஞானம் பதார்த் தத்தின் ஸ்மிருதிக்கு ஏதுவாம்.

34. சப்தத்தின் சக்திவிருத்தியைக் கூறுதல்

அந்த விருத்தி சக்தி விருத்தி, இலக்ஷண விருத்தி யென இரண்டு வகையாம்.

நியாயமதத்தில் ஈசுவரனது இச்சையே சக்தியாம்.

மீமாம்ஸை மதத்தில் சக்தி யென்பது ஓர் பின்ன பதார்த்த மாம்.

வியாகரணமதத்திலும் பாதஞ்சலமதத்திலும் வாக்கிய வாசகத் தன்மைக்குக் காரணமான பதத்திற்கும் பொருளிற்குமுள்ள தாதாத்மிய சம்பந்த மெதுவோ அதுவே சக்தியாம்.

விசாரசாகரத்தில் யோக்கியதையாகிய சக்தி வியாகரண மதத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. அது பூஷணகாரர் மதமாம்.

வியாகரணத்தின் மஞ்சூஷா வென்னும் நூலில் யோக பாஷ்யத்தின்படி வாச்சிய வாசகபாவத்திற்கு மூலமாகிய தாதாத்மிய சம்பந்தமே சக்தியெனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அத்வைத சித்தாந்தத்தில் முழுவதும் தனது காரியத்தைச் செய்தலின் சாமர்த்தியமே சக்தியாம்.

எங்ஙனம் தந்துவில் படஞ்செய்தலின் சாமர்த்தியமாகிய சக்தி யிருக்கின்றதோ, எங்ஙனம் வன்னியில் தாகஞ் செய்தலின் சாமர்த்தியமாகிய சக்தி யிருக்கின்றதோ, அங்ஙனமே பதங்களிலுள்ள தமது அர்த்த ஞானத்தின் சாமர்த்தியமே சக்தியாம்.

ஆனல் இத்துணைப் பேத முண்டு:—

வன்னிமுதலிய பதார்த்தங்களிலுள்ள சாமர்த்தியமாகிய சக்திக்கு ஞானத்தின் அபேக்ஷை யில்லை.

சக்தி அறியப்பட்ட தாகுக; அல்லது அறியப்படாத தாகுக.

இரண்டிடங்களிலும் வன்னிமுதலியவற்றால் தாகாதி காரியங்க ளுண்டாகின்றன.

பதத்தினது சக்தியின் ஞான முண்டாகுமாயின், அப்போது அர்த்தத்தின் ஸ்மிருதியாகிய காரிய முண்டாகின்றது.

சக்தியின் ஞான முண்டாகாவிடின், அப்போது அர்த்தத்தின் ஸ்மிருதியாகிய காரிய முண்டாவதில்லை.

ஆகையால், பதத்தின் சாமர்த்தியமாகிய சக்தி அறியப்பட்ட தாகுமாயின் அப்போது பதார்த்தங்களின் ஸ்மிருதியாகிய காரிய முண்டாகின்றது.

சங்கை:— யாண்டு அதீத (கழிந்த) பதத்தின் ஸ்மிருதியுண்டாகின்றதோ, ஆண்டுப் பதத்தின் ஸ்மரணமாகிய ஞானத்தால் அர்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது.

அஃதுண்டாகலாகாது; சாமர்த்தியரூப சக்தியுடைய பதத்தின் துவம்ஸம் (நாசம்) உண்டாய்விட்டமையால் அர்த்தத்தின் ஸ்மிருதிக்கு ஏதுவாகிய பதத்தின் அபாவ மிருத்தலின்.

சமாதானம்:— மீமாம்ஸைமதத்தில் சகல பதங்களும் நித்தியமாம். அவற்றிற்கு உற்பத்தி நாச முண்டாகிறதில்லை. ஆகையால், பதத்திற்குத் துவம்ஸம் பொருந்தாது.

பதங்களை அநித்திய மெனக் கொள்ளின், இது சமாதானமாம்:—

பதார்த்த ஸ்மிருதியின் சாமர்த்தியம் பதத்தி லில்லை. ஆனால், பதஞானத்தில் பதார்த்தத்தினது ஸ்மிருதியின் சக்தியுளது.

யாண்டுப் பதத்தின் துவம்ஸ முண்டாகின்றதோ, ஆண்டும் பதத்தின் ஸ்மரணரூபஞான முண்டு.

யாண்டு வர்த்தமானபத முளதோ, ஆண்டுப் பதத்தின் சிராவண சாக்ஷாத்காரஞான முண்டு. அந்த ஞானத்தில் பதார்த்தத்தினது ஸ்மிருதியின் சாமர்த்திய மிருக்கின்றது. அதுவே சக்தியாம்.

இந்தப் பக்ஷத்தில் சக்தியுடையது பத மன்று; ஆனால், பதத்தின் ஞானமாம்.

இந்தப் பக்ஷம் கதாதர பட்டாசாரியரால் சக்திவாத கிரந்தத்தில் ஞானசக்தி வாதமாக எழுதப்பட்டிருக்கின்றது.

இவ்வாற்ருல் பதத்தின் சாமர்த்தியம் அல்லது பதத்தினது ஞானத்தின் சாமர்த்தியம் சக்தி யெனப்படும்.

இரண்டாவது பக்ஷத்திலும் பதம் சக்தியுடையதாம் என்னும் வியவகார சித்தியின்பொருட்டுப் பதத்தின் தர்மமாகிய சக்தி அபேக்ஷிக்கப்படுவதாயின், எப் பதத்தின் ஞானம் எவ்வர்த்தத்தின் ஸ்மிருதியில் சாமர்த்தியமுடைய தாகின்றதோ, அப் பதத்திற்கு அவ் வர்த்தத்தில் சக்தி சொல்லப்படுகின்றது.

35. சாப்திப்பிரமையின் கிரமபூர்வகமாகச் சத்தியில் விவாதம்

இவ்வாற்ருற் சக்தியோடு கூடிய பதஞானத்தால் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது.

எவ்வளவு பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அவ்வளவு பதார்த்தங்களினது சம்பந்தத்தின் ஞானமாதல், சம்பந்தத்தோடு கூடிய சகல பதார்த்தங்களின் ஞானமாதல் வாக்கியார்த்தஞான மெனப்படும். அதனையே சாப்திப்பிரமை யென்பர்.

'நீலோகடஃ (நீலொவடீஃ)' என்னும் வாக்கியத்தில், 1. நீல பதம், 2. ஓகார பதம், 3. கட பதம், 4. விஸர்க்க பதம் என நான்கு பதங்க ளுள.

(1) நீலரூப விசிஷ்டத்தில் நீலபதத்தின் சக்தியிருக்கின்றது.

(2) ஓகாரபதம் பொருளின்றியதாம். இவ்வார்த்தை வியுத்பத்தி வாதமுதலிய கிரந்தங்களில் ஸ்பஷ்டமாம், அல்லது ஓகார பதத்திற்கு அபேத அர்த்தமாம்.

(3) கடபதத்திற்குக் கடத்தன்மை விசிஷ்டத்தில் சக்தி யுண்டு.

(4) * விசர்க்கத்திற்கு ஒருமை யெண்ணில் சக்தி யிருக்கின்றது.

* விசர்க்கமென்பது சம்ஸ்கிருதத்தில் உயிர்வர்க்கத்தின் ஈற்றிலுள்ள (ஃ) இரண்டு புள்ளி வடிவினது. தமிழில் கரியன் தேவதத்தன் என்னும் வாக்கியத்தைக்கொண்டு, அதனை 'கரிய, ன், தேவதத்த, ன்' என்று நான்கு பதங்களாகப் பிரித்து முடித்துக்கொள்க.

சக்தியின் ஞானம்: கோசம் (நிகண்டு), வியாகரணம் (இலக்கணம்) முதலிய நூல்களா லுண்டாகின்றது.

நீலம் பீதம் (கருமை பொன்மை) முதலிய பதங்களுக்கு வர்ணத்திலும் வர்ணமுடையதன்கண்ணும சக்தி உண்டென்பது கோசத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

விசர்க்கத்திற்கு ஒருமைச் சங்கையில், சக்தி யுண்டென்பது வியாகரணத்தான் அறியப்படுகின்றது.

கடபதத்திற்குக் கடத்தன்மை விசிஷ்டத்தில் சக்தி யுண்டென்பது வியாகரண நூலிலும் சக்திவாதமுதலிய தர்க்க நூல்களிலும் எழுதப்பட்டிருக்கின்றது.

நியாயசூத்திரத்தில் கௌதமரானவர் ஜாதி ஆகிருதி வியக்திகளில் சகல பதங்களுக்கும் சக்தி யுண்டென்று சொல்லியிருக்கின்றார்.

அவயவங்களின் சையோகத்தை ஆகிருதி யென்பர்.

அநேக பதார்த்தங்களி லிருக்கும் நித்தியமாகிய ஒரு தர்மமெதுவோ, அது ஜாதி யெனப்படும்.

அநேக கடங்களிலுள்ள நித்தியமும் ஏகமுமாகிய கடத்தன்மை ஜாதியாம்.

அங்ஙனமே, ஜாதியின் ஆசிரயத்தை வியக்தி யென்பர். இம் மதத்திற் கடபதத்திற்குக் கபால சையோகத்தோடு கூடிய கடத்தன்மை விசிஷ்டகடத்தில் சக்தி யுண்டு.

தீதிதிகாரசிரோமணி பட்டாசாரியர் மதத்தில் சகல பதங்களுக்கும் வியக்திமாத்திரத்திற் சக்தி யுண்டு. ஜாதி ஆகிருதிகளி லில்லை.

இம் மதத்தில் கடபதத்திற்கு வாச்சியம் கேவல வியக்தியாம். கடத்தன்மையும் கபால சையோகமும் கடபதத்திற்கு வாச்சிய மாகா.

ஏனெனின், எப் பதத்திற்கு எப் பொருளின்கண் சக்தி யுண்டோ, அப் பதத்திற்கு அப் பொருள் வாச்சிய மெனப்படும்; சக்கியமென்றும் சொல்லப்படும்.

கேவலவியக்தியில் சக்தி யிருத்தலான் கேவல்வியக்தியே வார்ச்சியமாம்.

சங்கை:—

(1) கடபதத்தின் உச்சாரணத்தால் கடத்தன்மையின் தோற்றமும்,

(2) கோபதத்தின் உச்சாரணத்தால் கோத்தன்மையின் ஞானமும்,

(3) பிராமணபதத்தின் உச்சாரணத்தால் பிராமணத்தன்மையின் ஞானமு முண்டாகின்றன.

அஃது இம்மதத்தி லுண்டாக லாகாது.

ஏனெனின், அவாச்சிய அர்த்தத்தின் ஞானம் இலக்ஷணை யின்றிப் பதத்தா லுண்டாகிறதில்லை.

அவாச்சிய அர்த்தத்தின் ஞானம் இலக்ஷணையின்றிப் பதத்தால் அங்கீகரிக்கின், கடபதத்தின் அவாச்சியமாகிய கடத்தன்மையின் ஞானம் எங்ஙனம் கடபதத்தால் அங்கீகரிக்கப் படுகின்றதோ, அங்ஙனமே கடபதத்திற்கு அவாச்சியமாகிய படமுதலியவற்றின் ஞானமும் கடபதத்தா லுண்டாதல் வேண்டும்.

சமாதானம்:—

வாச்சியத்தின் பிரதீதி பதத்தால் உண்டாகின்றது; அன்றியும், வாச்சியத்தி லிருக்கும் ஜாதி யெதுவோ, அதன் தோற்றமு முண்டாகின்றது.

ஆகலின், இது நியமமாம்:—

ஜாதிக்கு வேறாகிய அவாச்சியத்தின் பிரதீதி யுண்டாகிறதில்லை. வாச்சியத்தின்கணுள்ள ஜாதி எதுவோ, அது அவாச்சியமாகியும் தோற்றுகின்றது.

ஆகையால், கடத்தன்மை முதலியனவோ, அவாச்சியமாகியும் கடமுதலிய பதங்களால் தோற்றுகின்றன; படமுதலிய அவாச்சியம் தோற்றுகிறதில்லை.

சங்கை:—

வாச்சியத்தின்க ணிருக்கும் அவாச்சிய சாதியின் தோற்றம் பதங்களா லங்கீகரிக்கின், கடபதத்தால் பிருதிவித்தன்மைச் சாதியின் தோற்றமு முண்டாதல் வேண்டும்.

ஏனெனின், கடபதத்தின் வாச்சியத்தில் எப்படிக் கடத் தன்மைச் சாதி யிருக்கின்றதோ, அதுபோலப் பிருதிவித்தன் மையு மிருக்கின்றது. ஆதலால், இரண்டும் வாச்சியத்தி லிருப் பனவாயும், அவாச்சியமாயு மிருக்கின்றன.

கடத்தன்மையின் தோற்றம்போலப் பிருதிவித்தன்மை யின் தோற்றமு முண்டாதல் வேண்டும்.

கோபதத்திற்கு வாச்சியமாகிய கோ எதுவோ, அதன்கண் கோத்தன்மையைப்போலப் பசுத்தன்மை (விலங்குத்தன்மை)யு மிருக்கின்றது. ஆதலால், இரண்டும் அவாச்சியமாம்.

அங்ஙனமே பிராமணபதத்தால் பிராமணத்தன்மையைப் போல மனிதத்தன்மையும் தோற்றல்வேண்டும்.

சமாதானம்:—

வாச்சியத்தன்மை யவச்சேதகமான அவாச்சியம் எது வோ, அதன் தோற்றமும் வாச்சியத்தின் தோற்றமும் பதத்தா லுண்டாகின்றன. பிறவற்றின் தோற்ற முண்டாவதில்லை.

எங்ஙனம்: கடபதத்தின் வாச்சியமான கடவியக்தியின் தோற்றமும், வாச்சியத்தன்மை யவச்சேதகமான கடத்தன்மை யின் தோற்றமும் கடபதத்தா லுண்டாகின்றன.

பிருதிவித்தன்மை வாச்சியமு மன்று; வாச்சியத்தன்மை யவச்சேதகமு மன்று. ஆகலின், கடபதத்தால் பிருதிவித்தன் மையின் தோற்ற முண்டாகிறதில்லை.

வாச்சியத்தன்மையினும் குறைந்தவிடத் திருப்பதும் அதிக விடத் திருப்பது மாகாமல், எவ்வளவிடத்தில் வாச்சியத்தன்மை யுளதோ, அவ்வளவிடத்தி லிருப்பது எதுவோ, அது வாச்சியத்தன்மை யவச்சேதக மாம்.

கடபதத்தின் வாச்சியத்தன்மை சகல கடவியக்திகளிலு மிருக்கின்றது.

கடத்தன்மையும் சகல கடவியக்திகளிலு மிருக்கின்றது.

ஆதலால், கடத்தன்மை கடத்தின் வாச்சியத்தன்மையி னும் குறைந்தவிடத்திருப்பதும் அதிகவிடத்திருப்பது மாகா

மல், சமான தேசத்திருப்பதா யிருத்தலால் கடபதத்தின் வாச்சியத்தன்மை யவச்சேதகமாம்.

கடபதத்தின் வாச்சியத்தன்மை படத்தி லில்லை.

பிருதிவித்தன்மை படத்தி லுண்டு.

ஆதலால், அதிகவிடத்திருப்பதா யிருத்தலின் பிருதிவித் தன்மை கடபதத்தின் வாச்சியத்தன்மை யவச்சேதக மன்று.

கோபதத்தின் வாச்சியத்தன்மை சகல கோவியக்திகளினு முண்டு.

கோத்தன்மையும் சகல கோவியக்திகளினு முண்டு.

ஆகலின், கோத்தன்மை கோபதத்தின் வாச்சியத்தன் மை யவச்சேதகமாம்.

அசுவத்தில் கோபதத்தின் வாச்சியத்தன்மை யில்லை. அதன்கண் பசுத்தன்மை யிருக்கின்றது.

ஆதலால், கோபதத்தினது வாச்சியத்தினும் அதிகவிடத் திருப்பதா யிருத்தலான் கோபதத்தின் வாச்சியத்தன்மை யவச்சேதகம் பசுத்துவ மன்று.

அங்ஙனமே பிராமணபதத்தின் வாச்சியத்தன்மை சகல பிராமண வியக்திகளினு முண்டு.

பிராமணத்தன்மையும் சகல பிராமண வியக்திகளினு முண்டு.

ஆகையால், பிராமண பதத்தின் வாச்சியத்தன்மை யவச் சேதகம் பிராமணத்தன்மையாம்.

க்ஷத்திரியர் முதலியோரிடத்துப் பிராமணபதத்தின் வாச் சியத்தன்மை யில்லை. ஆண்டு மனிதத்தன்மை யிருக்கின்றது.

ஆதலால், அதிகவிடத்திருப்பதா யிருத்தலால் பிராமண பதத்தின் வாச்சியத்தன்மை யவச்சேதகம் மனிதத்தன்மை யன்று.

இவ்வாற்றுல் கடமுதலிய பதங்களால் கடத்தன்மை முத லியவற்றின் தோற்ற முண்டாகின்றது

சக்தி யின்மையால், அவை (கடத்தன்மை முதலியன) கட முதலிய பதங்களின் வாச்சியமன்று; ஆனால் வாச்சியத்தன்மை யவச்சேதகமாம்.

இது சிரோமணி பட்டாசாரியரது மதமாம்.

கடமுதலிய பதங்களுக்குச் சாதி மாத்திரத்தில் சக்தி யுண்டு; வியக்தியின்க ணில்லை யென்பது மீமாம்ஸை மதம்.

சங்கை:—

எவ் வர்த்தத்தில் எப் பதத்தினது சக்தியின் ஞான முண்டாகின்றதோ, அவ் வர்த்தத்தின் ஸ்மிருதி அப் பதத்தா லுண்டாகச் சாப்திப்பிரமை யுண்டாகின்றது.

பதத்தின் சக்தியின்றிப் பதத்தால் வியக்தியின் ஸ்மிருதி யும் சாப்திப்பிரமையும் உண்டாகலாகாது.

சமாதானம்:—

சப்தப்பிரமாணத்தினாலோ ஜாதியின் ஞானமே யுண் டாகின்றது. அங்ஙனமாயினும் அருத்தாபத்திப் பிரமாணத் தால் வியக்தியின்ஞான முண்டாகின்றது.

பகலுண்ணாப் புருஷனுக்கு இராத்திரி போஜனமின்றிப் பருமை சம்பவியாததுபோல, வியக்தியின்றிக் கேவல ஜாதியில் ஒரு கிரியையும் சம்பவியாது.

ஆகையால், அர்த்தாபத்திப் பிரமாணத்தால் வியக்தியின் போத முண்டாகின்றது.

"ஆவைக் கொண்டுவா" என்னும் வாச்சியத்தான் கோத் தன்மையினது கொண்டுவருதலின் ஞான முண்டாகின்றது. அது கோவியக்தியின் கொண்டுவருதலையின்றிப் பொருந்தாது.

கோவியக்தியின் கொண்டுவருதலானது சம்பாதகமாம்;

கோத்தன்மையின் கொண்டுவருதலானது சம்பாத்தியமாம்,

சம்பாதக ஞானத்திற்கு ஏதுவாகிய சம்பாத்தியத்தின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மெனப்படும்.

சம்பாதகஞானம் பிரமையாம்.

இவ்விடத்துச் சாதியின் ஞானம் பிரமாணமும், வியக்தி யின் ஞானம் பிரமையுமா மென்பது பட்டமீமாம்ஸகர் மதம்.

ஓர் ஜாதிசக்திவாதி * அநுமானத்தால் வியக்தியின் ஞான த்தை யங்கீகரித்துளன். அது பிற நூல்களில் தெளிவா யுண்டு. கடினப் பிரசங்கத்தான் ஈண்டு எழுதப்படவில்லை.

கேவல ஜாதியில் சக்தியை யங்கீகரிப்பவர் மதத்தில் வியக்தியின் ஞானம் சத்தப்பிரமாணத்தால் உண்டாகிறதில்லை; அர்த்தாபத்தியால் அல்லது அநுமானத்தால் வியக்தியின் ஞான முண்டாகின்றது.

ஆனால், ஓர் நூலாசிரியர் ஜாதியில் குப்ஜசக்தியை யங்கீ கரித்திருக்கின்றனர். அவர் மதத்தில் வியக்தியின் ஞானமும் சப்தப்பிரமாணத்தானே யுண்டாகின்றது. அவர் அபிப்பிராயம் இதுவாம்:—

சகல பதங்களின் சக்தியோ ஜாதிவிசிஷ்ட வியக்தியி லுண்டு.

ஆனால், சக்தியின் ஞானம் எவனுக் குண்டாயிருக்கின்ற தோ, அவனுக்குப் பதத்தால் அர்த்தத்தின் ஸ்மிருதியும் சாப்த போதமு முண்டாகின்றன; பிறனுக்கில்லை.

ஆண்டுக் கடபதத்தின் சக்தி கடத்தன்மையி லுண்டு. இவ் வாற்றான் ஜாதிசக்தியின் ஞானம் பதார்த்தத்தினது ஸ்மிருதிக் கும் சாப்தபோதத்திற்கும் ஏதுவாம்.

வியக்தியில் சக்தியினது ஞானத்தின் உபயோக மில்லை. வியக்தி அநந்தமாகலின் எல்லா வியக்திகளின் ஞானமும் சம்பவியாது.

இக் காரணத்தால் வியக்தியின் சக்தி சொரூபமாகப் பதார் த்தத்தினது ஸ்மிருதிக்கும் சாப்தபோதத்திற்கும் ஏதுவாம். அதன் ஞானம் ஏதுவன்று.

இவ்வாற்றான் கடபதத்திற்குக் கடத்துவ விசிஷ்டத்திற் சக்தி யிருத்தலான் கடபதத்தின் வாச்சியமோ கடத்துவம் கடமென்னு மிரண்டுமாம்.

* அவ் வநுமானம் வருமாறு:—

கடத்தன்மை வியக்தியை யாசிரயித்ததாம்; சாதித்தன்மையால்.

யாது யாது ஜாதியோ அதுஅது வியக்தியை யாசிரயித்ததேயாம்; படத்தன்மைபோல.

ஆதலால், கடபதத்தின் வாச்சியமாகிய கடத்தன்மை கட மென்பவற்றின் சாப்தபோதத்திற்கு ஏது கடத்தன்மையிலுள்ள சக்தியின் ஞானமாம்.

இப் பக்ஷத்தினைக் * குப்ஜசக்திவாத மென்பர். வேறு வகையாற் குப்ஜசக்திவாதம்: கதாதர பட்டாசாரியரால் சக்தி வாதத்தின் ஈற்றில் எழுதப்பட்டிருக்கின்றது. அது கடின மாகலின் ஈண் டெழுதப்படவில்லை.

கடமுதலிய பதங்களால் ஜாதி விசிஷ்ட வியக்தியின் ஞான முண்டாவதுபோல, வியக்தியிலுள்ள ஜாதியின் சமவாய முதலிய சம்பந்தங்களின் ஞானமு முண்டாகின்றது.

ஆதலால், ஜாதி வியக்தி சம்பந்த மென்னும் மூன்றினும் கடமுதலிய பதங்களின் சக்தி யுண்டென்பது கதாதர பட்டாசாரி யர் மதம்.

சகல மதங்களினும் ஜாதிவிசிஷ்ட வியக்தியில் கடமுதலிய பதங்களுக்குச் சக்தி யுண்டு. இம் மதம் அநேக நூலாசிரியர்க ளால் எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால், கடத்தன்மை விசிஷ்டத்தில் கடபதத்தின் சக்தி சொல்லப்பட்டிருக்கின்றது.

36. வாக்கியங்களின் பேதம்

நீலத்தின் அபேதமுடைய ஒரு கட மிருக்கின்ற தென்பது 'நீலக்குடம்' என்னும் வாக்கியத்தின் அர்த்தமாம்.

அங்ஙனமே, 'வஜ்ரஹஸ்தன் புரந்தரன் (வச்சிராயுதத் தைக் கையிலுடையவன் இந்திரன்)' என்பது வைதிக வாக் கியம்.

'நீலக்குடம்' என்னும் வாக்கியத்தில் எங்ஙனம் நீலபதம் விசேஷணத்தை யறிவிப்பதும், கடபதம் விசேஷியத்தை யறிவி ப்பதுமா யிருக்கின்றனவோ, அங்ஙனமே வஜ்ஜிரஹஸ்தன் என் னும் பதம் விசேஷணத்தை யறிவிப்பதும், புரந்தர னென்னும் பதம் விசேஷியத்தை யறிவிப்பதுமாம்.

விசேஷண பதத்தின் ஈற்றிலுள்ள னகரம் பொருளின்றிய தாம், அல்லது அபேதத்தின் பொருட்டாம்.

* குப்ஜம் - வளைவு.

விசேஷிய பதத்தின் ஈற்றிலுள்ள னகரம் ஒருமையை யுணர்த்துதற்பொருட்டாம்.

வஜ்ரஹஸ்தத்தின் அபேதமுடைய ஒரு புரந்தர னுள னென்பது வாக்கியத்தின் அர்த்தம்.

இவ்வாற்ருன் இலௌகிக வைதிக வாக்கியங்களுக்குச் சமானமான தன்மை யுண்டு. ஆனால், வைதிக வாக்கியம் இரு வகையாம்:—

ஒன்று: வியாவகாரிகப்பொருளை யுணர்த்துவது;
மற்றொன்று: பரமார்த்த தத்துவத்தை யறிவிப்பது.

பிரஹ்மத்தின் வேருய யாவும் வியாவகாரிகப்பொருளெனப் படும்;
பிரஹ்மம் பரமார்த்ததத்துவ மெனப்படும்.

பிரஹ்மத்தை யறிவிக்கும் வாக்கியமும், (1) அவாந்தரவாக் கியம், (2) மகாவாக்கியமென இருவகைப்படும். அவற்றுள்

(1) தத்பதார்த்தத்தின் அல்லது துவம்பதார்த்தத்தின் சொரூபத்தை யறிவிப்பது அவாந்திரவாக்கியமாம்.

அது 'சத்திய ஞான அநந்தம் பிரமம்' என்னும் வாக்கியம் தத்பதத்தை யறிவிப்பதும், 'இவன் இருதயத்தினுள் உட்சோதி யாயுள்ள புருஷன்' என்னும் வாக்கியம் துவம்பதத்தின் சொரூ பத்தை யறிவிப்பதுமாதல் போலவாம்.

(2) தத்பதார்த்த துவம்பதார்த்தங்களின் அபேதத்தை அறிவிக்கும் தத்துவமஸி முதலியன மகாவாக்கியமாம்.

37. சத்தத்தின் சக்திவிருத்தி லக்ஷணவிருத்திகளைச் சுருக்காகக்ம கூறுதல்

எப் பொருளில் எப் பதத்தின் விருத்தி யுளதோ, அப் பொருளின் ஞானம் அப் பதத்தா லுண்டாகின்றது.

அவ் விருத்தியும் சக்தி இலக்கணை யென்னும் பேதத்தால் இருவகையாம்.

ஈசுவரனது இச்சையை, அல்லது வாச்சிய வாசிகத்தன்மைச் சம்பந்தமாகிய மூலதாதான்மியத்தை, அல்லது பதார்த்த ஞான வேதுவாகிய சாமர்த்தியத்தைச் சக்தி யென்பர்.

எப் பொருளின்கண் பதத்தின் சக்தி யுண்டாகின்றதோ, அப்பொருள் பதத்தின் சக்கிய மெனப்படும்.

சக்கிய சம்பந்தத்தை இலக்ஷணை யென்பர்.

கங்கையென்னும் பதத்தின் சக்தி பிரவாகத்தின்க ணிருக்கின்றதாகலின், கங்கையென்னும் பதத்தின் சக்கியம் பிரவாகமாம். அதனோடு சையோக சம்பந்தம் தீரத்திற் (கரைக்) குளது.

இவ்வாற்றாற் பதத்திற்குப் பொருளோடுள்ள பரம்பரைச் சம்பந்த மெதுவோ, அது இலக்ஷணையாம். கங்கையென்னும் பதத்திற்குத் தீரத்தோடு பரம்பரைச் சம்பந்த மிருக்கின்றது. அதுவே தீரத்தில் கங்கையென்னும் பதத்திற்கு இலக்ஷணை யெனப்படும்.

ஏனெனின், சாக்ஷாத் சம்பந்த முள்ளதோடுள்ள சம்பந்த மெதுவோ, அது பரம்பரைச் சம்பந்த மெனப்படும்.

கங்கையென்னும் பதத்திற்குச் சக்திரூப சம்பந்தம் பிரவாகத்தோ டுண்டு; அதனோடு சையோகம் தீரத்திற்குண்டு.

ஆகையால், கங்கையெனும் பதத்திற்குத் தீரத்தோடு சுவ (தனது) சக்கிய சையோகரூப பரம்பரைச் சம்பந்த முண்டு. அதுவே இலக்ஷணை யெனப்படும்.

இதனால் இது சித்தித்தது:—எப் பொருளோடு எப் பதத்திற்குச் சக்திரூப சாக்ஷாத் சம்பந்த முண்டாகின்றதோ, அப் பொருள் அப் பதத்தின் சக்கிய மெனப்படும்.

எப் பொருளோடு எப் பதத்தினது சக்கியத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, அப் பொருள் அப் பதத்தின் இலக்ஷிய மெனப்படும்.

கங்கையென்னும் பதத்தின் சக்கியமாகிய பிரவாக மெதுவோ, அதற்குத் தீரமாகிய பொருளோடு சையோகசம்பந்த மிருக்

இன்றது. ஆதலால், கங்கையென்னும் பதத்திற்குச் சக்தியம் பிரவாகமும், இலக்ஷியம் தீரமுமாம்.

இவ்வாற்றாற் பதத்தின் சாக்ஷாத் சம்பந்தமும் பரம்பரைச் சம்பந்தமுமாகிய சக்தி யிலக்கணைகளின் பேதத்தால் விருத்தி யிருவகைப்படும்.

எப் பதத்தின் விருத்தி எப் புருஷனுக்கு அறியப்படாததா யிருக்கின்றதோ, அப் பதத்தின் சாக்ஷாத்காரம் அப் புருஷ னுக் குண்டாகியும் பதார்த்தத்தின் ஸ்மிருதியும் சாப்தபோதமு முண்டாகிறதில்லை.

ஆதலால், சக்தி யிலக்கணை யென்னும் விருத்திகளின் ஞானம் பதார்த்த ஸ்மிருதிக்கும் சாப்தபோதத்திற்கும் ஏது வாம்.

38. வாக்கியார்த்த ஞானத்தின் கிரமம்.

சாப்த போதத்தின் கிரமம் இதுவாம்:—எந்தப் புருஷனுக்குப் பதத்தின் விருத்தி அறியப்பட்டதாகின்றதோ, அந்தப் புருஷ னுக்கு வாக்கியத்தினது சகல பதங்களின் சாக்ஷாத்காரமு முண்டாகின்றது.

எப் பதத்தின் விருத்தி எப் பொருளில் முன் அறியப்பட்ட தாயிருக்குமோ, அப் பதத்தான் அப் பொருளின் ஸ்மிருதி யுண் டாகின்றது.

அதன்பின் ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சகல பதார்த்தங்களின் ஞானமாகிய, அல்லது சகல பதார்த்தங்களின் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்த ஞானமாகிய வாக்கியார்த்த ஞான முண்டாகின்றது.

எங்ஙனம்: 'நீ ஆவைக் கொண்டுவா' என்னும் வாக்கியத் தில் ஆமுதலிய பதங்களெவையோ, அவற்றிற்குத் தமது பொருளில் விருத்தியின் இவ்வியல்பினதாய் ஞானம் முதலிற் புருஷனுக் குண்டாதல் வேண்டும்.

ஆவென்னும் பதத்திற்கு ஆத்தன்மை விசிஷ்ட பசு விசேஷ (விலங்கின் பேத)த்தில் சக்தி யுண்டு.

இரண்டாம் வேற்றுமைக்குச் செயப்படுபொருண்மையிற் சக்தியாம்,

கொண்டுவருதலிற் கொண்டுவா வென்னும் பதத்திற்குச் சக்தியாம்,

ஆய் விகுதி புணர்ந்து கெட்ட வா வென்னும் பதத்திற்கு வினையினும் ஏவற்கண்ணும் சாதியாம்.

சம்போதன யோகசேதனத்தில் (விளித்தலின் சம்பந்தத்தையுடைய உயர்திணையில்) நீ யென்னும் பதத்திற்குச் சக்தி யிருக்கின்றது.

இவ்வாற்ருல் சக்திஞான முடையவனுக்கு நீ ஆவைக் கொண்டுவா' என்னும் வாக்கியத்திற்குச் சுரோத்திரத்தோடு சம்பந்த முண்டாகவே, ஆ முதலிய சகல பதங்களின் சாக்ஷாத்காரமு முண்டாய் அதனுல் அப் பதங்களினது சக்கியார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது.

யானைப்பாகனது ஞானத்தால் அவன் சம்பந்தமுடைய யானையின் ஸ்மிருதி யுண்டாதல்போலப், பதங்களின் ஞானத்தால் அவற்றின் சம்பந்தமுடைய சக்கியார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றது.

'இவன் யானைப்பாகன்' என்று யானைக்கும் மாவுத்தனுக்குமுள்ள சம்பந்தத்தின் ஞானம் எவனுக்குண்டாகாமல் 'மனிதன்' என்னும் ஞான முண்டாகின்றதோ, அவனுக்கு யானைப் பாகனைக் கண்டுழியும் யானையின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை.

அதுபோல, இப் பதத்திற்கு இது சக்கியமாம், அல்லது இலக்கியமாமெனச் சக்தி யல்லது இலக்கணையாகிய சம்பந்தத்தின் பூர்வஞானம் எவனுக்குண்டாகாமல், அறியப்படாத பொருளினையுடைய பதத்தின் சிராவண சாக்ஷாத்காரம் (செவியுணர்வு) உண்டாகின்றதோ, அவனுக்குப் பதங்களின் சிரவணத்தாலும் அர்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை.

ஆகலின், விருத்தியோடு கூடிய பதத்தின் ஞானம் பதார்த்த ஸ்மிருதிக்கு ஏதுவாம்; கேவல பதத்தின் ஞானம் ஏதுவன்று.

பதங்களின் ஞானத்தால் சகலபதார்த்தங்களின் ஸ்மிருதியுமுண்டாய்ச் சகல பதார்த்தங்களின் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்த மின்றிய ஞான முண்டாகின்றது. அல்லது, பதங்களின் ஞானத்தால் ஒன்றற்கொன்று சம்பந்தமுள்ள எப் பதார்த்தங்களின் ஸ்மரண முண்டாயிருக்கின்றதோ, ஒன்றற்கொன்று சம்பந்தத்தோடு கூடிய அப் பதார்த்தங்களின் ஞான முண்டாகின்றது.

அந்தப் பதார்த்தங்களின் சம்பந்தத்தின் ஞானம், அல்லது சம்பந்தத்தோடு கூடிய பதார்த்தங்களின் ஞானம் வாக்கியார்த்த ஞான மெனப்படும்; சாப்திப்பிரமை யென்றும் சொல்லப்படும்.

'ஆவைக் கொண்டுவா நீ' என்னும் வாக்கியத்தில் ஆ என்னும் பதப்பொருட்கு இரண்டாம் வேற்றுமைப்பொருளாகிய செயப்படுபொருண்மையில் ஆதேயத்தன்மைச் சம்பந்த முண்டு.

ஆதேயத்தன்மையினை விருத்தித்துவம் (விருத்தித்தன்மை) என்பர்.

'கொண்டுவர்' என்பதின் பொருளாகிய கொணர்தலிற் செயப்படுபொருண்மையை நிரூபிக்குந் தன்மைச் சம்பந்த முண்டு.

வாவென்பதற்கு வினை, ஏவலென இரண்டு பொருளுண்டு.

ஆண்டு வினையிற் கொணர்தலின் அநுகூலத்தன்மைச் சம்பந்த முண்டு.

வினைக்கு நீ யென்னும் பதப்பொருளில் ஆசிரயத்தன்மைச் சம்பந்தமும், ஏவற்கு நீ யென்னும் பதப்பொருளில் விடயத்தன்மைச் சம்பந்தமு முண்டு.

ஆகலின் "ஆவின்கணிருக்கும் செயப்படுபொருண்மையை நிரூபிக்கும் கொணர்தலான அநுகூல வினையின் ஆசிரயமாகிய பிரேரணை (ஏவலின்) விஷயம் நீ யென்னும் பதப்பொருளாம்" என்னும் ஞானவாக்கியம் சுரோதாவிற் குண்டாகின்றது.

ஆண்டு விருத்தி விசிஷ்ட சகல பதங்களின் ஞானமும் சத்தப்பிரமாணமாம்; பதங்களின் ஞானத்தாலுண்டாகும் அவற்

றினது அர்த்தத்தின் ஸ்மிருதி வியாபாரமாம்; வாக்கியார்த்த ஞானம் பயனும்.

இவ்வாற்றான் இலௌகிக வைதிக வாக்கியங்களால் அநேக விடங்களில் பதார்த்தங்களினது சம்பந்தத்தின் அல்லது சம் பந்தத்தோடுகூடிய பதார்த்தங்களின் ஞானமே பயனாகின்றது.

என்றாலும், துவம்பதார்த்தத்தின் சம்பந்தியாகிய தத்பதார்த்தத்தின் ஞானமும், தத்பதார்த்தத்தின் சம்பந்தியாகிய துவம் பதார்த்தத்தின் ஞானமும் மகாவாக்கியங்களால் அங்கீகரிக்கின், "இப் புருஷன் அசங்கனே" என்றல் முதலிய சுருதி வாக்கியங்க லால் வேதாந்தப் பிரதிபர்த்திய (உபநிடதங்களாற் சொல்லப் படும்) பிரஹ்மத்திற்கு அசங்கத்தன்மை சொல்லப்படுகின்றமை யால் அதற்குப் பாத முண்டாகின்றது.

ஆதலால், மகாவாக்கியங்களாற் சொல்லப்படுவது அகண்ட பிரஹ்மமாம்.

வாக்கியங்கள் அகண்டார்த்தத்தை யறிவிப்பனவா மென்ப தில் திருஷ்டாந்தம் சம்க்ஷேபசாரீரகத்தில் ஸ்பஷ்டமாம்; விரி வஞ்சி யெழுதப்படவில்லை.

39. இலக்ஷணையின் றன்மை

மகா வாக்கியங்களில் இலக்கணையின் கிரமம் விசாரசாகரத் தில் எழுதப்பட்டிருக்கின்றது. அதனைத் தெரிந்துகொள்க.

பதத்தின் சக்கியத்தோடுள்ள சம்பந்தத்தினை இலக்ஷணை யென்பர்.

ஆதலால், பதத்திற்குப் பாரம்பரைச் சப்பர்சயாகியல க்ஷணை யிருக்கின்றது. ஏனெனின், பதத்தின் சாக்ஷாத் சம்பந் தம் சக்கியத்தோ டுண்டாகின்றது.

அச் சக்கியத்தின் சம்பந்தம் இலக்ஷணையோ டுண்டாகின் றது; ஆதலால், சக்கியவாயிலாகப் பதத்திற்குச் சம்பந்த மிருத்தலான் பாரம்பரைச் சம்பந்தமாகிய இலக்ஷணாவிருத்தி யுண்டு.

இக் காரணத்தானே நூலாசிரியர்கள் இலக்ஷணுவிருத்தியினை * ஜகந்நிய மெனக் கூறியிருக்கின்றனர்.

யாண்டுப் பதத்திற்குச் சாக்ஷாத் சம்பந்தமாகிய சக்திவிருத்தி சம்பவிக்கவில்லையோ, ஆண்டுப் பரம்பரைச் சம்பந்தமாகிய இலக்ஷணுவிருத்தி அங்கீகரிக்கப்படும்.

இக் காரணத்தானே நூலாசிரியர்கள், யாண்டுச் சக்கியார்த்தத்தில் சொல்லுவோனது தாற்பரியஞ் சம்பவிக்கவில்லையோ, ஆண்டு இலக்ஷணுவிருத்தியை யங்கீகரித்துப் பதத்தினிலக்ஷியப் பொருளை யங்கீகரித்தல் தகுதியாம்.

யாண்டுச் சக்கியார்த்தத்தில் உரைப்போனது தாற்பரியம் சம்பவிக்கின்றதோ, ஆண்டு இலக்ஷியப்பொருளை யங்கீகரித்தல் தகுதி யன்றென்று எழுதியிருக்கின்றார்கள்.

அவ் விலக்ஷணை: (1) கேவல லக்ஷணை, (2) இலக்ஷித இலக்ஷணை யென்னும் பேதத்தால் இருவகையாம்.

பதத்திற்குச் சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்த முண்டாகுமாயின் அதனைக் கேவல லக்ஷணை யென்பர்.

கங்கையென்னும் பதத்திற்குக் கரையினிடத்து இலக்ஷணையுண்டாகின்றது. ஆண்டுக் கங்கையென்னும் பதத்தின் சக்கியமாகிய பிரவாகம் எதுவோ அதற்குக் கரையோடுள்ள சாக்ஷாத் சம்பந்தம் யோகமாம் (அவயவசக்தியாம்) ஆகலின் கங்கையென்னும் பதத்திற்குக் கரையினிடத்துக் கேவல இலக்ஷணையாம்.

இலக்ஷித லக்ஷணையின் உதாகரணம் இதுவாம்:—

† "துவிரேபம் ஒலிக்கின்றது" என்னும் வாக்கியத்திற்கு "இரண்டு ரேபங்கள் (ரகரங்கள்) ஒலிக்கின்றன" என்னும் பொருள் பதங்களின் சக்தியாற் றோன்றுகின்றது அவ் வெழுத்து வடிவான ரேபத்தில் ஒலித்தல் சம்பவியாது.

* ஜகந்நியம் - தாழ்ந்தது.

† துவிரேபம் என்பது இரண்டு ரகாரங்களையுடைய பதத்தின் பொருளாம். இரண்டு ரகாரங்களையுடைய பதம் பிரமரம்; அதன் பொருள் வண்டு.

ஆதலால், சக்கியார்த்தத்தில் உரைப்பவனுக்குத் தாற்பரிய மில்லை. ஆனால், இரண்டு ரேபங்களையுடைய பிரமரபதம் எதுவோ அதன் சக்கியத்தின்கண்ணே ரேப பதத்திற்கு இலக்ஷணையாம், கேவலலக்ஷணையோ வன்று.

ஏனெனின், எப் பொருளில் பதத்தினது சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்த முண்டாகின்றதோ, அதன்கண் கேவல லக்ஷணை யுண்டாகின்றது. துவிரேப பதத்தின் சக்கியம் இரண்டு ரேபமாம். அவற்றின் அவயவித்தன்மைச் சம்பந்தம் பிரமரபதத்தி லுளது. அப் பதத்தின் சக்திரூபசம்பந்தம் தனது வாச்சியமாகிய வண்டில் இருக்கின்றது.

ஆதலால், சக்கிய சம்பந்தியாகிய பிரமரபதம் எதுவோ அதன் சம்பந்த மிருத்தலால் சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்த மிருக்கின்றது; ஆகலின், இலக்ஷிதலக்ஷணை யாம்.

இரண்டு ரேபங்களைத் துவிரேபமென்று கூறுவதில்லை. இரண்டு ரேபங்களுடையதனைத் துவிரேபமென்பர். இரண்டு ரேப முடையது பிரமரபதமாம்.

ஆகலின், துவிரேபபதத்தின் சக்கியமாகிய பிரமரபத மெதுவோ, அதற்கு வண்டினோடு சாக்ஷாத் சம்பந்த மிருத்தலால் கேவல லக்ஷணை சம்பவிக்கின்றது.

என்றாலும், வியாகரணமதத்தில் அது சமாசத்தின் (* தொகைச்சொல்லின்) சக்தியாமாகலின் துவிரேப பதத்தின் சக்கியம் இரண்டு ரேபங்களையுடைய பிரமரபதமாம்.

நியாயவைசேஷிகர் முதலியோர் மதத்தில் சமாச சமுதாயத்திற்கு (தொகைச்சொற் றொகுதிக்கு)ச் சக்தி யங்கீகரிப்பதில்லை.

ஆனால், சமாச சமுதாயத்தின் அவயவங்க ளெவையோ, அவற்றிற்கு இலக்ஷணாவிருத்தியினால் அதிக அர்த்தம் சமாசத்தின்கண் தோற்றுகின்றது.

எங்ஙனம்: 'துவிரேபம்' என்னும் இவ்வளவும் சமாச சமுதாயமாம். அதற்கு எப் பொருளினும் சக்தி யில்லை. ஆண்டுத்

* துவிரேபம் என்பது தேன்மொழியினைப்போல அன்மொழித் தொகைச்சொல்.

துவித்துவ (இருமைச்) சங்கை விசிஷ்டம் துவிபதத்தின் அர்த்த மாம். ரேபத்தன்மைச் சாதி விசிஷ்ட அக்ஷரம் ரேபபதத்தின் பொருளாம்.

துவிபதத்தின் சக்கியத்திற்கும் ரேபபதத்தின் சக்கியத் திற்கு முள்ள அபேதசம்பந்தம் வாக்கியார்த்த மாகுமாயின், துவித்துவ சங்கையுடையன ரேபங்களா மென்னும் அர்த்தமே சக்கியமாம்.

துவிரேபமுடைய பதத்தினைத் துவிரேப மென்பர். அஃது இலக்ஷணுவிருத்தியை யங்கீகரித்துக் கூறுகின்றனர். ஆனால், இத்துணைப் பேத முண்டு:

நியாய வைசேஷிகமதத்தில் வாக்கியத்திற்கு இலக்ஷணை யங் கீகரிப்பதில்லை. ஏனெனின், சக்கிய சம்பந்தத்தை இலக்ஷணை யென்பர்.

பதசமுதாய வடிவினதாகிய வாக்கியத்திற்கு எப்பொருளி னும் சக்தி யில்லை. ஆதலால், வாக்கியத்தினது சக்கியத்தின் அபாவ மிருத்தலான் சக்கிய சம்பந்தமாகிய இலக்ஷணை வாக்கி யத்திற்குப் பொருந்தாது. பதத்திற்கு இலக்ஷணை யுண்டென் னும் மதத்தில் இரேப பதத்திற்கு இரேபமுடையதன்கண் இல க்ஷணையாம்.

மீமாம்ஸைமதத்தினும், அங்ஙனமே வேதாந்த மதத்தினும் வாக்கியத்திற்கும் இலக்ஷணை யங்கீகரித்துளர்.

வாக்கியத்தி னிலக்ஷணையில் எத்தோஷம் சொல்லப்பட் டிருக்கின்றதோ, அதற்கிது சமாதானமாம்:—

பத சமுதாயத்தினை வாக்கிய மென்பர். அச் சமுதாயம் ஒவ் வோர் பதத்தினும் வேறன்று. ஆதலாற் பதங்களின் சக்கியமே வாக்கியத்தின் சக்கியமாம். அல்லது, சக்கிய சம்பந்தம் இல க்ஷணை யன்று; போத்திய (அறியப்படுதற்) சம்பந்தம் இலக்ஷ ணையா மென்பர்.

பதத்தின் சக்கியத்தன்மை சக்திவிருத்தியா லறியப்படுவ தாதல்போல ஒன்றற்கொன்று சம்பந்தத்தோடு கூடிய பதார் த்த வடிவ, அல்லது பதார்த்தங்களின் சம்பந்த வடிவ வாக்கி யார்த்தம் வாக்கியத்தால் அறியப்படுவதாம்.

ஆதலால், பதத்தா னறியப்படும் சம்பந்தமாகிய இலக்ஷணை எங்ஙனம் பதத்திற்குளதோ, அங்ஙனமே வாக்கியத்தா னறியப் படும் சம்பந்தமாகிய இலக்ஷணை வாக்கியத்திற்கு முண்டென் னும் மதத்தில் துவிரேப சமுதாயத்திற்கு இரண்டு ரேபமுடைய பதத்தின்கண் இலக்ஷணையாம்.

இவ்வாற்ருன் துவிரேப பதத்தான் இலக்ஷித (இலக்ஷிக்கப் பட்ட) பிரமர பதத்திற்கு வண்டினிடத்து இலக்ஷணை யிருத்த லான் இலக்ஷித இலக்ஷணை யெனப்படும். அதுவும் இலக்ஷணை யினு ளடங்கியதேயாம்.

ஏனெனின், துவிரேப பதத்தின் சக்கியமாகிய இரண்டு ரேபங்களுக்குப் பிரமர பதத்தோடு சாக்ஷாத் சம்பந்தமும், பிர மரமாகிய வண்டோடு பிரமர பதவாயிலாகப் பரம்பரைச் சம் பந்தமு மிருக்கின்றன வாகலின், சக்கிய சம்பந்தமாகிய இல க்ஷணையினும் இலக்ஷித லக்ஷணை வேறன்று.

வியாகரண மதத்தில் துவிரேப பதத்தின் சக்கியம் இர ண்டு ரேபங்களையுடைய பிரமரபதமாம். அதற்கு வண்டோடு சாக்ஷாத் சம்பந்த முண்டு.

ஆகலின், இவ் வுதாரணம் இலக்ஷித லக்ஷணையினதன்று; கேவல இலக்ஷணை யினதாம்.

இம் மதத்தில் இலக்ஷித லக்ஷணையின் உதாரணம் 'சிங்கம் தேவதத்தன்' என்றல் முதலியனவாம்.

ஈண்டுச் 'சிங்கத்தோ டபின்னன் தேவதத்தன்' என்னும் வாக்கியார்த்தம் பதங்களின் சக்திவிருத்தியாற் றோன்றுகின் றது; அது சம்பவியாது.

ஏனெனின், பசுத்தன்மைச் சாதியும் மனிதத்தன்மைச் சாதியும் ஒன்றற்கொன்று விருத்தமாம்; ஒன்றினிடத்துச் சம் பவியா.

ஆகலின், சிங்க மென்னும் சொல்லிற்குச் சூரத்தன்மை குரூரத்தன்மைத் தர்மமுடைய புருஷனிடத்து இலக்ஷணையாம்.

அப் புருடனோடு சிங்கமாகிய சக்கியத்திற்குச் சாக்ஷாத் சம்பந்த மின்மையால் கேவல லக்ஷணையோ இல்லை.

ஆனால், சூரத்தன்மை முதலியவற்றோடு சிங்க சத்தத்தின் சக்கியத்திற்கு ஆதேயத்தன்மைச் சம்பந்த முளது.

சக்கிய சம்பந்தியாகிய சூரத்தன்மை முதலியவற்றிற்குப் புருஷனிடத்து ஆசிரயத்தன்மைச் சம்பந்த முண்டு.

ஆனால், சிங்கத்தின் சூரத்தன்மைக்கும் புருஷனது சூரத் தன்மைக்கும் அபேதம் அங்கீகரிக்கின் சிங்கத்தின் சூரத்தன் மைக்குத் தேவதத்தனிடத்து அதிகரணத்தன்மையின் சம்பந்த மாம்.

இரண்டு சூரத்தன்மைகளுக்கும் ஒன்றற்கொன்று பேத மங்கீகரிக்கின், சிங்கத்தினது சூரத்தன்மைக்குப் புருஷனிடத் துத் தன்னினமுள்ள சூரத்தன்மையின் அதிகரணத்தன்மைச் சம்பந்த முண்டு.

சிங்கத்தின் சூரத்தன்மை தானென்னும் சொல்லிற்குப் பொருளாம்.

இவ்வாற்றான் வாக்கியத்திற்குப் பரம்பரைச் சம்பந்த மிருத்தலான், சிங்க சத்தத்திற்குச் சூரத்தன்மைமுதலிய குண விசிஷ்டனிடத்து இலக்ஷித லக்ஷணையாம்.

சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்தத்தினை இலக்ஷிதலக்ஷணை யென்பர்.

இலக்ஷித லக்ஷணையென்னும் சொல்லால் முற்கூறிய பொருளின் சித்தி (பெறுதி) கிலேசமுடையதாம்; ஏனெனின், இலக்ஷித லக்ஷணையெனுஞ் சொல்லின் * ரூடியோ சக்கியத்தின்

* ரூடி (இடுகுறி) யென்பது பதத்தின் சமுதாய சக்தி (பொது வாற்றல்.) அவ்வாற்றலுடைய பதங்கள் மரம், நிலம் என்பனவாம்.

யோகம் (காரணம்) என்பது பதத்தின் அவயவங்களில் (சொல்லின் பகுதி விகுதி முதலிய வுறுப்புகளில்)உள்ள சக்தியாம். அவ்வாற்றலுடைய பதங்கள் அணி, முடி முதலியனவாம்.

யோகப்பொருளிலிருக்கும் ரூடிசக்தி யோகரூடி (காரண இடுகுறி) யாம். இவ் வாற்றலுடைய பதங்கள் பங்கயம் முக்கண்ணன் முதலியனவாம். யோகப்பொருளினும் வேறாய பொருளிலிருக்கும் ரூடிசக்தி யௌகிகரூடிசத்தியாம். அவ்வாற்றலுடைய பதம் உற்பிதம் முதலியன. உற்பிதமென்னும் பதத்திற்கு யோகப்பொருள் பிளந்துகொண்டு வரும் மரம் கொடி முதலியன; ரூடிப்பொருள் ஓர் யாகம்.

பாரம்பரைச் சம்பந்தத்தால் கோசம் (நிகண்டு) முதலியவற்றில் ஓரிடத்து மில்லை.

யோகவிருத்தியால் இலக்ஷணையென்னும் சொல்லிற்கு முற்கூறிய பொருள் தோற்றுகிறதில்லை.

ஏனெனின், இலக்ஷிதத்தின் இலக்ஷணை இலக்ஷித இலக்ஷணையென் றிவ்வாறு ஆறும் வேற்றுமைத்தொகையாகச் செய்யின் இலக்ஷிதம் அதாவது இலக்ஷணாவிருத்தியாற் றோன்றிய தெதுவோ, அதன் இலக்ஷணை யென்பது இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லிற்குப் பொருளாகச் சித்திக்கின்றது.

துவிரேபம் ஒலிக்கின்றது, சிங்கம் தேவதத்தன் என்றல் முதலியனவாகச் சொல்லப்பட்ட இலக்ஷித லக்ஷணையின் உதாகரண மெதுவோ, அதில் முற்கூறிய சொரூபமுள்ள இலக்ஷித லக்ஷணை சம்பவியாது.

ஏனெனின், 'துவிரேபம் ஒலிக்கின்றது' என்னும் வாக்கியத்தில் துவிரேப பதத்தால் பிரமரபதம் இலக்ஷித மாகின்றது. அதற்கு வண்டினிடத்து இலக்ஷணை யுண்டாகுமாயின், முற்கூறிய அர்த்தம் சம்பவிக்கும். அவ் விரண்டு வார்த்தையு மில்லை.

ஏனெனின், துவிரேப பதத்தினது சக்கியத்தின் சம்பந்தம் பிரமரபதத்தோ டுளதாயினும் துவிரேப பதத்தால் இலக்ஷிதம் பிரமர பதமன்று.

ஏனெனின், சொல்லுவானது கருத்திற்கு விடயமாகும் சக்கிய சம்பந்தி இலக்ஷிதமாம்; கேவல சக்கிய சம்பந்தி இலக்ஷித மன்று.

கேவல சக்கிய சம்பந்தி இலக்ஷிதமாயின், கங்கை யென்னும் பதத்தினது சக்கியத்தின் சம்பந்திகள் மீனமுதலிய அநேகமுள; அவை யாவுமே கங்கை யென்னும் பதத்தால் இலக்ஷிதமாதல் வேண்டும். ஆதலால், சொல்லுவான் குறிப்பிற்கு விடயமாகும் சக்கியசம்பந்தி இலக்ஷிதமாம்.

கங்கையென்னும் பதத்தின் சக்கிய சம்பந்தியோ அநேகமாம். என்றாலும் 'கங்கையில் இடைச்சேரி' என்னும் வாக்கியத்

தில் கேட்பவனுக்குக் கங்கையென்னும் சொல்லால் கரையின் ஞான முண்டாகின்றது.

இவ்வாறு கருத்திற்கு விடயமாகும் சக்கிய சம்பந்தி கேவலம் கரையாம். ஆகலின், கங்கையென்னும் பதத்தால் கரையே இலக்ஷிதமாம்.

மீன முதலியனவும் சக்கிய சம்பந்திகளா யிருக்கினும், முற்கூறிய கருத்திற்கு விடயமாதலில்லை யாகலின், கங்கையென்னும் பதத்தால் இலக்ஷித மாகா.

இவ்வாற்றான் துவிரேப பதத்திற்குச் சக்கியத்தின் சம்பந்தியோ பிரமரபதமாம். ஆனால், துவிரேப பதத்தால் பிரமரபதத்தின் ஞானம் கேட்பவனுக் குண்டாதல் வேண்டுமென்பது சொல்லுவான் கருத்தன்று.

ஆனால், துவிரேப பதத்தால் பிரமர பதத்தின் சக்கியமாகிய வண்டின் ஞானம் கேட்பவனுக் குண்டாதல் வேண்டுமென்பது சொல்லுவோனது கருத்தாம்.

ஆதலால், துவிரேப பதத்தினது சக்கியத்தின் சம்பந்தியும் பிரமரபதமாம். சொல்லுவோனது முற்கூறிய கருத்திற்கு விடயமாத வின்மையால் துவிரேப பதத்தால் இலக்ஷிதம் பிரமர பதமன்று.

ஒருவாற்றால் துவிரேப பதத்தால் இலக்ஷிதம் பிரமரபதமா மென்னும் வார்த்தையினை அங்கீகரித்துக் கொள்வோமாயினும் பிரமரபதத்திற்கு வண்டின்கண் சத்தி யிருக்கின்றதாகலின் அதற்கு இலக்ஷணை கூறுதல் அசங்கதமாம்.

இவ்வாற்றான் 'இலக்ஷிதமாகிய பிரமரபதத்தினது இலக்ஷணை இலக்ஷித லக்ஷணையாம்' என்றிவ்வாறு ஆறும்வேற்றுமைத் தொகையின் பொருள் முற்கூறிய உதாரணத்திற் சம்பவியாது.

அங்ஙனமே 'சிங்கம் தேவதத்தன்' என்னும் உதாரணத்தினும் முற்கூறிய அர்த்தம் சம்பவியாது.

சிங்கத்தின்கணுள்ள சூரத்தன்மை முதலியன சிங்கசத்தத்தினது சக்கிய சம்பந்திகளா யிருக்கினும், சிங்க சத்தத்தால்

சூரத்தன்மை முதலியவற்றின் ஞானம் கேட்பவனுக் குண்டா தல் வேண்டு மென்பது சொல்லுவோனது கருத்தன்று.

ஆனால், சிங்க சத்தத்தால் சிங்கத்தையொத்த புருஷனது போதம் கேட்பவனுக் குண்டாக வேண்டுமென்பது சொல்லுவானது கருத்தாம்.

ஆதலால், சக்கிய சம்பந்தியாயினும் சூரத்தன்மை முதலிய குணங்கள் முற்கூறிய கருத்திற்கு விடயமாகாதிருத்தலின், சிங்க சத்தத்தால் இலக்ஷித மன்று.

அன்றியும், ஒருவாற்றால் சிங்க சத்தத்தால் இலக்ஷிதமாம் சூரத்தன்மை முதலிய குணங்களென்பதை ஒப்புக்கொள்ளுவோ மாயினும் அவற்றிற்கு இலக்ஷணை கூறுதல் விருத்தமாம்.

ஏனெனின், சக்தியும் இலக்ஷணையும் எழுத்துவடிவமான சத்தத்தினவாம்.

சூரத்தன்மைமுதலிய குணங்கள் சத்தரூபமன்று. ஆதலால், அவற்றிற்குச் சக்தி அல்லது இலக்ஷணை பொருந்தாது.

இவ்வாற்றான் "இலக்ஷிதமாகிய பிரமர பதத்தின் இலக்ஷணை இலக்ஷித லக்ஷணையாம்" "இலக்ஷிதமாகிய சூரத்தன்மை முதலிய குணசமுதாயத்தின் இலக்ஷணை இலக்ஷித லக்ஷணையாம்" என்னும் இவ்வகையான பொருள் ஆறும் வேற்றுமைத் தொகையை யங்கீகரித்தலா லுண்டாகின்றது.

இவ் வர்த்தத்தில் சக்கியத்தினது பரம்பரைச் சம்பந்தத்தின் ஞானம் இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லா லுண்டாகிறதில்லை.

முற்கூறிய உதாரணங்க ளிரண்டினும் சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்தமோ வண்டினிடத்தும் புருஷனிடத்துமாம்.

முற்கூறியவண்ணம் இலக்ஷித இலக்ஷணை யென்னும் சொல்லிற்கு * யோகப்பொருள் சம்பவியாது.

என்றாலும், இனிக் கூறப்படும் வகையான் இலக்ஷித லக்ஷணை யென்னுஞ் சொல்லின் யோகப்பொருள் ஆறும்வேற்று

* அவயவ ஆற்றலா லுணரப்படும் பொருளினை யோகப்பொருளென்பர்.

மைத்தொகையை யங்கீகரித்துச் சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்தமாகவே சம்பவிக்கின்றது.

சொல்லுவானது கருத்திற்கு விடயமாகும் சக்கிய சம்பந்தி இலக்ஷித சப்தத்திற்குப் பொருளா மாயினும், பாகத்தியாக லக்ஷணையினுல் சொல்லுவானது கருத்திற்கு விடயமாதலென்னும் இத்துணைப் பாகத்தை விட்டு நின்ற சக்கிய சம்பந்தி ஈண்டு இலக்ஷித சத்தத்திற்குப் பொருளாம்.

அங்ஙனமே இலக்ஷணையென்னும் சொல்லின் பொருளும் சக்கிய சம்பந்தமாம். அதன்கண் சக்கியபாகத்தை விட்டு நின்ற சம்பந்தமாத்திரம் பாகத்தியாக லக்ஷணையால் இலக்ஷணையென்னும் சொல்லிற்குப் பொருளாம்.

ஆதலால், இலக்ஷிதமாகிய சக்கிய சம்பந்தியின் இலக்ஷணையாகிய சம்பந்தம் இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லிற்குப் பொருளாம்.

இவ்வாற்றுன் சக்கிய சம்பந்தியின் சம்பந்தம் இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லால் யோகவிருத்தியானே சித்தமாகின்றது. அல்லது இலக்ஷித சத்தத்திற்கோ சக்கிய சம்பந்தியில் பாகத்தியாக லக்ஷணையாம்.

இலக்ஷணையெனுஞ் சொல்லிற்குச் சக்கிய சம்பந்தமே பொருளாம். அதற்குச் சம்பந்த மாத்திரத்தில் இலக்ஷணையில்லை.

"இலக்ஷிதத்தான் இலக்ஷணை, இலக்ஷித லக்ஷணை" என்றிவ்வாறு மூன்றும் வேற்றுமைத் தொகையை யங்கீகரிக்கின், இஷ்டமான பொருளின் சித்தி யுண்டாகின்றது.

இலக்ஷிதத்தால் அதாவது, சக்கிய சம்பந்தவாயிலாக; இலக்ஷணை அதாவது சக்கியத்தின் சம்பந்தம் என்பது இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லிற்குப் பொருளாம்.

சக்கிய சம்பந்தம் சிலவிடத்து நேரே யாகின்றது; சிலவிடத்துச் சக்கிய சம்பந்திவாயிலாக வுண்டாகின்றது.

"துவிரேபம் ஒலிக்கின்றது" என்றல்முதலிய விடங்களில் துவிரேப பதத்தின் சக்கியமாகிய இரண்டு ரேபங்களுக்கு வண்டோடு சம்பந்த மில்லை.

ஆனால், சக்கியசம்பந்தி பிரமரபதமாம். அதன் சம்பந்தி வண்டாம். ஆதலால், துவிரேப பதத்தின் சக்கியமாகிய துவிரேபங்களுக்குப் பிரமரபதவாயிலாக வண்டோடு சம்பந்தமிருக்கின்றது.

அங்ஙனமே, சிங்க சத்தத்தினது சக்கியத்தின் சம்பந்தியாகிய சூரத்தன்மைமுதலிய குணங்களின் வாயிலாகச் சிங்கசத்தத்தினது சக்கியத்தின் சம்பந்தி சூரத்தன்மை முதலிய குணவிசிஷ்டத்தின்கண்ணதாம்.

ஆதலால், சிங்க சத்தத்திற்கு இலக்ஷித மெனப்படும் சக்கிய சம்பந்தியாகிய சூரத்தன்மை முதலிய குணங்களின்வாயிலாக இலக்ஷணை, அதாவது சிங்கசத்தத்தினது சக்கியத்தின் சம்பந்தம் புருஷனிடத்துளதாம்.

ஆறும் வேற்றுமைத் தொகையை யங்கீகரிக்கின், இலக்ஷிதம் இலக்ஷணை யென்னும் சொற்களில் பாகத்தியாக லக்ஷணையை யங்கீகரித்தல் வேண்டும்.

மூன்றும்வேற்றுமைத் தொகையை யங்கீகரிக்கின், இலக்ஷணையென்னும் சொல்லின் முக்கியார்த்தம் நிற்கின்றது. இலக்ஷித சத்தமொன்றினும் பாகத்தியாகலக்ஷணை யங்கீகரித்தல் வேண்டும்.

இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லில் கர்மதாரய சமாசம் (பண்புத்தொகை) அங்கீகரிக்கின் இலக்ஷிதம் இலக்ஷணை யென்னும் சொற்க ளிரண்டிற்கும் முக்கிய யோக அர்த்தம் நிற்கின்றது. பாகத்தியாக லக்ஷணை யங்கீகரிக்க வேண்டியதில்லை.

அவயவங்களின் சக்தியால் எந்தச் சத்தம் தனது பொருளைத் தெரிவிக்கின்றதோ, அதனை யௌகிக சத்த மென்பர்.

எங்ஙனம்: * பாசகனென்னும் சொல்லில் 'பாச்' என்னும் அவயவத்திற்குப் பாகம் பொருளாம்;

* சமைப்பவன் என்னும் சொல்லில், 'சமை' என்னும் அவயவத்திற்குச் 'சமைத்தல்' பொருளாம்; 'அன்' என்னும் சொல்லிற்குக் 'கர்த்தா (செய்வோன்)' என்பது பொருளாம்.

இவ்வாற்றானே அவயவ ஆற்றலால் 'சமையல் செய்வோன்' சமைப்பவனென்னும் சொல்லிற்குப் பொருளாதலின் சமைப்பவன் என்னும் சொல் யௌகிக (காரண)ச் சொல்லாம்.

'அகன்' என்னும் அவயவத்திற்குக் கர்த்தா (செய்வோன்) என்பது பொருளாம்.

இவ்வாற்றான் அவயவசக்தியால் பாகஞ் செய்வோன் பாசக னென்னும் சொல்லிற்குப் பொருளாயிருத்தலின், பாசகசப்தம் யௌகிக சப்தமாம்.

அவயவசக்தியை யோக மென்பர். இது பாரிபாஷிகச்சொல்.

சாஸ்திரத்தின் அசாதாரண சங்கேதம் பரிபாஷை யெனப் படும்.

பரிபாஷையாற் பொருளை யறிவிக்கும் சொல் பாரிபாஷிகச் சொல் எனப்படும்.

இலக்ஷித சப்தத்திற்கு இலக்ஷ, இத என்னும் இரண்டும் அவயவங்களாம்.

அவற்றுள் 'இலக்ஷ' என்னும் பதத்திற்குப் பொருள் 'இலக்ஷணம்.'

'இத' என்னும் பதத்திற்குப் பொருள் 'சம்பந்தி'யாம்.

ஆதலால், இலக்ஷண சம்பந்தி யென்னும் பொருளை யறி விக்கும் இலக்ஷிதசத்தம் யௌகிகமாம்.

இதனால் இலக்ஷணமுடையது இலக்ஷித சத்தத்தின் பொரு ளாம்; அங்ஙனமே சக்திய சம்பந்தத்தின் பெயர் இலக்ஷணை யாம். இது சாஸ்திரத்தின் சங்கேதமாம்.

ஆதலால், இலக்ஷணையென்னும் சொல் பரிபாஷையால் சக்திய சம்பந்தமாகிய பொருளை யறிவிப்பதா யிருத்தலால் பாரிபாஷிகமாம்.

'இலக்ஷிதமாகிய இலக்ஷணை இலக்ஷித லக்ஷணை' என்பது பண்புத்தொகை. இலக்ஷணமுடையதாகிய இலக்ஷணை யென் னும் பொருள் பண்புத்தொகையாற் சித்திக்கின்றது.

அசாதாரண தர்மத்தை இலக்ஷண மென்பர்;
சக்தியசம்பந்தத்தை இலக்ஷணை யென்பர்.

ஆதலால், இலக்ஷணையின் அசாதாரண தர்மம் சக்திய சம்பந்தத்தன்மையாம். அதுவே அதன் இலக்ஷணமாம்.

சக்கியத்தின் சம்பந்தம் சாக்ஷாத் பரம்பரை யென்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம்.

அநேக விடங்களில் சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்தமாகிய இலக்ஷணை யுண்டு.

'துவிரேபம் ஒலிக்கின்றது' 'சிங்கம் தேவதத்தன்' என்றல் முதலியவற்றில் சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்த மில்லை. என்றாலும், இலக்ஷணையின் அசாதாரண தர்மம் சக்கிய சம்பந்தத் தன்மையாம். சம்பந்தத்திலுள்ள சாக்ஷாத்தன்மை இலக்ஷணையின் இலக்ஷணத்தில் பிரவேச முடையதன்று.

யாண்டுச் சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்த முளதோ, ஆண்டும் சக்கிய சம்பந்தத்தன்மையாகிய தன்னிலக்கண முடையது இலக்ஷணையாம்.

'கங்கையில் இடைச்சேரி' என்றல் முதலிய உதாரணங்களில் சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்தமாகிய இலக்ஷணை யுளதாயினும், சம்பந்தத்தின் சாக்ஷாத்தன்மை இலக்ஷணையின் இலக்ஷணத்தில் பிரவேச முடையதன்று.

ஆனால், சாக்ஷாத் பரம்பரைச் சாதாரண சம்பந்தத்தன்மை வடிவமாக இலக்ஷணையின் இலக்ஷணத்தில் சம்பந்தமாத்திரம் பிரவேச முடையதாம்.

இதனாற்றான் 'சக்கிய சம்பந்த முடையது இலக்ஷணை' எனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

'சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்தம் இலக்ஷணை' என்று சொல்லவில்லை.

இவ்வாற்றான் இலக்ஷித அதாவது சக்கிய சம்பந்தத்தன்மை வடிவ தன்னிலக்கணமுடைய இலக்ஷணை இலக்ஷித லக்ஷணை யெனும் சொல்லிற்குப் பொருளாம். அது பரம்பரைச் சம்பந்த ஸ்தலத்திற் சம்பவிக்கின்றது.

இலக்ஷித லக்ஷணையென்னும் சொல்லிற்கு முற்கூறிய பொருள் சாக்ஷாத் சம்பந்த ஸ்தலத்திலும் சம்பவிக்கின்றது.

ஆண்டும் இலக்ஷித லக்ஷணை சொல்லுதல்வேண்டும்; என்றாலும் "இலக்ஷிதமான லக்ஷணை இலக்ஷிதலக்ஷணை" என்று சொல்லுதலின் அபிப்பிராயம் இதுவாம்:—

சக்கிய சாக்ஷாத்தன்மை விசிஷ்ட சம்பந்தத்தன்மை யின்றிய கேவல சக்கிய சம்பந்தத் தன்மையான இலக்ஷண முடையதாகிய இலக்ஷணே இலக்ஷித லக்ஷணே யென்பதாம். ஆதலால், கேவல லக்ஷணே கொள்ளப்படுகிறதில்லை. இவ்வாற்ருற் பண்புத்தொகையாம்.

40. கௌணி விருத்தியை கூறுதல்

சில நூல்களில் இவ்வா றெழுதப்பட் டிருக்கின்றது:—

"சிங்கம் தேவதத்தன்" என்றல்முதலிய வாக்கியங்களில் சிங்கமுதலிய சொற்கள் கௌணிவிருத்தியால் புருஷன்முதலியோரை அறிவிப்பனவா யிருக்கின்றன.

எங்ஙனம் சக்தி லக்ஷணே கள் பதத்தின் விருத்திக ளாகின்றனவோ, அங்ஙனமே மூன்ருவது கௌணீயும் விருத்தியாம். பதத்தின் சக்கிய அர்த்தத்தில் எந்தக்குண மிருக்கின்றதோ, அதனையுடைய அசக்கிய அர்த்தத்தில் பதத்தின் கௌணிவிருத்தி சொல்லப்பட்டிருக்கின்றது.

எங்ஙனம்: சிங்க பதத்தின் சக்கியத்தில் சூரத்தன்மை முதலிய குணங்க ளிருக்கின்றன; அவற்றை யுடையவன் சிங்க சத்தத்திற்கு அசக்கியமாகிய (சக்கியமாகாத) புருடன்; அவனிடத்துச் சிங்க சத்தத்தின் கௌணிவிருத்தி யிருக்கின்றது. அது முற்கிரமப்படி இலக்ஷணேயின் உட்பட்டதாம்.

41. நான்காவது வியஞ்சன விருத்தியைக் கூறுதல்

நான்காவது வியஞ்சன விருத்தி அலங்கார நூல்களில் எழுதப்பட்டுளது. அதன் உதாரணம் இதுவாம்:—

சத்துருவின் வீட்டில் போஜனத்தின்பொருட்டுப் பிரவர்த்தித்த புருஷனைப் பார்த்து 'விஷத்தைப் புசி' என்று அவனுக்குப் பிரியனுகிய மற்ருேர் புருஷன் சொல்லுகிருன்.

ஆண்டு 'விஷத்தைச் சாப்பிடு' என்பது சக்திவிருத்தியால் வாக்கியத்தின் பொருளாம்.

சொல்லுவோனுக்குப் போஜனத்தின் அபாவத்தில் கருத்தாம்.

போஜனத்தில் சக்தியுடைய அப் பதத்திற்கு அபாவத்தில் சம்பந்த மின்மையால் இலக்ஷணையும் பொருந்தாது.

ஆதலால், சத்துருவின் வீட்டி லுண்ணுதலின் நிவிருத்தி வாக்கியத்தின் வியங்கியப் பொருளாம்.

வியஞ்சனு விருத்தியாற் றோற்றும் பொருள் எதுவோ, அது *வியங்கியப்பொரு ளெனப்படும்.

வேறு உதாரணம்:— சந்தியா காலத்தில் அநேக புருஷர்களைப் பல காரியங்களிற் பிரவர்த்தித்தற்பொருட்டு ஒருவன், ‘சூரியன் அஸ்தமித்தது’ என்னும் வாக்கியத்தை யுச்சரித்தான். அதைக் கேட்டுப் பல புருஷர்கள் அக் காலத்தில் தத்தம் கர்த்தவ்வியங்களை (தாம் தாம் செய்யவேண்டியவற்றை)த் தெரிந்து பிரவர்த்திக்கிருர்கள்.

ஆண்டு அநேக புருடர்களுக்குப் பல கர்த்தவ்வியத்தின் ஞானம் வியஞ்சனுவிருத்தியா லுண்டாகின்றது.

இவ்வாறு வியஞ்சனுவிருத்தியின் அநேக உதாரணங்களை காவியப் பிரகாசம், காவியப் பிரதீப முதலிய நூல்களில் மம்பட்டர் கோவிந்த பட்டர் முதலியோர் எழுதியிருக்கின்றனர்.

அவ் வநேக வுதாரணங்களும் சிங்காரரசமுடையனவா யிருத்தலின் ஈண்டு எழுதப்படவில்லை.

நியாய நூல்களில் வியஞ்சனுவிருத்திக்கும் இலக்ஷணு விருத்தியில் அடக்கம் சொல்லப்பட்டிருக்கின்றது.

சக்கிய சம்பந்தமுடைய அர்த்தத்தின் ஞானமே இலக்ஷணுவிருத்தியாற் சம்பவிக்கும்.

சக்கியார்த்தத்தின் சம்பந்தியாகிய அர்த்தத்தில் இலக்ஷணை சம்பவியாது. அது சத்தத்தாற் றோற்றும்பொருட்டு வியஞ்சனுவிருத்தி யங்கீகரித்தல் வேண்டுமென்று அலங்கார நூலார் கூறுவர். அதற்குச் சமாதானம் வருமாறு:—

சாக்ஷாத் பரம்பரை யென்னும் பேதத்தால் சம்பந்தம் இருவகையாம்.

* வியங்கியம் - குறிப்பு.

அவற்றுள் சர்க்ஷாத் சம்பந்தமோ பரஸ்பரம் சிலவற்றிற் கே யுண்டாகின்றது; எல்லாவற்றிற்கு முண்டாவதில்லை.

பரம்பரைச் சம்பந்தமோ சகல பதார்த்தங்களுக்கும் பரஸ்பரம் சம்பவிக்கும்.

அதிகமாய்ச் சொல்லுவதென்ன? கோத்தன்மை அசுவத் தன்மைகளுக்கும் பரஸ்பரம் * வியதிகரணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

கடாபாவமும் கடமும் பரஸ்பர விரோதிகளாம். என்றாலும் கடத்தில் கடாபாவத்தின் பிரதியோகித்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

கடத்திற்குத் தனது அபாவத்தில் சுவவிருத்திப் (தன்னிடத்திருக்கும்) பிரதியோகித்தன்மையை நிருபிக்குந் தன்மைச்சம்பந்த மிருக்கின்றது.

இவ்வாற்றால் சர்வபதார்த்தங்களுக்கும் தம்மில் பரம்பரைச் சம்பந்தம் சம்பவிக்கின்றது.

ஆதலால், வியங்கியப்பொருளும் சக்கிய சம்பந்தியா யிருத்தலின் இலக்ஷியத்தில் அடங்கியதாம்.

வியஞ்சனவிருத்தியின் நிருபணம் காவியப்பிரகாசத்திலும் அதன் உரையிலும் ஜயராமபட்டாசாரியர் முதலியோரால் எழுதப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே காவியப்பிரதீபத்திலும் அதன் உரையாகிய உத்யோதனத்திலும் நாகோஜிபட்டர் எழுதியிருக்கின்றனர்; அதன் கண்டனமும் நியாய நூல்களில் எழுதப்பட்டிருக்கின்றது.

வியாகரண நூல்களிலும் சிலவிடத்துக் கண்டனமும் சிலவிடத்து நிருபணமும் எழுதப்பட்டிருக்கின்றன. அத்வைத நூல்களில் கண்டனத்தின் அல்லது நிருபணத்தின் ஆக்கிரகம் (மேற்கொள்ளல்) இல்லை. ஆதலால், நிருபணத்தின் தன்மை மாத்திரம் அறிவிக்கப்பட்டது.

42. இலக்ஷணையின் பேதத்தைக் கூறுதல்

சக்தி இலக்ஷணை யென்னும் இரண்டும் எல்லோர் மதத்திலு முண்டு. மகாவாக்கியத்தின் அர்த்தத்தை நிருபித்தலிலும்

* வியதிகரணத்தன்மை - வேற்றுநிலைக்களத்திருத்தல்.

இரண்டுமே உபயோகமாம். அவற்றுள் சக்தியின் நிரூபணம் செய்யப்பட்டது.

சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்தம் பரம்பரைச் சம்பந்தமெனும் பேதத்தால் கேவலலக்ஷணை இலக்ஷிதலக்ஷணையென இரண்டு பேதம் இலக்ஷணைக்குச் சொல்லப்பட்டது.

(1) ஜகல் லக்ஷணை (விட்ட லக்கணை), (2) அஜகல் லக்ஷணை (விடாத லக்கணை), (3) பாகத் தியாக லக்ஷணை (ஜகதஜகல் லக்ஷணை விட்டுவிடாத லக்கணை) யென்னும் பேதத்தால் மீண்டும் மூவகை இலக்ஷணை யுண்டு.

யாண்டுச் சக்கியம் தோற்றுமல் கேவல சக்கிய சம்பந்தி தோற்றுகின்றதோ, ஆண்டு ஜகல்லக்ஷணை யுண்டாகின்றது.

எங்ஙனம்: 'விஷத்தைப் புசி' என்னுமிடத்தில் சக்கியமாகிய விஷபோஜனத்தை விட்டுச் சக்கிய சம்பந்தியாகிய போஜன நிவிருத்தி தோற்றுதலால் ஜகல்லக்ஷணையாம்.

யாண்டுச் சக்கியார்த்தத்தின் சம்பந்தம் சம்பவிக்கவில்லையோ ஆண்டு ஜகல்லக்ஷணை யங்கீகரிக்கப்படும்.

எங்ஙனம்: 'கங்கையிற் கிராமம்' என்னுமிடத்தில் பதங்களுக்கும் சக்கியார்த்தங்களுக்கும் பரஸ்பர சம்பந்தம் சம்பவியாது.

என்றாலும், 'விஷத்தைப் புசி' என்னுமிடத்துச் சக்கியார்த்தத்தின் அந்நுவயம் சம்பவிக்கும்.

விஷம் மாணத்திற் கேதுவாமாயினும் போஜனத்தில் விஷத்தின் அந்நுவயம் சம்பவிக்கின்றது.

ஆதலால், அந்நுவயாநுபபத்தி (கொண்டுகூட்டுணர்வு நிகழாமை) இலக்ஷணைக்குப் பீஜமன்று.

தாற்பரியாநுபபத்தி (தாற்பரிய வுணர்வு நிகழாமை) யே இலக்ஷணைக்குப் பீஜமாமென்று நூல்களி லெழுதப்பட்டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:

அந்நுவயத்தின் அதாவது சக்கியார்த்தத்தினது சம்பந்தத் தன்மையின் அநுபபத்தி அதாவது அசம்பவம், யாண்டு நிகழுகின்றதோ ஆண்டு இலக்ஷணை யுண்டென்பது நியமமன்று.

இதுவே நியமமாகுமாயின் 'தண்டத்தை உள்ளே விடு' என்னும் வாக்கியத்தில் தண்டமென்னும் சொல்லிற்குத் தண்டந் தாங்கியவனிடத்து இலக்ஷணை நிகழாது; தண்டமென்னும் சொல்லின் சக்கியத்திற்கு உள்ளே விடுதலிற் கொண்டுகூட்டு (அந்நுவயம்) சம்பவித்தலான்.

ஆதலால், தாற்பரியாநுபபத்தி இலக்ஷணைக்குப் பீஜமாம்; அந்நுவயாநுபபத்தி பீஜமன்று.

தாற்பரிய மென்பது வாக்கியத்தைப் பிரயோகஞ் செய்வோனது இச்சை; அதன் அநுபபத்தியாவது, அது சக்கியார்த்தத்தில் சம்பவியாமை; இது இலக்ஷணையை யங்கீகரித்தற்குப் பீஜமாம், அதாவது ஏதுவாம்.

'தண்டத்தை உள்ளே விடு' என்னும் வாக்கியத்தில் தாற்பரியாநுபபத்தி யுண்டு.

ஏனெனின், தண்டத்தை உள்ளே விடுதலாகிய சக்கியார்த்தத்தில் போஜன சமயத்தில் சொல்லுவோனது கருத்துச் சம்பவியாது.

ஆதலால், தண்டமென்னும் சொல்லிற்குத் தண்டந் தாங்கிய புருடனிடத் திலக்ஷணையாம்.

அங்ஙனமே, மரணத்திற்கு ஏதுவாகிய விஷபோஜனத்தில் பிதாவின் தாற்பரியம் நிகழாதாகலின் போஜன நிவிருத்தியில் ஜகல்லக்ஷணையாம்.

"கங்கையிற் கிராமம்" என்னு மிடத்துந் தாற்பரியாநுபபத்தியும் சம்பவிக்கின்றதாகலின், யாண்டுத் தாற்பரியாநுபபத்தி யுளதோ, ஆண்டு இலக்ஷணை யங்கீகரிக்கப்படுமென்பது நியமமாம்.

"கங்கையில் கிராமம்" என்னுமிடத்தும் கங்கை யென்னும் சொல்லிற்குச் சக்கியமாகிய தேவநதியின் பிரவாகம் (வெள்ளம்) ஏதுவோ, அதனை விட்டுச் சக்கிய சம்பந்தியாகிய கரையின் ஞான முண்டாகின்றது; ஆகலின், ஜகல்லக்ஷணையாம்.

யாண்டுச் சாமானியமான கரையின் உணர்ச்சியில் சொல்லுவோனது கருத்தின்றி, கங்கைக்கரையின் உணர்ச்சியில் சொல்லு

வோனது தாற்பரிய முளதோ, ஆண்டுக் கங்கை யென்னும் பதத்திற்குங் கங்கைக் கரையின்கண் அஜகல் லக்ஷணையாம்.

அஜகல் லக்ஷணையின் அசாதாரண உதாரணமோ "காகங் களினின்றும் தயிர் இரக்ஷிக்கப்படுக" என்றல் முதலியவாம்.

சக்கியத்தோடுகூடிய சக்கிய சம்பந்தியின் ஞானம் யாண் டுளதோ, ஆண்டு அஜகல்லக்ஷணை யுண்டு.

போஜனத்தின் பொருட்டுத் தயிரை இரக்ஷித்தலில் சொல்லுவோனது தாற்பரியமாம். அது பூனை முதலியவற்றினின் றும் தயிரை ரக்ஷித்தலின்றிச் சம்பவியாது. ஆதலாற் காகமென் னும் சொல்லிற்குத் தயிரைக் கெடுப்பதன்கண் அஜகல்லக்ஷணை யாம்.

இவ்வாறே 'கவிகையாளர் செல்கின்றனர்' என்னுமிடத் துக் கவிகையாளர் என்னுஞ் சொல்லிற்குக் கவிகையாளரோடு கூடிய கூட்டத்தின்கண் அஜகல்லக்ஷணையாம்.

நியாயமதத்தில் நீலமுதலிய பதங்களுக்குக் குணமாத் திரத்திற் சக்தி யுண்டு.

'நீலக்குடம்' என்றல் முதலிய வாக்கியங்களில் நீலவுருவ முடையதனை யறிவிக்கும் நீலமுதலிய பதங்கள் இலக்ஷணையா லுள்வாம்.

ஆண்டுச் சக்கியத்தோடு கூடிய சம்பந்தியின் ஞான முண் டாகின்றதாகலின், அஜகல் லக்ஷணையாம்.

கோசகாரர் மதத்தில் நீலமுதலிய பதங்களுக்குக் குணத்தி னும் குணியினும் சக்தி யுண்டு; இலக்ஷணை யில்லை.

வேதாந்த பரிபாஷை யென்னும் நூலில் நீலமுதலிய பதங்க ளுக்குக் குணியினிடத்து அஜகல் லக்ஷணை சொல்லப்பட் டிருக்கின்றது. அது நியாயநூலார் மதம்.

யாண்டுச் சக்கியார்த்தத்தின் ஏகதேசத்தை விட்டு ஏகதேச த்தை யறிதலில் சொல்லுவோன் கருத்துளதோ, ஆண்டுப் பாகத்தியாக லக்ஷணையாம்.

எங்ஙனம்: 'அவனே இத்தேவதத்தன்' என்னுமிடத்துப் பாகத்தியாக லக்ஷணையாம்.

ஈண்டுப் பரோக்ஷவஸ்து அவனென்னும் சொல்லிற்கும், அபரோக்ஷவஸ்து இவனென்னும் சொல்லிற்கும், தகரமுதலிய வெழுத்துக்களை யடுத்த பெயரினையுடைய புருஷ சரீரம் தேவதத்த னென்னும் சொல்லிற்கும் பொருளாம்.

அவனென்னும் சொற்பொருளோடு இவனென்னும் சொற்பொருளுக்குள்ள அபேதம் அவனென்னுஞ் சொல்லினுள்ள முதல் வேற்றுமைக்குப் பொருளாம்.

இவனென்னும் சொற்பொருட்குத் தேவதத்த னென்னும் சொற்பொருளோடுள்ள அபேதம் இவனென்னும் சொல்லினுள்ள முதல் வேற்றுமையின் பொருளாம்; அல்லது அவன் இவன் என்னும் சொற்களினுள்ள வேற்றுமைகள் பொருளில்லாதனவாம்.

சமானவிபக்தி (ஒருவேற்றுமை) யுடைய பதங்களின் சந்நிதானத்தால் பதார்த்தங்களின் அபேதஞான முண்டாகின்றது.

ஆதலால், பரோக்ஷ வஸ்துவோடு அபின்னமான அபரோக்ஷ வஸ்துவின் சொரூபம் தேவதத்த னென்னும் பெயரை யுடைய சரீரமாம். இது வாக்கியத்தினது பதங்களின் சக்கியார்த்தமாம். அது உஷ்ண சீதள மென்பதுபோலப் பாதிதமாம் (வாதிக்கப்படுவதாம்).

பாதிதார்த்தத்தில் சொல்லுவோனது கருத்து நிகழ்வதன்று. ஆதலால், அவன் இவனென்னும் சொற்களின் சக்கியத்தில் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைப் பாகங்களைத் தியாகஞ் செய்து (விட்டு) வஸ்து பாகத்தில் இலக்ஷணை யிருத்தலின் பாகத்தியாக லக்ஷணையாம்.

இவ்வாற்றான் மூவகை இலக்ஷணையும் (1) பிரயோஜனவதி (பயனுடை) லக்ஷணை, (2) நிரூட (இடுகுறி) லக்ஷணையென்னும் பேதத்தால் இருவகையாம்.

யாண்டுச் சக்தியுடைய பதத்தினை விட்டு இலாக்ஷணிக (இலக்ஷணையுடைய) சத்தப் பிரயோகத்தில் பிரயோஜன

முண்டாகின்றதோ, அது பிரயோஜனவதி லக்ஷணையெனப் படும்.

எங்ஙனம்: கங்கை யென்னும் பதத்திற்குக் கரையிற் பிரயோஜனவதி லக்ஷணையாம்.

கரையிற் கிராமமென்று சொல்லுவோமாயின், கரையிற் குளிர்ச்சி தூய்மை முதலியவற்றின் ஞான முண்டாகாது.

கங்கை யென்னும் பதத்தான் கரையை யறிவிக்கின் கங்கையின் தர்மமாகிய குளிர்ச்சி தூய்மை முதலியன கரையிற் காணப்படும். இதன்பொருட்டே வியஞ்சனாவிருத்தியை அலங்கார நூலார் அங்கீகரிக்கின்றனர்.

நியாயமதத்தில் குளிர்ச்சி தூய்மை முதலியன சொல்லுணர்ச்சிக்கு விடயமன்று; அநுமிதிக்கு விடயமாம்.

அங்ஙன மன்றோ? கங்கைக்கரை குளிர்ச்சி தூய்மை முதலியவற்றை யுடையதாம்; கங்கையென்னும் சொல்லா னறிவிக்கப்படுந் தன்மையான், கங்கையைப்போல வென்பது அநுமானம். எவ்வாற்றானும் பிரயோஜனவதி லக்ஷணை யுண்டு.

பதத்திற்கு எப்பொருளில் சக்திவிருத்தி யில்லையோ, சக்தியத்தைப்போல எப்பொருளி னுணர்ச்சி எப் பதத்தான் எல்லோருக்கும் பிரசித்தமாகின்றதோ, அப் பொருளில் அப் பதத்திற்கு பிரயோஜன சூன்ய லக்ஷணையாகிய நிரூட லக்ஷணை சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்: நீல முதலிய பதங்களுக்குக் கோசத்தின்படி குணகுணியில் சக்தியை யங்கீகரிக்கின், கௌரவதோஷ முண்டு.

சக்கியத்தன்மை யவச்சேதகமான ஒவ்வொரு தர்மத்தின் இலாபமு முண்டாவதில்லை யாகலின், குணமாத்திரத்திற் சக்தி யுண்டு.

நீலம் குடமென்றற் முதலிய வாக்கியங்களைக் கேட்டல் மாத்திரத்தானே யெல்லாப் புருடருக்கும் குணியின் உணர்ச்சி யுண்டாதல் மிகப் பிரசித்தம்.

ஆதலால், நீலமுதலிய பதங்களுக்குக் குணியில் பிரயோஜன குணியலக்ஷணை யிருத்தலின் நிரூடலக்ஷணையாம்.

நிரூடலக்ஷணை சக்திக்குச் சமானமாம். யாதானு மோர் விலக்ஷணமான அநாதி தாற்பரிய முளதாயின், ஆண்டு நிரூடலக்ஷணை யுண்டு.

யாண்டுப் பிரயோஜனம் அநாதி தாற்பரிய மென்னு மிரண்டு மில்லையோ, நூலாசிரியர் தனதிச்சையால் இலாக்ஷணிக சத்தத்தைப் பிரயோக மின்றிப் பிரயோஜனப்படுத்துகின்றுரோ, ஆண்டு மூன்றுவது ஐச்சிக லக்ஷணை யுண்டு.

ஆனல், அநாதி தாற்பரியமும் பிரயோஜனமு மின்றிய இலாக்ஷணிக சத்தத்தின் பிரயோகத்தை வித்துவான்கள் நலமுடையதாகக் கருதார்.

இக் காரணத்தானே காவியப்பிரகாசமுதலிய சாகித்திய நூல்களில் நிரூடலக்ஷணையும் பிரயோஜனவதி லக்ஷணையும் உதாரணத்துடன் எழுதப்பட் டிருக்கின்றன. ஐச்சிகலக்ஷணை எழுதப்படவில்லை.

கதாதர பட்டாசாரியர் முதலியோர் ஐச்சிகலக்ஷணையை யெழுதியிருக்கின்றனர். அவர்கள் தாற்பரியம் ஐச்சிகலக்ஷணையினது சம்பாவனையின்கண்ணும் (பொருத்தத்திலாம்). ஐச்சிக லக்ஷணையுடைய பதத்தின் பிரயோகம் 'நலமுடையது' என்னும் பொருளில் தாற்பரியமன்று.

இலக்ஷணையின் அவாந்தரபேதமாக மம்பட்டர் முதலியோர்களால் மற்று மநேக மெழுதப்பட்டிருக்கின்றன. என்றாலும், வேதாந்த நூல்களில் யாண்டும் எழுதப்படவில்லை யாகலின், ஞான விருப்புடையோருக்கு அவற்றை யெழுதுவதால் உபயோக மில்லை.

43. சாப்தஞானத்திற்கு ஏதுவாந் தன்மையின் விசாரம்

சக்கியத்தன்மை யவச்சேதகத்தில் சக்தி யிருப்பதுபோல இலக்ஷியத்தன்மை யவச்சேதகமான தீரத்வ முதலியவற்றிற் கங்கை முதலிய பதங்களுக்கு இலக்ஷணை யில்லை. ஆனல், வியக்தி மாத்திரத்தில் இலக்ஷணவிருத்தி யுண்டு.

பதத்தின் விருத்தியின்றி இலக்ஷியத்தன்மை யவச்சேதகத்தின் ஸ்மிருதியும் சாப்தபோதமு முண்டாகின்றன வென்பது சப்தார்த்தத்தை நிருணயிக்கும் நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது.

மீமாம்ஸைமதத்தில் இலாக்ஷணிக சத்தத்தால் இலக்ஷியார்த்தத்தின் ஸ்மிருதியோ வுண்டாகின்றது.

இலக்ஷியார்த்தத்தின் சாப்த போதத்திற்கு (சொல்லுணர்ச்சிக்கு) ஏதுவாவது இலாக்ஷணிக பதமன்று.

ஆனால், இலாக்ஷணிக பதத்தைச் சமீபித்துள்ள பிறபதமெதுவோ, அது தன் சக்கியார்த்தத்தின் சாப்த போதத்திற்கும், இலக்ஷியார்த்தத்தின் சாப்த போதத்திற்கும் ஏதுவாகின்றது.

எங்ஙனம்: 'கங்கையிற் கிராமம்' என்னும் வாக்கியத்தில் கங்கையென்னும் பதம் கரையின்கண் இலாக்ஷணிகமாம். அது கரையின் ஸ்மிருதிக்கு ஏதுவாம். கரையின்கண் சாப்த போதத்திற்கு ஏதுவன்று.

ஆனால், கரையின்கன் சாப்த ஞானத்திற்கு ஏதுவும், தனது சக்கியத்தில் சாப்த ஞானத்திற்கு ஏதுவும் கிராம மென்னும் பதமாம். இம் மதத்திற்குச் சாதகமான யுக்தி இதுவாம்:—

இலாக்ஷணிக சத்தத்திற்குச் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யங்கீகரிக்கின் சகல சாப்த போதத்தையு முண்டாக்குந் தன்மையின் அவச்சேதகமான தர்மத்தின் இலாபமுண்டாகாது.

ஏனெனின், மீமாம்ஸைமதத்தில் சாப்தபோதத்தை யுண்டாக்குந் தன்மை இலாக்ஷணிக பதத்தின்க ணில்லை. ஆனற் சக்த (சக்தியுடைய) பதத்தி லிருக்கின்றது.

ஆகலின், சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மையின் அவச்சேதகம் சக்தியாம்.

இலாக்ஷணிக பதத்திற்கும் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யங்கீகரிக்கின் அவ் வுண்டாக்குந் தன்மையினும் சக்தி அற்பதேசத்திருப்பதாயிருத்தலின், அதன் அவச்சேதகமாகாது.

எது எதன் அற்பதேசத் திருப்பதும் அதிக தேசத்திருப்பது மாகாமல், அதன் சமான தேசத் திருப்பதாகின்றதோ, அது அதன் அவச்சேதகமாம்.

சாப்தபோதத்தை யுண்டாக்குந் தன்மை சகல சக்த பதங்களினும் இருக்கின்றது. அதன் சமான தேசத்தில் சக்தி யிருக்கின்றது.

ஆகலின், சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மையின் அவச்சேதகம் சக்தியெனல் சம்பவிக்கும்.

இலாக்ஷணிக பதத்தினும் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யங்கீகரிக்கின் இலாக்ஷணிக பதத்தில் சக்தி யில்லை. சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யிருக்கின்றது.

ஆதலால், அற்பதேசத் திருப்பதாதலின் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மையின் அவச்சேதகம் சக்தியெனல் சம்பவியாது.

சக்தம் இலாக்ஷணிக மென்னு மெல்லாப் பதங்களினு மிருப்பதான ஒரு தர்மமு மில்லை.

ஆகலின், சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை நிரவச்சேதகமாம். அந்த நிரவச்சேதகமான உண்டாக்குந் தன்மை அப்பிரசித்தமாம்.

தண்டம் குலாலன் முதலியவற்றின்கண் குடமுதலியவற்றை யுண்டாக்குந் தன்மையின் அவச்சேதகம் தண்டத்தன்மை குலாலத்தன்மை முதலியன வாதலால் நிரவச்சேதகமான ஜநகத்தன்மை (உண்டாக்குந் தன்மை) அப்பிரசித்தமாம்.

இவ்வாற்றான் இலாக்ஷணிக பதத்திற்குச் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யில்லையென்பது மீமாம்ஸகர் மதம். அது அத்வைத மதத்திற்கு மிக்க விரோதியாம்.

ஏனெனின், மகாவாக்கியங்களில் சகல பதங்களும் இலாக்ஷணிகமாம். அவற்றான் சாப்தபோதத்தின் நிகழ்ச்சி யின்மை யுண்டாகும். ஆதலால், இம் மதத்தின் கண்டனம் அவசியம் செய்யத் தக்கதாம். அதன்கண் இத் தோஷ முண்டு:—

'கங்கையிற் கிராமம்' என்னும் வாக்கியத்தில் கிராம மென்னும் பதத்தாற் கரையின்கண் சாப்தபோதம் அங்கீகரிக்கின் கிராம பதத்திற்குக் கரையின்கண்ணும் சக்தி யுண்டாதல் வேண்டும்.

ஏனெனின், எந்தப் பதம் இலக்ஷணை யின்றி எப் பொருளில் சாப்த போதத்தை யுண்டாக்குவதாகின்றதோ, அப் பதத்திற்கு அப் பொருளிற் சக்தி யுண்டென்பது நியமம்.

மீமாம்ஸகமதத்தில் கிராமபதம் இலக்ஷணையின்றிக் கரையிற் சாப்த போதத்தை யுண்டாக்குவதாயிருத்தலின் கரையின்கண் சக்தி யுண்டாதல் வேண்டும். இது நியமமாம்:—

எப் பதத்தில் எப் பொருளின் விருத்தியுண்டாகின்றதோ, அப் பதத்தான் அப் பொருளின்கண் ஸ்மிருதி யுண்டாம்; அப் பொருளின்கண்ணே அப் பதத்தான் சாப்தபோதமு முண்டாம்.

மீமாம்ஸகமதத்தில் இந் நியமத்திற்குப் பங்க முண்டாம். ஏனெனின், மீமாம்ஸக மதத்தில் கங்கை யென்னும் சொல்லின் இலக்ஷணாவிருத்தியோ கரையி லுளது; தீரத்தின் ஸ்மிருதியும் கங்காபதத்தா லுண்டாகின்றது. தீரத்தில் சாப்தபோதம் கங்கா பதத்தா லுண்டாகிறதில்லை. ஆனால், கிராம பதத்தால் தீரத்தின் சாப்தபோத முண்டாகிறது.

அந்தக் கிராம பதத்திற்குத் தீரத்தில் சக்தி அல்லது இலக்ஷணாவிருத்தி யில்லை; கிராம பதத்தினால் தீரத்தின் ஸ்மிருதியு மில்லை. ஆதலால், இம் மதம் புத்திமான்களது நகைப்பிற் கிடமானதாம்.

ஏனெனின், யாண்டு அரிமுதலிய ஒவ்வொரு பதத்திற்கும் அநேகம் பொருள்களில் சக்தியிருக்கின்றதோ, ஆண்டும் ஒரு காலத்தில் ஒரு புருடனுக்கு அரியென்னும் பதத்தான் ஓரே பொருளின் ஞான முண்டாகின்றது.

அநேக பதார்த்தங்களின் ஞானம் ஒரு பதத்தா லுண்டாகுமாயின், அரியென்று சொல்லுதலான் குரங்கின்மேல் சூரியனிருக்கிறதென் றிவ்வாறு சாப்தபோத முண்டாதல் வேண்டும்.

கிராமமென்னும் ஒரு பதத்தால் பரஸ்பர சம்பந்தமுடைய கிராமதீரங்களின் சாப்தபோத|முண்டாகின்றது.

அங்ஙனமே, அரியென்னும் ஒரு சொல்லால் பரஸ்பர சம்பந்தமுடைய வானர சூரியர்களின் சாப்தபோத முண்டாதல் வேண்டும்.

ஒரு பதத்தால் இரண்டு சக்கியங்களின் சாப்தபோத முண்டாகா தெனக்கூறின், அவ்வொரு பதத்தாற் றனது சக்கியத்தோடு தனது அசக்கிய அலக்ஷியங்களினது சம்பந்தத்தின் சாப்தஞான முண்டாதல் அத்தியந்தம் தூரமாம்.

ஆதலால், லாக்ஷணிகம் நாநுபாவிகம்- இலாக்ஷணிகம் சாப்தானுபவத்தினதன்று' என்னும் மீமாம்ஸையின் வசனம் அசங்கதமாம் (பொருத்தமுடையதாகாது).

அன்றியும், இலாக்ஷணிக சத்தத்திற்குச் சாப்தாநுபவத்தை யுண்டுபண்ணுந் தன்மையில் தோஷம் சொல்லப்பட்டது; சாப்தபோதத்தை யுண்டாக்குந் தன்மையின் அவச்சேதகம் கிடைக்காது எனின், அதற்குச் சமாதானம் இதுவாம்:—

சத்தத்தில் சக்திலக்ஷணை யென்னும் வேறுபாட்டால் இருவகை விருத்தி யுண்டு. சிலவிடத்து அர்த்தத்திற்குச் சக்தி விருத்தியும், சிலவிடத்து அர்த்தத்திற்கு இலக்ஷணு விருத்தியுமுண்டு.

சாப்த போதத்தை யுண்டாக்குந்தன்மை சத்தமாத்திரத்தி னுளதாம்; விருத்தியும் சத்தமாத்திரத்தி னுளதாம்.

ஆதலால், அந்த வுண்டாக்குந் தன்மையின் சமான தேசத்திருத்தலான், அதன் அவச்சேதகம் விருத்தியாம். அல்லது, சாப்த போதத்தை யுண்டாக்குந்தன்மையின் அவச்சேதகம் யோக்கிய சத்தத்தன்மையாம். இவ்வாற்ருல் இலாக்ஷணிகபதத்தானும் சாப்தபோத முண்டாகின்றது.

44. மகாவாக்கியத்தில் இலக்ஷணையின் உபயோகமும் அதன்கண் சங்கை சமாதானங்களும்

மகாவாக்கியங்களில் ஜகல் லக்ஷணையும் அஜகல் லக்ஷணையுமில்லை. ஆனல், பாகத்தியாக லக்ஷணை யுண்டு. அதன்றன்மை விசார்சாகரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

அந்தப் பாகத்தியாக லக்ஷணை மகா வாக்கியங்களில் இலக்ஷித லக்ஷணை யன்று. ஆனால், கேவல லக்ஷணையாம்.

ஏனெனில், இலக்ஷிய சேதனத்தோடு வாச்சியத்திற்குச் சாக்ஷாத் சம்பந்த முண்டு. பரம்பரைச் சம்பந்த மில்லை.

யாண்டுப் பாகத்தியாக லக்ஷணை யுண்டோ ஆண்டு வாச்சியத்தின் ஏகதேசம் இலக்ஷியமாம்.

அவ் வாச்சியத்தின் ஏகதேசத்தோடு வாச்சியத்திற்குச் சாக்ஷாத் சம்பந்த முளது; ஆதலால், கேவல லக்ஷணையாம்.

மகாவாக்கியத்தால் ஞான விருப்புடையோருக்கு அகண்ட பிரஹ்மத்தின் ஞான முண்டாகுகவெனபது ஈசுவரனது அநாதி தாற்பரியம். ஆதலால், அது நிரூட லக்ஷணையாம்; பிரயோஜனவதி லக்ஷணை யன்று.

ஈண்டிது சங்கை:—

வாக்கியார்த்தத்திற்கு இலக்ஷிய சேதனத்தோடு சம்பந்தம் அங்கீகரிக்கின், இலக்ஷியார்த்தத்தில் அசங்கத்தன்மைக்குக் கேடுண்டாகும். சம்பந்தம் அங்கீகரியாவிடின், இலக்ஷணை பொருந்தாது.

ஏனெனின், சக்கிய சம்பந்தத்தை அல்லது போத்திய சம்பந்தத்தை இலக்ஷணை யென்பர். அது அசங்கத்திற் சம்பவியாது.

இதற்குச் சமாதானம்:—

வாச்சியார்த்தத்தில் சேதனம் ஜடமென விரண்டு பாக முண்டு. அதன் சேதன பாகத்திற்கு இலக்ஷியார்த்தத்தில் தாதாத்மிய சம்பந்த முண்டு.

சகல பதார்த்தங்களுக்கும் சொரூபத்தில் தாதாத்மிய சம்பந்த முண்டு.

வாச்சிய பாகமான சேதனத்தின் சொரூபமே இலக்ஷிய சேதனமாம். ஆதலால், வாச்சியத்தில் சேதன பாகத்திற்கு இலக்ஷிய சேதனத்தோடு தாதாத்மிய சம்பந்த முண்டு.

வாச்சியத்தில் ஜட பாகத்திற்கு இலக்ஷிய சேதனத்தோடு அதிஷ்டானத்தன்மைச் சம்பந்த முண்டு.

கற்பிதத்தின் சம்பந்தத்தால் அதிஷ்டானத்தின் சுபாவம் கெடாது. தனது தாதாத்மிய சம்பந்தத்தானும் சுபாவத்திற்குக் கேடுண்டாகாது. அதனால் இலக்ஷியார்த்தத்தின் அசங்கத்தன்மை கெடாது.

மற்றோர் சங்கை:—

தத்பதத்திற்கு அகண்டசேதனத்தில் இலக்ஷணை யங்கிகரித்துத் துவம்பதத்திற்கும் அகண்ட சேதனத்தில் இலக்ஷணை யங்கிகரிக்கின் புநருக்தி தோஷ (கூறியது கூறற் குற்ற) மாகுதலான், குடம் குடமென்னும் வாக்கியத்தினைப்போல அப்பிரமாணவாக்கிய மாகும்.

இரண்டு பதங்களுக்கும் இலக்ஷியார்த்தம் வேறாகக் கொள்ளின், அபேதத்தை யறிவிக்குந்தன்மை யுண்டாகாது.

அதற்கு இது சமாதானம்:—

மாயா விசிஷ்டனும் அந்தக்கரண விசிஷ்டனும் தற்பத துவம்பதங்களுக்குச் சக்கியராவர்; உபகிதர்கள் இலக்ஷியராவர்.

பிரஹ்ம சேதனம் இரண்டு பதங்களுக்கும் இலக்ஷிய மாகுமாயின் புநருக்தி தோஷ முண்டாகும்; அந்தப் பிரஹ்மசேதனம் இலக்ஷிய மன்று; மாயா வுபகிதமும் அந்தக்கரண வுபகிதமும் இலக்ஷியமாம். அது உபாதிபேதத்தாற் பின்னமாயிருத்தலின் புநருக்தி யில்லை.

உபகித மிரண்டும் பரமார்த்தமாய் அபின்னமாம். ஆதலால், அபேதத்தைப் போதிக்குந் தன்மை வாக்கியத்திற்குச் சம்பவிக்கின்றது.

இவ்வாற்றால் தற்பதார்த்த துவம்பதார்த்தங்களின் உத்தேச விதேயத்தன்மையை அங்கீகரித்து அபேதத்தைப் போதிக்குந்தன்மை நிர்த்தோஷமாம்.

தற்பதார்த்தத்தில் பரோக்ஷத்தன்மைப் பிராந்தி நீங்குதற்பொருட்டுத் தற்பதார்த்தத்தை யுத்தேசித்துத் துவம்பதார்த்தத்தன்மை விதேயமா (அமைக்கப்பட்டதா) ம்.

துவம் பதார்த்தத்தில் பரிச்சின்னத்தன்மைப் பிராந்தி நீங்குதற்பொருட்டுத் துவம்பதார்த்தத்தை யுத்தேசித்துத் தற்பதார்த்தத்தன்மை விதேயமாம்.

புநருக்தியைப் பரிகரித்தற்பொருட்டுச் சில நூலாசிரியர் அபிப்பிராயம் இதுவாம்:—

இரண்டு பதங்களுக்கும் வேறு வேறு இலக்ஷகத் (இலக்ஷணையினு லறிவிக்குந்) தன்மை யங்கீகரிக்கின், புநருக்தியின் சங்கை யுண்டாகின்றது. அந்த வெவ்வேறு இலக்ஷகத் தன்மையோ இல்லை.

ஆனல், மீமாம்ஸகரது கிரமமாக இரண்டு பதங்களும் சேர்ந்து அகண்ட பிரஹ்மத்தின் இலக்ஷகமாம்.

இதனுற்றான் பிராசீன ஆசாரியர்கள் மகா வாக்கியங்களுக்குப் பிரதிபாதிக்கும் அர்த்தமாத்திரத்தை அறிவிக்குந்தன்மை கூறியிருக்கின்றனர்.

உத்தேச விதேயத்தன்மைச் சூனியமான அர்த்தத்தை யறிவிக்கும் வாக்கியம் உலகத்தில் அப்பிரசித்தமாயினும், அலௌகிக அர்த்தம் மகாவாக்கியங்களுக்காம். ஆதலால், அப்பிரசித்த தோஷ மில்லை; அதனுல் பூஷணமாம்.

அப்பிரசித்ததோஷ மாகுமாயின், வாக்கியத்திற்கு அசங்க முடைய அர்த்தத்தினை யறிவிக்குந் தன்மையும் உலகத்தில் அப்பிரசித்த மாகலின், அசங்கமுடைய பிரஹ்மத்தை யறிவிக்குந்தன்மையும் மகாவாக்கியங்களுக் குண்டாகாது.

எங்ஙனம் உலகத்தில் அப்பிரசித்தமான அசங்கமுடைய பிரஹ்மத்தை யறிவிக்குந் தன்மை அங்கீகரிக்கப்படுகின்றதோ, அங்ஙனமே உத்தேச விதேயபாவ சூனியமான அகண்டார்த்தத்தினை யறிவிக்குந்தன்மையுஞ் சம்பவிக்கின்றது. இவ்வாறு இலக்ஷணைப்பிரசங்கத்தில் அநேக விசாரம் பழைமையான ஆசாரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றது.

45. இலக்ஷணையின்றிச் சக்தி விருத்தியால் மகாவாக்கியத்திற்கு அத்வைதப் பிரஹ்மத்தை யறிவிக்குந் தன்மை யுளதெனல்

சில நவீன நூலாசிரியர் இலக்ஷணையின்றிச் சக்திவிருத்தி மாத்திரத்தான் மகாவாக்கியங்களுக்கு அத்துவிதீயப் பிரஹ்ம

த்தை யறிவிக்குந்தன்மை யங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் இவ்வாறு எழுதியிருக்கின்றனர்:—

விசிஷ்டவாசக பதத்தின் அர்த்தத்திற்கு அந்நிய பதத்தின் விசிஷ்ட அர்த்தத்தோடு யாண்டுச் சம்பந்தம் நிகழவில்லையோ, ஆண்டுப் பதத்தின் சக்தியினுனே விசேஷணத்தை விட்டு விசேஷியத்தின் தோற்ற முண்டாகின்றது.

எங்ஙனம்: அநித்தியம் குடம் என்னும் வாக்கியத்தில் கடத்தன்மை விசிஷ்ட வியக்தியின் வாசகம் கடபதமாம். அதற்கு அநித்தியத்தன்மை விசிஷ்டமான அநித்திய பதார்த்தத்தோடு அபேதசம்பந்தம் அறிவிக்கப்படுகின்றது.

கடத்தன்மைச் சாதி நித்தியமாம். ஆகலின், கடத்தன்மை விசிஷ்டத்திற்கு அநித்திய பதார்த்தத்தோடு அபேதம் பாதிக்கப்படுவதாயிருத்தலின் அதற்கு அநித்திய பதார்த்தத்தோடு அபேத சம்பந்தம் நிகழாது.

ஆண்டுக் கடத்தன்மையாகிய விசேஷணத்தை விட்டுக் கட பதத்தால் வியக்திமாத்திரத்தின் ஸ்மிருதியும், அநித்திய பதார்த்தத்தோடுள்ள சம்பந்த ஞானமாகிய சாப்தபோதமு முண்டாகின்றன.

அங்ஙனமே வீட்டிற் குடமென்னும் வாக்கியத்தில் கடத்தன்மை வடிவினதாகிய விசேஷணத்தை விட்டுக் கடபதத்தால் விசேஷிய வியக்திமாத்திரத்தின் ஸ்மிருதியும் சாப்தபோதமு முண்டாகின்றன.

அங்ஙனமே, கடத்தில் உருவம் என்னும் வாக்கியத்திலும் கடத்தன்மையை விட்டு வியக்திமாத்திரத்தின் ஞான முண்டாகின்றது.

ஏனெனின், வீட்டிற்குடமென்னும் வாக்கியத்தான் வீட்டின் ஆதேயத்தன்மை கடபதார்த்தத்தில் தோற்றுகின்றது.

கடத்தன்மைச் சாதியில் தனது ஆசிரயமான வியக்தியின் ஆதேயத்தன்மை யுளது. ஆனல், வீட்டின் ஆதேயத்தன்மை பாதித்மாம். ஆதலால், கடத்தன்மையை விட்டு வியக்திமாத்

திரத்தில் வீட்டின் ஆதேயத்தன்மையின் சம்பந்தம் அறிவிக்கப்படுகின்றது.

அங்ஙனமே வீடென்னும் பதார்த்தத்தில் வீட்டுத்தன்மையின் நீக்க முண்டாகின்றது.

கடத்தில் உருவம் என்னும் வாக்கியத்திலும் கடத்தன்மையை விட்டுத் திரவியரூப வியக்திமாத்திரத்தில் அதிகாணத்தன்மயும், உருவத்தன்மையை விட்டுக் குணமாத்திரத்தில் ஆதேயத்தன்மையும் தோற்றுகின்றன.

ஏனெனின், கடபதார்த்தத்தின் ஆதேயத்தன்மை யுடையது உருவபதார்த்தமா மென்பது வாக்சியத்தின் அர்த்தமாம்.

ஆண்டுக் கடத்தன்மையின் ஆதேயத்தன்மை எதனிடத்து மில்லை. ஆதலால், கடத்தன்மையை விட்டு வியக்திமாத்திரம் கடபதார்த்தத்தின் அர்த்தமாம். அதன் ஆதேயத்தன்மை யுருவத்தன்மை ஜாதியி லில்லை.

ஆனல், உருவவியக்தியின் ஆதேயத்தன்மை உருவத்தன்மையி லுண்டு. ஆதலால், உருவ பதார்த்தத்தில் உருவத்தன்மையின் நீக்க முண்டு.

அங்ஙனமே, உண்டாயிற்று குடம், அழிந்தது குடம் என்றல்முதலிய வாக்கியங்களில் ஜாதி வடிவமாகிய விசேஷணத்தை விட்டு வியக்திமாத்திரம் கடமுதலிய பதங்களின் அர்த்தமாம்.

ஏனெனின், ஜாதி நித்தியம், அதற்கு உற்பத்தி நாசம் நிகழாது.

எங்ஙனம் முன் வாக்கியங்களில் விசிஷ்ட வாசக பதங்களில் சக்தி வலியானே விசேஷிய மாத்திரத்தின் ஞான முண்டாகின்றதோ, அங்ஙனமே மகாவாக்கியங்களிலும் விசிஷ்ட வாசக பதங்களின் சக்திவலியானே மாயை அந்தக்கரண மென்னும் விசேஷணங்களை விட்டுச் சேதனமாகிய விசேஷிய மாத்திரத்தின் ஞானம் சம்பவிக்கின்றது.

இலக்ஷணையை யங்கீகரித்தல் நிஷ்பலமாம். ஆனல், இத்துணைப் பேதமாம்:—

விசிஷ்டவாசக பதத்தினது வாச்சியத்தின் ஏகதேசம் விசேஷியமும் ஏகதேசம் விசேஷணமுமாம்; ஜாதி விசேஷணமும் வியக்தி விசேஷியமுமாம். அவற்றுள் விசேஷிய பாகத்தின் போதமோ சக்தியிஞலுண்டாகின்றது; கேவல விசேஷணத்தின் போத முண்டாகிறதில்லை.

வாச்சியத்தினது விசேஷண மாத்திரத்தின் ஞானமும் விசிஷ்ட வாசகத்தினது சத்தத்தின் சத்தியா லுண்டாகுமாயின், அநித்தியம் கடமென்னும் வாக்கியம்போல நித்தியம் கடமென்னும் வாக்கியமும் கடபதத்தால் ஜாதி மாத்திரத்தை யறிவித்து நலமுடையதாதல் வேண்டும்.

ஆதலால், விசிஷ்டவாசக பதத்தின் சக்தியால் விசேஷிய மாத்திரத்தின் தோற்ற முண்டாகின்றது.

அவனே இத் தேவதத்த னென்னும் வாக்கியத்திலும் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மை விசேஷணங்களை விட்டு, விசேஷிய மாத்திரத்தின் ஞானம் சக்திவிருத்தியானே யுண்டாகின்றது.

பாகத்தியாக லக்ஷணைக்கு ஒரு உதாரணமு மில்லை. ஆதலால், ஜகல் லக்ஷணை அஜகல் லக்ஷணை யென்னும் பேதத்தால் இருவகை இலக்ஷணை அங்கீகரித்தல்வேண்டும். பாகத்தியாக் லக்ஷணை பொய்யாம்.

வேதாந்த பரிபாஷையில் தர்மராஜர் முற்கூறியவண்ணம் மகாவாக்கியங்களில் இலக்ஷணையைக் கண்டித்துப் பாகத்தியாக லக்ஷணையின் சொரூபத்தையும் உதாரணத்தையும் இவ்வாறு கூறுகின்றுர்:—

சம்பிரதாயப்படி வாச்சியத்தின் ஏகதேசத்தி லிருப்பது பாகத்தியாக லக்ஷணையின் சொரூபமா மென்னும் மதத்தில் வாச்சியத்தின் ஏகதேசத் திருப்பது சக்தியின் சொரூபமேயாம். அது பாகத்தியாக லக்ஷணையின் சொரூபமன்று.

சக்கியத்திலும் அசக்கியத்திலு மிருப்பது எதுவோ அது பாகத்தியாக லக்ஷணை யெனப்படும்.

அஜகல் லக்ஷணையும் சக்கிய அசக்கியங்களி லிருப்பதாயினும் யாண்டு விசேஷணத்தன்மையான் சக்கியார்த்தத்தின்

ஞானமும், விசேஷியத் தன்மையான் அசக்கியார்த்தத்தின் ஞானமு முண்டாகின்றனவோ, ஆண்டு அஜகல் லக்ஷணை சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்:— "நீலக்குடம்" என்னும் வாக்கியத்தில் நீல பதத்தின் சக்கியம் உருவமாம். அதன் ஞானம் விசேஷணத் தன்மையா னுண்டாகின்றது.

நீல உருவத்தின் ஆசிரயமான திரவியம் அசக்கியமாம். அதன் ஞானம் விசேஷியத்தன்மையா னுண்டாகின்றது. ஆதலால், நீல பதத்திற்கு நீலவுருவத்தின் ஆசிரயத்தில் அஜகல் லக்ஷணையாம்.

இவ்வாறு மஞ்சம் கூப்பிடுகின்றது என்னும் வாக்கியத்தில் மஞ்ச பதத்தின் சக்கியம் விசேஷணமும், அசக்கியமாகிய புருஷன் விசேஷியமுமாம்; ஆதலால், அஜகல் லக்ஷணையாம்.

யாண்டுச் சக்கியம் அசக்கிய மிரண்டும் விசேஷிய மாகின்றனவோ, சக்கியத்தன்மை யவச்சேதகத்தினும் வியாபகமான இலக்ஷியத்தன்மை யவச்சேதக தர்மம் விசேஷண மாகின்றதோ, ஆண்டுப் பாகத்தியாக லக்ஷணை சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்: காகங்களினின்றும் தயிர் இரக்ஷிக்கப்படுகவென்னும் வாக்கியத்தில் காகமென்னும் பதத்தின் சக்கியமான வாயஸமும் (காக்கையும்), அசக்கியமான பூனைமுதலியனவும் விசேஷியமாம்.

சக்கியத்தன்மை யவச்சேதக காகத்தன்மையின் வியாபகமான தயிரை யழிக்குந்தன்மை இலக்ஷியத்தன்மை யவச்சேதக விசேஷணமாம்.

ஏனெனின், தயிரை யழிப்பனவாகிய காகம் பூனை முதலியவற்றினின்றும் தயிரை இரக்ஷியென்பது வாக்கியத்தின் பொருளாம்.

ஆண்டுக் காகத்தன்மை விசிஷ்டவியக்தி காகபதத்தின் சக்கியமாம். அதில் காகத்தன்மையை விட்டுத் தயிரை யழிக்குந்தன்மை விசிஷ்டமான காகம் பூனைமுதலியவற்றின் ஞானம் இலக்ஷணையினு லுண்டாகுதலான், காக பதத்ினது வாச்சியத்

தின் ஒரு பாகமாகிய காகத்தன்மையின் நீக்கமும் வியக்திபாகத்தின் ஞானமு முண்டாகின்றன.

அங்ஙனமே, பூனைத்தன்மை முதலியவற்றின் நீக்கமும், வியக்தியின் ஞானமு முண்டாகின்றன. ஆதலாற் பாகத்தியாக லக்ஷணையாம்.

அங்ஙனமே, 'கவிகையாளர் செல்கின்றனர்' என்னும் வாக்கியத்திலும் பாகத்தியாக லக்ஷணை யுண்டு.

ஏனெனின், கவிகையுடையவர்களும் கவிகையின்றியவர்களுமாய் ஒருங்கு கூடிய புருஷர் செல்லுகின்றன ரென்பது வாக்கியத்தின் பொருளாம்.

ஆண்டுக் கவிகையாள னென்னும் பதத்திற்குக் கவிகையுள்ளாரும், கவிகை யில்லாதவருமாகிய இருவரும் விசேஷியமாவர்.

சக்கியத்தன்மை யவச்சேதகமான கவிகை யுடைமையின் வியாபகமான ஒருங்கு கூடிய தன்மை இலக்ஷியத்தன்மை யவச்சேதகமான விசேஷணமாம்.

இவ்விடத்தும் கவிகையின் சம்பந்த விசிஷ்டமான கவிகையாள னென்னும் பதத்தின் சக்கிய மெதுவோ, அதனிடத்துக் கவிகைச் சம்பந்தமாகிய சக்கியத்தன்மை யவச்சேதகத்தினை விட்டு, ஒருங்குகூடிய தன்மை விசிஷ்டனான கவிகையாளன் அவனுக் கந்நியமானவர்களென்னு மிவர்களின் ஞானம் இலக்ஷணையினா லுண்டாகுதலான், வாச்சியத்தின் ஒரு பாகமான கவிகைச் சம்பந்தத்தினை விட்டு ஒரு பாகமான புருஷனது ஞான முண்டாகின்றது. ஆதலால், பாகத்தியாக லக்ஷணையாம்.

இவ்வாறு வேதாந்த பரிபாஷையில் பாகத்தியாக லக்ஷணையின் உதாரணம் கூறியிருக்கின்றனர். அவை யாவும் சம்பிரதாயமுள்ளார் மதத்தில் அஜகல் லக்ஷணையின் உதாரணமாம்.

சிலவிடத்து அஜகல்லக்ஷணையின் உதாரணத்தில் சக்கியார்த்தம் விசேக்ஷணமாம்; சிலவிடத்து விசேஷியமாம்.

சக்கியத்தோடு கூடிய அசக்கியத்தின் தோற்றம் சமானமாம். சிறிது பேதத்தைக் கண்டு இலக்ஷணையின் பேதத்தை யங்கீகரித்தல் பயனற்றதாம்.

எல்லா ஆசிரியர்களும் அஜகல்லக்ஷணையின் உதாரணமாகக் கூறியவற்றைப் பாகத்தியாகலக்ஷணையின் உதாரணமாக இவர் கூறுவதற்கு ஆசாரியர்களது வசனத்தை விரோதித்தலே பயனும்.

சக்கியார்த்தத்தின் விசேஷணத்தன்மை விசேஷியத்தன்மைகளில் அஜகல் லக்ஷணை பாகத்தியாக லக்ஷணைகளின் பேதம் அங்கீகரிக்கின், யாண்டுச் சக்கியார்த்தத்தின் விசேஷணத்தன்மை யுளதோ, ஆண்டுப் பாகத்தியாக லக்ஷணையும், யாண்டுச் சக்கிய அசக்கியங்க ளிரண்டின் விசேஷியத்தன்மை யுளதோ, ஆண்டு அஜகல் லக்ஷணையுமாக இவ்வாறு விபரீதத்தை அங்கீகரிக்கின் ஒரு பாதகமும் இல்லை.

ஆதலால், மகாவாக்கியங்களினும், 'அவனே இத்தேவதத்தன்' என்னும் வாக்கியத்திலும் இலக்ஷணையை நிஷேதித்துப் பாகத்தியாக லக்ஷணையின் சொரூபமும் உதாரணமும் கூறுதல் தர்மராஜருக்குப் பயனின்மையாம்.

மகாவாக்கியங்களில் இலக்ஷணையின்றி நிருவாகம் கூறியதெதுவோ அதுவும் அசங்கதமாம்.

ஏனெனின், கடமுதலிய பதங்களுக்குச் சாதி விசிஷ்டத்தில் சக்தியை யங்கீகரித்து, இலக்ஷணையின்றிப் பதத்தாற் கேவல வியக்தியின் ஞானம் கூறுதல் யுக்தியில்லாததாம்.

கேவல வியக்தியில் சக்தியை யங்கீகரித்து, ஜாதி விசிஷ்டவியக்தியில் அங்கீகரியாவிடின், கேவல வியக்தியின் ஞானம் கட முதலிய பதங்களால் நிகழும்; அதனை யங்கீகரிக்கவில்லை.

ஆனால், விசிஷ்டவாசக பதத்தின் சக்தியால் விசேஷிய மாத்திரத்தின் போதம் உண்டாகின்றதென்று தர்மராஜர் எழுதியிருக்கின்றார். அது சக்திவாதமுதலிய நூல்களில் நிபுண மதியினையுடைய பண்டிதர்களுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்குவதா யிருக்கின்றது! சக்திவாதத்தில் இப்பிரசங்கம் விளக்கமாயுளது.

சில சப்தம் ஒரு தர்மவிசிஷ்ட தர்மியின் வாசகமாம்;
சில சப்தம் அநேக தர்மவிசிஷ்ட தர்மியின் வாசகமாம்;
சில சப்தம் அநேக தர்மவிசிஷ்ட அநேக தர்மியின் வாசகமாம்.

எப் பதத்திற்கு எப் பொருளில் சக்தியுண்டோ, அப் பதம் அப் பொருளின் வாசக மெனப்படும்.

எங்ஙனம்: கடபதத்திற்குக் கடத்தன்மை வடிவினதாகிய ஒரு தர்மவிசிஷ்ட தர்மியிலும், கோ பதத்திற்குக் கோத்தன்மையாகிய ஒரு தர்மவிசிஷ்ட தர்மியிலும் சக்தி யுண்டு. அது அவற்றின் வாசகமாம்.

தேனுபதத்திற்குப் பிரசவமும் கோத்தன்மையுமாகிய அநேக தர்மவிசிஷ்ட ஒரு தர்மியில் சக்தி யுளது. அது அதன் வாசகமாம்.

புஷ்பவந்த ரென்னும் பதத்திற்குச் சந்திர சூரியத்தன்மை வடிவினவாகிய அநேக தர்மவிசிஷ்ட அநேக தர்மியாகிய சந்திர சூரியர்களிடத்துச் சக்தி யுளது. அப் புஷ்பவந்த ரென்னும் பதம் சந்திர சூரியர்க ளிருவரின் வாசகமாம்.

எந்தத் தர்ம விசிஷ்டத்திற் சக்தியுளதோ அத் தர்மத்தை விட்டுக் கேவல ஆசிரயத்தின் ஞானம் இலக்ஷணையினு லுண்டாகின்றது. இலக்ஷணையின்றி யுண்டாவதில்லை.

ஆதலால், கடமுதலிய பதங்களால் கேவல வியக்தியின் போதம் இலக்ஷணையினு லுண்டாகின்றது.

அநேக தர்ம விசிஷ்ட தர்மியின் வாசகமாகிய தேனுபத மெதுவோ, அதனுல் ஒரு தர்மத்தை விட்டு ஒருதர்ம விசிஷ்ட தர்மியின் ஞானம் இலக்ஷணையின்றி யுண்டாகாது.

ஆதலால், தேனுபதத்தால் பிரசவியாத கோவின், அல்லது பிரசவித்த எருமையின் ஞானம் சக்தியினு லுண்டாகாது.

சிலவிடத்துக் கோமாத்திரத்தின் ஞானம் தேனுபதத்தானுண்டாகின்றது. அது பாகத்தியாக லக்ஷணையால் உண்டாகின்றது; சக்தியா லுண்டாவதில்லை.

அங்ஙனமே புஷ்பவந்த ரென்னும் பதத்தான் சந்திரனை விட்டுச் சூரியனது ஞானமும் சூரியனைவிட்டுச் சந்திரனது ஞானமும் சக்தியா னுண்டாகிறதில்லை. இவ்வாறு சக்திவாதத்தி லெழுதப்பட்டிருக்கின்றது. அதுவே சம்பவிக்கிறது.

சக்தியானது விசிஷ்டத்தின்கணுளது; சக்தியால் விசேஷியத்தின் ஞான முண்டாமெனக் கூறுதல் முற்றும் பொருத்த முடைய தன்று.

எந்தத் தர்மமுடைய அர்த்தத்தில் பதத்தின் சக்தி யுளதோ, அதனினும் குறைந்த அல்லது அதிகமான அர்த்தம் இலக்ஷணையினால் தோற்றும்; சக்தியினால் அந்தத் தர்ம முடைய அர்த்தமே தோற்றுமென்பது நியமம்.

வியக்தி மாத்திரத்தில் சக்தி யுண்டு விசிஷ்டத்தி லில்லை யெனக் கூறும் இத் தருமராஜரது அபிப்பிராய மெதுவோ, அது பொருந்தாது.

ஏனெனின், விசிஷ்ட வாசக பதத்தின் சக்தியால் விசேஷியத்தின் ஞான முண்டாகின்ற தென்பது தர்மராஜராற் சொல்லப்பட்டது.

வியக்திமாத்திரத்தில் சக்தி விரும்பப்பட்ட தாகுமாயின், வியக்தி மாத்திரத்தில் பதத்தின் சக்தியால் அதன் ஞான முண்டாகும்வண்ணங் கூறுவர். விசிஷ்ட வாசக பதத்தினைக் கூறார்.

வியக்தி மாத்திரத்திற் சக்தி ஒருவர் மதத்தினு மில்லை. அது எல்லோர் மதத்தினும் விருத்தமாம்.

சிரோமணி பட்டாசாரியர் வியக்திமாத்திரத்தில் சக்தி யங்கீகரித்துள ராயினும் பதத்தால் அர்த்தத்தின் ஸ்மிருதியும் சாப்தபோதமும் சாதி விசிஷ்டத்தினவாக அவர் மதத்தி லுண்டாகின்றன.

வியக்தி மாத்திரத்தின் சாப்தபோதம் சக்தியால் ஒருவர் மதத்தினும் உண்டாவதில்லை. கடமுதலிய பதங்களுக்குச் சாதி விசிஷ்டத்திலும் சக்தி யுண்டு. கேவல வியக்தியிலும் சக்தி யுண்டு.

சிலவிடத்து ஜாதி விசிஷ்டத்தின் ஞான முண்டாகின்றது.

சிலவிடத்துக் கேவல வியக்தியின் ஞான முண்டாகின்றது.

அரியென்னும் சொல் பலபொருளுடையதாதல்போல, எல்லாப் பதங்களும் பலபொரு ளுடையனவாமென் றிவ்வாறு கூறின், இப் பொருள் முற்றும் பிழைபாடுடையதாம். அவர் நூல்களினும் இப்பொரு ளில்லை. பிழைபாடுடைமைக்கு இது ஏதுவாம்:—

இலக்ஷணையினால் யாண்டு நிருவாக முண்டாகின்றதோ, ஆண்டுப் பலபொருளில் சக்தியை விடுகின்றனர்.

ஒரு பொருளில் சக்தியையும் மற்றதில் இலக்ஷணையை யும் அங்கீகரிக்கின்றனர்.

தர்மராஜரே நீல்முதலிய சொற்களுக்குக் குணத்திற் சக்தி யும், குணியில் இலக்ஷணையுமாம்; இரண்டினும் சக்தி யிருத் தல் ஓரிடத்து மில்லையென்று எழுதியிருக்கின்றனர்.

ஆதலால், இலக்ஷணையின் அச்சத்தான் பல பொருண்மை யை யங்கீகரிப்பதன்று. ஆனால், பல பொருண்மையின் அச்சத் தான் இலக்ஷணையை யங்கீகரித்தலாம்.

ஆதலால், விசிஷ்டத்தினும் சக்தி யுண்டு; வியக்திமாத் திரத்தினும் சக்தி யுண்டென்னும் பிழைப்பொருளில் தரும ராஜருக்குத் தாற்பரிய மில்லை.

ஆனால், விசிஷ்டத்தில் சகல பதங்களுக்கும் சக்தி யுண்டு. அவ் விசிஷ்டத்தில் சக்தியின் மான்மியத்தால் சில்விடத்து விசிஷ்டத்திற்கு அந்நிய பதார்த்தங்களோடு அந்நுவய முண்டா கின்றது.

சிலவிடத்து விசேஷியத்திற்கு அந்நிய பதார்த்தங்களோடு அந்நுவய முண்டாகின்றது.

யாண்டு விசிஷ்டத்தில் அந்நுவயத்திற்கு யோக்கியதை யுண்டாகின்றதோ, ஆண்டு விசிஷ்டத்தின் அந்நுவய போத மும், யாண்டு விசிஷ்டத்தில் அந்நுவயத்திற்கு யோக்கியதை யில்லையோ, ஆண்டு விசேஷிய மாத்திரத்தின் அந்நுவய போத மும் சக்தியா னுண்டாகின்றன வென்பது தர்மராஜர் மதம். அது கூடாது.

ஏனெனின், சக்தி விசிஷ்டத்திலும், இலக்ஷணை யின்றி வியக்தி மாத்திரத்தின் அந்நுவய போதமு மங்கீகரிக்கின் தேனு பதத்தானும் இலக்ஷணையின்றிப் பிரசவியாத கோவின் ஞானமும், பிரசவித்த எருமையின் ஞானமு முண்டாதல் வேண்டும்.

புஷ்பவந்தரென்னும் பதத்தால் இலக்ஷணை யின்றிச் சூரியனென்றின் அல்லது சந்திரனென்றின் ஞான முண்டாதல் வேண்டும். உண்டாகிறதில்லை யாகவின், அநித்தியம் குடம் என்றல் முதலிய வாக்கியங்களில் குடமுதலிய பதங்களுக்கு வியக்தி மாத்திரத்தில் பாகத்தியாக லக்ஷணையாம்.

வெகு பிரயோகங்களில் வியக்தி மாத்திரத்தின் ஞான முண்டாகுதலான் சக்தியினலேயே ஞான முண்டாகின்றதெனக் கூறின், அதற்குச் சமாதானம் வருமாறு:—

பிரயோக மிகுதிப்பாட்டால் பொருளில் சக்கியத்தன்மை யங்கீகரிக்கின் நீலமுதலிய பதங்களின் பிரயோக மிகுதிப்பாடு குணியி லுளது; அதுவும் சக்கியமாதல்வேண்டும்.

நீலமுதலிய பதங்களுக்குக் குணி சக்கிய மன்று, இலக்ஷியமா மென்று தருமராஜரும், வேதாந்த சூடாமணி யென்னும் உரையில் அவர் புத்திரரும் எழுதியிருக்கின்றார்கள்.

ஆதலால், யாண்டு விசிஷ்டவாசக பதத்தான் விசேஷிய மாத்திரத்தின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டு முழுவதும் பாகத்தியாக லக்ஷணையாம். ஆனால், அது நிரூட லக்ஷணையாம்.

நிரூட லக்ஷணைக்குச் சக்தியினும் சிறிதுதான் பேதம். அதன் பிரயோக மிகுதிப்பா டுண்டாகின்றது.

எப் பொருளில் சத்தப்பிரயோகத்தின் மிகுதிப்பாடுளதோ, அப் பொருளில் முழுவதும் சக்தியை யங்கீகரிக்கின் சாதிசக்தி வாதத்தில் வியக்தியின் ஞானம் முழுவதும் இலக்ஷணையா னுண்டாகின்றது. அது பொருத்தமுடைய தாகாது.

நியாயமதத்திலும் இராஜபுருஷனென்றல் முதலிய வாக்கியங்களில் இராஜனென்னும் பதத்திற்கு இராஜ சம்பந்த

முடையதன்கண் முழுதும் இலக்ஷணையாம். அது அசங்கத மாகும் (பொருத்த மின்றியதாம்).

இவ்வாற்ருன் விசிஷ்டவாசக பதத்தான் விசேஷியமாத் திரத்தின் ஞானம் இலக்ஷணையின்றி யுண்டாகாது.

ஆதலால், மகாவாக்கியங்களில் இலக்ஷணை யுண்டென்னும் சாம்பிரதாயிகமதமே ஜிஞ்ஞாசுவுக்குக் கொள்ளத்தக்கதாம்.

வேதாந்த வாக்கியங்களான் அசங்கப் பிரஹ்மத்தின் ஆத்ம ரூபமான சாக்ஷாத்கார முண்டாகின்றது. அதனுல் பிரவிருத்தி நிவிருத்தியின்றிய பிரஹ்மவடிவமாய் நிலைத்தலாகிய பய னுண்டாகின்றது. இது அத்வைத வாதத்தின் சித்தாந்தமாம்.

46. மீமாம்ஸக மதம்

அதில் மீமாம்ஸையை யநுசரித்தவர்கள் சங்கை யிதுவாம்:—

சகல வேதமும் பிரவிருத்தி அல்லது நிவிருத்தியை யறி விப்பனவாம்.

பிரவிருத்தி நிவிருத்திக ளின்றிய பொருளை வேதம் அறி விப்பதில்லை. அறிவிக்குமாயின், பயனின்றிய பொருளை யறி விக்கும் வேதம் அப்பிரமாணமாகும்.

ஆதலால், விதி நிஷேத மின்றிய வேதாந்த வாக்கியங் களுக்கு விதிவாக்கியங்களோடு சம்பந்த மிருத்தலின் விதிவாக் கியங்களுக்கு வேதாந்தவாக்கியம் சேஷ (சாதன) மாம்.

சில வாக்கியங்கள் கர்மஞ் செய்வோனது சொரூபத்தை யறிவிப்பனவாம். அது துவம்பதார்த்தத்தினை யறிவிக்கும் பஞ்ச கோச வாக்கியமாம்.

சில வாக்கியங்கள் கர்ம சேஷ (சாதன)மான தேவதை யின் சொரூபத்தை யறிவிப்பனவாம். அது தற்பதார்த்தத்தை யறிவிக்கும் வாக்கியமாம்.

ஜீவப் பிரஹ்மங்களின் அபேதத்தை யறிவிக்கும் வாக்கி யங்களுக்குப் பொரு ளிதுவாம்:—

கர்மஞ் செய்யுஞ் சீவன் தெய்வத்தன்மையை யடைகின் றுன். ஆதலால், கர்மம் அவசியம் செய்யத் தக்கதாம்.

இவ்வாறு கர்மத்தின் பயனைத் துதித்தலான அபேதத்தை யறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாதரூபமாம்.

மீமாம்ஸை மதத்தில் தேவதை மந்திரமயமாம்.

விக்கிரக முடையதும் ஐசுவரிய முடையதுமாகிய ஒரு தேவதை யில்லையாகவின் தெய்வத்தன்மையின் அடைவைச் சொல்லுதல் சம்பவியாது; என்றாலும் சம்பாவனை மாத்திரத்தால் கர்ம பலத்தின் ஸ்துதியாம்.

அங்ஙனமன்றோ? கிருஷ்ணப் பிரபையின் உவமை கோடி சூரியப் பிரபையாகச் சொல்லப்பட்டது. ஆண்டுக் கோடி சூரியப் பிரபை அப்பிரசித்தமாம். என்றாலும், சம்பாவனையால் உவமை சொல்லப்பட்டது.

கோடி சூரியனது பிரபை ஓரிடத் திருக்குமாயின் கிருஷ்ணப் பிரபையின் உவமை சம்பவிக்கும்.

இங்ஙனமே சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவுடைமை) முதலிய குணவிசிஷ்ட பரமைசுவரியமுடைய ஓர் அற்புத தெய்வ மிருக்கின், அப்படிப்பட்ட சொரூபம் கர்மஞ் செய்வோனுக்குண்டாம்.

இவ்வாறு சம்பாவனையால் தெய்வத்தன்மையின் அடைவு சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாற்றான் எல்லா வேதமும், சாக்ஷாத்தாகவாவது, பரம்பரையாகவாவது பிரவிருத்தி நிவிருத்திகளை யறிவிப்பனவாம்.

பிரவிருத்தியில் உபயோகமின்றிய பிரஹ்மஞானம் வேத வாக்கியங்களால் சம்பவியாது.

47. பிராசீன விருத்திகாரர் மதம்

பிராசீன விருத்திகாரர் வேதாந்தி யெனப்படுவர். அவர் மதம் இதுவாம்:—

கர்மவிதிப் பிரகரணத்தில் வேதாந்த வாக்கியங்க ளில்லை; ஆதலால், பின்னப் பிரகரணத்தில் படிக்கப்பட்ட வேதாந்த வாக்கியம் கர்மவிதியின் சேஷ (சாதன) மன்று.

உபாசனை விதி வேதாந்தப் பிரகரணத்தி லுளது. ஆதலால், சகல வேதாந்த வாக்கியங்களும் உபாசனா விதியிற் சேஷ (சாதன) மாம்.

துவம்பதார்த்தத்தை யறிவிக்கும் வாக்கியம் உபாசகனது சொரூபத்தை யறிவிக்கின்றது;

தத்பதார்த்தத்தை யறிவிக்கும் வாக்கியம் உபாசியத்தின் சொரூபத்தை யூறிவிக்கின்றது.

துவம்பதார்த்த தத்பதார்த்தங்களின் அபேதத்தை யறிவிக்கும் வாக்கியங்களுக்குப் பொருளிதுவாம்:—

சம்சார தசையில் ஜீவப் பிரஹ்மங்களுக்குப் பேதமுண்டு.

உபாசனையின் வலியால் மோக்ஷ தசையில் அபேத முண்டாகின்றது.

அத்வைத வாதத்திலோ என்றும் அபேதமாம். பேதத் தோற்றம் சம்சாரதசையினும் பிரம (மயக்க) வடிவினதாம்.

இம் மதத்தில் சம்சாரதசையில் பேதமும், மோக்ஷதசையில் அபேதமு முண்டாகின்றன.

மோக்ஷதசையினும் ஜீவப் பிரஹ்மங்களின் பேதத்தை யங்கீகரிப்பவர் இம் மதத்தில் தோஷம் கூறுகின்றனர்.

ஜீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதம் சொரூபமாக வுளதா?

அல்லது உபாதியானுகியதாயுளதா?

சொரூபமாகப் பேத மங்கீகரிக்கின் எத்துணைச் சொரூப முளதோ, அத்துணைப் பேதத்தின் நிவிருத்தி யுண்டாகாது.

மோக்ஷதசையில் பேதம் நீங்குதற்பொருட்டு ஜீவனது சொரூபத்தின் நிவிருத்தியை யங்கீகரிக்கின், சித்தாந்தத்தின் நீக்கமும் மோக்ஷத்திற்குப் புருஷார்த்தத்தன்மை யின்மையு முண்டாகும்.

ஏனெனின், மோக்ஷதசையில் சொரூபத்தின் நிவிருத்தியை விருத்திகாரர் அங்கீகரிக்கவில்லை.

ஒருவர் சித்தாந்தத்தினும் மோக்ஷத்தில் சொரூபத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை.

யாவரையினும் சொரூப நிவிருத்தியை மோக்ஷதசையில் அங்கீகரிக்கின் சொரூப நிவிருத்தியில் ஒரு புருஷனுக்கும் அபிலாஷை யுண்டாகாது.

ஆதலால், மோக்ஷத்தில் புருஷார்த்தத்தன்மையின் இன்மை யுண்டாகும்.

புருஷனது அபிலாஷைக்கு விஷயம் எதுவோ அது புருஷார்த்த மெனப்படும்.

ஆதலால், ஜீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதம் சொரூபமாக அங்கீகரிக்கின், மோக்ஷதசையில் அபேதம் சம்பவியாது.

ஜீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதத்தை உபாதியாலாகிய தாகக் கூறின் உபாதி நிவிருத்தியால் மோக்ஷதசையில் அபேதமே சம்பவிக்கும்.

ஆனால், அத்வைதமதத்தினும் இம் மதத்திற்குப் பேதம் சித்திக்காது.

ஏனெனின், அத்வைத வாதத்தினும் உபாதியாலாகிய பேதம் அங்கீகாரமாம். உபாதியாலாகிய பேதமும் மித்தையாகும். அதன் நிவிருத்தியும் அத்வைதவாதத்தைப்போலக் கேவல ஞானத்தால் அங்கீகரிக்கத் தக்கதாம். மோக்ஷத்தின் பொருட்டு உபாசனைக் கிரியை பயனற்றதாகும்.

விருத்திகாரர் மதத்தில் நையாயிகர் முதலியோர் இக்குதர்க்கம் செய்கின்றனர். அது பொருந்தாது.

ஏனெனின், ஜீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதம் சொரூபமா யில்லை; உபாதியாலாகியதாயுளது.

உபாதி மித்தையா மாயின், உபாதியாலாகிய பேதமும் மித்தையாம். அதன் நிவிருத்தி கேவல ஞானத்தாலாம்.

விருத்திகாரர் மதத்தில் ஆகாயமுதற் பொருள்கள் பிரளய பரியந்தம் நிலைத்துள்ளனவாம். அவை மித்தை யன்று.

அங்ஙனமே, ஜீவனது உபாதியாகிய அந்தக்கரண முதலியனவும் சத்தியமாம். ஞானமாத்திரத்தான் அவற்றின் நிவிருத்தி யுண்டாகிறதில்லை.

மோக்ஷதசையில் அந்தக்கரணமுதலியவற்றின் நாச முண்டாகின்றதாகலின், துவம்ஸ சூனியத்தன்மை வடிவினதாகிய நித்தியத்தன்மை விருத்திகாரர் மதத்தினும் பொருந்தாதாயினும், ஞானத்தாற் பாதிக்கப்படுதற்றன்மை யின்மைவடிவினதாகிய நித்தியத்தன்மை விருத்திகாரர் மதத்தில் சகல பதார்த்தங்களினும் சம்பவிக்கின்றது.

இவ்வாற்ருன் உபாதி சத்தியமாம்; அச் சத்திய உபாதியானுகிய பேதமும் சத்தியமாம்.

ஜலசையோகமாகிய சத்திய உபாதியானுகிய சீதளத்தன்மை பிருதிவியிற் சத்தியமாம்; அங்ஙனமே, சத்திய வுபாதியானுய பேதமும் சத்தியமாம்.

அச் சத்திய பேதத்தின் நிவிருத்தியும் உபாதியின் நிவிருத்தியும் ஞானமாத்திரத்தா னுண்டாகாது.

ஆனுல், நித்திய கர்ம வுபாசனைகளோடு கூடிய ஞானத்தான் உபாதி நீங்குதலான் மோக்ஷதசையில் பேதம் நிவிருத்தியாகின்றது.

அத்வைத மதத்தில் சகல வுபாதிகளும் பேதமும் மித்தையாம். அவற்றிற்கு ஞானமாத்திரத்தால் நிவிருத்தி யுண்டாகின்றது.

சம்சாரதசையிலும் மித்தையாகிய உபாதியால் பாரமார்த்திகமான அத்வைதத்தன்மை கெடாது.

ஆதலால், அத்வைதமதத்தோடு விருத்திகாரர்மதத்திற்குப் பேத முண்டு.

இவ்வாற்ருல் விருத்திகாரர் மதத்தில் பேதத்தை யறிவிப்பனவும் அபேதத்தை யறிவிப்பனவுமாகிய வாக்கியங்களின் கதி சம்பவிக்கின்றது.

சீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதத்தை யறிவிக்கும் வாக்கியமோ சம்சாரிக ஜீவனது சொரூபத்தை யறிவிக்கின்றது.

அபேதத்தை யறிவிக்கும் வாக்கியம் முக்தஜீவனது சொரூபத்தை யறிவிக்கின்றது.

முக்ததசையினும் பேதத்தை யங்கீகரிக்கின், அவர்கள் மதத்தில் அபேதத்தை யறிவிக்கும் வாக்கியங்களுக்குப் பாத முண்டாகின்றது.

அத்வைத வாதத்தில் எப்போதும் அபேதம் அங்கீகார மாம்.

அம் மதத்தில் ஜீவப் பிரஹ்மங்களின் பேதத்தை யறிவிக்கும் வாக்கியங்களுக்குப் பாத முண்டாகின்றது. ஆதலால், சம்ஸாரதசையில் பேதமும் முக்திதசையில் அபேதமும் அங்கீகரித்தல் தகுதியாம்.

இம் மதமும் நலமுடைய தன்று. ஏனெனின், சகல வேதாந்த வாக்கியங்களும் தள்ளத்தகாததும் கொள்ளத்தகாததுமாகிய பிரஹ்மத்தை யறிவிப்பனவாம். விதியின் சேஷ(சாதன)மான பொருளை யறிவிப்பன வாகா.

இவ் வர்த்தத்தினை உத்தர மீமாம்ஸையின் முதல் அத்தியாயத்தின் நான்காவது சூத்திரத்தின் வியாக்யானத்தில் பாஷியகாரர் விஸ்தாரமாய் எழுதியிருக்கின்றனர்.

சில மந்த மதியுள்ள புருடர்க்கு மீமாம்ஸை விருத்திகாரர் முதலியோர் மதத்தில் அதிக சிரத்தையுண்டாய்ப் புத்தி சாஸ்திரத்தில் பிரவேசிக்குமாயின் பாமதிநிபந்தனம் பிரஹ்ம வித்தியாபரணமுதலிய வியாக்யானங்களோடு கூடிய பாஷிய விசாரத்தால் புத்தி தோஷத்தை நிவிருத்தி செய்யவேண்டும். சூத்திர பாஷிய விசாரத்தில் புத்தி சாமர்த்திய முடைய தன்றாயின், அவன் பாஷியகாரரது வியாக்யானங்களோடு கூடிய உபநிடத நூல்களை விசாரிக்கக்கடவன்.

அவற்றின் தாற்பரியம் தள்ளத்தகாததும் கொள்ளத் தகாததுமான பிரஹ்மஞானத்தின்கண்ணும். உபாசனைவிதியில் தாற்பரிய மில்லை.

ஏனெனின், இலெளகிக வாக்கியத்தின் தாற்பரியமோ பிரகாண முதலியவற்றான் அறியப்படுகின்றது. அந்தப் பிரகாண முதலியன காவியப்பிரகாச காவியப்பிரதீபங்களில் எழுதப்பட்டுள்ளன.

48. ஆறு வைதிக வாக்கியங்களினது தாற்பரியத்தின் இலிங்கம்

வைதிக வாக்கியங்களின் தாற்பரிய வுணர்ச்சிக்கு ஏது உபக்கிரமோபசங்காரமுதலிய ஆறும்.

(1) *உபக்கிரம உபசங்காரங்களின் ஒரு வடிவாந்தன்மை,*
(2) *அப்பியாசம்,*
(3) *அபூர்வதை,*
(4) *பலம்,*
(5) *அர்த்தவாதம்,*
(6) *உபபத்தி* யென்னும் ஆறும் வைதிக வாக்கியங்களினது தாற்பரியத்தின் இலிங்கமாம்.

இவற்ருல் வைதிக வாக்கியங்களின் தாற்பரியம் அறியப்படுதலால் இவை தாற்பரியத்தின் இலிங்க மெனப்படுகின்றன.

தூமத்தான் வன்னி யறியப்படுதலால் தூமம் வன்னியின் இலிங்க மெனப்படும்.

உபநிடதங்கட்கு வேருய்க் கர்மகாண்டத்தை யறிவிக்கும் வேதத்திற்குத் தாற்பரியம் கர்மவிதியின்கண்ணும்.

உபக்கிரமோபசங்கார முதலியன பூர்வ வேதத்தின் கர்மவிதியின்கண்ணதாதல் ஜைமினியாற் செய்யப்பட்ட பன்னிரண்டத்தியாயமுள்ள பூர்வமீமாம்ஸையின்கண் தெளிவாயுளது.

உபநிஷத வடிவமான வேதத்தின் உபக்கிரமோபசங்கார முதலியன அத்துவிதீயப் பிரஹ்மத்தின்கண்ணவாம். ஆதலால், அத்துவிதீயப் பிரஹ்மத்தில் அவற்றிற்குத் தாற்பரியமாம்.

எங்ஙனம்: சாந்தோக்கியத்தின் ஆருவது அத்தியாயத்தின் உபக்கிரமத்தில் அதாவது ஆரம்பத்தில் அத்விதீயப் பிரஹ்ம முளது. உபசங்காரத்திலும் அதாவது முடிவிலும் அத்விதீயப்பிரஹ்ம முளது.

எப்பொருள் ஆரம்பத்தி லுளதோ அதுவே அந்தத்தினுமிருக்குமாயின், ஆண்டு உபக்கிரமோபசங்காரங்களின் ஒரு வடிவாந்தன்மை சொல்லப்படுகின்றது.

அடிக்கடி சொல்லுதற்கு அப்பியாசமென்று பெயர்.

சாந்தோக்கியத்தின் ஆறுவது அத்தியாயத்தில் ஒன்பது முறை தத்துவமசி வாக்கிய முளது. ஆகலின், அத்துவிதீயப் பிரஹ்மத்தில் அப்பியாசமாம்.

பிரமாணாந்தர (வேறு பிரமாண)ங்களால் அறியப்படாத தன்மையினை அபூர்வதை யென்பர்.

உபநிடத வடிவமான சத்தப்பிரமாணத்தின் வேறான பிரமாணங்களுக்கு அத்துவிதீயப் பிரஹ்மம் விஷயமாத லில்லை.

ஆகலின், அத்துவிதீயப் பிரஹ்மத்தில் அறியப்படாத தன்மை வடிவினதாகிய அபூர்வதை யுளது. அத்துவிதீயப் பிரஹ்மத்தின் ஞானத்தால் மூலத்தோடு கூடிய சோகமோகங்களின் நிவிருத்தி பல மெனப்படுகின்றது.

ஸ்துதியை அல்லது நிந்தையை யறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாத மெனப்படும்.

அத்துவிதீயப் பிரஹ்மஞானத்தின் ஸ்துதி உபநிடதங்களில் தெளிவாயுளது.

கூறும் பொருளிற்கு அநுகூலமான யுக்தியினை உபபத்தி யென்பர். சாந்தோக்கியத்தில் சகல பதார்த்தங்களுக்கும் பிரஹ்மத்தோடு அபேதம் சொல்லுதற்பொருட்டுக் காரியத்திற்குக் காரணத்தோடு அபேதத்தைப் பிரதிபாதித்தல் அநேக திருஷ்டாந்தங்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாறே ஆறு இலிங்கங்களான் எல்லா வுபநிடதங்களுக்கும் தாற்பரியம் அத்துவிதீயப் பிரஹ்மத்தின்கண்ணும்.

இந்த ஆறு இலிங்கங்களையும் உபநிடதங்களின் வியாக்கியானங்களில் பாஷ்யகாரர் தெளிவாய் எழுதியிருக்கின்றனர். அவற்றில் வேதாந்த வாக்கியங்களுக்கு அத்துவிதீயப் பிரஹ்மத்தில் தாற்பரிய நிச்சய முண்டாகின்றது.

எப்பொருளில் சொல்லுவானது கருத்தின் உணர்ச்சி யுண்டாகின்றதோ, அப்பொருளின் உணர்ச்சி கேட்பவனுக்குச் சத்தத்தா லுண்டாகின்றது.

ஏனெனின், சத்தத்தினது சக்தியின் அல்லது இலக்ஷணு விருத்தியின் ஞானம் சாப்தபோதத்திற் (சொல்லுணர்ச்சிக்) குக் காரணமாம்.

49. அவாய்நிலைமுதலிய நான்கும் சாப்தபோதத்தின் சககாரிகளா மெனல்

(1) அவாய்நிலை (ஆகாங்க்ஷை) யுணர்வு, (2) தகுதி (யோக்கியதை) யுணர்வு, (3) தாற்பரிய வுணர்வு, (4) ஆசத்தி (அண்மை) யென்னும் நான்கும் சககாரிகளாம்.

ஒரு பதார்த்தத்திற்கு வேறு பதார்த்தத்தோடு கொண்டு கூட்டுணர்வின்மை அவாய்நிலை (ஆகாங்க்ஷை) யெனப்படும்.

இவன் வருகின்றான் புத்திரன் இராஜனது புருஷன் நீக்கப் படுக வென்னும் வாக்கியத்தில் இராஜ பதார்த்தத்திற்குப் புத்திர பதார்த்தத்தோடு கொண்டுகூட்டுணர் வுண்டாகிய பின்னர்ப் புருஷனென்னும் பதார்த்தத்தோடு கொண்டுகூட்டுணர் வின்மையால் (அந்நுவயபோத மின்மையால்) சாப்தபோத முண்டாகிறதில்லை; ஒரு பதார்த்தத்தோடு அந்நுவய முண்டாகிய பின்னர் அந்நுவய போதமின்மை வடிவினதாகிய அவாய் நிலை யின்மையான்.

ஸ்தூலக் கிரமம் இதுவாம்:— அவாய்நிலை என்பது இச்சைக்காம். அது சேதனத்தி லிருக்கினும் பதத்திற்கும் அர்த்தத்திற்கும் எவ்வளவு காலம் வேறு பதார்த்தங்களோடு அந்நுவயத்தின் ஞான முண்டாகவில்லையோ, அவ்வுளவு காலம் தனது அர்த்தத்தின் அந்நுவயத்தின் பொருட்டு வேறு பதத்தின் இச்சை சமானமாய்த் தோற்றுகின்றது.

அந்நுவயபோத முண்டாகிய பின்னர்த் தோற்றுத தெது வோ அது அவாய்நிலை யெனப்படும். அவாய்நிலையின் சொரூபம் சூக்ஷ்மக் கிரமமாக நூல்களில் எழுதப்பட்டுளது. அது கடினமாகலின் அதன் தன்மைமாத்திரம் அறிவிக்கப்பட்டது.

இராஜனது புத்திரன் வருகின்றான் என்றிவ்வாறு இராஜ பதார்த்தத்திற்குப் புத்திர பதார்த்தத்தோடு அந்நுவய போத முண்டாகிய பின்னர்ப் புருஷ பதார்த்தத்தோடு அந்நுவய போதத்திற்கு ஏதுவான அவாய்நிலை இராஜ பதார்த்தத்தி லில்லை

யாகலின், இராஜனது புருஷனை நீக்கிவிடு என்னும் ஞான முண்டாகிறதில்லை. ஆனால், புருஷனை நீக்கிவிடு என்னும் ஞான முண்டாகின்றது.

அவாய்நிலையுணர்வு சாப்தபோதத்திற்கு ஏது வாகாவிடின் இராஜாவின் புத்திரன் வருகின்றான்; இராஜாவின் புருஷனை நீக்கிவிடு என்னும் ஞான முண்டாதல் வேண்டும். ஆதலால், அவாய்நிலை யுணர்வு சாப்தபோதத்திற்கு ஏதுவாம்.

ஒரு பதார்த்தத்திற்கு வேறு பதார்த்தத்தோ டுள்ள சம்பந்தம் யோக்கியதை (தகுதி) யெனப்படும். தகுதியில்லா விடத்துச் சொல்லுணர்ச்சி யுண்டாகாது.

தீயால் நனைக்கின்றா னென்னும் வாக்கியத்தில் வன்னியின் கண்ணுள்ள காரணத்தன்மை வடிவினதாய மூன்றாம் வேற்றுமைப் பொருட்குத் தெளித்தற் பொருளில் நிரூபிக்குந் தன்மைச் சம்பந்த வடிவினதாய தகுதி யில்லை. ஆதலால், சாப்தபோத முண்டாகிறதில்லை.

சாப்தபோதத்தில் தகுதி யேதுவாகாவிடின், தீயால் நனைக்கின்றான் என்னும் வாக்கியத்தில் சாப்தபோத முண்டாதல்வேண்டும்.

சொல்லுவோனது இச்சையைத் தாற்பரிய மென்பர்.

எவ் வர்த்தத்தில் தாற்பரியஞான முண்டாகவில்லையோ, அதன் சாப்தபோத முண்டாகாது.

எங்ஙனம்: மாவைக் கொண்டுவா வென்னும் வாக்கியத்தான் போஜன சமயத்தில் சொல்லுவோனது இச்சையாகிய தாற்பரியம் குதிரையின்கண் நிகழாதாகலின் குதிரையின் சாப்தபோத முண்டாகாது.

அங்ஙனமே நடக்கும் சமயத்தில் * மாவின் சாப்தபோத முண்டாகிறதில்லை.

தாற்பரியஞானம் சாப்தபோதத்திற்கு ஏதுவாகாவிடின், மாவைக் கொண்டுவா வென்னும் வாக்கியத்தான் போஜன சமயத்தில் குதிரையின் ஞானமும், நடத்தற் சமயத்தில் மாவின்

* மா=மாம்பழம், மாவு.

ஞானமு முண்டாதல் வேண்டும். ஆதலால், சாப்தபோதத்தில் தாற்பரியஞானம் ஏதுவாம்.

ஈண்டிவ்வாறு சங்கை யுண்டாகின்றது:—

சொல்லுவானது இச்சையினைத் தாற்பரிய மென்பர்.

கிளியின் வாக்கியத்தில் சொல்லுவானது இச்சை யில்லை. கிளியின் வாக்கியத்தால் சாப்தபோத முண்டாகின்ற தாகலின் தாற்பரியஞானம் சாப்தபோதத்திற் கேதுவாதல் சம்பவியாது.

மீமாம்ஸகர் வேதத்தை நித்தியமாகக் கொள்ளுகின்றனர்.
அவர்கள் மதத்தில் ஈசுவரனது அங்கீகார மில்லை.
வேறெந்தச் சீவனும் வேதத்திற்குக் கர்த்தாவல்லன்.
ஆனால் வேதம் நித்தியமாம்.
அவர்களுக்குச் சொல்லுவோனது இச்சையாகிய தாற்பரியத்தின் ஞானம் வைதிக வாக்கியங்களிற் சம்பவியாது.

இதற்குச் சமாதானம் மஞ்சூஷாவென்னும் நூலில்: நாகோஜி பட்டர் இவ்வாறு எழுதியிருக்கின்றனர்:—

சகல சாப்தபோதத்திற்கும் ஏது தாற்பரியஞான மாகு மாயின், இந்தத் தோஷ முண்டாம்.

சகல சாப்தத்திற்கும் ஏது தாற்பரியஞானமன்று. ஆனால், நாநார்த்த பதங்(பலபொருட்சொற்)களோடு கூடிய வாக்கிய ஜந்நிய சாப்தபோதத்திற்கு ஏது தாற்பரிய ஞானமாம். ஆதலால், தோஷ மில்லை.

விவரண்கிரந்தத்தில் பிரகாசாத்ம ஸ்ரீசரணர் தாற்பரிய ஞானம் சாப்தபோதத்திற்குக் காரணமாதலை முற்றும் நிஷேதித்திருக்கின்றனர். அவ் விருவர் வார்த்தையும் நல்முடைய தன்று.

ஏனெனின், இவ் விருவர் மதத்தினும் வேத வாக்கியங்களின் தாற்பரிய நிச்சயத்திற்கு ஏதுவாகிய பூர்வ மீமாம்ஸை உத்தர மீமாம்ஸைகள் பயனில்லாதனவாம். ஆதலால், தாற்பரிய நிச்சயம் சகல சாப்தபோதத்திற்கும் ஏதுவாகும்.

கிளி வாக்கியத்தினும் மீமாம்ஸகருக்கும் தாற்பரியஞானம் சம்பவிக்கவில்லை யென்பதற்குச் சமாதானம் இதுவாம்:—

மீமாம்ஸகர்களுக்கு வேதஞ் செய்தவனது தாற்பரிய ஞானமோ சம்பவியாது.

ஆனால், வேதமுரைப்பவனாகிய பாடகனது தாற்பரிய ஞானம் சம்பவிக்கின்றது.

கிளி வாக்கியத்தில் தாற்பரிய ஞானம் சம்பவியாவிடினும் கேட்பவனுக்கு அறிவிக்கும் விருப்பால் எவ் வாக்கியம் உச்சரிக்கப்படுகின்றதோ, அது அறிவித்தல் வேட்கையி னாதீனமான வாக்கிய மெனப்படும்.

கிளியின் வாக்கியம் அறிவித்தல் வேட்கை யாதீன மன்று. வேதவாக்கியமும் பாடகனது அறிவித்தல் வேட்கை யாதீனமாம். அறிவித்தல் வேட்கை யாதீன வாக்கியத்தாற் றோன்றும் ஞானத்தில் தாற்பரிய ஞானம் காரணமாம்.

கிளிக்கு அறிவித்தல் வேட்கை யில்லையாகலின் கிளி வாக்கியத்தாற் றோன்றும் ஞானத்தில் தாற்பரிய ஞானம் காரண மன்று.

வேதாந்த பரிபாஷையில் கிளிவாக்கியத்தினும் தாற்பரியம் கொள்ளப்பட்டிருக்கின்றது. அது சொல்லுவோனது இச்சையாகிய தாற்பரிய மன்று.

ஆனால், இஷ்டமான அர்த்தத்தின் ஞானத்தைப் பிறப்பித்தலிற் றகுதி தாற்பரியமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ் விஷயத்திற் சங்கை சமாதானம் மேலும் எழுதப்பட்டுளது. அது முழுவதும் பயனில்லாததாம்.

தாற்பரியத்தின் பொருள் சொல்லுவோனது இச்சையென்பது பிரசித்தம். அதனைவிட்டுத் தாற்பரியத்திற்குப் பாரிபாஷிகமான பொருளைக் கொண்டு கிளிவாக்கியத்தினும் தாற்பரியத்தைச் சொல்லுவதற்கு உலகப் பிரசித்தியின் விரோதத்தை யன்றி வேறு பய னில்லை. உலகப் பிரசித்தியின் விரோத மாத்திரமே பயனாம்.

ஏனெனின், சுக (கிளி) வாக்கியம் தாற்பரிய முடையதன்றென்பது உலக முழுவதினும் அநுபவப் பிரசித்தமாம்.

சுகவாக்கியம் தாற்பரிய முடையது என்று ஒருவரும் சொல்லார்.

ஆதலால், அறிவித்தல் வேட்கை யாதீன வாக்கியத்தாற் ருேன்றும் சாப்தபோதத்தில் தாற்பரிய ஞானம் ஏதுவன்று; ஞானமின்றிய புருட னுச்சரித்த வாக்கியத்தால் சாப்தபோத முண்டாகின்றது. ஆனுல், அவ் வாக்கியம் அறிவித்தல் வேட்கை யாதீனமன்று. ஆதலால், அவ்வர்த்த ஞானத்தில் தாற்பரிய ஞானம் ஏதுவன்று.

மௌநியாற் செய்யப்பட்ட செய்யுளில் சொல்லுவோனது இச்சை தார்பரியமன்று.

ஏனெனின், உச்சாரணத்தைச் செய்பவன் சொல்லுவோனெனப்படுவன். மௌநி உச்சாரணஞ்செய்யா னுகவின் மௌநியின் இச்சை சொல்லுவோனது இச்சை யன்றென்று வேதாந்த பரிபாஷையின் உரையில் தர்மராஜருடைய புத்திரர் எழுதியிருக்கின்றனர். அது சப்தரத்ந வியாகரண நூலால் கண்டிக்கப் பட்டுளது. ஆண்டு இது பிரசங்கமாம்:—

உச்சரித்த சத்தத்தாற் போத முண்டாகின்றது, உச்சரித்த லின்றிச் சாப்தபோத முண்டாகிறதில்லை என்னும் அர்த்தத்தை யறிவிக்கும் மகா பாஷியத்தின் வாக்கியத்தையெழுதி உச்சரித்த லின்றிச் சாப்தபோதம் நிகழாதெனின், ஏகாந்தத்தில் உச்சரித்தலின்றிப் புத்தகம் பார்ப்பவனுக்குச் சாப்தபோத முண்டாக லாகாதென்னும் சங்கையை யெழுதியிருக்கின்றனர். அதற்கு, ஆண்டும் புத்தகம் பார்ப்பவன் சூக்கும உச்சாரணம் செய்கின்ருன் என்று சமாதானம் எழுதியிருக்கின்ருர். இவ் வாற்ருன் மௌநியால் எழுதப்பட்ட சுலோகத்தின் உச்சரித்தலைச் செய்பவன் மௌநியாவன்.

அபேத ரத்நகாரர் மதம் இதுவாம்:—

யாண்டுத் தாற்பரியத்தின் சந்தேக முண்டாகின்றதோ, ஆண்டுச் சாப்தபோத முண்டாகிறதில்லை.

அன்றியும், யாண்டுத் தாற்பரியத்தினது இன்மையின் நிச்சய முண்டாகின்றதோ, ஆண்டும் சாப்தபோத முண்டாகிறதில்லை.

யாண்டு முதலில் தாற்பரியத்தின் சந்தேக முண்டாகி, அல்லது தாற்பரிய அபாவத்தின் நிச்சய முண்டாகிப் பிற்காலத்தில் தாற்பரியத்தின் நிச்சய முண்டாய்விடுகின்றதோ, ஆண்டுச் சாப்தபோத முண்டாகின்றது.

ஆதலால், தாற்பரியத்தின் சந்தேகத்திற்குப் பிற்காலத்து நிகழும் சாப்தபோதத்தின்கண்ணும், தாற்பரியாபாவத்தின் நிச்சயத்திற்குப் பிற்காலத்து நிகழும் சாப்தபோதத்தின்கண்ணும் தாற்பரிய ஞானம் ஏதுவாம்; எல்லாச் சாப்தபோதத்தினும் ஏதுவாகாது என்பதாம்.

இம் மதத்தில் தோஷம் வேதாந்த சிகாமணியில் எழுதப்பட்டிருக்கின்றது. கண்டனத்தில் ஆக்கிரக மில்லையாகலின் இங்குத் தோஷ மெழுதப்படவில்லை.

விவரணகாரர் மஞ்சூஷாகாரர் மதத்தில் எங்ஙனம் பூர்வ உத்தர மீமாம்ஸைகள் பயனற்றவை யாமோ, அங்ஙனம் இம் மதத்தில் மீமாம்ஸை பயனற்றதாகாது.

ஏனெனின், இம் மதத்தில் தாற்பரிய சந்தேகத்திற்குப் பின்னிகழும் சாப்தபோதத்திற்குத் தாற்பரிய ஞானம் ஏதுவாம்.

வேதவாக்கியங்களில் தாற்பரியத்தின் சந்தேக முண்டாகின்றது. அதன் நிவிருத்தி மீமாம்ஸையான் உண்டாகும்.

வேதவாக்கியங்களில் சந்தேகமும் அதன் நிவிருத்தியும் எங்ஙன முண்டாகுமோ, அது பூர்வ உத்தரமீமாம்ஸைகளில் ஸ்பஷ்டமாம்.

இவ்வாற்றான் அவாய்நிலை, யோக்கியதை, தாற்பரியமென்பன சாப்தபோதத்திற்கு ஏதுவாம்.

ஆனால் அவாய்நிலை முதலியவற்றின் ஞானம் ஏதுவாம்; சொரூபமாக அவாய்நிலைமுதலியன ஏதுவாகா.

ஏனெனின், யாண்டு அவாய்நிலை முதலியவை யின்றிய வாக்கியங்களில் அவாய்நிலைமுதலியவற்றின் மயக்க முண்டாகின்றதோ, ஆண்டுச் சாப்தபோத முண்டாகின்றது.

சொரூபமாக அவாய்நிலை முதலியன ஏதுவாதலை யங்கீகரிக்கின், அவாய்நிலை முதலியவற்றின் பிரமஸ்தலத்தில் சாப்த போதம் உண்டாகாதிருத்தல்வேண்டும்.

அவாய்நிலைமுதலியவற்றின் ஞானம் ஏதுவாதலை யங்கீகரிக்கின், சாப்தபோதத்திற்குக் காரணம் பிரமவடிவ ஞானமாயிருத்தலின் சாப்தபோதம் சம்பவிக்கும்.

சொரூபமாக அவாய்நிலைமுதலியன ஏதுவாதலை யங்கீகரிக்கின், யாண்டு அவாய்நிலை முதலியனவிருந்தும் கேட்பவனுக்கு இவ் வாக்கியம் அவாய்நிலை முதலியவை யின்றியதெனப் பிரம முண்டாகின்றதோ, ஆண்டும் சாப்த முண்டாதல் வேண்டும்; அங்ஙன முண்டாகிறதில்லை. ஆதலால், அவாய்நிலை முதலியவற்றின் ஞானம் ஏதுவாம்.

அந்த ஞானம் பிரமமாயினு மாகுக, அல்லது பிரமை யாயினு மாகுக. சாப்தபோதத்திற்கு ஏது பிரமப் பிரமைகளின் சாதாரணமான அவாய்நிலைமுதலியவற்றின் ஞானமாம்.

பிரம சாமக்கிரியால் சாப்தபோதம் பிரம மாகிறதில்லை; விஷயத்தின் அபாவத்தால் சாப்தபோதம் பிரம மாகின்றது.

எங்ஙனம்: வன்னியின் வியபிசாரியாகிய பிருதிவித்தன்மையில் வன்னி வியாப்பியத்தன்மைப் பிரம முண்டாய்ப் பிருதிவித்தன்மை ஏதுவால் வன்னியுடைய பர்வதத்தில் வன்னியின் அநுமிதிஞான முண்டாகின்றது. அது விஷயத்தின் இருப்பால் பிரமை யாகின்றது.

விஷயமின்றிய விடத்தில் வியபிசாரி யேதுவால் அநுமிதிப் பிரம முண்டாகின்றது.

ஆதலால், விஷயத்தி னிருப்பால் பிரம சாமக்கிரியினால் அநுமிதிப்பிரமை யுண்டாகின்றது.

அங்ஙனமே, அவாய்நிலை முதலியவற்றின் ஞானமாகிய சாப்தபோத சாமக்கிரி பிரம மாகுக, அல்லது பிரமை யாகுக.

யாண்டு விஷயத்தின் இருப்புளதோ, ஆண்டுச் சாப்தபோதம் பிரமையாம்.

யாண்டு விஷயத்தின் அபாவ முளதோ, ஆண்டுச் சாப்த போதம் பிரமமாம்.

ஆனால், யாண்டு யோக்கியதை (தகுதி) யுணர்வு பிரம மாகின்றதோ, ஆண்டு நியமமாகச் சாப்தபோத முண்டாகின்றது; பிரமை யுண்டாகிறதில்லை.

ஏனெனின், யாண்டுச் சாப்தபோதத்தின் விஷய முளதோ, ஆண்டு நியமமாக யோக்கியதை யுணர்வு பிரமை யாகின்றது.

யாண்டுத் தகுதி யுணர்வு பிரம மாகின்றதோ, ஆண்டு நியமமாகச் சாப்தபோதத்தின் விஷய மிருப்பதில்லை.

ஆதலால், விஷயத்தி னிருப்பால் சாப்தபோதம் பிரமையும், விஷயத்தின் இன்மையால் பிரமமுமா மென்பது நியமமாம்.

அவாய்நிலை முதலியவற்றின் உணர்வு சாப்தபோதத்திற்கு ஏதுவாதல்போல ஆசத்தியும் சாப்தபோதத்திற்கு ஏதுவாம்.

நியாய நூல்களில் பதங்களின் சமீபத்தன்மையை ஆசத்தி (அண்மை) யென்பர்.

வியவகித (மறைப்பட்ட) பதங்களினது அர்த்தத்தின் அந்நுவயபோத முண்டாகிறதில்லை.

எங்ஙனம்: கிரி உண்ணப்பட்டது வன்னியுடைத்து, தேவதத்தனால் என்னும் வாக்கியத்தால் அந்நுவயபோதம் உண்டாகிறதில்லை.

கிரி வன்னியுடைத்து, தேவதத்தனா லுண்ணப்பட்டது எனக் கூறின் சாப்தபோத முண்டாகின்றது.

ஆதலால், பதங்களின் சமீபத்தன்மையாகிய அண்மை சாப்தபோதத்திற்கு ஏதுவாம்.

யாண்டு அண்மை யில்லாதிருக்க அண்மையின் பிரம முண்டாகின்றதோ, ஆண்டுச் சாப்தபோத முண்டாகின்றது.

ஆதலால், பிரமப்பிரமைகளுக்குப் பொதுவான அண்மையின் ஞானம் ஏதுவாம். சொரூபமாக ஆசத்தி (அண்மை) ஏதுவன்று.

பிற நூல்களில் இங்ஙனம் எழுதப்பட் டிருக்கின்றது:— யாண்டு வியவகிதபத முளதோ ஆண்டுச் சுலோகமுதலியவற் றில் சாப்தபோதம் உண்டாகின்றது. ஆதலால், முற்கூறிய அண்மை சாப்தபோதத்திற்கு ஏதுவன்று.

ஆனல், சக்தி அல்லது இலக்ஷணையாகிய பதத்தின் சம் பந்தத்தா னுண்டாகும் பதார்த்தங்களின் வியவதான மின்றிய ஸ்மிருதி யெதுவோ, அவ்வாசத்தி சாப்தபோதத்திற்கு ஏது வாம்.

பதங்களுக்கு வியவதான முளதாகுக, அல்லது அவ்வியவ தான முளதாகுக.

எந்தப் பதார்த்தத்திற்கு எந்தப் பதார்த்தத்தோடு அநு வயபோத முண்டாகின்றதோ, அப் பதார்த்தங்களின் ஸ்மிருதி வியவதான மின்றியதாதல் வேண்டும்.

பதார்த்தங்களின் சாப்தபோதம் ஸ்மிருதி மாத்திரத்தால் உண்டாகுமாயின், எவ்வாற்றுனுயினும் ஒரு பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகுமிடத்து அதன் சாப்தபோத முண்டாதல் வேண்டும்.

பதத்தின் சம்பந்தத்தா னுண்டாகும் பதார்த்தத்தின் ஸ்மிருதியினைச் சாப்த போதத்திற்கு ஏதுவாகக் கூறுவோமா யின் எல்லாப் பதங்களுக்கும் ஆகாயத்தோடு சமவாய சம்பந்த மிருக்கின்றது.

ஆத்மாவினிடத்துச் சகல பதங்களுக்கும் சுவாநுகூலகிருதி (தன் அநுகூலவினைச்) சம்பந்த முளது.

ஆதலால், கடமுதலிய பதங்களின் சமவாய சம்பந்தத் தால் யாண்டு ஆகாயத்தின் ஸ்மிருதியும், சுவாநுகூலகிருதி சம் பந்தத்தால் யாண்டு ஆத்மாவின் ஸ்மிருதியு முண்டாகின்றன வோ, ஆண்டு அவற்றின் ஞானம் கடத்தைக் கொண்டுவா என் றல்முதலிய வாக்கியங்களால் உண்டாதல்வேண்டும்.

ஆதலால், சக்தி யல்லது இலக்ஷணுவிருத்தியாகிய பதத் தின் சம்பந்தத்தா னுண்டாகும் பதார்த்தத்தின் ஸ்மிருதி சாப்த போதத்திற்கு ஏதுவாம்.

கடமுதலிய பதங்களின் சமவாய சம்பந்தம் ஆகாயத்தின்க ணுளது.

சுவாநுகூலகிருதி சம்பந்தம் ஆத்மாவின்க ணுளது.

சக்தியல்லது இலக்ஷணவிருத்தியாகிய சம்பந்தம் கடமுத லிய பதங்களுக்கு ஆகாயத்தினும் ஆத்மாவினு மில்லை.

ஆகாயம் ககனம்முதலிய பதங்களுக்குச் சக்தியாகிய சம் பந்தம் ஆகாயத்தின்க ணுளது.

சுவ (தானென்னும்)பதத்திற்கும் ஆத்மபதத்திற்கும் சக்தி யாகிய சம்பந்தம் ஆத்மாவின்க ணுளது.

ஆதலால், ஆகாசபதத்தோடுகூடிய வாக்கியத்தால் ஆகா யத்தின் சாப்தஞான முண்டாகின்றது.

ஆத்மபதத்தோடு கூடிய வாக்கியத்தான் ஆத்மாவின் சாப்தபோத முண்டாகின்றது.

இவ்வாற்றான் எப் பதத்தின் விருத்தியாகிய சம்பந்தத்தால் எப் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அதன் சாப்தபோத முண்டாகின்ற தெனக் கூறினும் 'கடத்தைக் கொண்டுவா' என்னும் வாக்கியத்தால் எந்த ஞான முண்டா கின்றதோ அந்த ஞானத்தின் உற்பத்தியானது கடம், கர்மத் தன்மை (செயப்படுபொருண்மை), கொண்டுவருதலாகிய வினை யென்னு மித்துணைப் பதங்களானு முண்டாதல் வேண்டும்.

ஏனெனின், இரண்டு வாக்கியங்களுக்கும் பதங்களின் சக்தி சமானமாம்.

முதல் வாக்கியத்தால் சாப்தபோத முண்டாகின்றது, இரண்டாவதா னுண்டாகிறதில்லை. இதன்கண் இது ஏதுவாம்:—

யோக்கிய பதத்தின் விருத்தியால் எப் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அதன் சாப்தபோத முண்டாம். முதல் வாக்கியத்தின் பதம் யோக்கியமாம்; இரண்டாவதின் பதம் யோக்கிய மன்று.

யோக்கியதை (தகுதி)யும், அயோக்கியதை (தகுதியின் மை)யும் அநுபவத்தை யொட்டி அநுமிக்கத் தக்கனவாம்.

எப் பதங்களால் சாப்தபோதம் அநுபவ சித்தமாமோ அவற்றில் யோக்கியதை யுண்டு.

எப் பதங்களால் சாப்தபோதத்தின் அபாவம் அநுபவ சித்தமாமோ அவற்றில் யோக்கியதை யில்லை.

இவ்வாற்றான் யோக்கிய பதத்தின் விருத்திரூப சம்பந்தத்தான் உண்டாகும் மறைப்பின்றிய பதார்த்தங்களின் ஸ்மிருதி ஆசத்தி யெனப்படும்.

இவ்வியல்பினதாய ஆசத்தி சொரூபமாகச் சாப்தபோதத்திற்கு ஏதுவாம்; அதன் ஞானம் ஏதுவன்று.

இவ்வாற்றால் அவாய்நிலையுணர்வு முதலிய நான்கும் சாப்த போதத்திற்கு ஏதுவாம். இந் நான்கையும் சாப்தசாமக்கிரி யென்பர்.

50. தீவிரமான ஞான விருப்பம் போதத்திற்கு ஏதுவாதல்

அநுமிதியின் சாமக்கிரி வியாப்தி ஞானமாம்.
பிரத்தியக்ஷ சாமக்கிரி இந்திரியசையோக முதலியனவாம்.

யாண்டு இரண்டு சாமக்கிரிகளுளவோ ஆண்டு இரண்டின் பயனு முண்டாகிறதில்லை.

ஏனெனின், ஒருக்ஷணத்தில் இரண்டு ஞானங்களின் உற்பத்தி யுண்டாகாது. ஞானமிரண்டற் காதாரம் ஒருக்ஷணமாகு மாயினும் ஞானமிரண்ட னுற்பத்திக் காதாரம் ஒருக்ஷண மாகாது.

அவ் வுற்பத்தியும் வியதிகரணத்துள்ள இரண்டு ஞானங்களுக்கு ஒரு க்ஷணத்தி லுண்டாகும்.

எங்ஙனம்: தேவதத்தனது ஞானமும் எஞ்ஞதத்தனது ஞானமும் வியதிகரணமாம். அவற்றின் உற்பத்தி ஒரு க்ஷணத்தி லுண்டாம்.

என்றாலும் சமானாதிகரணத்துள்ள இரண்டு ஞானங்களின் உற்பத்தி ஒருக்ஷணத்தி லுண்டாகிறதில்லையென்பது சித்தாந்தம்.

இரண்டு சாமக்கிரிகளின் பயனும் ஒருக்ஷணத்தி லுண்டா கிறதில்லை. ஆகலின், பிரபல சாமக்கிரியின் பய னுண்டாகின் றது.

துர்ப்பலத்திற்குப் பாத முண்டாகின்றது; பிரபலத்தன் மையும் துர்ப்பலத்தன்மையும் அநுபவத்தை யொட்டி யநுமிக் கத் தக்கனவாம்.

எங்ஙனம்: பூதலம் கட மென்பவற்றோடு நேத்திரத்திற் குச் சையோக முண்டாகின்றது.

அக்காலத்தில் கடமுடையது பூதலம் என்னும் வாக்கியத் தின் சிரவண முண்டாகின்றது.

ஆண்டுக் கடமுடையது பூதலமென்னும் பிரத்தியக்ஷ ஞானத்தின் சாமக்கிரியும் சாப்தஞானத்தின் சாமக்கிரியு முள.

என்றாலும், பிரத்தியக்ஷஞான முண்டாகிறது; சாப்தஞான முண்டாகிறதில்லை.

ஆதலால், சமான விஷயமுடைய பிரத்தியக்ஷஞான சாப்த ஞானங்களின் இரண்டு சாமக்கிரிகளு முள்ளவிடத்தும் பிரத்தி யக்ஷ ஞானத்தின் சாமக்கிரி பிரபலமும், சாப்தஞானத்தின் சாமக்கிரி துர்ப்பலமு மாகின்றன.

யாண்டுப் பூதலத்தோடு கூடிய குடத்தோடு நேத்திரத் திற்குச் சையோக முண்டாக, அதேகாலத்தில் உனக்குப் புத் திரன் பிறந்தான் என்னும் வாக்கியத்தின் சிரவண முண்டா கின்றதோ, ஆண்டுப் பூதலத்தில் கடத்தின் பிரத்தியக்ஷ முண் டாகிறதில்லை; ஆனால், புத்திரனது பிறப்பின் சாப்தஞான முண்டாகின்றது.

ஆதலால், பின்னவிஷயங்களையுடைய ஞானத்தின் பிரத்தி யக்ஷ சாமக்கிரியும் சாப்தசாமக்கிரியு முள்ளவிடத்து, சாப்த சாமக்கிரி பிரபலமும் பிரத்தியக்ஷ சாமக்கிரி துர்ப்பலமு மாகின்றன.

இவ்வாறு பாத்திய பாதக பாவத்தை (வாதிக்கப்படுவது வாதிப்பதென்னுந் தன்மையை) விசாரித்துச் சூக்ஷ்மதிருஷ்டி யுள்ள புருஷன் பிரபல துர்ப்பலத் தன்மைகளைத் தெரிந்து கொள்ளுக.

ஆனால், ஜிஞ்ஞாஸை (அறிதல்வேட்கை) யில்லாவிடத்து முற்கூறிய பாத்திய பாதக பாவ முளது.

யாண்டு ஒரு வஸ்துவை யறியும் வேட்கை யுண்டாகின்றதோ, மற்றொன்றினை யறியும் வேட்கை யுண்டாகவில்லையோ, ஆண்டு இரண்டு ஞானங்களின் சாமக்கிரிகளு மிருக்கினும், ஜிஞ்ஞாஸிதத் (அறிய விரும்பிய)தின் ஞான முண்டாகுமே யன்றி அறிய விரும்பாததின் ஞான முண்டாகிறதில்லை.

ஆதலால், அறிய விரும்பியதினது ஞானத்தின் சாமக்கிரி பிரபலமும், அறிய விரும்பாததினது ஞானத்தின் சாமக்கிரி துர்ப்பலமுமாம்.

ஞானத்தின் இச்சை ஜிஞ்ஞாஸை (அறிதல்வேட்கை)யெனப்படும்;

அதன்விஷயம் ஜிஞ்ஞாஸிதம் (அறிய விரும்பியது) எனப்படும்.

ஜிஞ்ஞாசையோடு கூடிய சாமக்கிரி முழுவதும் பிரபலமாம். யாண்டு இரண்டின் ஜிஞ்ஞாசையு முண்டாகின்றதோ, ஆண்டு தீவிரஜிஞ்ஞாஸை பாதகமாம்.

இக் காரணத்தானே அத்தியான்ம நூல்களில் "தீவிர ஜிஞ்ஞாசை யுள்ளவனுக்குப் பிரஹ்மஞான முண்டாம்; தீவிர ஞானவிருப்ப மில்லாதவனுக்குப் பிரஹ்மஞான முண்டாகா" தென்று எழுதப்பட்டிருக்கின்றது.

ஏனெனின், அறிய விரும்பும் பதார்த்தத்தின் அறிதல் வேட்கையோடு கூடிய ஞானம் சாமக்கிரி யுளதாயின், அதனினும் தீவிர ஞானவிருப்பத்தோடு கூடிய ஞான சாமக்கிரியினால் அதற்குப் பாத முண்டாகின்றது.

இல்லையாயின் ஞான விருப்போடு கூடிய சாமக்கிரியினால் மற்றச் சாமக்கிரிக்குப் பாத முண்டாகின்றது.

இலௌகிக பதார்த்தங்களின் ஜிஞ்ஞாஸையும் அவற்றின் பிரத்தியக்ஷமுதலிய ஞானத்தின் சாமக்கிரியும் எப்போதும் சாக்கிரகாலத்தில் சம்பவிக்கின்றன. அவற்றால் ஞானவிருப்பமின்றிய பிரஹ்மஞானத்தின் சாமக்கிரிக்குப் பாத முண்டாகும்.

ஆதலால், இலௌகிக பதார்த்தங்களின் ஜிஞ்ஞாஸையோடு கூடிய பிரத்தியக்ஷமுதலிய ஞானத்தின் சாமக்கிரியினது பாதத்தின்பொருட்டுப் பிரஹ்மத்தின் தீவிரமான ஞானவிருப்பம் வேண்டும்.

தீவிர ஞானவிருப்பத்தோடு கூடிய பிரஹ்மஞானத்தின் சாமக்கிரியினால் இலௌகிக பதார்த்தங்களினது ஞானத்தின் சாமக்கிரிக்குப் பாதம் உண்டாகின்றது.

* 'அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா' என்னும் சூத்திரத்திற்கும் இப்பொருளின்கண்ணே தாற்பரியமாம்.

வியாக்கியானகாரர் விசாரத்தில் ஜிஞ்ஞாஸை யென்னும் பதத்திற்கு இலக்ஷணையைக் கூறிக் கர்த்தவ்விய பதத்திற்கு † அத்தியாகாரம் கூறியிருக்கின்றனராகலின், பிரஹ்மஞானத்தின் பொருட்டு வேதாந்த வாக்கியங்களின் விசாரம் செய்ய வேண்டுமென்பது இச் சூத்திரத்தின் பொருளாயினும் விசார வாசகமான பதத்தை விட்டு இலாக்ஷணிகமான ஜிஞ்ஞாஸை யென்னும் பதத்தைப் பிரயோகிப்பதினால் சூத்திரகாரருக்கு வாச்சியமும் இலக்ஷியமுமாகிய இரண்டு பொருளினும் தாற்பரியமாம்.

பிரஹ்மஜிஞ்ஞாஸை பிரஹ்மஞானத்திற்கு ஏதுவாமென்பது வாச்சியார்த்தம்.

ஒரே சொல்லான் இலக்ஷணாவிருத்தி சக்திவிருத்திகளால் இரண்டு பொருள்களின் ஞான முண்டாகாதென்னும் பழைமையான சொல், கங்கையில் மீன்களும் இடைச்சேரியு முளவென்னும் வாக்கியத்திற பிறழ்தலான் விசுவசிக்கத் தக்கதன்று.

கங்கையில் மீன்களும் இடைச்சேரியுமுள வென்னும் வாக்கியத்தில் கங்கையென்னும் பதத்தின் வாச்சியார்த்தத்திற்கு

* இது பிரஹ்மசூத்திரத்தின் முதற் சூத்திரம்.

இதன் பொருள்: "அதன்பின் பிரஹ்மத்தின் ஞானவிருப்பானது செய்யத்தக்கதாம்; அதாவது, பிரஹ்மத்தை அறிய விரும்பவேண்டும்" என்பதாம்.

† வாக்கியமுடிதற் பொருட்டாயினும், பொருள் முடிதற் பொருட்டாயினும் எஞ்சிநின்ற பதங்களை வருவித்துரைத்தல் அத்தியாகாரமாம். இதனையே வாக்கிய சேஷமென்றும் கூறுவர்.

மீனேடு சம்பந்தமும், இலக்ஷியார்த்தத்திற்கு இடைச்சேரி யோடு சம்பந்தமு முண்டாகின்றன.

ஆதலால், கங்கையில் மீன்களும் கரையில் இடைச்சேரியு முண்டென்பது வாக்கியத்தின் பொருளாம்.

நூலாசிரியர்கள் சூத்திரத்திற்கு அநேகம் பொருள்கள் எழுதி யிருக்கினும் அவ் வநேகம் பொருள்களும் சூத்திரத் திற்குப் பூஷணமாம்.

விசாரத்திற்போல ஜிஞ்ஞாஸையில் விதி சம்பவிக்கின்றதா, இல்லையாவென்னும் பொருளை யெழுதுவதில் நூல் விரியுமாக லின் ஈண்டு எழுதப்படவில்லை.

51. வேதாந்தத்தின் தாற்பரியமும், வேதத்தினையும் சொல்லினையும் விசாரித்தலும்

அவர்நிலையுணர்வுமுதலியன சாப்தபோதத்திற்கு ஏது வாம். அவற்றில் தாற்பரியஞான முளது.

வேதவாக்கியத்தின் தாற்பரிய ஞானத்திற்கு ஏது உபக் கிரம முதலியனவாம். அவ்வுபக்கிரம முதலியவற்ருன் வேதாந்த வாக்கியங்களுக்கு அத்துவிதீயப்பிரஹ்மத்தின்கண் தாற்பரிய முளதாம்.

உபாசனு விதியிற் ருற்பரிய மில்லை. இவ் வர்த்தம் பாஷிய காரரால் * சமன்வய சூத்திரத்திற்கு விஸ்தாரமாய் எழுதப் பட்டிருக்கின்றது.

ஆதலால், மீமாம்ஸக விருத்திகாரர்களது மதங்கள் நல முடையனவன்று.

அவர்களது மதகண்டனத்திற்கு அநுகூலமான தர்க்கம் சமஸ்கிருதபாஷை தெரியாத சுரோதாக்களுக்கு (கேள்வி யாளருக்கு) அறிதற்கரியதா மாகலின் எழுதப்படவில்லை.

இவ் வாக்கியத்தால் கேட்பவனுக்கு இப் பொருளின் ஞான முண்டாகவேண்டுமென்னும் சொல்லுவானது விருப்பம் (இச் சை) தாற்பரிய மெனப்படும்.

* பிரஹ்மசூத்திரத்தினது முதல் அத்தியாயம் முதல் பாதத்தின் 4-வது சூத்திரம் சமன்வயசூத்திர மெனப்படும்.

மீமாம்ஸக மதத்தில் வேதம் நித்தியம்; ஆண்டுக் கருத்தாவின் இச்சையோ சம்பவியாது.

அத்தியாபக (ஓதுவிப்போ)னது இச்சை சம்பவிக்கும் நையாயிக மதத்தில் சப்தம் மூன்றாவது க்ஷணத்தில் நாசமாகின்றது.

வேதமும் சத்தவடிவாயிருத்தலின் க்ஷணிகமாம்.

மூன்றாவது க்ஷணத்தில் எதற்கு நாச முண்டாகின்றதோ அது க்ஷணிக மெனப்படும்.

நையாயிக மதத்தில் உச்சாரணத்தின் பேதத்தால் வேதத்திற்குப் பேத முண்டு.

ஒருமுறை உச்சரித்து மீண்டும் உச்சரிக்கப்படும் வாக்கியம் எதுவோ அது முன் வாக்கியத்தினும் வேறாகின்றது.

ஆனால், முன்வாக்கியத்திற்குச் சஜாதீய(ஒத்தவின)மாய்ப் பின்வாக்கிய முளது. ஆதலால், அபேதப்பிரம முண்டாகின்றது.

நையாயிகமதத்தில் பாரதமுதலியவற்றைப்போல வேதம் பௌருஷேயமும் (புருஷனாற் செய்யப்பட்டதும்) க்ஷணிகமுமாம்.

ஏனெனின், வர்ணசமுதாயத்தின் வேறாகவோ வேதம் இல்லை. வர்ண சமுதாயத்தினையே வேத மென்பர். அச் சமுதாயம் தனித்தனி வர்ணங்களினும் வேறன்று. ஆதலால், வேதம் வர்ணவடிவமாம்; அவ் வர்ணம் சத்தவடிவமாம்.

ஆகாயத்தின் குணம் சத்தமாம். நாநா (பல) சத்தங்கள் ஒரு காலத்தி லுண்டாகா.

ஏனெனின், எங்ஙனம் ஆன்மாவின் விசேஷகுணங்கள் ஞானமுதலியனவோ, அங்ஙனமே ஆகாயத்தின் விசேஷகுணம் சத்தமாம்.

விபுவின் விசேஷகுணங்களெவையோ, அவை யிரண்டு ஒரு காலத்தி லுண்டாகா.

ஆனால், தேவதத்தனது சத்தமும் எஞ்ஞதத்தனது சத்தமும் ஒருகாலத்தி லுண்டாகின்றன.

பேரியின் சத்தமும் தாளத்தின் சத்தமும் ஒரு காலத்தி லுண்டாகின்றன.

ஒருநிலைக்களத்த (சமானாதிகரணமுடைய) விரண்டு சத்தங்களுக்கு ஒருகாலத்தில் உற்பத்தி நிகழாதெனக் கூறினும், எல்லாச் சத்தங்களும் சமவாய சம்பந்தத்தான் ஆகாயத்திருப்பனவாயிருத்தலின் ஒரு நிலைக்களத்தவாம். எச் சத்தமும் வேறு நிலைக்களத்த தாகாது.

என்றாலும், ஆகாயத்தில் சத்தத்திற்குச் சமவாய சம்பந்தமிருப்பதுபோல, (1) கண்டம், (2) மேல்வாய், (3) பல், (4) மூக்கு, (5) உதடு, (6) நா நுனி, (7) உரம், (8) சிரமென்னும் எட்டுறுப்புகளினும் வர்ண (எழுத்து) வடிவான சத்தத்திற்கு அவச்சேதகத்தன்மைச் சம்பந்த முளது.

துவனி (ஒலி) வடிவான சத்தத்திற்குப் பேரி தாள முதலியவற்றில் அவச்சேதகத்தன்மைச் சம்பந்த முளது.

ஒரு அதிகரண (நிலைக்களா) த்தி விருப்பதனைச் சமானாதிகரணம் (ஒரு நிலைக்களத்தது) என்பர்.

சமவாயசம்பந்தத்தால் எல்லாச் சத்தங்களும் ஆகாயத்திருப்பனவாகலின் சமானாதிகரணமா யிருக்கின்றன. என்றாலும், அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் தேவதத்த சத்தமும் எஞ்ஞதத்த சத்தமும் வியதிகரணமாம்.

அங்ஙனமே, பேரிசத்தமும் தாளசத்தமும் அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் வியதிகரணமாம் (வேற்றுநிலைக்களத்தவாம்).

இது நியமமாம்:— அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் ஒரு அதிகரணத்தில் இரண்டு சத்தங்களின் உற்பத்தி யொரு காலத்தி லுண்டாகிறதில்லை. அதாவது, ஒரு அவச்சேதகத்தில் இரண்டு சத்தங்(சொற்)களின் உற்பத்தி ஒருகாலத்தி லுண்டாகிறதில்லை.

ஆதலால், வாக்கியபதங்களின் அவயவ வடிவமான வர்ணங்களுக்கு ஒரு காலத்தில் உற்பத்தி யுண்டாகிறதில்லை. ஆனால், எல்லா வர்ணங்களும் கிரமமாக உண்டாகின்றன.

கிரமமாக உண்டாகும் வர்ணங்களுக்கு நிமித்தமின்றி நாசமங்கீகரிக்கின், சகல வர்ணங்களுக்கும் முதற்கணத்தில் உற்பத்தியும் இரண்டாவது கணத்தில் நாசமு முண்டாகும்.

ஆதலால், உற்பத்தி நாசமின்றிச் சத்தத்தில் வேறு எந்தப் பிரத்தியக்ஷமுதலிய வியாபாரங்களும் சித்தியா வாகலின், சத்தத்தின் நாசத்திற்கு யாதானு மோர் நிமித்தத்தை யங்கீகரித்தல் வேண்டும்.

எந்த நிமித்தமின்றி இரண்டாவது கணத்தில் சத்தத்திற்கு நாச முண்டாகாதோ, அது வேறெந்தச் சத்தத்தின் நாசத்திற்கும் நிமித்தமாதல் சம்பவியாது.

முன் சத்தத்தின் நாசத்திற்கு ஏது தன் பின்னிற்கும் சத்தமாம்.

ஶஃ (கௌஃ—ஆ) என்னும் வாக்கியத்தில் புருஷனது முயற்சியால் நாபிதேசத்தினின்றும் வாயுவிற் றெழுழிலுண்டாய்க் ககாரத்தை யுண்டுபண்ணும் நாவினடியில் வாயுவின் சையோகமுண்டாய் ஔகாரத்தை யுண்டுபண்ணும் கண்டவுதடுகளுடன் வாயுவின் சையோகம் உண்டாகின்றது. அதன்பின் விசர்க்கத்தை (:) உண்டுபண்ணும் கண்டஸ்தானத்தில் வாயுவின் சையோக முண்டாகின்றது.

எவ்வொழுங்கால் மூன்று சையோகங்களு முண்டாகின்றனவோ, அவ்வொழுங்கானே ககார ஔகார விசர்க்கங்களாகிய மூன்று வர்ணங்களு முண்டாகின்றன.

கௌமுதி முதலியநூல்களிற் க வர்க்கத்திற்குக் கண்டஸ்தான மெழுதப்பட்டிருக்கினும், பாணினியாற் செய்யப்பட்ட சிக்ஷையில் க வர்க்கத்திற்கு நாவினடி ஸ்தானமாக எழுதப்பட்டிருக்கின்றது:—

அந்தச் சிக்ஷா வசனத்தை யனுசரித்து நாவினடியில் வாயுவின் சையோகத்தால் ககாரத்தின் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றது.

வியாகரணமதத்தில் கௌஃ (ஶஃ) வென்னும் இத்துணை வர்ணங்கள் வாக்கியரூப மகாவாயினும் நியாயமதத்தான் வாக்கிய மெனப்படுகின்றன.

முதல் க்ஷணத்தில் ககாரத்தின் உற்பத்தியும், இரண்டாவது க்ஷணத்தில் ஔகாரத்தின் உற்பத்தியும், மூன்றுவது க்ஷணத்தில் விசர்க்கத்தின் உற்பத்தியு முண்டாகின்றன.

ஆண்டுக் ககாரத்தின் நாசத்தில் ஔகாரம் ஏதுவாம், ஔகாரத்தின் நாசத்தில் விசர்க்கம் ஏதுவாம்.

மூன்றுவது க்ஷணத்தில் சத்தத்திற்கு நாச முண்டாகின்றது; இரண்டாவது க்ஷணத்தில் உண்டாகிறதில்லை. ஏனெனின், நாசத்திற்கு ஏது தனது பின்சத்தமாம். அஃது இரண்டாவது கணத்தில் உண்டாகின்றது.

காரணத்தின் சித்தியின்றிக் காரிய முண்டாகாது.

முதல் க்ஷணத்தில் இரண்டாவது சத்தம் பெறப்படாததா யிருத்தலான், இரண்டாவது க்ஷணத்திற் பெறப்படும் இரண்டாவது சத்தத்தால் மூன்றுவது க்ஷணத்தில் முதற் சத்தத்தின் நாச முண்டாகின்றது. இவ்வாறு மூன்றுவது சத்தத்தான் இரண்டாவதற்கு நாச முண்டாகின்றது.

இவ்வாறே உபாந்திய (ஈற்றயல்) சத்த பரியந்தம் தத்தம் பின்னிற்கும் சத்தங்களான் (முன்) சத்தங்களுக்கு நாச முண்டாகின்றது.

அந்திய (கடைசிச்) சத்தத்திற்கு ஈற்றயற் சத்தத்தான் சுந்தோபசுந்த நியாயத்தால் நாச முண்டாகின்றது.

சுந்தன் உபசுந்தனென இரண்டு சகோதரர் இருந்தனர். அவர்களுள் ஒருவருக்கொருவரான் நாச முண்டாகியது பாரதத்திற் பிரசித்தம். ஆனால், இதிலிது தோஷமாம்:—

ஈற்றயற் சத்தத்தால் அந்திய சத்தத்திற்கு நாசம் அங்கீகரிக்கின் இரண்டாவது க்ஷணத்திற்றானே அந்திய சத்தத்திற்கு நாச முண்டாகும்.

ஆதலால், உற்பத்தி நாசத்தின் வேறான வியாபார மின்றிய அந்திய சத்தம் அப்பிரத்தியக்ஷமாதல் வேண்டும்.

ஜகதீசபட்டாசாரியர் அந்தியசத்தம் அப்பிரத்தியக்ஷ மென்று கூறியிருக்கின்றன ராகலின், அப்பிரத்தியக்ஷத்தை யீட்டுதல் இஷ்டமே, தோஷ மின்றெனக் கூறுவாராயினும், மூன்றுவது

க்ஷணத்திற் சத்தத்திற்கு நாசமுண்டா மென்னும் நியமத்திற்குக் கேடுண்டாம்.

ஆதலால், அந்திய சத்தத்தின் நாசத்தில் ஈற்றயற் சத்தத்தின் நாசம் ஏதுவாம். ஈற்றயல் சத்தம் ஏதுவன்று. இப் பக்ஷத்தில் அந்திய சத்தத்தின் நாசத்தில் இரண்டாவது க்ஷணத்தில் நாசத்தின் ஆபத்தியில்லை (அடைவில்லை).

ஏனெனின், ஈற்றயல் சத்தத்தின் நாசம் அந்தியசத்தத்தானுண்டாகின்றது. ஆதலால், அந்தியசத்தத்தின் இரண்டாவது க்ஷணத்தில் ஈற்றயலின் நாசமும் அதற்கடுத்த க்ஷணத்தில் அந்தியத்தின் நாசமு முண்டாகின்றன.

இவ்வாற்றான் சகல சத்தங்களின் நாசமும் மூன்றாவது க்ஷணத்தி லுண்டாகின்றது. இதன்கண் இது சங்கையாம்:—

யாண்டு ஒரே வர்ணவடிவமான சத்த முண்டாகின்றதோ, ஆண்டுச் சத்தத்தின் நாசத்திற் கேதுவாக ஒரு சத்தமு மில்லை. அதற்கு இது சமாதானமாம்:—

கண்டமுதலியவற்றோ டுண்டாகும் வாயுவின் சையோகம் வர்ணவடிவமான சத்தத்திற்கு ஏதுவாம்.

பேரிமுதலியவற்றோடு தண்டமுதலியவற்றிற் குண்டாகும் சையோகம் தொனிவடிவ சத்தத்திற்கு ஏதுவாம்.

மூங்கிற் பிள விரண்டின் பிரிவு தொனிவடிவ சத்தத்திற்கு ஏதுவாம்.

அங்ஙனமே சத்தமும் சத்தத்திற்கு ஏதுவாம்.

பேரி தண்டங்களின் சையோகத்தால் பேரிதேசத்தி லுண்டாகும் சத்தமெதுவோ அதனினின்று முண்டாகிய சத்தத்தின் சாக்ஷாத்காரம் சிரவணத்தா (காதினு) லுண்டாகின்றது.

அங்ஙனம் கண்டமுதலிய விடங்களில் வாயுவின் சையோகத்தால் உண்டாகும் வர்ணரூபசத்த மெதுவோ, அதன் சாக்ஷாத்காரம் சிரவணத்தால் உண்டாகிற தில்லை. ஆனால், வர்ணரூப சத்தத்தான் வேறு சத்த முண்டாய் அதன் சாக்ஷாத்கார முண்டாகிறது.

இவ்வாற்றுன் அந்நிய சத்தமின்றிய ஒரு சத்தம் அப்பிர சித்தமாம். ஆனால், இம் மதத்தில் வர்ணங்களின் சமுதாய வடிவமான பதத்திற்கு ஏக காலத்திற் சம்பவ மில்லை யாகலின் பதத்தின் சாக்ஷாத்காரமோ சம்பவியாது.

என்றாலும், ஒவ்வொரு எழுத்தின் சாக்ஷாத்காரத்தால் எல்லா வெழுத்துக்களையும் விஷயஞ்செய்யும் ஒரு ஸ்மிருதி யுண்டாகின்றது. ஸ்மரிக்கப்பட்ட பதத்தால் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது. அதனாற் சாப்தபோத முண்டாகின்றது. அல்லது முன்முன் வர்ணங்களின் அநுபவத்தால் சம்ஸ்கார முண்டாகின்றது.

சம்ஸ்காரத்தோடு கூடிய அந்திய வர்ணத்தின் அநுபவமே பதத்தின் அநுபவ மெனப்படுகின்றது. அதனால் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது; அதனாற் சாப்தபோத முண்டாகின்றது. இது நியாயமதம்.

மீமாம்ஸக மதத்தில் வர்ணம் நித்தியமாம்; ஆதலால், வர்ணங்களின் சமுதாயமாகிய வேதமும் நித்தியம். அன்றியும், எல்லா வர்ணங்களும் விபுவாம்.

யாண்டுக் கண்டமுதலிய விடங்களில் அத்தியான்ம வாயுவின் சையோக முண்டாகின்றதோ, ஆண்டு வர்ணங்களின் அபிவியக்தி (வெளிப்படுதல்) உண்டாகின்றது.

நையாயிக மதத்தில் வர்ணங்களின் உற்பத்திக்கு ஏதுவா யுள்ள தெதுவோ, அதுவே மீமாம்ஸக மதத்தில் வர்ணங்களின் அபிவியக்தி (வெளிப்படை)க்கு ஏதுவாம்.

இவ்வாற்றுன் வர்ண சமுதாயமான வேதம் நித்தியம்; ஆதலால், அபௌருஷேயமாம் (புருஷனாலாகிய தன்றாம்).

வேதாந்தமதத்தில் வர்ணமும் அவற்றின் சமுதாயமான வேதமும் நித்தியமன்று. ஏனெனின், வேதத்திற்கு உற்பத்தி சுருதி கூறியிருக்கின்றது. சேதனத்திற்கு வேறாகிய யாவும் அநித்தியமாம். ஆதலால், வேதம் நித்திய மன்று; க்ஷணிகமு மன்று.

சிருஷ்டியின் ஆதிகாலத்தில் சர்வஞ்ஞ ஈசுவரனது சங்கற்ப மாத்திரத்தால் வேதத்தின் உற்பத்தி யுண்டாயிருக்கின்றது. ஆதலால், சுவாசத்தைப்போல அநாயாசமாக ஈசுவரன் வேதத்தை யுண்டுபண்ணினார்.

நையாயிக மதத்தில் பாரதமுதலியவற்றைப்போல வேதம் பௌருஷேயமாம்.

வேதாந்தமதத்தில் பாரதமுதலியவற்றைப்போல ஈசுவரரூப புருஷனா லாக்கப்பட்டதாகலின் பௌருஷேயமாம்.

ஆனால், சர்வஞ்ஞர்களாகிய வியாசர் முதலியோர் எல்லாச் சிருட்டிகளினும் பாரதமுதலியவற்றைச் செய்திருக்கின்றனர்.

ஆண்டு எங்ஙனம் முன் சர்க்கத்தில் (சிருஷ்டியில்) ஒழுங்கு இருந்ததோ அங்ஙனமே பாரதமுதலியன பின் சர்க்கத்தினும் உண்டாமென்னும் நியம மில்லை. ஆனால், தனதிஷ்டப்படி பாரதமுதலியவற்றின் ஒழுங்கினைச் செய்திருக்கின்றனர்.

வேதத்தின் ஒழுங்கு விலக்ஷண மாகாது. ஆனால், முன் சர்க்கத்தின் ஒழுங்கினை நினைத்துப் பின் சர்க்கத்தில் முன் கற்பத்துக்குச் சமானமான ஒழுங்கினையுடையதாக வேதத்தினை ஈசுவரன் சிருஷ்டித்திருக்கின்றனர்.

புருடனாற் செய்யப்படுந் தன்மையாகிய பௌருஷேயத் தன்மை வேதத்தில் பாரதமுதலியவற்றின் சமானமாம். அந்நிய சர்க்கத்தினது ஒழுங்கின் நினைவின்றிப் புருடனா லாக்கப்படுந் தன்மை வடிவினதாகிய பௌருஷேயத்தன்மை பாரத முதலியவற்றின்க ணுளது; வேதத்தி லின்று.

வேதத்தில் முன் சர்க்கத்து ஒழுங்கினை ஸ்மரித்துப் புருஷனா லாக்கப்படுந் தன்மை யுளது. ஆதலால், வேதத்தின் ஒழுங்கு அநாதியாம்; வேதம் ஈசுவரனாகிய புருஷனா லாக்கப்பட்டதாம்; இதில் விரோத மின்று.

மூன்றாவது பிரகாசம்

சத்தப்பிரமாண நிரூபணம்

முற்றிற்று.

ஓம்

தத் ஸத் ப்ரஹ்மணே நம:

நான்காவது பிரகாசம்:

உவமானப் பிரமாண நிரூபணம்

52. கிரமபங்கத்தின் அபிப்பிராய பூர்வகமான இரண்டு நியாயக் கிரமத்தான் உவமான உவமிதிகளின் இருவகைச் சொரூபம்

நியாய வேதாந்தங்களின் எல்லா நூல்களினும், உவமான நிரூபணத்திற்குப் பின் சத்தம் நிரூபிக்கப்பட்டுள தெனினும், மூன்று பிரமாண வாதிகளாகிய சாங்கியர்முதலியோர் உவமானத்தை யங்கீகரிப்பதில்லை. பிரத்தியக்ஷம் அநுமானம் சத்த மென்னும் மூன்றனையும் யங்கீகரிக்கின்றனர். அவர்களுக் குபயோகமுள்ள பிரமாணங்களை முன்னர்ச் சொல்லவேண்டு மாகலின், சத்தப் பிரமாணத்தின்பின் உவமானம் நிரூபிக்கப்படுகின்றது.

எவ் வொழுங்கான் சாஸ்திரங்களில் அதிகப் பிரமாணங்கள் அங்கீகரிக்கப்பட்டுளவோ, அவ் வொழுங்காக இந் நூலில் பிரமாணம் நிரூபிக்கப்படுகின்ற தாகலின், ஈண்டு வேறு சங்கதியின் (தொடர்பின்) அபேக்ஷை யில்லை.

உவமிதிப்பிரமையின் கரணம் உவமானப்பிரமாண மெனப்படும்.

நியாயக் கிரமமாய் உவமிதி உவமானங்களின் சொரூபம் இது வாம்:— * சம்ஞியில் சம்ஞையினது வாச்சியத்தன்மையின் ஞானம் உவமிதி யெனப்படும்; அதன் கரண மெனப்படும் வியாபாரமுடைய அசாதாரண காரண மெதுவோ, அது உவமான மெனப்படும்.

ஓர் நகரவாசியாகிய புருஷன் கவயம் (ஆமா) என்னும் சொற்பொருளை யுணராதவனாய் ஆரணியத்தில் வசிக்கு மொருவ

* சொல்லின்பெயர் சம்ஞை; பொருளின் பெயர் சம்ஞி.

னோடு கவய மெத்தன்மைத் தென்று கேட்க, அப்போது ஆவினையொக்கும் ஆமா வென்ற ஆரணியபுருடன் வாக்கியத்தைக் கேட்டு வாக்கியார்த்தத்தினை யநுபவித்து வனத்தில் ஆவினை யொத்த ஆமாவைக் கண்டு, ஆவினை யொக்கும் ஆமா வென்னும் வாக்கியார்த்தத்தை ஸ்மரிக்கின்றான். அதன்பின் கண்ட பசுவில் ஆமாவென்னும் சொற்பொருட் டன்மையை யறிகின்றான்.

ஆண்டுப் பசுவிசேடத்தில் ஆமாவென்னும் சொற்பொருட்டன்மை ஞானம் உவமிதியாம்.

ஆரணியபுருடனு லறிவிக்கப்பட்ட வாக்கியார்த்தத்தின் சத்தாநுபவம் கரணமாம்.

ஆவினையொத்த பிண்டத்தைக் கண்டு வாக்கியார்த்தத்தை ஸ்மரித்தல் வியாபாரமாம்.

ஆவையொத்த பிண்டத்தின் பிரத்தியக்ஷம் சம்ஸ்காரத்தின் உற்போதகமாயிருத்தலின் சககாரியாம்.

ஆதலால், வாக்கியார்த்தாநுபவம் உவமானமும், வாக்கியார்த்த ஸ்மிருதி வியாபாரமுமாம்.

எங்ஙனம் அவாய்நிலை முதலியன சாத்தத்தின் சககாரிகளோ, அங்ஙனமே ஆவையொத்த பிண்டத்தின் பிரத்தியக்ஷம் உவமிதியின் சககாரியாம், உவமிதி பயன். இது சாம்பிரதாயிகமான நையாயிகர் மதம்.

நவீன நையாயிகர் இங்ஙனம் கூறுகின்றனர்:—சககாரியெனக் கொள்ளப்பட்டிருக்கும் ஆவையொத்த பிண்டத்தின் பிரத்தியக்ஷம் உவமானமாம். வாக்கியார்த்த ஸ்மிருதி வியாபாரமாம்.

ஆமாவென்னும் பதத்தினது வாச்சியத்தன்மையின் ஞானம் உவமிதியாகிய பயனும். இம் மதத்தில் வாக்கியார்த்தத்தின் அநுபவம் காரணத்திற்குக் காரணமாயிருத்தலின் குலாலபிதாவைப்போல அந்நியதாசித்தமாம் (பிறிதோராற்றாற் பெறப்படுவதாம்).

பொருள் இதுவாம்:—குலாலபிதா கடத்தினது சாமக்கிரியினும் புறமாதல்போல உவமிதி சாமக்கிரியினும் வாக்கியார்த்தாநுபவம் பாகிய (புற) மாம்.

இவ் விரண்டு மதங்களும் நையாயிகர்களுடையவாம். இவற்றில் அநேக சங்கை சமாதானமாகிய விசாரம் நியாயகௌஸ்துப முதலியவற்றில் எழுதப்பட்டுளது. சித்தாந்தத்தில் உபயோகமுடைய தன்றாகலின் அதனை யாம் எழுதவில்லை.

உவமிதி ஒப்புமை ஞானத்தால் உண்டாவதுபோல விதர்ம ஞானத்தானும் உண்டாகின்றது. யாண்டுக் காண்டாமிருகமென்னும் பதத்தின் வாச்சியத்தை யறியாதவன் ஆரணியபுருஷனால் ஒட்டையின் விலக்ஷணதர்மமுள்ள கொம்போடுகூடிய மூக்கினையுடையது 'காண்டாமிருகம்' என்னும் பதத்தின் வாச்சியமாமென்னும் வாக்கியத்தைக் கேட்டு வாக்கியார்த்தாநுபவமுண்டாகிய பின்னர் வனத்திற் சென்று ஒட்டையின் விதர்மமான காண்டா * மிருகத்தின் பிரத்தியக்ஷத்திற்குப் பின் அதனிடத்துக் காண்டாமிருகமென்னும் பதத்தின் வாச்சியத்தன்மையை யறிகின்றான்.

பிருதிவி யென்னும் பதத்தின் வாச்சியத்தை அறியாதான் ஜலம்முதலியவற்றின் வைதர்மியமுடையது பிருதிவியென்னுங் குருவாக்கியத்தைக் கேட்டு அதன் அர்த்தத்தை யனுபவித்து, ஜலாதிவைதர்மியமுடைய பதார்த்தத்தினைக் கண்டு, வாக்கியார்த்தத்தை ஸ்மரித்து அப் பதார்த்தத்தில் பிருதிவி யென்னும் பதத்தின் வாச்சியத்தன்மையை நிச்சயஞ் செய்கின்றான்.

விருத்த தர்மமுடையதனை விதர்ம மென்பர்.
விருத்த தர்மத்தினை வைதர்மிய மென்பர்.

காண்டாமிருகத்தின்கண் ஒட்டையினும் விருத்த தர்மம் குறுகிய கழுத்து முதலியனவாம்.

பிருதிவியில் ஜலமுதலியவற்றினும் விருத்ததர்மம் கந்தமாம். இரண்டு உதாரணங்களினும் சாம்பிரதாயிகக்கிரமமாக வாக்கியார்த்தாநுபவம் கரணமும், வாக்கியார்த்த ஸ்மிருதி வியாபாரமும், விருத்த தர்மமுடைய பதார்த்தத்தின் தரிசனம் சககாரியுமாம்.

* மூக்கிற் கத்திபோன்ற வொரு கொம்புள்ள ஓர் மிருகம். இதனை வடநூலார் கட்கமிருக மென்பர்.

நவீனக்கிரமமாக விருத்ததர்ம விசிஷ்ட பதார்த்தத்தின் பிரத்தியக்ஷம் கரணமும், வாக்கியார்த்த ஸ்மிருதி வியாபார மும், வாக்கியார்த்தானுபவம் பாகியசாமக்கிரியுமாம்.

கர்ண்டாமிருகபதத்தின் வாச்சியத்தன்மை ஞானமும் பிருதிவியென்னும் பதத்தின் வாச்சியத்தன்மை ஞானமும் உவமிதியாகிய பயனும்.

இவ்வாற்றான் நியாயமதத்தில் சம்ஞையின் வாச்சியத் தன்மை ஞானம் உவமானப் பிரமாணத்தின் பயனும். பிராசீன மதத்தில் வாக்கியார்த்தானுபவத்தை உவமானப்பிரமாண மென் பர். நவீன மதத்தில் ஒப்புமையடுத்த பிண்டதரிசனம் அல்லது வைதர்மிய விசிஷ்ட பிண்டதரிசனம் உவமானப் பிரமாணமா மென்பர்.

53. வேதாந்தத்தின்படி உவமான உவமிதிகளின் சொரூபம்

வேதாந்த மதத்தில் உவமிதி உவமானங்கட்கு வேறு சொரூபமாம்:—

கிராமத்தில் கோவின் வியக்தியைக் கர்ண்பவன் வனத் திற் சென்று கவயத்தைக் காணுங்கால் "இப்பசு ஆவொப்புமை யுடையது" என்னும் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது; அதன் பின் என் ஆ இப் பசுவினை ஒத்தது என்னும் ஞானம் உண்டா கின்றது.

ஆண்டுக் கவயத்தில் ஆவொப்புமையின் ஞானம் உவமா னப் பிரமாண மெனப்படும்.

ஆவிற் கவயத்தின் ஒப்புமை ஞானம் உவமிதி யெனப்படும்.

இம் மதத்தினும் உவமிதியின் கரணமே உவமான மெனப் படுகின்றது.

ஆனால், உவமிதியின் சொரூபமும் இலக்கணமும் வேறாம். ஆதலால், உவமானத்தின் இலக்கண வேற்றுமையின்றி சொரூ பத்தின் வேற்றுமை சித்திக்கின்றது.

நியாயமதத்திலோ சம்ஞியில் சம்ஞையின் வாச்சியத்தன் மை ஞானம் உவமிதி யெனப்படுகின்றது.

வேதாந்த மதத்தில் ஒப்புமை ஞானத்தாற் றோன்றிய ஞானத்தினை உவமிதி யென்பர்.

கவயத்தில் ஆவின் ஒப்புமை ஞானத்தால் ஆவில் கவயத்தின் ஒப்புமை ஞானம் ஜந்யமாம்.

இவ்வாற்றான் உவமிதியின் இலக்கணம் நியாமதத்தினும் வேறாம். அதன் காணம் எதுவோ அது உவமான மெனப்படுகின்றது.

சாதிருசிய ஞான ஜந்ய ஞானமாகிய உவமிதி ஆவிற் கவயத்தின் ஒப்புமை ஞானமாம். அதன் கரணம் கவயத்தில் ஆவின் ஒப்புமை ஞானமாம்; அதுவே உவமானமாம். இம் மதத்தில் உவமானப் பிரமாணம் வியாபார மின்றியதாம்.

உவமானத்திற்குப் பின்னர் உவமிதியின் உற்பத்தியில் ஓர் வியாபாரமும் வாய்ப்பதில்லை. இம் மதத்தில் வைதர்மிய விசிஷ்ட ஞானத்தால் உவமிதி யங்கீகரிக்கப்படுகிறதில்லை; ஏனெனின், ஒப்புமை ஞானத்தாற் றோன்றிய ஞானத்தினையே உவமிதி யென்பர்; பிறவற்றினை யன்று.

54. விசாரசாகரத்தில் நியாயக்கிரமமாய் உவமிதியைச் சொல்லுதலின் அபிப்பிராயம்

விசாரசாகரத்தில் நியாயக்கிரமமாக உவமிதியின் சொரூபம் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:—

நியாயக் கிரமமாக உவமிதி உவமானங்களின் சொரூபத்தை அங்கீகரிக்கினும் அத்வைத சித்தாந்தத்திற்குக் கெடுதியில்லை. மாறான நியாயக் கிரமத்தான் சித்தாந்தத்திற்கு அநுகூலமான உதாரணம் கிடைக்கின்றது.

ஏனெனின், வைதர்மிய ஞானத்தான் உவமிதி நியாயமதத்திற் கொள்ளப்பட்டுளது. சித்தாந்தத்திற் கநுகூலமான அதன் உதாரணம் இதுவாம்:—

"ஆன்ம பதத்தி னர்த்தம் எவ்வியல்பினது?" என்னும் வினாவிற்குத் "தேகமுதலியவற்றின் வைதர்மியமுடையது ஆன்மா" என்றுரைத்த குருவின் விடையைக்கொண்டு அறித்

தியமும் அசுசியும் துக்கசொரூபமுமான தேகாதிகளினும் விதர்மமுடைய நித்திய சுத்த ஆநந்தரூபம் ஆன்ம பதத்தின் வாச்சியமாமென்று ஏகாந்தமான விடத்தில் விவேகிக்குங்காலத்து, மனதிற்கு ஆத்மாவோடு சையோக முண்டாய் உவமிதி ஞான முண்டாகின்றது.

சாதிருசிய ஞானத்தாற் றோன்றிய ஞானத்தினையே உவமிதியென அங்கீகரிக்கின் ஆன்மாவில் எதற்கும் சாதிருசியம் (ஒப்புமை) இன்று.

ஆகலின், ஜிஞ்ஞாசுவுக்கு (ஞான விருப்புடையோனுக்கு) அநுகூலமான உதாரணம் கிடைக்கிறதில்லை. அசங்கத்தன்மை முதலிய தர்மங்களான் ஆகாயத்தினை யொத்தது ஆன்மாவாகவின் ஆகாயத்தில் ஆன்மாவின் ஒப்புமை ஞானம் உவமானமாம்; ஆன்மாவில் ஆகாயத்தின் ஒப்புமை ஞானம் உவமிதியாம்.

ஜிஞ்ஞாசுவுக்கு அநுகூலமான இவ்வுதாரணம் சித்தாந்தத்தின் உவமிதிக்குச் சம்பவிக்குமாயினும், எவ்வதிகாணத்தில் எப் பதார்த்தத்தினது அபாவத்தின் ஞான முளதோ, ஆண்டு அபாவ ஞானத்தில் பிரம (மய்க்க) புத்தி உண்டாதலின்றி, அவ் வதிகாணத்தில் அப் பதார்த்தத்தின் ஞானம் உண்டாகாது.

எங்ஙனம்: ஆன்மாவில் கர்த்திருத்துவ முதலியவற்றின் அபாவஞான முளதாக நியாயமுதலிய சாஸ்திரங்களைக் கேட்டும் முதல் ஞானத்தில் பிரமபுத்தி யுண்டாதலின்றிக் கர்த்தா போக்தா ஆன்மாவென்னும் ஞானம் நிகழாது.

எவனுக்கு வேதாந்தார்த்த நிச்சயஞ் செய்யும் நையாயிகர் முதலியோரது குசங்கத்தால் கர்த்தா போக்தா ஆன்மாவாமென்னு ஞான முண்டாகின்றதோ, ஆண்டு முதல் ஞானத்தில் பிரமபுத்தி யுண்டாகின்றது.

முதல் ஞானத்தில் பிரமபுத்தி யுண்டாதலின்றி விரோத முடைய ஞானம் நிகழாது.

அப் பிரமபுத்தி பிரம (மய்க்க) வடிவினதாகுக, அல்லது உண்மை வடிவினதாகுக. இதில் ஆக்கிரக மில்லை. ஆனால், பிரமபுத்தியில் பிரமத்தன்மை நிச்சயம் வேண்டியதின்றென்பது ஆக்கிரகமாம்.

இவ்வாற்றான் எக்காலத்தில் குரு வாக்கியங்களான் ஜிஞ்ஞாசுவுக்கு ஆகாயமுதலிய சகல பிரபஞ்சமும் கந்தருவ நகரம்போல் திருஷ்ட நஷ்ட (காணும்போதே யழியும்) சுபாவமுடையனவாம்; அவற்றின் விலக்ஷண சுபாவமுடையது ஆன்மா.

ஆகாயமுதலியவற்றில் ஆன்மாவிற்குச் சிறிதும் ஒப்புமையின்றென்னும் திடநிச்சய முண்டாகுங்காலத்தில் ஆகாயத்திற்கும் ஆன்மாவிற்கும் ஒப்புமைஞானம் சம்பவியாதாகலின் உத்தம ஜிஞ்ஞாசுவுக்கு அநுகூலமான சித்தாந்தத்தினது உவமிதியின் உதாரணம் கிடைக்காது.

55. முற்கூறிய வேதாந்தக் கிரம நியாயக்கிரமங்களின் விலக்ஷணமான உவமிதி உவமானங்களின் இலக்கணம்

முற்றும் நையாயிகக் கிரமத்தின் உவமிதியில் வித்துவேஷம் (விசேஷ வெறுப்பு) உண்டாகுமாயின் உவமிதிக்கு இவ்விலக்கணஞ் செய்துகொள்ளல்வேண்டும்:—

சாதிரிசிய ஞானத்தாற் றோன்றிய ஞானம் அல்லது வைதர்மிய ஞானத்தாற் றோன்றிய ஞானம் என்னும் இரண்டனுள் யாதானு மொன்றுளதேல் அது உவமிதி யெனப்படும்.

காண்டாமிருகத்தில் ஒட்டையின் வைதர்மிய ஞானத்தான் ஒட்டையில் காண்டாமிருகத்தின் வைதர்மிய ஞானம் உண்டாகின்றது. பிருதிவியில் ஜலத்தின் வைதர்மிய ஞானத்தால் ஜலத்தில் பிருதிவியின் வைதர்மிய ஞான முண்டாகின்றது.

ஆதலால், ஒட்டையில் காண்டாமிருகத்தின் வைதர்மிய ஞானமும் ஜலத்திற் பிருதிவியின் வைதர்மிய ஞானமும் உவமிதியாம்; அதன் கரணம் உவமான மெனப்படும்.

ஈண்டுக் காண்டாமிருகத்தில் ஒட்டையின் வைதர்மிய ஞானமும் பிருதிவியில் ஜலத்தின் வைதர்மிய ஞானமும் கரணமாகலின் உவமானமாம்.

விபரீதமாகவும் உவமான உவமிதித்தன்மை சம்பவிக்கின்றது.

இந்திரிய சம்பந்த முடையதில் சாதிருசியஞானம் உவமானமாம்.

இந்திரியத்தின் மறைபட்டதில் சாதிருசிய ஞானம் உவமிதியாம்.

அங்ஙனமே, பிரபஞ்சத்தில் ஆத்மாவின் வைதர்மிய ஞானத்தால் ஆத்மாவில் பிரபஞ்சத்தின் வைதர்மிய ஞானம் உவமிதியாகின்றது.

இவ்வாற்றான் சாதிருசிய ஞானஜந்ய ஞானம் வைதர்மிய ஞானஜந்ய ஞானம் என்னும் இரண்டையும் உவமிதியாகக் கூறின் ஜிஞ்ஞாசுவுக்கு அநுகூலமான உதாரணம் சம்பவிக்கின்றது.

56. வேதாந்த பரிபாஷையினும் அதனுரையினும் கூறியதன் கண்டனம்.

வேதாந்த பரிபாஷையில் சாதிருசியஞான ஜந்யஞானமொன்றே உவமிதியின் இலக்கணமாகச் சொல்லப்பட்டது. அதன் உரையில் அந் நூலாசிரியர் புத்திரர் இரண்டாவது உவமிதியைக் கண்டித்தற் பொருட்டுக் கூறியிருத்தல் வருமாறு:—

யாண்டுக் கமலத்தால் லோசன (நேத்திர) த்தை உவமிக்கின்றேன் என்றிவ்வாறு உவமான உவமேயத்தன்மை யுண்டாகின்றதோ, அவ்விடத்திற்றான் உவமானப்பிரமாண முண்டாகின்றது.

வைதர்மியஞான முண்டாகுமிடத்து உவமான வுவமேயத் தன்மை யுண்டாகிறதில்லை. ஆதலால், உவமானப் பிரமாணம் சம்பவியாது என்பதாம்.

அவரை இது கேட்டல் வேண்டும்:—வைதர்மிய ஞானஜந்ய உவமிதிக்கு எவ் வுதாரணங்கள் கூறப்பட்டனவோ, அவற்றில் உவமிதியினது விஷயத்தின் ஞானம் உவமானப் பிரமாணத்தா லுண்டாகிறதில்லை யெனின், எப்பிரமாணத்தால் அவற்றின் ஞானம் உண்டாகின்றது?

எப் பிரமாணத்தால் அவற்றின் ஞானத்தைக் கூறுவரோ அப் பிரமாணத்தானே சாதிருசிய ஞான ஜந்ய உவமிதியினது விஷயத்தின் ஞானமும் உண்டாய்விடும்.

உவமானப்பிரமாணத்தினை பிரயோஜனத்தின் அபாவத்தால் அங்கிகரித்தல்வேண்டும்.

கவயத்தின் பிரத்தியக்ஷத்தில் ஆவின் சாதிருசியமோர் பிரத்தியக்ஷம்; ஆனால், ஆவில் கவயத்தின் சாதிருசியம் பிரத்தியக்ஷமன்று.

ஏனெனின், தர்மியோடு இந்திரியத்தின் சையோக முண்டாகுமாயின், இந்திரிய சையுத்த தாதான்மிய சம்பந்தத்தால் சாதிருசிய தர்மத்தின் பிரத்தியக்ஷ முண்டாகும்.

ஆவடிவதர்மியோடு இந்திரியசையோகமின்மையால் ஆவில் கவயத்தின் சாதிருசியம் பிரத்தியக்ஷத்திற்கு விஷயமன்று.

ஆதலால், ஆவில் கவயத்தின் சாதிருசிய ஞானத்திற்கு ஏதுவாகக் கவயத்தில் ஆவின் சாதிருசியஞான வடிவமாகிய உவமானப்பிரமாணம் வேண்டியதாயின், அங்ஙனமே காண்டாமிருகத்தில் ஒட்டையினது வைதர்மியத்தின் பிரத்தியக்ஷ ஞானமோ வுளது.

ஒட்டையினோடு இந்திரிய சையோக மின்மையால் ஒட்டையில் காண்டாமிருகத்தினது வைதர்மியத்தின் ஞானம் பிரத்தியக்ஷ வடிவ மாகாது; அதற்கு ஏதுவாகக் காண்டாமிருகத்தில் ஒட்டையின் வைதர்மியஞானமாகிய உவமானமே பிரமாணமென்று அங்கிகரிக்கத் தக்கதாம்.

வேதாந்த பரிபாஷையின் உரையில் எந்த ஞானத்திற்குப் பின் உவமிக்கின்றேனென்னும் தோற்றம் ஞாதாவுக்கு (அறிபவனுக்கு) உண்டாகின்றதோ, அந்த ஞானம் உவமிதியாம்.

வைதர்மிய ஞானத்தாற் றோன்றிய வைதர்மிய ஞானத்திற்குப் பின் உவமிக்கின்றேனென்னும் தோற்ற முண்டாகிறதில்லை; ஆதலால், உவமிதி யன்றென வெழுதியிருக்கின்றனர்.

அது பிசகு; ஏனெனின், முகத்தில் சந்திரனது சாதிருசியப் பிரத்தியக்ஷத்தின் பின்னர் முகத்தைச் சந்திரனோடு உவமிக்கின்றேனென்னும் தோற்ற முண்டாகின்றது.

முகத்தில் சந்திரனது சாதிருசியத்தின் பிரத்தியக்ஷ ஞானமுளது. உவமிதி யில்லை. ஆதலால், உவமிக்கின்றேன் என்னும் வியவகாரத்திற்கு விஷயம் உவமை யலங்காரமாம்.

யாண்டு உவமான உவமேயங்களுக்குச் சமான சிறப்புண்டாகின்றதோ ஆண்டு உவமையலங்காரம் சொல்லப்படுகின்றது.

அலங்காரத்தின் சாமானிய லக்ஷணமும், உவமை முதலியவற்றின் விசேஷ லக்ஷணமும் அலங்காரசந்திரிகை முதலியவற்றிற் பிரசித்தமாம். அது கடினமும் உபயோகமின்றியதுமாமென்றறிந்து ஈண் டெழுதப்படவில்லை.

ஆதலால், யாண்டு உவமிக்கின்றேன் என்னும் தோற்றமுண்டாகின்றதோ அதன் விஷயம் உவமிதி ஞானமன்று.

ஆனால், சாதிருசிய ஞானஜந்நிய ஞான வைதர்மிய ஞான ஜந்நியஞானங்களில் உவமிதி சத்தம் பாரிபாஷிகமாம்.

எங்ஙனம், சந்தோகிரந்தங் (யாப்புநூல்)களில் ஐந்து ஆறு ஏழுகளில் பாணம் ரஸம் முனியென்னும் சொற்கள் பாரிபாஷிகமாயுளவோ, அங்ஙனமே உவமிதி சத்தமும் நியாயசாஸ்திர அத்வைத சாஸ்திரங்களில் வேறுவேறு பொருள்களில் பாரிபாஷிகமாம்.

ஆதலால், அத்வைத சாஸ்திரத்தில் சாதிருசியஞான ஜந்நிய ஞானத்தினைப்போல, வைதர்மியஞான ஜந்நியஞானமும் உவமிதி சத்தத்தின் அர்த்தமாம்.

பேதத்தோடு கூடிய சமான தர்மத்தினைச் சாதிருசியமென்பர்.

எங்ஙனம்: கவயத்தில் கோவின் பேதத்தோடுகூடிய சமான அவயவம் கவயத்தி லுளது. அதுவே கோவின் சாதிருசியமாம்.

கோவின் சமான தர்மம் கோவி லுளது; பேத மில்லை.

கோவின்பேதம் அசுவத்தி லுளது; சமானதர்ம மின்று. ஆதலால், சாதிருசிய மில்லை.

சந்திரனது பேதத்தோடுகூடிய சந்தோஷத்தை யுண்டு பண்ணுந் தன்மை வடிவினதாகிய சமான தர்மம் முகத்தி லுளது. அதுவே முகத்தில் சந்திரனது சாதிருசியமாம்.

இவ்வாற்றான் உவமான உவமேயங்களின் பேதத்தோடு கூடிய சமான தர்மமே சாதிருசிய பதத்தின் பொருளாம்.

சிலர் சாதிருசிய மென்பது ஓர் பின்ன பதார்த்தம்; அது உவமான உவமேயங்களி லுள்ளது. உவமான உவமேயங்களினது நிர்ணயிக்கப்பட்ட தர்மங்களின் வேறுமெனக் கூறுகின்றனர். அது நலமுடைய தன்று.

ஏனெனின், யாண்டு இரண்டு பதார்த்தங்களின் சமானதர்மம் அற்ப முளதோ, ஆண்டு அபகிருஷ்ட (தாழ்ந்த) சாதிருசிய மெனப்படுகின்றது.

சமான தர்மம் அதிகமுள்ளவிடத்து உத்கிருஷ்ட (உயர்ந்த) சாதிருசிய மெனப்படுகின்றது.

இவ்வாற்றான் சமான தர்மத்தின் மிகுதி குறைவுகளாற் சாதிருசியத்தில் உத்கர்ஷ அபகர்ஷங்கள் (உயர்வு தாழ்வுகள்) உண்டாகின்றன. நிர்ணயிக்கப்பட்ட தர்மங்களின் வேறான சாதிருசிய முளதாயின், பிராஹ்மணத்தன்மை முதலிய ஜாதியைப் போல அகண்டமாகும்; அதனிடத்து உத்கர்ஷ அபகர்ஷங்கள் பொருந்தா.

ஆகவின், சமானதர்மம் சாதிருசியமா மென்னும் உதயநாசாரியர் மதம் சித்தாந்தத்தில் அங்கீகரிக்கத்தக்கதாம்.

57. கரணத்தினது இலக்ஷணத்தின் நிர்ணயம்.

ஆனல், உவமிதி சத்தத்தின் பரிபாஷைக்கு நியாய மதத்திலும் அத்வைத மதத்திலும் பேத முளது. உவமான சத்தத்தின் பொருள் இரண்டு மதத்திலும் பின்ன மன்று. ஏனெனின், உவமிதியின் கரணம் உவமான மெனப்படும்.

நியாயமதத்தில் கவயபதத்தின் வாச்சியத்தன்மை யுணர்ச்சி உவமிதி பதத்தின் பாரிபாஷிகப் பொருளாம். அதன் கரணம் வாக்கியார்த்தாநுபவம், அல்லது சாதிருசிய விசிஷ்ட பிண்டப் பிரத்தியக்ஷமாம்.

அத்வைத மதத்தில் சாதிருசியஞான ஜந்நியஞானமும், வைதர்மியஞான ஜந்நியஞானமும் உவமிதி பதத்தின் பாரிபாஷிகப் பொருளாம். அதன் கரணம் சாதிருசிய ஞானமும் வைதர்மிய ஞானமுமாம்.

இவ்வாற்றான் உவமிதி சத்தத்திற்குப் பரிபாஷையில் பேதமுண்டு. அதன் வேறுபாட்டால் உவமானத்தின் பேதம் சித்த

மாகின்றது. உவமான பதம் பாரிபாஷிக மன்று; ஆனால் யௌகிகமாம்.

வியாகரணத்தின்படி எப்பதம் அவ்யவப்பொருளை விடுகிறதில்லையோ, அது யௌகிகபத மெனப்படுகின்றது.

ஈண்டு வியாகரணத்தின்படி உவமிதியின் கரணம் உவமான பதத்தினது அவயவங்களின் பொருளாம்.

உவமானத்தால் உவமிதியின் உற்பத்தியில் வியாபாரமில்லை. ஆதலால், வியாபாரமுடைய காரணமே கரணமா மென்னும் நியம மில்லை. ஆனால், நிர்வியாபார காரணமும் கரணமாகின்றது.

நியாயமத நிரூபணத்தின் பிரசங்கத்தில் வியாபாரமுடைய அசாதாரண காரணத்திற்கே கரணத்தன்மை சொல்லப்பட்டிருக்கிற தாகலின், நிர்வியாபார காரணத்தில் கரணத்தன்மை சம்பவியாது.

என்றாலும், சித்தாந்த மதத்தில் வியாபாரத்திற்கு வேறான அசாதாரண காரணத்திற்குக் கரணத்தன்மை சொல்லுதல் வேண்டும். வியாபாரமுடைய அசாதாரண காரணத்திற்கே கரணத்தன்மை யில்லை.

எங்ஙனம் வியாபாரமுடையதென்று சொல்லுவதனால் வியாபாரத்தில் கரணலக்ஷணம் செல்லாதோ, அங்ஙனமே வியாபாரத்திற்கு வேறானதென்று சொல்லுதலாலும் வியாபாரத்தில் கரணலக்ஷணம் செல்லாது.

ஏனெனின், எங்ஙனம் வியாபாரத்தில் வியாபார முடைமை யில்லையோ, அங்ஙனமே வியாபாரத்தின் வேறுதற்றன்மையும் வியாபாரத்தி லில்லை.

இவ்வாற்றான் வியாபாரத்தின் வேறாய அசாதாரண காரணம் கரண மெனப்படும். அது வியாபார மின்றிய தாகுக, அல்லது வியாபார முடையதாகுக.

பிரத்தியக்ஷம் அநுமானம் சத்தம் என்னும் மூன்றுமோ பிரத்தியக்ஷப்பிரமை அநுமிதிப்பிரமை சாப்திப்பிரமைகளின் வியாபாரமுடைய காரணமாம்.

உவமானம் அர்த்தாபத்தி அநுபலப்தி யென்னும் மூன்றும் உவமிதிமுதலிய பிரமையின் நிர்வியாபார காரணமாம்.

ஆதலால், சித்தாந்தத்தின்படி காண லக்ஷணத்தில் வியாபாரமுடைய தென்னும் பதமுள்ள இடத்தில் வியாபாரத்திற்கு வேறானதென்று சொல்லுதல் வேண்டும்.

நியாயமதத்திலோ காண லக்ஷணத்திற்கு வியாபாரத்தில் அதிவியாப்தியை நீக்குதற்பொருட்டு வியாபாரமுடைய தென்னும் பதத்தினைச் சேர்க்க, அல்லது வியாபாரத்தின் வேறாகிய தென்னும் பதத்தினைச் சேர்க்க. இருவகையானும் கரண லக்ஷணம் சம்பவிக்கும்.

ஏனெனின், நியாய மதத்தில் உவமிதிப் பிரமையின் காணமாகிய உவமானப் பிரமாணத்தில் வாக்கியார்த்த ஸ்மிருதி வியாபாரமாம். இது நியாயாநுசாரமான உவமான நிரூபணத்தில் முன் சொல்லப்பட்டது.

ஆதலால், உவமிதியின் காணமாகிய உவமானத்தில் வியாபார முடையதெனக் கூறினும் காணலக்ஷணத்தின் அவ்வியாப்தி யில்லை.

அர்த்தாபத்தியை அநுமானத்தி லடங்கியதாக நையாயிகர் அங்கீகரித்திருக்கின்றனர்.

ஆதலால், அர்த்தாபத்தியில் பிரமையின் காணத்தன்மை வடிவினதாகிய பிரமாணத்தன்மையை அங்கீகரியாமையால் அதில் காணத்தன்மை வியவகாரத்தின் அபேக்ஷை யில்லை.

அங்ஙனமே அபாவத்தின் பிரமையில் அநுபலப்தியைச் சககாரி (துணைக்)காரணமென்றே மதித்திருக்கின்றனர்.

பிரமைக்காணத்தன்மை வடிவினதாகிய பிரமாணத்தன்மையை அநுபலப்திக்கு நையாயிகர் அங்கீகரிப்பதில்லை. ஆனால், அபாவப்பிரமையில் அநுபலப்தியோடு கூடிய இந்திரிய முதலியவற்றிற்கே பிரமாணத்தன்மையை யங்கீகரிக்கின்றனர்.

ஆதலால், அநுபலப்தியிலும் பிரமைக்காணத்தன்மை வடிவினதாகிய பிரமாணத்தன்மையின் அங்கீகார மின்மையால் காணத்தன்மை வியவகாரத்தின் அபேக்ஷை யில்லை.

ஈண்டு இது நிச்சயம்:—அர்த்தாபத்தி அநுபலப்திகளில் கரணத்தன்மை வியவகாரத்தில் இஷ்டமுளதாக, கரணத்தின் இலக்கணம் இல்லையாயின், கரண லக்ஷணத்தில் அவ்வியாப்தி தோஷ முண்டாம்.

அர்த்தாபத்தி அநுபலப்திகளில் பிரமாணத்தன்மை யுளதேல் கரணத்தன்மையின் அபேக்ஷை அவசிய முண்டாம். ஏனெனின், பிரமையின் கரணத்தைப் பிரமாண மென்பர். ஆதலால், பிரமாணத்தன்மையில் கரணத்தன்மையின் பிரவேசமிருத்தலின், கரணத்தன்மையின்றிப் பிரமாணத்தன்மை சம்பவியாது.

நியாய மதத்தில் அர்த்தாபத்தி அநுபலப்திகளில் அந்தப் பிரமாணத்தன்மையின் அங்கீகார மின்மையால் இரண்டினும் கரணத்தன்மை வியவகாரம் அபேக்ஷிக்கப்படுவதின்று.

இவ்வாற்றான் கரணத்தன்மை யின்றிய அர்த்தாபத்தி அநுபலப்திகளில் கரணலக்ஷண மின்மையால் அவ்வியாப்தி தோஷ முண்டாகிற தில்லை.

இவ்வாற்றான் நியாயமதத்தில் வியர்பாரமுடைய அசாதாரண காரணம் கரணமெனக் கூறினும் அவ்வியாப்தி யில்லை.

சித்தாந்தத்திலோ வியர்பாரமுடையதாகக் கூறின் உவமான முதலிய மூன்று பிரமாணங்களிலும் கரண லக்ஷணத்தின் அவ்வியாப்தி யுண்டாகின்றது.

ஏனெனின், சித்தாந்த மதத்தில் இந்திரிய சம்பந்தமுடைய கவயத்தில் கோவின் பிரத்தியக்ஷ வடிவினதாகிய சாதிருசிய (ஒப்புமை) ஞானம் உவமானப் பிரமாணமாம்.

மறைபட்டுள்ள (தூரத்துள்ள) கோவில் கவயத்தின் சாதிருசிய ஞானம் உவமிதிப் பிரமையாம்.

அங்ஙனமே இந்திரிய சம்பந்தமுடைய பசுவி னுண்டாம் மறைபட்டுள்ள பசுவின் வைதர்மிய ஞானமோ உவமானப் பிரமாணமாம்.

மறைபட்டுள்ள பசுவி னுண்டாம் இந்திரிய சம்பந்தமுடைய பசுவின் வைதர்மிய ஞானம் உவமிதிப் பிரமையாம்.

இவ்வாறு உவமானத்தால் உவமிதியின் உற்பத்தியில் ஓர் வியாபாரமும் சம்பவிக்கிறதில்லை.

உவமிதிப்பிரமையின் கரணத்தை உவமானப் பிரமாணமென்பர். ஆதலால், உவமானப்பிரமாணத்தில் கரணத்தன்மை வியவகாரம் இஷ்டமாம்.

அங்ஙனமே, அர்த்தாபத்தி அநுபலப்திகளினும் பிரமாணத்தன்மையைக் கூறுவாம். ஆகலின், கரணத்தன்மை வியவகாரம் இஷ்டமாம்; வியாபாரத்தின் சம்பவ மின்று. அதனால் உவமான அர்த்தாபத்தி அநுபலப்திகளில் கரணலக்ஷணத்தின் அவ்வியாப்தி யுண்டாகும்.

ஆதலால், கரணத்தின் இலக்கணத்தில் சித்தாந்தத்தின்படி வியாபாரமுடைய தென்னும் பதத்தை விட்டு, வியாபாரத்தின் வேறாயவெனக் கூறவேண்டும்.

வேதாந்த பரிபாஷை யென்னும் நூலில் தர்மராஜர் வியாபாரமுடைய அசாதாரண (சிறப்புக்) காரணமென்று கரணலக்ஷணம் கூறியிருக்கின்றார்.

அன்றியும், பிரமையின் கரணம் பிரமாணமென்று பிரமாணத்தின் இலக்ஷணம் கூறியிருக்கின்றார்.

தர்மராஜருடைய புத்திரர் வேதாந்த பரிபாஷையின் உரையில் இங்ஙனம் கூறியிருக்கின்றார்:—

உவமிதியின் அசாதாரண காரணம் உவமானம்; அது வியாபர மின்றியதாம்.

அங்ஙனமே, அர்த்தாபத்தி அநுபலப்திகளும் வியாபாரமின்றிய காரணங்களாமாகலின், உவமானமுதலிய மூன்றிலிலக்ஷணத்தில் வியாபாரத்தின் பிரவேச மில்லை.

உவமிதிப்பிரமையின் வியாபாரமுடைய அசாதாரண காரணம் உவமானமாம்.

உபாபாதகத்தினது பிரமையின் வியாபாரமுடைய அசாதாரண காரணம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்.

அபாவப்பிரமையின் வியாபாரமுடைய அசாதாரண காரணம் அநுபலப்திப்பிரமாணமாமென் றிவ்வாறு உவமானமுத

லிய மூன்றற்கும் வியாபாரமுடைய தென்னும் பதம் பொருந்தியதாக இலக்ஷணத்தைச் செய்யின், மூன்றற்கும் வியாபாரமுடைமை யின்மையால், உவமானமுதலியவற்றின் விசேஷலக்ஷணம் சம்பவியாததாகும். ஆகலின், வியாபார முடையதென்னும் பதமின்றியது விசேஷ லக்ஷணமாம். உவமிதிப்பிரமையின் அசாதாரண காரணம் உவமான மெனப்படும்.

இவ்வாறே அர்த்தாபத்தி அநுபலப்தியின் இலக்ஷணத்தினும் வியாபாரமுடையதெனக் கூறலாகாது; ஆதலால், அசம்பவ மின்று.

இவ்வாறு தர்மராஜர் புத்திரர் உவமானப்பிரமாண முதலியவற்றின் விசேஷலக்ஷணமோ பொருந்தும்வண்ணம் கூறுகின்றார்.

எந்தக் கரணலக்ஷணமும் அங்ஙனமே பிரமாணத்தின் சாமானிய லக்ஷணமும் மூலகாரரால் (தர்மராஜரால்) முன் கூறப்பட்டனவோ அவற்றின்கண் ஓர் வேற்றுமையுங் கூறினாரில்லை. ஆகலின், அவர் புத்திரர் கூற்றிற் குறை யுளது.

ஏனெனின், கரண இலக்கணத்தில் விசேடத்தைக் கூறினல்லால் வியாபாரமுடைமையின் அபாவத்தால், உவமிதியின் காணம் உவமானம், அர்த்தாபத்திப்பிரமையின் கரணம் அர்த்தாபத்தி, அபாவப்பிரமையின் கரணம் அநுபலப்தி என்னும் விவகாரம் உண்டாகலாகாது.

அங்ஙனமே, காணத்தன்மையின் அபாவத்தால் உவமான முதலியவற்றில் பிரமாணத்தன்மை விவகாரமு முண்டாகலாகாது.

ஆகலின், மூலகாராது கரண இலக்கணத்தில் வியாபார முடையது என்னும் பதத்திற்கு வியாபார பின்னமென் றுரைசெய்வதில் சர்வ இஷ்டசித்தியு முண்டாகிறது. ஆகலின், மூலகாரரது கரண இலக்கணத்தில் வியாபாரமுடையது என்னும் பதத்திற்கு வேறு பொருள் செய்யாமையின் புத்திரர் கூற்றிற் குறை யுளது.

நமது கிரமமாகவோ வியாபார மின்றிய உவமான முதலியவற்றினும் உவமிதிமுதலிய பிரமைகளின் காணத்தன்மை சம்பவிக்கின்றது.

இவ்வாற்றுன் பிரபஞ்சத்தில் பிரஹ்மத்தின் விதர்மத் தன்மையின் (வேற்றியல்பதாந் தன்மையின்) ஞானம் உபமான மாம்.

பிரபஞ்சத்தினும் விதர்மமம் (வேற்றியல்புடையது) பிரஹ்ம மா மென்பது உவமானப் பிரமாணத்தின் பயனுகிய உவமிதி ஞானமாம்.

நான்காவது பிரகாசம்

உவமானப்பிரமாண நிருபணம்

முற்றிற்று.

ஓம் தத்ஸத் ப்ரஹ்மணே நமஃ

ஐந்தாவது பிரகாசம்:

அர்த்தாபத்திப் பிரமாணம்

58. நியாயமதத்தில் அர்த்தாபத்தியின் அங்கீகார மின்மையும், மூவகை அனுமானங்களின் வர்ணனமும்

நையாயிகமதத்தில் முற்கூறிய நான்குமே பிரமாணங்களாம்.

வெதிரேகி யநுமானத்தில் அர்த்தாபத்திப் பிரமாணம் அடங்கும்.

சித்தாந்தத்தில் கேவல வெதிரேகி யநுமானம் அங்கீகரிக் கப்படவில்லை யாகலின், அர்த்தாபத்தி வேறு பிரமாணமாம்.

கேவல வெதிரேகி அநுமானத்தின் பிரயோஜனம் அர்த்தாபத்தியாற் பெறப்படுகின்றது.

எதில் அந்நுவய வியாப்திக்கு உதாரணங் கிடைக்காது சாத்தியாபாவத்தில் ஹேதுவபாவத்தினது வியாப்தியின் உதாரணம் கிடைக்கின்றதோ, அது கேவல வேதிரேகி யநுமான மெனப்படும்.

எங்ஙனம்:—பிருதிவி பிறவற்றின் வேறு; கந்தமுடைமை யான் என்னுமிடத்து யாண்டுக் கந்தமுடைமை யுண்டோ, ஆண்டுப் பிறவற்றின் வேருதற்றன்மை யுண்டு என்னும் அந்நுவய வியாப்திக்கு உதாரண மில்லை. ஏனெனின், பக்ஷத்தின் வேருனது திருஷ்டாந்தமாம்.

ஈண்டுப் பிருதிவி முழுவதும் பக்ஷமாம். அதனின் வேருய ஜலமுதலியவற்றில் பிறவற்றின் வேருதலும் கந்தமு மில்லை. ஆதலால், இது கேவல வெதிரேகியநுமானமாம்.

யாண்டுப் பிறவற்றின் வேருதலின்மை யுளதோ, ஆண்டுக் கந்தமின்மை யுளது, ஜலத்திற்போல என்றிவ்வாறு சாத்தியாபாவத்தில் ஹேதுவின்மையின் வியாப்திஞானத்திற் கேதுவாகிய உடனிகழ்ச்சி யுணர்வு யாதோ, அது ஜலமுதலியவற்றி லுளதாம்; ஆகலின் ஜலமுதலியன உதாரணமாம்.

வியாப்திஞானத்திற் கேதுவாகிய உடனிகழ்ச்சி யுணர்வு எதி லுளதோ, அது உதாரண மெனப்படும்.

அந்நுவயி அநுமானத்தில் எங்ஙனம் வியாப்பிய வியாபகத்தன்மை யுளதோ, அங்ஙனமே அதனின் விபரீதம் (மாறுபட்டது) வெதிரேகியி லுளதாம்.

அந்நுவயியில் ஹேது வியாப்பியமும், சாத்தியம் வியாபகமுமாம்.

வெதிரேகியில் சாத்தியாபாவம் வியாப்பியமும், ஏதுவின் அபாவம் வியாபகமுமாம்.

ஆனல், ஈண்டு நையாயிகர்களின் இரண்டு மத முண்டு. சாத்தியாபாவத்தில் ஏதுவபாவத்தின் உடனிகழ்ச்சிக் காட்சி யுண்டாகின்றது.

ஆதலால், ஹேது அபாவத்தின் வியாப்தியின் ஞானமும் சாத்தியாபாவத்தி லுண்டாகின்றது.

இப் பக்ஷத்தில் சில நையாயிகர் இத்தோஷங் கூறுகின்றனர்:— எந்தப் பதார்த்தத்தில் ஏதனது வியாப்தியின்ஞானமுளதோ அப் பதார்த்தமாகிய ஏதுவினுல் அச் சாத்தியத்தின் அநுமிதி யுண்டாகின்றது.

ஏப் பதார்த்தங்களுக் கொன்றற்கொன்று வியாப்பிய வியாபகத்தன்மை யறியப்படவில்லையோ, அவற்றிற் கொன் றற்கொன்று ஏது சாத்தியத்தன்மைகள் பொருந்தா.

பிறவற்றின் வேருதலின்மை கந்தமின்மைகளுக்கு வியாப் பிய வியாபகத்தன்மைகளும், கந்தம் பிறவற்றின் வேருத லென் பவற்றிற்கு ஏது சாத்தியத்தன்மைகளும் கூறுதல் ஆச்சரிய த்தை யுண்டுபண்ணுவதாம். ஆதலால், சாத்தியாபாவ ஏது அபாவங்களின் உடனிகழ்ச்சி யுணர்விஞலும் ஏதுவில் சாத் தியத்தின் வியாப்திஞான முண்டாகின்றது.

அந்நுவயி வெதிரேகி யநுமானங்களுக்கு இத்துணையே பேதமாம்:—யாண்டு ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சி யுணர் விஞல் ஏதுவில் வியாப்தியின்ஞான முண்டாகின்றதோ, அது அந்நுவயியநுமான மெனப்படும்.

யாண்டுச் சாத்தியாபாவத்தில் ஏது அபாவத்தின் உட னிகழ்ச்சி யுணர்வால் ஏதுவில் சாத்தியத்தின் வியாப்திஞான முண்டாகின்றதோ, அது வெதிரேகியநுமான மெனப்படும்.

சாத்தியாபாவத்தில் ஏதுவபாவத்தின் வியாப்திஞானம் ஓரிடத்து முண்டாகிறதில்லை.

யாண்டுச் சாத்தியாபாவத்தில் ஏது அபாவத்தின் வியாப்தி ஞான முண்டாய்விடுகின்றதோ, ஆண்டுச் சாத்தியாபாவத்தால் ஏது அபாவத்தின் அநுமிதியே யுண்டாகின்றது.

ஏதுவால், சாத்தியத்தின் அநுமிதி யுண்டாகிறதில்லை. ஏனெனின், வியாப்பிய ஞானத்தால் வியாபகத்தின் அநுமிதி யுண்டாமென்பது நியமம்.

முதற்பக்ஷம் பிராசீனரது; இரண்டாம் பக்ஷம் நவீனரது. அநுமானப் பிரகரணத்தில் நியாயநூலைப் படித்தலின்றிப் புத்தி யின் பிரவேசம் உண்டாகாதாகலின் அநுமானத்தின் சில பொருளை யாம் விஸ்தாரமாக எழுதவில்லை. இவ்வாறு கேவல வெதிரேகி யநுமானத்திற்கு உதாரண முளது.

யாண்டுச் சாத்தியாபாவ ஹேது அபாவங்களின் உடனிகழ் ச்சிக்கு உதாரணம் கிடைக்கவில்லையோ, அது கேவலாந்நுவயி அநுமான மெனப்படும்.

எங்ஙனம்:—கடம் பதசக்தியுடையது (சொல்லாற்றலுடையது); ஞேயத்தன்மையால்; படம்போல.

ஈண்டுச் சாத்தியாபாவ ஏது அபாவங்களின் உடனிகழ்ச்சி ஓரிடத்தும் கிடைப்பதில்லை.

நியாயமதத்தில் ஞேயத்தன்மையும் பதசக்தியும் எல்லாவற்றின்கண்ணு முள. ஆகலின், அபாவங்களின் உடனிகழ்ச்சிக்கு உதாரணம் கிடைக்கவில்லை.

யாண்டு இரண்டற்கும் உதாரணம் கிடைக்கின்றதோ, அது அந்நுவயவெதிரேகியநுமான மெனப்படும். இவ்வாறு பிரசித்த அநுமான முளது.

பர்வதம் வன்னியுடைத்து என்பதைப் பிரசித்தாநுமானமென்பர். ஈண்டு அந்நுவயத்தின் உடனிகழ்ச்சிக்கு உதாரணம் அடுக்களை; வெதிரேகத்தின் உடனிகழ்ச்சிக்கு உதாரணம் மடு. இவ்வாறு மூவகை யநுமானம் நையாயிகர் கூறுவர்.

59. வேதாந்தத்தின்படி ஒரே அந்நுவயி (அந்நுவயி வெதிரேகி) அநுமானமும், அர்த்தாபத்தியைக் கொள்ளுதலும்

வேதாந்தமதத்தில் கேவல வெதிரேகியின் பிரயோஜனம் அர்த்தாபத்தியினு லுண்டாகின்றது. பிறவற்றின் வேறுதலின்றிக் கந்தமுடைமை சம்பவியாது. ஆதலால், கந்தமுடைமையின் அநுபபத்தி (சம்பவமின்மை) பிறவற்றின் வேறுதலைக் கற்பிக்கின்றது.

இவ்வாற்ருன் அர்த்தாபத்திப் பிரமாணத்தால் கேவல வெதிரேகி பொருளின்றியதாம். கேவலாந்நுவயி அநுமானமென்பது ஒன்றில்லை. ஏனெனின், சகலபதார்த்தங்களும் பிரஹ்மத்தி லில்லை. ஆதலால், வெதிரேக வுடனிகழ்ச்சிக்கு உதாரணம் பிரஹ்மத்தில் கிடைக்கின்றது.

விருத்தி ஞானத்திற்கு விடயமாந்தன்மை வடிவினதாகிய ஞேயத்தன்மை பிரஹ்மத்தின்க ணுளது. உளதாகவே அதன் அபாவம் பிரஹ்மத்தின்கண் பொருந்தாது. என்றுலும், ஞேயத்தன்மை முதலியன மித்தையாம். மித்தையாகிய பொருளும் அதன் அபாவமும் ஒரு அதிஷ்டானத்தி லிருக்கும்.

ஆதலால், எதனை நையாயிகர் அந்நுவய வெதிரேகி யென்பரோ, அதுவே அந்நுவயி யென்னும் ஒருவகை யநுமானமாம். இது வேதாந்தமதம். இம் மதத்தில் கேவல வெதிரேகி யநுமானத்தின் அங்கீகார மில்லை; அர்த்தாபத்திப் பிரமாணம் அங்கீகாரமாம். விசாரித்துப் பார்க்கின் இரண்டனையும் அங்கீகரித்தல் வேண்டும்.

ஏனெனின், யாண்டு ஒரு பொருளினது ஞானத்தின் அநுவியவசாயம் பின்னமாகின்றதோ, ஆண்டு அப் பொருளினது ஞானத்தின் பிரமாணம் பின்ன மாகின்றது.

வியவசாய ஞானத்தை யுண்டுபண்ணும் பிரமாணபேத மின்றி அநுவியவசாயத்தின் பேத முண்டாகாது.

ஓர் வன்னியின் பிரத்தியக்ஷஞான முண்டாகுமாயின், அப்போது வன்னியைச் சாக்ஷாத்கரிக்கின்றேன் என்னும் அநுவியவசாய முண்டாகின்றது.

அநுமான ஜந்நியஞான முண்டாகுங் காலத்து, வன்னியை யநுமிக்கின்றேன் என்னும் அநுவியவசாயம் உண்டாகின்றது.

சத்தத்தால் வன்னியின் ஞான முண்டாகுமிடத்து, வன்னியைச் சத்தத்தா லறிகின்றேன் என்னும் அநுவியவசாய முண்டாகின்றது.

சூரியனிடத்துள்ள வன்னியின் சாதிருசிய ஞானமாகிய உவமானப்பிரமாணத்தால் சூரியனை யொத்த வன்னியின்ஞான முண்டாகுமிடத்து, சூரியனால் வன்னியை உவமிக்கின்றேனென்னும் அநுவியவசாய முண்டாகின்றது.

ஞானத்தின் ஞானத்தை அநுவியவசாய மென்பர்.

அநுவியவசாயத்திற்கு விஷயமாகும் ஞான மெதுவோ, அது வியவசாய மெனப்படும்.

இவ்வாறு வியவசாய ஞானத்தை யுண்டுபண்ணும் பிரமாண பேதத்தால் அநுவியவசாயத்தின் பேத முண்டாகின்றது.

ஒரு காலத்துக் கந்தத்தால் பிறவற்றின் வேறுதலைப் பிருதிவியின்கண் அநுமிக்கின்றேனென்று அநுவியவசாய முண்டாகின்றது.

ஒரு காலத்துக் கந்த அநுபபத்தியால் பிறவற்றின் வேறு தலைப் பிருதிவியிற் கற்பிக்கின்றேனென்று அநுவியவசாய முண்டாகிறது.

யாண்டு அநுவியவசாயத்திற்கு விஷயமாகிய வியவசாயம் அநுமானப்பிரமாண ஜந்நியமாகின்றதோ, ஆண்டு, முதல் அநுவியவசாயம் உண்டாகின்றது.

யாண்டு அநுவியவசாயத்திற்கு விஷயமாகிய வியவசாயம் அர்த்தாபத்திப் பிரமாண ஜந்நியமாகின்றதோ, ஆண்டு இரண்டாவது அநுவியவசாயம் உண்டாகின்றது.

இவ்வாறு அநுவியவசாயத்தின் பேதத்தால் வியவசாயம் வேறுபடுதலின் வியவசாய ஞானத்தை யுண்டுபண்ணும் அநுமானம் அர்த்தாபத்தி யென்னும் இரண்டு மிருக்கின்றன. ஒன்றை யங்கீகரித்து மற்றொன்றை நிஷேதித்தல் பொருந்தாது,

சப்தசக்திப் பிரகாசிகை முதலிய நூல்களில் அநுமானப் பிரமாணத்தினும் சப்தப்பிரமாணத்தின் பேதம் அநுவியவசாயத்தின் பேதத்தானே பெறப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், பிரமாணபேதத்தின் சித்தியில் அநுவியவசாயத்தின் பேதம் பிரபல ஏதுவாம்.

இவ்வாற்றான் அர்த்தாபத்தி கேவலவேதிரேகி யநுமானமென்னு மிரண்டனையும் அங்கீகரித்தல் வேண்டும்.

யாண்டு விஷயத்தின் பிரகாசம் ஒரு பிரமாணத்தாற் பெறப்படுகின்றதோ, ஆண்டு வேறு பிரமாணத்தின் நிஷேத முண்டாகிறதில்லை. கேவல வெதிரேகியின் சொரூபம் சுருக்கமாய்க் காட்டப்பட்டிருக்கின்றது.

60. அர்த்தாபத்திப் பிரமாண பிரமைகளின் சொரூப பேதமும், உதாரணமும்

அர்த்தாபத்தியின் சொரூபம் இதுவாம்:—பித்தியக்ஷ மென்னுஞ்சொல் பிரமாணத்தையும் பிரமையையும் அறிவிப்பதாதல் போல அர்த்தாபத்தி யென்னும் சொல்லும் பிரமாணமும் பிரமையுமாகிய இரண்டனையும் அறிவிப்பதாம்.

உபபாதக கற்பனைக்கு ஏதுவாகிய உபபாத்திய ஞானத்தை அர்த்தாபத்திப் பிரமாண மென்பர்.

உபபாதக ஞானத்தை அர்த்தாபத்திப் பிரமை யென்பர்.

உபபாதகம் சம்பாதகம் (சம்பாதிப்பது) என்பன பரியாயச் சொற்கள்.

ஆதலால், விசாரசாகரத்தில் சம்பாதக ஞானத்தை அர்த்தாபத்தி யென்று கூறியிருக்கின்றது. அது விரோத மில்லை.

எது இன்றி எது சம்பவியாதோ, அதற்கு அது * உபபாத்திய மெனப்படும். அது இராப் போஜனமின்றிப் பகலுண்ணுப் புருஷனிடத்து ஸ்தூலத்தன்மை சம்பவியா தாகலின், இராப்போஜனத்திற்கு ஸ்தூலத்தன்மை உபபாத்தியமாதலாம்.

எதன் அபாவத்தால் எதன் அபாவ முண்டாகின்றதோ அது அதற்கு உபபாதக மெனப்படும். அஃது, இராப் போஜனத்தின் அபாவத்தால் பக லுண்ணுதவனுக்கு ஸ்தூலத்தன்மையின் அபாவ முண்டாகின்றது; ஆதலால், இராத்திரி போஜனம் ஸ்தூலத்தன்மையின் உபபாதகமா மென்பது.

சங்கை:—இவ்வாற்றான் வியாபகத்திற்கு உபபாதகத்தன்மையும் வியாப்பியத்திற்கு உபபாத்தியத்தன்மையும் சித்தமாகின்றன.

உபபாதக ஞானத்திற்கு ஏதுவாகிய உபபாத்திய ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்.

இங்ஙனம் கூறுவதால் வியாபகஞானத்திற்கு ஏதுவாகிய வியாப்பியஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மென்பது பெறப்படுகின்றது. இத்தன்மையது அநுமானப் பிரமாணமாம்.

அர்த்தாபத்திப் பிரமாணத்திற்கு அநுமானப் பிரமாணத்தினும் பேதம் தோற்றவில்லை.

உத்தரம்:—தூலத்தன்மை இராப்போஜனத்தின் வியாப்பியமாம். தூலத்தன்மையுடையவன் தேவதத்தன் என்னும்

* உபபாத்தியம் சம்பாத்தியம் (சம்பாதிக்கப்படுவது) என்பன ஒரு பொருட் சொற்கள்.

இரண்டு ஞானமு முண்டாய் யாண்டு இராப்போஜனத்தின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டு அது அநுமிதிஞானமாம்.

பகலுண்ணாத புருஷனிடத்து இராத்திரி போஜனமின்றி ஸ்தூலத்தன்மை சம்பவியாதென்னும் ஞானத்திற்குப் பின்னுண்டாகும் இராத்திரி போஜனத்தின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமையாம்.

இக் காரணத்தானே முதற்கிரமப்படி இராத்திரி போஜனத்தினது ஞானத்தின் பின் தூலத்தன்மையினுல் இராத்திரி போஜனத்தை அநுமிக்கின்றேன் என்னும் அநுவியவசாய முண்டாகின்றது.

இரண்டாவது கிரமத்தின்படி இராத்திரி போஜனத்தின் ஞானத்திற்குப்பின் தூலத்தன்மை சம்பவியாமையால் இராப் போஜனத்தைக் கற்பிக்கின்றேன் என்னும் அநுவியவசாய முண்டாகின்றது.

இவ்வாற்றுன் உபபாத்திய அநுபபத்தி ஞானத்தால் உபபாதகத்தைக் கற்பித்தல் அர்த்தாபத்திப் பிரமை யெனப்படும்.

உப்பாதக கற்பனைக்கு ஏதுவாகிய உபபாத்தியத்தின் அநுபபத்திஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மெனப்படும்.

அர்த்தமாவது உபபாதக வஸ்து; அதன் ஆபத்தியாவது கற்பனையா மென்னும் அர்த்தத்தால் அர்த்தாபத்தி யென்னும் சொல் பிரமையை யறிவிப்பதாகின்றது. ஆண்டு அர்த்தத்தினது ஆபத்தி என்னும் * ஆரும் வேற்றுமைத்தொகையாம்.

அன்றியும், அர்த்தத்தின் ஆபத்தியை யுண்டாக்குவதென்னும் அன்மொழித்தொகையால் அர்த்தத்தின் கற்பனை எதனினின்றும் உண்டாகின்றதோ, அந்த உபபாத்தியத்தின் அநுபபத்தி ஞானமாகிய பிரமாணம் அர்த்தாபத்தி சப்தத்தின் பொருளாம்.

அர்த்தாபத்தி இருவகையாம்:— ஒன்று திருஷ்டார்த்தாபத்தி (காண்ட லருத்தாபத்தி).

* ஈண்டு அர்த்தாபத்தி யென்னும் சொல் ஆரும் வேற்றுமைத் தொகையால் பிரமையையும் அன்மொழித்தொகையால் பிரமாணத்தையும் உணர்த்துவதைக் காட்டுகின்றூர்.

மற்றொன்று: சுருதார்த்தாபத்தி (கேள்வி யருத்தாபத்தி).

யாண்டுத் திருஷ்டஉபபாத்தியத்தின் அநுபபத்தி ஞானத்தால் உபபாதகத்தின் கற்பனை யுண்டாகின்றதோ, ஆண்டுத் திருஷ்டார்த்தாபத்தி சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்:—பகலுண்ணாதவனது தூலத்தில் உண்டாகும் இராத்திரி போஜனத்தின் ஞானம் திருஷ்டார்த்தாபத்தியாம்.

உபபாத்தியமாகிய தூலத்தன்மை திருஷ்டமாகலின் யாண்டுச் சுருத உபபாத்தியத்தின் அநுபபத்தியின் ஞானத்தால் உபபாதகத்தின் கற்பனை யுண்டாகின்றதோ, ஆண்டுச் சுருதார்த்தாபத்தி யெனப்படுகின்றது.

எங்ஙனம்:—வீட்டி லில்லாத தேவதத்தன் ஜீவிக்கின்றான் என்னும் வாக்கியத்தைக் கேட்டு, வீட்டிற்கு வெளியிடத்தில் தேவதத்தனது இருப்பின்றி வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் பொருந்தாது.

ஆதலால், வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் சம்பவியாமையால் வீட்டிற்குப் புறம்பே தேவதத்தனது இருப்புக் கற்பிக்கப்படுகின்றது.

ஆண்டு வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் திருஷ்டமன்று; சுருதமாம்.

சுருத அர்த்தத்தின் அநுபபத்தியினால் உண்டாகும் உபபாதகத்தின் கற்பனை சுருதார்த்தாபத்திப்பிரமை யெனப்படுகின்றது.

அதற்கு ஏதுவாகிய சுருதார்த்தத்தின் அநுபபத்தி ஞானம் சுருதார்த்தாபத்திப் பிரமாண மெனப்படும்.

ஈண்டு வீட்டி லில்லாத தேவதத்தனது ஜீவனம் உபபாத்தியமாம், வீட்டிற்குப் புறம்பிலிருத்தல் உபபாதகமாம்.

அபிதாநாநுபபத்தி அபிஹிதாநுபபத்தி யென்னும் வேறுபாட்டால் சுருதார்த்தாபத்தி இருவகைப்படும்.

'துவாரம் (வாயில்)' அல்லது 'மூடு' என்றல் முதலிய விடங்களில் யாண்டு வாக்கியத்தின் ஏகதேசம் உச்சரிக்கப்பட்டு,

ஏகதேச முச்சரிக்கப்படவில்லையோ, ஆண்டுச் சுருத பதத்தினது அர்த்தத்தின் அந்நுவயத்திற்குரிய அர்த்தத்தின் அத்தியாகார முண்டாகின்றது; அல்லது, அந்நுவயத்திற்குரிய அர்த்தத்தை யறிவிக்கும் பத மெதுவோ அதன் அத்தியாகார முண்டாகின்றது. இவற்றையே கிரமமாக அர்த்தாத்தியாகார வாதம், சப்தாத்தியாகார வாதமென்று நூல்களில் கூறுவர்.

ஆனால், அர்த்தாத்தியாகாரத்தின்ஞானம், அல்லது பதாத்தியாகாரத்தின் ஞானம் அந்நியப் பிரமாணத்தாற் சம்பவியாது; அர்த்தாபத்திப் பிரமாணத்தினு லுண்டாகின்றது.

ஈண்டு அபிதானுநுபபத்தி வடிவினதாகிய சுருதார்த்தாபத்தி யுளது.

ஏனெனின், அந்நுவயபோதமாகிய பயனையுடைய சத்தப் பிரயோகத்தை அபிதான மென்பர்.

துவாரமென்றல் முதலிய சப்தப்பிரயோகமாகிய அபிதானத்திற்கு மூடுதலாகிய அர்த்தத்தின், அல்லது மூடு என்னும் பதத்தின் அத்தியாகாரமின்றி அநுபபத்தி (சம்பவியாமை) யுளது; அல்லது இந்த இடத்தில் ஒரு பதார்த்தத்திற்கு இஷ்டமான வேறு பதார்த்தத்திலுள்ள அந்துவயபோதத்தில் சொல்லுவோனுக்குள்ள தாற்பரியம் அபிதானமென்னும் சொல்லிற்குப் பொருளாம்.

துவாரமென்னு மித்துணையே கூறின் ஆண்டுத் துவாரத்தின் செயப்படுபொருண்மையை நிரூபிக்குந்தன்மைச் சம்பந்தத்தால் மூடுதலந்நுவயபோதம் கேட்பவனுக் குண்டாகவேண்டுமென்று சொல்லுவான் கருத்தாகிய அபிதான மிருக்கின்றது. மூடு என்னும் இத்துணையே கூறின், ஆண்டும் முற்கூறிய சொல்லுவான் கருத்தாகிய அபிதான மிருக்கின்றது.

சொல்லுவான் கருத்தாகிய அபிதானத்தின் அத்தியாகாரமின்றி அநுபபத்தி யிருக்கின்றதாகலின் அபிதாநாநுபபத்தி யெனப்படுகின்றது.

ஈண்டு அர்த்தத்தின் அத்தியாகாரம் அல்லது சத்தத்தின் அத்தியாகாரம் உபபாதகமாம். போதமாகிய பயனையுடைய சத்

தப் பிரயோகம் உபபாத்தியமாம், அல்லது முற்கூறிய தாற்பரியம் உபபாத்தியமாம்.

போதமாகிய பயனையுடைய சத்தப்பிரயோக மென்னும் உபபாத்தியத்தின் அநுபபத்தியினால், அல்லது தாற்பரியமாகிய உபபாத்தியத்தின் அநுபபத்தியினால் அர்த்தம் அல்லது சத்தமாகிய உபபாதகத்தின் கற்பனை யிருக்கின்றது.

ஆதலால், அத்தியாகாரஞ் செய்யப்பட்ட அர்த்தத்தின், அல்லது சத்தத்தின் அபிதானுநுபபத்தியாகிய அர்த்தாபத்திப் பிரமாணத்தால் போத முண்டாகின்றது.

யாண்டு முழுவாக்கியத்தின் அர்த்தமும் வேறு அர்த்தத்தைக் கற்பித்தலின்றி யநுபபன்னமா (பொருந்தாததா) கின்றதோ, ஆண்டு அபிகிதாநுபபத்தியாகிய சுருதார்த்தாபத்தி யுளது.

எங்ஙனம்:—சுவர்க்ககாமன் யஜிக்கக்கடவன் என்னும் வாக்கியத்தின் அர்த்தம் அபூர்வ கற்பனை யின்றி அநுபபன்னமாம். ஆதலால், அபிகிதாநுபபத்தியாகிய சுருதார்த்தாபத்தி யுளது.

ஈண்டு யாகத்திற்குச் சுவர்க்க சாதனத்தன்மை உபபாத்தியமாம். அதன் அநுபபத்தியால் உபபாதகம் அபூர்வத்தின் கற்பனையாம்.

சுவர்க்க சாதனத்தன்மை திருஷ்டமன்று; ஆனால், சுருதமாம்; ஆதலால் சுருதார்த்தாபத்தியாம்.

61. அர்த்தாபத்தியின் ஜிஞ்ஞாசுவுக் கநுகூலமான உதாரணம்

சுருதார்த்தாபத்தியின் ஜிஞ்ஞாசுவுக் கநுகூலமான உதாரணம், ஆத்மாவை யறிந்தவன் சோகத்தைக் கடக்கின்றா னென்பதாம்.

ஈண்டு ஞானத்தாற் சோகம் நீங்குதல் சுருதமாம். அது சோகத்தின் மித்தியாத்தன்மையின்றிச் சம்பவியாததா யிருத்தலின், ஞானத்தாற் சோகத்தின் நிவிருத்தி சம்பவியாமையால் பந்தத்தினது மித்தியாத்தன்மையின் கற்பனை யுண்டாகின்றது.

பந்த மித்தியாத்துவம் உபபாதகமாம்; ஞானத்தால் சோக நிவிருத்தி உபபாத்தியமாம். அது திருஷ்டமன்று; ஆனல் சுருதமாம். ஆதலால், சுருதார்த்தாபத்தியாம்.

அங்ஙனமே மகாவாக்கியங்களில் ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் கேட்கப்படுகின்றது. அது உபாதியினுலாகிய பேத மாயின் கூடும்; சொரூபமாகப் பேதமாயின் கூடாது. ஆதலால், ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் சம்பவியாமையால் பேதத் தின் ஔபாதிகத்தன்மை (உபாதியினுலாந்தன்மை) யுணர்ச்சி அர்த்தாபத்திப்பிரமாண ஜந்நியமாம்.

ஈண்டு ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் உபபாத்தியமாம்.
பேதத்தில் ஔபாதிகத்தன்மை உபபாதகமாம்.
எல்லா உபபாத்தியஞானமும் பிரமாணமாம்.
உபபாதக ஞானம் பிரமையாம்.

ஈண்டு ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் வித்துவான்களுக் குத் திருஷ்டமாம்; அந்நியர்களுக்குச் சுருதமாம். ஆதலால், இது திருஷ்டார்த்தாபத்தி சுருதார்த்தாபத்தி யென்னும் இரண் டற்கும் உதாரணமாம்.

யாண்டு வாக்கியத்தில் பதத்தின் அல்லது அர்த்தத்தின் அத்தியாகார மில்லையோ, அந்நியார்த்தத்தின் கற்பனையின்றி வாக்கியார்த்தத்தின் அநுபபத்தி யிருக்கின்றதோ (வாக்கியார்த் தம் சம்பவிக்கவில்லையோ), ஆண்டு அபிகிதாநுபபத்தியாகிய சுரு தார்த்தாபத்தி யுண்டாகின்றது.

ஆதலால், துவாரம் என்னும் ஒரு உதாரணத்தை விட அபி கிதாநுபபத்தியாகிய சுருதார்த்தாநுபபத்தியின் உதாரணமு முளது.

அங்ஙனமே, வெள்ளியின் அதிகரணமாகிய சுத்தியில் வெள்ளியின் நிஷேதம் திருஷ்டமாம். அது வெள்ளியின் மித்தி யாத்தன்மையின்றிச் சம்பவியா தாகலின் நிஷேதத்தின் அநுப பத்தியால் இரஜதமித்தியாத்தன்மையின் கற்பனை யுண்டா கின்றது. இது திருஷ்டார்த்தாபத்திக்கு உதாரணமாம்.

ஈண்டு வெள்ளியின் நிஷேதம் உபபாத்தியமும், மித்தியாத் தன்மை உபபாதகமுமாம்.

மனதின் விலயத்திற்குப் பின் நிர்விகற்ப சமாதிகாலத்தில் அத்விதீயப் பிரஹ்மமாத்திரம் எஞ்சிநிற்க, சகல அநாத்மவஸ்துக்களின் அபாவமு முண்டாகின்றது.

அவ் வநாத்மவஸ்து மானஸமாயின் மனதின் விலயத்தால் அதன் அபாவம் சம்பவிக்கும். மானஸ மாகாவிடின் மனதின் இலயத்தால் அதன் அபாவ முண்டாகாது.

ஏனெனின், மற்றொன்றன் விலயத்தால் மற்றொன்றன் அபாவ முண்டாகாதாகலின் மனதின் விலயத்தால் சகலத் துவைதத்தின் அபாவமும் சம்பவியாமையால் சகல துவைதமும் மனோமாத்திரமா மென்னும் கற்பனை யுண்டாகின்றது.

ஈண்டு மனதின் விலயத்தால் சகல துவைதத்தின் விலயமும் உபபாத்தியமாம்; அதன் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்.

சகலத் துவைதத்திற்கும் மானஸத்தன்மை உபபாதகமாம்; அதன் ஞானம் அர்த்தாபத்திப் பிரமையாம்.

ஈண்டு உபபாதகப்பிரமையின் அசாதாரண காரணம் அர்த்தாபத்திப்பிரமாணமாம். அது வியாபார மின்றியத யிருக்கினும், அதனிடத்து உபபாதகப்பிரமையின் காணத்தன்மை சம்பவிக்கின்றது. இது உவமானநிரூபணத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

ஐந்தாவது பிரகாசம்

அர்த்தாபத்திப் பிரமாண நிரூபணம்

முற்றிற்று.

ஓம்

தத் ஸத் ப்ரஹ்மணே நமஃ

ஆறுவது பிரகாசம்:

அநுபலப்திப் பிரமாணம்

62. அபாவத்தின் சாமானிய லக்ஷணமும் பேதமும்

அநுபலப்திப் பிரமாணத்தால் அபாவத்தின் பிரமை யுண்டாகின்றதாகலின், அபாவப்பிரமையின் அசாதாரண காரணத்தை அநுபலப்திப்பிரமாண மென்பர்.

நியாய வேதாந்தங்களின் சம்ஸ்கார மின்றியவர் அபாவத்தின் சொரூபத்தை யறியாராகலின் முதலில் அபாவத்தின் சொரூபத்தைக் கூறுவாம்.

நிஷேதமுக ஞானத்திற்கு விஷயமாவது, அல்லது பிரதியோகியின் அபேக்ஷையோடு கூடிய ஞானத்திற்கு விஷயமாவது எதுவோ, அது அபாவ மெனப்படும். முதலிலக்கணம் பிராசீன மதத்தது.

நவீன மதத்தில் துவம்ஸமும் பிராகபாவமும் ந என்னும் சொல்லாற் றோன்றும் ஞானத்திற்கு விஷயமாகா. இவ்வர்த்தம் மேற் றெளிவாகும். இதனுல் இரண்டாவது இலக்கணம் சொல்லப்பட்டது.

பிரதியோகியை விட்டு அபாவஞான முண்டாகாதாகலின், எல்லா அபாவங்களும் பிரதியோகியின் அபேக்ஷையோடு கூடிய ஞானத்திற்கு விஷய மாவனவாம்.

அபாவத்தைப்போலச் சம்பந்தமும் சாதிருசியமும் பிரதியோகியி னபேக்ஷையின்றிய ஞானத்திற்கு விஷயமாகாது பிரதியோகியின் அபேக்ஷையுடைய ஞானத்திற்கு விஷயமாம். அவற்றில் அபாவத்தி னிலக்கணம் செல்லுகின்றது. என்றுலும் சம்பந்த சாதிருசியங்களின் பிரதியோகித்தன்மையினும் அபாவத்தின் பிரதியோகித்தன்மை விலக்ஷணமாம். அது

நியாயநூல்களில் அபாவாபாவவடிவத் தன்மையாகிய அபாவத்தினது பிரயோகித்தன்மையின் சொரூபமாக ஆசாரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. இத்தன்மைத்தாய பிரதியோகித்தன்மை சம்பந்த சாதிருசியங்களுக்கில்லை.

ஆதலால், சம்பந்த சாதிருசியங்களின் பிரதியோகித்தன்மைக்கு விலக்ஷணமான பிரதியோகித்தன்மை யுடையது எதற்குப் பிரதியோகி யாகின்றதோ, அஃது அபாவ மெனப்படும்.

ஸ்தூலக்கிரமம் இதுவாம்:—சம்பந்த சாதிருசியங்களுக்கு வேருய்ப் பிரதியோகியின் அபேக்ஷையுடைய ஞானத்திற்கு விஷயமாவது யாதோ, அஃது அபாவ மெனப்படும்.

அவ் வபாவம் சம்சர்க்காபாவம், அந்நியோந்நியாபாவ மென இருவகைப்படும்.

அவற்றுள் அந்நியோந்நியாபாவமோ ஒரே விதமாம்.

சம்சர்க்காபாவம் : (1) பிராகபாவம், (2) பிரத்துவம்சாபாவம், (3) சாமயிகாபாவம், (4) அத்தியந்தாபாவம் என்னும் பேதத்தால் நான்கு வகைப்படும்.

இவ்வாற்றான் நால்வகைச் சம்சர்க்காபாவமும் அந்நியோந்நியாபாவமும் சேர்ந்து அபாவம் ஐந்து வகையாம்.

கபாலத்தில் கடத்தின் உற்பத்திக்குமுன் கடத்தின் அபாவ மிருக்கின்றது. பச்சையான கபாலத்தில் இரத்த வுருவம் உண்டாதற்குமுன் இரத்த வுருவத்தின் அபாவ மிருக்கின்றது; அது பிராகபாவமாம்.

கடத்தின் உற்பத்திக்குப் பின் தடிமுதலியவற்ருலுடைந்தகாலத்துக் காபலத்தில் கடத்தின் அபாவ மிருக்கின்றது; அது பிரத்துவம்ஸாபாவமாம்.

வெந்த கபாலத்தில் கருநிறத்தின் அபாவ முண்டாகின்றது; அது கருநிறத்தின் பிரத்துவம்ஸாபாவமாம்.

நையாயிக மதத்தில் பிரத்துவம்ஸாபாவம் ஸாதியும் (உற்பத்தி யுடையதும்), அநந்தமு (நாச மில்லாதது) மாம்.

ஏனெனின், கடத்துவம்ஸத்தின் உற்பத்தியோ தண்டமுதலியவற்ருலுண்டாகின்றதென்பது அநுபவ சித்தமாம். துவம்ஸத்திற்குத் துவம்ஸம் சம்பவியாது.

ஏனெனின், பிராகபாவம், பிரதியோகி, துவம்ஸம் என்னும் மூன்றனுள் ஒன்றன் அதிகரணகாலம் அவசிய முளதாம்.

பிராகபாவ துவம்ஸங்களின் அநாதார காலம் பிரதியோகிக்கு ஆதாரமாகின்ற தென்பது நியமம். அவ்வாறு கடமுண்டாய் நாசமாவதற்கு முன் கடத்தின் பிராகபாவத் துவம்ஸங்களின் அநாதாரகால மிருக்கின்றது. ஏனெனின், பிராகபாவம் நாசமாய்விட்டது; கடத்தின் துவம்ஸ முண்டாகவில்லை. ஆதலால், கடத்துவம்ஸத்தின் அநாதார காலமாம். அது கடத்தின் ஆதார காலமாம்.

கடத்துவம்ஸத்தின் துவம்ஸத்தை யங்கீகரிக்கின், கடத்துவம்ஸத்தினது துவம்சத்தின் அதிகரணகாலம் கடப்பிராகபாவ கடத்துவம்ஸங்களின் அநாதாரமாயிருத்தலான் கடத்தின் ஆதார மாதல்வேண்டும்.

இவ்வாற்றான் துவம்ஸத்தின் துவம்ஸத்தை யங்கீகரிக்கின் பிரதியோகியின் எழுச்சி உண்டாதல் வேண்டும். இதனாற்றான் பிராகபாவத்தினை அநாதியென் றங்கீகரித்திருக்கின்றனர்.

ஸாதி (உற்பத்தியுடையது) என் றங்கீகரிக்கின் பிராகபாவத்தின் உற்பத்திக்கு முந்திய காலம் பிராகபாவத் துவம்ஸங்களின் அநாதாரமா யிருத்தலான் பிரதியோகியின் ஆதாரமாதல் வேண்டும்.

ஆதலால், பிராகபாவம் அநாதியும் ஸாந்தமு (அந்தமுடையது) மாம்.

துவம்ஸம் அநந்தமும் ஸாதியுமாம்.

பூதலமுதலியவற்றில் யாண்டு ஓர்காலத்துக் கட முளதாகின்றதோ, ஆண்டுக் கடமில்லாத காலத்திற் கடத்தின் சாமயிகாபாவ முளதாகின்றது.

ஓர்சமயத் திருப்பது யாதோ, அது சாமயிகாபாவ மெனப்படும்.

வாயுவில் உருவம் ஒருகாலத்து மிராது; ஆகலின், வாயுவில் உருவத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

கடத்தின் வேறாகிய பதார்த்தங்களிலுள்ள கடத்தின் பேதம் யாதோ, அது கடத்தின் அந்நியோந்நியாபாவமாம்.

சாமயிகாபாவமோ ஸாதி ஸாந்தமாம் (ஆதியுடையதும் அந்த முடையதுமாம்).

அத்தியந்தாபாவம் அந்நியோந்நியாபாவ மென்னும் இரண்டும் அநாதி அநந்தமாம். இவ்வாற்ருன் ஐவகை யபாவ முண்டு.

63. பிராசீன நியாயமதத்தில் அபாவங்களின் ஒன்றற்கொன்றுள்ள விலக்ஷணத்தன்மையின் சாதக வுணர்ச்சி

அவற்றின் ஒன்றற்கொன்றுள்ள விலக்ஷணத் தன்மையின் சாதகமான விலக்ஷண வுணர்வைக் கூறுவாம்:—கபாலத்தில் கடத்தின் உற்பத்திக்கு முன் கபாலத்தில் கடமில்லை யென்னும் உணர்ச்சி யுண்டாகின்றது. அதற்கு விஷயம் கடத்தின் பிராகபாவமாம்.

ஏனெனின், பிரதியோகியின் உபாதான காரணத்தில் சாமயிகாபாவமும் அத்தியந்தாபாவமுமோ இராவென்னும் பொருளை மேற் கூறுவாம்.

ஆனல், தனது பிரதியோகியின் உபாதானத்தை விட்டு வேறிடத்தில் இரண்டும் அபாவமா யிருக்கின்றன. ஆதலால், கபாலத்திற் கடமில்லையென்னும் உணர்விற்கு விஷயம் சாமயிகாபாவமும் அத்தியந்தாபாவமு மன்று. கடத்தின் உற்பத்திக்கு முன் துவம்ஸத்தின் சம்பவ மில்லை. ஏனெனின், துவம்சத்தின் பிரதியோகி நிமித்தகாரண மாகின்றது.

காரணத்திற்குமுன் காரியம் சம்பவியாதாகலின் கடத்தின் உற்பத்திக்குமுன், கபாலத்திற் கட மில்லையென்னும் உணர்விற்கு விஷயம் கடத்துவம்சமு மன்று.

கடத்தின் அந்நியோந்நியாபாவம் கபாலத்தில் எப்போது மிருக்கினும், கபாலம் கடமன்றென்று அந்நியோந்நியாபாவத்தின் உணர்வுண்டாகின்றது; கபாலத்திற் கடமில்லை யென்னும் அந்நியோந்நியாபாவத்தின் உணர்வுண்டாகிறதில்லை; இவ்வித வுணர்ச்சிக்கு யாது விஷயமோ அது பிராகபாவ மெனப்படும்.

அங்ஙனமே தண்டமுதலியவற்ருன் கடத்தின் அதரிசன முண்டாகுங்காலத்துக் கபாலத்தில் கடமில்லையென்னு முணர் வுண்டாகின்றது. அவ் வுணர்விற்கு விஷயம் பிராகபாவமன்று.

ஏனெனின், பிராகபாவத்தின் நாசம் பிரதியோகிவடிவ மாகின்றது. கடத்தின் உற்பத்திக்குப் பின் பிராகபாவத்தின் சம்பவ மின்று.

மூன்றபாவ மெவையோ, அவற்றின் சம்பவமும் முற் கூறியவண்ணஞ் சம்பவியாது. ஆதலால், தண்டமுதலியவற் ருற் ரேன்றிய கடத்தின் அதரிசன காலத்தில் கபாலத்திற் கட மில்லை யென்னும் உணர்வுண்டாகின்றது. அதற்கு விஷயம் பிரத் துவம்ஸாபாவமாம்.

இவ்வாற்ருன் பிராகபாவமும் பிரத்துவம்சாபாவமும் ந என்னும் சொல்லாற் ரேன்று முணர்ச்சிக்கு விஷயமாம். இது பிராசீனர் மதம்.

64. நவீன நியாயமதத்தில் அபாவங்களின் ஒன்றற்கொன்றுள்ள விலக்ஷணத்தன்மையின் சாதக வுணர்வு

நவீனமதத்தில் பிரதியோகியின் உபாதான காரணத்தி லும் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

ஏனெனின், அத்தியந்தாபாவத்திற்குப் பிரதியோகி யோடு விரோத மிருக்கின்றது; பிறவற்ருே டில்லை.

யாண்டுப் பிரதியோகி யில்லையோ, ஆண்டு முழுவதும் அத்தியந்தாபாவ மாகின்றது.

ஆதலால், கடத்தின் உற்பத்திக்கு முன்னும் பிரதியோகி யின் நாசகாலத்திலும் பிரதியோகியின் அத்தியந்தாபாவ மிரு த்தலான் கபாலத்திற் கடமில்லை யென்னும் ஞானத்திற்கு விஷ யம் அத்தியந்தாபாவமாம். இவ்வித வுணர்வால் பிராகபாவப் பிரத்துவம்சாபாவங்களின் சித்தி யுண்டாகிறதில்லை.

ஆனல், கபாலத்தில் கடம் உண்டாகுமென்னும் உணர்வு கடத்தின் உற்பத்திக்கு முன் உண்டாகின்றது. அதன் விஷயம் பிராகபாவமாம்.

கடம் துவம்ஸஞ் செய்யப்பட்டதென்னு முணர்வினுக்கு விஷயம் துவம்ஸமாம். இவ்வாற்ருன் கடத்தி னுற்பத்திக்கு முந்தியகாலத்தில் கடத்தின் அத்தியந்தாபாவம் பிராகபாவ

மென்னும் இரண்டும் இருக்கின்றன. அவற்றுள் கபாலத்தில் கடமில்லையென்னும் உணர்வுக்கு விஷயம் கபாலத்தில் கடத்தின் அத்தியந்தாபாவமாம்.

கபாலத்திற் கடமுண்டாமென்னும் உணர்விற்கு விஷயம் கபாலத்திற் கடத்தின் பிராகபாவமாம்.

அங்ஙனமே, தண்டமுதலியவற்றுற் கபாலத்தில் கடத்தின் அதரிசன முண்டாயின் அக்காலத்தும் கபாலத்திற் கடமில்லை; கபாலத்திற் கடம் துவம்ஸமாயிற்று என்றிவ்வாறு இருவகை யுணர்வுக ளுண்டாகின்றன. அவற்றுள் முதலுணர்விற்கு விஷயம் கடத்தின் அத்தியந்தாபாவமும், பிரத்துவம்ஸாபாவமுமாம்.

இவ்வாற்றுன் நவீன மதத்தில் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்கள் ந என்னும் சொல்லாற் ருேன்றிய வுணர்விற்கு விடயமன்ருகலான் முதலிலக்கணம் பிராசீன மதத்தை யநுசரித்ததும், இரண்டாவதிலக்கணம் இருமதங்களை யநுசரித்ததுமாம். ஆதலால், இரண்டாவது இலக்கணமே செவ்விதாம்.

65. அபாவத்தின் இரண்டாவது இலக்கணமும் விலக்ஷண வுணர்வும்

சம்பந்த சாதிருசியங்களுக்கு வேருய் அந்நியத்தின் அபேக்ஷையுடைய வுணர்விற்கு விஷயம் எதுவோ அஃது அபாவமெனப்படும். இஃது இரண்டாவது இலக்கணமாம்.

பூதலத்திற் கடமில்லை யென்னும் உணர்வுக்கு விடயம் பிராகபாவமும் துவம்ஸமு மன்று. ஏனெனின், பிரதியோகியின் உபாதானத்தில் இரண்டு அபாவங்களு மிருக்கின்றன. கடாபாவத்தின் பிரதியோகியாகிய கடத்தின் உபாதானம் பூதலமன்று. ஆதலால், முற்கூறிய வுணர்விற்கு விடயம் இரண்டபாவங்களு மன்று.

அத்தியந்தாபாவமும் அந்நியோந்நியாபாவமுமோ நித்தியமாம். பூதலத்தில் கடாபாவம் அநித்தியமாம். ஆதலால், கடத்தின் சாமயிகாபாவமே முற்கூறிய பிரதீதி (உணர்வு)க்கு விஷயமாம்.

வாயுவில் உருவ மில்லையென்னும் உணர்வுக்கு விஷயம் கேவலம் அத்தியந்தாபாவமாம்.

அநந்தமா (நாச மில்லாததா) யிருத்தலான் பிராகபாவ மன்று; அநாதித் தன்மையால் துவம்ஸமு மன்று; எப்போது மிருத்தலான் சாமயிகாபாவ மன்று. ஆதலால், முற்கூறிய வுணர்வுக்கு விஷயம் அத்தியந்தாபாவமாம்.

அங்ஙனமே வாயு உருவமுடையதன்று என்னும் உணர்வுக்கு விஷயம் அந்நியோந்நியாபாவமாம்.

முற்கூறிய வுணர்வால் வாயுவில் உருவமுடையதின் பேதம் விளங்குகின்றது. அங்ஙனமே கடம் படமன்று என்னும் உணர்வுக்கு விஷயம் அந்நியோந்நியாபாவமாம். அந்நியோந்நியா பாவத்தினையே பேதமென்பர்.

66. அந்நியோந்நியாபாவ லக்ஷணமும், அதிற் சங்கை சமாதானமும்

அபேதத்தை நிஷேதிக்கும் அபாவம் எதுவோ, அது அந்நியோந்நியாபாவ மெனப்படும்.

கடம் படமன்று என்று கூறுதலாற் கடத்திற் படத்தினது அபேதத்தின் நிஷேத முண்டாகின்றது. ஆதலால், கடத்திற் படத்தினது அபேதத்தின் நிஷேதம் கடத்திற் படத்தின் அந்நியோந்நியாபாவமாம்.

ஏனெனின், ந என்னும் சொல்லின்றி எதனிடத்து எது தோற்றுகின்றதோ, அதன் நிஷேதம் ந என்னும் சொல்லா லுண்டாகின்றது.

எங்ஙனம்: ந என்னும் சொல்லின்றிய கடம் பட மென்னும் வாக்கியத்தான் நீலம் குடமென்றன் முதலியவற்றைப் போலப் படத்தில் குடத்தின் அபேதம் அல்லது குடத்தில் படத்தின் அபேதம் தோற்றுகின்றது.

அவ் வபேதத்தின் நிஷேதம் ந என்னும் சொல்லா லுண்டாகின்றது. ஆனால், இத்துணைப் பேதமாம்:—எந்தப் பதத்தோடு ந என்னும் சொல்லின் சம்பந்த முண்டாகின்றதோ, அப் பதத்தினது அர்த்தத்தின் அபேதத்தினது நிஷேதம் உண்டாகின்றது.

எங்ஙனம்:—கடம் படமன்று என்னும் வாக்கியத்தில் பட பதத்தோடு ந என்னும் சொல்லின் சம்பந்த மிருக்கின்றது. ஆண்டுக் கடத்தில் படபதத்தினது அர்த்தத்தின் அபேதம் நிஷேத மாகின்றது.

படம் கடமன்று என்னும் வாக்கியத்தில் கடபதத்தோடு ந என்னும் பதத்தின் சம்பந்த மிருக்கின்றது. ஆண்டுக் கடபத அர்த்தத்தின் அபேத நிஷேதம் படத்தி லுண்டாகின்றது.

இதனுற்றான் கடம் படமன்று என்னும் வாக்கியத்தாற் றோற்றும் அந்நியோந்நியாபாவம் எதுவோ, அதற்குக் கடம் அநுயோகியும், படம் பிரதியோகியுமாம். அங்ஙனமே படம் கடமன்றென்னும் வாக்கியத்தாற் றோற்றும் அந்நியோந்நியாபாவத்திற்குப் படம் அநுயோகியும், கடம் பிரதியோகியுமாம்.

அங்ஙனமே படம் கடமன்றென்னும் வாக்கியத்தாற் றோற்றும் அந்நியோந்நியாபாவத்திற்குப் படம் அநுயோகியும் கடம் பிரதியோகியுமாம்.

எதன்கண் அபாவ முண்டாகின்றதோ, அது அபாவத்தின் அநுயோகி யெனப்படும்.

எதன் அபாவு முண்டாகின்றதோ, அது பிரதியோகி யெனப்படும்.

சங்கை:—எதன் நிஷேதம் செய்யப்படுகின்றதோ அதற்கு அபாவம் சொல்லப்படுகின்றது. அதுவே அபாவத்தின் பிரதி யோகி யெனப்படுகின்றது.

முன் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது'—கடம் படமன்றென்னும் வாக்கியத்தான் கடத்தில் படத்தின் அபேதம் நிஷேதிக்கப்படுகின்றது.

படம் கடமன்றென்னும் வாக்கியத்தால் படத்தில் கடத்தின் அபேதம் நிஷேதிக்கப்படுகின்றது. ஆதலால், கடம் படம் அன்று என்னும் வாக்கியத்தாற் றோற்றிய அபாவத்தின் பிரதி யோகி படத்தின் அபேதமாம்; பட மன்று.

அங்ஙனமே படம் கடமன்றென்னும் வாக்கியத்தாற் றோற்றிய அபாவத்தின் பிரதியோகி கடத்தின் அபேதமாம்; கட மன்று.

ஆதலால், இரண்டு வாக்கியங்களிலும் அபேதத்தின் நிஷேதம் கூறவே, படத்திலும் கடத்திலும் கிரமமாகப் பிரதியோகித் தன்மையைக் கூறுதலால் விரோத முண்டாம்.

சமாதானம்:—அபேத மென்பது அசாதாரண தர்மத்தின் பெயர்.

எது தனது சொரூபத்திலன்றி எப்பதார்த்திலுமிராதோ, தன்னிடத்து மாத்திர மிருக்குமோ, அது தனது அசாதாரண தர்ம மெனப்படும்.

கடத்தின் அபேதம் கடத்தின்கண்ணே யிருக்கும்; பிறவற்றில் இராது. ஆதலால், கடத்தின் அபேதம் கடத்தின் அசாதாரண தர்மமாம்.

அவ் வசாதாரண தர்மமாகிய அபேதமே சகல பதார்த்தங்களுக்கும் தம்மிலுள்ள சம்பந்தமாம். இவ்வாற்றான் சகல பதார்த்தங்களின் அசாதாரண தர்மமாகிய அபேத சம்பந்தம் தமது சொரூபத்தி லிருக்கின்றது.

எந்தப் பதார்த்தத்தின் எந்தச் சம்பந்தம் எதன்க ணிருக்கின்றதோ, அப் பதார்த்தம் அச் சம்பந்தத்தால் அதன்க ணிருக்கின்றது.

எங்ஙனம்:—கடத்தின் சையோக சம்பந்தம் பூதலத்தி லிருக்கின், ஆண்டுச் சையோக சம்பந்தத்தால் பூதலத்தில் கட மிருக்கின்ற தென்னும் வியவகாரம் உண்டாகின்றது.

ஆதலால், கடத்தின் சையோக சம்பந்தம் பூதலத்தில் இருக்கின்றது, சையோக சம்பந்தத்தால் பூதலத்திற் கட மிருக்கின்றது என்று சொல்லுதலில் அர்த்தபேத மில்லை.

அங்ஙனமே, சையோக சம்பந்தத்தால் பூதலத்திற் கடாபாவ மிருக்கின்றது, பூதலத்தில் கட சையோகத்தின் அபாவ மிருக்கின்றது என்று கூறுதலினும் பொருள் ஒன்றேயாம்.

இவ்வாறு படத்தில் அபேத சம்பந்தத்தால் கடாபாவமும், படத்தில் கடத்தினது அபேத சம்பந்தத்தின் அபாவமுமாகிய இரண்டும் ஒத்து உடனிகழ்வனவா யிருத்தலின் ஒரே பதார்த்தமாம். சமநியத (ஒத்து உடனிகழும்) அபாவங்கட்குப் பேத முண்டாகாது.

எங்ஙனம் : கடத்தன்மை யத்தியந்தாபாவமும், கடாந்நியோந்நியாபாவமும் கடத்திற்கு வேறாய்ச் சகல பதார்த்தங்களினு மிருக்கின்றன. ஆதலால், சமநியதமாயிருத்தலின் ஒன்றற்கொன்று பின்னமன்று.

ஆனால், ஒரே அபாவத்தில் கடத்துவர்த்தியந்தாபாவத் தன்மையும் கடாந்நியோந்நியாபாவத் தன்மையுமாகிய இரண்டு தர்மங்க ளுள.

ஒரே அபாவத்திற்குக் கடத்தன்மை கடமென இரண்டு பிரதியோகிக ளுள.

கடத்துவாத்தியந்தாபாவத்தன்மை வடிவால் எந்த அபாவத்திற்குக் கடத்தன்மை பிரதியோகியோ, அவ் வபாவத்திற்கே கடாந்நியோந்நியாபாவத்தன்மை வடிவான் கடமும் பிரதியோகியாம்.

எவ்வாற்றான் ஒரே அபாவத்திற்கு உருவபேதத்தால் இரண்டு பிரதியோகிக ளிருக்கின்றனவோ, அவ்வாற்றான் உருவபேதத்தால் ஒரே அபாவத்திற்குப் பிரதியோகித்தன்மை யவச்சேதகமான இரண்டு சம்பந்தங்க ளுள.

கடத்துவ அத்தியந்தாபாவத்தன்மை வடிவான் பிரதியோகித்தன்மை யவச்சேதகமான சமவாய சம்பந்த முண்டு.

கட அந்நியோந்நியாபாவத்தன்மை வடிவான் அவ் வபாவத்திற்கே பிரதியோகித்தன்மை யவச்சேதகமான சமவாய சம்பந்தம் உண்டு.

இவ்வாற்றால் படமுதலிய சகல பதார்த்தங்களினும் உள்ள கடாபேதத்தின் அத்தியந்தாபாவமும் கடாந்நியோந்நியாபாவமும் ஒன்றாம்.

அவ்வொரு அபாவத்தில் கடாபேத அத்தியந்தாபாவத் தன்மை கடாந்நியோந்நியாபாவத்தன்மை யென்று இரண்டு தர்மங்க ளுள. கடாபேத அத்தியந்தாபாவத்தன்மை வடிவான் அவ் வபாவத்திற்குக் கடாபேதம் பிரதியோகியாம். பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சொரூப சம்பந்தமாம்.

அந்நியோந்நியாபாவத்தன்மை வடிவான் அவ் வபாவத்திற்கே கடம் பிரதியோகியாம். பிரதியோகித்தன்மை யவச்

சேதகம் அபேத சம்பந்தமாம். அவ் வபேத சம்பந்தத்தினையே தாதாத்மிய மென்பர். அதன் வடிவாந் தன்மை (வியக்தித் தன்மை) யென்றுங் கூறுவர்.

இவ்வாற்ருன் கடத்தினது அபேத நிஷேதத்தின் பிரதியோகி கடம் என்று கூறுதலும் பொருந்தும்; விரோத மின்று.

ஈண்டு இது நிச்சயமாம்:—எந்த வாக்கியத்தால் ந என்னும் சொல்லின்றி எப் பதார்த்தத்தில் எச் சம்பந்தத்தால் எப் பதார்த்தம் தோற்றுகின்றதோ, ந என்னுஞ் சொல்லோடு கூடிய அவ் வாக்கியத்தால் அப் பதார்த்தத்தில் அச் சம்பந்தத்தால் அப் பதார்த்தத்தின் நிஷேதம் தோற்றுகின்றது.

எங்ஙனம்: நீலம் குடமென்னும் வாக்கியத்தால் கட பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் நீல பதார்த்தம் தோற்றுகின்றது.

ஏனெனின், அபேத சம்பந்தத்தால் நீல விசிஷ்டம் குடமென்பது வாக்கியத்தின் பொருளாம். ந என்னும் சொல்லோடு கூடிய குடம் நீல மன்று என்னும் வாக்கியத்தான் அபேத சம்பந்தத்தினுல் நீலத்தின் நிஷேதம் கடத்தில் தோற்றுகின்றது.

அங்ஙனமே கடம் படமென்னும் வாக்கியத்தானும் ந என்னுஞ் சொல்லின்றிப் படப்பொருளில் அபேத சம்பந்தத்தான் கடபதார்த்தந் தோற்றுகின்றது.

ஏனெனின், யாண்டு இரண்டு பதங்களினும் சமான வேற்றுமை யுளதாகின்றதோ, ஆண்டு ஒரு பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் மற்றைய பதார்த்தத்தின் தோற்ற முண்டாமென்பது நியமம்.

நீலம் குடமென்னும் வாக்கியத்திற்போல குடம் படமென்னும் வாக்கியத்திலும் இரண்டு பதங்களும் சமான (ஒரு) வேற்றுமை யுடையனவாம்.

ஆகலின், ந என்னுஞ் சொல்லின்றிக் குடம் படமென்னும் வாக்கியத்தானும் பட பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் குடபதார்த்தம் தோற்றுகின்றது.

அபேத சம்பந்தத்தாற் பட பதார்த்தத்தில் குட பதார்த்தஞ் சம்பவியாதாயினும், ஒரு பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் மற்றப் பதார்த்தம் தோற்றுதற்குச் சாமக்கிரி (சாதனம்) சமான வேற்றுமையாம். அது கடம் படமென்னும் வாக்கியத்தினு முள்ளது.

ஆதலால், ந என்னுஞ் சொல்லின்றிக் கடம் படமென்னும் வாக்கியத்தாற் பட பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தாற் குட பதார்த்தந் தோற்றுகின்றது. ஆனல், பட பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் உண்டாகுங் குடபதார்த்தத்தின் தோற்றம் பிரம (மயக்க) வடிவமாம்; பிரமை யன்று.

ஆதலால், ந என்னுஞ் சொல்லின்றி யொரு பதார்த்தத்தில் எச் சம்பந்தத்தால் பிற பதார்த்தத்தின் ரேற்றம் பிரமவடிவாக வேனும் பிரமை வடிவாகவேனும் உண்டாகின்றதோ, ஆண்டு ந என்னுஞ் சொல்லைச் சேர்க்கின் ஒரு பதார்த்தத்தில் அச் சம்பந்தத்தால் பிற பதார்த்தத்தின் நிஷேத முண்டாகின்றது.

இவ்வாற்றான் ஒரு பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் வேறு பதார்த்தத்தை நிஷேதிக்கும் அபாவம் அந்நியோந்நியாபாவ மெனப்படுகின்றது.

67. நவீனக்கிரமமாகச் சம்சர்க்காபாவத்தின் நான்கு பேதமும், அவற்றி னிலக்கணமும், பரீக்ஷையும்

அதனின் வேறாகிய அபாவ மெதுவோ அதனைச் சம்சர்க்காபாவ மென்பர்.

சம்சர்க்காபாவம் பிராசீன மதத்தில் நான்கு வகைப்படும்:—

அநாதி ஸாந்தமாகிய அபாவ மெதுவோ அது பிராகபாவ மெனப்படும். தனது பிரதியோகியின் உபாதான காரணத்தில் பிராகபாவ மிருக்கின்றது.

எங்ஙனம்: கடத்தின் பிராகபாவத்திற்குப் பிரதியோகி கடம். அதன் உபாதான காரணமாகிய கபாலத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது.

கபாலத்தின் உற்பத்திக்கு முன்னும் கபாலத்தின் உபாதான காரணத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது.

இவ்வாற்றால் சிருஷ்டிக்குமுன் கடத்திற்குக் காரணமாகிய பரமாணு சமுதாயத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது.

பரமாணு கடங்களுக்கு இடையில் உள்ள துவியணுக முதற் கபாலமீறாயுள்ள அவயவிகள் எல்லாவற்றின் பிராகபாவமும் சிருஷ்டிக்குமுன் பரமாணுவி லிருக்கின்றன.

இவ்வாற்றால் பிராகபாவம் அநாதியும் (உற்பத்தியின்றியதும்) ஸாந்தமும் (அந்தமுடையதும்) ஆம். (அந்தமென்பது துவம்சத்திற்காம்; அதனையே நாச மென்பர்.)

கடத்தினது உற்பத்திக்குச் சாமக்கிரி எதுவோ, அதனால் கடத்தின் பிராகபாவத்திற்கு அந்த முண்டாகின்றது. ஆதலால், கடத்தினது பிராகபாவத்தி னந்தம் கடவடிவமேயாம்.

கடத்தினது பிராகபாவத்தின் துவம்சம் கடத்தினும் வேறன்று, பிரத்துவம்சாபாவம் அநந்தமும் கடம் ஸாந்தமுமாம்.

கடத்தினது பிராகபாவத்தின் துவம்சம் கடவடிவமாகுமாயின், பிரத்துவம்சாபாவமுஞ் ஸாந்தமாகும். பிரத்துவம்சாபாவம் அநந்தமென்னும் நியமத்திற்குப் பங்க முண்டாம். என்றாலும் துவம்சம் நாசம் அந்த மென்பன பரியாயச்சொற்கள்.

அத் துவம்சம் இருவகையாம்.

ஒன்று: பாவ பதார்த்தத்தின் நாசவடிவமான துவம்சம்.

மற்றையது: அபாவத்தின் நாசவடிவமான துவம்சம்.

பாவபதார்த்தத்தின் நாசவடிவமான துவம்சமோ அபாவ வடிவமாம். அதனையே பிரத்துவம்சாபாவ மென்பர்.

எங்ஙனம்: குடமுதலிய பாவபதார்த்தங்களின் நாசம் அபாவ வடிவமாம். அதனைப் பிரத்துவம்சாபாவ மென்பர்.

அபாவ பதார்த்தத்தின் நாச வடிவினதாகிய துவம்சம் பாவரூபமாம். அதனைத் துவம்சப் பிரத்துவம்சமென்று கூறுகின்றனர். துவம்சாபாவம் பிரத்துவம்சாபாவமென்று கூறுவதில்லை.

எங்ஙனம்: கடத்தின் பிராகபாவம் அபாவ பதார்த்தமாம். அதன் நாச வடிவினதாகிய துவம்சம் கடமாம். அது பாவ ரூபம். அதனைப் பிரத்துவம்சாபாவமென்று கூறுவதில்லை. ஆனால், கடப்பிராகபாவத்தின் நாசவடிவினதாகிய கடத்தைச் சுவப்பிராகபாவத்தின் (தனது முன்னின்மையின்) துவம்சமென்றும் பிரத்துவம்சமென்றுமே கூறுவர்.

இவ்வாற்றான் துவம்சம் இருவகையினதாம். அவற்றுள் பாவரூப துவம்சமோ ஸாந்தமாம்; ஆனால், அபாவரூபத் துவம்சம் அநந்தமாம். ஆதலால், கடப்பிராகபாவத் துவம்சமாகிய கடரூபமோ சாந்தமாம்.

அங்ஙனமாயினும் பிரத்துவம்சாபாவம் அநந்தமென்னும் நியமத்திற்குக் கேடில்லை. இவ்வாற்றான் அநாதி ஸாந்தமாகிய அபாவ மெதுவோ அது பிராகபாவ மெனப்படுகின்றது.

அநாதி யபாவம் அத்தியந்தாபாவமுமாம்; ஆனால், அது ஸாந்தமன்று.

ஸாந்த அபாவம் சாமயிகாபாவமுமாம்; அது அநாதியன்று.

வேதாந்த சித்தாந்தத்தில் அநாதிஸாந்தம் மாயை; அஃதபாவமன்று. ஆனால், அது ஜகத்தின் உபாதானகாரணமாம்; அது அபாவவடிவ மாகுமாயின் அதற்கு உபாதான காரணத்தன்மை சம்பவியாது.

ஏனெனின், கடமுதலியவற்றின் உபாதான காரணமாகிய கபாலமுதலியன பாவரூபமாகவே யிருத்தல் பிரசித்தம்.

அபாவம் எதற்கும் உபாதான காரண மாகாது. ஆதலால், மாயை அபாவ ரூபமன்று; ஆனால் பாவரூபமாம்.

மாயை பாவ அபாவங்களுக்கு வேறான அநிர்வசனீயமாக வின் பாவ வடிவத்தன்மையும் அதனிடத்துச் சம்பவியாது.

அங்ஙனமாயினும், அபாவரூபம் மாயையன்றாகலின், பிராகபாவத்தி னிலக்கணத்தில் அபாவபதம் செல்லுதலால் மாயையில் பிராகபாவத்தின் இலக்கணம் செல்லாது.

மாயை பாவரூப மன்றென்று சொல்லுதற்கு அபிப்பிராயம் இதுவாம்:—மூன்று காலத்திலும் எதற்குப் பாதம் உண்டாகிற தில்லையோ, அது பரமார்த்த சத்தென்றும் பாவமென்றும் சொல்லப்படும். அத்தன்மையது பிரஹ்மமாம்; மாயையன்று.

ஏனெனின், ஞானத்திற்குப் பிந்திய காலத்து மாயையின் பாத முண்டாகின்றது. ஆதலால், பரமார்த்த சத்து ஸ்வரூப மான பாவமோ மாயையன்று.

ஆயினும், விதிமுக வுணர்ச்சிக்கு எது விஷய மாகின்றதோ, அதுவும் சத்தென்றும் பாவமென்றும் சொல்லப்படுகின்றது; நிஷேதமுகவுணர்ச்சிக்கு விஷயமாவது எதுவோ, அது அபாவ மெனப்படுகின்றது.

நிஷேதமுகவுணர்ச்சிக்கு விஷயமாந்தன்மை மாயையி லின்று? ஆதலால், மாயையும் பாவரூபமாம்.

மாயை பிரகிருதி அவித்தை அஞ்ஞானம் என்பன பரியாயச் சொற்கள். அவித்தை அஞ்ஞானமென்னும் சொற்களில் அகர ரம் நிஷேத வாசகமாம். ஆதலால், மாயையும் நிஷேத முகவுண ர்ச்சிக்கு விஷயமாகுதலான், அபாவரூபமேயாமென்று சொல் லுதல்வேண்டும். அங்ஙனமாயினும், அகாரத்திற்கு நிஷேதமா த்திரம் பொருளன்று; ஆனல், விரோதமுடையது, பேதமுடை யது, அற்பமென்பனவும் அகாரத்தின் பொருளாம்.

எங்ஙனம்: அதர்மமென்னும் சொல்லில் அகாரத்திற்கு விரோதமுடையது பொருளாம். தர்ம விரோதியினை அதர்ம மென்பர்.

அப்பிராமணன் அநாசாரிய னென்னுமிடத்து அகாரத்திற் குப் பேத முடையது பொருளாம். பிராமணனின் வேறானவன் ஆசாரியத்தன்மைக் குரியவனல்ல னென்பது வாக்கியத்தின் பொருளாம்.

அநுதரை (உதரமிலி) தேவதத்தன் கன்னிகை என்னு மிடத்து அகாரத்திற்கு அற்பமென்பது பொருள். அற்ப உதர முடையவள் தேவதத்தன் கன்னிகை யென்பது வாக்கியத்தின் பொருள்.

எங்ஙனம் இத்துணைத் தானங்களில் அகாரத்திற்கு நிஷே தப்பொரு ளின்றோ, அங்ஙனமே அவித்தை யஞ்ஞான மென் னும் சொற்களினும் அகாரத்திற்கு நிஷேதப்பொரு ளின்று; ஆனல், விரோதிப்பொரு ளுளது.

மாயைக்கு ஞானத்தோடு கெடுக்கப்படுவது கெடுப்பதெ னுந் தன்மை விரோத முளது; அதனல், அதனை அஞ்ஞான மென்கின்றனர்.

மாயை கெடுக்கப்படுவது, ஞானம் கெடுப்பது.

வேதாந்தவாக்கியத்தாற் றோன்றிய பிரஹ்மாகாரவிருத்தி யினை வித்தை யென்பர். அது மாயையின் விரோதியாகலின் மாயையை அவித்தை யென்பர்.

மாயை, அஞ்ஞானம், அவித்தை யென்னுஞ் சொற்களின் வாச்சியமாயினும், அகாரத்திற்கு விரோதமுடைய தென்பது பொருளாகுதலான் அது பாவரூபமாம்.

பாவரூபமும் பிரஹ்மத்தைப்போலப் பரமார்த்த சத்துரூப மன்று. ஆனால், விதிமுகவுணர்ச்சிக்கு விஷயமாகுதலான் வியா வகாரிக சத்துரூபமாம்.

பிராகபாவத்தின் இலக்கணத்தில் அபாவமென்னும் பதம் இராவிடின் மாயையில் இலக்கணத்தின் அதிவியாப்தி யுண்டா கின்றது. ஏனெனின், மாயை அநாதியும் ஸாந்தமுமாம்.

ஆதலால், அநாதி ஸாந்தமாகிய அபாவ மெதுவோ, அது பிராகபாவ மெனப்படுகின்றது.

ஸாதி அநந்த அபாவ மெதுவோ அது பிரத்துவம்சாபாவ மெனப்படும்.

குடமுதலியவற்றின் துவம்சம் தண்டமுதலியவற்றா னுண் டாகின்றது. ஆதலால் ஸாதியாம்.

அநந்தம் அதன்கண் யுக்தியோடு கூடியதாகவே யிருக்கின் றது. அநந்த அபாவம் பிரத்துவம்சாபாவமா மெனின் அத்தியந்தா பாவத்தில் அதிவியாப்தி யுண்டாம்.

ஆதலால், பிரத்துவம்சாபாவத்தின், இலக்கணத்தில் ஸாதியெனக் கூறல் வேண்டும். அத்தியந்தாபாவம் ஸாதியன்று; ஆனால் அநாதியாம்.

ஸாதியபாவத்தினைப் பிரத்துவம்சாபாவமெனின் ஸாதி யபாவம் சாமயிகாபாவமுமாம். ஆண்டு அதிவியாப்தி யுண் டாம். சாமயிகாபாவம் அநந்த மன்று; ஸாந்தமாம்.

ஸாதி யநந்தத்தினைப் பிரத்துவம்சாபாவ மெனின் மோக்ஷத் தில் அதிவியாப்தி யுண்டாம். ஏனெனின், மோக்ஷம் உண்

டாகுதலால் ஸாதியும், முக்தனுக்கு மீண்டுஞ் சம்சார முண்டாகாமையின் அநந்தமுமாம். ஆனால், மோக்ஷம் பாவரூபமாம்; அபாவரூப மன்று.

ஆதலால், பிரத்துவம்சாபாவத்தி னிலக்கணத்தில் அபாவ மென்பதைக் கூறவேண்டும்.

அஞ்ஞானமும் அதன் காரியமும் நிவிருத்தியாதலே மோக்ஷ மென்பர். நிவிருத்தி யென்பது துவம்சத்திற்காமாகலின் மோக்ஷமும் அபாவரூபமாம்.

ஆகலின், பிரத்துவம்சாபாவத்தி னிலக்கணத்தில் அபாவ பதத்தைச் சேர்க்காவிடினும் மோக்ஷத்தில் அதிவியாப்தியாதி தோஷ மின்று.

ஏனெனின், இலக்கிய மல்லாததன்கண்ணும் இலக்கணம் செல்லுதலே அதிவியாப்தி யென்பர்.

அஞ்ஞான தற்காரியங்களின் துவம்சம் மோக்ஷத்திற்கு இலக்ஷியத்தன்மையாதல் வெளிப்படையேயாம். சகல நாசமும் துவம்சாபாவத்தினது இலக்கணத்தின் இலக்கியமாம். சகல நாசங்களுக்கும் உள்ளடங்கியே காரியத்தோடு அஞ்ஞானம் நசித்தல் வடிவினதாகிய மோக்ஷம் இருக்கின்றது. என்றாலும் கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டான வடிவமாம்.

அஞ்ஞானமும் அதன் காரியமும் கற்பிதமா மாகலின் அவற்றின் நிவிருத்தி அதிஷ்டானப் பிரஹ்ம வடிவமாம்.

ஆதலால், அபாவரூபம் மோக்ஷ மன்று. ஆனால், பிரஹ்ம ரூபமா யிருத்தலால் மோக்ஷம் பாவரூபமாம். அதன்கண் துவம்சத்தி னிலக்கணஞ் செல்லுமாயின் அதிவியாப்தி யுண்டாம்.

ஆதலால், ஸாதி யநந்தமாகிய அபாவ மெதுவோ அது பிரத்துவம்சாபாவ மெனப்படுகின்றது.

உற்பத்தி நாசமுடைய அபாவ மெதுவோ அது சாமயிகாபாவ மெனப்படுகின்றது.

யாண்டு ஒருகாலத்துப் பதார்த்த முளதாய் ஒருகாலத்து இலதாகின்றதோ, ஆண்டுப் பதார்த்த சூனிய காலத்து அப்பதார்த்தத்தின் சாமயிகாபாவ முண்டாகின்றது.

எங்ஙனம்: பூதலமுதலியவற்றிற் குடமுதலியன ஓர் காலத்தி லுளவாய் ஓர் காலத்தி லிலவாகின்றன. ஆண்டுக் கடசூனியகால சம்பந்தமுடைய பூதலமுதலியவற்றில் கடமுதலியவற்றின் சாமயிகாபாவ மிருக்கின்றது.

சமய விசேஷத்தி லுண்டாய்ச் சமய விசேஷத்தில் நஷ்டமாவ தெதுவோ அது சாமயிகாபாவ மெனப்படுகின்றது. பூதலத்தினின்றுங் கடத்தை வேறிடத்திற் கொண்டுபோயின், அப்போது கடத்தினபாவம் பூதலத்தி லுண்டாகின்றது. அப் பூதலத்திற்றுனே கடத்தைக் கொண்டுவரின், அப்போது கடத்தின் அபாவம் பூதலத்தில் நஷ்ட மாகின்றது. இவ்வாற்றாற் சாமயிகாபாவம் உற்பத்திநாச முடையதாம்.

உற்பத்தியுடைய் அபாவம் பிரத்துவம்சாபாவ மாகின்றமையால் ஆண்டு அதிவியாப்தி நீக்குதற் பொருட்டுச் சாமயிகாபாவத்தின் இலக்கணத்தில் நாசமென்னும் பதஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பிரத்துவம்சாபாவமும் உற்பத்தியுடைய அபாவமாயினும் நாசமுடையதன்று. ஆதலால், நாசமென்னும் பதத்தைக் கூறின் அதிவியாப்திதோஷ மின்று.

நாசமுடைய அபாவத்தைச் சாமயிகாபாவ மெனின் பிராகபாவத்தில் அதிவியாப்தி யுண்டாகும். ஆதலால், சாமயிகாபாவத்தி னிலக்கணத்தில் உற்பத்தியென்னும் பதம் சொல்லப்பட்டிருக்கின்றது.

இலக்கணத்தில் உற்பத்தியென்னும் பதத்தின் பிரவேசத்தால் பிராகபாவத்தின் அதிவியாப்தி யின்று. ஏனென்னின், பிராகபாவத்தின் நாசமோ வுண்டாகின்றது. ஆனால், அது அநாதியாயிருத்தலின் உற்பத்தி யாகிறதில்லை.

சாமயிகாபாவத்தி னிலக்கணத்தில் அபாவமென்னும் சொல்லைச் சேர்க்காது, உற்பத்தி நாசமுடையதனைச் சாமயிகாபாவ மெனக் கூறின், கடமுதலியவற்றில் அதிவியாப்தி யுண்டாம். ஏனெனின், கடமுதலியனவும் பூதபௌதிகமான அநேக பதார்த்தங்களும் உற்பத்தி நாசமுடையனவா யிருக்கின்றன.

அபாவ பதத்தின் பிரவேசத்தால் கடமுதலியவற்றிற்குப் பாவரூபத்துவம் இருத்தலான், அவற்றில் சாமயிகாபாவத்

தினது இலக்ஷணத்தின் அதிவியாப்தி யின்று. இவ்வாற்ருற் பூதலமுதலியவற்றில் கடமுதலியவற்றின் உற்பத்தி நாச முடைய அபாவம் சாமயிகாபாவமாம்.

அந்நியோந்நியாபாவத்திற்கு வேருய் உற்பத்திநாச மின்றிய அபாவ மெதுவோ அது அத்தியந்தாபாவ மெனப்படும்.

யாண்டு எக்காலத்திலும் எப் பதார்த்த மிருப்பதில்லையோ, ஆண்டு அப் பதார்த்தத்தின் அத்தியந்தாபாவம் சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்: வாயுவில் உருவம் எக்காலத்து மிருப்பதில்லை; ஆண்டு உருவத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. அங்ஙனமே கந்தமும் வாயுவில் எப்போது மிருப்பதில்லை. ஆதலால், வாயுவில் கந்தத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

சிநேக குணம் நீர் மாத்திரத்தி னிருக்கின்றது; பிறவற்றில் எப்போது மிருப்பதில்லை. ஆதலால், ஜல மல்லாத வேறு பதார்த்தங்களில் சிநேகத்தின் அத்தியந்தாபாவம் இருக்கின்றது.

ஆத்மாவினிடத்து உருவம் இரசம் கந்தம் பரிசம் சப்த மென்பன என்று மிருப்பதில்லை. ஆதலால், உருவமுதலியவற்றின் அத்தியந்தாபாவம் ஆத்மாவி லிருக்கின்றது.

பிருதிவியினும் ஜலத்தினும் இரசம் இருக்கின்றது, பிறவற்றில் என்று மிருப்பதில்லை. ஆதலால், பிருதிவி ஜலங்களுக்கு வேருய பதார்த்தங்களில் இரசத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

பிருதிவித்தன்மைச் சாதி பிருதிவிமாத்திரத்தி னிருக்கின்றது; ஜலமுதலியவற்றில் என்று மிருப்பதில்லை. ஆதலால், ஜலமுதலியவற்றில் பிருதிவித்தன்மையின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

பிராமணனுக்கு வேருய க்ஷத்திரியர் முதலியோரிடத்துப் பிராமணத்தன்மை யென்று மிருப்பதில்லை. ஆதலால், க்ஷத்திரியர்முதலியோரிடத்துப் பிராமணத்தன்மையின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

ஆகாயம் காலம் திக்கு ஆத்மா வென்பன வியாபகம். அவற்றில் என்றும் கிரியை யுண்டாகிறதில்லை. ஆதலால், ஆகாயமுதலியவற்றில் கிரியையின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

பிருவிதி ஜலம் தேயு வாயு மன மென்பவற்றில் கிரியை யுண்டாகின்றது. ஓர்காலத்துக் கிரியையின் அபாவம் உண்டாகின்றது. ஆதலால், பிருவிதிமுதலியன கிரியை யின்றியவாகுங் காலத்துப் பிருவிதி ஜலம் தேயு வாயு மனது என்பவற்றில் கிரியையின் அத்தியந்தாபாவ மில்லை; அங்ஙனமே சாமயிகாபாவமு மில்லை.

ஏனெனின், சாமயிகாபாவம் திரவிய மாத்திரத்திற் குண்டாகின்றது. கிரியைக்குச் சாமயிகாபாவம் சம்பவியாது என்பதை மேற்கூறுவாம். ஆதலாற்சாமயிகாபாவமும் இல்லை. ஆனால், பிருதிவிமுதலிய வைந்தினும் கிரியையின் பிராகபாவமும் துவம்ஸாபாவமு மிருக்கின்றன.

68. நான்கு சம்ஸர்க்காபாவங்களுக்கும் பிரதியோகியோடு விரோதமும், அந்நியோந் நியாபாவத்திற்கு அவிரோதமு முண்டெனல்

இவ்வாற்றாற் பூதலமுதலியவற்றில் யாண்டுக் கடமுதலியன ஓர் காலத்து இருந்து ஓர் காலத்தி லிருப்பதில்லையோ, ஆண்டு முழுவதும் சாமயிகாபாவமாம்; அத்தியந்தாபாவ மின்று.

ஏனெனின், அபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத மிருக்கின்றது. யாண்டுப் பிரதியோகி யுளதோ, ஆண்டு அபாவம் இருப்பதில்லை. ஆனால், அபாவத்தின் அபாவம் இருக்கின்றது.

யாண்டுப் பூதலமுதலியவற்றில் ஓர் காலத்திற் கடமுதலியன விருந்து ஓர் காலத்தில் இருப்பதில்லையோ, ஆண்டு அத்தியந்தாபாவம் அங்கீகரிக்கின், அத்தியந்தாபாவம் நித்தியமாமாகலின் கடகாலத்திலும் கடத்தின் அத்தியந்தாபாவம் இருத்தல் நேருதலான் அத்தியந்தாபாவத்திற்குத் தனது பிரதியோகியோடு விரோதமின்மை யுண்டாகும். ஆதலால் பூதலமுதலியவற்றிற் கடமுதலியவற்றின் அத்தியந்தாபாவம் சம்பவியாது.

எங்ஙனம்: கடத்தின் உற்பத்திக்கு முன் கபாலத்திற் கடத்தின் பிராகபாவம் இருக்கின்றது. கடமாகிய பிரதியோகி யுண்டாகவே கபாலத்தில் கடத்தின் பிராகபாவ மிருப்பதில்லை;

அதன்நாச முண்டாய்விடுகின்றது. ஆதலால், பிராகபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதம் இருக்கின்றது.

அங்ஙனமே கபாலத்தில் கடத்தின் பிரத்துவம்ஸாபாவம் இருக்குங்காலத்துக் கட மிருப்பதில்லை; கட மிருக்குமளவும் கபாலத்திற் கடத்தின் பிரத்துவம்ஸாபாவம் உண்டாகிறதில்லை. ஆதலால், பிரத்துவம்ஸாபாவத்திற்கும் பிரதியோகியோடு விரோத மிருத்தல் வெளிப்படையாம்.

அங்ஙனமே பூதலமுதலியவற்றிற் சையோக சம்பந்தத்தால் கடமுதலியன விருக்குமளவும் பூதலமுதலியவற்றிற் கடமுதலியவற்றின் சாமயிகாபாவ மிருப்பதில்லை; ஆனால், எதுவரையில் கடமுதலிய பிரதியோகி பூதலமுதலியவற்றி லில்லையோ, அதுவரையில் சாமயிகாபாவ மிருக்கின்றது. கடமுதலிய பிரதியோகி வந்துவிடுமாயின், அப்போது சாமயிகாபாவத்திற்கு நாச முண்டாகின்றது. வந்த கடத்தை யெடுத்துக்கொள்ளின், அப்போது சாமயிகாபாவம் மீண்டு முண்டாகின்றது. இதனாற்றான் சாமயிகாபாவத்திற்கு உற்பத்தி நாசங்களை யங்கீகரித்திருக்கின்றனர். இவ்வாற்றான் சாமயிகாபாவத்திற்கும் பிரதியோகியோடு விரோதம் இருப்பது வெளிப்படையாம்.

எங்ஙனம் பிராகபாவமுதலியவற்றிற்குப் பிரதியோகியோடு விரோத மிருக்கின்றதோ, அங்ஙனமே அத்தியந்தாபாவத்திற்கும்பிரதியோகியோடு விரோதம்சொல்லுதல் வேண்டும். சகல அபாவங்களுக்கும் பிரதியோகியோடு விரோதமிருக்கின், எந்தக்காலத்திற் பூதலத்திற்கடம் வைக்கப்பட்டதாகின்றதோ, அந்தக் காலத்தில் கடத்தின் அந்நியோந்நியாபாவம் பூதலத்தி லிருக்கலாகாது; கடமுடைய பூதலத்தில் கடத்தின் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது.

ஏனெனின், பேதத்தினை அந்நியோந்நியாபாவமென்பர்; அதனைத் தன்னின் வேறாயதன்மை யென்றும், பின்னத்தன்மை யென்றும், வேற்றுமை யென்றும் கூறுவர். கடமுடைய பூதலமும் கடசொரூப மன்று; கடத்தின் வேறாய தெனப்படும். இவ்வாற்றாற் கடமுடைய பூதலத்திற் கடத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. ஆதலால், கடத்தின் அந்நியோந்நியாபாவத்திற்குக் கடரூபப் பிரதியோகியோடு விரோதம் இல்லை.

அங்ஙனமே படமுதலியற்றின் அந்நியோந்நியாபாவத்திற்குப் படமுதலியவற்ருேடு விரோத மில்லை. ஆதலால், எல்லா அபாவங்கட்கும் பிரதியோகியோடு விரோத மிருப்பதாகக் கூறுதல் சம்பவியாது. ஆனால், சில அபாவங்கட்குப் பிரதியோகியோடு விரோத மிருக்கின்றது; சிலவற்றிற்கு விரோத மில்லை.

பிராகபாவமுதலிய திருஷ்டாந்தத்தால் அத்தியந்தாபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதம் சாதிக்கின், அப்போது அந்நியோந்நியாபாவ திருஷ்டாந்தத்தால் அத்தியந்தாபாவத்திற்குப் பிரதியோகியோடு அவிரோதமும் சித்திக்கும்.

ஆதலால், கடத்தின் அந்நியோந்நியாபாவம்போலக் கடத்தின் அத்தியந்தாபாவமும் கடத்தின் அதிகரணத்திற் சம்பவிக்கின்றது.

என்ருலும் கடத்தின் அதிகரணத்தில் கடத்தின் அத்தியந்தாபாவம் சம்பவிக்கிறதில்லை.

ஏனெனின், அபாவம் இருவகைத்தாம்:—ஒன்று அந்நியோந்நியாபாவம்; மற்ருென்று சம்சர்க்காபாவம். சம்சர்க்காபாவம் நால்வகைப்படும்: இவ்வாற்ருன் ஐவகையபாவ முள.

அவற்றுள், அபாவத்தன்மைத் தர்மம் எல்லாவற்றினும் சமானமாம். நிஷேதமுக வுணர்ச்சிக்கு விஷயமாந் தன்மையும் எல்லா அபாவங்களினும் சமானமா யிருக்கின்றது. என்ருலும், அந்நியோந்நியாபாவத்தினும் நால்வகைச் சம்சர்க்காபாவத்தில் வேற்றுமை அநேக விதமா யுளது.

எந்த வாக்கியத்தில் பிரதியோகி அநுயோகிகளை யறிவிக்கும் பின்னவிபக்திகளை (வெவ்வேறு வேற்றுமைகளை) யுடைய பதங்க ளுளவோ, அவ் வாக்கியத்தால் சம்சர்க்காபாவத்தின் பிரதீதி யுண்டாகின்றது.

எங்ஙனம்: உற்பத்திக்குமுன் கபாலத்தில் கட மில்லை யென்னும் வாக்கியத்தில் அநுயோகியை யறிவிக்கும் கபால மென்னும் பதம் ஏழாம் வேற்றுமை யீற்றதாம். பிரதியோகியை யறிவிக்கும் கட மென்னும் பதம் முதல் வேற்றுமை யீற்றதாம். ஆண்டுப் பிராகபாவத்தின் பிரதீதி யுண்டாகின்றது.

அங்ஙனமே தடிமுதலியவற்றுல் கடத்தின் காட்சியின்மை யுண்டாகின்றது. அப்போது அவ் வாக்கியத்தாற்றுனே கடத்துவம்ஸத்தின் தோற்ற முண்டாகின்றது.

வாயுவில் உருவமில்லையென்னும் வாக்கியத்தான் வாயுவில் உருவத்தினது அத்தியந்தாபாவத்தின் தோற்ற முண்டாகின்றது. ஆண்டும் அநுயோகியை யறிவிக்கும் வாயுமென்னும் பதம் ஏழாம் வேற்றுமை யீற்றதாம். பிரதியோகியை யறிவிக்கும் உருவபதம் முதல் வேற்றுமை யீற்றதாம்.

அங்ஙனமே பூதலத்திற் கட மில்லை யென்னும் வாக்கியத்தாற் றேன்றிய ஞானத்திற்கு விஷயம் சாமயிகாபாவமாம். ஆண்டும் அநுயோகியை யறிவிக்கும் பூதலபதம் ஏழாம் வேற்றுமை யீற்றதாம்; பிரதியோகியை யறிவிக்கும் கடபதம் முதல் வேற்றுமை யீற்றதாம்.

பூதலம் கடமன்றென்னும் வாக்கியத்தால் பூதலத்திற் கடத்தின் அந்நியோந்நியாபாவம் தோற்றுகின்றது. ஆண்டு அநுயோகியை யறிவிக்கும் பூதலபதமும் பிரதியோகியை யறிவிக்கும் கடபதமுமாகிய இரண்டும் முதல்வேற்றுமை யீற்றவாம்.

இவ்வாற்றுன் பின்ன வேற்றுமை முடிபினையுடைய பதங்க ளமைந்த வாக்கியத்தாற் றேன்றும் உணர்ச்சிக்கு விஷயமாந்தன்மை சம்சர்க்காபாவத்தி னுளது; அந்நியோந்நியாபாவத்தி னில்லை.

சமான வேற்றுமை யந்தத்தினையுடைய பதங்க ளமைந்த வாக்கியத்தாற் றேன்றிய வுணர்வுக்கு விடயமாந்தன்மை அந்நியோந்நியாபாவத்துண்டு, சம்சர்க்காபாவத்தி னில்லை.

இவ்வாற்றுன் அந்நியோந்நியாபாவத்தினும் விலக்ஷண சுபாவத்தினையுடைய நால்வகைச் சம்சர்க்காபாவ முள.

ஆதலால், பிராகபாவ பிரத்துவம்ஸாபாவங்களின் திருஷ்டாந்தத்தால் அத்தியந்தாபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதமே பெறப்பட்டதாகின்றது; விலக்ஷண சுபாவமுடைய அந்நியோந்நியாபாவத்தின் திருஷ்டாந்தத்தால் பிரதியோகியோடு விரோத மின்மை பெறப்படுவதில்லை.

சம்சர்க்காபாவத்திற்கு அந்நியோந்நியாபாவத்தோடு மற்றும் வேற்றுமை யுண்டு.

69. பாவங்கட்கும் ஒன்றற்கொன்றுள்ள விரோதமும் அந்நியோந்நியாபாவத்திற்கு அவற்றோடுள்ள அவிரோதமும்

நால்வகைச் சம்சர்க்காபாவங்கட்கும் ஒன்றற்கொன்று விரோத முண்டு. ஒரு சம்சர்க்காபாவத்தின் அதிகாணத்தில் மற்றச் சம்சர்க்காபாவங்கள் இரா.

எங்ஙனம்; கபாலத்தில் கடத்தின் உற்பத்திக்குமுன் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது. ஆண்டுக் கடத்தின் துவம்ஸமாவது, அத்தியந்தாபாவமாவது, சாமயிகாபாவமாவது இருப்பதில்லை.

அங்ஙனமே கபாலத்தில் கடத்தின் துவம்ஸ முண்டாகுங் காலத்துப் பிராகபாவமுதலிய மூன்று சம்சர்க்காபாவங்களு மிருப்பதில்லை. கடத்தின் அந்நியோந்நியாபாவம் கபாலத்தில் என்று மிருக்கின்றது.

அங்ஙனமே பூதலத்தில் கடத்தின் சாமயிகாபாவ மிருக்கின்றது. ஆண்டும் கடத்தின் பிராகபாவம், பிரத்துவம்ஸாபாவம், அத்தியந்தாபாவமென்னும் மூன்று மிருப்பதில்லை. கடத்தின் அந்நியோந்நியாபாவம் ஆண்டும் இருக்கின்றது.

அங்ஙனமே வாயுவில் உருவத்தின் அத்தியந்தாபாவம் இருக்கின்றது. ஆண்டு உருவத்தின் பிராகபாவம், பிரத்துவம்ஸாபாவம், சாமயிகாபாவமென்னும் மூன்றும் இருப்பதில்லை. உருவத்தின் அந்நியோந்நியாபாவம் வாயுவி லிருக்கின்றது.

இவ்வாற்றான் நால்வகைச் சம்சர்க்காபாவங்கட்கும் ஒன்றற்கொன்று விரோதம் உண்டு. அந்நியோந்நியாபாவத்திற்கு அவற்றோடு விரோத மில்லை.

எங்ஙனம் அந்நியோந்நியாபாவத்திற்கு மற்ற அபாவங்களோடு விரோத மில்லாதிருக்கினும் பிராகபாவமுதலியவற்றிற்கு ஒன்றற்கொன்று விரோதமின்மை பெறப்படுவதில்லையோ, அங்ஙனமே அந்நியோந்நியாபாவத்திற்குப் பிரதியோகியோடு

விரோதமின்மையைக் காணுதலான் எந்தச் சம்சர்க்கர்பாவத்திற்கும் பிரதியோகியோடு விரோதமின்மை பெறப்படுவதில்லை.

70. பிராசீனமதத்தில் அபாவங்களுக்கு ஒன்றற்கொன்றும் பிரதியோகியோடு முள்ள விரோதாவிரோதங்களை விரிவாய்க் கூறுதல்

இனி அபாவங்கட் கொன்றற்கொன்றும் பிரதியோகியோடுமுள்ள விரோதாவிரோதங்களை விஸ்தாரமாய்க் கூறுவாம்:-

பிரதியோகியின் உபாதானகாரணத்தில் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்க ளிரண்டு முள.

எங்ஙனம்: கடத்தின் உபாதான காரணமாகிய கபாலத்தில் கடப்பிராகபாவம் கடத்தின் உற்பத்திக்கு முன்னுளது. தண்ட முதலியவற்றால் கடத்தை யுடைக்கின், அப்போது கடத்தின் பிரத்துவம்ஸாபாவம் அக் கபாலத்தின்கண்ணே யுளது.

ஆதலால், பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்களுக் கொன்றற்கொன்று விரோதம் கூறுதல் பொருந்தாது. அங்ஙனமாயினும் ஒரு காலத்தில் இரண்டு மிரா; ஆனால், வெவ்வேறு காலத்தி லிருக்கும்.

ஆதலால், ஒரு காலத்தில் உடனிருத்தலின்மை வடிவினதாகிய விரோதம் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்கட்கு ஒன்றற்கொன் றுளது. அங்ஙனமே அத்தியந்தாபாவத்திற்கும் அவற்றோடு விரோதம் அங்கீகரித்தல்வேண்டும்.

அந்நியோந்நியாபாவத்திற்கு எவ்வபாவத்தோடும் விரோதமில்லை. ஏனெனின், கபாலத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது; ஆண்டுக் கடத்தின் அந்நியோந்நியாபாவமும் இருக்கின்றது.

கபாலத்தில் கடத்தின் பிரத்துவம்ஸாபாவமுள்ள காலத்தும் கடத்தின் அந்நியோன்னியாபாவம் இருக்கின்றது.

தந்துவில் கடத்தின் அத்தியந்தாபாவம் இருக்குமிடத்தும் கடத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது.

பூதலத்தில் கடத்தின் சாமயிகாபாவம் இருக்குங்காலத்தும் ஆண்டுக் கடத்தின் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது.

இவ்வாற்றான் அந்நியோந்நியாபாவத்திற்கு எவ் வபாவத் தோடும் விரோத மில்லை. அங்ஙனமாயினும் சம்சர்க்காபாவத் திற்கு இது சுபாவமாம்:—நால்வகைச் சம்சர்க்காபாவங்களில் ஒரு சம்சர்க்காபாவம் ஒரு காலத்திருக்கும்; மற்றைய இரா.

எங்ஙனம்: கபாலத்தில் உற்பத்திக்கு முன்கடத்தின் பிராக பாவ மிருக்கின்றது. அக்காலத்தில் கடத்தின் பிரத்துவம்ஸா பாவ மிருப்பதில்லை. கடத்தின் பிரத்துவம்ஸாபாவ மிருக்கு மாயின், அப்போது பிராகபாவ மிருப்பதில்லை. கபாலத்தில் கடத் தின் சாமயிகாபாவமும் அத்தியந்தாபாவமும் என்று மிருப்ப தில்லை. கபாலத்தில் கடத்தின் பிராகபாவமும் பிரத்துவம்ஸா பாவமு மிருக்குங்காலத்துப் படத்தின் அத்தியந்தாபாவமு மிருக்கின்றது.

ஆயினும், ஒரு பிரதியோகியினையுடைய இரண்டு சம்சர்க்கா பாவ மிருப்பதில்லை யென்பது நியமம். வேறு பிரதியோகி யினையுடைய வேறு சம்சர்க்காபாவம் இருத்தற்கு விரோத மில்லை.

அங்ஙனமே பூதலமுதலியவற்றில் கடத்தின் சாமயிகாபாவ மிருக்கின், ஆண்டுக் கடத்தின் அத்தியந்தாபாவமும், பிராகபாவ மும், பிரத்துவம்ஸாபாவமு மிருப்பதில்லை. வாயுவில் உருவத் தின் அத்தியந்தாபாவ மிருக்கின், ஆண்டு உருவத்தின் பிராக பாவமுதலியன இருப்பதில்லை.

சையோக சம்பந்தத்தால் ஓர் காலத்துப் பூதல முதலிய வற்றிற் கட மிருக்கின்றது. சமவாய சம்பந்தத்தாற் கபாலமல் லாத பிற பதார்த்தங்களிற் கடம் என்றும் இராது.

ஆதலால், சமவாய சம்பந்தத்தால் கடத்தின் அத்தியந்தா பாவம் பூதலமுதலியவற்றி லிருக்கின்றது. சையோக சம் பந்தத்தால் கடத்தின் சாமயிகாபாவ மிருக்கின்றது.

ஆதலால், சாமயிகாபாவ அத்தியந்தாபாவங்கட்கு ஒன் றற்கொன்று விரோதம் சம்பவியாது. அங்ஙனமாயினும், கடத் தின் சையோக சம்பந்தத்தால் வரைந்து கொள்ளப்பட்ட சாம யிகாபாவத்திற்குக் கடத்தின் சையோக சம்பந்தத்தால் வரை ந்து கொள்ளப்பட்ட அத்தியந்தாபாவத்தோடு விரோதம் உளது

சமவாய சம்பந்தத்தால் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தா பாவத்தோடு விரோத மில்லை.

இதனுல் இந் நியமம் பெறப்பட்டதாயிற்று:—எவ் வதிகா ணத்தில் எக் காலத்தில் எப் பதார்த்தத்திற்குஎச்சம்பந்தத்தால் ஒரு சம்சர்க்காபாவ முளதாகின்றதோ, அவ் வதிகாணத்தில் அக் காலத்தில் அப் பதார்த்தத்திற்கு அச்சம்பந்தந்தால் வேறு சம்சர்க்கர்பாவம் உண்டாவதில்லை; வேறு சம்பந்தத்தால் உண் டாகின்றது.

எச் சம்பந்தத்தால் எப் பதார்த்தம் யாண்டு இருக்கவில்லை யோ, ஆண்டு அப் பதார்த்தத்திற்கு அதன் சம்பந்தத்தான் வரைந்துகோள்ளப்படும் அபாவம் சொல்லப்படுகின்றது.

பூதலத்திற் சையோக சம்பந்தத்தால் ஓர்காலத்துக் கட முளதாகின்றது. ஆதலால், சையோகசம்பந்தத்தால் வரைந்து கொள்ளப்பட்ட கடத்தின் அத்தியந்தாபாவம் பூதலத்தில் என்று மில்லை.

ஆனுல், பூதலத்தன்மைச் சாதியினும், பூதலத்தின் உருவ முதலிய குணங்களினும் சையோகசம்பந்தத்தால் கடம் என்றும் இருப்பதில்லை. ஏனெனின், இரண்டு திரவியங்கட்குச் சையோக முண்டாம்; திரவியத்திற்கும் சாதிக்கும், அங்ஙனமே திரவியத் திற்கும் குணத்திற்கும் சையோக முண்டாவதில்லை.

ஆதலால், பூதலத்தன்மையினும், பூதலத்தின் உருவமுத லிய குணங்களினும் கடத்தின் சையோக சம்பந்தத்தால் வரை ந்து கொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

பூதலத்தன்மையினும் அங்ஙனமே உருவமுதலிய குணங் களினும் சமவாய சம்பந்தத்தானும் கடம் ஒருநாளும் இருப்ப தில்லை. ஏனெனின்:—

காரியத் திரவியத்திற்குத் தனது உபாதான காரணத்தில் சமவாயசம்பந்த முளதாகின்றது; பிறவற்றி லிருப்பதில்லை.

குணத்தின் சமவாயம் குணியி லிருக்கும். ஜாதியின் சம வாயம் வியக்தியி லிருக்கும். கிரியையின் சமவாயம் கிரியை யுடையதன்கண்ணிருக்கும். வேறிடங்களில் எங்கும் சமவாய சம்பந்த மிராது.

பரமாணுமுதலிய நித்தியத் திரவியங்களினும் விசேஷ பதார்த்தத்தின் சமவாயம் நையாயிகர் அங்கீகரிக்கினும், விசேஷ பதார்த்தம் அப்பிரசித்தமாம். அதனைக் கற்பித்தல் நிஷ்பிரயோஜனமாம். இஃது அத்வைத நூல்களில் வெளிப்படை. தீதிதிகார சிரோமணி• பட்டாசாரியரும் விசேஷ பதார்த்தத்தின் கண்டனமே கூறியிருக்கின்றார்.

ஆதலால், உபாதானகாரணத்தினும் குணியினும் வியக்தியினும் கிரியையுடையதன்கண்ணுமே முறையே காரியத் திரவியம் குணம் ஜாதி கிரியை யென்பவற்றின் சமவாய சம்பந்த மிருக்கும். வேறெதற்கும் எதன்கண்ணும் சமவாய சம்பந்த மின்று.

இவ்வாற்றாற் பூதலத்தன்மையினும் பூதலத்தின் உருவமுதலிய குணங்களினும் கடத்தின் சமவாய சம்பந்தம் என்றும் இருப்பதில்லை. ஆனால் கபாலத்திற்றான் கடத்தின் சமவாய மிருக்கின்றது.

ஆதலால், கடத்தின் உபாதான காரணமாகிய கபாலத்தை விட்டுப் பிறவிடங்களில் முழுவதும் கடத்தின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ மிருக்கின்றது. கடத்தின் வேறு சம்சர்க்காபாவம் அவ் வத்தியந்தாபாவத்தோ டிருப்பதில்லை.

ஏனெனின், கடத்தின் பிராகபாவமும் பிரத்துவம்சாபாவமும் கபாலமின்றிய பிறவிடங்களில் இருப்பதில்லை. சாமயிகாபாவம் ஆண்டிருக்கும்.

யாண்டு ஓர் காலத்தில் எச் சம்பந்தத்தால் பிரதியோகி யுளதாகின்றதோ, ஆண்டு ஓர் சம்பந்தத்தால் எக்காலத்தில் பிரதியோகி யிருப்பதில்லையோ, அக்காலத்து அதன் சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவ முளதாகின்றது. யாண்டு எக் காலத்தில் எச் சம்பந்தத்தால் பிரதியோகி யிருப்பதில்லையோ, ஆண்டு அச் சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவமே உளதாகின்றது.

கபாலமின்றிய பிற பதார்த்தங்களில் சமவாய சம்பந்தத்தான் கடம் என்றும் இருப்பதில்லை. ஆதலால், கடத்தின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தா

பாவத்தின் அதிகரணத்தில் கடத்தின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவ மிருப்பதில்லை.

ஆராயுமிடத்துத் திரவியத்தின் சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம்; திரவியத்தின் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப் பட்ட சாமயிகாபாவமே பிரசித்தமாம்.

ஏனெனின், நித்தியத் திரவியமோ சமவாயசம்பந்தத்தான் எதனினும் மிருப்பதில்லை. ஆதலால், நித்தியத்திரவியத்திற்குச் சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தா பாவமு மிருக்கின்றது.

சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாம யிகாபாவம் நித்தியத் திரவியத்திற்கு ஓரிடத்து மில்லை. காரியத் திரவியத்திற்குத் தனது உபாதானகாரணத்தில் பிராகபாவம் அல்லது பிரத்துவம்ஸாபாவம் இருக்கும். ஆண்டுச் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமாவது, சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தா பாவமாவது இருப்பதில்லை.

தனது உபாதான காரணத்தை விட்டு அந்நிய பதார்த்தத் தில் சமவாய சம்பந்தத்தால் காரியத்திரவியம் ஓர்காலத் திரு ந்து, ஓர்காலத் திராதாயின் சமவாய சம்பந்தத்தான் வரைந்து கொள்ளப்பட்ட சாமயிகாபாவ முளதாம். உபாதானத்தின் வேறு கியதில் காரியத்திரவியம் என்றும் இராது.

ஆதலால், உபாதானத்தின் வேறாய பதார்த்தங்களில் காரி யத்திரவியத்திற்குச் சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப் பட்ட சாமயிகாபாவம் சம்பவியாது. ஆனால், ஆண்டும் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமே காரியத்திரவியத்திற்காம். இவ்வாற்றான் சமவாய சம்பந்தா வச்சின்ன சாமயிகாபாவம் திரவியத்திற்கு அப்பிரசித்தமாம்.

குணக்கிரியைகளும் சமவாய சம்பந்தத்தான் எந்தத் திர வியத்தி லுண்டாய் நஷ்டமாய்விடுகின்றனவோ, அத் திரவியத் தில் சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாம யிகாபாவம் இருப்பதில்லை. ஆனால், முதலிற் பிராகபாவமும் பின்னர்ப் பிரத்துவம்ஸாபாவமு முள.

கடத்தின் குணக்கிரியைகள் சமவாய சம்பந்தத்தால் அந்நியத் திரவியத்தில் என்று மிரா. ஆண்டும் அவற்றின் சமவாய சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவ முளது; சாமயிகாபாவ மின்று.

இவ்வாற்றான் குணக்கிரியைகளுக்கும் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம்; அங்ஙனமே சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமும் குணக் கிரியைகளுக்கு அப்பிரசித்தமாம்.

ஏனெனின், சையோக சம்பந்தத்தான் குணக்கிரியைகள் ஓர் காலத்திருந்து ஓர் காலத் தில்லாதிருக்குமாயின், சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்படும் சாமயிகாபாவம் குணக்கிரியைகளுக் குளதாம். சையோக சம்பந்தத்தான் குணக்கிரியைகள் எதனினும் என்று மிருப்பதில்லை. ஆதலால், குணக்கிரியைகளுக்குச் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்படும் அத்தியந்தாபாவமே யுளது. அவ் வத்தியந்தாபாவம் எல்லாப் பதார்த்தங்களினு முளதாம்.

ஏனெனின், சையோக சம்பந்தத்தான் குணக்கிரியைகள் ஓர் பதார்த்தத்தி லிருக்குமாயின், அப் பதார்த்தத்தில் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் குணக்கிரியைகளுக் கிராது. அச் சையோக சம்பந்தத்தான் குணக்கிரியைகளுக் காதார மொன்றும் இல்லை. ஆதலால், குணக்கிரியைகளின் சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்படும் அத்தியந்தாபாவம் கேவலாந்வயியாம்.

எதன் அபாவம் ஓரிடத்து மிருப்பதில்லையோ அது கேவலாந்வயி யெனப்படுகின்றது. முற்கூறிய அத்தியந்தாபாவம் முழுவதுமாம். அவ் வத்தியந்தாபாவத்திற்கு அபாவம் ஓரிடத்து மில்லையாகலின் கேவலாந்வயி யெனப்படுகின்றது.

இவ்வாற்றான் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமும், சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமும் குணக்கிரியைகளுக்கு அப்பிரசித்தமாம்.

அங்ஙனமே ஜாதிக்கும் சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம். ஏனெனின், சையோக சம்பத்தத்தாலோ ஜாதி எப்பதார்த்

தத்திலும் என்று மிருப்பதில்லை. ஆதலால், சகல பதார்த்தங்களினும் ஜாதியின் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் உளது; சாமயிகாபாவம் இல்லை.

அங்ஙனமே தனது ஆசிரயமாகிய வியக்தி எதுவோ, அதன்கண் சமவாய சம்பந்தத்தான் ஜாதி எப்போதும் இருக்கின்றது. அந்த வியக்தியில் ஜாதியின் சமவாய சம்பந்தத்தான் ஒரு அபாவமும் இருப்பதில்லை.

எங்ஙனம்: கடத்தன்மைச் சாதி கடவியக்தியில் சமவாய சம்பந்தத்தா விருக்கின்றது. ஆண்டுக் கடத்தன்மையின் அத்தியந்தாபாவ சாமயிகாபாவங்கள் அல்லது பிராகபாவமும் அங்ஙனமே துவம்ஸாபாவமும் இருப்பதில்லை. ஏனெனின், பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்களோ அநித்தியத்தினவாம். கடத்தன்மை நித்தியம்; அதற்குப் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்கள் சம்பவியா.

யாண்டுப் பிரதியோகி என்று மிராதோ, ஆண்டு அத்தியந்தாபாவ மிருக்கும். யாண்டுப் பிரதியோகி ஓர்காலத்திருந்து ஓர்காலத் திருப்பதில்லையோ, ஆண்டுச் சாமயிகாபாவ முளதாம்.

கடத்தில் கடத்தன்மை என்றும் சமவாய சம்பந்தத்தா விருக்கின்றது. ஆதலால், கடத்தில் கடத்தன்மையின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமும், சமவாய சம்பந்தத்தாவச்சின்ன சாமயிகாபாவமும் சம்பவியா.

அங்ஙனமே கடத்தின் வேறான கடத்தன்மைக் காதாரமாகாத எல்லாப் படமுதலியவற்றிலும் கடத்தன்மைச் சாதி சமவாய சம்பந்தத்தான் எப்போது மிருப்பதில்லை. ஆதலால், அவற்றிலும் கடத்தன்மைச் சாதியின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவ மில்லை. ஆனால், சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ மிருக்கின்றது. இவ்வாற்றான் திரவியத்தின் வேறான பதார்த்தங்களுக்குச் சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம்.

திரவியமும் நித்திய அநித்திய பேதத்தால் இருவகைத்தாம்.

பிருதிவி ஜல தேயு வாயுக்கள் துவிஅணுகமுதலிய வடிவ அநித்தியமாம்.

ஆகாயம், காலம், திக்கு, ஆத்மா, மனம், பரமாணு வடிவினவாகிய பிருதிவி ஜல தேயு வாயுக்கள் என்பவை நித்தியத் திரவியங்களாம்.

அந்த நித்தியத் திரவியம் சமவாய சம்பந்தத்தான் ஓர் காலத்து ஒரு பதார்த்தத்தி லிருப்பதில்லை. ஆதலால், அவற்றிற்கோ சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் ஓரிடத்துமில்லை. ஆனால், சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமே முழுதுமாம்.

அங்ஙனமே அநித்தியமான துவியணுகாதி திரவியங்கள் சமவாய சம்பந்தத்தால் தமது அவயவமாகிய பரமாணு முதலியவற்றி லிருக்கின்றன.

அவயமின்றிய வேறு பதார்த்தங்களில் அநித்தியத் திரவியம் சமவாய சம்பந்தத்தால் என்றும் இருப்பதில்லை. அவயவங்களில் அவயவியின் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்க ளிருக்கின்றன.

ஆதலால், சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் அவயவத்தில் காரியத் திரவியத்திற் கிருப்பதில்லை. அவயவத்தின் வேறான பதார்த்தங்களில் சமவாய சம்பந்தத்தான் அவயவமும் என்று மிருப்பதில்லை.

ஆதலால், சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் ஆண்டில்லை. ஆனாற் சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ முளது.

இவ்வாற்றான் திரவியத்திற்கும் சமவாய சம்பந்தாவச்சின்ன சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம். கேவல சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் திரவியத்திற்குப் பிரசித்தமாம். அதுவும் காரியத் திரவியத்திற்காம். நித்தியத் திரவியத்திற்கோ சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமே முழுவதுமாம்.

சாமயிகாபாவம் யாண்டும் நித்தியத் திரவியத்திற் கின்று. ஏனெனின், நித்தியத் திரவியத்திற்கு அவிருத்தி சுபாவமாம். ஆதலால், சையோக சம்பந்தத்தால் நித்தியத் திரவியம் ஒரு பதார்த்தத்திலும் ஒருபோது மிருப்பதில்லை. நித்தியத் திரவியத்திற்கும் மற்றைத் திரவியங்களோடு சையோக முளது.

எதன் சையோகம் எதனிடத்தி லுளதாகின்றதோ, அது அதனிடத்துச் சையோக சம்பந்தத்தா லுளதாம். என்றாலும், நித்தியத்திரவியத்திற்குச் * சையோகவிருத்தி நியாமகமன்று. குண்டவக்கினிகளின் சையோகம் அக்கினியினது விருத்தியின் † நியாமகமாம்; குண்டத்தினது விருத்தியின் நியாமகமன்று. அங்ஙனமே, நித்தியத்திரவியத்திற்குக் காரியத்திரவியத்தோ டுள்ள சையோகமும் காரியத்திரவியத்தினது விருத்தியின் நியாமகமாம். நித்தியத்திரவியத்தினது விருத்தியின் நியாமக மன்று. இக் காரணத்தான் சையோக சம்பந்தத்தான் வரைந்து கொள்ளப்பட்ட சாமயிகாபாவம் நித்தியத் திரவியத்திற்கு அப்பிரசித்தமாம்.

சையோக சம்பந்தத்தானுதல் சமவாய சம்பந்தத்தானுதல் எந்தப் பதார்த்தம் ஒன்றினு மிருப்பதில்லையோ அது அவிருத்தி யெனப்படுகின்றது.

நித்தியத்திரவியத்திலோர் சையோக சம்பந்தத்தானும் சமவாய சம்பந்தத்தானும் பிறபொருள்களிருக்கும். பிற பதார்த்தங்களில் சையோக சம்பந்தத்தானுதல் சமவாய சம்பந்தத்தானுதல் நித்தியத்திரவிய மிருப்பதில்லை. ஆதலால், நித்தியத் திரவியங்களை அவிருத்தி யென்பர்.

இவ்வாற்றாற் சம்சர்க்காபாவம் அந்நியோந்நியாபாவ மென்னும் வேறுபாட்டால் அபாவம் இருவகைப்படும்.

அவற்றுள் சம்சர்க்காபாவத்திற்கு நான்கு பேதங்களுள. அந்நான்கிற்கும் ஒன்றற்கொன்று விரோத முண்டு. அந்நான்கிற்குமே தம் பிரதியோகியோடு விரோத முண்டு.

பிரதியோகியோடு விரோதம் இவ்வகையானும்:—எந்தப் பிரதியோகி எந்தச் சம்பந்தத்தான் யாண்டுளதோ, அதற்கு அச் சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அபாவம் இருப்பதில்லை. ஒரு சம்பந்தத்தால் பிரதியோகி யிருக்கும்; வேறு சம்பந்தத்தால் அதன் அபாவமு மிருக்கும்.

எங்ஙனம்: சையோக சம்பந்தத்தாற் பூதலத்திற் கடம் இருக்குங்காலத்துச் சமவாய சம்பந்தத்தால் கட மிருப்பதில்லை.

* சையோகத்தால் ஒன்றன்கணிருப்பது. † நியாமகம்=நியமிப்பது.

ஆதலால், சையோக சம்பந்தத்தால் கட முடைய பூதலத்திலும் கடத்தின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தி யந்தாபாவம் இருக்கின்றது. ஆதலால், எச் சம்பந்தத்தால் பிரதி யோகி யுளதாகின்றதோ, அச் சம்பந்தத்தான் வரைந்துகொள் ளப்பட்ட சம்சர்க்காபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத மிருக்கின்றது. சம்சர்க்காபாவத்திற்கு ஒன்றற்கொன்றுள்ள விரோதமும் சமானசம்பந்தத்தா னுளதாம்.

ஒரு சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட ஒரு சம்சர்க் காபாவம் யாண்டுளதோ, ஆண்டும் வேறு சம்பந்தத்தால் வரை ந்துகொள்ளப்பட்ட வேறு சம்சர்க்காபாவம் உண்டு. எங்ஙனம்: கடமின்றிய பூதலத்திற் கடத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன சாமயிகாபாவ முளது. அதே கடத்தின் சமவாய சம்பந்தத் தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் அப் பூத லத்தின்கண்ணே யிருக்கின்றது.

இவ்வாற்றான் பிரதியோகியோடு சம்சர்க்காபாவத்திற்கு ஒரு சம்பந்தத்தான் விரோத மிருக்கின்றது. சமான சம்பந்தத் தானே சம்சர்க்காபாவங்களுக்கு ஒன்றற்கொன்று விரோதம் இருக்கின்றது. அந்நியோந்நியாபாவத்திற்கோ பிராகபாவ முதலியவற்றோடு விரோத மில்லாததுபோலத் தனது பிரதி யோடும் விரோத மில்லை. விசாரம் செய்யின் அந்நியோந்நியா பாவத்திற்கு அந்நிய அபாவங்களோடு விரோத மில்லையாயினும் தனது பிரதியோகியோடு அந்நியோந்நியாபாவத்திற்குத்தான் விரோத முளது.

அநேக நூல்களில் இஃதெழுதப்பட்டிருக்கின்றது:—சம் சர்க்காபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத முண்டு. அந்நி யோந்நியாபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத மில்லை. ஆனால், பிரதியோகித்தன்மையை வரைந்துகொள்ளும் தர்மத் தோடு விரோத முண்டு.

எங்ஙனம்: பூதலத்திற் கடமிருக்கின் அக்காலத்தும் கடத் தின் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது. ஏனெனின், பேதத் தை அந்நியோந்நியாபாவ மென்பர். கடமுடைய பூதலமும் கடரூப மன்று; ஆனால், கடத்தின் வேறும். கடத்தின் வேறாகிய அதா வது, கடத்தின் பேதமுடைய பூதல மிருக்கின்றது. பேதமுடை

யது, அந்நியோந்நியாபாவமுடையதெனக் கூறுவதிற் பொருள் ஒன்றேயாம்.

கடமொழிந்த மற்றெல்லாப் பொருள்களும் கடத்தின் வேறாம். கடத்தில் கடத்தன்மை யிருக்கின்றது. ஆண்டுக் கடத்தின் பேதவடிவமானகடாந்நியோந்நியாபாவம் இருப்பதில்லை. கடமொழிந்த மற்றைப் பொருள்களினும் கடத்துவம் இருப்பதில்லை. ஆண்டு எல்லாக் கடத்திற்கும் அந்நியோந்நியாபாவமிருக்கின்றது. இவ்வாற்றாற் கடாந்நியோந்நியாபாவத்திற்குக் கடத்தோடு விரோதமில்லை; ஆனால், கடத்தன்மையோடு விரோதமிருக்கின்றது. ஆண்டுக் கடாந்நியோந்நியாபாவத்திற்குப் பிரதியோகி கடம்; பிரதியோகித்தன்மையை வரைவது கடத்தன்மை.

எதன் அபாவ முளதோ அது பிரதியோகி யெனப்படுகின்றது. பிரதியோகியிலிருக்கும் தர்ம மெதுவோ, அது பிரதியோகித்தன்மையை வரைவதெ (பிரதியோகித்தன்மை யவச்சேதகமெ)னப்படுகின்றது. பிரதியோகியிலிருக்கும் தர்மம் அநேகமாம். எங்ஙனம் கடத்தில் கடத்தன்மை யிருக்கின்றது. பிருதிவித்தன்மை திரவியத்தன்மை பதார்த்தத்தன்மை முதலியனவும் கடத்தி லிருக்கின்றன.

அவற்றுள் பிருதிவித்தன்மை முதலியனவும் கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக மாதல் வேண்டும். பிருதிவித்தன்மைமுதலியன கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக மன்று. பிருதிவியந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் பிருதிவித்தன்மையாம்.

திரவியாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் திரவியத்தன்மையாம். கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் பிருதிவித்தன்மை திரவியத்தன்மை முதலிய வன்று; கடவடிவான பிரதியோகியிலோ இருக்கின்றன. ஆகலின், கடத்தன்மையைப்போல கடாந்நியோந்நியாபாவத்திற்குப் பிருதிவித்தன்மை திரவியத்தன்மை முதலியவற்றைப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் என்னல் வேண்டும். அங்ஙனமாயினும், அபாவத்தை யறிவிக்கும் பதத்தோடு பிரதியோகியை யறிவிக்கும் பதத்தை உச்சரிக்கின் எந்தக்

தர்மத்தின் தோற்ற முண்டாகிறதோ, அது பிரதியோகித்தன்மை யவச்சேதக மெனப்படும். கடாந்நியோந்நியாபாவத்தினைக் கூறுவதில் பிரதியோகியை யறிவிப்பது கடபதமாம். அங்ஙனமே படம் கடமன்று என்னு மிவ்வாற்றானும் பிரதியோகியை யறிவிப்பது கடபதமாம். அதனை யுச்சரிக்கின் கடத்தன்மையின் உணர்ச்சி யுண்டாகின்றது. பிருதிவித்தன்மை திரவியத்தன்மை முதலியவற்றின் உணர்ச்சி யுண்டாதலில்லை. ஆதலால், கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் கடத்தன்மையாம்; பிருதிவித்தன்மை முதலியனவன்று.

ஜலம் பிருதிவியன்றென்று கூறி, பிருதிவி யந்நியோந்நியாபாவம் கூறின், அப்போது பிரதியோகியை யறிவிப்பது பிருதிவி யென்னும் பதமாம். அதனை உச்சரிக்கின் பிருதிவித்தன்மையின் உணர்ச்சி யுண்டாகின்றது. ஆண்டுப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் பிருதிவித்தன்மையாம்.

குணம் திரவியமன்றென் றிவ்வாறு கூறி, திரவியாந்நியோந்நியாபாவத்தைக் கூறின், அப்போது பிரதியோகியை யறிவிப்பது திரவியபதமாம். அதனை யுச்சரிக்கின் திரவியத்தன்மையின் உணர்ச்சி யுண்டாகின்றது. ஆண்டுப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் திரவியத்தன்மையாம்.

கடபதத்தை யுச்சரிக்கின் கடத்தன்மையி னுணர்ச்சி யுண்டாகின்றது. பிருதிவித்தன்மைமுதலியவற்றி னுணர்ச்சி யுண்டாவதில்லை. இதன்கண் இது ஏதுவாம்:—கடபதத்திற்குக் கடத்தன்மை விசிஷ்டத்தில் சக்தி யிருக்கின்றது.

எந்தத் தர்ம விசிஷ்டத்தின்கண் எந்தப் பதத்தின் சக்தி யுளதோ, அந்தத் தர்மத்தின் உணர்ச்சி அப் பதத்தா னுண்டாகின்றது. இவ்வாற்றான் கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் கடத்தன்மையாம். அது கடத்திலிருக்கும். கடாந்நியோந்நியாபாவம் கடத்தி லிருப்பதில்லை. கடத்தின் வேறாகிய சகல பதார்த்தங்களினும் கடத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. ஆண்டுக் கடத்துவ மிருப்பதில்லை. ஆதலால், கடத்தன்மைவடிவப் பிரதியோகித்தன்மை யவச்சேதகத்தோடு கடாந்நியோந்நியாபாவத்திற்கு விரோத மூண்டு. கடவடிவப் பிரதியோகியோடு விரோத மில்லை. சம்சர்க்

காபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத முண்டு. இவ்வாறு அநேக நூலாசிரியர் எழுதியிருக்கின்றனர்.

சம்சர்க்காபாவ அந்நியோந்நியாபாவங்களின் இலக்ஷணமு மிவ் வர்த்தத்தினை யநுசரித்தே செய்திருக்கின்றனர்.

பிரதியோகி விரோதியான அபாவ மெதுவோ, அது சம்சர்க் காபாவ மெனப்படுகின்றது. பிரதியோகித்தன்மை யவச்சேதக விரோதியபாவம் அந்நியோந்நியாபாவ மெனப்படுகின்றது. இவ் விதலக்ஷணத்தைக் கூறுதலானும் அந்நியோந்நியாபாவத்திற்குப் பிரதியோகியோடு அவிரோதமே சித்திக்கின்றது. நால்வகைச் சம்சர்க்காபாவங்கட்கும் பிரதியோகியோடுதான் விரோதம் சித் திக்கின்றது. ஆனால், நூலாசிரியர்களது இங்ஙன மெழுதிய எழுத்துக்கள் யாவும் தூலதிருஷ்டியாலாம்; விசாரதிருஷ்டியா லில்லை. ஏனெனின், அத்தியந்தாபாவத்திற்கு எவ்வாற்றாற் பிரதி யோகியோடு விரோத முளதோ, அவ்வாற்றால் அந்நியோந்நியா பாவத்திற்கும் பிரதியோகியோடு விரோத முளது.

எப்பூதலத்தில் சையோக சம்பந்தத்தான் குடம் உளதோ, அப் பூதலத்தின்கண்ணே சமவாயசம்பந்தத்தான் வரைந்து கொள்ளப்பட்ட கடத்தின் அத்தியந்தாபாவத்திற்கும் பிரதி யோகியோடு முற்றும் விரோத மின்று. ஆனால், எந்தச் சம்பந் தத்தான் பிரதியோகி யுளதாகின்றதோ, அச் சம்பந்தத் தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் இருப்ப தில்லை. ஆதலால், அபாவத்திற்குப் பிரதியோகித்தன்மை யவச் சேதக சம்பந்த விசிஷ்டப் பிரதியோகியோடு விரோத முளது. பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்தத்தின் வேறாய சம் பந்த விசிஷ்டப்பிரதியோகியோடு எந்த அபாவத்திற்கும்விரோத மின்று. எச்சம்பந்தத்தான் பதார்த்தத்தின் அபாவம் சொல்லப் படுகின்றதோ அது பிரயோகித்தன்மை யவச்சேதகசம்பந்த மெனப்படுகின்றது.

அத்தியந்தாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சே தக சம்பந்தம் அநேகமாம். ஏனெனின், எந்த அதிகரணத்தில் ஒரு சம்பந்தத்தால் எந்தப் பதார்த்த முளதாகின்றதோ, அவ் வதிகரணத்திற்றானே வேறு சம்பந்தத்தான் வரைந்துகொள் ளப்பட்ட அத்தியந்தாபாவம் அப் பதார்த்தத்திற் குண்டா

கின்றது. எங்ஙனம்: பிருதிவியில் கந்தம் சமவாயசம்பந்தத்தால் இருக்கின்றது; சையோகசம்பந்தத்தால் என்று மிருப்பதில்லை. ஆதலாற் பிருதிவியில் கந்தத்தின் சையோக சம்பந்தந்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ மிருக்கின்றது. ஆண்டுப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சையோக சம்பந்தமாம்.

ஜலத்தில் சையோக சம்பத்தத்தானுவது சமவாய சம்பந்தத்தானுவது கந்த மின்று. ஆனுல், காலத்தாுைய சம்பந்தத்தான் ஜலத்தினும் கந்த முளது. ஆதலால், ஜலத்தில் கந்தத்தின் சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமும், சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமு மிருக்கின்றன. ஆண்டு முதல் அபாவத்திற்குப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சையோகசம்பந்தமும், இரண்டாவது அபாவத்திற்குப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சமவாயசம்பந்தமு மாகின்றன.

காலிக சம்பந்தத்தான் ஒவ்வொரு ஜந்நியத்தினும் சகல பதார்த்தங்களு மிருக்கும். ஆதலால், துவியணுகமுதலிய வடிவினதாய ஜலத்தில் கந்த மிருத்தலான் ஜலத்திலிருக்கும் கந்தாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் காலத்தாுைய சம்பந்தமன்று. நித்திய பதார்த்தத்தில் காலத்தாுைய சம்பந்தத்தான் ஓர்பதார்த்தமும் இருப்பதில்லை. ஆதலாற் பரமாணு வடிவமாகிய ஜலத்தில் கந்தத்தின் காலிக (காலத்தாுைய) சம்பத்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமும் இருக்கின்றதாகலின், பரமாணுவி லிருப்பதாகிய கந்தாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் காலத்தாுைய சம்பந்தமாம். இவ்வாற்றான் அத்தியந்தாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்தம் அநேகமாம். அந்நிய அபாவங்களின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் ஒவ்வொன்றும். எங்ஙனம்: கபாலத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது; பிறவற்றில் யாண்டும் கடத்தின் பிராகபாவ மில்லை. அக் கபாலத்தில் கடத்தின் பிராகபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சமவாய சம்பந்தமாம். பிராகபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் வேறு சம்பந்த மன்று.

எச் சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட பிராகபாவம் எதற்கு எதன்கணுளதோ, அச் சம்பந்தத்தால் அதன்

உற்பத்தி அதன்கண் உளதாகின்றதென்பது நியமம். கபாலத்தில் கடத்தின் உற்பத்தி சமவாய சம்பந்தத்தான் உண்டாகின்றது; வேறு சம்பந்தத்தா னுண்டாவதில்லை. ஆதலாற் கபாலத்தில் கடத்தின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட பிராகபாவ மிருக்கின்றது. அதன் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் ஒரே சமவாய சம்பந்தமாம். அங்ஙனமே, கபாலத்திற் சமவாயத்தால் கடம் நஷ்டமாயிற்று என்னும் உணர்வு துவம்ஸாபாவத்திற்கு உண்டாகின்றது. ஆதலால், துவம்ஸத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகமும் ஒரே சமவாய சம்பந்தமாம். அங்ஙனமே சாமயிகாபாவமும் ஜந்நியத் திரவியத்திற்கே யாகின்றது. ஜந்நியத் திரவியத்திற்கும் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமே யாகின்றது. சமவாய சம்பந்தாவச்சின்ன சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம். இது முன்னர் உரைக்கப்பட்டது. ஆதலால், சாமயிகாபாவத்திற்கும் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சையோக சம்பந்தமாம். அங்ஙனமே அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் ஒரே அபேத சம்பந்தமாம். அவ் வபேதத்தினையே நையாயிகர் தாதாத்மியசம்பந்த மென்பர்.

அபேத சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அபாவத்தினையே அந்நியோந்நியாபாவ மென்பர்; மற்றைச் சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அபாவத்தினைச் சம்சர்க்காபாவ மென்பர்; அந்நியோந்நியாபாவமென்று கூறுவதில்லை. இவ்வாற்ருன் அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்தம் ஒரே தாதாத்மிய மென்னும் அபேதமாம். மற்ற எச் சம்பந்தமும் அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக மாகாது. பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்த விசிஷ்டப் பிரதியோகிக்கு அபாவத்தோடு விரோத முண்டு. மற்றைச் சம்பந்த விசிஷ்ட பிரதியோகிக்கோ அத்தியந்தாபாவத்தோடும் விரோதம் இல்லை. இது நிச்சயிக்கப்பட்டதேயாம். அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக அபேதசம்பந்த மெதுவோ அவ் வபேதசம்பந்தத்தான் தனது சொரூபத்திலேயே கட மிருக்கின்றது.

பூதலம் கபால முதலியவற்றில் அபேதசம்பந்தத்தால் கடம் என்று மிருப்பதில்லை. யாண்டு அபேத சம்பந்தத்தால்

கட மிருப்பதில்லையோ, ஆண்டு எல்லாக் கடத்திற்கும் அந்நி யோந்நியாபாவ மிருக்கின்றது. தனது சொரூபத்தில் அபேத சம்பந்தத்தாற் கடம் இருக்கின்றது. ஆண்டுக் கடத்தின் அந்நி யோந்நியாபாவ மில்லை. இவ்வாற்றான் பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்த விசிஷ்டப் பிரதியோகிக்கு அத்தியந்தா பாவத்தோடு எங்ஙனம் விரோதம் இருக்கின்றதோ, அங்ஙன மே அந்நியோந்நியாபாவத்தோடும் பிரதியோகித்தன்மை யவச்சேதகசம்பந்த விசிஷ்டப் பிரதியோகிக்கு விரோதம் வெளிப்படையா யுளது. பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்த விசிஷ்டப் பிரதியோகியோடு அத்தியந்தாபாவத்திற் கிருத்தல்போல அந்நியோந்நியாபாவத்திற்கும் விரோதம் வெளி ப்படையா யிருத்தலின் பிரதியோகியோடு விரோத மின்மை யைக் கூறுதலை எல்லா நூலாசிரியர்களும் விவேக நேத்தி ரத்தின் விழிப்பின்மையாற் கூறியிருக்கின்றனர். ஆதலால், எல்லா அபாவங்களுக்கும் பிரதியோகியோடு விரோத முளது.

முதற் பிரசங்கம் இதுவாம்:—யாண்டுப் பூதல முதலியவற் றில் ஓர் காலத்துக் கடம் இருந்து ஓர் காலத்தில் இருப்பதில்லை யோ, ஆண்டுக் கடத்தின் சாமயிகாபாவம் இருக்கின்றது; அத்தி யந்தாபாவ மின்று. ஏனெனின், அபாவத்திற்குப் பிரதி யோகியோடு விரோத முளதாகின்றது. அவ் விரோதம் முற் கூறியவாற்றான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆதலால், பூதலத் தில் சையோக சம்பந்தத்தான் கட முளதாயின், அப்போது கடத்தின் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் இன்று.

கடத்தை யெடுத்துக்கொள்ளின், அப்போது கடத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவ மிருக்கின்ற தென் றிவ்வாறு அங்கீகரித்தல் உண்டாகும். இதனாற் பூதலத் தில் கடத்தின் அத்தியந்தாபாவத்திற்கு உற்பத்தி நாசம் அங்கீ கரித்தல் உண்டாகும். உற்பத்தி நாசம் கொள்ளாக்கால் ஓர்கா லத் திருக்கின்றது, ஓர்காலத் தில்லையென்று கூறுதல் அத்தி யந்தாபாவத்திற் சம்பவியாது. அவ் வுற்பத்தி நாசம் கடாத்தி யந்தாபாவத்திற்குச் சம்பவியாது. ஏனெனின், யாண்டுச் சை யோக சம்பந்தத்தாற் கட மில்லையோ, ஆண்டு முழுவதும் கடத் தின் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தி

யந்தாபாவம் இருக்கும். அக் கடத்தின் அத்தியந்தாபாவம் எல்லாப் பதார்த்தங்களினும் ஒன்றும்; பலவன்று. ஏனெனின், பிரதியோகி பேதத்தால் அபாவத்திற்குப் பேத முளதாகின்றது. அதிகரண பேதத்தால் அபாவத்திற்குப் பேத முளதாவதில்லை யென்பது தார்க்கிகர் சித்தாந்தம்.

எங்ஙனம்; கடாபாவ படாபாவங்களின் பிரதியோகி பின்னமாம். அவ் வபாவங்களும் பின்னமாம். பூதலத்திற் சையோக சம்பந்தத்தான் கடாத்தியந்தாபாவ முளது. அங்ஙனமே பூதலத்தன்மையின்கண்ணும் சையோக சம்பந்தத்தான் கடம் இல்லை. அங்ஙனமே கடத்தன்மைச் சாதியின்கண்ணும் சையோகசம்பந்தத்தான் கடமின்று. ஆதலால், சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடாத்தியந்தாபாவ முளது. அங்ஙனமே, படத்தன்மை முதலியவற்றின்கண்ணும் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடாத்தியந்தாபாவ முளது.

இவ்வாற்றான் அநந்த வதிகரணங்களில் சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடாத்தியந்தாபாவ முளது. அதன் அதிகரணம் அநந்தமாயினும் பிரதியோகி ஒன்றாகிய கடமாம். ஆதலாற் சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடாத்தியந்தாபாவம் ஒன்றும். ஆனால், பூதலத்தன்மை கடத்தன்மை முதலிய ஜாதிகளாலேர் கடத்தின் சையோகசம்பந்தம் என்று மிராது. ஆதலாற் பூதலத்தன்மை கடத்தன்மைமுதலிய ஜாதியில் கடத்தின் சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் உற்பத்தி நாசமின்றிய நித்தியமாம்.

பூதலமுதலியற்றில் சையோகசம்பந்தத்தால் ஒருகாலத்திற் கடமிருக்கும், ஒருகாலத்திலிராது. ஆதலாற் கடகாலத்தில் பூதலத்தின்க ணிருக்கும் கடாத்தியந்தாபாவம் நஷ்ட மாகின்றது. கடம் நீங்குங்காலத்துக் கடாத்தியந்தாபாவம் உற்பத்தியாகின்றது. இவ்வாற்றான் கடத்துவமுதலிய ஜாதியில் கடாத்தியந்தாபாவத்தினை நித்தியமெனவும் அக் கடாத்தியந்தாபாவத்தினையே பூதலமுதலியவற்றில் உற்பத்தி நாசமுடைய அநித்தியமா மென்று கூறுதலும் பொருத்தமுடையனவன்று. ஆத

லால், யாண்டுச் சையோக சம்பந்தத்தால் ஓர் காலத்துக் கட மிருக்கின்றதோ, ஆண்டுக் கடசூனிய காலத்தில் கடத்தின் சையோகசம்பந்தத்தால் வரைந்துகொள்ளப்பட்ட அபாவ மென்னும் ஓர் அநித்தியமான அபாவத்தை அங்கீகரித்தல் வேண்டும். அதுவே சாமயிகாபாவ மெனப்படுகின்றது.

அப் பூதலத்தின்கண்ணே சமவாயசம்பந்தத்தான் ஓர் காலத்தும் கட மிருப்பதில்லையாகலின் கடத்தின் சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் இருக்கின்றது. அங்ஙனமே கடத்தன்மை பூதலத்தன்மை முதலியவற்றில் சையோக சம்பந்தத்தான் ஒருகாலத்தும் கட மிருப்பதில்லை. சமவாயசம்பந்தத்தானும் கபாலமின்றிய மற்றைய பதார்த்தங்களில் கட மிருப்பதில்லை. ஆதலால், கடத்தன்மை முதலியவற்றில் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடாத்தியந்தாபாவமும், சமவாயசம்பந்தாவச்சின்ன கடாத்தியந்தாபாவமு மிருக்கின்றன. அவ்வத்தியந்தாபாவம் உற்பத்திநாசமின்றிய நித்தியமாம்.

இதனால் இந்த நிச்சயம் சித்தித்தது:—யாண்டு ஒருகாலத்துச் சையோகசம்பந்தத்தான் பிரதியோகி யிருந்து ஒரு காலத் தில்லையோ, ஆண்டுச் சையோகசம்பந்தத்தான் வரைந்து கோள்ளப்பட்ட சாமயிகாபாவம் சொல்லப்படுகின்றது. கடத்தின் சாமயிகாபாவம் உற்பத்திநாசமுடையதா மாகலின் பிரதியோகி பேதமில்லாமலும் ஒரு கடத்திற்குச் சாமயிகாபாவம் அநந்த (அநேக)மாம்.

எச் சம்பந்தத்தான் யாண்டுக் கடவடிவப் பிரதியோகி என்று மிருப்பதில்லையோ, ஆண்டுக் கடத்தின் அச் சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் சொல்லப்படுகின்றது. அவ் வத்தியந்தாபாவம் உற்பத்தி நாசமின்றியதா யிருத்தலின் நித்தியமாம்.

கடத்தின் சையோகசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் அநந்த அதிகரணங்களில் ஏகமாம்; அங்ஙனமே, சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடாத்தியந்தாபாவமும் அநந்த அதிகரணங்களில் ஏகமாம்.

ஓர் அதிகரணத்திற்கு அழிவு வந்ததாயினும், அவ் வத்தியந்தாபாவமே வேறு அதிகரணத்தில் இருக்கும். ஆதலால்,

அத்தியந்தாபாவத்திற்கு நாசம் உண்டாகிறதில்லை. எங்ஙனம்: கடத்தின் சமவாய சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவம் தந்துவினும், தந்துத்தன்மைச்சாதியினும், கடத்தன்மையினும், படத்தன்மையினும், கபாலத்தன்மையினும், கபாலமொன்றொழிந்த ஏனைய எல்லாப் பதார்த்தங்களினு முளது. அவற்றின் கண் சகல சமவாய சம்பந்தாவச்சின்ன கடாத்தியந்தாபாவம் ஒன்றும். தந்துமுதலிய அநித்திய பதார்த்தங்களுக்கு அழிவுண்டாயகாலத்தும் தந்துத்தன்மைமுதலிய நித்திய பதார்த்தங்களினும் அவ் வத்தியந்தாபாவமே யிருக்கின்றது. ஆதலால், அத்தியந்தாபாவம் நித்தியமாம்.

பிரதியோகியின் பேதத்தால் அத்தியந்தாபாவத்திற்குப் பேதம் உண்டாகின்றது. எங்ஙனம்: கடாத்தியந்தாபாவத்தினும் படாத்தியந்தாபாவம் வேறும். பிரதியோகித்தன்மை யவச்சேதகசம்பந்தத்தின் பேதத்தால் பிரதியோகி பேதம் இல்லாமலும் அத்தியந்தாபாவத்திற்குப் பேதம் உளதாகின்றது.

சமவாய சம்பந்தாவச்சின்ன கந்தாத்தியந்தாபாவத்திற்கும் சையோகசம்பந்தாவச்சின்ன கந்தாத்தியந்தாபாவத்திற்கும் பிரதியோகி ஒரே கந்தமாம். ஆனல், பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்தம் இரண்டாயிருத்தலின் இரண்டு அபாவமாம். இரண்டிருக்க ஒன்றையே யங்கீகரிக்கின் பிருதிவியில் சமவாய சம்பந்தாவச்சின்ன கந்தாத்தியந்தாபாவம் இல்லாதிருத்தலான், சையோகசம்பந்தாவச்சின்ன கந்தாத்தியந்தாபாவமும் இராது. பிருதிவியில் சையோக சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவமும் இல்லையெனின், பிருதிவியில் சையோகமாகக் கந்தம் இல்லையென்னும் உணர்ச்சி யுண்டாகலாகாது. ஆதலால், பிருதிவியில் சையோக சம்பந்தாவச்சின்ன கந்தாத்தியந்தாபாவம் இருக்கின்றது. சமவாயசம்பந்தாவச்சின்ன கந்தாத்தியந்தாபாவம் இல்லை. ஆதலால், பிரதியோகி பேதத்தால் அத்தியந்தாபாவத்திற்குப் பேதம் உண்டாவதுபோலப் பிரதியோகித்தன்மை யவச்சேதகசம்பந்த பேதத்தாலும் அத்தியந்தாபாவத்திற்குப் பேத முண்டாகிறது.

சாமயிகாபாவத்திற்குப் பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்தத்தின் பேதமின்றியும் சமய பேதத்தாற் பேதம் உண்டாகின்றது. எங்ஙனம்: பூதலத்தில் கடத்தின் சையோகம்

எதுவரையில் உண்டாகவில்லையோ, அதுவரையில் கடத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன சாமயிகாபாவம் இருக்கின்றது.

பூதலத்தில் கடத்தின் சையோக முண்டாகுங்காலத்துக் கடத்தின் முதற் சாமயிகாபாவம் நாசமாய்விடுகின்றது. பூதலத்தில் கடத்தை யெடுத்துவிடின், அப்போது கடத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன வேறு சாமயிகாபாவம் உண்டாகிறது. அக் கடத்தையே மீண்டும் பூதலத்தில் வைத்தால் அப்போது இரண்டாவது சாமயிகாபாவம் நஷ்டமாய்விடுகின்றது. மீண்டும் அக் கடத்தை யெடுத்துவிடின், அப்போது அதே கடத்தின் மூன்ருவது சையோகசம்பந்தாவச்சின்ன சாமயிகாபாவ முண்டாகின்றது. இவ்வாற்ருன் பிரதியோகி பேதமில்லாமலும், பிரதியோகித்தன்மை யவச்சேதக சம்பந்த பேதமில்லாமலும் காலபேதத்தால் சாமயிகாபாவத்திற்குப் பேத முண்டாகின்றது. இச் சாமயிகாபாவ அத்தியந்தாபாவங்களின் வேறுபாடு வெளிப்படையாம். இவ்வாறு நியாய சம்பிரதாயத்தில் ஐவகை யபாவ முள.

71. நவீனதார்க்கிகர் சாமயிகாபாவ ஸ்தானத்தில் அநித்திய அத்தியந்தாபாவத்தை யங்கீகரித்தலும், அதிற் சங்கை சமாதானமும்

நவீன தார்க்கிகர் சாமயிகாபாவத்தை யங்கீகரிப்பதில்லை. பூதலமுதலியவற்றில் கடமுதலியவற்றின் சாமயிகாபாவம் யாண்டுச் சொல்லப்படுகின்றதோ, ஆண்டும் சகல கடங்களின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது.

சங்கை:—பூதல்முதலியவற்றில் கடமுதலியவற்றின் சையோகசம்பந்தத்தால் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவத்தை யங்கீகரித்தலில் தோஷம் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஜாதி குணமுதலியவற்றில் கடத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவம் நித்தியமாம். பூதல்முதலியவற்றில் அதே கடத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன அபாவம் அநித்தியமாம். அந்த நித்திய வநித்தியங்கள் ஒன்றற்கொன்று வேரும்; ஒன்றன்று.

ஜாதி குணமுதலியவற்றினும், பூதலமுதலியவற்றினும் ஸையோக சம்பந்தாவச்சின்ன கடாபாவத்தின் பேதம் அங்கீகரியாவிடின், நித்தியத்தன்மை அநித்தியத்தன்மை வடிவினவாகிய விரோதி தர்மங்கள் எவையோ, அவற்றிற்குக் கலப்புண்டாகுமென்னும் சங்கைக்குக் கங்கேசோபாத்தியாயர் முதலிய நவீனர் இவ்வாறு சமாதானம் செய்கின்றனர்:—பூதலமுதலியவற்றினும் கடத்தின் ஸையோகசம்பந்தாவச்சின்ன அபாவம் அநித்திய மன்று; நித்தியமாம். எப்போது பூதலத்திற் கடத்தின் ஸையோக முளதாகின்றதோ, அக்காலத்தினும் கடத்தின் ஸையோக சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவம் இருக்கின்றது; அதன் நாச முண்டாகிறதில்லை. ஆதலால், அத்தியந்தாபாவம் கேவலாந்துவயியாம். எதன் அபாவம் ஓரிடத்தும் இராமல், சகல பதார்த்தங்களினும் எப்போது மிருக்கின்றதோ, அது கேவலாந்நுவயி யெனப்படுகின்றது.

சங்கை:—ஸையோக சம்பந்தத்தால் கடமிருக்கச் ஸையோக சம்பந்தாவச்சின்ன கடாத்தியந்தாபாவத்தை யங்கீகரிக்கின், ஸையோகசம்பந்தத்தால் கடமுடைய பூதலத்தில் ஸையோகத்தாற் கடமில்லை யென்னு முணர்வு பிறத்தல்வேண்டும்.

சமாதானம்:—ஸையோக சம்பந்தத்தாற் கடமுடைய பூதலத்திலும் கடமின்றிய பூதலத்திற்போலக் கடத்தின் ஸையோக சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவம் இருக்கின்றது. என்றாலும், கடமின்றிய பூதலத்திலோ ஸையோகத்தாற் பூதலத்திற் கடமில்லை யென்னு முணர்வுண்டாகின்றது; கடமுடைய பூதலத்தில் முற்கூறிய வுணர்வுண்டாகிறதில்லை. ஏனெனின், முற்கூறிய வுணர்ச்சிக்கு விஷயம் கேவல கடத்தின் அத்தியந்தாபாவமன்று. ஆனால், பூதலசம்பந்தமுடைய கடத்தின் ஆதாரகாலத்தினும் அதிக்கிரமித்த காலமும் ஸையோகசம்பந்தாவச்சின்ன கடாத்தியந்தாபாவமுமாகிய இரண்டும் யாண்டிருக்கின்றனவோ, ஆண்டுச் ஸையோகத்தாற் கடமில்லையென்னு முணர்ச்சி யுண்டாகின்றது.

பூதலத்திற் ஸையோகசம்பந்தத்தாற் கடமிராத காலத்துப் பூதல சம்பந்தமுடைய கடாதாரகாலம் இல்லை. ஆனால், பூதல சம்பந்தமில்லாக்கடத்தின் அநாதார காலம் இருக்கின்றது. ஆதலால், பூதல சம்பந்தமுடைய கடத்தின் ஆதாரகாலத்தின்

வேறான காலம் இருக்கின்றது. அன்றியும், சையோகசம்பந்தாவச்சின்ன கடாத்தியந்தாபாவமு மிருக்கின்றது. அதனால், சையோகத்தாற் கட மிலதென்னும் உணர்வுண்டாகின்றது.

யாண்டுப் பூதலத்தில் சையோகசம்பந்தத்தால் கடமுளதோ, ஆண்டும் அத்தியந்தாபாவத்திற்கு நித்தியத்தன்மை யிருத்தலால் சையோக சம்பந்தாவச்சின்ன கட அத்தியந்தாபாவமோ விருக்கின்றது. ஆனால், பூதல சம்பந்தமுடைய கடமெதுவோ, அதன் ஆதாரகால மிருக்கின்றதாகலின் பூதலசம்பந்தமுடைய கடாதார காலத்தின் வேறாய கால மில்லை. ஆதலால், சையோக சம்பந்தத்தால் கடமிருக்கச் சையோகத்தாற் பூதலத்திற் கட மில்லையென்னு முணர்வுண்டாகிறதில்லை.

இவ்வாற்றான் அத்தியந்தாபாவமோ எல்லாவிடத்தினும் பிரதியோகி யிருக்கினும் இல்லாவிடினும் எப்போதும் இருக்கிறது. ஆனால், அபாவத்தின் பிரதியோகியாகிய கடாதிகளின் சம்பந்தமுடைய பூதலாதி அநுயோகி யெவையோ, அவற்றின் ஆதாரகாலம் பிரதியோகி யிருக்க வுளதாகின்றது. பிரதியோகி சம்பந்தமுடைய அநுயோகியின் ஆதாரகாலத்தின் வேறாய காலம் இருப்பதில்லை. ஆதலால், பிரதியோகி யில்லையென்னும் உணர்வு பிரதியோகி யிருக்க இருப்பதில்லை. பிரதியோகி யில்லாதிருக்கின் அப்போது பிரதியோகி சம்பந்தமுடைய அநுயோகியின் ஆதாரகாலத்தின் வேறாகிய காலமும் அத்தியந்தாபாவமும் இரண்டும் உள. அதனால் பூதலத்திற் சையோகத்தாற் கடம் இல்லை யென்னு உணர்வுண்டாகின்றது.

இவ்வாற்றான் யாண்டுப் பிராசீனர் சாமயிகாபாவம் அங்கீகரித் திருக்கின்றனரோ, ஆண்டும் முழுவதும் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. அத்தியந்தாபாவத்திற்கு அநித்தியத்தன்மை யுண்டாவ தில்லை. முற்கூறிய காலத்தின் அபாவத்தால் பிரதியோகி யிருக்கினும் அத்தியந்தாபாவத்தின் உணர்வு உண்டாகிறதில்லை.

72. நவீன தார்க்கிகரது முற்கூறிய மதத்தின் கண்டனம்

இது நவீன தார்க்கிகர் மதம். அது நலமுடைய தன்று. பிராசீனர் மதமே நலமுடையதாம். ஏனெனின், பிரதியோகி

யிருக்க அத்தியந்தாபாவம் அங்கிகரிக்கின் பிரதியோகிக்கும் அபாவத்திற்கும் ஒன்றற்கொன்று விரோத முண்டென்னும் கதைக்குக் கேடுண்டாதல் வேண்டும்.

நவீனர் இங்ஙனம் கூறுவர்:—விரோதம் இருவகையாம். ஒன்று உடனிருத்தலின்மை வடிவினது; மற்றொன்று உடன் ரேற்றுதலின்மை வடிவினது. ஒரு நிலைக்களத்து ஒரு காலத்தில் இராதவை எவையோ, அவற்றிற்கு உடனிருத்த லின்மை வடிவினதாகிய விரோதம் சொல்லப்படுகின்றது. அஃது ஆதபசீதங்களுக்குள்ள விரோதமாம். இவ்வித விரோதம் அபா வப் பிரதியோகிகட்கில்லை. ஏனெனின், பிரதியோகி யிருக்க அத்தியாந்தபாவ மிருக்கின்றது; ஆனல், அபாவப் பிரதியோகி கட்கு உடன் ரேற்றுதலின்மை வடிவினதாகிய விரோத முண்டு. ஒருகாலத்தில் ஒரு அதிகரணத்தில் எவற்றின் தோற்ற முண் டாகிறதில்லையோ, அவற்றிற்கு உடன்ரேற்றுத லின்மைவடி வினதாகிய விரோதம் சொல்லப்படுகின்றது. பிரதியோகியிருக் குங்கால் அத்தியந்தாபாவத்தின் தோற்ற முண்டாகிறதில்லை. ஆதலால், பிரதியோகி அபாவங்கட்கு உடன்ரேற்றுதலின் மை வடிவினதாகிய விரோத முளது; உடனிருத்தலின்மை வடி வினதாகிய விரோத மில்லை. இவ்வாற்றான் நவீனர்களது சமா தானம் உலகம் சாஸ்திரம் எல்லாவற்றிற்கும் விருத்தமாம். ஏனெனின், அபாவத்தின் அபாவம் பிரதியோகி யெனப்படு கின்றது.

யாண்டு அபாவம் இல்லையோ, ஆண்டு அபாவத்தின் அபாவ முண்டாகின்றது. எங்ஙனம்: கடமுடைய தேசத்தில் கடத்தின் அபாவ மில்லை; ஆனல், கடாபாவத்தின் அபாவம் இருக்கின்றது. அதுவே கடமாம்; கடாபாவத்திற்குப் பிரதியோகியுமாம். இவ் வாற்றான் அபாவத்தின் அபாவத்தினைச் சகல சாஸ்திரங்களி னும் பிரதியோகி யென்பர். நவீனர் கிரமப்படி அக் கூற்று அசங் கதமாகும். ஏனெனின், நவீன மதத்தில் கடமுடைய தேசத் தில் கடத்தின் அபாவமும் உளதாகலின் கடாபாவத்திற்கு அபாவங் கூறுதல் பொருந்தாது. சொல்லப்படுங் கிரமமாகக் கடத்திற்கு வேறாகவே கடாபாவாபாவ மிருக்கின்றது; கட ரூப மன்றெனினும், கடத்தோடு உடனுற்றித் திருப்பது கடா பாவாபாவமாம். இவ் வார்த்தை நிர்விவாதமாம்.

நவீனக்கிரமமாகக் கடமுடைய தேசத்தில் கடாபாவ மிருக்கின்றதாகலின், கடாபாவத்தின் அபாவ மில்லாதிருத்தலான் இரண்டற்கும் சமநியதத்துவம் சம்பவியாது. ஆதலால், நவீன மதம் சாஸ்திர விருத்தமாம். பிரதியோகியும் அபாவமும் சமானாதிகரணத்தி லிராவென்பது சர்வலோகப் பிரசித்தமாம். அவ்வுலகப் பிரசித்தமான அர்த்தத்திற்கு நவீன கற்பனையால் பாதமுண்டாகும். கடத்தின் அதிகரணத்தில் கடத்தின் அத்தியந்தாபாவத்தை யங்கீகரித்தல் பிரமாண சூனியமாம்; எப் பிரமாணத்தானும் பெறப்படுவதில்லை. யாண்டுக் கட மில்லையோ, ஆண்டுக் கட மில்லையென்னும் தோற்றமாக அத்தியந்தாபாவம் பெறப்படுவ தாகின்றது. கடமுடையதேசத்தில் கடமில்லையென்னும் தோற்ற முண்டாகிறதில்லை. வேறு எத்தோற்றமும் கடமுடைய தேசத்தில் அத்தியந்தாபாவத்திற்குச் சாதக மின்று. ஆதலால், பிரதியோகி தேசத்தில் அத்தியந்தாபாவத்தை யங்கீகரித்தல் பிரமாண சித்தமன்று. மாறான கடமுடைய தேசத்தில் கடாத்தியந்தாபாவம் இல்லையென்னும் தோற்ற முண்டாகின்றது. அத் தோற்றத்திற்கு விருத்தமான அத்தியந்தாபாவம் அங்கீகரிக்கப்படுகின்றது.

கடமுடைய தேசத்தில் அத்தியந்தாபாவத்தினை யங்கீகரிப்பவனுக்கு வட்டிக்காசைப்பட்டு முதலுமிழந்த நியாயங்கிடைக்கும். ஏனெனின், அத்தியந்தாபாவத்திற்குக் கேவலாந்நுவயியைச் சாதித்தற்பொருட்டும் நித்தியத்தன்மையைச் சாதித்தற்பொருட்டும் கடமுடைய தேசத்தில் கடாத்தியந்தாபாவம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், கடமுடைய தேசத்தில் கடாத்தியந்தாபாவம் அங்கீகரிக்கின் அவ் வத்தியந்தாபாவமே நிஷ்பலமும் நிஷ்பிரமாணமு மாய்விடும். அங்ஙனமே, சகல பதார்த்தங்களின் பயனும் விவகாரத்தாற் பெறப்படுகின்றது.

கட மில்லையென்னும் வியவகார சித்தியின்றி வேறு பயனே கடாத்தியந்தாபாவத்திற்கு நிகழாது. முற்கூறிய வியவகாரத்தின் சித்தியே பயனும். கடல் இல்லையென்னும் உணர்வானே கடாத்தியந்தாபாவம் பெறப்படுகின்றது; முற்கூறிய வுணர்ச்சியின்றிக் கடாத்தியந்தாபாவத்தின் இருப்பில் ஒரு பிரமாணமும் இல்லை. நவீன மதத்தில் கடாத்தியந்தாபாவத்

தால் கட மில்லையென்னும் வியவகாரத்தின் சித்தி யுண்டாகிற தில்லை. ஆனால், கட சம்பந்தமுடைய பூதலாதிகரணகாலத்தின் வேறாகிய காலத்தால் முற்கூறிய வியவகாரத்தின் சித்தி யுண்டாகின்றது. ஏனெனின், கட சம்பந்தமுடைய பூதலாதிகரண காலத்தின் வேறாகிய கால முளதாயின் அப்போது கட மில்லை யென்னும் பிரதீதி யுண்டாகின்றது. கட சம்பந்தமுடைய பூதலாதிகரண கால முளதாயின் அப்போது கடம் இல்லை யென்னும் பிரதீதி யுண்டாகிறதில்லை. இவ்வாற்றால் கட மில்லை யென்னும் உணர்வால் கட சம்பந்தமுடைய பூதலாதிகரணத்தின் வேறாகிய காலத்தின் சித்தி யுண்டாகின்றது; கடாத்தியந்தாபாவத்தின் சித்தி யுண்டாகிறதில்லை.

பிரதீதி (உணர்ச்சி) யினைப்போலக் கடம் இல்லையென்னும் வியவகாரத்தின் சித்தி நவீனமதத்தில் கடாத்தியந்தாபாவத்தால் உண்டாகிறதில்லை. ஆனால், முற்கூறிய காலத்தால் கடம் இல்லையென்னும் வியவகாரம் உண்டாகின்றது. ஆதலால், கடாத்தியந்தாபாவம் நவீனமதத்தில் பயனற்றதும் பிரமாணம் இன்றியதுமாம். சத்தப் பிரயோகத்தினை வியவகார மென்பர்; ஞானத்தினைப் பிரதீதி யென்பர். இவ்வாற்றான் நவீனமதத்தால் அத்தியந்தாபாவத்திற்கு நித்தியத்தன்மையை அங்கீகரித்தற் பொருட்டு, பிரதியோகியையுடைய தேசத்தில் அத்தியந்தாபாவத்தைக் கொள்ளின் அடியோடு அத்தியந்தாபாவத்திற்கு ஆனி யுண்டாம். ஆதலால், கடமுடைய தேசத்தில் கடாத்தியந்தாபாவம் சம்பவியாது.

யாண்டுப் பூதலத்தில் ஓர் காலத்தில் கட முளதாகின்றதோ, ஆண்டு அத்தியந்தாபாவ முளதாயின் அத்தியந்தாபாவ மென்னும் பெயரும் பொருளின்றிய தாகும். யாண்டு அத்தியந்தாபாவம் உளதாய் மூன்று காலத்திலும் பிரதியோகி யில்லதாகின்றதோ, அஃது அத்தியந்தாபாவமென்னும் பெயரின்படி பெறப்படுவதாகின்றது. ஆதலால், யாண்டு ஓர் காலத்துப் பிரதியோகியுளதாய் ஓர் காலத்து இலதாகின்றதோ ஆண்டு முக்காலத்திலும் பிரதியோகியின் அபாவ மின்று. ஆதலால், அத்தியந்தாபாவ மின்று. அதனின் வேறாய வோர் அபாவம் உளது; அதனைச் சாமயிகாபாவ மென்பர்.

73. நியாய சம்பிரதாயத்தில் கடப்பிரத்துவம்சத்தின் பிராகபாவம் கடமும் கடப்பிராகபாவமுமா மெனல்

இவ்வாற்முன் நான்கு வகையான சம்சர்க்காபாவமும் அந்நியோந்நியாபாவமும் சேர்ந்து ஐவகை யபாவமாம். அவ் வபாவம் ஒவ்வோன்றும் இரண்டு வகையாம்:—ஒன்று: பாவப் பிரதியோகியினை யுடையதாகின்றது; மற்றேன்று: அபாவப் பிரதியோகியினை யுடையதாகின்றது.

பாவத்தின் அபாவம் பாவப்பிரதியோகியினையுடைய அபாவ மெனப்படும். அபாவத்தின் அபாவம் அபாவப்பிரதியோகியினை யுடைய அபாவ மெனப்படும்.

எங்ஙனம்: பிராகபாவம் இருவகைத்தாம். கடமுதலியவற் றிற்குக் கபாலமுதலியவற்றிலுள்ள பிராகபாவம் பாவப்பிரதி யோகியினை யுடையதாம். பாவபதார்த்தத்திற்குப் பிராகபா வம் இருத்தல்போல அபாவத்திற்கும் பிராகபாவ முண்டு. ஆனல், ஸாதி (உற்பத்தியுடைய) பதார்த்தங்களுக்குப் பிராக பாவ முண்டு; அநாதிக்குப் பிராகபாவ மிருப்பதில்லை. அத்தி யந்தாபாவ அந்நியோந்நியாபாவப் பிராகபாவங்களோ அநாதி யாம். ஆனல், அவற்றிற்கோ பிராகபாவம் சம்பவிப்பதில்லை. பிரத்தொம்ஸாபாவமோ அநந்தமாம்; ஆனல் ஸாதியாம். ஆத லால், பிரத்தொம்ஸாபாவத்திற்குப் பிராகபாவம் உண்டு. அப் பிரத்தொம்ஸாபாவத்தின் பிராகபாவம் பிரதியோகிரூபமும், பிரதியோகியின் பிராகபாவரூபமுமாம்.

தண்டமுதலியவற்முன் கடத்திற்கு நாச முண்டாயின், அத னைக் கடத்தின் பிரத்தொம்ஸாபாவ மென்பர். அப் பிரத்துவம் ஸாபாவம் தண்டமுதலியவற்முற் முேன்றியதாம். தண்டமுதலி யவற்றின் வியாபாரத்திற்கு முன் கடகாலத்திலும் கடத்தின் பிராகபாவகாலத்திலும் இல்லாதிருத்தலான் ஸாதியாம். ஆத லால், தண்டமுதலியவற்றின் வியாபாரத்திற்கு முன் கடத் துவம்ஸத்தின் பிராகபாவம் இருக்கின்றது. அத் துவம்ஸத்தின் பிராகபாவம் கட காலத்திலும், கடத்தின் உற்பத்திக்கு முன் கடத்தின் பிராகபாவ காலத்திலும் உளது. ஆதலால், கடத் துவம்ஸத்தின் பிராகபாவம் கடகாலத்திலோ கடவடிவாகவும்

கடத்தின் உற்பத்திக்கு முன் கடத்தின் பிராகபாவ வடிவமாகவு மிருக்கின்றது. இவ்வாற்ருன் கடத்துவம்ஸத்தின் பிராகபாவம் கடத்தினும் கடத்தின் பிராகபாவத்தினும் அடங்கியுளது. அவற்றின் வேருகவில்லை யென்பது சாம்பிரதாயிக மதம்.

74. முற்கூறிய மதத்தின் கண்டனமும், கடப் பிரத்துவம்ஸத்தினது அபாவப் பிரதி யோகியினையுடைய பிராகபாவத்தின் சித்தியும்

ஆனால், இம் மதம் யுக்தி விரோதமுடையதாம். ஏனெனின், கடமோ பாவரூபமும் ஸாதியுமாம். கடத்தின் பிராகபாவம் அபாவரூபமும் அநாதியுமாம். ஒரே கடத்துவம்ஸப் பிராகபாவத்தினை ஒரு காலத்தில் பாவ வடிவினதாயும் ஒரு காலத்தில் அபாவ வடிவினதாயும் கூறுதல் விருத்தமாம்; அங்ஙனமே, ஓர் காலத்து ஸாதிவடிவினதாயும் ஓர் காலத்து அநாதிவடிவினதாயும் கூறுதலும் விருத்தமாம். அன்றியும், கடகாலத்திற் கபாலத்திற் சமவாயமாகக் கட மிருக்கின்றது. கடத்துவம்ஸமில்லையென் றிவ்வாறு விதிரூபமாகவும் நிஷேதரூபமாகவும் இரண்டுணர்ச்சிகள் விலக்ஷணமாக வுண்டாகின்றன. அவற்றின் விஷயி ஒன்றற்கொன்று விலக்ஷணமான இரண்டு பதார்த்தங்களா யங்கீரித்தல் வேண்டும். அங்ஙனமே, கடத்தின் உற்பத்திக்குமுன்னும் கபாலத்திற் கடமில்லை, கடத்துவம்ஸ மில்லையென் றிவ்வாறு இரண்டுணர்ச்சிக ளுண்டாகின்றன. அவ் விரண்டுணர்ச்சிகளும் நிஷேதமுகத்தன வாயினும் விலக்ஷணமாம். ஏனெனின், முதலுணர்ச்சியிலோ இல்லையென்று கூறுதலானுண்டாகும் அபாவம் எதுவோ, அதன் பிரதியோகியாகிய கடத்தின் வுணர்வுண்டாகின்றது. இரண்டாவது உணர்ச்சியில் இல்லையென்று கூறுதலாற் ருேற்றிய அபாவத்திற்குக் கடப்பிரத்துவம்ஸமாகிய பிரதியோகி யுணர்ச்சி யுண்டாகின்றது. ஆதலால், பிரதியோகியின் பேத மிருக்குங்கால் கடப்பிராகபாவத்திற்கும், கடப் பிரத்துவம்ஸப் பிராகபாவத்திற்கும் அபேதம் சம்பவியாது. ஆனால், கடத்திற்கும் அதன் பிராகபாவத்திற்கும் கடப்பிரத்துவம்ஸத்தின் பிராகபாவம் வேறென மதிக்கத்தக்கதாம்.

அநுபவத்தாற் பெறப்பட்ட பொருட்கு இலாகவ பலத்தால் லோபம் சம்பவியாது. ஆதலால், சாம்பிரதாயிகர் கிரம

மாகக் கடப்பிரத்துவம்ஸ பிராகபாவத்திற்குக் கடத்திலும் அதன் பிராகபாவத்திலும் அடக்கம் அங்கீகரித்தல், இலாகவ மாயினும் நலமுடைய தன்று. இவ்வாற்ருற் பிரத்துவம்ஸா பாவத்தின் பிராபாவம் அபாவப் பிரதியோகியினை யுடைய பிராகபாவமாகிய அபாவமாம்.

75. சாமயிகாபாவத்தின் பிராகபாவம் அபாவப் பிரதியோகியினை யுடையதாதல்

அங்ஙனமே, சாமயிகாபாவமும் ஸாதியாகின்றது. அதன் பிராகபாவமும் அபாவப் பிரதியோகியினையுடைய பிராகபாவ மாகின்றது.

76. பிராசீனர் பிராகபாவத்தினது பிரதுத்துவம்ஸம் பிரதியோகிப் பிரதியோகியிலும் பிரதியோகிப் பிரதியோகியின் துவம்ஸத்திலும் அடங்குமென்றல் நவீனராற் கண்டிக்கப் படுதலும், அதன் அபாவப் பிரதி யோகித் தன்மையும்

பிரத்துவம்ஸாபாவமும் அத்தியந்தாபாவ அந்நியோந்நியாபாவங்களுக்கு இருப்பதில்லை. ஏனெனின், இரண்டு அபாவங்களும் அநாதியும் அநந்தமுமாம்; அங்ஙனமே, பிரத்துவம்ஸாபாவமும் அநந்தமாம். அதற்கும் பிரத்துவம்ஸம் சம்பவியாது. ஆனல், பிராகபாவ சாமயிகாபாவங்களுக்குப் பிரத்துவம்ஸ முண்டாகின்றது.

சாம்பிரதாயிகக் கிரமமாகப் பிராகபாவத் துவம்ஸம் பிரதியோகிப் பிரதியோகியிலும், பிரதியோகிப் பிரதியோகியின் துவம்சத்திலும் அடங்கும்; அவற்றின் வேருகாது. எங்ஙனம்: கடத்தின் பிராகபாவத்தினது துவம்ஸ முண்டாகின்றது. அது கடகாலத்திலும் கடத்தின் துவம்ஸகாலத்திலு முளது. கடகாலத்திலோ கடப்பிராகபாவத்தின் துவம்ஸம் பிரதியோகியின் பிரதியோகி சொரூபமா யிருக்கின்றது. ஏனெனின், கடப்பிராகபாவத்தினது துவம்ஸத்தின் பிரதியோகி கடப்பிராகபாவமாம். கடப்பிராகபாவத்தின் பிரதியோகிகடமாம். ஆதலால்,கடகாலத்தில் கடப்பிராகபாவத்தின் துவம்ஸம் பிரதியோகியின் பிரதியோகி சொரூபமாம். தண்டமுதலியவற்ருன் கடத்திற்கு நாச

முண்டாயின் அக்காலத்தும் கடப்பிராகபாவத்தின் துவம்ஸ மிருக்கின்றது; கட மில்லை. ஆதலால், அக்காலத்தில் கடப்பிராக பாவத்தின் துவம்ஸம் பிரதியோகிப் பிரதியோகியின் துவம்ஸ ரூபமாம். ஏனெனின், கடப்பிராகபாவத் துவம்ஸத்தின் பிரதி யோகியாகிய கடப்பிராகபாவ மெதுவோ, அதன் பிரதியோகி கடமாம். அக் கடத்தின் துவம்ஸமே கடப்பிராகபாவத்தின் துவம்ஸமாம். கடத்துவம்ஸத்துக்கு வேறாகக் கடப்பிராகபாவத் துவம்ஸ மில்லை. இவ்வாற்றான் பிராகபாவத்தின் துவம்ஸம் ஒரு காலத்தில் தனது பிரதியோகியின் பிரதியோகி வடிவமாம். ஒரு காலத்தில் தனது பிரதியோகியினது பிரதியோகியின் துவம்ஸ ரூபமாம். பிராகபாவத்துவம்ஸம் வேறன்று.

இச் சாம்பிரதாயிகக் கிரமமும் யுக்தி விருத்தமாம். ஏனெனின், கடமோ ஸாந்தமும் பாவரூபமுமாம். கடத்துவம்ஸம் அநந்தமும் அபாவரூபமுமாம். ஒரு கடப்பிராகபாவத் துவம் ஸத்திற்கே ஸாந்த அநந்தங்களோடு அபேதங் கூறுதலும், அங்ஙனமே பாவாபாவங்களோடு அபேதங் கூறுதலும் விருத்த மாம்.

கட உற்பத்தி யுண்டாயின் அப்போது 'கட முண்டாயிற்று' 'கடப்பிராகபாவ மழிந்தது' என்றிவ்வாறு இரண்டு விலக்ஷண மான தோற்ற முண்டாகின்றன. அவற்றுள் 'கட முண்டாயிற்று' என்னும் தோற்றத்திற்கு விஷயம் உற்பத்தியாகிய கடமாம். 'கடப்பிராகபாவம் நஷ்டமாயிற்'றென்னும் உணர்ச்சிக்கு விஷ யம் கடப்பிராகபாவத்தின் துவம்ஸமாம். அவற்றிற்கு அபேதம் (ஒற்றுமை) கூறுதல் சம்பவியாது.

அங்ஙனமே தண்டமுதலியவற்றால் கடத்தின் துவம்ஸ முண்டாகவே, 'இப்பொழுது கடத்துவம்ஸ முண்டாயிற்று' 'கடப்பிராகபாவத்துவம்ஸம் முன் கடோற்பத்தி காலத்தி லுண் டாயிற்று' என்னு முணர்ச்சி யுண்டாகின்றது. ஆண்டு வர்த்த மான காலத்தில் கடத்துவம்ஸத்தின் உற்பத்தியும், அதீத காலத்தில் கடப்பிராகபாவத் துவம்ஸத்தின் உற்பத்தியும் சித்த மாகின்றன. வர்த்தமான காலத்தில் உற்பத்தி யுடையதனோடு அதீதகாலத்து உற்பத்திக்கு அபேதம் சம்பவியாது. ஆதலால், கடப்பிராகபாவத்தின் துவம்ஸம் கடத்தினும் கடத்துவம்ஸத்தி னும் வேறாம்.

வேதாந்த பரிபாஷைமுதலிய அத்வைத நூல்களினும் துவம்ஸப் பிராகபாவமும் பிராகபாவத்தின் துவம்ஸமும் வேறாக எழுதப்படவில்லை. ஆனால், முற்கூறிய நியாய சம்பிரதாயத்தின்படி அந்தர்ப்பாவமே (அடக்கமே) எழுதப்பட்டிருக்கின்றது. என்றாலும், சுருதி சூத்திர பாஷியங்களோ இதனை நிரூபித்தலில் உதாசீனமா யிருக்கின்றன. ஆதலால், எவ்வகைப் பொருள் யுக்தி அநுபவாநுசார மாகின்றதோ, அதனை யங்கீகரித்தல் வேண்டும். யுக்தி யநுபவ விருத்தமாக இக்காலத்தைய நூலாசிரியர் எழுதுவன பிரமாண மல்ல. ஆகலின், முற்கூறிய பொருள் பிரமாண விருத்தமன்று. மாறாக வேறென் றங்கீகரித்தலே யுக்தி யநுபவங்களை யநுசரித்ததாம். இவ்வாற்றான் பிராகபாவத்தின் துவம்ஸம் அபாவப் பிரதியோகியினையுடைய பிரத்துவம்ஸாபாவமாம்.

77. கடாந்நியோந்நியாபாவத்தினது அத்தியந்தாபாவத்தின் கடத்தன்மை வடிவாந் தன்மையும், அதில் தோஷமும்

சாமயிகாபாவம் கேவலம் திரவியத்திற்கேயாமென்னும் இது முன் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், அபாவப்பிரதியோகியினையுடைய சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம். அபாவப் பிரதியோகியினையுடைய அத்தியந்தாபாவத்திற்கோ அநேக உதாரணங்கள் உள. கபாலத்தில் கடத்தின் பிராகபாவமும் பிரத்தொம்சாபாவமு முள; தந்துவி லில்லை. ஆதலால், தந்துவில் கடப்பிராகபாவத்தின் அத்தியந்தாபாவமும், கடப்பிரத்தோம்சாபாவத்தின் அத்தியந்தாபாவமு முள. அங்ஙனமே கபாலத்தில் கடத்தின் சாமயிகாபாவமும் கடத்தின் அத்தியந்தாபாவமு மில்லை. ஆதலால், கபாலத்தில் கடத்தின் சாமயிகாபாவத்தின் அத்தியந்தாபாவமும், கடாத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவமு முள. அங்ஙனமே, கபாலத்தில் கபாலத்தின் அந்நியோந்நியாபாவ மில்லை. ஆண்டுக் கபாலாந்நியோந்நியாபாவத்தின் அத்தியந்தாபாவம் இருக்கின்றது. அங்ஙனமே கடத்தில் கடத்தின் அந்நியோந்நியாபாவம் இல்லை. ஆண்டுக் கடாந்நியோந்நியாபாவத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. ஆனால், அந்நியோந்நியாபாவத்தின் அத்தியந்தாபாவம் வேறில்லை; அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மையை யவச்சேதகஞ் செய்யும் தர்மரூபமாம்.

எங்ஙனம்: கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித் தன்மையை யவச்சேதகம் செய்யும் தர்மம் கடத்தன்மையாம். அது கேவலம் கடத்தின்கண்ணே யிருக்கும். கடாந்நியோந்நியா பாவத்தின் அத்தியந்தாபாவமும் கடத்தின்கண்ணே யிருக்கும். கடத்திற்கு வேறாய சகல பதார்த்தங்களினும் கடாந்நியோந் நியாபாவ மிருக்கின்றது. ஆதலால், கடாந்நியோந்நியாபாவத் தின் அத்தியந்தாபாவம் கடத்தின் வேறாய பதார்த்தங்களி லிராது. இவ்வாற்றாற் கடத்தன்மையின் சமநியதம் கடாந்நி யோந்நியாபாவத்தின் அத்தியந்தாபாவமா யிருத்தலின் கடத் தன்மை வடிவமே கடாந்நியோந்நியாபாவத்தின் அத்தியந்தா பாவமாம்.

இத்தன்மைய பிராசீனர் எழுத்தும் விசுவசிக்கத் தக்க தன்று. ஏனெனின், கடத்திற் சமவாயமாகக் கடத்துவ மிருக் கின்றதென்னு முணர்ச்சிக்குவிஷயம் கடத்தன்மையாம். "கடத் திற் கடாந்நியோந்நியாபாவ மில்லை" என்னு முணர்ச்சிக்கு விடயமான கடாந்நியோந்நியாபாவத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. ஆதலால், அந்நியோந்நியாபாவத்தின் அத்தி யந்தாபாவம் அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன் மையை யவச்சேதகம் செய்யும் தர்மரூபமன்று. அதனின் வேறாகிய அபாவரூபமேயாம்.

78. அத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவம் முதலத்தியந்தாபாவத்தின் பிரதியோகி வடிவினதாதலைப் பிரதிபாதித்தலும், அதன் கண்டனமும்

அங்ஙனமே அத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவத் தினையும் முதல் அபாவத்தின் பிரதியோகி வடிவமாகப் பிரா சீனர் அங்கீகரிக்கின்றனர். அதன் கண்டனமோ நவீன நியாய நூல்களில் ஸ்பஷ்டமாம். அங்ஙனமன்றே, யாண்டுக் கடம் என்றும் இருப்பதில்லையோ, ஆண்டுக் கடத்தின் அத்தியந்தா பாவம் இருக்கின்றது. யாண்டுக் கட முளதாகின்றதோ, ஆண்டுக் கடாத்தியந்தாபாவம் இருப்பதில்லை. ஆதலால், அதன் (கடாத்தியந்தாபாவத்தின்) அத்தியந்தாபாவம் இருக்கின்றது. இவ்வாற்றான் கடாத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவம்

முதல் அத்தியந்தாபாவத்தின் பிரதியோகியாகிய கடமேது வோ, அதனேடு ஒருங்கு நிற்பதாயிருத்தலின் கடசொரூப மாம்; அதனின் வேறன்று. கடாத்தியந்தாபாவத்தின் அத்தி யந்தாபாவத்திற்குக் கடரூபம் அங்கீகரியாது, வேறெனக் கொள்ளின் அத்தியந்தாபாவங்களுக்கு அநவஸ்தை யுண்டாகும்.

எங்ஙனம் கடாத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவம் வேருே, அங்ஙனமே இரண்டாவது அத்தியந்தாபாவத்திற்கு மூன்ருவது அத்தியந்தாபாவமும், மூன்ருவதற்கு நான்காவ தும், நான்காவதற்கு ஐந்தாவதும் வேருும். இவ்வாற்ருன் அத் தியந்தாபாவங்களுக்கு ஓரிடத்தும் முடிவுண்டாகாமல் இங் ஙனம் அநந்ததாரை யுண்டாகும்.

இரண்டாவது அத்தியந்தாபாவத்தினை முதல் அத்தியந் தாபாவத்தின் பிரதியோகி சொரூபமாகக் கொள்ளின், அப் போது அநவஸ்தையாகிய தோஷம் இல்லை. ஏனெனின், கடா த்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவம் கடரூபமெனக் கொ ள்ளின் இரண்டாவது அத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவ மும் கடாத்தியந்தாபாவமேயாம். ஏனெனின், இரண்டாவது அத்தியந்தாபாவம் கடரூபமாம். ஆதலால், அதன் அத்தியந் தாபாவம் கடத்தின் அத்தியந்தாபாவமேயாம். அங்ஙனமே மூன்ருவது அத்தியந்தாபாவத்தினது நான்காவது அத்தியந்தா பாவம் மீண்டும் கடரூபமாம். நான்காவது அத்தியந்தாபாவத்தி னது ஐந்தாவது அத்தியந்தாபாவம் கடாத்தியந்தாபாவரூப மாம். இவ்வாற்ருற் பிரதியோகியிலும் ஒரு அத்தியந்தாபாவத்தி லும் எல்லா அத்தியந்தாபாவங்களு மடங்கும். அநவஸ்தை யாகிய தோஷ மில்லை. ஆதலால், அத்தியந்தாபாவத்தின் அத்தி யந்தாபாவத்தினை முதல் அத்தியந்தாபாவத்தின் பிரதியோகி சொரூபமாகப் பிராசீனர் அங்கீகரிக்கின்றனர்.

ஆண்டு நவீன கிரந்தகாரர் இத் தோஷத்தினை எழுதியிருக் கின்றனர்:—யாண்டுப் பூதலத்திற் கட முளதாகின்றதோ, ஆண் டுப் 'பூதலத்திற் கட முளது, பூதலத்திற் கடாத்தியந்தாபாவ மில்லை' என் றிவ்வாறு விலக்ஷண வுணர்ச்சி யுண்டாகின்றது. விதிமுக வுணர்ச்சிக்கும் நிஷேதமுக வுணர்ச்சிக்கும் ஒரே விஷ யம் சம்பவியாது. ஆதலால், விதிமுக வுணர்ச்சிக்கு விஷயம்

கடமும், நிஷேதமுக வுணர்ச்சிக்கு விடயம் கடாத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவமுமாம். அது கடரூப மன்று; அபாவரூபமாம். ஆதலால், கடத்தின் வேறும்.

இரண்டாவது அத்தியந்தாபாவத்தினை வேறெனக் கொள்ளின் அநவஸ்தாதோஷம் உண்டாமெனக் கூறியதற்குச் சமாதானம் வருமாறு:—இரண்டாவது அத்தியந்தாபாவம் முதலத்தியந்தாபாவத்தின் பிரதியோகியோடு ஒருங்கு நிற்பதாம். மூன்றுவது அபாவம் முதல் அபாவத்தோடு ஒருங்கு நிற்பதாம். பிரதியோகியின் சமான தேசத்திலுள்ள இரண்டாவது அபாவமெதுவோ, அதனோடு ஒருங்கு நிற்பது நான்காவது அபாவமாம். முதலாவது மூன்றுவது அபாவங்களுடன் ஒருங்கு நிற்பது ஐந்தாவது அபாவமாம்.

இவ்வாற்ருன் இரட்டைச் சங்கையின் அபாவ முழுவதும் இரண்டாவது அபாவத்தோடு ஒருங்கு நிற்பனவாம். விஷம சங்கையின் அபாவ முழுவதும் முதல் அபாவத்தோடு ஒருங்கு நிற்பனவாம். ஆண்டு இரண்டாவது அபாவம் முதல் அபாவத்தின் பிரதியோகியோடு ஒருங்கு நிற்பதாயினும், பாவ அபாவங்களுக்கு ஐக்கியம் பொருந்தாது. ஆதலால், கடத்தோடு ஒருங்கு நிற்பதாயினும் கடாத்தியந்தாபாவாபாவம் கடத்தின் வேறும்.

முதல் அபாவத்தோடு ஒருங்கு நிற்கும் மூன்றுவது அபாவமோ, முதல் அபாவ சொரூபமாம்; வேறன்று. ஏனெனின், "கடம் இல்லை" என்னும் நிஷேதமுக வுணர்ச்சிக்கு விஷயம் முதல் அபாவமாம். "கடாத்தியந்தாபாவாபாவ மில்லை" என்னும் உணர்ச்சியின் விஷயமே மூன்றுவது அபாவமாம். ஆதலால், மூன்றுவது அபாவம் முதல் அபாவ வடிவினதாம். அங்ஙனமே, கடாத்தியந்தாபாவ மில்லையென்னும் நிஷேதமுக வுணர்ச்சிக்கு விஷயம் இரண்டாவது அபாவமாம். "மூன்றுவது அபாவ மில்லை" என்றிவ்வாறு நான்காவது அபாவமும் நிஷேதமுக வுணர்ச்சிக்கு விஷயமாம். ஆதலால், இரண்டாவது அபாவத்தோடு ஒருங்கு நிற்கும் நான்காவது அபாவம் இரண்டாவது அபாவரூபமாம்; ஆனால், கடத்தோடு ஒருங்கு நிற்பதாயினும் இரண்டாவது அபாவாபாவரூபம் கடத்தின் வேறுய அபாவரூபமாம். இவ்வாற்ருன் அபாவமாலை முழுவதும் முதல்

அபாவ இரண்டாவது அபாவங்களுள் அடங்கும். அநவஸ்தைத் தோஷ மின்று.

பிராசீனர் கிரமப்படி பிரதியோகியிலும் அபாவத்திலும் எல்லா அபாவங்களும் அடங்குதலால் ஒரு அபாவமே அங்கீகரிக்க வேண்டியதாகின்றது. நவீனர் கிரமப்படி இரண்டபாவங்கள் அங்கீகரிக்கவேண்டியன வாகின்றன. அதனால் நவீன மதத்தில் கௌரவ முளது. என்றாலும், பாவாபாவங்களுக்கு ஐக்கியம் பொருந்தாதாகலின் பிராசீனமதம் பிரமாண விருத்தமாம். நவீனமதம் அநுபவாநுசாரியா யிருக்கின்றது. ஆதலால், பிரமாணத்தாற் பெறப்படுவது கௌரவ தோஷத்தை யுண்டு பண்ணுவதன்று. இவ்வாற்றான் கடாத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவமும் அபாவப்பிரதியோகியினையுடைய அபாவமாம். இவ்வாறு அபாவப் பிரதியோகியினையுடைய சம்சர்க்காபாவத்தின் உதாரணம் சொல்லப்பட்டது.

79. அபாவப் பிரதியோகியினையுடைய அந்நியோந்நியாபாவத்தின் உதாரணமும், முற்கூறிய அர்த்தத்தின் அநுவாதமும்

அபாவப் பிரதியோகியினையுடைய அந்நியோந்நியாபாவத்தின் உதாரணம் மிக வெளிப்படையாம். எங்ஙனம்: பிராகபாவத்தின் அந்நியோந்நியாபாவம் பிராகபாவத்தி லின்று; சகல பதார்த்தங்களிலு முண்டு. ஏனெனின், பேதத்தினை அந்நியோந்நியாபாவ மென்பர். சொரூபத்திற் பேத மிராது. சொரூபத்தின் வேறாய எல்லாவற்றிலும் எல்லாவற்றின் பேதமு முளது. ஆதலால், பிராகபாவத்திற்கு வேறாய பதார்த்தங்களில் பிராகபாவத்தின் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது. பிரத்துவம்ஸாபாவத்தின் வேறாயவற்றில் பிரத்துவம்ஸாபாவத்தின் அந்நியோந்நியாபாவம் உளது. அத்தியந்தாபாவத்தின் வேறாயவற்றில் அத்தியந்தாபாவத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. அந்நியோந்நியாபாவத்தின் வேறாயவற்றில் அந்நியோந்நியாபாவத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. அந்நியோந்நியாபாவத்தின் வேறாயவை நால்வகைச் சம்ஸர்க்காபாவமும் சகல பாவபதார்த்தங்களுமாம். ஏனெனின், சம்ஸர்க்காபாவமும் பாவ பதார்த்தமும் அந்நியோந்நியாபாவ ரூபமன்று. ஆதலால், அந்நியோந்நியாபாவத்தின் வேறாம். எது எதனின் வேறாகின்ற

தோ, அதன்கண் அதன் அந்நியோந்நியாபாவம் உளதாகின்றது. ஆதலால், சம்சர்க்காபாவத்திலும் சகலபாவபதார்த்தங்களிலும் அந்நியோந்நியாபாவத்தின் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது.

இவ்வாற்றான் ஐவகை அபாவங்களுள் சாமயிகாபாவமோ கேவலம் திரவியத்திற்கே யுண்டாம். ஆதலால் அது அபாவப் பிரதியோகியினை யுடையதன்று. நான்கபாவங்களும் அபாவப் பிரதியோகியை யுடையனவா மென்பதற்கு உதாரணம் சொல்லப்பட்டது. அபாவப் பிரதியோகியினையுடைய அபாவத்தினைச் சில விடங்களில் பிராசீனர் பாவரூபமெனக் கொண்டிருக்கின்றனர். எங்ஙனம்: கடப்பிராகபாவத்தின் துவம்ஸத்தினைக் கடரூபமெனக் கொள்ளுகின்றனர். கடத்துவம்ஸத்தின் பிராகபாவத்தினைக் கடமெனக் கொள்ளுகின்றனர். கடாந்நியோந்நியாபாவத்தின் அத்தியந்தாபாவத்தினைக் கடத்துவமெனக் கொள்ளுகின்றனர். கடாத்தியந்தாபாவத்தின் அத்தியந்தாபாவத்தினைக் கடமெனக் கொள்ளுகின்றனர். அதன் கண்டனம் செய்யப்பட்டது. ஆகவின், அபாவம் அபாவப் பிரதியோகியினையுடையதுமாம். பாவப்பிரதியோகியினையுடைய அபாவமோ மிகப் பிரசித்தமாம்.

இவ்வாற்றான் அபாவத்தின் நிரூபணம் நியாயசாஸ்திரத்தின்படி செய்யப்பட்டது. சில விடங்களில் பிராசீன மதத்திலாதல் நவீன மதத்திலாதல் தோஷங்கூறிய தெதுவோ, அதுவும் நியாய மரியாதையைக் கொண்டே தோஷங் கூறியதாம்.

80. முற்கூறிய நியாயமதத்தில் வேதாந்தத்திற்கு விருத்தமான ஆசங்கையைக் காட்டலும், அநாதிப்பிராகபாவத்தின் கண்டனமும்

அன்றியும், முற்கூறியவண்ணம் அபாவத்தை நிரூபித்தல் வேதாந்த சாஸ்திரத்தினும் விருத்தமன்று. எவ்வளவு அம்சம் வேதாந்த விருத்தமோ, அதனைக் காட்டுவாம். கபாலத்திலுள்ள கடத்தின் பிராகபாவத்தினை அநாதி யென்பர். அது பிரமாண விருத்தமாம். ஆதலால், வேதாந்தாநுசார முடையதன்று; எனெனின், கடப்பிராகபாவத்தின் அதிகரணமான கபாலமும் ஸாதி; பிரதியோகியாகிய கடமும் ஸாதி. அங்ஙனமாகவே பிராகபாவத்திற்கு அநாதித்தன்மை எங்ஙன முண்டாகும்? மாயையில் சகல

காரியங்களின் பிராகபாவத்திற்கும் அநாதித்தன்மை கூறிற் பொருந்தும். ஏனெனின், மாயை அநாதியாம்; ஆனால், மாயையில் காரியத்தின் பிராகபாவத்தினை அங்கீகரித்தல் வியர்த்தமாம். சித்தாந்தத்தில் விரும்பப்படுவதுமன்று; ஏனெனின், கடத்தி னுற்பத்தி கபாலத்தி லுண்டாகின்றது; பிறவற்றி லுண்டாகிறதில்லை. அங்ஙனமே படத்தின் உற்பத்தி தந்துவி லுண்டாகின்றது; கபாலத்தில் உண்டாகிறதில்லை. ஆதலால், கடத்தின் பிராகபாவம் கபாலத்தி லுளது; தந்துவி லின்று. படத்தின் பிராகபாவம் தந்திவி லுளது; கபாலத்தி லின்று. எதற்கு எதன்கண் பிராகபாவமுள்ளதோ, அதற்கு அதன்கண் உற்பத்தியுளதாம்; பிறவற்றி லுளதாத லில்லை. எல்லாவற்றினின்றும் எல்லாக் காரியங்களின் உற்பத்தியு முண்டாகலாகா தென்பதற்காகவே பிராகபாவத்தின் அங்கீகாரமாம்.

அன்றியும், நையாயிகர் பிராகபாவத்தின் முக்கியப் பிரயோஜனத்தை இங்ஙனம் கூறுகின்றனர்:—கபாலம் தந்து முதலியவற்றிற்குக் கடம் படமுதலிய பரிணாமமோ இல்லை. ஆனால், கபாலத்தில் கடத்தின் ஆரம்பம் உண்டாகின்றது. தந்துவில் படத்தின் ஆரம்ப முண்டாகின்றது. கடம் பட முதலியன வுண்டாயின், அப்போது முன்போலவே கபால தந்துக்களு மிருக்கின்றன. பரிணாமவாதமாயின் கடாகாரத்தை யடைந்தபின் சொரூபமாகக் கபால மிருப்பதில்லை. அங்ஙனமே படாகாரத்தை யடைந்தபின்னர்த் தந்துவு மிருப்பதில்லை. அது பரிணாமவாதமோ வன்று; ஆரம்பவாதமாம். கபால மிருந்தபடியே யிருந்துகொண்டு, தனது கடத்தின் உற்பத்தியைச் செய்கின்றது. எப்போது கடம் உற்பத்தியாய்விடுகின்றதோ, அப்போதும் கடத்தின் சாமக்கிரி முன்போலவே பொருந்திநிற்கும். பரிணாமவாதத்திலோ காரியத்தி னுற்பத்தி யுண்டாகவே உபாதானகாரணம் இருப்பதில்லை; ஏனெனின், பரிணாமவாதத்தில் உபாதான காரணமே காரியரூபத்தை அடைகின்றது. ஆதலால், கடவடிவத்தை யடைந்த கபாலம் கடத்தின் சாமக்கிரி யன்று. ஆரம்பவாதத்தில் உபாதானகாரணம் தனது சொரூபத்தை விடுவதில்லை. உபாதானத்தின் வேறான காரியத்தின் உற்பத்தி யுண்டாகின்றது. தனது சொரூபமாக உபாதான காரணம் பொருந்திநிற்கும். ஆதலால், கடத்தின் உற்பத்தி உண்டாகியும் உள்ள

படியே சாமக்கிரி யிருத்தலால் மீண்டும் கடத்தி னுற்பத்தி யுண்டாதல்வேண்டும். ஒரு கடமுண்டாய் வேறு கடமுண்டாதவில் முதற்கடம் பிரதிபந்தகமாம்; கடத்தான் நிரோதிக்கப் பட்ட கபாலத்தில் வேறு கடத்தி னுற்பத்தி யுண்டாகிறதில்லை. அங்ஙனமாயினும் முத லுண்டாகிய கடத்திற்கு மீண்டும் உற்பத்தி யுண்டாதல் வேண்டும். முத லுற்பத்திக்கு மீண்டும் உற்பத்தி யங்கீகரிக்கின், எங்ஙனம் உற்பத்திகாலத்தில் "கடம் உற்பத்தியாகின்றது" என்னும் வியவகார முண்டாகின்றதோ, அங்ஙனமே உற்பத்திகாலத்திற்குப் பிந்தியகாலத்திலும் "கடம் உற்பத்தியாகின்றது" என்னும் வியவகாரம் உண்டாதல்வேண்டும். சித்தித்த கடத்தின் ஆதாரகாலம் எதுவோ, அது கடத்தின் உற்பத்தி காலத்திற்குப் பிந்தியகாலமாம். சித்தித்த கடத்தின் ஆதாரகாலத்தில் "உண்டாயிற்று கடம்" என்னும் வியவகார முண்டாகின்றது. 'உண்டாகின்றது கடம்' என்னும் வியவகாரம் உற்பத்திக்ஷணம் ஒன்றில் உண்டாகின்றது. கடத்தின் ஆதாரமாகிய இரண்டாவதுமுதலிய க்ஷணங்களில் 'உண்டாகின்றது' என்னும் வியவகார முண்டாகிறதில்லை. ஏனெனின், வர்த்தமான வுற்பத்தியுடைய கட முளதென்னும் பொருள் 'கடம் உற்பத்தி யாகின்றது' என்று கூறுதலால் தோற்றுகின்றது. 'உற்பத்தியாயிற்று கடம்' என்று கூறுதலால் சென்ற உற்பத்தியினையுடைய கடமுளதென்னும் பொருள் தோற்றுகின்றது. உற்பத்தியானதற்கு உற்பத்தி யங்கீகரிக்கின் கடம் சித்தித்த தசையிலும் யாதேனுமோர் உற்பத்தி நிகழ்வதாயிருக்கும். அதனு லுற்பத்தியான கடத்திலும் 'உற்பத்தியாகின்றது கடம்' என்னும் வியவகார முண்டாதல் வேண்டும். ஆதலா லுற்பத்தியான கடத்திற்கு மீண்டும் உற்பத்தி காணப்படாமையான் கடத்தின் உற்பத்தி சாமக்கிரி இருப்பதில்லையென்று அங்கீகரித்தல் வேண்டும். ஆண்டு மற்றைச் சாமக்கிரிகளாகிய கபாலமுதலியனவோ விருக்கின்றன. அக் கடத்தின் பிராகபாவ மிருப்பதில்லை. கடப்பிராகபாவத்தின் துவம்ஸம் கட உற்பத்தி க்ஷணத்தில் உண்டாகின்றது. அக் கடத்தின் பிராகபாவம் கடத்தின் உற்பத்தியிற் காரணமாம். அதன் அபாவத்தா னுண்டாகிய கடத்திற்கு மீண்டும் உற்பத்தி யுண்டாகிறதில்லை. இது பிராகபாவத்தின் முக்கியப் பிரயோஜனமாம்.

மாயையில் அந்தக் கடமுதலியவற்றினது பிராகபாவத்தின் முதற்பிரயோஜனமோ சம்பவியாது. ஏனெனின், கடமுதலியவற்றின் சாக்ஷாத் உபாதான காரணம் மாயையன்று; கபால முதலியனவாம். மாயை சர்வ பதார்த்தங்களுக்கும் சாக்ஷாத் உபாதானமெனல் சித்தாந்த பக்ஷத்தில் அங்கீகரிக்கப்பட்டுளதாயினும், காரியத்தின் உற்பத்தியில் வேறு காரணத்தின் அபேக்ஷையைச் செய்கிறதில்லை. அற்புதசக்தி மாயையில் இருக்கின்றது. ஆதலால், பிராகபாவமுதலிய வடிவினவாகிய அந்நிய காரணத்தின் அபேக்ஷையில்லை. ஆதலால், மாயையின் கண் எதன் பிராகபாவமு மில்லை.

கபாலத்திற் கடத்தி னுற்பத்தி யுண்டாகின்றது; படத்தி னுற்பத்தி யுண்டாகிறதில்லை யென்பதிற் பிராகபாவம் ஏதுவெனக் கூறப்பட்டது. அதுவும் பொருந்தாது. கபாலத்திற் கடத்தின் காரணத்தன்மையுளது; படத்தின் காரணத்தன்மையில்லை. ஏனெனின், அந்நுவய வெதிரேகங்களாற் காரணத்தன்மையின் ஞான முண்டாகின்றது. கபாலத்தின் அந்நுவயம், அதாவது சத்தை யுளதாயின் கடத்தின் அந்நுவயம் உளதாகின்றது. கபாலத்தின் வெதிரேகத்தால், அதாவது அபாவத்தால் கடத்தின் வெதிரேகம் உளதாகின்றது. இவ்வாற்றாற் கபாலத்தின் அந்நுவய வெதிரேகங்களாற் கடத்தின் அந்நுவய வெதிரேகம் காணப்படுகின்றது. படத்தின் அந்நுவய வெதிரேகம் காணப்படுவதில்லை. ஆதலாற் கபாலத்திற் கடத்தின் காரணத்தன்மையுளது; படத்தினதின்று. இதனானே கபாலத்தினின்றும் கடமேயுண்டாகின்றது; படமுண்டாவதில்லை. படாதிகளைத் தவிர்த்தற் பொருட்டுக் கடத்தின் பிராகபாவம் கபாலத்திற் சம்பவிப்பதில்லை. கபாலத்தில் கடத்தின் உற்பத்திக்குப் பின் உற்பத்தி யுண்டாக வேண்டியதாமென எந்த முக்கியப் பிரயோஜனம் பிராகபாவத்திற்குச் சொல்லப்பட்டதோ, அதுவும் பரிணாமவாதத்தில் தோஷமன்று. ஏனெனின், சொரூபமாக நிலைத்துள்ள கபாலம் கடத்தின் உற்பத்தியைச் செய்கின்றது. காரிய வடிவத்தை யடைந்த கபாலத்தினின்றும் கடத்தின் உற்பத்தி யுண்டாகிறதில்லை. ஆதலால், பரிணாமவாதத்திற் பிராகபாவம் நிஷ்பலமாம்.

விசாரிக்குமிடத்து ஆரம்பவாதத்திலும் பிராகபாவம் பய னற்றதாம். ஏனெனின், கடத்தின் உற்பத்தி யுண்டாகிய பின் னும் உற்பத்தி யுண்டாதல் வேண்டும் என்று இவ்வாறு கூறின் அவனை இங்ஙனம் கேட்கவேண்டும்:—வேறு கடத்தின் உற் பத்தி யுண்டாதல் வேண்டுமா? அல்லது எந்தக் கடம் எக் கபா லத்தில் உண்டாயிருக்கின்றதோ, அதனுற்பத்தி யுண்டாதல் வேண்டுமா? வேறு கடத்தின் உற்பத்தி யுண்டாகவேண்டு மெனக் கூறின், அது சம்பவியாது. ஏனெனின், எந்தக் கபா லத்தால் எந்தக் கட முண்டாகின்றதோ அந்தக் கபாலத்தில் அக் கடத்தின் காரணத்தன்மையே யுளது. மற்றோர் கடத்தின் காரணத்தன்மை மற்றோர் கபாலத்தி லுளது. ஆதலால், வேறு கடத்தின துற்பத்தியி னடைவில்லை. கடம் முன் உண்டாயிருக் கின்றது; அதனுற்பத்தி யுண்டாகுமெனக் கூறின், அதுவும் பொருந்தாது. ஏனெனின், யாண்டுக் கபாலத்தினின்றும் கடத்தி னுற்பத்தி யுண்டாகின்றதோ, ஆண்டு முதல் உற்பத்தி மற் றைய வுற்பத்தியின் பிரதிபந்தகமாம். ஆதலால், மீண்டும் உற் பத்தியின் உணர்ச்சி யில்லை. பிராகபாவம் பயனற்றதாம்.

உற்பத்தியின் சொரூபத்தைச் சூக்ஷுமமாக விசாரிக்கின், மீண்டும் உற்பத்தி யுண்டாதல் வேண்டுமென்று கூறுதலே விரு த்தமாம். ஏனெனின், முதற் கணத்தோடுள்ள சம்பந்தத்தினை உற்பத்தி யென்பர். கடத்தின் முதற் கணத்தோடுள்ள சம்பந்தம் கடத்தின் உற்பத்தி யெனப்படுகின்றது. கடத்தின் அதிகர ணத்துள்ள கணத்தின் துவம்ஸத்திற்கு அதிகரணமாகாத கணம் எதுவோ, அது கடத்தின் முதற்கண மெனப்படுகின் றது. கடத்தின் அதிகரணத்துக் கணங்கள் அநந்தமாம். அவற் றுள் கடத்தின் அதிகரணத்து இரண்டாவது முதலிய கணங்க ளெவையோ, அவற்றில் கடாதிகரணத்து முதற்கணத்தின் துவம்ஸ மிருக்கின்றது. முதற்கணத்தில் கடாதிகரண க்ஷணத் தின் துவம்ஸமில்லை. ஆதலால், கடாதிகரணத்துக் கணத்தின் துவம்ஸத்திற்கு அதிகரணமாகாதது கடத்தின் முதற்கணமாம். அக் கணத்தோடுள்ள சம்பந்தமே கடத்தின் உற்பத்தி யெனப் படுகின்றது. இரண்டாவது முதலிய கணங்களில் முதற் கணத்தோடு சம்பந்தம் உண்டாகிறதில்லை. ஆதலால், முதற் கணத்திற்றானே 'உண்டாகின்றது' என்னும் வியவகார முண்

டாகின்றது. இரண்டாவது முதலியகணங்களி லுண்டாகிற தில்லை. இவ்வாற்றான் முதற்கணசம்பந்தமாகிய உற்பத்தி மீண்டும் உண்டாதல்வேண்டு மென்று கூறுதல் "என் தாய் மலடி" என்னும் வாக்கியத்திற்குச் சமமாம். ஏனெனின், கடத்தின் உற்பத்திக்குப் பிந்தியகணம் கடாதிகாரணத்தினது துவம்ஸத்தின் அதிகரணமேயாகும். ஆதலால், கடாதிகாரண க்ஷணத்தின் துவம்ஸத்திற்கு அதிகரணமாகாத க்ஷணம் மீண்டும் சம்பவியாது. இதனால் உற்பத்தியாகியதற்கு உற்பத்தியாதல் வேண்டுமென்று கூறுதல் விருத்தமாம். இவ்வாற்றாற் பிராகபாவம் நிஷ்பலமாம். "கபாலத்திற் சமவாயமாகக் கடம் இல்லை" என்னும் உணர்ச்சிக்கு விஷயமான சாமயிகாபாவமே சம்பவிக்கின்றது. "கபாலத்திற் கட முண்டாகும்" என்னும் உணர்ச்சிக்கு விஷயமும் கடத்தின் வருங்காலமாம். பிராகபாவம் பெறப்படாததாம்.

தமது சாஸ்திரத்தின் சம்ஸ்காரத்தான் நையாயிகர் பிராகபாவத்தினை அங்கீகரிக்கினும் ஸாதியாக (உற்பத்தியுடையதாக) அங்கீகரித்தல் வேண்டும்; அநாதியெனல் பொருந்தாது. ஏனெனின், அந்நியமதத்திலோ எல்லா அபாவங்களுக்கும் அதிகரண பேதத்தால் பேத முண்டாகின்றது. நையாயிகமதத்தில் அதிகரண பேதத்தால் அபாவங்களின் பேதமின்று. ஆனால், பிரதியோகியின் பேதத்தால் அபாவத்தின் பேதம் உண்டாகின்றது. ஆதலால், ஒரு பிரதியோகியினை யுடைய அபாவம் நாநா அதிகரணங்களில் ஒன்றே யாகின்றது. ஆனால், பிராகபாவமோ நையாயிக மதத்தினும் அதிகரண பேதத்தால் பின்னமேயாம். ஏனெனின், கடத்தின் பிராகபாவம் கடத்தின் உபாதான காரணமான கபாலத்தின்கண்ணே யுளது. அவற்றினும் எந்தக் கடம் எக் கபாலத்தின்கண் ணுளதோ, அக் கடத்தின் பிராகபாவம் அக் கபாலத்தின்கண் ணிருக்கின்றது. வேறு கடத்தின் பிராகபாவம் வேறு கபாலத்தின்க ணுளது. இவ்வாற்றான் ஒரு பிராகபாவம் ஒரே அதிகரணத்தில் இருக்கின்றது. அக் கபாலமுதலிய பிராகபாவத்தின் அதிகரணம் ஸாதியாம். அவற்றிலிருக்கும் பிராகபாவம் எவ்வாற்றானும் அநாதியாதல் பொருந்தாது. அநாதி அதிகரணத்திலும் ஸாதியிலும் ஒரு பிராகபாவம் இருப்பதாகுமாயின் அநாதியென்றலும் பொருந்

தும். ஆனால், அங்ஙனம் நாநா அதிகாணத்திற் பிராகபாவம் சம்பவியாது. ஆதலால், கபாலமாத்திரத் திருக்கும் கடப்பிரா கபாவத்திற்கு அநாதித்தன்மை சம்பவியாது.

கபாலத்தின் உற்பத்திக்குமுன் கபாலத்தின் அவயவங்க ளில் கடத்தின் பிராகபாவ மிருக்கும். அதற்குமுன் அவயவத் தின் அவயவங்களி லிருக்கும். இவ்வாற்றால் அநாதி பரமாணுவி லுள்ள கடத்தின் பிராகபாவம் அநாதியாமென் றிவ்வாறு கூறின், அது பொருந்தாது. ஏனெனின், தனது பிரதியோகி யின் உபாதான காரணத்தில் பிராகபாவ மிருக்கும்; பிறவற்றி லிராது. இது நையாயிகர்களது நியமமாம். கபாலத்தின் அவ யவம் கபாலத்தின் உபாதான காரணமாம். கடத்தின் உபாதான காரணமன்று. ஆதலாற் கபாலாவயவத்தில் கபாலத்தின் பிரா கபாவமே சம்பவிக்கிறது. கடத்தின் பிராகபாவம் கபாலத்தின் கண்ணே யுளது; கபாலாவயவத்திற் சம்பவியாது. இவ்வாற் றாற் பரமாணு கேவலம் துவியணுகத்திற்கு உபாதான காரண மாம். ஆதலால், துவியணுகத்தின் பிராகபாவமே பரமாணு வின்கண் ணுளதாம். துவியணுகத்திற்கு மேல் திரியணுக முதற் கடபரியந்தமான பிராகபாவங்கள் பரமாணுவிற் சம் பவியா. பரமாணுவில் துவியணுகத்தின் வேறாய பதார்த்தங்க ளின் பிராகபாவத்தையும் அங்கீகரிக்கின், பரமாணுவினின் றும் கடத்தின் உற்பத்தி யுண்டாதல் வேண்டும்.

அன்றியும், பரிணாமவாதத்திலோ காரியகாரணத்திற்கு அபேதம் உண்டு. ஆதலால், துவியணுகமுதல் அந்தியாவயவி யான கடபரியந்தம் காரணகாரியதாரைக்குப் பேத மில்லை. அம் மதத்திலோ பரமாணுவின்கண் உள்ள துவியணுகத்தின் பிரா கபாவமே கடபரியந்தமான காரியதாரையின் பிராகபாவமாம். ஆதலாற் பரமாணுவிற் கடமுதலியவற்றின் பிராகபாவத்தினைக் கூறுதல் பொருந்தும். அக் காரிய காரணத்தின் அபேதமோ ஆரம்பவாதத்தி லில்லை. காரிய காரணங்களுக்கு ஒன்றற் கொன்று அத்தியந்தபேத மிருக்கின்றது. ஆதலாற் கபாலாவய வத்திற் கடத்தின் பிராகபாவ மில்லை. அங்ஙனமே பரமாணுவில் துவியணுகத்தினது காரியத்தின் பிராகபாவம் சம்பவியாது. இவ்வாற்றால் ஸாதி கபால முதலியவற்றிற் கடமுதலியவற்றின் பிராகபாவத்திற்கு அநாதித்தன்மை கூறுதல் அசங்கதமாம்.

81. அநந்தப் பிரத்துவம்ஸாபாவத்தின் கண்டனம்

அங்ஙனமே நையாயிக மதத்தில் பிரத்துவம்ஸாபாவமும் தனது பிரதியோகியின் உபாதானத்திற்ரு னிருக்கும். ஆதலால், கடத்தின் துவம்ஸம் கபாலமாத்திரத் திருப்பதாம். அஃது அநந்தமாமென்று கூறுதல் அசங்கதமாம். கடத்துவம்ஸத்தின் அதிகாரணமான கபால மெதுவோ, அதன் நாசத்தால் கடத் துவம்ஸத்தின் நாச முண்டாகின்றது.

அன்றியும், கடத்துவம்ஸத்தின் நாசத்தை யங்கீகரித்தலில் நையாயிகர் இத் தோஷத்தைக் கூறுகின்றனர்:—கடத்துவம்ஸத் தின் துவம்ஸம் உளதேல் கடத்தின் மீட்சி யுளதாதல்வேண் டும். ஏனெனின், பிராகபாவப் பிரத்தொம்ஸாபாவங்களின் அநாதாரகாலம் பிரதியோகியின் ஆதாரமாகின்ற தென்பது நியமம். எக்காலத்தில் கடத்துவம்ஸத்தின் துவம்ஸ முண்டா கின்றதோ, அக்காலம் கடத்துவம்ஸத்தின் அநாதாரமும், பிரா கபாவத்தின் அநாதாரமுமாகும்; ஆதலால், கடத்தின் ஆதார மாகும். இவ்வாற்ருல் துவம்ஸத்தின் துவம்ஸத்தை யங்கீகரிக் கின் கடமுதலிய பிரதியோகியின் மீட்சி யுண்டாகுமென்னும் தோஷமும் இல்லை. ஏனெனின், பிராகபாவத்திற்கு அநாதித் தன்மையும் துவம்ஸத்திற்கு அநந்தத்தன்மையும் அங்கீகரிக் கின், முற்கூறிய நியமத்தின் சித்தி யுண்டாகின்றது. முற்கூறிய நியமத்தை யங்கீகரிக்கின் பிராகபாவத்திற்கு அநாதித்தன்மை யும், துவம்ஸத்திற்கு அநந்தத்தன்மையும் பெறப்படுவனவாம். சித்தாந்தபக்ஷத்தில் பிராகபாவம் ஸாதியாம். ஆதலால், பிராக பாவத்தின் உற்பத்திக்கு முந்தியகாலம் கடப்பிராகபாவ கடத் துவம்ஸங்களின் அநாதாரமாம்; கடத்தின் ஆதாரம் அன்று. அல்லது, முக்கிய சித்தாந்தத்தில் முற்றும் பிராகபாவத்தின் அங்கீ கார மில்லை. ஆதலால், கடத்தின் உற்பத்திக்கு முந்தியகாலம் கடப் பிராகபாவத்தின் அநாதாரமாம்; கடத்துவம்ஸத்தின் அநாதாரமுமாம். கடரூபப் பிரதியோகியின் ஆதார மன்று. இதனுல் பிராகபாவப் பிரத்துவம்ஸங்களின் அநாதாரகாலம் பிரதியோகியின் ஆதாரமாகின்றதென்னும் நியமம் சம்பவிப்ப தில்லை. ஆதலால், கடத்துவம்ஸத்திற்கும் துவம்ஸம் உண்டா கின்றது. முற்கூறிய நியமம் சித்தியாமையான் கடத்தின் மீட்சி யும் உண்டாகிறதில்லை.

82. அந்நியோந்நியாபாவத்திற்கு ஸாதி ஸாந்தத் தன்மையையும், அநாதித்தன்மையையும் அங்கீகரித்தல்

அங்ஙனமே அந்நியோந்நியாபாவமும் ஸாதி ஸாந்த அதிகரணத்தில் ஸாதி ஸாந்தமாம். எங்ஙனம்: கடத்தில் படத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. அதன் அதிகரணம் கடமாம். அது ஸாதியும் ஸாந்தமுமாம். ஆதலால், கடத்திலுள்ள படாந்நியோந்நியாபாவமும் ஸாதியும் ஸாந்தமுமாம். அநாதி அதிகரணத்தில் அந்நியோந்நியாபாவம் அநாதியாம்; ஆனால், அநாதியும் ஸாந்தமாம்; அநந்த மன்று. எங்ஙனம்: பிரஹ்மத்தில் ஜீவனது பேத மிருக்கின்றது. அது ஜீவனது அந்நியோந்நியாபாவமாம். அதன் அதிகரணம் பிரஹ்மமாம்; அது அநாதியாம். ஆதலால், பிரஹ்மத்திலுள்ள ஜீவனது பேதமாகிய அந்நியோந்நியாபாவம் அநாதியாம். பிரஹ்மஞானத்தால் அஞ்ஞான நிவிருத்திவாயிலாகப் பேதத்தின் அநந்த முண்டாகின்றது; ஆதலால் ஸாந்தமாம்.

அநாதி பதார்த்தத்திற்கும் ஞானத்தால் நிவிருத்தி அத்வைதவாதத்தில் இஷ்டமாம். இதனானே சுத்த சேதனம், ஜீவன், ஈசுவரன், அவித்தை சேதனங்களின் சம்பந்தம், அநாதிகளுக் கொன்றற்கொன்றுள்ள பேதம என்னும் ஆறு பதார்த்தங்களும் அத்வைத மதத்தில் சொருபமாக அநாதி யெனப்படுகின்றன. சுத்தசேதன மொழிந்த ஐந்திற்கும் ஞானத்தால் நிவிருத்தி அங்கீகரித்திருக்கின்றனர்.

இதில், ஜீவேசுரர்களை அத்வைத வாதத்தில் மாயிகமென்று கூறுகின்றனர்; மாயையின் காரியம் மாயிக மெனப்படுகின்றது. ஜீவேசுவரர்களை மாயையின் காரியமாகவும் அநாதியாகவும் கூறுதல் விருத்தமாம் என்னும் சங்கை யுண்டாகின்றது. அச் சங்கைக்குச் சமாதானம் வருமாறு:—

ஜீவேசுரர் மாயையின் காரியமென்பது மாயிக பதத்தின் பொருள் அன்று. ஆனால், மாயையினது நிலையின் வசத்ததாய் ஜீவேசுவரர்களது நிலை யிருக்கின்றது; மாயையின் நிலைப்பின்றி ஜீவேசுவரர்களது நிலைப்பு நிகழாது; ஆகலின் மாயிகமாம்; மாயையினைப் போல அநாதியுமாம். இவ்வாற்றான் அநாதி அந்நி

யோந்நியாபாவமும் ஸாந்தமாம், அநந்தமன்று; அங்ஙனமே அத்தியந்தாபாவமும் ஆகாயமுதலியவற்றைப்போல் அவித்தையின் காரியமாம்; நாசமுடையதுமாம். இவ்வாற்றுன் அத்வைதவாதத்தில் சகல அபாவங்களும் நாசமுடையனவாம். ஒரு அபாவமும் நித்திய மன்று. அத்வைத வாதத்தில் அநாத்ம பதார்த்தங்கள் யாவும் மாயையின் காரியமாம். ஆதலால், ஆத்மாவின் வேருயவற்றிற்கு நித்தியத்தன்மை சம்பவியாது. கடமுதலிய பாவபதார்த்தங்கள் மாயையின் காரியமாதல்போல அபாவமும் மாயையின் காரியமாம்.

அத்வைதவாதத்தில் மாயைக்குப் பாவரூபம் கூறுகின்றனர். ஆதலால், அபாவ பதார்த்தத்திற்கு உபாதானமாதல் மாயைக்குச் சம்பவியாது. காரியத்திற்கு ஸஜாதீயமாய் உபாதானம் இருக்கும். அபாவத்திற்கு ஸஜாதீயமாய் மாயை யில்லை. ஆனல், மாயையும் அபாவமும் பாவத்துவ அபாவத்துவங்களான் விஜாதீயமாம். மாயையில் பாவத்துவமும் அபாவத்தில் அபாவத்துவமும் இருக்கின்றன. அங்ஙனமாயினும் சகல அபாவங்களுக்கும் மாயையே உபாதானகாரணம். ஏனெனின், அநிர்வசநீயத்தன்மை மித்தியாத்தன்மை ஞானத்தால் நிவர்த்திக்கப்படுந்தன்மைஅநாத்துமத்தன்மை முதலியதர்மங்களால் மாயையும் அபாவமும் ஸஜாதீயமாம். சகல தர்மங்களானும் உபாதானத்திற்கும் காரியத்திற்கும் ஸஜாதீயத்தன்மை கூறின், கடகபாலங்களினும் கடத்துவ கபாலத்துவ விஜாதீய தர்மங்களிருத்தலான் கடத்திற் குபாதானம் கபாலமாகாது. மண்மயத்தன்மை முதலிய தர்மங்களான் கடமும் கபாலமும் ஸஜாதீயமாதல் போல அநிர்வசனீயத்துவமுதலிய தர்மங்களான் அபாவமும் மாயையும் ஸஜாதீயமாம். ஆதலால், சகல அபாவங்களும் மாயையின் காரியமாமாகலின் மித்தையாம்.

ஓர் நூலாசிரியராகிய அத்வைதவாதி யொருவர் அத்தியந்தாபாவ மொன்றனையே அங்கீகரிக்கின்றனர். மற்ற அபாவங்களைப் பொய்யென்பர்:—எங்ஙனம்: கடத்தின் பிராகபாவத்தைக் கபாலத்திற் கூறுவர். அது பொய்யாம். ஏனெனின், கடத்தின் உற்பத்திக்கு முந்தியகால சம்பந்தியாகிய கபாலமே 'கட முண்டாகும்' என்னும் உணர்விற்கு விடயமாம். கடத்தின் பிராகபாவம் அப்பிரசித்தமாம். அங்ஙனமே, தண்ட

முதலியவற்றாற் பொடிக்கப்பட்ட கபாலத்தின் அல்லது பிரிக்கப்பட்ட கபாலத்தின் வேறாய கடத்துவம்ஸமும் அப்பிரசித்தமாம். அங்ஙனமே, கடசம்பந்த மின்றிய பூதலமே கடத்தின் சாமயிகாபாவமாம். கடமிருக்குங்காலத்துக் கடத்தின் சம்பந்தியாகிய பூதலம் இருக்கின்றதாகலின் கடசம்பந்த மின்றிய பூதலம் இன்று. இவ்வாற்றாற் சாமயிகாபாவம் அதிகரணத்தின் வேறன்று. அங்ஙனமே கடத்தின்கணுள்ள படத்தின் பேதத்தினைக் கடத்தில் இருப்பதாய படாந்நியோந்நியாபாவ மென்பர். அஃது இரண்டனது அபேதத்தின் அத்தியந்தாபாவ ரூபமாம். இரண்டு பதார்த்தங்களினது அபேதாத்தியந்தாபாவத்தின் வேறாய அந்நியோந்நியாபாவம் அப்பிரசித்தமாம். இவ்வாற்றான் அத்தியந்தாபாவ மொன்றே யுளது. பிறிதோர் அபாவமுமின்று. இவ்வாறு அபாவநிரூபணத்தில் வெகு விசார முளது. நூல் விரியுமென்னும் அச்சத்தால் அதன் தன்மைமாத்திரம் அறிவிக்கப்பட்டது.

83. அபாவப்பிரமைக்கு ஏதுவாகிய பிரமாணத்தின் நிரூபணமும், அபாவ ஞானத்தின் பேதபூர்வகமாக நியாயமதத்தில் பிரமப் பிரத்தியக்ஷத்தில் விஷயாபேக்ஷ யின்மையும்

அபாவத்தின் சொரூபம் நிரூபிக்கப்பட்டது. அதிற் பிரமாணம் நிரூபிக்கப்படுகின்றது:—அபாவத்தின் ஞானம் இருவகையாம். ஒன்று பிரம வடிவினது. மற்றையது பிரமை வடிவினது. பிரமஞானமும் பிரமையைப்போல் பிரத்தியக்ஷபரோக்ஷ பேதத்தால் இருவகையாம். கடமுடைய பூதலத்தில் இந்திரிய சையோகமிருந்தும், ஒருவாற்றாற் கடத்தின் உணர்ச்சி யுண்டாகவில்லையாயின் ஆண்டுக் கடாபாவத்தின் பிரத்தியக்ஷப் பிரமம் உண்டாகின்றது. ஆனால், விஷயமின்றிப் பிரத்தியக்ஷ ஞானம் உண்டாகாது. அந்நியதாக்கியாதிவாதியின் மதத்திலோ பிரமப் பிரத்தியக்ஷத்தில் விஷயத்தி னபேக்ஷை யில்லை. ஆனால், அந்நிய பதார்த்தத்தின் அந்நிய வடிவமாகிய ஞானத்தை அந்நியதாக்கியாதி யென்பர். ஆதலால், எந்தப் பதார்த்தத்தின் அந்நிய வடிவமான ஞான முண்டாகின்றதோ, அதன் அபேக்ஷை யுண்டு.

எங்ஙனம்: பழுதையின் பாம்புத்தன்மை வடிவமான ஞான முண்டாகின்றது. அதன்கண் பழுதையின் அபேக்ஷை யுளது. அங்ஙனமாயினும், எவ்விஷயத்தின் ஆகாரம் (வடிவம்) ஞானத்தில் தோற்றுகின்றதோ, அதன் அபேக்ஷை அந்நிய தாக்கியாதிவாதி மதத்தில் இல்லை. அது சர்ப்பத்தின் ஆகாரம் பிரமத்தில் தோற்றியும் அதன் அபேக்ஷை யில்லாததுபோல வாம்.

84. சித்தாந்தத்தில் பரோக்ஷப் பிரமத்தில் விஷயத்தின் அபேக்ஷையின்மையும், அபரோக்ஷப் பிரமத்தில் அதன் அபேக்ஷையுண்மையும்

அங்ஙனமாயினும் சித்தாந்தத்தில் அநிர்வசனீயக்கியாதி யுளது. யாண்டுப் பிரத்தியக்ஷப் பிரம முண்டாகின்றதோ, ஆண்டுப் பிரம ஞானத்தைப்போல அநிர்வசனீய விஷயத்தின் உற்பத்தியு முண்டாகின்றது. ஆதலால், வியாவகாரிக கடமுடைய பூதலத்தில் பிராதிபாஸிக கடாபாவம் அநிர்வசனீயமா யுண்டாகின்றது. வியாவகாரிக கடத்திற்கு வியாவகாரிக கடாபாவத் தோடு விரோத முண்டு. பிராதிபாஸிக கடாபாவத்தோடு வியாவகாரிக கடத்திற்கு விரோதம் இன்று. ஆதலால், வியாவகாரிக கடமுடைய பூதலத்தில் அநிர்வசனீய கடாபாவமும் அதன் அநிர்வசனீய ஞானமுமாகிய இரண்டு முண்டாகின்றன. ஆண்டுக் கடாபாவத்தின் பிரத்தியக்ஷப் பிரமம் சொல்லப்படுகின்றது.

யாண்டு அந்தகனுக்குப் பொய்ய (வஞ்சக) னது வாக்கியத்தால் கடமுடைய பூதலத்தில் கடாபாவத்தின் ஞான முண்டாகின்றதோ, அது அபாவத்தின் பரோக்ஷப் பிரமமாம். பரோக்ஷ ஞானத்தில் விஷயத்தின் அபேக்ஷை யில்லை. ஏனெனின், கழிந்தனவும் வருவனவுமாயவற்றின் பரோக்ஷ ஞானம் உண்டாகின்றது. ஆதலால், அபாவத்தின் பரோக்ஷப்பிரமம் யாண்டு உண்டாகின்றதோ, ஆண்டுப் பிராதிபாஸிக அபாவத்தின் உற்பத்தி யுண்டாகிறதில்லை. கேவலம் அபாவாகார விருத்திவடிவினதாகிய ஞானத்தின் உற்பத்தியே யுண்டாகின்றது.

85. சித்தாந்தத்தில் அபாவப்பிரமமுதலிய விடங்களில் அந்நியதாக்கியாதியின் அங்கீகாரம்

அல்லது பரோக்ஷப் பிரமத்தினைப்போல யாண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷப் பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டும்

பிராதிபாஸிக அபாவத்தின் உற்பத்தி யுண்டாகிறதில்லை. ஆனால், அபாவத்தின் பிரமம் அந்நியதாக்கியாதி வடிவினதாம். ஏனெனின், இரஜ்ஜுமுதலியவற்றில் சர்ப்பமுதலிய பிரமத்தினை அந்நியதாக்கியாதி வடிவமாகக் கொள்ளின் இத் தோஷம் உளதாகின்றது:—இரஜ்ஜுவில் சர்ப்பத்தன்மைத் தர்மத்தின் தோற்றத்தினை அந்நியதாக்கியாதி யென்பர்; அது சம்பவியாது. ஏனெனின், இந்திரியத்தின் சம்பந்தம் இரஜ்ஜுவோடும் இரஜ்ஜுத்தன்மையோடும் உளது. சர்ப்பத்தன்மையோடு இந்திரியத்தின் சம்பந்தமின்று. விஷயசம்பந்தமின்றி இந்திரிய ஜந்நிய ஞான முண்டாகிறதில்லை. ஆதலால், இரஜ்ஜுவின் சர்ப்பத்தன்மைத் தர்மமாகத் தோற்றுதல் வடிவினதாகிய அந்நியதாக்கியாதி சம்பவியாது. இவ்வாறு பிரத்தியக்ஷப் பிரம ஸ்தலத்தில் அந்நியதாக்கியாதியை நிஷேதித்து அநிர்வசனீயக் கியாதியை அங்கீகரித்திருக்கின்றனர். அதன்றன்மை முன் கூறப்பட்டுள்ளது.

ஆனால், யாண்டு அதிஷ்டானமும் ஆரோப்பியமுமாகிய இரண்டும் இந்திரிய சம்பந்தியாகின்றனவோ, ஆண்டு முற்கூறிய தோஷம் சம்பவியாது. ஆதலால், சித்தாந்தநூல்களினும் ஆண்டு அந்நியதாக்கியாதியே எழுதப்பட்டுளது. எங்ஙனம்: புஷ்பத்தின் மேல் வைக்கப்பட்ட ஸ்படிகத்தில் செம்மையின் பிரத்தியக்ஷப் பிரம முண்டாகின்றது. ஆண்டுப் புஷ்பத்தின் செம்மையோடும் நேத்திரத்திற்குச் சையுக்தசமவாய சம்பந்தம், அல்லது சையுக்த தாதான்மியசம்பந்த முளது. ஸ்படிகத்தோடு நேத்திரத்திற்குச் சையோகசம்பந்த மிருக்கின்றது. ஆண்டுச் செம்மை ஆரோப்பியமும் ஸ்படிகம் அதிஷ்டானமுமாம். ஆண்டுப் புஷ்பத்தின் வியாவகாரிக செம்மை ஸ்படிகத்தில் தோற்றுகின்றது; ஸ்படிகத்தில் அநிர்வசனீய செம்மையின் உற்பத்தி யுண்டாகிறதில்லை. ஏனெனின், சர்ப்பத்தன்மையோடு போலச் செம்மையோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாகாதிருக்குமாயின், விஷயத்தோடு சம்பந்தமின்றி இந்திரிய ஜந்நியஞான முண்டாகா தென்னும் தோஷம் உண்டாம். நேத்திரத்தோடு செம்மைக்குச் சம்பந்த மிருத்தலின் முற்கூறிய தோஷம் சம்பவிப்பதில்லை. ஆதலால், ஆரோப்பியத்தின் சந்நிதான ஸ்தலத்தில் அந்நியதாக்கியாதியே சம்பவிக்கின்றது.

அங்ஙனமே கடமுடைய பூதலத்தில் கடாபாவப் பிரமமுண்டாயின், ஆண்டு ஆரோப்பிய அதிஷ்டானங்களின் சந்நிதான மிருத்தலான் ஆரோப்பியத்தோடும் இந்திரியத்திற்கு அதிஷ்டானத்தோடுபோல சம்பந்தம் இருக்கின்றது. ஏனெனின், அதிஷ்டானம் பூதலமாம்; ஆரோப்பியமாகிய கடாபாவம் பூதலத்திலோ இல்லை; ஆனால், பூதலத்திலிருக்கும் பூதலத்தன்மையில் கடாபாவம் இருக்கின்றது. அன்றியும், பூதலத்திலிருக்கும் உருவம் பரிசம் முதலிய குணங்க ளெவையோ அவற்றின்கண் கடாபாவம் இருக்கின்றது. பூதலத்தன்மையின்கண்ணும் பூதலத்தில் உருவமுதலிய குணங்களோடும் கடத்தின் சையோகம் என்றும் உண்டாகாது. ஏனெனின், இரண்டு திரவியங்களுக்குச் சையோக முண்டாகும். கடமோ திரவியமாம்; பூதலத்தன்மை திரவியமன்று; ஜாதியாம். அதனோடு கடத்திற்குச் சையோக முண்டாகாது. பூதலத்தின் பரிசமுதலியனவும் திரவியமன்று; குணமாம். அவற்றின்கண்ணும் கடத்தின் சையோகம் சம்பவியாது. எதன்கண் எதன் சையோக சம்பந்த முண்டாகவில்லையோ, அதன்கண் அப் பதார்த்தத்தின் சையோக சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவ முண்டாகின்றது. இவ்வாற்றாற் பூதலத்திற் சையோக சம்பந்தத்தாற் கடமிருக்கினும் பூதலத்தன்மையினும் பூதலத்தின் குணங்களினும் சையோக சம்பந்தத்தாற் கடமின்மையாற் சையோக சம்பந்தாவச்சின்ன கடாத்தியந்தாபாவம் இருக்கின்றது. ஆண்டு அதிஷ்டானம் பூதலமும், ஆரோப்பியம் கடாத்தியந்தாபாவமுமாம். அதற்குப் பூதலத்தோடு சுவாதிகரண சமவாய சம்பந்த மிருக்கின்றது. சுவ என்பது கடாத்தியந்தாபாவம்; அதன் அதிகரணம் பூதலத்தன்மையும் பூதலத்தின் உருவமுதலிய குணங்களுமாம்; அவற்றின் சமவாயம் பூதலத்தின்கண் ணுளது. பூதலத்தின் கடாத்தியந்தாபாவத்தோடு சுவசமவேத விருத்தித்தன்மைச் சம்பந்தம் உளது. சுவ என்பது பூதலம்; அதன்கண் சமவேத மென்பது சமவாய சம்பந்தத்தானிருக்கும் பூதலத்தன்மையும் குணமுமாம்; அவற்றில் விருத்தித்தன்மை யென்பது ஆதேயத்தன்மையாம். அஃது அத்தியந்தாபாவத்திற் குளது. இவ்வாறு ஆரோப்பிய அதிஷ்டானங்களுக் கொன்றற்கொன்று சம்பந்தம் இருத்தலின் சந்நிதானம் இருக்கின்றது. ஆதலால், பூதலத்தன்மையி னிருப்பதும் உருவம் பரிசமுதலியவற்றி னிருப்

பதுமாகிய வியாவகாரிக கடாத்தியந்தாபாவ மெதுவோ, அது பூதலத்திற் ரேற்றுதலால் அபாவத்தின் பிரமம் அந்நியதாக் கியாதி வடிவினதாம். பிரார்திபாஸிக அபாவத்தின் உற்பத்தி நிஷ்பிரயோஜனமாம். இவ்வாற்ருற்பிரத்தியக்ஷ பரோக்ஷ வேறு பாட்டால் அபாவப்பிரமம் இருவகைத்தாம்.

86. பிரத்தியக்ஷ பரோக்ஷ யதார்த்தப் பிரமரூப அபாவப் பிரமைக்கு இந்திரியமும் அநுபலம்பமுதலியனவும் சாமக்கிரியாதலைக் கூறுதல்

அங்ஙனமே அபாவத்தின் பிரமையும் பிரத்தியக்ஷ பரோக்ஷ பேதத்தால் இருவகைத்தாம்:—நையாயிகர் மதத்திலோ இந்திரிய ஜந்நிய ஞானத்தை அபரோக்ஷ மென்பர்; அதனின் வேருய ஞானத்தைப் பரோக்ஷ மென்பர். அபாவத்திஞேடும் இந்திரியத்திற்கு விசேஷணத்தன்மைச் சம்பந்தமாதல், சுவசம்பந்த விசேஷணத்தன்மைச் சம்பந்தமாதல் யாண்டு உளதாகின்றதோ, ஆண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷப்பிரமையும் பரோக்ஷப்பிரமையும் சொல்லப்படுகின்றன.

எங்ஙனம் சுரோத்திரத்தோடு சப்தாபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்த முள்ளவிடத்துச் சப்தாபாவத்தின் சுரோத்திர ஜந்நியப் பிரத்தியக்ஷப் பிரமை யுளதாகின்றதோ, அங்ஙனமே பூதலத்தில் கடாபாவம் உளதாகியவிடத்து நேத்திர சம்பந்தப்பட்ட பூதலத்தில் அபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்தம் இருத்தலாற் கடாபாவத்தின் நேத்திர ஜந்நியப் பிரத்தியக்ஷப் பிரமை யுண்டாகின்றது. ஆனல், புருஷனின்றிய பூதலத்தில் யாண்டுக் கட்டையில் புருஷப்பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டுப் புருஷாபாவம் இருக்கின்றது. புருஷாபாவத்தோடு நேத்திரத்திற்குச் சுவசம்பந்தமுடைய விசேஷணத்தன்மைச் சம்பந்தமு மிருக்கின்றது. அங்ஙனமாயினும் புருஷாபாவத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகிறதில்லை. ஆதலால், அபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் இந்திரியம் கரணம், பிரதியோகியின் அநுபலம்பம் (உணர்ச்சியின்மை) சககாரி. யாண்டுத் தாணுவில் புருஷப்பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டுப் பிரதியோகியின் அநுபலம்பம் உண்டாகிறதில்லை. ஆனல் புருஷப் பிரதியோகியின் உபலம்பம் அதாவது ஞான மிருக்கின்றது. எங்ஙனம்; கடமுதலிய திரவியங்களின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்

தில் நேத்திரம் கரணமாம். அந்தகாரத்தில் கடத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஆதலால், நேத்திரஜந்நிய சாக்ஷுஷப்பிரத்தியக்ஷத்தில் ஆலோக (பிரகாச) சையோகம் சககாரியாம். ஆதலால், அந்தகாரத்துள்ள கடமாகுமாயின் ஆண்டு நேத்திரேந்திரிய மிருக்கின்றது; நேத்திரேந்திரியத்திற்குக் கடத்தோடு சையோகமு மிருக்கின்றது. அங்ஙனமாயினும் கடத்திற்கு ஆலோகத்தோடு சையோகவடிவ சககாரி யில்லை. ஆதலால், அந்தகாரத்துள்ள கடத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் ஆலோக சையோகம் சககாரியாம். ஆண்டு இந்திரியத்தோடுள்ள ஆலோகத்தின் சையோகம் ஏதுவன்று; ஆனால், விஷயத்தோடுள்ள ஆலோக சையோகம் ஏதுவாம். ஆதலால், பிரகாசத்திலுள்ள புருஷனுக்கு அந்தகாரத்திலுள்ள கடத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஆண்டிந்திரியத்துடனே ஆலோகத்தின் சையோக மிருக்கின்றது; விஷயமாகிய கடத்தோடு ஆலோகத்தின் சையோக மில்லை. அந்தகாரத்திலுள்ள புருடனுக்குப் பிரகாசத்திலுள்ள கடத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. ஆண்டு இந்திரியத்துடனே ஆலோகத்தின் சையோகம் இல்லை; விஷயத்தோடு ஆலோகத்தின் சையோகம் இருக்கின்றது. ஆதலால், விஷய ஆலோகங்களின் சையோகம் நேத்திரஜந்நிய ஞானத்தில் சககாரியாம். அங்ஙனமாயினும், கடத்தின் பூர்வதேச (முன்னிட) த்தில் ஆலோகத்தின் சையோகமுண்டாய்ப் பச்சிம தேச (பின்னிட)த்தில் நேத்திரத்தின் சையோக முண்டாகுமிடத்துக் கடத்தின் சாக்ஷுஷப்பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை; உண்டாதல் வேண்டும். ஏனெனின், விஷயத்தோடு ஆலோகத்தின் சையோக வடிவ சககாரி யிருக்கின்றது. சையோகவடிவ வியாபாரமுடைய நேத்திரேந்திரிய கரணமும் உளது.

ஆதலால், எந்தக் கடத்தின் தேசத்தில் நேத்திரத்தின் சையோக முண்டாகின்றதோ, அதே தேசத்தில் ஆலோகத்தின் சையோகம் சககாரி யாகின்றதென்று கொள்ளல்வேண்டும். தீபம் சூரியன் முதலியவற்றின் பிரபையை ஆலோகமென்பர். எங்ஙனம் திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தில் ஆலோகத்தின் சையோகம் சககாரி யாகின்றதோ, அங்ஙனமே அபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் இந்திரியம் கரணமும், பிரதி

யோகியின் அநுபலம்பம் சககாரியுமாம். ஆதலால், தாணுவில் புருஷப்பிரம முண்டாகுமிடத்து, புருஷாபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. அங்ஙனமே யாண்டுப் பூதலத்தில் கட மில்லாமல், கடத்திற்குச் சமானமான வேறு பதார்த்தம் வைக்கப்பட்டிருக்கின்றதோ, ஆண்டுக் கடப்பிரம முண்டாய் விடுகின்றது. அப் பூதலத்தில் கடாபாவ மிருக்கின்றது. கடாபாவத்தோடு இந்திரியத்திற்குச் சுவசம்பந்தமுடைய விசேஷணத்தன்மைச் சம்பந்தமு மிருக்கின்றது. ஏனெனின், கடத்தின் பிரமமோ உண்டாயிருக்கின்றது; கட மில்லை. ஆனால், கடாபாவம் இருக்கின்றது. அதற்குப் பூதலத்தில் விசேஷணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. அப் பூதலத்தோ டிந்திரியத்திற்குச் சையோகம் இருத்தலின் இந்திரிய சம்பந்தமுடைய தெனப்படுகின்றது. இந்திரியத்தோடு சம்பந்தமுடையதாகிய பூதலத்தில் அபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்தம் இருக்கின்றது. ஆதலால், சம்பந்த வடிவ வியாபாரமுடைய இந்திரியமாகிய கரணமிருக்கின்றது. பிரதியோகியின் அநுபலம்பமாகிய சககாரியின்று. ஏனெனின், ஞானத்தை உபலம்பமென்பர். அந்த ஞானம் பிரமமாகுக, அல்லது பிரமையாகுக. இதில் விசேஷ மின்று.

யாண்டுக் கடத்தின் பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டுக் கடாபாவத்தின் பிரதியோகியாகிய கடமெதுவோ அதன் அநுபலம்பம் இன்று. ஆனால், பிரமரூப உபலம்ப (ஞான) மிருக்கின்றது. இவ்வாற்றான் அபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் இந்திரியம் கரணமும், பிரதியோகியின் அநுபலம்பம் சககாரியுமாம். பிரதியோகியின் அநுபலம்பத்தை மாத்திரம் சககாரியெனினும் நிர்வாக முண்டாவதில்லை. ஏனெனின், ஸ்தம்பத்தில் பிசாசின் பேதமோ பிரத்தியக்ஷமாம். ஸ்தம்பத்தில் பிசாசின் அத்தியந்தாபாவம் பிரத்தியக்ஷமன்று. இத் தம்பம் பிசாசன்றென்னும் அநுபவம் எல்லா ஜனங்களுக்கு முண்டு. ஆனால், ஸ்தம்பத்தில் பிசாசில்லை யென்னும் நிச்சய முண்டாகிறதில்லை. ஆண்டு முதல் அநுபவத்திற்கு விஷயம் ஸ்தம்ப பதத்திலுள்ள பிசாசின் அந்நியோந்நியாபாவமும், இரண்டாவது அநுபவத்திற்கு விஷயம் பிசாசின் அத்தியந்தாபாவமுமாம், இரண்டபாவங்களுக்கும் பிரதியோகி பிசாசாம். அதன் அநுபலம்ப மிருக்கின்றது. இந்திரிய சம்பந்தமுடையது ஸ்தம்பமாம். அதிற் பிசாசின் அந்நியோந்நியாபாவ

மும் பிசாசின் அத்தியந்தாபாவமுமாகிய இரண்டும் விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தா லிருக்கின்றன. ஆதலால், பிசாசின் அந்நியோந்நியாபாவத்தினைப்போலப் பிசாசின் அத்தியந்தாபாவத்தினது பிரத்தியக்ஷ முண்டாதல்வேண்டும். அங்ஙனமே ஆத்மாவினிடத்துச் சுகாபாவ துக்காபாவங்களினது பிரத்தியக்ஷம் உண்டாகின்றது; தர்மாபாவ அதர்மாபாவங்களின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. இவ் வார்த்தை எல்லோருடைய அநுபவத்தானும் பெறப்பட்டதாம்.

'இப்போது என்னிடத்துச் சுக மில்லை, இப்போது என்னிடத்துத் துக்க மில்லை' என்னு மிவ்வித அநுபவம் எல்லோருக்கும் உண்டாகின்றது. அவ் வநுபவம் நியாயமதத்தில் மானஸப் பிரத்தியக்ஷ வடிவினதாம். மனதிற்குச் சுகாபாவத்தோடும் துக்காபாவத்தோடும் சுவசையுத்த விசேஷணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. ஏனெனின், சுவ் என்பது மனம்; அதனோடு சையுத்தமென்பது சையோகமுடைய ஆத்மா; அதனிடத்து விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தால் சுகாபாவமும் துக்காபாவமும் இருக்கின்றன. அங்ஙனமே தர்மாபாவ அதர்மாபாவங்களோடு மனத்திற்குச் சுவசையுத்த விசேஷணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. அங்ஙனமாயினும் பிரத்தியக்ஷமாகிறதில்லை.

'என்னிடத்துத் தர்ம மில்லை, என்னிடத்து அதர்ம மில்லை' என்னும் பிரத்தியக்ஷ அநுபவ மொருவருக்கு முண்டாகிறதில்லை. சுகாபாவ துக்காபாவங்களின் பிரதியோகிகளாகிய சுக துக்கங்களின் அநுபலம்பம் எங்ஙனம் அபாவகாலத்தி லுண்டாகின்றதோ, அங்ஙனமே தர்மாபாவ அதர்மாபாவங்களின் பிரதியோகிகளாகிய தர்மாதர்மங்களின் அநுபலம்பமும் உண்டாகின்றது. ஆதலால், பிரதியோகியின் அநுபலம்ப வடிவமான சககாரியோடுகூடிய மனதினால் சுகாபாவ துக்காபாவங்களின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. அங்ஙனமே தர்மாதர்மரூப பிரதியோகியின் அநுபலம்பவடிவ சககாரியோடுகூடிய மனதினால் தர்மாதர்மங்களினது அபாவத்தின் பிரத்தியக்ஷமும் உண்டாதல் வேண்டும். அங்ஙனமே வாயுவில் உருவத்தின் அபாவப் பிரத்தியக்ஷ மிருக்கின்றது; குருத்துவாபாவப் பிரத்தியக்ஷ மில்லை. உருவாபாவத்தின் பிரதியோகி உருவமும், குருத்து

வாபாவத்தின் பிரதியோகி குருத்துவமுமாம். அவ் விரண்டின் அநுபலம்பமும் வாயுவி லிருக்கின்றது. நேத்திரத்திற்கு வாயுவோடு சையோக சம்பந்தம் உண்டாகின்றது. நேத்திரசையுக்த வாயுவில் உருவாபாவமும் குருத்துவாபாவமும் விசேஷணத் தன்மைச் சம்பந்தத்தால் இருக்கின்றன. ஆதலால், சுவசம்பந்தமுடைய விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தால் எங்ஙனம் வாயுவில் உருவாபாவத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, அங்ஙனமே சுவசம்பந்தமுடைய விசேஷணத்தன்மைச் சம்பந்தம் குருத்துவாபாவத்தோடும் நேத்திரத்திற் கிருக்கின்றது. அதனால் "வாயுவில் உருவம் இல்லை" என்னும் சாக்ஷுஷ ஞானத்தைப்போல "வாயுவில் குருத்துவம் இல்லை" என்னும் சாக்ஷுஷ ஞானமு முண்டாதல்வேண்டும். ஆதலால், இந்திரிய ஜந்ய அபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் கேவல அநுபலம்பம் சககாரியன்று; ஆனால் யோக்கியாநுபலம்பம் சககாரியாம்.

வாயுவில் எங்ஙனம் உருவத்தின் அநுபலம்பம் இருக்கின்றதோ, அங்ஙனமே குருத்துவத்தின் அநுபலம்பமும் இருக்கின்றது. ஆனால், யோக்கியாநுபலம்பம் உருவத்திற் குளது; குருத்துவத்திற்கு யோக்கியாநுபலம்ப மின்று. ஏனெனின், பிரத்தியக்ஷ மாகத்தக்கதின் அப்பிரதீதியை யோக்கியாநுபலம்பமென்பர். உருவமோ பிரத்தியக்ஷ யோக்கியமாம்; குருத்துவம் பிரத்தியக்ஷ யோக்கியமன்று. ஏனெனின், தராசின் ஊர்த்துவ முதலிய தன்மையால் குருத்துவத்தின் அநுமிதி யுண்டாகின்றது. எவ் விந்திரியத்தானும் குருத்துவத்தின் ஞானம் உண்டாகிறதில்லை. ஆதலால், பிரத்தியக்ஷயோக்கிய குருத்துவ மில்லாதிருத்தலின் அதன் அநுபலம்பம் யோக்கியாநுபலம்பம் அன்று. அங்ஙனமே ஆத்மாவினிடத்துச் சுகாபாவ துக்காபாவங்களின் மானஸப் பிரத்தியக்ஷ முண்டாகிறது. ஆண்டும் பிரத்தியக்ஷயோக்கிய சுகத்தின் அநுபலம்பமும், பிரத்தியக்ஷ யோக்கிய துக்கத்தின் அநுபலம்பமும் இருத்தலான் சககாரிக்கு யோக்கியாநுபலம்பம் சம்பவிக்கின்றது.

தர்மாபாவ அதர்மாபாவங்களின் மானஸப் பிரத்தியக்ஷம் ஆத்மாவினிடத்து உண்டாகிறதில்லை. ஆண்டும் தர்மாதர்ம வடிவமான பிரதியோகியின் அநுபலம்பமோ விருக்கின்றது. ஆனால்,

தர்மாதர்மம் கேவலம் சாஸ்திரவேத்தியமாம்; பிரத்தியக்ஷ யோக்கிய மன்று. ஆதலால், தர்மாதர்மங்களுக்கு யோக்கியாநுபலம்ப மில்லை. அவற்றின் இன்மையால் தர்மாபாவ அதர்மாபாவங்களின் மானஸப்பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

87. ஸ்தம்பத்தில் பிசாசின் திருஷ்டாந்தத்தால் சங்கை சமாதான பூர்வகமான அநுபலம்பத்தின் நிர்ணயம்

அங்ஙனமே ஸ்தம்பத்தில் பிசாசினது அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஆண்டும் பிசாசு வடிவமான பிரதியோகியின் அநுபலம்பமோ விருக்கின்றது; ஆனால், பிரத்தியக்ஷ யோக்கியமான பிசாசில்லை. ஆதலால், யோக்கியாநுபலம்ப மில்லை. பிரத்தியக்ஷ யோக்கியமான பிரதியோகியின் அநுபலம்பத்தினை யோக்கியாநுபலம்ப மென்பர். பிசாசினது அத்தியந்தாபாவத்தின் பிரதியோகியாகிய பிசாசு எதுவோ, அது பிரத்தியக்ஷ யோக்கிய மன்று. ஆதலால், பிசாசின் அநுபலம்பம் யோக்கியாநுபலம்ப மன்று.

இதில் இச்சங்கை யுளது:—ஸ்தம்பத்தில் பிசாசின் பேதமும் பிரத்தியக்ஷ மாகலாகாது. ஏனெனின், பிசாசின் அந்நியோந்நியாபாவத்தினைப் பிசாசின் பேத மென்பர். அதன் பிரதியோகியும் பிசாசாம்; அது பிரத்தியக்ஷ யோக்கிய மன்று. ஆதலால், யோக்கியாநுபலம்பத்தின் அபாவத்தால் பிசாசின் அத்தியந்தாபாவத்தைப்போலப் பிசாசின் அந்நியோந்நியாபாவமும் அப்பிரத்தியக்ஷ மாதல் வேண்டும்.

சித்தாந்தியானவர் "முற்கூறிய வடிவம் யோக்கியாநுபலம்ப மன்று; ஆனால், பிரத்தியக்ஷ யோக்கிய அதிகரணத்திலுள்ள பிரதியோகியின் அநுபலம்பத்தினை யோக்கியாநுபலம்ப மென்பர். பிரதியோகி வேண்டுமானால் பிரத்தியக்ஷ யோக்கியமாயிருக்குக, அல்லது அப்பிரத்தியக்ஷமா யிருக்குக. அபாவத்தின் அதிகரணம் பிரத்தியக்ஷயோக்கியமா யிருத்தல்வேண்டும். அதனிடத்துப் பிரதியோகியின் அநுபலம்பம் வேண்டும். ஸ்தம்பத்திலுள்ள பிசாசின் அந்நியோந்நியாபாவம் எதுவோ அதன் பிரதியோகி பிசாசாம்; அதுவோ பிரத்தியக்ஷயோக்கியமன்று. அதில் பிரத்தியக்ஷ யோக்கியதையின் அபேக்ஷையும் இல்லை. என்று

னும் பிசாசின் அந்நியோந்நியாபாவத்தின் அதிகரணம் ஸ்தம்பமாம். அது பிரத்தியக்ஷ யோக்கியமாயிருத்தலால் யோக்கியாநுபலம்பத்தின் சற்பாவம் (இருப்பு) உளது. ஆதலால், பேயின் அந்நியோந்நியாபாவம் ஸ்தம்பத்திற் பிரத்தியக்ஷமாதல் சம்பவிக்கின்றது'' என்பாராயின் சித்தாந்தியின் இச் சமாதானம் சம்பவியாது. ஏனெனின், முற்கூறிய தன்மையால் இச் சித்தாந்தமுண்டாகின்றது:—அபாவத்தின் பிரதியோகி பிரத்தியக்ஷ யோக்கியமா யிருக்குக; அல்லது பிரத்தியக்ஷ அயோக்கியமாயிருக்குக. யாண்டு அபாவத்தின் அதிகரணம் பிரத்தியக்ஷ யோக்கியமா யிருக்கின்றதோ ஆண்டுப் பிரதியோகியி னநுபலம்ப முண்டாகின்றது. அந்த யோக்கியாநுபலம்பம் அபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சககாரியாம். இத்தன்மையான அர்த்தத்தை அங்ககரிக்கின், ஸ்தம்பத்தில் பேயின் அத்தியந்தாபாவமும் பிரத்தியக்ஷமாதல் வேண்டும். அங்ஙனமே ஆத்மாவினிடத்துள்ள தர்மாபாவ, அதர்மாபாவங்களும் பிரத்தியக்ஷ மாதல்வேண்டும். ஏனெனின், ஸ்தம்பத்தின்கண்ணுள்ள பேயின் அத்தியந்தாபாவத்தின் அதிகரணம் ஸ்தம்பமாம். அது பிரத்தியக்ஷ யோக்கியமாம். ஆத்மாவின்கண்ணுள்ள தர்மாபாவ அதர்மாபாவங்களின் அதிகரணமாகிய ஆத்மா பிரத்தியக்ஷ யோக்கியமாம். ஆனால், இவ்வளவு பேத முண்டு. ஸ்தம்பமோ பாகியேந்திரியத்தாற் றோன்றிய பிரத்தியக்ஷ யோக்கியமாம். ஆதலால், ஸ்தம்பத்துள்ள பேயின் அத்தியந்தாபாவம் பாகியேந்திரியத்தால் தோன்றிய பிரத்தியக்ஷமாதல் வேண்டும். ஆத்மா மானசப் பிரத்தியக்ஷ யோக்கியமாம். ஆதலின், ஆத்மாவினிடத்துள்ள தர்மாபாவ அதர்மாபாவங்களின் மானசப் பிரத்தியக்ஷமுண்டாதல் வேண்டும்.

வாயுவிற்குப் பிரத்தியக்ஷ யோக்கியத்தன்மை அங்கீகரிக்கின், வாயுவின்கண்ணுள்ள குருத்துவ (கனத்தன்மை) அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாதல்வேண்டும். வாயுவிற்குப் பிரத்தியக்ஷ யோக்கியத்தன்மை அங்கீகரியாவிடின், வாயுவின்கண்ணுள்ள உருவத்தினது அபாவத்தின் பிரத்தியக்ஷமும் உண்டாகலாகாது; வாயுவில் உருவத்தின் அபாவம் பிரத்தியக்ஷமாமென்பது சித்தாந்தமு மநுபவசித்தமுமாம். இப்பொருள் மேல் விளக்கமாகும்.

சித்தாந்தி இவ்வாறு சமாதானஞ் செய்வாராயின், அதாவது: யோக்கியாநுபலம்பம் இருவகைத்தாம். ஒன்றோ பிரத்தியக்ஷ யோக்கியப் பிரதியோகியின் அநுபலம்பமாகிய யோக்கியாநுபலம்பமாம்; இரண்டாவது பிரத்தியக்ஷயோக்கிய அதிகரணத்தில் பிரதியோகியின் அநுபலம்பமாகிய யோக்கியாநுபலம்பமாம். அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் முதல் யோக்கியாநுபலம்பம் சககாரியாம். ஆதலால், அதிகரணமோ பிரத்தியக்ஷ யோக்கிய மாகுக, அல்லது அயோக்கிய மாகுக. எந்த அத்தியந்தாபாவத்தின் பிரதியோகி பிரத்தியக்ஷ யோக்கிய மாகின்றதோ, அதன் அநுபலம்பம் அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சககாரியாம். அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் இரண்டாவது யோக்கியாநுபலம்பம் சககாரியாம். ஆதலால், அந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகி பிரத்தியக்ஷ யோக்கிய மாகுக, அல்லது அயோக்கிய மாகுக. பிரத்தியக்ஷ யோக்கிய அதிகரணத்தில் பிரதியோகியின் அநுபலம்பம் அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சககாரியாம். ஆதலால், ஓரிடத்தும் தோஷ மில்லை.

ஸ்தம்பத்தில் பேயின் அத்தியந்தாபாவத்தின் பிரதியோகியாகிய பேயானது பிரத்தியக்ஷயோக்கியமன்று. ஆதலால், ஸ்தம்பத்தின்கண்ணுள்ள பேயின் அத்தியந்தாபாவம் அப்பிரத்தியக்ஷமாம். ஸ்தம்பத்தின்கண்ணுள்ள பேயின் அந்நியோந்நியாபாவத்தின் அதிகரணம் ஸ்தம்பம்; அது பிரத்தியக்ஷமாம். ஆதலால், ஸ்தம்பத்தின்கண்ணுள்ள பேயின் அந்நியோந்நியாபாவம் பிரத்தியக்ஷமாம்.

ஆத்மாவின்கண்ணுள்ள சுகாத்தியந்தாபாவ துக்காத்தியந்தாபாவங்களின் பிரதியோகியாகிய சுகதுக்கங்கள் மானசப் பிரத்தியக்ஷ யோக்கியமாம். அவற்றின் அத்தியந்தாபாவங்களினது மானசப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. தர்ம அதர்மங்கள் பிரத்தியக்ஷயோக்கியமன்று. ஆதலால், அவற்றின் அத்தியந்தாபாவங்களினது பிரத்தியக்ஷம் உண்டாகிறதில்லை.

உருவ குணமோ பிரத்தியக்ஷ யோக்கியமாம். ஆதலால், வாயுவில் உருவத்தின் அத்தியந்தாபாவத்தினது பிரத்தியக்ஷமுண்டாகின்றது. குருத்துவகுணம் பிரத்தியக்ஷ யோக்கிய

மன்று. ஆதலால், வாயுவிலுள்ள குருத்துவத்தின் அத்தியந்தாபாவம் பிரத்தியக்ஷமன்று.

இவ்வாற்றால் இப்பொருள் பெறப்பட்டதாயிற்று:—அதிகரணத்துள்ள பிரத்தியக்ஷயோக்கியத்தன்மையும் பிரதியோகியின் அநுபலம்பமும அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சககாரியாம்; பிரதியோகியின்கண்ணுள்ள பிரத்தியக்ஷயோக்கியத்தன்மையும், பிரதியோகியின் அநுபலம்பமும் அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சககாரியாம் என்னும் இத்தகைய நியமத்தைச் சித்தாந்தி கூறின் அதுவும் சம்பவியாது.

ஏனெனின், அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் அதிகரணத்தின் யோக்கியத்தன்மை ஹேது வாகுமாயின், வாயுவில் உருவமுடையதின் பேதத்தினது பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. அது உண்டாகலாகாது. "வாயு உருவம் உடையதன்று" என்னும் பிரத்தியக்ஷம் எல்லோருக்கு முண்டாகின்றது. சொல்லப்படுகின்ற கிரமமாக இத்தன்மைப் பிரத்தியக்ஷம் சம்பவிக்கின்றது. ஆண்டு அந்நியோந்நியாபாவத்தின் அதிகரணம் வாயுவாம். அது பிரத்தியக்ஷ யோக்கியமன்று. வாயுவிற்கு ஆக்கிரகத்தால் பிரத்தியக்ஷ யோக்கியத்தன்மை அங்கீகரிக்கின், வாயுவில் குருத்துவ முடையதின் பேதமும் பிரத்தியக்ஷமாதல் வேண்டும். "வாயு குருத்துவ முடையதன்று" என்னும் பிரத்தியக்ஷம் ஒருவருக்கு முண்டாகிறதில்லை. சொல்லப்படுகின்ற கிரமத்தால் சம்பவிக்கிறதில்லை.

ஸ்தம்பத்தில் பேயுடையதின் பேதம் அப்பிரத்தியக்ஷமாம். அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் அதிகரணத்தின் யோக்கியதை ஏதுவாயின் பேயுடையதின் பேதத்தினது அதிகரணம் ஸ்தம்பமாம். அது பிரத்தியக்ஷ யோக்கியமா யிருத்தலின் பேயுடையதின் அந்நியோந்நியாபாவ வடிவமாகிய பேயுடையதின் பேதம் பிரத்தியக்ஷமாதல் வேண்டும். 'ஸ்தம்பம் பேயுடையதன்று' என்னும் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஆதலால், பிரத்தியக்ஷ யோக்கிய அதிகரணத்தில் பிரதியோகியின் அநுபலம்பரூப யோக்கியாநுபலம்பம் அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் சககாரியாமென்னும் நியமம் சம்பவியாது.

அங்ஙனமே அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் பிரதியோகியின் யோக்கியதையைச் சககாரியென்று அங்கீகரிக்கின், ஜலபரமாணுவில் பிருதிவித்தன்மை அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷம் உண்டாதல்வேண்டும். ஏனெனின், ஜலபரமாணுவின்கண்ணுள்ள பிருதிவித்தன்மையினது அத்தியந்தாபாவத்தின் பிரதியோகி பிருதிவித்தன்மையாம். அதன் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம் கடமுதலியவற்றின்கண் உண்டாகின்றதாகலின் பிரத்தியக்ஷயோக்கியம் பிரதியோகியாம். ஜலபரமாணுவில் அதன் உபலம்பம் (உணர்ச்சி) உண்டாகிறதில்லை; ஆதலால், அநுபலம்பமாம். ஜலபரமாணுவோடு நேத்திரத்திற்குச் சையோக முண்டாகின்றது. ஆதலால், ஜல பரமாணுவின்கண்ணுள்ள பிருதிவித்தன்மை அத்தியந்தாபாவத்தோடு நேத்திரத்திற்குச் சுவசையுக்த விசேஷணத்தன்மைச் சம்பந்தமுமுளது.

"பரமாணு நிரவயவமாம். அதனோடு நேத்திரத்திற்குச் சையோகம் சம்பவியாது. ஏனெனின், பதார்த்தத்தின் ஏகதேசத்தில் சையோக முண்டாகின்றது. அவயவத்தைத் தேசமென்பர். பரமாணுவிற்கு அவயவ வடிவமாகிய தேசம் சம்பவியாது. சகல பரமாணுக்களிலும் சையோகத்தைக் கூறின், அவ்வியாப்பியவிருத்தி சையோகத்தின் சுபாவ மாகாது. ஓரிடத்திருந்து ஓரிடத்தில்லாதிருப்பது அவ்வியாப்பியவிருத்தி யெனப்படும். ஆதலால், பரமாணுவோடு நேத்திரத்திற்குச் சையோகம் உண்டாகிறதில்லை" என்றிவ்வாறு கூறின், அது பொருந்தாது.

ஏனெனின், பரமாணுவிற்குச் சையோகம் இல்லையாயின் துவியணுக முண்டாகாது. பரமாணுவில் மகத்துவாத்தியந்தாபாவத்தின் நேத்திர சம்பந்தமான பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. அது உண்டாகாது. பரமாணுவில் மகத்துவாபாவத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகின்றதென்பது மேல் விளக்கமாகும்.

ஆதலால், நேத்திரசையுக்த விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தால் எங்ஙனம் பரமாணுவில் மகத்துவாபாவத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகின்றதோ, அங்ஙனமே நேத்திரசையுக்த விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தால் பிருதிவித்தன்மை அபாவத்தின் பிரத்தியக்ஷமு முண்டாதல்வேண்டும். நேத்திர

சையுக்தபரமாணுவில் மகத்துவாபாவத்தைப்போலப் பிருதிவித்தன்மை அபாவத்தின் விசேஷணத்தன்மைச் சம்பந்த முண்டு. பரமாணுவின் சையோகம் வியாப்பிய விருத்தியாகின்றது. அது மஞ்சூஷையின் உரையில் எழுதப்பட்டுளது.

ஆதலால், ஜல பரமாணுவில் பிருதிவித்தன்மை அத்தியந்தாபாவத்தினது பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரி இருத்தலால் அதன் பிரத்தியக்ஷமு மாதல் வேண்டும். சொல்லப்படும் கிரமத்தால் ஜலபரமாணுவில் பிருதிவித்தன்மை அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. இவ்வாற்றாற் சகல அபாவங்களின் பிரத்தியக்ஷத்திலும் ஒரு வடிவினதாகிய யோக்கியாநுபலம்பம் சம்பவியாது. அந்நியோந்நியாபாவ அத்தியந்தாபாவங்களின் பிரத்தியக்ஷத்தில் வேறு வேறு வடிவுடைய யோக்கியாநுபலம்பம் சககாரியா மென்பதும் பொருந்தாது.

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—

யோக்கியத்தில் அநுபலம்பம் யோக்கியாநுபலம்பம் என ஏழாம் வேற்றுமைத் தொகையாக்கின், அதிகரணத்தில் பிரத்தியக்ஷ யோக்கியத்தன்மை உண்டாகுங்கால், ஆண்டு யோக்கியாநுபலம்பம் பெறப்படுவ தாகின்றது. யோக்கியத்தின் அநுபலம்பம் யோக்கியாநுபலம்பம் என்று ஆறும் வேற்றுமைத்தொகையாக்கின், பிரதியோகியின்கண் பிரத்தியக்ஷயோக்கியதை யுண்டாகுங்காலத்தில், ஆண்டு யோக்கியாநுபலம்பம் பெறப்படுவதாகின்றது. ஆண்டு ஒவ்வொரு வகையாக யோக்கியாநுபலம்பம் அங்கீகரித்தலில் தோஷம் கூறப்பட்டது. அங்ஙனமே அந்நியோந்நியாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் அதிகரண யோக்கியத்தன்மைச் சாதிக்கும் ஏழாம்வேற்றுமைத் தொகையினையுடைய யோக்கியாநுபலம்பத்தை அங்கீகரித்து, அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் பிரதியோகியின் யோக்கியதையைச் சாதிக்கும் ஆறும்வேற்றுமைத் தொகையினையுடைய யோக்கியாநுபலம்பத்தைச் சககாரியாக அங்கீகரிக்கின், அபாவபேதத்தால் இரண்டின் அங்கீகாரமும் உண்டாகின்றது. அதன்கண்ணுந் தோஷங் கூறப்பட்டது. ஆதலால், வேறு வகை யோக்கியாநுபலம்பம் சககாரியாம். யோக்கியாநுபலம்ப மென்னும் சொல்லில் ஏழாம் வேற்றுமைத் தொகையும் ஆறும் வேற்றுமைத் தொகையும் இல்லை; ஆனால் 'நீலக்குடம்' என்

னும் சொல்லிற்போல முதல்வேற்றுமைத் தொகை யிருக்கின் றது. அஃதிவ்வா றிருக்கின்றது:—எங்ஙனம்: 'நீலம் குடம் நீலக்குடம்' என்னுஞ் சொல்லில் முதல் வேற்றுமை யிருக்கின் றது. அதனை வியாகரணத்தில் கர்மதாரயன் (பண்புத்தொகை) என்பர்.

யாண்டுப் பண்புத்தொகை யுளதோ, ஆண்டுப் பூர்வ பதார்த் தத்திற்கு உத்தரபதார்த்தத்தோடு அபேதவுணர்ச்சி யுண்டா கின்றது. எங்ஙனம் 'நீலக்குடம்' என்னுஞ் சொல்லில் பண்புத் தொகையாக்கின் நீலபதார்த்தத்திற்குக் கடபதார்த்தத்தோடு அபேதவுணர்ச்சி யுண்டாகின்றதோ, அங்ஙனமே 'யோக்கிய மாகிய அநுபலம்பம் யோக்கியாநுபலம்பம்' எனப் பண்புத் தொகை யாக்கின், யோக்கியாநுபலம்ப மென்னுஞ் சொல்லி னுல் யோக்கிய பதார்த்தத்திற்கு அநுபலம்ப பதார்த்தத்தோடு அபேதவுணர்ச்சி யுண்டாகின்றது. ஆதலால், அபாவத்தின் பிரதியோகியும் அதிகரணமும் வேண்டுமா றிருக்குக. அவற்றின் யோக்கியத்தன்மையினுற் பிரயோஜனம் இல்லை. அநுபலம்பத் தில் யோக்கியதை வேண்டும்.

யாண்டுப் பிரதியோகியின் அநுபலம்பம் யோக்கியமா கின்றதோ, ஆண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. யாண்டுப் பிரதியோகியின் அநுபலம்பம் அயோக்கியமாகின்ற தோ, ஆண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகிறதில்லை. அநுபலம்பத்தில் யோக்கியதை அயோக்கியதைகள் இவ்வா றிருக்கின்றன:—உபலம்ப அபாவத்தினை அநுபலம்ப மென்பர். பிரதீதி, ஞானம், உபலம்பம் என்பன பரியாயச்சொற்கள். பிரதி யோகியினது பிரதீதியின் அபாவம் அநுபலம்பமென்னுஞ் சொல் லின் பொருளாம்.

ஆதலால், இந்திரியத்தால் கடாபாவத்தின் பிரத்தியக்ஷத் தில் கடத்தினது பிரதீதியின் அபாவம் சககாரியாம். ஆண்டுக் கடாபாவத்தின் ஞானம் பிரமை வடிவினதாகிய பயனும். கட ஞானத்தின் அபாவம் கடாபாவப்பிரமையின் சககாரி காரண மாம். அக் கடஞானத்தின் அபாவம் யோக்கியமாதல் வேண்டும். கடஞானஅபாவத்தினையே கடாநுபலம்ப மென்பர். அவ் வபாவ வடிவினதாகிய அநுபலம்பத்தில் வேறுவகை யோக்கியதையோ சம்பவியாது. ஆனுல், எந்த அநுபலம்பத்தின் உபலம்பமாகிய

பிரதியோகி யோக்கியமாகின்றதோ, அவ் வநுபலம்பம் யோக்கிய மெனப்படுகின்றது. எவ் வநுபலம்பத்தின் பிரதியோகியாகிய உபலம்பம் அயோக்கியமாகின்றதோ, அவ் வநுபலம்பம் அயோக்கிய மெனப்படுகின்றது. இதனால் இது பெறப்பட்டதாயிற்று:—யோக்கிய உபலம்பத்தின் அபாவ வடிவ யோக்கியாநுபலம்பம் சககாரியாம். இவ்வாற்றால் அநுபலம்பத்தின் யோக்கியதையைக் கூறுதலின் முடிவு உபலம்பத்தின் யோக்கியதையில் உண்டாகின்றது. ஆதலால், உபலம்பத்தில் யோக்கியதை வேண்டும்.

யோக்கிய உபலம்பத்தின் அபாவம் யோக்கியாநுபலம்பமெனப்படுகின்றது. உபலம்பத்தின் யோக்கியதைக்கு அநுபலம்பத்தில் விவகாரம் உண்டாகின்றது. முன்னரே, யோக்கிய உபலம்பத்தின் அபாவத்தினை யோக்கியாநுபலம்ப மெனின் இலாகவமும், உபலம்பமாகிய பிரதியோகியின்வாயிலாக அநுபலம்பத்திற்கு யோக்கியங் கூறுதல் பயனின்மையுமா மெனப்பட்டது. என்றாலும் யோக்கியாநுபலம்ப மென்னுஞ் சொல்லிற்கு வியாகரண மரியாதையின்படி பொருள்செய்யின் அப்போது அநுபலம்பத்தில் யோக்கியதை காணப்படுகின்றது. ஆதலால், உபலம்பத்தின்கண்ணுள்ள முக்கிய யோக்கியதைக்கு அநுபலம்பத்தோடு ஆரோபஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் இது பெறப்பட்ட பொருளாம்.

யாண்டுப் பிரதியோகியினது யோக்கிய உபலம்பத்தின் அபாவம் உண்டாகின்றதோ, ஆண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷமுண்டாகிறது. யாண்டுப் பிரதியோகியினது சத்தையினால் நியமமாகப் பிரதியோகியினது உபலம்பத்தின் சத்தை உண்டாகிறதோ, அவ் வுபலம்பம் யோக்கியமாம். அதன் அபாவமாகிய அநுபலம்பமும் யோக்கிய மெனப்படுகின்றது. யாண்டுப் பிரதியோகியிருந்தும் நியமமாகப் பிரதியோகியின் உபலம்பம் உண்டாகவில்லையோ, அவ் வுபலம்பம் அயோக்கியமாம். அதன் அபாவமாகிய அநுபலம்பமும் அயோக்கிய மெனப்படுகின்றது.

பிரகாசத்தில் குடத்தின் இருப்பு உளதாயின், அப்போது நியமமாகக் குடத்தின் உபலம்ப முண்டாகின்றது. ஆண்டுக் குடத்தின் உபலம்பம் யோக்கியமாம். அதன் அநுபலம்பம் யோக்கிய மெனப்படுகின்றது. அங்ஙனமே சையோகசம்பந்

தத்தால் யாண்டுப் பேயுளதோ, ஆண்டுப் பேயின் சத்தையி னல் நியமமாகப் பேயின் உபலம்பம் உண்டாகிறதில்லை. ஆதலாற் பேயின் உபலம்பம் அயோக்கியமாம். அதன் அபாவமாகிய பேயின் அநுபலம்பமும் *அயோக்கிய மெனப்படுகின்றது. இவ்வாற்றாற் கடாநுபலம்பம் யோக்கியமாம். அது கடாபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் ஏதுவாம். பேயின் அநுபலம்பம் யோக்கியமன்று. ஆதலால், பேயின் அநுபலம்பத்தால் பேயினது அத்தியந்தாபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. கடத்தின் அபாவாதிகரணத்தில் கடத்தின் சத்தையும் கடவுபலம்பத்தின் சத்தையும் சம்பவிக்கிறதில்லை: என்றாலும் கடத்திற்கும் கட வுபலம்பத்திற்கும் "பூதலத்திற் கட முளதாயின், அப்போது கட வுபலம்பம் உளதாகின்றது" என்று இவ்வாறு ஆரோப முண்டாகின்றது. ஆதலால், அபாவ அதிகாணத்தி லும் ஆரோபிக்கப்பட்ட கடத்தின் சத்தையும், கடஅநுபலம்பம் இருக்கினும் ஆரோபிக்கப்பட்ட கட வுபலம்பத்தின் சத்தையும் சம்பவிக்கின்றன.

இதனல் இது நிச்சயிக்கப்பட்ட பொருளாம்:—எவ் வபாவத்தின் அதிகரணத்தில் பிரதியோகியின் ஆரோபஞ் செய்யப் பிரதியோகியின் உம்லம்பத்தினது ஆரோபம் நியமமாக வுண்டாகின்றதோ அவ் வுபலம்பம் யோக்கியமாம். அதன் அநுபலம்பமும் யோக்கிய மெனப்படுகின்றது. அன்றியும், அவ்வதிகரணத்தில் அவ் வபாவம் பிரத்தியக்ஷமாம். எவ் வாபாவத்தின் அதிகாணத்தில் எவ் வபாவத்தினது பிரதியோகியை ஆரோபிக்கப் பிரதியோகியினது உபலம்பத்தின் ஆரோப முண்டாகிறதில்லையோ அவ் வபாவம் அப்பிரத்தியக்ஷமாம்.

எங்ஙனம்: அந்தகாரத்தில் கடாபாவம் பிரத்தியக்ஷமன்று. ஏனெனின், அந்தகாரத்தில் "ஈண்டுக் கடம் உளதாயின் அப்போது அதன் உபலம்ப முளதாம்" என்றிவ்வாறு கடத்தின் ஆரோபத்தால் கடத்தினது உபலம்பத்தின் ஆரோபம் நியமமாகச் சம்பவிப்ப தில்லை. இதனல் அந்தகாரத்திற் கடத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகிறதில்லை. ஸ்தம்பத்திற் பேயின் பேதம் பிரத்தியக்ஷமாம்.

ஏனெனின், "தர்தான்மியமாகப் பேய் ஸ்தம்பத்தி லுளதாயின் அப்போது உபலம்பிக்க (அறிய) ப்படும்" என்று இவ்

வாறு ஸ்தம்பத்திலுள்ள தாதான்மிய சம்பந்தத்தால் பேயை ஆரோபித்தலாற் பேயினது உபலம்பத்தின் ஆரோபம் நியமமாக வுண்டாகின்றது. ஏனெனின், ஸ்தம்பத்தில் தாதான்மிய சம்பந்தத்தால் ஸ்தம்பம் இருக்கின்றது; அதன் உபலம்பம் நியமமாக வுண்டாகின்றது. அங்ஙனமே பேயும் தாதான்மிய சம்பந்தத்தால் ஸ்தம்பத்தி லுளதாயின் ஸ்தம்பத்தைப்போல அதன் உபலம்பமும் நியமமாக வுண்டாகும். அவ் வுபலம்பத்தின் இன்மையால் ஸ்தம்பத்தில் தாதான்மிய சம்பந்தத்தால் பேய் இல்லை. ஆதலால், பேயின் தாதான்மிய சம்பந்த அவச்சின்ன அபாவம் ஸ்தம்பத்தில் இருக்கின்றது. தாதான்மிய சம்பந்த அவச்சின்ன அபாவத்தினையே அந்நியோந்நியாபாவ மென்பர்.

ஸ்தம்பத்தில் சையோக சம்பந்தாவச்சின்ன பேயின் அத்தியந்தாபாவமும், அங்ஙனமே சமவாய சம்பந்தாவச்சின்ன பேயின் அத்தியந்தாபாவமும் பிரத்தியக்ஷமன்று. ஏனெனின், "ஸ்தம்பத்தில் சையோகத்தினாலாவது, சமவாயத்தினாலாவது பேயுளதாயின் அப்போது அதன் உபலம்ப முளதாம்" என்றிவ்வாறு சையோக சம்பந்தத்தினாலாவது சமவாயசம்பந்தத்தினாலாவது ஸ்தம்பத்தில் பேயினை ஆரோபிக்கிற் பேயின் உபலம்பத்தினது ஆரோப முண்டாகிறதில்லை.

ஏனெனின், யாண்டு மயானத்தின் மரமுதலியவற்றில் சையோகசம்பந்தத்தாற் பேயிருக்கிறதோ, அன்றியும் தனது அவயவங்களிற் சமவாயசம்பந்தத்தாற் பேயுளதாகிறதோ, ஆண்டும் பேயின் உபலம்ப முண்டாகிறதில்லை. எவை ஸ்தம்பத்தில் சையோக சம்பந்தத்தினாலாவது சமவாயசம்பந்தத்தினாலாவது இருக்கின்றனவோ, அவ் வெல்லாவற்றின் உபலம்பமு முளதாயின், ஸ்தம்பத்தில் சையோக சம்பந்தத்தாலாவது சமவாய சம்பந்தத்தாலாவது பேயை ஆரோபித்தலால் பேயினது உபலம்பத்தின் ஆரோப முண்டாம்.

ஸ்தம்பத்திற்றானே துவியணுக முதலியவற்றின் சையோகமும் வாயுவின் சையோகமும் இருக்கின்றன; ஆதலால், துவியணுகமும் வாயுவும் சையோக சம்பந்தத்தால் ஸ்தம்பத்தின் கண் ணுள்ளனவாம்; அவற்றின் உபலம்ப முண்டாகிறதில்லை. சமவாய சம்பந்தத்தால் குருத்துவமுதலிய அப்பிரத்தியக்ஷ குணங்க ளிருக்கின்றன. அவற்றின் உபலம்பமும் ஸ்தம்பத்

தில் உண்டாகிறதில்லை. ஆதலால், ஸ்தம்பத்தில் சையோக சம்பந்தத்தினாலாவது சமவாய சம்பந்தத்தினாலாவது பேயை ஆரோபித்தலால் அதன் உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகிறதில்லை. ஆதலால், ஸ்தம்பத்தில் சையோக சம்பந்தாவச்சின்ன பேயின் அத்தியந்தாபாவமும், சமவாய சம்பந்தாவச்சின்ன பேயின் அத்தியந்தாபாவமும் அப்பிரத்தியக்ஷமாம்.

யாண்டுத் தாதான்மிய சம்பந்தத்தாற் பேயுளதாகின்றதோ, ஆண்டுப் பேயின் உபலம்பம் நியமமாக வுண்டாகிறதில்லை. ஏனெனின், தாதான்மிய சம்பந்தத்தால் பேயில் பேயிருக்கின்றது; உபலம்பம் உண்டாகிறதில்லை. ஆதலால், தாதான்மிய சம்பந்தத்தால் பேயை ஆரோபித்தலானும் நியமமாகப் பேயினது உபலம்பத் தின் ஆரோபம் சம்பவிப்பதில்லை.

அத்தியந்தாபாவத்தின் தன்மையே அந்நியோந்நியாபாவத்தின்கண் ணிருக்கின்றது. என்றாலும் வேறு வகையாற் பேதமுண்டு. ஸ்தம்பத்தில் தாதான்மிய சம்பந்தத்தா லுள்ளது எதுவோ அதன் உபலம்பம் நியமமாக வுண்டாகின்றது. ஸ்தம்பத்தில் தாதான்மிய சம்பந்தத்தால் ஸ்தம்ப மிருக்கின்றது; வேறில்லை. ஸ்தம்பத்தின் உபலம்பம் நியமமாக வுண்டாகின்றது. வேறோர் பொருள் ஸ்தம்பத்தில் தாதான்மிய சம்பந்தத்தால் இருக்கின், ஸ்தம்பத்தைப்போல் அதன் உபலம்பமும் வேண்டும். ஆதலால், தாதான்மிய சம்பந்தத்தால் பேயை ஆரோபித்தலால் அதன் உபலம்பத்தின் ஆரோபம் நியமமாக வுண்டாகின்றது.
''தாதான்மியத்தால் பேய் ஸ்தம்பமாயின் அப்போது அந்த ஸ்தம்பத்தின் உபலம்பமே யுண்டாம்'' என்று இவ்வாறு ஸ்தம்பத்தில் தாதான்மியத்தால் பேயை ஆரோபித்தலால் பேயினது உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகின்றது. ஆதலால், ஸ்தம்பத்தில் பேயின் பேதம் பிரத்தியக்ஷ மாகின்றது. அதே ஸ்தம்பத்தில் பேயுடையதன் பேதம் அப்பிரத்தியக்ஷமாயிருக்கின்றது. ஏனெனின், ''தாதான்மியத்தால் ஸ்தம்பம் பேயுடையதாமாயின் அப்போது பேயுடைமையாக ஸ்தம்பத்தின் உபலம்ப முண்டாம்'' என்று இவ்வாறு ஸ்தம்பத்தில் தாதான்மியத்தால் பேயுடையதின் ஆரோபத்தால் பேயுடையதின் உபலம்பத்தினது ஆரோபம் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், பேயினையுடைய மரமுதலியவற்றில் பேயுடைமையின் உபலம்பம் உண்டாகிற

தில்லை. ஆதலால், ஸ்தம்பத்தில் பேயுடைமையின் பேதம் அப்பிரத்தியக்ஷமாம். பேயின் பேதத்தினைப்போலப் பிரத்தியக்ஷமன்று. இவ்வாறு அறிவுடையோர் அநுபவத்தாற் கண்டுகொள்க. பிரதியோகியினது உபலம்பத்தின் ஆரோபம் யாண்டுச் சம்பவிக்கிறதோ ஆண்டு அவ் வபாவம் பிரத்தியக்ஷமாம்.

88. உபலம்பத்தை ஆரோபித்தலாலும் ஆரோபியாமையாலும் அபாவத்தின் பிரத்தியக்ஷமும் அப்பிரத்தியக்ஷமு முண்டாமென்பதில் உதாரணம்

அங்ஙனமே "ஆத்மாவினிடத்துச் சுகமாவது துக்கமாவது இருக்குமாயின், அப்போது சுகத்தின் அல்லது துக்கத்தின் உபலம்ப முளதாகும்" என்று இவ்வாறு ஆத்மாவினிடத்துச் சுக துக்கங்களை ஆரோபித்தலால் அவற்றின் உபலம்பத்தினது ஆரோபமும் நியமமாக வுண்டாகின்றது. ஏனெனின், என்றும் அறியப்படாத சுகதுக்கங்கள் உண்டாகிறதில்லை; அறியப்பட்டனவே யுண்டாம். ஆதலால், சுகதுக்கங்களின் ஆரோப முண்டாகவே, அவற்றின் உபலம்பத்தினது ஆரோபம் நியமமாக வுண்டாகிறது. இதனால் ஆத்மாவிலுள்ள சுகாபாவ துக்காபாவங்கள் பிரத்தியக்ஷமாம். "ஆத்மாவினிடத்துத் தர்மமாவது அதர்மமாவது உளதாயின் அப்போது அதன் உபலம்ப முளதாம்" என்றிவ்வாறு தர்மாதர்மங்களை ஆரோபித்தலால், அவற்றின் உபலம்பத்தினது ஆரோப முண்டாகிறதில்லை. ஏனெனின், பிரத்தியக்ஷ ஞானத்தை உபலம்ப மென்பர். ஞானம் பிரதீதி உபலம்ப மென்னுஞ் சொற்கள் பரியாயமா யிருத்தலின் ஞானமாத்திரத்திற்குப் பெயர் உபலம்பமாமாயினும், இப் பிரசங்கத்தில் எவ்விந்திரியத்தால் அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதோ, அவ் விந்திரிய ஜந்நியஞானம் உபலம்ப மென்னுஞ் சொல்லாற் கொள்ளப்படு மென்றறிக.

எங்ஙனம் சுகாபாவத்தின் பிரத்தியக்ஷம் மனதினால் உண்டாகுமிடத்துச் சுகத்தை ஆரோபித்தலால் சுகத்தின் உபலம்பத்தினது ஆரோபம் அதாவது மானசப் பிரத்தியக்ஷத்தினது ஆரோபம் உண்டாகிறதோ, அங்ஙனமே வாயுவில் உருவ மின்மையின் சாக்ஷுஷப்பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டு உருவத்தை ஆரோபித்தலால் அதன் உபலம்பத்தினது ஆரோபம்

அதாவது சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தின் ஆரோப முண்டாகின்றது.

இவ்வாறு அந்நிய விந்திரியத்தால் யாண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டு அந்நிய விந்திரியத்தால் தோன்றிய பிரத்தியக்ஷமே உபலம்பமென்னுஞ் சொல்லிற்குப் பொருளென அறிக. அன்றியும், தர்மாதர்மங்கள் கேவலஞ் சாஸ்திரத்தினால் அறியப்படுவனவாம். அவற்றின் உபலம்பம் என்றும் இந்திரிய ஜந்நிய ஞானமாகாது. ஆதலால், தர்மாதர்மங்களை ஆரோபித்தலால் அவற்றின் உபலம்பத்தினது ஆரோபம் உண்டாகின்றதில்லையாகலின், தர்மாபாவ அதர்மாபாவங்கள் பிரத்தியக்ஷம் அன்று. அங்ஙனமே வாயுவில் குருத்துவ அத்தியந்தாபாவம் பிரத்தியக்ஷமன்று. வாயுவில் உருவத்தின் அத்தியந்தாபாவம் பிரத்தியக்ஷமாம்.

ஏனெனின், "வாயுவில் குருத்துவ முளதாயின் அதன் உபலம்ப முளதாம்" என்றிவ்வாறு குருத்துவத்தை ஆரோபித்தலால் குருத்துவத்தினது உபலம்பத்தின் ஆரோப முண்டாகிறதில்லை. ஏனெனின், யாண்டுப் பிருதிவி ஜலங்களில் குருத்துவ முண்டோ, ஆண்டும் குருத்துவத்தின் பிரத்தியக்ஷமாகிய உபலம்ப முண்டாகிறதில்லை. ஆனால், குருத்துவத்தின் அநுமிதி ஞானம் உண்டாகின்றது. ஆதலால், குருத்துவத்தை ஆரோபித்தலால் உபலம்பத்தின் ஆரோப முண்டாகிறதில்லை. இக் காரணத்தால் வாயுவில் குருத்துவாபாவம் பிரத்தியக்ஷ மன்று. வாயுவில் உருவம் உளதாயின் கட வுருவத்தினைப்போல் வாயுவுருவத்தின் உபலம்பம் உண்டாம். உருவமாத்திரத்தின் உபலம்பமே உண்டாகாது; வாயுவின் உபலம்பமு முண்டாகும்.

ஏனெனின், எந்தத் திரவியத்தில் மகத்துவ குணமிருந்து உற்பூத உருவ மிருக்கின்றதோ, அந்தத் திரவியம் பிரத்தியக்ஷமாம். எந்தத் திரவியத்தில் மகத்துவம் இருக்கின்றதோ அதன் உருவம் பிரத்தியக்ஷமாம். பரமாணு துவியணுகங்களில் மகத்துவ மில்லை. அவற்றின் உருவம் பிரத்தியக்ஷமன்று. ஆதலால், திரியணுகமுதலிய வாயுவில் மகத்துவ முண்டு. அதினுருவ முளதாயின் அத் திரியணுகமுதலிய வடிவினதாகிய வாயுவின் பிரத்தியக்ஷ முண்டாம்; அத னுருவத்தின் பிரத்தியக்ஷமு முண்டாம். இவ்வாறு பரமாணு துவியணுக வடிவினதாகிய வாயுவைவிட்

டுத் திரியணுகமுதலிய வடிவினதாகிய வாயுவில் உருவத்தை ஆரோபித்தலால் உருவத்தினது உபலம்பத்தின் ஆரோபமுண்டாகின்றது. ஆதலால், திரியணுகமுதலிய வடிவினதாகிய வாயுவில் உருவத்தின் அபாவம் பிரத்தியக்ஷமாம்.

பரமாணு துவியணுக வடிவ வாயுவில் உருவத்தின் ஆரோபமுண்டாகியும் மகத்துவமின்மையால் உருவத்தினது உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகாமையின் பரமாணு துவியணுக வடிவினதாகிய வாயுவில் உருவத்தின் அபாவம் பிரத்தியக்ஷமன்று. அங்ஙனமே ஜலபரமாணுவில் பிருதிவித் தன்மையின் அபாவம் பிரத்தியக்ஷமன்று. ஏனெனின், "ஜலபரமாணுவில் பிருதிவித்தன்மை யுளதாயின் அதல் உபலம்பமுண்டாகின்றது" என்று இவ்வாறு பிருதிவித்தன்மையின் ஆரோபத்தால் பிருதிவித்தன்மையினது உபலம்பத்தின் ஆரோபமுண்டாகிறதில்லை. ஏனெனின், ஆசிரயம் பிரத்தியக்ஷமாயின் ஜாதியின் பிரத்தியக்ஷம் உண்டாம். ஆதலால், ஜல பரமாணுவில் ஜலத்துவம் இருக்கின்றது.

எங்ஙனம் அந்த ஜலத்துவத்தின் பிரத்தியக்ஷமில்லையோ, அங்ஙனமே ஆரோபிக்கப்பட்ட பிருதிவித்தன்மையினது உபலம்பத்தின் ஆரோபம் சம்பவிக்கிறதில்லை. ஆதலால், ஜல பரமாணுவில் பிருதிவித்தன்மையினது அபாவம் பிரத்தியக்ஷமன்று. பரமாணுவில் மகத்துவத்தின் அபாவம் பிரத்தியக்ஷமாம். ஏனெனின், பரமாணுவில் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரி உற்பூத வுருவமும், துவக்கிந்திரியப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரியாகிய உற்பூத பரிசமும் இருக்கின்றன; ஆனால், மகத்துவம் இல்லை. அதனால் பரமாணுவின் பிரத்தியக்ஷம் உண்டாகிறதில்லை. பரமாணுவின் பிரத்தியக்ஷ யோக்கிய உருவமுதலிய குணங்களின் பிரத்தியக்ஷமும் மகத்துவமின்மையால் உண்டாகிறதில்லை. மகத்துவமுடைய திரவியத்தின் உருவமுதலிய குணங்கள் பிரத்தியக்ஷமாம். பரமாணுவில் மகத்துவம் உளதாயின், பரமாணுவின் பிரத்தியக்ஷமுண்டாம்; பரமாணுவின் பிரத்தியக்ஷ யோக்கிய குணங்களின் பிரத்தியக்ஷமும் உண்டாம். கடமுதலியவற்றின் மகத்துவம் பிரத்தியக்ஷமாம். ஆதலால், உருவமுதலியவற்றினைப்போல மகத்துவ குணமும் பிரத்தியக்ஷ யோக்கியமாம். ஆகாசமுதலியவற்றில்

மகத்துவமோ விருக்கின்றது. ஆனுல், உற்பூதவுருவ சமானுதிகரண மகத்துவத்தின் பிரத்தியக்ஷ முண்டாம். ஆகாசமுதலியவற்றில் உற்பூதவுருவ மில்லை. ஆதலால், அவற்றின் மகத்துவத்தினது பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. என்ருலும் மகத்துவ குணம் பிரத்தியக்ஷ யோக்கியமாம்.

இவ்வாற்ருற் பரமாணுவில் மகத்துவமின்றிப் பிரத்தியக்ஷத்தின் வேறு சாமக்கிரி யிருக்கின்றது. மகத்துவ முளதாயின் பரமாணுவின் பிரத்தியக்ஷமும், அதன் குணங்களின் பிரத்தியக்ஷமும் உண்டாம். ஆதலால், பரமாணுவில் மகத்துவத்தை ஆரோபித்தலால் அதன் உபலம்பத்தின் ஆரோபம் சம்பவிக்கின்றது. மகத்துவத்தை ஆரோபித்தலால் கேவல மகத்துவத்தினது உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகிறதில்லை; ஆனுல், பரமாணுவினது உபலம்பத்தின் ஆரோபமும், பரமாணுவில் சமவேதமான பிரத்தியக்ஷ யோக்கியகுண முதலியவற்றினது உபலம்பத்தின் ஆரோபமு முண்டாகின்றன; பரமாணுவில் மகத்துவ முளதாயின் பரமாணுவின் உபலம்ப முண்டாம்; பரமாணுவிற் சமவேதித்துள்ள பிரத்தியக்ஷ யோக்கிய குணங்களின் உபலம்பமு முண்டாம். பிரத்தியக்ஷ யோக்கிய ஜாதியின், அங்ஙனமே தொழிலின் உபலம்பமும் உண்டாம். அப் பரமாணு முதலியவற்றின் உபலம்ப மில்லை. ஆதலால், பரமாணுவில் மகத்துவ மில்லை. இவ்வாற்ருன் பரமாணுவில், மகத்துவாபாவம் பிரத்தியக்ஷமாம். இவ்வாறு எந்த அதிகாணத்தில் எவ் வபாவத்தின் பிரதியோகியை ஆரோபித்தலால் உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றதோ, அவ் வதிகரணத்தில் அவ் வபாவம் பிரத்தியக்ஷமாம்.

89. எவ் விந்திரியத்தால் உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றதோ அவ் விந்திரியத்திஞல் உபலம்பத்தை ஆரோபித்தலால் அபாவம் பிரத்தியக்ஷமாமெனல்

ஆனுல், எவ் விந்திரியத்தாற் ருேன்றிய உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தால் அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. எங்ஙனம்: "பூதலத்திற் கடம் உளதாயின் கண்ணுற் கடத்தின் உபலம்பம் உண்டாதல் வேண்

டும்; உபலம்பம் உண்டாகிறதில்லை. ஆதலால், கடமில்லை'' என்று இவ்வாறு யாண்டு நேத்திரஜந்நிய உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றதோ, ஆண்டுக் கடாபாவத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. பூதலத்திற் கடமுளதாயின் துவக்கிந்திரியத்தால் கடத்தின் உபலம்பம் உண்டாதல்வேண்டும். இவ்வாற்றாற் குருடனுக்காவது இருளிலாவது துவக்கிந்திரிய ஜந்நிய உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகுங்கால் ஆண்டுக் கடாபாவத்தின் துவக்கிந்திரியப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

இவ்வாறு எவ் விந்திரியத்தினது உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தானே அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. வாயுவில் உருவ மின்மையின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது; துவக்கிந்திரியப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஏனெனின், ''வாயுவில் உருவ மிருக்குமாயின் உருவத்தின் நேத்திரேந்திரிய ஜந்நிய உபலம்ப முண்டாம்; உபலம்பமோ உண்டாகிறதில்லை. ஆதலால், வாயுவில் உருவமின்று'' என்றிவ்வாறு நேத்திரேந்திரிய ஜந்நிய உருவ உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகிறது. ''வாயுவில் உருவ முளதாயின் துவக்கால் அதன் உபலம்ப முண்டாகும்'' என்பதாகத் துவக்கிந்திரிய ஜந்நிய உருவ உபலம்பத்தின் ஆரோப முண்டாகிறதில்லை. ஏனெனின், உருவ சாக்ஷாத்காரத்திற்கு ஏது கேவலம் நேத்திரமாம்; துவக்கன்று. அங்ஙனமே இரசனைமுதலிய இந்திரிய ஜந்நிய உருவ உபலம்பத்தின் ஆரோபமு முண்டாகிறதில்லை. ஆதலால், உருவ அபாவத்திற்கு நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷமே யுண்டாம். அங்ஙனமே மதுர திரவியத்தில் கைப்புச்சுவை யின்மையின் இரசனேந்திரியப் பிரத்தியக்ஷமே யுண்டாகின்றது.

ஏனெனின், ''கற்கண்டில் கைப்பிரச முளதாயின், அதன் உபலம்பம் இரசனேந்திரியத்தா லுண்டாகும்; உபலம்ப முண்டாகிறதில்லை; ஆதலால், கற்கண்டில் கைப்பிரச மில்லை'' என்று இவ்வாறு கற்கண்டில் கைப்பிரசத்தை ஆரோபித்தலால் இரசனையாற் றோன்றிய கைப்பிரச வுபலம்பத்தின் ஆரோப முண்டாகிறது. மற்றை இந்திரியங்களாற் றோன்றிய உபலம்பத்தின் ஆரோப முண்டாகிறதில்லை. ஆதலால், இரசனேந்திரிய ஜந்நியமே இரசாபாவத்தின் பிரத்தியக்ஷமாம்,

அங்ஙனமே பரிசம் இன்மையின் பிரத்தியக்ஷம் துவக்கிந்திரிய ஜந்யமேயாம். ஏனெனின், "அக்கினியில் சீத ஸ்பரிச முளதாயின் துவக்கிந்திரியத்தால் அதன் உபலம்ப முண்டாம். அக்கினியில் துவக்கினால் சீதஸ்பரிசத்தின் உபலம்பம் உண்டாகிறதில்லை" என்று இவ்வாறு அக்கினியில் சீதஸ்பரிசத்தை ஆரோபித்தலால் துவக்கிந்திரிய ஜந்திய உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றது. ஆதலால், பரிசாபாவத்தின் பிரத்தியக்ஷம் கேவலம் துவக்கிந்திரிய ஜந்யமாம்.

அங்ஙனமே பரமாணுவில் மகத்துவாபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷமே யுண்டாகின்றது. ஏனெனின், பரமாணுவின் பேதம் மகத்துவமாம். பரிமாணகுணத்தின் ஞானம் நேத்திரம் துவக்கென்னு மிரண்டினாலு முண்டாம். இது அநுபவசித்தம். குடத்தின் சிறுமையும் பெருமையும் நேத்திரத்தினாலும் துவக்கினாலும் அறியப்படுகின்றன. ஆதலால், இரண்டிந்திரியங்களுக்கும் விஷயம் மகத்துவமாம். என்றாலும் மிகத் தாழ்வான மகத்துவத்தின் ஞானம் துவக்கினா லுண்டாகுமாயின், திரியணுகத்தின் மகத்துவத்தினது ஞானம் துவக்கினா லுண்டாதல்வேண்டும். ஆதலால், மிகத் தாழ்ந்த மகத்துவத்தின் ஞானம் நேத்திரமாத்திரத்தால் உண்டாகும். பரமாணுவிலும் மிகத் தாழ்வான மகத்துவத்தின் ஆரோபம் உண்டாம். அந்த மிகத் தாழ்வான மகத்துவத்தின் துவக்கிந்திரியப் பிரத்தியக்ஷமோ உண்டாகிறதில்லை; நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது; ஆதலால், பரமாணுவில் மகத்துவத்தை ஆரோபித்தலால் நேத்திர ஜந்திய உபலம்பத்தின் ஆரோபமே யுண்டாய்ப் பரமாணுவில் மகத்துவாபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது; துவக்கிந்திரியப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. பரமாணுவில் மகத்துவ முளதாயின் திரியணுக மகத்துவத்தினைப்போல நேத்திரத்தால் அதன் உபலம்ப முண்டாகும். இவ்வாற்றால் நேத்திரேந்திரிய உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றது; துவக்கிந்திரிய உபலம்பத்தின் ஆரோப முண்டாகிறதில்லை; ஆத்மாவினிடத்துச் சுகாபாவ முதலியவற்றின் மானசப் பிரத்தியக்ஷமே யுண்டாகின்றது.

ஏனெனின் ஆத்மாவினிடத்துச் சுக முண்டாகுமாயின் மனதினால் சுகத்தின் உபலம்ப முண்டாகின்றது; இக்காலத்தில் சுக

த்தின் உபலம்பம் உண்டாகிறதில்லை; ஆதலால், இக்காலத்தில் என்னிடத்தில் சுகம் இல்லையென்று இவ்வாறு ஆத்மாவினிடத்துச் சுகத்தை ஆரோபித்தலால் அதன் மானச வுபலம்பத்தின் ஆரோபம் உண்டாகின்றது. அதனால் சுகாபாவத்தின் மானசப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. அங்ஙனமே துக்காபாவ இச்சாபாவ துவேஷாபாவங்களின் மானசப்பிரத்தியக்ஷமும் உண்டாகின்றது. ஆனால், தனது சுகமுதலியவற்றின் அபாவம் பிரத்தியக்ஷமாம்; பிறர் சுகமுதலியவற்றின் அபாவம் பிரத்தியக்ஷ மன்று. ஆனால், சத்தமுதலியவற்றினால் அவற்றின் பரோக்ஷ ஞானம் உண்டாகின்றது. ஏனெனின், ஒருவனுக்குச் சுகமுதலியன உண்டாகியும் அவற்றின் உபலம்பம் பிறனுக்கு உண்டாகிறதில்லை; ஆதலால், அந்நியரிடத்துச் சுக முண்டாயின் எனக்கு உபலம்ப முண்டா மென்பதாக அந்நியரிடத்துள்ள சுகமுதலியவற்றின் உபலம்பத்தின் ஆரோபம் தனக்குண்டாகிறதில்லை. ஆதலால், அந்நியரிடத்துள்ள சுகமுதலியவற்றின் அபாவம் பிரத்தியக்ஷம் அன்று.

இவ்வாறு பிரதியோகியை ஆரோபித்தலால் எங்கே உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றதோ அவ் வபாவம் பிரத்தியக்ஷமாம். இவ்வாற்றால் உபலம்பத்தின் அபாவமாகிய அநுபலம்பத்தினை யோக்கியாநுபலம்ப மென்பர். ஆதலால், பிரதியோகியின் ஆரோபத்தால் எவ் வுபலம்பத்தின் ஆரோபம் உண்டாகின்றதோ, அவ் வுபலம்பம் எதற்குப் பிரதியோகி யாகின்றதோ, அதனை யோக்கியாநுபலம்ப மென்பர். இவ் வர்த்தத்தில் ஒரு தோஷமும் இல்லை.

இவ்வாற்றால் எந்த அதிகரணத்தில் எந்தப் பதார்த்தத்தின் இந்திரிய ஜந்நிய ஆரோபித உபலம்பம் சம்பவிக்கின்றதோ, அவ் வதிகரணத்தில் அதன் அபாவம் பிரத்தியக்ஷமாம். ஓரே பேயின் பேதம் ஸ்தம்பத்தில் பிரத்தியக்ஷமாம்; பரமாணுவில் அப்பிரத்தியக்ஷமாம். ஆதலால், எவ்வதிகரணத்தி லென்று சொல்லப்பட்டது. எப் பதார்த்தத்தின் இந்திரியஜந்நிய ஆரோபித உபலம்பம் சம்பவிக்கின்றதோ, அதன் அபாவத்தினைப் பிரத்தியக்ஷ மெனக் கூறின், பேயின் இந்திரியஜந்நிய ஆரோபித உபலம்பமும் ஸ்தம்பத்தில் உண்டாகின்றது. பரமாணுவிலும் பேயின் பேதம் பிரத்தியக்ஷ மாகும். அதனால் அதிகரணத்தின் பெயரைக் கொண்டு சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸ்தம்ப அதிகரணத்தில் உபலம்பத்தின் ஆரோபமோ வுண்டாகின்றது. ஸ்தம்பத்திற்ருனே பேயின் பேதம் பிரத்தியக்ஷமாம். பரமாணுவில் தாதான்மிய சம்பந்தத்தால் பேயிருந்தும் பரமாணுவினைப்போல அதன் உபலம்பம் சம்பவிக்கிறதில்லை. ஆதலாற் பரமாணுவில் பேயின் பேதம் பிரத்தியக்ஷமன்று. "எப் பதார்த்தத்தின்" என்று கூறுதலால் வாயுவில் உருவத்தின் அத்தியந்தாபாவத்தினைப்போல் குருத்துவ அத்தியந்தாபாவம் பிரத்தியக்ஷ மாகிறதில்லை; எந்த அதிகரணத்தில் இந்திரியஜந்நிய ஆரோபித உபலம்பம் சம்பவிக்கிறதோ அவ்வதிகரணத்தில் அபாவம் பிரத்தியக்ஷமாமென்று இவ்வளவே கூறின், வாயுவதிகரணத்தில் உருவத்தின் இந்திரிய ஜந்நிய ஆரோபித உபலம்பம் சம்பவிக்கின்றது; குருத்துவாபாவமும் பிரத்தியக்ஷமாகும். ஆதலால், எப் பதார்த்தத்தின் உபலம்பம் சம்பவிக்கின்றதோ அதன் அபாவம் பிரத்தியக்ஷமா மெனப்பட்டது. ஆதலால், உருவத்தின் ஆரோபித உபலம்பத்தால் வாயுவில் குருத்துவத்தின் அபாவம் பிரத்தியக்ஷ மாகிறதில்லை. இவ்வாற்ருல் எங்கே பிரதியோகியின் எவ்விந்திரியஜந்நிய ஆரோபித உபலம்ப முண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தால் அபாவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. எங்கே முற்கூறிய விதமாக உபலம்பம் சம்பவிக்கவில்லையோ, அங்கே அபாவத்தின் பரோக்ஷஞான முண்டாகின்றது. இது நையாயிகமதம்.

முற்கூறியபடி நியாயமதத்தில் அபாவத்தின் பிரத்தியக்ஷத்தில் இந்திரியம் கரணமாம். இந்திரியத்தில் விசேஷணத்தன்மையும், இந்திரிய சம்பந்த முடையதில் விசேஷணத்தன்மையும் அபாவத்தில் இந்திரியத்தின் சம்பந்தமாம்; அது வியாபாரமாம். அபாவத்தின் பிரத்தியக்ஷப்பிரமை பயனும். யோக்கியாநுபலம்பம் இந்திரியத்திற்குச் சககாரிகாரணமாம்; கரணமன்று.

90. நியாயமதத்தில் சாமக்கிரியையோடு கூடிய அபாவப்பிரமையைக் கூறுதல்

கடமுதலியவற்றின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்தில் ஒளியின் சையோகம் சககாரி காரணமாம்; நேத்திரேந்திரியம் கரணமாம். அங்ஙனமே அபாவத்தின் பிரத்தியக்ஷத்தினும் யோக்கியாநுபலம்பம் சககாரியாம். அபாவத்தின் நேத்திரேந்தி

ரியப் பிரத்தியக்ஷத்திலும் ஒளியின் சையோகம் சககாரி யன்று இருளில் கடாபாவத்தின் துவக்கிந்திரியப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது; நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றதில்லை. ஒளியில் கடாபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. ஆதலால், அபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்தில் அந்நுவய வெதிரேகத்தால் ஆலோக சையோகமும் சககாரி யெனல்வேண்டும். என்றாலும் கடத்தில் குலாலன் பிதாவைப்போல் அபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்தில் ஒளியின் சையோகம் அந்நியதா சித்தமாம் (பிறிதோராற்றாற் பெறப்படுவதாம்). கடத்திற்குக் காரணமாகிய குலாலனது சித்தியால் குலாலன் பிதா காரண சாமக்கிரியின் புறத்தே யுளன்; கடத்திற்குக் காரண மெனப்படான். ஆனால், கடத்தின் காரணத்துக்குக் காரணமாவன். அங்ஙனமே அபாவத்தின் பிரத்தியக்ஷத்திற்குச் சககாரிகாரணம் யோக்கியா நுபலம்பமாம். அதன் சித்தியினால் அபாவப் பிரத்தியக்ஷத்தின் காரண சாமக்கிரியினும் ஒளியின் சையோகம் புறம்பேயிருக்கின்றது.

ஏனெனின், அநுபலம்பத்தின் பிரதியோகியாகிய உபலம்பத்தின் ஆரோபம் யாண்டு சம்பவிக்கிறதோ, ஆண்டு அவ்வநுபலம்பம் யோக்கிய மெனப்படுகின்றது. கடத்தின் நேத்திரேந்திரிய உபலம்பத்தின் ஆரோபம் ஒளியி லுண்டாகின்றது; அந்தகாரத்தில் நேத்திரேந்திரிய உபலம்பத்தின் ஆரோபம் உண்டாகிறதில்லை. ஆதலால், கடாபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்திற்குச் சககாரிகாரணமாகிய யோக்கியா நுபலம்ப மெதுவோ அதற்குச் சாதகம் ஒளியாம். அது கடாபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்திற்குச் சாக்ஷாத் (நேர்) காரணமன்றாகலின் காரண சாமக்கிரியின் புறம்பா யிருக்கின்றது; ஆதலால், குலால்பிதாவைப்போலப் பிறிதோராற்றாற் பெறப்படுவதாம். குலாலபிதா கடத்திற்குக் காரணமல்லன். அங்ஙனமே ஒளியின் சையோகமும் அபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்திற்குக் காரணமன்று. ஆனால், சாக்ஷுஷப் பிரத்தியக்ஷத்திற்குக் காரணமாகிய யோக்கியாநுபலம்ப மெதுவோ அதற்கு முற்கூறியபடி சாதகமாம்.

முன்னோர் நூல்களிலோ யோக்கியாநுபலம்பம் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றது: — யாண்டுப் பிரதியோகியின்றிப்

பிரதியோகியின் உபலம்பத்தினது சகல சாமக்கிரிகளு மிருக்கின்றனவோ, உபலம்ப முண்டாகிறதில்லையோ, ஆண்டு யோக்கியாநுபலம்ப மிருக்கின்றது. எங்ஙனம்: ஒளியில் கடம் இல்லாதிருக்க ஆண்டு யோக்கியாநுபலம்பம் இருக்கின்றது. ஏனெனின், கடாபாவத்தின் பிரதியோகியாகிய கடம் இல்லை. அஃதின்றி ஒளியின் சையோகம் திருஷ்டாவின் நேத்திரமென்னுங் கட சாக்ஷுஷ உபலம்பத்தின் சாமக்கிரி யிருத்தலால் யோக்கியாநுபலம்பமாம். அந்தகாரத்தில் யாண்டுக் கடமில்லையோ ஆண்டு யோக்கியாநுபலம்பம் இல்லை. ஏனெனின், பிரதியோகியின் சாக்ஷுஷ உபலம்பத்தின் சாமக்கிரியில் ஆலோக சையோகம் உளது; ஆண்டு அதன் அபாவம் இருக்கின்றது. அங்ஙனமே ஸ்தம்பத்தில் தாதான்மியசம்பந்தத்தால் இருப்பது எதுவோ அதன் உபலம்பத்தின் சாமக்கிரி ஸ்தம்பத்தின்கண்ணுள்ள உற்பூத வடிவமும் மகத்துவமாம். ஆதலால், ஸ்தம்பத்தில் தாதான்மிய சம்பந்தத்தால் பேயின் அநுபலம்பம் யோக்கியமாகும்.

சையோக சம்பந்தத்தால் எது ஸ்தம்பத்தின்கண் ணுளதாகின்றதோ, அதனது உபலம்பத்தின் சாமக்கிரி ஸ்தம்பத்தின் உற்பூதவுருவமும் மகத்துவமுமன்று. ஆனல், சையோக சம்பந்தத்தால் இருப்பதன்கண் உற்பூதவுருவமும் மகத்துவமுமிருத்தல்வேண்டும்; அது பேயினிடத்தில்லை. ஆதலால், சையோக சம்பந்தாவச்சின்ன பேயின் அத்தியந்தாபாவத்தினது பிரதியோகியாகிய பேய் எதுவோ, அதன் உபலம்பத்தின் சாமக்கிரியாகிய பேயின்கண்ணுள்ள உற்பூதவுருவ மில்லாமையால் சையோக சம்பந்தத்தால் பேயின் அநுபலம்பம் யோக்கியமன்று. இவ்வாறு பிரதியோகியின்றிப் பிரதியோகியினது உபலம்பத்தின் சகல சாமக்கிரிகளு மிருந்தும் உபலம்பம் உண்டாகிறதில்லை. அந்த யோக்கியாநுபலம்பம் அபாவத்தின் பிரத்தியக்ஷத்திற்குச் சககாரிகாரணமாம்.

இவ்வாறு யாண்டு யோக்கியாநுபலம்பம் உளதாய் இந்திரியத்திற்கு அபாவத்தோடு சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டு இந்திரியஜந்நியப் பிரத்தியக்ஷப்பிரமை அபாவத்திற்கு உண்டாகின்றது. யாண்டு யோக்கியாநுபலம்ப மில்லையோ, ஆண்டு அபாவத்தின் பிரத்தியக்ஷஞான முண்டாகிறதில்லை. ஆனல், அநு

மான முதலிய கிரமத்தால் பரோக்ஷஞான முண்டாகிறது. நையாயிகர் கிரமப்படி அபாவப் பிரத்தியக்ஷத்தில் யோக்கியாநுபலம்பம் சககாரியாம்; இந்திரியம் கரணமாம்.

91. பட்டவேதாந்த மதங்களில் நியாயமதத்தினும் அபாவப்பிரமையின் சாமக்கிரியிலுள்ள வேறுபாடு

பட்டமதத்தினும் அங்ஙனமே அத்வைதமதத்திலும் யோக்கியாநுபலம்பமே கரணமாம். அபாவஞானத்தில் இந்திரியத்திற்குக் கரணத்தன்மை யின்று. இதனுனே அநுபலப்தியென்னும் பின்னப் பிரமாணத்தைப் பட்டர் ஒப்பியிருக்கின்றார். அதனை அநுசரித்ததாகவே அத்வைத கிரந்தங்களிலும் அபாவப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாக அநுபலப்தி யென்னும் வேறு பிரமாணமே எழுதப்பட்டிருக்கின்றது. அநுபலம்பத்தினையே அநுபலப்தி யென்பர்.

எப்படி யோக்கியாநுபலம்பத்தினை நையாயிகர் சககாரியெனக் கொண்டிருக்கின்றனரோ, அங்ஙனமே யோக்கியாநுபலம்பம் பட்டமத அத்துவித மதங்களிற் பிரமாணமாம். நையாயிக மதத்தில் அபாவப் பிரத்தியக்ஷத்திற்குக் காரணம் இந்திரியமும் யோக்கியாநுபலம்பமுமாகிய இரண்டுமாம். அவற்றுள் இந்திரியம் கரணமாமாகலின் அபாவப்பிரமையிற் பிரமாணமாம். அநுபலம்பத்திற்கு அபாவப் பிரமையின் சககாரி காரணத்தன்மை அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது; கரணத்தன்மை அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால், அநுபலம்பம் பிரமாணம் அன்று. பட்டர் முதலியோர் மதத்தில் அநுபலப்தியே பிரமாணமாம்.

அபாவப் பிரமையின் உற்பத்தியில் அநுபலப்தியின் வியாபாரமொன்றுஞ் சம்பவிக்கிறதில்லை. வியாபாரமுடைய பிரமைக்காரணம் யாதோ, அது பிரமாண மெனப்படுகின்றது. ஆகவின், அநுபலப்திக்குப் பிரமாணத்தன்மை சம்பவியாது. என்றுலும் வியாபாரமுடைய பிரமையின் காரணத்திற்கே பிரமாணத்தன்மை யுண்டென்னும் நியமமும் நையாயிக மதத்தில் உள்ளது. பட்டர்முதலியோர் மதத்திலோ எல்லாப் பிரமாணங்களுக்கும் வேறு வேறு இலக்கண முண்டு. சில பிரமாணங்க

ளின் இலக்கணத்தில் வியாபாரத்தின் பிரவேசம் உண்டு; சில வற்றின் இலக்கணத்தில் வியாபாரத்தின் பிரவேச மில்லை.

எங்ஙனம்: பிரத்தியக்ஷப் பிரமையின் வியாபாரமுடைய அசாதாரண காரணம் பிரத்தியக்ஷப் பிரமாண மென்றும், அநுமிதிப் பிரமையின் வியாபாரமுடைய அசாதாரண காரணம் அநுமானப்பிரமாணமென்றும், சாப்திப்பிரமையின் வியாபார முடைய அசாதாரண காரணம் சுத்தப்பிரமாணமென்றும் சொல்லப்படுகின்றன.

இவ்வாறு மூன்று பிரமாணங்களின் இலக்கணத்திலோ வியாபாரத்தின் பிரவேச மிருக்கின்றது. அந்தப் பிரமாணங்களின் நிரூபணத்தில் மூன்றிடங்களிலும் வியாபாரத்தின் சம்பவம் சொல்லிவந்தோம்; உவமானம் அர்த்தாபத்தி உபலப்தி என்பவற்றின் இலக்கணத்தில் வியாபாரத்தின் பிரவேச மில்லை. உவமிதியின் அசாதாரண காரணத்தை உவமானப் பிரமாண மென்பர்.

உபபாதக கற்பனையின் அசாதாரண காரணமாகிய உபபாத்தியத்தினது அநுபபத்தியின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மெனப்படுகின்றது.

அபாவத்தினது பிரமையின் அசாதாரண காரணத்தை அநுபலப்திப்பிரமாண மென்பர்.

அபாவத்தின் பரோக்ஷஞானமும் அநுமானமுதலியவற்ரு லுண்டாகின்றதென்பது முன்னர்க் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், அநுபலப்தியின் இலக்ஷணத்திற்கு அபாவ ஞானத்தை உண்டுபண்ணுவனவாகிய அநுமானமுதலியவற்றில் அதிவியாப்தி யுண்டாகின்றது. என்ருலும் அநுமானமுதலிய பிரமாணங்கள் பாவத்தின் பிரமைக்கும், அபாவத்தின் பிரமைக்கும் சாதாரண காரணங்களாம். அபாவத்தின் பிரமைக்கு அசாதாரண காரணமன்று. அநுபலப்தியினுல் கேவலம் அபாவத்தின் ஞானமே உண்டாகின்றது. ஆதலால், அபாவப் பிரமையின் அசாதாரண காரணம் அநுபலப்திப் பிரமாணமாம்; அந்நிய மன்று.

இவ்வாறு மூன்று பிரமாணங்களினது இலக்கணத்தில் வியாபாரத்தின் பிரவேசம் இல்லை. ஆதலால், வியாபாரத்தின்

அபேக்ஷை மூன்று பிரமாணங்களிலு மில்லை. அநுபலப்திப் பிரமாணத்தால் அபாவத்தின் ஞான முண்டாகின்றது; அதுவோ பிரத்தியக்ஷமாம். அநுமானத்தாலும், அங்ஙனமே சத்தத்தாலு முண்டாகும் அபாவத்தின் ஞானம் எதுவோ, அது பரோக்ஷ மாகின்றது.

சிலவிடங்களில் நையாயிகர் அபாவத்தின் ஞானத்தை இந்திரிய ஜந்நியமெனக் கூறுவர். அவ்வளவு ஞானமே அநுபலப் திப் பிரமாண ஜந்நியமாம். ஏனெனின், நையாயிக மதத்திலும் அபாவஞானத்தின் சககாரிகாரணம் அநுபலப்தியாம். எத்தன் மைய யோக்கியாநுபலப்தியை நையாயிகர் இந்திரியத்தின் சக காரியாகக் கொண்டிருக்கின்றனரோ, அந்த யோக்கியாநுபலப்தி யே பட்டர்முதலியோர் மதத்தில் சுதந்திரம் பிரமாண மின்றி யே பேதமாம். நையாயிக மதத்திலோ அபாவப்பிரமைக்குப் பிரமாணம் இந்திரியமாம்; வேதாந்த மதத்தில் பிரமாணம் அநுபல ப்தியாம். வேதாந்த மதத்தில் அநுபலப்திப் பிரமாணத்தால் பெறப்படுவதாகிய அபாவத்தின் ஞானமும் நையாயிக மதத் திற்போல பிரத்தியக்ஷமாம்; பரோக்ஷமன்று.

92. வேதாந்த முறைப்படி இந்திரியத்தாற் பெறப்படாத பிரத்தியக்ஷ லக்ஷணத்தின் நிர்ணயம்

ஈண்டு இந்திரியஜந்நிய ஞானமே பிரத்தியக்ஷமாம்; அபாவ ஞானத்திற்கு இந்திரிய ஜந்நியத்தன்மையை நிஷேதித்துப் பிரத்தியக்ஷத்தன்மை கூறுதல் பொருந்தாது என்றிவ்வாறு கூறும் சங்கைக்கு இது சமாதானமாம்:—இந்திரியஜந்நிய ஞான மே பிரத்தியக்ஷமாகுமாயின் ஈசுவரஞானம் பிரத்தியக்ஷமாக லாகாது. ஏனெனின், நியாயமதத்திலோ ஈசுவரனது ஞானம் நித்தியமாகலின் இந்திரிய ஜந்நியமன்று. வேதாந்தமதத்தில் ஈசு வரனது ஞானம் மாயையின் விருத்தி வடிவமாம்; இந்திரிய ஜந் நியம் அன்று. வேறு நூல்களில் இந்திரிய ஜந்நிய ஞானத்திற் குப் பிரத்தியக்ஷத்தன்மையைக் கூறுதலில் அநேக தூஷணம் எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால், இந்திரிய ஜந்நிய ஞானமே பிரத்தியக்ஷமா மென்னும் நியமம் இல்லை. ஆனால், பிரமாண சேதனத்தோடு விஷய சேதனத்திற்கு அபேத முண்டாயின் அந்த ஞானம் பிரத்தியக்ஷமாம்.

யாண்டு விஷயம் எதிர்ப்படுகின்றதோ, ஆண்டுச் சிலவிடத்திலோ இந்திரிய விஷயங்களின் சம்பந்தத்தால் இந்திரியவாயிலாக அந்தக்காணத்தின் விருத்தி கடதேசத்திற் செல்லுகின்றது; சென்று கடத்தின் சமான வடிவமாய்க் கடத்தோடு விருத்தி சேருகின்றது. ஆண்டு விருத்தி அவச்சின்ன சேதனம் பிரமாணசேதன மெனப்படுகின்றது. விஷயத்தில் வந்த சேதனம் விஷயசேதன மெனப்படுகின்றது. பிரமாணசேதனமும் விஷய சேதனமும் சொரூபமாகவோ எப்போதும் ஒன்றேயாம். உபாதி பேதத்தால் சேதனத்திற்குப் பேத முண்டாகின்றது. உபாதியும் வேறிடங்களி லிருக்குமாயின் உபகிதத்திற்குப் பேத முண்டாம். ஓரிடத்தில் இருக்குமாயின் உபகிதத்திற்குப் பேதம் உண்டாகாது.

எங்ஙனம்: கடத்தின் உருவமும் கடமும் ஓரிடத்தி லிருக்கின்றன. ஆண்டுக் கடத்தின் உருவ உபகித ஆகாயமும் கட உபகித ஆகாயமும் ஒன்றேயாம். மடத்தினுட் கடம் இருக்குமாயின், ஆண்டுக் கட உபகித ஆகாயம் மடாகாயத்தின் வேறன்று. கடசூனிய தேசத்திலும் மட மிருத்தலால் மடாகாயமோ கடாகாயத்தின் வேறுமாம். என்றாலும் மடசூனிய தேசத்திற் கடமில்லை யாகலின் மடாகாயத்தினும் கடாகாயம் வேறன்று. இவ்வாற்ருல் விருத்தியும் விஷயமும் பின்னதேசத்தில் இருக்கின்றன.

இவ்வளவான் விருத்தி உபகிதசேதனமும் விஷய உபகித சேதனமும் பின்னமாம். விருத்தி விஷய தேசத்தி லிருக்குமாயின் அப்போது விஷயசேதனமும் விருத்திசேதன மாகின்றது. ஆதலால், விஷயசேதனத்திற்கு விருத்திசேதனத்தோடு பேதம் இருப்பதில்லை; ஆனல் அபேதம் உண்டாகின்றது. விஷய தேசத்தில் விருத்தி செல்லுமாயின், அப்போது திருஷ்டாவின் சரீரத்தினுள் அந்தக்கரணமுதல் விஷயபரியந்தம் விருத்தியின் ஆகாரம் உண்டாகின்றது. ஆதலால், விஷய தேசத்திற்குப் புறத்திலும் விருத்தியின் சொரூபம் இருத்தலால் விஷய சேதனத்தின் வேருயும் விருத்திசேதன மிருக்கின்றது. என்ருலும் அக்காலத்தில் விருத்தியின் வேருகியவிடத்தில் விஷய மில்லை. ஆதலால், விஷயசேதனத்திற்கு விருத்திசேதனத்தோடு அபேதங் கூறுகின்றனர். இரண்டிற்கும் ஒன்றற்கொன்று அபேதம

யாண்டேனும் எழுதப்பட்டுளதாயின் அதன் அபிப்பிராயம் இதுவாம் :—எவ்வளவு விருத்திபாகம் கடதேசத்தில் இருக்கின்றதோ, அவ்வளவு விருத்திபாகத்தால் உபகிதசேதனம் கடசேதனத்தின் வேறன்று. இவ்வாற்றால் யாண்டு விஷய சேதனத்திற்கு விருத்தி சேதனத்தோடு அபேதம் உண்டாகின்றதோ ஆண்டு அந்த ஞானம் பிரத்தியக்ஷ மெனப்படுகின்றது.

93. பிரத்தியபிஞ்ஞைப் பிரத்தியக்ஷஞானம், அபிஞ்ஞைப் பிரத்தியக்ஷஞானம், ஸ்மிருதிமுதலிய பரோக்ஷஞானம் என்பவற்றைச் சாமக்கிரியோடு நிர்ணயித்தல்

யாண்டு விஷயசேதனத்துக்கு விருத்திசேதனத்தோடு அபேதஞானம் உண்டாகவில்லையோ, அந்த ஞானம் பரோக்ஷ மெனப்படுகின்றது. சம்ஸ்கார ஜந்நிய ஸ்மரணரூப அந்தக் கரணத்தின் விருத்தி சரீரத்தினுள்ளேயே இருக்கின்றது. அதன் விஷயம் தேசாந்தரத்தில் இருக்கின்றது; அல்லது நஷ்டமா யிருக்கின்றது. ஆகலின், விஷயசேதனத்துக்கு விருத்தி சேதனத்தோடு அபேத மில்லாதிருத்தலின் ஸ்மிருதிஞானம் பரோட்சமாம்.

எப் பதார்த்தத்திற்குப் பூர்வ அநுபவத்தின் சம்ஸ்காரமும் இந்திரியத்தின் சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டு "அதுவே இது" என்னும் ஞான முண்டாகின்றது. அதனை அபிஞ்ஞைஞான மென்பர். ஆண்டும் இந்திரிய ஜந்நிய விருத்தி விஷய தேசத்திற் செல்லுகின்றது. ஆதலால், விஷயசேதனத்திற்கு விருத்திசேதனத்தோடு அபேத மிருத்தலின் பிரத்தியபிஞ்ஞைஞானமும் பிரத்தியக்ஷமே யாகின்றது. கேவல இந்திரிய ஜந்நிய விருத்தி யுளதாயின், ஆண்டு "இது" என்னும் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது. அதனை அபிஞ்ஞைப் பிரத்தியக்ஷ மென்பர். முக்கிய சித்தாந்தத்திலோ முன் அநுபவிக்கப்பட்டதின் 'அதுவே இது' என்னும் ஞானமும், 'அது' என்னும் அம்சத்தில் ஸ்மிருதிரூபமா யிருத்தலால் பரோக்ஷமும், 'இது' என்னும் அம்சத்தில் பிரத்தியக்ஷமுமாம். ஆதலால், 'அதுவே இது' என்னும் ஞானத்தில் கேவலம் பிரத்தியக்ஷத்

தன்மை யில்லை. அம்சபேதத்தால் பரோக்ஷத்தன்மை பிரத்தியக்ஷத்தன்மைகளாகிய இரண்டு தர்மங்க ளிருக்கின்றன.

கேவலம் சம்ஸ்கார ஜந்நிய விருத்தி யுளதாயின், அதற்கு 'அது' என்னும் வடிவம் உண்டாகின்றது. அதனை ஸ்மிருதியென்பர். பூர்வம் இந்திரியத்தால் அல்லது அநுமானமுதலியவற்றால் எந்தப் பதார்த்தத்தின் ஞான முண்டாயிருக்குமோ அதன் ஸ்மிருதி யுண்டாகின்றது. ஆதலால், ஸ்மிருதி ஞானத்தில் பூர்வ அநுபவம் காணமாம்; அநுபவஜந்நிய சம்ஸ்காரம் வியாபாரமாம். ஏனெனின், எந்தப் பதார்த்தத்தின் ஞானம் முன் உண்டாயிருக்கிறதோ அதன் ஸ்மிருதி வருஷங்கள் கழிந்தும் உண்டாகும். ஆண்டு ஸ்மிருதிக்கு அவ்வியவகித (மறைப்பின்றிய) பூர்வகாலத்தில் அநுபவமோ இல்லை. மறைப்பின்றிய பூர்வ காலத்தில் உண்டாவது எதுவோ அது எத்வாம். ஆதலால், பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்கு நேரே காரண மாகாது. ஒன்றன் வாயிலாகக் காரணமா மென்னல்வேண்டும். ஆதலால், இங்ஙனம் மதித்தல் தகுதியாம்.

எப் பதார்த்தத்தின் பூர்வ அநுபவம் உண்டாக வில்லையோ, அதன் ஸ்மிருதியோ உண்டாகிறதில்லை. பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்குக் காரண மன்றெனின், எதன் அநுபவ முண்டாக வில்லையோ, அதன் ஸ்மிருதியு முண்டாதல் வேண்டும்; அங்ஙனம் உண்டாகிறதில்லை. இவ்வாற்றால் பூர்வ அநுபவத்தோடு ஸ்மிருதிக்கு அந்வயவெதிரேக முண்டு. பூர்வ அநுபவ மிருந்தால் ஸ்மிருதி யுண்டாகுமென்பது அந்வயம்; பூர்வ அநுபவ மில்லை யாயின் ஸ்மிருதி யுண்டாகாதென்பது வெதிரேகம்.

ஒன்றிருத்தலால் மற்றொன்றிருத்தல் அந்வய மெனப்படுகின்றது. ஒன்ற னின்மையால் மற்றைய தில்லாதிருத்தல் வெதிரேக மெனப்படுகின்றது. அந்வய வெதிரேகத்தால் காரண காரியத்தன்மை அறியப்படுகின்றது. பூர்வ அநுபவத்திற்கும் ஸ்மிருதிக்கும் அந்வய வெதிரேகத்தைக் காணுதலால் அவற்றினுக்குக் காரண காரியத்தன்மையோ அவசிய மிருக்கின்றது. ஆனால், மறைப்பின்றிய பூர்வகாலத்தில் பூர்வ அநுபவம் சேருகிறதில்லை. ஆதலால், ஸ்மிருதியின் உற்பத்திக்கு முன் அநுபவத்திற்கு ஓர் வியாபார மங்கீகரித்தல் வேண்டும்.

யாண்டுப் பிரமாணவலியால் காரணத்தன்மையின் நிச்சயம் உண்டாகின்றதோ, மறைப்பின்றிய பூர்வகாலத்தில் காரணத்தின் சுத்தை சம்பவிக்கிற தில்லையோ, ஆண்டு வியாபாரத்தின் கற்பனை யுண்டாகின்றது. எங்ஙனம்: சாஸ்திரமாகிய பிரமாணத்தால் யாகத்தில் சுவர்க்கத்துக்குச் சாதனமாகுந் தன்மையின் நிச்சய முண்டாகின்றது. ஈற்றுகுதியை யாக மென்பர். அந்த யாகம் நாசமாய் வெகு காலத்திற்குப் பின் சுவர்க்க முண்டாகின்றது. சுகவிசேஷத்தினைச் சுவர்க்க மென்பர். சுவர்க்கத்தின் மறைப்பின்றிய முற்காலத்தில் யாக மின்மையால் யாகத்திற்குக் காரணத்தன்மை சம்பவியாது. ஆதலால், சாஸ்திரத்தால் நிர்ணயிக்கப்பட்ட காரணத்தன்மையின் நிர்வாகத்தின் பொருட்டு யாகத்தின் வியாபாரமாகிய அபூர்வத்தினை அங்கீகரித்திருக்கின்றனர்.

எப்போது அபூர்வம் அங்கீகரிக்கப்பட்டதோ, அப்போது தோஷ மில்லை. என்னெனின், காரியத்திற்கடுத்த முற்காலத்தில் காரணமாவது வியாபாரமாவது ஒன்றிருத்தல்வேண்டும். சிலவிடத்து இரண்டு மிருக்கும்; ஆனால், ஒன்று அவசியமா யிருத்தல்வேண்டும். எதனைத் தர்ம மென்பரோ அது யாகத்தாற் றோன்றிய அபூர்வமாம். யாகத்தால் அபூர்வ முண்டாய், யாகத்தாற் றோன்றும் சுவர்க்க மெதுமோ அதனை உண்டாக்குவதாயும் இருக்கின்றது. ஆதலால், அது (அபூர்வம்) வியாபாரமாம். யாகம் சுவர்க்கத்திற்குச் சாதனமாந் தன்மையை நிர்வகித்தற் பொருட்டு அபூர்வம் வியாபாரமென அங்கீகரிக்கப்படுகின்றது. அவ்வபூர்வம் எப்போதும் பரோக்ஷமாம். அங்ஙனமே அந்வய வெதிரேக வலியால் பெறப்பட்டதாகிய பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்குக் காரணமாதலை நிர்வகித்தற்பொருட்டுச் சம்ஸ்காரத்தினை (வாசனையை) அங்கீகரித்திருக்கின்றனர். அந்தச் சம்ஸ்காரம் என்றும் பரோக்ஷமாம்.

எந்த அந்தக்கரணத்தில் பூர்வ அநுபவமுளதாய் ஸ்மிருதி யுண்டாகுமோ அவ் வந்தக்கரணத்தின் தர்மம் சம்ஸ்காரமாம். நையாயிக மதத்தில் அநுபவம் சம்ஸ்காரம் ஸ்மிருதி என்பன ஆத்மாவின் தர்மமாம். அநுபவ ஜந்நிய சம்ஸ்காரத்தினை நையாயிகர் பாவனை யென்பர். அந்தச் சம்ஸ்காரம் பூர்வ அநுபவத்தாற் றோன்றியதும், பூர்வ அநுபவத்தாற் றோன்றும் ஸ்மிருதி

யை யுண்டாக்குவதுமா யிருத்தலின், வியாபார மெனப்படு கின்றது.

இவ்வாற்ருற் பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்குக் காரணமாம்; சம்ஸ்காரம் வியாபாரமாம். ஸ்மிருதியின் உற்பத்திக்கடுத்த பூர்வ காலத்தில் பூர்வ அநுபவமோ நாசமாகுதலான் அபாவமாம். என்ருலும் அதன் வியாபாரமாகிய சம்ஸ்காரம் இருக்கின்றது. ஆதலால், பூர்வ அநுபவம் நாசமாகியும் ஸ்மிருதி யுண்டாகின் றது. அந்தச் சம்ஸ்காரமோ பிரத்தியக்ஷம் அன்று. அநுமானத் திஞலாவது அர்த்தாபத்தியிஞலாவது சம்ஸ்காரத்தின் சித்தி யுண்டாகின்றது. ஆதலால், எவ்வளவு காலம் முன் அநுபவிக் கப்பட்டதின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அவ்வளவு காலம் சம்ஸ்கார மிருக்கின்றது. எந்த ஸ்மிருதிக்குப் பின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லையோ, அது சரம ஸ்மிருதி யெனப்படுகின்றது. சரம ஸ்மிருதியால் சம்ஸ்காரத்திற்கு நாச முண்டாகின்றது. ஆதலால், மீண்டும் அப் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகிற தில்லை.

இவ்வாற்ருற் பூர்வ அநுபவஜந்ய சம்ஸ்காரத்தால் அநேக ஸ்மிருதி யுண்டாகின்றது. சரம ஸ்மிருதி யுண்டாகும் வரையில் ஒரே சம்ஸ்கார மிருக்கிறது. ஸ்மிருதியில் சரமத்தன்மை காரி யத்திஞல் அறியப்படுகின்றது. எந்த ஸ்மிருதி யுண்டாகியபின் சஜாதீய ஸ்மிருதி யுண்டாவதில்லையோ, அந்த ஸ்மிருதியில் சரமத்தன்மையின் ஞானம் அநுமானத்தால் உண்டாகின்றது. அந்தியத்தை (கடைசியை) ச் சரம மென்பர்.

சிலர் இங்ஙனம் கூறுகின்றனர்:—பூர்வ அநுபவ ஜந்ய சம்ஸ்காரத்தால் முதல் ஸ்மிருதி யுண்டாகின்றது. முதல் ஸ்மி ருதியின் உற்பத்தியிஞல் முன் சம்ஸ்காரத்திற்கு நாச முண்டா கின்றது. ஸ்மிருதியிஞல் வேறு சம்ஸ்கார முண்டாகின்றது. அதனினின்றும் மீண்டும் சஜாதீய ஸ்மிருதி யுண்டாகின்றது. அந்த ஸ்மிருதியிஞல் அதனை உண்டாக்கிய சம்ஸ்காரத்திற்கு நாசம் உண்டாகின்றது. அந்நியசம்ஸ்காரம் உற்பத்தி யாகின் றது. அதனினின்றும் மூன்ருவது ஸ்மிருதி யுண்டாகின்றது. இவ்வாற்ருல் ஸ்மிருதியினின்றும் சம்ஸ்காரத்தின் உற்பத்தி யுண்டாகின்றது.

எந்த ஸ்மிருதிக்குப்பின் சஜாதீய ஸ்மிருதி யுண்டாகிற தில்லையோ, அந்த ஸ்மிருதி சம்ஸ்காரத்திற்கேது வன்று. இம் மதத்தில் சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதி ஞானமும் உத்தரஸ்மி ருதிக்குக் காரணமாம். முதல் ஸ்மிருதிக்குக் காரணம் அநுபவ மாம். இரண்டிடங்களிலும் சம்ஸ்காரம் வியாபாரமாம். முதல் மதத்தில் ஸ்மிருதி ஞானத்துக்குக் காரணம் ஸ்மிருதியன்று. ஆனால், பூர்வ அநுபவத்தால் சம்ஸ்காரம் உண்டாகின்றது. அந்த ஒரே சம்ஸ்காரம் சரம ஸ்மிருதிபரியந்தம் இருக்கின்றது. ஆதலால், பூர்வ அநுபவமே ஸ்மிருதிக்குக் காரணமாம். பூர்வ அநுபவ ஜந்நிய சம்ஸ்காரமே சகல சஜாதீய ஸ்மிருதிகளிலும் வியாபாரமாம். இரண்டு பக்ஷங்களிலும் ஸ்மிருதி ஞானம் பிரமை யன்று.

ஏனெனின், முதற்பக்ஷத்திலோ ஸ்மிருதிஞானத்திற்குக் காரணம் பூர்வ அநுபவமாம். அது ஆறு பிரமாணங்களின் வேறும். பிரமாண ஜந்நிய ஞானத்தினைப் பிரமை யென்பர். பூர்வ அநுபவம் பிரமாணமன்று. இரண்டாவதுபக்ஷத்தில் முதல் ஸ்மிருதியின் காரணமோ பூர்வாநுபவமாம். இரண்டாவது ஸ்மி ருதியின் காரணம் ஸ்மிருதியாம். அந்த ஸ்மிருதியும் ஆறு பிரமா ணங்களிலும் இல்லை; ஆதலால், ஸ்மிருதியைப் பிரமை யெனக் கூறுவதில்லை. என்றாலும் யதார்த்தம் அயதார்த்தம் என்னும் பேதத்தால் ஸ்மிருதி இருவகைத்தாம்.

மயக்க வடிவினதாகிய அநுபவத்தின் சம்ஸ்காரத்தாற் றோன்றிய தெதுவோ அது அயதார்த்தமாம்.

பிரமை வடிவினதாகிய அநுபவத்தின் சம்ஸ்காரத்தா லுண்டாகிய தெதுவோ அது யதார்த்தமாம்.

இவ்வாறு இரண்டு பக்ஷங்கள் நூல்களில் எழுதப்பட் டிருக்கின்றன. அவற்றில் தூஷணமும் பூஷணமும் அநேக முண்டு. நூல் விரியு மென்னும் பயத்தால் உபரதியடைந்து பிர சங்கத்தினை எழுதுகின்றோம்.

எங்ஙனம் பூர்வ அநுபவ ஜந்நிய ஸ்மிருதிஞானம் பரோக்ஷமோ, அங்ஙனமே அநுமானமுதலிய பிரமாணத்தாற் றோன்றிய ஞானமும் பரோக்ஷமாம். ஏனெனின், எங்ஙனம் ஸ்மிருதியின் விஷயம் விருத்தியினின்றும் விலகியிருக்கின்ற

தோ, அங்ஙனமே அநுமான முதலியவற்றாற் றோன்றும் ஞானத்தின் விஷயமும் விருத்தி தேசத்தி லில்லை; ஆனால், விலகியுள்ள பர்வதமுதலிய தேசங்களி லிருக்கின்றது. சென்றனவும் வருவனவுமாகிய பதார்த்தங்களுக்கும் அநுமானமுதலியவற்றால் அநுமிதிமுதலியனவாகிய வர்த்தமான ஞானங்கள் உண்டாகின்றன. ஆதலால், அநுமானமுதலியவற்றாற் றோன்றும் ஞானத்தின் தேசத்திலும் விஷய மிருக்கிறதில்லை. ஆனால், அநுமிதிமுதலிய ஞானத்தின் தேச காலங்களுக்கு வேறாகிய தேசத்திலும் காலத்திலும் அவற்றின் விஷய மிருக்கும்.

94. இந்திரியஜந்நியத் தன்மையின் நியமமின்றிய பிரத்தியக்ஷஞானத்தின் அநுசந்தானம்

இந்திரியஜந்நிய ஞானத்தின் விஷயம் ஞானத்தின் தேச காலங்களுக்கு வேறாகிய தேசகாலங்களி லிருப்பதில்லை; ஆனால், ஞானத்தின் தேசகாலங்களிலேயே யிருக்கின்றது. ஆதலால், இந்திரியஜந்நிய ஞானம் முழுவதும் பிரத்தியக்ஷமேயாகின்றது. அத்துவைதமதத்தில் அந்தக்கரணத்தின் பரிணாமமாகிய விருத்தி யாதோ, அதனை ஞான மென்பர். ஆதலால், ஞானமும் விஷயமும் ஓரிடத்திருக்கும், அல்லது விருத்தியும் விஷயமு மோரிடத்திருக்கும் என்று கூறுவதிற் பொருளொன்றேயாம். இந்திரியஜந்நிய ஞானமே பிரத்தியக்ஷமா மென்னும் நியம மில்லை.

யாண்டு அந்நியப் பிரமாணத்தாற் றோன்றிய விருத்தி தேசத்திலும் விஷய மிருக்கின்றதோ, ஆண்டுப் பிரத்தியக்ஷ ஞானமே யுண்டாகின்றது. எங்ஙனம் "பத்தாமவன்நீ" என்னுஞ் சொல்லால் உற்பத்தியாகிய விருத்தியின் தேசத்தில் விஷயம் இருக்கின்றது. இதனாற் சப்தப்பிரமாண ஜந்நியஞானமும் சிலவிடத்துப் பிரத்தியக்ஷ மாகின்றது. மகாவாக்கியத்தாற் றோன்றிய பிரஹ்மாகாரவிருத்தியும் பிரஹ்மான்மாவுமாகிய இரண்டும்ஓரிடத்தில் இருக்கின்றன; ஆதலால், மகாவாக்கியத்தாற் றோன்றிய பிரஹ்மாத்மஞானம் பிரத்தியக்ஷமாம். அங்ஙனமே ஈசுவர ஞானத்திற்கு உபாதானகாரணமான மாயையின் தேசத்தில் சர்வ பதார்த்தங்களு மிருக்கின்றன. ஆதலால், இந்திரிய ஜந்நிய ஞானமன்றாயினும் ஈசுவரனது ஞானம் பிரத்

தியக்ஷமாம். அங்ஙனமே அநுபலப்திப் பிரமாணத்தாற் றோன்றிய அபாவத்தின் ஞானமும் பிரத்தியக்ஷமாம்.

ஏனெனின், யாண்டுப் பூதலத்திற் கடாபாவத்தின் ஞானம் உண்டாகின்றதோ, ஆண்டுப் பூதலத்தோடு நேத்திரத்திற்குச் சம்பந்த முண்டாய்ப் பூதல தேசத்தில் அந்தக்கரணத்தின் விருத்தி செல்லுகின்றது. "பூதலத்திற் கடமில்லை" என்பது விருத்தியின் ஆகாரமாம். ஆண்டுப் பூதல அம்சத்திலோ விருத்தி நேத்திரஜந்நியமாம். கடாபாவ அம்சத்தில் அநுபலப்தி ஜந்நியமாம்.

எங்ஙனம் "பர்வதம் தீயுடைத்து" என்னும் விருத்தி பர்வத அம்சத்தில் நேத்திர ஜந்நியமும், வந்நி அம்சத்தில் அநுமான ஜந்நியமு மாமோ, அங்ஙனமே ஓரே விருத்தி அம்ச பேதத்தால் இந்திரியமும் அநுபலப்தியுமாகிய இரண்டு பிரமாணங்களால் உற்பத்தி யாகின்றது. ஆண்டுப் பூதலாவச்சின்ன சேதனத்திற்கு விருத்தி அவச்சின்ன சேதனத்தோடு அபேதம் உண்டாகின்றது. பூதலாவச்சின்ன சேதனமே கடாபாவ அவச்சின்ன சேதனமாம். ஆதலால், கடாபாவ அவச்சின்ன சேதனத்திற்கும் விருத்தி அவச்சின்ன சேதனத்தோடு அபேத முண்டாகின்றது. ஆதலால், அநுபலப்திப் பிரமாணத்தாற் றோன்றிய கடாபாவத்தின் ஞானமும் பிரத்தியக்ஷமாம். ஆனால், யாண்டு அபாவத்தின் அதிகரணம் பிரத்தியக்ஷ யோக்கியமாய் அதிகரணத்தின் பிரத்தியக்ஷத்தில் இந்திரியத்தின் வியாபார மிருக்கின்றதோ, ஆண்டு முற்கூறியபடி சம்பவிக்கின்றது.

யாண்டு அதிகரணத்தின் பிரத்தியக்ஷத்தில் இந்திரியத்தின் வியாபார முண்டாகிறதில்லையோ, ஆண்டு அநுபலப்திப் பிரமாண ஜந்நிய அபாவத்தின் ஞானம் பிரத்தியக்ஷமன்று; ஆனாற் பரோக்ஷமாம். எங்ஙனம்: வாயுவி லுருவமின்மையின் ஞானம் யோக்கியாநுபலப்தியால் மூடிய கண்ணுடையவனுக்கும் உண்டாகின்றது. பரமாணுவில் யோக்கியாநுபலப்தியினால் நேத்திரத்தின் விழித்தல் வியாபார மின்றியே மகத்துவாபாவத்தின் ஞானம் உண்டாகின்றது. ஆண்டு விஷயதேசத்தில் விருத்தி செல்லுகிறதில்லை. ஆதலால், அநுபலப்திப் பிரமாணத்தாற் றோன்றிய வாயுவி லுருவ மின்மையின் ஞானமும் அங்ஙனமே பரமாணுவில் மகத்துவாபாவத்தின் ஞானமும்

பிரத்தியக்ஷமன்று. பரோக்ஷமாம். இவ்வாற்ருல் அநுபலப்திப் பிரமாண ஜந்நிய அபாவத்தின் ஞானம் சிலவிடத்துப் பிரத்தியக்ஷமும் சிலவிடத்துப் பரோக்ஷமுமாம்.

வேதாந்தபரிபாஷை முதலிய நூல்களில் அநுபலப்திப் பிரமாண ஜந்நிய அபாவத்தின் பிரத்தியக்ஷம் எழுதப்பட்டிருக்கின்றது. அநுபலப்தி ஜந்நிய பரோக்ஷஞானத்தின் உதாரணமெழுதப்படவில்லை; அது அவற்றிற் குறையாம்; எழுதுதல் வேண்டும். பரோக்ஷத்திற்கு உதாரணம் எழுதாவிடின் அநுபலப்தி ஜந்நியஞானம் பரோக்ஷ மாகாதென்னும் மயக்க முண்டாம்.

95. அபாவத்தின் ஞானம் யாண்டும் பரோக்ஷமாமென்பதின் நிர்ணயம்

சூக்ஷ்மமாய் விசாரிக்குமிடத்து அநுபலப்திப் பிரமாணத்தாற் ருேன்றிய அபாவத்தின் ஞானம் யாண்டும் பரோக்ஷமாம்; ஓரிடத்தும் பிரத்தியக்ஷ மன்று. ஏனெனின், பிரமாணசேதனத்தோடு விஷய சேதனத்திற்கு அபேதம் உண்டாகியும், யாது பிரத்தியக்ஷ யோக்கிய விஷயமன்ருே, அதன் பரோக்ஷஞானமே உண்டாகின்றது. எங்ஙனம் சத்தமுதலிய பிரமாணங்களால் தர்மாதர்மங்களின் ஞானம் உண்டாகுங்கால் பிரமாணசேதனத்தோடு விஷயசேதனத்திற்குப் பேத மில்லை. ஏனெனின், அந்தக்கரண தேசத்தில் தர்மாதர்ம மிருக்கின்றன. ஆதலால், அந்தக்கரணமும் தர்மாதர்மமுமாகிய வுபாதிகள் வேறுவேறிடங்களி லில்லாதிருத்தலால், தர்மாதர்மாவச்சின்னசேதனம் பிரமாணசேதனத்தோடு பின்னமன்று. என்ருலும், தர்மாதர்மம் பிரத்தியக்ஷ யோக்கியமன்று. ஆதலால், சத்தமுதலியவற்ருற் ருேன்றிய தர்மாதர்மங்களின் ஞானம் என்றும் பிரத்தியக்ஷ மன்று. அநுபவத்தை யொட்டி விஷயங்களில் யோக்கியதை அயோக்கியதைகளை அறிதல் வேண்டும்.

எங்ஙனம் தர்மாதர்மங்கள் பிரத்தியக்ஷ யோக்கியமன்ருே அங்ஙனமே அபாவபதார்த்தமும் பிரத்தியக்ஷ யோக்கியமன்று. அபாவபதார்த்தம் பிரத்தியக்ஷமாமாயின், வாதிகளின் விவாதமுண்டாதல் வேண்டியதில்லை. மீமாம்ஸகர் அபாவத்தினை அதிகரணவடிவமாகக் கொண்டிருக்கின்றனர். நையாயிகர்

முதலியோர் அதிகரணத்தின் வேருகக் கொண்டிருக்கின்றனர். அங்ஙனமே நாஸ்திகர் அபாவத்தினை வெறுமை யென்றும் பொய்யென்றும் கொள்ளுகின்றனர். ஆஸ்திகர் அபாவத்தினைப் பதார்த்தமெனக் கொள்ளுகின்றனர். இவ்வாறு அபாவத்தின் சொரூபத்தில் விவாத முளது. பிரத்தியக்ஷ யோக்கியமாகிய கட முதலியவற்றின் சொரூபத்தில் அதிகரணத்தின் வேறு, வேற ன்று என்றல்முதலிய விவாத முண்டாகிறதில்லை. ஆதலால், அபாவபதார்த்தம் பிரத்தியக்ஷ யோக்கியம் அன்று. இக் கார ணத்தால் யாண்டுப் பூதலத்தில் கடாபாவத்தின் ஞானம் உண்டா கின்றதோ, ஆண்டுப் பிரமாண சேதனத்தோடு கடாபாவ அவச் சின்ன சேதனத்திற்கு அபேத முளதாயினும் அபாவாம்சத் தில் இந்த ஞானம் பரோக்ஷமாம்; பூதலாம்சத்தில் அபரோக்ஷ மாம். எங்ஙனம்: பர்வதம் வந்நியுடைத்து என்னும் ஞானம் பர் வத அம்சத்தில் அபரோக்ஷமும் வந்நி அம்சத்தில் பரோக்ஷமு மாம். இவ்வாற்ருல் அநுபலப்திப் பிரமாண ஜந்நிய அபாவத் தின் ஞானத்தினை யாண்டும் பரோக்ஷமாகக் கொள்ளின் பட்ட ரோடும் விரோத மின்று. பட்டமதத்தில் அநுபலப்தி ஜந்நிய அபாவத்தின் ஞானம் பரோக்ஷமேயாம்.

அபாவத்தின் ஞானத்தினை நையாயிகர் இந்திரிய ஜந்நிய மென மதித்து அதற்குப் பிரத்தியக்ஷங் கூறுகின்றனர். அது எவ்வாற்ருனும் அசங்கதமாம். ஏனெனின், வாயுவில் உருவ மின்மையின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது, பரமாணுவில் மகத்துவாபாவத்தின் நேத்திரேந்திரியப் பிரத்தி யக்ஷம் உண்டாகின்றது என்பது நையாயிகர்களது சித்தாந்தம்; அது பொருந்தாது. ஏனெனின், வாயுவில் உருவம் இன்மையை அறிதற்பொருட்டு ஒருவரும் நேத்திரத்தை விழித்தலாகிய வியாபாரத்தைச் செய்கிறதில்லை. ஆனல், மூடிய விழிக்கும் வாயு வில் உருவ மின்மையின் ஞானம் யோக்கியாநுபலப்தியால் உண்டாகின்றது. அங்ஙனமே பரமாணுவில் மகத்துவாபாவத் தின் ஞானமும் விழித்த விழிக்கு உண்டாவதுபோல மூடிய விழி க்கும் உண்டாகின்றது. மூடிய விழிக்குக் கடமுதலியவற்றின் நேத்திரேந்திரிய ஞானம் என்றும் உண்டாகிறதில்லை. ஆதலால், வாயுவில் உருவமின்மையின் நேத்திரேந்திரியப் பிரத்தியக்ஷ மும், பரமாணுவில் மகத்துவாபாவத்தின் நேத்திரேந்திரியப்

பிரத்தியக்ஷமும், பொருந்தா. ஆனால், யோக்கிய அநுபலப்தியினால் அவற்றின் பரோக்ஷஞானம் உண்டாகிறது.

அபாவஞானத்தில் இந்திரியங்களின் அந்வய வெதிரேகத்தைக் காணுதலால் அபாவஞானத்தில் இந்திரியம் ஏதுவாமென நையாயிகர் கூறுகின்றனர். இதற்குச் சமாதானம் பேததிக்கார முதலிய நூல்களில் எழுதப்பட்டிருக்கிறது:—இந்திரியங்களின் அந்வயவெதிரேகம் அதிகரணத்தின் ஞானத்தில் ஸபலமாம். எங்ஙனம்: பூதலத்திற் கடாபாவத்தின் ஞானம் உண்டாகிறது; ஆண்டு நேத்திரேந்திரியத்தால் அபாவத்தின் அதிகரணமாகிய பூதலத்தின் ஞான முண்டாகின்றது. அந்த நேத்திரத்தால் அறியப்பட்ட பூதலத்தில் கடாபாவத்தின் ஞானம் யோக்கியாநுபலப்தியினால் உண்டாகின்றது. இவ்வாற்றால் கடாபாவத்தின் அதிகரணமாகிய பூதலம் யாதோ, அதன் ஞானத்தில் இந்திரியம் ஸபலமாம். இச் சங்கைசமாதான மிரண்டும் பொருத்தமுடையனவன்று. ஏனெனின், வாயுவில் உருவமின்மையின் ஞானமும் பரமாணுவில் மகத்துவாபாவத்தின் ஞானமும் நேத்திரவியாபாரமின்றியு முண்டாகின்றன. ஆதலால், எந்த அபாவஞானத்திலும் இந்திரியத்தின் அந்வயவெதிரேக மிருக்கினும் இந்திரியத்திற்குக் காரணத்தன்மை சித்திக்கிறதில்லை. சகல அபாவஞானத்திலும் இந்திரியத்தின் அந்வய வெதிரேகம் பெறப்படுவதில்லை. இவ்வாற்றால் தளர்வுடைய மூல்சங்கைக்குச் சமாதானங் கூறுதலும் அசங்கதமாம்.

நையாயிகர் "கட அநுபலப்தியினால் இந்திரியத்தால் அபாவத்தை நிச்சயிக்கின்றேன்" என்னும் உணர்ச்சி யுண்டாகின்றது; ஆதலால், அநுபலப்தி இந்திரியமென்னும் இரண்டும் கடமுதலியவற்றின் அபாவஞானத்திற்கு ஏதுவாம் என்று இவ்வாறு சங்கிக்கின்றனர். இச் சங்கைக்குக் "கடாபாவத்தினது அதிகரணத்தின் ஞானம் இந்திரியத்தால் உண்டாகின்றது, கடாபாவத்தின் ஞானம் அநுபலப்தியினா லுண்டாகின்றது" என்னும் முற்கூறிய சமாதானம் சம்பவியாது. ஏனெனின், யாண்டு இந்திரிய யோக்கிய அதிகரணம் இருக்கின்றதோ, ஆண்டு முற்கூறிய சமாதானம் சம்பவிக்கின்றது. யாண்டு அதிகரணம் இந்திரிய யோக்கியமன்றோ ஆண்டு முற்கூறிய சமாதானம் சம்பவியாது. எங்ஙனம்: "வாயுவில் உருவ அநுபலப்தி

ஞல் நேத்திரத்திஞல் உருவத்தின் அபாவத்தை நிச்சயிக்கின் றேன்'' என்பதாக வாயுவில் உருவ அபாவத்தின் அநுபலப்தி ஜந்நியஞானமும் நேத்திர ஜந்நியஞானமும் விளங்குகின்றன. ஆண்டு வாயுவின் ஞானம் நேத்திரஜந்நியமும் உருவ அபாவத் தின் ஞானம் அநுபலப்தி ஜந்நியமுமாமெனக் கூறுதல் சம்பவி யாது. ஏனெனின், வாயுவில் உருவத்தின் அபாவத்தோடு நேத்திரத்திற்கு யோக்கியதை யின்று.

ஆதலால், அபாவ ஞானத்தினைக் கேவலம் அநுபலப்தி ஜந்நியமென்னக் கொள்ளின் இரண்டிஞலும் ஆக்கப்படுந்தன்மை தோற்றுதலா லுண்டாகும் விரோதத்திற்கு அத்வைதவாதியின் சமாதான மிதுவாம்:—''பூதலத்தில் அநுபலப்தியிஞல் நேத்தி ரத்தால் கடாபாவத்தினை நிச்சயிக்கின்றேன்'' என்று கூறுதற்கு அநுபலப்தியோடு கூடிய நேத்திரத்திஞல் பூதலத்தில் கடா பாவத்தின் நிச்சயமுடையன் யான் என்பது அபிப்பிராயம் அன்று. ஆஞல், பூதலத்தில் இந்திரியஜந்நிய கடத்தினது உப லப்தியின் இன்மையால் கடாபாவத்தின் நிச்சயமுடையன் யான் என்பது தாற்பரியம். அபாவத்தின் நிச்சயத்திற் கேது அநுபலப்தியாம்.

அநுபலப்தியின் பிரதியோகியாகிய வுபலப்தி யாதோ, அதனிடத்து இந்திரிய ஜந்நியத்துவம் தோற்றுகின்றது. இத ஞல் நிஷேதிக்கத்தக்க உபலப்தியில் இந்திரிய ஜந்நியத்தன்மை தோற்றுதலால் இந்திரிய ஜந்நிய உபலப்தியின் அபாவத்தால் கடாபாவத்தின் நிச்சயம் உண்டாகின்றதென்பது பெறப்பட் டது. அங்ஙனமே ''வாயுவில் உருவத்தின் அநுபலப்தியால் நேத்திரத்தால் உருவம் இன்மையை நிச்சயிக்கின்றேன்'' என்று சொல்லுதற்கும் உருவத்தின் அநுபலப்தியோடு கூடிய நேத்தி ரத்தால் உருவமின்மையின் நிச்சயமுடையன் யான் என்பது தாற்பரிய மன்று. ஏனெனின், நேத்திரத்தின் வியாபாரமின்றி யும் உருவமின்மையின் நிச்சயம் உண்டாகின்றது. ஆஞல், நேத்திரஜந்நிய உருவத்தினது உபலப்தியின் அபாவத்தால் வாயுவில் உருவம் இன்மையின் நிச்சயமுடையன் யான் என் பது தாற்பரியம். ஆதலால், எந்த உபலப்தியின் அபாவம் உருவம் இன்மையின் நிச்சயத்திற்கு ஏதுவோ அவ் வுபலப்தி

யில் நேத்திரஜந்நியத்தன்மை தோற்றுகின்றது. இவ்வாற்றால் சகல அபாவ நிச்சயத்திற்கும் ஏதுவாகிய அநுபலப்தி யாதோ அதன் பிரதியோகியாகிய உபலப்தியில் இந்திரிய ஜந்நியத்தன்மை சொல்லப்படுகின்றது.

விவேகமின்றி அபாவ நிச்சயத்தில் இந்திரிய ஜந்நியத்துவம் தோற்றுகின்றது. நையாயிகர்களது சங்கையின் இச் சமாதானம் யாண்டும் வியாபகமாம். அதிகரண ஞானத்தின் இந்திரிய ஜந்நியத்துவம் அபாவ ஞானத்திற் றோற்றுகின்றது என்னும் பேததிக்கார வேதாந்த பரிபாஷை முதலியவற்றின் சமாதானம் யாண்டும் வியாபகம் அன்று. ஆனால் யாண்டுப் பிரத்தியக்ஷ யோக்கிய பூதல முதலியன அபாவத்தின் அதிகரணமாமோ, ஆண்டு இச் சமாதானஞ் சம்பவிக்கின்றது.

யாண்டுப் பிரத்தியக்ஷ அயோக்கியமான வாயுமுதலியன அபாவத்தின் அதிகரணமோ ஆண்டு முற்கூறிய சமாதானஞ் சம்பவிக்கிறதில்லை. "அநுபலப்தியினால் இரசனேந்திரியத்தால் புளிப்பிரசத்தின் இன்மையை மாம்பழத்தில் அறிகின்றேன்" என்னுமிடத்தும் அதிகரணத்தின் ஞானம் இரசனேந்திரியத்தினாற் றோன்றியதெனல் சம்பவியாது. ஏனெனின், புளிப்பிரசத்தின் அபாவத்தினது அதிகரணம் மாம்பழமாம். அதனை அறியும் சாமர்த்தியம் இரசனேந்திரியத்தி லின்று. இரசனேந்திரியத்தில் இரசமாத்திரத்தை அறியும் சாமர்த்தியம் உண்டு; திரவியத்தை அறியும் சாமர்த்தியம் இல்லை. ஆதலால், இரசனேந்திரிய ஜந்நிய புளிப்பிரசத்தினது உபலப்தியின் இன்மையால் மாம்பழத்தில் இரசத்தினது இன்மையின் நிச்சயமுடையன் யான் என்னும் தாற்பரியத்தால் முற்கூறிய வியவகாரம் உண்டாகின்றது. முற்கூறிய வாக்கியத்தின் அக்ஷர மரியாதையால் கூறிய அர்த்தம் கிலேசமுடையதாயினும், வேறொன்றிற் செல்லுதல் சம்பவியாமையின், கூறிய பொருளையே அங்கீகரித்தல் வேண்டும். ஆதலால், நையாயிகர்களது சங்கைக்கு யாம் கூறியதே சமாதானமாம். இவ்வாற்றால் அநுபலப்திப் பிரமாணத்தால் அபாவத்தின் நிச்சயம் உண்டாகின்றது என்னும் பக்ஷம் தோஷமின்றியதாம்.

96. அநுபலப்திப் பிரமாணத்தை அங்கீகரித்தலில் நையாயிகர் சங்கையும் சித்தாந்தியின் சமாதானமும்

அபாவப்பிரமையை வேறு பிரமாணமாகக் கொள்ளுதலில் கௌரவ மிருக்கின்றது. குடமுதலியவற்றின் பிரத்தியக்ஷப் பிரமையில் இந்திரியத்திற்குப் பிரமாணத்தன்மை நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிச்சயிக்கப்பட்ட பிரமாணத்தால் அபாவப்பிரமையின உற்பத்தியைக் கொள்ளுதலில் இலாகவம் இருக்கிறது என்று நையாயிகர் சங்கிக்கின்றனர்.

அச் சங்கைக்கு இது சமாதானமாம்:—இந்திரியத்திற்குப் பிரமாணத்தன்மையைக் கூறும் நையாயிகரும் அநுபலப்திக்குக் காரணத்தன்மையோ அங்கீகரித்திருக்கின்றனர். அநுபலப்திக்குக் காரணத்தன்மை கூறுவ தில்லை. அத்வைதவாதி இந்திரியம் அபாவத்திற்குக் காரணமாதலை அங்கீகரிப்பதில்லை. ஆதலால், இந்திரியத்திற்கு அபாவத்தோடு சுவசம்பந்த விசேஷணத்தன்மைச் சம்பந்தமும் சுத்த விசேஷணத்தன்மைச் சம்பந்தமும் அங்கீகரிக்கப்படுவதில்லை. நையாயிகருக்கு அப்பிரசித்த சம்பந்தத்தின் கற்பனை கௌரவமாம். அநுபலப்தியில் சககாரி காரணத்தன்மையோ நையாயிகரும் அங்கீகரிக்கின்றனர். அதற்கு அத்வைதவாதிகள் காரணத்தன்மை யென்னும் பெயர் வைத்துப் பிரமாணத்தன்மை கூறுகின்றார். ஆதலால், நையாயிகர் மதத்திற்றான் கௌரவ முண்டு; அத்வைதமதத்தி லில்லை.

மேலும், வேதாந்த பரிபாஷையின் உரையாசிரியர் நூலாசிரியரின் புத்திரராவர். அவருக்கு அத்வைத சாஸ்திரத்தின் சம்ஸ்காரம் குறைவாயும், நியாய சாஸ்திரத்தின் சம்ஸ்காரம் அதிகமாயும் இருந்திருக்கின்றன. ஆதலால், மூலத்திற்கு வியாக்கியானஞ் செய்து நையாயிகர் மதத்திற்கு அவர் இவ்வாறு உஜ்ஜீவனம் எழுதியிருக்கின்றார்:—அநுபலப்தி வேறு பிரமாணம் அன்று. அபாவத்தின் ஞானம் இந்திரியத்தினாலே யுண்டாகின்றது. அபாவத்தோடு இந்திரியத்திற்குச் சம்பந்த மில்லை; விஷயத்தோடு சம்பந்தமின்றி இந்திரிய ஜந்திய ஞானமுண்டாகாது. விசேஷணத்தன்மைச் சம்பந்தமும், சுவசம்பந்த விசேஷணத்தன்மைச் சம்பந்தமும் நையாயிகர் அங்கீகரித்திருக்கின்றனர்.

அது அப்பிரசித்தமாம். ஆதலால், அப்பிரசித்தத்தின் கற்பனை கௌரவமா மெனக்கூறின், அது அசங்கதமாம்.

ஏனெனின், 'கட மின்மை யுடையது பூதலம்' என்னும் உணர்வு எல்லோருக்கும் சம்மதமாம். இவ் வுணர்ச்சியால் கடாபாவத்தில் ஆதேயத்தன்மை விளங்குகின்றது. பூதலத்தில் அதிகாணத்தன்மை விளங்குகின்றது. பாஸ்பா சம்பந்தமின்றி ஆதார ஆதேயத்தன்மை யுண்டாகிறதில்லை. ஆதலால், பூதல முதலிய அதிகாணத்தில் அபாவத்தின் சம்பந்தம் எல்லோருக்கும் இஷ்டமாம். அபாவத்திற்குப் பிரத்தியக்ஷம் அங்கீகரியாதவர்கள் எவர்களோ அவர்களுக்கும் அபாவத்தின் அங்கீகாரமுண்டு. ஆதலால், அதிகாணத்தோடு அபாவத்திற்குச் சம்பந்தம் எல்லோருக்கும் இஷ்டமாம். அச் சம்பந்தத்திற்கு வியவகாரத்தின் பொருட்டு ஒரு பெயர் சொல்லுதல் வேண்டும். ஆதலால், அதிகாணத்தில் அபாவத்தின் சம்பந்தத்தினை விசேஷணத் தன்மையென்று கூறுகின்றனர். இவ்வாற்ருல் விசேஷணத் தன்மைச் சம்பந்தம் அப்பிரசித்தம் அன்று. ஆதலால், அப்பிரசித்த கற்பனையாகிய கௌரவம் நையாயிகமதத்தி வில்லை. அபாவத்திற்கு அதிகாணத்தோடு சம்பந்தம் எல்லா மதத்தினும் பெறப்பட்டதாயிருத்தலின் விசேஷணத்தன்மை, சுவ சம்பந்த விசேஷணத்தன்மை என்னு மிரண்டு சம்பந்தமும் அப்பிரசித்த மன்று. "கடமின்றிய பூதலத்தைக் காண்கின்றேன்" என்னும் அநுவியவசாய முண்டாகின்றது. ஆதலால், பூதலமுதலியவற்றில் அபாவத்தின் ஞானம் நேத்திரமுதலியவற்ருற் ருேன்றியதாம்.

யாண்டு நேத்திர ஜந்நியஞான முண்டாகின்றதோ, ஆண்டுக் "காண்கின்றேன்" என்னும் அநுவியவசாயம் உண்டாகின்றது. அத்வைத மதத்தில் பூதலத்தின் ஞானம் நேத்திர ஜந்நியமாம்; கடாபாவத்தின் ஞானம் அநுபலப்தி ஜந்நியமாம்; நேத்திர ஜந்நியமன்று. ஆதலால், அநுவியவசாய ஞானத்தில் தனதுவிஷயமான வியவசாயத்தின் விலக்ஷணத்தன்மை விளங்க வேண்டும். எங்ஙனம் "பர்வதம் வந்நியுடைத்து" என்னும் ஞானம் பர்வத அம்சத்தில் பிரத்தியக்ஷமும், வந்நி யம்சத்தில் அநுமிதியுமாம். "பர்வதத்தைப் பார்க்கின்றேன்" "வந்நியை அநுமிக்கின்றேன்" என்று அநுவியவசாயம் உண்டாகின்றது.

அதில் வியவசாயத்தின் விலக்ஷணத்தன்மை விளங்குகின்றது. அந்த விலக்ஷணத்தன்மை ஈண்டு நேத்திரஜந்நியத் தன்மையும் அநுமான ஜந்நியத் தன்மையுமாம். அங்ஙனமே அபாவ ஞானத்தில் நேத்திர ஜந்நியத்துவமும் அநுபலப்தி ஜந்நியத்துவமு மாகிய விலக்ஷணத்தன்மை யுண்டாகுமாயின் அநுவியவசாயத்தில் விளங்கல்வேண்டும். கேவல இந்திரிய ஜந்நியத்துவமே அநுவியவசாயத்தில் விளங்குகின்றது. ஆதலால், அபாவத்தின் ஞானமும் இந்திரிய ஜந்நியமாம்; வேறு பிரமாண ஜந்நியம் அன்று.

அபாவஞானத்தினை இந்திரியஜந்நியமெனக் கொள்ளாவிடினும் அத்வைதவாதிகள் அநுபலப்தி ஜந்நியமெனக் கொண்டு பிரத்தியக்ஷ வடிவமாகக் கூறுகின்றனர். அதுவும் அசங்கதமாம். ஏனெனின், பிரத்தியக்ஷஞானமாவது யாதோ அது இந்திரிய ஜந்நியமாமென்னும் நியமத்திற்குப் பாதம் உண்டாகும். ஆதலால், அபாவத்தின் ஞானம் இந்திரிய ஜந்நியமாம். இவ்வாறு வேதாந்த பரிபாஷையின் உரையில் நையாயிகர் மதத்தின் உஜ்ஜீவனம் சகல அத்வைத நூல்களுக்கும் விரோதமாக எழுதப்பட்டிருக்கின்றது; அது யுக்திக்கு விரோதமாம். ஏனெனின்,

அபாவத்திற்கு அதிகரணத்தோடு சம்பந்தம் எல்லோருக்குமிஷ்டமாம். ஆகலின், அப்பிரசித்த கற்பனையில்லையென்று முதலில் கூறியது யாதோ அது அசங்கதமாம். ஏனெனின், அபாவ அதிகரணங்களின் சம்பந்தமோ இஷ்டமாம். ஆனால், விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தில் பிரத்தியக்ஷ ஞானத்தின் காரணத்தன்மை அப்பிரசித்தமாம். ஏனெனின், அபாவஞானத்திற்கு இந்திரிய ஜந்நியத்தன்மையை அங்கீகரிப்பவர் யாரோ அவர் மதத்தில் விசேஷணத்தன்மைச் சம்பந்தம் இந்திரிய ஜந்நிய ஞானத்திற்குக் காரணமென மதிக்கப்படுகின்றது. அந்நியமதத்தில் விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தில் இந்திரிய ஜந்நிய ஞானத்தின் காரணத்தன்மை அங்கீகரிப்பதில்லை. ஆதலால், அப்பிரசித்த கற்பனையின் பரிகாரம் நையாயிக மதத்திலுண்டாகாது.

அபாவ ஞானத்திற்கு வேறு பிரமாண ஜந்நியத்தன்மை அங்கீகரித்தலில், கடமின்றிய பூதலத்தைக் காண்கின்றேன்

என்னும் அநுவியவசாயஞான முண்டாகாதென்று எந்தத் தோஷஞ் சொல்லப்பட்டதோ அதுவுஞ் சம்பவியாது. ஏனெனின், கடாபாவ விசிஷ்ட பூதலத்தின் நேத்திரேந்திரிய ஞானமுடையவன் யான் என்னும் அநுவியவசாய முண்டாகின்றது. முற்கூறிய வாக்கியத்திற்கும் பொருள் இதுவே. இந்த அநுவியவசாயத்தில் கடாபாவம் விசேஷணமும், பூதலம் விசேஷியமுமாம். அந்த விசேஷியமாகிய பூதலத்தில் நேத்திரேந்திரிய ஞானத்திற்கு விஷயமாத விருக்கின்றது; கடாபாவ விசேஷணத்தில் இல்லையாயினும், கடாபாவ விசிஷ்ட பூதலத்திற் றோற்றுகின்றது. சிலவிடத்து விசேஷணமாத்திரத்தின் தர்மமும், சிலவிடத்து விசேஷண விசேஷியமாகிய இரண்டின் தர்மமும் விசிஷ்டத்திற் றோற்றுகின்றன.

எங்ஙனம்: தண்டி புருஷன் என்னும் ஞானத்தில் தண்டம் விசேஷணமும், புருஷன் விசேஷியமுமாம். யாண்டுத் தண்டமின்றிப் புருஷன் இருக்கின்றானோ, ஆண்டுத் "தண்டி புருஷன் இல்லை" என்னும் உணர்ச்சி யுண்டாகின்றது. ஆதலால், தண்டமாகிய விசேஷணத்தின் அபாவ மிருக்கிறது; புருஷனாகிய விசேஷியத்தின் அபாவ மில்லை. என்றாலும் விசேஷண மாத்திரத்தி லிருக்கும் அபாவம் தண்ட விசிஷ்ட புருஷனிடத்தும் இருக்கின்றது.

யாண்டுத் தண்டமிருந்து புருஷன் இல்லையோ ஆண்டு விசேஷிய மாத்திரத்தின் அபாவ மிருக்கிறது. 'தண்டி புருஷன் இல்லை' என்பதாகத் தண்ட விசிஷ்ட புருஷனிடத்திற் றோற்றுகின்றது. யாண்டுத் தண்டமும் புருஷனும் இல்லையோ, ஆண்டு விசேஷண விசேஷியங்கள் இரண்டின் அபாவமும் விசிஷ்டத்திற் றோற்றுகின்றது. அங்ஙனமே விசேஷியமாகிய பூதலத்தில் நேத்திரேந்திரிய ஞானத்திற்கு விஷயமாதல் இருக்கின்றது; விசேஷணமாகிய கடாபாவத்தின்கண் இல்லை; என்றாலும் கடாபாவ விசிஷ்ட பூதலத்திற் றோன்றுகின்றது.

எங்ஙனம்: "வந்நியுடைய பர்வதத்தைக் காண்கின்றேன்" என்பதாகப் பர்வதத்தினது பிரத்தியக்ஷத்தின் அநுவியவசாயம் உண்டாகின்றது. ஆண்டு நேத்திரேந்திரிய ஞானத்திற்கு விஷயமாதல் விசேஷியமாகிய பர்வதத்தி லுளது; விசேஷணமாகிய வந்நியி லில்லை. என்றாலும் வந்நி விசிஷ்ட பர்வதத்தில்

நேத்திரேந்திரிய ஞானத்திற்கு விஷயமாதற் றன்மை தோற்று கின்றது. கடாபாவமும் பூதலமும் விஜாதீய ஞானத்திற்கு விஷயமாமாயின், "பர்வதத்தைப் பார்க்கின்றேன், வந்நியை அநுமிக்கின்றேன்" என்பதாக விலக்ஷண வியவசாய ஞானத்தை விஷயஞ் செய்வதாகிய அநுவியவசாயம் உண்டாதல் வேண்டும் என எந்தத் தோஷம் சொல்லப்பட்டதோ, அதுவும் அத்துவைத நூல்களின் தளர்ந்த சம்ஸ்கார முடையோர் கூற்றும். ஏனெனின், அபாவத்தின் ஞானம் அநுபலப்திப் பிரமாண ஜந்நியமாமென்னும் அர்த்தத்தை அங்கீகரிப்பவர்கள் எவர்களோ, அவர்களுக்குக் "கட அநுபலப்தியினுல் கடாபாவத்தினை நிச்சயிக்கின்றேன், நேத்திரத்தினுல் பூதலத்தைக் காண்கின்றேன்" என்னும் அநுவியவசாயம் வாதிக்கப்படாததாய் உண்டாகின்றது. அதனுல், வியவசாயஞானத்திற்கு விஷயமாதற்றன்மையைக் கடாபாவத்திலும் பூதலத்திலும் விலக்ஷணமாகக் கொண்டிருக்கின்றனர். அன்றியும், "அநுபலப்தியினுற் றோன்றிய தன்மையை அங்கீகரித்து அத்துவைதவாதிகள் அபாவஞானத்திற்குப் பிரத்தியக்ஷம் அங்கீகரித்திருக்கின்றனர். பிரத்தியக்ஷஞானம் யாதோ அது இந்திரிய ஜந்நியமாகின்றது. ஆதலால், முற்கூறிய நியமத்திற்கு அநுபலப்தி வாதியின் மதத்தில் பாத முண்டாகும்" என்று தோஷம் கூறப்பட்டது. அதுவும் சித்தாந்தத்தினை அறியாததினுல் கூறியதாகலின் அசங்கதமாம். ஏனெனின், அநுபலப்திப் பிரமாண ஜந்நிய அபாவஞான முழுவதும் பிரத்தியக்ஷம் அன்று. ஆனுல், சில ஞானம் பிரத்தியக்ஷமாம்.

வாயுவில் உருவம் இன்மையின் ஞானமும் பரமாணுவில் மகத்துவம் இன்மையின் ஞானமுமாகிய இவைமுதலியன அநுபலப்தி ஜந்நியமாம்; என்றுலும் பரோக்ஷமாம். அல்லது அநுபலப்திப் பிரமாண ஜந்நியமாயினும் அபாவத்தின் ஞான முழுவதும் பரோக்ஷமாம். இதனை முன் கூறிவந்திருக்கின்றோம். ஆதலால், அநுபலப்திவாதி அபாவஞானத்தினைப் பிரத்தியக்ஷமெனக் கொண்டிருக்கின்றனர் என்று தர்மராஜர் புத்திரர் கூறுதல் சித்தாந்தத்தை அறியாததினுலாம். வேதாந்த பரிபாஷைமுதலிய நூல்களிற் சிலவிடத்து அபாவஞானத்திற்குப் பிரத்தியக்ஷத்தன்மை கூறியிருப்பது பிரௌடிவாதத்தினுற் கூறியதாம். அநுபலப்திப் பிரமாண ஜந்நிய அபாவஞானத்

திற்குப் பிரத்தியக்ஷத்தன்மை ஒப்புக்கொள்ளினும், சொல்லப்படும் கிரமத்தால் அபாவஞானத்தில் இந்திரிய ஜந்நியத்தன்மை பெறப்படுவதில்லை என்பது நூலாசிரியரது பிரௌடி வாதமாம். பிரதிவாதியின் வார்த்தையை அங்கீகரித்துப் பின் தனது மதத்தில் தோஷத்தைப் பரிகரித்தல் எதுவோ அதனைப் பிரௌடிவாதமென்பர்.

அன்றியும், அபாவஞானத்திற்குப் பிரத்தியக்ஷத்தன்மை அங்கீகரித்து இந்திரிய ஜந்நியத்துவம் அங்கீகரியாவிடின், பிரத்தியக்ஷ ஞானம் இந்திரிய ஜந்நியமாமென்னும் நியமத்திற்குப் பாத முண்டாகும் என்னும் இக் கூற்றும் அசங்கதமாம். ஏனெனின், அவனை இது கேட்போம்:—யாது பிரத்தியக்ஷஞானமோ, அது இந்திரிய ஜந்நியமாம், இந்திரியஜந்நியத்தின் வேறுய்ப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை என்று நியமம் உளதா? அல்லது யாது இந்திரிய ஜந்நிய ஞானமாமோ, அது பிரத்தியக்ஷமாம்; பிரத்தியக்ஷத்திற்கு வேறுக இந்திரிய ஜந்நிய முண்டாகிறதில்லை என்று நியம முளதா? அவற்றுள் முதற்பக்ஷத்தைக் கூறின் அசங்கதமாம்:—ஈசுவரனது ஞானம் பிரத்தியக்ஷமாம்; இந்திரிய ஜந்நியமன்று. நியாமதத்தில் நித்தியமும், சித்தாந்த மதத்தில் மாயாஜந்நியமுமாம். ஈசுவரனுக்கு இந்திரியமின்மையால் அவரது ஞானம் இந்திரியஜந்நிய மன்று. "பத்தாமவன் நீ" என்னும் வாக்கியத்தால் உண்டாகிய ஞானம் பிரத்தியக்ஷமாம்; இந்திரியஜந்நிய மன்று. "பத்தாவது புருஷனுக்குத் தனது சரீரத்தில் பத்தாமவனென்னுந் தன்மையின் ஞான முண்டாகின்றது. அச் சரீரம் நேத்திர யோக்கியமாம்; ஆதலால், பத்தாமவனது ஞானமும் நேத்திரேந்திரிய ஜந்நியமாம்" என்றிவ்வாறு கூறின் அது சம்பவியாது. ஏனெனின், மூடிய கண்ணுடையவனுக்கும் வாக்கியத்தைக் கேட்டுப் பத்தாமவனது ஞானம் உண்டாகின்றது. நேத்திரஜந்நியமாயின் நேத்திர வியாபாரமின்றி யுண்டாக லாகாது. ஆதலால், பத்தாமவனது ஞானம் நேத்திரஜந்நியமன்று; பத்தாமவனது ஞானம் மனோஜந்நியமா மாகலின் இந்திரிய ஜந்நியமாமெனக் கூறின் அதுவும் சம்பவியாது. ஏனெனின், தேவதத்தன் யஞ்ஞதத்தன் முதலிய பெயர் ஆத்மாவின தன்று; ஆனால், நியாயமதத்தில் சரீரவிசிஷ்ட ஆத்மாவினதாம்; வேதாந்த மதத்தில் சூக்ஷ்ம விசிஷ்ட ஸ்தூலசரீரத்தினதாம்.

அங்ஙனமே நீ நான் என்னும் வியவகாரமும் சூக்ஷ்மவிசிஷ்ட ஸ்தூல சரீரத்தி லுண்டாகின்றது. அந்த ஸ்தூலசரீரத்தின் ஞானம் மனதினுற் சம்பவிக்கிறதில்லை. பாகியபதார்த்தத்தினது ஞானத்தின் சாமர்த்தியம் மனதி லில்லை. "மனதின் அவதானம் உண்டாகுமாயின் வாக்கியத்தினுல் தசமனது ஞானமுண்டாகும். விக்ஷேபமடைந்த மனமுடையவர்களுக் குண்டாகிறதில்லை. ஆதலால், அந்வய வெதிரேகத்தால் தசமனது ஞானத்திற் கேது மனமாகலின் தசமனது ஞானம் மானதமாம். ஆதலால், இந்திரிய ஜந்நியமாம்" என்று கூறின், அதுவும் பொருந்தாது. ஏனெனின், இத்தன்மைய அந்வய வெதிரேகத்தால் சகல ஞானங்களுக்கும் ஏது மனமாம். விக்ஷேபப்பட்ட மனம் உடையவர்களுக்கு எந்தப் பிரமாணங்களினுலும் ஞான முண்டாகிறதில்லை. சாவதான மனமுடையவர்களுக்குச் சகல ஞானமுமுண்டாகும்; அதனுல், சகல ஞானங்களையும் மானதமென்னல் வேண்டும். ஆதலால், மனம் சகல ஞானங்களுக்கும் சாதாரண காரணமாம்; இந்திரியம் அநுமானமுதலிய சகல பிரமாணங்களுக்கும் சககாரியாம்.

மனதோடுகூடிய நேத்திரத்தால் எந்த ஞான முண்டாகின்றதோ, அது சாக்ஷுஷஞான மெனப்படுகின்றது.

மனதோடு கூடிய அநுமானப் பிரமாணத்தினுல் உண்டாவது எதுவோ அது அநுமிதிஞான மெனப்படுகின்றது.

மனதோடு கூடிய சப்தப்பிரமாணத்தா லுண்டாவது யாதோ, அது சாப்தஞான மெனப்படுகின்றது.

வேறு பிரமாண மின்றி மனமாத்திரத்தினு லுண்டாகும் ஞானமெதுவோ அது மானஸஞான மெனப்படுகின்றது. அது மனமாத்திரத்தினுல் உட்பதார்த்தங்களாகிய சுகமுதலியவற்றின் ஞான முண்டாவதாம். ஆதலால், உட்பதார்த்தங்களின் ஞானமே மானஸமாம். புறப்பதார்த்தங்களின் ஞானம் இந்திரியம் அநுமானம் முதலியவை யின்றி மனோமாத்திரத்தால் உண்டாகிறதில்லை. ஆதலால், பத்தாமவனது ஞானம் மானஸமாமென்று கூறுதல் சம்பவியாது; உட்பொருள்களின் ஞானம் மானஸமா மென்பதும் நையாயிகர் முறைப்படி சொல்லப்பட்டிருக்கின்றது. சித்தாந்தத்திலோ எந்த ஞானமும் மானஸம்

அன்று. ஏனெனின், சுத்த ஆன்மாவோ ஸ்வயம்பிரகாசமாம். அதன் பிரகாசத்தில் (அதனை விளக்குவதில்) எந்தப்பிரமாணத்தின் அபேக்ஷையும் இல்லை. ஆதலால், ஆன்மாவின் ஞானம் மானஸ மன்று. சுகமுதலியன சாக்ஷிபாஸியமாம்.

எந்தக் காலத்தில் இஷ்ட பதார்த்தத்தின் சம்பந்தத்தால் சுக வடிவினதாகிய அந்தக்கரணத்தின் பரிணும முண்டாகின்றதோ, அநிஷ்ட பதார்த்தத்தின் சம்பந்தத்தால் துக்க வடிவினதாகிய அந்தக்கரணத்தின் பரிணும முண்டாகின்றதோ, அதே சமயத்தில் சுகதுக்கங்களை விஷயஞ் செய்வதாகிய அந்தக்கரணத்தினது சத்துவகுணத்தின் பரிணுமமாகிய விருத்தி யுண்டாகின்றது. அந்த விருத்தியில் ஆரூடமான சாட்சி சுக துக்கங்களை விளக்குகின்றது. சுகதுக்கங்களின் உற்பத்தியில் இஷ்டசம்பந்த அநிஷ்டசம்பந்தங்கள் நிமித்தமாம். அந் நிமித்தத்தானே சுகதுக்கங்களை விஷயஞ் செய்வதாகிய அந்தக்கரணத்தின் விருத்தி யுண்டாகின்றது. அதன் உற்பத்தியில் எந்தப் பிரமாணத்தின் அபேக்ஷையும் இல்லை. ஆதலால், சுக துக்கங்கள் சாக்ஷிபாஸியமாம்.

குடமுதலியவற்றின் பிரகாசமும் விருத்திமாத்திரத்தால் உண்டாகிறதில்லை. ஆனல், விருத்தியில் ஆரூடசேதனத்தானே எல்லாவற்றின் பிரகாசமு முண்டாகின்றது. ஆதலால், சகல பதார்த்தங்களையும் சாக்ஷிபாஸிய மென்னல்வேண்டும். என்றுலும், கடமுதலியவற்றின் ஞானமாகிய அந்தக்கரணவிருத்தி யுண்டாயின், அதில் இந்திரியம் அநுமானமுதலிய பிரமாணங்களின் அபேக்ஷை யிருக்கிறது சுகமுதலியவற்றின் ஞானமாகிய விருத்தியின் உற்பத்தியில் எந்தப் பிரமாணத்தின் அபேக்ஷையும் இல்லை. இவ்வளவு பேத முண்டு.

எந்த விருத்தியில் ஆரூடசாக்ஷி விஷயத்தைப் பிரகாசிக்கின்றதோ, அந்த விருத்தி யாண்டு இந்திரியம் அநுமானமுதலிய பிரமாணங்களால் உண்டாகின்றதோ, ஆண்டு விஷயத்தினைச் சாக்ஷிபாஸியமெனக் கூறுவதில்லை. ஆனல், பிரமாண ஜந்நிய ஞானத்திற்கு விஷயமெனக் கூறுவர். யாண்டுப் பிரமாணத்தின் வியாபாரமின்றி விருத்தியின் உற்பத்தி யுண்டாகின்றதோ, அந்த விருத்தியில் ஆரூடசாக்ஷி எதனை விளக்குகின்ற

தோ, அது சாக்ஷிபாஸிய மெனப்படுகின்றது. கடமுதலியவற்றைக் கோசரிக்கும் அந்தக்கரணத்தின் விருத்தி இந்திரியம் அநுமானமுதலிய பிரமாணங்களா லுண்டாகின்றது; அந்த விருத்தியில் ஆரூடசாக்ஷி அவற்றை விளக்குகின்றது. அங்ஙனமாயினும் கடமுதலியன பிரமாணகோசர மெனப்படுகின்றன; சாக்ஷிபாஸியமன்று. சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தி பிரமாண ஜந்நிய மன்று; ஆனால், சுகமுதலியவற்றை யுண்டுபண்ணும் தர்மமுதலியவற்றாற் பெறப்படுவதாம்; ஆதலாற், சுகமுதலியன சாக்ஷிபாஸியமாம்.

இவ்வாற்றாற் சுகமுதலியனவும் அவற்றின் ஞானமும் சமான சாமக்கிரியினா லுண்டாகின்றன; ஆதலால், அறியப்படாத சுகமுதலியன உண்டாகா; அறியப்பட்டனவே உண்டாம். சுக முதலியவற்றின் பிரத்தியக்ஷத்திற்குச் சுக முதலியன ஏது வன்று. சுக முதலியன பூர்வகாலத்தில் இருக்குமாயின் தமது ஞானத்திற்கேதுவாகும். சுக முதலியனவும் அவற்றின் ஞானமும் சமானகாலத்தில் சமான சாமக்கிரியினால் உண்டாகின்றன. ஆதலால், ஒன்றற்கொன்று காரிய காரணத்தன்மையோ இல்லை. கடமுதலியவற்றின் பிரத்தியக்ஷ ஞானத்தில் கடமுதலியன ஏதுவாம். ஏனெனின், பிரத்தியக்ஷஞானத்திற்கு முன் கடமுதலியன வுண்டாயிருக்கின்றன. ஆதலால், தம்மைக் கோசரிக்கும் பிரத்தியக்ஷத்திற்குக் கடமுதலியன ஏதுவாம். கடமுதலியவற்றிற்கு யாண்டு அநுமிதிமுதலிய ஞானங்களுண்டாகின்றனவோ, அவற்றிற்கேது கடமுதலியன வன்று. அநுமிதிஞானத்திலும் அங்ஙனமே சாப்தஞானத்திலும் விஷயமும் காரணமாகுமாயின், கடந்தனவும் வாராதனவுமாகிய பதார்த்தங்களின் அநுமிதிமுதலிய ஞானம் உண்டாகலாகாது. ஆதலால், அநுமிதிஞானம் சாப்தஞானமுதலியவற்றில் விஷயம் காரணமன்று. அங்ஙனமே சுகமுதலியனவும் தம்மைக் கோசரிக்கும் ஞானத்திற்குக் காரணமன்று.

முற்பிரசங்கம் இதுவாம்:—சுகமுதலியவற்றின் ஞானம் மானஸம் அன்று. ஆனாற் சுகமுதலியன சாட்சி பாஸியமாம். ஆதலால், மனதிற்கு அசாதாரண விஷயங் கிடைப்பதில்லை. இக்காரணத்தால் சர்வஞானங்களுக்கும் உபாதானமாகிய அந்தக்கரணமோ இருக்கின்றது. ஞானத்திற்குச் சுதந்தர காரணவடிவ

இந்திரியமாக மனதை நையாயிகர் கூறுகின்றனர். அது அசங்கதமாம். ஆதலால், பத்தாமவனது ஞானம் மானஸம் அன்று; ஆனல் வாக்கியஜந்நியமும் பிரத்தியக்ஷமுமாம். இவ்வாற்ருல் பிரத்தியக்ஷ ஞானமாவது யாதோ, அது இந்திரிய ஜந்நியமா மென்னும் நியமம் சம்பவியாது. அன்றியும், இந்திரிய ஜந்நிய ஞான மெதுவோ அது பிரத்தியக்ஷமாம்; இந்திரிய ஜந்நிய ஞானமெதுவும் அப்பிரத்தியக்ஷ மாகாது என்னும் நியமத்தால் சித்தாந்தத்திற்குக் கேடு இல்லை. ஏனெனின், இந்திரிய ஜந்நிய ஞானத்திற்கு அப்பிரத்தியக்ஷத்துவம் யாமும் கூறுவதில்லை. இந்திரியஜந்நிய ஞானமோ முழுவதும் பிரத்தியக்ஷமாம். சில விடத்துச் சத்தமுதலியவற்ருனும் பிரத்தியக்ஷம் உண்டாகின்றதென்பது சித்தாந்தமாம். ஆதலால், முற்கூறிய நியமத்திற்கு விரோதம் இல்லை. இவ்வாற்ருல் நையாயிகரை அநுசரித்தவராகிய தர்மராஜர் புத்திராது கூற்று அசங்கதமாம்.

ஆதலால், அபாவஞானம் இந்திரிய ஜந்நியமன்று. ஆனல், யோக்கியாநுபலப்தி யென்னும் வேறு பிரமாணத்தினுற் ருேன்றியதாம். யாண்டுப் "பிரதியோகி யுளதாயின் அதன் உபலம்ப முண்டாகும்" என்பதாகப் பிரதியோகியின் ஆரோபத்தால் உபலம்பத்தின் ஆரோப முண்டாகின்றதோ, ஆண்டு அபாவத்தின் ஞானம் யோக்கியாநுபலப்திப் பிரமாண ஜந்நியமாம். அந்தகாரத்தில் கடாபாவத்தின் ஞானம் அநுமான முதலியவற்ருற் ருேன்றியதாம். ஏனெனின், "அந்தகாரத்தில் கடமுளதாயின் அத னுபலம்ப முண்டாம்" என்பதாகக் கடமாகிய பிரதியோகியின் ஆரோபத்தால் கடத்தினது உபலம்பத்தின் ஆரோபம் சம்பவிப்பதில்லை. இவ்வாற்ருல் அந்நிய மதத்தில் எவ்வளவு அபாவங்களின் ஞானம் இந்திரியஜந்நியமோ அவ்வளவே ஞானம் வேதாந்தமதத்தில் கேவலம் அநுபலப்தி ஜந்நியமாம். நையாயிகமதத்தில் இந்திரியம் காணமும் அநுபலப்தி சககாரி காரணமுமாம். அதனல் இந்திரியத்தில் பிரமாணத்தன்மை யிருக்கின்றது; அநுபலப்தியில் பிரமாணத் தன்மை யில்லை. வேதாந்த மதத்தில் அநுபலப்தியில் பிரமாணத் தன்மை அதிகமாய் அங்கீகரிக்கப்படுகின்றது. அநுபலப்தி சொரூபமாக இரண்டு மதத்தினும் பெறப்பட்டதாகின்றது. அங்ஙனமே நியாயமதத்தில் விசேஷணத்தன்மைச் சம்பந்தம்

ஞானத்திற்குக் காரணமாதல் அதிகமாய்க் கொள்ளப்படுகின்றது; விசேஷணத்தன்மைச் சம்பந்தம் சொரூபமாக அதிகரண அபாவங்கட்கு இரண்டு மதத்திலும் பெறப்பட்ட தாகின்றது.

இவ்வாற்றால் வேதாந்திக்கு அநுபலப்தியில் பிரமாணத் தன்மை அதிகமாக அங்கீகரிக்கப்படுகின்றது. நையாயிகருக்கு விசேஷணத்தன்மைச் சம்பந்தத்தில் ஞானத்தின் காரணத் தன்மை அதிகமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஆதலால், இலாகவ கௌரவங்கள் யாருக்கு மில்லை. இருவருக்கும் சமானகற்பனை யிருக்கின்றது. என்றாலும், அபாவஞானத்திற்குக் காரணமாதற் றன்மையை இந்திரியத்தில் நையாயிகர் அதிகமாய்க் கூறுகின்றனர். இது அவர்கள் மதத்தில் கௌரவமாம். வாயுவில் உருவமின்மையின் ஞானம் நேத்திரவியாபாரமின்றி யுண்டாகின்றது. அதனை நையாயிகர் நேத்திரேந்திரிய ஞான மென்பர். அங்ஙனமே பரமாணுவில் மகத்துவமின்மையின் ஞானமும் நேத்திர வியாபாரமின்றி யுண்டாகின்றது. அதனையும் நையாயிகர் நேத்திரேந்திரியஞான மென்பர். இவ்வாறு அநேக விடங்களில் எவ் விந்திரியத்தின் வியாபாரமின்றி எவ் வபாவத்தின் ஞானம் உண்டாகின்றதோ, அதனை அவ் விந்திரியஜந்ய மென்பர். அது அநுபவவிரோத மானதாம்.

எவ்விந்திரிய வியாபாரத்தால் எந்த ஞானம் உண்டாகின்றதோ அந்த ஞானம் அவ்விந்திரிய ஜந்ய மாகின்றது. எவ் விந்திரிய வியாபாரமின்றி எந்தஞான முண்டாகின்றதோ, அவ் விந்திரிய ஜந்யத்தன்மை அந்த ஞானத்திற்கு அங்கீகரிக்கின், சகல ஞானமும் சகல இந்திரியங்களின் ஜந்யமாதல் வேண்டும். ஆதலால், அபாவத்தின் ஞானம் இந்திரிய ஜந்யமாமென்னும் நையாயிகர் மதம் நலமுடைய தன்று. இவ்வாற்றான் அபாவத்தின் ஞானம் அநுபலப்திப் பிரமாண ஜந்யமாம். ஆனால், அபாவஞானத்தின் உற்பத்தியில் வியாபாரமின்றிய அசாதாரண காரணம் அநுபலப்தியாம். ஆதலால், அபாவ ஞானத்தின் அசாதாரண காரணத்தன்மை அநுபலப்திப்பிரமாணத்தின் இலக்கணமாம்.

97. அநுபலப்திப்பிரமாணத்தின் நிரூபணம் ஜிஞ்ஞாசுவுக்கு உபயோகமாமாறு

அநுபலப்தியை நிரூபித்தலில் ஜிஞ்ஞாசுவுக்கு உபயோக மாமாறு இதுவாம்:—"ஈண்டு நாநாவென்பது சிறிது மில்லை" என்றல்முதலிய சுருதி பிரபஞ்சத்தின் முக்காலத்தின்மை யைக் கூறுகின்றது. அநுபவசித்தமாகப் பிரபஞ்சத்திற்கு முக் காலத்தைய நிஷேதம் பொருந்தாது. ஆதலால், பிரபஞ்சத் தைச் சொரூபமாக நிஷேதிப்ப தில்லை; ஆனால், பிரபஞ்சம் பாரமார்த்திக மன்று. ஆதலால், பாரமார்த்திகத்தன்மை விசிஷ் டப் பிரபஞ்சத்தின் முக்காலத்தின்மையைச் சுருதி கூறு கின்றது. இவ்வாற்றால் பாரமார்த்திகத்தன்மை விசிஷ்டப் பிர பஞ்சத்தின் அபாவம் சுருதி சித்தமாம்; அநுபலப்திப் பிரமா ணத்தாலும் சித்தமாம். பாரமார்த்திகத்தன்மை விசிஷ்டப் பிரபஞ்சம் உளதாயின், எங்ஙனம் சொரூபமாகப் பிரபஞ்சத் தின் உபலப்தி யுண்டாகின்றதோ, அங்ஙனமே பாரமார்த்திகப் பிரபஞ்சத்தின் உபலப்தியு முண்டாம். சொரூபமாகவோ பிர பஞ்சத்தின் உபலப்தி யுண்டாகின்றது. பாரமார்த்திக வடிவ மாகப் பிரபஞ்சத்தின் உபலப்தி யுண்டாகிறதில்லை. ஆதலால், பாரமார்த்திகத்தன்மை விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவ மிருக்கின்றது. இவ்வாற்றால் பிரபஞ்சாபாவத்தின் ஞானம் அநு பலப்தியினால் உண்டாகின்றது. மற்றும் அநேக அபாவங்க ளின் ஞானம் ஜிஞ்ஞாசுவுக்கு இஷ்டமாம். அவற்றிற்கேது அநுபலப்திப் பிரமாணமாம்.

ஆறுவது பிரகாசம்:

அநுபலப்திப்பிரமாண நிரூபணம்

முடிந்தது.

ஓம்

தத் ஸத் ப்ரஹ்மணே நம:

ஏழாவது பிரகாசம்

[விருத்திபேதமும் அநிர்வசனீயக்கியாதியின் மண்டனமும், கியாதி கண்டனமும், தானே பிரமாணமாந்தன்மைப் பிரமாண நிரூபணமும்]

98. உபாதானம் (சமவாயி), அசமவாயி, நிமித்தகாரணம், சையோகம் என்பவற்றின் இலக்கணம்

நூலின் ஆரம்பத்தில் விருத்தியென்பது யாது என்னும் வாக்கியம், விருத்தியின் லக்ஷணமும் பேதமும் ஆகிய இவற்றின் வினாவாம். விருத்தியின் காரணம் யாது என்றது விருத்தியினது சாமக்கிரியின் வினாவாம். மூன்றாவது வினா விருத்தியின் பிரயோஜனத்தினதாம். அவற்றுள் விருத்தியினது பிரயோஜனத்தின் நிரூபணத்தை எட்டாவது பிரகாசத்தில் செய்வாம். காரண சமுதாயத்தினைச் சாமக்கிரி யென்பர். காரணம் இரண்டு வகையின தாகின்றது. ஒன்று உபாதானகாரணம், மற்றையது நிமித்தகாரணம்.

எதன் சொரூபத்தில் காரியத்தின் ஸ்திதி யுண்டாகின்றதோ, அக் காரணத்தை உபாதானகாரண மென்பர். உபாதான காரணத்தினையே சமவாயிகாரண மென்பர். அது கடத்திற்கு உபாதானகாரணம் கபால மாவதுபோலவாம்.

காரியத்தினும் தடஸ்தமாய்க் காரியத்தை உண்டுபண்ணுவது யாதோ, அது நிமித்தகாரண மெனப்படும். அது கடத்திற்கு நிமித்தகாரணம் குலாலன் சக்கரம் தண்டம் முதலியன ஆதல் போலவாம்.

நியாய வைசேஷிக மதத்தில் சமவாயி அசமவாயி நிமித்த பேதத்தால் காரணம் மூன்றுவகைத்தா மென்பர். காரியத்தின் சமவாயிகாரணத்தோடு சம்பந்த முடையதாய்க் காரியத்தை

யுண்டுபண்ணுவது யாதோ, அதனை அசமவாயிகாரண மென்பர். அது கடத்தின் அசமவாயிகாரணம் கபால சையோகமும், படத்தின் அசமவாயிகாரணம் தந்து சையோகமும் ஆவது போலவாம்.

கடத்தின் சமவாயி காரணமாகிய கபாலத்தோடு சம்பந்த முடையதாய்க் கடத்தை யுண்டுபண்ணுவது கபால சையோக மாம்.

அங்ஙனமே படத்தின் சமவாயி காரணமாகிய தந்துவோடு சம்பந்த முடையதாய்ப் படத்தை யுண்டுபண்ணுவது தந்து சையோகமாம்.

சமவாயி காரணத்தின் சையோகத்தைக் காரியத்தை யுண்டுபண்ணுவதெனக் கொள்ளாவிடின், பிரிபட்ட கபாலங்க ளால் கடத்தின் உற்பத்தியும், பிரிபட்ட தந்துக்களால் படத் தின் உற்பத்தியும் உண்டாதல்வேண்டும். இவ்வாறு திரவியத் தின் உற்பத்தியில் அவயவங்களின் சையோகம் காரணமாம். அந்த அவயவ சையோகத்தில் காரியத்தின் ஸ்திதி இல்லை. ஆனால், அவயவங்களில் காரியத் திரவியத்தின் ஸ்திதி யுண்டா கின்றது. ஆதலால், அவயவ சையோகத்தில் சமவாயி காரணத் தன்மை சம்பவிக்கிறதில்லை. காரியத்தினும் தடஸ்தமாயும் இருப்பதில்லை. ஆனால் அவயவ சையோகமும், காரியத்திரவிய மும் அவயவத்தில் சமானாதிகரணமாய் இருக்கும். ஆதலால், நிமித்த காரணத்தன்மையும் அவயவ சையோகத்தில் சம்பவிப்ப தில்லை. ஆதலால், சமவாயி காரணத்திற்கும் நிமித்த காரணத் திற்கும் வேறாய் அசமவாயி காரண மிருத்தலால், காரணம் மூவகையின தாகின்றது. எங்ஙனம் திரவியத்தின் உற்பத்தியில் அவயவ சையோகம் அசமவாயி காரணமாகின்றதோ, அங்ஙன மே குணத்தின் உற்பத்தியில் சிலவிடத்தில் குணம் அசம வாயிகாரண மாகின்றது; சிலவிடத்தில் கிரியை அசமவாயி காரண மாகின்றது. அங்ஙனமன்றோ? நீலதந்துவால் நீல படத் தின் உற்பத்தி யுண்டாகின்றது; பீதத்தின் உற்பத்தி யுண்டா கிறதில்லை. ஆதலால், படத்தின் நீலரூபத்தில் தந்துவின் நீல ரூபம் காரணமாம். அப் படத்தின் நீலரூபத்தின் சமவாயிகார ணம் படமாம். தந்துவின் நீலரூபம் அதன் சமவாயி காரண மன்று. அதுபோலத் தந்துவின் நீலரூபம் படத்தின் நீலரூபத்தி

னும் தடஸ்தம் அன்று. ஆனால், தந்துவின் நீலரூபம் தந்துவில் இருக்கின்றது. படத்தின் நீலரூபமும் தந்துவில் இருக்கின்றது. ஆதலால், இரண்டும் சமானாதிகரணமாய் இருத்தலின் சம்பந்தி களாம். சம்பந்தி யல்லாததனைத் தடஸ்தமென்பர். படத்தின் நீலரூபம் சமவாயி சம்பந்தத்தால் படத்தில் உளதாயினும், சுவசமவாயி சமவாய சம்பந்தத்தால் படத்தின் நீல உருவம் தந்துவின்கண்ணே இருக்கின்றது. சுவ என்பது படத்தின் நீலரூபம்; அதன் சமவாயியாகிய படம் எதுவோ அதன் சம வாயம் தந்துவில் இருக்கின்றது. இவ்வாற்றாற் படத்தின் நீல ரூபத்தோடு தந்துவின் நீலரூபம் சமானாதிகரணமாம். தந்து வின் நீலரூபம் சாட்சாத் சம்பந்தத்தால் தந்துவில் இருக்கின் றது. அதன்கண்ணே படவாயிலாகப் பரம்பரைச் சம்பந்தத் தால் படத்தின் நீலரூபம் இருக்கின்றது. ஆதலால், படத்தின் நீலரூபத்தினும் தந்துவின் நீலரூபம் தடஸ்தமாகாதிருத்தலின் அதற்கு நிமித்தகாரணம் சம்பவியாது. ஆனால், படத்தினது நீலரூபத்தின் சமவாயி காரணமாகிய படம் யாதோ அதன் சம்பந்தி தந்துவின் நீலரூபமாம். படத்தின் நீலரூபத்தினை யுண்டுபண்ணுவதா யிருத்தலின், அதன் அசமவாயிகாரணம் தந்துவின் நீலரூபமாம். தந்துவின் நீலரூபமும் படமுமாகிய இரண்டும் தந்துவில் சமவாய சம்பந்தத்தால் இருக்கின்றன. ஆதலால், சமானாதிகரண சம்பந்தத்தால் தந்துவின் நீலரூபம் படத்தின் சம்பந்தியாம்.

எங்ஙனம்; காரியத்தினது உருவத்தின் அசமவாயிகார ணம் உபாதானத்தின் உருவமாம். அங்ஙனமே இரச கந்த பரிசங்களிலும் அறிந்துகொள்ளுக. சகல குணங்களின் உற் பத்தியிலும் எவ்வாற்றால் குணத்தின் கிரியை அசமவாயி காரண மாமோ, அது நியாய வைசேஷிய நூல்களில் விளக்கமா யுளது. உபயோகமில்லாமை கண்டு விரிவஞ்சி விடுத்தனம்.

சையோகத்தின் பிரசங்கம் அநேக இடங்களில் வருகின் றது. ஆதலால், குணத்தின் உற்பத்தியில் கிரியை அசமவாயி காரணமாதற்கு உதாரணம் சொல்லுதற்பொருட்டுச் சையோ கத்தின் உற்பத்தியைக்கூறுவாம்:—சையோகம் இருவகைத்தாம். ஒன்று கர்மஜ சையோகமும், மற்றொன்று சையோகஜ சை யோகமுமாம்.

எதன் உற்பத்தியில் கிரியை அசமவாயி காரண மாகின்றதோ அது கர்மஜஸையோக மெனப்படுகின்றது.

ஸையோகமாகிய அசமவாயி காரணத்தால் உண்டாவது எதுவோ அது ஸையோகஜ ஸையோக மெனப்படுகின்றது.

கர்மஜ ஸையோகமும் அந்நியதரகர்மஜம், உபயகர்மஜ மென்னும் பேதத்தால் இருவகையினதாம். ஸையோகத்தின் ஆசிரயம் இரண்டாம். அவற்றுள் ஒன்றன் தொழிலால் எச் ஸையோக முண்டாகின்றதோ அது அந்நியதரகர்மஜஸையோக மெனப்படுகின்றது. பறவையின் தொழிலால் விருக்ஷத்திற்கும் பறவைக்கும் உண்டாகும் ஸையோகம் அந்நியதரகர்மஜ ஸையோக மெனப்படுகின்றது. ஆண்டு விருக்ஷமும் பட்சியும் சமவாயிகாரணமாம். ஸையோகத்தின் சமவாயிகாரணமாகிய பட்சியினிடத்து அதன் கிரியைக்குச் சமவாயசம்பந்த மிருத்தலின் பட்சிவடிவமாகிய சமவாயிகாரணத்தின் சம்பந்தமுடைய தாய்ப்பட்சி விருட்சங்களின் ஸையோகத்தை யுண்டுபண்ணுவது பட்சியின் தொழிலாம். ஆதலால், பக்ஷி விருக்ஷங்களினது ஸையோகத்தின் அசமவாயிகாரணம் பட்சியின் தொழிலாம். இது அந்நியதரகர்மஜஸையோகத்துக்கு உதாரணம்.

ஆட்டுக்கடாக்கள் இரண்டன் தொழிலால் அக் கடாக்கள் இரண்டற்கும் உண்டாகும் ஸையோகம் எதுவோ அது உபய கர்மஜ ஸையோகமாம்.

ஆட்டுக்கடாக்க ளிரண்டின் ஸையோகத்தில் இரண்டுகடாக்களும் சமவாயிகாரணமாம். அவற்றின் தொழில் அசமவாயி காரணமாம்.

யாண்டுக் கையின் தொழிலால் கைக்கும் விருக்ஷத்திற்கும் ஸையோகம் உண்டாகின்றதோ, ஆண்டுக் கையும் விருக்ஷமும் ஒன்றற்கொன்று ஸையுக்தமாம். இந்த விவகாரத்தைப்போல காயமும் விருக்ஷமும் ஸையுக்தமாம். இவ்வித விவகாரமும் உண்டாகின்றது. ஸையுக்த மென்பது ஸையோக முடையதாம். அந்த ஸ்தானத்தில் கை விருக்ஷங்களினது ஸையோகத்திலோ கையின் தொழில் அசமவாயிகாரணமாம். காயத்தினிடத்திலாவது விருக்ஷத்தினிடத்திலாவது கிரியை உண்டாகுமாயின், காய விருக்ஷங்களின் ஸையோகமும் கிரியா ஜந்நியமாதல் சம்ப

விக்கும். தருவிற்போலக் காயத்திலும் கிரியை இல்லை. ஏனெனின், சகல அவயவங்களிலும் தொழில் உண்டாகுமாயின், ஆண்டு அவயவிக்குத் தொழில் உண்டாகும். கையிற்கு அந்நியமாகிய சகல அவயவங்களும் நிச்சலமாய் இருத்தலால் காயத்திற்குத் தொழில் கூறுதல் சம்பவியாது. ஆதலால், காய தருக்களின் சையோகத்தில் கிரியை அசமவாயிகாரணமாமென்று கூறுதல் சம்பவியாது. ஆனால், அந்நியதர்கர்மஜமாகிய அஸ்த தரு சையோகமே காயதருசையோகத்தின் அசமவாயிகாரணமாம். ஏனெனின், காயதரு சையோகத்தின் சமவாயிகாரணமாகிய காயம் எதுவோ, அதனிடத்தும் சுவசமவாயி சமவேதத்தன்மைச் சம்பந்தத்தால் சம்பந்தமுடையது அஸ்ததரு சையோகமாம். காயதரு சையோகத்தை உண்டுபண்ணுவதுமாம்; ஆதலால், அசமவாயி காரணமாம்.

சுவ என்பது அஸ்ததரு சையோகம், அதன் சமவாயி அஸ்தம், அதனிடத்துச் சமவேதமாகிய காயம் எதுவோ அதன் சமவேதத்தன்மைத் தர்மமே சம்பந்தமாம். இவ்வகைப் பரம்பரைச் சம்பந்தம் சாமாநாதிகரண்ணிய சம்பந்தத்தில் பரியவசானமா (முடிவுபெறு) கின்றது. ஒரு அதிகரணத்தில் இருத்தலைச் சாமாநாதிகரணிய மென்பர்.

எவற்றிற்கு ஒரு அதிகரணத்தில் இருப்பு உளதாகின்றதோ அவற்றைச் சமாநாதிகரண மென்பர். ஈண்டு அஸ்ததரு சையோகம் சமவாய சம்பந்தத்தால் அஸ்தத்தில் இருக்கின்றது; காயமும் சமவாய சம்பந்தத்தால் அஸ்தத்தில் இருக்கின்றது, ஆதலா லிரண்டும் சமாநாதிகரணமாம். அவற்றிற்கும் சாமாநாதிகரணிய சம்பந்த மிருக்கின்றது. ஈண்டுக் காயமும் சையோகமும் அஸ்தத்தில் சாக்ஷாத் சம்பந்தத்தால் இருக்கின்றன; ஆதலால், சமாநாதிகரணமாம். அங்ஙனமே ஒன்று சாக்ஷாத் சம்பந்தத்தாலும் மற்றையது பரம்பரைச் சம்பந்தத்தாலும் இருக்கின், அவையும் சமாநாதிகரண மெனப்படும்; அவற்றிற்குச் சாமாநாதிகரணிய சம்பந்தம் சொல்லப்படுகின்றது. இது பிரத்தியக்ஷப் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அஸ்ததரு சையோகத்தின் உணர்ச்சி யுண்டாகவே காயதரு சையோகத்தின் உணர்ச்சி யுண்டாகின்றது. அஸ்த தருக்களின் சையோகத்தைக் காணுநயின் அவனுக்குக் காயதரு

சையோகத்தின் உணர்ச்சி யுண்டாவதில்லை. ஆதலால், காயதரு சையோகத்திற்கு அஸ்ததருசையோகம் காரணமாம். இது சையோகஜ சையோகத்திற்கு உதாரணமாம். இச் சையோகத் தினையே காரணகாரண சையோக ஜந்நிய காரியாகாரிய சையோக மென்பர்.

ஈண்டு இரண்டு சையோக முண்டு. ஒன்று அஸ்த தருக்க ளின் சையோகம்; அது ஹேதுசையோகமாம். மற்றையது காயதருக்களின் சையோகமாகிய பல சையோகமாம். இவ்விடத் துக் காரணமென்னும் சொல்லால் பல சையோகத்தினது ஆசிரயத்தின் சமவாயிகாரணம் கொள்ளப்படுகின்றது. ஆத லால், பல சையோகத்தின் ஆசிரயம் காயம் தருவென்னு மிரண்டுமாம். அவற்றுள் காயத்தின் சமவாயிகாரணம் அஸ்த மாம். ஆதலால், காரணமெனும் சொல்லால் அஸ்தம் (கை) கொள்ளப்படுகின்றது. அகாரணமென்னும் சொல்லால் தரு கொள்ளப்படுகின்றது. ஏனெனின், காயத்திற்காவது தருவிற் காவது சமவாயிகாரணம் தருவாகா திருத்தலின் அகாரணமாம். அங்ஙனமே ஹேதுசையோகத்தின் ஆசிரயத்தால் உண்டாகி யது காரியம் என்னும் சொல்லாற் கொள்ளப்படுகின்றது. ஹேதுசையோகத்தின் ஆசிரயத்தால் உண்டாகாதது அகா ரியமென்னும் சொல்லால் கொள்ளப்படுகிறது. ஹேதுசையோ கத்தின் ஆசிரயம் ஹஸ்தமும் தருவுமாம். அவற்றுள் அஸ்த ஜந்நியமாகிய காயமெதுவோ அது காரியமாம்.

ஹஸ்தத்தினுலும் அங்ஙனமே தருவினுலும் ஆக்கப்படாத தரு எதுவோ அது அகாரியமாம்.

இவ்வாற்றாற் காரணமாகிய ஹஸ்தம் அகாரணமாகிய தரு என்பவற்றின் சையோகத்தால் காரியமாகிய காயம் அகாரிய மாகிய தரு என்பவற்றின் சையோக முண்டாகின்றது. ஆத லால், இச் சையோகத்தினைக் காரணகாரண சையோக ஜந்நிய காரியாகாரிய சையோக மென்பர். சையோகஜ சையோகம் இவ்வகையினதேயாம். பிறவகையாற் கர்மஜசையோகமேயாம்.

யாண்டுக் கபாலத்தின் தொழிலால் கபாலம் இரண்டின் சையோகம் உண்டாகின்றதோ, கபால சையோகத்தால் கபா லாகாயங்களின் சையோகம் உண்டாகின்றதோ, ஆண்டும் அது

கர்மஜசையோகமேயாம்; சையோகஜ சையோகமன்று. ஏனெனின், எக் கபாலத்தின் தொழிலால் கபாலம் இரண்டின் சையோகம் உண்டாகின்றதோ, அக் கபால கர்மத்தினாலேயே கபால ஆகாயங்களின் சையோகமும் உண்டாகின்றது. கபாலம் இரண்டின் சையோகமும் கபால ஆகாயங்களின் சையோகமுமாகிய இரண்டும் ஒரு க்ஷணத்தில் உண்டாகின்றன. அவற்றிற் கொன்றற்கொன்று காரிய காரணத்தன்மை சம்பவியாது; ஆதலால், கபாலம் இரண்டின் சையோகத்தைப்போலக் கபால ஆகாயங்களின் சையோகமும் கபாலத்தின் தொழிலானே உண்டாகுதலான் கர்மஜ சையோகமேயாம்.

முற்கூறிய பிரகாரத்தாற் காரணாகாரண சையோக ஜந்நிய காரியாகாரிய சையோகம், அந்நியதர கர்மஜசையோகம், அங்ஙனமே உபயகர்மஜசையோகம் என்னும் பேதத்தால் மூவகைச் சையோகமே யுளது. சில நூல்ாசிரியர் சகஜசையோகத்தினையும் அங்கீகரித்திருக்கின்றனர். எங்ஙனம்: பொன்னில் மஞ்சள் நிறத்திற்கும் குருத்துவத்திற்கும் ஆசிரயமான பார்த்திவ பாகத்திற்கும், அக்கினி சையோகத்தால் நாசமாகாத திரவியத் தன்மையின் ஆசிரயத்தால் தைஜசபாகத்திற்கும் சகஜசையோகம் உண்டு. சையோகமுடையதின் பிறப்போடு உண்டாவதனைச் சகஜசையோக மென்பர்.

சுவர்ணத்தைக் கேவலம் பார்த்திவமெனின் நிறைமுதலிய பார்த்திவத்தின் திரவியத்தன்மைக்கு அக்கினி சையோகத்தால் நாச முண்டாகுதலான்; சுவர்ணத்தின் திரவியத்தன்மைக்கும் அக்கினி சையோகத்தால் நாசம் உண்டாகுதல் வேண்டும். கேவலம் தைஜசமெனக் கொள்ளின் பொன்மையுருவம் குருத்துவ மென்பவற்றின் அபாவ முண்டாதல் வேண்டும். ஆதலால், சுவர்ணத்தில் தைஜசபார்த்திவ பாகங்கள் சையுக்தமாம். மீமாம்ஸகர் நித்தியசையோகமும் அங்கீகரித்திருக்கின்றனர்.

இவ்வாற்றான் திரவியத்தின் உற்பத்தியில் அசமவாயி காரணம் அவயவ சையோகமாம். குணத்தின் உற்பத்தியில் சிலவிடத்துக் குணமும் சிலவிடத்துக் கிரியையும் அசமவாயி காரணமாம். சமவாயிகாரண நிமித்த காரணங்களின் இலக்ஷணம் அதவிடத்துப் பொருந்தாது; ஆனால், சமவாயிகாரணத்தில் சம்

பந்தமுடையதாய்க் காரியத்தை உண்டுபண்ணுவது யாதோ, அது மூன்றுவதாகிய அசமவாயி காரணமாயிருத்தலின், சமவாயி அசமவாயி நிமித்தமென்னும் பேதத்தால் காரணம் மூன்று வகைப்படும். இது நையாயிக வைசேஷிகரை அநுசரித்த நூல்களில் எழுதப்பட்டுள்ளது.

99. இரண்டு காரணங்களை அங்கீகரித்தலோடு மூன்றுவது அசமவாயிகாரணத்தைக் கண்டித்தல்

அங்ஙனமாயினும் நியாயவைசேஷிகங்களுக்கு வேறுன மதங்களில் உபாதானகாரண நிமித்தகாரண பேதத்தால் இருவகைக் காரணமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எதனை நையாயிகர் அசமவாயிகாரண மென்பரோ அதனையும் நிமித்தகாரண மென்றே கூறுவர். நிமித்தகாரணத்தின் இலக்ஷணம் அசமவாயிகாரணத்தில் இல்லையென்று முற்கூறியது யாதோ, அதற்குச் சமாதானம் இதுவாம்:—காரியத்தின் தடஸ்தமாய்க் காரியத்தை உண்டுபண்ணுவது யாதோ, அது நிமித்தகாரணத்தின் இலக்ஷணமாமென்பது மூவகைக் காரணவாதிகளின் கிரமப்படி சொல்லப்பட்டது. இருவகைக் காரணவாதிகளின் கிரமப்படியோ உபாதான காரணத்தின் வேறுய காரணம் யாதோ, அது நிமித்தகாரண மெனப்படுகின்றது. அந் நிமித்தகாரணம் அநேகவிதமாம். சிலவோ காரியத்தின் உபாதானத்திற் சமவேதமாம்.

எங்ஙனம்: கடத்தின் நிமித்தகாரணம் கபால சையோகமாம். அது கடத்தின் உபாதானகாரணமாகிய கபாலத்திற் சமவேதமாம். சில நிமித்தகாரணமோ காரியத்தின் உபாதானத்தினது உபாதானத்திற் சமவேதமாம். எங்ஙனம்: படத்தினது உருவத்தின் நிமித்தகாரணம் தந்துவின் உருவமாம்; அது படவுருவத்தின் உபாதானமாகிய படமெதுவோ அதன் உபாதானமாகிய தந்துவிற் சமவேதமாம். அங்ஙனமே சில நிமித்தகாரணம் கர்த்தா வடிவமாகிய சேதனமாம். அது சுவதந்திரமாம். அது கடத்தின் நிமித்தகாரணம் குலாலனுவதாம். சில நிமித்தகாரணம் ஜடமாம். அது கர்த்தாவினது வியாபாரத்தின் அதீனமாம். அது கடத்திற்குக் காரணம் தண்டமுதலியவைகளாதல் போலவாம். இவ்வாற்றுன் நிமித்தகாரணத்துக்கு அநேக பேதங்களுண்டு.

சிறிது வேற்றுமையினால் அசமவாயிகாரணத்தன்மையை வேறாய் அங்கீகரிக்கின், கடத்தின் காரணமாகிய் கபால சையோகத்திலும் கட உருவத்தின் காரணமாகிய கபால வுருவத்திலும் காரணத்தன்மையின் பேதம் அங்கீகரித்தல் வேண்டும். ஏனெனின், கடத்தின் காரணமாகிய கபாலசையோகமோ காரியத்தின் உபாதானத்தில் சமவேதமாம். கட உருவத்தின் காரணமாகிய கபால உருவம் காரியத்தினது உபாதானத்தின் உபாதானத்திற் சமவேதமாம். இவ்வாற்றான் விலக்ஷண காரணங்கள் உளவேனும், அவ் விரண்டினையும் அசமவாயி காரணம் என்றே நையாயிகர் கூறுவர். அவற்றுள் ஒன்றற்கொன்று விலக்ஷண காரணமாதல் அங்கீகரிக்கப் படுவதில்லை. அங்ஙனமே சேதன ஜடபேதத்தால் வேற்றுமை உண்டு. என்றாலும் அவற்றை நிமித்தகாரண மென்றே கூறுவர். ஒன்றற்கொன்று விலக்ஷண காரணமாதல் அவர்களிலும் அங்கீகரிக்கப்படுவதில்லை. மற்றும் நிமித்த காரணத்தில் அநேக வேறுபாடுகள் உள. சில காரியகாலத்து உள்ளனவாம்; சில காரியகாலத்தின் முற்காலத்துள்ளனவாம்.

எங்ஙனம்: ஜலபாத்திரத்தின் சந்நிதானத்தால் சுவரில் சூரியப்பிரபையின் பிரதிபிம்பம் உண்டாகின்றது. அதில் சந்நிதானத்திலுள்ள ஜலபாத்திரம் நிமித்தகாரணமாம். அதனை நீக்குதலால் பிரதிபிம்பத்தின் அபாவம் உண்டாகுதலான், சந்நிதியிலுள்ள ஜலபாத்திரம் காரியகாலத்திலிருக்கும் நிமித்த காரணமாம். பிரத்தியக்ஷ ஞானத்தில் விஷயம் நிமித்தகாரண மாகின்றது. அதுவும் காரியகாலத்துள்ளதாம். தண்டமுதலியன கடத்தின் நிமித்தகாரணமாம். அவை காரியகாலத்தின் முற்காலத்துள்ள நிமித்தகாரணமாம்.

இவ்வாறு நிமித்தகாரணத்திலும் அசமவாயிகாரணத்திலும் அவாந்தரமான அனேக பேதங்கள் இருத்தலாலும் சமவாயிகாரணத்தின் வேறாயவற்றி விருவகைக் காரணத்தன்மையே அங்கீகரிக்கப்பட்டுளது. சிலவிடத்து அசமவாயி காரணத்தன்மை யுளது. சிலவிடத்து நிமித்தகாரணத்தன்மை யுளது. அங்ஙனமே சமவாயகாரணத்தின் வேறாய சகல காரணங்களிலும் ஒருவித காரணத்தன்மையினையே அங்கீகரித்தல்வேண்டும். அச் சமவாயகாரணத்தின் வேறாய காரணத்தை அசம

வாயிகாரண மென்க, அல்லது நிமித்தகாரண மென்க. சமவாயி காரண சம்பந்தமுடைமை, சம்பந்தமின்மை யென்னும் அவாந் தரபேதத்தால் வேறு பெயரிடல் பயனற்றதாம். ஆதலால், சம வாயிகாரண நிமித்தகாரண பேதத்தால் காரணம் இருவகைத் தாம்.

எங்ஙனம் அசமவாயிகாரணம் நிமித்தகாரணங்களுக்கு வெவ்வேறு பெயரினால் பிரயோஜனம் இல்லையோ, அங்ஙன மே சமவாயிகாரண நிமித்தகாரணங்களுக்கு ஒன்றற்கொன் றுள்ள வேற்றுமை உணர்ச்சியினாலும் புருஷார்த்தத்தின் அடைவு உண்டாத லில்லை. உலகத்திலும் காரணத்தன்மை மாத்திரமே பிரசித்தமாம். சமவாயி காரணத்தன்மை நிமித்த காரணத்தன்மைகள் பிரசித்தம் அன்று. ஆதலால், உலக வியவகாரத்தின் ஞானமு மிருவகைக் காரணத்தன்மையை நிரு பித்தற்குப் பயனாவதில்லை. ஆனால், காரிய காரணத்தன்மையின் வியவகாரம் உலகத்தில் உண்டாகின்றது. ஆதலால், எதன் இருப்பால் காரியத்தின் உற்பத்தி உண்டாகின்றதோ, எதன் இன்மையினால் காரியத்தின் உற்பத்தி உண்டாகிறதில்லையோ, அப்படிப்பட்ட காரியத்திற்கு மறைப்பின்றிய முற்காலத் திருப் பது எதுவோ அது காரண மெனப்படுகின்றது. இவ்வாற்றாற் காரணத்திற்குச் சாதாரண இலக்ஷணமே சொல்லுதல் வேண் டும். அதன் பேதம் இரண்டை நிருபித்தலும் நிஷ்பிரயோஜன மாம் என்று ஒருவன் கூறின், அச் சங்கைக்குச் சமாதானம் வரு மாறு:—

காரணத்தின் பேத மிரண்டனையும் நிரூபித்தலால் புருஷா ர்த்தசித்தி அல்லது லோக வியவகாரசித்தி என்னும் பிரயோ ஜனம் இல்லையாயினும், புருஷார்த்தத்திற்கு ஏது அத்வைத ஞானமாம். அதன் உபயோகி இருவகைக்காரண நிரூபணமாம். அங்ஙனமன்றோ? சர்வஜகத்திற்கும் காரணம் பிரஹ்மமாம். கார ணத்திற்கு அபின்னமாய்க் காரிய மிருத்தலால் சகல ஜகத்தும் பிரஹ்மமாம்; அதனின் வேறன்று. இதனைக் கேட்டு ஞான விரு ப்புடையோனுக்கு இத்தன்மைச் சங்கை யுண்டாகின்றது:— கார ணத்திற்கு வேறாய்க் காரியம் இராதாயின் தண்டம் குலாலன் முதலியவற்றினின்றும் கடம் வேறாகலாகாது என்பதாம்.

அதற்கு இது சமாதானமாம்:—உபாதான நிமித்த பேதத் தால் காரணம் இரண்டுவகையினதாகின்றது. அவற்றுள் உபா

தான கார்ணத்திற்கு அபிந்நமாய்க்காரிய முண்டாகின்றது. அது மண்திரளிற்கு அபிந்நமாய்க் கடமும், சுவர்ணத்திற்கு அபிந்நமாய்க் கடக குண்டலாதிகளும், இரும்பிற்கு அபிந்நமாய்க் கத்தி முதலியனவும் இருத்தல் போலவாம். நிமித்தகாரணத்திற்கு அபிந்நமாய்க் காரிய மிராது; பிந்நமாகவே இருக்கும். அங்ஙனமே பிரஹ்மமும் ஜகத்திற்கு உபாதானகாரணமாம். ஆதலால், சகல ஜகத்தும் பிரஹ்மமேயாம்; அதனின் வேறன்று. இவ்வாறு காரணத்தினது பேதம் இரண்டின் நிரூபணம் அத்வைத ஞானத்திற்கு உபயோகியாம். வேறு வகையாகக் காரணங்களுக்கு ஒன்றற்கொன்று விலக்ஷணத்தன்மையை நிரூபித்தல் பயனிலதாம். ஆதலால், தத்துவஞான உபயோகியான பதார்த்தத்தை நிரூபிக்கும் நூல்களில் காரணத்தின் மூன்றுவது பேதத்தை நிரூபித்தல் அசங்கதமாம்.

நியாய வைசேஷிகத்தை அநுசரித்த நூல்களில் தத்துவஞான உபயோகியான பதார்த்தங்களை நிரூபிப்பதாகப் பிரதிஞ்ஞை செய்து, தத்துவஞானத்தில் அத்தியந்தம் உபயோகமில்லாதனவாகிய பதார்த்தங்களை விஸ்தாரமாக நிரூபித்தலால் பிரதிஞ்ஞாபங்கம் உண்டாகின்றது. "தத்துவஞானத்திற்கு ஏது மனனமாம்; ஆத்மா பிற பதார்த்தத்தின் பின்னமாம்; ஆத்மத்தன்மையால், எது பிறிதின் பின்னமாகாது பிறிதாகுமோ அது ஆத்மாவன்று, கடம்போல என்னும் வெதிரேகி அநுமானத்தால் ஆத்மாவினிடத்துப் பிறிதின் பேதத்தின் அநுமிதி ஞானம் உண்டாகின்றது. அது மனன மெனப்படுகின்றது. பிற பதார்த்தங்களின் ஞானம் இன்றி ஆத்மாவினிடத்துப் பிற பேதத்தின் ஞானம் சம்பவியாது. ஏனெனின், பிரதியோகி ஞானமின்றிப் பேதஞான முண்டாகாது. ஆதலால், ஆத்மாவினிடத்துப் பிற பேதத்தின் அநுமிதி வடிவமாகிய மநநத்திற்கு உபயோகியான பிற பதார்த்தங்களின் நிரூபணமும் தத்துவஞானத்திற்கு உபயோகியாம்" என்று தார்க்கிகர் கூறுகின்றனர். அது சம்பவியாது. ஏனெனின், கேட்ட அர்த்தத்தினை நிச்சயித்தற்கு அநுகூலமான பிரமேய சந்தேகத்தை நிவர்த்திக்கும் யுக்தியைச் சிந்தித்தலே மனன மென்பர். பேதஞானத்தால் அனர்த்தம் உண்டாகின்றது. "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - நிச்சயமாக இவை யாவும் பிரஹ்மம்" என்றன் முதலிய வாக்கி

யங்களால் அபேதத்தில் சகல வேதங்களுக்கும் தாற்பரியமாம். த்³விதீயாத்³வை ப⁴யம் ப⁴வதி - இரண்டாவதனால் பய முண்டாகின்றது, ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நாநேவ பஶ்யதி - எவன் கண்டு நானாவைப்போலக் காண்கிறானோ, அவன் மிருத்தியுவினின்றும் மிருத்தியுவை அடைகின்றான்'' என்றன்முதலிய வேத வாக்கியங்களால் பேதஞானம் நிந்திக்கப்பட்டுளது.

ஆகலால், பேதஞானத்திற்கு, நேராகவாவது தத்துவஞான வாயிலாகவாவது புருஷார்த்தத்தை உண்டுபண்ணுந் தன்மை சம்பவியாது. மனன பதத்தாலும் ஆத்மாவினின்றும் பிற பதார்த்தங்களினது பேதத்தின் உணர்ச்சி உண்டாகாது. மனன பதத்திற்குச் சிந்தித்தன்மாத்திரம் பொருளாம். வாக்கியார்த்தத்தின் அநுரோதத்தால் அபேத சிந்தனத்தில் மனன சப்தத்திற்குப் பரியவசானம் (முடிவு) உண்டாகின்றது.

எவ்வாற்றானும் ஆத்மாவினின்றும் பிற பதார்த்தங்களின் வேற்றுமை மனன சப்தத்திற்குப் பொருளாகாது. ஆனால், பிற பொருட்களின் ஞானத்தினாலேயே புருஷார்த்த சாதனமாகிய தத்துவஞானத்தின் அடைவு உண்டாகுமாயின், சகல புருஷர்களுக்கும் தத்துவஞானத்தின் அடைவு உண்டாதல் வேண்டும், அல்லது ஒருவருக்கும் தத்துவஞானத்தின் அடைவு உண்டாகாது. அஃது எங்ஙனமெனின்:—பிற பொருட்களின் சாமானிய ஞானம் அபேக்ஷிக்கப்படுவதாயின், சாமானிய ஞானம் எல்லாப் புருஷர்களுக்கு மிருத்தலால், பிற பதார்த்தங்களின் ஞானபூர்வகமான பிறவற்றின் பேதஞானத்தால் சகலருக்கும் தத்துவஞான முண்டாதல் வேண்டும். சகல பதார்த்தங்களுக்கும் அசாதாரண தர்ம சுவரூபமான விசேஷ ரூபத்தால் பிறவற்றின் ஞானம் அபேக்ஷிக்கப்படுவதாமெனின், சர்வஞ்ஞனாகிய ஈசுவரனன்றி மற்றெவருக்கும் அசாதாரண தர்மத்தால் எல்லாப் பிற பதார்த்தங்களின் ஞானமும் நிகழாது. ஆதலின், பிறவற்றின் உணர்ச்சி சம்பவியாமையால் பிறபேத உணர்ச்சி உண்டாகாமையின் ஒருவருக்கும் தத்துவஞான முண்டாகாது. இதனால் பிரமாணமுதலியவற்றின் நிரூபணமின்றி அநேக பதார்த்தங்களை நிரூபித்தல் பயனில்லாத தாதலால் காரணத்தில் மூன்றாவது பேதத்தை நிரூபித்தல் அபேக்ஷிக்கப்படாததாம்.

"பாவகாரியத்தின் உற்பத்தி மூவகைக் காரணத்தா லுண்டாகின்றது. ஐவகை அபாவ முண்டு. அவற்றுள் பிராகபாவமோ அநாதி சாந்தமாம். ஆதலால், அதற்கு நாசம் உண்டாகின்றது; உற்பத்தி உண்டாகிறதில்லை. அந்நியோந்நியாபாவமும் அத்தியந்தாபாவமும் அநாதி அநந்தமாம். ஆதலால், அவற்றிற்கும் உற்பத்தி உண்டாகிறதில்லை. சாமயிகாபாவம் சாதி சாந்தமாம். அதற்கு உற்பத்தி நாசம் இரண்டு முண்டு. பிரத்துவம்சாபாவம் அநந்தசாதியாம். ஆதலால் அதற்கு நாச மில்லை; உற்பத்தியுண்டு. இவ்வாற்றான் இரண்டு அபாவங்களுக்கும் உற்பத்தி உண்டாகுதலான் இரண்டும் காரியமாம். அவற்றிற்குச் சமவாயி காரண அசமவாயி காரணங்களோ சம்பவியா. ஏனெனின், எதனிடத்துச் சமவாய சம்பந்தத்தால் காரிய முண்டாகின்றதோ அது சமவாயிகாரணமெனப்படுகின்றது. எதனிடத்தும் சமவாய சம்பந்தத்தால் அபாவ மிராது. ஆதலால், அதற்குச் சமவாயி காரணம் சம்பவியாது. சமவாயி காரணத்தில் சம்பந்த முடையதாய்க் காரியத்தை உண்டு பண்ணுவதெதுவோ அது அசமவாயி காரணமெனப்படுகின்றது. சமவாயி காரணம் இன்மையால் அதனிடத்துச் சம்பந்தித்துள்ளதாய்க் காரியத்தை யுண்டுபண்ணுவதொன்று சம்பவியாமையின், அபாவத்திற்கு அசமவாயி காரணமும் சம்பவியாது. ஆதலால், கேவல நிமித்த காரணத்தால் சாமயிகாபாவமும் பிரத்துவம்சாபாவமும் உண்டாகின்றன. பூதலமுதலிய தேசத்தில் கடத்தின் சாமயிகாபாவத்திற்குப் பூதலமுதலிய தேசத்தினின்றும் கடத்தை நகர்த்துதல் நிமித்த காரணமாம். கடத்தின் பிரத்துவம்ஸாபாவத்திற்கு நிமித்த காரணம் கடமாம். அங்ஙனமே கடத்தோடு தண்டமுதலியவற்றின் சையோகமும் கடத்துவம்சத்திற்கு நிமித்த காரணமாம். இவ்வாற்றான் அபாவகாரியமோ நிமித்த காரணமாத்திரத்தால் பெறப்படுவதாம். அங்ஙனமாயினும் எல்லாப் பாவகாரியங்களும் மூவகைக் காரணத்தாற் பெறப்படுவனவாமென்பது நியமம்" என்று இவ்வாறு தார்க்கிகர் கூறுகின்றனர்.

இத் தார்க்கிகரது வசனத்திற்குச் சிருஷ்டியின் ஆதிகாலத்தில் செய்யவேண்டுமென்னும் ஈசுவரனது விருப்பத்தால் பரமாணுவில் எந்தத் தொழில் உண்டாகின்றதோ அதன்கண் வியபிசார முண்டு. ஏனெனின், அப் பரமாணுவின் தொழிலுக்

குப் பரமாணு சமவாயி காரணமாம். ஈசுவர இச்சைமுதலியன நிமித்தகாரணமாம். பரமாணுவில் சம்பந்தமுள்ள தொன்று கிரியையை யுண்டுபண்ணுவதாமாயின் அசமவாயிகாரணமாம். அப் பரமாணுவின்கண்ணே சம்பந்த முள்ளதாய் அத் தொழிலை உண்டுபண்ணுவதொன்று இல்லையாகலின், சிருஷ்டியின் ஆரம்பத்தில் பரமாணுவின் கிரியை காரண மிரண்டினுல் ஆக்கப்படுவதாம். காரண மூன்றினுல் ஆக்கப்படுவதன்று. ஆதலால், தார்க்கிகர் கூறிய நியமம் பொருந்தாது.

சித்தாந்த மதத்திலோ எல்லாப் பாவகாரியங்களும் உபாதான நிமித்த காரணங்களால் ஆக்கப்படுவனவா மென்பது நியமம். அதற்கு எவ்விடத்தும் வியபிசாரம் இல்லை. யாண்டுக் காரணம் மூன்றினுல் ஆக்கப்பட்ட காரியத்தினைக் கூறுகின்ருர்களோ, ஆண்டும் தார்க்கிகரால் கொள்ளப்பட்ட அசமவாயி காரணமும் நிமித்தகாரணமேயாம். ஆதலால், சகல பாவ காரியங்களுக்கும் இருவகைக் காரணத்தால் பெறப்படுந் தன்மை யுளது. இவ்வாற்ருன் உபாதானம் நிமித்த மென்னும் வேறுபாட்டாற் காரணம் இருவகையின தாகின்றது. சாதாரணம் அசாதாரணம் என்னும் பேதத்தாலும் காரணத்திற்கு இரண்டு பேதம் கூறுவர். ஈசுவரன்முதலிய ஒன்பதும் சாதாரண காரணங்களாம். அவற்றிற்கு வேருகிய கடமுதலியவற்றின் கபாலமுதலியன அசாதாரண காரணங்களாம். அவற்றுள்ளும் சில நிமித்தகாரணமும் சில உபாதானகாரணமுமாம். உபாதானகாரண நிமித்தகாரணங்களுக்கு வேருகிய காரணம் அப்பிரசித்தமாம்.

100. விருத்திஞானத்தின் உபாதான நிமித்த காரணங்களும், சாமானிய லக்ஷணமும்

அந்தக்கரணத்தின் ஞானவடிவ விருத்திக்கு உபாதான காரணம் அந்தக்கரணமாம். பிரத்தியக்ஷமுதலிய பிரமாணங்களும் அங்ஙனமே இந்திரிய சையோகமுதலிய வியாபாரங்களும் நிமித்தகாரணமாம். ஈசுவரனது ஞானவடிவ விருத்திக்கு உபாதானகாரணம் மாயையாம்; அதிருஷ்டமுதலியன நிமித்த காரணமாம். பிரமவிருத்திக்கு (மயக்கவுணர்ச்சிக்கு) உபாதான காரணம் அவித்தையும், நிமித்தகாரணம் தோஷமுமாம். இவ்

வார்த்தை யொதி நிருபணத்தில் விளக்கமாகும். இவ்வாறு விருத்தியின் காரணத்தை அறிந்துகொள்க.

விருத்தியின் இலக்ஷணம் நூலின் ஆரம்பத்திற் கூறப்பட்டிருக்கின்றது. விஷயத்தைப் பிரகாசிப்பித்தற்கு ஏதுவாகிய அந்தக்கரண அவித்தைகளின் பரிணமம் விருத்தி யெனப்படும் என்று விருத்தியின் இலக்ஷணம் சொல்லப்பட்டிருக்கின்றது. சில நூல்களில் அஞ்ஞானத்தைக் கெடுக்கும் பரிணமம் விருத்தி எனப்படுகின்றது. பரோக்ஷஞானத்தினுலும் அசத்துவாபாதக அஞ்ஞாணம்சத்தின் நாசம் உண்டாகின்றது. அல்லது, விஷய சேதநத்துள்ள அஞ்ஞானத்தின் நாசமோ அபரோக்ஷஞான மின்றி உண்டாகிறதில்லை. பிரமாத்திரு சேதநத்துள்ள அஞ்ஞானத்தின் நாசம்பரோக்ஷஞானத்தினுலும் உண்டாகிறது. ஆதலால், பரோக்ஷ விருத்தியில் முற்கூறிய லக்ஷணத்தின் வியாப்தி இல்லை. அங்ஙனமாயினும் சுகதுக்கங்களின் ஞானவடிவமாகிய விருத்தியிலும், மாயாவிருத்தி வடிவினதாகிய ஈசுவர ஞானத்திலும், அங்ஙனமே கிளிஞ்சில் வெள்ளி முதலியவற்றை விஷயிக்கும் பிரமரூப அவித்தியாவிருத்தியிலும் முற்கூறிய லக்ஷணத்தின் வியாப்தி இருக்கின்றது. ஏனெனின், முதலில் அறியப்படாத சுகதுக்காதிகள் உண்டாகிப் பின்னர் அவற்றின் ஞானம் உண்டாகுமாயின் சுகமுதலியவற்றின் ஞானத்தால் அவற்றின் அஞ்ஞானத்திற்கு நாசம் சம்பவிக்கும்; அறியப்படாத சுகதுக்காதிக ளில்லை. ஆனல், சுகதுக்காதிகளும் அவற்றின் ஞானமும் ஒரேகாலத்தில் உண்டாகின்றன. ஆதலால், அறியப்படாத சுகதுக்காதிக ளில்லாமையின் சுகதுக்காதிகோசர விருத்தியால் அஞ்ஞானத்தின் நாசம் சம்பவியாது.

அங்ஙனமே ஈசுவரனுக்கு அசாதாரண வடிவத்தாற் சகல பதார்த்தங்களும் எப்போதும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றன. ஆதலால், அஞ்ஞானத்தி னின்மையால் மாயையின் விருத்திவடிவமாகிய ஞானத்தினுலும் அஞ்ஞானத்தின் நாசம் சம்பவியாது. கிளிஞ்சில் வெள்ளி முதலிய மித்தியா பதார்த்தங்களும் அவற்றின் ஞானமும் ஒரே காலத்தில் உண்டாகின்றன. ஆதலால், பிரமவிருத்தியி(மயக்கஞானத்தி)னுலும் அஞ்ஞானத்தின் நாசம் உண்டாகாது. அங்ஙனமே தாரையாய்ச் செல்லும் விருத்தி உண்டாகுமாயின் ஆண்டும் முற்கூறிய லக்ஷணத்

திற்கு இரண்டாவது முதலிய விருத்திகளில் அவ்வியாப்தி இருக்கின்றது. ஏனெனின், ஞானதாரை உண்டாகுமாயின், ஆண்டு முதல் ஞானத்தால் அஞ்ஞானத்தின் நாசம் உண்டாகவே இரண்டாவதுமுதலிய ஞானத்திற்கு அஞ்ஞானத்தைக் கெடுக்குந் தன்மை சம்பவிக்கிறதில்லை. ஆதலால், பிரகாசிப்பிக்கும் பரிணமத்தை விருத்தி என்பர் என்பதன் தாற்பரிய மிதுவாம்:—இருக்கிறது என்னும் வியவகாரத்திற்கு ஏதுவாகிய அவித்தை அந்தக்கரணங்களின் பரிணமம் யாதோ, அது விருத்தி எனப்படுகின்றது. பிரகாசிப்பிக்கும் பரிணமத்தினை விருத்தி எனினும், அறியப்படாத பதார்த்தங்களைக் கோசரம் செய்யும் விருத்தியிற்றான் பிரகாசிப்பிக்குந் தன்மை உண்டு. மறைக்கப்படாததைக் கோசரிக்கும் விருத்தியில் பிரகாசிப்பிக்குந் தன்மை இல்லை. ஏனெனின், மறைக்கப்படாத சேதனத்தின் சம்பந்தத்தினுற்றானே விஷயத்தைப் பிரகாசிப்பித்தல் சம்பவித்தலால் விருத்தியில் பிரகாசிப்பிக்குந் தன்மைக் கற்பனை அயோக்கியமாம்

ஆதலால், விருத்தியில் அஞ்ஞானத்தினைக் கெடுக்குந் தன்மையின்றி வேறுவித பிரகாசிப்பிக்குந்தன்மை சம்பவியாமையால் இரண்டாவது லக்ஷணத்திற்கும் முதல் லக்ஷணத்திற்குண்டானதுபோல சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தியில் அவ்வியாப்தி உண்டாகும். ஆதலால், இருக்கிறதென்னும் வியவகாரத்திற்கு ஏதுவான அவித்தை அந்தக்கரணங்களின் பரிணமம் விருத்தி எனப்படுகின்றது. பரோக்ஷ விருத்தியினும் இருக்கிறதென்னும் வியவகாரத்திற்கு ஏதுவாந்தன்மை வெளிப்படையாம். கடமுதலியவற்றை விஷயிக்கும் அந்தக்கரண விருத்தியினைக் கடமுதலியவற்றின் ஞான மென்பர். அத்வைத சித்தாந்தத்தில் விருத்தி யவச்சின்ன சேதநத்தை ஞான மென்பர். அபாதித (வாதிக்கப்படாத) விருத்தி யவச்சின்ன சேதநத்தைப் பிரமாஞானமென்பர். பாதிப்படுவனவாகிய ரஜ்ஜுசர்ப்ப முதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தி யவச்சின்ன சேதநத்தை அப்பிரமாஞான மென்பர். அங்ஙனமாயினும் சேதநத்தில் ஞானமென்னும் சொல்லின் பிரயோகமும், அங்ஙனமே பிரமை அப்பிரமை என்னும் சொற்களின் பிரயோகமும் விருத்திசம்பந்தத்தால் உண்டாகின்றன. ஆதலால், விரு

த்தியினையும் அநேக இடங்களில் ஞானமென்பர். இவ்வாற்றாற் பிரமை அப்பிரமை என்னும் பேதத்தால் இருவகை விருத்தி சொல்லப்பட்டது.

101. பிரத்தியக்ஷத்தினது இலக்ஷணத்தோடு பிரமை அப்பிரமை வடிவினதாகிய விருத்தி ஞானத்தின் பேதம்

அப்பிரமையும்: யதார்த்தம், அயதார்த்தம் என்னும் பேதத்தால் இருவகையாகச் சொல்லப்பட்டது. ஈசுவரனது ஞானமும் சுக துக்க முதலியவற்றை விஷயஞ்செய்யும் ஞானமும் யதார்த்த அப்பிரமையாம். சுத்தி வெள்ளி முதலிய பிரமம் அயதார்த்த அப்பிரமையாம். யாது பிரமாணஜந்நிய யதார்த்த ஞான மாகின்றதோ அது பிரமையாம். ஈசுவரஞான முதலியன பிரமாண ஜந்நியமன்று. ஆகலின் பிரமை அன்று. தோஷஜந்நிய மன்றாகலின் பிரமமு (பிராந்தியு) மன்று. அநேக நூல்களிலோ பிரமைக்கு வேறு இலக்கணமே சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் அநுசாரமாகவோ ஈசுவரஞான முதலியனவும் யதார்த்த ஞானமாகிய பிரமையாம். ஆனால், யதார்த்த அயதார்த்த பேதத்தால் ஸ்மிருதி இருவகையினதாம். அவ் விரண்டுவகைப் பிரமையும் இல்லாதவர்களது மதத்தில் பிரமையின் இலக்ஷணமிதுவாம். பாதிக்கப்படாத அர்த்தத்தை விஷயம் செய்வதாகிய ஸ்மிருதியின் வேறாகிய ஞானம் எதுவோ அது பிரமை எனப்படுகின்றது. இப்பி வெள்ளி முதலியவற்றின் ஞானம் ஸ்மிருதியின் வேறாம். அபாதித அர்த்தத்தை விஷயம் செய்யாது பாதிக்கப்படும் பொருளை விஷயஞ் செய்கின்றதாகலின் பிரமை அன்று. பாதிக்கப்படாத பொருளை விஷயஞ் செய்வது ஸ்மிருதி ஞானமுமாம். ஸ்மிருதி ஞானத்தில் பிரமை வியவகாரம் இல்லை. ஆதலால், ஸ்மிருதிக்கு வேறாய்ப் பாதிக்கப்படாத பொருளை விஷயஞ் செய்யும் ஞானம் எதுவோ அது பிரமை எனப்படும்.

அந்நிய யதார்த்த ஞானத்தைப்போல யதார்த்த ஸ்மிருதியும் சம்வாதிப் பிரவிருத்தியை உண்டுபண்ணுவதாயிருத்தலின் ஸ்மிருதி சாதாரணமே பிரமையின் இலக்ஷணமாதல் வேண்டும். அங்ஙனமாயினும் சம்வாதிப் பிரவிருத்திக்கு உபயோகியாகிய பிரமாத்தன்மை ஸ்மிருதியினும் உளது. அந்தப் பிரவிருத்திக்கு உபயோகியாகிய பிரமாத்தன்மையோ பாதிக்கப்

படாத பொருளைக் கோசரிக்குந் தன்மை வடிவினதா யுளது. பிரமா வியவகாரத்திற்கு உபயோகியாகிய பிரமாத்தன்மை ஸ்மிருதியில் இல்லை. ஏனெனின், இலௌகிக சாஸ்திரீய பேதத்தால் வியவகாரத்திற்கு இரண்டு பேத முண்டு.

சாஸ்திரத்திற்குப் புறம்பாக உலகினர் எந்தச் சொற் பிரயோகம் செய்கின்றனரோ, அது இலௌகிக வியவகார மெனப் படுகின்றது.

சாஸ்திரத்தின் பரிபாஷையால் எந்தச் சப்தப் பிரயோகம் செய்யப்படுகின்றதோ, அது சாஸ்திரீய வியவகார மெனப்படுகின்றது.

சாஸ்திரத்திற்குப் புறம்பாகவோ யாரும் பிரமாவியவகாரம் செய்வதில்லை. ஓர் பண்டிதன் அங்ஙனமே சப்தப்பிரயோகஞ் செய்வானாயின், சாஸ்திரத்தின் பரிபாஷையின் சம்ஸ்காரத்தால் செய்கின்றான். ஆதலால், கேவலம் சாஸ்திரீயம் பிரமாவியவகாரமாம்.

பிராசீன நூலாசிரியர் ஸ்மிருதிக்கு வேறாய யதார்த்த ஞானத்தின்கண்ணேயே பிரமா வியவகாரம் செய்திருக்கின்றனர். ஆதலால், ஸ்மிருதியின் வேறுபட்டதாகவே பிரமையின் இலக்ஷணம் சொல்லுதல் வேண்டும். "யதார்த்தாநுபவம் பிரமை" எனப் பிரமையின் இலக்ஷணத்தைப் பிராசீன ஆசாரியர்கள் எழுதியிருக்கின்றனர். ஸ்மிருதிக்கு வேறாகிய ஞானத்தை அநுபவ மென்பர். ஆதலால், ஸ்மிருதியில் பிரமாவியவகாரம் இஷ்டமன்று. பிரத்தியக்ஷமுதலிய ஞானங்களுக்கு விலக்ஷணம் ஸ்மிருதி ஞானமாம். பிரத்தியக்ஷமுதலிய சகல ஞானங்களினும் அநுபவத்தன்மை யுண்டு; ஸ்மிருதியில் இல்லை. ஆதலால், அநுபவத்தன்மையின் உண்மை இன்மைகளால் பிரத்தியக்ஷமுதலியனவும் ஸ்மிருதியும் ஒன்றற்கொன்று விஜாதீயமாம்.

எங்ஙனம்: பிரத்தியக்ஷ அநுமிதி சாப்தமுதலிய ஞானங்களில் பிரத்தியக்ஷத்தன்மை அநுமிதித்தன்மை சாப்தத்தன்மை முதலிய விலக்ஷணதர்ம மிருத்தலால் பிரத்தியக்ஷமுதலிய ஞானங்கள் ஒன்றற்கொன்று விஜாதீயமாம். விஜாதீயப் பிரமைகளுக்குக் காரணங்களாகிய பிரமாணங்களும் பிரத்தி

யக்ஷம் அனுமானம் சப்தம் முதலியனவாகவே வேறுபட்டிருக்கின்றன. அங்ஙனமே சகல அநுபவத்திற்கும் விஜாதீயமாய் ஸ்மிருதி இருக்கின்றது. அதற்குக் காரணம் அநுபவமாம். அது எப் பிரமைக்கும் காணம் அன்று; ஆகலின், பிரமாணமன்று.

"வியாப்தியின் பிரத்தியக்ஷம் அநுமிதிக்குக் காரணமாயிருத்தலின், அநுமானப்பிரமாணமாம். அங்ஙனமே பதத்தின் பிரத்தியக்ஷம் சப்தப்பிரமாணமும் கவயத்தில் கோவினது ஒப்புமையின் பிரத்தியக்ஷம் உவமானப் பிரமாணமுமாம். பிரத்தியக்ஷஞானமும் அநுபவத்தின் விசேஷமே யாகலின் அநுபவம் பிரமாணமன்று" எனக் கூறுதல் அசங்கதமாம்:—அங்ஙனமாயினும் வியாப்திஞானத்தன்மை வடிவத்தான் வியாப்திஞானம் அநுமிதிக்கு ஏதுவாம். அநுபவத்தன்மை வடிவத்தான் வியாப்திஞானம் அநுமிதிக்கு ஏதுவன்று.

அங்ஙனமே பதப்பிரத்தியக்ஷமும் சாதிருசியஞானமும் அநுபவத்தன்மை வடிவத்தான் சாப்தப்பிரமை உவமிதிப் பிரமைகளுக்கு ஏதுவன்று. ஸ்மிருதிஞானத்தில் அநுபவத்தன்மை வடிவத்தான் பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்கு ஏதுவாம் ஆதலால் பிரமாணமன்று. ஸ்மிருதிஞானத்தையும் பிரமையெனின் விஜாதீயப்பிரமைக்குக் காரணம் வேறு பிரமாணமாகின்றது. ஆதலால், நியாயசாஸ்திரத்திலோ அநுபவமென் பதனைப் பஞ்சப் பிரமாணமாகச் சொல்லுதல் வேண்டும். பட்ட வேதாந்த மதங்களில் ஏழாவது பிரமாணமாகச் சொல்லுதல் வேண்டும். ஆதலால், எல்லா நூலாசிரியர்களுக்கும் ஸ்மிருதியில் பிரமா வியவகாரம் இஷ்டம் இன்று. எவரேனும் யதார்த்த ஞானமாத்திரத்தில் பிரமா வியவகாரம் அங்கீகரிக்கின், அதை அநுசரித்துப் பிரமையின் இலக்ஷணத்தில் ஸ்மிருதிக்கு வேறுயவென்று புகுத்தல் வேண்டா. பாதிக்கப்படாத பொருளினை விஷயஞ் செய்யும் ஞானம் பிரமை எனப்படுகின்றது. பிராந்தி அநுபவத்தால் தோன்றிய அயதார்த்த ஸ்மிருதியோ பாதிக்கப்படும் பொருளினை விஷயஞ் செய்கிறது; ஆதலால், அதில் அதிவியாப்தி யின்று.

யதார்த்த அநுபவத்தால் தோன்றிய ஸ்மிருதியில் லக்ஷணம் செல்லுமாயின், ஆண்டுப் பிரமா வியவகாரம் இஷ்டமாக

வின் அதிவியாப்தி யின்று. இலக்ஷிய மல்லாததன்கண் இலக்ஷணம் சென்றால் அதிவியாப்தி ஆகின்றது. யதார்த்த ஸ்மிருதியும் இலக்ஷியமாகலின் அதிவியாப்தி இன்று. இம் மதாநுசாரமாக யதார்த்த அயாதார்த்த பேதத்தால் விருத்தி இருவகையாம். யதார்த்தத்தினைப் பிரமை என்பர்; அயதார்த்தத்தினை அப்பிரமை என்பர். இம்மதத்தில் பிரமைக்கு ஏழுபேத முண்டு:—பிரத்தியக்ஷம், அநுமிதி, சாப்தி, உபமிதி, அநுபலப்தி என்பன ஆறு பேதமாம். அங்ஙனமே யதார்த்த ஸ்மிருதியும் பிரமையின் ஏழாவது பேதமாம். ஆனால், எல்லா நூல்களுக்கும் இம் மரியாதை உண்டு; ஸ்மிருதியில் பிரமா வியவகார மில்லை.

ஆதலால், பிரத்தியக்ஷமுதலிய வேறுபாட்டால் பிரமை வடிவினதாகிய விருத்தி அறுவகையினதாம். பாகியம் ஆந்தரம் என்னும் பேதத்தால் பிரத்தியக்ஷப்பிரமை இரண்டுவகையினதாம். பாதிக்கப்படாத பாகிய பதார்த்தத்தைக் கோசரிக்கும் விருத்தி பாகியப் பிரத்தியக்ஷப்பிரமை எனப்படுகின்றது. சுரோத்திரமுதலிய பஞ்சேந்திரியங்களால் ஐவகைப் பாகியப் பிரத்தியக்ஷப் பிரமை யுண்டாகின்றது. சிலவிடத்துச் சப்தத்தினாலும் பாகிய கோசர அபரோக்ஷவிருத்தி யுண்டாகின்றது. எங்ஙனம் "பத்தாமவன் நீ" என்னும் சப்தத்தால் ஸ்தூலசரீரத்தின் அபரோக்ஷ ஞானம் உண்டாகின்றது. இவ்வாறு காரணபேதத்தால் பாகியப் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஆறுபேதம் உண்டு. சில நூலாசிரியர் அநுபலப்திப் பிரமாணத்தால் உண்டாகிய அபாவகோசர விருத்தியினையும் அபரோக்ஷவிருத்தி என்பர். அவர்கள் மதத்தில் சுரோத்திரேந்திரியமுதலிய ஐந்து இந்திரியங்களும், சப்தமும், அங்ஙனமே அநுபலப்தியும் ஆகிய ஏழும் பாகியப் பிரத்தியக்ஷப் பிரமைக்குக் கரணமாம். ஆதலால், பாகியப் பிரத்தியக்ஷப்பிரமை ஏழுவிதமாம். ஆனால், இவ் வர்த்தம் முன் எழுதப்பட்டிருக்கின்றது. தர்மாதர்மங்களைப்போலப் பிரத்தியக்ஷ யோக்கியதை அபாவத்தின்கண் இல்லை. ஆதலால், விருத்தி அவச்சின்ன சேதநத்தோடு அபாவ அவச்சின்ன சேதநத்திற்கு அபேதம் உண்டாயினும் அபாவகோசரவிருத்தி அபரோக்ஷம் அன்று. ஆனால், அநுமிதிமுதலியவற்றைப் போல அநுபலப்திப் பிரமாணத்தினாலுண்டாகிய அபாவகோசர விருத்தி பிரத்தியக்ஷவிருத்தியின் விலக்ஷணமாம். ஆதலால்,

பாகியப் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஆறுபேதம் உண்டு; ஏழு இல்லை.

ஆந்தரப் பிரத்தியக்ஷப் பிரமையும் இருவகையினதாம். ஒன்று ஆத்மகோசரம்; மற்றது அநாத்மகோசரம். ஆத்மகோசரமும் இருவகையினதாம். ஒன்று சுத்தாத்துமகோசரம்; மற்றையது விசிஷ்டாத்துமகோசரம். சுத்தாத்மகோசரமும் இருவகைத்தாம். ஒன்று பிரஹ்ம அகோசரம்; மற்றொன்று பிரஹ்மகோசரம். துவம்பதார்த்தத்தை அறிவிக்கும் வேதாந்த வாக்கியத்தால் "சுத்தன் பிரகாசன் யான்" என்று அந்தக்கரண விருத்தி உண்டாகின்றது. அந்த விருத்திதேசத்திற்றானே அந்தக்கரண உபஹித சுத்தசேதந மிருக்கின்றது. ஆதலால், விருத்தியவச்சின்ன சேதந விஷயாவச்சின்ன சேதநங்களுக்கு அபேத மிருத்தலின் அவ்விருத்தி அபரோக்ஷமாம். அவ் விருத்திக்கு விஷயமாகிய சுத்தசேதநத்தில் பிரஹ்மத்தன்மையும் இருக்கின்றது; ஆனால், பிரஹ்மாகாரவிருத்தி உண்டாகவில்லை. ஏனெனில், அவாந்தர வாக்கியத்தால் விருத்தி உண்டாயிருக்கிறது. மகாவாக்கியத்தால் உண்டாகுமாயின் பிரஹ்மாகாரமும் உண்டாகும். ஏ…னின், சத்தத்தால் உண்டாகிய ஞானத்திற்கு இது சுபாவமா[illegible]:— சந்நிதிப்பட்ட பதார்த்தத்தினை எவ் வடிவத்தான் சப்தம் [illegible] விக்கின்றதோ, அவ் வடிவத்தினையே விஷயஞ் செய்கின்றது. எவ் வடிவத்தான் சப்தம் உச்சரிக்கப்படவில்லையோ, அவ் வடிவத்தால் சப்தத்தாற் றோன்றும் ஞானம் விஷயஞ் செய்கிறதில்லை. எங்ஙனம்: பத்தாமவனை நோக்கி "தசமன் இருக்கின்றான்" என்பதாகக் கூறுமிடத்துத் "தசமன் யான்" என்றிவ்வாறு சுரோதாவுக்கு ஞானம் உண்டாகிறதில்லை. தசமனிடத்து ஆத்மத்தன்மை யிருக்கினும் அறிவிக்கும்சப்தமின்மையால் ஆத்மத்தன்மையின் ஞானம் உண்டாகாததுபோல ஆத்மாவினிடத்தும் பிரஹ்மத்தன்மை எப்போது மிருக்கினும், பிரஹ்மத்தன்மையை அறிவிக்கும் சத்தமின்மையால் ஞானம் உண்டாகிறதில்லை. முற்கூறிய விருத்தி பிரஹ்ம அகோசர சுத்தாத்மகோசர ஆந்தரப் பிரத்தியக்ஷப்பிரமையாம்.

பிரத்தியக்ஷப் பிரசங்கத்தால் இச்சங்கை யுண்டாகின்றது:— சித்தாந்தத்தில் இந்திரியஜந்நியஞானம் பிரத்தியக்ஷமாகின்றதென்பதன் அங்கீகாரம் இல்லை. ஆனால், விருத்தி அவச்சின்ன

சேதநத்தோடு விஷயாவச்சின்ன சேதனத்தின் அபேதம் ஞானத்தின் பிரத்தியக்ஷத்தன்மைக்கு ஏதுவாம். யாண்டு இந்திரியசம்பந்தம் கடாதிகளுக்கு உண்டாகின்றதோ, ஆண்டு இந்திரியவாயிலாக அந்தக்கரணத்தின் விருத்தி வெளியிற் சென்று விஷயாகாரத்தின் சமானகாரமாய் விஷயத்தோடு சம்பந்தம் உடையதாகின்றது. ஆதலால், விஷயசேதன விருத்திசேதனங்களின் உபாதி ஓரிடத்திருத்தலால் உபஹிதசேதநத்திற்கும் அபேத முண்டாகின்றது. அங்ஙனமே சுகமுதலியவற்றின் ஞானமும் இந்திரிய ஜந்நியமன்று; சுத்தாத்மஞானமும் சப்தஜந்நியமாம்; இந்திரிய ஜந்நியமன்று. என்றாலும் விஷயசேதநத்திற்கும் விருத்தி சேதனத்திற்கும் பேத மில்லை. ஏனெனின், சுகாகாரவிருத்தி அந்தக்கரணதேசத்தி லிருக்கின்றது; சுகமும் அந்தக்கரணத்தி லிருக்கின்றது. ஆதலால், விருத்தி உபஹிதசேதநவிஷய உபஹிதசேதநங்களுக்கு அபேத முண்டு. அங்ஙனமே ஆத்மாகார விருத்திக்கு உபாதானகாரணம் அந்தக்கரணமாம். அந்தக்கரண உபஹிதசேதநத்திற்கு எதிர்முகமா யிருக்கின்றது; ஆதலால், ஆத்மாகாரவிருத்தியும் அந்தக்கரண தேசத்தி லுண்டாகின்றது. அவ் வந்தக்கரணமே சுத்தாத்மாவுக்கு உபாதியாம். இவ்வாறான் இரண்டுபாதிகளும் ஓரிடத்திருத்தலால் விருத்தி சேதந விஷயசேதநங்களுக்கு அபேத முண்டாகின்றது. ஆதலால், சுகாதிஞானமும் சுத்தாத்மஞானமும் பிரத்தியக்ஷரூபமாம்.

ஈண்டு இது நிச்சயம்:—யாண்டு விஷயத்திற்குப் பிரமாதாவோடு விருத்திவாயிலாகவாதல் நேராகவாதல் சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டு அவ் விஷயத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாம். அவ் விஷயமும் பிரத்தியக்ஷ மெனப்படுகின்றது. எங்ஙனம்: கடத்தின் பிரத்தியக்ஷஞானம் உண்டாகும்போது "கடம் பிரத்தியக்ஷம்" என்னும் வியவகாரம் உண்டாகின்றது. வெளிப்பொருள்களுக்கு விருத்தியின் வழியாய்ப் பிரமாதாவோடு சம்பந்த முண்டாகிறது. சுகாதிகளுக்குப் பிரமாதாவோடு சாக்ஷாத் சம்பந்தம் இருக்கின்றது. அதீத (கழிந்த) சுகமுதலியவற்றிற்குப் பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்த மில்லை. ஆதலால், அதீத சுகமுதலியவற்றின் ஞானம் ஸ்மிருதிரூபமாம்; பிரத்தியக்ஷரூபமன்று. அதீதசுக முதலியவற்றிற்கும் பிரமாதாவோடு

சம்பந்தமோ உண்டாயிருக்கின்றது. என்றாலும் பிரத்தியக்ஷ லக்ஷணத்தில் வர்த்தமானத்தின் பிரவேசம் இருக்கின்றது. பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடையதாகிய யோக்கிய விஷயம் பிரத்தியக்ஷ மெனப்படுகின்றது. பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்த முடையதாகிய யோக்கிய விஷயத்தின் ஞானம் பிரத்தியக்ஷஞானமெனப்படுகின்றது. யோக்கியமென்று சொல்லாவிடின் தர்மமுதலியன எப்போதும் பிரமாதாவோடு சம்பந்த முள்ளனவாய் இருத்தலால் அவை எப்பொழுதுமே பிரத்தியக்ஷமாதல் வேண்டும்; அன்றியும் அவற்றின் ஞானம் சத்தமுதலியவற்றால் உண்டாகின்றது; அதனைப் பிரத்தியக்ஷ ஞானமென்னல் வேண்டும். தர்மமுதலியன பிரத்தியக்ஷ யோக்கியமன்றாகலின் இலக்ஷணத்தில் யோக்கியமென்னும் பதத்தின் பிரவேசத்தால் தோஷமில்லை. யோக்கியத்தன்மை அயோக்கியத்தன்மைகள் அநுபவாநுசாரமாக அநுமிக்கத்தக்கனவாம்.

எந்த வஸ்துவில் பிரத்தியக்ஷத்தன்மையின் அநுபவம் உண்டாகின்றதோ, அதனிடத்து யோக்கியத்தன்மையும், எதனிடத்தில் பிரத்தியக்ஷத்தன்மையின் அநுபவம் உண்டாகிறதில்லையோ, அதனிடத்தில் அயோக்கியத்தன்மையுமாகிய இவ்வுணர்ச்சி அநுமானத்தாலாதல் அர்த்தாபத்தியினாலாதல் உண்டாகின்றது. யோக்கியத்தன்மை அயோக்கியத்தன்மைகள் இவ்வாறு நையாயிகர்களுக்கும் ஒப்பத்தக்கனவாதல் வேண்டும். அவர்கள் மதத்தில் சுகாதிகளும் தர்மாதிகளும் ஆத்மாவின் தர்மமாம். அவற்றில் மனசையுக்த சமவாயசம்பந்தம் எல்லாவற்றோடும் மனதுக்கு இருக்கின்றது. என்றாலும் யோக்கியத்தன்மை இருத்தலால் சுகமுதலியவற்றின் மானச சாக்ஷாத்காரம் உண்டாகின்றது. யோக்கியத்தன்மை இன்மையால், தர்மாதிகளின் சாக்ஷாத்காரம் உண்டாகிறதில்லை. ஆதலால், யோக்கியத்தன்மை அயோக்கியத்தன்மைகள் சர்வ மதங்களிலும் அங்கீகரிக்கத் தக்கனவாம். இவ்வாற்றால் பிரத்தியக்ஷ யோக்கிய வஸ்துவுக்குப் பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தம் உண்டாகும்போது பிரத்தியக்ஷஞானம் உண்டாகின்றது.

இவ்வர்த்தத்தில் இச் சங்கையுளது:—பிரஹ்மகோசர ஞானம் பரோக்ஷ மாதலாகாது. ஏனெனின், பிரஹ்மத்துக்குப்

பிரமாதாவோடு சம்பந்தமின்மை யுளதாயின் புறப்பொருள் முதலியவற்றின் ஞானத்தைப்போல பிரஹ்மஞானமும்பரோக்ஷமாம். எப்போது அவாந்தர வாக்கியத்தால் சத்தியசொரூபம் ஞானசொரூபம் அநந்தசொரூபம் பிரஹ்மமாமென்னும் விருத்தி யுண்டாகின்றதோ, அக் காலத்திலும் பிரஹ்மத்துக்குப் பிரமாதாவோடு சம்பந்தம் இருக்கின்றது. ஆதலால், அவாந்தர வாக்கியத்தால் உண்டாகும் பிரஹ்ம ஞானமும் பிரத்தியக்ஷமே யாதல்வேண்டும். சித்தாந்தத்தில் அவாந்தர வாக்கியத்தா லுண்டாகும் பிரஹ்ம ஞானம் பிரத்தியக்ஷமன்று; பரோக்ஷமாம். அது முற்கூறிய விதத்தால் சம்பவியாது.

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—பிரத்தியக்ஷ லக்ஷணத்தில் விஷயத்திற்கு யோக்கியதை யென்னும் விசேஷணம் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே யோக்கியப் பிரமாணத்தால் உண்டாகுந் தன்மை ஞானத்துக்கு விசேஷணமாம்; ஆதலால், முற்கூறிய தோஷமின்று. ஏனெனின் பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடைய யோக்கிய விஷயம் யாதோ அதன் யோக்கியப் பிரமாணத்தால் உண்டாகும் ஞானம் பிரத்தியக்ஷஞான மெனப்படுகின்றது. இவ் விலக்கணத்தில் முற்கூறிய தோஷ மின்று; ஏனெனின், வாக்கியத்திற்கு இதுசுபாவமாம்:— சுரோதாவின் சொரூபத்தை அறிவிக்கும் பதம் வாய்ந்த வாக்கியத்தால் அபரோக்ஷஞான முண்டாகின்றது. சுரோதாவின் சொரூபத்தை அறிவிக்கும் பதமின்றிய வாக்கியத்தால் பரோக்ஷஞான முண்டாகின்றது. விஷயம் எதிர்முகப்பட்டுப் பிரத்தியக்ஷ யோக்கியமாய் இருக்கினும் சொரூபத்தை அறிவிக்கும் பதமின்றிய வாக்கியத்தால் அபரோக்ஷஞான முண்டாகின்றதில்லை.

எங்ஙனம்: தசமனை அறிவிக்கும் இருவகை வாக்கியங்களுள் ஒன்று "தசம னிருக்கின்றான்" என்னும் வாக்கியம்; மற்றையது "தசமன் நீ" என்னும் வாக்கியம். அவற்றுள் முதல் வாக்கியமோ சுரோதாவின் சொரூபத்தை அறிவிக்கும் பதம் இன்றியதாம். இரண்டாவது வாக்கியம் சுரோதாவின் சொரூபத்தை அறிவிக்கும் நீ யென்னும் பதத்தோடு கூடியதாம். அவற்றுள் முதல் வாக்கியத்தால் சுரோதாவுக்குத் தசமனது

பரோக்ஷ ஞானமே உண்டாகின்றது; வாக்கியத்தால் தோன்றும் ஞானத்துக்கு விஷயம் தசம புருஷன்: அவன் இரண்டு இடங்களிலும் அதிசந்நிஹிதனுய் இருக்கின்றுன். அதாவது, சொரூபத்துக்குப் பின்னமாய்ச் சம்பந்தம் உடையது யாதோ அது சந்நிஹிதமாம். தசம புருஷன் சுரோதாவின் சொரூபத்துக்கு வேறல்லன்; சுரோதாவின் சொரூபமே யாவன்; ஆதலால், அதிசந்நிஹிதனுவன்; பிரத்தியக்ஷ யோக்கியனும் ஆவன். பிரத்தியக்ஷ யோக்கிய மாகாவிடின் இரண்டாவது வாக்கியத்தாலும் தசமனது பிரத்தியக்ஷ ஞானம் உண்டாகலாகாது. இரண்டாவது வாக்கியத்தால் பிரத்தியக்ஷ ஞானம் உண்டாகின்றது; ஆதலால், பிரத்தியக்ஷ யோக்கியமாம். இவ்வாற்றுல் அதிசந்நிஹித (மிகச் சமீபித்தவ)னும் வாக்கிய ஜந்நிய பிரத்தியக்ஷ யோக்கியனுமான தசமனது பிரத்தியக்ஷ ஞானம் எந்த வாக்கியத்தினு லுண்டாகிறதில்லையோ, அந்த வாக்கியம் அயோக்கியமாம். இண்டாவது வாக்கியத்தினுல் அதே தசமனது அபரோக்ஷ ஞானம் உண்டாகின்றது. ஆதலால், இரண்டாவது வாக்கியம் யோக்கியமாம்.

வாக்கியங்களின் யோக்கியதை அயோக்கியதைகளில் வேற்றோர் ஏதுவோ இல்லை; சொரூபத்தை அறிவிக்கும் பதத்தோடு கூடிய தன்மையும், சொரூபத்தை அறிவிக்கும் பதம் இன்றிய தன்மையுமே யோக்கியதை அயோக்கியதைகளைச் சம்பாதிப்பனவாம். இவ்வாற்றுல் "தசமன் நீ" என்னும் வாக்கியமோ யோக்கியப் பிரமாணமாம். அதனுற் றோன்றுவது "தசமன் யான்" என்னும் பிரத்தியக்ஷஞானமாம். அங்ஙனமே "தசமன் இருக்கின்றுன்" என்னும் வாக்கியம் அயோக்கியப் பிரமாணமாம். அதனுற் றோன்றும் "தசமன் யாண்டோ இருக்கின்றுன்" என்னும் தசமனது ஞானம் பரோக்ஷமாம்.

அங்ஙனமே பிரஹ்மத்தை யறிவிக்கும் வாக்கியமும் இருவகையினதாம். "சத்திய ஞானனந்தம் பிரஹ்மம்" என்னுமியல்பினது அவாந்தர வாக்கியம்; "தத்துவமஸி" என்னும் இயல்பினது மகாவாக்கியம். அவாந்தர வாக்கியங்களில் கேட்பவனது சொரூபத்தை அறிவிக்கும் பதம் இல்லை. ஆதலால், பிரத்தியக்ஷ ஞானத்தை யுண்டுபண்ணுவதில் யோக்கியமாவது அவாந்தர வாக்கியமன்று. மகா வாக்கியங்களில் சுரோதாவின்

சொருபத்தை அறிவிக்கும் நீ யென்றல் முதலிய பதங்களிருக்கின்றன. ஆதலால், பிரத்தியக்ஷஞானத்தை யுண்டுபண்ணுவதில் யோக்கியமாவது மகாவாக்கியமாம். இவ்வாற்ருன் யோக்கியப் பிரமாணம் மகாவாக்கியமாம். அதனு லுண்டாகும் ஞானம் பிரத்தியக்ஷமாம். அயோக்கியப் பிரமாணம் "சத்திய ஞானனந்தம் பிரஹ்மம்" என்றல்முதலிய வாக்கியங்களாம். அவற்றினு லுண்டாகும் பிரஹ்மத்தின் ஞானம் பரோக்ஷமாம்.

அவாந்தர வாக்கியமும் இரு வகையினதாம். தத்பதார்த்தத்தை அறிவிப்பதொன்று; துவம் பதார்த்தத்தை அறிவிப்பதொன்று. அவற்றுள் தத்பதார்த்தத்தை அறிவிக்கும் வாக்கியமோ அயோக்கியமாம். "யாதொரு இந்த அந்தர் ஜோதி புருஷன்" என்றல்முதலிய துவம்பதார்த்தத்தை அறிவிக்கும் அவாந்தர வாக்கியமும் மகா வாக்கியங்களைப்போல் யோக்கியமாம்; அயோக்கியமன்று. ஏனெனின், கேட்பவன்து சொருபத்தை அறிவிக்கும் பதம் அவற்றில் இருக்கின்றது. ஆதலால், துவம்பதார்த்தத்தை அறிவிக்கும் அவாந்தர வாக்கியங்களினுலும் அபரோக்ஷஞானம் உண்டாகின்றது. ஆனல், அந்த அபரோக்ஷஞானம் பிரஹ்ம அபேதத்தைக் கோசரிப்பதன்ருகலின் பரம புருஷார்த்தத்தைச் சாதிப்ப தன்று; ஆனல், பரமபுருஷார்த்தத்தைச் சாதிப்பதாகிய அபேதஞான மெதுவோ அதனிடத்துப் பதார்த்தத்தைச் சோதித்தல் வாயிலாக உபயோகமுள்ளதாம். இவ்வாற்ருல் பிரஹ்மம் பிரமாதாவோடு சம்பந்தமுடையதுமாம்; யோக்கியமுமாம். என்ருலும் அயோக்கியமாகிய அவாந்தர வாக்கியங்கள் எவையோ அவற்ருல் பிரஹ்மத்தின் பரோக்ஷஞானம் சம்பவிக்கின்றது.

இங்ஙனம் கூறுவதில் வேறு சங்கை யுண்டாகின்றது:— பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடைய யோக்கிய விஷயம் யாதோ அதன் யோக்கியப்பிரமாண ஜந்நிய ஞானம் பிரத்தியக்ஷஞான மெனப்படுகின்றது. இங்ஙனம் கூறுவதில் சுகமுதலியவற்றின் பிரத்தியக்ஷத்தில் முற்கூறிய இலக்ஷணத்தின் அபாவம் இருக்கின்றது. ஏனெனின், சுகமுதலியவற்றின் பிரத்தியக்ஷத்தில் பிரமாணத்தால் ஆக்கப்படுந்தன்மை யின்மையால் யோக்கியப்பிரமாணத்தா லாக்கப்படுந்தன்மை எவ்வாற்ருனும் சம்பவியாது. ஆதலால், முற்கூறிய இலக்ஷணத்தில் அவ்வியாப்திதோஷ மிருக்கின்றது.

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—யோக்கியப் பிரமாண ஜந்நியத்தன்மைக்கு இலக்ஷணத்திற் பிரவேச மின்று; ஆனால், அயோக்கியப்பிரமாண அஜந்நியத்தன்மைக்குப் பிரவேசமுண்டு; ஆதலால், அவ்வியாப்தி யின்று. ஏனெனின், பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடைய யோக்கியவிஷயம் யாதோ, அதன் அயோக்கியப்பிரமாண அஜந்நியஞானம்பிரத்தியக்ஷஞானமெனப் படுகின்றது. இவ்வாற்றால் கூறிய அவாந்தர வாக்கிய ஜந்நிய பிரஹ்மஞானத்தின் நீக்கம் உண்டாகின்றது. முற்கூறியவாற் றாற் பிரஹ்மமாத்திரத்தை அறிவிக்கும் அவாந்தர வாக்கியம் அயோக்கியப்பிரமாணமாம். பிரஹ்ம மிருக்கின்றதென்னும் பரோக்ஷஞானம் அவற்றால் (அவாந்தரவாக்கியங்களால்) தோன்றுவதாம்; அஜந்நியமன்று. ஆதலால், பரோக்ஷஞானத்தில் இலக்ஷணஞ் செல்லுவதில்லை. சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் ஞானத்தின் சங்கிரகம் உண்டாகின்றது. ஏனெனின், சுக முதலியவற்றைக் கோசரிக்கும் ஞானம் எப் பிரமாணத்தானும் ஜந்நியமன்று; ஆதலால், அயோக்கியப் பிரமாணத்தால் அஜந்நியமாம். இந்திரிய ஜந்நிய கடாதிஞானமும், அங்ஙனமே மகா வாக்கிய ஜந்நியப் பிரஹ்மஞானமும் யோக்கியப்பிரமாண ஜந்நியமாயிருத்தலின் அயோக்கியப்பிரமாணத்தால் அஜந்நியமாம். ஆதலால், பிரத்தியக்ஷஞானத்திற்கு முற்கூறிய இலக்ஷணம் தோஷ மின்றியதாம்.

முற்பிரசங்க மிதுவாம்:—சுத்தாத்மகோசரப் பிரத்தியக்ஷப் பிரமை இருவகைத்தாம். ஒன்று பிரஹ்ம அகோசரம்; மற்றொன்று பிரஹ்மகோசரம். பிரஹ்மஅகோசரத்தைச் சொல்லிவந்தோம். மகாவாக்கிய ஜந்நியமாய் "யான் பிரஹ்மம்" என்பதாகப் பிரஹ்மத்தோடு அபின்னமான ஆத்மாவை விஷயஞ்செய்வது யாதோ, அது பிரஹ்மத்தைக் கோசரிக்கும் சுத்தாத்மகோசரப் பிரத்தியக்ஷப் பிரமையாம்.

"யான் பிரஹ்மம்" என்னும் ஞானத்தினை வாசஸ்பதி மனோஜந்நியமென்பர். பிறர் மதத்தில் இந்த ஞானம் வாக்கிய ஜந்நியமாம். அதனினும் இத்துணைப் பேத முண்டு. சம்க்ஷேப சாரீரகத்தின் சித்தாந்த மிதுவாம்:—மகாவாக்கியத்தினால் பிரஹ்மத்தின் பிரத்தியக்ஷஞானமே யுண்டாகின்றது. என்றும் பரோக்ஷ ஞானம் மகாவாக்கியத்தினா லுண்டாகிறதில்லை. பிற நூலாசிரி

யர் மதம் இதுவாம்:—விசாரத்தோடு கூடிய மகாவாக்கியத்தினுல் அபரோக்ஷஞான முண்டாகின்றது. விசாரமின்றிய வாக்கிய மாத்திரத்தினுல் பரோக்ஷஞான முண்டாகின்றது. எல்லோர் மதத்தினும் "யான் பிரஹ்மம்" என்னும் ஞானம் சுத்தாத்மகோசரமும் பிரஹ்மகோசரமுமாம்; அங்ஙனமே பிரத்தியக்ஷமுமாம். இவ் வர்த்தத்தில் ஒருவருக்கும் விவாத மின்று. சுத்தாத்ம கோசரப்பிரமைக்கு இரண்டுபேதம் கூறுவர். விசிஷ்டாத்ம கோசரப் பிரத்தியக்ஷப்பிரமைக்கு அநந்தபேத முண்டு. யான் அஞ்ஞன், யான் கர்த்தா, யான் சுகி, யான் துக்கி, யான் மனிதன் என்றல்முதலிய அநந்த பேத முண்டு. வாதிக்கப்படாத அர்த்தத்தை விஷயஞ் செய்யும் ஞானம் பிரமை யெனப்படும்; "யான் கர்த்தா" என்றல்முதலிய ஞானத்திற்கு "யான் கர்த்தாவல்லன்" என்றல்முதலிய ஞானத்தால் பாத முண்டாகின்றது. அதனைப் பிரமையென்று கூறுதல் பொருந்தாது. என்றாலும் சம்சாரதசையில் வாதிக்கப்படாத அர்த்தத்தினை விஷயஞ்செய்யும் ஞானம் யாதோ, அது பிரமை யெனப்படும். சம்சாரதசையில் முற்கூறிய ஞானத்திற்குப் பாதம் உண்டாகிறதில்லை; ஆதலால், பிரமையாம். இவ்வாற்றுல் ஆத்மகோசர ஆந்தரப் பிரத்தியக்ஷப் பிரமைக்குப் பேதம் கூறுவர்.

"என்னிடத்திற் சுக முளது, என்னிடத்திற் துக்க முளது" என்றல்முதலிய சுகாதிகோசரஞானமும் ஆத்மகோசரப் பிரத்தியக்ஷப்பிரமையாம்.

ஆனுல், "யான் சுகி, யான் துக்கி" என்றல்முதலிய பிரமையிலோ யானென்னும் பதத்திற்குப் பொருளாகிய ஆத்மா விசேஷியமாம்; சுகதுக்கமுதலியன விசேஷணமாம். "என்னிடத்துச் சுக முளது, என்னிடத்துத் துக்க முளது" என்றல் முதலிய பிரமையில் சுகதுக்கமுதலியன விசேஷியமாம்; ஆத்மா விசேஷணமாம். ஆதலால், "என்னிடத்துச் சுக முளது, என்னிடத்துத் துக்க முளது" என்றல்முதலிய ஞானத்தினை ஆத்மகோசரப் பிரத்தியக்ஷப்பிரமை யென்று கூறுவதில்லை; ஆனுல், சுகமுதலியன விசேஷியமா யிருத்தலின் அநாத்மகோசர ஆந்தரப் பிரத்தியக்ஷப்பிரமை யென்பர்.

வாசஸ்பதியின் மதத்தில் விசிஷ்டாத்ம ஞானமும், சுகாதி ஞானமும் மனோஜந்நியமாம். சித்தாந்தத்தில் அந்தக்காண

விசிஷ்டாத்மாவில் அந்தக்கரண பாகம் சாக்ஷிபாஸியமாம்; சேதனபாகம் சுயம்பிரகாசமாம். அங்ஙனமே சுகமுதலியன வும் சாக்ஷிபாஸியமாம். எந்த ஞானமும் மனோஜந்நியமன்று; ஆதலால், மனம் இந்திரியமன்று. இவ்வாற்றால் ஸ்மிருதிக்கு வேறாகிய யதார்த்த விருத்தியைப் பிரமை யென்பர். அதன் பேதத்தைக் கூறுவாம்.

ஸ்மிருதி வடிவமாகிய அந்தக்கரணத்தின் விருத்தியும் யதார்த் தம் அயதார்த்தமென்னும் பேதத்தால் இருவகைத்தாம். அவற் றுள் யதார்த்த ஸ்மிருதி இருவகையினதாம். ஒன்று ஆத்மஸ்மி ருதி; மற்றொன்று அநாத்மஸ்மிருதி. தத்துவமஸிமுதலிய வாக்கிய ஜந்நிய அநுபவத்தால் உண்டாகும் ஆத்ம தத்துவத் தின் ஸ்மிருதி யதார்த்த ஆத்ம ஸ்மிருதியாம்.

வியாவகாரிகப் பிரபஞ்சத்தின் மித்தியாத்துவ அநுபவ முண்டாய், அதன் சமஸ்காரத்தால் மித்தியாத்துவரூபமாக உண்டாகும் பிரபஞ்சத்தின் ஸ்மிருதி யதார்த்த அநாத்ம ஸ்மிருதியாம்.

அங்ஙனமே அயதார்த்த ஸ்மிருதியும் இருவகையினதாம். ஒன்று ஆத்மகோசர அயதார்த்த ஸ்மிருதி; மற்றையது அநாத்ம கோசர அயதார்த்த ஸ்மிருதி.

அகங்காரமுதலியவற்றில் ஆத்மத்தன்மைப் பிரம வடிவ மாகிய அநுபவத்தின் சம்ஸ்காரத்தால் அகங்காரமுதலியவற்றி லுண்டாகும் ஆத்மத்தன்மையின் ஸ்மிருதி ஆத்மகோசர அய தார்த்த ஸ்மிருதியாம். அங்ஙனமே ஆத்மாவினிடத்துக் கர்த் திருத்துவ அநுபவ சம்ஸ்காரத்தால் உண்டாகும் "ஆத்மா கர்த்தா" என்னும் ஸ்மிருதியும் ஆத்மகோசர அயதார்த்த ஸ்மிருதியாம்.

பிரபஞ்சத்தில் சத்தியத்தன்மைப் பிராந்தியின் சம்ஸ்காரத் தால் உண்டாகும் "பிரபஞ்சம் சத்தியம்" என்னும் ஸ்மிருதியும் அநாத்மகோசர அயதார்த்த ஸ்மிருதியாம். யதார்த்தம் அயதார்த்த மென்னும் பேதத்தால் விருத்தி இருவகையாகச் சொல்லப்பட் டது. ஸ்மிருதிக்கு வேறாகிய யதார்த்த விருத்தி பிரமை யெனப் பட்டது. யதார்த்த அநுபவஜந்நிய ஸ்மிருதி யதார்த்த மெனப் பட்டது. அயதார்த்த அநுபவஜந்நிய ஸ்மிருதி அயதார்த்த மெ

னப்பட்டது. அநுபவத்தில் யதார்த்தத்தன்மை பாதிக்கப்படாத பொருளார் லாகியதாம். பாதிப்படாதபொருளை விஷயஞ்செய்யும் அநுபவம் யதார்த்த மெனப்படுகின்றது. அதுவே பிரமையெனப் படுகின்றது. ஆதலால், பாதிக்கப்படாத பொருளின் அதீன மாகிய அநுபவத்தில் யதார்த்தத்தன்மை யிருக்கின்றது. ஸ்மிருதியில் யதார்த்தத்தன்மையும் அயதார்த்தத்தன்மையும் அநுபவத்தின் அதீனமாம். ஸ்மிருதிக்கு வேறாகிய ஞானத்தினை அநுபவ மென்பர். அதுவும் யதார்த்தம் அயதார்த்தமென்னும் பேதத்தால் இருவகையாம். யதார்த்த அநுபவமோ முன் கூறப்பட்டது. அயதார்த்த அநுபவத்தை நிரூபிப்பாம். அயதார்த்த ஸ்மிருதியின் நிரூபணமோ முன் சொல்லப்பட்டது. அதுவும் அநுபவத்தின் அயதார்த்தத்தன்மையின் அதீனமாம். ஆதலால், அயதார்த்த அநுபவத்தின் நிரூபணத்தைச் சொல்லுதல் வேண்டும்.

102. சம்சயவடிவமான பிரமத்தின் இலக்ஷணமும் பேதமும்

அயதார்த்த அநுபவம் இருவகைத்தாம்:—ஒன்று சம்சயவடிவம், மற்றொன்று நிச்சயவடிவம். அயதார்த்தத்தினையே பிரம மென்பர். சம்சயஞானமும் பிரமமாம். ஏனெனின், சுவ (தனது) அபாவாதி காணத்தில் தோற்று (அவபாஸமா) வதைப் பிரம மென்பர். சம்சயஞானமும் ஒன்றற்கொன்று விரோதமுள்ள இரண்டினை விஷயிப்பதாகின்றது. அவற்றுள் ஒன்றற்கபாவ முண்டாகுதலால் சம்சயத்தில் பிரமத்தி னிலக்ஷண மிருக்கின்றது. ஒரு விசேஷியத்திலுள்ள விரோதமான இரண்டு விசேஷணங்களின் ஞானம் சம்சய மெனப்படுகின்றது.

எங்ஙனம்: ஸ்தாணுவில் "ஸ்தாணுவோ அன்றோ?" என்னும் ஞான முண்டாகின்றது; அல்லது "ஸ்தாணுவோ, புருஷனோ?" என்னும்ஞானம் உண்டாகின்றது. அவ் விரண்டினையும் சம்சயமென்பர். ஆண்டு ஸ்தாணு விசேஷியம்; ஸ்தாணுத்தன்மையும் ஸ்தாணுத்தன்மையபாவமும் விசேஷணங்கள். இரண்டும் விரோதமுடையனவாம்; ஓரதிகரணத்தில் உடனிருக்கமாட்டா. ஆதலால், ஸ்தாணுவாகிய ஒரு விசேஷியத்தில் ஸ்தாணுத் தன்மை ஸ்தாணுத்தன்மையபாவ மென்னும் வடிவினவாய விரோதமுள்ள இரண்டு விசேஷணங்களின் ஞானமிருத்தலால்

முதற்சம்சயத்தில் இலக்ஷணம் சம்பவிக்கின்றது. அங்ஙனமே இரண்டாவது சம்சயத்திலும் இலக்ஷணம் சம்பவிக்கின்றது. ஏனெனின், ஸ்தாணு வடிவமான ஒரு விசேஷியத்தில் ஸ்தாணுத்தன்மை புருஷத்தன்மை வடிவினவாகிய விருத்தமான இரண்டு விசேஷணங்களின் ஞான மிருக்கின்றது. தாணுத்தன்மைக்கும் தாணுத்தன்மை அபாவத்திற்கும் ஒன்றற்கொன்று விரோத மிருத்தல்போல, தாணுத்தன்மை புருஷத்தன்மைகளுக்கும் விரோதம் அநுபவசித்தமாம். ஆதலால், முதற் சம்சயமோர் விருத்தமான பாவாபாவ மிரண்டினை விஷயிப்பதாம். அங்ஙனமே இரண்டாவது சம்சயம் விருத்தமான இரண்டு பாவங்களைக் கோசரிப்பதாம்.

நியாயநூல்களிலோ ஈதெழுதப்பட்டிருக்கின்றது:—பாவாபாவங்களைக் கோசரிப்பதே சம்சயஞானமாம். கேவலம் பாவத்தைக் கோசரிப்பது சம்சய மாகாது. யாண்டு "ஸ்தாணுவோ, புருஷனோ" எனச் சம்சய முண்டாகின்றதோ, ஆண்டும் தாணுத்தன்மை, தாணுத்தன்மையபாவம், புருஷத்தன்மை, புருஷத்தன்மையபாவம் என நான்கு கோடி (பக்ஷங்)க ளிருக்கின்றன. ஆதலால், இருகோடியினது நாற்கோடியினது என இருவகைச் சமுசய முளது. "தாணுவோ, அன்றோ" என்பது இருகோடியினதாகிய சம்சயமாம். "தாணுவோ, புருடனோ" என்பது நாற்கோடியினதாகிய சம்சயமாம். ஒரு தர்மியில் தோற்றுகின்ற தர்மத்தினைக் கோடி யென்பர். ஆதலாற் கேவலபாவத்தைக் கோசரிக்கும் சம்சயம் நியாயமதத்தில் அப்பிரசித்தமாம். எவ்வாற்றானும் சம்சயஞானம் பிரமவடிவமாம்.

இரண்டு விரோதமான விசேஷணங்கள் ஒன்றன்கண் இரா; ஒன்றற்கு அபாவமே உண்டாகும். எங்ஙனம்: ஸ்தாணுவில் ஸ்தாணுத்தன்மையும் ஸ்தாணுத்தன்மையி னின்மையும் இரா. ஆகலின், ஸ்தாணுத்தன்மை யபாவமின்றிய தாணுவில் தாணுத்தன்மையின் அபாவஞானம் பிரமவடிவமாம். ஆனால், ஒரு அம்சத்தில் சம்சயஞானம் பிரம மாகின்றது. சகல அம்சங்களினும் பிரமமாகிறதில்லை.

யாண்டு ஸ்தாணுவில் "ஸ்தாணுவோ, அன்றோ" என்னுஞ் சம்சய முண்டாகின்றதோ ஆண்டு அபாவ அம்சத்தில் பிரமமாம். யாண்டுப் புருஷனிடத்து "ஸ்தாணுவோ, அன்றோ"

என்னும் சம்சய முண்டாகின்றதோ, ஆண்டு அபாவ அம்சமோர் புருஷனிடத் திருக்கின்றது; ஸ்தாணுத்தன்மை அம்ச மில்லை. ஆதலால், பாவ அம்சத்தில் பிரம மிருக்கின்றது. இவ்வாற்றால் பாவாபாவகோசர சம்சய முண்டாகின்றது. அவற்றுள் ஒன்று அவசிய மிருக்கும்.

ஆதலாற் சம்சயஞானம் ஒரு அம்சத்தில் பிரம மாகின்றது. அன்றியும் விரோதமுள்ள உபயபாவகோசரத்தினையும் சம்சயமெனக் கொள்ளின் சகல அம்சங்களிலும் சம்சயத்திற்குப் பிரமத்துவம் சம்பவிக்கின்றது. எங்ஙனம்: "தாணுவா, புருடனா" என்னும் சம்சயத்தினை நாற்கோடிகளுடையதாகக் கொள்ளாது, இருகோடிகளுடையதாகவே கொள்ளல்வேண்டும். தாணுவுக்கும் புருடனுக்கும் வேறாகிய எப் பதார்த்தத்திலேனும் "தாணுவா, புருடனா" என்னும் சம்சய முண்டாயின், ஆண்டுச் சம்சயத்தின் தர்மியில் ஸ்தாணுத்தன்மை புருஷத்தன்மை யிரண்டும் இல்லை. ஆதலா லிரண்டின் ஞானமும் பிரமமாம்.

சம்சயத்தில் எது விசேஷியமாகின்றதோ, அது சம்சயத்தில் தர்மி யெனப்படுகின்றது. விசேஷணத்தினைத் தர்ம மென்பர். ஆதலால், ஒரு தர்மியில் விருத்தமாகிய நாநாதர்மங்களின் ஞானம் சம்சய மெனப்படுகின்றது. இந்த இலக்ஷணத்தோடு முற்கூறிய இலக்ஷணத்திற்குப் பேத மில்லை. ஆனால், இவ்வளவு பேத முண்டு:—முற்கூறிய இலக்ஷணத்தில் உபயபத மிருக்கின்றது. ஆதலால், நாற்கோடிகளையுடைய சம்சயத்தில் முற்கூறிய இலக்ஷணத்தின் அவ்வியாப்தி யிருக்கின்றது. ஏனெனின், நாற்கோடிகளையுடைய சம்சயத்தில் ஒரு விசேஷியத்தில் நான்கு விசேஷணங்கள் தோற்றுகின்றன. இரண்டு விசேஷணங்களில்லை. யாண்டு நான்கு உளதோ ஆண்டு மூன்றும் இரண்டும் அங்ஙனமே ஒன்று மிருக்கின்றன; அங்ஙனமாயினும் அதிக எண்ணால் குறைந்த எண்ணுக்குப் பாத முண்டாகின்றது. இதனாற்றான் ஓரிடத்து ஐந்துபிராஹ்மணரிருக்க, ஒருவன் நான்கு பிராஹ்மணரெனக் கூறின் அவனை மித்தியாவாதி (பொய்சொல்வோன்) என்பர். ஆதலால், குறைந்த எண் அதிக எண்ணிலடங்கியதாயினும் குறைந்த எண்ணின் வியவகார முண்டாகிறதில்லை. ஆதலால், இரண்டு பதத்தால் நிகழும் இலக்கணத்

திற்கு நாற்கோடியினையுடைய சம்சயத்தில் அவ்வியாப்தி யுண்டாகுதலான் நாநாவென்னும் பதம் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒன்றின் வேருகியவற்றை நாநா வென்பர். இரண்டு கோடிகளுடைய சம்சயத்தினைப்போல நான்குகோடிகளுடைய சம்சயமும் நான்கு தர்மங்களைக் கோசரிப்பதாயிருத்தலின் நாநாதர்ம கோசரமாம்; ஆதலால், அவ்வியாப்தி யில்லை. இவ்வாற்ருல் சம்சயமும் பிரமமாம்.

பிரமத்தின் பேதநிருபணத்திற்குப் பின் நிச்சயப் பிரமத்தின் இலக்கணத்தை விஸ்தாரமாய்க் கூறுவாம். சம்சய நிச்சய வடிவமாகிய பிரமம் அநர்த்தத்திற் கேதுவாமாகலின் நிவர்த்திக்கத் தக்கதாம். ஜிஞ்ஞாஸுவுக்கு நிவர்த்திக்கத்தக்க பிரமம் யாதோ, அதன் பேதத்தைக் கூறுவாம்:—சம்சய வடிவ பிரமம் இருவகைத்தாம். ஒன்று பிரமாண சம்சயம்; மற்ருென்று பிரமேய சம்சயம். பிரமாணகோசர சந்தேகம் பிரமாண சம்சயமெனப்படுகின்றது. அதனையே பிரமாணகத அசம்பாவனை யென்பர். "வேதாந்தவாக்கியம் அத்துவிதீயபிரஹ்மத்தில் பிரமாணமா, அன்ரு" என்பது பிரமாண சம்சயம். அதன் நிவிருத்தி சாரீரகத்தின் முதலத்தியாயத்தைப் படித்தலாலேனும் கேட்டலாலேனு முண்டாகின்றது. பிரமேயசம்சயமும் ஆத்மசம்சயம் அநாத்மசம்சய மென்னும் பேதத்தால் இருவகைத்தாம். அநாத்மசம்சயம் அநந்தவிதமாம். அதனைச் சொல்லுதலால் உபயோக மில்லை. ஆத்மசம்சயமும் அநேக வகைத்தாம்.

ஆத்மா பிரஹ்மத்தோடு அபின்னமா? அல்லது பின்னமா? அபின்னமாயினும் எப்போதும் அபின்னமா? அல்லது மோக்ஷகாலத்தின் மாத்திரமே அபின்னமா? எப்போதும் அபின்னமன்று. எப்போதும் அபின்னமாயினும் ஆநந்தமுதலிய ஐசுவரியமுடையதா? அல்லது ஆநந்தாதிகளின்றியதா? ஆநந்தமுதலிய ஐசுவரிய முடையதாயினும் ஆநந்தமுதலியன குணங்களா? அல்லது பிரஹ்மாத்மாவின் சொரூபமா? இவை முதலியனவாக தத்பதார்த்தாபின்ன துவம்பதார்த்தத்தில் அநேகவித சம்சயங்க ளிருக்கின்றன.

அங்ஙனமே கேவல துவம்பதார்த்த கோசர சம்சயமும் ஆத்மகோசர சம்சயமாம். ஆத்மா தேகாதிகளின் வேரு? அன்ரு?

வேறெனினும் அணுபரிமாணமா? மத்திமபரிமாணமா? அல்லது விபுபரிமாணமா? விபுவெனினும் கருத்தாவா? அகர்த்தாவா? அகர்த்தாவெனினும் ஒன்றற்கொன்று பின்னமாகிய அநேகமா? அல்லது ஏகமா? இவ்வாறு அநேக சம்சயம் கேவல துவம் பதார்த்த கோசரமாம்.

அங்ஙனமே கேவலம் தத்பதார்த்த கோசரமும் அநேகவகைச் சம்சயமாம். வைகுண்டமுதலிய உலக விசேஷங்களில் வசிக்கும் ஈசுவரன் பரிச்சின்னமான கைகால்முதலிய அவயவங்களோடு கூடிய சரீரியா? அல்லது சரீரமின்றிய விபுவா? சரீரமின்றிய விபுவெனினும் பரமாணுமுதலியவற்றை அபேக்ஷித்த ஜகத் கருத்தாவா? அல்லது நிரபேக்ஷ கருத்தாவா? பரமாணுமுதலியவற்றின் அபேக்ஷையின்றிய கருத்தாவெனினும் கேவல கருத்தாவா? அல்லது அபின்ன நிமித்தோபாதான வடிவ கருத்தாவா? அபின்ன நிமித்தோபாதான கருத்தாவெனினும் ஜீவர்கள் கருமத்தின் அபேக்ஷையின்றிய கருத்தாவாயிருத்தலின் விஷமமாகச் செய்தற்றன்மை முதலிய தோஷமுடையவரா? அல்லது ஜீவர்களது கருமத்தின் அபேக்ஷையுடைய கருத்தாவாயிருத்தலின் விஷமமாகச் செய்தற்றன்மை முதலிய தோஷமின்றியவரா? என்றல்முதலிய அநேகவித தத்பதார்த்த கோசர சம்சயங்களிருக்கின்றன. அவ்வெல்லாச் சம்சயமும் பிரமேயசம்சயமெனப்படும். அவற்றின் நிவிருத்தி மனனத்தா லுண்டாகின்றது. சாரீரகத்தினது இரண்டாவது அத்தியாயத்தின் அத்தியயனத்தினாலேனும் சிரவணத்தினாலேனும் மனனம் சித்திக்கின்றது. அதனாற் பிரமேயசம்சயத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது.

ஞானசாதனத்தின் சம்சயமும் மோக்ஷசாதனத்தின் சம்சயமும் பிரமேயசம்சயமாம். ஏனெனின், பிரமையின் விஷயத்தினைப் பிரமேய மென்பர். ஞானசாதனமும் மோக்ஷசாதனமும் பிரமையின் விஷயமாயிருத்தலின் பிரமேயமாம். ஆதலால், ஞானசாதனத்தின் சம்சயமும் மோக்ஷசாதனத்தின் சம்சயமும் பிரமேயசம்சயமாம். அதன் நிவிருத்தி சாரீரகத்தின் மூன்றாவது அத்தியாயத்தா லுண்டாகின்றது.

அங்ஙனமே மோக்ஷத்தின் சொரூபத்தினது சம்சயமும் பிரமேய சம்சயமாம். அதன் நிவிருத்தி சாரீரகத்தின் நான்கா

வது அத்தியாயத்தா லுண்டாகின்றது. சாரீரகத்தின் நான்கா வது அத்தியாயத்தில் முதலில் சாதன விசாரமே இருக்கின்றது; பின் பலவிசார மிருக்கின்றது. மோக்ஷத்தினைப் பலமென் பர். என்றாலும் நான்காவது அத்தியாயத்தில் சாதனவிசாரம் எவ்வளவி லிருக்கின்றதோ, அவ்வளவு நான்காவது அத்தியா யத்தோடு கூடிய மூன்றாவது அத்தியாயத்தால் சாதன சம்சய த்தின் நிவிருத்தி யுண்டாகின்றது. எஞ்சிய நான்காவது அத்தி யாயத்தால் பல சம்சயத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது.

103. நிச்சய வடிவமான பிரமஞானத்தின் இலக்ஷணம்

சம்சய நிச்சயபேதத்தால் பிரமஞானம் இருவகைத்தாம். சம்சயப் பிரமத்தின் நிரூபணஞ் செய்யப்பட்டது. நிச்சயப் பிர மத்தினைக் கூறுவாம் :—சம்சயத்தின் வேறாய ஞானத்தினை நிச் சய மென்பர். சுத்தித்தன்மைவடிவத்தால் சுத்தியின் யதார்த்த ஞானமும், இரஜதத்தன்மை வடிவத்தால் சுத்தியின் பிரம ஞானமுமாகிய இரண்டும் சம்சயத்தின் வேறாகிய ஞானமாயிருத் தலின் நிச்சய வடிவமாம். வாதிக்கப்படும் அர்த்தத்தை விஷய மாக வுடையதாய்ச் சம்சயத்தின் வேறாகிய ஞானம் எதுவோ அது பிரம நிச்சயமாம். சுத்தியில் இரஜத நிச்சயத்தின் விஷ யம் இரஜதமாம்; அது பாதிததாம். ஏனெனின், சம்சாரதசை யிற்றானே சுத்தியின் ஞானத்தால் இரஜதத்தின் பாத முண்டா கின்றது.

பிரஹ்மஞானமின்றி எதற்குப் பாத முண்டாகிறதில்லை யோ அது அபாதித மெனப்படுகின்றது.

பிரஹ்மஞான மின்றியே சுத்திமுதலியவற்றின் ஞானத் தால் எதற்குப் பாத முண்டாகின்றதோ அது பாதித மெனப்படு கின்றது.

அல்லது பிரமாதாவின் பாதமின்றி எதற்குப் பாத முண் டாகிறதில்லையோ அது அபாதித மெனப்படுகின்றது.

பிரமாதாவிருக்க எதற்குப் பாத முண்டாகின்றதோ அது பாதித மெனப்படுகின்றது.

அபாதிதம் இருவகைத்தாம். ஒன்றோ என்றும் அபாதிதமாம்; மற்றையது வியாவகாரிக அபாதிதமாம். எதற்கு எப்போதும்

பாத முண்டாகிறதில்லையோ அத்தன்மையது சேதனமாம். எவற்றிற்கு வியவகாரதசையில் பாத முண்டாகிறதில்லையோ அத்தன்மையன அஞ்ஞானமும், மகாபூதமும், அங்ஙனமே பௌதிகப் பிரபஞ்சமுமாம். சுகமுதலியன பிராதிபாஸிகமாம். என்றாலும் பிரஹ்மஞானமின்றிச் சுகமுதலியவற்றின் பாத முண்டாகிற தில்லை; ஆதலால் அபாதிதமாம். அவற்றின் ஞானம் பிரம மன்று. அங்ஙனமே பாதித அர்த்தமும் இருவகைத்தாம். ஒன்று வியாவகாரிக பதார்த்தாவச்சின்ன சேதனத்தின் விவர்த்தம்; மற்றையது பிராதிபாஸிக பதார்த்தாவச்சின்ன சேதனத்தின் விவர்த்தம். சுத்தியில் இரஜதம் வியாவகாரிக பதார்த்தாவச்சின்ன சேதனத்தின் விவர்த்தமாம். ஏனெனின், சுத்திரஜதத்தின் அதிஷ்டானம் சுத்தி அவச்சின்ன சேதனமாம். சுத்தி வியாவகாரிகமாம். சொப்பனத்தில் சுத்தி தோற்றி அதனிடத்து இரஜதப்பிரம முண்டாகுமாயின், அவ் விரஜதத்திற்குச் சொப்பனத்திற்றானே சுத்திஞானத்தால் பாத முண்டாயின், அந்த இரஜதத்திற்குச் சொப்பன சுத்தியவச்சின்ன சேதனம் அதிஷ்டானமாம். சொப்பனத்தின் சுத்தி பிராதிபாஸிகமாம். இவ்வாற்றால் பாதித பதார்த்தம் இருவகைத்தாம். அவற்றின் நிச்சயம் பிரமநிச்சய மெனப்படுகின்றது.

104. அத்தியாசத்தின் இலக்ஷணமும் பேதமும்

பிரமஞானத்தில் நூலாசிரியர்களது அநேகவித வாதங்களுள. அவர்கள் மதத்திற்கு விலக்ஷணமாகப் பாஷியகாரர் பிரமத்திற்கு அசாதாரண லக்ஷணம் கூறியிருக்கின்றனர்:—எத்தன்மைய பிரமத்தின் சொரூபத்தை அந்நியசாஸ்திரமுடையோர் மதித்திருக்கின்றார்களோ, அதனிடத்துக் கூறப்படும் இவ்விலக்கணம் சம்பவியாததலின் அசாதாரணமாம். பிறரினும் அசாதாரண லக்ஷணத்தைக் கூறுதலால் பாஷியகாரருக்குப் பிறரான் மதிக்கப்பட்ட பிரமத்தின் சொரூபத்தோடு அபிப்பிராய மின்மை யிருக்கின்றது. அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடைய அவபாசம் அத்தியாசமெனப்படும். யாண்டுச் சுத்தியில் இரஜதப்பிரமமுண்டாகின்றதோ, ஆண்டுச் சுத்திதேசத்தில் இரஜதம் உற்பத்தியாகின்றது. அதன் ஞானமும் தற்காலத்தைய இரஜதமுமாகிய இவ்விரண்டனையும் சித்தாந்தத்தில் அவபாசமென்றும், அத்தியாசமென்றும் கூறுவர். மற்றைய சாஸ்

திரங்களால் இரஜதத்தின் உற்பத்தி அங்கீகரிக்கப்படுகிறதில்லை. இஃது எல்லோரினும் விலக்ஷணத்தன்மையாம். சத்தியாதி வாதமொன்றில் இரஜதத்தின் உற்பத்தி அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் மதத்தினும் விலக்ஷணமாதலை மேற் கூறுவாம். வியாகரணத்தின்படி அத்தியாசபதத்திற்கும் அவபாசபதத்திற்கும் விஷயமும் ஞானமுமாகிய இரண்டும் வாச்சியமாம்.

ஆதலால், அர்த்தாத்தியாச ஞானாத்தியாசங்களின் பேதத்தால் அத்தியாச மிருவகைத்தாம். அர்த்தாத்தியாசம் அநேக விதமாம். சிலவிடத்துக் கேவலசம்பந்தமாத்திரத்தின் அத்தியாசமும், சிலவிடத்துச் சம்பந்த விசிஷ்ட சம்பந்தியின் அத்தியாசமும், சிலவிடத்துக் கேவல தர்மத்தின் அத்தியாசமும், சிலவிடத்துத் தர்மவிசிஷ்டதர்மியின் அத்தியாசமும், சிலவிடத்து அந்நியோந்நியாத்தியாசமும், சிலவிடத்து அந்நியதராத்தியாசமு மிருக்கின்றன.

அந்நியதராத்தியாசமும் இருவகைத்தாம். ஒன்று ஆத்மாவில் அநாத்மாத்தியாசம்; மற்றையது அநாத்மாவில் ஆத்மாத்தியாசமாம். இவ்வாறு அர்த்தாத்தியாசம் அநேக வகைத்தாம். முற்கூறிய லக்ஷணத்திற்கு யாண்டும் பொருத்த முண்டு. அங்ஙனமே முக்கிய சித்தாந்தத்திலோ சகல அத்தியாசத்திற்கும் அதிஷ்டானம் சேதநமாம். இரஜ்ஜுவில் சர்ப்பம் தோற்றுமாயின், ஆண்டும் இதுவென்னும் வடிவினதாகிய விருத்தியவச்சின்ன சேதநத்தோடு அபின்னமான இரஜ்ஜு அவச்சின்ன சேதநமே சர்ப்பத்தின் அதிஷ்டானமாம்; இரஜ்ஜு அதிஷ்டானமன்று. இவ்வர்த்தம் விசாரசாகரத்திற் தெளிவாயுளது. ஆண்டு சேதநத்தின் பாமார்த்தசத்தை யிருக்கின்றது; அல்லது அதன் உபாதியாகிய இரஜ்ஜு வியாவகாரிகமாயிருத்தலின் இரஜ்ஜு அவச்சின்ன சேதநத்தின் வியாவகாரிக சத்தை யிருக்கின்றது. இருவகையானும் சர்ப்பத்திற்கும் அதன் ஞானத்திற்கும் பிராதிபாஸிக சத்தையிருத்தலின் அதிஷ்டானத்தின் சத்தையினும் விஷமசத்தையுடைய அவபாசம் சர்ப்பமும் அதன் ஞானமுமாம். ஆதலால், இரண்டினையும் அத்தியாச மென்றும், அவபாச மென்றும் கூறுவர். ஞானத்தினையும் ஞானத்தின் விஷயத்தினையும் அவபாச மென்பர்.

இவ்வாறு யாண்டும் அத்தியாசத்திற்கு அதிஷ்டானம் சேதநமெனக் கூறின், அப்பொழுதோ அதிஷ்டானத்திற்குப் பரமார்த்த சத்தையும் அத்தியாசத்திற்குப் பிராதிபாஸிக சத்தையு மிருத்தலின், அதிஷ்டானத்தின் விஷமசத்தையுடையது அவபாசம் (ஞானமும் அதன் விஷயமும்) என்பது ஸ்பஷ்டமே யாம்.

இரஜதத்தின் அதிஷ்டானம் சுத்தியாம். இவ் வியவகாரம் உலகத்தி லுண்டாகின்றது. ஆதலால், அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் சுத்தியும் இரஜதத்தின் ஆசிரயமாம். ஏனெனின், சேதநத்தில் இரஜதத்தின் அதிஷ்டானத்தன்மையை அவச்சேதகம் செய்வது சுத்தியாயிருத்தலின், அதனிடத்து இரஜதத்தின் அவச்சேதகத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் சுத்தியினை இரஜதத்தின் அதிஷ்டானமெனக் கூறின், சுத்திக்கு வியாவகாரிகசத்தை யிருக்கின்றது; இரஜதத்திற்குப் பிராதிபாஸிக சத்தை யிருக்கின்றது. இதனாலும் அதிஷ்டானத்தினும் விஷமசத்தை யிருக்கின்றது. இவ்வாற்றால் சர்வ அத்தியாசங்களினும் ஆரோபிதத்தினும் அதிஷ்டானத்திற்கு விஷமசத்தை யிருக்கின்றது.

எந்தப் பதார்த்தத்தில் ஆதாரத்தன்மை தோற்றுகின்றதோ அது அதிஷ்டான மெனப்படுகின்றது. இவ் வாதாரத் தன்மை பரமார்த்தமா யிருக்குக; அல்லது ஆரோபிதமா யிருக்குக. பரமார்த்தமாய் ஆதாரம் உளதாயின் அது அதிஷ்டான மெனப்படுமென்னும் ஆக்கிரகம் இப் பிரசங்கத்தில் இல்லை. ஏனெனின், எங்ஙனம் ஆத்மாவினிடத்து அநாத்மாவின் அத்தியாச மிருக்கின்றதோ, அங்ஙனமே அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாச மிருக்கின்றது. அநாத்மாவில் ஆத்மாவின் பரமார்த்தமான ஆதாரத்தன்மை யில்லை; ஆனால், ஆரோபித ஆதாரத் தன்மை யிருக்கின்றது. ஆதலால், ஆதாரமாத்திரத்தினை இப் பிரசங்கத்தில் அதிஷ்டானமெனக் கூறினோம். யாண்டு அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாச மிருக்கின்றதோ ஆண்டு அதிஷ்டானம் அநாத்மாவாம். அதற்கு வியாவகாரிக சத்தையும், ஆத்மாவுக்குப் பாரமார்த்திக சத்தையு மிருக்கின்றனவாகலின் அதிஷ்டானத்தினும் விஷமசத்தை யுடையது அவபாசமாம்.

சங்கை சமாதானம்

ஆத்மாவிற் கதிஷ்டானம் அநாத்மாவெனக் கூறுதலால், ஆத்மா ஆரோபிதமென்பது பெறப்படுகின்றது. எது ஆரோபித மாகின்றதோ அது கற்பித மாகின்றது. அதனால் ஆத்மாவும் கற்பிதமாகும். ஆதலால், அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசம் இருக்கின்றதெனக் கூறுதல் பொருந்தாது. என்றாலும் பாஷியகாரர் சாரீரகத்தின் ஆரம்பத்தில் ஆத்மாநாத்மாக்களுக்கு அந்நியோந்நியாத்தியாசம் கூறியிருக்கின்றனர். ஆதலால், அநாத்மாவில் ஆத்மாவினது அத்தியாசத்தின் நிஷேதமோ பொருந்தாது. பரஸ்பர அத்தியாசத்தினை அந்நியோந்நியாத்தியாசமென்பர். ஆதலால், அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசத்தை அங்கீகரித்து முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் கூறுதல்வேண்டும்.

அச் சமாதானம் இவ்வாறும். அத்தியாசம் இருவகைத்தாம். ஒன்று சொரூபாத்தியாசம்; மற்றையது சம்சர்க்காத்தியாசம். எப் பதார்த்தத்தின் சொரூபம் அநிர்வசனீயமாக உண்டாகின்றதோ அதனைச் சொரூபாத்தியாச மென்பர். அது சுத்தியில் இரஜதத்தின் சொரூபாத்தியாசமும் ஆத்மாவில் அகங்காரமுதலிய அநாத்மாக்களின் சொரூபாத்தியாசமு மிருத்தல் போலவாம். அங்ஙனமே எப் பதார்த்தத்தின் சொரூபமோ வியாவகாரிகமாகவாவது பாரமார்த்திகமாகவாவது முதலிற் சித்தித்திருக்க, அநிர்வசநீய சம்பந்தம் உற்பத்தியாகின்றதோ அது சம்சர்க்காத்தியாச மெனப்படுகின்றது. எங்ஙனம்: முகத்தோடு கண்ணாடிக்கு முற்கூறிய விதமாக ஓர் சம்பந்தமு மில்லை. இரண்டு பதார்த்தங்களும் வியாவகாரிகமாம். ஆண்டுக் கண்ணாடியில் முகத்தின் சம்பந்தம் தோற்றுகின்றது. ஆதலால், அநிர்வசநீய சம்பந்தம் உற்பத்தியாகின்றது.

அங்ஙனமே இரக்த வஸ்திரத்தில் இரக்த படமென்னும் உணர்ச்சி யுண்டாகின்றது. இரக்த நிறமுடையது படமென்னும் உணர்ச்சியால் இரக்த நிறமுடைய பதார்த்தத்தின் தாதாத்மிய சம்பந்தம் படத்திற் காணுகின்றது. இரக்த நிறமுடையது குசும்பாத் திரவியமாகலின் இரக்த நிறமுடையதின் தாதான்மியம் குசும்பாத்திரவியத்தி லிருக்கின்றது; படத்தி லில்லை. இவ்வாற்றால் இரக்த நிறமுடைய குசும்பாத்திரவிய

மும் படமுமோர் வியாவகாரிகமாம். அவற்றின் தாதான்மிய சம்பந்தம் அநிர்வசநீயமாக உண்டாகின்றது.

அங்ஙனமே சிவப்புப் படிகமென்னும் உணர்ச்சியால் சிவப்பின் தாதான்மிய சம்பந்தம் படிகத்திற் காணுகின்றது. சிவப்பின் தாதான்மியம் புஷ்பத்தி லிருக்கின்றது; படிகத்தி லில்லை. இரக்தநிறமுடையதனைச் சிவப்பென்பர். இரக்தநிற முடையது புஷ்பமாம்; ஸ்டிபகமன்று. ஆதலால், ஸ்படிகத்தில் சிவப்பின் அநிர்வசநீய தாதான்மிய சம்பந்தம் உற்பத்தியாகின்றது. இவ்வாறு அநேக இடங்களில் சம்பந்தியோ வியவகாரிகமாக இருக்கின்றது. அவற்றின் சம்பந்தங்களின் ஞானம் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றது. அவற்றைச் சம்சர்க்காத்தியாசமென்பர்.

அங்ஙனமே சேதநத்திற்கு அகங்காரத்தில் அத்தியாசமில்லை. ஆனால், சேதநமோ பாரமார்த்திகமாம். அதன் சம்பந்தத்தின் அத்தியாசம் அகங்காரத்தி லிருக்கின்றது. ஆத்மத்தன்மை சேதநத்திலிருந்து, அகங்காரத்திற் தோற்றுகின்றது. ஆதலால், ஆத்மாவின் தாதான்மியம் சேதநத்தி லிருந்துகொண்டு அகங்காரத்திற் றோற்றுகின்றதாகலின் ஆத்மசேதநத்தின் தாதான்மிய சம்பந்தம் அகங்காரத்தில் அநிர்வசநீயமாம். அல்லது ஆத்மாவின்கண்ணுள்ள தாதான்மியத்தின் அநிர்வசநீய சம்பந்தம் அகங்காரத்தி லிருக்கின்றது. ஆதலாற் சேதநம் கற்பிதமன்று. ஆனல், சேதநத்தின் தாதான்மிய சம்பந்தம் அகங்காரத்திற் கற்பிதமாம். அல்லது ஆத்மசேதநத்தினது தாதான்மியத்தின் சம்பந்தம் கற்பிதமாம்.

அத்வைத நூல்களிற் கூறிய உதாரணங்களில் அந்நியதாக்கியாதி சொல்லப்பட்டிருக்கினும், பிரஹ்மவித்தியாபரணத்திற் கூறியபடி முழுவதும் அநிர்வசநீயக்கியாதியாகக் கொண்டு நிர்வாகம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்நியதாக்கியாதி பிரசித்தமன்று. விசாரசாகரத்திலும் அங்ஙனமே இந்நூலினும் முன் இது எழுதப்பட்டிருக்கின்றது. யாண்டு அதிஷ்டானத்தோடு ஆரோப்பியத்திற்குச் சம்பந்த முண்டாகின்றதோ ஆண்டு அந்நியதாக்கியாதியாம். அது வேறு நூலின்படி எழுதப்பட்டிருக்கின்றது. அதிஷ்டானத்தோடு ஆரோப்பியத்தின் சம்

பந்த முண்டாகுமிடத்து அந்நியதாக்கியாதியின் ஆக்கிரகமே உண்டாகுமாயின், அகங்காரத்திலும் சேதநத்தின் தாதான்மியம் அந்நியதாக்கியாதியாகத் தோற்றுகின்றது என்று கூறுதலில் ஓர் பாதகமு மின்று.

இவ்வாற்ருல் யாண்டுப் பாரமார்த்திக பதார்த்தத்தின் அபாவம் உளதாக அதன் தோற்றம் யாண்டு உண்டாகின்றதோ, ஆண்டுப் பாரமார்த்திக பதார்த்தத்தின் அநிர்வசநீய சம்பந்தமோர் வியாவகாரிக பதார்த்தத்தில் உற்பத்தியாகின்றது. அதன் ஞானமும் அநிர்வசநீயமாகவே உண்டாகின்றது. வியாவகாரிக பதார்த்தத்தின் அபாவம் உளதாகத் தோற்றம் யாண்டு உண்டாகின்றதோ, ஆண்டு அநிர்வசநீயமாகவே வேறு சம்பந்தி உற்பத்தியாகின்றது. சம்பந்தியின் ஞானமும் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றது. சிலவிடத்துச் சம்பந்தமாத்திரமும் சம்பந்தத்தின் ஞானமும் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றன. முழுவதுமே அத்தியஸ்தத்தின் அதிஷ்டானத்திலும் விஷமசத்தை அநிர்வசநீயசத்தையாம். ஆத்மாவின் அத்தியாசம் அநாத்மாவில் உண்டாகின்றது. ஆண்டும் அதிஷ்டானமாகிய அநாத்மா வியாவகாரிகமாம். அத்தியஸ்தம் ஆத்மாவன்று. ஆனல், ஆத்மாவின் சம்பந்தம் அநாத்மாவில் அத்தியஸ்தமாம்; ஆதலால் அநிர்வசநீயமாம்.

106. அநாத்மாவில் அத்தியஸ்தமாகிய ஆத்மாவிற்குப் பரமார்த்த சத்தையில் தாற்பரியம்

முன் இது கூறப்பட்டது. அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசம் உண்டாகின்றது. ஆண்டு அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை யிருத்தலால் விஷமசத்தையாம். பிரஹ்மவித்தியாபரணத்திலும் முற்கூறியவிடத்தில் அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தையே கூறப்பட்டிருக்கின்றது. அதன் தாற்பரியம் இதுவாம்:—சுத்த பதார்த்தத்தினும் விசிஷ்டம் பின்னமாம். ஆதலால், அநாத்மாவில் ஆத்மாவினது சம்பந்தத்தின் அத்தியாசம் சொல்லப்பட்டது. ஆண்டுச் சம்பந்த விசிஷ்ட ஆத்மாவிற்கே அத்தியாசமாம். சொரூபமாக ஆத்மா சத்தியமாமாகலின் அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்த சத்தை சொரூப திருஷ்டியாகக் கூறுகின்ருர். அத்தியஸ்தம் கற்பிதமாகின்றது.

ஆதலால், அநாத்ம சம்பந்த விசிஷ்டம் கற்பிதமாயினும் சுத்தம் கற்பிதமாகாது. ஏனெனின், சுத்தத்தினும் விசிஷ்டம் பின்னமாயிருத்தலின் விசிஷ்டத்தின் கற்பிதத்தன்மை சுத்தத்தில் உண்டாகிறதில்லை. கேவல ஆத்ம சம்பந்தத்திற்கு அத்தியாசத்தைக் கூறுதலினும் சம்பந்த விசிஷ்ட ஆத்மாவிற்கு அத்தியாசம் கூறுதலும், அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்த சத்தை கூறுதலுமே சிரேஷ்டமாம்.

ஏனெனின், கேவல சம்பந்தத்திற்கு அத்தியாசம் கூறின் அதிஷ்டானத்திற்கு ஆரோபத்தினும் விஷமசத்தை சம்பவியாது. ஏனெனின், ஆத்மாவின் சம்பந்தம் அந்தக்கரணத்தில் அத்தியஸ்தமாம். ஸ்புரணவடிவ சேதநத்தின் தாதான்மிய சம்பந்தம் கடமுதலியவற்றில் அத்தியஸ்தமாம்; கடம் ஸ்புரிக் (விளங்கு) கின்றது என்னும் வியவகாரம் கடத்தில் ஸ்புரண சம்பந்தத்தாற் றோற்றுகின்றதாகலின், சேதநத்தின் அதிஷ்டானமாகிய அந்தக்கரணமும் கடமுதலியனவும் வியாவகாரிகமாம். அவற்றுள் சேதநத்தின் சம்பந்தமும் வியாவகாரிகமாம்; பிராதிபாஸிகமன்று. சேதநத்தின் சம்பந்தம் பிராதிபாஸிகமாமாயின் பிரஹ்மஞான மின்றிப் பாதம் உண்டாதல்வேண்டும்; பாதம் உண்டாகிறதில்லை. ஆதலால், ஆத்ம சம்பந்தத்திற்கும் அதிஷ்டான அநாத்மாவிற்கும் வியாவகாரிகசத்தையிருத்தலின் விஷமசத்தை யின்மையால் அத்தியாசத்தின் லக்ஷணம் சம்பவியாது. ஆதலால், சம்பந்த விசிஷ்ட ஆத்மாவிற்கு அநாத்மாவில் அத்தியாஸமுளது. விசேஷிய பாகத்திற்குப் பரமார்த்த சத்தையிருத்தலால் விசிஷ்டத்திற்குப் பரமார்த்த சத்தை உண்டு. அதிஷ்டானத்திற்கு வியாவகாரிகசத்தை இருக்கின்றது. இதனால் இரண்டற்கும் விஷமசத்தை இருத்தலின் அத்தியாசத்தின் லக்ஷணம் சம்பவிக்கின்றது. சொப்பனத்திற்கு அதிஷ்டானம் சாக்ஷியாம். அதற்குச் சொரூபமாகப் பாரமார்த்திகசத்தை உண்டு. பதார்த்தங்களுக்குப் பிராதிபாஸிக சத்தை இருக்கின்றது. ஆதலால், அதிஷ்டானத்தின் விஷமசத்தை இருத்தலின் அத்தியாசத்தின் லக்ஷணம் சம்பவிக்கின்றது.

சத்தாசொரூபம் சேதநமாம். அதற்குப் பேதங் கூறுதல் சம்பவியாதெனினும் சேதந சொரூப சத்தையினும் சத்தை என்பது பின்னபதார்த்தமாம். அதனிடத்து உத்கர்ஷ அபகர்

ஷங்கள் (உயர்வு, தாழ்வுகள்) உண்டு. அதற்குப் பாரமார்த்திக வியாவகாரிகப் பிராதிபாஸிகமென மூன்று பேதங்கள் உண்டு. பிராதிபாஸிகத்திலும் உத்கர்ஷாபகர்ஷங்களுண்டு. சொப்பனத்திற் சில பதார்த்தங்கள் தோற்றுகின்றன; அவற்றிற்குச் சொப்பனத்திற்றானே பாதம் உண்டாகின்றது; எவற்றிற்கு ஜாக்கிரத்தில் பாதம் உண்டாகின்றதோ, அவற்றினும் சொப்பனத்தில் பாதிக்கப்படும் பதார்த்தங்களுக்கு அபகிருஷ்டசத்தை இருக்கின்றது. இவ்வாறு சேதந சொரூப சத்தைக்குப் பின்னமான சத்தையின் சொரூபம் "ஸத்யஸ்ய ஸத்யம் ப்ராணா வை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம் – சத்தியத்திற்குச் சத்தியம், பிராணன்கள் சத்தியம், அவற்றிற்கு இது சத்தியம்" என்று சுருதியில் எழுதப்பட்டிருக்கின்றது. இரஜதத்தின் சத்தினும் சுத்தியின் சத்தே உத்கிருஷ்டமாம். இது எல்லோருக்கும் அநுபவமாம். ஆதலால், உத்கர்ஷ அபகர்ஷமுடைய சத்தே சேதனத்தினும் பின்னமாம். இவ்வாறு அத்தியாசத்தின் இலக்கணம் சொல்லப்பட்டது.

107. அத்தியாசத்தின் வேறு இலக்கணம்

அத்தியாசத்தின் வேறு இலக்கணம் இதுவாம்:—தனது அபாவத்தி னதிகாணத்தில் அவபாசமாதலே அத்தியாச மென்பர். சுத்தியில் இரஜதத்தின் பாரமார்த்திக வியாவகாரிக அபாவமிருக்கின்றது. இரஜதம் அநிர்வசநீயமாம். ஆதலால், இரஜதாபாவத்தின் அதிகரணமாகிய சுத்தி எதுவோ அதனிடத்து இரஜதத்தின் பிரதீதியும் அதன் விஷயமு மிருத்தலான் இரஜதாவபாச மிருக்கின்றது; ஆதலால் அத்தியாசமாம். இவ்வாறு கற்பிதத்தின் அதிகாணத்தில் கற்பிதத்தின் அபாவமிருத்தலின் சகல அத்தியாசங்களினும் இவ் விலக்கணம் பொருந்துகின்றது.

108. ஒரு அதிகரணத்தில் பாவாபாவங்கட்கு விரோதமுளதெனும் சங்கையும் சமாதானமும்

ஒரு அதிகரணத்தில் பாவ அபாவங்களுக்கு விரோதமுண்டாகின்றது. சையோகமும் அதன் அபாவமும் ஒரு அதிகாணத்தில் மூலமுதலிய இட வேறுபாட்டா லிருக்கின்றன; ஓரிடத்திலிருப்பதில்லை. ஆதலால், ஒரு அதிகாணத்தில் பாவா

பாவங்கள் சம்பவியா. என்றாலும் பதார்த்தங்களின் விரோதம் அநுபவாநுசாரமாகச் சொல்லப்படுகின்றது. கேவல பாவா பாவங்களுக்கு விரோத மில்லை. ஆனால், கடத்துவ படத்துவ மிரண்டும் பாவமாம்; ஓர் அதிகாணத்தி விரா; அவற்றிற்கு விரோத முண்டு. திரவியத்தன்மைக்கும் கடத்தன்மைக்கும் விரோத மில்லை. அங்ஙனமே கடத்தின் அதிகரணமாகிய பூத லத்தில் சென்ற காலவிசிஷ்ட கடத்தின் அபாவ மிருக்கின்றது. ஆதலால், சுத்தமாகிய கடாபாவத்தோடு கடத்திற்கு விரோத மிருக்கின்றது. விசிஷ்ட கடாபாவத்தோடு கடத்திற்கு விரோத மில்லை. அங்ஙனமே சையோக சம்பந்தத்தாற் கடமுடைய பூதலத்தில் சமவாய சம்பந்தாவச்சின்ன கடாபாவ மிருக்கின் றது; அதனோடு கடத்திற்கு விரோத மில்லை. அங்ஙனமே சமான சத்தையுடைய பிரதியோகி யபாவம் ஒரு அதிகாணத்தி விருப்பதில்லை. விஷமசத்தையுடைய பிரதியோகிக்கு அபாவத் தோடு விரோத மில்லை. கற்பிதத்தின் அபாவத்திற்குப் பாரமார்த்திக சத்தை இருக்கின்றது. அல்லது வியாவகாரிகசத்தை இருக்கின்றது. கற்பிதத்திற்குப் பிராதிபாஸிகசத்தை இருக் கின்றது; ஆதலால், விரோத மில்லை.

யாண்டுச் சுத்தியில் ரஜதப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டு வியாவகாரிக ரஜத மில்லை. ஆதலால், இரஜதத்தில் வியாவகாரிக அபாவ மிருக்கின்றது. பாரமார்த்திக ரஜதமோ ஓரிடத்தும் இல்லாதிருத்தலின் இரஜதத்தின் பாரமார்த்திக அபாவம் கேவலாந்வயியாம். ஆதலால், சுத்தியில் ரஜதத்தின் பாரமார்த்திக அபாவமு மிருக்கின்றது. அநிர்வசநீய இரஜத மும் அதன் ஞானமும் ஏககாலத்தில் உற்பத்தியாகின்றன. ஒரே காலத்தில் இரண்டற்கும் நாச முண்டாகின்றது. ஆதலால், இரஜதம் பிராதிபாஸிகமாம். பிரதீதிகாலத்தில் எதன் சத்தை இருந்து, பிரதீதி சூனியகாலத்தில் இருப்பதில்லையோ, அதனைப் பிராதிபாஸிக மென்பர். இவ்வாற்றாற் பிரமஞானமும் அதன் விஷயமும் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றன. சத் தசத்துகளுக்கு விலக்ஷணமானதை அநிர்வசநீய மென்பர். அதன் அபாவத்தினை வியாவகாரிக மென்பர். ஆதலால், பிரதியோகி யபாவங்கட்குப் பரஸ்பரம் விரோத மில்லை. வியாவகாரிக அபா வத்திற்கு வியாவகாரிகப் பிரதியோகியோடு விரோத முண்டு.

109. அத்தியாசப் பிரசங்கத்தி லுண்டாகும் நான்கு சங்கைகள்

இப் பிரசங்கத்தில் நான்கு சங்கைகள் உண்டாகின்றன. முதற் சங்கை:—சொப்பனப் பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானம் சாக்ஷியா மென்பது முற்கூறப்பட்டது; அது சம்பவியாது. ஏனெனின், எவ் வதிஷ்டானத்தில் எது ஆரோபித மாகின்றதோ, அவ் வதிஷ்டானத்தோடு அது சம்பந்த முடையதாகக் காணப்படுகின்றது. எங்ஙனம்: சுத்தியில் ஆரோபிதம் இரஜதமாம். அது "இது இரஜதம்" என்பதாகச் சுத்தியின் இதந்தையோடு சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆத்மாவினிடத்துக் கர்த்திருத்துவமுதலியன ஆரோபிதமாம். அவை "யான் கர்த்தா" என்று சம்பந்தப்பட்டனவாகக் காணப்படுகின்றன. அங்ஙனமே சொப்பனத்தின் யானைமுதலியன சாக்ஷியில் ஆரோபிதமாயின், அவை "யான் யானை, என்னிடத்து யானை" என்றிவ்வாறு சாக்ஷியோடு சம்பந்தப்பட்டனவாகத் தோற்றுதல்வேண்டும்.

இரண்டாவது சங்கை இதுவாம்:—சுத்தியில் இரஜதாபாவம் வியாவகாரிகமும், பாரமார்த்திகமுமாமென்று முற்கூறியது பொருந்தாது. ஏனெனின், அத்வைத வாதத்தில் ஒரு சேதனமே பாரமார்த்திகமாம். அதனின் வேறாகியதைப் பாரமார்த்திகமெனக் கொள்ளின் அத்வைதவாதத்திற்கு ஆனியுண்டாகும். பாரமார்த்திக இரஜத மில்லையாகலின் பாரமார்த்திக இரஜதத்தின் அபாவ மிருக்கின்றதெனக் கூறுதலோ சம்பவிக்கும்; பாரமார்த்திக அபாவ மிருக்கின்றதெனக் கூறுதல் சம்பவியாது.

மூன்றாவது சங்கை யிதுவாம்:—சுத்தியில் அநிர்வசநீய இரஜதத்தின் உற்பத்தி நாச முண்டாகின்றனவென முற்கூறியது பொருந்தாது. ஏனெனின், இரஜதத்திற்கு உற்பத்தி நாசம் உளவெனின் கடத்தின் உற்பத்தி நாசங்களைப்போல இரஜதத்தின் உற்பத்தி நாசம் தோற்றுதல்வேண்டும். எங்ஙனம் கடத்தின் உற்பத்தி உண்டாகுங்காலத்துக் கடம் உண்டாகின்றதென்பதாகக் கடத்தின் உற்பத்தி தோற்றுகின்றதோ, கடத்தின் நாசம் உண்டாகும் காலத்துக் கடமழிந்தது என்பதாகக் கடத்தின் நாசம் தோற்றுகின்றதோ, அங்ஙனமே சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தி உண்டாகுங்காலத்து, இரஜதத்தின்

உற்பத்தி உண்டாயிற்றென்பதாக உற்பத்தி தோற்றுதல் வேண்டும்; இரஜதத்திற்கு ஞானத்தால் நாசமுண்டாயின், அப்போது இரஜதத்திற்குச் சுத்தி தேசத்தில் நாச முண்டாயிற்று என்பதாக நாசம் தோற்றுதல் வேண்டும். சுத்தியில் கேவல இரஜதம் தோற்றுகின்றது. அதன் உற்பத்தி நாசங்கள் தோற்றுவதில்லை. ஆதலால், பிற நூல்களின்படி அந்நியதாக்கியாதிமுதலியனவே நல்லனவாம். அநிர்வசநீயக்கியாதி சம்பவியாது.

நான்காவது சங்கை இதுவாம்:—சத்தசத்திற்கு விலக்ஷணமான அநிர்வசநீய இரஜதமுதலியன உற்பத்தியாகின்றன என்று முன் சொல்லப்பட்டது. அது முற்றும் அசங்கதமாம். சத்திற்கு விலக்ஷணம் அசத்தாம். அசத்திற்கு விலக்ஷணம் சத்தாம். சத்தின் விலக்ஷணமாம், அசத்தன்று என்று கூறுதல் விருத்தமாம். அங்ஙனமே அசத்தின் விலக்ஷணமாம், சத்தன்று என்று கூறுதலும் விருத்தமாம்.

110. முற்கூறிய நான்கு சங்கைகளின் சமாதானம்

அவற்றிற்கு முறையே இவை சமாதானமாம். முதற்சங்கையின் சமாதானம்:—சாக்ஷியில் சொப்பன அத்தியாச முண்டாகுமாயின், "யான் யானை, என்னிடத்து யானை" என்னும் உணர்ச்சி உண்டாதல்வேண்டும் என்னும் சங்கைக்கு இது சமாதானமாம்:—பூர்வ அநுபவத்தாற் றோன்றிய சம்ஸ்காரத்தினால் அத்தியாச முண்டாகின்றது. எங்ஙனம் பூர்வ அநுபவ முளதாகின்றதோ அங்ஙனமே சம்ஸ்கார முண்டாகின்றது. சம்ஸ்காரத்திற்குச் சமானமாக அத்தியாச முண்டாகின்றது. சகல அத்தியாசங்களுக்கும் உபாதானகாரணமாகிய அவித்தையோ சமானமாம். ஆனால், நிமித்தகாரணம் பூர்வ அநுபவத்தாற் றோன்றிய சம்ஸ்காரமாம்; அது விலக்ஷணமாம். எங்ஙனம் அநுபவ ஜந்நியசம்ஸ்கார முளதாகின்றதோ, அங்ஙனமே அவித்தையின் பரிணாம முண்டாகின்றது. எப் பதார்த்தத்தின் யானெனும் வடிவ ஞானத்தாற் றோன்றிய சம்ஸ்காரத்தோடு கூடிய அவித்தை உளதாகின்றதோ, அப் பதார்த்தத்தின் யானெனும் வடிவ அவித்தையின் பரிணாமவடிவ அத்தியாச முண்டாகின்றது. எப் பதார்த்தத்தின் எனதென்னும்

வடிவ அநுபவ ஜந்நிய சம்ஸ்காரத்தோடு கூடிய அவித்தை உளதாகின்றதோ, அப் பதார்த்தத்தின் எனதென்னும் வடிவ அவித்தையின் பரிணாமமாகிய அத்தியாசம் உண்டாகின்றது. எப் பதார்த்தத்தின் இதுவெனும் வடிவ அநுபவ ஜந்நிய சம்ஸ்காரத்தோடு கூடிய அவித்தை உளதாகின்றதோ, அப் பதார்த்தத்தின் இதுவெனும் வடிவ அவித்தையின் பரிணாமமாகிய அத்தியாச முண்டாகின்றது. சொப்பனத்தின் யானைமுதலிய வற்றினது பூர்வ அநுபவம் இதுவெனும் வடிவினதாகவே உண்டாயிருக்கின்றது; யானெனும் வடிவமுதலிய அநுபவம் உண்டாகவில்லை. இதனால் அநுபவ ஜந்நிய சம்ஸ்காரமும் யானைமுதலியவற்றைக் கோசரிக்கும் இதுவெனும் வடிவின தாகவே உண்டாகின்றது. ஆதலால், இது யானையென்னும் உணர்ச்சி உண்டாகின்றது; "என்னிடத்து யானை, யான் யானை" என்னும் உணர்ச்சி உண்டாகிறதில்லை. சம்ஸ்காரம் அநுமேயமாம். காரியத்திற் கநுகூலமான சம்ஸ்காரத்தின் அநுமிதி உண்டாகின்றது. சம்ஸ்காரத்தை உண்டுபண்ணுவ தாகிய முன் அநுபவமும் அத்தியாச வடிவமாம். அதை உண்டு பண்ணும் சம்ஸ்காரமும் இதுவெனும் வடிவினதாகவே உண்டா கின்றது. அத்தியாசம் பிரவாக அநாதியாம். ஆதலால், முதல் அநுபவத்தின் இதுவெனும் வடிவத்தன்மையில் ஓர் ஏதுவு மில்லை என்னும் சங்கை சம்பவியாது. ஏனெனின், அநாதி பக்ஷத்தில் ஓர் அநுபவமும் முதலி லில்லை. பூர்வ பூர்வங்களி னும் உத்தரம் யாவும் அநுபவமாம்.

அபாவத்தைப் பாரமார்த்திகமெனக் கொள்ளின் அத்து வைதத்திற்கு ஹானி யுண்டாகுமென்னும் இரண்டாவது சங் கைக்கு இது சமாதானமாம்:—சகல பதார்த்தங்களும் சித்தாந் தத்திற் கற்பிதமாம். அவற்றின் அபாவம் பாரமார்த்திகமாம், அது பிரஹ்மவடிவமாம். இது பாஷியகாரருக்குச் சம்மதம். இதில் யுக்தி மேற் கூறுவாம்; இக் காரணத்தால் அத்வைதத் திற்கு ஆனி யில்லை.

மூன்றாவது சங்கையின் சமாதானம்:—சுத்தியில் இரஜதத் தின் உற்பத்தி அங்கீகரிக்கின், உற்பத்தியின் உணர்ச்சி உண்டா தல்வேண்டு மேன்பதற்கு இது சமாதானமாம்:— சுத்தியில் தாதான்மிய சம்பந்தத்தால் இரஜதம் அத்தியஸ்தமாம். சுத்தி

யினது இதுவெனுந் தன்மையின் சம்பந்தம் இரஜதத்தில் அத்தியஸ்தமாம். ஆதலால் "இது இரஜதம்" என்பதாக இரஜத உணர்ச்சி உண்டாகின்றது. எங்ஙனம் சுத்தியினது இதுவெனுந் தன்மையின் சம்பந்தம் இரஜதத்தில் அத்தியஸ்தமோ, அங்ஙனமே சுத்தியில் முன் பெறப்பட்ட தன்மைத் தர்ம மிருக்கின்றது. இரஜதம் தோற்றுங் காலத்திற்கு முன் பெறப்பட்டுள்ளதைப் பிராக்சித்த மென்று (முன் பெறப்பட்டதெனக்) கூறுவர். இரஜத உணர்ச்சி காலத்திற்கு முன்னர்ப் பெறப்பட்டுள்ளது சுத்தியாம். இவ்வாற்றால் சுத்தியில் முன் பெறப்பட்ட தன்மைத் தரும மிருக்கின்றது. அதன் சம்பந்தத்தின் அத்தியாசமும் இரஜதத்தில் உண்டாகின்றது. இதனாற்றான் "இப்போதைய இரஜதம்" என்னும் உணர்ச்சி உண்டாகிறதில்லை. "முன் உண்டாகிய இரஜதத்தைப் பார்க்கின்றேன்" என்னும் உணர்ச்சி உண்டாகின்றது. இவ் வுணர்ச்சிக்கு விஷயம் முன் உண்டாகிய தன்மையாம். அது இரஜதத்தில் இல்லை. ஆனால், இரஜதத்தில் இப்போதுண்டாகிய தன்மை இருக்கின்றது. முன் உண்டாகிய தன்மை இரஜதத்தில் தோற்றுகின்றது. ஆண்டு இரஜதத்தில் அநிர்வசநீயமான முன் உண்டாகிய தன்மையின் உற்பத்தி அங்கீகரிக்கின் கௌரவ முண்டாகின்றது. சுத்தியினது முன் உண்டாகிய தன்மையின் உணர்ச்சி இரஜதத்தில் அங்கீகரிக்கின் அந்நியதாக்கியாதி அங்கீகரிக்கப்படுகின்றது. இத்தன்மையான இடத்தில் அந்நியதாக்கியாதியினை அங்கீகரித்து மிருக்கின்றார்கள். என்றாலும் சுத்தியின் முற்பெறப்பட்ட தன்மைத் தர்மத்தின் அநிர்வசநீய சம்பந்தம் இரஜதத்தில் உண்டாகின்றதென்னும் பக்ஷம் நலமுடையதாம். இவ்வாற்றால் சுத்தியின் முற்பெறப்பட்ட தன்மையினது சம்பந்தத்தின் உணர்ச்சியால் உற்பத்தி உணர்ச்சிக்குப் பிரதிபந்தம் உண்டாகின்றது. ஏனெனின், முற்பெறப்பட்ட தன்மை வர்த்தமான உற்பத்தி என்னு மிரண்டும் ஒன்றற்கொன்று விரோதிகளாம்.

யாண்டு முற்பெறப்பட்ட தன்மை உளதாகின்றதோ ஆண்டு அதீத உற்பத்தி உளதாகின்றது. யாண்டு வர்த்தமான உற்பத்தி உளதாகின்றதோ ஆண்டு முற்பெறப்பட்ட தன்மை இருப்பதில்லை. இவ்வாற்றாற் சுத்தியிலுள்ள முற்பெறப்பட்ட தன்மையினது சம்பந்தத்தின் உணர்ச்சியால் உற்பத்தியின்

உணர்ச்சிக்குப் பிரதிபந்த மிருத்தலின், இராஜதத்தின் உற்பத்தி உண்டாகியும் உற்பத்தியின் உணர்ச்சி உண்டாகிறதில்லை. இராஜ தத்தின் நாச முண்டாகுமாயின், அதன் உணர்ச்சி உண்டாதல் வேண்டும் என்றதற்கு இது சமாதானமாம்.

அதிஷ்டானத்தின் ஞானம் உண்டாகுமாயின் அப்போது இராஜதத்தின் நாசம் உண்டாகின்றது. அவ் வதிஷ்டான ஞானத் தால் இராஜதத்தின் பாதநிச்சயம் உண்டாகின்றது. சுத்தியில் மூன்று காலத்திலும் இராஜதமில்லை யென்னும் நிச்சயத்தினைப் பாத மென்பர். இத்தன்மைய நிச்சயம் நாச உணர்ச்சிக்கு விரோதியாம். ஏனெனின், நாசத்திற் பிரதியோகி காரண மாகின்றது. பாதத்தினால் பிரதியோகியின் என்று மின்மை தோற்றுகின்றது. எதன் என்றும் இல்லை யென்னும் உணர்ச்சி உண்டாகின்றதோ அதன் நாச உணர்ச்சி சம்பவியாது. அல் லது எவ்வாறு கடமுதலியவற்றிற்குத் தண்டமுதலியவற்றாற் பொடியாதல் வடிவினதாகிய நாசம் உண்டாகின்றதோ அவ் வாறு கற்பிதத்திற்கு நாச முண்டாகிறதில்லை. ஆனால், அதிஷ் டானத்தின் ஞானத்தினால் அஞ்ஞான வடிவ உபாதானத்தோடு கூடிய கற்பிதத்திற்கு நிவிருத்தி உண்டாகின்றது. அதிஷ்டான மாத்திரத்தின் எஞ்சுதலே அஞ்ஞானத்தோடு கூடிய கற்பிதத் தின் நிவிருத்தி யாகின்றது. அவ் வதிஷ்டானம் சுத்தியாம். அதன் அவசேஷ (எஞ்சுதல்) வடிவ இராஜதத்தின் நாசம் அநு பவ சித்தமாம். ஆதலால், இராஜதத்தினது நாசத்தின் உணர்ச்சி உண்டாகிறதில்லை என்று கூறுதல் சாகசத்தினாலாம்.

சத்தசத்திற்கு விலக்ஷண மென்று கூறுதல் விருத்தமா மென்னும் நான்காவது சங்கைக்கு இது சமாதானம்:—சொரூப மின்றியதனை சத்து விலக்ஷணமென்றும், இருக்கின்ற சொரூ பத்தினை அசத்து விலக்ஷணமென்றும் கூறின் விரோத முண்டா கின்றது. ஏனெனின், ஓரே பதார்த்தத்தில் சொரூபமின்றிய தன்மையும் சொரூபத்தோடு கூடிய தன்மையும் சம்பவியா. ஆத லால், சத்தசத்து விலக்ஷணத்திற்கு முற்கூறியது பொருளன்று. ஆனால், காலத்திரயத்திலும் எதற்குப் பாத முண்டாகிறதில்லை யோ அதனைச் சத்தென்பர். எதற்குப் பாத முண்டாகின்றதோ அது சத்துவிலக்ஷண மெனப்படுகின்றது. முயற்கோடு மலடி மைந்தன்போல சொரூப மில்லாததனை அசத்தென்பர். அதற்கு

விலக்ஷணமானது சோரூபமுடைய தாகின்றது. இவ்வாற்றால் பாதிக்கத்தக்க சொரூபமுடையது சத்தசத்து விலக்ஷணமென்னும் சொல்லிற்குப் பொருளாம். சத்துவிலக்ஷண மென்னும் சொல்லிற்குப் பாதயோக்கிய மென்பது பொருள். சொரூபமுடையதென்னும் இத்துணைப்பொருள் அசத்து விலக்ஷண மென்னும் சொல்லிற்காம்.

111. முற்கூறிய அத்தியாசத்தினது பேதத்தின் அநுவாதமும் அதில் உதாரணமும்.

இவ்வாறு யாண்டுப் பிரமஞான முண்டாகின்றதோ? ஆண்டு முழுவதும் அநிர்வசநீய பதார்த்தங்களின் உற்பத்தி உண்டாகின்றது. சிலவிடத்துச் சம்பந்தியின் உற்பத்தி உண்டாகின்றது. எங்ஙனம்: சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தி இருக்கின்றது. இரஜதத்தில் சுத்தியின்கண்ணுள்ள தாதான்மியத்தினது சம்பந்தத்தின் உற்பத்தி உண்டாகின்றது. சுத்தியின் கண்ணுள்ள சுவதாதான்மியத்திற்கு இரஜதத்தில் அந்நியதாக்கியாதி யில்லை. அங்ஙனமே சுத்தியில் முன் பெறப்பட்ட தன்மைத்தர்ம மிருக்கின்றது. அதன் அநிர்வசநீய சம்பந்தத்தின் உற்பத்தி இரஜதத்தில் உண்டாகின்றது. அதற்கும் அந்நிய தாக்கியாதி யில்லை.

இவ்வாற்றால் அந்நியோந்நியாத்தியாசத்திற்கும் இது உதாரணமாம். சம்பந்தாத்தியாசத்திற்கும் இது உதாரணமாம். சம்பந்தி அத்தியாசத்திற்கும் இது உதாரணமாம். அநிர்வசநீய வஸ்துவின் உணர்ச்சியை ஞானத்தியாச மென்பர். ஞானத்தின் அநிர்வசநீய விஷயத்தை அர்த்தாத்தியாச மென்பர். ஆதலால், ஞானத்தியாச அர்த்தாத்தியாசங்களுக்கும் இது உதாரணமாம். இரஜதத்துவ தர்ம விசிஷ்ட இரஜதத்தின் அத்தியாசம் சுத்தியிலிருக்கின்றது. ஆதலால், தர்மி அத்தியாசத்திற்கும் இது உதாரணமாம். யாண்டு அந்நியோந்நியாத்தியாச முண்டாகின்றதோ, ஆண்டு இரண்டற்கும் ஒன்றற்கொன்று சொரூபமாக அத்தியாச முண்டாகிறதில்லை. ஆனால், ஆரோபிதத்தின் அத்தியாசம் சொரூபமாக உண்டாகின்றது. சத்தியவஸ்துவின் தர்மம் அல்லது சம்பந்தம் அத்தியஸ்த மாகின்றது. சம்பந்தாத்தியாசமும் இரு வகைத்தாம். சிலவிடத்துத் தர்மத்தினது சம்பந்தத்தின் அத்தியாச முண்டாகின்றது.

எங்ஙனம்: முற்கூறிய உதாரணத்தில் சுத்தியின்கண்ணுள்ள இதுவெனுந் தன்மை வடிவினதாய தர்மத்தினது சம்பந்தத்தின் அத்தியாசம் இரஜதத்தி லிருக்கின்றது. "இரக்த பட" மென்னுமிடத்தில் குசும்பாவின்கண்ணுள்ள இரக்த வடிவமாகிய தர்மத்தினது சம்பந்தத்தின் அத்தியாசம் படத்தி லிருக்கின்றது. கண்ணாடியில் முகத்தினது சம்பந்தத்தின் அத்தியாச முண்டாகின்றது. அந்தக்கரணத்திற்கு ஆத்மாவினிடத்துச் சொரூபமாக அத்தியாச மிருக்கின்றது. அந்தக்கரணத்தில் ஆத்மாவின் அத்தியாசம் சொரூபமாக இல்லை. ஆனால், ஆத்மசம்பந்தத்தின் அத்தியாச மிருத்தலால் ஆத்மாவின் சம்சர்க்காத்தியாச மிருக்கின்றது. ஞானசொரூபம் ஆத்மாவாம்; அந்தக்கரண மன்று. ஞானத்தின் சம்பந்தம் அந்தக்கரணத்தில் தோற்றுகின்றது. ஆதலால், ஆத்மாவினது சம்பந்தத்தின் அத்தியாசம் அந்தக்கரணத்தி லிருக்கின்றது. அங்ஙனமே "கடம் விளங்குகின்றது, படம் விளங்குகின்றது" என்பதாக ஸ்புரண சம்பந்தம் எல்லாப் பதார்த்தங்களினும் தோற்றுகின்றது. ஆதலால், ஆத்ம சம்பந்தத்தின் அத்தியாசம் சகல பதார்த்தங்களினு மிருக்கின்றது.

ஆத்மாவில் ஒற்றைக்கண்ணுடைமை முதலிய இந்திரிய தர்மங்கள் தோற்றுகின்றன. ஆதலால், ஒற்றைக்கண்ணுடைமைமுதலிய தர்மங்களின் அத்தியாசம் ஆத்மாவில் இருக்கின்றது. இந்திரியங்களின் தாதான்மிய அத்தியாசம் ஆத்மாவினிடத்தி லில்லை. ஏனெனின், "யான் ஒற்றைக்கண்ணன்" என்னும் உணர்ச்சி உண்டாகின்றது. "யான் நேத்திரம்" என்னும் உணர்ச்சி உண்டாகிறதில்லை. ஆதலால், நேத்திரத்தின் தர்மமாகிய ஒற்றைக்கண்ணுடைமையின் அத்தியாசம் ஆத்மாவி லிருக்கின்றது; நேத்திரத்தின் அத்தியாச மில்லை. இது தர்மாத்தியாசத்திற் குதாரணமாம். நேத்திரமுதலிய சகல பிரபஞ்சத்தின் அத்தியாசமும் ஆத்மாவி லிருக்கின்றது. என்றாலும் பிரஹ்ம சேதனத்தில் சகல பிரபஞ்சத்தின் அத்தியாசமு மிருக்கின்றது. துவம்பதார்த்தத்தில் சகல பிரபஞ்சத்தின் அத்தியாசமு மில்லை. அவித்தைக்கு இத்தன்மைய அற்புத மகிமையுண்டு. ஒரே பதார்த்தத்திற்கு ஒரு தர்ம விசிஷ்டத்தின் அத்தியாச முண்டாகின்றது. மற்றைய தர்ம விசிஷ்டத்தின் அத்தியாச முண்டாகிறதில்லை.

எங்ஙனம்: பிராஹ்மணத்தன்மைமுதலிய தர்ம விசிஷ்ட சரீரத்தின் தாதான்மியாத்தியாசம் ஆத்மாவில் உண்டாகின்றது. சரீரத்தன்மை விசிஷ்ட சரீரத்தின் அத்தியாச முண்டாகிறதில்லை. இதனாற்றான் விவேகியும் "பிராஹ்மணன் யான், மனிதன் யான்" என்று வியவகரிக்கின்றான். "சரீரம் யான்" என்னும் வியவகாரம் விவேகிக் குண்டாகிறதில்லை. ஆதலால், அவித்தைக்கு அற்புத மகிமை இருத்தலின் இந்திரியங்களின் அத்தியாசமின்றி ஆத்மாவினிடத்து ஒற்றைக்கண் ணுடைமை முதலிய தர்மங்களி னத்தியாசம் சம்பவிக்கின்றது. இது தர்மாத்தியாசத்திற்கு உதாரணமாம். வேறொன்றை ஆசிரயித்ததாய்ச் சுதந்திரமின்றி இருப்பதனைத் தர்ம மென்பர். ஆதலால், சம்பந்தமும் தர்மமேயாம். அதன் அத்தியாசமும் தர்மாத்தியாசமேயாம்.

ஆனால் தர்மம் இருவகையாம்:—ஒன்றோ பிரதியோகி அநுயோகிகளது உணர்ச்சியின் அதீனமாகிய உணர்ச்சிக்கு விஷயமாகின்றது. சில தர்மம் அநுயோகிமாத்திரத்தினது உணர்ச்சியின் அதீனமாகிய உணர்ச்சிக்கு விஷயமாகின்றது. ஒருகால் அநுயோகியின் உணர்ச்சியின்றிக் கேவல தர்மத்தின் உணர்ச்சியும் உண்டாகின்றது. எங்ஙனம்: கடத்தன்மை முதலியவற்றின் உணர்ச்சியில் அநுயோகிமாத்திரத்தினது உணர்ச்சியின் அபேக்ஷை இருக்கின்றது. கடத்தன்மை நித்தியமாமென்றல்முதலிய வாக்கியஜந்நிய உணர்ச்சியில் அநுயோகிப் பிரதியோகிகளின் அபேக்ஷையு மில்லை. இவ்வாற்றால் இரண்டுவகைத் தர்ம முளது. அநுயோகிப் பிரதியோகிகளின் உணர்ச்சியின்றி எதன் உணர்ச்சி உண்டாகிறதில்லையோ, அத்தன்மைய தர்மத்தினைச் சம்பந்த மென்பர். கடத்தன்மை முதலியவற்றைக் கேவலதர்ம மென்பர்; சம்பந்தமென்று சொல்லுவதில்லை. இவ்வாற்றால் சம்பந்தாத்தியாசமும் தர்மாத்தியாசமேயாம். முற்கூறிய விதத்தாற் சகல பிரமத்திலும் இரண்டு இலக்கணங்கள் சம்பவிக்கின்றன. அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடைய அவபாசம் அத்தியாச மெனப்படும். அல்லது தனது அபாவாதிகரணத்தில் தனது அவபாசம் அத்தியாசமெனப்படுகின்றது. பிராந்திகாலத்தில் அநிர்வசநீய விஷயமும் அதன் ஞானமும் உற்பத்தியாகின்றன. ஆதலால், அத்தியாசத்திற்கு

இரண்டு லக்ஷணங்களும் சம்பவிக்கின்றன. ஆனால், பரோக்ஷம் அபரோக்ஷமென்னும் பேதத்தால் பிரமம் (பிராந்தி) இருவகைத்தாம். அபரோக்ஷப்பிரமத்தின் உதாரணமோ சொல்லப்பட்டது.

யாண்டு வந்நி இல்லாத இடத்தில் வந்நியின் அநுமிதி ஞான முண்டாகின்றதோ அது பரோக்ஷப்பிரமமாம். அது இவ்வாறுண்டாகின்றது:—மஹானஸத்துவம் (அடுக்களைத்தன்மை) வந்நியின் வியாப்பியமன்று. மஹானஸத்தில் அடிக்கடி வந்நிதேசத்தின் மஹானஸத்தன்மையின் வியாப்பியத்தன்மைப்பிரம முண்டாய்விடுகின்றது. ஆண்டு வந்நியின்றியகாலத்தில் இவ்வாறு அநுமானம் உண்டாகின்றது. "இந்த மஹானஸம் வந்நியுடைத்து, மஹானஸத்தன்மையால், முன்கண்ட மஹானஸம்போல" என்று இவ்வாறு மஹானஸத்தில் வந்நியின் அநுமிதி வடிவப் பிரமஞான முண்டாகின்றது. வஞ்சகனது வாக்கியத்தால் வந்நியின் சப்தப்பிரம முண்டாகின்றது. அவ்விரண்டும் பரோக்ஷஞானமாம்.

யாண்டுப் பரோக்ஷப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டு அநிர்வசநீய விஷயத்தின் உற்பத்தி அங்கீகரிக்கப்படுகிறதில்லை. ஆனால், அத்தேசத்தில் அசத்தாகிய வந்நியின் உணர்ச்சி உண்டாகின்றது. ஆதலால், அத்தியாச லக்ஷணத்தின் இலக்ஷியமோ பரோக்ஷப்பிரமமன்று. வந்நியின் அபாவாதிகரணத்தில் வந்நியின் உணர்ச்சி இருத்தலால் சுவ அபாவாதிகரணத்தில் அவபாசமாம். விஷயத்தினையும் ஞானத்தினையும் அவபாச மென்பர். வந்நியின் அபாவாதிகரணத்தில் வந்நியின் பரோக்ஷஞான வடிவ அவபாச மிருத்தலால் முற்கூறிய இலக்ஷணத்திற்கு அதிவியாப்தி உண்டாகின்றதெனினும் இலக்ஷணத்தில் அவபாச பதத்தால் அபரோக்ஷஞானத்தின் கிரகண மிருக்கின்றது. ஆதலால், பரோக்ஷப் பிரமத்தில் அத்தியாச லக்ஷணத்தின் அதிவியாப்தியில்லை.

யாண்டுப் பரோக்ஷப்பிரம முண்டாகின்றதோ, அந்த ஸ்தானத்தில் எவ்வாறு நையாயிகர்முதலியோர் அந்நியதாக்கியாதி முதலியவற்றால் நிர்வாகஞ் செய்கின்றனரோ, அதனின் விலக்ஷணமாகக் கூறுதலில் அத்வைதவாதிக்கு ஆக்கிரக மில்லை; அபரோக்ஷப்பிரமத்திற்றான் பாரிபாஷிக அத்தியாசம் வில

க்ஷணமாகக் கொண்டிருக்கின்றனர். ஏனெனின், கர்த்திருத்வ முதலிய அநர்த்தப்பிரமம் அபரோக்ஷமாம். அதனது சொரூபத்தில் ஞானத்தால் நிவர்த்திக்கப்படுந்தன்மையின் பொருட்டு அத்தியாசம் நிருபிக்கப்படுகின்றது. ஆதலால், அபரோக்ஷப் பிரமத்திற்கே திருஷ்டாந்தத்தன்மையின்பொருட்டு அத்தியாசத்தன்மையைப் பிரதிபாதித்தலில் ஆக்கிரகமாம். பரோக்ஷப் பிரமத்தில் பிறநூலினும் வேற்றுமை கூறுதலிற் பிரயோஜனமின்று. அபரோக்ஷப்பிரமத்தில் முற்கூறியபடி இலக்ஷணத்தின் பொருத்த முண்டாகின்றது.

112-136. சித்தாந்தசம்மதமான அநிர்வசநீயக் கியாதியின் கிரமம்

112. சாம்பிரதாயிக மதம்

சித்தாந்தத்தில் அநிர்வசநீயக்கியாதி யுளது. அதன் கிரமம் இது வரம்:—யாண்டு இரஜ்ஜுமுதலியவற்றில் சர்ப்பமுதலியவற்றின் பிரம முண்டாகின்றதோ, ஆண்டு அதிஷ்டானத்தின் சாமானிய ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவாம். ஆதலால், இரஜ்ஜுவின் இதுவெனும் வடிவம் சாமானியஞானமாம். அச் சாமாநிய ஞானம் தோஷத்தோடு கூடிய நேத்திரமாகிய பிரமாணத்தால் உற்பத்தியாகின்ற தாகலின் பிரமையாம். அந்தத் தோஷத்தோடு கூடிய நேத்திரஜந்நிய இதுவெனும் வடிவவிருத்தி அவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அவித்தையின் பரிணமம் சர்ப்பஞான மாகின்றது. அதனை ஞானுபாச மென்பர். தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்கு இரஜ்ஜுவோடு சம்பந்த முண்டாகவே அந்தக்கரணத்தின் இதுவெனும் வடிவ விருத்தியோ இரஜ்ஜுதேசத்திற் சென்றது. அதனால் பிரமாத்திரு சேதனம் இதுவென்பதின் அவச்சின்ன சேதனம் என்பவற்றின் உபாதி ஓரிடத்திருத்தலால் பிரமாத்திருசேதனத்தோடு இதுவென்பதின் அவச்சின்ன சேதனத்திற்குப் பேத மிருப்பதில்லை. ஆதலால், இரச்சுவின் சாமானிய இதுவெனும் வடிவம் பிரத்தியக்ஷமாம். பிரத்தியக்ஷவிஷயத்தின் இதுவெனும் வடிவ ஞானமும் பிரத்தியக்ஷமாம்.

எந்த விஷயத்திற்குப் பிரமாத்திரு சேதனத்தோடு அபேத முண்டாகின்றதோ அவ் விஷயம் பிரத்தியக்ஷ மெனப்

படுகின்றது. பிரத்தியக்ஷ விஷயத்தின் ஞானம் பிரத்தியக்ஷ மெனப்படுகின்றது. அல்லது பிரமாணசேதனத்தோடு விஷய சேதனத்திற்குள்ள அபேதமே ஞானத்தின் பிரத்தியக்ஷத் தன்மைக்குப் பிரயோஜனமெனின், முற்கூறிய ஸ்தலத்தில் பிரமாத்திரு சேதனத்தின் அபேதமும் விருத்திவாயிலாக உண்டாயிருக்கின்றது. ஆதலால், விருத்திரூப பிரமாண சேத னத்திற்கு விஷயசேதனத்தோடுள்ள அபேதமும் அயாதித மாம்.

எங்ஙனம்: தடாக ஜலத்திற்கு வாய்க்காலின் வழியாய் வயல்ஜலத்தோடு அபேத முண்டாகின்றது; வாய்க்கால் ஜலத் திற்கும் வயல்ஜலத்தோடு அபேத முண்டாகின்றது. ஈண்டுத் தடாகஜலத்திற்குச் சமானம் பிரமாத்திரு சேதனம். வாய்க் காலுக் கொத்தது விருத்தி. வாய்க்கால் ஜலத்திற்கு ஒத்தது விருத்திசேதனம். வயலுக் கொத்தது விஷயம். வயலின்கண் ணுள்ள ஜலத்திற்கொத்தது விஷயசேதனம். முற்கூறிய திருஷ் டாந்தத்தால் விஷயசேதனத்திற்கோ பிரமாத்திரு சேதனத் தோடு அபேதம் சம்பவிக்கின்றது. ஆனால், பிரமாத்திருசேத னத்தோடு கடமுதலிய விஷயங்களுக்கு அபேதம் சம்பவிக்கிற தில்லை.

எங்ஙனம்: தடாக ஜலத்தோடு வாய்க்கால் வழியாய் வயல் ஜலத்திற்கு அபேதம் உண்டாகின்றது. பார்த்திவமாகிய வய லுக்குத் தடாகஜலத்தோடு அபேத முண்டாகின்றதில்லை; ஆதலால், கடமுதலிய விஷயங்களின் பிரத்தியக்ஷத்தில் பிர மாத்திரு சேதனத்தோடு அபேதமாதல் ஏதுவாமென்று கூறி யது சம்பவியாது. என்றாலும் பிரமாத்திரு சேதனத்தோடு அபேதமாதல் விஷயத்தின் பிரத்தியக்ஷத்தன்மைக்கு ஏதுவா மென்று கூறுதலால் பிரமாத்திரு சேதனத்திற்கும் விஷயத்திற் கும் ஏகத்துவம் சொல்லக் கருதியதன்று. ஆனால், பிரமாத்திரு சேதனத்தின் சத்தையினும் விஷயத்திற்கு வேறு சத்தை யில்லை; பிரமாத்திரு சேதனத்தின் சத்தையே எந்த விஷயத் திற்குச் சத்தை ஆகின்றதோ அவ் விஷயம் பிரத்தியக்ஷமாகின்ற தென்னும் பொருள் சொல்லக் கருதியதாம். கடத்தின் அதிஷ் டானம் கடாவச்சின்ன சேதனமாம். இரஜ்ஜுவின் அதிஷ்டா னம் இரஜ்ஜு அவச்சின்ன சேதனமாம். இவ்வாற்றாற் சகல

விஷயங்களுக்கும் அதிஷ்டானம் விஷயாவச்சின்ன சேதனமாம். அதிஷ்டானத்தின் சத்தைக்கு வேறாக அத்தியஸ்தத்திற்குச் சத்தை இல்லை. ஆனால், அதிஷ்டானத்தின் சத்தையே அத்தியஸ்தத்தின் சத்தையாகின்றது. ஆதலால், விஷயாவச்சின்ன சேதனத்தின் சத்தையினும் வேறாகிய சத்தை விஷயத்திற்கில்லை. அந்தக்கரணத்தின் விருத்திவாயிலாகப் பிரமாத்திரு சேதனத்திற்கு விஷயசேதனத்தோடு அபேத முண்டாயின் அப்போதும் பிரமாத்திருசேதனமும் விஷயசேதனத்தோடு அபின்னமாய் விஷயத்திற்கு அதிஷ்டான மாகின்றது. ஆதலால், அபரோக்ஷவிருத்தியின் விஷயத்திற்கு அதிஷ்டானமாகிய பிரமாத்திருசேதனம் எதுவோ அதன் சத்தையினும் விஷயத்திற்கு வேறு சத்தை இல்லாமையே பிரமாத்திரு சேதனத்தோடு விஷயத்திற்கு அபேதம் என்று சொல்லப்படுகின்றது. அது முற்கூறியபடி சம்பவிக்கின்றது. இதனாற்றான் அபரோக்ஷ ஸ்தலத்தில், விஷயமாகிய இடத்தில் விருத்தியின் போக்குச் சொல்லப்பட்டது.

எங்ஙனம் வாய்க்காலின் சம்பந்தமின்றித் தடாகஜலத்திற்கும் வயல்ஜலத்திற்கும் ஏகத்துவ முண்டாகிறதில்லையோ, அங்ஙனமே விருத்தி சம்பந்தமின்றிப் பிரமாத்திரு சேதனத்திற்கும் விஷயசேதனத்திற்கும் ஏகத்துவ முண்டாகிறதில்லை. ஆதலால், பரோக்ஷஞான காலத்தில் பிரமாத்திருசேதன விஷயசேதனங்களின் பேதத்தால் பிரமாத்திருசேதனத்தின் பின்னசத்தை யுடையது விஷயமாயிருத்தலின் பிரமாத்திரு சேதனத்தின் அபின்னசத்தையுடையது விஷய மாகாது. அங்ஙனமே விருத்தி வெளிப்படுதலின்றி அபரோக்ஷஞான காலத்தினும் பின்னசத்தையுடையது விஷயமாகும். ஆதலால், விஷய தேசத்தில் விருத்தியின் வெளிப்படுதல் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாற்றால் "இது சர்ப்பம் இது இரஜதம்" என்றல்முதலிய அபரோக்ஷப் பிரமஞானத்தின் உற்பத்தி யுண்டாகின்றது. ஆண்டுப் பிரமத்தினும் அவ்வியவஹித பூர்வ காலத்தில் பிரமத்திற்கு ஹேது அதிஷ்டானத்தின் சாமானிய ஞானமாகின்றது. அது பிரத்தியக்ஷரூபப்பிரமை யாகின்றது. அதனால் சர்ப்பமுதலிய விஷயமும் அதன் ஞானமும் உற்பத்தியாகின்றன வென்பது சாம்பிரதாயிகமதமாம்.

113. முற்கூறிய அநிர்வசநீயக்யாதி வடிவமாகிய அர்த்தத்தில் சங்கையும், சம்க்ஷேப சாரீரகத்தின் சமாதானமும்.

சங்கை:—ஆனால், அபரோக்ஷப் பிரமையினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி நியமமாக உண்டாகின்றது. இவ் வார்த்தை எட்டாவது பிரகாசத்தில் பிரதிபாதனம் செய்யப்படும். ஆதலால், இரஜ்ஜு சுத்தி முதலியவற்றின் இதுவெனும் வடிவ அபரோக்ஷப்பிரமையினாலும், விஷயசேதனத்தினது அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாயின், உபாதானத்தின் அபாவத்தால் சர்ப்பமுதலியன அவற்றின் ஞானமென்பவற்றின் உற்பத்தி சம்பவியாது.

இதற்குச் சமாதானம் சம்க்ஷேபசாரீரகத்தை அநுசரித்தவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்:—இதுவெனும் வடிவவிருத்தியினால் விஷயத்தின் இதுவெனும் அம்சத்தினது அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. இரஜ்ஜுத்தன்மை சுத்தித்தன்மை முதலிய விசேஷ அம்சங்களினது அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. இரஜ்ஜுத்தன்மை சுத்தித்தன்மை முதலிய விசேஷ அம்சங்களின் ஞானத்தினாலேயே அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகுதலால் விசேஷ அம்சத்தின் அஞ்ஞானமே அத்தியாசத்திற்கு ஏதுவாம். சாமாநிய அம்சத்தின் அஞ்ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவன்று. சாமாநிய அம்சத்தின் அஞ்ஞானமும் அத்தியாசத்திற்கு ஏதுவாகுமாயின், இதுவெனும் வடிவ சாமாநியஞானத்தினாலும் அத்தியாசத்திற்கு நிவிருத்தி உண்டாதல்வேண்டும்.

ஏனெனின், எதன் அஞ்ஞானத்தினால் பிரமம் உண்டாகின்றதோ, அதன் ஞானத்தால் நஷ்டமாமென்பது நியமம். ஆதலால், இதுவெனும் அம்சத்தினது அஞ்ஞானத்தின் அபேக்ஷை அத்தியாசத்தி லில்லை. ஆனாலும், இதுவெனும் வடிவ நேத்திரப்பிரமையின் அபேக்ஷை அபரோக்ஷ அத்தியாசத்தி லிருக்கின்றது. ஏனெனின், இரஜ்ஜுமுதலியவற்றோடு நேத்திரத்தின் சையோக முண்டாகுமாயின் சர்ப்பமுதலியவற்றின் அபரோக்ஷப்பிரம முண்டாகின்றது. நேத்திரத்தின் சையோகமின்றி உண்டாகிறதில்லை. ஆதலால், நேத்திர ஜந்நிய அபரோக்ஷப்பிரமைவடிவமாகிய அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானமே அத்தியாசத்திற்கு ஏதுவாம். ஆண்டு வேறு விதமாக

வோ சாமாநியஞானத்தின் உபயோகம் அத்தியாசத்திற் சம்பவிக்கிறதில்லை. அத்தியாசத்தின் உபாதானமாகிய அஞ்ஞானத்தின் க்ஷோபம் சாமானிய ஞானத்தினால் உண்டாகின்றதென்று மதித்தல் வேண்டும். இவ்வாற்றால் அதிஷ்டானத்தின் சாமாநியஞானம் அத்தியாசத்திற் காரணமாயிருத்தலின், இதுவெனுந் தன்மை அம்சத்தின் அஞ்ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவன்று.

114. கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹ பட்டோபாத்தியாயரதுமதத்தின் அநுவாதமும் அநாதரமும்

கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹபட்டோபாத்தியாயர் அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானம் அத்தியாசத்தில் ஏதுவாதலை நிஷேதித்திருக்கின்றனர். அதிஷ்டானத்தோடு நேத்திரசையோக முண்டாகுமாயின் சர்ப்பாதிகளின் அத்தியாச முண்டாகின்றது. நேத்திரசையோக முண்டாகாவிடின் சர்ப்பாதிகளின் அத்தியாச முண்டாகிறதில்லை. இவ்வாற்றால் இந்திரிய அதிஷ்டானங்களினது சையோகத்தின் அந்வய வெதிரேகங்களால் எந்தச் சாயாநிய ஞானம் அத்தியாசத்திற்குக்-காரணமாதல் முன் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவ் வந்வய வெதிரேகங்களாலும் இந்திரிய அதிஷ்டானங்களின் சையோகமே அத்தியாசத்திற்குக் காரணமாதல் பெறப்படுவதாகின்றது. இந்திரிய சையோகஜந்நிய சாமாநிய ஞானம் அத்தியாசத்திற்குக் காரணமாதல் பெறப்படுவதில்லை.

ஏனெனின், அந்வய வெதிரேகங்களால் காரணத்தன்மையின் நிச்சய முண்டாகின்றது. நேரே காரணத்தன்மை சம்பவிக்குமிடத்துப் பரம்பரையாகக் காரணத்தன்மை கற்பித்தல் அயோக்கியமாம். ஆதலால், இந்திரிய சையோகத்தின் அந்வய வெதிரேகங்களால் அத்தியாசத்தில் இந்திரிய அதிஷ்டானங்களின் சையோகத்திற்கே நேர் காரணத்தன்மை உசிதமாம். அதிஷ்டானத்தின் சாமாநியஞானவாயிலாக இந்திரிய சையோகத்திற்குக் காரணத்தன்மை கூறுதல் உசிதமன்று. அதிஷ்டானத்தின் சாமாநியஞானத்தால் அவித்தையில் க்ஷோபம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுபோல அதிஷ்டான இந்திரியங்களின் சையோகத்தினாலேயே க்ஷோபம் அங்கீகரித்தல்வேண்டும். அதிஷ்

டானத்தின் சாமாநியஞானத்தினை அத்தியாசத்தில் ஏதுவன்றெனக்கொள்ளின், அத்தியாசத்திற்குமுன் இதுவெனும்வடிவ அபரோக்ஷப்பிரமைஇருத்தலால் அஞ்ஞான நிவிருத்தியின் எச்சங்கை சமாதானங்கள் உளவோ அவையும் நிர்மூலமாகின்றன. இதுவும் அநுகூல இலாகவமாம். இவ்வாற்றால் அதிஷ்டானத்தின் சாமாநியஞானம் அத்தியாசத்திற் காரணமாதலின் நிஷேதத்தைக் கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹபட்டோபாத்தியாயர் கூறியிருக்கின்றனர். அவரும் அத்வைதவாதியே. என்றாலும் சாம்பிரதாயிகவசனத்தினும் அவர் வார்த்தை விருத்தமாம். ஆதலால், அவர் வார்த்தையின் கண்டனத்தை இப்பிரசங்கத்திற்றானே விஸ்தாரமாகக் கூறுவாம்.

ஆதலால், அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவாயிருத்தலின் இதுவெனுந் தன்மை அம்சத்தினது அஞ்ஞானத்தின் அபேக்ஷை அத்தியாசத்தி லில்லை. இதனாற்றான் சம்க்ஷேபசாரீரகத்தில் அதிஷ்டான ஆதாரங்களுக்குப் பேதம் கூறப்பட்டிருக்கின்றது. விலாசத்தோடு கூடிய அஞ்ஞானத்தின் விஷயம் அதிஷ்டான மெனப்படுகின்றது. காரியத்தினை விலாச மென்பர். சர்ப்பமுதலிய விலாசத்தோடு கூடிய அஞ்ஞானத்தின் விஷயம் இராஜ்ஜுமுதலிய விசேஷவடிவமா யிருத்தலின் சர்ப்பமுதலியவற்றின் அதிஷ்டானம் இராஜ்ஜுமுதலிய விசேஷவடிவமாம். அத்தியஸ்தத்தில் அபிந்நமாய் எதன் ஸ்புரண முண்டாகின்றதோ அது ஆதார மெனப்படுகின்றது. "இது சர்ப்பம் இது வெள்ளி" என்றல் முதலிய பிரம உணர்ச்சியில் அத்தியஸ்தமாகிய சர்ப்பம் இரஜதம் முதலியவற்றின் அபின்னமாய்ச் சாமாநிய இதுவெனும் அம்சத்தின் ஸ்புரண முண்டாகுதலால் சாமாநிய அம்சம் ஆதாரமாம்.

இம்மதத்தில் அதிஷ்டான அத்தியஸ்தங்களுக்கு ஒரு ஞானத்திற்கு விஷயமாந்தன்மை உண்டாகின்றது. இந்நியமத்தின் ஸ்தானத்தில் ஆதார அத்தியஸ்தங்களுக்கு ஒரு ஞானத்திற்கு விஷயமாந்தன்மை உண்டாகின்றதென்பது நியமம். அதிஷ்டான அத்தியஸ்தங்களுக்கு ஒரு ஞானத்திற்கு விஷயமாந்தன்மை அங்கீகரிக்கின், இராஜ்ஜு சுத்திமுதலிய விசேஷவடிவத்திற்கு அதிஷ்டானத்தன்மை யிருத்தலால் இராஜ்ஜுசர்ப்பம்

சுத்திவெள்ளி என்னும் பிரம முண்டாதல்வேண்டும். சாமாநிய இதுவெனும் அம்சத்திற்கு ஆதாரத்தன்மை இருக்கின்றது; அதிஷ்டானத்தன்மை இல்லை. ஆகலின் "இது சர்ப்பம் இது வெள்ளி" என்னும் பிரமம் உண்டாகலாகாது. இதனால் விசேஷ அம்சத்தின் அஞ்ஞானமே அத்தியாசத்திற்கு ஏதுவாம். இம் மதத்தில் ஆதார அத்தியஸ்தங்களுக்கே ஒரு ஞானத்திற்கு விஷயமாந்தன்மை அங்கீகரித்தல் வேண்டும்.

115. அத்தியாசத்தின் காரணத்தன்மையில் பஞ்சபாதிகை விவரணங்களின் மதம்

பஞ்சபாதிகை விவரணகாரர்களின் மதத்தின் அநுசாரிகள் இங்ஙனம் கூறுகின்றனர்:—ஆவரணம் விக்ஷேபமென்னும் பேதத்தால் அஞ்ஞானத்திற்கு இரண்டு சக்திகள் உண்டு. ஆவரண விசிஷ்ட அஞ்ஞான அம்சத்திற்கு ஞானத்தோடு விரோத மிருத்தலின் நாச முண்டாகின்றது. விக்ஷேபசக்தி விசிஷ்ட அஞ்ஞான அம்சத்திற்கு ஞானத்தோடு விரோத மில்லை. ஆதலால், ஞானத்தினால் அதற்கு நாச முண்டாகிறதில்லை. இவ்வார்த்தை அவசியம் அங்கீகரிக்கத் தக்கதாம். அங்ஙன மில்லையாயின், ஜலத்திற் பிரதிபிம்பித்த விருக்ஷத்தின் மேற்பாகத்தில் கீழிடத்தி லிருத்தற்றன்மைப்பிரம முண்டாகின்றது. ஆண்டு விருக்ஷத்தின் விசேஷ வடிவஞான முண்டாயினும் மேற்பாகத்தில் கீழிடத்திருத்தற்றன்மை அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை.

அங்ஙனமே ஜீவன்முக்தனாகிய வித்வானுக்குப் பிரஹ்மாத்மாவின் விசேஷ வடிவஞான முண்டாகியும் அந்தக்கரண முதலிய வடிவினதாகிய விக்ஷேபத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. ஆண்டு முற்கூறிய ஸ்தலத்தைப்போல சாமானிய வடிவமாக ஞானமும் விசேஷவடிவமாக அஞ்ஞானமுமோர் சொல்லுதல் பொருந்தாது. விக்ஷேபசக்தி விசிஷ்ட அஞ்ஞான அம்சத்திற்கு ஞானத்தினால் நிவிருத்தி உண்டாகிறதில்லை. ஆவரணசக்தி விசிஷ்ட அஞ்ஞானம்சத்திற்கே ஞானத்தினால் நிவிருத்தி உண்டாகின்றதென்பதே சமாதானமாம். அங்ஙனமே இரஜ்ஜு—சுத்தி முதலியவற்றின் சாமாநிய ஞானத்தால் இதுவெனும் அம்சத்தின் ஆவரணத்திற்கேதுவாகிய அஞ்ஞானம்

சத்தின் நாச முண்டாகின்றது. சர்ப்பம் இரஜதமுதலிய விக்ஷேபத்திற் கேதுவாகிய அஞ்ஞானம்சத்தின் நாச முண்டாகிறதில்லை. ஆதலால், இதுவெனும்வடிவ சாமாநியஞான முண்டாகியும் சர்ப்பமுதலிய விக்ஷேபத்திற்கு ஏதுவாகிய இதுவெனும் அம்சத்தின் அஞ்ஞானமும் சம்பவிக்கின்றது. இவ்வாற்றால் இதுவெனும் வடிவ சாமாநியஞான முண்டாகியும் விலாசத்தோடு கூடிய அஞ்ஞானத்தின் விஷயமாகிய இரஜ்ஜுமுதலிய சாமாநிய அம்சம் சம்பவிக்கின்றது. ஆதலால், அதிஷ்டானத் தன்மைக்கு இதுவெனு மம்சத்திற சம்பவமிருத்தலின், அதிஷ்டான அத்தியஸ்தங்களுக்கு ஒரு ஞானத்திற்கு விஷயமாந் தன்மை சம்பிரதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்டதா யிருக்கின்றது. அதற்கும் விரோத மில்லை.

116. பஞ்சபாதிகை சம்க்ஷேபசாரீரகங்களினது மதத்தின் விலக்ஷணத்தன்மையும், அதில் இரகசியமும்

சம்க்ஷேபசாரீரகத்தின்படி விசேஷ அம்சத்தில் அதிஷ்டானத்தன்மை இருக்கின்றது. சாமாநிய அம்சத்தில் அதிஷ்டானத்தன்மை இல்லை. விசேஷ அம்சத்தில் ஆதாரத்தன்மையில்லையென்னும் மதத்தில் சாமாநிய அம்சத்தில் அதிஷ்டானத் தன்மை இருக்கின்றது. இத்துணைப் பேதமாம். விசேஷ அம்சத்தில் ஆதாரத்தன்மையின் அபாவம் இம் மதத்தினும் சமானமாம். ஏனெனின், அத்தியஸ்தத்தோடு அபிந்நமாய்த் தோற்றுவது எதுவோ அது ஆதார மெனப்படுகின்றது. "இரஜ்ஜு சர்ப்பமாம்" என்றிவ்வாறு உணர்ச்சி உண்டாகுமாயின், அத்தியஸ்தத்தோடு அபிந்நமாய் விசேஷ அம்சம் தோற்றும். முற்கூறிய படி தோற்றுகிறதில்லை. ஆதலால், விசேஷ வடிவமாக இரஜ்ஜு ஆதாரமன்று.

இவ்வாற்றால் முதற்பக்ஷத்தில் இதுவெனுந் தன்மை வடிவமாக இரஜ்ஜுவிலும் சுத்தியிலும் பிரமாணஜந்நிய ஞானத்தின் பிரமேயத்தன்மை இருக்கின்றது. இரஜ்ஜுத் தன்மை வடிவமாகவும், அங்ஙனமே சுத்தித்தன்மை வடிவமாகவும் பிரமேயத்தன்மையின் அபாவத்தால் அஞ்ஞானத் தன்மை யிருத்தலின் சுத்தி இரஜதங்களுக்கு அதிஷ்டானத் தன்மை யிருக்கின்றது. இரண்டாவது பக்ஷத்தில் ஆவாணசக்தி

விரோதிப்பிரமைக்கு விஷயமாந்தன்மை வடிவினதாகிய பிர மேயத்தன்மை இதுவெனுந் தன்மை வடிவத்தா னிருக்கின் றது. என்றாலும் விக்ஷேபசக்தியுடைய அஞ்ஞானத்திற்கு விஷய மாந்தன்மை அறியப்பட்டதின்கண்ணும் சம்பவிக்கிறது. ஆதலால், இது வெனுந்தன்மை வடிவினதாகவே இரஜதமுத லியவற்றின் அதிஷ்டானத்தன்மை யிருக்கின்றது.

இவ்விடத்து இது இரகசியமாம்:—அஞ்ஞானத்தா லாகிய ஆவரணம் சேதனத்தி லுண்டாகின்றது. சுபாவமாக ஆவரிக்கப் பட்ட வடிவின்வாகிய பிறவிக்குருடனுக்குச் சமானமான ஜட பதார்த்தங்களில் அஞ்ஞானத்தினலாகிய ஆவரணத்தின் அங்கீ கார மில்லை. அங்ஙனமே பிரமாணஜந்நியஞானத்திற்கு விஷய மாந்தன்மை வடிவினதாகிய பிரமேயத்தன்மையும் சேதனத்தி லிருக்கின்றது. கடமுதலிய ஜடபதார்த்தங்களில் ஆவரண மிருக்குமாயின், அதன் நிவிருத்தியின்பொருட்டு பிரமேயத் தன்மையின் அங்கீகார முண்டாகிறது. சேதனத்தில் அஞ் ஞானத்திற்கு விஷயமாந்தன்மை வடிவினதாகிய அஞ்ஞாதத் தன்மை யிருத்தலால் சேதனத்தின்கண்ணே ஞாதத்தன்மை யும் பிரமேயத்தன்மையு மிருக்கின்றன. அங்ஙனமே சகல அத்தியாசங்களின் அதிஷ்டானமும் சேதனமாம். ஜடபதார்த் தம் தான் அத்தியஸ்தமாம்; பிறவற்றிற்கு அதிஷ்டான மாகாது.

ஆதலால், இரஜ்ஜு சுத்திமுதலியவற்றில் அஞ்ஞாதத் தன்மையும், அங்ஙனமே ஞாதத்தன்மையும் அதிஷ்டானத் தன்மையும் எவ்வாற்றானும் சம்பவியா. என்றாலும் மூலாஞ் ஞானத்திற்கு விஷயமாந்தன்மை வடிவினதாகிய அஞ்ஞாதத் தன்மையோ நிரவயவாவச்சின்ன விபுசேதனத்தி லிருக்கின் றது. ஆனல், தூலாஞ்ஞானத்திற்கு விஷயமாந்தன்மை வடிவின தாகிய அஞ்ஞாதத்தன்மை அந்தந்த விஷயாவச்சின்ன சேத னத்தி லிருக்கின்றது. இவ் வார்த்தையை எட்டாவது பிரகாசத் திற் கூறுவோம். அங்ஙனமே பிரஹ்மஞானத்திற்கு விஷயமாந் தன்மை வடிவினதாகிய ஞாதத்தன்மையோ நிரவயவாவச் சின்ன சேதநத்தி லிருக்கின்றது. கடாதிஞானத்திற்கு விஷய மாந்தன்மை வடிவினதாகிய ஞாதத்தன்மை கடாதியவச்சின்ன சேதனத்தி லிருக்கின்றது. அங்ஙனமே அவித்தைக்கு அதிஷ் டானமாந்தன்மை நிரவயவாவச்சின்ன சேதனத்தின்கண்ணிருக்

கின்றது. பூதபௌதிக பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானமாந் தன்மை அஞ்ஞான அவச்சின்ன சேதனத்தின்கண் ணிருக்கின்றது. பிராதிபாஸிக சர்ப்ப மிரஜதமுதலியவற்றிற்கு அதிஷ்டானமாந்தன்மை இரஜ்ஜு அவச்சின்ன சுத்தி அவச்சின்ன முதலிய சேதனங்களி லிருக்கின்றது.

இவ்வாற்றால் சேதனத்தில் அஞ்ஞாதத்தன்மை ஞாதத் தன்மை அதிஷ்டானத்தன்மை முதலியவற்றின் அவச்சேதகம் ஜடபதார்த்தமாம். ஆதலால், அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் ஜடபதார்த்தங்களிலும் அஞ்ஞாதத்தன்மை முதலியவற்றின் சம்பவ மிருத்தலின் இரஜ்ஜு அஞ்ஞாதமாம், ஞாதமாம், சர்ப்பத்தின் அதிஷ்டானமாம், என்றிவ்வாறும் வியவகாரம் சம்பவிக்கின்றது. இவ்வாற்றால் சர்ப்பமுதலிய பிரமத்திற்கு ஏதுவாகிய இரஜ்ஜுமுதலியவற்றோடு இந்திரியங்களின் சையோகத்தால் இதுவெனும் வடிவ சாமாநிய ஞானப்பிரமை வடிவமாகிய அந்தக்கரணத்தின் விருத்தி உண்டாகின்றது. அச் சாமாநிய ஞானத்தால் க்ஷோபமுடையதாகிய அவித்தையின் சர்ப்பாதி வடிவ பரிணாமமும் சர்ப்பமுதலியவற்றின் ஞானவடிவ பரிணாமமு முண்டாகின்றன. இரஜ்ஜுமுதலிய விஷய உபகித சேதனத்தின்கண்ணுள்ள அவித்தையினது அம்சத்தின் சர்ப்ப முதலிய விஷயாகார பரிணாம முண்டாகின்றது. இதுவெனும் வடிவ விருத்தியுபகித சேதனத்தின்கண்ணுள்ள அவித்தையினது அம்சத்தின் ஞானாகார பரிணாம முண்டாகின்றது. இரஜ்ஜு அவச்சின்ன சேதனம் சர்ப்பத்தின் அதிஷ்டானமாம். இதுவெனும் வடிவவிருத்தி யவச்சின்ன சேதனம் சர்ப்ப ஞானத்தின் அதிஷ்டானமாம்.

117. விஷயவுபகித விருத்தியுபகித சேதனங்களின் அபேதத்தில் சங்கை சமாதானம்

இதுவெனும் வடிவப் பிரத்தியக்ஷவிருத்தி உண்டாகும் காலத்து, விஷயவுபகித சேதனத்திற்கும் விருத்திவுபகித சேதநத்திற்கும் அபேத முண்டாகின்றது. ஆதலால், முற்கூறியபடி விஷய ஞானங்களினது உபாதானத்தின் பேதத்தைக் கூறுதலும் அதிஷ்டானத்தின் பேதத்தைக் கூறுதலும் சம்பவியா. சர்ப்பமுதலிய விஷயங்களின் அதிஷ்டானத்தினும்

ஞானத்தின் அதிஷ்டானத்தினை வேறாகக் கொள்ளுவோமாயின்,
சர்ப்பமுதலியவற்றின் அதிஷ்டான ஞானத்தால் சாப்பமுதலிய
வற்றின் ஞானத்தின் நிவிருத்தி உண்டாகாது. ஏனெனின்,
தனது அதிஷ்டானத்தின் ஞானத்தால் அத்தியஸ்தத்தின் நிவி
ருத்தி உண்டாகின்றது. அந்நியத்தின் அதிஷ்டான ஞானத்
தால் அத்தியஸ்தத்தின் நிவிருத்தி உண்டாகுமாயின், சர்ப்பத்
தின் அதிஷ்டான ஞானமாகிய இரஜ்ஜுவின் ஞானத்தால்
அத்தியஸ்த சம்சாரத்தின் நிவிருத்தி உண்டாதல் வேண்டும்.
ஆதலால், ஒன்றன் ஞானத்தால் சர்ப்பமுதலிய விஷயம் அவற்
றின் ஞானமென்பவற்றின் நிவிருத்தியின் பொருட்டு இரண்
டற்கும் அதிஷ்டானம் ஒன்றென்றே கொள்ளுதல் தகுதியாம்.

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—யாண்டு ஒரு வஸ்து
விற்கு உபாதியினாலாய பேதமுளதாகின்றதோ, ஆண்டு உபாதி
யின் நிவிருத்தியினால் அபேத முண்டாகின்றது. அன்றியும்,
இரண்டு உபாதிகளும் ஓரிடத்திருக்குமாயின் ஆண்டும் உபகி
தத்திற்கு அபேத முண்டாகின்றது. ஆனால், உபாதிகளின்
ஏகதேசத் திருத்தற்றன்மையினால் யாண்டு உபகிதத்திற்கு
அபேத முண்டாகின்றதோ, ஆண்டு ஒரு தர்மியிற்றானே அவ்
வவ் வுபகிதத்தன்மைகளாகிய இரண்டு தர்மங்க ளிருக்கின்றன.
எங்ஙனம்: ஒரு ஆகாசத்திற்குக் கடமட உபாதி பேதத்தால்
பேத முண்டாகின்றது. ஆண்டுக் கடமடங்களின் நாசத்தால்
அபேத முண்டாகின்றது. மடமாகிய இடத்தில் கடத்தை
ஸ்தாபித்தலானும் கடாகாசத்திற்கு மடாகாசத்தோடு பேத
மிருப்பதில்லை. என்றாலும் கடாகாசத்தில் கட உபகிதத்தன்மை
யும் மட உபகிதத்தன்மையுமாகிய இரண்டு தர்மங்க ளிருக்கின்
றன; தர்மி ஒன்றாம். அங்ஙனமாயினும் எதுவரையில் கட
மடங்க ளிரண்டு மிருக்கின்றனவோ, அதுவரையில் கடாகாச
மடாகாசமென் றிரண்டு வியவகார முண்டாகின்றது.

அங்ஙனமே இரஜ்ஜுமுதலிய விஷய தேசத்தில் விருத்தி
செல்லுங்காலத்தில் விருத்தி உபகித சேதனத்தோடு விஷய
சேதனத்திற்கு அபேத முண்டாயினும், இரண்டு உபாதிகள்
இருத்தலால் விருத்தி உபகிதத்தன்மை இரஜ்ஜு உபகிதத்
தன்மை என்றிரண்டு தர்மங்க ளிருக்கின்றன. அவற்றுள் சர்ப்ப
முதலிய விஷயங்களுக்கு அதிஷ்டானமாந்தன்மையை அவச்

சேதகம் செய்யும் தர்மம் இரஜ்ஜு உபகிதத்தன்மையாம். சர்ப்பமுதலியவற்றின் ஞானத்திற்கு அதிஷ்டானமாந்தன்மையை அவச்சேதகஞ் செய்யும் தர்மம் விருத்தி உபகிதத் தன்மையாம். இவ்வாற்றால் சர்ப்பமுதலிய விஷயங்களுக்கு உபாதானமாகிய அஞ்ஞானம்சத்திற்குச் சேதனத்தில் அதிகரணத்தன்மையை அவச்சேதகஞ் செய்வது இரஜ்ஜு உபகிதத் தன்மையாம். பிராந்தி ஞானத்திற்கு உபாதானமாகிய அஞ்ஞானம்சத்தின் சேதனத்தில் அதிகரணத்தன்மையை அவச்சேதகஞ் செய்வது விருத்தி யுபகிதத்தன்மையாம். இவ்வாற்றால் ஓரிடத்தில் உபாதிகளிருக்க உபகிதங்களுக்கு அபேதமுண்டாகியும் தர்மங்களுக்குப் பேத மிருக்கின்றது.

ஆதலால், விருத்தி உபகிதத்தன்மை அவச்சின்ன சேதனத்துள்ள அஞ்ஞானம்சத்தில் பிராந்திஞானத்திற்கு உபாதானமாதற்றன்மை யிருக்கின்றது. இரஜ்ஜுமுதலிய விஷய உபகிதத் தன்மை அவச்சின்ன அதே சேதனத்தின்கண்ணுள்ள அஞ்ஞானம்சத்தில் பிரமத்தினது விஷயத்திற்கு உபாதான மாதற்றன்மை இருக்கின்றது. அங்ஙனமே விருத்தி உபகிதத்தன்மை அவச்சின்ன சேதனத்தில் பிராந்திஞானத்திற்கு அதிஷ்டானமாதற்றன்மை இருக்கின்றது. இரஜ்ஜுமுதலிய விஷய உபகிதத் தன்மை அவச்சின்ன அதேசேதனத்தில் சர்ப்பமுதலிய விஷயங்களுக்கு அதிஷ்டான மாதற்றன்மை யிருக்கின்றது. இவ்வாறாக உபாதிகள் இருக்குங்காலத்திலும் ஓரிடத்து உபாதிகளிருத்தலால் உபகிதத்திற்கு அபேத முண்டாயினும், உபாதியை முன்னிட்டுப் பேத வியவகாரமு முண்டாகின்றது. பின்னதேசத்தில் உபாதி இருக்குமாயின் அப்போது கேவலபேதவியவகாரமுண்டாகின்றது. உபாதி நிவிருத்தியாயின் அப்போது பேத வியவகார முண்டாகிறதில்லை. கேவல அபேத வியவகாரமுண்டாகின்றது. இவ்வாறு விருத்தியும் விஷயமுமாகிய இரண்டும் ஓரிடத்து இருப்பனவாயின், அப்போது சேதனத்திற்கு அபேதமுண்டாகியும் உபாதியை முன்னிட்டு முற்கூறிய உபாதானத்திற்கும் அதிஷ்டானத்திற்கும் பேதங் கூறுதல் அசங்கதமன்று. சொரூபமாக உபகிதத்திற்கு அபேத மிருக்கின்றது. ஆதலால், ஒரு அதிஷ்டானத்தின் ஞானத்தால் சர்ப்பாதி விஷயங்களுக்கும் அவற்றின் ஞானத்திற்கும் நிவிருத்தியும் சம்பவிக்கின்றது.

118. இரஜ்ஜுமுதலியவற்றின் இதுவெனும் வடிவப்பிரமையினால் சர்ப்பமுதலியவற்றின் பிரம ஞான முண்டாவதிலுள்ள இரண்டு பக்ஷம்

இரஜ்ஜுமுதலியவற்றின் இதுவெனும் வடிவப்பிரமையினால் சர்ப்பமுதலியவற்றின் பிரமஞானம் (மயக்கவுணர்ச்சி) உண்டாகுமிடத்து இரண்டுபக்ஷங்க ளுள. சிலர் இது கூறுகின்றனர்:—இது சர்ப்பம் இது இரஜதம் என்றிவ்வாறு அதிஷ்டானத்தின்கண்ணுள்ள இதுவெனுந்தன்மையையும் சர்ப்பம் இரஜதமுதலியவற்றில் அதன் சம்பந்தத்தையும் விஷயஞ் செய்வதாய்ச் சர்ப்பம் இரஜதம் முதலியவற்றைக் கோசரிக்கும் பிரம முண்டாகின்றது. அதிஷ்டானத்தின் இதுவெனுந் தன்மையினையும் இதுவெனுந் தன்மையின் சம்பந்தத்தினையும் விட்டுக் கேவல சர்ப்பம் இரஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் அபரோக்ஷப்பிரம முண்டாகிறதில்லை. கேவல அத்தியஸ்த கோசரமே பிராந்தி ஆகுமாயின் சர்ப்பம் இரஜதம் என்னும் வடிவப்பிராந்தி உண்டாதல் வேண்டும். "இச் சர்ப்பத்தை அறிகின்றேன், இவ் விரஜதத்தை அறிகின்றேன்" என்னும் பிரமத்தின் அநுவியவசாயமும் இதுவெனும் பதார்த்தத்தோடு தாதான்மியமாகப் பொருந்திய சர்ப்பம் இரஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் வியவசாயத்தினை விஷயஞ் செய்கின்றது. கற்பித சர்ப்பமுதலியவற்றில் இதுவெனுந் தன்மை யில்லை.

ஏனெனின், வர்த்தமானகால எதிரிடங்களின் சம்பந்தம் இதுவெனுந் தன்மையாகின்றது. வியாவகாரிக தேசகாலங்களுக்குப் பிராதிபாஸிகத்தோடு வியாவகாரிய சம்பந்தம் சம்பவிக்கிறதில்லை. அதிஷ்டானத்தின் இதுவெனுந் தன்மை கற்பிதத்திற் றோற்றுதலால், வியாவகாரிகத்தின் நிர்வாகம் உளதாகக் கற்பிதத்தில் இதுவெனுந் தன்மையை அங்கீகரித்தல் பயனின்மையாம். அந்நியதாக்கியாதியோடு விரோத முளதாயின், அதிஷ்டானத்தின் இதுவெனுந் தன்மையின் அநிர்வசநீய சம்பந்தம் கற்பிதத்தில் உற்பத்தியாகின்றது. கற்பிதத்தில் இதுவெனுந் தன்மையின் அங்கீகார மில்லை. என்றாலும் சம்பந்தியை விட்டுக் கேவல சம்பந்தத்தின் ஞானம் உண்டாகிறதில்லை. ஆதலால், அதிஷ்டானத்தின் இதுவெனுந் தன்மையை விட்டுக் கேவலம் அத்தியஸ்த கோசரமான அபரோக்ஷப்பிரம முண்டாகிறதில்லை.

இவ்வாற்ருல் இதுவேனும் பதார்த்தத்திற்கு இருவகை உணர்ச்சி உண்டாகின்றது. ஒன்ருே இந்திரிய அதிஷ்டானங்களின் சையோகத்தால் இதுவெனும் வடிவப் பிரமையாகிய அந்தக்கரண விருத்திவடிவ உணர்ச்சியாம். மற்றையது விருத்தி உபகிதசேதனத்தின்கண்ணுள்ள அவித்தையின் பரிணமமாகிய சர்ப்ப மிரஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் மயக்க உணர்ச்சியாம். அதுவும் அத்தியஸ்தத்தில் இதுவெனும் பதார்த்தத்தின் தாதான்மியத்தை விஷயஞ் செய்வதாய் இதுவென்பதைக் கோசரிப்பதாகின்றது. இவ்வாற்ருல் சகல அபரோக்ஷப் பிராந்தியும் இதுவெனும் வடிவினதாய் அத்தியஸ்தவடிவ மாகின்றது. சில ஆசிரியர் இங்ஙனம் மதித்திருக்கின்றனர்.

அநேக நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:—அதிஷ்டான இந்திரியங்களின் சையோகத்தால் இதுவெனும் வடிவ அந்தக்கரண விருத்தியாகிய பிரமையினுல் க்ஷோபமுடைய அவித்தையின் கேவல அத்தியஸ்தவடிவ பரிணம முண்டாகின்றது. அவித்தையின் இதுவெனும் வடிவ பரிணம முண்டாகிறதில்லை. ஏனெனின், வியாவகாரிக பதார்த்த வடிவமாக அவித்தையின் பரிணமம் சம்பவியாது. சாக்ஷாத் அவித்தையினுற் ருேன்றிய பிராதிபாஸிக பதார்த்த வடிவமாகவே அவித்தையின் பரிணமமாகிய பிரமஞான முண்டாகின்றது. ஆதலால், அதிஷ்டானத்தின் இதுவெனுந் தன்மையில் பிராந்திஞானத்திற்கு விஷயமாந்தன்மை யில்லை. கேவலம் அத்தியஸ்தத்திற் ருேன் பிரமத்திற்கு விஷயமாந்தன்மை யிருக்கின்றது.

"இது சர்ப்பம், இது இரஜதம்" என்பதாகப் பிராந்தியின் ஆகார முண்டாகின்றது. அங்ஙனமே "இவ் விரஜதத்தை அறிகின்றேன்" என்று பிராந்தியின் அநுவியவசாய முண்டாகின்றது. அத்தியஸ்தமாத்திரத்தைக் கோசரிப்பது மயக்கமாகுமாயின் "சர்ப்ப மிரஜதம்" என்பதாகப் பிரமத்தின் ஆகார முண்டாதல்வேண்டும். "இரஜத்தை அறிகின்றேன்" என்பதாகவே அநுவியவசாய முண்டாதல்வேண்டும். இவ்வாறு முன் மதத்திற கூறப்பட்டிருக்கின்றது.

அதற்கு இது சமாதானமாம்:—எங்ஙனம் சர்ப்ப மிரஜதமுதலியவற்றின் அதிஷ்டானத்தின்கண்ணுள்ள இதுவெனுந் தன்மையின் விளக்கம் அத்தியஸ்தத்தில் உண்டாகின்றதோ, அல்

லது அதிஷ்டானத்தின்கண்ணுள்ள இதுவெனுந் தன்மையின் அநிர்வசநீயசம்பந்தம் அத்தியஸ்த சர்ப்பமுதலியவற்றில் உற்பத்தியாகின்றதோ, அங்ஙனமே சர்ப்பமுதலிய ஞானுபாசத்தின் அதிஷ்டானம் இதுவெனும் வடிவப் பிரமாவிருத்தியாம். அந்தப் பிரமாவிருத்தியில் இதுவெனும் பதார்த்தத்தை விஷயிக்குந் தன்மை யுளது. அதன் உணர்ச்சி சர்ப்பமுதலிய பிரமத்தில் உண்டாகின்றது. அல்லது பிரமாவிருத்தியாகிய அதிஷ்டானத்திலுள்ள இதுவெனும் பதார்த்தத்தை விஷயிக்குந் தன்மை எதுவோ, அதன் அநிர்வசநீய சம்பந்தம் சர்ப்பமுதலிய ஞானங்களில் உற்பத்தியாகின்றது. ஆதலால், இதுவெனும் வடிவத்தன்மைச் சூனியப் பிரமஞானத்தில் இதுவெனும் வடிவத்தன்மையின் உணர்ச்சி உண்டாகின்றது. அல்லது, இதுவெனும் வடிவவிருத்தி உபகித சேதனமே சர்ப்பமுதலிய ஞானுபாசத்திற்கு அதிஷ்டானமாம்.

முற்கூறிய விருத்தி உபலக்ஷிதம் அதிஷ்டானமாகுமாயின், முற்கூறிய விருத்தியினுல் இரண்டு நான்கு கடிகைகள் நீங்கிய பின்னும் சர்ப்பமுதலிய பிராந்தி உண்டாதல்வேண்டும். ஏனெனின், உபலக்ஷணமுடையதனை உபலக்ஷித மென்பர். உபலக்ஷணத்தில் வர்த்தமானத்தன்மையின் அபேக்ஷை யில்லை. இப் பொருளை மேற் கூறுவாம். சொல்லப்படும் கிரமமாக உபாதியில் வர்த்தமானத்தன்மையின் அபேக்ஷை உளது. இதுவெனும் வடிவவிருத்தி எதற்கு உபாதியாகின்றதோ, அது இதுவெனும் விருத்தியுபகித மெனப்படுகின்றது. ஆதலால், சர்ப்பம் இரஜதமுதலியவற்றின் பிரமஞான முண்டாயின், அக்காலத்தில் அந்தக்கரணத்தின் இதுவெனும் வடிவவிருத்தியும் இருக்கின்றதென்பதனை அவசியம் அங்கீகரித்தல்வேண்டும். ஏனெனின், அதிஷ்டானத்தின் சத்தா (இருப்புக்) காலத்திற்கு அதிக்கிரமித்த காலத்தில் அத்தியஸ்த முண்டாகிறதில்லை. ஆதலால், பிரமஞானத்தின் சமயத்தில் விருத்தி உபகித சேதனத்தின் அதிஷ்டானத்தன்மைக்கு உபயோகமுள்ளதாகிய இதுவெனும் வடிவ அந்தக்கரணத்தின் விருத்தி இருக்கின்றது; இரஜத வடிவ அவித்தியாவிருத்தியும் இருக்கின்றது. இவ்வாற்றுல் இது சர்ப்பம், இது இரஜதம் என் இரண்டு ஞான முள. இதுவெனும் வடிவினது பிரமாவிருத்தியாம். சர்ப்பம் இரஜதமுத

லிய வடிவினது பிரமவிருத்தியாம். அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் பிரமவிருத்திக்கு இதுவெனும் வடிவப்பிரமா விருத்தி அதிஷ்டானமாம். அத்தியஸ்தத்திற்கு அபேத சம்பந்த முண்டாகின்றது.

எங்ஙனம்: பிரஹ்மப் பிரபஞ்சங்களின் "இவ்வெல்லாம் பிரஹ்மம்" என்னும் உணர்ச்சிக்கு விஷயம் அபேதமாம். ஆதலால் "இது சர்ப்பம், இது இரஜதம்" என்பதாக உபயவிருத்தியின் அபேத உணர்ச்சி உண்டாகின்றது. முற்கூறியபடி விருத்தி இரண்டுளதாயின் "அதிஷ்டானம் அத்தியஸ்தமென்னுமிரண்டும் ஒரு ஞானத்திற்கு விஷயமாம்" என்னும் பழமையான வசனம் அசங்கதமாகும். என்றாலும் ஒரு ஞானத்திற்கு விஷயமா மென்பதற்கு இது பொருளன்று. ஒரு விருத்திக்கு விஷயமாம்; ஆனால், அதிஷ்டான அத்தியஸ்தங்கள் ஒரு சாக்ஷிக்கு விஷயமாகு மென்பது பிராசீன வசனத்திற்குப் பொருளாம். இரஜ்ஜு சுத்திமுதலியவற்றின் தேசத்திலேயே சர்ப்பம் இரஜதமுதலியன உண்டாகின்றன. இதுவெனும் வடிவ விருத்தியும் இரஜ்ஜு சுத்திமுதலிய தேசங்களிற் செல்லுகின்றது. ஆதலால், இதுவெனும் வடிவவிருத்தி யுபகித சாக்ஷிக்கு அதிஷ்டானமும் அத்தியஸ்தமும் விஷயமாம். இவ்வாற்றால் அதிஷ்டானமும் அத்தியஸ்தமும் ஒரு ஞானத்திற்கு விஷயமா மென்னும் பிராசீன வசனத்தில் ஞானபதத்திற்குச் சாக்ஷி பொருளாம்; விருத்தியன்று. ஆதலால், பிரமவிருத்திக்கு அத்தியஸ்தமாத்திரத்தைக் கோசரிக்குந் தன்மையை அங்கீகரித்தலில் அநேக ஆசிரியர்களுக்குச் சம்மதி இருக்கின்றது.

119. கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹ பட்டோபாத்தியாயர் மதம்

கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹ பட்டோபாத்தியாயரோ இங்ஙனம் கூறுகின்றார்:—பிராந்திஞானமின்றிப் பிரமைவடிவமாகிய இதுவெனும் வடிவஞானம் பிரமத்திற்கு ஏதுவன்று. ஆனால், இது பாம்பு, இது இரஜதம் என்பதாகப் பிரமவடிவ ஒரேஞான முண்டாகின்றது. ஏனெனின், பிரமத்திற்கு முன் இதுவெனும் பதார்த்த வடிவப் பிரமாரூப சாமாநிய ஞானம் இரஜ்ஜுமுதலியவற்றிற்கு அங்கீகரிக்கின், அவரை இது கேட்

பாம்:—அநுபவாநுசாரமாக ஞானமிரண்டின் அங்கீகாரமா? அல்லது பிரமவடிவ காரியத்தின் அநுபபத்தியினால் பிரமத்திற்குப் பின்னமான சாமாநிய ஞானத்தின் அங்கீகாரமா? அநுபவத்தை அநுசரித்து ஞான மிரண்டாமெனின், அது பொருந்தாது.

ஏனெனின், முதல் மதத்திலோ இதுவெனும் பதார்த்த கோசரமாக இரண்டு விருத்தி சொல்லப்பட் டிருக்கின்றது. ஒன்றோ பிரமைவடிவ அந்தக்கரணத்தின் இதுவெனும் வடிவ விருத்தியாகச் சொல்லப்பட்டது. மற்றையது அவித்தையின் பிரமவடிவவிருத்தி இதுவெனும் பதார்த்தத்தினை விஷயஞ் செய்வதாய் இது இரஜதமென இரஜதத்தைக் கோசரிப்பதாமென் றிவ்வாறு சொல்லப்பட்டது. இம் மதத்தில் இதுவெனும் பதார்த்தத்திற்கு இருவகை உணர்ச்சி சொல்லப்பட்டது. அது எவருடைய அநுபவத்திலும் ஏறுவதில்லை. சர்ப்ப மிரஜதமுதலிய ஞானத்தைப்போல இதுவென்பதைக் கோசரிக்கும் ஞானமும் ஒரே அநுபவத்தாற் பெறப்படுவதாம்.

ஆதலால் முதல் மதம் அநுபவத்தை அநுசரித்ததன்று. இரண்டாவது மதத்தில் இதுவெனும் பதார்த்தத்திற்கு இரண்டு ஞானத்தை அங்கிகரிக்கவில்லை. ஆனால், "இது பாம்பு, இது இரஜதம்" என்றல்முதலிய இரண்டு ஞானத்தை அங்கீகரித்திருக்கின்றனர். இதுவெனும் வடிவப் பிரமையோ அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. சர்ப்பம் இரஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் பிரமம் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றது. அதுவும் அநுபவ விருத்தமாம்.

ஏனெனின், இரஜ்ஜு சுத்திகளின் ஞானத்தால் சர்ப்ப இரஜதங்களின் பாத முண்டாகியபின்னர், ஒருவன் "உனக்கு எப்படிப் பிரமம் உண்டாயிற்று?" என்று கேட்பானாயின், அதற்கு "இது சர்ப்பம், இது இரஜதம்" என்னும் பிரமம் எனக்குண்டாயிற்று" என்று உத்தரம் கூறுவான். இதுவெனும் வடிவப்பிரமை யுண்டாயிற்று, சர்ப்பவடிவ இரஜதவடிவப் பிரம முண்டாயிற்று என்று ஒருவனும் விடை கூறுவதில்லை. ஆதலால், இரண்டாவது மதத்தின்படியும் ஞான மிரண்டின் அங்கீகாரமும் அநுபவவிருத்தமாம். ஆதலால், இந்திரிய ஜந்நிய அந்தக்கரணத்தின் விருத்தியாகிய இதுவெனும் வடிவஞானம்

பிரமையாம். இதுவெனும் வடிவஞான ஜந்நிய சர்ப்பம் இரஜத முதலியவற்றைக் கோசரிக்கும் இதுவெனும் பதார்த்தத்தை விஷயிப்பது, அல்லது இதுவெனும் பதார்த்தத்தை விஷயிப்பது அவித்தையின் விருத்திவடிவமாகிய ஞானுபாசமாம். இவ்வாற்றால் ஞான மிரண்டின் அங்கீகாரம் அநுபவத்தை அநுசரித்ததன்று.

120. உபாத்தியாயரது மதத்தில் சாமாநியஞான (தர்மிஞான) வாதியின் சங்கையும் சமாதானமும்

சாமாநிய ஞானவாதி இங்ஙனம் கூறுகின்றார்:— இரஜ்ஜு முதலியவற்றோடு இந்திரிய சையோக முண்டாகுமாயின் சர்ப்ப முதலிய அத்தியாச முண்டாகின்றது. இந்திரிய சையோக முண்டாகாவிடின் அத்தியாச முண்டாகிறதில்லை; இத்தன்மைய அந்வயவெதிரேகங்களால் இந்திரியத்திற்கு அதிஷ்டானத்தோடுள்ள சையோகத்திற்கு அத்தியாசத்திற்குக் காரணமாந்தன்மை பெறப்பட்டதாகின்றது. அதிஷ்டான இந்திரியங்களின் சையோகத்திற்கு அதிஷ்டானத்தின் ஞானவாயிலாகவே காரணத்தன்மை சம்பவிக்கின்றது. வேறு வகையாய் அதிஷ்டான இந்திரியங்களின் சையோகத்தின் உபயோகம் அத்தியாசத்திற் சம்பவிக்கிறதில்லை. அத்தியாசத்திற்குக் காரணமாதலைக் கூறின் சம்பவியாது.

ஏனெனின், அதிஷ்டான இந்திரியங்களின் சையோகமின்றியும் அகங்காரமுதலியவற்றின் அத்தியாச முண்டாகின்றது. ஆதலால், அத்தியாசமாத்திரத்தில் அதிஷ்டானஞானத்தின் சாமாநியஞானம் ஏதுவாம். அகங்காரமுதலிய அத்தியாசத்திற்கு அதிஷ்டானம் பிரத்தியக்கு சொரூபமாகிய ஆத்மாவாம். அது ஸ்வயம் பிரகாசமாம். சர்ப்பமுதலிய அத்தியாசத்தினது அதிஷ்டானத்தின் சாமாநியஞானம் இந்திரிய சையோகத்தால் உண்டாகின்றது. இவ்வாறு நிஜப்பிரகாச சூநிய அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானவாயிலாகவே இந்திரிய சையோகத்திற்கு அத்தியாசத்தில் உபயோக மிருக்கின்றது; நேரே உபயோகமில்லை. ஆதலால், அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானமே அத்தியாசத்திற்குக் காரணமாம். அத்தியாசம் காரியமாம். யாண்

டுக் காரியம் தோற்றிக் காரணம் தோற்றுதிருக்கின்றதோ, ஆண்டுக் காரியம் வேறுவகையாற் சம்பவியாமையின் காரணத்தின் கற்பனை உண்டாகின்றது. பிரம ஸ்தலத்தில் இதுவெனும் வடிவப்பிரமை அநுபவ சித்தமன்று. என்றாலும் பிரமவடிவ காரியத்தின் சாமாநியஞானமாகிய காரணமின்றிச் சம்பவியாமையின் சாமாநிய ஞானத்தின் கற்பனை உண்டாகின்றது.

இவ்வாறு தர்மிஞானவாதி கூறின் அது பொருந்தாது. அத்தியாசத்திற்கு ஏதுவாகிய சாமாநிய ஞானத்தினைத் தர்மிஞான மென்பர். இப் பிரசங்கத்தில் சாமாநியஞானத்தினை அத்தியாசத்திற்குக் காரணமெனக் கொள்வோர் பூர்வபக்ஷிகள். சாமாநியஞானத்தைக் கூறாத உபாத்தியாயர் சித்தாந்தி யாவர். அவர் வார்த்தையினைக் கூறுவாம்:—சாமாநிய ஞானமின்றி ஓர் அத்தியாசமும் உண்டாகாவிடின் அத்தியாசத்திற்குக் காரணமாந்தன்மை சாமாநிய ஞானத்திற் பொருந்தும். அதிஷ்டானத்தின் சாமாநியஞானமின்றிக் கடாதிகளின் அத்தியாச முண்டாகின்றது. ஆதலால், அத்தியாசமாத்திரத்தில் அதிஷ்டானத்தின் சாமாநியஞானத்திற்குக் காரணத்தன்மை யில்லை. தர்மிஞானவாதி கடமுதலிய அத்தியாசத்திற்கு முன் சாமாநிய ஞானத்தைக் கூறுகின்றார். அவரை இது கேட்கவேண்டும்:— கடமுதலிய அத்தியாசத்திற்கு ஏது அதிஷ்டானத்தோடு நேத்திர சையோகத்தாற் றோன்றிய அந்தக்கரணத்தின் விருத்தியாகிய சாமாநியஞானமா? அல்லது, சேதன சொரூபப் பிரகாசமே சாமாநியஞானமா? முதற் பக்ஷத்தைக் கூறின் அது பொருந்தாது. ஏனெனின், கடமுதலிய அத்தியாசத்திற்கு அதிஷ்டானமாகிய அஞ்ஞானவச்சின்ன பிரஹ்மம் உருவமின்றியதாம். ஆதலால், பிரஹ்மகோசரம் அந்தக்கரணத்தின் சாக்ஷாஷ விருத்தியெனல் சம்பவியாது. இரண்டாவது பக்ஷத்தைக் கூறுமிடத்துச் சொரூபப்பிரகாசம் ஆவரிக்கப்பட்டதாம். அவ் வாவரிக்கப்பட்ட பிரகாசவடிவ சாமாநிய ஞானத்தினையும் அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கொள்ளின், இரஜஜுமுதலிய வற்றோடு இந்திரிய சையோக மில்லாமலும் சர்ப்பமுதலிய அத்தியாச முண்டாதல் வேண்டும். ஆதலால், ஆவரிக்கப்பட்ட பிரகாசவடிவ சாமாநியஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவன்று; இவ்வாற்றால் கடமுதலிய அத்தியாசத்திற்கு முன் சாமாநிய

ஞான மின்மையால் அத்தியாச மாத்திரத்தில் சாமாநியஞானத்திற்குக் காரணமாதற்றன்மை யின்மையால் அத்தியாசரூப காரியத்தின் அநுபபத்தியினால் சாமாநியஞானமாகிய இது வெனும் வடிவவிருத்தியின் கற்பனை உண்டாகிறதில்லை.

தர்மிஞானவாதி இது கூறுகின்றார்:—சகல அத்தியாசத்திலும் ஆவரிக்கப்படாத பிரகாசவடிவ சாமாநியஞானத்தினை ஏதுவெனக் கூறின் கடமுதலிய அத்தியாசத்தில் வியபிசாரம் கூறுதல் பொருந்தும். அத்தியாசமாத்திரத்திலோ ஆவரிக்கப்பட்ட, அல்லது ஆவரிக்கப்படாத சாதாரணப் பிரகாசம் ஏதுவாம். பிராதிபாஸிக அத்தியாசத்தில் ஆவரிக்கப்படாத பிரகாசம் ஏதுவாம். எங்ஙனம்: உபாத்தியாயாது மதத்தில் சர்ப்பமுதலிய அத்தியாசத்திற் கேதுவாகிய இந்திரிய சையோகம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. கடமுதலிய அத்தியாசத்திற் கேதுவாகிய இந்திரிய சையோகம் அங்கீகரிக்கப்படவில்லை; சம்பவிக்கிறது மில்லை.

ஆதலால், இந்திரிய சையோகத்தின் அபாவகாலத்தைய சர்ப்பமுதலிய அத்தியாச முண்டாகிறதில்லை. கடமுதலிய அத்தியாசம் இந்திரிய சையோகமின்றியும் உண்டாகின்றது. இவ் வியவஸ்தை சம்பவிக்கின்றது. அங்ஙனமே எங்கள் மதத்திலும் பிராதிபாஸிக சர்ப்பமுதலிய அத்தியாசத்திற்கேது அநாவிருதப் பிரகாசமாம். ஆதலால், ஆவரண பங்கத்தின்பொருட்டுச் சர்ப்பமுதலிய அத்தியாசத்திற்கு முன் இதுவெனும் வடிவ சாமாநியஞானமாகிய பிரமையின் அபேக்ஷை இருக்கின்றது. கடமுதலிய அத்தியாசத்திற்கு ஏது சாதாரணப் பிரகாசமாம். ஆதலால், ஆவரிக்கப்படாத பிரகாசத்தின் சற்பாவத்தால் கடமுதலிய அத்தியாசத்தில் விருத்தியின் அபேக்ஷை யில்லை. ஆதலால், சாமாநிய ஞானவடிவ விருத்தியின் அபாவகாலத்தில் சர்ப்பாதி அத்தியாச முண்டாகிறதில்லை. கடமுதலிய அத்தியாசம் விருத்தியின்றி உண்டாகின்றதென்னும் வியவஸ்தை சம்பவிக்கின்றது. தர்மிஞானவாதியின் இக் கூற்றும் அசங்கதமாம்.

ஏனெனின், பிராதிபாஸிக அத்தியாசத்திற்கு முன் இந்திரிய ஜந்நிய பிரமைவடிவ அந்தக்கரணத்தின் விருத்தி நியம

மாக உண்டாகின்றது. இதற்கும் சங்கின் பொன்மை அத்தியாசத்திலும் கிணற்றுநீரின் கருமை அத்தியாசத்திலும் வியபிசார முண்டு. ஏனெனின், பிரஹ்மஞான மின்றி எதற்குப் பாத முண்டாகின்றதோ அது பிராதிபாஸிக அத்தியாச மெனப்படுகின்றது. சங்கிற்பொன்மையின் பாதமும், கிணற்றுநீரிற் கருமையின் பாதமும் பிரஹ்மஞானத்திற்கு முன்னரே சங்கின் வெண்மை ஞானத்தாலும் நீரின் வெண்மை ஞானத்தாலு முண்டாகின்றன. ஆதலால், இதுவும் பிராதிபாஸிக அத்தியாசமாம். இவ்விடத்தில் தர்மிஞானவாதியின் பிரக்கிரியை இதுவாம்:—

பிராதிபாஸிக அத்தியாசத்தில் ஆவரிக்கப்படாத பிரகாசத்திற்குக் காரணத்தன்மையின் நியமத்தால் சங்கினேடும் ஜலத்தினேடும் நேத்திரத்தின் சையோகத்தால் இதுவெனும் வடிவ அந்தக்காண விருத்தியினுல் வெளிப்பட்ட சங்கின் அவச்சின்ன சேதநத்திலும் ஜலாவச்சின்ன சேதநத்திலும் பொன்மை கருமைகளின் அத்தியாச முண்டாகின்றது. உபாத்தியாயரது மதத்திலோ சங்கினேடும் ஜலத்தினேடும் நேத்திரத்தின் சையோக முண்டாகப் பொன்மைநிற கருமை நிறங்களின் அத்தியாச முண்டாகின்றது. இதுவெனும் வடிவ விருத்தியின் அபேக்ஷை யில்லை.

ஆகலால், தர்மிஞானவாதியை இது கேட்கவேண்டும்:— இதுவெனும் வடிவவிருத்திக்கு விஷயம் உருவமின்றிய கேவல சங்குமுதலிய திரவியமா? அல்லது உருவவிசிஷ்ட சங்கும் உருவவிசிஷ்ட ஜலமும் இதுவெனும் வடிவவிருத்திக்கு விஷயமா? உருவத்தை விட்டுக் கேவல திரவியத்தினை விருத்தி விஷயஞ் செய்கின்றதெனக் கூறின் அது பொருந்தாது. ஏனெனின், நேத்திர ஜந்நிய விருத்திக்கு இது சுபாவமாம். உருவத்தினை விஷயஞ் செய்கின்றது. உருவ விசிஷ்டதிரவியத்தினையும் விஷயஞ் செய்கின்றது. கேவல திரவியத்தை நேத்திரஜந்நிய விருத்தி விஷயஞ் செய்கிறதில்லை. உருவத்தைவிட்டுக் கேவல திரவியத்தை விஷயஞ் செய்யின் கடத்தின் சக்ஷு இந்திரிய ஜந்நிய ஞானமுடையவனுக்குக் கடத்தின் நீலத்தன்மைமுதலியவற்றில் சந்தேக முண்டாதல்வேண்டும். உருவமின்றிய காற்றுமுதலிய திரவியங்களின் சாக்ஷுஷஞானமு முண்டாதல் வேண்டும்.

ஆதலால், கேவலம் திரவியகோசர இதுவெனும் வடிவ சாக்ஷுஷவிருத்தி சங்குமுதலியவற்றின் சாமானியஞானரூப மாகாது. உருவவிசிஷ்ட சங்கைக் கோசரிப்பதாம். அங்ஙனமே உருவவிசிஷ்ட ஜலத்தைக் கோசரிப்பதும் விருத்தி எனின், இது கேட்கத்தக்கதாம்:—வெண்மை உருவ விசிஷ்ட சங்கினை யும் வெண்மை உருவவிசிஷ்ட ஜலத்தினையும் அவ் விருத்தி விஷயஞ் செய்கின்றதா? அல்லது அத்தியஸ்தரூப விசிஷ்டத்தை விஷயஞ் செய்கின்றதா? முதற் பக்ஷத்தைக் கூறுமிடத்து வெண்மை உருவினை விஷயஞ் செய்வதாய் இதுவெனும் வடிவ விருத்திக்குப் பிற்காலத்தில் முன் விருத்திக்கு விரோதியாகிய பொன்மைப்பிரமமும் நீலப்பிரமமும் உண்டாகா. ஆதலால், பொன்மைப்பிரமத்திற்கும் நீலப்பிரமத்திற்கும் முன் வெண் ணிற விசிஷ்டசங்கு ஜலங்களின் இதுவெனும் வடிவஞானம் சம்பவியாது. அங்ஙனமே அத்தியஸ்தரூப விசிஷ்டகோசர இது வெனும் வடிவவிருத்தியினை அங்கீகரிக்கின், சங்கினிடத்து அத்தியஸ்தமான பொன்மை நிறமும் ஜலத்தி லத்தியஸ்தமான நீலநிறமு மிருக்கின்றன; அதன் விசிஷ்டஞானமே பிரமமாம். அதனைப் பிரமத்திற்கு ஏதுவாகுந்தன்மையிற் கூறுதலில் ஆத்மாசிரயமுண்டாகுதலால் சம்பவியாது. அன்றியும், தர்மி ஞானவாதி இதுவெனும் வடிவஞானமாகிய பிரமைவடிவமே அத்தியாசத்திற்கு ஏதுவாமென்று கொண்டிருக்கின்றனர். அத்தியஸ்தரூப விசிஷ்டத்தின் ஞானத்திற்குப் பிரமத்தன்மை யிருத்தலால் பிரமைவடிவ தர்மிஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவாமென்னும் தர்மிஞானவாதியின் கூற்றிற்குப் பங்க முண் டாகும். இவ்வாற்றால் சங்கிற் பொன்மைப்பிரமத்திற்கும் ஜலத் தில் நீலத்தன்மைப் பிரமத்திற்கும் முன் அதிஷ்டானத்தின் சாமானியஞானம் பொருந்துகிறதில்லை. அதிஷ்டான இந்திரியங்க ளின் சையோகத்தினது சம்பவ மிருக்கின்றது. ஆதலால், சாமானியஞானத்திற்கு வியபிசாரமும் இந்திரிய சையோகத் திற்கு வியபிசார மின்மையு மிருத்தலால் அத்தியாசத்திற்கு ஏது அதிஷ்டானத்திற்கும் இந்திரியத்திற்கும் உள்ள சையோகமாம்; சாமானிய ஞானம் ஏதுவன்று. இது உபாத்தியாயர் மதமாம்.

121. பிராசீன ஆசாரியராகிய தர்மிஞானவாதியின் மதம்

பிராசீன ஆசாரியர் தர்மிஞானவாதியாம். தர்மிஞானத் திற்குச் சங்கின் பொன்மைமுதலிய அத்தியாசத்தில் எந்த

வியபிசாரம் சொல்லப்பட்டதோ, அதற்குச் சமாதானம் இங்ஙனம் கூறுகின்றார்:—அத்தியாசமாத்திரத்தில் சாமாநியஞானம் ஏது வன்று. ஆனால், அத்தியாச விசேஷத்தில் சாதிருசிய ஞானத்தன்மை வடிவமாகச் சாமாநியஞானத்திற்குக் காரணத் தன்மை சொல்லுதற்கு அத்தியாசங்களின் பேதத்தைக் கூறுகின்றார்:—பிராதிபாஸிக அத்தியாசம் இருவகையினதாம்.

ஒன்றோ தர்மியின் விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப் பட்டதாம். மற்றையது விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப் படாததாம். கரிய முதுகுடைமை முக்கோணத்தன்மைமுதலிய விசேஷ தர்மங்களின் ஞான முண்டாயின் இரஜத அத்தியாச முண்டாகிறதில்லை. ஆதலால், இரஜத அத்தியாசமோ விசேஷ ஞானத்தால் பிரதிபந்திக்கப்படுவதாம். அங்ஙனமே சர்ப்பமுதலிய அத்தியாசத்தினையும் அறிந்துகொள்க. வெண்மைவடிவ விசேஷதர்மத்தின் ஞான முண்டாகியும், சங்கில் பீதத்தன்மை (பொன்மை) அத்தியாசமும் ஜலத்தில் நீலத்தன்மை அத்தியாசமும் உண்டாகின்றன; ஆதலால், முற்கூறிய அத்தியாசம் விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப்படாததாம்.

அங்ஙனமே உருவ மின்மையாகிய விசேஷ தர்மத்தின் ஞான முண்டாகியும், ஆகாயத்தில் நீலத்தன்மை அத்தியாசமும் விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப்படாததாம். கற்கண்டில் கைப்பத்தியாசமும் விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப்படாத தாம். ஏனெனின், ஆகாயம் நீலநிறமன்று என்னும் நிச்சயமுடையவனுக்கும், அநேகமுறை கற்கண்டில் மதுரத்தன்மையின் நிச்சய முடையவனுக்கும் ஆகாயத்தில் நீலத்தன்மை அத்தியாசமும் பித்ததோஷத்தால் கற்கண்டில் கைப்பத்தியாசமு முண்டாகின்றன. இவ்வாற்றால் இருவகை யத்தியாசங்க ளிருக்கின்றன. அவற்றில் அந்திய அத்தியாசமோ அதிஷ்டான அத்தியஸ்தங்களின் சாதிருசிய ஞானமின்றியே உண்டாகின்றது. அதிஷ்டானத்திலும் அத்தியஸ்தத்திலும் விரோதி தர்மங்க ளிருக்கின்றன. ஆண்டுச் சாதிருசியத்தின் சம்பவ மில்லை. ஒன்றற்கொன்று வைதர்மியஞானம் இருக்கினும் முற்கூறிய அத்தியாச முண்டாகின்றது.

ஆதலால், பிரமவடிவ சாதிருசியஞானமும் அவ் வத்தியாசத்திற்கு ஏதுவன்று. ஆனால், விசேஷஞானத்தால் எதற்குப்

பிரதிபந்த முண்டாகின்றதோ, அப்படிப்பட்ட இரஜதம் சர்ப்ப முதலிய அத்தியாசத்தில் அதிஷ்டானத்திற்கு அத்தியஸ்தத்தோடுள்ள சாதிருசியஞானம் ஏதுவாம். விசேஷ ஞானத்தால் பிரதிபந்திக்கப்பட்ட அத்தியாசத்தினையும் சாதிருசியஞான ஜந்நியமெனக் கொள்ளாது துஷ்ட இந்திரிய சையோக ஜந்நியமாகவே கொள்ளுமிடத்து, சுத்தியில் இரஜதாத்தியாசத்தினைப் போலத் துஷ்ட நேத்திரத்தின் சையோகத்தால் கரியிலும் இரஜதாத்தியாச முண்டாதல் வேண்டும். நெருப்பினால் எரிக்கப்பட்ட கரிய கட்டையினைக் கரி என்பர். இரச்சுவில் சர்ப்பாத்தியாசத்தினைப்போலத் துஷ்ட நேத்திர சையோகத்தால் கடத்திலும் சர்ப்பாத்தியாசம் உண்டாதல்வேண்டும். இவ்வாற்றால் விசேஷ ஞானத்தால் எதற்குப் பிரதிபந்த முண்டாகின்றதோ, அப்படிப் பட்ட பிராதிபாஸிக அத்தியாசத்திலும் சாதிருசியஞானம் ஏதுவாம். சாதிருசியஞானமும் சாமாநியஞானவடிவ தர்மிஞானமேயாம். சுத்தியிலும் வெள்ளியிலும் வெண் பளபளப்புவடிவ சாதிருசிய மிருக்கின்றது. இரஜ்ஜுவிலும் சர்ப்பத்திலும் பூமியின் சம்பந்தம் நீட்சி என்னும் சாதிருசிய மிருக்கின்றது. புருஷனிடத்தும் தாணுவிலும் உயர்ச்சியாகிய சாதிருசிய மிருக்கின்றது. இவ்வாறு அதிஷ்டான அத்தியஸ்தங்களில் சமான தர்மமே சாதிருசிய பதார்த்தமாம். அவற்றின் ஞானத்தினைச் சாமாநியஞான மென்றும், தர்மிஞான மென்றும் கூறுதல் சம்பவிக்கின்றது. இவ்வாற்றால் விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப் படும் பிராதிபாஸிக அத்தியாசம் எதுவோ, அதனிடத்துச் சாதிருசிய ஞானவடிவ தர்மிஞானமே ஏதுவாம். துஷ்ட இந்திரிய சையோகத்திற்குச் சாதிருசிய ஞானவாயிலாக முற்கூறிய அத்தியாசத்தில் உபயோகமாம்.

122. தர்மிஞானவாதியின் மதத்தில் உபாத்தியாயரது சங்கையும் சமாதானமும்

உபாத்தியாயரை அநுசரித்தவர் இவ்வாறு கூறுகின்றனர்:—பிரமாத்திருதோஷ பிரமாணதோஷ பிரமேயதோஷங்களால் தர்மிஞானம் பிரதிபந்திக்கப்படும அத்தியாச முண்டாகின்றது. சாதிருசியஞானத்தினை முற்கூறிய அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கூறின் பிரமாதாவின் தர்மம் ஞானமாகின்றது. ஆதலால், பிரமாத்திரு தோஷத்தால் அத்தியாசத்தின்

ஹேது உண்டாகின்றது. சாதிருசியத்தினை அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கூறின் விஷயதோஷம் உண்டாய் அத்தியாசத்திற்கு ஏதுவாகின்றது.

எங்ஙனம் பிரமாத்திரு தோஷமாகிய சாதிருசிய ஞானத்தினை அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கூறின் கரியில் வெள்ளி அத்தியாசத்தின் ஆபத்திக் (அடைவிற்)குப் பரிகார முண்டாகின்றதோ, அங்ஙனமே விஷயதோஷமாகிய சாதிருசியத்தினை அத்தியாச ஹேதுவெனக் கொள்ளினும் முற்கூறிய ஆபத்தியின் பரிகார முண்டாகின்றது. ஆதலால், சாதிருசியஞானமாகிய தர்மிஞானத்தினை முற்கூறிய அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கொள்ளுதல் பயனின்மையாம் என்றிவ்வாறு உபாத்தியாயரை அநுசரித்தவர் கூறின் அதற்குத் தர்மிஞானவாதியின் சமாதான மிதுவாம். தூரதேசத்தினின்றும் சமுத்திர ஜலத்தில் நீலக்கல்லின் பிரம முண்டாகின்றது. அதுவும் விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப்பட்ட அத்தியாசமாம். ஏனெனின், ஜலத்தில் வெண்ணிறம் ஜலத்தன்மை என்பவற்றின் ஞானத்தால் நீலக்கற் பிரமத்திற்குப் பிரதிபந்த முண்டாகின்றது. ஜலத்தில் நீலக்கல்லின் சாதிருசிய மில்லை. ஆனால், சமுத்திர ஜலத்தில் நீலநிறத்தின் பிரமமுண்டாய் நீலக்கல்லின் பிரம முண்டாகின்றது. ஆண்டு நீல உருவத்தின் ஞானமே பிரமவடிவ சாதிருசிய ஞானமாம்.

ஆதலால், பிரமப் பிரமைகளின் சாதாரணமான சாதிருசிய ஞானமே முற்கூறிய அத்தியாசத்திற்கு ஏதுவாம். சொருபமாகச் சாதிருசியம் ஏதுவன்று. அன்றியும், உபாத்தியாயரை அநுசரித்தவர் இங்ஙனம் கூறுகின்றனர்:—கரிமுதலியவற்றில் வெள்ளிமுதலிய அத்தியாசத்தின் ஆபத்தியைப் பரிகரித்தற் பொருட்டுச் சாதிருசியஞானத்தின் சாமக்கிரியினை முற்கூறிய அத்தியாசத்திற்குக் காரணமாகக் கொண்டிருக்கின்றனர். அதிஷ்டான அத்தியஸ்தங்களில் சமான தர்மவடிவ சாதிருசியமெதுவோ அதனோடு இந்திரியத்திற்குள்ள சுவசையுக்த தாதான்மியவடிவ சம்பந்தமே சாதிருசியஞானத்தின் சாமக்கிரியாம். சமுத்திர ஜலத்தில் நீலக்கல்லின் அத்தியாசத்திற்கு ஏதுவாகிய பிரமசொருப சாதிருசியஞான மிருக்கின்றது.

அதன் சாமக்கிரி தோஷமுடைய இந்திரியத்திற்கு ஜலத்தி லுள்ள சையோகமாம்.

இவ்வாற்ருல் சாதிருசிய ஞானத்தின் சாமக்கிரி எதுவோ அதுவே முற்கூறிய அத்தியாசத்திற் கேதுவாம். சாதிருசிய ஞானத்தினை அத்தியாசத்திற் கேதுவெனக் கொள்ளினும் சாதிருசிய ஞானத்தில் இந்திரிய சம்பந்தத்திற்குக் காரணத் தன்மை அவசியம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆதலால், சாதி ருசிய ஞானத்தின் காரணத்திற்கே அத்தியாசத்திற் காரணத் தன்மை உசிதமாம். அவ் விரண்டற்கும் இடையில் சாதிருசிய ஞானத்தை அங்கீகரித்தல் பயனின்மையாம். சங்கின் பீதத் தன்மைமுதலிய அத்தியாசத்தில் இந்திரிய சம்பந்தத்திற்கே காரணத்தன்மை இருக்கின்றது. அந்த ஸ்தானத்தில் சாதிருசிய ஞானம் சம்பவிக்கிறதில்லை.

ஆதலால் யாண்டுச் சாதிருசியஞானத்தின் அபேக்ஷை இருக்கின்றதோ, ஆண்டும் சாதிருசியஞானத்தின் சாமக்கிரி அத்தியாசத்திற்குக் காரணமாம். சாதிருசியஞானத்திற்குக் காரணத்தன்மை யில்லை. சாதிருசியஞானத்தின் சாமக்கிரிக்கு அத்தியாசத்தின் காரணத்தன்மை அங்கீகரிக்கின், சகல அத்தி யாசத்திலும் ஒரு இந்திரிய சையோகத்திற்கே காரணத்தன்மை பெறப்படுவதாயிருத்தலின் இலாகவமாம். சாதிருசியஞானத் திற்குக் காரணத்தன்மை அங்கீகரிக்கின், விரூப அத்தியாசத் தில் இந்திரிய சையோகத்திற்கு ஏதுத்தன்மையை அங்கீகரி த்து, சாதிருசிய அத்தியாசத்தில் சாதிருசியஞானத்திற்கு ஏதுத்தன்மையை அங்கீகரித்தலில் அத்தியாசத்திற்குக் காரண மிரண்டினைக் கற்பித்தலால் கௌரவமாம். ஆதலால், யாண்டுச் சாதிருசிய ஞானத்திற்கு ஏது கூறுகின்ருரோ, ஆண்டும் சாதி ருசிய ஞானத்தின் சாமக்கிரியாகிய இந்திரிய சம்பந்தமே அத்தியாசத்திற்கு ஏதுவாம்.

இவ்வாறு உபாத்தியாயரது சங்கைக்குத் தர்மிஞானவாதி இச் சமாதானம் செய்கின்ருர்:—இந்திரிய சம்பந்தத்தால் ஞானத்தின் உற்பத்தியே கண்டிருக்கிருேம். ஆதலால், இரஜதமுதலிய விஷயங்களின் உற்பத்தி இந்திரிய சம்பந்தத்தால் சம்பவிக்கிற தில்லை. சாதிருசிய ஞானத்தினை அத்தியாசத்திற்கு ஏதுவெனக்

கொள்ளின் காரண மிரண்டின் கற்பனம் கௌரவ மெனப்பட்டது; அது அசங்கதமாம். ஏனெனின், தர்மிஞானவாதிக்குக் காரண மிரண்டைக் கற்பித்தலில் எப்படி இருமைச் சங்கையின் கற்பன மிருக்கின்றதோ, அப்படியே உபாத்தியாயரது மதத்தில் சாதிருசிய ஞானத்தின் சாமக்கிரியினை அத்தியாசத்தின் காரணமெனக் கற்பித்தலில் காரணத்திற்கு அதிக சரீர கற்பனமாம். சாதிருசியஞான சாமக்கிரியின் சொரூபத்தில் அடங்கியது சாதிருசியஞானமாம். ஆதலால், உபாத்தியாயரது மதத்தில் சாதிருசியஞான சாமக்கிரி அதிக சரீரமுடைய அத்தியாசத்தின் ஏதுவென்று கொள்ளப்படுகின்றது. இவ்வாற்றால் இலாகவ கௌரவங்களோ இரண்டு மதங்களிலும் சமமாம். ஞானத்தின் சாமக்கிரியினால் விஷயத்தினது உற்பத்தியின் அசம்பவவடிவ யுக்தியின் விரோதம் உபாத்தியாயரது மதத்தில் அதிக தோஷமாம். ஆதலால், சாதிருசியஞானமே முற்கூறிய அத்தியாசத்திற் கேதுவாம். சாதிருசிய ஞானத்தின் சாமக்கிரி ஏதுவன்று.

123. உபாத்தியாயர் சாதிருசியஞானம் அத்தியாசத்திற்குக் காரணமாதலைக் கண்டித்தல்

இவ்வாறு தர்மிஞானவாதிகள் சாதிருசிய ஞானத்தன்மை வடிவாகச் சாமாநியஞானத்திற்கு விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப்படும் அத்தியாசத்தில் காரணத்தன்மை கூறுவாராயின், இவ்வாறு உபாத்தியாயர் மதத்திற் சமாதான முளது:— விரூபத்திலும் அத்தியாச மிருத்தலால் சகல அத்தியாசங்களினுமோ சாதிருசியஞானத்திற்குக் காரணத்தன்மை சம்பவியாது. ஆனால், கரிமுதலியவற்றில் வெள்ளிமுதலிய அத்தியாசத்தைப் பரிகரித்தற்பொருட்டு விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப்படும் அத்தியாசத்திற்றானே சாதிருசியஞானத்திற்கு ஏதுத்தன்மை அங்கீகரித்திருக்கின்றனர். ஆண்டும் வெள்ளி முதலிய அத்தியாசத்தில் எங்ஙனம் கரிய்முதுகு முக்கோணத் தன்மைமுதலிய விசேஷ தர்மங்களின் ஞானம் அத்தியாசத்திற்குப் பிரதிபந்தகமோ, அங்ஙனமே விசேஷ தர்மஞானத்தின் சாமக்கிரியும் அத்தியாசத்திற்குப் பிரதிபந்தகமாயிருத்தலின், கரிமுதலியவற்றில் வெள்ளிமுதலிய அத்தியாசத்தின் ஆபத்தி உண்டாகிறதில்லை. ஆதலால், சாதிருசியஞானத்திற்கு

அத்தியாசத்தின் ஏதுத்தன்மை அங்கீகரித்தல் பயனிலதாம். அங்ஙனமன்றேு:—எப் பதார்த்தத்தின் ஞானம் எதில் பிரதிபந்தகமாகின்றதோ, அப் பதார்த்தத்தினது ஞானத்தின் சாமக்கிரியும் அதற்குப் பிரதிபந்தகமாம் என்பது நியமம்.

எங்ஙனம்: பர்வதத்தில் வந்நியினது அநுமிதியின் பிரதிபந்தகம் வந்நியபாவத்தின் ஞானமாம். அதன் சாமக்கிரி வந்நியபாவ வியாப்பியத்தின் ஞானமாம். ஏனெனின், வியாப்பியத்தின் ஞானத்தால் வியாபகத்தின்ஞான முண்டாகின்றது. எங்ஙனம் வந்நி வியாப்பியம் தூமமோ, அதன் ஞானத்தால் வியாபக வந்நியின் ஞான முண்டாகின்றதோ, அங்ஙனமே வந்நியபாவத்தின் வியாப்பியம் ஜலமுதலியனவாம் அவற்றின் ஞானத்தால் வந்நியின் அபாவத்தினது ஞான முண்டாகின்றது. ஆதலால், வந்நியபாவத்தினது ஞானத்தின் சாமக்கிரி வந்நியபாவத்தினது வியாப்பியத்தின் ஞானமாம். வந்நியினது அநுமிதியினது பிரதிபந்தகம் வந்நியபாவத்தின் ஞானமாம். அவ் வந்நியபாவஞானத்தின் சாமக்கிரியாகிய வந்நியபாவத்தினது வியாப்பியத்தின் ஞானமும் வந்நிய நுமிதியின் பிரதிபந்தகமாம்.

இவ்வாற்ருல் பிரபந்திகஞானத்தின் சாமக்கிரியும் பிரதிபந்தக மாகின்றது. பிரதிபந்தகத்தின் சாமக்கிரியினைப் பிரதிபந்தகமெனின், தாகத்தின் பிரதிபந்தகமாகிய மணி எதுவோ, அதன் சாமக்கிரிக்குத் தாகத்தின் பிரதிபந்தகத்தன்மையின் வியபிசார மிருக்கின்றது அங்ஙனமாயினும் பிரதிபந்தகஞானத்தின் சாமக்கிரிக்குப் பிரதிபந்தகத்தன்மையை அங்கீகரித்தலில் வியபிசார மில்லை. இவ்வாற்ருல் அத்தியாசத்தின் பிரதிபந்தகமாகிய விசேஷஞானம் எதுவோ அதன் சாமக்கிரியும் அத்தியாசத்தின் பிரதிபந்தகமாம். சுத்தியில் வெள்ளி யத்தியாசத்தின் பிரதிபந்தகம் நீலத்தன்மை உருவ விசேஷதர்மத்தின் ஞானமாம். அதன் சாமக்கிரி நீலபாகத்தை வியாபித்த நேத்திர சையோகமாம். அதுவும் வெள்ளி அத்தியாசத்தின் பிரதிபந்தகமாம்.

ஏனெனின், நீலபாகத்தில் சுத்தியோடு நேத்திர சையோக முண்டாகச் சுத்திஞானமே உண்டாகின்றது; வெள்ளிப்பிரம முண்டாகிறதில்லை. சுத்தியின் கருமைக்கு வேருன பாகமாகிய வெண் பளபளப்புத்தன்மையுள்ள இடம் எதுவோ அதனேடு

நேத்திரத்தின் சையோக முண்டாக வெள்ளிப்பிரம முண்டா கின்றது. இவ்வாற்றால் நீல உருவமுடைய தர்மியின் ஞானம் வெள்ளி அத்தியாசத்தின் பிரதிபந்தகமாம். நீல உருவத்தின் ஆசிரயத்தோடு நேத்திரத்தின் சையோகசம்பந்தமும், அங்ஙனமே நீல உருவத்தோடு நேத்திரத்தின் சையுக்த தாதான்மிய சம்பந்தமும் பிரதிபந்தக ஞானத்தின் சாமக்கிரியாம். அதுவும் வெள்ளி அத்தியாசத்தின் பிரதிபந்தகமாம். கரியினோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாயின் அப்போது நீலஉருவ விசிஷ்டத்தினோடுதான் உண்டாகின்றது. ஆதலால், கரியினோடு நேத்திரத்தின் சையோகமும் அதன் நீல உருவத்தோடு சையுக்த தாதான்மிய சம்பந்தமும், வெள்ளிப் பிரதிபந்தகஞானத்தின் சாமக்கிரியாயிருக்க, கரியில் வெள்ளி அத்தியாசத்தின் பிராப்தியே யில்லை. அதனைப் பரிகரித்தற்பொருட்டுச் சாதிருசிய ஞானத்திற்கு அத்தியாசத்தின் ஏதுத்தன்மையை அங்கீகரித்தல் பயனின்மையாம்.

124. தர்மிஞானவாதியினால் உபாத்தியாயரது மதத்தில் தோஷமும் அதன் பரிகாரமும்

புண்டரீக (தாமரை) வடிவமாகக் கத்தரிக்கப்பட்ட படத்தில் புண்டரீகப்பிரமம் உண்டாகின்றது. விஸ்தரிக்கப்பட்ட படத்தில் புண்டரீகப்பிரமம் உண்டாகிறதில்லை. ஆதலால், சாதிருசிய ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவாம் என்னும் இத்தோஷத்தை உபாத்தியாயர் மதத்தில் தர்மிஞானவாதி கூறுகின்றார். அதற்கும் அத்தியாசப் பிரதிபந்தக விசேஷஞானத்தின் சாமக்கிரியினை அத்தியாசத்தின் பிரதிபந்தகமாகக் கொள்ளுதலால் சமாதான முண்டாகின்றது:—விஸ்தார விசிஷ்ட படத்தோடுண்டாம் நேத்திரத்தின் சம்பந்தம் படத்தின் விசேஷ ஞானத்தின் சாமக்கிரியாம். யாண்டு விஸ்தரிக்கப்பட்ட படத்தோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டுப் புண்டரீக அத்தியாச முண்டாகிறதில்லை. யாண்டுப் புண்டரீக வடிவ படத்தோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டுப் படத்தின் விசேஷ ஞானத்தினது சாமக்கிரியின் அபாவமிருத்தலால் புண்டரீகாத்தியாச முண்டாகின்றது.

யாண்டுச் சமுத்திரஜலத்தின் சமுதாயத்தில் நீலக் கற்றலத்தின் அத்தியாச முண்டாகின்றதோ, ஆண்டு விசேஷ ஞானத்

தின் சாமக்கிரி யிருக்கின்றது. ஏனெனின், நேத்திர சையுக்த தாதான்மிய சம்பந்தம் வெண்மைக்குண சொரூப விசேஷஞானத்திற்கு ஏதுவாம். சாக்ஷுசஞானத்திற்கு ஏது ஜலத்தோடு ஆலோக சையோகமுமாம். அங்ஙனமே ஜலராசித்தன்மை வடிவ விசேஷத்தின் வியஞ்சகமான தரங்கமுதலியவற்றின் பிரத்தியக்ஷமு முண்டாகின்றது. இவ்வாற்றுல் சமுத்திரத்தினது ஜலசமுதாயத்தின் விசேஷ ஞானத்தினது சாமக்கிரியில் மூன்று பதார்த்தங்க ளிருக்கின்றன. க. வெண்மை உருவத்தோடு நேத்திர சையுக்த தாதான்மியம், உ. ஆலோக சையோகம், ௩. ஜலராசித்தன்மையின் வியஞ்சகமான தரங்கமுதலியவற்றின் பிரத்தியக்ஷம் என்னும் இம்மூன்று மிருந்தும், சமுத்திரத்தின் ஜலசமுதாயத்தில் நீலக் கற்றலத்தின் பிரம முண்டாகின்றது. ஆதலால், விசேஷ தரிசனத்தின் சாமக்கிரிக்கு அத்தியாசத்தினது பிரதிபந்தகத்தன்மையின் வியபிசார மிருக்கின்றது.

அங்ஙனமாயினும் பிரதிபந்தகமின்றிய விசேஷ தரிசனத்தின் சாமக்கிரி அத்தியாசத்தின் பிரதிபந்தகமாம். பிரதிபந்தகத்தோடு கூடிய விசேஷதரிசனத்தின் சாமக்கிரி அத்தியாசத்தின் பிரதிபந்தகமன்று. யாண்டுச் சமுத்திரத்தின் ஜலசமுதாயத்தில் நீலக்கற்றலத்தின் அத்தியாச முண்டாகின்றதோ, ஆண்டுச் சமுத்திர ஜலத்தில் நீல உருவத்தின் பிரமமுண்டாய் நீலச்சிலையின் அத்தியாச முண்டாகின்றது. நீல உருவத்தின் பிரம ஞானமிருக்க, ஜலத்தில் வெண்மை உருவத்தின் ஞானம் உண்டாகிறதில்லை. ஆதலால், ஜலத்தின் விசேஷ தர்மமாகிய வெண்மை உருவம் எதுவோ அதன் ஞானத்தைப் பிரதிபந்திப்பது நீல உருவத்தின் பிரமமாம். அங்ஙனமே தூரத்தன்மைத் தோஷத்தினுல் ஜலராசித்தன்மையும் வியஞ்சகமான அலைமுதலியவற்றின் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை. ஆதலால், ஜலராசித்தன்மை வடிவ விசேஷஞானத்தின் பிரதிபந்தகம் தூரத்தன்மைத் தோஷமாம். ஆதலால், பிரதிபந்தகத்தோடு கூடிய விசேஷ ஞானத்தின் சாமக்கிரி அத்தியாசத்திற்கு விரோதியா யிருத்தலால் சமுத்திரஜல சமுதாயத்தில் நீலக்கற்றலத்தின் அத்தியாச முண்டாகின்றது; அதன் பிரதிபந்த முண்டாகிறதில்லை. விரிவாய்ச் சொல்வதிலென்? சகல காரணங்களினின்றும் தமது காரியோற்பத்தி பிரதிபந்தக மின்றியதனுலேயே உண்

டாகின்றது. பிரதிபந்தகமிருக்க எந்தக் காரணத்தினாலும் காரியமுண்டாகிறதில்லை. ஆதலால், பிரதிபந்தகத்தின் அபாவமும் சகல காரியங்களின் சாதாரண காரணமா யிருத்தலால் பிரதிபந்தமிருக்க நேத்திரசையோகமுதலிய சகல அசாதாரண காரணங்களின் சற்பாவத்திலும் விசேஷஞானத்தின் சாமக்கிரி யில்லை ஏனெனின், சகல காரணங்களோடுங் கூடிய காரணத்தினைச் சாமக்கிரி என்பர். யாண்டு அநேக காரணமிருந்தும் ஒன்றில்லையோ, ஆண்டுச் சாமக்கிரி உண்டாகிறதில்லை. இவ்வாற்ருல் ஜலத்தில் நீலத்தன்மைப் பிரமத்திற்கு வெண்மை யுருவத்தின் ஞானத்திலும், தூரத்தன்மைத் தோஷத்திற்கு ஜலராசித்தன்மை ஞானத்திலும் பிரதிபந்தகத்தன்மை இருக்கின்றது. அந்தப் பிரதிபந்தகமிருக்க, பிரதிபந்தக மின்மையினால் நிகழும் விசேஷஞானத்தின் சாமக்கிரியின்மையால் நீலக்கற்றலத்தின் பிரமம் சம்பவிக்கின்றது.

ஈண்டு இப் பொருள் அறியத்தக்கதாம்:—சமீபத்திலுள்ள புருஷனுக்குப் பிரகாசமுடைய தேசத்தில் நேத்திர சையோகமுண்டாகியும் நீல உருவத்தின் பிரமம் உண்டாகின்றது. ஆதலால், ஜலத்தில் நீல உருவத்தினது பிரமத்திற்கு விசேஷ ஞானத்தினாலாவது அதன் சாமக்கிரியினாலாவது பிரதிபந்த முண்டாகிறதில்லை. ஆதலால், விசேஷஞானத்தால் பிரதிபந்திக்கப் படாததா யிருத்தலின் ஜலத்தின் வெண்மை யுருவத்தோடு நேத்திரத்தின் சையுக்த தாதான்மிய சம்பந்த முண்டாகியும் ஜலத்தில் நீல உருவத்தின் பிரமம் சம்பவிக்கின்றது. தர்மிஞானவாதியின் மதத்தில் முற்கூறிய பிரமமே சாமாநிய ஞானத்தன்மை வடிவத்தால் சமுத்திர ஜலத்தில் நீலக்கற்றல அத்தியாசத்திற்கு ஏதுவாம்; உபாத்தியாயரது மதத்தில் தோஷத்தன்மை வடிவத்தால் விசேஷஞானத்தின் பிரதிபந்தகமாம், அல்லது பிரதிபந்தத்தின் பாவமின்றிய விசேஷஞானத்தினது சாமக்கிரியின் அபாவத்தைச் சம்பாதித்தல் வாயிலாகச் சிலாதல அத்தியாசத்திற்கு ஏதுவாம். இவ்வாற்ருல் உபாத்தியாயரது மதத்தில் சாமாநியஞானமாகிய தர்மிஞானத்திற்கு அத்தியாசத்திற்குக் காரணமாதற்றன்மை யில்லை. என்ருலும் கரிமுதலியவற்றில் வெள்ளி யத்தியாசத்தின் அபாவம் சமபவிக்கின்றது. ஆதலால், அத்தியாசத்தில் தர்மிஞானத்தினது காரியத்

தன்மையின் அபாவத்தால் காரியம் சம்பவியாமையின் தர்மி ஞானமாகிய இதுவெனும் வடிவப்பிரமா விருத்தியைக் கற்பித்தல் சம்பவியாது. இவ்வாற்றால் அநுபவாநுசாரமாகவாவது காரிய அநுபபத்தியினாவாவது இதுவெனும் வடிவவிருத்தி அங்கீகரிக்கப்பட்டிருந்ததனை விலக்கினார்.

125. உபாத்தியாயரது மதத்தில் தர்மிஞானவாதியின் சங்கையும் சமாதானமும்

அங்ஙனமாயினும், தர்மிஞானவாதி இது கூறுகின்றார்:—விஷயத்தோடு இந்திரியத்தின் சம்பந்தமே அந்தக்கரணத்தின் விஷயாகார விருத்திக்கு ஏதுவாம். சுத்திமுதலிய விஷயங்களோடு நேத்திரத்தின் சையோகமுண்டாக இதுவெனும் வடிவ விருத்தி செவ்வையாக உண்டாகாது. வேறிடத்துப் பொருந்துதல் உண்டாயின் விஷயத்தோடு இந்திரியத்தின் சையோகமுண்டாகியும் அவ் விஷயத்தின் ஞான வடிவவிருத்தி உண்டாகிறதில்லை. வேறிடத்துப் பொருந்துதலின்றியதற்கு விஷயத்தோடு இந்திரிய சையோகமுண்டாயின் அவ் விஷயவடிவ விருத்தி அவசியமுண்டாகின்றது. ஆதலால், வேறிடத்துப் பொருந்துதல் வடிவப் பிரதிபந்தகத்தின் இன்மையோடுகூடிய நேத்திர சையோகத்தால் இரஜ்ஜு சுத்திமுதலியவற்றை விஷயஞ் செய்வதாய் அந்தக்கரணத்தின் இதுவெனும் வடிவவிருத்தி உண்டாகின்றது. அவ் விருத்தி நேத்திரமுதலிய பிரமாண ஜந்நியமாயிருத்தலானும் சுத்திமுதலியவற்றின் பாதிக்கப்படாத இதுவெனுந் தன்மையைக் கோசரிப்பதாயிருத்தலானும் பிரமை வடிவமாகின்றது. இவ்வாற்றால் காரண சற்பாவத்தால் இதுவெனும் வடிவப் பிரமையின் கற்பனம் அங்கீகரிக்கின், உபாத்தியாயரது சமாதானம் இங்ஙனமாகின்றது:—

நேத்திர சையோகமுதலியவற்றால் இதுவெனும் வடிவவிருத்தி உண்டாகின்றது. ஆனால், தோஷத்தோடு கூடிய நேத்திரஜந்நியமாகின்றது. இது இரஜதம் என்பதாகத் தனது காலத்தில் உற்பத்தியாகிய மித்தியாரஜதத்தினை விஷயஞ் செய்வதாய் உண்டாகின்றது. ஆதலால், அவ் விருத்தி பிரமவடிவமாகின்றது; பிரமையாகிறதில்லை. உபாத்தியாயரது மதத்தின் நிச்சயம் இதுவாம்:—தோஷத்தோடு கூடிய இந்திரியத்தின் சம்பந்தத்தில் விஷயசேதனத்தின்கண்ணுள்ள அவித்தையில் காரியத்

திற்கு எதிர்முகமாகுந் தன்மை வடிவினதாகிய க்ஷோபமுண்டாய்ச் சர்ப்பமிரஜத முதலியவடிவ அவித்தையின் பரிணாமமுண்டாகின்றது. நேத்திரசையோகத்தின் பிற்கணத்தில் அவித்தையில் க்ஷோப முண்டாகின்றது. அதன் பிற்கணத்தில் அவித்தையின் சர்ப்பமிரஜதமுதலிய பரிணாம முண்டாகின்றது. எந்த க்ஷணத்தில் சர்ப்பம் இரஜதமுதலிய அவித்தையின் பரிணாமமுண்டாகின்றனவோ, அதே க்ஷணத்தில் அச் சர்ப்பமிரஜத முதலியவற்றினை விஷயஞ் செய்வதாகிய இது இரஜதமென்னும் அந்தக்கரணத்தின் விருத்தி வடிவ ஞான முண்டாகின்றது. எந்தத் துஷ்ட நேத்திர சையோகத்தால் அவித்தையில் க்ஷோபவாயிலாக சர்ப்ப மிரஜதமுதலியவற்றின் உற்பத்தி உண்டாகின்றதோ, அதே சையோகத்தால் அந்தக்கரணத்தின் பரிணாமவடிவ விருத்தியாகிய ஞானத்தின் உற்பத்தி உண்டாகின்றது.

இந்திரிய சையோகத்திற்கு மறைப்பின்றிய பிற்கணத்தில் ஞானத்தின் உற்பத்தி அங்கீகரித்திருக்கின்றனர். நேத்திரசையோகத்தால் ஒரு கணத்தின் மறைப்பினால் சர்ப்பமிரஜத முதலியவற்றின் உற்பத்தி சொல்லப்பட்டது. ஏனெனின், நேத்திர சையோகத்திற்குப் பிற்கணத்தில் அவித்தையின் க்ஷோபம் சொல்லப்பட்டது. அதன் பிற்கணத்தில் சர்ப்பமிரஜத முதலியவற்றின் உற்பத்தி சொல்லப்பட்டது. ஆதலால், அவித்தையின் க்ஷோபகாலத்தில் விருத்திஞானத்தின் உற்பத்தி சம்பவிக்கின்றது. அதன் பிற்கணத்தில் ஆவனவாகிய இரஜதமுதலியவற்றிற்கு ஞானகாலத்தில் உற்பத்தி கூறுதலில் விரோதந் தோற்றுகின்றது. அங்ஙனமாயினும் விரோத மில்லை. ஏனெனின், காரியத்திற்கு எதிர்முகமாகும் அவித்தையின் அவஸ்தையினை க்ஷோப மென்பர்.

எங்ஙனம் காரியத்திற் கெதிர்முகமாய் அவித்தை தனது காரியமாகிய சர்ப்பம் இரஜதமுதலியவற்றை ஆக்குகின்றதோ, அங்ஙனமே அந்தக்கரணமும் நேத்திர சையோகத்தால் ஞான வடிவ காரியத்தின் அபிமுகமாய் ஞானத்தினை ஆக்குகின்றது. ஆதலால், அவித்தைக்கும் அந்தக்கரணத்திற்கும் தமது காரியாபிமுக அவஸ்தைக்கு மறைப்பின்றியபின் ஒருக்ஷண மிருக்கின்றது. அதனின் இரண்டாவது க்ஷணத்தில் அவித்தையின் சர்ப்பம் இரஜதமுதலிய பரிணாம முண்டாகின்றது. அதே

க்ஷணத்தில் அந்தக்கரணத்தின் ஞானரூபபரிணம முண்டாகின்றது. நேத்திர சையோகத்திற்கு மறைப்பின்றிய பிற்கணத்தில் எந்த ஞானத்தின் உற்பத்தியைக் கூறுகின்றனரோ அது க்ஷணகாலம் அதிசூக்ஷ்மமாம். ஆதலால், காரியாபிமுக அவஸ்தையின் க்ஷணமும் காரியத்தினது உற்பத்தியின் க்ஷணமும் ஒரே காலமாம் என்னும் அபிப்பிராயத்தாற் கூறுகின்றனர்.

இவ்வாற்றால் இரஜ்ஜு சுத்திமுதலியவற்றோடு துஷ்ட இந்திரியத்தின் சையோகத்தால் அந்தக்கரணத்தின் பரிணமமாகிய ஞானமும் விஷயாவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அவித்தையின் பரிணமமாகிய சர்ப்ப மிரஜதமுதலியனவும் ஏககாலத்தில் உண்டாகின்றன. அவற்றிற்கு விஷய விஷயித்தன்மை யுண்டு. ஆதலால், அந்தக்கரணத்தின் பரிணமமாகிய விருத்திஞானமும் துஷ்ட இந்திரிய சையோக ஜந்நியமாம்; மித்தியா பதார்த்தகோசரமுமாம். ஆதலால், அது பிரமமாம்; பிரமையன்று. தர்மிஞானவாதியின் மதத்தில் அவித்தையின் க்ஷோபத்திற்கு ஏது சாமாநியஞானமாம். ஆதலால், தர்மிஞானவாதியின் மதத்தில் இதுவெனும் வடிவவிருத்திக்குப் பிற்காலத்தில் க்ஷோபமுடைய அவித்தையின் பரிணமமாகிய சர்ப்ப மிரஜதமுதலியன உண்டாகின்றன. பிற்காலத்து உண்டாகும் பதார்த்தம் பிரத்தியக்ஷ ஞானத்திற்கு விஷய மாகாது. ஆதலால், இதுவெனும் வடிவ விருத்திக்கு விஷயம் சர்ப்பம் இரஜதமுதலிய மித்தியா பதார்த்தங்களாகாது; சுத்தி இரஜ்ஜு முதலியனவாயிருத்தலின் இதுவெனும் வடிவவிருத்தி பிரமையாம். சர்ப்பமிரஜதமுதலியவற்றை விஷயஞ்செய்வது அவித்தையின் பரிணமமாகிய பிரமவிருத்தியாம். இக் காரணத்தால் தர்மிஞானவாதியின் மதத்தில் பிரமவிருத்தி ஐந்திரியகமன்று. நேரே இந்திரிய சம்பந்தத்தால் உண்டாவது எதுவோ அது ஐந்திரியக மெனப்படுகின்றது. பிரமவிருத்தியின் அதிஷ்டானமாகிய இதுவெனும் வடிவவிருத்தி யாதோ, அதன் உற்பத்தி வாயிலாகப் பரம்பரையாய் இந்திரிய சம்பந்தத்திற்குப் பிரமவிருத்தியில் உபயோக மிருக்கின்றது; நேரே இல்லை. உபாத்தியாயரது மதத்தில் சர்ப்ப மிரஜதமுதலியவற்றின் உபாதானவடிவ அவித்தையில் க்ஷோபத்திற்கு நிமித்தம் தோஷமுடைய இந்திரிய சையோகமாம்; ஆதலால், ஒரே இந்திரிய சையோகத்

தால் அவித்தையின் பரிணாமமாகிய சர்ப்ப பிரஜதமுதலியன வும், அவற்றை விஷயஞ்செய்யும் அந்தக்கரணத்தின் பரிணாம மாகிய இதுவெனும் வடிவவிருத்தியும் ஏககாலத்தில் உண்டா கின்றன. இவ்வாற்றால் உபாத்தியாயரது மதத்தில் இது வெனும் வடிவவிருத்தி பிரமரூபமாகவோ உண்டாகின்றது. சாக்ஷாத் இந்திரிய சம்பந்தத்தால் உற்பத்தியாகின்ற தாகலின் ஐந்திரியக மெனப்படுகின்றது. இந்திரிய சம்பந்தத்தால் எந்த இதுவெனும் வடிவவிருத்தி உண்டாகின்றதோ, அது தனது காலத்தில் உற்பத்தியாகிய சர்ப்பம் இரஜதமுதலியவற்றை விஷயஞ்செய்வதாகின்றது. ஆதலால், இது சர்ப்பம், இது இர ஜதம் என்றிவ்வா றுண்டாகின்றது. கேவலம் இதுவெனும் பதார்த்தத்தைக் கோசரிப்ப தாகிறதில்லை.

126. உபாத்தியாயரது மதத்தில் சங்கையும் சமாதானமும்

உபாத்தியாயரது மதத்தில் இச் சங்கை உண்டாகின்றது:—எப் பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, அதனைக் கோசரிப்பதாகவே விருத்தி உண்டாகின்ற தென்பது நியமம். அந்நியத்தோடு இந்திரியத்தின் சம்பந்தத்தால் அந்நிய கோசரவிருத்தி உண்டாகுமாயின், கடத்தோடு இந்திரியத் தின் சம்பந்தத்தால் படகோசரவிருத்தியும் உண்டாதல்வேண் டும். வெகுவாய்ச் சொல்லுவதி லென்ன? ஒரு பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்த முண்டாயின் சகல பதார்த்த கோசர விருத்தியின் ஆபத்தியால் சகல புருஷர்களும் அநாயாசமாகச் சர்வஞ்ஞர்களாதல் வேண்டும். ஆதலால், அந்நிய பதார்த்தத் தோடு இந்திரியத்தின் சம்பந்தத்தால் அந்நியகோசரவிருத்தி சம்பவியாது. ஆனால், எதனோடு இந்திரியத்தின் சம்பந்த முண் டாகின்றதோ, அதனைக் கோசரிக்கும் விருத்தியே உண்டாகின் றது. உபாத்தியாயரது மதத்தில் இரஜ்ஜு சுத்திமுதலியவற் றோடு நேத்திர சையோகத்தால் உற்பத்தியாகிய விருத்தி சர்ப்ப ரஜதாதிகோசரமென்று கொள்ளப்பட்டிருக்கின்றது. அது சம்பவியாது.

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—சுவசம்பந்தத்தோடும் தனது தாதான்மிய முடையதனோடும் இந்திரிய சம்பந்தத்தால் சுவகோசர விருத்தி உண்டாகின்றது. விருத்தியின் விஷயம்

சுவபதத்தின் அர்த்தமாம். எந்தப் பதார்த்தத்தினை விஷயஞ் செய்யும் விருத்தி உண்டாகின்றதோ, அந்தப் பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்தம், அல்லது அப் பதார்த்தத்தின் தாதான்மிய முடையதனோடு இந்திரியத்தின் சம்பந்த முண்டாதல் வேண்டும். பிரமவிருத்தியின் விஷயம் சர்ப்ப மிரஜதமுதலியனவாம். ஆண்டு விருத்தியின் விஷயத்தினோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாகவில்லை. ஆனால், சர்ப்ப மிரஜதமுதலியவற்றின் தாதான்மியமுடைய இரஜ்ஜு சுத்திமுதலியவற்றோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாயிருக்கின்றது. ஏனெனின், அத்தியஸ்தத்திற்கு அதிஷ்டானத்தோடு தாதான்மிய சம்பந்த முண்டாகின்றது. சர்ப்ப மிரஜதமுதலியவற்றின் அதிஷ்டானத் தன்மையை அவச்சேதகஞ் செய்வனவாயிருத்தலின் இரஜ்ஜு சுத்தி முதலியனவும் சர்ப்பமிரஜதமுதலியவற்றின் அதிஷ்டான மெனப்படுகின்றன. ஆதலால், சர்ப்ப மிரஜதமுதலியவற்றின் தாதான்மியமுடைய இரஜ்ஜு சுத்தி முதலியவற்றின் சம்பந்தத்தால் உற்பத்தியாகிய விருத்திக்குச் சர்ப்ப மிரஜத முதலியனவும் விஷயங்களெனல் பொருந்தும். கடத்தில் படத்தின் தாதான்மிய மில்லை. ஆதலால், கட இந்திரியங்களின் சம்பந்தத்தால் உற்பத்தியாகிய விருத்தி படகோசர மாகாது.

இவ்வாற்றால் ஒரு பதார்த்தத்தின் சம்பந்தத்தால்உற்பத்தியாகிய விருத்தி சகல பதார்த்தங்களையும் கோசரிப்ப தாகாது. பிரஹ்மத்திற்குப் பின்னமான எப் பதார்த்தத்திலும் எல்லாவற்றின் தாதான்மியமு மில்லை. பிரஹ்மத்தில் சகலபதார்த்தங்களின் தாதான்மியமு மிருக்கின்றது. ஆனால், பிரஹ்மம் அசங்கமாம். அதனோடு இந்திரியத்திற்குச் சம்பந்தம் சம்பவியாது. ஆதலால், ஒரு பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்தத்தால் விருத்தி உண்டாகவே சர்வஞ்ஞத்தன்மையின் ஆபத்தி இல்லை. தர்மிஞானவாதியின் மதத்தில் சர்ப்பம் இரஜதமுதலிய ஞேயமும், அவற்றின் ஞானமுமாகிய இரண்டும் அவித்தையின் பரிணாமமாம். உபாத்தியாயாது மதத்தில் சர்ப்பம் இரஜதம் முதலியனவோ அவித்தையின் பரிணாமமாம். அவற்றின் ஞானம் முற்கூறியபடி அந்தக்கரணத்தின் பரிணாமமாம். அவ்வந்தக்காணத்தின் பரிணாமம் இந்திரிய சம்பந்தத்தால் உண்டாகின்றது; ஆதலால் ஐந்திரியக மென்பர்.

இவ்வாற்றால் சர்ப்ப ரஜதமுதலியவற்றோடு நேத்திர சையோகத்தின் அபாவ முண்டாகியும், இரஜ்ஜு சுத்திமுதலியவற்றோடு துஷ்டநேத்திர சையோகத்தாற் றோன்றிய சாக்ஷுஷப் பிரமவிருத்திக்கு விஷயம் சர்ப்ப ரஜத முதலியனவாமென்பது உபாத்தியாயரது மதம். "சக்ஷுவினால் சர்ப்பத்தைப் பார்க்கின்றேன், சக்ஷுவினால் இரஜதத்தைக் காண்கின்றேன்" என்னும் அநுவியவசாயத்தினாலும் சர்ப்ப ரஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் பிரமவடிவ சாக்ஷுஷ விருத்தியே சித்தமாகின்றது. இரஜ்ஜு சுத்தி முதலியவற்றைக் கோசரிக்கும் இதுவெனும் வடிவப் பிரமாவிருத்தியில் அபிவியக்தமான (வெளிப்பட்ட) சாக்ஷி கோசரத்தன்மை சர்ப்பரஜதாதிகளுக்குத் தர்மிஞானவாதிகள் அங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் மதத்தில் முற்கூறிய அநுவியவசாயத்தின் விரோத மிருக்கின்றது.

127. தர்மிஞானவாதி அத்தியாசத்தில் பரம்பரையாக நேத்திரத்தின் உபயோக முளதெனலும், உபாத்தியாயர் சங்கின் பீதத்தன்மை அத்தியாசத்தில் நேத்திரத்தின் சாக்ஷாத் உபயோகமுளதெனலும்

தர்மிஞானவாதி இங்ஙனங் கூறுகின்றார்:—சர்ப்ப ரஜத முதலியவற்றின் பிரகாசமோ சாக்ஷிவடிவமாம். ஆனால், அபிவியக்த சாக்ஷியினாலேயே அவற்றின் பிரகாச முண்டாகின்றது. ஆதலால், சாக்ஷியின் அபிவியஞ்சகமாகிய இதுவெனும் வடிவ விருத்தி நேத்திர ஜந்நியமா யிருத்தலால் பரம்பரையாகச் சர்ப்ப ரஜதமுதலியவற்றின் சாக்ஷிவடிவப் பிரகாசத்திலும் நேத்திரத்தின் உபயோக மிருக்கின்றது. ஆதலால், சர்ப்ப ரஜதமுதலியவற்றின் ஞானத்தில் சாக்ஷுஷத்தன்மை வியவகார முண்டாகின்றது. ஆதலால், தர்மிஞானவாதியின் மதத்தில் சர்ப்ப ரஜதமுதலியவற்குச் சாக்ஷிபாஸியத்தன்மை அங்கீகரிக்கினும், முற்கூறிய அநுவியவசாயத்திற்கு விரோத மில்லை. இங்ஙனம் கூறுதலும் அசங்கதமாம்.

ஏனெனின், முற்கூறிய ஸ்தலத்திலோ பரம்பரையாக நேத்திரத்தின் உபயோக மிருத்தலால் சாக்ஷுஷத்தன்மை வியவகாரத்தின் நிர்வாகம் சொல்லப்பட்டது. அங்ஙனமாயினும் சங்

கில் பீதப்பிரம முண்டாகின்றது. ஆண்டுப் பரம்பரையாகவும் நேத்திரத்தின் உபயோகம் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், உருவமின்றிய கேவல சங்கிலோ நேத்திரத்திற்கு யோக்கியதை யில்லை. ஆதலால், உருவ விசிஷ்டத்திற் கூறுமிடத்துச் சங்கின் வெண்மை உருவம் கிரகிக்கப்படுமாயின் பீதத்தன்மையின் அத்தியாசம் உண்டாகாது. இக் காரணத்தால் அத்தியஸ்த பீத உருவ விசிஷ்டத்தில் நேத்திரத்தின் யோக்கியதை அங்கீகரிக்க வேண்டியதாகும். அது தர்மிஞானவாதியின் மதத்திற் சம்பவி யாது. ஏனெனின், அத்தியஸ்த பதார்த்தத்தில் ஐந்திரியகத்து வம் இல்லையென்பது தர்மிஞானவாதியின் மதம். இவ்வாறு உருவ மின்றிய கேவல சங்குஞானத்திலேனும் உருவ விசிஷ்ட சங்கு ஞானத்திலேனும் நேத்திரத்தின் உபயோகம் சம்பவிக்கிற தில்லை. உபாத்தியாயரது மதத்தில் சங்கினோடு நேத்திரத்தின் சம்பந்தமே பீதவடிவ அத்தியாசத்திற்கு ஏதுவாம். அந்த நேத்திரத்தின் சம்பந்தம் உருவமின்றிய கேவல சங்கினோலே னும் வெண்மை உருவ விசிஷ்டத்தினாலேனும் சம்பவிக் கின்றது.

128. தர்மிஞானவாதி கூறும் சங்குப் பொன்மையின் அத்தியாச அபாவமும், உபாத்தியாயர் கூறும் அதன் அநுவாதமும், தோஷமும்

இத்தலத்திலும் தர்மிஞானவாதி இங்ஙனம் கூறுகின்றார்:— யாண்டுச் சங்கில் பீத உருவத்தின் அத்தியாச முண்டாகின்ற தோ, ஆண்டுச் சர்ப்ப மிரஜத முதலியவற்றினைப்போல, பொன் மையின் அத்தியாசமும் சொரூபமாக உண்டாகிறதில்லை. ஆனால், எப்படி ஸ்படிகத்தில் செம்பரத்தம் புஷ்பத்தின்கண்ணுள்ள செம்மையின் சம்சர்க்கத்தின் அத்தியாச மிருக்கின்றதோ, அங் ஙனமே நேத்திரத்தின்கண்ணுள்ள பீதசம்பந்தியாகிய பொன் மையினது சம்பந்தத்தின் அத்தியாசம் சங்கி லிருக்கின்றது. பீதமாகிய பித்தத்தின் ஞானமின்றி அதன் சம்பந்தத்தின் அத் தியாசம் சம்பவியாது. ஆதலால், பீதமாகிய பித்தத்தின் ஞானத் தில் நேத்திரத்தின் உபயோகமிருத்தலால் சங்கபீதத்தின் அத்தியாசத்திலும் பரம்பரையாக நேத்திரத்தின் உபயோக மிருக்கின்றது. ஆதலால், பீதமாகிய சங்கினைக் கண்ணாற் காண் கின்றேன் என்னும் அநுவியவசாயம் சம்பவிக்கின்றது. சங்கில்

பீதஉருவத்தின் சம்பந்தம் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றது. ஆதலால், அந்நியதாக்கியாதிவாதத்தின் ஆபத்தியு மில்லை.

இவ்வாறு தர்மிஞானவாதி கூறுவாராயின் அவர் வார்த்தையில் இது கேட்கவேண்டியதாம்:—சங்கினிடத்துப் பீத உருவத்தின் சம்சர்க்காத்தியாசத்திற்கு ஏது பித்தத்தினது பீதத்தன்மையின் ஞானமாம். அது நேத்திரதேசத்திலுள்ள பித்தத்தினது பீதத்தன்மையின் பிரத்தியக்ஷஞான முண்டாகின்றதா? அல்லது சங்குதேசத்தில் பீதத்திரவியம் அடையப்பட்டதாய் அதனது பீதத்தன்மையின் பிரத்தியக்ஷஞான முண்டாகின்றதா? முதற் பக்ஷத்தைக் கூறின் நேத்திரஸ்தானத்திலுள்ள பீதத்திரவியத்தோடு நேத்திரத்திலுள்ள அஞ்சனத்தினேடு நேத்திரசையோகம் பொருந்தாததுபோல, நேத்திரத்தின் சையோகம் சம்பவியாமையால் அதன் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமோ உண்டாகாது. ஆதலால், நேத்திரத்தின்கண்ணுள்ள பீதமாகிய பித்தத்தினைக் கோசரிப்பது பரோக்ஷவிருத்தியாகும். அந்தப் பரோக்ஷவிருத்தியின்கண்ணுள்ள சாக்ஷியினுல் சங்கின் பீதத்தன்மையினது அபரோக்ஷப்பிரகாசம் உண்டாகாது. எவ்வாற்ருலும் நேத்திரத்தின்கண்ணுள்ள பித்தத்தினது பீதத்தன்மையைக் கோசரிக்கும் சாக்ஷுஷவிருத்தியை அங்கீகரிக்கினும், அவ் விருத்தியின்கண் அபிவியக்த சாக்ஷியோடு நயனதேசத்திலுள்ள பித்தத்தினது பீதத்தன்மைமாத்திரத்தின் சம்பந்த மிருக்கின்றது. சங்கினேடும் சங்கினிடத்துப் பீதத்தன்மையின் சம்பந்தத்தினேடும் சாக்ஷிக்குச் சம்பந்த மில்லை. ஆதலால், சங்கிற்கும் சங்கினிடத்துப் பொன்மையின் சம்பந்தத்திற்கும் சாக்ஷியினேடு சம்பந்தமின்மை யிருத்தலின் பிரகாச முண்டாகலாகாது.

தாற்பரிய மிதுவாம்:— ஜபாகுசும (செவ்வரத்தம்பூ) சம்பந்தமுள்ளதாகிய இரக்தத்தன்மையின் அநிர்வசநீய சம்பந்தத்தின் உற்பத்தி ஸ்படிகத்தில் உண்டாகுங்கால், அவ்விடத்திலோ இரக்கத்தன்மை, ஸ்படிகத்தன்மை, அங்ஙனமே இரக்கத்தன்மையின் சம்பந்த மென்னு மூன்று பதார்த்தங்களும் மூன் இடத்தில் இருத்தலால் ஒருவிருத்தியில் அபிவியக்தமான சாக்ஷிக்கு விஷயமாகின்றன. பீதசங்கின் அத்தியாசத்தில் பீதத்துவம் (பொன்மை) நேத்திரதேசத்தி லிருக்கின்றது. பொன்மை

யின் சம்பந்தத்தோடுகூடிய சங்கு முன் இடத்தி லிருக்கின்றது. ஆதலால், ஒரு விருத்தியில் அபிவியக்த சாக்ஷியினால் மூன்றி னது பிரகாசம் சம்பவியாது. ஆதலால், நயனதேசத்திலுள்ள பித்தத்தினது பொன்மையின் ஞானத்தில் நேத்திரத்தின் உப யோக மிருக்கின்றதென்னும் முதற்பக்ஷம் சம்பவியாது. ஆத லால், சங்குதேசத்தில் அடையப்பட்ட பித்தத் திரவியத்தி னது பீதத்தன்மையின் அபரோக்ஷஞானம் நேத்திரத்தினால் உண்டாகின்றது. அதன்பின் சங்கிற் பீதத்தன்மையின் அநிர் வசநீய சம்பந்தத்தின் உற்பத்தி உண்டாகின்றது.

எங்ஙனம்: குசும்பாவில் சம்பந்தமுள்ளதாகிய படத்தில் குசும்பாத் திரவியத்தினது உருவத்தின் உணர்ச்சி உண்டா கின்றது. ஆண்டு ஒரு விருத்தியில் அபிவியக்த சாக்ஷியினால் குசும்பாத்திரவியமும், இரக்த நிறமும், அங்ஙனமே அதன் சம்பந்தியான படமுமாகிய இவற்றின் பிரகாச முண்டாகின்றது. ஸ்படிகத்தில் செம்மைப்பிரம முண்டாகின்றது. ஆண்டும் ஒரு விருத்தியில் அபிவியக்தமான சாக்ஷியினாலேயே எல்லாவற் றின் பிரகாசமு முண்டாகின்றது. அங்ஙனமே சங்குப்பொன் மைப் பிரமத்திலும் நயனதேசத்தினின்றும் வெளிப்பட்ட பொ ன்மைப்பித்தமும் சங்குதேசத்திற்சென் றடைகின்றது. அதன் அநிர்வசநீய சம்பந்தத்தின் உற்பத்தி சங்கினிடத்து உண்டா கின்றதென்னும் இரண்டாவது பக்ஷத்தை அங்கீகரிக்கின் முற் கூறிய தோஷ மில்லை. ஏனெனின், மஞ்சள்நிறப்பித்தமும் சங்க மும் ஓரிடத்திருப்பனவா யிருத்தலின் மஞ்சள்நிறப் பித்தத் தைக் கோசரிக்கும் சாக்ஷுஷவிருத்தியில் அபிவியக்தமான சாக்ஷியினால் சங்கு, சங்கினிடத்துள்ள பொன்மையின் ஸம்ஸர்க் கம் என்பற்றின் பிரகாசத்தை அங்கீகரித்தலில் ஓர் பாதகமு மில்லை.

இவ்வாற்றால் சங்குதேசத்திற் சென்ற பீதமாகிய பித்தம் யாதோ, அதன் பீதத்தன்மையின் அநிர்வசநீய சம்சர்க்கத்தின் உற்சத்தி சங்கினிடத்து உண்டாகின்றது. சங்குதேசத்திலுள்ள பித்தத்தின் பிரத்தியக்ஷம் நேத்திரஜந்நிய மாகின்றது. அங் ஙனமே சங்கினிடத்துச் சம்சர்க்காத்தியாச முண்டாகின்றது. ஆதலால், பரம்பரையாகச் சங்குப் பொன்மை அத்தியாசத்தி லும் நேத்திரத்தின் உபயோக மிருத்தலால் சாக்ஷுஷத்தன்

மைப் பிரதீதி சம்பவிக்கின்றதென்னும் தர்மிஞானவாதியின் வார்த்தையும் சம்பவியாது. ஏனெனின், சங்குதேசத்தில் பீத உருவமுடைய பித்தத்தின் செல்லுதல் உண்டாமாயின், பீதத் தன்மையின் உணர்ச்சி சங்கினிடத்துச் சகல திருஷ்டாக்களுக்கும் உண்டாதல் வேண்டும்.

129. முற்கூறிய தோஷத்திற்குத் தர்மிஞானவாதியினாற் சொல்லப்படும் (இருமுறை) சமாதானமும், உபாத்தியாயரால் சொல்லப்படும் (இருமுறை) தோஷமும்

தர்மிஞானவாதி இங்ஙனம் கூறுகின்றார்:—தோஷமுடைய நேத்திரத்தால் பித்தம் வெளிப்படுதலை எந்தப் புருஷடன் காண்கின்றானோ, அவனுக்கே சங்கிற் பூசப்பட்ட பித்தத்தினது பொன்மையின் உணர்ச்சி உண்டாகின்றது. எவனுடைய நேத்திரத்திற் பித்ததோஷ மில்லையோ, அவனுக்கு நேத்திரத்தினின்றும் வெளிப்படும் பித்தங் காணப்படுகிறதில்லை. ஆதலால், பித்தத்தினது பொன்மையின் உணர்ச்சி சங்கினிடத் துண்டாகிறதில்லை. எங்ஙனம் பூமியில் எழும்புதலைச் செய்கின்ற பட்சியினது ஆதி எழும்புதற் கிரியையினைக் கண்டு இடைத்தொழிலையும் காண்கின்றவனுக்கேமிக வுயர்ந்தவிடத்தில் பக்ஷியின் உணர்ச்சி உண்டாகின்றதோ, கீழ்இடத்தில் எழும்புதலைச் செய்வதனைக் காணுதவனுக்கு மிக வுயர்ந்தவிடத்துள்ள பக்ஷியின் உணர்ச்சி உண்டாகாதோ, அங்ஙனமே எவனது நேத்திரத்தினின்றும் பீதமாகிய பித்தம் வெளிப்படுகின்றதோ, அவனுக்குமாத்திரம் வெளிப்படுதலின் உணர்ச்சி இருத்தலால் சங்குதேசத்தில் அதன் உணர்ச்சி உண்டாகின்றது; அந்நியனுக் கில்லையென்னும் இத் திருஷ்டாந்தத்தினால் அந்நிய புருஷனுக்குப் பொன்மை ஞானத்தினது ஆபத்தியின் பரிகாரம் கூறின் அது பொருந்தாது. ஏனெனின், எவனுக்கு உயர்ந்த இடத்திலிருக்கும் பக்ஷி காணப்படுகின்றதோ, அவன் அந்நியபுருஷனுக்கு என்னுடைய நேத்திரத்திற்குச் சமீபமாக உன்நேத்திரத்தை வைத்துப்பார் என்று உபதேசஞ் செய்கின்றான்; அல்லது விரலைச் சுட்டினாலும் அந்நிய புருஷனுக்கும் உயரிடத்திலுள்ள பக்ஷியின் உணர்ச்சி உண்டாகின்றது. சங்கிற்பற்றியுள்ள பித்தத்தினது பீதத்தன்மையின் உணர்ச்சி எவ்விதத்தினாலும் அந்நியனுக்கு உண்டாகாமையின்

திருஷ்டாந்தம் விஷமமாம். ஆதலால், சங்குதேசத்தில் பித்தத்தின் செல்லுகை சம்பவியாது.

தர்மிஞானவாதி இவ்வாறு கூறுகின்றார்:—தோஷமுடைய நேத்திரத்தால் வெளிப்பட்ட பீத பித்தத்தின் பொன்மையின் அபரோக்ஷம் தோஷமுடைய நேத்திரத்தினாலேயே உண்டாகின்றது. ஆதலால், அந்நிய புருஷர்களுக்குச் சங்கிற் பொன்மையின் அத்தியாசம் உண்டாகிறதில்லை. இவ்வாற்றால் சங்குதேசத்திலுள்ள பித்தத்தினது பொன்மையின் அபரோக்ஷ அநுபவம் நேத்திரேந்திரியத்தினால் உண்டாகின்றது. நேத்திரத்தினால் அநுபவிக்கப்பட்ட பொன்மையின் அநிர்வசநீய சம்பந்தம் சங்கினிடத்து உற்பத்தியாகின்றது. அதனைச் சாக்ஷி பிரகாசிக்கின்றது. சங்கினிடத்துப் பொன்மைச் சம்பந்தத்தின் உணர்ச்சியில் பரம்பரையாக நேத்திரத்தின் உபயோகமிருத்தலால், சாக்ஷுஷத்தன்மை வியவகாரமும் சம்பவிக்கின்றது.

இவ்வாறு தர்மிஞானவாதியின் சமாதானமும் அநுபூயமான ஆரோபத்திலேயே சம்பவிக்கின்றது. ஸ்மரிக்கப்படும் ஆரோபத்திற் சம்பவியாது. வேறிடத்து அநுபவிக்கப்பட்டதின் வேறிடத் துணர்ச்சியினை அநுபூயமான (அநுபவிக்கப்பட்ட) ஆரோபமென்பர். எங்ஙனம்: கூங்காகிய இடத்தின்கண்ணுள்ள நேத்திரத்தின் பித்தத்தில் அநுபவிக்கப்பட்ட பொன்மையின் சம்பந்தம் எதுவோ, அதன் உணர்ச்சி சங்கினிடத்து உண்டாகின்றது. இது அநுபவிக்கப்பட்டதின் ஆரோபமாம். இவ்வாற்றால் சந்நிதிப்பட்ட பதார்த்தத்தினது தர்மத்தின் உணர்ச்சி அந்நியத்தி லுண்டாகின்றது, ஆண்டு முழுவதும் அநுபூயமான ஆரோபமாம். பிரத்தியக்ஷ அநுபவத்தினது விஷயத்தின் ஆரோபமுண்டாயின் அது அநுபவிக்கப்பட்ட ஆரோப மெனப்படுகின்றது. சந்நிதிப்பட்ட உபாதியின்கண்ணேயே பிரத்தியக்ஷ அநுபவத்தின் விஷயத்தன்மை உண்டாகின்றது. ஜலத்தில் நீலத்தன்மையின் அத்தியாச முண்டாகின்றது. அது ஸ்மர்யமாண (ஸ்மரிக்கப்படும்) ஆரோபமாம். ஸ்மிருதியின் விஷயத்தினை ஸ்மரிக்கப்படுவதென்பர். ஜலத்திற்கு ஆதாரமான பூமி நீலமாயிருக்கின், அல்லது நீலமண்ணால் கலக்கப்பட்ட ஜலமாயிருக்கின், ஆண்டு ஜலத்தின் நீலத்தன்மை அத்தியாசம் அநுபவிக்கப்பட்ட ஆரோபமாகச் சம்பவிக்கின்றது. ஆனால், வெண்பூமியிலுள்ள

நிர்மல ஜலத்திலும் ஆகாயத்திலும் நீலத்தன்மையின் ஸ்மரிக்கப் படு மாரோப மிருக்கின்றது. அந்த ஸ்தானத்தில் நீலஉருவ சம் சர்க்கமுடையதாகிய அதிஷ்டானத்தைக் கோசரிக்கும்சாக்ஷுஷ விருத்தியின் அங்கீகாரம் இன்மையால் பரம்பரையாகவும் நேத் திரத்தின் உபயோகம் சம்பவிக்கிறதில்லை. ஆதலால், முற்கூறிய அத்தியாசத்தில் சாக்ஷுஷத்தன்மை உணர்ச்சி தர்மிஞானவாதி யின் மதத்திற் சம்பவியாது. ஏனெனின், அத்தியஸ்த பதார்த்தத் தினைத் தர்மிஞானவாதியின் மதத்தில் சாக்ஷிபாஸ்யமெனக் கொண்டிருக்கின்றனர். உபாத்தியாயரது மதத்தில் அத்தியஸ்த பதார்த்தத்தின் இந்திரியக விருத்தி உண்டாகின்றது. ஆதலால், முற்கூறிய அத்தியாசத்திலும் சாக்ஷுஷத்தன்மையின் உணர் ச்சி சம்பவிக்கின்றது. ஸ்தனத்தின் மதுரமான பாலில் யாண்டுக் கைப்பிரசத்தின் பிரம முண்டாகின்றதோ, அந்த ஸ்தானத்தில் மதுரமான பால் அதிஷ்டானமாம். திரவியக்கிரகணத்தில் இரஸ னேந்திரியத்திற்கு யோக்கியதை இல்லாமையால் மதுரமான பாலின் உணர்ச்சியிலோ இரஸனேந்திரியத்தின் உபயோகம் சம்பவிக்கிறதில்லை. தர்மிஞானவாதத்தில் அத்தியஸ்த கோசர இந்திரியக விருத்தி உண்டாகிறதில்லை. ஆதலால், மதுரமாகிய பாலில் கைப்புப் பிரமத்திற்கு இராஸனத்தன்மை (ரஸனேந் திரியத்தால் அறியுந்தன்மை) சொல்லலாகாது. உபாத்தியாயரது மதத்திலோ கைப்பைக் கோசரிக்கும் இராஸன (ரஸனேந்திரிய) விருத்தி உண்டாகின்றது. ஆதலால், கைப்புப் பிரமத்தில் இரா ஸனத்தன்மை வியவகாரம் சம்பவிக்கின்றது.

130. மதுரமாகிய பாலில் கைப்பிரசாத்தி யாசத்தின் இரஸனையால் கோசரிக்குந் தன்மை பூர்வகமான உபாத்தியாயரது மதத்தின் நிச்சயம்

ஆனால், இவ்வளவு பேதமுண்டு:—சர்ப்பமிரஜதமுதலிய அத்தியாசத்தில் அதிஷ்டானத்தோடு நேத்திரத்தின் சம்பந்தத் தால் அதிஷ்டான கோசர சாக்ஷுஷவிருத்தி உண்டாகின்றது. அவ் விருத்தியின் சமகாலத்தில் உண்டாகிய சர்ப்பமிரஜதமுத லியனவும் அதற்கே விஷயமாம். மதுரமாகிய பாலில் அந்தக் கைப்பிரசத்தின் அத்தியாச முண்டாயின் ஆண்டுப் பால் வடிவ இராசனவிருத்தி சம்பவிக்கிறதில்லை. ஆனால், சரீரத்தில் வியா

மாகின்றதென்று நையாயிகர் கூறுவதும் விருத்தமாம். ஏனெனின், எந்தப் புருஷனுக்குச் சந்தனத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றதோ, அவனை "யாது காணப்பட்டது?" என்று கேட்கின், அப்போது அவன், "சுகந்தமுடைய சந்தனம் காணப்பட்டது" என்று இவ்வாறு கூறுவன்.

மீண்டும், இச் சந்தனத்தில் சுகந்த மிருக்கின்றதென்னும் ஞானம் உனக்கெவ்வா றுண்டாயிற்றென்று பிரித்துக் கேட்போமாயின், அப்போது திருஷ்டா இது கூறுகின்றான்:—சுவேத (வெண்மைச்) சந்தனமாயிருத்தலால் சுகந்தம் இதில் அவசியமாயிருக்கும். இரக்த சந்தனத்தில் சுகந்த மிராது. இத்தன்மைய சுவேதத்தில் கந்த மிருக்குமென்று இவ்வாறு சுகந்தஞானத்தில் அநுமான ஜந்நியத்தன்மையைக் குறிப்பிக்கும் வாக்கியத்தைக் கூறுகின்றான். நேத்திரத்தால் சுகந்தத்தின் சாக்ஷாத்காரம் எனக்குண்டாயிருக்கின்ற தென்று விடை கூறுகிறதில்லை.

ஆதலால், சுகந்தத்தின் ஞானம் நேத்திர ஜந்நியப் பிரத்தியக்ஷரூப மன்று. ஆனால், சுகந்தாம்சத்தில் அந்த ஞானம் அநுமிதியாம்; சந்தன அம்சத்தில் பிரத்தியக்ஷமாம். "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் வாக்கியப் பிரயோகமுடைய சந்தன திருஷ்டாவைப் பார்த்து, "இச் சந்தனத்தில் அற்பகந்த மிருக்கின்றதா? அல்லது அதிக கந்த மிருக்கின்றதா?" என்று கேட்போமாயின், அப்போது அவன், "நேத்திரத்தினால் சுவேத சந்தனம் தோற்றுகின்றதாகலின், கந்த சாமாநியத்தின் அநுமிதி உண்டாகின்றது. கந்தம் பிரத்தியக்ஷமாயின், கந்தத்தின் உயர்வு தாழ்வுகளின் ஞானம் உண்டாகும். ஆதலால், கந்தத்தின் உயர்வு தாழ்வுகளோ மூக்கினால் மோந்தால் அப்போது அறியப்படும். நேத்திரத்தினாலோ சுவேத சந்தனத்தின்ஞானம் உண்டாகின்றது. அதனால் கந்தசாமாநியத்தின் ஞான முண்டாகின்றது" என்று விடை கூறுதலாலும் சுகந்தத்தினது ஞானத்தின் அநுமிதி உண்டாகின்றது; பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

எவ் விந்திரியத்தினால் ரூப, ரச, கந்த, சப்தங்களின் ஞான முண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தினால் உருவமுதலியவற்றினது உயர்வு தாழ்வுகளின் ஞானம் உண்டாகும். நேத்திரேந்திரியத்தால் கந்தத்தின் ஞான முண்டாகுமாயின், கந்தத்தின் உயர்வு தாழ்வுகளின் ஞானம் உண்டாதல்வேண்டும். ஆதலால்,

இராசனவிருத்தி அவசியம் அங்கீகரிக்கவேண்டியதாம். அங்ஙனமே சர்ப்பமிரஜதமுதலிய அத்தியாசத்திலும் அத்தியஸ்தகோசர ஐந்திரியகவிருத்தியே உண்டாகின்றது. அதற்குப் பின்னமான அத்தியஸ்தகோசர அவித்தையின் பரிணாமமாகிய அநிர்வசநீய விருத்தியினைக் கற்பித்தல் பயனின்மையாம். இம் மதத்தில் அவித்தையின் பரிணாமம் கேவலம் விஷயாகாரமே யாகின்றது.

அவ் வநிர்வசநீய விஷயத்தின் ஞானரூபவிருத்தி அந்தக்கரணத்தினதாகின்றது. துஷ்ட (தோஷமுடைய) இந்திரியத்தின் சையோகத்தால் அவ்விருத்தி உண்டாகின்றது. ஆதலாற், பிரமவடிவ மாகின்றது. அதிஷ்டானத்தோடு துஷ்ட இந்திரியத்தின் சம்பந்தமே அவித்தையில் க்ஷோபவாயிலாக அத்தியாசத்திற்கு ஏதுவாம். அதிஷ்டானத்தின் சாமாநியஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவன்று.

131. ஆசாரியரது வாக்கியத்திற்கும் உபாத்தியாயரது மதம் விரோதப்படுதலும், தர்மிஞானவாதியின் மதத்திற் கூறிய தோஷத்திற்குச் சமாதானமும்

இது கவிதார்க்கிக சக்கரவர்த்தி நிருசிம்ஹ பட்டோபாத்தியாயரது மதமாம். அது சகல பிராசீன ஆசாரியர்களது வார்த்தைக்கும் விருத்தமாம். அங்ஙனமன்றோ:—அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானம், தோஷம், பூர்வாநுபவஜந்நிய சம்ஸ்காரம் என்பவற்றால் அத்தியாச முண்டாகின்றதென்பது பிராசீன மதம். உபாத்தியாயரது மதத்தில் அதிஷ்டானத்தோடு இந்திரியத்தின் சையோகம் அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானத்தினைக் கொள்ளவில்லை. ஆதலால், பிராசீன வசனத்திற்கு விருத்தமாம். அர்த்தாத்தியாச ஞானாத்தியாச பேதத்தால் இருவகை அத்தியாசங்களுள. இது சகல அத்வைதிகளாலும் கொள்ளப்பட்டிருக்கின்றது.

உபாத்தியாயரது மதத்தில் ஞானாத்தியாசம் அப்பிரசித்தமாம். ஏனெனின், அநிர்வசநீய சர்ப்பம் இராஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் அவித்தையின் பரிணாமத்தினை ஞானாத்தியாச

மென்பர். உபாத்தியாயரது மதத்தில் ஐந்திரியகப் பிரமவிருத்தியினை அங்கீகரித்து அதன் லோபமிருக்கின்றது. இவ்வாற்றால் பிராசீன வசனத்தோடு விருத்தமாம். அங்ஙனமே சொல்லப்படும் கிரமத்தால் யுக்தி விருத்தமுமாம்:—அதிஷ்டான இந்திரியங்களின் சம்பந்தத்தினைச் சகல அத்தியாசங்களினும் காரணமாகக் கொள்ளின் அகங்காரமுதலிய அத்தியாசத்தின் அநுபபத்தி உண்டாகும். ஏனெனின், அகங்காரமுதலியவற்றிற் கதிஷ்டானம் பிரஹ்மம் அல்லது சாக்ஷிசேதனமாம். அது உருவமின்றியதாம். அதனோடு ஞானத்திற் கேதுவாகிய இந்திரிய சம்பந்தத்தின் சம்பவ மில்லை. பிராதிபாஸிக அத்தியாசத்திலேயே இந்திரிய சம்பந்தத்திற்குக்காரணத்தன்மை அங்கீகரிக்கினும் அகங்காரமுதலியவற்றின் அத்தியாசமும் பிராதிபாஸிகமாம். இம்மதத்தில் இந்திரியசம்பந்தத்தின் அபாவத்தால் அகங்காரமுதலிய அத்தியாசத்தின் அநுபபத்தியே உண்டாகும். அகங்காரமுதலிய அத்தியாசம் வியாவகாரிகமாயிருத்தலின் பிராதிபாஸிகத்தினும் விலக்ஷணமாம். இம்மதத்திலும் சொப்பனத்தியாசத்தின் அநுபபத்தி உண்டாகும். ஏனெனின், சர்வமதத்திலும் சொப்பனத்தியாசம் பிராதிபாஸிகமாம். அதன் அதிஷ்டானம் சாக்ஷிசேதனமாம். அதனோடு இந்திரிய சம்பந்தம் சம்பவியாமையால் பிராதிபாஸிக அத்தியாசத்திலும் அதிஷ்டானத்தோடு இந்திரிய சம்பந்தத்திற்குக் காரணத்தன்மை சம்பவியாது. இவ்வாற்றால் உபாத்தியாயரது மதம் நலமுடையதன்று.

தர்மிஞானவாதத்தில் உபாத்தியாயர் தோஷம் கூறியிருக்கின்றனர்:—அதிஷ்டான ஞானத்தில் இந்திரிய சம்பந்தத்தின் உபயோகம் அங்கீகரிக்கின் சங்கிற் பீதத்தன்மை அத்தியாசம் உண்டாகுங்கால், ஆண்டு உருவமின்றிக் கேவலம் சங்கின் சாக்ஷுஷம் அங்கீகரிக்கின், உருவமின்றிய வாயுவின் பிரத்தியக்ஷமுண்டாதல் வேண்டும். சுக்கில உருவ விசிஷ்ட சங்கின் சாக்ஷுஷம் அங்கீகரிக்கின், பொன்மை உருவஞானத்திற்கு விரோதியாகிய வெண்மை உருவஞானமிருக்கப் பொன்மை உருவத்தின் அத்தியாசம் உண்டாகாது. இக் கூற்றும் உபாத்தியாயரது அவிவேகத்தாலாம். ஏனெனின், உருவமுடைய திரவியத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமுண்டாகின்றதென்பது நியமம். சிலவிடத்துத் தோஷபலத்தால் உருவபாகத்தைவிட்டுக் கேவலம் ஆசிரயத்தின் சாக்ஷுஷம் உண்டாகின்றது. தோஷமின்றிய

நேத்திரத்தால் உருவ விசிஷ்டத்தின் சாக்ஷுஷம் உண்டாகின்றது. ஆனால், உருவமின்றிய தின் சாக்ஷுஷம் உண்டாகிறதில்லை. ஆதலால், உருவமின்றிய வாயுவின் சாக்ஷுஷஞானத்தின் ஆபத்தி யில்லை. உருவமுடைய சங்கின் உருவபாகத்தினை விட்டுத் துஷ்ட நேத்திரத்தினால் சாக்ஷுஷம் உண்டாகின்றது; அல்லது வெண்மை உருவ விசிஷ்ட சங்கின் சாக்ஷுஷம் உண்டாகின்றது. அங்ஙனமாயினும் வெண்மை உருவத்தில் வெண்மைத்தன்மை ஞானத்தின் பிரதிபந்தகம் நயனத்திற் றோஷமாம். இதனால், பீத உருவத்தின் அத்தியாசமும் சம்பவிக்கின்றது. ஏனெனின், சுக்கிலத்தன்மை விசிஷ்ட சுக்கில உருவத்தின்ஞானமே பீத உருவத்தின் ஞானத்திற்கு விரோதியாம். கேவலம் சுக்கில உருவ வியக்தியின் ஞானம் பிறிதோர் உருவஞானத்திற்கு விரோதியன்று. இவ் வார்த்தை பிரதிபந்தியப் பிரதிபந்தகத் தன்மையை நிர்ணயிக்கும் நூல்களிற் பிரசித்தமாம். இவ்வாற்றால் சங்கினிடத்துப் பீதத்தன்மையின் அத்தியாசத்திற்கு ஹேதுவாகச் சங்கு வடிவ அதிஷ்டானத்தின் இதுவெனும் வடிவ சாக்ஷுஷ ஞானம் சம்பவிக்கின்றது. அது கேவலம் சங்கைக் கோசரிப்பதாகின்றது. அல்லது தோஷபலத்தால் சுக்கிலத்தன்மையை விட்டுச் சுக்கில உருவ விசிஷ்டசங்கைக் கோசரிப்பதாகின்றது. பரம்பரையாகப் பீதத்தன்மைஞானத்தில் நேத்திரத்தின் உபயோகமிருத்தலால் பீதத்தன்மை அத்தியாசத்தில் சாக்ஷுஷத்தன்மை உணர்ச்சியின் நிர்வாகமும் தர்மிஞானவாதத்தில் உண்டாகின்றது. மதுரமாகிய பாலில் கைப்பிரச அத்தியாச முண்டாகுங்கால், ஆண்டுத் தர்மிஞானவாதத்திலும் இராசனவிருத்தி அவசியமாமெனல் கூறப்பட்டது.

ஏனெனின், கைப்பிரசத்தின் அதிஷ்டானமாகிய மதுரமான பால் எதுவோ, அதன் சாமாநிய ஞானமாகிய விருத்தி இராசன மாகாது. ஆனால், துவாசவிருத்தியே அதிஷ்டான கோசரமாம். அந்தத் துவக்கிந்திரிய விருத்தியில் அபிவியக்த சாக்ஷியினால் கைப்பிரசத்தின் பிரகாசம் அங்கீகரிக்கின், கைப்பிரசத்தின் உணர்ச்சியில் இராசனத்துவ வியவகாரம் சம்பவியாது. ஆதலால், தர்மிஞானவாதிக்குக் கைப்பிரசத்தில் பிரமவடிவ உணர்ச்சியும் இராசன ஜந்நியமாகவே அங்கீகரிக்கவேண்டியதா யிருக்கின்றது. அங்ஙனமே இரஜதமுதலிய பிரமஞானமும் இந்திரிய ஜந்நியமாம். இவ்வாற்றால் உபாத்தியாயரது வச

னம் மதுரமாகிய பாலிற்கு அதிஷ்டானத்தன்மையை அங்கீகரிக்கின் பொருத்தமுடையதாம். அந்த மதுர ரசமுடைய பால்வடிவத்திரவியம் அதிஷ்டானமன்று. ஆனால், கைப்பிரச அத்தியாசத்தின் அதிஷ்டானம் பாலின் மதுர ரசமாம். அதன் ஞானத்தில் ரசனத்தின் உபயோகமிருத்தலால் கைப்பிரசத்தின் உணர்ச்சியில் இராசனத்தன்மையின் உணர்ச்சியும் வியவகாரமும் சம்பவிக்கின்றன. மதுரரசத்தின் ஞானமுண்டாயின் அதற்கு விரோதியாகிய கைப்பிரசத்தின் அத்தியாசம் சம்பவியாது. அங்ஙனமாயினும் மதுரத்தன்மைத் தர்மவிசிஷ்ட மதுரரசத்தின் ஞானமே கைப்பிரச ஞானத்திற்கு விரோதியாம். மதுரத்தன்மைத் தர்மத்தை விட்டுக் கேவல மதுரரசவியக்தியின் சாமாநிய ஞானம் கைப்பிரசாத்தியாசத்தின் விரோதியன்று.

எங்ஙனம்: சுத்தித்தன்மை வடிவத்தால் சுத்தியின் ஞானம் இரஜதாத்தியாசத்திற்கு விரோதியாமெனினும், சுத்தியின் சாமாநியஞானம் அத்தியாசத்திற்கு விரோதியன்று; மாறுதலாகிய சுத்தியின் சாமாநியஞானம் இரஜதாத்தியாசத்திற்கு ஏதுவாம். அங்ஙனமே மதுரரசத்தின் சாமாநியஞானமும் கைப்பிரசாத்தியாசத்திற்கு ஏதுவாம். இவ்வாற்றால் தர்மிஞானவாதத்திலும் கைப்பிரசத்திற்கு அதிஷ்டானமாகிய மதுரரசம் யாதோ, அதன் சாமாநியஞானம் இரசனத்தால் உண்டாய்க் கைப்பிரசத்தின் அத்தியாசம் உண்டாகுதலால், பரம்பரையாக ரசனேந்திரியத்திற்குக் கைப்பிரசாத்தியாசத்தில் உபயோகமிருக்கின்றது. ஆதலால், கைப்பிரசத்தின் உணர்ச்சியில் இராசனத்தன்மை வியவகாரம் சம்பவிக்கின்றது.

132. கைப்பிரசாத்தியாசத்தில் சிலரது வேறு வார்த்தையும் கண்டனமும்.

அன்றியும் மதுரமாகிய பாலினையே கைப்பிரசத்தின் அதிஷ்டானமாகக் கொள்ளினும் கைப்பிரசாத்தியாசத்தில் ரசனையின் அபேக்ஷை யில்லை. ஆனால், பாலைக் கோசரிக்கும் துவக்கிந்திரிய விருத்தி உண்டாகின்றது. அத் துவக்கிந்திரியவிருத்தி கைப்பிரச வடிவமன்றாயினும், துவக்கிந்திரிய விருத்தியில் அபிவியக்தசாக்ஷி மறைப்பின்றியதாம். அதன் சம்பந்தத்தால் கைப்பிரசத்தின் பிரகாச முண்டாகின்றது. கைப்பிரசத்தின் உணர்ச்சியில் இரசனத்தின் வியாபாரம் தோற்றுகிறதில்லை. ஆதலால்,

கைப்பிரசாத்தியாசத்தில் ராசனத்தன்மை வியவகாரம் அப்பிரமாணிகமாம். இப் பக்ஷத்தில் கைப்பிரசாத்தியாசம் கேவல அர்த்தாத்தியாசமாம். கைப்பிரச வடிவ அவித்தையின் விருத்தி நிஷ்பலத்தன்மையினால் அங்கீகரிக்கப்படவில்லை. இவ்வாறு சில நூலாசிரியர் மதுரமாகிய பாலினைக் கைப்பிரசாத்தியாசத்திற்கு அதிஷ்டானமாக்கொண்டு மதுரமாகிய பாலைக் கோசரிக்கும் துவக்கிந்திரிய விருத்தியில் அபிவியக்தசாக்ஷியினால் கைப்பிரசத்தின் பிரகாசம் அங்கீகரிக்கின்றனர். கைப்பிரசத்தைக் கோசரிக்கும் விருத்தியின் அபாவத்தையும் அங்கீகரித்திருக்கின்றனர்.

இவ்வெழுத்து அசங்கதமாம்:—ஏனெனின், தனது வடிவ விருத்தியில் அபிவியக்த சேதனத்தினால் விஷயத்தின் பிரகாசமுண்டாகின்றது. அந்நியவடிவ விருத்தியில் அபிவியக்த சேதனத்தினால் தனது சம்பந்தமுள்ள விஷயத்தின் பிரகாசம் அங்கீகரிக்கின், உருவமுடைய கடாகாரவிருத்தியில் அபிவியக்த சேதனத்தால் கடத்தின்கண்ணுள்ள பரிமாணம் சங்கைமுதலியவற்றின் உணர்ச்சி உண்டாதல் வேண்டும். "உருவமுடையது கடம்" என்னும் ஞானம் உண்டாகியும், கடத்தின் தூலத்தன்மை முதலியவற்றின் பிரகாசமுண்டாகிறதில்லை. மதுரமாகிய பால்வடிவ துவக்கிந்திரிய விருத்தியில் அபிவியக்த சேதனத்தினால் கைப்பிரசத்தின் பிரகாசம் சம்பவிக்கிறதில்லை. ஆனால், தோஷத்திற்கு அற்புத மகிமை அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், தோஷத்தினால் துஷ்டமாகிய இந்திரியஜந்நியவிருத்தியில் அபிவியக்தமான சாக்ஷியினால் விருத்தியின் கோசரமின்றியதற்கும் சிலவிடத்துச் சேதன சம்பந்தியின் பிரகாசம் அங்கீகரிக்கின், ஒருவாறு முற்கூறிய எழுத்தும் சம்பவிக்கும். உருவமுடைய கடாகாரவிருத்தி தோஷ ஜந்நியமன்று. ஆதலால், அவ் விருத்திக்கு அகோசரமான பரிமாணாதிகளின் பிரகாசம் அவ் விருத்தியில் அபிவியக்த சேதனத்தினால் உண்டாகிறதில்லை.

133. முக்கிய சித்தாந்தத்தைக் கூறுதல்.

முக்கிய சித்தாந்தமோ இதுவாம்:—சொப்பனாவஸ்தையில் சகல பதார்த்தங்களும் சாக்ஷிபாஸியமாம். அவற்றில் சாக்ஷாத்தன்மை இராசனத்தன்மைமுதலிய உணர்ச்சி உண்டாகின்றது. அவ்வாறு சர்ப்பமிரஜதமுதலிய அநிர்வசநீய பதார்த்

தம் சாக்ஷிபாஸியமாம். அவற்றில் சாக்ஷுஷத்தன்மை முதலிய உணர்ச்சி பிரமமாம். கேவல சர்ப்பமிரஜத முதலியவை மாத்திரம் சாக்ஷிபாஸியமன்று; சகல அநாத்ம பதார்த்தங்களும் சாக்ஷிபாஸியமாம். சொப்பனத்தினைப்போலக் கடமுதலிய பிரமேயத்தினாலும் நேத்திரமுதலிய பிரமாணத்தினாலும் நேத்திராதிகளுக்குக் கடமுதலியவற்றோடு சம்பந்தம் ஏககாலத்தில் உற்பத்தியாகின்றது. ஆகலால், அவற்றிற்கு ஒன்றற்கொன்று பிரமாணப் பிரமேயத்தன்மை சம்பவியாது; தோற்றுகின்றது; ஆதலால், அநிர்வசநீயமாமென்பது சித்தாந்தம். வியாவகாரிகப் பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மைச் சித்திக்கு உபயோகியான சாக்ஷிபாஸியத்தன்மையைச் சாதிக்கும் மித்தியா சர்ப்பம் இரஜதமுதலியன திருஷ்டாந்தமாம். அவற்றிற்கு ஐந்திரியகத்தன்மை அங்கரிக்கின், சித்தாந்தத்திற்குச் சாதகமான திருஷ்டாந்தம் பிரதிகூலமாகின்றது. ஆதலால், உபாத்தியாயரது மதம் சித்தாந்த விரோதியாம்.

அத்தியஸ்த பதார்த்தத்திற்கு ஐந்திரியகத்தன்மை அங்கீகரிக்காவிடின், ஆகாயத்தில் நீலத்தன்மை அத்தியாசத்தின் அநுபபத்தி இருக்கின்றது. தர்மிஞானவாதத்தில் இத் தோஷம் நிராகரிக்கத் தக்கதாம். ஏனெனின், ஆகாயம் உருவமின்றியதாம். ஆதலால், ஆகாயத்தின் சாமாநிய ஞானம் நேத்திரத்தினால் சம்பவிக்கிறதில்லை. சாமாநிய ஞானம் சம்பவிக்கின் நீலத்தன்மை அத்தியாசம் உண்டாகும். உபாத்தியாயரது மதத்திலோ ஆகாயத்தோடு நேத்திரத்தின் சையோகமுண்டாகவே, ஆகாய அவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அவித்தையில் க்ஷோபவாயிலாக நீல உருவத்தின் உற்பத்தியும் நீல உருவ விசிஷ்ட ஆகாயத்தைக் கோசரிக்கும் நேத்திர சையோக ஜந்நிய அந்தக்கரணத்தின் சாக்ஷுஷவிருத்தியும் ஏககாலத்தில் உண்டாகின்றன. இதனால், ஆகாயத்தில் நீலத்தன்மை அத்தியாசத்தின் சம்பவமாம்.

134. தர்மிஞானவாதத்தில் ஆகாயத்தில் நீலத் தன்மை யத்தியாசத்தின் அசம்பவமும் அதன் பரிகாரமும்

அங்ஙனமாயினும் தர்மிஞானவாதத்திலும் இவ் வத்தியாசத்தின் அநுபபத்தி இல்லை. ஏனெனின், ஆகாயம் உருவமின்

றியதாயினும் பிரகாசத் திரவியம் ரூபமுடையதாம். ஆதலால், பிரகாசத்திஞேடு துஷ்டநேத்திரத்தின் சையோக முண்டாகி யும், பிரகாசத்தைக் கோசரிக்கும் பிரகாச வியாபியான ஆகாச வடிவ பிரமையாகிய சாமாநியஞானம் உண்டாகின்றது. அதன் பின் ஆகாய அவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அவித்தை யில் க்ஷோபவாயிலாக நீல உருவ வடிவ அவித்தையின் பரிணம முண்டாகின்றது. அங்ஙனமே இதுவெனும் வடிவ விருத்தி அவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அவித்தையின் நீல உருவத்தைக் கோசரிக்கும் ஞானவடிவ பரிணம முண்டாகின் றது. ஆகாயத்தைக் கோசரிக்கும் பிரமாவிருத்தியும் நீல உரு வத்தைக் கோசரிக்கும் அவித்தியாவிருத்தியும் ஏகதேசத்திரு த்தலால் உபயவிருத்தி உபகிதசாக்ஷி ஏகமாம். ஆதலால், அதிஷ் டான அத்தியஸ்தங்களின் பிரகாசம் ஒரு சாக்ஷியிஞல் உண்டா கின்றது. விசேஷவடிவமாக அதிஷ்டானத்தின் ஞான முண் டாகியும் அத்தியாசம் சம்பவியாது. ஆகாயவடிவப் பிரமாவிரு த்திக்குப்பின் அத்தியாசம் சொல்லப்பட்டது. ஆண்டு ஆகாயத் தன்மைவடிவமாக ஆகாயத்தின்ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவெனக் கூறுதலால் விசேஷ வடிவத்தின் ஞானம் அத்தியா சத்திற்கு ஏதுவெனத் தோற்றுகின்றது. அது அசங்கதமாம். அங்ஙனமாயினும் ஆகாயத்தன்மைவடிவ ஆகாயத்தின்ஞான மும் சாமாநிய ஞானமாம்; விசேஷ ஞானமன்று. உருவ மின் றியது ஆகாயம் என்பதாக உருவ மின்றிய தன்மை விசிஷ்ட ஆகாயத்தின் ஞானமே விசேஷ ஞானமாம். ஏனெனின், அத்தி யாசகாலத்திற் ரேற்ருத அம்சத்தினை விசேஷஅம்ச மென்பர். அதனையே அதிஷ்டான மென்றுங் கூறுவர். அத்தியாசகாலத் தில் தோற்றும் அம்சத்தினைச் சாமாநிய அம்ச மென்பர். அதனை யே ஆதார மென்றுங் கூறுவர். ஆகாயம் நீலம் என்பதாகப் பிராந்திகாலத்தில் ஆகாயத்தன்மை வடிவமாக ஆகாயத்தின் உணர்ச்சி உண்டாகின்றது. உருவமின்றியது ஆகாய மென்ப தாக உருவமின்மைத் தன்மைத் தர்மத்திஞல் ஆகாயத்தின் உணர்ச்சி பிராந்திகாலத்தில் உண்டாகிறதில்லை. ஆதலால், ஆகா யத்தன்மை வடிவ ஆகாயத்தின் ஞானமும் சாமாநியஞானமா யிருத்தலின், அதன்பின் நீல உருவத்தின் அத்தியாசம் சம்ப விக்கிறதில்லை.

135. சர்ப்பமுதலிய பிரமஸ்தலத்தில் நான்குமதங்களும், நான்காவது மதத்தில் உள்ள தோஷமும்

இவ்வாறு சர்ப்ப ரஜதமுதலியவற்றின் பிரம முண்டாகுமிடத்து மூன்று மதங்களைக் கூறுகின்றனர். ஒன்று உபாத்தியாயரது மதம். அது சொல்லப்பட்டது. அவர் மதத்தில் ஒரே ஞானம் துஷ்ட இந்திரிய விஷயங்களின் சம்பந்தத்தால் அந்தக்கரணத்தின் பரிணாமவடிவ மாகின்றது. இந்த ஞானம் அதிஷ்டானத்தின் சாமாநிய அம்சத்தினையும் அத்தியஸ்தத்தினையும் விஷயஞ் செய்வதாய்ப் பிரம வடிவமாம். இதற்கு வேறாக அதிஷ்டானத்தின் சாமாநிய அம்சமாத்திரத்தைக் கோசரிக்கும் பிரமைஞானத்தின் அங்கீகாரம் அவர் மதத்தி லில்லை. தர்மிஞானவாதத்தில் இரண்டு மதங்கள் கூறப்பட்டன. ஒருமதத்திலோ இதுவெனும் வடிவ சாமாநிய ஞானமாகிய பிரமை வடிவத்திற்குப் பின் இது சர்ப்பம் இது இரஜதம் என்பதாகப் பிரமஞானமுண்டாகின்றது. அது அவித்தையின் பரிணாம வடிவமாம். அதிஷ்டானத்தின் சாமாநிய அம்சத்தை விஷயஞ்செய்வதாய் அத்தியஸ்தத்தை விஷயஞ் செய்கின்றது. ஆதலால், இதுவெனும் வடிவமும் அத்தியஸ்த வடிவமும் உண்டாகின்றன. தர்மிஞானவாதத்தில் இரண்டாவதுமதம் இதுவாம்:—இதுவெனும் வடிவ சாமாநியஞானம் அத்தியாசத்திற் கேதுவாகிய பிரமை வடிவமாம். அதன் பிற்கணத்தில் சர்ப்பரஜத முதலியவற்றைக் கோசரிக்கும் அவித்தையின் பரிணாமமாகிய ஞானம் உண்டாகின்றது; அது பிரமவடிவமாம்; ஆதலால், அதிஷ்டான கோசரமாகாது. ஆனால், கேவலம் அத்தியஸ்த கோசரமாகின்றது. அந்தப் பிரமஞானத்தில் இதுவெனும் பதார்த்தத்தை விஷயிக்குந் தன்மை யில்லை. அங்ஙனமாயினும் அதன் அதிஷ்டான ஞானத்தில் இதுவெனும் பதார்த்தத்தை விஷயிக்குந்தன்மை இருக்கின்றது. அதன் அநிர்வசநீய சம்பந்தம் பிரமஞானத்தில் உற்பத்தியாகின்றது. இவ்வாற்றால் கேவல அத்தியஸ்த பதார்த்த வடிவ பிரமஞானம் உண்டாகின்றது. இம்மதமே நலமுடையதாம்.

தர்மிஞானவாதத்திலேயே ஓர் நூலாசிரியர் மூன்றாவது பக்ஷம் அங்கீகரித்திருக்கின்றனர். அது வருமாறு:—அத்தியாசத்திற்கேது அதிஷ்டானத்தின் சாமாநியஞான மாகின்றது. அதற்கு வேறாகிய சர்ப்பம் இரஜதமுதலியவற்றைக் கோசரிக்

கும் அவித்தையின் விருத்தி நிஷ்பலமாம். ஏனெனின், அதிஷ்டானத்தைக் கோசரிக்கும் அந்தக்கரணத்தின் எந்த இதுவெனும் வடிவவிருத்தி அத்தியாசத்திற்கு ஏதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த விருத்தியில் அபிவியக்தமான சேதனத்தினாலேயே சர்ப்பமிரஜதமுதலியவற்றின் பிரகாசம் உண்டாகின்றது. ஆதலால், சர்ப்பமிரஜதமுதலிய ஞேயவடிவமோ அவித்தையின் பரிணாமமாகின்றது. ஞானரூப பரிணாமம் அவித்தைக் குண்டாகிறதில்லை. இந்த மதத்திலும் உபாத்தியாயரது மதத்தைப்போலச் சுத்தி இரஜதமுதலியவற்றில் கேவல அர்த்தாத்தியாச மிருக்கின்றது; ஞானாத்தியாசத்தின் அங்கீகார மில்லை. இம் மதமும் உபாத்தியாயரது மதத்தைப்போலச் சகல ஆசாரிய வசனங்களுக்கும் யுக்திக்கும் விருத்தமாம். ஏனெனின், இந்த மதத்தில் பிரமஞானத்திற்கு லோப முண்டாகின்றது. இதுவெனும் வடிவ எந்த ஞானம் உண்டாகின்றதோ, அது அதிஷ்டானத்தோடு இந்திரியத்தின் சையோகத்தால் அந்தக்கரணத்தின் விருத்தி வடிவமாக உண்டாகின்றது; அதிஷ்டானகோசரமு மாகின்றது; ஆதலால், பிரமையாம். அதற்குப் பின்னமான ஞானத்தை அங்கீகரிக்கவில்லை யாகலின் பிரமஞானம் அப்பிரசித்தமாகும். அதிஷ்டான கோசர இதுவெனும் வடிவஞானமே சர்ப்பமிரஜத முதலியவற்றை விஷயஞ் செய்தலால் பாதிக்கப்படும் பதார்த்தத்தைக் கோசரிப்பதாயிருத்தலின் பிரமமெனப்படுகின்றதெனக் கூறுவராயினும், இம் மதத்தில் அந்த ஞானத்திற்கே பாதிக்கப்படாத அதிஷ்டானத்தைக் கோசரிக்குந் தன்மை இருத்தலின் பிரமாத்தன்மையும் உண்டாதல்வேண்டும். ஆதலால், ஒரு ஞானத்தில் பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளின் சங்கரம் (கலப்பு) உண்டாகும்.

சத்தியமான இரஜதத்தைக் கோசரிப்பதும் சுத்தி இரஜதத்தைக் கோசரிப்பதும் ஒரு ஞானமாயின், ஆண்டுப்பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளின் சங்கரம் பிரசித்தமாம். ஆதலால், அவச்சேதக பேதத்தால் எங்ஙனம் சையோகமும் சையோகத்தின் அபாவமுமாகிய விரோதி பதார்த்தங்க ளிருக்கின்றனவோ, அங்ஙனமே ஒரு ஞானத்திலும் அவச்சேதக பேதத்தால் பிரமத்தன்மை பிரமாத்தன்மையாகிய விரோதமுடைய தர்மங்கள் சம்பவிக்கின்றன. திருஷ்டாந்தத்தில் விருக்ஷத்தின்கண்ணுள்ள

சையோகாபாவத்தின் அவச்சேதகம் மூலதேசமாம் (அடிப்புறமாம்); சையோகத்தின் அவச்சேதகம் கிளையாகிய இடமாம். அங்ஙனமே ஞானத்திலும் பாதிக்கப்பட்டதனை விஷயிக்குந்தன்மையோ பிரமத்தன்மையின் அவச்சேதக தர்மமாம். பாதிக்கப்படாததனை விஷயிக்குந்தன்மை பிரமாத்தன்மையின் அவச்சேதக தர்மமாம். ஆதலால், ஒரே ஞானத்தில் பாதிக்கப்பட்டதனை விஷயிக்குந்தன்மை அவச்சின்ன பிரமத்தன்மையும், பாதிக்கப்படாததனை விஷயிக்குந்தன்மை அவச்சின்ன பிரமாத்தன்மையும் இருத்தலின் பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளின் சங்கரதோஷ மில்லை. அங்ஙனமாயினும் பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளைப்போலப் பாதிக்கப்பட்டதனை விஷயிக்குந் தன்மையும் பாதிக்கப்படாததனை விஷயிக்குந்தன்மையும் ஒன்றற்கொன்று பாவாபாவ ரூபமாயிருத்தலின் விரோதிகளாம். அவற்றின் அவச்சேதகமும் பேதமின்றி ஒருஞானத்தில் பிரவேசித்தல் பொருந்தாது. அவற்றின் அந்நியமான அவச்சேதகம் அறியப்படுகிறதில்லை. ஏதேனும் வேறொன்றின் கற்பனையைக் கற்பிக்கின், ஒன்றற்கொன்று விரோதமுள்ளதாகவே ஓர் அவச்சேதகம் அங்கீகரிக்கவரும். ஆதலால், அவற்றின் அவச்சேதகத்தை அங்கீகரித்தலில் அநவஸ்தைக் குற்றமுண்டாகும். இவ்வாற்றால் ஒரு ஞானத்தில் பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளின் சம்சயம் சம்பவியாது. சத்தியரஜத கோசரமும் சுத்திரஜத கோசரமுமாகிய ஒரு ஞானத்தில் பிரமத்தன்மை பிரமைத் தன்மைகளின் சங்கரம் செய்யப்பட்டது. அதுவும் சித்தாந்தத்தை அறியாததனால் சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனெனின், சத்திய ரஜதகோசரம் அந்தக்கரணத்தின் விருத்தி ஆகின்றது. சுத்திரஜதகோசரம் அவித்தையின் விருத்தி ஆகின்றது. இதனால் சத்திய இரஜதகோசரமும், சுத்திரஜத கோசரமுமாகிய இரண்டு ஞானங்கள் உண்டாகின்றன. இரண்டு ஞானங்களும் சமானகாலத்தில் உண்டாகின்றன; சஜாதீய கோசரமு மாகின்றன. ஆதலால், அவற்றின் ஒன்றற்கொன்றுள்ள பேதம் தோற்றுகிறதில்லை; ஆனால், அவற்றில் ஏகத்துவப் பிரம முண்டாகின்றது. ஆதலால், பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளின் சங்கரம் அதிருஷ்ட கோசரமாயிருத்தலின், இதுவெனும் வடிவப் பிரமாவிருத்தியில் அபிவியக்தமான சாக்ஷியினால் அத்தியஸ்தத்தின் பிரகாசம் சம்பவிக்கிறதில்லை.

அதிஷ்டானகோசர விருத்தியில் அபிவியக்தமான சாக்ஷியினுலேயே அத்தியஸ்தத்தின் பிரகாசத்தை அங்கீகரித்து, அத்தியஸ்தகோசர அவித்தையின் விருத்தியை அங்கீகரியாவிடின் அத்தியஸ்த பதார்த்தத்தின் ஸ்மிருதி உண்டாகலாகாது. ஏனெனின், அநுபவத்தின் நாசத்தால் சம்ஸ்கார முண்டாகின்றது. பிறிதொன்றைக் கோசரிக்கும் அநுபவத்தால் பிறிதொன்றைக் கோசரிக்கும் சம்ஸ்காரமும் ஸ்மிருதியும் உண்டாகுமாயின், படத்தைக் கோசரிக்கும் அநுபவத்தால் கடத்தைக் கோசரிக்கும் சம்ஸ்காரமும் ஸ்மிருதியும் உண்டாதல் வேண்டும்.

ஆதலால், சமானகோசர அநுபவத்தால் சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதியின் உற்பத்தி உண்டாகுமென்பது நியமமாகலின், அதிஷ்டானகோசர விருத்தி வடிவ அநுபவத்தால் அத்தியஸ்தகோசர சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதியின் உற்பத்தி சம்பவிக்கிறதில்லை. அத்தியஸ்தகோசர சாக்ஷி வடிவ அநுபவத்தால் சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதியின் உற்பத்தி கூறின் முற்றும் அசங்கதமாம். ஏனெனின், அநுபவத்தின் நாசத்தால் சம்ஸ்கார முண்டாகின்றது; சாக்ஷி நித்தியமாம். அதற்குச் சம்ஸ்காரத்தை உண்டுபண்ணுந் தன்மை சம்பவியாது.

"எந்த விருத்தியினுல் சேதனத்தின் அபிவியக்திவாயிலாக எப் பதார்த்தத்தின் பிரகாச முண்டாகின்றதோ, அவ் விருத்தியினுல் அப் பதார்த்த கோசர சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதி உண்டாகின்றது. படகோசரவிருத்தியில் அபிவியக்த சேதனத்தினுல் கடத்தின் பிரகாசம் உண்டாகிறதில்லை. ஆதலால், படகோசர அநுபவத்தால் கடகோசர சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதியின் ஆபத்தி யில்லை. அதிஷ்டானகோசர அந்தக்கரணத்தின் இதுவெனும் வடிவ விருத்தியில் அபிவியக்த சேதனத்தினுல் அத்தியஸ்தத்தின் பிரகாசம் உண்டாகின்றது. ஆதலால், அதிஷ்டான கோசர இதுவெனும் வடிவப் பிரமையினுல் அத்தியஸ்த கோசர சம்ஸ்காரவாயிலாக ஸ்மிருதியின் சம்பவமிருத்தலின், அத்தியஸ்தகோசர அவித்தியாவிருத்தியின் அங்கீகாரம் நிஷ்பலமாம்." என்று இங்ஙனம் கூறுவராயின், அதுவும் அசங்கதமாம். ஏனெனின், அதிஷ்டானகோசர இதுவெனும் வடிவ ஞானத்தால் அத்தியஸ்தத்தின் பிரகாசத்தை அங்கீகரிக்கின், அவரை இது கேட்கவேண்டும்:—

இதுவெனும் வடிவ ஞானமுண்டாயின் அது அத்தியஸ்த வடிவமு மாகின்றதா? அல்லது இல்லையா? அத்தியஸ்த வடிவமும் ஆகின்றதெனக் கூறுவாராயின் அது பொருந்தாது. ஏனெனின், பிரத்தியக்ஷ ஞானத்தில் வடிவத்தைச் சமர்ப்பித்தற்கு ஏது விஷயமாம். இதுவெனும் வடிவ ஞானத்திற்குப் பிற்கணத்தில் அத்தியஸ்த பதார்த்தத்தின் உற்பத்தி உண்டாகுதலால், இனி வரும் விஷயத்தோடு பிரத்தியக்ஷ ஞானத்தில் தனது வடிவத்தைச் சமர்ப்பித்தல் சம்பவியாது. ஆதலால், இதுவெனும் வடிவ ஞானத்திற்கு அத்தியஸ்த வடிவத்தன்மை உண்டாகிறதில்லை என்னும் இரண்டாவது பக்ஷத்தைக் கூறினும் பொருந்தாது. ஏனெனின், அந்நிய வடிவ விருத்தியில் அபிவியக்த சாக்ஷியினல் அந்நிய விஷயத்தின் பிரகாசம் உண்டாகிறதில்லை என்பது முன் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவெனும் வடிவ விருத்தியில் அபிவியக்த சாக்ஷியின் சம்பந்தத்தினல் வடிவத்தைச் சமர்ப்பித்தல் அகர்த்தாவிற்கும் பிரகாசம் அங்கீகரிக்கின், இதுவெனும் வடிவவிருத்தியில் அபிவியக்த சாக்ஷியின் சம்பந்தியாகிய அதிஷ்டானத்தின் விசேஷ அம்சம் எதுவோ அதன் பிரகாசமு முண்டாதல்வேண்டும்.

ஆதலால் இதுவெனும் வடிவ சாமாநிய ஞானத்திற்குப் பின்னமான அவித்தையின் பரிணமமாகிய அத்தியஸ்த வடிவ விருத்தி ரூபஞானம் அவசியம் அங்கீகரிக்கத்தக்கதாம். அதனிடத்தும் இரண்டு பக்ஷங்களைக் கூறுகின்றார். அவற்றுள் அதிஷ்டானகோசரமும் அத்தியஸ்தகோசரமும் அநிர்வசநீய ஞான மாகின்றன வென்னும் முதற்பக்ஷமோ நலமுடையதன்றென முற் கூறப்பட்டது. அநிர்வசநீய மித்தியாஞானத்தை உபயகோசரமெனக் கொள்ளின் பிரமைத்தன்மை பிரமத்தன்மைகளின் சங்கரதோஷ முண்டாகும். ஆதலால், இதுவெனும் வடிவ சாமாநிய ஞானத்திற்குப் பிற்கணத்தில் கேவல அத்தியஸ்த கோசர அவித்தையின் விருத்தி உண்டாகின்றது. எங்ஙனம் சர்ப்பம் இரஜதமுதலியன மித்தையாகின்றனவோ, அங்ஙனமே அவற்றின் ஞானமும் மித்தையாகின்றன. இதனற்றான் சர்ப்ப மிரஜதமுதலியவற்றிற்குப் பாத முண்டாகிறதுபோல அவற்றின் ஞானத்திற்கும் பாத முண்டாகிறது. இதுவெனும் வடிவப் பிரமாவிருத்தியில் அபிவியக்த சாக்ஷியிஞ

லேயே அத்தியஸ்தத்தின் பிரகாசம் அங்கீகரிக்கின் சாக்ஷியோ எப்போதுமே பாதிக்கப்படாததாம். இதுவெனும் வடிவ விருத்தியும் அந்தக்கரணத்தின் பரிணாமமாயிருத்தலின் கட முதலிய ஞானத்தினைப்போல வியவகார காலத்தில் பாதிக்கப் படாததாம். ஆதலால், பிரஹ்மஞானமின்றி அத்தியஸ்தத்தினது ஞானத்திற்குப் பாத முண்டாகலாகாது.

136. அநிர்வசநீயக்கியாதியில் முற்கூறிய நான்கு மதங்களின் அநுவாதமும், அதன் சமாப்திச் செய்யுளும்

இவ்வாறு இரஜதமுதலியவற்றைக் கோசரிக்கும் பிரம முண்டாகுமிடத்துச் சித்தாந்தத்தில் அநிர்வசநீயக்கியாதி சொல்லப்பட்டிருக்கின்றது. அதன்கண் நான்கு பக்ஷங்கள் உள. ஒன்றோ கவிதார்க்கிக நிருசிம்ஹ பட்டோபாத்தியாயரது மதமாம். அதில் அதிஷ்டானத்தோடு இந்திரியத்தின் சம்பந்தமே அத்தியாசத்திற் கேதுவாம். அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானம் ஏதுவன்று. மற்றைய ஆசாரியர்களது மதத்தில் அதிஷ்டானத்தின் சாமாநிய ஞானம் அத்தியாசத்திறகு ஏதுவாம். சாமாநிய ஞானத்தினைத் தர்மிஞான மென்பர். உபாத்தியாயரது மதத்திற்கு வேறான மூன்று மதங்களிலும் சாமாநிய ஞானம் அத்தியாசத்திற்குக் காரணமாதல் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆதலால், மூன்று மதத்தினர் தர்மிஞானவாதிகள். அவர்களுள்ளும் அத்தியஸ்த பதார்த்த வடிவமேயாகிய அவித்தையின் விருத்திரூபப் பிரமஞான முண்டாகின்றதென்பவர் பக்ஷமே நலமுடையதாம்.

அதிஷ்டான கோசர இதுவெனும் வடிவமும், அங்ஙனமே அத்தியஸ்த வடிவமும் அவித்தையின் விருத்தியாகின்றன வென்பவர் பக்ஷமும்; இதுவெனும் வடிவ விருத்தியாகிய எந்தச் சாமாநிய ஞானம் அத்தியாசத்திற்கு ஏதுவோ, அதனாலேயே நிர்வாக மாகின்றது. அத்தியஸ்த கோசர அவித்தையினது விருத்தியின் அங்கீகார மில்லையென்பவர் பக்ஷமும் நலமுடையதன்று. அங்ஙனமே அத்தியாசத்திற்கு ஏதுவாகச் சாமாநிய ஞானத்தினை அங்கீகரியாத உபாத்தியாயரது பக்ஷமும் நலமுடையதன்று. இவ்வாற்றால் பிராசீன நூலாசிரியர்

எழுதியிருப்பது எதுவோ, அதனை அநுசரித்தே யாம் தூஷண மும் பூஷணமும் எழுதியிருக்கின்றோம். தனது புத்தியின் பலத்தால் விசாரிக்கின் இந்நான்கு மதங்களிலும் தூஷண பூஷணங்கள் சமானமாம். பிரபஞ்சத்தினது மித்தியாத்தன்மை யைச் சாதித்தலில் அத்வைத வாதத்திற்கு அபிநிவேசமாம். அவாந்தர மதபேதத்தைப் பிரதிபாதித்தலிலேனும் கண்டித் தலிலேனும் அபிநிவேசமின்று. ஆதலால், எந்த ஜிஞ்ஞாசுக் காவது கண்டிக்கப்பட்ட பக்ஷமே புத்தியில் ஆரூடமாகுமாயின் ஓர் கெடுதியு மில்லை. ஓரே மதத்திற்கு அநுகூலமாக யாம் யுக்தி எழுதியிருக்கின்றோம்:—அது பிராசீன ஆசாரியர்களது மார்க்கத்தினின்றும் குறுக்காகச் செல்லுதலை நிரோதித்தற் பொருட் டெழுதப்பட்டது.

நிச்சல னன்றி யாரு நிகழ்த்தின ரில்லை யிந்த
மெச்சநிர் வசனக் யாதி மெய்ம்மையாய்ப் பாஷை தன்னில்
சற்சன ராவா ரித்தைத் தக்கவா றுய்ந்து மேலாஞ்
சச்சிதா நந்த வாழ்வைச் சார்ந்திடற் கைய மின்றே.

137. பிறநூல்களிற் கூறிய ஐந்து கியாதிகளின் பெயர்

பிறநூல்களில் பிரமத்திற்கு எந்த இலக்ஷணமும் சொரூப மும் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவற்றிற்கு விலக்ஷண மாகவே பிரமத்தின் இலக்ஷணமும் சொரூபமுமா மென்னும் பொருளை அறிவித்தற்பொருட்டுச் சாஸ்திராந்தரங்களினது பிர மத்தின் சொரூபம் பாஷியத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றின் நிரூபணமும் கண்டனமும் செய்வாம். சுத்தியில் இரஜதமுதலிய பிரம முண்டாகுமிடத்துச் சித்தாந்த பக்ஷ மின்றி ஐந்து மதங்க ளிருக்கின்றன:—க. சத்கியாதி, உ. அசத் கியாதி, ங. ஆத்மக்கியாதி, ச. அந்நியதார்க்கியாதி, ரு. அக்கியாதி என்று பிரமத்திற்கு இப் பெயர் கூறுவர். எல்லோர் மதத்திலும் ஐந்து பெயர்களில் ஐந்தில் ஒரு பிரமத்தின் நாமம் பிரசித்த மாம்.

138-144. சத்தியாதியின் கிரமம்

அவற்றுள் சத்கியாதிவாதியின் சித்தாந்தம் இதுவாம்:—சுத்தி யின் அவயவங்களோடு இரஜதத்தின் அவயவம் எப்போது

மிருக்கின்றது. எங்ஙனம் சுத்தியின் அவயவம் சத்தியமோ, அங்ஙனமே இரஜதத்தின் அவயவமுமாம்; மித்தையன்று. எங்ஙனம் தோஷத்தோடு கூடிய நேத்திரத்தின் சம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையின் பரிணாமமாகிய அநிர்வசநீய ரஜதம் உற்பத்தியாகின்றதோ, அங்ஙனமே தோஷத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாவயவங்களினின்றும் சத்திய ரஜதம் உற்பத்தியாகின்றது. அதிஷ்டானஞானத்தினால் எங்ஙனம் அநிர்வசநீய இரஜதத்தின் நிவிருத்தி சித்தாந்தத்தில் உண்டாகின்றதோ, அங்ஙனமே சுத்திஞானத்தினால் சத்திய ரஜதத்தின் துவம்ஸம் தனது அவயங்களில் உண்டாகின்றது.

139. சத்தியாதி வாதத்தின் கண்டனம்

இது சத்கியாதிவாதியின் மதமாம். அது நிராகரிக்கத்தக்கதாம். ஏனெனின், சுத்தி ரஜத திருஷ்டாந்தத்தால் பிரபஞ்சத்திற்கு மித்தியாத்தன்மையின் அநுமிதி உண்டாகின்றது. சத்கியாதிவாதத்தில் சுத்தியில் இரஜதம் சத்தியமாம். அதனைத் திருஷ்டாந்தமாகக் கொண்டு பிரபஞ்சத்தில் மித்தியாத்தன்மையின் சித்தி உண்டாகாது. ஆதலால், இப் பக்ஷம் நிராகரிக்கத் தக்கதாம். இப் பக்ஷத்தில் இது தோஷமாம்:—சுத்திஞானத்திற்குப்பின் காலத்திரயத்திலும் சுத்தியில் வெள்ளி இல்லை என்பதாகச் சுத்தியில் முக்காலத்தைய வெள்ளி அபாவ உணர்ச்சி உண்டாகின்றது. சித்தாந்த மதத்தில் அநிர்வசநீய ரஜதமோ மத்தியகாலத்தில் உண்டாகின்றது. வியாவகாரிக இரஜதாபாவம் முக்காலத்தையதாம். சத்கியாதிவாதியின் மதத்தில் வியாவகாரிக இரஜத முண்டாகின்றது. அக்காலத்தில் வியாவகாரிக இரஜதாபாவம் சம்பவிக்கிற தில்லை. ஆதலால், முக்காலத்தைய இரஜதாபாவத்தின் உணர்ச்சியால் வியாவகாரிக ரஜதத்தைக் கூறுதல் விருத்தமாம். அநிர்வசநீய ரஜதத்தின் உற்பத்தியிலோ பிரசித்த ரஜதத்தின் சாமக்கிரி வேண்டியதில்லை. தோஷத்தோடுகூடிய அவித்தையினால் அதன் உற்பத்தி சம்பவிக்கின்றது. வியாவகாரிக ரஜதத்தின் உற்பத்தியோ ரஜதத்தின் பிரசித்த சாமக்கிரியின்றிச் சம்பவிக்கிறதில்லை. சுத்தி தேசத்தில் இரஜதத்தின் பிரசித்த சாமக்கிரி இல்லை. ஆதலால், சத்திய ரஜதத்தின் உற்பத்தி சுத்திதேசத்திற் சம்பவிக்கிறதில்லை.

140. சுத்தியில் சத்திய ரஜதத்தினது சாமக்கிரியின் அங்கீகாரமும் கண்டனமும்

சுத்திதேசத்தில் இராஜதத்தின் அவயவ மிருக்கின்றது. அதுவே சத்தியராஜதத்தின் சாமக்கிரியாம் என்று கூறின், அவனை இது கேட்பாம்:—இராஜதாவயவங்களுக்கு உற்பூத உருவ மிருக்கின்றதா? அநுற்பூத உருவ மிருக்கின்றதா? உற்பூத உருவமெனின், இராஜதத்தின் உற்பத்திக்குமுன் இராஜதாவயவங்களின் பிரத்தியக்ஷமு முண்டாதல்வேண்டும். அநுற்பூத உருவமெனின், அநுற்பூத உருவமுடைய அவயவங்களினின்றும் இராஜதமும் உருவமுடையதாகும். அதனால், இராஜதத்தின் பிரத்தியக்ஷ முண்டாகாது. உற்பூத உருவமுடைய திரியணுகத்தின் ஆரம்பகமாகிய துவியணுகத்திலோ அநுற்பூத உருவமில்லை; உற்பூத உருவ மிருக்கின்றது. துவியணுகத்தில் மகத்துவமில்லையாகலின், உற்பூத உருவமிருந்தும் துவியணுகத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. துவியணுகத்தில் மாத்திரம் உற்பூத உருவமன்று; பரமாணுவிலும் நையாயிகர் உற்பூத உருவம் அங்கீகரிக்கின்றனர்.

துவியணுகத்தினைப்போல இராஜதாவயவமும் உற்பூத உருவ முடையதாம். ஆனால், மகத்துவ சூனியமாம். ஆதலால், இராஜதாவயவத்தின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை யெனக் கூறின், அது சம்பவியாது. ஏனெனின், மகத் பரிமாணத்திற்கு நான்குபேதமுண்டு. ஆகாயமுதலியவற்றில் பரம (மேலான) மகத் பரிமாண மிருக்கின்றது. மேலான மகத்பரிமாணத்தினையே நையாயிகர் விபு என்பர். விபுவிற்கு வேறான படமுதலியவற்றில் அபகிருஷ்ட (தாழ்ந்த) மகத்பரிமாண மிருக்கின்றது. கடுகுமுதலியவற்றில் அபகிருஷ்டதர (அதனினும் தாழ்ந்த) மகத்பரிமாண மிருக்கின்றது. திரியணுகத்தில் அபகிருஷ்டதம (எல்லாவற்றினும் தாழ்ந்த) மகத்பரிமாண மிருக்கின்றது. இராஜதத்தின் அவயவமும் மகத்பரிமாண சூனியமாயின், துவியணுகத்தினின்றும் ஆரம்பிக்கப்பட்ட திரியணுகத்தினைப்போல மகத்துவ சூனிய அவயவங்களினின்றும் ஆரம்பிக்கப்பட்ட இராஜதமுதலியனவும் அபகிருஷ்டதம மகத்பரிமாண முடையனவே யாதல்வேண்டும். ஆதலால், இராஜதாவ்யவம் மகத்துவ சூநியமாம். இங்ஙனம் கூறுதல் சம்பவியாது. இராஜதாவயவத்திலோ மகத்துவத்தின் அபாவத்தைக் கூறின் எவ்வாற்றானும் சம்பவிக்கும். ஆனால்,

யாண்டுப் புற்றில் கடத்தின் பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டும் கடாவயவமாகிய கபாலம் அங்கீகரிக்கவரும்.

யாண்டுத் தாணுவில் புருஷப்பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டுத் தாணுவில் புருஷனது அவயவங்களாகிய கைகால் முதலியன அங்கீகரிக்க வேண்டியதாகும். கபாலமும் கைகால் முதலியனவுமோ மகத்வ சூநியமாதல் சம்பவியாது. இரஜதத் தன்மை ஜாதியோ அணுசாதாரணமாம். ஆதலால், சூக்ஷ்ம அவயவங்களிலும் இரஜத வியவகாரம் சம்பவிக்கின்றது. கடத் தன்மை கபாலத்தன்மை கைகாற்றன்மை புருஷத்தன்மை முதலிய ஜாதியோ மகத்தவயவிமாத்திரத் திருப்பதாம். அவற்றின் சூக்ஷ்ம அவயவங்களில் கபாலத்தன்மைமுதலிய ஜாதி சம்பவிக்கிறதில்லை. ஆதலால், பிரமத்தின் அதிஷ்டான தேசத்தில் ஆரோபிதத்தின் வியாவகாரிக அவயவ மிருக்குமாயின், அவற்றின் உணர்ச்சி உண்டாதல் வேண்டும். ஆதலால், வியாவகாரிக அவயவங்களினின்றும் இரஜதமுதலியவற்றின் உற்பத்தி கூறுதல் அசங்கதமாம்.

141. சத்கியாதிவாதியினால் முற்கூறிய தோஷத்தின் பரிகாரமும் அதன் கண்டனமும்

சத்கியாதிவாதி இங்ஙனம் கூறுகின்றார்:—சுத்தி தேசத்தில் இரஜதத்தின் சாக்ஷாத் அவயவ மில்லை. ஆனால், அவயவங்களுக்கு அவயவமாகிய பரமமூல துவியணுக்கள் அல்லது பரமாணுக்கள் இருக்கின்றன. அங்ஙனமே புற்றிடத்தில் கடம், ஸ்தாணுதேசத்தில் புருஷன் என்பவற்றின் சாக்ஷாத் அவயவங்களின் அவயவமாகிய பரமமூல துவியணுகங்கள் அல்லது பரமாணுக்கள் இருக்கின்றன. தோஷத்தோடு கூடிய நேத்திரத்தின் சம்பந்தத்தால் சடுதியில் அவயவிதாரை உற்பத்தியாய், இரஜதம் கடம் புருஷன் என்பவற்றின் உற்பத்தி உண்டாகின்றது. தோஷத்தின் அற்புத மகிமையினால் இவ்வாறு வேகமாகத் திரியணுக முதலியவற்றின் தாரை உற்பத்தியாகின்றது.

எதனால் இடை அவயவிகளாகிய கபாலம் கை கால்முதலியன தோற்றுவதில்லையோ, அந்திய அவயவியாகிய கடமுதலியவற்றின் உற்பத்தி உண்டாயின் கபாலமுதலியன ஓரிடத்தும் தோற்றுவதில்லையோ, அதனால் பிரமத்தின் அதிஷ்டானத்

தில் ஆரோபிதத்தின் அவயவம் தோற்றுகிறதில்லை. வியாவகாரிக அவயவம் இரஜதமுதலியவற்றினதாம். அல்லது சுத்தி தேசத்தில் இரஜதத்தின் மகத்தவயவ மிருக்கின்றது. புற்றிடத்தில் கடத்தின் அவயவம் கபாலமாம். ஸ்தாணுதேசத்தில் புருஷனது அவயவம் கைகால் முதலியனவாம். இவ்வாற்றால் பிரமத்தின் அதிஷ்டானத்தில் ஆரோபிதத்தின் சகல அவயவங்களு மிருக்கின்றன. என்றாலும் அதிஷ்டானத்தின் விசேஷ வடிவமான உணர்ச்சி அவ் வவயவங்களின் உணர்ச்சிக்குப் பிரதிபந்தகமாம். ஆதலால், இருப்பனவாகிய மகத் அவயவங்களின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. இவ்வாற்றால் சத்கியாதிவாதியின் சமாதானமும் நலமுடையதன்று. ஏனெனின், சுத்திதேசத்தில் வியாவகாரிக ரஜதத்தின் உற்பத்தி அங்கீகரிக்கினும், அநுபவத்தை யொட்டி இரஜதத்தின் நிவிருத்தி சுத்திஞானத்தினலேயே அங்கீகரித்தல்வேண்டும்.

142. இரஜதஞானத்தின் நிவிருத்தியினல் பிராதிபாஸிகமும் வியாவகாரிகமுமாகிய இரஜதத்தின் நிவிருத்தியும் அதன் கண்டனமும்

சத்கியாதிவாதி இங்ஙனம் கூறுகின்றார்:— இரஜதத்தின் நிவிருத்தியில் சுத்திஞானத்தின் அபேக்ஷை யில்லை. ஆனல், இரஜத ஞானபாவத்தினல் இரஜதத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. எவ்வளவு காலம் இரஜதத்தின் ஞானம் இருக்கின்றதோ, அவ்வளவு காலம் இரஜத மிருக்கின்றது. இரஜத ஞானத்தின் அபாவ முண்டாயின், அப்போது இரஜதத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. சுத்திஞானமும் சிலவிடத்து இரஜதஞானத்தின் நிவிருத்திக்கு ஏதுவாம். சிலவிடத்துச் சுத்திஞானமின்றி அந்நிய பதார்த்தங்களின் ஞானத்தால் இரஜதஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அந்த இரஜத ஞானத்தின் நிவிருத்திக்குப் பிற்கணத்தில் இரஜதத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அல்லது இரஜதஞானத்தின் நிவிருத்தி எதனல் உண்டாகின்றதோ, அதனலேயே இரஜதஞானத்தின் நிவிருத்தி க்ஷணத்தில் இரஜதத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. இவ்வாறு ஞான காலத்திலேயே இரஜதத்தின் ஸ்திதி இருத்தலால் பிராதிபாஸிகமாகவே இரஜதாதிகளிருக்கினும் அநிர்வசநீயமன்று; ஆனல், வியாவகாரிக சத்தியமாம். எங்ஙனம், சித்தாந்தத்தில் சுகமுதலியன பிராதிபாஸிகமாயினும் சொப்பனசுகமுதலியவற்றினும்

விலக்ஷண வியாவகாரிகமாகக் கொள்ளப்படுகின்றனவோ, நியாயமதத்தில் இருமைமுதலியன பிராதிபாஸிகமாகக் கொண்டு வியாவகாரிக சத்தியமாக மதிக்கப்படுகின்றனவோ, அங்ஙனமே இரஜதமுதலியன பிராதிபாஸிகமாயினும் வியாவகாரிக சத்தியமாம். இவ்வாற்ருல் இரஜதஞானத்தின் நிவிருத்திக்குப் பிந்திய கணத்தில் இரஜதமுதலியவற்றின் நிவிருத்தி உண்டாகின்றது. அல்லது இரஜதஞானத்தின் நிவிருத்திக்கு ஏதுவாகிய சுத்தியின் ஞானம், அல்லது வேறு பதார்த்தத்தின் ஞானம் எதுவோ அதனுலேயே இரஜதஞானத்தின் நிவிருத்தி க்ஷணத்தில் இரஜத்தின்நிவிருத்தி உண்டாகின்றது. சுத்திஞானத்தினுலேயே இரஜதத்தின் நிவிருத்தி உண்டாகுமென்னும் நியம மில்லை.

இவ்வாறு கூறின் உலக அநுபவத்திற்கு விரோத முண்டாகும்; சகல சாஸ்திரங்களுக்கும் விரோத முண்டாகும்; சித்தாந்தத்தின் விடுபா டுண்டாகும்; யுக்திக்கும் விரோதமாகும். ஏனெனின், சுத்திஞானத்தினுல் இரஜதப் பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றதென்பது சகல லோகத்திலும் பிரசித்தமாம்; சகல சாஸ்திரங்களிலும் பிரசித்தமாம். சத்கியாதிவாதிக்கும் இதுவே சித்தாந்தமாம். சத்கியாதிவாதியின் மதத்தில் விசேஷரூபமாகச் சுத்தியின் ஞானம் இரஜதாவயவத்தின் ஞானத்திற்குப் பிரதிபந்தகமாம். ஆதலால், இரஜதாவயவத்தின் ஞானத்திற்கு விரோதி சுத்தியின் ஞானமென்பது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இரஜதாவயவத்தின் உணர்ச்சிக்கு விரோதியாகிய சுத்திஞானமே இரஜதஞானத்திற்கு விரோதமெனக் கொள்ளுதல் கிலுப்தகற்பனையாம். நிர்ணயிக்கப்பட்டதனைக் கிலுப்த மென்பர். சுத்திஞானமின்றிப் பிறிதினுல் இரஜதஞானத்தின் நிவிருத்தி அங்கீகரிக்கின் கிலுப்தமின்றிய கற்பனையாகும். இவ்வாற்ருல் கிலுப்தகற்பனை யோக்கியமாம். இந்த யுக்தியினுலும் விரோத முண்டாகும். ஆதலால், சுத்திஞானத்தினுலேயே இரஜதத்தின் நிவிருத்தியும் அதன் ஞானத்தின் நிவிருத்தியும் அங்கீகரிக்கத்தக்கனவாம்.

143. சத்கியாதிவாதத்துள்ள பிரபல தோஷம்

முற்கூறியவண்ணம் இரஜதஞாஞபாவத்தால் இரஜதத்தின் நிவிருத்தியை அங்கீகரித்து, இரஜதஞானத்தின் நிவிருத்தி

க்கு அநேக சாதனங்களை அங்கீகரிக்கினும், சொல்லப்படும் தோஷத்தினால் சத்கியாதிவாதிக்கு மீட்சி உண்டாகிறதில்லை. அத் தோஷம் இதுவாம்:—

யாண்டுச் சுத்தியில் எந்த க்ஷணத்தில் இரஜதப்பிரம முண்டாகின்றதோ, அதே க்ஷணத்தில் சுத்தியினோடு அக்கினியின் சையோக முண்டாய், அடுத்தக்ஷணத்தில் சுத்தியின் துவம்சமும் பஸ்மத்தின் உற்பத்தியும் உண்டாயின், ஆண்டு இரஜதஞானத்தின் விருத்திக்குச் சாதனம் ஒன்றும் உண்டாகவில்லை. ஆதலால், சுத்தியின் துவம்சத்திற்கும் பஸ்மத்தின் உற்பத்திக்கும் முன் இரஜதத்தின் நிவிருத்தி உண்டாகாமையால் பஸ்மதேசத்தில் இரஜதத்தின் இலாப முண்டாதல்வேண்டும். ஏனெனின், இரஜதத் திரவியம் தேஜசாம். அதன் துவம்சம் கந்தமுதலியவற்றின் சம்பந்தமின்றி உண்டாகிறதில்லை. ஆதலால், பிரமஸ்தானத்தில் வியவகாரிக இரஜதமாகிய சத்பதார்த்தத்தின் கியாதி உண்டாகின்றது. இந்தச் சத்கியாதிவாதம் அசங்கதமாம்.

ஒரு இரஜ்ஜுவில் பத்துப் புருஷர்களுக்கு ஒருவனுக்குத் தண்டமும், ஒருவனுக்கு மாலையும், ஒருவனுக்குச் சர்ப்பமும், அங்ஙனமே ஒருவனுக்கு ஜலதாரையுமாக வேறு வேறு பதார்த்தங்களின் பிரம முண்டாகுமாயின், இப் பதார்த்தங்களின் அவயவம் சொற்ப இரஜ்ஜு தேசத்திற் சம்பவியாது. ஏனெனின், மூர்த்தத்திரவியம் ஸ்தானத்தை நிரோதிக்கும். ஆதலால், சொற்பதேசத்தில் இத்தனைப் பதார்த்தங்களின் அவயவங்கள் சம்பவியா. பிரமகாலத்தில் தண்டமுதலிய அவயவிகள் எவ்வாற்றானும் சொற்பதேசத்திற் சம்பவியா. சித்தாந்தத்திலோ தண்டாதிகள் அநிர்வசநீயமாம். அவை வியவகாரிக தேசத்தை நிரோதியா. சத்கியாதிவாதியும் அத் தண்டமுதலியவற்றில் ஸ்தானநிரோதமுதலிய பயனை அங்கீகரியாவிடின், தண்டமுதலியவற்றைச் சத்தென்று கூறுதல் விருத்தமும் பயனின்மையுமாம். தண்டமுதலியவற்றின் உணர்ச்சிமாத்திரம் உண்டாகின்றது. வேறு காரியம் அவற்றால் உண்டாகிறதில்லை. இவ்வாறு கூறின் அநிர்வசநீயவாதமே சித்தமாகின்றது.

அன்றியும், பிரமஸ்தலத்தில் சத்பதார்த்தத்தின் உற்பத்தி அங்கீகரிக்கின், நெருப்போடுகூடிய ஊஷரபூமியில் ஜலப்

பிரமம் உண்டாயின் ஆண்டு ஜலத்தினுல் அக்கினி சாந்தமாதல்வேண்டும். பஞ்சின்பேரில் வைக்கப்பட்ட குன்றிமணிக்கொத்தில் அக்கினிப்பிரம முண்டாயின் ஆண்டுப் பஞ்சினை எரித்தல்வேண்டும். தோஷத்தோடுகூடிய காரணத்தால் உற்பத்தியாகிய பதார்த்தத்தின் உணர்ச்சி அந்நியருக்குத் தோற்ருது. எவனுடைய தோஷத்தினுல் உற்பத்தியாயினதோ அவனுக்கே தோற்றுமென்று கூறின், தோஷத்தின் காரியமாகிய ஜல, அக்கினிகளால் ஈரமும் தாகமு முண்டாகாவிடின், அவற்றைச் சத்தியமென்று கூறுதல் கேவலம் சிரிப்பிற்குக் காரணமாம். ஏனெனின், அவயவமோர் ஸ்தானநிரோத முதலியவற்றிற்கு ஏதுவன்று. அவயவியினுல் ஒரு காரியமும் உண்டாகிறதில்லை. இங்ஙனம் பதார்த்தத்தினைச் சத்தென்று கூறுதலைக் கேட்டுப் புத்திமான்களுக்கு நகை யுண்டாகின்றது.

ஆதலால், சத்கியாதி வாதியின் வார்த்தை சம்பவியாததோடு, இப் பக்ஷம் முற்றும் யுத்தி யில்லாததாம். இதஞற்ருன் விசாரசாகரத்தில் சத்கியாதி இல்லை. எந்தப் பக்ஷத்திற்கு ஒருவாறு பொருத்தமிருக்க, மீண்டும் தர்க்கமுதலிய பலத்தால் கண்டன முண்டாகின்றதோ அந்தப் பக்ஷம் எழுதப்படவேண்டும். சத்கியாதிவாதத்தின் யுக்தி (பொருத்தம்) சம்பவிக்கிறதில்லை யாகவின் இந் நூலினும் எழுதத்தக்கதன்று. என்ருலும் முற்றும் எழுதாவிடின், 'இதனைப் படிக்கின்றவர்களுக்கு நூலாசிரியருக்குச் சத்கியாதிவாதத்தின் ஞானம் இருந்திராது' என்னும் பிரமம் உண்டாய்விடும். அந்தப் பிரமத்தை நிவிர்த்திக்தற்பொருட்டு ஈண்டு எழுதப்பட்டிருக்கின்றது.

144-148. மூவகை அசத்கியாதியின் கிரமம்

144. சூனியவாதியின் கிரமமாக அசத்கியாதி வாதத்தின் கண்டனம்

அங்ஙனமே அசத்கியாதிவாதமும் முற்றும் யுக்தி அநுபவ சூநியமாம். நிராகரண மின்றியும் அது எவனுடைய புத்தியினும் ஆரூடமாகா (ஏரு) தாகலின் நிராகரிக்கத் தக்கதன்று. என்ருலும், அசத்கியாதிவாதி வேதமார்க்கத்திற்கு விரோதியாதல் பிரசித்தமாம். சூத்திரங்களாலும் அவரது மதத்தின் கண்டனம் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆதலால், கண்டிக்கத் தக்கதாம்.

அசத்கியாதிவாதி இருவர்:—ஒருவரோ சூநியவாதியாகிய நாஸ்திகர்; அசத்கியாதியை அங்கீகரித்திருக்கின்றனர். அவர் மதத்திலோ சகல பதார்த்தங்களும் அசத்து வடிவமாம். ஆதலால், சுத்தியில் இரஜதமும் அசத்தாம். சூநியவாதியின் மதத்திலோ அசத்தாகிய அதிஷ்டானத்தில் இரஜதம் அசத்தாம். ஆதலால், பிரமம் நிரதிஷ்டானமாம். அங்ஙனமே ஞாதாஞானமும் அசத்தாம். இம் மதத்தின் கண்டனம் சாரீரகத்தினது இரண்டாவது அத்தியாயத்தின் தர்க்கபாதத்தில் விஸ்தாரமாகச் செய்யப்பட்டிருக்கின்றது; அநுபவ விருத்தமுமாம். ஏனெனின், சூநியவாதத்தில் எல்லா இடங்களிலும் சூநியமிருக்கின்றதாகலின், எதன் வியவகாரமும் பிரசித்தமாக உண்டாகலாகாது. சூநியத்தினுல் வியவகாரமுண்டாகுமாயின், ஜலத்தின் பிரயோஜனம் அக்கினியினுலும், அக்கினியின் பிரயோஜனம் ஜலத்தினுலும் உண்டாதல்வேண்டும். அக்கினியும் ஜலமுமோ சத்தியமாகவாவது மித்தையாகவாவது ஓரிடத்து மில்லை. கேவலம் சூநியதத்துவ மிருக்கின்றது. அது முழுவதும் ஆகாசமாம். அதனிடத்து ஓர் விசேஷமு மில்லை. சூநியத்தில் விசேஷம் அங்கீகரிக்கின் சூநியவாதிக்கு ஆனி உண்டாகும், அவ் விசேஷமே சூநியத்திற்குப் பின்னமாயிருத்தலின். அன்றியும் சூநியத்தில் விசேஷ மிருக்கின்றது. எதற்கு விலக்ஷணத்தன்மை கூறுகின்றனரோ, அதனுல் வியவகாரபேதமுண்டாகின்றது. அவ் விசேஷமும், வியவகாரமும், அங்ஙனமே வியவகாரத்தின் கர்த்தாவும் பரமார்த்தமாகச் சூநியமாம். ஆதலால், சூநியத்தன்மைக்கு ஆனியில்லை என்று கூறின் அதுவும் பொருந்தாது. ஏனெனின், சூநியத்தில் விசேஷ மிருக்கின்றதென்னும் இவ் வார்த்தையும் விருத்தமாம். விசேஷமுடையதெனக் கூறின், சூநியத்தன்மைக்கு ஆனி உண்டாகின்றது. சூநியமெனக் கூறின், விசேஷமுடையதின் ஆனியினுல் வியவகாரபேதம் சம்பவிக்கிறதில்லை. இவ்வாற்ருன் சூநியவாதம் சம்பவியாது.

145. ஓர் தாந்திரிகாது கிரமமாக அசத்தியாதி வாதம்

ஓர் தாந்திரிக அசத்கியாதிவாதி உளன். அவன் மதத்தில் சுத்திமுதலிய வியவகாரத்தின் பதார்த்தங்களோ அசத்தன்று.

ஆனால், பிரமஞானத்தின் விஷயமாகிய எந்த அநிர்வசநீய ரஜத முதலியன சித்தாந்தத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவை அசத்தாம். ஆதலால், வியாவகாரிக ரஜதமுதலியன தனது தேசத்தி லிருக்கின்றன. அவற்றிற்குச் சுத்தியில் சம்பந்த மில்லை. அந்நியதாக்கியாதி வாதியினைப்போல சுத்தியில் ரஜதத்தன்மையின் உணர்ச்சி உண்டாகிறதில்லை. அநிர்வசநீய ரஜதம் உற்பத்தி யாகிறதில்லை. அக்கியாதிவாதியினைப்போல இரண்டுஞான முண்டாகிறதில்லை. சூநியவாதியினைப்போல சுத்தி அசத்தன்று; ஞாதாவும் ஞானமும் அசத்தன்று. ஆனால், சுத்தி ஞானம் ஞாதா சத்தாம்.

தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்குச் சுத்தியினோடு சம்பந்த முண்டாயின், அப்போது சுத்தியின் ஞான முண்டாகிறதில்லை. ஆனால், சுத்திதேசத்தில் அசத்திரஜதத்தின் பிரதீதி உண்டாகின்றது. அந்நியதாக்கியாதி வாதத்தில் சுத்தி தேசத்தில் இரஜதம் அசத்தாம். காந்தையின் கரத்திலும் அங்ஙனமே கடையிலும் சத்திய ரஜதம் இரண்டு மதங்களிலு மிருக்கிறது. அங்ஙனமாயினும் அந்நியதாக்கியாதி வாதத்திலோ தேசாந்தரத்துள்ள சத்திய ரஜதத்திலிருக்கும் ரஜதத்தன்மையின் ஞானம் சுத்தியில் உண்டாகின்றது. அசத்கியாதிவாதத்தில் தேசாந்தரத்தில் இரஜதமோ இருக்கின்றது. அதன் தர்மமாகிய ரஜதத்தன்மையின் ஞானம் சுத்தியினிடத்து உண்டாகிறதில்லை. ஆனால், அசத்தைக் கோசரிக்கும் இரஜதஞான மிருக்கின்றது. சுத்தியினோடு தோஷத்தோடுகூடிய நேத்திரத்தின் சம்பந்தத்தால் இரஜதப்பிரம முண்டாகின்றது. அதன் விஷயம் சுத்தியன்று. இரஜதப்பிரமத்தின் விஷயம் சுத்தி ஆகுமாயின், "இது சுத்தி" என்னும் ஞானம் உண்டாதல் வேண்டும். சுத்தித்தன்மை வடிவ விசேஷ தர்மத்தின் தோஷ பலத்தால் பான முண்டாகாவிடின், சாமாநிய அம்சத்தின் "இது" எனும் இவ்வளவே ஞான முண்டாதல்வேண்டும். ஆதலால், பிரமத்தின் விஷயம் சுத்தியன்று. அங்ஙனமே பிரமத்தின் விஷயம் இரஜதமு மன்று. ஏனெனின், முன் உள்ள இடத்திலோ இரஜத மில்லை; வேறிடத்தில் இரஜத மிருக்கின்றது; அதனோடு நேத்திரத்தின் சம்பந்த மில்லை. இவ்வாற்றால் இரஜதப்பிரமத்தின் விஷயம் ஒன்று மில்லை. சுத்தி

ஞானத்திற்குப் பிற்காலத்தில் "ஈண்டுக் காலத்திரயத்திலும் இரஜத மில்லை" என்னும் உணர்ச்சி உண்டாகின்றது. ஆதலால், இரஜதப்பிரமம் நிர்விஷயமாயிருத்தலின் அசத்கோசர மெனப்படுகின்றது. அசத்கோசர ஞானத்தினையே அசத்கியாதி யென்பர்.

146. நியாயவாசஸ்பதிகாரர் கிரமப்படி அசத்கியாதி வாதம்

ஒருவர் அசத்கியாதியை இவ்வாறு கூறுகின்றார்:—சுத்தியினோடு நேத்திரத்தின் சம்பந்தத்தால் இரஜதப்பிரம முண்டாகின்றது. ஆதலால், இரஜதப்பிரமத்தின் விஷயம சுத்தியாம். ஆனால், சுத்தியில் சுத்தித்தன்மையும் சுத்தியின் சமவாயமுமாகிய இரண்டும் தோஷத்தினால் தோற்றுகிறதில்லை. ஆனால், சுத்தியில் இரஜதத்தன்மையின் சமவாயம் தோற்றுகின்றது. இரஜதத்தன்மையின் சமவாயம் சுத்தியில் இல்லை; ஆகலின் அசத்கியாதியாம். இரஜதத்தன்மைப் பிரதியோகியினது சுத்தி அநுயோகினையுடைய சமவாயம் அசத்தாம். அதன் கியாதி அதாவது உணர்ச்சி அசத்கியாதி எனப்படுகின்றது. இரஜதத்தன்மைப் பிரதியோகிக சமவாயம் இரஜதத்தில் இரஜதத்தன்மைக்குப் பிரசித்தமாம். சுத்தி அநுயோகிக சமவாயம் சுத்தியில் சுத்தித்தன்மைக்குப் பிரசித்தமாம். ஆனால், இரஜதத்தன்மைக்குப் பிரதியோகியினை யுடைய சமவாயம் இரஜத அநுயோகியினை யுடையதாதல் பிரசித்தம்; சுத்தியினை அநுயோகியாக வுடையதன்று. சுத்தியினை அநுயோகியாகவுடைய எச் சமவாயம் பிரசித்தமோ அது சுத்தித்தன்மைப் பிரதியோகியினை யுடையதாம். இரஜதத்தன்மைப் பிரதியோகியினை யுடையதன்று. இவ்வாற்றால் இரஜதத்தன்மைப் பிரதியோகியினையுடையதும் சுத்தி அநுயோகியினை யுடையதுமாகிய சமவாயம் அப்பிரசித்தமாயிருத்தலின் அசத்தாம். அதன் பிரதீதியை அசத்கியாதி யென்பர். சுத்தி எதன் அநுயோகி அதாவது தர்மி யாகின்றதோ, அது சுத்தி அநுயோகிக மெனப்படுகின்றது. இரஜதத்தன்மை எதன் பிரதியோகி யாகின்றதோ, அது இரஜதத்தன்மைப் பிரதியோகிக மெனப்படுகின்றது.

தாற்பரியம் இதுவாம்:—கேவல சமவாயம் பிரசித்தம். இரஜதத்தன்மைப் பிரதியோகிக சமவாயமும் இரஜதத்தாற் பிரசித்தம். சுத்தி அநுயோகிக சமவாயமும் சுத்தி தர்மங்களும் சுத்தியிற் பிரசித்தமாம். பிரசித்த சமவாயத்தில் சமவாயத் தன்மைத் தர்ம மிருக்கின்றது. இரஜதத்தன்மைப் பிரதியோ கித்தன்மையும் சமவாயத்திற் பிரசித்தமாம். அங்ஙனமே சுத்தி அநுயோகிகத்தன்மையும் சமவாயத்திற் பிரசித்தமாம். ஆனால், இரஜதத்தன்மைப் பிரதியோகிகத்தன்மையும் சுத்தி அநுயோ கிகத்தன்மையுமாகிய இரண்டு தர்மங்களும் ஓரிடத்துச் சம வாயத்தில் அப்பிரசித்தமாயிருத்தலின், சுத்தி அநுயோகிகத் தன்மை விசிஷ்ட இரஜதத்தன்மைப் பிரதியோகிகத்தன்மை விசிஷ்ட சமவாயம் அப்பிரசித்தமா யிருத்தலின் அசத்தாம். அதன் கியாதி அசத்கியாதி எனப்படுகின்றது. இது நியாயவாசஸ் பதிகாரர் மதம். இவ்வாறு அதிஷ்டானத்தை அங்கீகரித்து, அசத்கியாதியை இருவகையாகக் கொண்டிருக்கின்றனர். ஒன்றே சுத்தி அதிஷ்டானத்தில் அசத்தாகிய இரஜதத்தின் பிரதீதி வடிவம்; மற்றையது சுத்தியில் அசத்தாகிய இரஜதத்தன்மைச் சமவாயத்தின் பிரதீதிவடிவமாம்.

147. இருவகை அசத்கியாதி வாதத்தின் கண்டனம்

அவ் விரண்டும் அசங்கதமாம். ஏனெனின், அசத்கியாதியை அங்கீகரிப்பவன் எவனோ அவனை இது கேட்குதும்:—அசத் கியாதி என்னும் வாக்கியத்தில் பாதிக்கப்படாததின் விலக்ஷண மென்பது அசத் சப்தத்தின் பொருளா? அல்லது அசத் தென்னும் சொற்பொருள் சொரூப மின்மையா? அசத்தென்பதின் பொருள் சொரூபமின்றிய தென்பதா மெனின், "வாயில் எனக்கு நாவில்லை" என்னும் வாக்கியம்போல அசத்கியாதி வாதத்தின் அங்கீகாரம் நாண மின்றியதாம். ஏனெனின், சத் தாஸ்பூர்த்தி யின்றியதனைச் சொரூபமின்றிய தென்பர். ஆதலால், சத்தாஸ்பூர்த்தி சூனியமும் தோற்றுகின்ற தென்னும் அசத் கியாதிவாதம் சொல்லியபடி சித்தமாகின்றது. சத்தாஸ்பூர்த்தி சூனியத்தின் பிரதீதியைக் கூறுதல் விருத்தமாம். ஆதலால், பாதிக்கப்படாததின் விலக்ஷணம் அசத்தென்னும் சொற் பொருளாமெனின், பாதிக்கப்படாததின் விலக்ஷணம் பாதிக்கப்

படுவதாகின்றது. பாதிக்கப்படுவதற்குரியதனைப் பாத்திய மென்பர். இவ்வாற்ருல் பாதத்திற்கு உரியதின் பிரதீதி அசத்கியாதி யெனப்படுகின்றதென்பது சித்தமாயிற்று. அதுவே சித்தாந்தியின் மதமாம். ஏனெனின், அநிர்வசநீயக்கியாதி சித்தாந்தத்தில் உண்டு. பாதயோக்கியமே அநிர்வசநீய மாகின்றது. இவ்வாற்ருல் சித்தாந்தத்திற்கு விலக்ஷணமாக அசத்கியாதிவாதம் உளதென்று கூறுதல் சம்பவியாது.

148—154. ஆத்மக்யாதியின் கிரமமும் கண்டனமும்.

148. ஆந்தரபதார்த்தங்களை அங்கீகரிக்கும் ஆத்மக்யாதிவாதியின் அபிப்பிராயம்.

அங்ஙனமே ஆத்மக்யாதி வாதமும் அசங்கதமாம். ஏனெனின், விஞ்ஞானவாதியின் மதத்தில் ஆத்மக்யாதி யுளது. க்ஷணிக விஞ்ஞானத்தினை விஞ்ஞானவாதி ஆத்மா வென்பர். அவர் மதத்தில் பாகியரஜத மில்லை. ஆனுல், ஆந்தரவிஞ்ஞான வடிவ ஆத்மா விருக்கின்றது. அதன் தர்மம் இரஜதமாம். தோஷபலத்தால் வெளியிற் ருேன்றுகிறது. சூநியவாதியின் மதமின்றி ஆந்தரபதார்த்தத்தின் சத்தையில் சுகதருடைய சிஷ்யர்கள் எவருக்கும் விவாத மில்லை. புறப்பதார்த்தத்தினையோ ஒருவர் அங்கீகரித்திருக்கின்றனர்; ஒருவர் அங்கீகரிக்கவில்லை. ஆதலால், புறப்பதார்த்தத்தின் சத்தையிலோ அவர்களுக்கு விவாத முண்டு. சூநியவாதியின் ஓர் நாஸ்திகனும் ஆந்தர (உள்) விஞ்ஞானத்தின் நிஷேதத்தினைச் செய்கிறதில்லை. ஆதலால், உள் இரஜதத்தின் விஞ்ஞான வடிவ ஆத்மா அதிஷ்டானம். அதன் தர்மமாகிய இரஜதம் உள்ளிருப்பதாம். தோஷவலியால் புறத்ததுபோலத் தோற்றுகின்றது. ஞானத்தினுல் இரஜதத்தின் பாதம் சொரூபமாக உண்டாகிறதில்லை. ஆனுல், இரஜதத்தினது புறத்திருத்தற்றன்மையின் பாத முண்டாகின்றது. அநிர்வசநீயக்கியாதி வாதத்தில் இரஜத தர்மியின் பாதமும், இதுவெனுந்தன்மை வடிவ பாகியவிருத்தியின் பாதமும் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆத்மக்கியாதி மதத்தில் இரஜதத்தின் பாதமோ அங்கீகரிக்கப்படுகிறதில்லை.

ஏனெனின், சூநியவாதிக்கு வேருன சகல சௌகதர்கள் (சுகதர்வழி வந்தோர்) மதத்திலும் பதார்த்தங்களின் ஆந்தர

சத்தையில் விவாத மில்லை. ஆதலால், சொரூபமாக இரஜதத்தின் பாதம் அங்கீகரிக்கப்படுகிறதில்லை. கேவலம் பாகியத்தன்மை வடிவ இதந்தையின் பாதம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆதலால், அநிர்வசநீய வாதம் அங்கீகரிக்கின், தர்ம தர்மிகளின் பாதம் கற்பிதத்தில் கௌரவமாம். ஆத்மக்யாதியை அங்கீகரிக்கின் தர்மியின் பாதமின்றி இதந்தைவடிவ தர்மமாத்திரத்தின் பாதம் கற்பித்தலில் இலாகவமாம். இது ஆத்மக்கியாதி வாதியின் அபிப்பிராயம். இம் மதத்தில் இரஜதம் ஆந்தர சத்தியமாம். அது வெளி தேசத்தில் தோற்றுதல் பிரமமாம். ஆதலால், இரஜதஞானத்தில் இரஜதகோசரத்தன்மை அம்சம் பிரமமன்று. ஆனால், இரஜதத்தின் பாகியதேசத் திருக்குந்தன்மை யுணர்ச்சி அம்சத்தில் பிரமம் உண்டு.

149. ஆந்தர பதார்த்தத்தை அங்கீகரிக்கும் ஆத்மக்யாதி வாதியினது மதத்தின் கண்டனம்

இம்மதமும் நலமுடையதன்று:—இரஜதம் உள்ளிருப்பதாமென்னும் அநுபவம் ஒருவருக்கும் உண்டாகிறதில்லை. பிரமஸ்தலத்திலேனும் யதார்த்த ஸ்தலத்திலேனும் இரஜதமுதலியவற்றின் ஆந்தரத்தன்மை எப் பிரமாணத்தாலும் பெறப்படுவதில்லை. சுகமுதலியன ஆந்தரமும், இரஜதமுதலியன பாகியமுமா மென்னும் அநுபவம் எல்லோருக்கு முண்டாகின்றது. இரஜதத்தை ஆந்தரமெனக்கொள்ளின் அநுபவத்திற்கு விரோதமாம். ஆந்தரத்தன்மையைச் சாதிக்கும் பிரமாண யுக்திகளுமில்லை. ஆதலால், ஆந்தர இரஜதத்திற்குப் பாகியப் பிரதீதியை அங்கீகரித்தல் அசங்கதமாம்.

150. சௌகதர்களது இரண்டு பேதங்களில் பாகிய பதார்த்தவாதிகளது ஆத்மக்கியாதியின் அநுவாதம்

சௌகதர்களில் இரண்டு பேத முண்டு:—ஒன்றோ விஞ்ஞானவாதம்; மற்றையது பாகிய வாதம். பாகியவாதத்திலும் இரண்டு பேத முண்டு. ஒன்றோ பாகிய பதார்த்தம் அநுமேயமாம்; பிரத்தியக்ஷ மன்று; ஞானத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது; ஞானத்தினால் ஞேயத்தின் அநுமிதி உண்டாகின்றது; இவ்

வாற்றால் பாகியபதார்த்தங்களுக்குப் பரோக்ஷவாத மிருக்கின்றது. பாகிய பதார்த்தமும் பிரத்தியக்ஷ ஞானத்தின் விஷயமாம். இவ்வாற்றால் பாகிய பதார்த்தங்களுக்கு அபரோக்ஷவாத முண்டு; இவற்றில் விஞ்ஞானவாதியின் மதத்திலோ வியாவகாரிக இரஜதமும் பாகியமன்று. பாகிய பதார்த்த வாதியின் மதத்தில் யதார்த்த ஞானத்தின் விஷயமாகிய இரஜதமோ பாகியமாம். ஆதலால், முற்கூறிய அநுபவத்திற்கு விரோதமில்லை. பிரமஸ்தலத்தில் பாகிய இரஜதத்தை அங்கீகரித்தற்குப் பிரயோஜன மின்று. ஏனெனின், கடகமுதலியவற்றின் சித்தியோ அவ் விரஜதத்தால் உண்டாகிறதில்லை; கேவலம் பிரதீதி மாத்திர மாகின்றது. விஷயமின்றிப் பிரதீதி உண்டாகாதாகலின், பிரமப்பிரதீதிக்கு விஷயத்தோடு கூடிய தன்மை சித்தித்தலே அவ் விரஜதத்தின் பயனும். அதனை ஆந்தரமாகவே அங்கீகரிக்கினும் பிரமப் பிரதீதி விஷயத்தோடு கூடியதாய் விடுகின்றது. பாகியமெனக் கொண்டு பிரதீதிக்கு விஷயத்தோடு கூடியதன்மை சித்திக்கச் செய்யின், அவர் மதத்தில் முற்கூறியபடி தர்ம தர்மிகளுக்குப் பாதம் அங்கீகரித்தலால் கௌரவ மிருக்கின்றது. ஆந்தர ரஜதத்திற்குத் தோஷபலத்தால் வெளிப் பிரதீதியை அங்கீகரிக்கின், கேவலம் இதந்தையின் பாதம் அங்கீகரித்தலால் இலாகவ முண்டாகின்றது. யதார்த்த ஞானத்தின் விஷயமாகிய இரஜதம் முன்னிருக்கு மிடத்தில் உளதாகின்றது. பிரமஞானத்தின் விஷயமாகிய இரஜதமும் முன்னிருக்கு மிடத்தில் உளதாயின், யதார்த்தஞானத்திற்கும் பிரமஞானத்திற்கும் விலக்ஷணத்தன்மை உண்டாகாது. ஆத்மக்கியாதி மதத்திலோ யதார்த்தஞானத்தின் விஷயமாகிய இரஜதமும் முன்னிருக்கு மிடத்தி லிருக்கின்றது. பிரமஞானத்தின் விஷயமாகிய இரஜதம் ஆந்தரமாம்.

ஆதலால், பாகியத்தன்மை ஆந்தரத்தன்மை வடிவ விஷயத்தின் விலக்ஷணத்தன்மையினால் யதார்த்தத்தன்மை அயதார்த்தத்தன்மைப்பேதம் ஞானத்திற்கு உண்டாகின்றது. பாகிய தேசத்தில் பிரமத்தினது விஷயத்தின் உற்பத்தி அங்கீகரிக்கின், சுத்திதேசத்தில் உற்பத்தியாகிய இரஜதத்தின் பிரதீதி எல்லோருக்கும் உண்டாதல் வேண்டும். ஒரு அதிஷ்டானத்தில் பத்துப் புருஷர்களுக்கு வேறு வேறு பதார்த்தங்களின்

பிரமம் உண்டாயின், ஆண்டு ஒவ்வொரு புருஷனுக்கும் எல்லாப் பதார்த்தங்களின் பிரதீதியும் உண்டாதல்வேண்டும். ஆத்மக்கியாதி மதத்திலோ எவனுள்ளே எப் பதார்த்தம் உற்பத்தியாகின்றதோ, அவனுக்கு முன்னிருக்குமிடத்தில் அப் பதார்த்தம் தோற்றுகின்றது. ஆதலால், அந்நியபுருஷனுக்கு அதனது தோற்றத்தின் சங்கையே உண்டாகிறதில்லை. பிரமத்தின் விஷயத்திற்குப் பாகிய உற்பத்தி அங்கீகரிக்கின், அவர் மதத்தில் அந்நிய புருஷர்களுக்குத் தோற்றுமையில் சமாதானத்தைத் தேடுதலாகிய கிலேசமே பயனும். இவ்வாறு பாகிய பதார்த்தவாதி சௌகதமதத்தில் ஆத்மக்கியாதியின் வார்த்தை சம்பவிக்கின்றது. வியாவகாரிக பதார்த்தமே அவர்கள் மதத்தில் பாகியமாம். பிராதிபாஸிக ரஜதமுதலியன பாகியமன்று; கேவலம் ஆந்தரமேயாம்.

151. பாகிய பதார்த்தத்தை அங்கீகரிக்கும் ஆத்மக்கியாதிவாதியினது மதத்தின் கண்டனம்

அங்ஙனமாயினும் ஆத்மக்கியாதிவாதம் அசங்கதமேயாம். ஏனெனின், இரஜதமுதலிய பதார்த்தம் சொப்பனமின்றி ஜாக்கிரத்தில் ஆந்தரமென்பது அப்பிரசித்தமாம். பாகிய சுபாவத்திற்குப் பிரமஸ்தலத்தில் ஆந்தரம் கற்பித்தல் அப்பிரசித்த கற்பனையாகிய தோஷமாம். ஆந்தரமாயின், "என்னிடத்து இரஜதம், யான் இரஜதம்" என்னும் உணர்ச்சி உண்டாதல் வேண்டும். "இது இரஜதம்" என்பதாக இரஜதத்தின் பாகிய உணர்ச்சி உண்டாகின்றது.

இரஜதம் ஆந்தரமாய்ப் பாகியதேசத்தில் இல்லாதிருக்கினும், தோஷமகாத்மியத்தால் ஆந்தரபதார்த்தத்தின் பிரதீதி பாகியத்தில் உண்டாகின்றது. பாகியத்தன்மை வடிவ இதந்தை (இதுவெனுந் தன்மை) சுத்தியி லிருக்கின்றது. தோஷத்தின் மகாத்மியத்தால் சுத்தியின் இதந்தை இரஜதத்தில்தோற்றுகின்றது. எத் தோஷத்தினால் ஆந்தர ரஜதம் உற்பத்தியாயிருக்கின்றதோ, அத் தோஷத்தினாலேயே ஆந்தரத்தில் உற்பத்தியாகிய இரஜதத்தில் சுத்தியின் இதந்தை உணர்ச்சி உண்டாகின்றது. இரஜதத்திற்குப் பாகிய தேசத்தில் உற்பத்தி அங்கீ

கரிக்கின், பாகியதேசத்திற் சத்திய ரஜதமோ சம்பவியாது; அநிர்வசநீயம் மதிக்கப்படும். அவ் வநிர்வசநீய வஸ்து உலகத்தில் அப்பிரசித்தமாம். ஆதலால், அப்பிரசித்த கற்பனை தோஷமாகும். ஆந்தரத்திலோ சத்தியரஜதம் உற்பத்தி யாகின்றது. ஆந்தரமாயிருத்தலின் அதன் கேடும் உபாதானமும் அசக்கியமாம். ஆதலால், சத்தியமாயினும் கடகமுதலிய சித்தித்த வடிவப்பயனின் அபாவம் சம்பவிக்கின்றது. ஆதலால், அநிர்வசநீயவஸ்துவின் கற்பனை உண்டாகிறதில்லை.

அநிர்வசநீயக் கியாதியினால் ஆத்மக்கியாதியினும் இவ்விலாகவ மிருக்கின்றதென்று இவ்வாறு கூறின், அதுவும் அசங்கதமாம்:—சுத்தியின் இதந்தை ரஜதத்தில் தோற்றுகின்றதென்று கூறுதலால் அந்நியதாக்கியாதியின் அங்கீகார முண்டாகின்றது. இதந்தைத் தோற்றத்தில் அந்நியதாக்கியாதி அங்கீகரிக்கின், சுத்தியில் இரஜதத்தன்மைத் தர்மியின் பிரதீதியினையும் அந்நியதாக்கியாதியென்றே கொள்ளவேண்டும். ஆந்தரரஜதத்தின் உற்பத்தி அங்கீகரித்தல் நிஷ்பலமாம். எங்ஙனம்: இரஜதபதார்த்தம் சுத்தியினால் வியவகிதமாயிருக்கின்றது; அதனது தர்மத்தின் பிரதீதி சுத்தியிற் சம்பவியாதெனக் கூறின், உன்னுடைய மதத்திலும் சுத்தியினால் வியவகித உள்ளிடத்தில் இரஜத மிருக்கின்றது. அதனிடத்துச் சுத்தியின் தர்மமாகிய இதந்தையின் பிரதீதி சம்பவியாமை சமமாம்.

152. ஆத்மக்கியாதி வாதத்தின் விலக்ஷணமான அத்வைத வாதத்தின் சித்தாந்தம்

சித்தாந்தத்திலோ சுத்தியிலிருப்பதாகிய தாதான்மியத்தின் அநிர்வசநீய சம்பந்தம் இரஜதத்தில் உற்பத்தியாகின்றது. அதனைச் சம்சர்க்காத்தியாச மென்பர். அதிஷ்டானத்தின் சம்பந்தம் ஆரோபிதத்தில் யாண்டுத் தோற்றுகின்றதோ, ஆண்டுச் சகல அதிஷ்டானத்தின் சம்சர்க்காத்தியாசமு முண்டாகின்றது. சம்சர்க்காத்தியாச மின்றி அந்நிய தர்மத்தின் பிரதீதி அந்நியத்தில் உண்டாகிறதில்லை. இவ்வாற்றால் அத்தியாசமின்றிச் சுத்தியிலிருக்கும் இதந்தையின் பிரதீதி ஆந்தர இரஜதத்திற் சம்பவியாமையால், ஆத்மக்கியாதிவாதம் அசங்கதமாம்.

அநிர்வசநீயவஸ்துவின் அப்பிரசித்த கற்பனையாகிய தோஷம்

சொல்லப்பட்டது. அதுவும் அஞ்ஞானத்தாற் சொல்லப்பட்டதாம். ஏனெனின்,

அத்வைத வாதத்தின் முக்கிய சித்தாந்தம் இதுவாம்:—சேதனம் சத்தியம்; அதற்கு வேறாகிய யாவும் மித்தையாம். அநிர்வசநீயத்தினை மித்தை யென்பர். ஆதலால், சேதனத்திற்குப் பின்னமான பதார்த்தத்தினைச் சத்தியமென்று கூறுதலிலேயே அப்பிரசித்த கற்பனை இருக்கின்றது. சேதனத்திற்குப் பின்னமான பதார்த்தங்களில் அநிர்வசநீயத்தன்மையோ அதிப்பிரசித்தமாம். யுக்தியினால் விசாரிக்கின் அப்போது எவ் அநாத்மபதார்த்தங்களின் சொரூபமும் சித்தியாது; ஆனால், தோற்றுகின்றது. ஆதலால், சகல அநாத்ம பதார்த்தங்களும் அநிர்வசநீயமாம். சித்தாந்தத்தில் அநாத்ம பதார்த்தம் எதுவும் சத்தியமன்று. கந்தருவ நகரத்தினைப்போல சகலப் பிரபஞ்சமும் திருஷ்டநஷ்ட சுபாவமாம். சொப்பனத்தினும் ஜாக்கிர பதார்த்தங்களில் சிறிதும் விலக்ஷணத்தன்மை யில்லை. சுத்திரஜதம் பிராதிபாஸிகமாம். காந்தை (ஸ்திரீ) யின் கை முதலியவற்றினுள்ள இரஜதம் வியாவகாரிகமாம்.

இவ்வாற்றால் அநாத்ம பதார்த்தங்களில் மித்தியாத்தன்மை சத்தியத்தன்மையான விலக்ஷணத்துவம் ஒன்றற்கொன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது ஸ்தூலபுத்தி யுடையவர்களுக்கு அத்வைத போதத்தில் பிரவேசித்தற்பொருட்டு அருந்ததி நியாயத்தாற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்தூல புத்தியுடைய புருஷனுக்கு முதலிலேயே முக்கிய சித்தாந்தத்தின் கிரமத்தைச் சொல்லுமிடத்து, அற்புதமான அர்த்தத்தைக் கேட்டு அநாத்ம சத்தியத்தன்மைப் பாவனையுடைய புருஷன் சாஸ்திரத்தின் விமுகனாய்ப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனாய்விடுவான். இதன்பொருட்டே அநாத்ம பதார்த்தங்களுக்கு வியாவகாரிக பிராதிபாஸிக பேதத்தால் இருவகைச் சத்தை சொல்லப்பட்டது. சேதனத்திற்குப் பாரமார்த்திக சத்தை சொல்லப்பட்டது. பிரபஞ்சத்தின் சேதனத்தினும் நியூன (குறைந்த) சத்தை புத்தியில் ஆரூடமாய், சகல அநாத்ம பதார்த்தங்களுக்கும் சொப்பனமுதலிய திருஷ்டாந்தத்தால் பிராதிபாஸிகத் தன்மையை அறிந்து, நிஷேத வாக்கியத்தினால் சகல அநாத்மாக்களையும் சத்தாஸ்பூர்த்தி சூநியமென்று (சத்தையின் விளக்கமின்றியதென்று) அறிந்துகொள்ளவேண்டும். இதனாற்றான்

சத்தாபேதம் கூறப்பட்டது. அநாத்ம பதார்த்தங்களுக்கு ஒன்றற்கொன்று சத்தையின் வேறுபாட்டில் அத்வைத சாஸ்திரத்திற்குத் தாற்பரிய மில்லை. ஆதலால், அத்வைதவாதிக்கு அநிர்வசநீய பதார்த்தம் அப்பிரசித்தமா மென்று கூறுதல் விருத்தமாம்; வேறு வகையான சம்பவ மில்லை. ஆதலால், இலாகவ கௌரவம் கூறுதல் முற்றும் அசம்பவமாம். அநிர்வசநீயக் கியாதியின்றி வேறு விதமாகவும் சம்பவிக்கின், கௌரவ தோஷத்தைக் கண்டு இப் பக்ஷத்தின் தியாகம் சம்பவிக்கும். முற்கூறிய கிரமமாக சத்கியாதிமுதலிய எந்தப் பக்ஷமும் சம் பவியாது. ஆதலால், கௌரவ இலாகவவிசாரமே பயனின்றிய தாம்.

153. சித்தாந்தத்திற் கூறிய கௌரவ தோஷத்தின் பரிகார பூர்வகமாக இருவகை விஞ்ஞானவாதத்தின் அசம்பவம்

ஆத்மக்கியாதியின் நிரூபணத்தின் ஆரம்பத்தில், பாகிய ரஜத உற்பத்தி அங்கீகரிக்கின் இரஜததர்மியும் இதந்தைத் தருமமாகிய இவ்விரண்டற்கும் பாதத்தை அங்கீகரித்தலில் கௌரவ முண்டு. ஆத்மக்கியாதியை அங்கீகரிக்கின் இதந்தை மாத்திரத்திற்குப் பாத முண்டாகுதலால் தர்மியின் பாதத்தை அங்கீகரியாமையில் இலாகவ முண்டென்று கூறியிருக்கின்றது.

இக் கூற்றும் நலமுடையதன்று. ஏனெனின், சுத்தியின் ஞான முண்டாக "மித்தையாகிய இராஜதம் எனக்குத் தோற்றியது" என்றிவ்வாறு இராஜதத்தின பாதம் எல்லோருக்கும் அநுபவ சித்தமாயுளது. ஆத்மக்யாதியின்படி இராஜதத்தில் மித்தையாகிய பாகியத்தன்மைத் தோற்றமுண்டாய் இவ்வாறு பாத முண்டாதல்வேண்டும். ஆதலால், தர்மியினது பாதத்தை இலாகவபலத்தால் கெடுக்கின், பாகமுதலிய பயனைச் சாதிக்கும் வியாபார சமூகத்தில் ஒரு வியாபாரத்தைச் செய்து இலாகவ பலத்தால் அதிக வியாபாரத்தை விடுதல்வேண்டும். பிரம முடைய புருஷனுக்கு ஆப்தன் உபதேசஞ் செய்யின், அப் போது "இது இரஜதமன்று; இது சுத்தியாம்" என்றிவ்வாறு இராஜதத்தினைச் சொரூபமாக நிஷேதஞ் செய்கின்றான். ஆத்மக் கியாதியின்படி "ஈண்டு இராஜத மில்லை", ஆனால் "ஆத்மாவினிடத்தில் இராஜத மிருக்கின்றது" என் றிவ்வாறு இராஜதத்தி

னது தேசமாத்திரத்தின் நிஷேதஞ் செய்தல்வேண்டும். ஆதலால், ஆத்மாவினிடத்து உற்பத்தியானதற்குப் பாகியதேசத்திற் கியாதி யிருக்கின்றது. இவ் வர்த்தத்தில் தாற்பரியத்தினுல் பாகிய பதார்த்தவாதி சௌகதரது ஆத்மக்கியாதி வாதம் அசங்கதமாம். விஞ்ஞானத்திற்கு வேருக ஓர் பாகிய பதார்த்தமும் ஆந்தர பதார்த்தமு மில்லை. ஆனல், விஞ்ஞான வடிவ ஆத்மாவின் ஆகாரம் சகல பதார்த்தங்களுமாம்.

இவ்வாற்ருல் விஞ்ஞானவாதிக்கு விஞ்ஞானவடிவ ஆத்மாவின் இரஜதவடிவமான கியாதி இருக்கின்றது என்னும் தாற்பரியத்திஞலும் ஆத்மக்கியாதிவாதம் அசங்கதமாம். விஞ்ஞானத்திற்கு வேருக இரஜத மிருக்கின்றது. அது ஞானத்திற்கு விஷயமாம். அதனை விஞ்ஞானவடிவ ஆத்மாவிற்கு அபின்னமாகக் கூறுதல் சம்பவியாது. விஞ்ஞானவாதியின் மதத்தில் சகல பதார்த்தங்களும் க்ஷணிகவிஞ்ஞான வடிவமாம். அதனிடத்துப் பிரத்தியபிஞ்ஞைய சம்பவமுதலிய அநேக தூஷணங்கள் இருக்கின்றன. ஆதலால், ஆத்மக்யாதி சம்பவியாது.

154-161. அந்நியதாக்கியாதியின் கிரமமும் கண்டனமும்.

154. அந்நியதாக்கியாதி வாதத்தின் தாற்பரியம்.

அந்நியதாக்கியாதி வாதமும் அசங்கதமாம். இநு அந்நியதாக்கியாதி வாதியின் தாற்பரியமாம்:—எந்தப் புருஷனுக்குச் சத்திய பதார்த்தத்தின் அநுபவஜந்நிய சம்ஸ்காரம் இருக்கின்றதோ, அவனது தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்கு முன் கண்ட சமான பதார்த்தத்தோடு சம்பந்த முண்டாயின், ஆண்டு எதிரிலுள்ள சமான பதார்த்தத்தின் சாமாநிய ஞானத்தால் முன்கண்டதின் ஸ்மிருதி உண்டாகின்றது. அல்லது ஸ்மிருதி உண்டாகிறதில்லை; சமானமானதின் உணர்ச்சியால் சம்ஸ்காரம் உற்பூத மாகின்றது. எந்தப் பதார்த்தத்தின் ஸ்மிருதி உண்டாகின்றதோ, அல்லது எதன் உற்பூதசம்ஸ்கார முண்டாகின்றதோ, அப் பதார்த்தத்தின் தர்மம் எதிரிலுள்ள பதார்த்தத்தில் தோற்றுகின்றது.

எங்ஙனம்: சத்திய இரஜதத்தின் அநுபவ ஜந்நிய சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனுக்கு இரஜத சமானமான சுத்தி

யோடு தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்குச் சம்பந்த முண்டாயின் இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாகின்றது. அதனை ஸ்மரிக்கவே இரஜதத்தின் இரஜதத்தன்மைத் தர்மம் சுத்தியிற் காண்கின்றது. அல்லது நேத்திரத்தின் சம்பந்த முண்டாய் இரஜதப்பிரமத்தில் விலம்பம் உண்டாகிறதில்லை; ஆதலால், நேத்திர சம்பந்தத்திற்கும் இரஜதத்தின் பிரத்தியக்ஷப்பிரமத்திற்கும் இடையில் இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாகிறதில்லை. ஆனால், இரஜதாநுபவத்தின் சம்ஸ்காரம் உற்பூதமாக, ஸ்மிருதியின் வியவதான மின்றி விரைவாகவே சுத்தியில் இரஜதத்தன்மைத் தருமத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஸ்மிருதி ஸ்தலத்தில் எங்ஙனம் முன் கண்டதற்கொப்பானதின் ஞானத்தினால் சம்ஸ்காரத்தின் உற்போத முண்டாகிறதோ, அங்ஙனமே பிரம ஸ்தலத்தில் முன் கண்டதற்குச் சமானமான பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்த முண்டாகவே, சம்ஸ்காரத்தின் உற்போத முண்டாய்ச் சம்ஸ்கார கோசர தர்மத்தின் ஞானம் முன்னிருப்பதில் உண்டாகின்றது. இதனை அந்நியதாக்கியாதி யென்பர். அந்நியவடிவமாகத் தோற்றுதலை அந்நியதாக்கியாதி யென்பர். சுத்தியாகிய பதார்த்தத்தில் சுத்தித்தன்மைத் தர்ம மிருக்கின்றது; இரஜதத்தன்மை இல்லை. சுத்தியின் ஞானம் இரஜதத்தன்மை வடிவத்தா னுண்டாகின்றது. ஆதலால், அந்நிய வடிவமாகப் பிரதீதி இருக்கின்றது.

155. விசாரசாகரத்தின்கண் கூறிய இருவகைக் கியாதிவாதத்தில் முதல் பிராசீனமதத்தின் கிரமமும் கண்டனமும்

விசாரசாகரத்தில் அந்நியதாக்கியாதியில் இரண்டு பேதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பிரகாரம் இதுவாம்:—இரஜதப்பிரம முண்டாகுங்கால், ஆண்டுக் காந்தையின் கரமுதலியவற்றிலுள்ள இரஜதத்தோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாய் அதன் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆதலால், காந்தையின் கரத்தில் அல்லது கடையிலுள்ள இரஜதத்தின் முன்னிருக்குமிடத்துப் பிரதீதி அந்நியதாக்கியாதியாம். இம் மதத்தில் தர்மதர்மி அம்சத்திலோ இரஜதத்தின் ஞானம் யதார்த்தமாம். ஆனால், தேச அம்சத்தில் வேறுவகை ஞானமுண்டு. கடைமுதலியவற்றின் இரஜதம் மறைவா யிருக்கின்

றது. அதனோடு நேத்திரத்தின் சம்பந்தம் சம்பவியாது. என்றாலும் தோஷத்தோடு கூடிய நேத்திரத்திற்கு வியவகித இரஜதத்தோடு சம்பந்த முண்டாய் ஞான முண்டாகின்றது. இது தோஷத்தின் மஹாத்மியமாம். இத்தன்மை அந்நியதாக்கியாதி இப்போதிருப்பனவாகிய நியாயமுதலிய கிரந்தங்களில் காணப்படவில்லை. என்றாலும் இவ்வகையான அந்நியதாக்கியாதியின் கண்டனம் அநேக நூல்களி லிருக்கின்றது.

இதில் இத்தோஷ மிருக்கின்றது:—தேசாந்தரத்திலுள்ள இரஜதத்தோடு நேத்திரத்திற்குச் சம்பந்த முண்டாயின், கடையில் இரஜதத்தின் சமீபத்தில் வைக்கப்பட்ட பிற பதார்த்தங்களின் பிரத்தியக்ஷமு முண்டாதல் வேண்டும். காந்தையின் காத்திலுள்ள இரஜதத்தின் பிரத்தியக்ஷ முண்டாகுங்கால் காந்தையினது காத்தின் பிரத்தியக்ஷமு முண்டாதல் வேண்டும். அன்றியும், இங்ஙனம் கூறின்:—அந்நியதாக்கியாதிக்குக் கேவலம் இந்திரியத்தினால் உற்பத்தி உண்டாகிறதில்லை. ஆனால், பூர்வாநுபவத்தினால் உண்டாகிய சம்ஸ்காரத்தோடு கூடிய தோஷமுள்ள நேத்திரத்தால் அந்நியதாக்கியாதி ஞானம் உற்பத்தியாகின்றது. ஆதலால், உற்பூத சம்ஸ்காரம் நேத்திரத்தின் சககாரியாம். இரஜதகோசர சம்ஸ்காரத்தோடு கூடிய நேத்திரத்தினால் இரஜதத்தின் ஞானமே உண்டாகின்றது. அந்நிய பதார்த்த கோசர சம்ஸ்காரமோ இருக்கின்றது; ஆனால் உற்புத்தமன்று. இதனால் அந்நியவஸ்துவின் ஞான முண்டாகிறதில்லை. சம்ஸ்காரத்தின் உற்புத்தத்தன்மையும் அநுற்புத்தத்தன்மையும் காரியத்தினால் அநுமேயமாம்; ஆதலால், தோஷமில்லை. என்றாலும், யாண்டுச் சுத்தியில் இரஜதப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டுச் சுத்திக்குச் சமானமாக ஆரோபித இரஜதத்தின் பரிமாணம் தோற்றுகின்றது. இலகுவான சுத்தியில் இரஜதப்பிரம முண்டாகுங்காலத்து ஆரோபிக்கப்பட்ட இரஜதத்திலும் இலகுத்தன்மை தோற்றுகின்றது. மகத்தாகிய சுத்தியில் இரஜதப்பிரம முண்டாகுங்கால் ஆண்டு மகத்துப் பரிமாணமுடைய இரஜதம் தோற்றுகின்றது.

இவ்வாற்றால் ஆரோபிக்கப்பட்ட பதார்த்தத்தில் அதிஷ்டான பரிமாணத்தின் நியம மிருத்தலின், சுத்திமுதலியவற்றின் இரஜதத்தன்மைமுதலிய தர்மத்தின் உணர்ச்சி உண்டா

கின்றது. அந்நிய தேசத்திலுள்ள இராஜதத்தின் பிரதீதி உண்டாகுமாயின், ஆரோபிதத்தில் அதிஷ்டான பரிமாணத்தின் நியமம் வேண்டியதில்லை. சுத்தியினது இலகு பரிமாணமும் அங்ஙனமே மகத்பரிமாணமும் தோற்றுகின்றன. ஆதலால், தேசாந்தரத்தின் இராஜதத்தினது பிரதீதி இல்லை. இராஜத சம்ஸ்காரமுடையவர்களுக்கு அந்நிய பதார்த்தத்தின் உணர்ச்சி சம்பவிக்கிறதில்லை யாயினும், எல்லா இடங்களிலும் உள்ள அநந்த இராஜதங்களின் உணர்ச்சி உண்டாதல்வேண்டும். இவ்வாறு அளவின்றிய தூஷணங்களால் விழுங்கப்பட்டதாம் இப் பக்ஷம். இதனாற்றான் தற்காலத்தைய நூல்களில் இப் பக்ஷம் காணப்படுகிறதில்லை.

156. முற்கூறிய அந்நியதாக்கியாதிவாதத்தின் கண்டனம்.

சுத்தியில் இராஜதத்தன்மைத் தர்மத்தின் பிரதீதி உண்டாகின்றதென்னும் அந்நியதாக்கியாதி வாதத்தை அநேக நூலாசிரியர்களாகிய நையாயிகர் எழுதியிருக்கின்றனர். என்றாலும் அவர்கள் எழுத்தும் சுருதி ஸ்மிருதிகளுக்கு விருத்தமாம். ஆதலால் விசுவசிக்கத்தக்க தன்று:—சொப்பன ஞானத்தினை நையாயிகர் மானஸவிபரிய மென்பர். அந்நியதாக்கியாதியினை விபரிய மென்பர். சுருதியில் சொப்பன பதார்த்தத்தின் உற்பத்தி கூறப்பட்டிருக்கின்றது. "ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தாநோ பவந்தி அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே- ஆண்டு இரதமு மில்லை; இரதத்திற் பூட்டியனவு மில்லை. வழியு மில்லை. இனி இரதங்களும் இரதத்திற் பூட்டியனவும் வழிகளும் ஆகக்கடவன வென்று சிருஷ்டிக்கின்றார்" என்பது (பிருகதாரணிய) சுருதி. அது வியாவகாரிக இரதம், குதிரை, வழி யென்பவற்றைச் சொப்பனத்தில் நிஷேதித்து, அநிர்வசநீய ரதம் குதிரை வழி என்பவற்றின் உற்பத்தி கூறியிருக்கின்றது. அங்ஙனமே "ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹ ஹி-சந்தியிற் (சொப்பனத்திற்) சிருஷ்டியை (சுருதி) கூறுகின்றது." என்பது வியாச சூத்திரம். அதுவும் சொப்பனத்தின் அநிர்வசநீய பதார்த்தங்களின் சிருஷ்டியைக் கூறியிருக்கின்றது. வியாசராற் செய்யப்பட்ட சூத்திரம் ஸ்மிருதி வடிவமாம்.

இவ்வாற்றால் நையாயிகர்களது அந்நியதாக்கியாதி வாதம் சுருதி ஸ்மிருதி விருத்தமாம். நேத்திரத்தினால் வியவகித இரஜதத் தன்மையின் ஞானம் சுத்தியிற் சம்பவியாது. சுத்திக்குச் சமீபத்தில் இரஜத மிருக்குமாயின், இரண்டற்கும் சையோக முண்டாய் இரஜதத்திலுள்ள இரஜதத்தன்மையின் நேத்திர ஜந்நியப் பிரமஞானம் சுத்தியிற் சம்பவிக்கின்றது. யாண்டுச் சுத்தியின் சமீபத்தில் இரஜத மில்லையோ, ஆண்டுச் சுத்தியில் இரஜதத்தன்மைப் பிரமம் நேத்திர ஜந்நிய மென்பது சம்பவியாது. ஏனெனின், விசேஷண விசேஷியங்களோடு இந்திரியத்தின் சம்பந்தமுண்டாக இந்திரியஜந்நிய விசிஷ்டஞான முண்டாகின்றது. யாண்டுச் சத்திய ரஜதமிருக்கின்றதோ, ஆண்டு விசேஷணம் இரஜதத்தன்மையாம்; விசேஷியம் இரஜதவியக்தியாம். இரஜதவியக்தியோடு நேத்திரத்தின் சையோக சம்பந்த முண்டாகின்றது. இரஜதத்தன்மையோடு நேத்திரத்தின் சையுக்த சமவாய சம்பந்த முண்டாகின்றது. ஆதலால், "இது இரஜதம்" என்பதாக இரஜதத்தன்மை விசிஷ்டத்தின் நேத்திர ஜந்நிய ஞான முண்டாகின்றது. யாண்டுச் சுத்தியில் இரஜதத்தன்மை விசிஷ்டப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டு விசேஷியமாகிய சுத்தியினோடு நேத்திரத்தின் சையோக சம்பந்த மிருக்கின்றது. இரஜதத்தன்மை விசேஷணத்தோடு சையுக்த சமவாய மில்லை. இரஜதவியக்தியோடு சையோக முண்டாயின், இரஜதத்தன்மையோடு சையுக்த சமவாய முண்டாகும். இரஜதவியக்தியோடு சையோகத்தின் அபாவத்தால் இரஜதத்தன்மையோடு சையுக்த சமவாயத்தின் அபாவ மிருக்கின்றது. ஆதலால், இரஜத விசிஷ்ட சுத்தியின் ஞானம் சம்பவிக்கிறதில்லை.

157. பிரத்தியக்ஷ ஞானத்திற் கேதுவாகிய அறுவகை இலௌகிகமும் மூவகை அலௌகிகமுமாகிய இரண்டு சம்பந்தங்கள்

நையாயிகர் கூறுவதாவது:—பிரத்தியக்ஷ ஞானத்திற்கு ஏதுவாகிய விஷய இந்திரியங்களின் சம்பந்தம் இருவகையாம். ஒன்று இலௌகிக சம்பந்தம்; மற்றையது அலௌகிக சம்பந்தம். சையோகமுதலிய அறுவகைச் சம்பந்தங்களும் இலௌகிக மெனப்படுகின்றன. சாமாநியலக்ஷணம், ஞானலக்ஷணம், யோக

ஜந்நிய தர்மலக்ஷணம் என மூவகை அலௌகிக சம்பந்த முண்டு. இலௌகிக சம்பந்தத்தின் உதாரணத்தையும் சொரூபத்தையும் பிரத்தியக்ஷ நிரூபணத்திற் கூறியிருக்கின்றோம்.

அலௌகிக சம்பந்தத்தின் உதாரணமும் சொரூபமும் இவ்வாறாம்:—யாண்டு ஒரு கடத்தோடு நேத்திரத்தின் சையோக முண்டாகின்றதோ; ஆண்டு ஒரே கடத்தின் சாக்ஷாத்காரம் நேத்திரத்தினால் உண்டாகிறதில்லை. கடத்தன்மையின் ஆசிரயமாகிய சகல கடங்களின் சாக்ஷாத்காரமும் நேத்திரத்தினால் உண்டாகின்றது. ஆனால், நவீனமதத்தில் நேத்திர சையுக்த கடத்தின் சாக்ஷாத்காரமும், தேசாந்தரங்களிலுள்ள கடங்களின் சாக்ஷாத்காரமும் ஒரே கணத்தி லுண்டாகின்றன. பிராசீன மதத்தில் நேத்திரசையுக்த கடத்தின் சாக்ஷாத்காரம் முதற்கணத்தி லுண்டாகின்றது. ஆனால், நவீனமதத்தில் நேத்திர சையுக்தகடத்தின் சாக்ஷாத்காரமும், தேசாந்தரத்தின்கண்ணுள்ள கடத்தின் சாக்ஷாத்காரமும் இரண்டாவது கணத்தி லுண்டாகின்றன. இரண்டு சாக்ஷாத்காரமும் நேத்திர ஜந்நியமாம்; ஆனால், சம்பந்தம் பின்னமாம். இவை இரண்டு மதங்களாம். இவற்றுள் பிராசீனக் கிரமம் எளிதாம். ஆதலால், பிராசீனக் கிரமத்தினையே கூறுவாம்:—

முன்னிடத்திருக்கும் கடத்தோடு நேத்திரத்தின் சையோக முண்டாய், "இது கடம்" என்பதாக ஒரு கடத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றது. இச் சாக்ஷாத்காரத்திற் கேது சையோக சம்பந்தமாம். ஆதலால், இச் சாக்ஷாத்காரம் இலௌகீக சம்பந்த ஜந்நியமாம். இச் சாக்ஷாத்காரத்திற்கு விஷயம் கடமும் கடத்தன்மையுமாம். அவற்றுள் வியக்தி விசேஷியமும், கடத்தன்மைப் பிரகாரமுமாம். விசேஷணத்தைப் பிரகார மென்பர். இந்த ஞானத்திற் பிரகாரமாகிய கடத்தன்மை எதுவோ அது எல்லாக் கடங்களிலு மிருக்கின்றது. ஆதலால், முன்னிடத்துள்ள கடத்தின் ஞான காலத்தில் நேத்திரேந்திரியத்தின் சுவஜந்நிய ஞானப் பிரகாரவடிவ கடத்தன்மையுடைமைச் சம்பந்தம் சகல கடங்களிலும் இருக்கின்றது. இச் சம்பந்தத்தால் நேத்திரேந்திரிய ஜந்நிய சகல கடங்களின் சாக்ஷாத்காரமும் இரண்டாவது கணத்தில் உண்டாகின்றது. இச் சாக்ஷாத்காரத்தின் விஷயம் முன்னுள்ள கடமுமாம். ஏனெனின், கடத்தன்மையுடைமை

எங்ஙனம் அந்நிய கடங்களி லிருக்கின்றதோ, அங்ஙனமே முன்னிருக்கும் கடத்திலு மிருக்கின்றது. ஆதலால், முன்னிருக்கும் கடத்தைக் கோசரிப்பன இரண்டு ஞானங்க ளாகின்றன. முதல் க்ஷணத்தில் இலௌகிகஞான முண்டாகின்றது. இரண்டாவது க்ஷணத்தில் அலௌகிகஞான முண்டாகின்றது. கூறிய இச் சம்பந்தம் அலௌகிகமாம். அலௌகிக சம்பந்த ஜந்நியஞானமும் அலௌகிகமாம். இந்திரியத்திற்குச் சகல கடங்களினோடும் சுவஜந்நியஞான விசேஷண வடிவ கடத்தன்மையுடைமைச் சம்பந்த மிருக்கின்றது.

யாண்டு நேத்திர ஜந்நிய சாக்ஷாத்காரம் ஒரு கடத்திற்கு உண்டாகின்றதோ, ஆண்டுச் சுவ என்னுஞ் சொல் நேத்திரத்தை அறிவிப்பதாம். யாண்டுத் துவக்கினால் ஒரு கடத்தின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டுச் சுவ என்னுஞ் சொல் துவக்கை அறிவிப்பதாம். இவ்வாறு எவ் விந்திரியத்தினால் ஒரு வியக்தியின் ஞான முண்டாகின்றதோ, அவ் விந்திரிய ஜந்நியமாகவே சகல கடங்களின் அலௌகிக சாக்ஷாத்காரமு முண்டாகின்றது. நேத்திரேந்திரிய ஜந்நிய ஒரு கடத்தின் இலௌகிக சாக்ஷாத்கார முண்டாயின், துவக்கிந்திரிய ஜந்நிய சகல கடங்களின் அலௌகிக சாக்ஷாத்காரமு முண்டாகிறதில்லை. நேத்திர ஜந்நிய ஒரு கடத்தின் ஞான முண்டாகவே சுவ என்பது நேத்திரம்; அதனால் ஜந்நிய மென்பது "இது கடம்" என்னும் ஞானம்; அதனிடத்துப் பிரகார (விசேஷண) வடிவமாகிய கடத்தன்மை யாதோ அதனையுடைமை அதாவது அதன் ஆதாரத் தன்மை சகல கடங்களிலு மிருக்கின்றது. இவ்வாற்றால் சகல கடங்களின் ஞானத்திற்கும் ஏது முற்கூறிய சம்பந்தமாம். அது ஒரு கடஞான முண்டாயின், அப்போது நேத்திர ஜந்நிய ஞானத்தில் கடத்தன்மை விசேஷண முண்டாகின்றது. முன்னிருக்கும் கடத்தின் இலௌகிக ஞானத்தால் முற்கூறிய சம்பந்தம் சம்பவியாது. ஆதலால், இலௌகிக ஞானம் முதற்கணத்தில் உண்டாகின்றது; அலௌகிகம் உத்தரக்ஷணத்தி லுண்டாகின்றது. இது பிராசீனக் கிரமம். நவீனக் கிரமத்தால் ஒரே ஞானம் சகல கடகோசர மாகின்றது. முன்னிருக்கும் கட அம்சத்தில் இலௌகிக முண்டாகின்றது. தேசாந்தரத்திலுள்ள கடாம்சத்தில் அலௌகிக முண்டாகின்றது.

பிரசங்கத்தா லடைப்பட்ட ஒரு கிரமத்தைக் கூறினோம். விரிதலஞ்சி நவீனக் கிரமத்தைக் கூறவில்லை. இது சாமாநிய லக்ஷண சம்பந்தம். சாமாநிய மென்பது ஜாதியும், இலக்ஷண மென்பது சொரூபமுமாமாகவின் ஜாதிசொரூப சம்பந்தமாம்.

இதனால், இது பெறப்பட்டதாயிற்று:—நேத்திரஜந்நிய ஞான விசேஷணவடிவ கடத்தன்மையுடைமையைக்கூறுதலால் கடத்தன்மையே சித்திக்கின்றது. ஆதலால், முற்கூறிய சம்பந்தம் சாமாநிய சொரூபமாம். அல்லது கடத்தன்மை யதிகாணத்தினைக் கடத்தன்மை யுடைமை எனக் கூறினும் சாமாநிய லக்ஷண சம்பந்தமே இருக்கின்றது. ஏனெனின், அநேக அதிகாணங்களில் அதிகாணத்தன்மைத் தர்மம் சாமாநியமாம். இந்த ஸ்தானத்தில் அநேகங்களிலிருக்கும் சமானதர்மம் எதுவோ அது சாமாநிய சப்தத்திற்குப் பொருளாம். கேவலம் ஜாதியே சாமாநிய சப்தத்திற்குப் பொருளன்று. ஆதலால், அநேக கடங்களில் கடத்தன்மை அதிகாணத்தன்மையும் சமான தர்மமாய் இருத்தலின் சாமாநிய மெனப்படுகின்றது. இவ்வாற்றால் ஒரு வியக்தியோடு இந்திரியத்திற்குச் சம்பந்த முண்டாக, இந்திரிய சம்பந்தியாகிய வியக்தியின் சமான தர்மமுடைய இந்திரிய சம்பந்தியாகிய சகல வியக்தியோடும் இந்திரியத்தின் சாமாநிய லக்ஷண அலௌகிக சம்பந்த முண்டாதலால், வியவகித அவ்வியவகித வஸ்துக்களின் இந்திரிய ஜந்நிய அலௌகிக சாக்ஷாத்கார முண்டாகின்றது.

ஞானலக்ஷண சம்பந்தத்தின் உதாரணத்தோடு கூடிய சொரூபம் இதுவாம். யாண்டு இந்திரியயோக்கிய பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, இந்திரிய சம்பந்தகாலத்தில் அவ் விந்திரிய அயோக்கிய பதார்த்தத்தின் ஸ்மிருதிஞானம் உண்டாகின்றதோ, ஆண்டு இந்திரிய சம்பந்தியாகிய பதார்த்தம், ஸ்மிருதிகோசா பதார்த்தம் என்பவற்றின் ஏகஞான முண்டாகின்றது. ஆண்டு எப் பதார்த்தத்தின் ஸ்மிருதி உண்டாகின்றதோ, அந்த அம்சத்தில் அந்த ஞானம் அலௌகிகமாம். எந்த அம்சத்தினது இந்திரிய சம்பந்த ஜந்நியமாகின்றதோ, அந்த அம்சத்தில் அலௌகிக மிருக்கின்றது.

எங்ஙனம்: சந்தனத்தோடு நேத்திரேந்திரியத்தின் சையோக முண்டாகுங் காலத்தில் சுகந்த தர்மத்தின் ஸ்மிருதி யுண்

டாயின், அப்போது நேத்திரேந்திரிய ஜந்நிய "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. ஆண்டுச் சந்தனத்தன்மை விசிஷ்ட சந்தனமோ நேத்திரத்திற்கு யோக்கியமாம். சந்தனத்தின் தர்மம் சுகந்தமாம்; அதனோடு நேத்திர சையுக்த சமவாய சம்பந்தமு மிருக்கின்றது. என்றாலும் நேத்திர யோக்கியம் சுகந்த மன்று. கிராணயோக்கியம் சுகந்தமாம். ஆதலால், நேத்திர சையுக்த சமவாய சம்பந்தத்தால் சுகந்த தர்மத்தின் சாக்ஷுஷ சாக்ஷாத்கார முண்டாகிறதில்லை. ஆனால், நேத்திர சையோகத்தால் சந்தன வியக்தியின் சாக்ஷுஷ ஞானமும், நேத்திர சையுக்த சமவாயத்தால் சந்தனத்தன்மைச் சாக்ஷுஷஞானமு முண்டாகின்றன. சந்தனத்தின் சுகந்த குணத்தால் நேத்திரத்தின் சையுக்த சமவாய சம்பந்தம் இருப்பதாயினும் பயனில்லாததாம். என்றாலும் நேத்திரசையோகம் இருக்கும்போதே, "சுகந்தமுடையது சந்தனம்" என்பதாகச் சந்தனகோசர சாக்ஷுஷ ஞானம் அநுபவசித்தமாம்.

ஆதலால், சந்தனத்தின்கண் உள்ள சுகந்த குணத்தோடு நேத்திரத்தின் சம்பந்தம் ஓர் சாக்ஷாத்காரத்திற்கு ஏதுவெனக் கொள்ளுதல் வேண்டும். ஆண்டு வேறு எச் சம்பந்தமும் நேத்திரத்திற்குச் சுகந்த குணத்தோடில்லை. நேத்திர சையுக்த சமவாய மிருக்கின்றது. அது கந்தஞானத்தை உண்டுபண்ணுவதன்று. எவனுக்குச் சந்தனத்தின் சுகந்தத்தன்மை கிராணத்தினால் அநுபவிக்கப்பட்டதாகின்றதோ, அவனுக்கே நேத்திரத்தினால் சந்தனத்தின் "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞான முண்டாகின்றது. எவனுக்குச் சந்தனத்தின் சுகந்த முடைமை கிராணத்தினால் அநுபவிக்கப்பட்ட தாகிறதில்லையோ, அவனுக்குச் சந்தனத்தினோடு நேத்திரத்தின் சையோக முண்டாகச் "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞான முண்டாகிறதில்லை. இவ்வாற்றால் பூர்வ அநுபவ ஜந்நிய சுகந்தத்தின் சம்ஸ்காரத்திற்குச் "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் பிரத்தியக்ஷத்தினால் அந்வய வெதிரேக மிருக்கின்றது. ஆதலால், "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் சாக்ஷுஷ ஞானத்திற்குச் சுகந்தாநுபஜந்நிய சம்ஸ்காரம், அல்லது சுகந்த ஸ்மிருதி ஏதுவாம். சுகந்த சம்ஸ்காரத்திற்கு அல்லது ஸ்மிருதிக்குச் சுகந்தப் பிரத்தியக்ஷத்தின் சுவதந்திர காரணத்தன்மை

யைக் கூறின், சுகந்த அம்சத்தில் அந்த ஞானம் சாக்ஷுஷ மாகாது. "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானம் சுகந் தாம்சத்திலும் சந்தன சந்தனத் தன்மைகளைப்போலச் சாக்ஷுஷ மென்பதே அநுபவ சித்தமாம்.

ஆதலால், அந்த ஞானத்திற் கேதுவாகிய சம்ஸ்காரத்திற் காவது ஸ்மிருதிக்காவது நேத்திரத்தின் சம்பந்தம் அங்கீகரித் தல்வேண்டும். நேத்திரத்தின் சம்பந்தத்தினை அங்கீகரிக்கின், சுகந்தஞானமும் சம்ஸ்கார அல்லது ஸ்மிருதிவடிவ நேத்திரத் தின் சம்பந்த ஜந்நியமாம்; ஆதலால், சாக்ஷுஷமாம். ஆனால், சம்ஸ்காரம் அல்லது ஸ்மிருதி நேத்திரத்தால் நிரூபிக்கப்பட்ட தாமாயின் நேத்திரத்தின் சம்பந்த முளதாம்.

எங்ஙனம் கடத்தால் நிரூபிக்கப்பட்ட சையோகம் கடத் தின் சம்பந்த மெனப்படுகின்றதோ, படத்தால் நிரூபிக்கப் பட்ட சையோகம் படத்தின தெனப்படுகின்றதோ, இவ்வாற் றால் சுகந்த கோசரஸ்மியும் சம்ஸ்காரமும் நேத்திரத்தால் நிரூ பிக்கப்பட்டனவாமாயின், நேத்திரத்தின் சம்பந்தம் சம்பவிக் கும். வேறுவகையாக நேத்திரத்தின் சம்பந்தம் சுகந்தத்தின் ஸ்மிருதிக்காவது சுகந்தத்தின் சம்ஸ்காரத்திற்காவது கூறுதல் சம்பவியாதாகலின், இவ்வாற்றால் நேத்திரத்தால் நிரூபிக்கப் பட்டனவாம். எப்போது சந்தனத்தின் சாக்ஷாத்கார முண்டா கிறதோ, அப்போது மனதிற்கும் ஆத்மாவிற்கும் சம்பந்த முண் டாய், மனதிற்கும் நேத்திரத்திற்கும் சம்பந்த முண்டாகின்றது. ஆத்மசையுக்த மனசையுக்த நேத்திரத்திற்குச் சந்தனத் தோடு சையோக முண்டாகின்றது. இவ்வாற்றால் மன ஆத்மாக்க ளின் சையோகமும் மன நேத்திரங்களின் சையோகமும் சந் தன சாக்ஷாத்காரத்திற்கு ஏதுவாம்.

எக்காலத்தில் ஆத்ம சையுக்த மனதிற்கு நேத்திரத்தோடு சையோக முண்டாகின்றதோ, அக்காலத்தில் சுகந்தத்தின் ஸ்மி ருதி அல்லது சுகந்தத்தின் சம்ஸ்காரம் ஆத்மாவினிடத்துச் சமவாய சம்பந்தத்தா லிருக்கின்றது. அவற்றின் விஷயம் சுகந்தமாம். ஆதலால், சுவசையுக்த மனசையுக்த ஆத்மசம வேத ஞானம், அல்லது சுவசையுக்த மனசையுக்த ஆத்மசம வேத சம்ஸ்காரம் சந்தனத்திற்குச் சுகந்தத்தி லிருக்கின்றது.

ஏனெனின், சுவசப்தத்தால் நேத்திரம் கொள்ளப்படுகிறது. அதனோடு சையுக்தம் அதாவது சையோகமுடையது மனமாம்; அதனோடு சையுக்தம் அதாவது சையோகமுடையது ஆத்மாவாம். அதனிடத்துச் சமவேதத்தி (சமவாய சம்பந்தத்தா லிருப்பத)ற்குச் சுகந்தத்தின் ஸ்மிருதி இருக்கின்றது. சுகந்தத்தின் சம்ஸ்காரமும் சமவாய சம்பந்தத்தால் ஆத்மாவி லிருப்பதாம். ஆதலால், நேத்திரசையுக்த மனசையுக்த ஆத்தசமவேத ஸ்மிருதி ஞானமும், நேத்திரசையுக்த மனசையுக்த ஆத்ம சமவேத சம்ஸ்காரமுமாகிய இவ்விரண்டும் நேத்திர நிரூபிதமாம். நேத்திரத்தால் நிகழும் சொரூபமாகிய இது பரம்பரையாம். ஆதலால், நேத்திரத்தின் சம்பந்த மிருக்கின்றது. இந்தப் பரம்பரைச் சம்பந்தத்திற்குப் பிரதியோகி நேத்திரமும், அநுயோகி சுகந்தமுமாம். எதனிடத்துச் சம்பந்த மிருக்குமோ அது சம்பந்தத்தின் அநுயோகி யெனப்படுகின்றது. ஸ்மிருதிரூப அல்லது சம்ஸ்காரரூப முற்கூறிய பரம்பரையால் நேத்திரத்தின் சம்பந்தம் யாதோ, அதன் விஷயம் சுகந்தமாம். ஆதலால், முற்கூறிய சம்பந்தத்திற்குச் சுகந்தம் அநுயோகியாம். ஞானத்தின் அதிகரணத்தன்மை விஷயத்தில் அநுபவ சித்தமாம். ஆதலால், ஆத்மாவைப்போல விஷயமும் ஞானத்திற்கு அதிகரணமென்றும், அநுயோகியென்றும் சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்: கடத்தில் ஞானம்'' என்னும் வியவகார முண்டாகின்றது. ஆண்டுக் ''கடவிருத்தி ஞானம்'' என்பது கூறிய வாக்கியத்திற்குப் பொருளாம். இவ்வாற்றால் விஷயமும் ஆத்மாவினைப்போல ஞானத்திற்கு ஆதாரமா யிருத்தலால் அநுயோகியாம். ஆனால், சமவாய சம்பந்தத்தால் ஞானங்களுக் காதாரம் ஆத்மாவாம். விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் ஞானத்திற்கு ஆதாரம் சுகந்தமுதலிய விஷயங்களாம். எது ஞானத்திற்கு ஆதார மாகின்றதோ, அதுவே சம்ஸ்காரத்திற்கு ஆதார மாகின்றது. ஏனெனின், பூர்வ அநுபவத்தால் சம்ஸ்காரம் உற்பத்தியாகின்றது. அநுபவத்திற்குச் சமான விஷயமுடைய பின் ஸ்மிருதி முதலியவற்றினை உண்டாக்குகின்றது. ஆதலால், மூன் அநுபவம், சம்ஸ்காரம், ஸ்மிருதி என்னும் மூன்றற்கும் ஆசிரயமாகிய விஷயம் சமானமாம். ஆதலால், சுகந்தகோசர சம்ஸ்காரமும் விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் சுகந்தத்தி லிருக்கின்

றது. ஆதலால், நேத்திரப் பிரதியோகியினையுடைய சம்ஸ்காரத்திற்கு அநுயோகி சுகந்தமாம்.

இவ்வாற்றால் ஸ்மிருதி வடிவ அல்லது சம்ஸ்கார வடிவ சம்பந்தம் நேத்திரத்திற்குச் சுகந்தத்தா லிருக்கின்றது. சையோக சம்பந்தம் சந்தன வியக்தியினு லிருக்கின்றது. சையுக்த சமவாயம் சந்தனத்தன்மையோ டிருக்கின்றது. ஆதலால், மூன்றனையும் விஷயஞ் செய்வது "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் நேத்திரேந்திரிய சாக்ஷாத்காரமாம். "சுகந்தமுடையது சந்தனமாம்" என்பது வாக்கியத்திற்குப் பொருள். நேத்திரத்தினுல் சுகந்தம், சந்தனத்தன்மை, சந்தனம் என்பவற்றின் சாக்ஷாத்கார முண்டாகுமிடத்துச் சந்தனத்தன்மையோடு ஆண்டு இலௌகிக சம்பந்த மிருக்கின்றது. சையோகமுதலிய ஆறு சம்பந்தங்களை இலௌகிக சம்பந்த மென்பர். ஸ்மிருதியின் சம்ஸ்காரமும் இலௌகிக சம்பந்தத்திற்கு வேருயிருத்தலின் அலௌகிக மெனப்படும். யாண்டுச் சந்தனத்தோடு நேத்திரத்தின் சம்பந்தகாலத்தில் சுகந்த ஸ்மிருதி அநுபவ சித்தமாகின்றதோ, ஆண்டு ஸ்மிருதிவடிவ சம்பந்த மிருக்கின்றது. ஸ்மிருதியின் அநுபவ முண்டாகாவிடின், சம்ஸ்காரமே சம்பந்தமாம். இந்த அலௌகிக சம்பந்தத்தினை ஞானலக்ஷண சம்பந்த மென்பர். ஸ்மிருதியினிடத்தோ ஞான சப்தத்தின் பிரயோகம் பிரசித்தமாகவே இருக்கின்றது. சம்ஸ்காரமும் ஞான ஜந்யமாய்ப் பின் ஞானத்தை உண்டுபண்ணுவ தாகின்றது. இதனுல், ஞானத்தின் சம்பந்தமுடையதா யிருத்தலால் ஞான மெனப்படுகின்றது.

அங்ஙனமே யோகிக்கு இந்திரிய சம்பந்தியின் சாக்ஷாத்காரத்தினைப்போல இந்திரியத்தினுல் வியவகிதத்தின் சாக்ஷாத்காரமு முண்டாகின்றது. ஆண்டு யோகாப்பியாசத்தினுல் இந்திரியத்தில் விலக்ஷண சாமார்த்திய முண்டாகின்றது. ஆதலால், யோகஜ தாமமே இந்திரியத்தின் சம்பந்த மெனப்படுகின்றது. ஆனுல், இதனிடத்து மதபேத மிருக்கின்றது.

ஜகதீசபட்டாசாரியர் மதம் இதுவாம்:— எவ் விந்திரியத்திற்கு யோக்கியம் எப்பதார்த்த மாகின்றதோ, அவ் விந்திரியத்தால் அப் பதார்த்தத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றது. யோ

கிக்கு மறைந்துள்ளன, சென்றன, வருவன என்பவற்றின் இந்திரிய ஜந்நிய சாக்ஷாத்காரமு முண்டாகின்றது. யோகிக் கந்நியமானவர்களுக்கு வர்த்தமான இந்திரிய சம்பந்தமுடையதின் சாக்ஷாத்கார முண்டாகின்றது. எவ் விந்திரியத்திற்கு எப்பதார்த்தம் யோக்கியமன்றோ, அவ் விந்திரியத்தால் அப்பதார்த்தத்தின் சாக்ஷாத்காரம் யோகிக்கு முண்டாகிறதில்லை. எங்ஙனம்: உருவத்தின் ஞானம் நேத்திரத்தினலேயே உண்டாகின்றது; இரசமுதலியவற்றால் உண்டாகிறதில்லை.

வேறு சில நூலாசிரியர் மதம் இதுவாம்:—யோகத்திற்கு அற்புதமகிமை இருக்கின்றது. அப்பியாசத்தின் உயர்வு தாழ்வுகளால் யோகஜதர்மம் விலக்ஷணமாக உண்டாகின்றது. சிலரிடத்திலோ அப்பியாசத்தின் மேம்பாட்டால் இத்தன்மைத் தர்மம் உண்டாகின்றது. ஒரு இந்திரியத்தால் யோக்கிய அயோக்கியமான எல்லாவற்றின் ஞானமும் உண்டாகின்றது. எல்லாவிதத்தினலும் யோகஜ தர்மத்தினல் வியவகிதத்தின் ஞானம் உண்டாகின்றது. ஆதலால், யோகஜதர்மமும் அலௌகிக சம்பந்தமாம்.

158. நியாயமதத்தில் அலௌகிக சம்பந்தத்தால் சுத்தியில் தேசாந்தரத்துள்ள இரஜதத்தன்மையின் ஞானமும், அந்த ஞானம் சுகந்தமுடைய சந்தனத்தின் ஞானத்திற்கு விலக்ஷணமாதலும்

இவ்வாற்றால் இந்திரியத்தின் சையோகமுதலிய சம்பந்தமின்றி, அலௌகிக சம்பந்தத்தினலும் இந்திரிய ஜந்நிய சாக்ஷாத்கார முண்டாதலால், தேசாந்தரத்தின்கண்ணுள்ள இரஜதத்தி லிருக்கும் இரஜதத்தன்மையின் சாக்ஷுஷ சாக்ஷாத்காரமும் சுத்தியினிடத்து அலௌகிக சம்பந்தத்தாற் சம்பவிக்கின்றது. சுகந்த ஸ்மிருதியும், சந்தனத்தோடு நேத்திர சையோகமுண்டாகச் "சுகந்தமுடையது சந்தனம்" என்பதாக யோக்கிய அயோக்கிய அநுபவகோசர சாக்ஷுஷ ஞானமு முண்டாகின்றது. இவ்வாற்றால் தோஷத்தோடுகூடிய நேத்திரத்தின் சையோகம் சுத்தியினேடு உண்டாகின்றது. சுத்தி வியக்தியோ நேத்திர யோக்கியமாம். இரஜதத்தன்மை ஜாதி பிரத்தியக்ஷ யோக்கியமாயினும், ஜாதியின் ஆசிரயமாகிய வியக்தி யாண்டுப்

பிரத்தியக்ஷ கோசரமாகின்றதோ, ஆண்டு ஜாதி யோக்கியமாம். யாண்டு ஜாதியின் ஆசிரயம் பிரத்தியக்ஷ யோக்கிய மல்லவோ, ஆண்டு ஜாதி அயோக்கியமாம்.

இப் பிரசங்கத்தில் இராஜதத்தன்மையின் ஆசிரயமாகிய இராஜதவியக்தி நேத்திரத்தோடு வியவகிதமாம். ஆதலால், நேத்திர யோக்கியமன்று. எங்ஙனம், சுகந்த அம்சத்தில் சந்தன ஞானம் அலௌகிகமோ, அங்ஙனமே "இது இராஜதம்" என்னும் ஞானமும் இராஜதத்தன்மை அம்சத்தில் அலௌகிகமாம். ஆனல், இத்துணைப் பேத முண்டு:—"சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானத்தால் சந்தனத்தின்கண்ணுள்ள சுகந்தம் சந்தனத்தில் தோற்றுகின்றது. "இது இராஜதம்" என்னும் ஞானத்தால் இதுவெனும் பதார்த்தத்தி லில்லாத இராஜதத்தன்மை இதுவெனும் பதார்த்தத்திற் தோற்றுகின்றது. அங்ஙனமே மற்றும் விலக்ஷணத்தன்மை யுளது:—"சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானத்தால் நேத்திரத்திற்கு அயோக்கியமான சுகந்தம் தோற்றுகின்றது. சந்தனத்தின் சகல சாமானிய விசேஷத்தன்மையும் தோற்றுகின்றது. "இது இராஜதம்" என்னும் ஞானத்தினல் வியவகிதமாயிருத்தலின், நேத்திரத்திற்கு அயோக்கியமான இராஜதத்தன்மையின் விளக்கமோ சுகந்த விளக்கத்திற்குச் சமானமாம். ஆனல், சந்தனத்தின் விசேஷவடிவ சந்தனத்தன்மையின் விளக்கம்போல சுத்தியின் விசேஷவடிவ சுத்தித்தன்மையின் விளக்கம் உண்டாகிறதில்லை. மலயாசலத்தின்கண் உண்டாகிய காஷ்ட விசேஷவடிவமான சந்தனத்தின் அவயவம் தோற்றுகின்றது. சுத்தியின் முக்கோணத்தன்மைமுதலிய விசிஷ்ட அவயவம் தோற்றுகிறதில்லை. இவ்வாற்றல் இரண்டு ஞானங்களுக்கும் பேத முண்டு. யதார்த்தத்தன்மை அயதார்த்தத்தன்மைகள் கிரமமாக முற்கூறிய பேதத்தினல் ஆயினவாகவே இருக்கின்றன. இந்திரியத்தின் சையோகமும் அயோக்கிய தர்மத்தின் ஸ்மிருதியுமாகிய சாமக்கிரி இரண்டு ஞானங்களிலும் சமமாம். சாமக்கிரி பேதமின்றி முற்கூறியவகையின் விலக்ஷணத்தன்மை சம்பவியாது. என்றாலும், சாமக்கிரியினிடத்துத் தோஷமின்றிய தன்மையும் தோஷத்தோடு கூடிய தன்மையுமாகிய விலக்ஷணத்தன்மை யிருக்கின்றது. இதனல் முற்கூறிய விலக்ஷணத்தன்மை சம்பவிக்கின்றது.

எங்ஙனம் "வாசனையுடைத்து சந்தனம்" என்னுமிடத்தில் ஞானலக்ஷண சம்பந்தத்தை நிரூபிக்குந்தன்மை நேத்திரத்திற்கிருக்கின்றதோ, அங்ஙனமே "இது இரஜதம்" என்னும் ஸ்தானத்திலும் நேத்திரசையுக்த, மனசையுக்த, ஆத்மசமவேத ஞானசம்பந்த மிருக்கின்றது. அதை நிரூபிப்பது நேத்திரமாம். விஷயம் இரஜதத்தன்மையாம். அது ஸ்மிருதி ஞானத்திற்கு அநுயோகியாம். எவ்விஷயத்தின் ஞானம் உண்டாகின்றதோ, அது விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் ஞானத்திற்கு அநுயோகியாம். நேத்திரத்தோடு சையோகமுடையதாயிருத்தலின் நேத்திரசையுக்தம் மனமாம்; அதனோடு சையுக்தம் அதாவது சையோக முடையது ஆத்மாவாம்; அதனிடத்துச் சமவேத ஞானம் இரஜதத்தன்மையின் ஸ்மிருதியாம். அது விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் இரஜதத்தன்மையி லிருக்கின்றது. இவ்வாற்றால் நேத்திரசையுக்த, மனசையுக்த, ஆத்மசமவேத ஞானவடிவ நேத்திரத்தின் சம்பந்தம் இரஜதத்தன்மையி லிருத்தலால், நேத்திர சம்பந்தப்பட்ட இரஜதத்தன்மையின் பிரமஞானம் பிரத்தியக்ஷமாம்.

அல்லது ஞானரூப சம்பந்த மில்லை; ஆனால், ஞானத்தின் விஷயத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. ஆதலால், நேத்திர சையுக்த, மனசையுக்த, ஆத்மசமவேத ஞானத்தின் விஷயத்தன்மைச் சம்பந்தம் அலௌகிக சம்பந்தமாம். "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஸ்தானத்தில் சம்பந்தவடிவ மூற்கூறிய விஷயத்தன்மை சுகந்தத்தி லிருக்கின்றது. "இது வெள்ளி" என்னுமிடத்தில் நேத்திர சையுக்த மனசையுக்த ஆத்மசமவேத ஞானம் இரஜதத்தன்மை ஸ்மிருதியாம். அதன் விஷயத்தன்மை இரஜதத்தன்மையி லிருக்கின்றது. இவ்வாறு விஷயத்தன்மை யம்ச சம்பந்தத்தைச் சேர்த்தால் சம்பந்தத்தின் அநுயோகி சுகந்த இரஜதத்தன்மைக ளென்பது ஸ்பஷ்டமேயாம். இதனால் அந்நியதாக்கியாதி வாதம் சம்பவிக்கின்றது. நேத்திரத்தின் சம்பந்தமின்றி, இரஜதத்தன்மையின் ஞானம் சம்பவிக்கிறதில்லை. இத் தோஷம் அந்நியதாக்கியாதி வாதத்தில் இல்லை. இவ்வாற்றால் இரஜதத்தன்மைவடிவ விசேஷணத்தோடு நேத்திரத்தின் அலௌகிக சம்பந்தமும், சுத்திவடிவ விசேஷியத்தோடு இலௌகிக சம்பந்தமும் அங்கீகரித்து, அந்நியதாக்கியாதியின் சம்பவத்தைக் கூறுகின்றார்.

159. அநிர்வசநீயக்கியாதியில் நியாயத்திற் கூறிய தோஷம்

அநிர்வசநீயக்கியாதியில் இத் தோஷத்தைக் கூறுகின்றார்:- அந்நியதாக்கியாதி வாதிக்கு பிரமஞானத்தின் காரணத்தன்மை தோஷத்தில் அங்கீகரிப்பதாகின்றது. அநிர்வசநீயக்கியாதிவாதிக்கு இரஜதமுதலிய அநிர்வசநீய விஷயங்களின் காரணத்தன்மையும், அவற்றின் ஞானத்தினது காரணத்தன்மையும் அங்கீகரிக்க வருகின்றது. ஆதலால், அந்நியதாக்கியாதி வாதத்தில் இலாகவமுளது. அநிர்வசநீயக்கியாதி வாதிக்கு அந்நியதாக்கியாதியின்றி நிர்வாகமுண்டாகிறதில்லை. சிலவிடத்து அந்நியதாக்கியாதியை அங்கீகரிக்கின்றனர்; சிலவிடத்து அநிர்வசநீயக்கியாதியை அங்கீகரித்திருக்கின்றனர். ஆதலால், முழுவதும் அந்நியதாக்கியாதியினையே அங்கீகரித்தல் தகுதியாம். முழுவதும் அநிர்வசநீயக்கியாதியை அங்கீகரிக்கின், அத்வைதவாதிக்குத் தன் மதநூல்களோடு விரோதமுண்டாகும். கேவல அநிர்வசநீயக்கியாதியினால் நிர்வாகமுண்டாகிறதில்லை. யாண்டு அநிர்வசநீயக்கியாதி சம்பவிக்கவில்லையோ, ஆண்டு அத்வைதமத நூல்களில் அந்நியதாக்கியாதியே எழுதப்பட்டிருக்கின்றது.

எங்ஙனம் அநாத்ம பதார்த்தங்களில் பாதிக்கப்படாத் தன்மை வடிவ சத்தியத்தன்மை தோற்றுகின்றதோ, ஆண்டு அநிர்வசநீய பாதிக்கப்படாத் தன்மையின் உற்பத்தியினை அநாத்ம பதார்த்தங்களிற் கூறுவோமாயின், இக் கூற்று "பிறப்பில்லாததற்குப் பிறப்புண்டாயிற்று, நித்தியத்திற்குத் துவம்சமுண்டாயிற்று" என்னும் வாக்கியங்களுக்குச் சமானமாக விருத்தமாம். ஆதலால், ஆத்மசத்தியத்தன்மை அநாத்மாவினிடத்தில் தோற்றுதலாகிய அந்நியதாக்கியாதியே சம்பவிக்கின்றது. இத்தன்மை ஸ்தானங்களில் அந்நியதாக்கியாதியே அத்வைதநூல்களில் எழுதப்பட்டிருக்கின்றது. பரோக்ஷப்பிரமஸ்தலத்திலும் அத்வைதநூல்களில் அந்நியதாக்கியாதியே சொல்லப்பட்டிருக்கின்றது. இது அவற்றின் தாற்பரியமாம்:— பிரத்தியக்ஷஞானமோ நியமமாக வர்த்தமான கோசரமாகின்றது. எந்தவிஷயத்திற்குப் பிரமாதாவோடு சம்பந்தமுண்டாகின்றதோ, அவ் விஷயத்தின் ஞானம் பிரத்தியக்ஷமெனப்படுகின்றது. வியவகித இரஜதத்தினது இரஜதத்தன்மையின் சம்பந்தம் பிரமாதாவோடு சம்பவிக்கிறதில்லை. ஆதலால், முன்னுள்ள

இடத்தில் இரஜதத்தின் சத்தை (இருப்பு) அவசியம் வேண்டும். பரோக்ஷ ஞானமோ அதீதமும் வருவனவுமாகிய பதார்த்தங்களினது மாகின்றது. ஆதலால், பரோக்ஷஞானத்தினது விஷயத்தின் சப்பந்தம் பிரமாதாவோடு அபேக்ஷிக்கப்பட்டதன்று; சம்பவிப்பது மில்லை.

ஏனெனின், யாண்டு அநுமானப் பிரமாணத்தினலாவது சப்தப் பிரமாணத்தினலாவது தேசாந்தரத் திருப்பனவும் காலாந்தரத் திருப்பனவுமாகிய பதார்த்தங்களின் யதார்த்த ஞான முண்டாகின்றதோ, ஆண்டும் பின்னதேசத்திருப்பதும் பின்னகாலத் திருப்பதுமாகிய பிரமாதாவோடு சம்பந்த முண்டாகிற தில்லை. பிரமவடிவ பரோக்ஷஞானத்திலோ பிரமாதாவோடு விஷயத்தின் சம்பந்தம் முற்றும் அசம்பாவிதமாம். ஆதலால், பரோக்ஷப் பிரமஸ்தலத்தில் அநிர்வசநீயக்கியாதி யில்லை. ஆனால், விஷயசூநிய தேசத்தில் விஷயத்தின் பிரதீதியாகிய அந்நியதாக்கியாதி இருக்கின்றது. இவ்வாறு அநேக இடங்களில் அந்நியதாக்கியாதி அங்கீகரிக்கின்றனர்.

அபரோக்ஷப் பிரமத்தில் யாண்டு வியவகித ஆரோபித முண்டாகின்றதோ, அதே ஸ்தானத்தில் அநிர்வசநீயக்கியாதியை அங்கீகரித்திருக்கின்றனர். யாண்டு முன்னுள்ள இடத்தில் அதிஷ்டான சம்பந்தமுடைய ஆரோபித முண்டாகின்றதோ, ஆண்டும் அந்நியதாக்கியாதியே யிருக்கின்றது. ஏனெனின், அதிஷ்டான கோசர விருத்தி உண்டாயின், அப்போது ஆரோபித வஸ்துவிற்குப் பிரமாதாவோடு சம்பந்தம் அந்நியதாக்கியாதியை அங்கீகரிக்கினும் சம்பவிக்கின்றது. அநிர்வசநீய விஷயத்தின் உற்பத்தி நிஷ்பிரயோஜனமாம். இவ்வாற்றால் அத்வைதவாதியின் மதத்தில் அநிர்வசநீயக்கியாதி ஒன்றினால் நிர்வாக முண்டாகிறதில்லை. அந்நியதாக்கியாதியை அங்கீகரிக்கின், அநிர்வசநீயக்கியாதியின் அங்கீகார முண்டாகாது. யாண்டு வியவகித ஆரோபித முண்டாய் பிரத்தியக்ஷப் பிரமமுண்டாகின்றதோ, அந்த ஸ்தானத்தில் அத்வைதவாதியானவர் அந்நியதாக்கியாதியின் அசம்பவம் கூறியிருக்கின்றனர். ஆண்டும் முற்கூறியபடி நேத்திரத்தின் ஞானலக்ஷண சம்பந்தம் சம்பவிக்கின்றது. ஆதலால், பிரத்தியக்ஷப் பிரமத்தின் சம்பவ

பிருத்தலின், ஆநிர்வசநீயக்கியர்தியின் அங்கீகாரம் பிரயோஜன சூநியமாய்க் கௌரவத்தால் தூஷிக்கப்படுவதாம்.

160. சாமாநியம் ஞானலக்ஷணமுதலிய அலௌகிக சம்பந்தம் பிரத்தியக்ஷ ஞானத்திற்கு ஏதுவாதல் சம்பவியாமையின் பிரமஞானத்திற்கு இந்திரிய ஐந்நியத்துவ மின்மை

இத்தன்மைய அநந்த நிரர்த்தகப் பிதற்றுதலை நையாயிகர் விவேகமின்மையாற் செய்திருக்கின்றனர். ஏனெனின், சாமாநிய லக்ஷணமுதலிய சம்பந்தம் பிரத்தியக்ஷ ஞானத்திற்கு ஏதுவெனக் கூறின், அது எல்லோருடைய அநுபவத்திற்கும் விரோதமாம். எவனுக்கு ஒரு கடத்தின் நேத்திரஜந்நிய ஞானமுண்டாகின்றதோ, அவனை "எத்தனைக் கடங்களின் சாக்ஷுஷ சாட்சாத்காரம் உனக்கு உண்டாயிற்று?" என்று கேட்பாம். அப்போது பிரசினம் செய்பவனைப் பார்த்துக் காண்பவன் "எனது நேத்திரத்திற் கெதிரில் ஒரு கட மிருக்கின்றது. எவ்வளவு கடங்களின் சாக்ஷாத்காரம் உண்டாயிற்றென்று நீ வினவியது அவிவேகத்தினாலாம்" என் றிவ்வாறு கடத்தைக் காண்போன் பிரசினத்திற்கு உபாலம்பஞ் செய்கின்றான்.

நையாயிகக் கிரமமாக இலௌகிக அலௌகிக பேதத்தால் சகல கடங்களினது பிரத்தியக்ஷத்தினது சாமக்கிரி இருத்தலால் உபாலம்பம் (பழித்தல்) சம்பவியாது. ஒரு கடத்தின் இலௌகிக சாக்ஷுஷம் உண்டாயிருக்கின்றது; எல்லாவற்றின் அலௌகிக சாக்ஷுஷ சாக்ஷாத்காரம் உண்டாயிருக்கின்றது என்று விடைகூறுதல் வேண்டும். வியவகித கடத்தின் சாக்ஷாத்காரத்தைக் கேட்டு எல்லோருடைய இருதயத்திலும் ஆச்சரியம் உண்டாகின்றது. ஆதலால், சாமாநிய லக்ஷண சம்பந்தத்தால் சாக்ஷாத்காரம் சர்வலோக விருத்தமாம்; சகல தந்திரங்களுக்கும் விருத்தமாம். ஆனால், ஒரு கடத்தின் சாக்ஷாத்காரமுண்டாயின், அப்போது கடாந்தரத்தின் சஜாதீயத்தன்மையினால் ஸ்மிருதிமுதலியன சம்பவிக்கின்றன.

அங்ஙனமே "வாசனையுடையது சந்தனம்" என்பதாகச் சந்தனத்தில் சுகந்த தர்மத்தைக் கவரும் சாக்ஷுஷ சாக்ஷாத்காரம் ஞானரூப சம்பந்தத்தால் நேத்திரேந்திரிய ஜந்நியு

மாகின்றதென்று நையாயிகர் கூறுவதும் விருத்தமாம். ஏனெனின், எந்தப் புருஷனுக்குச் சந்தனத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றதோ, அவனை "யாது காணப்பட்டது?" என்று கேட்கின், அப்போது அவன், "சுகந்தமுடைய சந்தனம் காணப்பட்டது" என்று இவ்வாறு கூறுவன்.

மீண்டும், இச் சந்தனத்தில் சுகந்த மிருக்கின்றதென்னும் ஞானம் உனக்கெவ்வா றுண்டாயிற்றென்று பிரித்துக் கேட்போமாயின், அப்போது திருஷ்டா இது கூறுகின்றான்:—சுவேத (வெண்மைச்) சந்தனமாயிருத்தலால் சுகந்தம் இதில் அவசியமாயிருக்கும். இரக்த சந்தனத்தில் சுகந்த மிராது. இத்தன்மைய சுவேதத்தில் கந்த மிருக்குமென்று இவ்வாறு சுகந்தஞானத்தில் அநுமான ஜந்நியத்தன்மையைக் குறிப்பிக்கும் வாக்கியத்தைக் கூறுகின்றான். நேத்திரத்தால் சுகந்தத்தின் சாக்ஷாத்காரம் எனக்குண்டாயிருக்கின்ற தென்று விடை கூறுகிறதில்லை.

ஆதலால், சுகந்தத்தின் ஞானம் நேத்திர ஜந்நியப் பிரத்தியக்ஷரூப மன்று. ஆனல், சுகந்தாம்சத்தில் அந்த ஞானம் அநுமிதியாம்; சந்தன அம்சத்தில் பிரத்தியக்ஷமாம். "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் வாக்கியப் பிரயோகமுடைய சந்தன திருஷ்டாவைப் பார்த்து, "இச் சந்தனத்தில் அற்பகந்த மிருக்கின்றதா? அல்லது அதிக கந்த மிருக்கின்றதா?" என்று கேட்போமாயின், அப்போது அவன், "நேத்திரத்தினல் சுவேத சந்தனம் தோற்றுகின்றதாகலின், கந்த சாமாநியத்தின் அநுமிதி உண்டாகின்றது. கந்தம் பிரத்தியக்ஷமாயின், கந்தத்தின் உயர்வு தாழ்வுகளின் ஞானம் உண்டாகும். ஆதலால், கந்தத்தின் உயர்வு தாழ்வுகளோ மூக்கினல் மோந்தால் அப்போது அறியப்படும். நேத்திரத்தினலோ சுவேத சந்தனத்தின்ஞானம் உண்டாகின்றது. அதனல் கந்தசாமாநியத்தின் ஞான முண்டாகின்றது" என்று விடை கூறுதலாலும் சுகந்தத்தினது ஞானத்தின் அநுமிதி உண்டாகின்றது; பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

எவ் விந்திரியத்தினல் ரூப, ரச, கந்த, சப்தங்களின் ஞான முண்டாகின்றதோ, அவ் விந்திரியத்தினல் உருவமுதலியவற்றினது உயர்வு தாழ்வுகளின் ஞானம் உண்டாகும். நேத்திரேந்திரியத்தால் கந்தத்தின் ஞான முண்டாகுமாயின், கந்தத்தின் உயர்வு தாழ்வுகளின் ஞானம் உண்டாதல்வேண்டும். ஆதலால்,

சந்தனத்தில் சுகந்தத்தின் ஞானம் அநுமிதி வடிவமாம்; பிரத்தியக்ஷமன்று. அநுமிதி ஞானத்திலோ உயர்வு தாழ்வுகளின் அப்பிரதீதி அநுபவசித்தமாம். தூமத்தினால் வந்நியின் ஞானம் உண்டாகின்றது. ஆண்டு வந்நியின் அற்பத்துவ மகத்துவங்களின் ஞானம் உண்டாகிறதில்லை. நையாயிகர், லௌகிக சம்பந்த ஜந்நிய பிரத்தியக்ஷத்தினால் விஷயங்களின் உத்கருஷ அபகருஷங்கள் தோற்றுகின்றன, அலௌகிகத்தினால் விஷயத்தின் சாமாநிய தர்மமும் தோற்றுகின்றது, விசேஷ தர்மம் தோற்றுகிறதில்லை என்று கூறுகின்றனர். அதுவும் அசங்கதமாம். ஏனெனின், சாமாநிய தர்மத்தினாலோ பரோக்ஷஞானத்தினாலும் விஷயத்தின் பிரகாசம் சம்பவிக்கின்றது. அப்பிரசித்த சம்பந்தத்தால் அப்பிரசித்த பிரத்தியக்ஷ கற்பனை நிஷ்பிரயோஜனமாம். விசேஷரூபமாக சுகந்தத்தின் பிரகாசம் உண்டாகிறதில்லை. சாமாநிய ரூபமாக சுகந்தத்தின் பிரகாச மிருக்கின்றது. இவ்வாறு சுகந்தத்தின் ஞானம் நேத்திரத்தால் உண்டாகின்றது.

இந் நையாயிக வசனத்தால் இது சித்திக்கின்றது:—நேத்திரத்தினால் சுவேத சந்தனத்தின் சாக்ஷாத்கார முண்டாகவே, சுகந்தத்தின் சாமாநிய ஞானம் அநுமிதி ரூபமாகின்றது. அவ் வநுமிதிக்குப் பிரயோஜகம் சந்தனத்தின் சுவேதத்தன்மை ஞானவாயிலாக நேத்திரமாம். இவ்வாற்றால் சுகந்தத்தின் ஞானம் நேத்திரஜந்நிய மன்று; அநுமிதியாம்.

நையாயிகர் இங்ஙனம் கூறுகின்றனர்:—நேத்திர ஜந்நிய சுகந்தத்தின் ஞானம் உத்கர்ஷ அபகர்ஷங்களை விளக்குகிறதில்லை. ஆதலின், அநுமிதிக்குச் சமானமாம். அங்ஙனமாயினும் அநுமிதி வடிவம் சம்பவியாது. ஏனெனின், "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானம் ஒன்றும்; இரண்டன்று. ஒரே ஞானத்திற்குச் சுகந்த அம்சத்தில் அநுமிதித்தன்மையும், சந்தன அம்சத்தில் பிரத்தியக்ஷத்தன்மையும் கூறின், அநுமிதித்தன்மை பிரத்தியக்ஷத்தன்மையாகிய விரோதமுடைய தர்மங்களின் சமாவேச முண்டாகும். ஆதலால், எல்லா அம்சங்களிலும் பிரத்தியக்ஷ முண்டென்று கூறுதலும் சம்பவியாது. ஏனெனின், உன்னுடைய மதத்தில் ஒரு ஞானத்தில் எங்ஙனம் இலௌகிகத்தன்மை அலௌகிகத்தன்மையாகிய விரோதமுடைய தர்மங்

களின் சமாவேச மிருக்கின்றதோ, அங்ஙனமே அநுமிதித்தன்மை பிரத்தியக்ஷத் தன்மைகளுக்கும் ஒரு ஞானத்தில் சமாவேசம் சம்பவிக்கின்றது. பிரத்தியக்ஷத்தன்மை அநுமிதித்தன்மைகளின் விரோதமோ நியாயசாஸ்திர சம்ஸ்காரமுடையவர்களுக்குத் தோற்றுகின்றது. இலெளகிகத்தன்மை அலெளகிகத்தன்மைகளோ ஒன்றற்கொன்று அபாவரூபமா யிருக்கின்றன. ஆதலின், அவற்றின் விரோதம் எல்லோருக்கும் விளங்கும். பிரதியோகி அபாவங்கட்குப் பாஸ்பரம் விரோத மிருக்கின்றது. இது சகலலோகத்திலும் பிரசித்தமாம். ஆதலால், உலகப்பிரசித்த விரோதமுடைய தர்மங்களின் சமாவேசத்தை நையாயிகர் அங்கிகரித்திருக்கின்றனர். இதனால் விரோதமுள்ள பதார்த்தங்களுக்குச் சமாவேச மில்லையென்னும் வாக்கியம் நாணமின்மையைக் காரணமாக வுடையதாம்.

வேதாந்த மதத்திலோ அந்தக்கரணத்தின் விருத்திரூப ஞானம் அம்சத்தோடு கூடியதாயிருத்தலின், ஒரு விருத்தியில் அம்சபேதத்தால் விரோதமுடைய தர்மங்களின் சமாவேசம் சம்பவிக்கின்றது. நியாயமதத்தில் ஞான ஜந்நியத்தன்மை இருக்கின்றது; ஆனால் திரவிய மில்லை. ஆதலால், அம்சத்தோடுகூடியதன்று. நிரம்ச ஞானத்தில் விரோதமுடைய தர்மங்களின் சமாவேசம் பாதிதமாம். ஆதலால், "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானம் சுகந்த அம்சத்தில் அநுமிதியாம்; சந்தன அம்சத்தில் பிரத்தியக்ஷமாம். அல்லது ஞானத்தின் உபாதானமாகிய அந்தக்கரணம் அம்சமுடையதாம். ஆதலால், அந்தக்கரணத்தின் பரிணாமமாகிய இரண்டு ஞான மிருக்கின்றது. "சுகந்தமுடையது" என்னும் ஞானம் அநுமிதி வடிவமாம். "சந்தனம்" என்னும் ஞானம் பிரத்தியக்ஷமாம். இரண்டு பரிணாமமும் ஏககாலத்தில் உண்டாகின்றன. ஆதலால், அவற்றின் இருமை ஒருநாளும் தோற்றுகிறதில்லை. இவ்வாற்றால் "வாசனையுடைத்து சந்தனம்" என்னும் ஞானம் சுகந்த அம்சத்தில் சாக்ஷாஷமன்று. இந்த ஞானத்திற்கு ஒருவாற்றால் அலெளகிக சம்பந்த ஜந்நியத்தன்மை கூறினர்.

அங்ஙனமாயினும், "இது இரஜதம்" என்றல்முதலிய பிரமமோ கூறியபடி சம்பவியாது. ஏனெனின், சுத்தியோடு நேத்திரத்தின் சம்பந்தத்தினையும், இரஜதத்தன்மையின் ஸ்மி

ருதியினையும் "இது இரஜதம்" என்னும் ஞானத்திற்குக் காரண மாய் அங்கீகரிக்கின், அவனை இது கேட்பாம்:—

சுத்தியோடு நேத்திரத்தின் சம்பந்தமுண்டாய்ச் சுத்தி ரஜத சாதாரண தர்மமாகிய வெண்மினுமினுப்பு விசிஷ்ட சுத்தியின் இதுவெனும் வடிவ சாமாநியஞானமுண்டாய், இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாகப் பின் அதன் பிரம முண்டாகின்றதா? அல்லது, சுத்தியின் சாமாநியஞானத்திற்கு முன்னரே சுத்தியினோடு நேத்திரத்தின் சம்பந்த முண்டாக, அதேகாலத்தில் இரஜதத்தன்மை விசிஷ்ட இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாய், "இது இரஜதம்" என்னும் பிரமம் உண்டாகின்றதா? முதற்பக்ஷத்தைக் கூறுமிடத்துச் சம்பவியாது. ஏனெனின், முதலிலோ சுத்தியின் சாமாநிய ஞானமும், அதற்குப்பின் இரஜதத்தன்மை விசிஷ்ட இரஜதத்தின் ஸ்மிருதியும், அதன்பின் இரஜதப் பிரமமுமாக, இவ்வாறு மூன்று ஞானங்களின் தாரை அநுபவத்தால் பாதிதமாயிருக்கின்றது. "இது வெள்ளி" என்னும் ஒரே ஞானம் எல்லோருக்கும் தோற்றுகின்றது.

முதலில் சுத்தியின் சாமாநிய ஞானம் உண்டாதலின்றிச் சுத்தியோடு நேத்திரத்தின் சையோக காலத்தில் இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாய் "இது இரஜதம்" என்னும் பிரம முண்டாகின்றது என்று கூறுவாராயின், அதுவும் சம்பவியாது. ஏனெனின், சகல ஞானமும் சேதன வடிவ சொப்பிரகாசமாம். விருத்திவடிவஞானம் சாக்ஷிபாஸியமாம். எந்த ஞானமும் எக்காலத்திலும் அஞ்ஞாத மாகாதென்னும் வார்த்தையினை மேற் பிரதிபாதனம் செய்வோம். ஆதலால், சுத்தியோடு நேத்திரத்தின் சையோககாலத்தில் இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாயின் ஸ்மிருதியின் பிரகாசம் உண்டாதல் வேண்டும். ஸ்மிருதியில் சேதனபாகமோ சுயம்பிரகாசமாம். விருத்திபாகத்தின் பிரகாசம் சாக்ஷியதீனமாய் எப்போதும் உண்டாகின்றது. ஆதலால், ஸ்மிருதியின் அநுபவம் உண்டாதல் வேண்டும்.

நையாயிகனைச் சபதபூர்வகமாய் இது கேட்பாம்:—"சுத்தியில் 'இது இரஜதம்' என்னும் பிரமத்திற்குப் பூர்வகாலத்தில் இரஜத ஸ்மிருதியின் அநுபவம் உனக்கு உண்டாகின்றதா?" என்று கேட்போமாயின், அப்போது அவன் உண்மை உரைப்பவனாயின், ஸ்மிருதியினது அநுபவத்தின் அபாவத்தையே

கூறுவன். ஆதலால், சுத்தியினேடு நேத்திர சையோககாலத்தில் பிரமத்திற்கு முன் இரஜதத்தின் ஸ்மிருதி சம்பவிக்கிறதில்லை.

இரஜதாநுபவ ஜந்திய இரஜதகோசர சம்ஸ்காரத்தோடு கூடிய நேத்திர சையோகத்தால் இரஜதப்பிரம முண்டாகின்றது. சம்ஸ்கார குணம் பிரத்தியக்ஷ யோக்கியமன்று; ஆனல் அநுமேயமாம். ஆதலால், முற்கூறிய தோஷ மில்லை" என்று கூறுவானாயின்,

அவனை, "அங்ஙனமாயினும் உற்புத்தசம்ஸ்காரம் பிரமத்தை உண்டுபண்ணுவதா? அல்லது உற்புத்தம் அநுற்புத்தமென்னும் இரண்டு சம்ஸ்காரமும் பிரமத்தை உண்டுபண்ணுவனவா?" என்று கேட்பாம்.

இரண்டிற்கும் உண்டுபண்ணுந் தன்மையைக் கூறின் சம்பவியாது. ஏனெனின், அநுற்புத்த சம்ஸ்காரங்களால் ஸ்மிருதி முதலிய ஞானம் என்றும் உண்டாகாது. அநுற்புத்தத்தினும் ஸ்மிருதி உண்டாகுமாயின், அநுற்புத்த ஸம்ஸ்காரத்தால் எப்போதும் ஸ்மிருதி உண்டாகுதல் வேண்டும். ஆதலால், உற்புத்த சம்ஸ்காரத்தால் ஸ்மிருதி உண்டாகின்றது. அங்ஙனமே பிரமஞானமும் உற்புத்த ஸம்ஸ்காரத்தினலேயே சம்பவிக்கின்றதாகலின், உற்புத்த ஸம்ஸ்காரம் பிரமத்தை உண்டு பண்ணுவதாம் என்று கூறின், அதுவும் பொருந்தாது.

ஏனெனின், சம்ஸ்காரத்தின் உற்போதகம் (வர்சனையை எழுப்புவன) சமானமானவற்றைக் காணுதல்முதலியனவாம். ஆதலால், சுத்தியினேடு நேத்திரத்தின் சையோகத்தால் வெண் பளபளப்பு விசிஷ்ட சுத்தியின் ஞான முண்டாகியபின், இரஜதகோசர சம்ஸ்காரத்தின் உற்போதம் சம்பவிக்கின்றது. நேத்திர சுத்திகளின் சையோக காலத்தில் இரஜதகோசர சம்ஸ்காரத்தின் உற்போதம் சம்பவியாது.

ஆதலால், இது அங்கீகரிப்பதாகும்:—முதற்கணத்தில் நேத்திர சையோகமும், இரண்டாவதுகணத்தில் வெண்பளபளப்புத் தர்மவிசிஷ்ட சுத்தியின் ஞானமும், அதற்குப் பிற்கணத்தில் சம்ஸ்காரத்தின் உற்போதமும், அதற்குப் பிற்கணத்தில் இரஜதப்பிரமமும் சம்பவிக்கின்றன. இவ்வாற்றால் நேத்திர சையோகத்தினல் நான்காவது கணத்தில் பிரமஞானத்தின் உற்

பத்தி சித்தித்தது. அது அநுபவத்தினல் பாதிக்கப்படுவதாம். நேத்திர சையோகத்திற்கு அவ்வியவகித பிற்கணத்தில் சாக்ஷுஷஞானம் உண்டாகின்றது. அங்ஙனமே அநுபவமு முண்டாகின்றது. ஆதலால், முற்கூறிய கிரமம் அசங்கதமாம்.

முற்கூறியபடி சுத்தியின் இரண்டு ஞானங்கள் சித்திக்கின் றன. ஒன்ரு சம்ஸ்காரத்தின் உற்போதக சாமாநியஞானம்; மற்றையது சம்ஸ்கார ஜந்நிய பிரமஞானம். இவ்வாற்ருல் சுத்தி யின் இரண்டு ஞானமும் அநுபவசித்தமாம். நேத்திரசையோக முண்டாகியும் "இது இரஜதம்" என்னும் ஒரே ஞானம் அநு பவ சித்தமாம். ஆதலால், இரஜதாநுபவ ஜந்நிய சம்ஸ்காரத் தோடு கூடிய நேத்திர சையோகத்தினல் "இது இரஜதம்" என்னும் பிரமம் உண்டாகின்றதென்று சொல்லுதலும் சம் பவியாது.

"சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானத்தினை அலௌகிகப் பிரத்தியக்ஷமெனக் கொள்ளினும், "இது இர ஜதம்" என்னும் ஞானமோர் ஞானலக்ஷண அலௌகிக சம்பந்த ஜந்நியம் என்பது சம்பவியாது. ஏனெனின், "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானமுண்டாகச் சுகந்தத்தின் உயர்வு தாழ்வுகளின் சந்தேக முண்டாகின்றது. ஆதலால், சுகந்தத்தி னது உயர்வு தாழ்வுகளின் நிச்சய வடிவப் பிரகடத்தன்மை அலௌகிக ஞானத்தால் உண்டாகிறதில்லை என்பதை அங்கீ கரித்தல் வேண்டும். அலௌகிக ஞானத்தாலும் விஷயத்தின் பிரகடத்தன்மை உண்டாகுமாயின், சுகந்தத்தினது அபகர்ஷ முதலியவற்றின் சந்தேகம் சம்பவிக்கிறதில்லை. "இது இரஜதம்" என்னும் பிரமத்தினுலும், சத்திய ரஜதத்தில் "இது இரஜதம்" என்னும் பிரமையினுலும் இரஜதத்தின் பிரகடத்தன்மை சம மாகின்றது. பிரமஸ்தலத்தில் இரஜதத்தின் பிரகடத்தன்மை உண்டாகாதாயின், இரஜதத்தினது பரிமாண முதலியவற்றின் சந்தேக முண்டாதல் வேண்டும். பரிமாணமுதலியவற்றின் சந் தேக முண்டாகிறதில்லை. இதனல் பிரமஞானத்தினல் இரஜ தத்தின் பிரகடத்தன்மை உண்டாகின்றது. ஞானலக்ஷண சம் பந்த ஜந்நிய ஞானத்தினல் விஷயத்தின் பிரகடத்தன்மை உண் டாகிறதில்லை. ஆதலால், "இது இரஜதம்" என்னும் பிரம ஞானத்திற்கு ஏது ஞானலக்ஷண சம்பந்தமன்று.

விசாரஞ் செய்யின் ஞானவடிவ சம்பந்தம் ஓரிடத்தும் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், ஞானலக்ஷண சம்பந்தத்தால் அலௌகிகப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. இப்பக்ஷத்தின் நிச்சயம் இதுவாம்:—யாண்டு ஒரு பதார்த்தத்தின் அநுபவஜந்நிய ஸ்மிருதி, அல்லது அநுபவ ஜந்நிய சம்ஸ்கார முண்டாய்ப் பிற பதார்த்தத்தோடு இந்திரியத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டு இந்திரிய சம்பந்தியில் ஸ்மிருதிகோசர பதார்த்தத்தின் அல்லது சம்ஸ்காரகோசர பதார்த்தத்தின் பிரதீதி உண்டாகின்றது. இந்திரிய சம்பந்தி பதார்த்தமோ விசேஷியரூபத்தாற் றோற்றுகின்றது. ஸ்மிருதிகோசர பதார்த்தம் விசேஷண ரூபத்தால்பிரதீதியாகின்றது. எங்ஙனம் "சுகந்தமுடையது சந்தனம்" என்னும் ஞானத்தில் நேத்திரவடிவ இந்திரிய சம்பந்தியாகிய சந்தனம் விசேஷியமும், ஸ்மிருதிகோசர சுகந்தம் விசேஷணமுமாகின்றனவோ, அங்ஙனமே "இது இரஜதம்" என்னும் பிரமஞானத்திலும் இந்திரிய சம்பந்தியாகிய சுத்தி விசேஷியமும், ஸ்மிருதியின் கோசரமாகிய அல்லது ஸம்ஸ்காரத்தின் கோசரமாகிய இரஜதத்தன்மை விசேஷணமுமாம்.

விசேஷண விசேஷிய மிரண்டின் ஞானமும் பிரத்தியக்ஷமாம் என்னும் பக்ஷத்தை அங்கீகரிக்கின், அநுமானப்பிரமாணத்தின் நீக்க முண்டாகும். ஏனெனின், "பர்வதம் வந்நியுடைத்து" என்னும் அநுமிதிஞானம் அநுமானப் பிரமாணத்தால் உண்டாகின்றது. ஏதுவில் சாத்தியத்தினது வியாப்தியின் ஸ்மரணத்தால், அல்லது சாத்தியத்தினது வியாப்தியின் உற்புத்த ஸம்ஸ்காரங்களால் அநுமிதி ஞானம் உண்டாகின்றதென்னும் அர்த்தம் அநுமான நிரூபணத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. சாத்தியத்தினது வியாப்தியின் ஸ்மிருதி உண்டாகுமாயின், அப்போது வியாப்தியை நிரூபிக்கும் சாத்தியத்தின் ஸ்மிருதியும் உண்டாகும். ஆதலால், பர்வதத்தோடு நேத்திரத்தின் சையோகத்தினாலும் வந்நியின் ஸ்மிருதியினாலும் "பர்வதம் வந்நியுடைத்து" என்னும் பிரத்தியக்ஷ ஞானத்தின் சம்பவம் உண்டாகுமென்னும் பக்ஷத்தில், சாத்திய நிச்சயமாகிய அநுமிதி ஞானத்தை உண்டுபண்ணும் அநுமானப் பிரமாணத்தின் அங்கீகாரம் பயனிலதாம்.

கௌதமர் கணாதர் கபிலர்முதலிய முற்றறிவுடையோரார் செய்யப்பட்ட சூத்திரங்களில் அநுமானப் பிரமாணம் பிரத்தி

யக்ஷத்திற்கு வேறாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. அநுமானப்பிரமாணம் பயனிலதாமாயின் அதனைச் சூத்திரங்களிற் சொல்லார். ஆதலால், அநுமானத்தின் பிரயோஜனத்தைச் சாதிக்கும் ஞானரூப சம்பந்த ஜந்நிய அலௌகிகப் பிரத்தியக்ஷம் அப்பிரசித்தமாம். அந்நியதாக்கியாதிவாதியானவர் "பிரத்தியக்ஷ ஞானத்தின் விஷயத்தன்மையினும் அநுமிதி ஞானத்தின் விஷயத்தன்மை விலக்ஷணமாம். இதனாற்றான் பிரத்தியக்ஷ விஷயத்தில் பரிமாணமுதலியவற்றின் சந்தேகமுண்டாகிறதில்லை. அநுமிதியின் விஷயத்தில் பரிமாணமுதலியவற்றின் சந்தேகமுண்டாகின்றது. இவ்வாற்றால் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மை வடிவ விஷயத்தன்மையின் பேதம் அநுமிதிஞானப் பிரத்தியக்ஷஞானங்களின் பேதத்தால் உண்டாகின்றது. இதனால் பரோக்ஷத்தன்மை வடிவ விஷயத்தன்மையைச் சம்பாதிப்பது பிரத்தியக்ஷஞானமன்று; ஆனால், அநுமிதி ஞானமாம். அதற்கேது அநுமானப் பிரமாணமாம்." என்று கூறுவாராயின், இங்ஙனங் கூறுதலும் பொருந்தாது. ஏனெனின், இலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் விஷயத்தன்மையே அநுமிதியின் விலக்ஷணமாம். ஆனால், "சுகந்தமுடையது சந்தனம்" என்றல்முதலிய ஞானம் சுகந்தமுதலிய அம்சத்தில் அலௌகிகமாம். ஆண்டுச் சுகந்தத்தின் ஞானம் அநுமிதிக்குச் சமானமாம்.

எங்ஙனம் அநுமிதி ஞானத்தின் விஷயத்தில் உயர்வுமுதலியன நிச்சயிக்கப்படாதன வாகின்றனவோ, அங்ஙனமே சுகந்தத்தின் உயர்வுமுதலியனவும் நிர்ணயிக்கப்படாதனவாம். ஆதலால், அலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் விஷயத்தன்மைக்கு அநுமிதியின் விஷயத்தன்மையோடு பேதமில்லை. பிரமவடிவ அலௌகிகப்பிரத்தியக்ஷத்தின் விஷயத்தன்மை இராஜதாதிகளிலிருக்கின்றது. அதற்கு அநுமிதியின் விஷயத்தன்மையோடு பேதம் அநுபவசித்தமாம்; இதனானே இராஜதத்தின் அற்பத்தன்மை முதலியவற்றின் சந்தேகமுண்டாகிறதில்லை. என்றாலும், ஞானலக்ஷண சம்பந்த ஜந்நிய அலௌகிகப் பிரத்தியக்ஷப் பிரமையின் விஷயத்தோடு பேதமில்லை.

எங்ஙனம் அநுமிதியின் விஷயத்தில் பிரகடத்தன்மையின்மை யிருக்கின்றதோ, அங்ஙனமே அலௌகிகப் பிரத்தியக்ஷப்

பிரமையின் விஷயமாகிய கந்தத்தில் பிரகடத்தன்மையின்மை இருக்கிறது. இதனால் ஞானலக்ஷண சம்பந்தத்தினால் பர்வதத்தில் வந்நியின் பிரகாசம் அலௌகிகப்பிரத்தியக்ஷத்தினால் சம்பவிக்கின்றது. அநுமிதி ஞானத்தின்பொருட்டு அநுமானப்பிரமாணம் வியர்த்தமாகும். அநுமானப்பிரமாணம் முற்றறிவுடையோர் வாக்கியங்களால் பெறப்பட்டதாம். ஆதலால், அநுமானத்தின் பயனின்மையைச் சம்பாதிக்கும் அலௌகிகப் பிரத்தியக்ஷம் பெறப்படாததாம்.

விலக்ஷண விஷயத்தன்மையைச் சம்பாதிப்பது அநுமிதி ஞானமாம்; அதற்கு ஏதுவான அநுமானப் பிரமாணம் வியர்த்தமன்று என்று இங்ஙனங் கூறியிருக்கின்றனர். இவ் வார்த்தையே அசங்கதமாம். ஏனெனின், யாண்டு அநுமானப் பிரமாணத்தால் அநுமிதி உண்டாகின்றதோ, ஆண்டு சகல அலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரியும் இருக்கின்றது.

எங்ஙனம்: பர்வதத்தில் வந்நியின் அநுமிதிக்குமுன் புகையைக் காணுதலாகிய வியாப்தி ஞானமோ அநுமிதியின் சாமக்கிரியாம். பர்வதத்தோடு நேத்திரத்தின் சம்பந்தமும் வந்நியின் ஸ்மிருதியுமாகிய இது அலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரியாம். இரண்டு ஞானத்திற்கு இரண்டு சாமக்கிரி இருக்குமாயின், பர்வதத்தில் வந்நியின் பிரத்தியக்ஷ வடிவ ஞானமே உண்டாகும்; அநுமிதிஞானம் உண்டாகாது. இதனால் அநுமானப்பிரமாணம் வியர்த்தமே ஆகின்றது.

ஏனெனின் இது நியாயசாஸ்திரத்தின் நிச்சயிக்கப்பட்ட பொருளாம்:—யாண்டு ஒன்றைக் கோசரிக்கும் அநுமிதியின் சாமக்கிரிக்கும் பிறிதொன்றைக் கோசரிக்கும் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரிக்கும் சமாவேசம் உண்டாகின்றதோ, ஆண்டு அநுமிதி சாமக்கிரி பிரபலமாம்.

எங்ஙனம்: பர்வதத்தோடு நேத்திரத்தின் சையோகமோ பர்வதத்தினது பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரிக்கும், வந்நியின் அநுமிதியின் சாமக்கிரிக்கும், சமாவேசமுண்டாக வந்நியின் அநுமிதி உண்டாகின்றது. பர்வதத்தின் பிரத்தியக்ஷ ஞானமுண்டாகின்றதில்லை. யாண்டுத் தூமத்தோடும் வந்நியோடும் நேத்திரத்தின் சையோகமுண்டாய்த் தூமத்தில் வந்நியினது

வியாப்தியின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டு வந்நியினது அநுமிதியின் சாமக்கிரி யிருக்கின்றது; வந்நியின் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரியு மிருக்கின்றது. ஆதலால், சமானகோசர உபய ஞானத்தின் சாமக்கிரி யிருக்கின்றது. ஆண்டுப் பிரத்தியக்ஷ சாமக்கிரி பிரபலமாம். ஆதலால், வந்நியிற் பிரத்தியக்ஷ ஞானமே உண்டாகின்றது; வந்நியின் அநுமிதி உண்டாகிறதில்லை.

புருஷனிடத்துப் "புருஷனோ, அன்றோ" என்னும் சந்தேகமுண்டாய்ப் "புருஷத்தன்மை வியாப்பிய கைமுதலியவற்றையுடையது இது" என்னும் பிரத்தியக்ஷ வடிவ பராமரிச ஞானமும் புருஷனோடு நேத்திரத்தின் சையோகமு முண்டாயின், ஆண்டுப் பராமரிசமோ புருஷனது அநுமிதியின் சாமக்கிரியாம், புருஷனோடு நேத்திரத்தின் சையோகம் புருஷனது பிரத்தியக்ஷத்திற்குச் சாமக்கிரியாம். ஆண்டுப் புருஷனது பிரத்தியக்ஷ ஞானமே உண்டாகின்றது; புருஷனது அநுமிதி உண்டாகிறதில்லை. ஆதலால், ஒருவிஷயத்திற்கு இரண்டு ஞானங்களின் சாமக்கிரி இருக்குமாயின், அவற்றிற் பிரத்தியக்ஷ சாமக்கிரி பிரபலமாம். ஆதலால், வந்நியின் அநுமிதி சாமக்கிரி இருக்கினும், அலௌகிக சம்பந்தமாகிய சாமக்கிரியினால் வந்நியின் பிரத்தியக்ஷ ஞானமே உண்டாகும். இவ்வாற்றால் ஞானலக்ஷண அலௌகிக சம்பந்தத்தால் பிரத்தியக்ஷ ஞானத்தின் உற்பத்தி அங்கீகரிக்கின் அநுமானப் பிரமாணம் வியர்த்தமாம்.

"பின்னவிஷயங்க ளிருக்குமாயின் ஆண்டுப் பிரத்தியக்ஷ சாமக்கிரியினும் அநுமிதி சாமக்கிரி பிரபலமாம். சமான விஷயமிருக்குமாயின் ஆண்டு அநுமிதி சாமக்கிரியினும் பிரத்தியக்ஷ சாமக்கிரி பிரபலமாம். என்றாலும் சமானவிஷயமிருக்கவும் இலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரி அநுமிதி சாமக்கிரியினும் பிரபலமாம். அலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரியோ அநுமிதி சாமக்கிரியினும் முற்றும் வலியின்றியதாம். ஆதலால், பர்வதத்தின் வந்நியின் அநுமிதி சாமக்கிரியினால் அலௌகிகப் பிரத்தியக்ஷ சாமக்கிரிக்குப் பாத மிருத்தலால் அநுமானப்பிரமாணம் பயனின்றியதன்று." என்று நையாயிகர் கூறுவாராயின், இக் கூற்றும் நலமுடையதன்று.

ஏனெனின், யாண்டுத் தாணுவில் "தாணுவோ? அன்றோ?" என்னும் சந்தேகமுண்டாய்ப் "புருஷத்தன்மை வியாப்பிய கை

முதலியவற்றை யுடையது இது'' என்னும் பிரம முண்டாய், ''இவன் புருஷனே'' என்னும்பிரமவடிவப்பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டு நையாயிக வசனத்தின்படி அநுமிதி உண்டாதல்வேண்டும்; பிரத்தியக்ஷ முண்டாக லாகாது. ஏனெனின், முற்கூறிய ஸ்தலத்தில் தாணுவில் புருஷத்தன்மையின் பிரத்தியக்ஷ மிருத்தலால் பிரமம் பிரத்தியக்ஷமாம். பிரமப் பிரத்தியக்ஷத்திற்கு உன்னுடைய மதத்தில் அலௌகிக சாமக்கிரி யிருக்கின்றது. ஆதலால், அநுமிதி சாமக்கிரியினும் அலௌகிகப் பிரத்தியக்ஷத்தின் சாமக்கிரிக்கு வலியின்மை அங்கிகரிக்க, முற்கூறியவிடத்தில் அநுமிதி உண்டாதல் வேண்டும். முற்கூறிய விடத்தில் புருஷனது பிரமம் அநுமிதிவடிவமாக அங்கீகரிக்கின், பிற்காலத்தில் புருஷனைச் சாக்ஷாத்கரிக்கின்றேனென்னும் அநுவியவசாயம் உண்டாதல்வேண்டும்; ஆதலால், இரண்டும் சமான விஷயமாயின், ஆண்டு லௌகிகப் பிரத்தியக்ஷ சாமக்கிரியைப்போல அலௌகிகப் பிரத்தியக்ஷ சாமக்கிரியும் பிரபலமாம்; அநுமிதி சாமக்கிரி துர்ப்பலமாம்.

ஆதலால், ஞானலக்ஷண சம்பந்தத்தால் பிரத்தியக்ஷத்தின் உற்பத்தி அங்கீகரிக்கின், அநுமிதிஞானத்தைப் பாதித்துப் பருவதமுதலியவற்றில் வங்கிமுதலியவற்றின் பிரத்தியக்ஷ ஞானமே உண்டாகும். இதனால் அநுமானப்பிரமாணம் நிஷ்பலமாகும். இக் காரணத்தால் எவன் அநுமானப்பிரமாணத்தை அங்கீகரிக்கின்றானோ, அவன் மதத்தில் ஸ்மிருதி ஞானத்தோடு கூடிய இந்திரிய சையோகத்தினாலேனும், சம்ஸ்காரத்தோடு கூடிய இந்திரிய சையோகத்தினாலேனும் வியவகித வஸ்துவின் பிரத்தியக்ஷஞானம் சம்பவிக்கிறதில்லை. ஆதலால், சுத்தியின் இரஜதத்தன்மை வடிவால் தோற்றுதலாகிய அந்நியதாக்கியாதி சம்பவியாது.

161, அநிர்வசநீய வாதத்தில் நியாயவாதி கூறிய தோஷத்தின் நிவிருத்தி

''அநிர்வசநீயக்கியாதியின் மதத்தில் விஷயத்திற்கும் காரணத்தன்மை தோஷத்தில் அங்கீகரித்திருக்கின்றனர். அந்நியதாக்கியாதி வாதத்தில் ஞானத்திற்குக் காரணத்தன்மை அங்கீகரித் திருக்கின்றனர்; விஷயத்திற் கில்லை. ஆதலால், அந்நியதாக்கியாதி வாதத்தில் இலாகவ முண்டு. அநிர்வசநீயக்கியாதி

வாதிக்கு அந்நியதாக்கியாதியும் அங்கீகரித்தல் உண்டாகின்றது. அந்நியதாக்கியாதி வாதிக்கு அநிர்வசநீயக்கியாதி அங்கீகரித்தல் உண்டாகிறதில்லை. இதனாலும் இலாகவ மிருக்கின்றது." என்றிவ்வாறு அநிர்வசநீயக்கியாதிவாதத்தில் தோஷம் சொல்லப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் கூறுவதும் அவிவேக காரணத்தினாலாம்.

ஏனெனின், அந்நியதாக்கியாதிவாதிக்குச் சுருதி ஸ்மிருதிகளின் ஆஞ்ஞையால் சொப்பனத்திலோ அநிர்வசநீயக்கியாதியை அவசியம் அங்கீகரித்தல் வேண்டும். வேதத்திற் கூறிய அர்த்தத்திற்குப் புருஷபுத்தியினால் கற்பிக்கப்படும் யுக்தி சமுதாயத்தால் வேறு தன்மையினைக் கற்பித்தல் ஆஸ்திகர்க்குரியதன்று. சுத்தி இரஜதத்தின் தாதான்மியம் தோற்றுகின்றது. அங்ஙனமே இதுவெனும் பதார்த்தத்தில் இரஜதத்தன்மையின் சமவாயம் தோற்றுகின்றது. அங்ஙனமே இதுவெனும் பதார்த்தம் இரஜதம் என்பவற்றின் தாதான்மியம் தோற்றுகின்றது. இதுவெனும் பதார்த்தம் சுத்தியாம். சுத்தி இரஜதங்களின் தாதான்மியம் வேறு இடங்களில் பிரசித்த மில்லை. ஆதலால், முன்னிருக்கு மிடத்தில் சுத்தி இரஜதத்தின் தாதான்மியம் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றது. அநிர்வசநீய தாதான்மியத்தின் உற்பத்தி அங்கீகரியாவிடின், அப்பிரசித்தத்தின் அபரோக்ஷப் பிரதீதி யுண்டாகாது. தாதான்மியத்தின் அபரோக்ஷப் பிரதீதி உண்டாகின்றது.

நையாயிகர் ஆக்கிரகத்தால் சுத்தியில் இரஜதத்தன்மையின் சமவாயமே தோற்றுகின்றது எனக் கூறின், அதற்கும் சமவாய சம்பந்தத்தால் இரஜதத்தன்மை தோற்றுகின்றது என்பது பொருளாம். சுத்தி இரஜதத்தின் தாதான்மியம் தோற்றுகிறதில்லை என்று கூறின், சுத்தி ஞானத்திற்குப் பிற்காலத்தில் இது இரஜதமன்றென்னும் பாத முண்டாகின்றது. அதன் பாத்தியம் (வாதிக்கப்படுவது) இதுவென்னும் பதார்த்தத்தில் இரஜதத்தின் தாதான்மியமாம். பிரமகாலத்தில் இதுவெனும் பதார்த்தத்தில் இரஜதத்தின் தாதான்மியம் தோற்றாவிடின் பாதம் நிர்விஷயமாகும். கேவல் இரஜதத்தன்மையின் சமவாயமே சுத்தியில் தோற்றுமாயின், "ஈண்டு இரஜதத்தன்மை இல்லை" என்னும் பாத முண்டாதல் வேண்டும். ஆதலால், சுத்தியில்

இரஜதத்தின் தாதான்மியம் தோற்றுகின்றது. அந்தச் சுத்திரஜதத்தின் தாதான்மியம் இரண்டையும் அபேக்ஷித்ததாம்; ஓரிடத்தும் பிரசித்த மில்லை. ஆகலால், அநிர்வசநீய தாதான்மியத்தின் உற்பத்தி அந்நியதாக்கியாதி வாதத்தில் ஆவசியகமாம். கேவலம் அந்நியதாக்கியாதியினால் நிர்வாக முண்டாகிறதில்லை.

அநிர்வசநீயக்கியாதிவாதிக்கு அந்நியதாக்கியாதி அங்கீகரிக்க வேண்டியதாகின்றது; அத்வைதக் கிரந்தகாரர்களும் அங்கீகரித்திருக்கின்றனர் என்று கூறுதலும் அத்வைத நூல்களின் அபிப்பிராயத்தை அறியாததினாலாம். ஏனெனின், அத்வைத வாதத்தில் ஓரிடத்தும் அந்நியதாக்கியாதி யில்லை; முழுவதும் அநிர்வசநீயக்கியாதியாம். வெகுவாய்ச் சொல்லுவதிலென்? யாண்டுப் பிரமா ஞானத்தைக் கூறுகின்றனரோ, ஆண்டும் அத்வைத சித்தாந்தத்தில் விஷயமும் ஞானமும் அநிர்வசநீயமாம்.

சில ஸ்தானங்களில் அந்நியதாக்கியாதி எழுதியிருப்பதற்கு இது தாற்பரியமாம்:—யாண்டு அதிஷ்டான ஆரோப்பியங்களுக்குச் சம்பந்தமுண்டாய்ப் பரோக்ஷப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டு அந்நியதாக்கியாதியும் சம்பவிக்கின்றது; ஆனால், முழுவதும் அந்நியதாக்கியாதி யாகாது. யாண்டு ஆரோப்பியம் வியவகிதமாய் அபரோக்ஷப் பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டு அநிர்வசநீயக்கியாதி ஆவசியகமாம். ஆதலால், ஆவசியகமாய் அநிர்வசநீயக்கியாதியினையே முழுவதும் அங்கீகரித்தல் வேண்டும். இவ்வாற்றால் அந்நியதாக்கியாதியைக் கூறுதல் சம்பவாபிப்பிராயத்தினாலாம்; அங்கீகரிக்கப்படுந் தன்மை அபிப்பிராயத்தினா லன்று.

யாண்டு ஆத்மசத்தையும் அநாத்மாவில் அந்நியதாக்கியாதியாகச் சொல்லப்பட்டதோ, ஆண்டும் ஆத்மசத்தையின் அநிர்வசநீய சம்பந்தம் உற்பத்தியாகின்றது. இவ்வாற்றால் யாண்டு அநிர்வசநீய சம்பந்தியின் உற்பத்தி சம்பவிக்கவில்லையோ, ஆண்டு அநிர்வசநீய சம்பந்தத்தின் அங்கீகாரமாம். அங்ஙனமே பரோக்ஷப் பிரமம் உண்டாயின், ஆண்டும் அநிர்வசநீய விஷயத்தின் உற்பத்தி பிரஹ்மவித்தியாபரணத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால், பரோக்ஷப்பிரமம் உண்டாகுமிடத்து அந்நியதாக்கியாதியை அங்கீகரிக்கினும் தோஷமில்லை. இதனாற்

ருன் சரள (ஒழுங்கான) புத்தியினால் பரோக்ஷப்பிரமம் அந்நியதாக்கியாதி வடிவமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

"அதுவே இவ் விரஜதம்" என்று இவ்வாறு சுத்தியினிடத்து இரஜதத்தின் பிரத்தியபிஞ்ஞைப் பிரமம் உண்டாயின், ஆண்டு அநிர்வசநீய ரஜதத்தின் உற்பத்தி முன்னுள்ள இடத்தில் அங்கீகரிக்கின், அடுத்துள்ள இரஜதத்திலோ அதுவெனுந் தன்மை சம்பவியாது. ஆதலால், தேசாந்தரத்திருக்கும் இரஜதத்துள்ள இரஜதத்தன்மையின் பிரதீதியும், அதுவெனுந் தன்மையின் பிரதீதியும் சுத்தி பதார்த்தத்தில் உண்டாகின்றன. அல்லது தாதான்மிய சம்பந்தத்தால் தேசாந்தரத்துள்ள இரஜதத்தின் பிரதீதி உண்டாகின்றது. ஆதலால், முற்கூறிய ஸ்தலத்தில் அந்நியதாக்கியாதி ஆவசியகமாம் என்றிவ்வாறு சொல்லுவாராயின், இங்ஙனம் கூறுதலும் அசங்கதமாம். ஏனெனின், முற்கூறிய பிரத்தியபிஞ்ஞையிலும் அநிர்வசநீய ரஜதமே விஷயமாம்; தேசாந்தரத்தில் உள்ளதன்று. ஏனெனின், பிரமாதாவோடு சம்பந்தமின்றி அபரோக்ஷ அவபாசம் சம்பவிக்கிறதில்லை. தேசாந்தரத்துள்ள இரஜதத்திற்குப் பிரமாதாவோடுள்ள சம்பந்தம் பாதிதமாம். ஆதலால், தேசாந்தரத்துள்ள இரஜதத்தின் பிரதீதியன்று. யாண்டு யதார்த்தப் பிரத்தியபிஞ்ஞை யுண்டாகின்றதோ, ஆண்டும் அதுவெனுந் தன்மை அம்சத்தில் ஸ்மிருதி இருக்கின்றதென்பது சித்தாந்தமாம். ஆதலால், "அதுவே இவ்விரஜதம்" என்னும் பிரம வடிவ பிரத்தியபிஞ்ஞையும், அதுவெனுந்தன்மை யம்சத்தில் ஸ்மிருதியும், இது இரஜதமென்னும் இத்துணை அமசத்தில் அநிர்வசநீயப் பிரத்தியக்ஷமு மிருக்கின்றன. ஆதலால், ஓரிடத்தும் அந்நியதாக்கியாதி ஆவசியகமன்று. யாண்டு அநிர்வசநீய விஷயத்தின் உற்பத்தி சம்பவிக்கவில்லையோ, ஆண்டு அநிர்வசநீய சம்பந்தத்தின் உற்பத்தி உண்டாகின்றது. எங்ஙனம்: ஆத்மாநாத்மாக்களின் அந்நியோந்நியாத்தியாச முண்டாகுமிடத்து அநாத்மாவில் ஆத்மாவும் ஆத்மாவின் தர்மமும் அநிர்வசநீயமாக உற்பத்தியாகின்றன என்று கூறுதல் சம்பவியாது. ஆதலால், ஆத்மாவின் அநிர்வசநீய சம்பந்தமும், ஆத்ம தர்மங்களின் அநிர்வசநீய சம்பந்தமும் அநாத்மாவினிடத்து உற்பத்தியாகின்றன. இவ்வாற்றால் முழுவதும் அநிர்வசநீயக்கியாதியி

ணுல் நிர்வாக மாகின்றது. ஓரிடத்தும் அந்நியதாக்கியாதி அங்கீகரிக்கப்படுகிறதில்லை.

அந்நியதாக்கியாதி வாதியானவர் அநிர்வசநீயக்கியாதி வாதத்தில் இக் கௌரவம் சொல்லியிருக்கின்ருர்:—தோஷம் அநிர்வசநீய ரஜதமுதலியவற்றிற்கும், அவற்றின் ஞானத்திற்கும் காரணமாதலை அங்கீகரித்தலால், கேவல ஞானத்திற்குக் காரணமாதலை அங்கீகரித்தலில் இலாகவ மிருக்கின்றது. அந்நியதாக்கியாதி வாதத்தில் இரஜதமோ தேசாந்தரத்தில் பிரசித்தமாம். அதனது இரஜதத்தன்மைத் தர்மத்தின் ஞானம் சுத்தியில் உண்டாகின்றது. அல்லது தாதான்மிய சம்பந்தத்தால் இரஜதத்தின் ஞானம் சுத்தியில் உண்டாகின்றது. இவ்வாற்ருல் கேவல ஞானமே தோஷ ஜந்நியமாம். அநிர்வசநீயக்கியாதி வாதத்தில் விஷயமும் ஞானமுமாகிய இரண்டினையும் தோஷ ஜந்நிய மென்பர். ஆதலால், கௌரவ மிருக்கின்றது.

இங்ஙனம் கூறுதலும் அசங்கதமாம். ஏனெனின், இலாவக பலத்தால் அநுபவசித்த பதார்த்தத்தின் லோபத்தைச் செய்யின், யதார்த்தஞானத்தின் விஷயமும் அங்கீகரிக்கப்படாது. விஞ்ஞானவாதத்தின்படி கேவல விஞ்ஞானமே அங்கீகரிக்கின், மிக்க இலாகவமாம். எங்ஙனம் அநுபவசித்த கடமுதலியவற்றை அங்கீகரித்து இலாகவத்துடனுகிய விஞ்ஞானவாதத்தின் தியாக முளதாகின்றதோ, அங்ஙனமே அபரோக்ஷப் பிரதீதியினுற் சித்தித்த அநிர்வசநீய ரஜதமுதலியவற்றை அங்கீகரித்து அந்நியதாக்கியாதி வாதமும் தள்ளத்தக்கதாகின்றது.

விசாரிக்குமிடத்துக்கௌரவமும் அந்நியதாக்கியாதி வாதத்திருக்கின்றது. ஏனெனின், தேசாந்தரத்துள்ள இரஜதத்தின் ஞானம் அங்கீகரிக்கின், அவர் மதத்தில் அக் கௌரவ முண்டு. இரஜத நேத்திர ஸையோகத்திற்கு இரஜத சாக்ஷாத்காரத்தில் காரணத்தன்மை நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. நிச்சயிக்கப்பட்ட அதன் தியாகமுண்டாகும். இரஜத ஆலோகங்களின் சங்கத்தால் இரஜதத்தின் சாக்ஷாத்காரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அந்நியதாக்கியாதி வாதத்தில் சுத்தி ஆலோகங்களின் ஸையோகத்தால் இரஜதத்தின் பிரமம் சாக்ஷாத்கார மாகின்றது. அது நிர்ணயிக்கப்படாததாம். இதனுல் நிர்ணயிக்கப்படாததின் அங்கி

கார முண்டாகின்றது. அங்ஙனமே ஞானலக்ஷண சம்பந்தம் அப்பிரசித்தமாம். இதனால் அப்பிரசித்தத்தின் அங்கீகார முண்டாகின்றது. ஞானலக்ஷண சம்பந்தத்தினை அங்கீகரிக்கினும், எப் பதார்த்தத்தின் அலௌகிக சம்பந்தத்தால் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ அதன் பிரகடத்தன்மை உண்டாகிறதில்லை. இதனாற்றான் ''சுகந்தமுடையது சந்தனம்'' என்பதாகச் சுகந்தத்தின் அலௌகிகப் பிரத்தியக்ஷ முண்டாகியும், ''சுகந்தத்தைச் சாக்ஷாத்கரிக்கின்றேன்'' என்னும் அநுவியவசாய முண்டாகிறதில்லை. அலௌகிக சம்பந்த ஜந்நிய இரஜதப் பிரமம் உண்டாக இரஜதத்தின் பிரகடத்தன்மை உண்டாகின்றது. இதனாற்றான் பிரமத்திற்குப்பிறகாலத்தில் ''இரஜதத்தைச்சாக்ஷாத்கரிக்கின்றேன்'' என்னும் அநுவிய்வசாய முண்டாகின்றது. இவ்வாற்றால் ஞானலக்ஷண சம்பந்த ஜந்நிய யதார்த்த ஞானத்தில் பிரகடத்தன்மையை உண்டுபண்ணுந் தன்மையில்லை. பிரமஸ்தலத்தில் அலௌகிக ஞானத்திற்குப் பிரகடத்தன்மையை உண்டுபண்ணுந் தன்மையை அங்கீகரிக்கின், அதுவும் அப்பிரசித்த கற்பனையாம்.

இவ்வாறு அநேகவித அப்பிரசித்த கற்பனை அந்நியதாக்கியாதி வாதத்தி லிருப்பதால் இப் பக்ஷத்திலேயே கௌரவ முண்டு. தோஷத்திற்கு அநிர்வசநீய விஷயத்தை உண்டுபண்ணுந் தன்மையோ சுருதிஸ்மிருதிகளின் வலியால் சொப்பனத்திலுண்டு. அப்பிரசித்த கற்பனை யின்று. பிரஹ்மாநந்தரால் செய்யப்பட்ட அநிர்வசநீயவாதத்தில் அந்நியதாக்கியாதியின் கண்டனம் விசேஷமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தக் கிரமம் கடினமா யிருத்தலின் பிரஹ்மவித்தியாபரணத்தின் எளிய கிரமமாக அந்நியதாக்கியாதி வாதத்தின் நீக்கப்படுந்தன்மை சொல்லப்பட்டது. ஆதலால், அந்நியதாக்கியாதி அசங்கதமாம்.

162—178. அக்கியாதி வாதத்தின் கிரமமும் கண்டனமும்

162. அக்கியாதி வாதியின் தாற்பரியம்.

அங்ஙனமே அக்கியாதிவாதமும் அசங்கதமாம். அக்கியாதி வாதம் பிரபாகராதராம். இது அவரது அபிப்பிராயம்:—அந்நிய சாஸ்திரங்களில் யதார்த்த அயதார்த்த மென்னும் பேதத்தால்

இருவகை ஞானம் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றது. யதார்த்த ஞானத்தினுல் பிரவிருத்தி நிவிருத்திகள் பயனுடையனவாம். அயதார்த்த ஞானத்தினுல் பிரவிருத்தி நிவிருத்திகள் பயனில்லாதனவாம். இச் சகல சாஸ்திரங்களின் எழுத்தும் அசங்கதமாம். ஏனெனின், அயதார்த்த ஞானம் அப்பிரசித்தமாம். சகல ஞானங்களும் யதார்த்தமேயாம். அயதார்த்த ஞானமும் உளதாயின் புருஷனுக்கு ஞான முண்டாகவே ஞானத்தன்மைச் சாமாநிய தர்மத்தைக் கண்டு, உற்பத்தியான ஞானத்தில் அயதார்த்தத்தின் சந்தேக முண்டாய்ப் பிரவிருத்தி நிவிருத்திகளின் அபாவ முண்டாகும். ஏனெனின், ஞானத்தில் யதார்த்தத் தன்மை நிச்சயம் அயதார்த்தத்தன்மைச் சந்தேகம் என்பவற்றின் அபாவம் புருஷனது பிரவிருத்தி நிவிருத்திகளுக்கு ஏதுவாம். அயதார்த்தத்தன்மையின் சந்தேகம் உளதாயின் இரண்டும் சம்பவியா. அயதார்த்த ஞானத்தினை அங்கீகரியாவிடின், அப்போது உற்பத்தியாகிய ஞானத்தில் முற்கூறிய சந்தேக முண்டாகாது.

ஏனெனின், எந்த ஞானமாவது அயதார்த்த மாகுமாயின், அதன் ஞானத்தன்மைத் தர்மத்தினுல் சஜாதீயத்தன்மையினைத் தனது ஞானத்திற் கண்டு அயதார்த்தத்தன்மைச் சந்தேக முண்டாகும். அவ் வயதார்த்த ஞானமோ இருப்பதில்லை. சகல ஞானங்களும் யதார்த்தமேயாம். ஆதலால், ஞானத்தில் அயதார்த்தத்தன்மைச் சந்தேக முண்டாகிறதில்லை. இவ்வாற்ருல் பிரமஞானம் அப்பிரசித்தமாம். யாண்டுச் சுத்தியில் இரஜத விருப்புடையோனுக்குப் பிரவிருத்தியும் பயத்திற் கேதுவாகிய இரஜ்ஜுவினின்றும் நிவிருத்தியும் உண்டாகின்றதோ, ஆண்டும் இரஜதத்தினது பிரத்தியக்ஷ ஞானமும் சர்ப்பத்தின் பிரத்தியக்ஷ ஞானமு மில்லை. இரஜதத்தின் பிரத்தியக்ஷ ஞானமும் சர்ப்பத்தின் பிரத்தியக்ஷ ஞானமும் முற்கூறியவிடத்தி லிருக்குமாயின் யதார்த்தமோ சம்பவியாது; ஆதலால், அயதார்த்தமாம். அந்த அயதார்த்த ஞானம் பொய்யாம். ஆதலால், முற்கூறியவிடத்தில் இரஜத சர்ப்பங்களின் பிரத்தியக்ஷ ஞானமில்லை. ஆனல், இரஜதத்தின் ஸ்மிருதி ஞானமும், சுத்தியின் இதுவெனும் வடிவத்தால் சமாநிய ஞானமாகிய பிரத்தியக்ஷமுமிருக்கின்றன. அங்ஙனமே, முன் அநுபவிக்கப்பட்ட சர்ப்பத்

தின் ஸ்மிருதி ஞானமும், சாமாநிய ஆதலாலனும் வடிவத்தால் இரஜ்ஜுவின் பிரத்தியக்ஷ ஞானமு மிருக்கின்றன. சுத்தியி னேடும் அங்ஙனமே இரஜ்ஜுவினேடும் தோஷத்தோடு கூடிய நேத்திரத்தின் சம்பந்த முண்டாகின்றது. ஆதலால், சுத்தியின் விசேஷவடிவமும், அங்ஙனமே இரஜ்ஜுவின் விசேஷ வடிவ மும் விளங்குகிறதில்லை. ஆனல், சாமாநிய வடிவமாகிய இதந் தை விளங்குகின்றது.

சுத்தியினேடு நேத்திரத்தின் சம்பந்த ஜந்நியஞானம் உண் டாய், இராஜதத்தின் சம்ஸ்காரம் உற்புத்தமாய்ச் சுத்தியின் சாமாநிய ஞானத்திற்கு அடுத்தகணத்தில் இராஜதத்தின் ஸ்மி ருதி உண்டாகின்றது. அங்ஙனமே இரஜ்ஜுவின் சாமாநிய ஞானத்திற்கு அடுத்தக்ஷணத்தில் சர்ப்பத்தின் ஸ்மிருதி உண்டா கின்றது. சகல ஸ்மிருதி ஞானங்களிலும் பதார்த்தங்களின் அதுவெனுந்தன்மையும் தோற்றுகின்றது. என்றாலும் தோஷத் தோடுகூடியநேத்திரத்தின் சம்பந்தத்தால் சம்ஸ்காரம் உற்புத்த மாம். ஆண்டுத் தோஷத்தின் மகாத்மியத்தால் அதுவெனுந் தன்மை அம்சத்தின் பிரமோஷம் (லோபம்) உண்டாகின்றது. ஆதலால், பிரமுஷ்ட அதுவெனுந் தன்மைகளின் ஸ்மிருதி உண்டாகின்றது. பிரமுஷ்டமென்பது லுப்தமாய் (மறைந்து) இருப்பதாம். அதுவெனுந்தன்மை எதற்கு உளதோ, அது பிர முஷ்ட அதுவெனுந்தன்மை யுடையதெனும் சொல்லின் பொரு ளாம்.

இவ்வாற்றால் "இது இரஜதம், இது சர்ப்பம்" என்றல் முதலிய ஸ்தலங்களில் இரண்டு ஞான முண்டு. ஆண்டுச் சுத்தி இரஜ்ஜுக்களின் சாமாநிய இதுவெனும் வடிவத்தின் பிரத்தி யக்ஷ ஞானம் யதார்த்தமாம். இராஜதத்தின் அங்ஙனமே சர்ப் பத்தின் ஸ்மிருதி ஞானமும் யதார்த்தமாம். விசேஷமாகிய சுத்தி இரஜ்ஜுபாகங்களை விட்டுப் பிரத்தியக்ஷ ஞானமும், அதுவெனுந் தன்மைப் பாகமின்றிய ஸ்மிருதிஞானமும் உண்டாயிருக்கின்றன. என்றாலும் ஒரு பாகத்தை விடுதலால் ஞானம் அயதார்த்த மாகிறதில்லை. ஆனல், அந்நிய வடிவத் தால் ஞானத்தினை அயதார்த்த மென்பர். ஆதலால், முற்கூறிய ஞானம் யதார்த்தமாம்; அயதார்த்தமன்று. இவ்வாற்றால் பிரம ஞானம் அப்பிரசித்தமாம்.

163. அக்கட ... ரிக்க ... தி பிறரால் செய்யப்பட்ட சங்கையை நிவர்த்தித்தல்

வேறு சாஸ்திரகாரர் இவ்வாறு கூறுவர். எப் பதார்த்தத்தில் இஷ்டசாதனத் தன்மை (விரும்பப்பட்டதற்கு ஏதுவாந்தன்மை ஞானம் உண்டாகின்றதோ, அதனிடத்துப் பிரவிருத்தி உண்டாகின்றது. எதனிடத்தில் அநிஷ்ட சாதனத்தன்மை ஞானம் (விரும்பப்படாததற்கு ஏதுவாந்தன்மையின் உணர்ச்சி) உண்டாகின்றதோ, அதனின்றும் நிவிருத்தி உண்டாகின்றது. அக்கியாதிவாதியின் மதத்தில் சுத்தியில் இஷ்டசாதனத்தன்மை ஞானத்தைக் கூறின் பிரமத்தின் அங்கீகார முண்டாகும். ஆதலால், இஷ்டசாதனத்தன்மை ஞானத்தின் அபாவத்தால் சுத்தியில் இரஜத விருப்புடையோனுக்குப் பிரவிருத்தி உண்டாகலாகாது. அங்ஙனமே இரஜ்ஜுவில் அநிஷ்டசாதனத்தன்மையில்லை. அதன் ஞானத்தை அங்கீகரிக்கின் பிரமத்தின் அங்கீகார முண்டாகும். ஆதலால், அநிஷ்ட சாதனத்தன்மை ஞானத்தின் அபாவத்தால் நிவிருத்தி உண்டாகலாகாது. ஆதலால், பிரமஞானம் ஆவசியகமாமெனக் கூறுகின்றனர். அதற்கு இவ்வாறு அக்கியாதிவாதி சமாதானஞ் செய்கின்றார்:—

எந்தப் பதார்த்தத்தில் புருஷனது பிரவிருத்தி உண்டாகின்றதோ, அந்தப் பதார்த்தத்தின் சாமாநியவடிவமான பிரத்தியக்ஷ ஞானமும், இஷ்ட பதார்த்தத்தின் ஸ்மிருதியும், ஸ்மிருதியின் விஷயத்தினும் முன்னிடத்துள்ள பதார்த்தத்தின் பேதஞானுபாவமும், அங்ஙனமே ஸ்மிருதி ஞானத்திற்கு முன்னிருப்பதின் ஞானத்தினும் பேதஞானமின்மையுமாகிய இத்துணைச் சாமக்கிரிகள் பிரவிருத்திக்கு ஏதுவாம். ஆதலால், பிரமஞானமின்றிப் பிரவிருத்தி சம்பவிக்கின்றது. விஷயத்திற்கும் ஞானத்திற்கும் உள்ள பேதஞானமின்மையே பிரவிருத்தியில் ஏதுவாமெனக் கூறின், உதாசீனதசையில் பிரவிருத்தி உண்டாதல் வேண்டும். விஷயத்தின் சாமாநிய ஞானத்தோடு கூடிய இஷ்டத்தின் ஸ்மிருதியே பிரவிருத்திக்குக் காரணமெனக் கூறின், "தேசாந்தரத்தி லுள்ள அவ் விரஜதம் கிஞ்சித்து இது" என்றிவ்வாறு தேசாந்தர சம்பந்தி வடிவமாக இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாய்ச் சுத்தியின் ஞானம் கிஞ்சித்தென்னும் வடிவான் உண்டாகுமாயின், ஆண்டும் இரஜத விருப்புடையோனுக்குப்

பிரவிருத்தி உண்டாதல்வேண்டும். ஆதலால், இஷ்டபதார்த்தத்தோடு விஷயத்தின் பேதஞானம் இன்மையும் பிரவிருத்திக்கு ஏதுவாம். முற்கூறிய ஸ்தலத்தில் இஷ்டமாகிய இரஜதத்திற்குச் சுத்தியோடு பேதஞான மிருக்கின்றது; அதன் அபாவமில்லை. ஆதலால், பிரவிருத்தி உண்டாகிறதில்லை. இஷ்டபதார்த்தத்திற்கு முன்னிருப்பதனோடு பேதஞான மின்மையைப் பிரவிருத்தியின் சாமக்கிரியில் சேர்த்து, இரண்டு ஞானங்களுக்கும் பேதஞான மின்மை இல்லை யெனக் கூறின், இது இரஜத மென்பதாக இரண்டுஞான முண்டாய், இதுவெனும் பதார்த்தத்தின் பிரத்தியக்ஷ ஞானம் எனக்குண்டா யிருக்கின்றது, இரஜதத்தின் ஸ்மிருதிஞானமும் உண்டாயிருக்கின்றதென்பதாக இரண்டு ஞானங்களின் பேதஞான முண்டாகும், அல்லது இதுவெனும் பதார்த்தத்தின் ஞானமும் இரஜதபதார்த்தத்தின் ஞானமும் எனக் கொன்றற்கொன்று பின்னமாயுண்டாயிருக்கின்றன என்பதாகப் பேதஞான முண்டாகும். ஆண்டும் விஷயத்தின் பேதஞான மில்லை. இதனாற் பிரவிருத்தி உண்டாதல் வேண்டும். ஆதலால், ஞானத்தின் பேதஞான மின்மையையும் பிரவிருத்தி சாமக்கிரியில் சொல்லுதல் வேண்டும்.

முற்கூறிய விடத்தில் முன்னிருப்பதின் சாமாநியஞானமும் இஷ்ட ரஜதத்தின் ஸ்மிருதியும் இருக்கின்றன. அங்ஙனமே முன்னிருப்பதனோடு இஷ்ட ரஜதத்தினது பேதஞானத்தின அபாவமு மிருக்கின்றது. ஆனால், இரண்டு ஞானங்களின் பேதஞான மிருக்கின்றது; அதனபாவ மில்லை. இவ்வாற்றால் இரண்டுவகைப் பேதஞானத்தோடு கூடிய இஷ்ட ஸ்மிருதியோடுள்ள முன்னிருப்பதின் சாமாநிய ஞானம் பிரவிருத்திக்கு ஏதுவாம். அந்த முன்னிருப்பதாகிய சுத்தியின் இதுவெனும் வடிவ சாமாநிய ஞானம் யதார்த்தமாம். ஆதலால், பிரமத்தின் அங்கீகாரம் நிஷ்பலமாம்.

யாண்டுச் சுத்தியில் இரஜதத்தின் பேதஞான முண்டாகின்றதோ, ஆண்டு இரஜத விருப்புடையோனுக்கும் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. சுத்திஞானத்தில் இரஜதஞானத்தின் பேதத்தைக் கொள்ளுதல் உண்டாகுமிடத்தும் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. ஆதலால், பேதஞானம் பிரவிருத்தியின் பிரதிபந்தகமாம். பிரதிபந்தகத்தின் அபாவம் காரண மாகின்றது.

ஆதலால், பேதஞானத்தின் அபாவத்தில் பிரவிருத்தியின் காரணத்தன்மையை அங்கீகரித்தலில் அப்பிரசித்த கற்பனை யின்று.

யாண்டு இரஜ்ஜு தேசத்தினின்றும் பயகாரணத்தினுல் ஓடுதல் உண்டாகின்றதோ, ஆண்டும் சர்ப்பப்பிரம முண்டாகிறதில்லை. ஆனுல், துவேஷத்தைக் கோசரிக்கும் சர்ப்பத்தின் ஸ்மிருதியும், இரஜ்ஜுவின் சாமானிய ஞானமும், அங்ஙனமே ஞானத்திற்கும் அதன் விஷயத்திற்கும் உள்ள பேதஞான மின்மையும் ஓட்டத்திற்குக் காரணமாம். ஓடுதலும் பிரவிருத்தி விசேஷமாம். ஆனுல், அந்தப் பிரவிருத்தி விஷயத்தின் எதிர்முகமன்று; ஆனுல், புறமுகப் பிரவிருத்தியாம். புறமுகப் பிரவிருத்தியில் துவேஷ கோசரத்தின் ஸ்மிருதி ஏதுவாம். எதிர்முகப்பிரவிருத்தியில் இச்சையின் கோசரத்தினது ஸ்மிருதி ஏதுவாம். இவ்வாற்றுல் பயத்தாற் ரேன்றிய ஓடுதல்முதலிய கிரியை யுண்டாயின், அதனைப் பிரவிருத்தி யென்க அல்லது நிவிருத்தி யென்க. அதற்கு ஏது துவேஷ கோசர பதார்த்தத்தின் ஸ்மிருதியாம். யாண்டுச் சுத்தி ஞானத்தினுல் இரஜத விருப்புடையோனது பிரவிருத்தியின் அபாவ வடிவ நிவிருத்தி உண்டாகின்றதோ, ஆண்டு அதற்கேதுவோ சுத்தி ஞானமாம். அதுவும் பிரம மன்று.

யாண்டுச் சத்திய ரஜதத்தில் இரஜத விருப்புடையோனுக்குப் பிரவிருத்தி உண்டாகின்றதோ, ஆண்டு இரஜதத்தன்மை விசிஷ்ட இரஜதத்தின் ஞானமே இரஜத விருப்புடையோனது பிரவிருத்திக்கு ஏதுவாம். முன்னிருப்பதாகிய சத்திய ரஜதத்தில் இரஜதத்தின் பேத ஞானுபாவம் பிரவிருத்திக்கு ஏதுவன்று. ஆதலால், விசிஷ்டஞானத்தில் பிரவிருத்தியை உண்டுபண்ணுந் தன்மைக்கு முற்றும் லோபமில்லை. ஏனெனின், யாண்டுச் சத்திய ரஜத மிருக்கின்றதோ, ஆண்டு முன்னிருப்பதாகிய இரஜதத்தில் இரஜதத்தின் பேத ஞானுபாவமே பிரவிருத்திக்கு ஏதுவெனக் கூறின் சம்பவியாது. பிரதியோகி பிரசித்தமாயின் அதன் அபாவம் வியவகார கோசரமாகும். அப்பிரசித்தப் பிரதியோகியின் அபாவம் வியவகார யோக்கியமன்று.

எங்ஙனம்: முயற்கோட்டினது அபாவத்தின் பிரதியோகி அப்பிரசித்தமாதலால், முயற்கோட்டின் அபாவமும் பொய்யாம். பொய்ப் பதார்த்தத்தினுல் ஒரு வியவகாரமு முண்டாகிறதில்லை. கேவல சப்தப்பிரயோகமும் விகற்பவடிவ ஞானமுமோ

பொய்ப் பதார்த்தத்திற்கு உண்டாகின்றது. பொய்ப் பதார்த்தத்தில் காரணத்தன்மை காரியத்தன்மை நித்தியத்தன்மை அநித்தியத்தன்மை முதலிய வியவகார முண்டாகிறதில்லை. ஆதலால், பிரசித்தபதார்த்தத்தின் அபாவமே வியவகார யோக்கிய மாகின்றது. அப்பிரசித்தத்தின் அபாவம் எந்த வியவகாரத்திற்கும் யோக்கிய மன்று; அதனால் பொய்யாம்.

சத்திய ரஜதத்தில் இரஜதத்தின் பேத மில்லை. ஆதலால், சத்திய ரஜதத்தில் இரஜதத்தின் பேதஞானம் சம்பவியாது. பிரமஞானத்தை அங்கீகரிக்கின், சத்திய இரஜதத்தில் இரஜதத்தின் பேதஞானம் சம்பவிக்கும். அக்கியாதி வாதியின் மதத்தில் பிரமஞானம் அப்பிரசித்தமாம். ஆதலால், சத்திய ரஜதத்தில் இரஜதத்தின் பேதஞானம் சம்பவிக்கிறதில்லை.

இவ்வாற்றால் சத்திய ரஜதத்தில் இரஜதப் பிரதியோகியினையுடைய பேத ஞானவடிவப் பிரதியோகியின் சம்பவ மின்மையால், சத்தியரஜதத்தில் இரஜதப் பிரதியோகியினையுடைய பேதஞானத்தின் அபாவம் பொய்யாம். அதனிடத்துப் பிரவிருத்தியை உண்டுபண்ணுந் தன்மை சம்பவியாது. ஆதலால், சத்திய இரஜத ஸ்தலத்திலுள்ள முன்னிருக்கு மிடத்தில் இரஜதத்தன்மை விசிஷ்ட ரஜதமிருக்கின்றதென்னும் விசிஷ்டஞானமே இரஜத விருப்புடையோனுக்குப் பிரவிருத்திக்கு ஏதுவாம். அக்கியாதிவாதத்தில் பிரமஞானமோ இல்லை. சகலஞானமும் யதார்த்தமாம். என்றாலும் சிலவிடத்துப் பிரவிருத்தி பயனுடையதாகின்றது. இதற்கு ஏது கூறுதல்வேண்டும். அதனிடத்து இது ஏதுவாம். விசிஷ்டஞான ஜந்நியப் பிரவிருத்தி ஸபலமாகின்றது. பேதஞானபாவ ஜந்நியப் பிரவிருத்தி நிஷ்பல மாகின்றது. இரஜத தேசத்திலும் பேதஞானபாவ ஜந்நியப் பிரவிருத்தியைக் கூறின், சகலமும் சமப்பிரவிருத்தி யாதல்வேண்டும். ஆதலால், ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுவது விசிஷ்ட ஞானமெனக் கொள்ளுதல் வேண்டும்.

யாண்டுச் சத்திய ரஜதத்தில் இரஜதார்த்தியின் பிரவிருத்தி உண்டாகவில்லையோ, ஆண்டுப் பிரவிருத்தி யபாவவடிவ நிவிருத்தி இருக்கின்றது. அதற்கு ஏது இரஜதத்தன்மை

விசிஷ்ட இரஜத ஞானபாவமாம். ஆண்டும் பிரமவடிவ இரஜதர் பாவஞான மில்லை. ஏனெனின், பிரவிருத்தி நிவிருத்தி ஒன்றற் கொன்று பிரதியோகி அபாவ வடிவமாம். பிரவிருத்தி வடிவப் பிரதியோகிக்கு ஏது இரஜதத்தன்மை விசிஷ்ட இரஜத ஞான மாம். பிரவிருத்தியின் அபாவ வடிவ நிவிருத்திக்கு ஏது இரஜ தத்தன்மை விசிஷ்ட ரஜதஞானத்தின் அபாவமாம். இவ்வாற் ருல் அக்கியாதிவாதத்தில் விஷயமும் இருப்பதில்லை. விஷயார் த்திக்குப் பிரவிருத்தி உண்டாகின்றது. அதற்கேது இஷ்டத் தின் ஸ்மிருதி முதலியனவாம்; விசிஷ்டஞான மன்று.

யாண்டுச் சுத்திதேசத்தில் இது இரஜத மென்னும் ஞானம் உண்டாகின்றதோ, அது ஒரு ஞானமன்று. சுத்தியின் இதுவெனும் வடிவ சாமாநியஞானம், இரஜதத்தின் பிரமுஸ்ட அதுவெனுந் தன்மையினையுடைய ஸ்மிருதியுள. இவ்விரண்டு ஞானங்களால் பிரவிருத்தி உண்டாகின்றது. ஆனல், பேத ஞானபாவ முண்டாயின் அப்போது பிரவிருத்தி உண்டாகின் றது. பேதஞான முண்டாயின் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. ஆதலால், ஞான மிரண்டோடு கூடிய பேதஞானபாவம் பிர விருத்திக்கு ஏதுவாம்.

அநேக நூல்களில் சம்பந்தமின்மையைக் கிரகித்தலின் இன்மையால் பிரவிருத்தி கூறப்பட்டிருக்கின்றது. அதன் பொருள் இதுவாம்:—சுத்தியில் இரஜதத்தன்மையின் சம்பந்த மின்மை இருக்கின்றது. அங்ஙனமே இரஜதத்தின் தாதாத்மிய சம்பந்தமும் இதுவெனும் பாதார்த்தத்தி லில்லை. இவ்வாறு எவ னுக்கு ஞான முண்டாகின்றதோ, அவனுக்குப் பிரவிருத்தி உண் டாகிறதில்லை. ஆதலால், சம்பந்தமின்மையைக் கிரகித்தலின் அபாவம் பிரவிருத்திக்கு ஏதுவாம். இதனல் பேதத்தைக் கிர கித்தலின் அபாவத்திற்குச் சமான அர்த்தமே சித்தமாகின்றது. ஆனல், இவ்வாறு பிரவிருத்தி உண்டாயின் அது நிஷ்பலமாம்.

விஜயதேசத்தில் விஷய விருப்புடையோனுக்குப் பிர விருத்திக்கு ஏதுவாகிய விசிஷ்டஞான மிருக்கின்றது. விசிஷ்ட ஞானத்தினல் யாண்டுப் பிரவிருத்தி உண்டாகின்றதோ, ஆண்டு ஸபல மாகின்றது. பிரமஞானம் அப்பிரசித்தமாம். சகல ஞான மும் யதார்த்தமாம். யாண்டு ஞான மிரண்டினல் நிஷ்பலப் பிர விருத்தி உண்டாகுமோ, ஆண்டு ஞான மிரண்டினையுமே பிரம

மென்பர். இது பிரபாகராரது அக்கியாதிவாதமாம். ஞானத்துவ யத்தின் விவேகமின்மையும் இரண்டு விஷயங்களின் விவேகமின்மையும் அக்கியாதியெனும் சொல்லிற்குப் பாரிபாஷிகப் பொருளாம்.

164. அக்கியாதிவாதத்தின் கண்டனம்.

இம்மதமும் நலமுடையதன்று:—ஏனெனின், சுத்தியில் இராஜதப்பிரமத்தினால் பிரவிருத்தித்த புருஷனுக்கு இராஜதத்தின் இலாப முண்டாகிறதில்லை. அப்போது புருஷன், இராஜத சூனியவிடத்தில் இராஜதஞானத்தினால் எனக்கு நிஷ்பலப் பிரவிருத்தி யுண்டாயிற்றென்று கூறுகின்றான். இவ்வாற்றால் பிரமஞானம் அநுபவசித்தமாம். அதன் லோபம் சம்பவியாது. மருபூமியில் ஜலத்தின் பாத முண்டாயின், அப்போது இது கூறுகின்றான்:—

மரு பூமியில் மித்தியாஜலத்தின் பிரதீதி எனக்குண்டாயிற்றென்னும் பாதத்தினாலும் மித்தியாஜலமும் அதன் பிரதீதியு முண்டாகின்றன. அக்கியாதிவாதியின் கிரமமாகவோ, இராஜதத்தின் ஸ்மிருதி சுத்திஞானம் என்பவற்றின் பேதத்தைக் கிரகித்தலின்மையால், எனக்குச் சுத்தியினிடத்துப் பிரவிருத்தி உண்டாயிற்றென்னும் பாத முண்டாதல்வேண்டும். மரு பூமியின் பிரத்தியக்ஷத்தினாலும் ஜலத்தின் ஸ்மிருதியினாலும் எனக்குப் பிரவிருத்தி உண்டாயிற்று என்னும் பாத முண்டாதல் வேண்டும். விஷயமும் அங்ஙனமே பிரமஞானமுமாகிய இரண்டனையும் விட்டு அநேகவித விருத்தகற்பனை அக்கியாதி வாதத்திலிருக்கின்றது.

எங்ஙனமெனின்:—நேத்திர சையோக முண்டாய்த் தோஷத்தின் மகாத்மியத்தால் சுத்தியின் விசேஷ வடிவஞான முண்டாகவில்லை என்னும் கற்பனை விருத்தமாம். அங்ஙனமே அதுவெனுந் தன்மை அம்சத்தின் பிரமோஷத்தினால் ஸ்மிருதியின் கற்பனை விருத்தமாம். விஷயங்களுக்குப் பேத மிருக்கின்றது; தோற்றுகிறதில்லை. அங்ஙனமே ஞானங்களுக்குப் பேத மிருக்கின்றது, எப்போதும் தோற்றுகிறதில்லை என்னும் கற்பனை விருத்தமாம். இராஜதத்தின் பிரதீதிகாலத்தில் எதிர்முக விடத்தில் இராஜதப்பிரதீதி உண்டாகின்றது. இதனால் அக்கியாதி வாதம் அநுபவவிருத்தமாம்.

அக்கியாதிவாதியின் மதத்தில் இராஜதத்தின் பேதத்தைக் கிரகித்தல் பிரவிருத்திக்குப் பிரதிபந்தகமா யிருத்தலால், இராஜதத்தின் பேதத்தைக் கிரகித்தலின்மை எங்ஙனம் இராஜத விருப்புடையோனது பிரவிருத்திக்கு ஏதுவெனக் கொள்ளப்பட்டிருக்கின்றதோ, அங்ஙனமே சத்தியராஜத ஸ்தலத்தில் இராஜதத்தின் அபேதத்தைக் கிரகித்தல் நிவிருத்திக்குப் பிரதிபந்தகமென்பது அநுபவ சித்தமாம். ஆதலால், இராஜதத்தினது அபேதத்தைக் கிரகித்தலின் இன்மை நிவிருத்திக்கு ஏதுவாகும்.

இவ்வாற்றால் இராஜதத்தினது பேத ஞானத்தின் அபாவம் இராஜத விருப்புடையோனது பிரவிருத்திக்கு ஏதுவாம். இராஜதத்தினது அபேத ஞானத்தின் அபாவம் இராஜத விருப்புடையோனது நிவிருத்திக்கு ஏதுவாம். சுத்தி தேசத்தில் இது இராஜதமென்றிரண்டு ஞான முண்டாகின்றது. ஆண்டு அக்கியாதிவாதியின் மதத்தில் இரண்டு மிருக்கின்றன. ஏனெனின், சுத்தியில் இராஜதத்தின் பேதமோ இருக்கின்றது. ஆனால், தோஷபலத்தால் இராஜதத்தினது பேதத்தின் ஞானம் சுத்தியில் உண்டாகிறதில்லை. ஆதலால், பிரவிருத்திக்கு ஏது இராஜதத்தினது பேதஞானத்தின் அபாவமாம். சுத்தியில் இராஜதத்தின் அபேதமில்லை. அக்கியாதி வாதத்தில் பிரமத்தின் அங்கீகார மில்லை. ஆதலால், சுத்தியில் இராஜதத்தின் அபேதஞானம் சம்பவிக்கிறதில்லை,

இவ்வாற்றால் சுத்தியினால் இராஜத விருப்புடையோனுடைய நிவிருத்திக்கு ஏது இராஜதத்தினது அபேதஞானத்தின் அபாவமாம். இராஜத விருப்புடையோனுக்குச் சாமக்கிரி இரண்டுமாம். பிரவிருத்தி நிவிருத்திகளிரண்டும் ஒன்றற்கொன்று விரோதிகளாம். ஒருகாலத்தில் இரண்டும் சம்பவியா. இரண்டும் சம்பவியாமையால் இரண்டையும் விடின், அதுவும் (விடுதலும்) சம்பவியாது. ஏனெனின், பிரவிருத்தியின் அபாவமே இந்த ஸ்தானத்தில் நிவிருத்தி பதார்த்தமா மாகலின், பிரவிருத்தியை விடின் நிவிருத்திப்பெருக்கு உண்டாகின்றது. நிவிருத்தியை விடின் பிரவிருத்திப்பெருக்கு உண்டாகின்றது. இவ்வாற்றால் இரண்டையும் விடுதலினும், இரண்டையும் அநுஷ்டித்தலினும் சக்தியற்றவனான அக்கியாதிவாதி வியாகூலமடைந்து, வெட்கத்தினால் பிராணனை விடுவான். ஆதலால், அக்கியாதிவாதம்

மரணத்திற் கேதுவரம். இவ் வர்த்தத்தில் அநேகம் பக்ஷங்க ளுண்டு; கிலேச முண்டாமென் றறிந்து எழுதப்படவில்லை.

அக்கியாதிவாதியின் மதத்திலும் இச்சையின்றிப் பிரம ஞானத்தின் சாமக்கிரியின் பலத்தால் சித்த மாகின்றது. யாண் டுத் தூமமின்றிய வந்நியோடு கூடிய பர்வதத்தில் தூளிபடலத் தைக் கண்டு, வந்நிவியாப்பிய தூமமுடையது என்னும் பராமரி சம் உண்டாகின்றதோ, ஆண்டு வந்நியின் பிரமைவடிவ அநு மிதி உண்டாகின்றது. ஏனெனின், அநுமிதியின் விஷயமாகிய வந்நி பர்வதத்தில் இருப்பதாயிருக்கின்றது; ஆதலால் பிரமை யாம். அதற்கு ஏதுவான "வந்நிவியாப்பிய தூமமுடையது மலை" என்றிவ்வாறு பர்வதத்தில் வந்நிவியாப்பிய தூமத்தினது சம் பந்தத்தின் ஞானமோ அக்கியாதிவாதியின் மதத்தில் சம்ப விக்கிறதில்லை.

ஏனெனின், பர்வதத்தில் தூமத்தின் சம்பந்த மில்லை. பிரம ஞானத்தின் அங்கீகார முளதாயின், தூமசம்பந்தமின்றிய பர்வ தத்தில் தூமசம்பந்தத்தின் ஞான முண்டாகும். பிரமஞானத் தின் அங்கீகார மில்லை யாகலின், தூம மின்றியதில் தூமசம்பந் தத்தின் ஞானம் உண்டாகிறதில்லை. ஆதலால், பர்வதத்தில் தூமத்தின் சம்பந்த மின்மை ஞானத்தின் அபாவடிவ பாரமரிச மே முற்கூறிய அநுமிதிக்குக் காரணமாயிருத்தலின், சகல பக்ஷத்திலும் ஏதுவின் சம்பந்தமின்மை ஞானத்தினது அபாவ மே அநுமிதிக்குக் காரணமெனக் கொள்ளுதல்வேண்டும்.

யாண்டுப் பக்ஷத்தில் ஏதுவின் சம்பந்த மிருக்கின்றதோ, ஆண்டுப் பக்ஷத்தில் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவ மிருக் கின்றது. பக்ஷத்தில் ஏதுவின் சம்பந்தஞானமு மிருக்கின்றது. ஆனால், யாண்டு முற்கூறிய பர்வதத்தில் தூம மில்லாதிருந்து அநுமிதி உண்டாகின்றதோ, ஆண்டுப் பக்ஷத்தில் ஏதுவின் சம் பந்தஞானம் சம்பவிக்கிறதில்லை. ஏதுவின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவம் முழுவதும் சம்பவிக்கின்றது. ஆதலால், பக்ஷத்தில் ஏதுவின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவமே அநுமிதிக்குக் காரணமென அக்கியாதிவாதத்தில் சித்த மாகின் றது. ஆதலால், சொல்லப்படும் கிரமமாக கலக்கிரக (தொண்டை யைப் பிடித்தலெனும்) ஞாயத்தால் அக்கியாதிவாதியின் மதத் தில் அநுமிதிவடிவ பிரமஞானத்தின் சித்தி உண்டாகின்றது.

எங்ஙனமெனின்:—எங்ஙனம் வந்நியின் வியாப்பிய தூம மிருக்கின்றதோ, அங்ஙனமே இஷ்டசாதனத்தன்மையின் வியாப்பிய இரஜதத்தன்மை இருக்கின்றது. "யாண்டு யாண்டு இரஜதத்தன்மை ஆண்டாண்டு இஷ்டசாதனத்தன்மை" என்பதாக இரஜதத்தன்மையின் இஷ்டசாதனத் தன்மையின் வியாப்தி இருக்கின்றது. எதனிடத்தில் எதன் வியாப்தி உண்டாகின்றதோ, அது அதன் வியாப்பிய மாகின்றது. எதன் வியாப்தி உண்டாகின்றதோ அது வியாபக மாகின்றது.

இவ்வாற்ருல் இஷ்டசாதனத்தன்மை வியாபகமும் இரஜதத்தன்மை வியாப்பியமுமாம். வியாப்பியம் ஏதுவும், வியாபகம் சாத்தியமு மாகின்றன. இவ்வாறு அநுமானத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால், இரஜதத்தன்மை ஏதுவினுல் இஷ்டசாதனத்தன்மை வடிவ சாத்தியத்தின் அநுமிதி உண்டாகின்றது. இவ் வர்த்தமோ எல்லாருடைய மதத்தினும் விவாத மின்றியதாம். அந்நிய மதத்திலோ வியாப்பியமாகிய ஏதுவின் சம்பந்த ஞானத்தால் வியாபகமாகியபக்ஷத்தில் சாத்தியத்தின் அநுமிதி உண்டாகின்றது.

அக்கியாதிவாதத்தில், பக்ஷத்தில் வியாப்பிய ஏதுவின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவத்தால் சாத்தியத்தின் அநுமிதி உண்டாகின்றதென்னும் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், இது இரஜதம் என்பதாக யாண்டுச் சுத்தி தேசத்தில் ஞான முண்டாகின்றதோ, ஆண்டு இதுவெனும் பதார்த்தமாகிய சுத்தியில் இரஜதத்தன்மையின் ஞானமோ இல்லை. அங்ஙனமாயினும் இரஜதத்தன்மையினது சம்பந்தமின்மையின் ஞானமில்லை. ஆதலால், இரஜதத்தன்மையின் சம்பந்தமின்மையினது ஞானத்தின் அபாவ மிருத்தலால் இதுவெனும் பதார்த்த வடிவபக்ஷத்தில் இரஜதத்தன்மை வடிவ ஏதுவின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவத்தால் இஷ்ட சாதனத் தன்மை வடிவ சாத்தியத்தின் அநுமிதி இச்சையின்றிச் சாமக்கிரிபலத்தால் சித்த மாகின்றது. அந்த இதம்பதார்த்தத்தில் இஷ்டசாதனத்தன்மையின் அநுமிதி பிரமவடிவமாம். ஏனெனின், இதுவெனும் பதார்த்தம் சுத்தியாம். அதனிடத்து இஷ்டசாதனத்தன்மை இல்லை. இஷ்ட சாதனத்தன்மையின்றியதில் இஷ்டசாதனத்தன்மையின் அநுமிதி ஞானம் பிரமவடிவமாம்.

இவ்வாறு கலக்கிரக நியாயத்தால் அக்கியாதிவாதியின் மதத்தில் பிரமஞானத்தின் சித்தி உண்டாகின்றது. தூளிபடலத்தோடுகூடிய பர்வதத்தில் எந்தத் தூமத்தின் பராமரிசம் சொல்லப்பட்டதோ, ஆண்டுத் தூமத்தின் சம்பந்தஞானம் பர்வதத்தில் அங்கீகரிக்கின், தூமத்தின் சம்பந்தஞானமே பிரமவடிவமென்று கொள்ளுதல் உண்டாகின்றது. அப்பர்வதத்தில் தூமத்தின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவம் அநுமிதிக்கு ஏதுவெனக் கூறின், அந்த ஸ்தானத்திலோ பிரமஞானத்தின் அங்கீகாரத்தினாலும் நிர்வாக முண்டாயிற்று. ஆனால், சகல அநுமிதிகளிலும் ஏதுவின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவத்தினைக் காரணமெனக் கொண்டு, சுத்தியில் இரஜதத்தன்மையின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவத்தால் இஷ்டசாதனத்தன்மையின் பிரமவடிவ அநுமிதி சித்தமாயிற்று. இவ்வாற்றால் உபயதப்பாசா இரஜ்ஜு நியாய (உபயதஃபாசா ரஜ்ஜு ந்யாய) த்தால் (இரண்டு புறமும் கட்டியுள்ள கயிற்றுத் திருஷ்டாந்தத்தால்) அக்கியாதிவாதியின் மதத்தில் பிரமம் சித்தமாகின்றது.

இன்னும் அக்கியாதிவாதத்தில் தோஷ மிருக்கின்றது:— யாண்டுச் சாயமும் இரஜதமும் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, ஆண்டு அவற்றின் "இவை இரஜதம்" என்னும் ஞான முண்டாகின்றது. இந்த ஞானம் அந்நிய மதங்களின்படியோ சாய அம்சத்தில் பிரமமும், இரஜத அம்சத்தில் பிரமையுமாம். சாயத்திலும் அங்ஙனமே இரஜதத்திலும் இரஜதத்தன்மைத் தர்மத்தினை விஷயஞ் செய்கின்றது. ஆதலால், சாய அம்சத்தில் இரஜதத்தன்மை விசிஷ்டஞான மிருக்கின்றது. அக்கியாதிவாதியின் மதத்தில் பிரமஞானமோ இல்லை. முற்கூறிய ஞானமும் எல்லா அம்சங்களிலும் யதார்த்தமாம். ஆனால், இரஜத அம்சத்தில் இரஜதத்தன்மைச் சம்சர்க்கம் (சம்பந்தம்) கொள்கையாம். சாய அம்சத்தின் இதுவெனும் வடிவத்தான் ஞான மிருக்கின்றது. அதில் இரஜதத்தன்மையினது சம்பந்த மின்மையின் கொள்கையின்மை இருக்கின்றது. இவ்வாற்றால் பேதகற்பனம் அநுபவ விருத்தமாம். ஏனெனின், சாயத்திற்கும் இரஜதத்திற்கும் "இவை இரஜதம்" என்பதாக ஒருவடிவ எச்சரிப்பு உண்டாகின்றது. அதில் முற்கூறிய பேதத்தைச் சொல்லுதற் கிரமத்தினும்

விலக்ஷணமான உச்சரிப்பு உண்டாதல் வேண்டும். சாய அம்சத்தில் இராஜதத்தன்மையின் சம்பந்தக் கொள்கையோ பிரமத்தை அங்கீகரியாமையினால் சம்பவிக்கிறதில்லை. இராஜத அம்சத்திலும் இராஜதத்தன்மையின் சம்பந்தமின்மையினது கொள்கை இன்மையை அங்கீகரிக்கின் சம்பவிக்கின்றது.

ஏனெனின், இராஜதத்தில் இராஜதத்தன்மையினது சம்பந்தமின்மையின் கொள்கை யில்லை; ஆனால், சம்பந்தத்தின் கொள்கை இருக்கின்றது. ஆதலால், ஒரே வடிவ உச்சரிப்பும் சம்பவிக்கின்றது. ஆனால், யாண்டுப் பிரவிருத்தியின் விஷயம் எதிர்முக மாகின்றதோ, ஆண்டுச் சம்சர்க்க விசிஷ்டஞானத்தினால் பிரவிருத்தி உண்டாகின்றதென்னும் நியமம் முன் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் விடுபாடு உண்டாகும். இவ்வாறு கூறின், யாண்டுப் பிரவிருத்தியின் விஷயமாகிய இஷ்ட பதார்த்தமே எதிர்முகமாய் அநிஷ்ட பதார்த்தம் எதிர்முக மாகவில்லையோ, ஆண்டுச்சம்சர்க்க விசிஷ்டத்தின்ஞான முண்டாகின்றது.

எங்ஙனம்: கேவல இராஜதத்தின் இராஜதமென்னும் ஞானம் இராஜதத்தன்மை விசிஷ்டத்தின் ஞானமாம். அன்றியும், யாண்டு இஷ்டமான இராஜதம் அநிஷ்டமாகிய சாயம் இரண்டும் எதிர்முக மாகின்றனவோ, அநிஷ்ட பதார்த்தத்திற்கும் இஷ்டத்தினைப்போல இதுவெனும் வடிவ ஞானம் உண்டாகின்றதோ, ஆண்டு இஷ்டபதார்த்தத்திலும் இராஜதத்தன்மை விசிஷ்டஞான முண்டாகிறதில்லை. ஆனால், இராஜதத்தன்மையினது சம்பந்த மின்மை ஞானத்தின் அபாவ முண்டாகின்றது. இவ்வாறு கொள்ளுதலில் "இவை இராஜதம்" என்பதாகச் சமான உச்சரிப்பு சம்பவிக்கின்றது. இராஜத சாயங்களின் இதுவெனும் வடிவ சாமாநியஞான மிருக்கின்றது. அங்ஙனமே சாயத்தில் இராஜதத்தன்மையின் சம்பந்த மின்மையோ இருக்கின்றது. ஆனால், சம்பந்தமின்மையின் தோஷத்தால் ஞான மில்லை. ஆதலால், சாயத்தில் இராஜதத்தன்மையின் சம்பந்தமின்மை ஞானத்தின் அபாவ மிருக்கின்றது. இராஜதத்தில் இராஜதத்தன்மையின் சம்பந்தமின்மை யில்லையாகலின், சம்பந்தமின்மையின் ஞானத்தின் அபாவ மிருக்கின்றது. இதனால் ஏகாசமான உச்சரிப்பு சம்பவிக்கின்றது. ஆனால், முற்கூறியபடி இராஜதாம்சத்திலும் நிஷ்பலப் பிரவிருத்தி உண்டாதல் வேண்டும். ஆதலால், முற்

கூறிய இடத்தில் இரஜத அம்சத்தில் இரஜதத்தன்மை விசிஷ்டத்தின் ஞான மிருக்கின்றது. ஏனெனின், அக்கியாதிவாதியின் மதத்தில் பிரமஞானமோ இல்லை—எதனால் நிஷ்பலப் பிரவிருத்தி உண்டாகின்றதோ, அதனால் இஷ்டபதார்த்தத்தின் பேத ஞானத்தால் எந்தப் பிரவிருத்தி உண்டாகின்றதோ, அது நிஷ்பலமாகின்றது. விசிஷ்டஞானத்தால் ஸபலப்பிரவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், சாயமும் இரஜதமும், முன் இருப்பனவாய் "இது இரஜதம்" என்னும் ஞான முண்டாயின், ஆண்டு இரஜத சாயங்களின் ஞானம் இதுவெனும் வடிவமாகவோ சமமாம். ஆனால், இரஜதத்தின் இதுவெனும் அம்சத்தில் இரஜதத்தன்மை விசிஷ்டஞான மிருக்கின்றது. சாயத்தின் இதுவெனும் அம்சத்தில் இரஜதத்தன்மையினது சம்பந்தத்தின் கொள்கையின்மை இருக்கின்றது. அல்லது இரஜதத்தினது பேதத்தின் கொள்கையின்மை இருக்கிறது. யாண்டு இரஜதத்தன்மையின் சம்பந்தமின்மை இருக்கிறதோ, ஆண்டு இரஜதத்தின் பேத மிருக்கிறது. ஆதலால், இரஜதத்தன்மையினது சம்பந்த மின்மையின் கொள்கையின்மை என்றும், இரஜத பேதத்தின் கொள்கையின்மை யென்றும் சொல்லுதலில் பொருட்பேத மில்லை. இவ்வாற்றால் அக்கியாதிவாதத்தில் "இவ்விரண்டும் இரஜதம்" என்னுமிடத்தில் சமான உச்சரிப்பு சம்பவிக்கிறதில்லை. ஆதலால், அக்கியாதிவாதம் அசங்கதமாம்.

165. பிரமஞானவாதியின் மதத்திற் கூறிய தோஷத்தின் அசம்பவம்

பிரமஞானத்தை அங்கீகரிப்பவர்களது மதத்தில் தோஷம் சொல்லப்பட்டிருக்கிறது:— பிரமஞானமும் பிரசித்தமாயின், சகல ஞானங்களிலும் பிரமத்தன்மைச் சந்தேகத்தால் அசைவின்றிய பிரவிருத்தி உண்டாகாது என்பதாம். அதுவும் சம்பவியாது. ஏனெனின், அக்கியாதிவாதியின் மதத்தில் பிரமஞானமோ இல்லை. சகல ஞானமும் யதார்த்தமாம். ஆனால், ஞானத்தினால் பிரவிருத்தியோ சிலவிடத்து ஸபலமும், சிலவிடத்து நிஷ்பலமு மாகின்றது.

ஆதலால், பிரவிருத்தியில் ஸபலத்தன்மை நிஷ்பலத்தன்மைகளைச் சம்பாதிப்பதோ, ஞானங்களிலுள்ள விலக்ஷணத்

தன்மையாமென்று அக்கியாதிவாதிகளும் அங்கீகரித்திருக்கின்றனர். யாண்டுச் சம்சர்க்க விசிஷ்டஞானத்தினுல் பிரவிருத்தி உண்டாகின்றதோ அது ஸபல மாகின்றது. ஆதலால், ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுவதாகிய சம்சர்க்க விசிஷ்டஞானம் பிரமையாம். கிரகிக்கப்படாத பேதஞான மிரண்டினுல் நிஷ்பலப் பிரவிருத்தி உண்டாகின்றது. நிஷ்பலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுவன இரண்டு ஞானங்க ளாகின்றன. அந்த ஞானம் அப்பிரமையாம் விஷயங்களின் பாவாபாவங்களால் ஞானங்களில் பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைக ளில்லையாயினும், பிரவிருத்தியின் விலக்ஷணத்தன்மைக்கு ஏதுவாகிய பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைகளோ அக்கியாதிவாதிக்கும் இஷ்டமாம். அப்பிரமாத்தன்மைப் பெயரிேைடும் அக்கியாதிவாதிக்கு வித்துவேஷ . முண்டாயினும், கிரகிக்கப்படாத பேதஞான மிரண்டில் ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணும் ஞானத்திற்கு விலக்ஷணத்தன்மையோ அநுபவசித்தமாம்; அக்கியாதிவாதியும் அங்கீகரித்திருக்கின்றனர். ஆதலால், வியவகார பேதத்தின்பொருட்டு வேறு பெயரிடத்தக்கதா யிருக்கின்றது. ஆதலால், பிரசித்தமான பெயரினுலே வியவகாரம் செய்வது தகுதியாம்.

இவ்வாற்றல் பிரமஞானத்தின் அங்கீகார மின்மையினும், பிரமஸ்தானத்தில் நிஷ்பலப் பிரவிருத்தியை உண்டுபண்ணும் எந்தக் கிரகிக்கப்படாத பேதத்தினது யதார்த்த ஞானமும், ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணும் இரஜதத்தில் இரஜதத்தன்மை விசிஷ்டஞானமும் உண்டாகின்றனவோ, அவற்றில் ஞானத்தன்மை வடிவ சமானதர்மத்தைக் கண்டு இச் சந்தேகம் சம்பவிக்கின்றது.

எங்ஙனம் சுத்தியில் கிரகிக்கப்படாத பேதத்தினையுடைய இரண்டு ஞானங்க ளிருந்தும் அவற்றின் பேதம் கிரகிக்கப்படுகிறதில்லையோ, அங்ஙனமே இந்த ஞானமும் கிரகிக்கப்படாத பேதத்தினையுடைய இரண்டு ஞானவடிவமா? அல்லது பேதமின்றிய ஒன்று? கிரகிக்கப்படாத பேதத்தினையுடைய ஞானமிரண்டின் வடிவமாகுமாயின், இரஜதத்தின் லாபம் பிரவிருத்தியினுல் உண்டாகாது என்னும் சந்தேகத்தால் அக்கியாதிவாதத்திலும் அசைவின்றிய பிரவிருத்தி சம்பவியாது. ஆத

லால், அசைவின்றிய பிரவிருத்தியின் அசம்பவம் இரண்டு மதங்களிலும் சமானமாம். இவ்வாற்றால் அக்கியாதிவாதமும் அசங்கதமாம்.

166-181. பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைகளின் சொரூபமும், உற்பத்தியும், ஞானத்தின் தன்மையும்.

166. பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைகளின் சொரூபம்

அநிர்வசநீயக்கியாதியே தோஷமில்லாததாம்:—சத்கியாதிமுதலிய ஐவகை வாதத்தின் கண்டநம் விவரணமுதலிய நூல்களில் விஸ்தாரமாயிருக்கின்றது. ஈண்டு அவற்றின் தன்மை மாத்திரம் அறிவிக்கப்பட்டது. அக்கியாதிவாதி சித்தாந்த மதத்தில் அசைவின்றிய பிரவிருத்தியின் அசம்பவமாகிய தோஷம் கூறினர். அந்தத் தோஷத்தின் சம்பவம் அக்கியாதிவாதத்திலும் சொல்லப்பட்டது. ஆனால், தனது மதத்தில் பரிகாரஞ் செய்யவில்லை.

அதன் பரிகாரம் இதுவாம்:—எந்தப் பதார்த்தத்தின் எந்த ஞானம் உண்டாகின்றதோ, அந்த ஞானத்தில் அப்பிரமாத்தன்மை நிச்சயம் உண்டாயின், பிரவிருத்தி உண்டாகிறதில்லை. அப்பிரமாத்தன்மையின் சந்தேகமுண்டாயின், அசையோடு கூடிய பிரவிருத்தி உண்டாகின்றது. பிரமாத்தன்மையின் நிச்சயமுண்டாயின், அசைவின்றிய பிரவிருத்தி உண்டாகின்றது. இதனாற்றான் பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைகளின் சொரூபத்தையும், அவற்றின் உற்பத்தியையும், அவற்றின் ஞானத்தின் பிரகாரத்தையும் சொல்லுவாம்.

பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைகளின் சொரூபம் முன் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்மிருதிக்கு வேறாய்ப் பாதிக்கப்படாத அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானம் எதுவோ அது பிரமையாம். அதனின் வேறாகிய ஞானம் அப்பிரமையாம். இங்ஙனம் கூறுதலால் இது அறியப்படுகின்றது:—ஸ்மிருதிக்குப் பின்னமாய்ப் பாதிக்கப்படாத அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானத்தின் தர்மம் எதுவோ, அது பிரமாத்தன்மையாம். அதற்கந்நியமான ஞானத்தின் தர்மம் அப்பிரமாத்தன்மையாம்.

என்றாலும் முற்கூறிய பாரிபாஷிகப் பிரமாத்தன்மை ஸ்மிருதியிலில்லை. பிரவிருத்தியின் உபயோகியாகிய பிரமாத்தன்மையினை ஸ்மிருதியிலும் அங்கீகரித்தல்வேண்டும். ஏனெனின், ஸ்மிருதி ஞானத்தினாலும் புருஷனது பிரவிருத்தி உண்டாகின்றது. எந்த ஸ்தானத்தில் நிலைத்துள்ள இஷ்ட பதார்த்தத்தின் ஸ்மிருதி உண்டாகின்றதோ, அந்த ஸ்தானத்தில் புருஷனது பிரவிருத்தி உண்டாகின்றது. ஸ்மிருதி ஞானத்தில் பிரமாத்தன்மையின் நிச்சயம் உண்டாயின் அசைவின்றிய பிரவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், பிரவிருத்தியின் உபயோகியான பிரமாத்தன்மை ஸ்மிருதியிலு மிருக்கின்றது. ஆதலால், முற்கூறிய சொரூபம் பிரமாத்தன்மையினும் வேறுவித பிரமாத்தன்மையின் சொரூபத்தைச் சொல்லுதல்வேண்டும். சகல சாஸ்திரங்களிலும் ஸ்மிருதிக்கு வேறாகிய ஞானத்தில் அநுபவ வியவகாரத்தைச் செய்கின்றனர். சம்ஸ்கார ஜந்நிய ஞானத்தில் ஸ்மிருதி வியவகாரத்தைச் செய்கின்றனர். யதார்த்த அநுபவத்தில் பிரமை வியவகாரத்தைச் செய்கின்றனர். அதற்கு வேறாகியதில் அப்பிரமை வியவகாரத்தைச் செய்கின்றனர். இவ்வாற்றால் ஞானத்தன்மைத் தர்மமோ சகல ஞானத்திலு மிருத்தலால் வியாபகமாம். அநுபவத்தன்மை ஸ்மிருதித்தன்மை ஞானத்தன்மையின் வியாப்பியமாம்; ஒன்றற்கொன்று விரோதிகளாம். அங்ஙனமே பிரமாத்தன்மைத் தர்மமும் அநுபவத்தன்மையின் வியாப்பியமாம்.

ஏனெனின், அநுபவத்தன்மையோ யதார்த்தாநுபவ அயதார்த்தாநுபவங்களில் இருக்கின்றது. பிரமாத்தன்மைத் தர்மம் யதார்த்த அநுபவத்திலேயே இருக்கின்றது. ஆதலால், அநுபவத்தன்மையின் வியாப்பியம் பிரமாத்தன்மையாம். அங்ஙனமே யதார்த்தத் தன்மைக்கும் பிரமாத்தன்மை வியாப்பியமாம். ஏனெனின், யதார்த்தத்தன்மையோ சத்தியபதார்த்தத்தின் ஸ்மிருதியிலு மிருக்கிறது. ஸ்மிருதியில் பிரமாத்தன்மை இருக்கிறதில்லை. ஆதலால், யதார்த்தத்தன்மைக்கும் பிரமாத்தன்மை வியாப்பியமாம். இது சாஸ்திரகாரர்களது பரிபாஷையாம். இதை அநுசரித்த பிரமைக்கு, ஸ்மிருதிக்கு வேறாய்ப் பாதிக்கப்படாத அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானம் பிரமை எனப்படுகின்றதென்னும் லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கின்றது.

எந்தப் பிரமாத்தன்மையின் ஞானத்தினால் புருஷனுக்கு அசைவின்றிய பிரவிருத்தி உண்டாகின்றதோ, அத்தன்மைய பிரமாத்தன்மையை ஸ்மிருதியிலும் அங்கீகரித்தல் வேண்டும். ஆதலால், இந்தப் பிரசங்கத்தில் யதார்த்தத்தன்மையின் வியாப்பியம் பிரமாத்துவ மன்று. ஆனால், யதார்த்தத்தன்மையின் பெயரே பிரமாத்தன்மையாம். முற்கூறிய பாரிபாஷிகப் பிரமாத்தன்மையோ ஸ்மிருதியி லில்லை. யதார்த்தத்தன்மை இருக்கின்றது. ஆதலால், முற்கூறிய பிரமாத்தன்மை யதார்த்தத்தன்மை வடிவமன்று; ஆனால், அதனின் வேறும். அதனின் அற்பதேசத்திருப்பதா யிருத்தலின் யதார்த்தத்தன்மையின் வியாப்பியமாம். பிரவிருத்திக்கு உபயோகமுள்ள பிரமாத்தன்மை விசாரிக்கத் தக்கதாம். அது ஸ்மிருதி சாதாரணமாம். ஆதலால், யதார்த்தத்தன்மையினும் அற்பதேசத்திருப்பதன்று. ஆனால், யதார்த்தத்தன்மை வடிவமே பிரமாத்தன்மையாக விசாரிக்கத் தக்கதாம்.

ஸ்மிருதி ஞானத்தில் பிரமை வியவகாரத்தினால் முற்றும் வித்துவேஷ முண்டாயின், பிரமாத்தன்மை ஞானத்தால் அசைவின்றிய பிரவிருத்தி உண்டாகின்றதென்னும் வாக்கியத்தினை விட்டு, யதார்த்தத்தன்மை ஞானத்தினால் அசைவின்றிய பிரவிருத்தி உண்டாகின்றதென்னும் வாக்கியத்தினைக் கூறுக. இவ்வாற்றால் இப் பிரசங்கத்தில் பிரமாத்தன்மைகளுக்கு ஒரே பொரு ளிருக்கின்றது. ஆதலால், இந்தப் பிரசங்கத்தில் யதார்த்தத்தன்மைத் தர்மத்திற்குப் பிரமாத்தன்மைச் சப்தத்தால் வியவகார மிருக்கின்றது.

167. நியாயவைசேஷிக மதத்தில் ஞானத்தை உண்டுபண்ணும் சாமக்கிரிக்குப் புறம்பாகிய சாமக்கிரியினால் பிரமாத்துவ அப்பிரமாத்துவங்கள் உற்பத்தியாதல் (பிறிதாற் பிராமாணிய வாதமும் பிறிதால் அப்பிராமாணிய வாதமும்).

நியாயசாஸ்திரத்தின் மதத்தில் ஞானத்தை உண்டுபண்ணும் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகிறதில்லை. ஞானத்தின் ஞாபகஞ்செய்யும் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் ஞானம் உண்டாகிறதில்லை. இதனைப் பிறிதாற் பிராமாணியவாத மென்பர். இப் பிரசங்கத்தில் பிரமாத்தன்மைக்

குப் பிராமாணிய மென்று பெயர். பிறிதின் அதாவது அந்நியத்தினின்றும் பிராமாணியத்தின் உற்பத்தி உண்டாகின்றது. அந்நியத்தினின்றே பிராமாணியத்தின் ஞான முண்டாகின்றது. ஞானத்தின் சாமக்கிரிக்கு வேறாகிய சாமக்கிரி பிறிதென்னும் சொல்லுக்குப் பொருளாம்.

இதனால் இந்தநிச்சயம் உண்டாயிற்று:—ஞானத்தின் சாமக்கிரியினும் பிரமாத்தன்மையின் சாமக்கிரி வேறாம். ஞானத்தினது உற்பத்தியின் சாமக்கிரியான இந்திரிய அநுமானாதிகளோ முன் கூறப்பட்டிருக்கின்றன. அதனாற் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாயின் சகலஞானமும் பிரமையாதல்வேண்டும். அப்பிரமா ஞானத்திற்கு லோப முண்டாகும். ஆதலால், ஞானத்தின் உற்பத்தி சாமக்கிரியினும் அதிக சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகின்றது. யாண்டு அதிக சாமக்கிரி இல்லையோ, ஆண்டு ஞானத்தில் பிரமாத்தன்மைத்தர்ம முண்டாகிறதில்லை. ஆதலால், பிரமாஞானத்திற்கு லோப மில்லை. அவ்வதிக சாமக்கிரி குணமாம். யாண்டுக் குணத்தோடு கூடிய இந்திரிய அநுமான முதலியவற்றால் ஞான முண்டாகின்றதோ, ஆண்டுப் பிரமை உண்டாகின்றது. குணமின்றிய இந்திரிய அநுமான முதலியவற்றானும் ஞான முண்டாயின், அது பிரமை யன்று. பிரத்தியக்ஷப் பிரமையின் உற்பத்தியில் விஷயத்தின் அதிக தேசத்தில் இந்திரியங்களின் சையோகம் குணமாம். சாத்தியத்தின் வியாப்பியமான ஏதுவின் சாத்தியமுடைய பக்ஷத்தில் உண்டாகும் ஞானம் அநுமிதிப்பிரமையின் உற்பத்தியில் குணமாம்.

யாண்டு வியபிசாரி ஏதுவின் ஞானம் பக்ஷத்தில் உண்டாகின்றதோ, ஆண்டு அநுமிதிஞானத்தின் சாமக்கிரி பக்ஷத்தில் ஏதுவின் ஞானமோ இருக்கின்றது; ஆனால், வியாப்பிய ஏதுவின் ஞானவடிவ குண மில்லை. ஆதலால், அநுமிதிப் பிரமை உண்டாகிறதில்லை. இவ்வாற்றால் ஞானத்திலிருக்கும் பிரமாத்தன்மைத் தருமத்தின் உற்பத்தியில் ஞானத்தை உண்டுபண்ணும் சாமக்கிரியினும்வேறு குணத்தின் அபேக்ஷை இருத்தலால், பிறிதாற் பிராமாணியத்தின் உற்பத்தி உண்டாகின்றது.

பிரமாத்தன்மையினைப்போல ஞானத்தின்கண் உள்ள அப்பிரமாத்தன்மைக்கும் பிறிதால் உற்பத்தி உண்டாகின்றது. ஏனெனின், பிரமாஞானம் தோஷஜந்நியமாமென்னும் வார்த்தை பிரசித்தமாம்; பிரமாஞானத்தில் தோஷம் ஏதுவன்று. ஆத

லால், ஞானத்தின் சாமக்கிரியினும் தோஷம் புறத்ததாம். அந்தத் தோஷம் அநந்தவிதமாம். இவ்வாற்றால் ஞான சாமக்கிரியினும் தோஷம் பிறிதாம். பின்னத்தைப் பிறிதென்பர். அதனால் அப்பிரமையின் உற்பத்தி உண்டாகுதலால் பிறிதால் அப்பிராமாணியத்தின் உற்பத்தி உண்டாகின்றது. அப்பிரமாத்தன்மையை அப்பிராமாணிய மென்பர். இவ்வாற்றால் பிரமாத்தன்மையின் உற்பத்தியும் அப்பிரமாத்தன்மையின் உற்பத்தியும் பிறிதால் உண்டாகின்றன.

168. ஞான ஞானத்தன்மைகளின் சாமக்கிரியின் வேறு காரணத்தினால் பிரமாத்தன்மையின் ஞானத்தின் உற்பத்தி (பிறிதாற் பிராமாணியங் கொள்ளும் வாதம்).

அங்ஙனமே ஞானத்தினது ஞானத்தின் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் ஞானம் உண்டாகிறதில்லை. ஆனால், ஞானம் ஞானத்தன்மை என்னு மிவற்றின்ஞான மெந்தச் சாமக்கிரியினால் உண்டாகின்றதோ, அதற்கு வேறாகிய காரணத்தினால் பிரமாத்தன்மையின் ஞான முண்டாகின்றது. அங்ஙனமே பிரத்தியக்ஷமுதலிய பிரமாணங்களால் கடமுதலியவற்றின் ஞான முண்டாகின்றது. அங்ஙனமே மன்சையுக்த சமவாய சம்பந்தத்தால் கடாதி ஞானங்களின் ஞானமு முண்டாகின்றது. நேத்திரமுதலிய பிரமாணத்தால் கடத்தின்ஞான முண்டாகின்றது. அதற்கு "இது கடம்" என்பது வடிவமாம். மன வடிவப் பிரமாணத்தால் கடஞானத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. அதற்குக் "கடத்தை யான் அறிகின்றேன்" என்பது வடிவம். "கடத்தை யான் அறிகின்றேன்" என்னும் மானச ஞானத்திற்கு விஷயம் கடஞானமாம்; கடமும் விஷயமாம்.

ஏனெனின், ஞானத்தின் ஞானம் அநுவியவசாய மெனப்படுகின்றது. கடமுதலியவற்றின் ஞானம் வியவசாய மெனப்படுகின்றது. அநுவியவசாய ஞானத்திற்கு இது சுபாவமாம்:—வியவசாயத்தின் விஷயத்தை விடுகிறதில்லை; ஆனால், விஷயத்தோடு கூடிய வியவசாயத்தினைப் * பிரகாசிக்கின்றது. இதனாற்றான்

* பிரகாசிக்கின்றது என்று வரு மிடந்தோறும் அறிகின்றதெனப் பொருள் கொள்க.

ஞானத்தின் ஞானத்திற்கு அநுவியவசாய மென்னும் பெயர் இருக்கின்றது. வியவசாயத்தை அநுசரித்ததனே அநுவியவசாய மென்பர். எங்ஙனம் வியவசாயத்திற்குக் கடமுதலியன விஷயமோ, அங்ஙனமே அநுவியவசாயத்திற்கும் கடமுதலியன விஷயமாம். ஆதலால், வியவசாயத்தை அநுசரித்தது அநுவியவசாயமாம். அநுவியவசாய ஞானத்திற்கு ஆத்மாவும் விஷயமாம்.

ஏனெனின், இது நியமமாம்:—ஞானம், இச்சை, தொழில், சுகம், துக்கம், துவேஷமென்பன ஆத்மாவின் விசேஷ குணங்களாம். இவற்றில் யாதேனும் ஓர் குணம் தோற்றுமாயின் ஆத்மாவின் பிரதீதி உண்டாம். எதன் பிரதீதியும் உண்டாகாவிடின், ஆத்மாவின் பிரதீதியும் உண்டாகாது. ஆதலால், சகல விசேஷ குணங்களையும் விட்டு ஆத்மாவின் பிரதீதி உண்டாகிறதில்லை. அங்ஙனமே ஆத்மாவினைவிட்டுக் கேவலம் ஞானமுதலியவற்றின் பிரதீதி உண்டாகிறதில்லை. ஆதலால், கடத்தின் ஞானத்தின் ஞான முண்டாயின், அப்போது ஆத்மாவின் ஞானமும் உண்டாகும். ஆதலால், வியவசாய ஞானத்தினையும் அதன் விஷயமாகிய கடத்தையும், அங்ஙனமே வியவசாயத்தின் ஆசிரயமான ஆத்மாவையும் "கடத்தை யான் அறிகின்றேன்" என்னும் ஞானம் பிரகாசிக்கின்றது. இதனுற்றான் திரிபுடி கோசர ஞானத்தினை அநுவியவசாய மென்பர். அநுவியவசாய ஞானத்திற்குக் காரணம் மனமாம். ஆதலால், சகல விஷயங்களோடும் மனதிற்குச் சம்பந்தத்தைச் சொல்லுதல்வேண்டும்.

எங்ஙனம்: கடம் ஞானம் ஆத்மா என்பன விஷயமாகின்றனவோ, அங்ஙனமே கடத்தன்மை ஞானத்தன்மை ஆத்மத்தன்மைகளும் கடஞானத்தின் ஞானத்திற்கு விஷயமாம். கடஞானத்தினேடு மனதின் சுவசையுக்த சமவாயசம்பந்த மிருக்கின்றது. ஞானத்தன்மையினேடு சுவசையுக்த சமவேத சமவாய சம்பந்த மிருக்கின்றது. ஆத்மாவோடு சுவசையோக சம்பந்த மிருக்கின்றது. ஆத்மத்தன்மையோடு சுவசையுக்த சமவாய சம்பந்த மிருக்கின்றது. கடத்தினேடு மனதின் சம்பந்தமோ பிரத்தியக்ஷத்திற்கு ஏதுவாகாது. ஏனெனின், பாகிய பதார்த்தத்தின் ஞானம் சுதந்திர மனதினல் உண்டாகிறதில்லை. ஆதலால், கடத்தினேடு மனதிற்கு அலௌகிக சம்பந்தத்தைச்

சொல்லுதல் வேண்டும். இலௌகிக சம்பந்தத்தினால் பாகிய பதார்த்தத்தின் ஞானம் மனதினால் உண்டாகிறதில்லை. அலௌகிக சம்பந்தத்தினால் பாகிய பதார்த்தத்தின் ஞானமும் மனதினால் உண்டாகின்றது. அந்த அலௌகிக சம்பந்தமும் ஞான லக்ஷணமாம். அநுவியவசாய ஞானத்தின் விஷயமாகிய வியவசாய ஞானம் எதுவோ, அதுவே மனதிற்குக் கடத்தோடுள்ள சம்பந்தமாம்.

அதன் சொரூபம் இதுவாம்:—சுவசையுக்த சமவேத ஞானம் அல்லது சுவசையுக்த சமவேதஞான விஷயத்தன்மை கடத்தோடு மனதிற்குள்ள சம்பந்தமாம். ஞானலக்ஷண வாக்கியத்தில் இலக்ஷண சப்தத்திற்குச் சொரூபமெனப் பொருள் செய்யின், அப்போது முதற் சம்பந்தமாம். இலக்ஷண சப்தத்திற்கு ஞாபகம் (அறிவிப்பது) எனப் பொருள் செய்யின், அப்போது இரண்டாவது சம்பந்தமாம். சுவவென்னும் சொல்லிற்குப் பொருள் மனமாம். அதனோடு சையுக்த ஆத்மத்தன்மையிற் சமவேதம் வியவசாய ஞானமாம். அது கடத்திலிருக்கின்றது. ஆதலால், முற்கூறிய ஞானமே கடத்தில் மனதின் சம்பந்தமாயிருத்தலின் கடத்தின் மானசஞான மாகின்றது. இரண்டாவது பக்ஷத்திற் கூறிய ஞானத்தின் விஷயத்தன்மை வடிவசம்பந்தம் கடத்திலிருக்கின்றது. வியவசாய ஞானத்தின் விஷயம் கடத்தன்மை படத்தன்மை இரண்டுமாம். ஆதலால், வியவசாய வடிவ சம்பந்தத்தால் அநுவியவசாய ஞானத்திற்கு இரண்டும் விஷயமாம். இவ்வாற்றால் கடஞானமுதலியன அநுவியவசாய ஞானத்திற்கு விஷயமாம். ஆதலால் ஞானத்தின் ஞானம் அநுவியவசாயமாம். அதன் சாமக்கிரி மனசையோகமுதலிய வடிவினதாம். அதனால், ஞானத்தின் ஞானமும் ஞானத்தன்மையின் ஞானமுமுண்டாகின்றன; பிரமாத்தன்மையின் ஞானமுண்டாகிறதில்லை. ஆனால், ஞானமுண்டாய்ப் புருஷனுக்கு ஸபலப்பிரவிருத்தி உண்டாயின், அதற்குப் பிற்காலத்தில் பிரவிருத்தியை உண்டுபண்ணும் ஞானத்தில் பிரமாத்தன்மையின் அநுமிதிஞான முண்டாகின்றது.

எங்ஙனம்: தடாகத்தில் ஜலத்தின் பிரத்தியக்ஷ ஞானத்தினால் ஜல விருப்புடையோனுக்குப் பிரவிருத்தி உண்டாய் ஜலத்தின் லாப முண்டாகின்றது; அப்போது புருஷனுக்கு

இவ்வாறு அநுமான முண்டாகின்றது:—"இந்த ஜலஞானம் பிரமை; ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுவதா யிருத்தலின்; யாண்டு ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுந் தன்மை யுளதோ, ஆண்டுப் பிரமாத்தன்மை யுளது; நிச்சயிக்கப்பட்ட பிரமையைப்போல" ஈண்டு வர்த்தமான ஜலஞானம் பக்ஷம். அநுமான காலத்தில் ஜலஞானம் அதீதமாயினும், வர்த்தமானத்திற்குச் சமீபித்த இறப்பும் எதிர்வும் வர்த்தமானமென்றே சொல்லப்படுகின்றன. இதனால் வர்த்தமான ஜலஞானமே பக்ஷமாகச் சொல்லப்பட்டது; அதீதமாகச் சொல்லப்படவில்லை. பிரமாத்தன்மை சாத்தியமாம். மேல் ஏது திருஷ்டாந்தங்கள் ஸ்பஷ்டமாம். வெதிரேக திருஷ்டாந்தம் சொல்லவேண்டியதாயின், "யாண்டு யாண்டு ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுந்தன்மை யில்லையோ, ஆண்டாண்டுப் பிரமாத்தன்மை யில்லை; சுத்திரஜதத்தை அறிதலிற்போல" என்றித்தன்மைய வாக்கியத்தினைச் சொல்லுக. இவ் வநுமானத்தால் ஜலஞானத்திற் பிரமாத்தன்மையின் நிச்சய முண்டாகின்றது. இவ்வாற்றால் சகல ஞானங்களிலும் ஸபலப் பிரவிருத்தியினால் பிரமாத்தன்மையின் அநுமிதி உண்டாகின்றது. ஜலஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரி "ஜலத்தை யான் அறிகின்றேன்" என்னும் அநுவியவசாயத்தின் சாமக்கிரியாம். பிரமாத்தன்மையைக் கிரகிக்கும் சாமக்கிரி முற்கூறிய அநுமானமாம்; அது அநுவியவசாயத்தின் சாமக்கிரிக்கு வேறாயிருத்தலின் பிறிதாம். ஆதலால், பிறிதாற் பிரமாத்தன்மையைக் கொள்ளுத லாகின்றது. நியாயமதத்தில் அநுமிதியின் விஷயம் பக்ஷமுமாம். முற்கூறிய அநுமிதியில் ஜலஞானம் பக்ஷமாம். ஆதலால், பிரமாத்தன்மையின் அநுமானமும் ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியாம்.

அங்ஙனமே அநுவியவசாயமும் இருவகை யாகின்றது:—ஒன்றோ "ஜலத்தை யான் அறிகின்றேன்" என்னும் அநுவியவசாய முண்டாகின்றது. யாண்டுப் பிரமாத்தன்மை நிச்சயத்திற்குப்பின் அநுவியவசாய முண்டாகின்றதோ, ஆண்டு "ஜலத்தை யான் அளக் (பிரமாணத்தினால் அறி) கின்றேன்" என்னும் அநுவியவசாய முண்டாகின்றது. ஆதலால், முற்கூறிய அநுமான வடிவ ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியினால்

பிரமாத்தன்மையின் நிச்சய முண்டாயிற்று. இரண்டாவது அநுவியவசாயத்தின் சாமக்கிரியும் ஞானத்தைக் கிரகிப்பதாம். அதனால் பிரமாத்தன்மையின் நிச்சய முண்டாயிற்று. இவ்வாற்றால் சித்தாந்த பக்ஷத்தில் தன்னாற் பிராமாணியத்தைக் கிரகித்தலின் அடைவுண்டாயிற்று. என்றாலும், யாது யாது ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியோ, அது முழுவதும் பிரமாத்தன்மையைக் கிரகிப்பதாம் என்பது சித்தாந்த பக்ஷமாம். ஞானத்தைக் கிரகிக்கும் சகல சாமக்கிரியிலும் "ஜலத்தை யான் அறிகின்றேன்" என்னும் அநுவியவசாயத்தின் சாமக்கிரியும் அடங்கியிருக்கின்றது. அதனால் பிரமாத்தன்மையின் கிரகிப்பு உண்டாகிறதில்லை. அதனால் பிரமாத்தன்மையின் கிரகிப்பு உண்டாகிறதில்லை. ஆதலால், சித்தாந்த பக்ஷத்தின் அங்கீகார மில்லை.

இவ்வாற்றால் கடமுதலியவற்றின் ஞானத்தால் கடமுதலியவற்றின் பிரகாச முண்டாகின்றது. கடமுதலியவற்றின் பிரகாச முண்டாகியும், கடாதிகளின் ஞானத்தின் பிரகாசமும் ஞானத்திற் காசிரயமாகிய ஆத்மாவின் பிரகாசமு முண்டாகிறதில்லை. எந்தக்காலத்தில் அநுவியவசாயஞான முண்டாகின்றதோ, அப்போது கடமுதலிய விஷயத்துடனும் ஆத்மாவுடனும் கடாதிஞானத்தின் பிரகாச முண்டாகின்றது. ஆனால், அநுவியவசாய ஞானத்தினால் வியவசாயத்தினது திரிபுடியின் பிரகாச முண்டாகின்றது; அநுவியவசாயத்தின் பிரகாச முண்டாகிறதில்லை. எப்போது அநுவியவசாயகோசர அநுவியவசாய முண்டாகின்றதோ, அப்போது முதல் அநுவியவசாயத்தின் பிரகாச முண்டாகின்றது; இரண்டாவது அநுவியவசாயம் பிரகாச மின்றியதாகவே இருக்கின்றது. முதல் அநுவியவசாயமோ வியவசாயத்தைக் கோசரிப்பதா யிருக்கின்றது. இரண்டாவது அநுவியவசாயமோ அநுவியவசாயத்தைக் கோசரிப்பதா யிருக்கின்றது, "கடஞானத்தை யான் அறிகின்றேன்" என்பது இரண்டாவது அநுவியவசாயத்தின் சொரூபமாம். இரண்டாவது அநுவியவசாயத்தின் வியவகாரம் இஷ்டமாயின், "கடஞானத்தின் ஞானத்தை யானறிகின்றேன்" என்று மூன்றாவது அநுவியவசாய முண்டாகின்றது. ஆனால், நியாய மதத்தில் கடஞானத்தினால் கடத்தின் பிரகாச முண்டாய்க் கடத்

தின் வியவகாரம் சித்திக்கின்றது. கடவியவகாரத்தில் கடஞானத்தினது பிரகாசத்தின் அபேக்ஷை இல்லை. கடஞானத்தின் வியவகாரம் இஷ்டமாயின், அப்போது அநுவியவசாயத்தினால் கடஞானத்தின் பிரகாசமுண்டாய்க் கடஞானத்தின் வியவகாரமுண்டாகின்றது. அநுவியவசாயத்தினது பிரகாசத்தின் அபேக்ஷை இல்லை. இவ்வாற்றால் எதன் வியவகாரம் இஷ்டமாகின்றதோ, அதன் ஞானத்தின் அபேக்ஷை யுண்டு.

விஷயத்தைப் பிரகாசிக்கும் ஞானம் எதுவோ, அது பிரகாசிக்கப்படுவதாகுக; அல்லது பிரகாசிக்கப் படாததாகுக; அதன் பிரகாசத்தினால் உபயோக மில்லை. பிரகாசிக்கப்படும் ஞானத்தினாலேயே விஷயத்தின் பிரகாசம் உண்டாகுமாயின், நியாயமதத்தில் அநவஸ்தாதோஷ முண்டாகும். ஏனெனின், எந்த ஞானத்தினால் விஷயம் பிரகாசமாகின்றதோ, அந்த ஞானம் சுவப்பிரகாசமோ அன்று. அதனைப் பிரகாசிக்கும் வேறு ஞான முண்டாயின், அப்போது ஞானத்தினால் விஷயத்தின் பிரகாச முண்டாம். அந்த முதல்ஞானத்தைப் பிரகாசிப்பிக்கும் வேறு ஞானத்திற்கு வேறு ஞானம் வேண்டும். மூன்றாவதைப் பிரகாசிப்பிக்கும் நான்காவது ஞானம் வேண்டும். இவ்வாறு அநவஸ்தாதோஷமுண்டாம். ஒன்றற்கொன்று அபேக்ஷையுடைய பிரகாசத்தை அங்கீகரிக்கின், அந்நியோந்நியாசிரயம் சக்கிரிகை முதலிய தோஷ முண்டாம். ஆதலால், விஷயத்தின் பிரகாசத்தில் தனது பிரகாசத்தின் ஞானத்தை அபேக்ஷிக்கிறதில்லை. ஆனால், தனது வியவகாரத்தில் பிரகாசத்தின் அபேக்ஷை யுண்டு. யாண்டுக் கடமுதலிய விஷயங்களின் வியவகாரம் இஷ்டமாகின்றதோ, ஆண்டுக் கடஞானத்தின் அபேக்ஷை கடத்தினது பிரகாசத்தின் பொருட்டுண்டு. பிரகாசிக்கப்படுவதின்றிய ஞானத்தினாலேயே கடவியவகாரம் உண்டாகின்றது.

எங்ஙனம்: எப்போது கடத்தின் ஞானம் உண்டாகவில்லையோ, அக் காலத்திலும் ஜலத்தைத் தரித்தல்முதலிய பிரயோஜனத்தின் பெறுதியைக் கடம் செய்கின்றது. தனது காரியத்தில் பிரகாசத்தின் அபேக்ஷையைக் கடம் செய்கிறதில்லை. அங்ஙனமே ஞானத்தின் காரியம் விஷயத்தின் பிரகாசமாம். அந்த விஷயப் பிரகாசவடிவ காரியத்தில் தனது பிரகாசத்தின் அபேக்ஷையை ஞானம் செய்கிறதில்லை. கடத்தினைப்போலத் தனது

வியவகாரத்திற் பிரகாசத்தின்பொருட்டு ஞானத்தின் அபேக்ஷையை ஞானம் செய்கின்றது. எந்த ஞானத்தின் வியவகாரம் இஷ்டமாமோ, அந்த ஞானத்தின் ஞானம் உண்டாகின்றது. ஞான ஞானத்திற்குப் பிரகாசத்தின் அபேக்ஷையில்லை. இச்சையின் விஷயத்தை இஷ்ட மென்பர். ஆதலால், நியாயமதத்தில் அநவஸ்தாதோஷம் கூறுகின்றனர். அது அவர்களது அவிவேகத்தைக் காரணமாகவுடைய பிரலாபமாம்.

இவ்வாற்றால் நியாயமதத்தில் எந்த ஞானமும் சொப்பிரகாசமன்று. ஆதலால், ஞானத்தினது ஞானத்தின் உற்பத்தி எதனால் உண்டாகின்றதோ, அது ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரி எனப்படுகின்றது. அநுவியவசாய ஞானத்தின் சாமக்கிரி மனஃசையோக முதலியனவும், ஞானலக்ஷண அலௌகிக சம்பந்தமுமாம். அது அநுவியவசாய பேதத்தால் நாநாவாம். அங்ஙனமே "ஜலஞானம் பிரமை" என்னும் அநுமிதியும் ஞானத்தின் ஞானமாம். அதனை உண்டுபண்ணுவது அநுமானமாம். அதுவும் ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியாம். அதனால், ஜலஞானத்தினது பிரமாத்தன்மையின் ஞானம் உண்டாகிறதில்லை. "ஜலத்தை அளக்கின்றேன்" என்னும் அநுவியவசாயத்தின் சாமக்கிரியும் ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியாம். அதனால்,ஜலஞானத்தினது பிரமாத்தன்மையின் ஞானமுண்டாகின்றது. ஆனால், "ஜலத்தை யான் அறிகின்றேன்" என்னும் அநுவியவசாயமும் ஜலஞானத்தின் ஞானமாம். ஜலஞானத்தின் பிரமாத்தன்மையினைப் பிரகாசிக்கிறதில்லை. ஆதலால், ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியான கூறிய அநுவியவசாய சாமக்கிரியினால் ஜலஞானத்தினது பிரமாத்தன்மையின் கிரகண மின்மை யிருத்தலின், ஜலஞானத்தைக் கிரகிக்கும் சகல சாமக்கிரியினாலும் ஜலஞானத்தினது பிரமாத்தன்மையின் கிரகணம் உண்டாகாமையால், தன்னாற் பிராமாணியங் கொள்ளுதல் உண்டாகிறதில்லை. ஆனால்,பிறிதாற்பிராமாணியங் கொள்ளுதல் உண்டாகின்றது.

யாது யாது ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியோ, அவ்வெல்லாவற்றாலும் பிரமாத்தன்மையைக் கிரகித்தல் உண்டாகின்றது. இதனைத் தன்னாற் பிராமாணியங்கொள்ளுத லென்பர். இப் பக்ஷத்தில் பிரமாத்தன்மைத் தர்மத்தினை விட்டு எந்த

ஞானத்தின் ஞானமு முண்டாகிறதில்லை. பிரமாத்தன்மை ஞானத்தன்மை யென்னும் இரண்டு தர்மவிசிஷ்ட ஞானத்தின் ஞானம் உண்டாகின்றது. கேவல ஞானத்தன்மைத் தர்ம விசிஷ்டஞானத்தின் ஞான முண்டாகிறதில்லை. பிறிதாற் பிராமாணியங்கொள்ளும் வாதத்தில் முதல் அநுவியவசாயத்தினால் பிரமாத்தன்மையைவிட்டு ஞானத்தன்மை விசிஷ்டஞானத்தின் ஞான முண்டாகின்றது. மீண்டும் வேறு அநுவியவசாயத்தினாலேனும், அல்லது முற்கூறிய அநுமானத்தினாலேனும் பிரமாத்தன்மையின் ஞான முண்டாகின்றது.

169. மீமாம்ஸக மதத்திலும் சித்தாந்த மதத்திலும் கொண்டுள்ள தன்னாற் பிராமாணியவாதத்தில் தோஷம்

மீமாம்ஸக மதத்திலும் சித்தாந்த மதத்திலும் தன்னாற் பிராமாணியங் கொள்வது அங்கீகாரமாம். நியாய வைசேஷிக மதத்தில் பிறிதாற் பிராமாணியம் கொள்ளுதலின் அங்கீகார முண்டு. தன்னாற் பிராமாணியம் கொள்ளுதலில் இத் தோஷங் கூறப்பட்டிருக்கின்றது:—யாண்டு ஒருபதார்த்தத்திற்கு அநேக முறை ஞானமுண்டாய்ப் பிரவிருத்திஉண்டாயிருந்திருக்குமோ, ஆண்டு ஞானத்தின் பிரமாத்தன்மையில் ஓரிடத்தும் சந்தேக மில்லை. ஏனெனின், அநேகமுறை ஸபலப்பிரவிருத்தி உண்டாய்ப் பிரமாத்தன்மை நிச்சயம் உண்டாய்விடுகின்றது. அந்தப் பிரமாத்தன்மை நிச்சயம் பிரமாத்தன்மையின் சம்சயத்திற்கு விரோதியாம். ஆனால், எப் பதார்த்தத்தின் அபூர்வஞான முண்டாகின்றதோ, அதன் ஞானத்தில் பிரமாத்தன்மையின் சந்தேக முண்டாகின்றது, அஃது உண்டாகலாகாது. ஏனெனின், அத்வைத மதத்திலும் பிரபாகராது மதத்திலுமோ ஞானம் சொப்பிரகாசமாம். ஆதலால், ஞானம் என்றும் கிரகிக்கப்படாத தாகாது; கிரகிக்கப்பட்டதே யாகின்றது. ஆதலால், பிரமாத்தன்மையும் கூடவே கிரகிக்கப்படுவதாயின், நிச்சயிக்கப்பட்ட பதார்த்தத்தின் சந்தேக முண்டாகாது. அதனால், பிரமாத்தன்மையின் சந்தேகம் சம்பவியாது. சித்தாந்தபக்ஷத்திலோ பிரகாசவடிவ ஞான மிருக்கின்றது. பிரகாச பதார்த்தத்திற்கு ஞான பதார்த்தத்தோடு பேத மில்லை.

170. பிரபாகரரது மதத்தில் சகல ஞானங்களினாலும் திரிபுடி பிரகாசித்தல்

பிரபாகரரது மதத்தில் ஞானத்தின் விஷயத்திற் பிரகாச முண்டாகின்றது. பிரகாசத்திற்கு ஏது ஞானம். எங்ஙனம் கடத்தின் ஞானமுண்டாயின் அப்போது கடஞானத்தினால் கடத்தின் பிரகாச முண்டாகின்றதோ, அங்ஙனமே கடத்தின் ஞானம் தனது சொரூபத்தின் பிரகாசஞ் செய்கின்றது. தனது ஆசிரயமாகிய ஆத்மா யாதோ. அதனையும் பிரகாசம் செய்கின்றது. சகல ஞானங்களும் திரிபுடியைப் பிரகாசிப்பிக்கின்றன. ஞாதா ஞான ஞேயங்களின் சமுதாயம் திரிபுடி எனப்படுகின்றது. இவ்வாற்றால் பிரபாகரரது மதத்தில் தனது சொரூபத்தினையும் ஞானம் விஷயஞ் செய்கின்றது. தனது பிரமாத்தன்மையையும் விஷயம் செய்கின்றது.

171. முராரி மிசிரர் மதம்

முராரி மிசிரர் மதத்தில், ஞானத்தின் பிரகாசம் அநுவியவசாயத்தால் உண்டாகின்றது. அந்த ஞானத்தைப் பிரகாசிக்கும் அநுமிதியே பிரமாத்தன்மையின் பிரகாசமென்று கொள்ளப் பட்டிருக்கின்றது. இதனால், அநுவியவசாயத்திற்குப் பின் பிரமாத்தன்மையின் சந்தேக முண்டாகலாகாது.

172. பட்டர் சித்தாந்தம்

அங்ஙனமே பட்டர் சித்தாந்தம் இதுவாம்:—கடமுதலியவற்றினது ஞானத்தின் ஞானம் பிரத்தியக்ஷ வடிவமாகாது. ஏனெனின், ஞானகுணம் பிரத்தியக்ஷ யோக்கியமன்று. ஆதலால், ஞானத்தின் ஞானம் அநுமிதிவடிவ மாகின்றது; மானஸப் பிரத்தியக்ஷ வடிவமன்று. அவ்வநுமிதி ஞானம் இவ்வாற்றும் உண்டாகின்றது. இந்திரிய விஷயங்களின் சையோகத்தால் பிரத்தியக்ஷஞானம் உண்டாகுக; அல்லது, அநுமிதிஞான முண்டாகுக. சகல ஞானங்களினாலும் கடமுதலிய விஷயங்களில் ஞாதத்தன்மை யென்னும் தர்மம் உற்பத்தியாகின்றது. இதனாற்றான் ஞான முண்டாகிய பின் "அறியப்பட்டது கடம்" என்னும் வியவகார முண்டாகின்றது. ஞானத்திற்குமுன் எந்தக் கட இந்திரியங்களின் சையோக முண்டாகின்றதோ, அதனால், "இது கடம்" என்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது.

அந்தப் பிரத்தியக்ஷ ஞானம் சமவாய சம்பந்தத்தால் ஞாதாவி லிருக்கின்றது; விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் கடத்தி லிருக் கின்றது.

யாண்டு விஷயத்தன்மைச் சம்பந்தத்தினுல் ஞான முண்டா கின்றதோ, ஆண்டுச் சமவாய சம்பந்தத்தினுல் ஞாதத்தன்மை உற்பத்தியாகின்றது. இவ்வாற்ருல் கடத்தின் ஞானத்தினுல் கடத்தில் ஞாதத்தன்மை உற்பத்தியாகின்றது. அந்த ஞாதத் தன்மைக்கு உபாதான காரணம் கடமும், நிமித்தகாரணம் ஞானமுமாம்: அசமவாயிகாரண பரிபாஷை பட்டர் மதத்தில் இல்லை. உபாதான காரணத்திற்கு வேருகியதை நிமித்தகாரண மென்றே கூறுவர். இவ்வாற்ருல் ஞானஜந்நிய ஞாதத்தன்மைத் தர்மம் கடத்தில் உண்டாகின்றது. முதலிலோ "இது கடம்" என்பதாகக் கடத்தைப் பிரகாசிக்கும் பிரத்தியக்ஷ முண்டா யிருக்கின்றது. அந்தப் பிரத்தியக்ஷத்தினுல் கடத்தில் ஞாதத் தன்மைத் தர்மம் உண்டாயிற்று; அப்போது இந்திரிய சையோ கத்தினுல் அதே கடத்தின் பிரத்தியக்ஷம் "அறியப்பட்டது கடம்" என்பதாக உண்டாகின்றது. இவ்வாற்ருல் ஞான ஜந்நிய ஞாதத்தன்மையின் பிரத்தியக்ஷம் புற இந்திரியத்தினுல் உண்டா கின்றது. புறப்பதார்த்தங்களினது ஞானத்தின் பிரத்தியக்ஷம் புற இந்திரியங்களினுலோ எம்மதத்திலும் உண்டாகிறதில்லை. நையாயிகர்முதலியோர் மதத்தில் ஞானத்தின் மானஸப் பிரத் தியக்ஷ முண்டாகின்றது. பட்டர்மதத்தில் கடமுதலியவற்றி னது ஞானத்தின் மானஸப் பிரத்தியக்ஷமு முண்டாகிற தில்லை. ஆனுல், கடமுதலிய ஞானத்தின் அநுமானஜந்நிய அநு மிதிஞானம் உண்டாகின்றது.

அநுமானத்திற்கு இது வடிவமாம்:—"இக்கடம் விஷயத்தன் மைச் சம்பந்தத்தினுல் ஞானமுடையதாம்; சமவாயத்தினுல் ஞானத்தன்மை யுடைமையால்; யாண்டு யாண்டுச் சமவாயத் தால் ஞானத்தன்மை ஆண்டு ஆண்டு விஷயத்தன்மைச் சம்பந் தத்தால் ஞானமுண்டு." இந்த ஸ்தானத்தில் முன்னிருப்பதாகிய கடம் பக்ஷம். விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் ஞானம் சாத்தி யம். மேல் ஏது திருஷ்டாந்தங்களிருக்கின்றன. பிற நூல்களில் வேறுவிதமாக அநுமானம் எழுதப்பட்டிருக்கின்றது. அது கடினமாம். பட்டர் மதத்தில் அநுமானத்தினுல் ஞானம் அறி

யப்படுகின்றது. இது சுலபமான கிரமமாய்க் காட்டப்பட்டது. இவ்வாற்ருல் ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரி பட்டர் மதத்தில் அநுமானமாம்.

173. நியாய வைசேஷிகமத நிச்சயம்

இவ்வநுமானத்திலேயேகடஞானத்தின்பிரமாத்தன்மையின் ஞானமு முண்டாகின்றது. ஆதலால், ஞானத்தின் அநுமிதி உண்டாகியபின், பிரமாத்தன்மையின் சந்தேகம் பட்டர் மதத்தில் உண்டாகலாகாது. ஆதலால், ஞானத்தின் சகல ஞானங்களினும் பிரமாத்தன்மையின் நிச்சயம் உண்டாகிறதில்லை. ஆனல், ஸபலப்பிரவிருத்தி உண்டாகியபின், ஞானத்தினது பிரமாத்தன்மையின் நிச்சயம் உண்டாகின்றது. இது நியாய வைசேஷிகர் மதம். இதனைப் பிறிதாற் பிராமாணியவாத மென்பர். ஞானத்தினது உற்பத்தியின் சாமக்கிரியினல் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகிறதில்லை. அதிக சாமக்கிரியினல் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகின்றது. அங்ஙனமே அதிக சாமக்கிரியினல் பிரமாத்தன்மையின் ஞானம் உண்டாகின்றது. பிரமாத்தன்மையினைப்போல அப்பிரமாத்தன்மையின் உற்பத்தி பிறிதான் உண்டாகின்றது. பிறிதான் ஞானமுண்டாய் ஞானத்தை உண்டுபண்ணும் சாமக்கிரியினல் ஞானத்தினது அப்பிரமாத்தன்மைத் தர்மத்தின் உற்பத்தி உண்டாயின், சகல ஞானங்களும் அப்பிரமை யாதல்வேண்டும். ஆதலால், ஞானத்தை உண்டுபண்ணும் சாமக்கிரியினல் அப்பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகிறதில்லை. ஞானத்தை உண்டுபண்ணுவன இந்திரிய அநுமாநாதிகளாம். அவற்றில் தோஷத்தின் சகாயமிருக்குமாயின், அப்பிரமாத்தன்மையோடு கூடிய ஞானத்தின் உற்பத்தி உண்டாகும். தோஷம் நாநாவிதமாம்.

பிரத்தியக்ஷப் பிரமம் உண்டாயின், ஆண்டோ நேத்திர முதலியவற்றின்கண் உள்ள பிரமாண தோஷத்தினைப்போல, விஷயத்தின்கண் உள்ள சாதிருசியதோஷமும் ஏதுவாம். சிலவிடத்துப் பிரத்தியக்ஷப் பிரமத்தில் விஷயத்தின்கண் உள்ள சாதிருசிய தோஷத்தின் வியபிசாரமு மிருக்கின்றது. ஆனல், சதிருசத் (சமானமுடைய)தின்கண்ணே வெகு பிரமம் உண்டாகின்றது. ஆதலால், அநேக இடங்களிலோ சாதிருசிய தோஷம் பிரமத்திற்கு ஏதுவாம்.

யாண்டு வேற்றியல்புடையதின்கண் பிரமம் அநுபவசித்த மாகின்றதோ, ஆண்டுச் சாதிருசிய தோஷம் பிரமத்திற்குக் காரணமன்று. ஏகவடிவத்தால் தோஷம் ஏதுவன்று. ஆனால், ஏதுவிருக்க எந்தப்பிரமம் உண்டாகின்றதோ, அந்தத் தோஷம் அந்தப் பிரமத்திற்குக் காரண மாகின்றது. பரோக்ஷப் பிரம ஞானத்தில் சாதிருசியத்தின் அபேக்ஷை யில்லை. இது அநுபவ சித்தமாம். ஆதலால், பரோக்ஷஞானத்தில் விஷயத்தின்கண் உள்ள தோஷம் ஏதுவன்று. ஆனால், அநுமிதிப்பிரமத்தில் அநுமானதோஷம் ஏதுவாம். வியாப்பியமாகிய ஏதுவின்ஞானம் அநுமானமாம். ஏதுவில் வியபிசாரமுதலிய தோஷம் நியாய கிரந்தங்களிற் பிரசித்தமாம். சாப்தப்பிரம மூண்டாயின், ஆண் டுச் சுரோதாவினிடத்து வாக்கிய தாற்பரியத்தின் அவதாரண மின்மை தோஷமாம். சொல்லுவோனிடத்து விப்பிரலம்பகத் தன்மை (வஞ்சகத்தன்மை) முதலியன தோஷமாம். சப்தத்தில் பிறிதோர்விதத்தால் போதிக்குந்தன்மைமுதலியன தோஷமாம். இவ்வாறு அப்பிரமாத்தன்மைக்கு ஏதுவாகிய தோஷத்தை அநு பவாநுசாரமாக அறியவேண்டும்.

இப் பிரசங்கத்தில் பிரமாத்தன்மையின் உற்பத்தியும், அப் பிரமாத்தன்மையின் உற்பத்தியும் சொல்லப்பட்டன. அது விருத்தமாகத் தோற்றுகின்றது. சென்றன, வருவன, இருப் பனவாகிய சகலப் பிரமைகளிலும் பிரமாத்தன்மைத் தர்மம் ஏக மாம். அங்ஙனமே சகல அப்பிரமையிலும் அப்பிரமாத்தன்மை யும் ஏகமாம். அவற்றின் உற்பத்தி கூறுதல் சம்பவியாது. என்றாலும் தனது காரணத்தினால் ஞானம் உற்பத்தியாயின், அப்போது சில ஞானம் பிரமையும், சிலஞானம் அப்பிரமையு மாகின்றன. பிரமாத்தன்மை விசிஷ்டம் பிரமையாம். அப்பிர மாத்தன்மை விசிஷ்டம் அப்பிரமையாம். இவ்வாற்றால் ஞானத் தில் பிரமாத்தன்மை அப்பிரமாத்தன்மைத் தர்மங்களின் வில க்ஷணத்தன்மை ஞானத்தை யுண்டுபண்ணும் சாமக்கிரியின் அதீனமாம். சிலவிடத்து ஞானத்தின் இத்தன்மைய சாமக்கிரி இருக்கின்றது. அதாவது, பிரமாத்தன்மை விசிஷ்டஞானத்தின் உற்பத்தி எதனால் உண்டாகின்றதோ அத்தன்மைய சாமக்கிரி இருக்கின்றது. சிலவிடத்து அப்பிரமாத்தன்மை விசிஷ்ட ஞானத்தின் உற்பத்தி எதனால் உண்டாகின்றதோ, அத்தன் மைய சாமக்கிரி இருக்கின்றது.

இதனால் இவ்வாறு மதித்தல் வேண்டும்:—பிரமாத்தன்மைத் தர்மமோ ஒன்றும். சகலப் பிரமையிலும் அதன் சம்பந்தமிருக்கின்றது. ஆனால் பிரமாத்தன்மையின் சம்பந்தம் சாமக்கிரியின் அதீனமாம். இவ்வாற்றால் ஞானத்தில் பிரமாத்தன்மையின் பிரயோஜக (காரண) சாமக்கிரி இருத்தலால் பிரமாத்தன்மையின் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே அப்பிரமாத்தன்மையின் † பிரயோஜகம் தோஷமாம். ஆதலால், தோஷ ஜந்நியம் அப்பிரமாத்தன்மை எனப்படுகின்றது. தோஷ ஜந்நியமென்று சொல்லுதற்கு தோஷப் * பிரயோஜ்ஜியத்தில் தாற்பரியமாம். அவற்றின் ஞானத்திற்கோர் முக்கிய உற்பத்தி சம்பவிக்கின்றது.

சித்தாந்தத்தில் சாக்ஷிபாஸியம் பிரமாத்தன்மையாம். ஆதலால், பிரமாத்தன்மையினது ஞானத்திற்கும் உற்பத்தி கூறின், சாக்ஷியின் உற்பத்தி சித்தமாகின்றது. அது பொருந்தாது. என்றுலும் விருத்தியில் ஆரூடசாக்ஷி பிரமாத்தன்மைமுதலியவற்றைப் பிரகாசிக்கின்றது. ஆதலால், விருத்தியும் ஞானமெனப் படுகின்றது. அதற்கு உற்பத்தி சம்பவிக்கும். இவ் வார்த்தை முன் சொல்லப்பட்டிருக்கின்றதெனினும், முற்கூறிய பொருளையே கூறுதலால் கேட்பவருக்கும் படிப்பவருக்கும் போதம் திடமாகின்றது. சாஸ்திரீய அர்த்தத்தின் மந்த சம்ஸ்கார முடைய புருஷர்களுக்கு அடிக்கடி சொல்லுதலால் பிரயாசையின்றிப் போத முண்டாகின்றது.

ஆதலால், இப் பிரகரணத்தில் அநேக அர்த்தங்களைப் பல முறை கூறியிருக்கின்றோம்; கூறியது கூறல் என்னும் குற்றமில்லை. இவ்வாற்றால் நியாயமதத்தில் பிறிதாற் பிராமாணிய வாதம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. தன்னாற் பிராமாணிய வாதத்தில் சம்சயத்தின் அநுபபத்திதோஷம் சொல்லப்பட்டிருக்கின்றது.

174. நியாய வைசேஷிகமத கண்டநம்

அது முழுவதும் அசங்கதமாம்:—பிரமாத்தன்மையின் ஞானத்தையோ பின் சொல்லுவோம். முதலிலோ அநுவியவசாயஞானத்தினால் ஞானத்தின் பிரகாச முண்டாகின்றது என்று கூறுதல் அசங்கதமாம். ஏனெனின், அப்பிரகாச சுபா-

† பிரயோஜகம்-காரணம். * பிரயோஜ்ஜியம்-காரணத்தாலாகியது.

வம் ஞானமர்குமாயின், அதன் சம்பந்தத்தால் கடமுதலியவற்றின் பிரகாச முண்டாகாது. கடமுதலியவற்றின் பிரகாசத்தில் ஞானம் தனது பிரகாசத்தை அபேக்ஷிக்கிறதில்லை. எங்ஙனம் கடமுதலியன அறியப்படாதனவாயினும் தம் காரியத்தைச் செய்கின்றனவோ, அங்ஙனமே ஞானமும் அறியப்படாததாய் விஷயத்தின் பிரகாச வடிவ தனது காரியத்தைச் செய்கின்றது என்று முன் கூறியது யாதோ அது சம்பவியாது. ஏனெனின், சகல பௌதிக ஜோதிகளும் தாம் பிரகாசவடிவினவாய் அந்நியத்தைப் பிரகாசிக்கின்றன. பிரகாசமின்றிய ஜோதியினல் எதன் பிரகாசமும் காணப்படுகிறதில்லை. பிரகாசமின்றியதும் சுபாவ பலத்தால் தனது சம்பந்தமுடையதின் பிரகாசத்தைச் செய்யின், சுவர்ணத்தின்கணுள்ள ஜோதி பாகத்தினலும் சுவர்ண சம்பந்தமுடைய கடமுதலியவற்றின் பிரகாசமுண்டாதல்வேண்டும். சொரூபப் பிரகாசத்தினல் பிரகாசிக்கப்படும் பௌதிக ஜோதியினல் கடமுதலியவற்றின் பிரகாசத்தைக் கண்டிருக்கின்ரேம். சொரூபப் பிரகாசத்தினல் பிரகாசிக்கப்படாத சுவர்ணம் இரஜதம் முதலிய வடிவ ஜோதியினல் எதன் பிரகாசமும் காணப்படுகிறதில்லை. ஆதலால், சொரூபப் பிரகாசத்தினல் பிரகாசிக்கப்படும் ஞானத்தின் சம்பந்தத்தினல் கடமுதலியவற்றின் பிரகாச முண்டாகின்றதென்று கொள்ளவேண்டும். ஆதலால், பிரகாச சுபாவமும் ஞானமாம். கேவலம் திருஷ்டாந்த பலத்தினல் ஞானத்திற்குச் சொப்பிரகாசத்தன்மையை அங்கீகரிக்கவில்லை. ஆனல், அநுபவத்தினலும் சொப்பிரகாசத்தன்மை சித்திக்கின்றது.

யாண்டு அறிதற்கரிய அஞ்ஞாத பதார்த்தத்தின் ஞானம் புருஷனுக்குண்டாய் "அறியத்தக்கது அறியப்பட்டது, அறிவதற்கு ஒன்றும் மிகுந்ததில்லை" என்னும் வாக்கியத்தைச் சந்தோஷத்தினல் சொல்லுகின்ருனே, அவனைப் பார்த்து அந்நிய புருஷன், "இவ் வஞ்ஞானம் அறிதற்கு எஞ்சி இருக்கின்றது." என்று சொல்ல, இவ் வாக்கியத்தைக் கேட்டுச் சிரிக்கின்ருன். ஆதலால், ஞானத்தின் பிரகாசத்தன்மையின் அநுபவம் சித்தமாம். ஞானத்தினது பிரகாசத்தின் எஞ்சுதற் றன்மையைக் கேட்டுச் சிரிக்கின்ருன். கடஞானம் அறியப்பட்டதா? இல்லையா? என்னும் வாக்கியத்தைக் கூறுகின்றவனைப் புத்தியில்லாதவ

னென்பர். ஆதலால், ஒருநாளும் ஞானத்தில் அஞ்ஞாதத்தன்மை யில்லை. அஞ்ஞானத்தன்மையின் அபாவத்தால் ஞானகோசர அநுவியவசாய முண்டாகின்றது என்று கூறுதல் அசங்கதமாம்.

எந்தப்புருஷனுக்கும் "எனக்குக் கடஞானம் உண்டாயிற்றா? இல்லையா?" என்னும் சந்தேக முண்டாகிறதில்லை. கடஞானம் அறியப்படாததாயின் ஒருகால் சந்தேக முண்டாதல்வேண்டும். ஆதலால், ஞானம் அஞ்ஞாத மாகிறதில்லை. ஞானத்தின் பிரகாசம் அநுவியவசாயமாமென்று கூறுதல் அசங்கதமாம். இவ்வாறு கூறுவாராயின்:—ஞானகோசர ஞானமுண்டாகாவிடின், "இது கடம், கடத்தை யானறிகின்றேன்" என்பதாக ஞானத்தில் விலக்ஷணத்தன்மை தோற்றலாகாது. ஏனெனின், நியாய மதத்திலோ முதல் ஞானத்திற்கு விஷயம் கடமும், இரண்டாவது ஞானத்திற்கு விஷயம் கடஞானமுமாம். ஆதலால், விஷய பேதத்தால் ஞானங்களுக்கு விலக்ஷணத்தன்மை சம்பவிக்கின்றது. சொப்பிரகாச ஞானவாதியின் மதத்தில் ஞானத்திற்கு விஷயம் ஞானமாகாது. இரண்டு ஞானங்களுக்கும் விஷயம் கடமாயிருத்தலின், விஷயபேதத்தி னின்மையால் விலக்ஷணப் பிரதீதி உண்டாகலாகாது என்னும் சங்கையும் சம்பவியாது.

எங்ஙனம்: ஒரே கடத்திற்கு ஒரு காலத்தில் "இது கடம்" என்னும் ஞானம் உண்டாகின்றது; ஒரு காலத்தில் "அநித்தியம் கடம்" என்னும் ஞான முண்டாகின்றது. ஆண்டு விஷயத்தின் பேதமின்றி விலக்ஷணஞான முண்டாகின்றது. ஆனால், முதல்ஞானத்தில் கடத்தின் அநித்தியத்தன்மை தோற்றுகிறதில்லை. இரண்டாவது ஞானத்தில் கடத்தின் அநித்தியத் தன்மை தோற்றுகிறது. அங்ஙனமே "இது கடம்" என்னும் ஞானத்தில் கடத்தின் ஞாதத்தன்மை தோற்றுகிறதில்லை. "கடத்தை யான் அறிகின்றேன்" என்னும் ஞானத்தில் கடத்தின் ஞாதத்தன்மை தோற்றுகின்றது. ஞான ஜந்நியப் பிரகடத் தன்மையை ஞாதத்தன்மை யென்பர். இரண்டாவது ஞானத்தின் விஷயம் கடத்திலுள்ள ஞானத்தன்மையாம்; கடத்தின் ஞான மன்று. இதனாற்றான் கடஞானத்திற்குப் பிற்காலத்தில் ஒரு காலத்தில் "கடத்தை யான் அறிகின்றேன்" என்னும் ஞானம் உண்டாகின்றது. ஒரு காலத்தில் "அறியப்பட்டது கடம்" என்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. "அறியப்பட்டது

கடம்'' என்னும் பிரத்தியக்ஷத்திற்கு விஷயம் கடத்தின் ஞாதத் தன்மையாம். இவ்வர்த்தம் பட்டருக்குச் சம்மதமும், அநுப வத்தை அநுசரித்ததுமாம்.

ஏனெனின், "அநித்தியம் கடம்'' என்று சொல்லுதலால் அநித்திய பதார்த்தத்தில் விசேஷணமாகிய அநித்தியத்தன்மை யின் பிரதீதி கடத்தில் எல்லோருக்கும் சம்மதமாம். அங்ஙன மே "அறியப்பட்டது கடம்'' என்று சொல்லுதலாலும் அறி யப்பட்ட பதார்த்தத்தின் விசேஷணமாகிய ஞாதத்தன்மையின் பிரதீதி கடத்தில் சர்வாநுபவசித்தமாம். "அறியப்பட்டது கடம்'' என்னும் ஞானத்தின் அவசரத்தில் "கடத்தை யான் அறிகின்றேன்'' என்னும் ஞான முண்டாகின்றது. ஆதலால், கடத்தை யான் அறிகின்றேனென்னும் ஞானமும் கடத்தின் ஞானத்தன்மையை விஷயஞ் செய்கின்றது. இவ்வாற்றால் ஞான கோசர ஞானத்தை அங்கீகரியாவிடினும், "இது கடம்'' "கடத்தை யான் அறிகின்றேன்'' என்பதாக விலக்ஷணஞானம் சம்பவிக்கின்றது. ஆதலால், அநுவியவசாய ஞானத்திற்கு விஷ யம் ஞானமாமென்னும் நையாயிகமதம் அசங்கதமாம்.

175. முராரிமிசிரர் மதத்தின் கண்டநம்

அங்ஙனமே முராரிமிசிரர் மதமும் இப் பிரசங்கத்தில் நையாயிகமதத்திற்குச் சமமாம். ஆதலால் அசங்கதமாம். முராரிமிசிரர் மதத்தில் ஞானத்தைப் பிரகாசிக்கும் அநுவியவ சாயத்தினாலேயே பிரமாத்தன்மையின் பிரகாச முண்டாகின் றது. நியாயமதத்தினும் இத்துணை விசேஷ மிருக்கின்றது. என்றாலும் இவ் விசேஷம் நலமுடையதன்று. ஏனெனின், அப் பிரகாச சுபாவ ஞானத்தின் பிரகாசம் அநுவியவசாயத்தினால் உண்டாகின்றது என்னும் அம்சத்தில் நியாயமதத்திற்குச் சமமா யிருத்தலின் அசங்கதமாம்.

176. பட்டமத கண்டநம்

அங்ஙனமே பட்டர்மதத்தில் அநுமிதியினால் ஞானத்தின் பரோக்ஷப் பிரகாச முண்டாகின்றது என்பது நியாயத்தினும் அசங்கதமாம். ஏனெனின், அவர்கள் மதத்தினும் ஞானத்தைப் பிரகாசிக்கும் அநுமிதி யாதோ, அதனால் பிரமாத்தன்மையின் பிரகாசம் உண்டாகின்றதென்னும் இத்துணை அம்சமோ

நியாயத்திலும் விலக்ஷணமாம்; சித்தாந்தத்திற்கு அநுகூல மாம். என்றாலும் கடமுதலிய விஷயங்களை அபரோக்ஷத் தன்மை யாக்குவதாகிய பிரத்தியக்ஷஞானத்தின் அநுமிதி வடிவ பரோக்ஷப் பிரகாச முண்டாகின்றது என்று கூறுதல் நகைப்பிற் கிடமாம்.

177. பிரபாகரர் மதத்தின் கண்டநம்

அங்ஙனமே பிரபாகரர் மதத்திலும் கடஞானமுதலியன தனது பிரகாசத்தில் அநுவியவசாயத்தின் அபேக்ஷையைச் செய்கிறதில்லை. இத்துணை அம்சத்தில் சித்தாந்தத்திற்கு அநு கூலமாம். பிரமாத்தன்மையைக் கிரகித்தலில் ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியினும் பிறிதொன்றின் அபேக்ஷ செய் கிறதில்லை என்னும் அம்சத்திலும் சித்தாந்தத்திற் கநுகூல மிருக்கின்றது. அங்ஙனமாயினும் பிரபாகரர்மதமும் சிரத்தைக் குரியதன்று: ஏனெனின், சகல ஞானமும் சொப்பிரகாசமாம்; திரிபுடியை விஷயஞ் செய்வதாம். விஷயமாத்திரத்தைக் கோச ரிப்பது ஓர் ஞானமு மாகாது. சகலஞானமும் "கடத்தை யான் அறிகின்றேன்" என்பதாகத் திரிபுடியைக் கோசரிப்பன வாகின்றன. "இது கடம்" என்பதாகக் கேவலவிஷயகோசர ஞானம் அப்பிரசித்தமாம். கடத்தோடு இந்திரியத்திற்குச் சம் பந்த முண்டாகக் கடத்தின்ஞான முண்டாகின்றது. அது கடத்தையும், தனது சொரூபத்தையும், அங்ஙனமே தனது ஆசிரயமாகிய ஆத்மாவையும் விஷயஞ் செய்கின்றது. அங்ஙன மே கடத்தின் ஞானமே தனது தர்மமாகிய பிரமாத்தன்மை யை விஷயஞ் செய்கின்றது. இவ்வாற்றால் கடத்தின் ஞானம் தனது பிரகாசத்தில் அந்நியத்தின் அபேக்ஷ செய்கிறதில்லை. இத்துணை அம்சமோ நலமுடையதாம். ஆனால், தனது பிரகா சத்தைத் தான் செய்கின்ற தென்பது விருத்தமாம். ஒரு கிரி யைக்கு எது கர்த்தாவாகின்றதோ அது கர்மமாகாது. ஆதலால், பிரகாசத்திற்குத் தானே கர்த்தாவும் தானே கர்மமுமாமென்று கூறுதலும் விருத்தமாம். சித்தாந்தத்திலோ ஞானம் பிரகாச வடிவமாம். ஆதலால், முற்கூறிய விரோத மில்லை. இவ்வாற்றால் பிரகாசவடிவ ஞானத்தினை அங்கீகரியாவிடின் அம் மதங்கள் யாவும் அசுத்தமாம். ஆதலால், ஞானத்தின் அநுவியவசாயத்தினால் பிர காச முண்டாகின்றதென்னும் நையாயிகவசனம் அசங்கதமாம்.

178. தன்னுற் பிராமாணிய வாதத்தின் அங்கீகாரமும், சித்தாந்தமதத்தில் முற்கூறிய சம்சயத்தின் அநுபபத்தி வடிவ தோஷத்தின் பரிகாரமும்

ஞானத்தைக் கிரகிக்குங் காலத்தில் பிரமாத்தன்மையைக் கிரகித்த லுண்டாயின், சம்சயத்தின் அநுபபத்தி உண்டாகின்றது என்பதற்கு இது சமாதானமாம்:—ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியினுல் பிரமாத்தன்மையின் கிரகிப்பு உண்டாகின்றது. ஆனுல், தோஷாபாவத்தோடுகூடிய ஞானசாமக்கிரியினுல் பிரமாத்தன்மையின் கிரகண முண்டாகின்றது. இதனை மேற் கூறுவாம். யாண்டுச் சம்சய முண்டாகின்றதோ ஆண்டுத் தோஷாபாவமில்லை. தோஷமில்லையாயின் சம்சயம் சம்பவியாது. ஏனெனின், சம்சயஞானமும் பிரமமாம். பிரமத்தின் உற்பத்தியில் தோஷம் ஏதுவாம். ஆதலால், சம்சயஸ்தலத்தில் தோஷாபாவம் சம்பவியாது. பிரமாத்தன்மை ஞானத்தில் தோஷாபாவம் ஏதுவாம். ஆதலால், யாண்டுச் சம்சயம் முண்டாகின்றதோ, ஆண்டுப் பிரமாத்தன்மையின் ஞானம் உண்டாகிறதில்லை. ஆதலாற் சம்சயம் சம்பவிக்கின்றது. சித்தாந்தத்தில் விருத்தி வடிவ ஞானத்திற்கு சாக்ஷியினுல் பிரகாசம் உண்டாகின்றது. ஆதலால், ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரி சாக்ஷியாம். அதனுலேயே விருத்திஞானத்தினது பிரமாத்தன்மையின் கிரகண முண்டாகின்றது. ஆனுல், சில இடங்களில் ஞானமோ பிரமையாகின்றது.

எதனுல் அநிர்வசநீயப் பிரமத்தின் உற்பத்தி உண்டாகிறதில்லையோ, அத்தன்மைய விலக்ஷணதோஷ முளதாயின், அதனுல் ஞானமோ பிரமையாய், சாக்ஷி அதனது பிரமாத்தன்மையின் பிரகாசத்தைச் செய்ய, அதனிடத்துப் பிரதிபந்தக முண்டாய்விடுகின்றது. அதனுல் ஞானத்தைக் கிரகிக்கும் சாக்ஷியோ இருந்தும், பிரமாத்தன்மையின் கிரகண முண்டாகிறதில்லை. இக்காரணத்தால் முற்கூறிய லக்ஷணத்தின் அவ்வியாப்தி உண்டாகின்றது. ஞானத்தைக் கிரகிக்கும் சகல சாமக்கிரியினுலும் பிரமாத்தன்மையின் கிரகணத்தைத் தன்னுற் கிரகித்தல் (கொள்ளுதல்) என்பர். முற்கூறியவிடத்தில் ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியினுல் பிரமாத்தன்மையின் கிரகணம் உண்டாக

வில்லை; ஆதலால், அவ்வியாப்தியாம். அங்ஙனமாயினும் தோஷாபாவத்தோடுகூடிய ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் கிரகிப்பு உண்டாகின்றது. அதனைத் தன்னாற் பிராமாணியம் கொள்ளுதல் என்பர். முற்கூறிய ஸ்தலத்தில் தோஷாபாவத்தோடுகூடிய சாமக்கிரி இல்லை; ஆனால் தோஷத்தோடுகூடிய சாமக்கிரி இருக்கின்றது. ஆதலால், முற்கூறிய ஸ்தலத்தில் இலக்ஷிய மில்லை. இக் காரணத்தினால் அவ்வியாப்தி யில்லை.

இவ்வாற்றால் ஞானத்தினது பிரமாத்தன்மையைப் பிரகாசிப்பதோ தோஷாபாவத்தோடுகூடிய சாக்ஷியாம். அப்பிரமாத்தன்மையின் கிரகிப்போ சாக்ஷியினால் உண்டாகிறதில்லை. ஏனெனின், பிரமத்தின் இலக்ஷணம் தோஷ ஜந்நியத்துவமாம்; அல்லது, நிஷ்பலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுந் தன்மையாம்; அல்லது, அதிஷ்டானத்திலும் விஷமசத்தை யுடையதின் அவபாசமாம். இவ்வாற்றால் தோஷத்தால் நிகழ்வதும், நிஷ்பலப் பிரவிருத்தியினால் நிகழ்வதும், விஷமசத்தையினால் நிகழ்வதும் பிரமத்தின் லக்ஷணமாம். அத்தோஷ முதலியன சாக்ஷியின் விஷயமன்று. ஆதலால், தோஷமுதலியவற்றால் நிகழும் அப்பிரமாத்தன்மையும் சாக்ஷிக்கு விஷயமன்று. ஆதலால், அப்பிரமாத்தன்மையின் ஞானமோ நையாயிகரைப்போல நிஷ்பலப் பிரவிருத்தியைக் கண்டு உண்டாகின்றது. அங்ஙனமே அப்பிரமாத்தன்மையின் உற்பத்தியும் ஞானத்தின் சாமாநிய சாமக்கிரியினால் உண்டாயின், சகல ஞானமும் அப்பிரமையாதல் வேண்டும்.

ஆதலால், தோஷத்தோடுகூடிய ஞானத்தை உண்டுபண்ணும் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகின்றது என்பதற்குப் பொருள் இதுவாம்:—தோஷத்தோடுகூடிய நேத்திரம் அநுமானமுதலியவற்றினால் அப்பிரமை ஞானத்தின் உற்பத்தி உண்டாகின்றது. அப்பிரமாத்தன்மை விசிஷ்டப்பிரமஞானத்தின் உற்பத்தியே இப்பிரகரணத்தில் அப்பிரமாத்தன்மையின் உற்பத்தி எனப்படுகின்றது. பிரமாத்தன்மையின் உற்பத்தியோ ஞானத்தின் சாமாநிய சாமக்கிரியினாலேயே உண்டாகின்றது.

179. நியாயமதத்தில் (பிறிதாற் பிராமாணிய வாதத்தில்) தோஷம்

பிரமாத்தன்மையின் உற்பத்தியில் குணம் காரண மெனப் பட்டது. அது சம்பவியாது. ஏனெனின், பிரத்தியக்ஷ ஸ்தலத்தில் அதிக அவயவங்களினால் இந்திரியத்தின் சையோக குணமானது சொல்லப்பட்டது: அது நிரவயவ வடிவமுதலியவற்றின் பிரத்தியக்ஷத்திற் சம்பவிக்கிறதில்லை. அநுமிதியில் வியாப்பியமான ஏதுவிற்குப் பக்ஷத்தில் ஞானகுணம் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுவும் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், யாண்டு வந்நியோடு கூடிய பர்வதத்தில் தூளிபடலத்தில் தூமத்தின் பிரம முண்டாய் வந்நியின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டு முற்கூறிய குணமோ இல்லை. வந்நியின் அநுமிதிப் பிரமை யுண்டாகின்றது. ஆதலால், பிரமாத்தன்மையின் உற்பத்தியில் குணத்திற்கு உண்டுபண்ணுந் தன்மையைக் கூறுதல் சம்பவியாது. ஆனால், ஞானசாமாநியத்தின் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகின்றது.

ஞான சாமாநியத்தின் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் உற்பத்தியை அங்கீகரிக்கின், பிரமஸ்தலத்திலும் ஞான சாமாநிய சாமக்கிரி இருத்தலால் பிரமாஞானம் உண்டாதல் வேண்டும் என்று கூறுவாராயின், அதற்கு இது சாமாதானமாம்:—தோஷ முளதாயின் ஆண்டுப் பிரமஞான முண்டாகாது. ஆதலால், பிரமாத்தன்மையின் உற்பத்தியில் தோஷம் பிரதிபந்தகமாம். சகல காரியங்களின் உற்பத்தியிலும் பிரதிபந்தக அபாவம் ஏதுவாம். ஆதலால், தோஷாபாவத்தோடு கூடிய ஞானத்தின் சாமக்கிரியினால் பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகின்றது. ஈண்டுப் பிரமாத்தன்மையின் உற்பத்தி கூறுதலால் பிரமாத்தன்மை விசிஷ்ட ஞானத்தின் உற்பத்தியில் தாற்பரியமாம். ஆதலால், பிரமாத்தன்மைத் தர்மத்தின் உற்பத்தி கூறுதல் அசங்கதமன்று. இவ்வாற்றால் தோஷாபாவத்தோடு கூடிய ஞானத்தை உண்டுபண்ணும் நேத்திரமுதலிய வடிவ சாமக்கிரி யாதோ, அதனால் பிரமஞானத்தின் உற்பத்தி உண்டாகுதலால் பிரமாத்தன்மையின் உற்பத்தி தன்னால் உண்டாகின்றது.

ஞானசாமாநியத்தின் சாமக்கிரி இந்திரியம் அநுமான முதலியனவாம். சாமாநிய ஞானத்தின் காரணம் தோஷாபாவ மன்று. பிரமாத்தன்மையின் உற்பத்தியில் தோஷாபாவமும் காரண மெனப்பட்டது. ஆதலால், சாமாநிய சாமக்கிரியினும் அதிக காரணத்தாற் றோன்றியதாயிருத்தலின் பிறிதாற் பிரா மாணியத்தின் அங்கீகார முண்டாயிற்று. அங்ஙனமாயினும், ஞான சாமாநியத்தின் சாமக்கிரியினால் அதிகத்தன்மையின் அபேக்ஷை உண்டாகுமாயின் பிறிதாற் பிராமாணிய மாகின்றது. அபாவவடிவ தோஷாபாவத்தின் அபேக்ஷையினால் பிறிதாற் பிராமாணிய முண்டாகிறதில்லை.

அங்ஙனமே ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரி சாக்ஷி யாம். தோஷமின்மையோடு கூடிய சாக்ஷியினால் ஞானத்தினது பிரமாத்தன்மையின் ஞான முண்டாகின்றது. தோஷத்தோடு கூடிய இந்திரியம் அநுமானமுதலியவடிவ ஞானத்தை உண்டு பண்ணும் சாமக்கிரியினால் அப்பிரமாத்தன்மையின் உற்பத்தி உண்டாகின்றது. ஞான சாமாநியத்தின் சாமக்கிரி இந்திரியம் அநுமான முதலியனவாம். அவற்றினும் தோஷம் பிறிதாம். ஆதலால், அப்பிரமாத்தன்மையின் உற்பத்தி பிறிதால் உண்டா கின்றது. பிரமமுண்டாய்ப் பிரவிருத்தி யுண்டாகப் பலத்தின் இலாப முண்டாகாவிடின், அப்போது அப்பிரமாத்தன்மை யநு மிதிஞானம் உண்டாகின்றது. அது அநுமானத்தினால் உண்டா கின்றது. ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியாகிய சாக்ஷியினும் அநுமானம் வேறாம். ஆதலால், அப்பிரமாணியக் கிரகிப்பும் பிறிதால் உண்டாகின்றது.

அநுமானத்தின் வடிவம் இதுவாம்:— "இந்த ஜலஞானம் அப்பிரமை; நிஷ்பலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுவதா யிருத்தலின்; யாண்டு யாண்டு நிஷ்பலப் பிரவிருத்தியை உண்டு பண்ணுந்தன்மை யுளதோ, ஆண்டாண்டு அப்பிரமாத்தன்மை யுண்டு; வேறு பிரமத்தைப்போல" என்றிவ்வாறு ஞானத்தின் உற்பத்தி காலத்திலேயே சாக்ஷியினால் ஞானத்தினது சொரூ பத்தின் பிரகாச முண்டாகின்றது. ஞானத்திலிருக்கும் பிரமாத் தன்மையின் பிரகாசமு முண்டாகின்றது.

180. அக்கியாதிவாதியினது வசனத்தின் பரிகாரம்

நிச்சய ஞானத்திற்குச் சம்சய ஞானத்தோடு விரோத முண்டு. ஆதலால், பிரமாத்தன்மையின் நிச்சய முண்டாகப்

பிரமாத்தன்மையின் சந்தேக முண்டாகாது. இதனால் பிரமாத்தன்மைச் சந்தேகத்தினால் அசைவின்றிய பிரவிருத்தியின் அபாவ முண்டாகுமென்னும் அக்கியாதிவாதியின் வசனம் அசங்கதமாம். பிரமாத்தன்மைச் சம்சயத்திற்கு விரோதி பிரமாத்தன்மை நிச்சயமாம். பிரமத்தன்மைச் சம்சயத்திற்கு விரோதி பிரமாத்தன்மை நிச்சய மன்று. ஏனெனின், சமான விஷயத்தில் சம்சய நிச்சயங்கள் விரோதிகளாம். பிரமாத்தன்மை நிச்சயத்திற்கும் பிரமத்தன்மைச் சம்சயத்திற்கும் விஷயமாகிய பிரமாத்தன்மையும் பிரமத்தன்மையும் பின்னமாம். ஆதலால், அக்கியாதிவாதி கூறிய வசனம் பொருத்தமுடையதாம். என்றாலும் எந்த ஞானத்தில் பிரமாத்தன்மை நிச்சய முண்டாகின்றதோ, அந்த ஞானத்தில் பிரமத்தன்மையின் நிச்சயமும் பிரமத்தன்மையின் சந்தேகமு முண்டாகிறதில்லையென்பது அநுபவ சித்தமாம்; ஆதலால், பிரமத்தன்மைச் சந்தேகத்திற்கும் விரோதியாம்.

விசாரிக்குமிடத்துப் பிரமாத்தன்மைச் சம்சயத்திற்கும் பிரமத்தன்மைச் சம்சயத்திற்கும் பேத மில்லை; ஒரே பதார்த்தமாம். ஏனெனின், "இவ்வஞ்ஞானம் பிரமையோ? அன்றோ?" என்பது பிரமாத்தன்மைச் சம்சயத்தின் ஆகாரமாம். இதில் விதி பக்ஷம் பிரமாத்தன்மையாம்; நிஷேதபக்ஷம் பிரமத்தன்மையாம். ஏனெனின், ஞானத்தில் பிரமாத்தன்மையை நிஷேதிக்கின் பிரமத்தன்மையே சேஷமிருக்கும். அங்ஙனமே இவ் வஞ்ஞானம் பிரமமோ? அன்றோ?" என்பது பிரமத்தன்மைச் சம்சயத்தின் ஆகாரமாம். இதில் விதிபக்ஷம் பிரமத்தன்மையாம்; நிஷேதபக்ஷம் பிரமாத்தன்மையாம். ஞானத்தில் பிரமத்தன்மையை நிஷேதிக்கின் பிரமாத்தன்மையின் சேஷமே இருக்கும். இவ்வாற்றால் இரண்டு சம்சயங்களிலும் பிரமத்தன்மை பிரமாத்தன்மைகளாகிய இரண்டு பக்ஷங்களும் சமானமாம். ஆதலால், பிரமாத்தன்மைச் சம்சயத்திற்கும், பிரமத்தன்மைச் சம்சயத்திற்கும் பேத மில்லை. என்றாலும், எதில் விதிபக்ஷம் பிரமாத்தன்மையோ அது பிரமாத்தன்மைச் சம்சய மெனப்படுகின்றது. எதில் விதிபக்ஷம் பிரமத்தன்மையோ அது பிரமத்தன்மைச் சம்சய மெனப்படுகின்றது. இவ்வாற்றால் பிரமாத்தன்மைச் சம்சயத்திற்கும் பிரமத்தன்மைச் சம்சயத்திற்கும் விஷயம் சமா

னமா யிருத்தலின், பிரமாத்தன்மையின் நிச்சயமுண்டாக, எங்ஙனம் பிரமாத்தன்மைச் சம்சய முண்டாகிறதில்லையோ, அங்ஙனமே பிரமத்தன்மைச் சம்சயமு முண்டாகிறதில்லை. ஆதலால், சித்தாந்த மதத்தில் பிரமஞானத்தை அங்கீகரித்தும் அசைவின்றிய பிரவிருத்தி சம்பவிக்கின்றது. அநிர்வசநீயத்தின் நிச்சயம் பிரமநிச்சயமாம்.

181. பிராந்திஞானத்தின் மூவகைத்தன்மையும் விருத்திபேதத்தின் பரிகாரமும்

இவ்வாற்றால் சம்சய நிச்சயபேதத்தால் பிரமஞானம் இருவகையாம். தர்க்கஞானம் பிரமநிச்சயத்தில் அடங்கும். ஏனெனின், வியாப்பியத்தின் ஆரோபத்தால் வியாபகத்தின் ஆரோபம் தர்க்கமாம். எங்ஙனம்: "வந்நி இராதாயின், அப்போது தூமமும் இராது" என்னும் ஞானம், தூம வந்நிகளோடு கூடிய தேசத்தி லுண்டாயின் அது தர்க்கமாம். ஆண்டு வந்நியின் அபாவம் வியாப்பியமாம். தூமத்தின் அபாவம் வியாபகமாம். வந்நி அபாவத்தின் ஆரோபத்தால் தூமாபாவத்தின் ஆரோபம் உண்டாகின்றது. வந்நி தூமங்களிருக்க, வந்நியபாவத்தின் ஞானமும் தூமாபாவத்தின் ஞானமு மிருக்கின்றன; ஆதலால் பிரமமாம்.

பாதம் உண்டாகப் பிரமமுண்டாயின் அதனை ஆரோபமென்பர். ஈண்டுத் தூமவந்நிகளின் இருப்பிருக்கின்றது. ஆதலால், அவற்றின் அபாவத்திற்குப் பாத மிருக்கின்றது. அது இருக்கவும், புருஷனது இச்சையினால் வந்நியபாவ தூமாபாவங்களின் பிரமஞான முண்டாகின்றது; ஆதலால், ஆரோபமாம். இவ்வாற்றால் ஆரோப சொரூப தர்க்கமும் பிரமத்தி லடங்கும்; வேறன்று. விருத்தியின் பிரசித்த பேதங்களைச் சொன்னோம்; அவாந்தர பேதங்கள் அநந்தமாம்.

ஏழாவது பிரகாசம்:
விருத்திபேதக்கியாதி கண்டன தானே
பிரமாணமாந்தன்மை நிரூபணம் முடிந்தது.

ஓம்

தத் ஸத் ப்ரஹ்மணே நம:

எட்டாவது பிரகாசம்

ஜீவேசுவர சொரூப விருத்திப் பிரயோஜனத்தோடு கற்பித நிவிருத்திசொரூப நிரூபணம்.

182-187. அஞ்ஞானத்தில் விசாரம்.

182. விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதலின் பிரதிக்ஞை.

ஏழாவது பிரகாசத்தில் விருத்தியின் சொரூபமும் காரணமும் சொல்லப்பட்டன. விருத்தியின் பிரயோஜனத்தைச் சொல்லுதற்கு எட்டாவது பிரகாசம் ஆரம்பமாகின்றது. அஞ்ஞானத்தின் நிவிருத்தி விருத்தியின் முக்கியப் பிரயோஜனமாம். கடமுதலிய அநாத்மாகார விருத்தியினால் கடாதி அவச்சின்ன சேதனத்தின்கண் உள்ள அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அகண்ட பிரஹ்மாகார விருத்தியினால் நிரவச்சின்ன சேதனத்தின்கண்ணுள்ள அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது.

183. அஞ்ஞானத்தின் ஆசிரயமும் விஷயமும்.

வாசஸ்பதியின் மதத்தில் விருத்தியினால் நசிக்கத்தக்க அஞ்ஞானத்திற்கு ஆசிரயம் சீவனும், விஷயம் பிரஹ்மமுமாம். விவரணகாரர் முதலியோர் மதத்தில் அஞ்ஞானத்தின் ஆசிரயமும் விஷயமும் சுத்தசேதனமாம். எங்ஙனம், ஞானத்தினாலாகிய கடமுதலியவற்றின் பிரகாசம் ஞானத்தின் விஷயத்தன்மை எனப்படுகின்றதோ, அங்ஙனமே அஞ்ஞானத்தினாலாகிய சொரூபத்தின் ஆச்சாதனமே (மறைப்பே) அஞ்ஞானத்தின் விஷயத்தன்மையாம். ஜீவத்தன்மை ஈசுவரத்தன்மைகள் அஞ்ஞானத்தின் அதீனமாம். ஆதலால், அஞ்ஞானத்தினாலாகிய ஜீவன் அஞ்ஞானத்திற்கு ஆசிரயமாதல் சம்பவியாது. இவ்வர்த்தத்தினது ஞானத்தில் உபயோகமுள்ள ஜீவேசுவரர்களது சொரூபத்தை முதலில் நிரூபிப்பாம்.

184. அஞ்ஞானத்தின் நிரூபணம்

அந்த ஜீவேசுவரர்களது நிரூபணத்தில் உபயோகமுள்ளதாகிய அஞ்ஞானத்தின் நிரூபணத்தைச் செய்வாம். அஞ்ஞானம் அவித்தை, பிரகிருதி, மாயை, சத்தி என்னும் பெயர்கள் ஒரே பதார்த்தத்திற்காம். மாயை அவித்தைகளின் பேதவாதம் ஏகதேசிகள்தாம். நையாயிகர்முதலியோர் ஞானுபாவத்தினையே அஞ்ஞான மென்பர். சித்தாந்த மதத்தில் ஆவரண விக்ஷேப சக்திகளையுடைய அநாதிபாவரூபம் அஞ்ஞான பதார்த்தமாம். வித்தையினால் நசிக்கப்படுவதா யிருத்தலின் அவித்தையென்பர். பிரபஞ்சத்திற்கு உபாதானமா யிருத்தலின் பிரகிருதி என்பர். நிகழ்தற்கரியதனையும் நிகழச் செய்தலால் மாயை என்பர். சுதந்திரத்தன்மை இன்மையால் சக்தி என்பர்.

185. அஞ்ஞானத்தின் அநாதி பாவரூபத் தன்மையில் சங்கை

அஞ்ஞானத்திற்கு அநாதிபாவரூபத் தன்மையைக் கூறுதல் சம்பவியாது. ஏனெனின், இது அத்வைதநூலின் எழுத்தாம்:—சேதனத்திற்குப் பின்னமாகவேனும், அபின்னமாகவேனும் அஞ்ஞான முளதென்னும் இரண்டு பக்ஷங்களும் சம்பவியா. ஏனெனின், "நேஹ நாநாஸ்தி கிஞ்சந. ஈண்டு நாநா என்பது சிறிதும் இல்லை" என்றல்முதலிய சுருதி வசனங்களால் சேதனத்திற்குப் பின்னமாவது நிஷேதிக்கப்படுகின்றது.

ஜடசேதனங்களுக்கு அபேதம் சம்பவியாது. பின்னத்தன்மை அபின்னத்தன்மைகளுக்கு ஒன்றற்கொன்று விரோதமிருத்தலின், அஞ்ஞானம் சேதனத்தினும் பின்னுபின்னமாம் என்று கூறுதலும் சம்பவியாது. அங்ஙனமே அத்வைதத்தைப் பிரதிபாதிக்கும் சுருதிக்கு விரோதமாக அஞ்ஞானத்திற்கு சத் சொரூபத்தன்மை சம்பவியாது. பிரபஞ்ச காரணத்தன்மை சம்பவியாமையால் துச்சத்தன்மைச் சொரூபமான அசத் சொரூபத்தன்மை சம்பவியாது. ஒன்றற்கொன்று விரோதமுள்ள தர்மம் ஒன்றனிடத்துச் சம்பவியாது; ஆதலால், சத்து அசத்தெனும் இருவடிவமாமென்று கூறுதல் சம்பவியாது.

அங்ஙனமே அஞ்ஞானத்திற்கு ஸாவயவ மங்கீகரிக்கின், நியாயமதத்திலோ திரவியத்தை ஆரம்பிக்கும் உபாதானத்தை

அவயவ மென்பர். சாங்கியர்முதலியோர் மதத்தில் திரவியரூப பரிணாமமுடைய உபாதானத்தினை அவயவ மென்பர். உபாதானத்தினையே அவயவமெனின், சப்தத்திற்கு உபாதானமாகிய ஆகாயமும் சப்தத்தின் அவயவமாகும். அங்ஙனமே தமது குணக்கிரியைகளுக்கு உபாதானகாரணமாகிய கடாதிகளும், உருவமுதலிய குணங்கள் சலனவடிவக்கிரியை என்பவற்றின் அவயவங்களாகும். ஆதலால், திரவியத்தின் உபாதான காரணத்தை அவயவ மென்பர். அந்நியத்தின் உபாதானத்தினை அவயவ மென்பதில்லை. அவய்வ ஜந்நியத்தினை ஸாவயம் (அவயவ முடையது) என்பர்.

அவித்தை திரவியமாகுமாயின், ஸாவயவத்தன்மை சம்பவிக்கும். அவித்தையில் திரவிய திரவியத்தன்மைகள் சம்பவியா. ஏனெனின், நித்திய அநித்திய பேதத்தால் திரவியம் இருவகைத்தாம். அவித்தையினை நித்தியத் திரவியமாக அங்கீகரிக்கின், ஸாவயவத்தன்மை கூறுதல் அசங்கதமாம். அங்ஙனமே ஞானத்தினால் அவித்தையின் நாசம் உண்டாகலாகாது. அநித்தியத் திரவிய வடிவமாக அங்கீகரிக்கின் அதன் அவயவமும் ஆத்மாவினும் வேறாயிருத்தலின் அநித்தியமேயாகும். அவயவத்தின் அவயவமும் அநித்தியமாகுதலால் அநவஸ்தை யுண்டாகும். அந்திய அவய்வத்தினைப் பரமாணுவினைப்போல நித்தியமென அங்கீகரிக்கின், அத்வைதத்தைப் பிரதிபாதிக்கும் சுருதி வசனத்திற்கு விரோத முண்டாகும். நியாயமதத்தில் நித்தியமாகப் பரமாணுவினையும், சாங்கியமதத்தில் நித்தியமாகப் பிரதானத்தினையும் அங்கீகரித்தல் சுருதி விருத்தமாம்.

இவ்வாற்றால் திரவியத்தன்மையின் அபாவத்தால் அஞ்ஞானத்தில் ஸாவயவத்தன்மை சம்பவிக்கிறதில்லை. அங்ஙனமே உபாதானத்தன்மையின் சம்பவ மின்மையால் நிரவயவம் அஞ்ஞானமென்று கூறுதலும் சம்பவியாது. ஸாவயவமோ உபாதானகாரண மாகின்றது; நியாயமதத்தில் சப்தத்திற்கு உபாதான காரணமாகிய ஆகாயம் நிரவயவமெனக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதுவும் "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந꞉ ஆகாஶஸ்ஸம்பூத꞉—அந்த அல்லது இந்த ஆத்மாவினின்றும் ஆகாயமுண்டாயிற்று" என்னும் சுருதிக்கு விருத்தமாம்.

அங்ஙனமே துவியணுகத்தின் உபாதானகாரணமாகிய பரமாணு நிரவயவமெனக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனை யும் நிரவயவமாகிய பரமாணுவிற்குச் சையோகம் சம்பவியா மைமுதலிய தோஷங்களால் சூத்திரகாரர் சாரீரக சாஸ்திரத் தின் இரண்டாவது அத்தியாயத்திலுள்ள இரண்டாவது பாதத் தில் நிஷேதஞ் செய்திருக்கின்றனர். ஆதலால், பிரபஞ்சத்தின் உபாதானமாகிய அஞ்ஞானத்திற்கு நிரவயவத்தன்மை சம்பவி யாது. அஞ்ஞானத்திற்குப் பிரபஞ்சத்தின் உபாதானத்தன்மை "ஜாயாஞ -வுகூ௱திம் விஷ்௱கூ - மாயையினையோ பிரகிருதி என்றறிக" என்னும் சுருதியிற் பிரசித்தமாம். மாயை அஞ் ஞானங்களுக்குப் பேத மில்லை. இவ்வாற்றால் அஞ்ஞானத்தில் ஸாவயவத்தன்மை அல்லது நிரவயவத்தன்மைகள் சம்பவியா. அங்ஙனமே ஒன்றற்கொன்று விரோதமுள்ள இருவடிவத்தன் மையும் சம்பவிக்கிறதில்லை.

இவ்வாற்றால் எந்தத் தர்மத்தினாலும் அஞ்ஞானம் நிரூ பிக்க முடியாததாயிருத்தலின், அதனை அநிர்வசநீய மென்பர். இவ்வாறு அநேக நூல்களில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆத லால், அநிர்வசநீய அஞ்ஞானத்திற்கு அநாதிபாவரூபத்தன்மை கூறுதல் சம்பவியாது. பாவரூபத்தன்மை கூறுதலால் சத்ரூபத் தன்மை சித்திக்கின்றது; சத்ரூபத்தன்மையோ நிஷேதம் செய் யப்பட்டிருக்கின்றது.

186. முற்கூறிய சங்கைக்குச் சமாதானம்

அங்ஙனமாயினும், அஞ்ஞானம் எங்ஙனம் சத்துவிலக்ஷண மோ, அங்ஙனமே அசத்துவிலக்ஷணமுமாம். ஆதலால், பாதிக் கப்படாத வடிவினதாகிய சத்துவமோ அஞ்ஞானத்தி லில்லை. ஆனால், துச்சவடிவ அசத்திற்கு விலக்ஷணத்தன்மை வடிவ சத்துவத்தின் அங்கீகாரம் அஞ்ஞானத்தி லுண்டு. இதனாற்றான் சத்தசத்திற்கு விலக்ஷண அநிர்வசநீயம் அஞ்ஞானமாம். முற் றும் வசனத்திற்கு எட்டாததனை அநிர்வசநீய மென்பதில்லை. ஆனால், பாரமார்த்திக சத்சொரூபபிரஹ்மத்தின் விலக்ஷணமும், முற்றும் சத்தாஸ்பூர்த்தி யின்றிய முயற்கோடுமுதலியனவாகிய அசத்திற்கு விலக்ஷணமுமே அநிர்வசநீய சப்தத்திற்குப் பாரிபாஷி கப் பொருளாம். ஆதலால், அநாதிபாவரூபத்தன்மையைக் கூறு தல் சம்பவிக்கின்றது.

நையாயிகர் முதலியோரது மதத்தில் எங்ஙனம் நிஷேத முக உணர்ச்சிக்கு விஷய ஞானுபாவ வடிவம் அஞ்ஞானமோ, அங்ஙனமே அத்வைத நூல்களிலும் அஞ்ஞான சப்தத்திற் குப் பொருளில்லை. ஆனுல், ஞானத்தினுல் பாதிக்கப்படும் இரஜ்ஜுசர்ப்ப முதலியன எங்ஙனம் விதிமுக உணர்ச்சிக்கு விஷயமோ, அங்ஙனமே ஞானத்தினுல் நிவர்த்திக்கத்தக்க விதிமுக உணர்ச்சிக்குக் கோசரமாவது அஞ்ஞானமாம். அஞ் ஞான சப்தத்தில் அகாரத்திற்கு விரோத முடைமை பொரு ளாம் என்பது முன்னர் (ஆருவது பிரகாசத்தில்) கூறப்பட் டிருக்கின்றது. ஆதலால், அஞ்ஞானத்தில் பாவரூபத்தன்மை யைக் கூறுதல் சம்பவிக்கின்றது. பிராசீன ஆசாரியர்களாகிய விவரணகாரர் முதலியோர் பெருங்கூச்சலாகப் பிரகாச விரோதி யாகிய அந்தகாரத்திற்குப் பாவரூபத்தன்மையைப் பிரதி பாதித்து, ஞானவிரோதியாகிய அஞ்ஞானத்திற்குப் பாவ ரூபத்தன்மையையே பிரதிபாதனம் செய்திருக்கின்றனர். ஆதலால், அஞ்ஞானத்திற்குப்பாவரூபத்தன்மையைச் சிரவணஞ் செய்யின் உத்கர்ஷ முண்டாகுமென்னு மவர்கள் சிறு கேள்வி யாளராவர். இவ்வாற்ருல் பாவரூபம் அஞ்ஞானமாம். உற்பத்தி யின்றியதா யிருத்தலின் அநாதியாம். கடத்தைப்போல அவ யவத்தோடு கூடியதாகிய ஸாவயவமன்று. ஆயினும், அந்த காரத்தைப்போல ஸாம்சம் (அம்சத்தோடுகூடியது) ஆம்.

187-203. ஜீவேசுவரர்களிடத்து விசாரம்.

187. மாயை அவித்தை பூர்வகமாக ஜீவேசுவரர்களது வடிவத்தின் நான்கு பக்ஷம்.

க. சுத்தசேதனத்தின் ஆசிரிதமான மூலப்பிரகிருதியில் சேதனத்தின் பிரதிபிம்பம் ஈசுவரனும். * ஆவரணவிக்ஷேப சக்தி விசிஷ்டமூலப் பிரகிருதியின் அம்சங்களை அவித்தை யென்பர். அவித்தை வடிவமாகிய அநந்த அம்சங்களிலிருக்கும் சேதனத்தின் அநந்தப் பிரதிபிம்பத்தை ஜீவனென்பர்.

* "பிரஹ்மமில்லை, காணப்படவில்லை" என்று வியவகரித்தற் குரிய தாய்ப் பிரஹ்ம சைதன்னியத்தை மறைத்தற் கநுகூலமான சக்தி ஆவரணசக்தியாம். அந்தந்த ஜீவ அசாதாரண துக்கமுதலிய விக்ஷே பத்திற்கு அநுகூலமான சக்தி விக்ஷேபசக்தியாம்.

தத்துவ விவேகநூலில் இவ்வாறு ஜீவேசுவர நிரூபண மிருக்கின்றது:—௨. ஜகத்திற்குக் காரணவடிவமாயுள்ள பிரகிருதிக்கு இரண்டு வடிவம் கற்பிதமாம். இதனுற்றான் மூலப்பிரகிருதியின் பிரசங்கத்தில் "ஜாயாவாவித்யாவ ஸ்வயமேவஹவதி— மாயையும் அவித்தையும் தானேயாகின்றது" என்று சுருதி இருக்கின்றது. "தானே" என்பது ஜகத்தின் மூலப்பிரகிருதி தானே மாயை வடிவமும் அவித்தை வடிவமு மாகின்றது. சுத்த சத்துவப் பிரதானம் மாயையாம். மலின சத்துவமுடையது அவித்தையாம். இரஜோகுண தமோகுணங்களால் அமிழ்த்தப் பட்ட சத்துவத்தினை மலினசத்துவ மென்பர். எதனுல் ரஜோ குண தமோகுணங்கள் அமிழ்த்தப்பட்டன வாகின்றனவோ அதனைச் சுத்த சத்துவ மென்பர். மறைக்கப்பட்டதனை அபிபூதம் (அமிழ்த்தப்பட்டது) என்பர். முற்கூறிய வடிவ மாயையில் பிரதிபிம்பம் ஈசுவரனும். அவித்தையில் பிரதிபிம்பம் ஜீவனும். ஈசுவரனது உபாதியாகிய மாயையின் சத்துவம் சுத்தமாயிருத்தலின் ஈசுவரன் சர்வஞ்ஞனுவன். ஜீவனது உபாதியாகிய அவித்தையின் சத்துவம் மலினமாய் இருக்கின்றதாகலின் ஜீவன் அற்பஞ்ஞனுவன்.

சில நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:—௩. முற்கூறிய சுருதியில் இரண்டு வடிவமுடைய பிரகிருதி சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் இது எதுவாம்:—விக்ஷேப சக்தியின் பிரதானத்தன்மையினுல் மாயை என்பர். ஆவரண சக்தியின் பிரதானத்தன்மையினுல் அவித்தை என்பர். ஈசுவரனது உபாதியாகிய மாயையில் ஆவரணசக்தி யில்லை. ஆதலால், மாயையிற் பிரதிபிம்பமாகிய ஈசுவரனுக்கு அறியாமை யில்லை. ஆவரண சத்தியுடைய அவித்தையிற் பிரதிபிம்ப ஜீவருக்கு அறிவின்மை யிருக்கின்றது.

சம்க்ஷேபசாரீரகத்தில் இது சொல்லப்பட்டிருக்கின்றது:— ௪. ஜீவனது உபாதி காரியமும், ஈசுவரனது உபாதி காரணமுமா மென்று சுருதி கூறியிருக்கின்றது. ஆதலால், அவித்தையிற் பிரதிபிம்பன் ஈசுவரனும், அந்தக்கரணத்தில் பிரதிபிம்பன் ஜீவனுமாவர். இப்பிரசங்கத்தில் பிரதிபிம்பத்தை ஜீவனென்பர்; அல்லது ஈசுவர னென்பர். ஆண்டுக் கேவலப் பிரதிபிம்பத்திற்கு ஜீவத்தன்மை அல்லது ஈசுவரத்தன்மை இஷ்டமன்று. பிரதி

விசிஷ்ட சேதனத்திற்கு ஜீவத்தன்மையும் ஈசுவரத்தன்மையுமா மென்று அறிதல்வேண்டும். ஏனெனின், கேவலப் பிரதிபிம்பத் திற்கு ஜீவத்தன்மை ஈசுவரத்தன்மை யுளதாயின், ஜீவவாசக பத ஈசுவரவாசக பதங்களில் பாகத்தியாக லக்ஷணையின் அசம் பவ முண்டாகும்.

பரமார்த்தமோ இதுவாம்:—முற்கூறிய நான்கு பக்ஷங்களி லும் பிம்பப் பிரதிபிம்பங்களுக்கு அபேதவாத முண்டு. இந்த வாதத்தில் பிரதிபிம்பம் மித்தையன்று. ஆனால், கழுத்திலிருக் கும் முகத்திலேயே பிரதிபிம்பத்தன்மை தோற்றுகின்றது. அது பிரமவடிவப் பிரதீதி யாகின்றது. ஆதலால், பிரதிபிம்பத் தன்மைத் தர்மமோ மித்தையாம்; சொரூபமாகப் பிரதிபிம்பம் மித்தையன்று. இவ் வர்த்தம் மேல் விளக்கமாகும்.

188. முற்கூறிய நான்கு பக்ஷங்களிலும் முக்தஜீவர்களுக்குச் சுத்தப் பிரஹ்மத்தோடு அபேத முளதாதல்

முற்கூறிய நான்கு பக்ஷங்களிலும் ஜீவேசுவரர் இருவர்களை யும் பிரதிபிம்பமெனக் கொண்டிருக்கின்றனர். ஆதலால், முக்த ஜீவர்களால் அடைப்படுவது சுத்தப்பிரஹ்மமாம்; ஈசுவர னன்று. ஏனெனின், ஒரு உபாதி நசிக்கின், அப்போது அவ் வுபாதியின் பிரதிபிம்பத்திற்கு மற்றப் பிரதிபிம்பத்தோடு அபேதம் உண்டாகிறதில்லை; ஆனால், தனது பிம்பத்தோடு அபேத முண்டாகின்றது. ஈசுவரனும் பிரதிபிம்பமாம். ஆத லால், ஜீவரூபப் பிரதிபிம்பத்தின் உபாதி நாசமாகப் பிரதிபிம்ப வடிவ ஈசுவரனோடு அபேதம் சம்பவிக்கிறதில்லை; ஆனால், பிம்பவடிவ சுத்தப்பிரஹ்மத்தோடுதான் அபேத முண்டா கின்றது.

189. முற்கூறிய நான்கு பக்ஷங்களிலும் ஆறு அநாதி பதார்த்தங்களைக் கூறி, மூவகைச் சேதனத்தை அங்கீகரித்தல்

இவ்வாற்றால் முற்கூறிய பக்ஷங்களில் ஜீவன், ஈசுவரன், சுத்தப்பிரஹ்மம் என்னும் பேதத்தினால் மூவகைச் சேதனம் அங்கீகாரமாம். இதனாற்றான் வார்த்திகத்தில் ஆறு பதார்த்தம் அநாதி யெனப்பட்டிருக்கின்றது. க. சுத்தசேதனம்; உ. ஈசுவர

சேதனம், ௩. ஜீவசேதனம், ௪. அவித்தை, ௫. அவித்தைக்கும் சேதனத்திற்கும் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்தம், ௬. இவ்வைந்திற்கும் ஒன்றற்கொன்றுள்ள பேதம் என்னும் இவ்வாறு பதார்த்தங்களும் உற்பத்தி சூநியமாயிருத்தலின் அநாதியாம். இவற்றில் சேதனத்திற்கு மூன்றே பேதம் கூறப்பட்டிருக்கின்றது.

190. சித்திரதீபத்தில் வித்தியாரணிய சுவாமிகளாற் சொல்லப்பட்ட சேதனத்தின் நான்குபேதம்.

சித்திரதீபத்தில் வித்தியாரணிய சுவாமியானவர் சேதனத்திற்கு நான்கு பேதம் கூறியிருக்கின்றனர். அங்ஙனமாயினும், கடாகாசம், மகாகாசம், ஜலாகாசம், மேககாசமென்னும்பேதத்தால் ஆகாசத்திற்கு நான்குபேதமுண்டு. கடாவச்சின்ன ஆகாசத்தினைக் கடாகாசமென்பர். நிரவச்சின்ன ஆகாசத்தினை மகாகாசமென்பர். கடஜலத்தில் ஆகாசத்தின் பிரதிபிம்பத்தை ஜலாகாசமென்பர். மேகத்தில் ஜலத்தின் சூக்ஷ்மத்துளிகளிருக்கின்றன. அவற்றில் ஆகாசத்தின் பிரதிபிம்பத்தினை மேகாகாசமென்பர்.

அங்ஙனமே சேதனமும்: ௧. கூடஸ்தன், ௨. பிரஹ்மம், ௩. ஜீவன், ௪. ஈசுவரனென்னும் பேதத்தால் நான்கு வகையாம்.

௧. ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களின் அதிஷ்டான சேதனத்தைக் கூடஸ்தன் என்பர்.

௨. நிரவச்சின்ன சேதனத்தைப் பிரஹ்மம் என்பர்.

௩. சரீரவடிவ கடத்தில் புத்திசொரூப ஜலத்திலுள்ள சேதனத்தின் பிரதிபிம்பம் யாதோ அதனை ஜீவன் என்பர்.

௪. மாயாவடிவ அந்தகாரத்திலுள்ள நீர்த்துளிக்குச் சமமான புத்தி வாசனைகள் எவையோ, அவற்றிலுள்ள பிரதிபிம்பத்தினை ஈசுவரன் என்பர்.

௫. சுழுத்தி அவஸ்தையிலுள்ள புத்தியின் சூக்ஷ்ம அவஸ்தை யாதோ அதனை வாசனை என்பர்.

கேவல புத்திவாசனையில் உள்ள பிரதிபிம்பத்தை ஈசுவரனெனின், புத்திவாசனைகள் அநந்தமாயிருத்தலால் ஈசுவரனும் அநந்தராதல் வேண்டும். ஆதலால், புத்திவாசனை விசிஷ்ட

அஞ்ஞானத்தில் உள்ள பிரதிபிம்பத்தினை ஈசுவர னென்பர். இவ்வாற்றால் விஞ்ஞானமயகோசம் ஜீவனும்.

ஜாக்கிர சொப்பன அவஸ்தைகளிலுள்ள ஸ்தூல அந்தக் கரணத்தினை விஞ்ஞானம் என்பர். அதிலுள்ள பிரதிபிம்பத்தை விஞ்ஞானமயம் என்பர்.

"யான் கர்த்தா, போக்தா, ஸ்தூலன், தூர்ப்பலன், ஒற்றைக்கண்ணன், செவிடன்" என்றிவ்வாறு விசேஷ விஞ்ஞான முடையவன் ஜீவன். சுழுத்தியவஸ்தையில் புத்தி வாசனையோடு கூடிய அஞ்ஞானவடிவ ஆநந்தமயகோசன் ஈசுவரனுவன். ஆநந்தமயகோசத்திற்கு ஈசுவரத்தன்மை மாண்டூக்கிய உபநிஷத்தில் பிரசித்தம். இவ்வாறு சேதனத்தின் நான்கு பேதங்களைச் சித்திரதீபத்தில் கூறியிருக்கின்றார்.

191. பிம்பப் பிரதிபிம்ப வாதத்தோடு ஆபாசவாதத்திற்குள்ள பேதம்

வித்தியாரணிய சுவாமிகள் மதத்தில் பிரதிபிம்பம் மித்தையாம். முற்கூறிய பக்ஷங்களில் பிம்பப் பிரதிபிம்பங்களுக்கு அபேதமிருத்தலின் பிரதிபிம்பம் சத்தியமாம். ஒரே பதார்த்தத்தில் உபாதிகளின் சந்நிதானத்தால் பிம்பத்தன்மைப் பிரதிபிம்பத்தன்மைப் பிரமமுண்டாகின்றது. பிம்பத்தின் சொரூபமே பிரதிபிம்பமாம். வித்தியாரணிய சுவாமிகள் மதத்தில் கண்ணுடிமுதலியவற்றில் பிம்பத்தின் சந்நிதானத்தினால் அநிர்வசனீயப் பிரதிபிம்பத்தின் உற்பத்தி உண்டாகின்றது. ஆதலால், ஜீவேசுவரர்களது சொரூபம் மித்தையாம்.

192. ஆபாச வாதத்தின்படி ஜீவப்பிரஹ்மங்களின் அபேத வாக்கியங்களில் பாதசமானுதிகரண முளதென்ல்.

ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு அபேதத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியங்களில் பாத * சமானுதிகரண முண்டு; அபேத சமானுதிகரண மில்லை. எங்ஙனம் புருஷனிடத்துத் தாணுப்

* ஈண்டு மூலக்கிரந்தகாரரால் அப்பியாசிகள் சுலபமாய் உச்சரிக்கும்பொருட்டுச் சாமானுதிகாணியம் என்னும் பதம் சமானுதிகரணமென்று பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

பிரம முண்டாய்ப் புருஷனது ஞானமுண்டாக, "இத் தாணு புருஷன்" என்பதாகப் புருஷனோடு தாணுவிற்கு அபேதம் கூறின், ஆண்டுத் தாணுவின் அபாவமுடையவன் புருஷன், அல்லது தாணுவின் அபாவம் புருஷன் என்றிவ்வாறு ஞான முண்டாகின்றது. அதிகரணத்தினும் அபாவம் வேறுமென்னும் மதத்தில் தாணுவின் அபாவமுடையவன் புருடனுமென்னும் போத முண்டாகின்றது. கற்பிதத்தின் அபாவம் அதிஷ்டான வடிவமாமென்னும் மதத்தில் தாணுவின் அபாவம் புருஷ னென்னும் போத முண்டாகின்றது.

இவ்வாறே யானென்னும் சொல்லிற்குப் பொருளாகிய "ஜீவன் பிரஹ்மம்" என்னும் வாக்கியத்திற்கு ஜீவனது அபாவ முடையது பிரஹ்மமா மென்பது பொருள்; அல்லது ஜீவனது அபாவம் பிரஹ்மமா மென்பது பொருள். அபாவத்தினைப் பாத மென்பர். முற்கூறியபடி கற்பித பதார்த்தத்திற்குச் சத்திய அதிஷ்டானத்தோடு அபேதங் கூறின் ஆண்டுப் பாத சமாநாதி கரணமே சொல்லக் கருதியதாம்.

193. கூடஸ்தப் பிரஹ்மங்களின் அபேத ஸ்தலத்தில் அபேத (முக்கிய) சமாநாதிகரண முளதெனல்

யாண்டுக் கூடஸ்தருக்குப் பிரஹ்மத்தோடு பேதம் சொல் லப்படுகின்றதோ, ஆண்டு அபேதசமாநாதிகரண முண்டு. ஜலா காசத்திற்கு மகாகாசத்தோடு அபேதம் கூறுமிடத்து, ஜலா காசத்திற்கு மகாகாசத்தோடு பாதசமாநாதிகரண முண்டு. கடா காசத்திற்கு மகாகாசத்தோடு அபேதங் கூறின், ஆண்டு அபேத சமாநாதிகரண முண்டு. இதனையே முக்கியசமாநாதிகரண மென் பர். இவ்வாறு வித்தியாரணிய சுவாமிகள் ஜீவனுக்குப் பிரஹ் மத்தோடு பாதசமாநாதிகரணமே எழுதி யிருக்கின்றனர்.

194. முற்கூறிய பாதசமாநாதிகரணத்தில் விவரணகாரரது வசனத்தோடு விரோதமின்மை

விவரண கிரந்தத்தில் "யான் பிரஹ்மம்" என்னும் வாக்கி யத்தில் யானென்னும் சொற்பொருளாகிய ஜீவனுக்குப் பிரஹ் மத்தோடு முக்கிய சமாநாதிகரணம் எழுதப்பட்டிருக்கின்றது. மகா வாக்கியத்தில் பாதசமாநாதிகரணத்தின் கண்டனமும் எழு தப்பட் டிருக்கின்றது. அதற்குச் சமாதானம் வித்தியாரணிய

சுவாமிகள் இவ்வாறு எழுதியிருக்கின்றனர்:—புத்தியிலுள்ள சிதாபாசனுக்கும் கூடஸ்தனுக்கும் அந்நியோந்நியாத்தியாச முண்டு. ஏனெனின், சிதாபாசவிசிஷ்ட புத்திக்கு அதிஷ்டானம் கூடஸ்தனும். யானெனும் உணர்ச்சிக்கு விஷயம் சிதாபாச விசிஷ்ட புத்தியாம். தானெனும் உணர்ச்சிக்கு விஷயம் கூடஸ்தனும். "யான்றா னறிகின்றேன், நீதானறிகின்றாய், அவன்றா னறிகின்றான்" என்றிவ்வாறு சகல உணர்ச்சியிலும் கலந்திருப்பது தானென்னும் சொல்லின் பொருளாம். யான், நீ முதலிய சொற்களின் பொருள் வியபிசாரியாம் (பிறழ்ச்சி யுள்ளதாம்). தானெனும் சொல்லிற்குப் பொருளாகிய கூடஸ்தன் எல்லாவற்றினும் கலந்திருத்தலால் அதிஷ்டானமாம். நான் நீ முதலிய சொற்களுக்குப் பொருளாகிய சிதாபாசவிசிஷ்ட புத்திவடிவ ஜீவன் வியபிசாரியா யிருத்தலின் அத்தியஸ்தமாம். கூடஸ்தரிடத்து ஜீவனது சொரூபாத்தியாச மிருக்கின்றது. ஜீவனிடத்துக் கூடஸ்தரது சம்பந்தாத்தியாச மிருக்கின்றது. இதனாற் கூடஸ்த ஜீவர்களுக்கு அந்நியோந்நியாத்தியாச மிருத்தலின், ஒன்றற்கொன்று விவேக முண்டாகிறதில்லை. ஆதலால், பிரஹ்மத்தோடு கூடஸ்தனுக்குள்ள முக்கிய சமானாதிகரணத்தின் வியவகாரம் ஜீவனிடத்துச் செய்திருக்கின்றனர். ஜீவனிடத்துக் கூடஸ்த தர்மத்தின் ஆரோபமின்றி மித்தையாகிய ஜீவனுக்குச் சத்தியமாகிய பிரஹ்மத்தோடு முக்கிய சமானாதிகரணம் சம்பவியாது. ஆதலால், தனது ஆசிரயமான அந்தக்கரணத்தின் அதிஷ்டானமாகிய கூடஸ்தன் யாதோ, அதன் தர்மத்தைச் சொல்லுங் கருத்தால் ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு முக்கிய சமானாதிகரணம் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு சித்திரதீபத்தில் வித்தியாரணிய சுவாமியானவர் விவரணகாரரது வசனத்தோடு விரோத மில்லாமையை எழுதியிருக்கின்றனர்.

195. விவரணத்திற் கூறிய ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு முக்கிய சமானாதிகரணமும், வித்தியாரணியரது வாக்கியத்தின் பிரௌடிவாதத் தன்மையும்

விவரணகிரந்தத்தை முன் பின் நோக்கின், இத்தன்மை சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், விவரணகிரந்தத்தில் பிம்பத்தின் சொரூபமே பிரதிபிம்பமெனக் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆதலால், அவர்கள் மதத்தில் பிரதிபிம்பத்தன்மை வடிவ ஜீவத்தன்மையோ மித்தையாம். பிரதிபிம்ப வடிவ ஜீவனது

சொரூபம் மித்தையன்று. ஆனால், அதன் சொரூபம் சத்தியமாம். ஆதலால், ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு முக்கிய சமானாதிகரணம் சம்பவிக்கின்றது. வித்தியாரணிய சுவாமிகள் முற்கூறிய விவரணகிரந்தத்தின் அபிப்பிராயம் யாதோ, அது பிரௌடிவாதத்தினாற் கூறப்பட்டதாம்.

எங்ஙனமெனின்: பிரதிபிம்பத்திற்கு மித்தியாத்தன்மை அங்கீகரிக்கினும், ஜீவனிடத்துக் கூடஸ்தத்தன்மையைக் கூறுங் கருத்தால் மகா வாக்கியங்களில் விவரணத்திற் கூறிய முக்கிய சமானாதிகரணம் சம்பவிக்கின்றது. ஆதலால், முக்கிய சமானாதிகரணத்தின் அநுபபத்தி (சம்பவமின்மை)யால் பிரதிபிம்பத்திற்குச் சத்தியத்தன்மை அங்கீகரிக்கத்தக்க தன்று என்னும் பிரௌடிவாதத்தால் வித்தியாரணிய சுவாமியானவர் விவரணத்திற்கு முற்கூறிய அபிப்பிராயத்தை எழுதியிருக்கின்றனர். விவரணகிரந்தத்திற்கு முற்கூறிய அபிப்பிராய மில்லை. மேன்மை (பிரௌடி)யாகச் சொல்லுதல் (வாதம்) பிரௌடிவாத மெனப்படும். பிரதிபிம்பத்திற்கு மித்தியாத்தன்மையை அங்கீகரித்து மகா வாக்கியங்களில் முக்கிய சமானாதிகரணமும் பிரதிபாதனம் செய்யக்கூடும் என்று இவ்வாறு தனது மேன்மையைப் போதித்திருக்கின்றனர்.

196. வித்தியாரணியர் கூறிய சேதனத்தின் நான்கு பேதங்களது அநுவாதம்

இவ்வாற்றால் அந்தக்கரணத்தில் ஆபாசன் ஜீவனாவன். அவன் விஞ்ஞானமயகோச வடிவமாவன். புத்தி வாசனா விசிஷ்ட அஞ்ஞானத்தில் ஆபாசன் ஈசுவரனாவன். அவன் ஆநந்தமயகோச வடிவமாவன். இருவரது சொரூபமும் மித்தையாம். கூடஸ்த ஜீவர்களுக்கு அந்நியோந்யாத்தியாச முண்டு. பிரஹ்ம சேதனத்திற்கும் ஈசுவரனுக்கும் அந்நியோந்யாத்தியாச முண்டு. ஆதலால், ஜீவனிடத்துக் கூடஸ்த தர்மங்களின் ஆரோபத்தால் சிலவிடத்துப் பாரமார்த்திகப் பிரஹ்மத்தன்மை சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே ஈசுவரனிடத்து அத்தியாசத்தாலாகிய பிரஹ்மத்தன்மையைக் கூறும் கருத்தால் சிலவிடத்து வேதாந்தத்தால் அறியப்படுந்தன்மைமுதலிய தர்மங்களைக் கூறியிருக்கின்றனர். ஆதலால், சேதனத்திற்கு

நான்குபேத முண்டென்னும் பிரக்கிரியை சித்திரதீபத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

197. வித்தியாரணிய சுவாமிகள் கூறிய புத்திவாசனையிலுள்ள பிரதிபிம்பத்தினது ஈசுவரத்தன்மையின் கண்டனம்

ஆனால், புத்திவாசனையிலுள்ள பிரதிபிம்பத்திற்கு ஈசுவரத் தன்மை சம்பவியாது. அங்ஙனமே ஆநந்தமயகோசத்திற்கு ஈசுவரத்தன்மை கூறுதலும் சம்பவியாது. அது வருமாறு:— புத்திவாசனை விசிஷ்ட அஞ்ஞானத்திலுள்ள பிரதிபிம்பத்தை ஈசுவரனெனக் கூறுவோரை, ஈசுவரத்தன்மையின் உபாதி கேவலம் அஞ்ஞானமா? அல்லது வாசனையோடு கூடிய அஞ் ஞானமா? அல்லது கேவலம் வாசனையா? என்று கேட்கவேண் டும். முதற்பக்ஷத்தைக் கூறின், புத்திவாசனை விசிஷ்ட அஞ் ஞானத்திலுள்ள பிரதிபிம்பத்திற்கு ஈசுவரத்தன்மை கூறுத லோடு விரோத முண்டாகும். இரண்டாவது பக்ஷத்தைக் கூறின், கேவல அஞ்ஞானத்தினையே ஈசுவரத்தன்மையின் உபாதியாகக் கொள்ளுதல் வேண்டும். புத்திவாசனை விசிஷ்ட அஞ்ஞானத்தினை ஈசுவரனது உபாதியாகக்கூறுதல் பயனின்றிய தாம். வித்தியாரணிய சுவாமிகளது பக்தர், கேவல அஞ்ஞானத் தினை ஈசுவரனது உபாதியாகக் கொள்ளின், ஈசுவரனிடத்துச் சர்வஞ்ஞத்தன்மை சித்தியாதாகலின், சர்வஞ்ஞத்தன்மையைப் பெறுதற்பொருட்டுப் புத்திவாசனையையும் அஞ்ஞானத்திற்கு விசேஷணமாகக் கொண்டிருக்கின்றனர் என்றிவ்வாறு கூறுவா ராயின், அதுவும் அசங்கதமாம். ஏனெனின், அஞ்ஞானத்தின் கண் உள்ள சத்துவ அம்சத்தின் எல்லாவற்றையும் கோசரிக் கும் விருத்தியினாலேயே சர்வஞ்ஞத்தன்மையின் இலாப மிருத்தலால் புத்திவாசனையை அஞ்ஞானத்திற்கு விசேஷண மாகக் கொள்ளுதல் நிஷ்பலமாம். அஞ்ஞானத்திலுள்ள சத்து வாம்சத்தின் விருத்தியினாலேயே சர்வஞ்ஞத்தன்மை சம்பவிக் கின்றது. புத்திவாசனையினால் சர்வஞ்ஞத்தன்மை சித்திக்கிற தில்லை. ஏனெனின், ஒவ்வொரு புத்திவாசனைக்குமோ சகல பதார்த்தங்களையும் கோசரிக்குந்தன்மை சம்பவியாது. சர்வஞ் ஞத்தன்மையை அடைதற்பொருட்டுச் சகல வாசனைகளையும் அஞ்ஞானத்திற்கு விசேஷணமாகக் கொள்ளுதல் வேண்டும்.

பிரளயகாலமின்றி ஏககாலத்திற் சர்வ வாசனைகளும் இருத்தல் சம்பவியாதாகலின், சர்வஞ்ஞத்தன்மையின் சித்தி வாசனையினு லுண்டாகிறதில்லை. இவ்வாற்ருல் புத்திவாசனையோடு கூடிய அஞ்ஞானம் ஈசுவரனது உபாதியாமென்னும் இரண்டாவது பக்ஷமும் சம்பவியாது. கேவலவாசனை ஈசுவரனுக்கு உபாதியாமென்பது மூன்ருவது பக்ஷமாம்.

என்ருலும் இதனைக் கேட்கவேண்டும்:-ஒவ்வொரு வாசனைகளினுமுள்ள பிரதிபிம்பம் ஈசுவரனு? அல்லது சகல வாசனைகளினுமுள்ள ஒரு பிரதிபிம்பம் ஈசுவரனு? முதற்பக்ஷத்தைக் கூறின், ஜீவர்கள்தோறும் புத்தியின் வாசனை அநந்தமாயிருத்தலின், அவற்றினுள்ள பிரதிபிம்ப ஈசுவரனும் அநந்தராவர். ஒவ்வொரு வாசனைக்கும் அற்பத்தைக் கோசரிக்குந் தன்மையிருத்தலால் அவற்றினுள்ள பிரதிபிம்ப வடிவ அநந்த ஈசுவரர்களும் அற்பஞ்ஞரேயாவர். சகல வாசனைகளினும் ஒரு பிரதிபிம்ப முளதெனக் கொள்ளின், சகல வாசனைகளும் பிரளயமின்றி ஏககாலத் தொன்ரு யிருப்பதில்லை. அநேக உபாதியில் அநேக பிரதிபிம்பமே உண்டாகின்றன. ஆதலால், சர்வ வாசனைகளினும் ஒரு பிரதிபிம்பம் சம்பவியாது. இவ்வாற்ருல் கேவல அஞ்ஞானமே ஈசுவரனுக்கு உபாதியாம். வித்தியாரணிய சுவாமியானவர் சித்திரதீபத்தில் வாசனைக்கு நிஷ்பலம் அநுசரித்திருக்கின்றனர்.

198. வித்தியாரணியசுவாமி கூறிய ஆநந்தமயகோசத்தினது ஈசுவரத்தன்மையின் கண்டநம்

ஆநந்தமயகோசத்திற்கு ஈசுவரத்தன்மையைக் கூறுதலும் அசங்கதமாம். ஏனெனின், ஜாக்கிர சொப்பனங்களில் ஸ்தூலாவஸ்தை விசிஷ்டப் பிரதிபிம்பத்தோடுகூடிய அந்தக்கரணத்தை விஞ்ஞானமய மென்பர். விஞ்ஞானமய ஜீவனே சுழுத்திகாலத்தில் சூக்ஷ்மவடிவமாகவும் ஒடுங்கி ஆநந்தமயன் எனப்படுகின்ருன். அவனை ஈசுவரனெனக் கொள்ளின் ஜாக்கிர சொப்பனங்களில் அந்தக்கரணத்தின் ஒடுக்க அவஸ்தையாகிய ஆநந்தமயனது அபாவத்தால் ஈசுவரனது அபாவம் உண்டாதல் வேண்டும். அநந்த புருஷர்களது சுழுத்தியில் அநந்த ஈசுவரர்கள்

உண்டாதல் வேண்டும். ஜீவனுக்குப் பஞ்சகோசத்தை எல்லா நூலாசிரியர்களும் கூறியிருக்கின்றனர். பஞ்சகோச விவேகத்தில் வித்தியாரணியசுவாமி தாமும் ஜீவனுக்குப் பஞ்சகோசத்தைக் கூறியிருக்கின்றனர். ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மை அங்கீகரிக்கின், சகல வசனங்களும் அசங்கதமாகும். ஆதலால், ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மை சம்பவியாது.

199. மாண்டூக்கிய உபநிஷத்தில் கூறிய ஆநந்தமயனது சர்வஞ்ஞத்தன்மை முதலியவற்றின் அபிப்பிராயம்

மாண்டூக்கிய உபநிஷத்தில் ஆநந்தமயனுக்குச் சர்வஞ்ஞத்தன்மை சர்வேசுவரத்தன்மை கூறியிருக்கின்றது. அதனாலும் ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மை சித்திக்கிறதில்லை. ஏனெனின், மாண்டூக்கியத்தில் இப் பொருளுளது:—விசுவ தைஜஸ பிராஞ்ஞ பேதத்தால் ஜீவனுக்கு மூன்று சோரூப முண்டு. விராட்டு, இரணியகருப்ப, அவ்வியாகிருத பேதத்தால் ஈசுவரனுக்கும் மூன்று பேத முண்டு. இரணியகருப்பனுக்கு ஜீவத்தன்மை சகல உபநிஷத்துக்களிலும் பிரசித்தமாம். இரணியகருப்ப வடிவத்தின் அடைவிற்கு ஏதுவாகிய உபாசனை உபநிஷத்திற் பிரசித்தம். உபநிஷத உபாசனை செய்பவனாகிய ஜீவனே கற்பாந்தரத்தில் இரணியகருப்ப பதவியை அடைகின்றான். அங்ஙனமே, விராட்டுத் தன்மையினது அடைவின் உபாசனையினால் கற்பாந்தரத்தில் ஜீவனுக்கே விராட்டு வடிவத்தின் அடைவு உண்டாகின்றது. இரணியகருப்பனது ஐசுவரியத்தினும் விராட்டின் ஐசுவரியம் குறைந்ததாம். ஈசுவரனது ஐசுவரியம் எல்லாவற்றினும் உயர்ந்ததாம். அதனிடத்துத் தாழ்ந்த ஐசுவரியம் சம்பவியாது. அங்ஙனமே இரணியகருப்பனது புத்திரர் விராட்டாவர். அவருக்குப் பசிதாகங்களின் வாதை உண்டாகின்றதென்னும் கதை புராணங்களிற் பிரசித்தமாம். ஆதலால், இரணியகருப்பனுக்கும் விராட்டிற்கும் ஈசுவரத்தன்மையைக் கூறுதல் சம்பவியாது. அங்ஙனமாயினும் சத்தியலோகவாசியாய்ச் சூக்ஷ்ம சமஷ்டியின் அபிமானி சுகபோக்தாவாகிய இரணியகருப்பனே ஜீவனாவன். ஸ்தூலசமஷ்டியின் அபிமானி விராட்டு ஜீவனாவன். சூக்ஷ்மப் பிரபஞ்சத்தைப் பிரேரிக்கும் அந்தரியாமியும் இரணிய கருப்பனென்னும் சொல்லிற்குப் பொருளாவர்.

அங்ஙனமே ஸ்தூலப் பிரபஞ்சத்தைப் பிரேரிக்கும் அந்தரியாமி விராட்டென்னுஞ் சொல்லிற்குப் பொருளாவர். சேதனப் பிரதிபிம்ப கர்ப்ப அஞ்ஞானவடிவ அவ்வியாகிருதமே சூக்ஷ்ம சிருஷ்டி காலத்தில் அதனைப் பிரேரிப்ப தாகும்போது இரணிய கருப்பனென்னும் பெயருடையதாகின்றது. ஸ்தூல சிருஷ்டி காலத்தில் அதனைப் பிரேரிப்ப தாகும்போது விராட்டென்னும் பெயருடைய தாகின்றது. இவ்வாறு ஜீவனிடத்திலும் ஈசுவரனிடத்திலும் இரணியகருப்பன் விராட்டென்னும் சொற்களின் பிரவிருத்தி உண்டாகின்றது. ஆனால், ஸ்தூல சூக்ஷ்மங்களின் அபிமானிகளாகிய ஜீவரிடத்திலோ விராட்டு, இரணியகருப்பனென்னும் சொற்களின் சக்திவிருத்தி இருக்கின்றது. இருவகைப் பிரபஞ்சத்தையும் பிரேரிக்கும் ஈசுவரனிடத்து அச் சப்தங்களின் கௌணிவிருத்தி யிருக்கின்றது.

எங்ஙனம் ஜீவவடிவ இரணியகருப்பனுக்கும் விராட்டிற்கும் தனதெனுந் தன்மைச் சம்பந்தம் ஸ்தூலசூக்ஷ்மப் பிரபஞ்சத்தோடு இருக்கின்றதோ, அங்ஙனமே ஈசுவரனுக்கும் சூக்ஷ்ம ஸ்தூலப் பிரபஞ்சத்தோடு பிரேரிக்கப்படுந் தன்மைச் சம்பந்தமிருக்கின்றது. ஆதலால், சூக்ஷ்மசிருட்டி சம்பந்தமுடைமை வடிவ இரணியகருப்பனிடத்துள்ள குணத்தின் யோகத்தால் ஈசுவரனிடத்து இரணியகருப்ப சப்தத்திற்குக் கௌணிவிருத்தி இருக்கின்றது.

அங்ஙனமே ஸ்தூலசிருட்டி சம்பந்தமுடைமை வடிவ விராட்டின்கண் உள்ள குணத்தின் யோகத்தால் ஈசுவரனிடத்து விராட் சப்தத்திற்குக் கௌணிவிருத்தி இருக்கின்றது. இவ்வாற்றால் இரணியகருப்ப விராட் சப்தங்களுக்கு ஜீவேசுவரர் இருவர்களும் பொருளாவர். எந்தப் பிரசங்கத்தில் எந்த அர்த்தம் சம்பவிக்கின்றதோ அதனைக் கொள்ளல்வேண்டும். குருசம்பிரதாயமின்றி வேதாந்தநூலைப் பார்ப்பாராயின், அவர்களுக்கு முற்கூறிய வியவஸ்தையின் உணர்ச்சி உண்டாகாது. ஆதலால், இரணியகருப்ப விராட்டென்னும் சொற்களால் சிலவிடத்து ஜீவனும் சிலவிடத்து ஈசுவரனும் சம்பவித்தலைக் கண்டு மோகத்தை அடைகின்றார்கள்.

மாண்டூக்கிய உபநிஷதத்தில் மூவகைச்சீவர்களையும் மூவகை ஈசுவரனோடு அபேதமாகச் சிந்தித்தல் எழுதப்பட்டிருக்கின்

றது. எந்த மந்தபுத்தியுள்ள புருஷனுக்கு மகாவாக்கிய விசாரத்தால் தத்துவசாக்ஷாத்கார முண்டாகவில்லையோ, அவனுக்குப் பிரணவ சிந்தனம் மாண்டூக்கியத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் கிரமம் விசாரசாகரத்தின் ஐந்தாவது தரங்கத்தில் விளக்கமாயிருக்கின்றது. ஆண்டு விசுவனுக்கும் விராட்டிற்கும், தைஜசனுக்கும் இரணியகருப்பனுக்கும், அங்ஙனமே பிராஞ்ஞனுக்கும் ஈசுவரனுக்கும் அபேதசிந்தனம் எழுதப்பட்டிருக்கின்றது.

ஆதலால், ஈசுவரனது தர்மமாகிய சர்வஞ்ஞத்தன்மை முதலியன பிராஞ்ஞவடிவ ஆநந்தமயனிடத்து அபேத சிந்தனத்தின்பொருட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மையின் அபிப்பிராயத்தாற் கூறியதன்று. அங்ஙனமே விசுவவிராட்டுகளின் அபேதசிந்தனத்தின் பொருட்டு வைசுவானரனுக்குப் பத்தொன்பது முகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பதினன்கு திரிபுடி, ஐந்து பிராணன் என்னும் இப் பத்தொன்பதும் விசுவனுக்குப் போகசாதனமா யிருத்தலின் விசுவனது முகங்களாம். வைசுவானரன் ஈசுவரனுவன். அவனுக்குப் போக முண்டாகாது. ஆதலால், விசுவவிராட்டுகளின் அபேத சிந்தனத்தின் பொருட்டே விசுவனது போகசாதன பதார்த்தங்களை வைசுவானரனது போகசாதனமாகக் கூறியதாம். விராட்டை வைசுவானரனென்பர். மாண்டூக்கிய வசநத்திற்கு அபேத சிந்தனத்திற் றாற்பரியமாம். வஸ்துவின் சொரூபத்தை அநுசரித்தே சிந்தன முண்டாமென்னும் நியமமில்லை; வேறு வடிவத்தானும் சிந்தன முண்டாம். இவ்வர்த்தமும் விசாரசாகரத்தில் விளக்கமா யுளது. ஆதலால், மாண்டூக்கிய வசனத்தினுல் ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மை சித்திக்கிறதில்லை.

200. ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மையில் வித்தியாரணிய சுவாமிகளுக்குத் தாற்பரிய மில்லாமை

வித்தியாரணிய சுவாமிகளும் பிரஹ்மாநந்த மென்னும் கிரந்தத்தில் ஜீவனது அவஸ்தாவிசேஷம் ஆநந்தமயகோசமாம் என்று எழுதியிருக்கின்றனர். ஆண்டு இது பிரசங்கமாம்:— ஜாக்கிர சொப்பனங்களில் போகத்தைத் தரும் கர்மசமுதாயத்திற்கு நாச முண்டாக, நித்திரை வடிவமாக ஒடுங்கிய அந்தக்

காரணத்திற்குப் போகத்தைத் தரும் கர்மத்தின் வசத்தால் ஜாக்கிரத்தில் கனத்தன்மை உண்டாகின்றது. அதனை விஞ்ஞானமயமென்பர். அவ் விஞ்ஞானமயமே சுழுத்தியில் ஒடுங்கிய அவஸ்தையுடைய அந்தக்கரணவடிவ உபாதியின் சம்பந்தத்தால் ஆநந்தமயமெனப்படுகின்றது. இவ்வாற்றால் விஞ்ஞானமயனது அவஸ்தாவிசேஷமே ஆநந்தமயனெனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், வித்யாரணிய சுவாமிக்கும் ஆநந்தமயகோசத்தில் ஜீவத்தன்மையே இஷ்டமாம். விலக்ஷணமான எழுத்தைக் கண்டும், பரம்பரை வசனத்தில் பரம்பரையாகவும் "ஐந்து விவேகமும் ஐந்து தீபமுமோ வித்தியாரணியரால் செய்யப்பட்டதாம். ஐந்து ஆநந்தம் பாரதிதீர்த்தரால் செய்யப்பட்டதாம்" என்றும் கூறுகின்றனர். என்றாலும் ஒரே கிரந்தத்தில் முன்னுக்குப் பின் விரோதம் சம்பவியாது. ஆதலால், பஞ்சதசி என்னும் நூலில் ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மை சொல்வது கருத்தன்று. சித்திரதீபத்தில் அவருக்கு ஈசுவரத்தன்மை கூறப்பட்டிருக்கின்றது. அது மாண்டூக்கியவசனத்தைப்போலச் சிந்திக்கத்தக்க ஈசுவர அபேதத்தில் தாற்பரியமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆநந்தமயனுக்கு ஈசுவரத்தன்மையில் வித்தியாரணியசுவாமிக்குத் தாற்பரிய மில்லை. இவ்வாற்றால் வித்தியாரணியசுவாமியானவர் சேதனத்திற்கு நான்குபேதம் சித்திரதீபத்திற் சொல்லியிருக்கின்றார்.

201. சேதனத்தின் மூன்று பேதங்களை வித்தியாரணிய சுவாமியோடு எல்லோரும் அங்கீகரித்தல்

அங்ஙனமாயினும், திருக்குத்திருசிய விவேக மென்னும் நூலில் வித்தியாரணிய சுவாமியானவர் கூடஸ்தனுக்கு ஜீவனிடத்து அடக்கம் எழுதியிருக்கின்றனர். என்றாலும், பாரமார்த்திகம் வியாவகாரிகம் பிராதிபாஸிகம் என்னும் பேதத்தால் ஜீவன் மூன்று விதமாவன்; ஸ்தூல சூக்ஷ்மபேத மிரண்டின் அவச்சின்ன கூடஸ்த சேதனம் பாரமார்த்திக ஜீவனாவன். அவனுக்குப் பிரஹ்மத்தோடு முக்கிய அபேத முண்டு. மாயையினால் ஆவரிக்கப்பட்ட கூடஸ்தனிடத்துக் கற்பித அந்தக்கரணத்தில் சிதாபாசன் இருக்கின்றான். அவன் தேகமிரண்டில் அபிமானத்தைச் செய்யும் வியாவகாரிக ஜீவனாவன். பிரஹ்மஞானத்திற்கு

முன் அவனுக்குப் பாத முண்டாகிறதில்லை; ஆகலின், வியாவ காரிக ஞவன். நித்திரைவடிவ மாயையினுல் ஆவரிக்கப்பட்ட வியாவகாரிக ஜீவவடிவ அதிஷ்டானத்திற் கற்பிதன் பிராதி பாஸிக ஜீவனுவன். சொப்பனுவஸ்தையில் பிராதிபாஸிகப் பிர பஞ்சத்தை யான் எனதென்று அபிமானிப்பவன் பிராதிபாஸிக ஜீவனுவன். பிரஹ்மஞான மின்றியே ஜாக்கிரப் பிரபஞ்சத்தின் போதத்தினுல் பிராதிபாஸிகப் பிரபஞ்சத்தின் நிவிருத்தி காலத் தில், வியாவகாரிக ஜீவனது போதத்தால் பிராதிபாஸிக ஜீவ னது நிவிருத்தி உண்டாகின்றது. இவ்வாற்றுல் கூடஸ்தனுக்கு ஜீவனிடத்து அந்தர்ப்பாவ (அடக்க) மிருக்கின்றது. ஆதலால், ஜீவன் ஈசுவரன் சுத்தசேதனம் என்னும் பேதத்தால் மூவகைச் சேதன முண்டு. இப் பக்ஷமே எல்லோருக்கும் சம்மதமாம்; வார்த்திக வசனத்திற்கும் அநுகூலமாம்.

202. ஜீவனுக்கு மோக்ஷதசையில் முற்கூறிய பக்ஷங்களில் சுத்தப் பிரஹ்மத்தோடும், விவரணபக்ஷத்தில் ஈசுவரனேடும் அபேத முண்டெனல்

முற்கூறிய சகலபக்ஷங்களிலும் ஜீவனைப்போல ஈசுவரனும் பிரதிபிம்ப வடிவமாவன். ஆதலால், ஈசுவரனேடு மோக்ஷ தசையில் ஜீவனுக்கு அபேதம் இவர்கள் மதத்தில் உண்டாகிற தில்லை. ஏனெனின், உபாதியின் நீக்கத்தால் ஒரு பிரபிம்பத் திற்கு வேறு பிரதிபிம்பத்தோடு அபேதம் அநுபவகோசர மன்று. ஆனல், பிம்பத்தோடுதான் அபேத முண்டாகின்றது. அங்ஙனமே சுத்தசேதனத்தோடுதான் பிரதிபிம்ப வடிவ ஜீவ னுக்கு மோக்ஷத்தில் அபேதம் உண்டாகின்றது. விவரணகாரர் மதத்தில் பிம்பசேதனம் ஈசுவரனுவன். அவர் மதத்தில் ஈசுவர னேடுதான் ஜீவனுக்கு அபேத முண்டாகின்றது.

203-210. வேதாந்தத்தின் சித்தாந்தத்தில் பிரக்கிரியையின் பேதம்.

203. விவரணகாரர் மதத்தில் அஞ்ஞானத்தில் பிரதிபிம்ப ஜீவனையும் பிம்ப ஈசுவரனையும் நிரூபித்தல்.

விவரணகாரர் மதத்தில் ஜீவேசுவரர்களது உபாதி அஞ் ஞானம் ஒன்றே. அஞ்ஞானத்தில் பிரதிபிம்பம் ஜீவனும், பிம்

பம் ஈசுவரனுமாவர். யாண்டுக் கண்ணாடியில் முகத்தின் பிரதி பிம்பம் தோற்றுகின்றதோ, ஆண்டுக் கண்ணாடியில் முகத்தின் சாயை யில்லை. கண்ணாடியில் அநிர்வசநீயப் பிரதிபிம்பத்தின் உற்பத்தி யில்லை. அங்ஙனமே, வியாவகாரிகப் பிரதிபிம்பத்தின் உற்பத்தியு மில்லை. ஆனால், கண்ணாடியைக் கோசரிக்கும் சாக்ஷுஷவிருத்தி கண்ணாடியினால் தடுக்கப்பட்டதாய்க் கழுத்தி லுள்ள முகத்தினையே விஷயஞ் செய்கின்றது. இவ்வாற்றால் கழுத்தின்பேரிலுள்ள முகத்திலேயே பிம்பப் பிரதிபிம்பத்தன் மை தோற்றுகின்றது. அந்தக் கழுத்திலுள்ள முகம் சத்திய மாம். ஆதலால், பிம்பப் பிரதிபிம்பங்களின் சொரூபமும் கழுத்திலுள்ள முகவடிவமா யிருத்தலின் சத்தியமாம். ஆனால், கழுத்திலுள்ள முகத்தில் பிம்பத்தன்மை பிரதிபிம்பத்தன்மைத் தர்மங்கள் மித்தையாம். அநிர்வசநீய மித்தையான பிம்பத்தன் மை பிரதிபிம்பத்தன்மைகளின் அதிஷ்டானம் முகமாம்.

இவ்வாற்றால் பிம்பத்தினைப்போலப் பிரதிபிம்பத்தின் சொரூபமும் சத்தியமாயிருத்தலின், தர்ப்பண ஸ்தானத்தி லுள்ள அஞ்ஞானத்தின் சந்நிதானத்தால் சுத்த சேதனத்தில் பிம்பஸ்தானத்திலுள்ள ஈசுவரனைப்போலப் பிரதிபிம்பஸ்தானத் திலுள்ள ஜீவனது சொரூபமும் சத்தியமாம். ஆதலால், மகா வாக்கியங்களில் முக்கிய சமானாதிகரணம் சம்பவிக்கின்றது. ஆனால், பிம்பத்தன்மை வடிவ ஈசுவரத்தன்மையும், பிரதிபிம் பத்தன்மை வடிவ ஜீவத்தன்மையுமாகிய இரண்டு தர்மங்களும் மித்தையாம். அவற்றின் அதிஷ்டானம் சுத்த சேதனமாம். முற்கூறியபடி ஜீவேசுவரர்களது உபாதி அஞ்ஞானம் ஒன்று மாகலின், இரண்டற்கும் அஞ்ஞத்துவமேனும் சர்வஞ்ஞத்துவ மேனு முண்டாதல் வேண்டும். அங்ஙனமாயினும், கண்ணாடி முதலிய உபாதியின் இலகுத்தன்மை பீதத்தன்மைமுதலிய தர்மங்களின் ஆரோபம் பிரதிபிம்பத்தில் உண்டாகின்றது; பிம்பத்தி லில்லை. ஆதலால், ஆவரணசுபாவ அஞ்ஞானத்தா லாகிய அற்பஞ்ஞத்தன்மை ஜீவனிடத்தில் இருக்கின்றது. பிம்பவடிவ ஈசுவரனிடத்துச் சொரூபப் பிரகாசத்தினால் சர் வஞ்ஞத்துவ மிருக்கின்றது. பிம்பப் பிரதிபிம்பங்களுக்கு முற் கூறியபடி அபேத மிருக்கின்றதாகலின், பிம்பப் பிரதிபிம்பங்க ளின் தர்மங்களுக்குப் பேதங் கூறுதல் சம்பவியாது. பிம்பப்

பிரதிபிம்பங்களுக்குப் பேத மிருக்குமாயின் முற்கூறிய வியவஸ்தை சம்பவிக்கும். அங்ஙனமாயினும், கண்ணுடியி லிருத்தற் றன்மைவடிவ பிம்பப்பிரதிபிம்பத்தன்மைகளின் பிரமம் கழுத்திலுள்ள முகத்தி லுண்டாகின்றது. பிரமத்தாற் சித்தித்த பிரதிபிம்பத்தன்மையின் அபேக்ஷையால் பிம்பத்தன்மை வியவகாரம் உண்டாகின்றது.

ஆதலால், ஒருமுகத்தில் பிம்பத்தன்மை பிரதிபிம்பத்தன்மை என்னு மிரண்டும் ஆரோபிதமாம். அங்ஙனமே ஒரே முகத்தில் பிம்பத்தன்மை பிரதிபம்பத்தன்மை வடிவத்தால் தர்மியினது பேதத்தின் பிரம முண்டாகின்றது. பிராந்தியினுல் தோற்றும் பிம்பப் பிரதிபிம்பங்களின் பேதம் யாதோ, அதனுல் முற்கூறிய வியவஸ்தை சம்பவிக்கின்றது. இவ்வாற்ருல் விவரணகாரர் மதத்தில் அஞ்ஞானத்தில் பிரதிபிம்பம் ஜீவனும், பிம்பசேதனம் ஈசுவரனுமாவர். அஞ்ஞானம் அநிர்வசநீயமாம். ஆதலால், அஞ்ஞான மிருக்குங்காலத்தினும், அஞ்ஞானத்திற்குப் பரமார்த்தமாக அபாவ மிருத்தலின், பிம்பப் பிரதிபிம்பவடிவ சேதனமே பரமார்த்தமாகச் சுத்தசேதனமாம். ஆதலால், ஈசுவரத்தன்மையின் அடைவும் சுத்தத்தின் அடைவேயாம்.

204. அவச்சேதவாதியினுல் ஆபாசவாதத்தின் கண்டநமும் தனது மதத்தின் நிரூபணமும்

ஓர் ஆசாரியர் இங்ஙனம் கூறுகின்றனர்:—அந்தக்கரண அவச்சின்ன சேதனம் ஜீவனும், அந்தக்கரணத்தினுல் அநவச்சின்ன சேதனம் ஈசுவரனு மாவர். உருவமின்றிய சேதனத்திற்குப் பிரதிபிம்பம் சம்பவியாது. கிணறு தடாகமுதலிய ஜலங்களிலுள்ள ஆகாயத்தில் நீலத்தன்மை விசாலத்தன்மைகள் இல்லாதிருக்க "நீல ஆகாயம், விசால ஆகாயம்" என்று தோற்றுகின்றது. ஆதல்ால், விசாலத்தன்மை விசிஷ்டமும் ஆரோபித நீலத்தன்மை விசிஷ்டமும் ஆகாயத்தின் பிரதிபிம்பமென்று கொள்ளுதல்வேண்டும்; ஆகாயத்தில் உருவ மில்லை, ஆதலால், உருவமின்றியதற்கும் பிரதிபிம்பம் சம்பவிக்கின்றது. என்ருலும், ஆகாயத்திலும் பிராந்தியினுற் சித்தித்த ஆரோபித நீலவுருவ மிருக்கின்றது. சேதனத்தில் ஆரோபித வுருவத்திற்கும் அபாவமிருத்தலின் அதன் பிரதிபிம்பம் சம்பவியாது. எந்தப்

பதார்த்தத்தில் ஆரோபித அல்லது அநாரோபித உருவம் உளதாகின்றதோ, அதன் பிரதிபிம்பம் உண்டாம். முற்றும் உருவமின்றியதின் பிரதிபிம்பம் உண்டாகாது. உபாதியின்றியதன் கண்ணே முற்றும் பிரதிபிம்பம் சம்பவியாது. ஏனெனின், சொரூபமுடைய கண்ணாடிமுதலியவற்றிற்றான் பிரதிபிம்பத்தைக் கண்டிருக்கின்றோம். ஆதலால், உருவமின்றிய அந்தக்கரணத்திலேனும், உருவமின்றிய அவித்தையிலேனும் உருவமின்றிய சேதனத்தின் பிரதிபிம்பம் சம்பவியாது.

உருவமின்றிய சப்தத்திற்கு உருவமின்றிய ஆகாயத்தில் எங்ஙனம் பிரதித்தொனிவடிவப்பிரதிபிம்பத்தைக்கூறுகின்றனரோ அதுவும் அசங்கதமாம். ஏனெனின், முற்கூறியபடி ஆகாயம் உருவமின்றிய தன்று. ஆகாயத்தில் உண்டாகும் பிரதித்தொனி சப்தத்தின்பிரதிபிம்பமன்று. ஏனெனின், பிரதித்தொனியினைச் சப்தத்தின் பிரதிபிம்பமெனக் கொள்ளின், ஆகாயத்தின்கண்ணுள்ள சப்தத்திற்கு அபாவ முண்டாகும். பேரி, தண்டமுதலியவற்றின் சையோகத்தால் பார்த்திவசப்த முண்டாகின்றது. அந்தப் பார்த்திவ சப்தத்தினால் அதன் எதிர்முக தேசத்தில் பாஷாணமுதலியவற்றா லவச்சின்ன ஆகாயத்தில் பிரதித்தொனி வடிவ சப்த முண்டாகின்றது. அந்தப் பிரதித்தொனியாகிய சப்தத்திற்குப் பார்த்திவ சப்தம் நிமித்தகாரணமாம். ஆதலால், பார்த்திவத்தொனிக்குச் சமானமாகவே பிரதித்தொனி உண்டாகின்றது. பிரதித்தொனியினைச் சப்தத்தின் பிரதிபிம்பமாகக் கொள்ளின், பிரதிபிம்பத்தை அநிர்வசநீயமாகக் கொண்டிருக்கின்றனர்; விவரணகாரரை அநுசரித்தவர் பிம்பசொரூபத்தையே பிரதிபிம்பமெனக் கொண்டிருக்கின்றனர்; இவ்விரண்டு மதங்களிலும் ஆகாயத்தின் குணம் பிரதித்தொனி யாகாது. ஏனெனின், வியாவகாரிகஆகாயத்தின் குணம் பிராதிபாஸிக மாகாது. ஆதலால், அநிர்வசநீயப் பிரதிபிம்பவாதத்தில் பிரதித்தொனியைப் பார்த்திவசப்தத்தின் பிரதிபிம்பமெனக் கொண்டு ஆகாயத்தின் குணமெனக் கூறுதல் சம்பவியாது. பிம்பப் பிரதிபிம்பத்தின் அபேதவாதத்தில் பார்த்திவசப்தத்தின் பிரதிபிம்பவடிவப் பிரதித்தொனிக்குத் தனது பிம்பத்தோடு அபேத மிருத்தலால், பிருதிவியின் குணம் பிரதித்தொனியாகும். ஆதலால், பிரதித்தொனியைச் சப்தத்தின் பிரதிபிம்பமெனக் கொள்ளின், எவ்வாற்றானும் ஆகாயத்தின் குணம் பிரதித்தொனியாமென்று கூறுதல் சம்பவியாது. பிரதித்தொனிக்குப் பின்னமான சப்தம், பிருதிவி ஜல அக்கினி

வாயுக்களுக் கிருக்கின்றது. ஆகாயத்தில் வேறுவிதமான சப்த மில்லை. ஆதலால், சப்தமின்றியதே ஆகாசமாகும். சப்த மின்றி யது ஆகாயமென்னும் மதம் அசாஸ்திரீயமாம்.

பூதவிவேகத்தில் வித்தியாரணிய சுவாமி இங்ஙனம் கூறி யிருக்கின்றனர்:—

கடகட என்னும் சப்தம் பிருதிவியினதாம்.

சுளசுள என்னும் சப்தம் ஜலத்தினதாம்.

புகுபுகு என்னும் சப்தம் அக்கினியினதாம்.

சீர்சீர் என்னும் சப்தம் வாயுவினதாம்.

பிரதித்தொனி சத்தம் ஆகாயத்தினதாம்.

அங்ஙனமே அந்நிய நூலாசிரியர்களும் ஆகாயத்தின் குணமே பிரதித்தோனி என்று கூறியிருக்கின்றனர். ஆதலால், சப்தத்தின் பிரதிபிம்பம் பிரதித்தொனி யன்று; ஆனால், ஆகா யத்தின் சுவதந்திர சப்தம் பிரதித்தோனியாம். அதன் உபா தானகாரணம் ஆகாயமாம். பேரிமுதலியவற்றில் எந்தப் பார்த் திவத்தொனி உண்டாகின்றதோ, அது பிரதித்தொனியின் நிமித்தகாரணமாம், ஆதலால், உருவமின்றிய பிரதிபிம்பம் சம்பவியாது. பிரதிபிம்பவாதியானவர், "கிணறு முதலியவற் றின் ஆகாயத்தில் விசாலமுடையது ஆகாசம் என்னும் உணர்ச்சி உண்டாகின்றது. கிணற்றிடத்தில் ஆகாயத்தின் விசா லத்தன்மை யில்லை. ஆதலால், பாகிய தேசத்திலுள்ள உருவ மின்றிய விசால ஆகாயத்தின் பிரதிபிம்பம் கூபஜலத்தில் உண் டாகுதலின் உருவமின்றிய சேதனத்தின் பிரதிபிம்பம் சம்பவிக் கும்" என்றிவ்வாறு கூறுவாராயின், அங்ஙனமாயினும் உருவ முடைய உபாதியிற்றான் பிரதிபிம்பமுண்டாகும். உருவமின்றிய உபாதியில் பிரதிபிம்பம் சம்பவிக்கிறதில்லை. ஆகாயத்தினது பிரதிபிம்பத்தின் உபாதி கூபஜலமாம். அதனிடத்து உருவ மிருக்கின்றது. அவித்தை அந்தக்கரணமுதலியன உருவ மின் றியனவாம். அவற்றில் சேதனத்தின் பிரதிபிம்பம் சம்பவி யாது. ஆதலால், அந்தக்கரணவச்சின்ன சேதனம் ஜீவனாவன். அந்தக்கரண அநவச்சின்ன சேதனம் ஈசுவரனாவன்.

205. அவச்சேதவாதத்தின் கூற்று

அல்லது அவித்தை அவச்சின்ன சேதனம் ஜீவனும், மாயை அவச்சின்ன சேதனம் ஈசுவரனுமாவர்.

206. அந்தக்கரண அவச்சின்னசேதனம் ஜீவன், அநவச்சின்ன சேதனம் ஈசுவரன் என்னும் பக்ஷத்தின் கண்டநம்

அந்தக்கரண அவச்சின்னத்தினை ஜீவனென்றும் அநவச்சின்னத்தினை ஈசுவரனென்றும் கொள்ளுமிடத்து, பிரமாண்டத்திற்கு வெளியிடத்துள்ள சேதனத்தில் ஈசுவரத்தன்மை உண்டாகும். ஏனெனின், பிரமாண்டத்தில் அநந்த ஜீவர்களது அநந்த அந்தக்கரணங்கள் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், பிரமாண்டத்தின் மத்தியில் அநந்த அந்தக்கரணாநவச்சின்ன சேதனத்தின் பெறுதி சம்பவியாது. பிரமாண்டத்திற்கு வெளியிடத்திலேயே ஈசுவரனது இருப்பை அங்கீகரிக்கின், அந்தரியாமியைப் பிரதிபாதிக்கும் வசனத்திற்கு விரோத முண்டாகும். "யொவிஜ்ஞாநெ திஷ்ட2நு விஜ்ஞாந ஃஜெரொ யமயதி—எவர் விஞ்ஞானத்தி லிருப்பவராய் விஞ்ஞானத்தை உள்ளே இயக்குகின்றாரோ" என்னும் வசனத்தில் விஞ்ஞானபதத்தா லறிவிக்கப்படும் ஜீவதேசத்தில் ஈசுவரனது இருப்புச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், அந்தக்கரணத்தால் அநவச்சின்னம் ஈசுவரனன்று; மாயை அவச்சின்ன சேதனமே ஈசுவரனாவன். அந்தக்கரண அநவச்சின்னத்திற்கு ஈசுவரத்தன்மை அங்கீகரிக்கின், அந்தக்கரணத்தோடு சம்பந்தமின்மையே ஈசுவரத்தன்மையின் உபாதி என்பது சித்தமாகின்றது. ஈசுவரனிடத்துச் சர்வஞ்ஞத்தன்மைமுதலியன உபாதியினா லாகியனவாம். அபாவவடிவ உபாதியினால் சர்வஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்கள் சித்திக்கிறதில்லை.

207. திருப்தி தீபத்தில் வித்தியாரணிய சுவாமிகள் கூறிய அந்தக்கரணத்தின் சம்பந்தம் அதன் அபாவம் என்பவற்றினது உபாதித்தன்மையின் அபிப்பிராயம்

வித்தியாரணிய சுவாமிகள் திருப்திதீபத்தில் இது கூறியிருக்கின்றனர்:—எங்ஙனம் அந்தக்கரணத்தின் சம்பந்தம் உபாதியோ, அங்ஙனமே அந்தக்கரணத்தினது சம்பந்தத்தின் அபாவமும் உபாதியாம். எங்ஙனம் இருப்புவிலங்கினால் சஞ்சாரத்தின் நிரோதம் (தடை) உண்டாகின்றதோ, அங்ஙனமே பொன்விலங்கினாலும் சஞ்சாரத்திற்குத் தடை உண்டாகின்றது. இவ்

வற்றால் அந்தக்கரணத்தின் சம்பந்தவடிவ பாவ உபாதியினால் ஜீவசொரூபத்தின் போத முண்டாகின்றது. முற்கூறிய சம்பந்தத்தின் அபாவத்தால் பரமாத்ம சொரூபத்தின் போத முண்டாகின்றது. இவ்வாறு வித்தியாரணிய சுவாமி அந்தக்கரண மின்றியதனையும் உபாதியெனக் கூறியிருக்கின்றனர். அதற்கு இது அபிப்பிராயமாம்:— எங்ஙனம் அந்தக்கரண சம்பந்தத்தால் ஜீவ சொரூபத்தின் போத முண்டாகின்றதோ, அங்ஙனமே அந்தக்கரண மின்றியதனாலும் பிரஹ்ம சொரூபத்தின் போத முண்டாகுதலால் பிரஹ்மத்தினது போதத்தின் உபயோகி அந்தக்கரண மின்றியதுமாம். ஆதலால், வித்தியாரணிய சுவாமிகள் வசனத்தினாலும் அபாவவடிவ உபாதியினால் ஈசுவரனிடத்துச் சர்வஞ்ஞத்தன்மை முதலியவற்றின் சித்தி தோற்றுகிறதில்லை.

208. அவச்சேதவாதத்தின் பேதபூர்வகமாக அதன் சமாப்தி

ஆதலால், மாயாவச்சின்ன சேதனமே ஈசுவரனாவன், ஈசுவரனது உபாதியாகிய மாயை எல்லா விடங்களினு மிருக்கிறது. ஆதலால், ஈசுவரனிடத்து அந்தரியாமித்தன்மையும் சம்பவிக்கின்றது. அந்தக்கரண அவச்சின்னத்தினை ஜீவனெனக் கொள்ளின், கர்த்தா போக்தாவாகிய சேதனத்தின் பிரதேசம் பின்னமாகும். இதனால் செய்ததின் நாசமும் செய்யாததின் அடைவு முண்டாகும். ஆதலால், அவித்தை யவச்சின்ன சேதனமே ஜீவனாம். அந்தக்கரண அவச்சின்ன சேதனம் ஜீவனன்று. இவ்வாறு சில நூலாசிரியர் அவச்சேத வாதத்தினையே அங்கீகரித்திருக்கின்றனர். பிரதிபிம்பத்தைப் பிரதிபாதிக்கும் சுருதி, ஸ்மிருதி வசனங்களுக்கு விரோதமும் பரிகாரமும் அவர்களது நூல்களில் ஸ்பஷ்டமாம்.

209. சித்தாந்தமுக்தாவலி முதலியவற்றிற் கூறிய ஏகஜீவ (திருஷ்டிசிருஷ்டி) வாதத்தின் நிரூபணம்

சித்தாந்தமுக்தாவலிகாரர் முதலியோரது மதம் இதுவாம்:—

விருத்தம்

"வெளிபடா மையினிற் குந்தி சுதனெனக் கன்ன வேந்தன்
இழிபடு ராதை மைந்த னெனத்துய ருற்ற வாங்கு
மிளிர்சிதா நந்த ரூப மெய்க்கனப் பிரஹ்மந் தானே
எளியதோர் ஜீவ பாவ மெய்திய தென்பர் மேலோர்."

எப்போதும் அசங்கதமும் நித்தியமுக்தமுமாகிய சிதாநந்தப் பிரஹ்மத்தில் கற்பித அவித்தை முதலியவற்றின் சம்பந்தத்தால் பிரதிபிம்பிக்குந் தன்மையும் அவச்சின்னத்தன்மையும் சம்பவியா. எங்ஙனம் கானற்சலத்தால் நிரப்பப்பட்டதும், மலடிமைந்தனுகிய குலாலனுல் முயற்கோடாகிய தண்டத்தினுல் ஆக்கப்பட்டதுமாயுள்ள கடத்தின் சம்பந்தத்தால் ஆகாயத்தில் பிரதிபிம்பிக்குந்தன்மை யல்லது அவச்சின்னத்தன்மை உண்டாகிறதில்லை. ஆனுல், ஆகாயத்தின் சமானசத்தையுடைய ஜலம் நிரம்பிய கடம் தடாகமுதலியவற்றின் சம்பந்தத்தினுலேயே ஆகாயத்தில் பிரதிபிம்பிக்குந்தன்மையும் அவச்சின்னத்தன்மையும் உண்டாகின்றன. அவித்தையும் அதன் காரியமும் பிரஹ்மசேதனத்தின் சமானசத்தை யுடையன வன்று. ஆனுல், சுவயமே சத்தாசூன்யமா யிருக்கின்றன. பிரஹ்மத்தின் சத்தையினுல் சத்தையுடையன அவித்தை முதலியனவாம். ஆதலால், முயற்கோடு முதலியவற்றைப்போல அத்தியந்தம் இல்லாதனவாகிய அவித்தைமுதலியவற்ருேடு சேதனத்தின் சம்பந்தத்தைக் கூறுதலே சம்பவியாது. சம்பந்தமின்றியபோது பிரதிபிம்பிக்குந்தன்மை முதலியனவோ அத்தியந்தம் தூரமாம். ஆதலால், எப்போதும் ஏகரசம் பிரஹ்மமாம். அதனிடத்து அவச்சின்னத்தன்மை அல்லது பிரதிபிம்பத்தன்மை வடிவ ஜீவத்தன்மை சம்பவிக்கிறதில்லை. ஆனுல், கற்பித அஞ்ஞானத்தின் கற்பித சம்பந்தத்தால் பிரஹ்மத்தில் உண்டாகாமலே ஜீவத்தன்மை தோற்றுகின்றது.

எங்ஙனம் அவிகாரியாகிய குந்திபுத்திரனிடத்து ராதாபுத்திரத்தன்மையின் பிரதீதி பிரமவடிவமா யுண்டாயிற்ருே, அங்ஙனமே பிரதிபிம்பமுதலிய விகாரமின்றியே பிரஹ்மத்தில் ஜீவத்தன்மைப் பிரமம் உண்டாகின்றது. பிரதிபிம்ப வடிவ அல்லது அவச்சேத வடிவ ஜீவத்தன்மையின் அடைவு உண்டாகிறதில்லை. தனது அவித்தையினுல் ஜீவத்தன்மையை அடைந்த பிரஹ்மமே பிரபஞ்சத்தைக் கற்பிப்பதாயிருத்தலின் சர்வஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களோடு கூடிய ஈசுவரனும் இந்தப் பக்ஷத்தில் ஜீவகற்பிதனுவர்.

எங்ஙனம் சொப்பன கற்பித இராஜாவின் சேவையினுல் சொப்பனத்தில் பலப்பிராப்தி உண்டாகின்றதோ, அங்ஙனமே

சொப்பன கற்பித ஈசுவர பஜனத்தினால் பலப்பிராப்தியும் சம்பவிக்கின்றது. இவ்வாறு அநாதி அவித்தையின் வலியால் தனது பிரஹ்மத்தன்மையின் ஆவரணத்தால் ஜீவத்தன்மைப் பிரமம் உண்டாகின்றது. தத்துவமஸிமுதலிய வாக்கியஜந்நிய சாக்ஷாத்காரத்தால் ஜீவத்தன்மைப் பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. பிரமகாலத்திலும் ஜீவத்தன்மை யில்லை. ஆனால், நித்தியமுக்த சிதாநந்த சொரூபப் பிரஹ்மமே உளதெனும் பக்ஷத்தினையே பாஷ்யகார வார்த்திககாரர்கள் பிருகதாரணியத்தின் வியாக்கியானத்தில் கர்ணனது திருஷ்டாந்தத்தாற் கூறியிருக்கின்றனர். குந்திபுத்திரனாகிய கர்ணனுக்கு ஈனசாதியின் சம்பந்தத்தால் இழிந்ததன்மைப்பிரமம் உண்டாயிற்று. அநேகவித திரஸ்காரத்தா லுண்டாகிய துக்கத்தை அநுபவிக்கின்றவனாய்த் தானாகச் சித்தித்துள்ள குந்திபுத்திரத் தன்மை நிமித்தத்தாலுள்ள மேன்மையினின்றும் நழுவினவனானான்.

ஒருநாள் ஏகாந்தத்தில் சூரியபகவானானவர், "நீ ராதா புத்திரனல்லன்; எனது சம்பந்தத்தால் குந்தியின் உதரத்தினின்றும் உண்டானாய்" என்று கூறினார். இத்தன்மைய சூரியனது வாக்கியத்தினால் தன்னிடத்திருந்த ஈனஜாதியின் மயக்கத்தை விட்டு இயல்பாய்ச் சித்தித்துள்ள குந்திபுத்திரத்தன்மை நிமித்தத்தா லுள்ள மேன்மையை அறிந்தான். அங்ஙனமே சிதாநந்தப் பிரஹ்மமும் அநாதி அவித்தையின் சம்பந்தத்தால் ஜீவத்தன்மைப் பிரமத்தை அடைந்ததாய், சுயமாகச் சித்தித்துள்ள பிரஹ்மபாவத்தை மறந்து அநேகவித துக்கத்தை அநுபவிக்கின்றது.

ஒருகாலத்துத் தனது அஞ்ஞானத்தினால் கற்பித சொப்பன கற்பித ஆசாரியருக்குச் சமானமான ஆசாரியர் வாயிலாக மகாவாக்கிய சிரவணத்தால் தன்னைக் கோசரிக்கும் வித்தையினால் அவித்தையின் நிவிருத்தி உண்டாக, நித்திய பரமாநந்தத்தைச் சொரூப சைதன்னியமாக அநுபவம் செய்கின்றான். இவ்வாறு பிருகதாரணியத்தின் வியாக்கியானத்தில் பாஷ்யகாரர் வார்த்திககாரர் எழுதியிருக்கின்றனர். எங்ஙனம் ஜீவனது அவித்தியா கற்பித ஆசாரியர் வேத உபதேசத்திற் கேதுவாவரோ, அங்ஙனமே ஈசுவரனும் சொப்பன கற்பித இராஜாவைப்

போல ஜீவகற்பிதரேயாய்ப் பஜனத்தினால் பலத்திற் கேது வாகின்றார். இம் மதத்தில் ஏகஜீவவாத முளது. ஆதலால், ஏக ஜீவகற்பித ஈசுவரனும் ஏகமேயாவர். நாநா (பல) ஈசுவரரது அடைவில்லை. சுகர், வாமதேவர் முதலியோரது முக்தியைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத்தினாலும் சொப்பன கற்பித நாநா புருஷர்களைப்போல ஜீவாபாசர்களும் நாநாவாகச் சித்திக்கின்றனர். நாநாஜீவவாதம் சித்திக்கிறதில்லை.

எங்ஙனம்: சொப்பனத்தில் ஒரு திருஷ்டாவிற்கு நாநா புருஷர்கள் தோற்றுகின்றார்கள். அவர்களுள் ஒருவன் பெரிய காட்டில் தப்புவழியிற் செல்பவனாய்ப் புலிமுதலியவற்றா லுண்டாகிய துக்கத்தை அநுபவிக்கின்றான். ஒருவன் இராஜ மார்க்கத்திற் செல்லுகின்றவனாய்த் தனது நகரத்தை அடைகின்றான். ஆண்டு வனத்திற் றிரிதலும் தனது நகரத்தை அடைதலும் சொப்பன திருஷ்டாவிற்கில்லை; ஆனால், ஆபாச புருஷர்களுக்கு உண்டாகின்றது. அங்ஙனமே அவித்தையோடு கூடிய பிரஹ்ம வடிவ ஜீவனுக்குப் பந்தமோக்ஷத்தின் அடைவில்லை; ஆனால், ஆபாச வடிவ ஜீவர்களுக்குப் பந்தமோக்ஷம் தோற்றுகின்றது.

இப் பக்ஷத்தில் யாருடைய ஞானத்தினால் அவித்தையின் நிவிருத்திவடிவமோக்ஷ முண்டாகும் என்று வினாவின், அதற்கு உனது ஞானத்தினால் உண்டாகுமென்பது உத்தரமாம். அல்லது ஒருவருடைய ஞானத்தினாலும் மோக்ஷமுண்டாகிறதில்லை யென்பது உத்தரமாம். ஏனெனின், இந்த மதத்தில் பந்தத்தின் அத்தியந்த அசத்துத்தன்மை ஆத்மாவி லிருக்கின்றது. நித்திய முக்தமாகிய ஆத்மாவிற்கு மோக்ஷ முண்டாகும், அல்லது உண்டாயிருக்கின்றது என்று கூறுதல் சம்பவியாது. இவ் வபிப்பிராயத்தால் மோக்ஷத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியங்களை அர்த்தவாத மென்பர். பந்த மிருக்கின்றது; இற்றையவரை ஒருவரும் முக்த ராகவில்லை; மேல் புருஷார்த்தத்தால் மோக்ஷ முண்டாகும் என்னும் அபிப்பிராயத்தால் வாமதேவர் முதலியோர்களது முக்தியைப் பிரதிபாதிக்கும் வாக்கியங்களை அர்த்தவாத மென்று சொல்லவில்லை. ஏனெனின் பந்தமிருக்க, வாமதேவாதிகளுக்கு மோக்ஷம் உண்டாகாதிருக்குமாயின், மேலும் மோக்ஷத்தை விரும்புதல் பயனின்றியதா மென்னும் புத்தியினால் சிரவணத்தில் பிரவிருத்தியின் அபாவமே யுண்டாகும்.

ஆதலால், ஆத்மாவில் பந்தத்தின் அத்தியந்த அசத்பாவ மிருக்கின்றது; நித்தியமுக்தப் பிரஹ்மவடிவம் ஆத்மாவாம்; அதற்கு மோக்ஷம் சம்பவியாதென்பது உத்தம பூமியிலேறிய வித்துவானது நிச்சயமாம்.

210-216. வேதாந்தசித்தாந்தத்தின் நாநாப் பிரக்கிரியைகளின் தாற்பரியம்

210. சகல அத்வைதக் கிரந்தங்களினது தாற்பரியத்தின் விஷயம்

நித்திய முக்த ஆத்ம சொரூபத்தின் ஞானத்தினால் துக்க பரிகார சுகப்பிராப்தியின் பொருட்டு, அநேகவித கர்த்தவ்விய புத்தியினாற் றோன்றும் கிலேசத்தின் நிவிருத்தியே வேதாந்த சிரவணத்தின் பயனும். ஆத்ம சொரூபத்தில் பந்தத்தின் நாச வடிவ அல்லது பரமாநந்தத்தின் பிராப்தி வடிவ மோக்ஷம் வேதாந்த சிரவணத்தின் பயனன்று. வேதாந்த சிரவணத்திற்கு முன்னும் ஆத்மாவினிடத்துப் பந்தம் அற்பமு மில்லை. அங்ஙனமாயினும் அத்தியந்த அசத்தாகிய பந்தத்தின் பிரதீதி உண்டாகின்றது. ஆதலால், பிரமத்தினாலேயே வேதாந்த சிரவணத்திற் பிரவிருத்தி உண்டாகின்றது. எவனுக்குப் பந்தப்பிரம முண்டாகவில்லையோ, அவனுக்குப் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. எல்லா அத்வைத சாஸ்திரங்களுக்கும் இந்தப் பக்ஷத்திற்றான் தாற்பரியம்.

211. ஜீவேசுவரர்களிடத்துச் சகல நூலாசிரியருடைய சம்மதியின் ஒருமித்த நிச்சயம்

இவ்வாற்றால் ஜீவேசுவரர்களது சொரூபநிரூபணம் நூலாசிரியர்கள் வெகு விஸ்தாரமாக எழுதியிருக்கின்றனர். ஆண்டு ஜீவனது சொரூபத்தில் ஏகத்தன்மை அநேகத்தன்மைகளின் விவாத முண்டு. சகல மதங்களிலும் ஈசுவரன் ஒருவன்; சர்வஞ்ஞன்; நித்தியமுக்தன்; ஈசுவரனிடத்து ஆவரணத்தின் அங்கீகாரம் எந்த அத்வைதவாதத்தின் நூலிலும் இல்லை. ஈசுவரனிடத்து ஆவரணத்தைக் கூறுவோர் வேதாந்த சம்பிரதாயத்தினின்றும் வெளிப்பட்டவராவர். ஆனால், நாநா அஞ்ஞான வாதத்தில் ஜீவனை ஆசிரயித்ததாய்ப் பிரஹ்மத்தை விஷயஞ்செய்வதா

மஞ்ஞானம் என்பது வாசஸ்பதியின் மதம். ஆண்டு ஜீவனது அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்ட ஈசுவரனும் பிரபஞ்சமும் நாநாவெனக் கொண்டிருக்கின்றனர். அங்ஙனமாயினும் ஜீவனது அஞ்ஞானத்தாற் கற்பிக்கப்பட்ட ஈசுவரனும் சர்வஞ்ஞனென்றே கொண்டிருக்கின்றனர். ஈசுவரனிடத்து ஆவரணத்தின் அங்கீகார மில்லை.

212. விவரணகாரர் முறைப்படி பிரதிபிம்பத்தின் சொரூபத்தை நிருபித்தல்

ஜீவேசுவரர்களது சொரூபத்தை நிரூபித்தலில் பிரதிபிம்பத்தின் சொரூபத்தை நிரூபிக்கின்றார் :— விவரணகாரர் மதத்தில் கண்ணாடிமுதலிய உபாதியினால் தடுக்கப்பட்ட நேத்திரத்தின் விருத்தி கண்டத்திலுள்ள முகத்தினை விஷயஞ் செய்கின்றது. யாண்டுத் திருஷ்டாவுக்குப் பின்னமான பதார்த்தத்தின் எதிர் முகத்தன்மை வடிவச் சம்பந்தமும் கண்ணாடியோடு உண்டாகின்றதோ, ஆண்டுக் கண்ணாடியோடு சம்பந்த முடையதாய்த் தடுக்கப்பட்ட நேத்திரத்திற்குத் திருஷ்டாவுக்குப் பின்னமான தர்ப்பணத்திற்கு எதிர்முக பதார்த்தங்களோடும் சம்பந்த முண்டாய்த் தனது இடத்திலேயே அதன் சாக்ஷாத்கார முண்டாகின்றது. யாண்டு அநேக பதார்த்தங்கள் கண்ணாடிக்கெதிர்முகமாகின்றனவோ, ஆண்டுத் தடுக்கப்பட்ட நேத்திரத்தினால் அநேக பதார்த்தங்களின் சாக்ஷாத்கார முண்டாகின்றது. தர்ப்பணத்திற்கு எதிர்முகமாய் உற்பூத உருவ முடையதா யிருப்பதெதுவோ, அதனிடத்துத் தடுக்கப்பட்ட நேத்திரத்தாற் றோன்றிய சாக்ஷாத்காரமும் யோக்கியதையாம். ஆதலால், தர்ப்பணத்திற் கெதிர்முகமான பதார்த்தத்திற்கு எதிரில் நேத்திரத்தின் விருத்தி (ஒளி) செல்லுகின்றது. தனது கோளகத்திலேயே நேத்திரத்தின் விருத்தி வருகின்றதென்னும் நியம மில்லை. இவ்வாற்றால் விவரணகாரர் மதத்தில் கண்டத்தின்கண் உள்ள முகத்தின் சாக்ஷாத்காரமே உண்டாகின்றது. ஆனால், முன்னோக்கியிருக்கும் கழுத்திலுள்ள முகத்தில் எதிர்முகத்தன்மையும், கண்ணாடியி லிருத்தற்றன்மையும், தன்னின் வேறாய தன்மையுமாகிய பிரம முண்டாகின்றது. ஆதலால், கண்ணாடியில், எதிர்முகமான பிரதிபிம்ப மிருக்கின்றது, எனது முகத்தின் வேறாயிருக்கின்றது என்னும் விவகார முண்டாகின்றது.

இப் பக்ஷத்தில் இது சங்கையாம்:—க. பிம்பவடிவ முகமுதலியவற்றின் சாக்ஷாத்காரமே தடுக்கப்பட்ட நேத்திரத்தினுல் உண்டாகுமாயின், சூரியனது பிரகாசத்தினுல் நேத்திரத்திற்குத் தடை உண்டாகின்றது. ஆதலால், ஜலத்தினுல் தடுக்கப்பட்ட நேத்திரத்தினுலும் சூரியனது சாக்ஷாத்காரம் சம்பவியாமையால், ஜலதேசத்தில் சூரியனினும் வேருகிய அதனது பிரதிபிம்பத்தின் உற்பத்தியை அங்கீகரித்தல்வேண்டும். உ. பிம்பத்தினது சாக்ஷாத்காரத்தின்பொருட்டு உபாதியோடு சம்பந்த முடையதாய் நேத்திரத்தின் விருத்தி தடுக்கப்படுகின்றதென்று அங்கீகரிக்கின், ஜலத்தினுள் ளிருக்கும் மணலின் சாக்ஷாத்கார முண்டாகலாகாது. இவ்விரண்டு சங்கைக்கும் இது சமாதானமாம்:—க. கேவல நேத்திரத்திற்கு ஆகாயத்திலிருக்கும் சூரியனது பிரகாசத்தினுல் தடை உண்டாகின்றது. ஜல முதலிய உபாதியினுல் தடுக்கப்பட்ட நேத்திரத்திற்குச் சூரியப் பிரகாசத்தினுல் தடை உண்டாகிறதில்லை. உ. அங்ஙனமே * ஓர் நேத்திரவிருத்தி ஜலத்திற் பிரவேசித்து அதனுள்ளிருக்கும் மணலை விஷயம் செய்கின்றது. அதே நேத்திரத்தின் வேறு விருத்தி (ஜலத்தினுல்) தடுக்கப்பட்டதாய்ப் பிம்பத்தை விஷயஞ் செய்கின்றது. இது கண்டதை அநுசரித்த கற்பனையாம். ஆதலால், பிம்பத்திற் கந்நியமாகப் பிரதிபிம்ப மில்லையென்பதே விவரணகாரர் மதமாம்.

213. வித்தியாரணியசுவாமி விவரணகாரர்களது மதங்களின் வேற்றுமை

வித்தியாரணிய சுவாமி முதலியோர் பாரமார்த்திக வியாவகாரிக பிராதிபாஸிக பேதத்தால் மூவகைச் சீவன் கூறியிருக்கின்றனர். வியாவகாரிக அந்தக்கரணத்திலுள்ள பிரதிபிம்பத்தினை வியாவகாரிக ஜீவனென்பர். சொப்பனவஸ்தையின் பிராதிபாஸிக அந்தக்கரணத்திலுள்ள பிரதிபிம்பத்தினைப் பிராதிபாஸிக ஜீவ னென்பர். விவரணகாரர் கிரமப்படி பிம்பத்திற்கு வேருகப் பிரதிபிம்ப மில்லாமையால் ஜீவனது மூன்று பேதம் சம்பவியாது. ஆதலால், மூவகை ஜீவவாதத்தை அநுசரித்தவர்கள்

* மணலையும் பிம்பத்தையும் காணும் விருத்திகள் பலவாயினும் அவை விரைவிற் சுழலுதலால் கொள்ளிவட்டம்போல் ஒரே விருத்தியாகக் காணப்படுகின்றன.

பிம்பப் பிரதிபிம்பங்களின் பேதத்தை அங்கீகரிக்கின்றனர். அவர்கள் மதத்தில் கண்ணாடிமுதலிய உபாதியில் அநிர்வசநீயப் பிரதிபிம்பத்தின் உற்பத்தி உண்டாகின்றது. பிரதிபிம்பத்தின் அதிஷ்டானம் கண்ணாடிமுதலியனவாம். பிம்பத்தின் சந்நிதானம் நிமித்தகாரணமாம். நிமித்தகாரண மின்மையால் காரியத்தின் அபாவம் உண்டாகிறதில்லை; பிம்பத்தின் நீக்கத்தினால் பிரதிபிம்பத்தின் அபாவ முண்டாகின்றது.

அங்ஙனமாயினும், நிமித்த காரணத்திற் கிரண்டு பேத முண்டு. ஒன்றோ காரியத்திற்கு மறைவின்றிய முற்காலத் திருப்பதாகிய நிமித்த காரணமாம். வேறு சில காரியகாலத்திருக்கும் நிமித்தகாரணமாம். கடமுதலியவற்றிற்குத் தண்டம் குலாலன்முதலியன நிமித்தகாரணமாம். அவை காரியத்திற்கு முற்காலத் திருப்பன வாதல்வேண்டும். கடமுதலியவற்றின் சத்தை உளதாக அவற்றின் அபேக்ஷை இல்லை. அங்ஙனமே பிரத்தியக்ஷ ஞானத்தில் சுவ (தனது) விஷயம் நிமித்த காரணமாம். ஆண்டு விஷயத்தின் சத்தை ஞானகாலத்தில் அபேக்ஷிக்கப்படுவதாம். அழிவிற் கெதிர்முகமான கடத்தோடு நேத்திரத்தின் சையோக முண்டாகியும், கடத்தின் சாக்ஷாத்கார முண்டாகிறதில்லை.

ஆதலால், ஞானகாலத்தில் வர்த்தமான கடமுதலியனவே தமது சாக்ஷாத்காரத்திற்கு நிமித்தகாரணமாம். தூரத்துள்ள நாநா பதார்த்தங்களில் ஒருமைப்பிரம முண்டாகின்றது. மந்தாந்தகாரத்துள்ள இரஜ்ஜுவில் சர்ப்பப்பிரம முண்டாகின்றது. ஆதலால், ஒருமைப் பிரமத்திற்கு நிமித்தகாரணம் தூரத்திருத்தற்றன்மைத் தோஷமாம். இரஜ்ஜுவின் சர்ப்பப்பிரமத்திற்கு நிமித்தகாரணம் மந்தாந்தகாரமாம். தூரத்திருத்தற்றன்மை மந்தாந்தகார மென்பவற்றின் அபாவ முண்டாக, ஒருமைப்பிரம சர்ப்பப்பிரமங்களின் அபாவம் உண்டாகுதலால், காரியகாலத் திருப்பனவாகிய தூரத்திருத்தற்றன்மை மந்தாந்தகார மென்பன முற்கூறிய இரண்டுவித அத்தியாசங்களுக்கும் நிமித்த காரணமாம். அவ்வாற்றால் பிம்பத்தின் சந்நிதானமும் காரிய காலத்திலிருப்பதேயாய்ப் பிரதிபிம்ப அத்தியாசத்திற்கு ஏது வாதலால், பிம்பத்தின் நீக்கத்தால் பிரதிபிம்பத்தின் அபாவம்

சம்பவிக்கின்றது. ஆதலால், சந்நிதிப்பட்ட பிம்பமோ பிரதி பிம்பத்திற்கு நிமித்தகாரணமாம்.

பிரமத்தின் அதிஷ்டானமே உபாதானகாரண மெனப்படுகின்றது. ஆதலால், பிரதிபிம்பத்தின் உபாதானகாரணம் கண்ணாடிமுதலியனவாம். விவரணகாரர்மதத்தில் பிரதிபிம்பத்தின் சொரூபமோ பிம்பத்தினும் வேறன்று. ஆனால், கண்ணாடியிலிருத்தற்றன்மை எதிர்முகத்தன்மை பிம்பத்தினும் வேறாகுந்தன்மைத் தர்மங்களின் உற்பத்தி கண்டத்திருக்குமுகத்தினுண்டாகின்றது. அம்மூன்று தர்மங்களும் அநிர்வசநீயமாம். அவற்றின் அதிஷ்டானவடிவ உபாதானகாரணம் கண்டத்திருக்கும் முகமாம். சந்நிதிப்பட்ட கண்ணாடிமுதலியன நிமித்தகாரணமாம். இவ்வாற்றால் சேதனத்தின் பிரதிபிம்ப வாதத்தில் இரண்டுமேத முண்டு. விவரணகாரர் மதத்தில் பிரதிபிம்பத்திற்குப் பிம்பத்தோடு அபேத மிருத்தலால் பிரதிபிம்பத்தின் சொரூபம் சத்தியமாம். வித்தியாரணிய சுவாமி முதலியோர்களது மதத்தில் கண்ணாடிமுதலியவற்றில் அநிர்வசநீயமுகாபாசத்தின் உற்பத்தி உண்டாகின்றது. இதனையே ஆபாசவாதம் என்பர். விவரணத்திற் கூறிய பக்ஷத்தினைப் பிரதிபிம்பவாதம் என்பர். இரண்டு பக்ஷங்களின் பரஸ்பர கண்டநமும் சுவபக்ஷத்தின் மண்டநமும் பெருநூல்களில் விளக்கமா யிருக்கின்றன; விரிவஞ்சி எழுதப்படவில்லை.

214. இருவர்பக்ஷங்களும் கொள்ளத்தக்கனவா மெனல்

பிரதிபிம்பவாதத்திலேனும் ஆபாசவாதத்திலேனும் ஆக்கிரக மில்லை. சேதனத்தில் சம்சாரதர்மத்தின் சம்பவ மில்லை; ஜீவேசுவரர்களுக்குப் பரஸ்பரம் பேதமில்லை என்னும் அர்த்தத்தை அறிவித்தற்பொருட்டு அநேகவிதம் சொல்லப்பட்டிருக்கின்றது. எந்தப் பக்ஷத்தினால் அசங்கப் பிரஹ்மாத்மபோத முண்டாகுமோ அந்தப் பக்ஷமே ஆதரிக்கத்தக்கதாம்.

215. பிம்பப்பிரதிபிம்பங்களின் அபேதபக்ஷத்தின் கிரமம் அபேதத்தை அறிவித்தலில் எளிதா மெனல்

அங்ஙனமாயினும், பிம்பப் பிரதிபிம்பங்களின் அபேத பக்ஷத்தின் கிரமத்தால் அசங்கப் பிரஹ்மாத்மபோதம் அனா

யாசமாக உண்டாகின்றது. ஏனெனின், கண்ணாடிமுதலியவற்றில் முகமுதலியவற்றின் இலௌகிகப் பிரதிபிம்பம் உண்டாகின்றது. ஆண்டும் பிம்பத்தின் சொரூபமோ என்றும் ஏகரசமாம். உபாதியின் சந்நிதானத்தினால் பிம்பப் பிரதிபிம்பங்களின் பேதப்பிரம முண்டாகின்றது. அங்ஙனமே பிரஹ்மசேதனமோ என்றும் ஏகரசமாம். அஞ்ஞானமுதலிய உபாதிகளின் சம்பந்தத்தால் ஜீவத்தன்மை ஈசுவரத்தன்மைகளின் பிரதீதிவடிவப் பிரம முண்டாகின்றது. இவ்வாற்றால் அசங்கசேதனத்தில் ஜீவ ஈசபேதங்களின் முற்றும் அபாவ மிருக்கின்றது. ஜீவத்தன்மை ஈசுவரத்தன்மைத் தர்மங்களோ ஒன்றற்கொன்று பின்னமாய்க் கற்பிதமாம். ஒன்றற்கொன்று பின்னமான தர்மிகள் கற்பிதமுமன்று. ஆதலால், பிம்பப் பிரதிபிம்பங்களின் அபேதவாதம் அத்வைத மதத்திற்கு அத்தியந்த அநுகூலமாம்.

216-237. பிரதிபிம்பத்தில் விசாரம்

216. ஆபாசவாதம் பிரதிபிம்பவாதத்தினும் சிறிது பேதமாமாறு

ஆனால், ஆபாசவாதத்தில் எங்ஙனம் அநிர்வசநீயம் பிரதிபிம்பமோ, அதற்கதிஷ்டானம் கண்ணாடிமுதலிய உபாதிகளோ, அங்ஙனமே விவரணத்திற் கூறிய பிரதிபிம்பவாதத்திலும் கண்ணாடியி லிருத்தற்றன்மை எதிர்முகத்தன்மைமுதலிய தர்மங்கள் அநிர்வசநீயமாம். அவற்றின் அதிஷ்டானம் முகமுதலிய பிம்பமாம். ஆதலால், இரண்டு பக்ஷங்களினும் அநிர்வசநீயத்திற்குப் பரிணாமமுடைய உபாதானம் அஞ்ஞானமென்று கூறுதல்வேண்டும்.

217. பிரதிபிம்பத்திற்கு நிழல்வடிவத்தன்மையை நிஷேதித்தல்

சில நூலாசிரியர் சாயையை (நிழலை)ப் பிரதிபிம்பமெனக் கொண்டிருக்கின்றனர். அது சம்பவியாது. ஏனெனின், சரீரம் விருக்ஷமுதலியவற்றினால் எவ்வளவிடத்தில் பிரகாசத்தின் தடை உண்டாகின்றதோ, அவ்வளவிடத்தில் பிரகாச விரோதியான அந்தகார முண்டாகின்றது. அவ் வந்தகாரத்தினைச் சாயை யென்பர். அந்தகாரத்திற்கு நீலவுருவ மிருத்தலால் சாயைக்கும் நியமமாக நீலவுருவ முண்டாகின்றது. ஸ்படிக

முத்துக்களின் பிரதிபிம்பம் வெண்மை யாகின்றது. சொர்ணத்தின் பிரதிபிம்பம் பீத உருவமுடையதாகின்றது. சிவப்பான மாணிக்கத்தின் பிரதிபிம்பத்தில் சிவப்பு உருவ முண்டாகின்றது. பிரதிபிம்பத்தினைச் சாயை வடிவமாகக் கொள்ளின் சகலப் பிரதிபிம்பங்களுக்கும் நீல உருவம் வேண்டும். இதனால் சாயை வடிவம் பிரதிபிம்ப மன்று.

218. பிரதிபிம்பம் பிம்பத்தினும் வேறாகிய வியாவகாரிகத் திரவியவடிவமா மென்பதை நிஷேதித்தல்

சிலர் இங்ஙனம் கூறுகின்றனர்:—அந்தகார சொரூபமாகிய சாயையினும் பிரதிபிம்பத்திற்குப் பேதமிருக்கினும், மீமாம்ஸ கர்மத்தில் ஒளியின்மையை அந்தகாரமெனக் கொள்ளாது ஆலோகவிரோதியாகிய பாவரூபம் அந்தகாரமாம்; அதனிடத்திற் கிரியை யிருத்தலாலும் நீல உருவ மிருத்தலாலும் அந்தகாரம் திரவியமாம்; கிரியையும் குணமும திரவியத்திலேயே யிருக்குமாகலின் பத்தாந்திரவியம் அந்தகாரமாமெனக் கொள்வதுபோல, பிரதிபிம்பமும் பிருதிவி ஜலமுதலியவற்றினும் வேறாகிய திரவியமாம் என்று இவ்வாறு பிரதிபிம்பத்தினைச் சுவதந்திர திரவியமெனக் கொள்ளின், அவனை, அப் பிரதிபிம்பம் நித்தியத் திரவியமா? அல்லது அநித்தியத் திரவியமா? என்று கேட்கவேண்டும்.

நித்தியத்திரவியமாமாயின் ஆகாயமுதலியவற்றைப்போல உற்பத்தி நாசமில்லாததாகவே யிருத்தலின், பிரதிபிம்பத்திற்கு உற்பத்தி நாசம் தோற்றலாகாது. இதனால் பிரதிபிம்பத்தினை அநித்தியத் திரவியமெனின், உபாதானத்தின் தேசத்தில் காரியத்திரவிய மிருக்கின்றது. ஆதலால், பிரதிபிம்பத்தின் உபாதானகாரணம் கண்ணாடி முதலியனவென்றே கொள்ளவேண்டியதாகும். கண்ணாடி முதலியவற்றிற்குப் பிரதிபிம்பத்தின் உபாதானத்தன்மை சம்பவியாது. ஏனெனின், கண்ணாடிமுதலிய உபாதானத்தில் பிரதிபிம்பவடிவத் திரவியத்தின் இருப்பை அங்கீகரிக்கின், அவனை இது கேட்கவேண்டும்:—பிரதிபிம்பத்தினுள்ள உருவம், குறுமை நெடுமைமுதலிய பரிமாணமென்னும் குணங்களும், அங்ஙனமே பிம்பத்தினும் விபரீத எதிர்முகத் தன்மைமுதலிய தர்மங்களும், கைகால் முதலிய அவயவங்க

ளும் பிரதிபிம்பத்தில் தோற்றுகின்றன. அவை பிரதிபிம்பத்தில் வியாவகாரிகமா? அன்று? மித்தையாகத் தோற்றுகின்றனவா? உருவம் பரிமாண முதலியவற்றிற்குப் பிரதிபிம்பத்தில் வியாவகாரிக அபாவம் அங்கீகரித்து, பிரதிபிம்பத்தின் உருவ முதலியவற்றிற்குப் பிராதிபாஸிகம் அங்கீகரிக்கின், வியாவகாரிகத் திரவியசொரூபப் பிரதிபிம்பத்தின் அங்கீகாரம் நிஷ்பலமாம். பிரதிபிம்பத்தின் உருவம் பரிமாண முதலியவற்றை வியாவகாரிகமெனக் கொள்ளின், அற்ப பரிமாணமுடைய கண்ணுடியில் மகா பரிமாணமுடைய அநேக பிரதிபிம்பங்களின் உற்பத்தி சம்பவியாது. பிரதிபிம்ப மித்திபாத் தன்மைபிலோ சரீரத்தின் மத்தியில் சுருங்கிய இடத்தில் சொப்பனத்தின் மித்தையாகிய யானைமுதலியவற்றின் உற்பத்தி உண்டாகுதலால் முற்கூறிய தோஷம் சம்பவியாது.

அங்ஙனமே பிரதிபிம்பத்தினை வியாவகாரிகத் திரவியமெனக் கூறின், ஒருவித உருவமுடைய கண்ணுடியின் சமான உருவமுடைய பிரதிபிம்பத்தின் உற்பத்தியே உண்டாதல் வேண்டும். அநேகவித உருவமுடைய அநேக பிரதிபிம்பங்களின் உற்பத்தி ஒரு கண்ணுடியில் உண்டாகின்றது. ஒரு உருவமுடைய உபாதானத்தினுல் அநேகவித உருவமுடைய அநேக உபார்தே(காரி)யங்களின் உற்பத்தி உண்டாகிறதில்லை. தர்ப்பணத்தின் இடையில் அல்லது தர்ப்பணத்திற்கு அதிசமீபத்தி லுள்ள மற்றைய பதார்த்தங்கள் ஒன்றுந் தோற்றுகிறதில்லை. எதனுல் அநேகவித உருவமுடைய பிரதிபிம்பங்களின் உற்பத்தி சம்பவிக்கின்றதோ, அதனுல் பிரதிபிம்பத்திற்கு வியாவகாரிகத் திரவியவடிவம் கூறுதல் சம்பவியாது. ஆனுல், தர்ப்பணத்தின் அதிசமீபத்தில் உள்ள வேறெதுவுமோ பிரதிபிம்பத்திற்கு உபாதானமாகக் காணப்படுகிறதில்லை. கண்ணுடியே உபாதானமெனக்கொள்ளவேண்டியதாகும். அது சம்பவியாது. ஏனெனின், கனமுள்ளதாய் அவயவத்தோடு கூடியதாய் முன்போல விகாரமின்றியதாய்த் தோற்றிக்கொண்டிருக்க, கண்ணுடியில் குழிவு உயர்வு தாடை மூக்குமுதலிய அநேகவித அவயவமுதலிய வேறு திரவியமாகிய பிரதிபிம்பத்தின் உற்பத்தி கூறுதல் முற்றும் யுக்தியீனமாம். ஆதலால், பிம்பத்திற்கு வேருய் வியாவகாரிகத் திரவியவடிவப் பிரதிபிம்ப மிருக்கின்றதென்னும் பட்சமும் சாயாவாதத்தைப்போல அசங்கதமாம்.

219. ஆபாசவாதப் பிரதிபிம்ப வாதங்களின் யுக்தியோடு கூடிய தன்மையைக் கூறி, இரண்டு பக்ஷங்களிலும் அஞ்ஞானம் உபாதானமாதலைக் கூறுகின்றார்

இவ்வாற்றால் சந்நிதிப்பட்ட கண்ணாடி முதலியவற்றினின் றும் முகமுதலிய அதிஷ்டானத்தில் பிரதிபிம்பத்தன்மைமுத லிய அநிர்வசநீய தர்மங்கள் உற்பத்தியாகின்றன. அல்லது சந் நிதிப்பட்ட முகமுதலியவற்றினின்றும் கண்ணாடிமுதலிய அதி ஷ்டானத்தில் அநிர்வசநீயப் பிரதிபிம்பம் உற்பத்தியாகின்றது என்னும் இரண்டு பக்ஷமும் யுக்தியோடு கூடியனவாம். ஆத லால், அநிர்வசநீய தர்மத்திற்கு அல்லது அநிர்வசநீயப் பிரதி பிம்பத்திற்கு உபாதானகாரணம் கூறுதல்வேண்டும்.

220. மூலாஞ்ஞானத்திற்கு அல்லது தூலாஞ் ஞானத்திற்குப் பிரதிபிம்பத்தின் அல்லது அதன் தர்மங்களின் உபாதானத்தன்மை சம்பவியாமையின் சங்கை

ஆண்டு ஜகத்தின் சாதாரண காரணமாகிய மூலாஞ் ஞானமே பிரதிபிம்பத்தன்மைமுதலிய தர்மங்களுக்காவது அல்லது தர்மிக்காவது உபாதானமெனக் கூறின், ஆகாயமுத லியவற்றைப்போல மூலாஞ்ஞானத்தின் காரியமாகுதலால் பிரதிபிம்பத்தன்மைமுதலிய தர்மம் அல்லது தர்மியாகிய பிரதிபிம்பம் சத்திய மாதல்வேண்டும்; முற்கூறியபடி அநிர்வச நீயமாகக் கொண்டிருக்கின்றனர். ஆதலால், மூலாஞ்ஞானத் திற்கு அநிர்வசநீயத்தின் உபாதானத்தன்மை சம்பவியாது. அங்ஙனமே விவரணகாரர் மதத்தில் முகாவச்சின்ன சேதனத் துள்ள அஞ்ஞானத்தினைப் பிரதிபிம்பத்தன்மைமுதலிய தர்மங் களுக்கு உபாதானமாகக் கொண்டிருக்கின்றனர். வித்தியாரணிய சுவாமிமுதலியோர் மதத்தில் கண்ணாடியவச்சின்ன சேதனத் திருக்கும் அஞ்ஞானத்தைப் பிரதிபிம்பத்திற்கு உபாதானமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவஸ்தா (தூலா) ஞ்ஞானத்தின் காரியத்திற்கு அநிர்வசநீயத்தன்மை யிருத்தலால் சத்தியத் தின் அடைவு இல்லையாயினும், அதிஷ்டான ஞானத்தினால் அநிர்வசநீயத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. பிரதிபிம்பாத்தி யாசத்தின் அதிஷ்டானம் முற்கூறியபடி முகாவச்சின்னசேத

னம் அல்லது கண்ணாடி யவச்சின்ன சேதனமாம். முகத்தின் ஞானம் அல்லது கண்ணாடியின் ஞானமே அதிஷ்டானத்தின் ஞானமாம். அதற்குப் பிந்திய காலத்திலும் பிரதிபிம்பத்தின் பிரதீதி எல்லோருக்கும் அநுபவசித்தமாம். ஆதலால், முகாவச்சின்ன சேதனத்தை, அல்லது கண்ணாடி யவச்சின்ன சேதனத்தை ஆவரிக்கும் அவஸ்தாஞ்ஞானமும் பிரதிபிம்பாத்தியாசத்திற்கு உபாதான மெனல் பொருந்தாது.

221. முற்கூறிய சங்கைக்கு ஓர் நூலாசிரியரது கிரமப்படி சமாதானம்

இந்த ஸ்தானத்தில் ஓர் நூலாசிரியர் இவ்வாறு சமாதானம் செய்கின்றனர்:—சுத்திரஜதமுதலியவற்றின் அத்தியாசத்தில் அதிஷ்டானத்தின் விசேஷ ஞானத்தினால் ஆவரணசத்தி விக்ஷேபசத்தி வடிவ அஞ்ஞானத்தின் இரண்டு அம்சங்களும் நிவிருத்தியாகின்றன. அங்ஙனமாயினும், அநுபவாநுசாரமாகப் பிரதிபிம்பாத்தியாசத்தின் அதிஷ்டான ஞானத்தால் அஞ்ஞானத்தின் ஆவரணசத்தி அம்சமே நிவிருத்தியாகின்றது. ஆதலால், அதிஷ்டான ஞானத்தினால் ஆவரணசத்திவடிவ அம்சத்தின் நிவிருத்தி உண்டாகியும், பிரதிபிம்பமுதலியனவும் அவற்றின் ஞானமுமாகிய விக்ஷேபத்திற் கேதுவான அஞ்ஞானத்தின் அம்சம் இருத்தலால், அதிஷ்டான ஞானத்திற்குப் பிந்திய காலத்திலும் பிரதிபிம்பமுதலியன தோற்றுகின்றன. ஆதலால், உபாதி அவச்சின்ன சேதனத்திலுள்ள தூலாஞ்ஞானத்தின் காரியம் பிரதிபிம்பாத்தியாசமா மென்னும் பக்ஷம் சம்பவிக்கின்றது.

222. முற்கூறிய சங்கைக்குப் பிற நூலாசிரியர் முறைப்படி சமாதானம்

அன்றியும், பிற நூலாசிரியர் மதம் இதுவாம்:—கண்ணாடி முதலியவற்றிற்கு உபாதானமாகிய மூலாஞ்ஞானமே பிரதிபிம்பாத்தியாசத்திற்கு உபாதானமாம். ஆதலால், கண்ணாடிமுதலியவற்றின் ஞான முண்டாகியும் பிரதிபிம்பத்தின் பிரதீதி உண்டாகின்றது. பிரஹ்மத்தின் ஞானத்தினால் பிரஹ்ம சேதனத்தை ஆவரிக்கும் அஞ்ஞானமும் அதன் காரியமும் நிவிருத்தி ஆகின்றன. கண்ணாடிமுதலியவற்றின் ஞானத்தினால்

கண்ணுடிமுதலியவற்ருல் அவச்சின்ன சேதனத்தை ஆவரிக்கும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகியும், பிரஹ்ம சொரூபத்தை ஆவரிக்கும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை.

பிரஹ்மாத்ம சொரூபத்தை மறைக்கும் அஞ்ஞானத்தை மூலாஞ்ஞானம் என்பர்.

உபாதி யவச்சின்ன சேதனத்தை மறைக்கும் அஞ்ஞானத்தை அவஸ்தாஞ்ஞானம் என்பர். அதனையே தூலாஞ்ஞானம் என்பர்.

மூலாஞ்ஞானத்தோடு தூலாஞ்ஞானத்திற்குப் பேத மிருக்கின்றதா? அல்லது அபேத மிருக்கின்றதா? என்னும் விசாரத்தை மேல் எழுதுவோம்.

223. மூலாஞ்ஞான தூலாஞ்ஞானங்களின் பேதத்தில் சிறிது விசாரம்

மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், கண்ணுடி-முதலியவற்றைப் போல வியாவகாரிகமாகவே பிரதிபிம்பமுதலியனவும் உண்டாதல்வேண்டும். பிரஹ்மஞானமின்றியே பிரதிபிம்பத்தன்மை முதலிய தர்மங்களிலும், அங்ஙனமே பிரதிபிம்பத்திலும் மித்தியாத்தன்மைப் புத்தியிருத்தலால் பிராதிபாஸிகமாம். மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், பிராதிபாஸிகத்தன்மை சம்பவியாது.

அங்ஙனமாயினும் பிரஹ்மஞானத்தினுல் நிவிருத்தியாகத்தக்க அஞ்ஞானத்தின் காரியம் வியாவகாரிகமாம்.

பிரஹ்மஞானமின்றியே நிவிருத்தியாகத்தக்க அஞ்ஞானத்தின் காரியம் பிராதிபாஸிகமாம்.

இவ்வாறு வியாவகாரிகப் பிராதிபாஸிகங்களுக்குப் பேதங்கூறின் முற்கூறிய சங்கை உண்டாகின்றது. அஞ்ஞானத்திற்கு வேருனதாய்த் தோஷ ஜந்நியமாகாது, கேவல அஞ்ஞான ஜந்நியமாயின் அதனை வியாவகாரிகம் என்பர்.

அஞ்ஞானத்திற்கு வேருனதாய்த் தோஷ ஜந்நியமாவதைப் பிராதிபாஸிக மென்பர்.

இவ்வாறு வியாவகாரிகப் பிராதிபாஸிகங்களுக்குப் பேதங் கூறின் முற்கூறிய சங்கை சம்பவியாது. ஏனெனின், கண்ணாடி முதலிய உபாதியினால் முகமுதலியவற்றின் சம்பந்த முண்டாகப் பிரஹ்மசேதனத்துள்ள மூலாஞ்ஞானத்தின் பிரதிபிம்பத் தன்மைமுதலிய தர்மவடிவ அல்லது பிரதிபிம்பத் தன்மைமுதலிய தர்மிவடிவ பரிணாம முண்டாகின்றது. இரண்டு பக்ஷங்களிலும் அதிஷ்டானம் பிரஹ்மசேதனமாம்.

224. ஆபாசவாதப் பிரதிபிம்ப வாதங்களில் தர்மி அல்லது தர்மத்தின் அத்தியாசத்தினது உற்பத்திக்கு உபாதானமாகத் தூலாஞ்ஞானத்தைக்கொண்டு அதிஷ்டானத்திற்குப் பேதங் கூறுதல்

வித்தியாரணிய சுவாமிகள் மதத்தில் பிரதிபிம்பத்திற்கு உற்பத்தியை அங்கீகரிக்கின் கண்ணாடிமுதலிய அவச்சின்ன சேதனம் அதிஷ்டானமாம். கண்ணாடிமுதலிய அவச்சின்ன சேதனத்துள்ள அஞ்ஞானம் உபாதானமாம். அங்ஙனமே, விவரணகாரர் மதத்தால் பிரதிபிம்பத்தன்மைமுதலிய தர்மங்களின் உற்பத்தியினையே அங்கீகரிக்கின், பிம்பாவச்சின்ன சேதனம் அதிஷ்டானமாம். பிம்பாவச்சின்ன சேதனத்து அஞ்ஞானம் உபாதானமாம். இவ்வாற்றால் தர்மாத்தியாசபக்ஷ தர்மியத்தியாச பக்ஷங்களில் அதிஷ்டானத்திற்கும் உபாதானத்திற்கும் பேதமுண்டு என்று முன் சொல்லப்பட்டிருக்கின்றது, அது அவஸ்தாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

225. இரண்டு பக்ஷங்களிலும் மூலாஞ்ஞானத்திற்கு உபாதானத்தன்மையை அங்கீகரித்து, அதிஷ்டானத்திற்குப் பேதமும் மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்திற்கு உபாதானமாந் தன்மையின் யோக்கியதையும் கூறுதல்

மூலாஞ்ஞானத்திற்கு உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், இரண்டு மதங்களிலும் அதிஷ்டானத்திற்குப் பேதம் சம்பவியாது. மூலாஞ்ஞானத்திற்கே முற்கூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரித்தல்வேண்டும். ஏனெனின், அவஸ்தாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் உபா

தானத்தன்மையை அங்கீகரிக்கின் கண்ணுடி-முதலியவற்றின் ஞானத்தால், அல்லது முகமுதலியவற்றின் ஞானத்தால் அஞ்ஞானத்தின் ஆவரணசக்தி அம்சத்தின் நிவிருத்தி உண்டாக விக்ஷேபசத்தி அம்சத்தின் ஸ்திதியை அங்கீகரிக்கின், பிரஹ்ம ஞானத்தால் பிரஹ்ம சொரூபத்தை ஆவரிக்கும் மூலாஞ்ஞான அம்சமே நஷ்டமாகும். அங்ஙனமே சுத்திமுதலியவற்றின் ஞானத்தால் சுத்தியாதி யவச்சின்ன சேதனத்தை ஆவரிக்கும் தூலாஞ்ஞாநம்சமே நஷ்டமாகும். வியாவகாரிகப் பிராதிபாஸிக விக்ஷேபத்திற்கேதுவாகிய இருவகை அஞ்ஞாநம்சங்களும் சேஷமாயிருத்தலின், விதேககைவல்யத்திலும் வியாவகாரிகப் பிராதிபாஸிக விக்ஷேபத்தின் இருப்பினுல் சகல சம்சாரத்தின் நீக்கமின்மையும் உண்டாகும். ஆதலால், ஆவரண ஏதுவான அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்தி உண்டாக விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞாநம்சம் எஞ்சியிருப்பதாகக் கூறுதல் சம்பவியாது.

226. தூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையைக் கூறுவோர் மதம்

தூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையைக் கூறுவோர் இங்ஙனம் கூறுகின்றனர்:—ஆவரண ஏதுவாகிய அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்தி உண்டாக விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞாநம்சம் எஞ்சியிருத்தல் சுவாபாவிக மன்று. ஆனல், விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்திக்குப் பிரதிபந்தக முளதாயின், ஆண்டு விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞாநம்சத்தின் சேஷ மிருக்கும். பிரஹ்ம ஞானத்தினுல் ஆவரண ஏதுவாகிய அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்தி உண்டாகியும், விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்தியில் பிரதிபந்தகமான பிராரத்த கர்மமிருக்கும். அவ்வளவு காலம் விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞாநம்சத்தின் சேஷ மிருக்கும். பிராரப்த வடிவப் பிரதிபந்தகத்தின் அபாவ முண்டாக, விக்ஷேப ஏதுவான அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்தி உண்டாகின்றது.

ஆனல், இவ்வளவு பேத முண்டு:—ஆவரிக்கும் அஞ்ஞாநம்சத்தின் நிவிருத்தியோ மகாவாக்கிய ஜந்நிய அந்தக்கரணத்தின் பிரமைவடிவ விருத்தியினுல் உண்டாகின்றது.

பிராரப்த பலத்தால் எவ்வளவு வருஷம் ஜீவித்திருக்கின்றானோ, அதுவரையிலும் முன்விருத்தியோ இருக்கிறதில்லை. விக்ஷேப நிவிருத்தியின் பொருட்டு மரணத்திற்கு மறைப்பின்றிய முற்காலத்தில் மகாவாக்கிய விசாரத்தின் விதானம் (விதி) வித்துவானுக்கில்லை. மரணமூர்ச்சை காலத்தில் மகாவாக்கிய விசாரத்தின் சம்பவமு மில்லை. ஆதலால், விக்ஷேபசத்தியின் நாசத்திற்கேது தத்துவ ஞானத்தின் சம்ஸ்காரத்தோடுகூடிய சேதனமாம். ஆவரண சத்தியின் நாசத்திற்கேது தத்துவஞானமாம்.

எங்ஙனம் மூலாஞ்ஞானத்தினது விக்ஷேபசத்தியின் நிவி ருத்தியில் பிரதிபந்தகம் பிராரப்தகர்மமோ, அங்ஙனமே பிரதி பிம்பாத்தியாசத்தில் விக்ஷேபசத்தியின் நிவிருத்தியில் முக முதலிய பிம்பத்தோடு கண்ணாடிமுதலிய உபாதியின் சம்பந்த மே பிரதிபந்தகமாம். அதன் சற்பாவத்தில் ஆவரண அம் சத்தின் நிவிருத்தி உண்டாகியும், பிரதிபிம்பமுதலிய விக்ஷே பத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. பிம்ப உபாதியின் சம் பந்த வடிவப் பிரதிபந்தகத்தின் நிவிருத்தி உண்டாக, விக்ஷே பத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. சுத்திரஜதமுதலிய அத்தி யாச முண்டாயின், ஆண்டு ஆவரணத்தின் நாசத்திற்குப் பின் விக்ஷேபத்தின் நிவிருத்தியில் பிரதிபந்தகத்தன்மையின் அபா வத்தால் விக்ஷேபம் சேஷ மிராது.

இவ்வாற்றால் விக்ஷேப நிவிருத்தியில் பிரதிபந்தகத்தில் அபாவத்தோடுகூடிய அதிஷ்டானஞானம் ஏதுவாதலாலும், மோக்ஷதசையில் பிராரப்தவடிவப் பிரதிபந்தக மில்லாமையின லும் சம்ஸாரத்தின் உணர்ச்சி சம்பவியாது. ஆதலால், ஆவரண சத்தியின் நாசத்திற்குப் பின்னும் விக்ஷேபசத்தியின் இருப்பை அங்கீகரிக்கின், முற்கூறிய தோஷ மில்லாமையினால் அவஸ் தாஞ்ஞானத்தினையும் பிரதிபிம்பாத்தியாசத்திற்கு உபாதான மாகக் கொள்ளுதல் உசிதமாம்.

227. முற்கூறிய மதத்தை நிஷேதித்தலோடு மூலாஞ் ஞானமே பிரதிபிம்பாத்தியாசத்திற்கு உபாதான மெனல்

இங்ஙனம் கூறுதலும் பொருந்தாது. ஏனெனின், யாண்டுத் தேவதத்தனது முகம் கண்ணாடிமுதலிய உபாதி என்பவற்றின் யதார்த்த சாக்ஷாத்காரம் யஞ்ஞதத்தனுக் குண்டாகின்றதோ,

அதற்குப் பிந்தியகாலத்திலும் தேவதத்தன் முகத்திற்குக் கண்ணாடியோடு சம்பந்த முண்டாக, யஞ்ஞதத்தனுக்குத் தேவ தத்தன் முகத்தினுல் பிரதிபிம்பத்தன்மைமுதலிய தர்மங்க ளின் அத்தியாசம விவரணமதத்தி லுண்டாகின்றது. அங்ஙன மே வித்தியாரணிய சுவாமிகள் மதத்தில் தேவதத்தன் முகத் தின் பிரதிபிம்பத்தினது அத்தியாசம் கண்ணாடியி லுண்டாகின் றது. அது உண்டாகலாகாது. ஏனெனின், முற்கூறிய அத்தி யாசத்தின் நிவிருத்தியில் பிம்ப உபாதிகளின் சம்பந்தமே பிரதி பந்தகமாம். முகம் அல்லது கண்ணாடி வடிவ அதிஷ்டானத்தின் ஞானகாலத்தில் அந்தப் பிரதிபந்தக மில்லாதிருத்தலின், பிரதி பந்தகத்தின் அபாவத்தோடுகூடிய அதிஷ்டான முண்டாகின் றது. விவரணகாரர் மதத்தில் "தேவதத்தனது முகத்தில் தர்ப் பணத்தி லிருக்குந்தன்மை எதிர்முகத்தன்மை முதலியன இல்லை" என்னும் ஞானம் அத்தியாசத்திற்கு விரோதியாம். வித்தியாரணிய சுவாமிகள் மதத்தில் "கண்ணாடியில் தேவதத் தன் முக மில்லை" என்னும் ஞானம் முற்கூறிய அத்தியாசத் திற்கு விரோதியாம். ஏனெனின், இரண்டு மதங்களிலும் கிரம மாகத் தேவதத்தன் முகத்தில் கண்ணாடியி லிருத்தற்றன்மை எதிர்முகத்தன்மை, கண்ணாடியில் தேவதத்தன் முகம் என்ப தாக அத்தியாசத்தின் வடிவத்திற்குப் பேத மிருக்கின்றது. அதற்கேதுவான விக்ஷேபசத்தி விசிஷ்ட அஞ்ஞானம்சத்தின் நிவிருத்தியும் உண்டாயிருக்கின்றது. ஆதலால், உபாதானத் தின் அபாவத்தால் முற்கூறிய ஸ்தலத்தில் யஞ்ஞதத்தனுக்குத் தேவதத்தனது முகத்தின் பிரதிபிம்பப் பிரமம் உண்டாதல் வேண்டும். பிரஹ்மசேதனத்துள்ள மூலாஞ்ஞானத்திற்கே பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக் கின், முற்கூறிய உதாரணத்தில் தேவதத்தனது முகத்தின் ஞானமும் கண்ணாடியின்ஞானமு முண்டாகியும், பிரஹ்மவடிவ அதிஷ்டான ஞானத்தின் அபாவத்தால் உபாதானத்தி னிருப் பால் முற்கூறிய அத்தியாசம் சம்பவிக்கின்றது.

ஆதலால், மூலாஞ்ஞானமே பிரதிபிம்பாத்தியாசத்திற்கு உபா தானமா மென்னும் பக்ஷமே நலமுடையதாம்.

228 மூலாஞ்ஞானம் உபாதானமாம் என்னும் பக்ஷத்திற் சங்கை

ஆனல், இப் பக்ஷத்தில் இது சங்கையாம்:—பிரஹ்மசேத னத்துள்ள மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின்

உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், பிரஹ்மஞானமின்றிப் பிரதிபிம்பப் பிரமத்தின் நிவிருத்தி உண்டாதல் வேண்டும். ஏனெனின், அதிஷ்டானத்தின் யதார்த்த ஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்திவாயிலாகப் பிரமத்தின் நிவிருத்தியுண்டாகின்றது. பிரதிபிம்பாத்தியாசத்தின் அதிஷ்டானம் முற்கூறிய பக்ஷத்தில் பிரஹ்ம சேதனமாம். கண்ணாடி யவச்சின்ன சேதனம் அல்லது முகாவச்சின்னசேதனம் அதிஷ்டானமன்று. முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானத்தால் மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியை அங்கீகரிக்கின், உபாதானத்தின் நாசத்தால் முகம் கண்ணாடிமுதலிய வியாவகாரிக பதார்த்தங்களின் அபாவ முண்டாதல்வேண்டும். ஆதலால், மூலாஞ்ஞானத்திற்கு உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், முகமுதலியவற்றால் பிம்ப உபாதியின் வியோக காலத்திலும் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி சம்பவியாது.

229. இச் சங்கைக்குச் சமாதானம்

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—ஆவரணசத்தி விக்ஷேபசத்தியென்னும் பேதத்தால் இரண்டம்சங்களை யுடையது அஞ்ஞானமாம். பிரதிபந்தகமின்றிய அதிஷ்டான ஞானத்தினால் எல்லா அஞ்ஞானத்தின் நிவிருத்தியும் உண்டாகின்றது. பிராரப்த கர்மமாகிய பிரதிபந்தக மிருக்கின், பிரஹ்மவடிவ அதிஷ்டான ஞான முண்டாகியும், விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞானம்சத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. கடமுதலிய அநாத்ம பதார்த்தகோசர ஞானமுண்டாயின், அவற்றால் அஞ்ஞானத்தின் நிவிருத்தியோ உண்டாகிறதில்லை. ஆனால், எவ்வளவுகாலம் கடாதிகளின் ஸ்புரண மிருக்கின்றதோ, அவ்வளவு காலம் அந்தகாரத்தினால் ஆவரி (மறை) க்கப்பட்ட வீட்டின் ஏகதேசத்தில் பிரபையின் பிரகாசத்தினால் அந்தகாரம் சுருங்குவதுபோல, அஞ்ஞான ஜந்நிய ஆவரணத்தின் சுருங்குதல் உண்டாகின்றது. அங்ஙனமே, முகம் கண்ணாடிமுதலியவற்றின் சாக்ஷாத்காரத்தால் பிரஹ்மத்தை மறைக்கும் மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியானது உண்டாகாவிடினும், அஞ்ஞானத்தாற் றோன்றிய பிரதிபிம்பாத்தியாச வடிவ விக்ஷேபத்திற்கு முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானத்தினால் உபாதானத்தில் ஒடுங்குதல்வடிவ சங்கோசம் உண்டாகின்றது.

உபாதானத்தில் விலயமாதலையே காரியத்தின் சூக்ஷ்ம அவஸ்தையென்பர். இவ்வாற்றால் அதிஷ்டான ஞானத்தின் அபாவத்தால் அஞ்ஞானத்தின் நிவிருத்தியின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தின் பாதவடிவ நிவிருத்தி சம்பவியாதாயினும், முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானத்தால் பிரதிபந்தகாபாவ முண்டாக, காரியத்திற்கு உபாதானத்தில் விலயவடிவ நிவிருத்தி உண்டாகின்றது.

230. ஏகதேசியின் கிரமமாகப் பாதத்தின் இலக்ஷணம்

இவ்வாற்றால் சம்சாரதசையில் பிரதிபிம்பாத்தியாசத்தின் பாதம் உண்டாகிறதில்லை என்று ஓர் ஏகதேசி அங்கீகரித்திருக்கின்றனர். இம் மதத்தில் அபாவ நிச்சயத்தைப் பாதமென்று கூறுவதில்லை. ஏனெனின், "முகத்தில் கண்ணாடியி விருத்தற்றன்மையில்லை, கண்ணாடியில் முக மில்லை" என்று விவரணகாரர் வித்யாரணிய சுவாமிகளின் மத பேதத்தால் இருவகை அத்தியாசத்தின் அபாவ நிச்சயம் சகல அஞ்ஞானிகளுக்கும் அநுபவ சித்தமாம். அதன் அபாவத்தைச் சம்சாரதசையிற் கூறுதல் சம்பவியாது. ஆதலால், பிரஹ்மஞானமின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தின் பாதமில்லை எனக் கொள்ளின், அவர் மதத்தில் கேவலம் அதிஷ்டான சேஷத்தினைப் பாத மென்பர்.

பிரதிபிம்பாத்தியாசத்தின் அபாவ நிச்சயம் முற்கூறியபடி உண்டாகியும், சம்சாரதசையில் அஞ்ஞானத்தின் சத்தையிருத்தலால், கேவல அதிஷ்டானம் சேஷமன்று; ஆனால், அஞ்ஞான விசிஷ்ட அதிஷ்டான மிருக்கின்றது. இவ்வாற்றால் பிரதிபந்தகமின்றிய முகம் கண்ணாடிமுதலியவற்றின் சாக்ஷாத்காரத்தினால் அதிஷ்டான ஞானமின்றிப் பாதவடிவ அஞ்ஞான நிவிருத்தியின் அபாவ முண்டாகியும், தனது உபாதானத்தில் காரியத்தின் விலயவடிவ சங்கோச முண்டாகின்றது. உபாதான வடிவமாகக் காரியம் நிலைத்தலையே சூக்ஷமாவஸ்தை யென்பர்.

231. அநேக நூலாசிரியர்கள் மதப்படி பாதத்தில் இலக்ஷணமும், பிரஹ்மஞானமின்றிப் பிரதிபிம்ப அத்தியாசத்தினது பாதத்தின் சித்தியும்

அநேக நூலாசிரியர் மதத்தில் பிரஹ்மஞானமின்றி மூலாஞ்ஞானத்தின் நாசமின்றியும் மூலாஞ்ஞான ஜந்நியப்

பிரதிபிம்பாத்தியாசத்தின் பாத முண்டாகின்றது. அவர்கள் அபிப்பிராயம் இதுவாம்:—மித்தியாத்துவ நிச்சயம் அல்லது அபாவ நிச்சயம் பாத மெனப்படுகின்றதென்பது சர்வகிரந்தங்களின் நிச்சயமாம். அநேக இடங்களில் மித்தியாத்துவ நிச்சயமும் அபாவநிச்சய பதார்த்த மாகின்றது. இங்கு அதிஷ்டான மாத்திரம் சேஷ மிருக்கின்றது. அஞ்ஞானம் சேஷித் திருக்கவில்லை. இவ் வபிப்பிராயத்தால் சில நூலாசிரியர் அதிஷ்டான மாத்திரத்தின் சேஷமே பாதத்தின் சொரூபமெனக் கூறியிருக்கின்றனர். அதிஷ்டானமாத்திரத்தின் சேஷம் பாதத்தின் லக்ஷணமன்று. பாதத்திற்கு இதுவே லக்ஷணமாயின், ஸ்படிகத்தில் செம்மைப் பிரமமுதலிய ஸோபாதிக (உபாதியோடு கூடிய) அத்தியாச முண்டாகின்றது. அங்கு அதிஷ்டான ஞானத்திற்குப் பிந்தியகாலத்திலும் செம்பாத்தம்பூவிற்கும் ஸ்படிகத்திற்கும் பரஸ்பர சம்பந்தவடிவப் பிரதிபந்தக மிருக்கச் செம்மை அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. அங்ஙனமே, வித்துவானுக்குப் பிராரப்தகர்மப் பிரதிபந்தக மிருக்கச் சரீர முதலியவற்றின் நிவிருத்தி யுண்டாகிறதில்லை. ஆதலால், அஞ்ஞானகாரிய விசிஷ்ட அதிஷ்டானம் இரண்டிடங்களிலு மிருத்தலின், கேவல அதிஷ்டான சேஷத்தின் அபாவத்தால் பாத வியவகார மில்லை. அது உண்டாதல் வேண்டும்.

சுவேத (வெண்மை) ஸ்படிகத்தின் சாக்ஷாத்காரத்தால் செம்மை அத்தியாசத்தின் பாத முண்டாகின்றது. பிரஹ்ம சாக்ஷாத்காரத்தால் ஜீவன்முக்த வித்துவானுக்குச் சம்சாரத்தின் பாத முண்டாகின்றது. இவ்வாற்றால் விக்ஷேபத்தோடு கூடிய அதிஷ்டானத்தில் பாத வியவகாரத்தைச் சகல நூலாசிரியர்களும் எழுதியிருக்கின்றனர். ஆண்டு அத்தியஸ்த பதார்த்தத்தில் மித்தியாத்தன்மை நிச்சயம் அல்லது அபாவநிச்சயமே பாதத்தின் சொரூபமெனச் சம்பவிக்கின்றது. பிரதிபந்தகமின்றிய முகம் கண்ணாடிமுதலியவற்றின் ஞானத்தால் முகத்திற் பிரதிபிம்பத்தன்மைமுதலிய தர்மங்களின், அங்ஙனமே கண்ணாடியில் பிரதிபிம்பமுதலிய தர்மிகளின் மித்தியாத்தன்மை நிச்சய முண்டாகின்றது. அங்ஙனமே அபாவநிச்சய முண்டாகின்றது. ஆதலால், பிரஹ்மஞானமின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தின் பாத முண்டாகிறதில்லை என்று கூறுதல் பொருத்தமுடையதன்று.

232. முகம் கண்ணாடிமுதலிய அதிஷ்டானத்தின் ஞானம் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்திக்கு ஏதுவாதல்

அதிஷ்டான ஞானத்தினால் அத்தியாசத்தின் பாதரூப நிவிருத்தி யுண்டாதல்போல முகம் கண்ணாடிமுதலியவற்றின் அபரோக்ஷஞானத்தினாலும் பிரதிபந்தகமின்றிய காலத்தில் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி அநுபவசித்தமாம். ஆதலால், பிரதிபந்தகாபாவத்தோடுகூடிய முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானமும் அதிஷ்டானத்தினைப்போல அத்தியாச நிவிருத்திக்கு ஏதுவாமென்று மதிக்கத்தக்கதாம். முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாச நிவிருத்தியின் காரணத்தன்மை சம்பவிக்கவும் செய்கின்றது. ஏனெனின், சமான விஷயமுடைய ஞானத்தோடு அஞ்ஞானத்திற்கு விரோத முண்டு. பின்னவிஷயமுடைய ஞானத்தோடு அஞ்ஞானத்திற்கு விரோத மின்று. ஆதலால், முகம் கண்ணாடி முதலிய ஞானத்திற்கு முகம் கண்ணாடியாதி அவச்சின்ன சேதனத்துள்ள அவஸ்தாஞ்ஞானத்தோடுதான் விரோத மிருக்கின்றது. பிரஹ்மஞான ஆச்சாதி (மறை)க்கும் மூலாஞ்ஞானத்தோடு பிரஹ்மஞானமொழிந்த மற்றைய ஞானங்களுக்கு விரோத மில்லை. ஆதலால், பிரஹ்மஞான விரோதியாகிய மூலாஞ்ஞானத்தோடு கண்ணாடிமுதலிய ஞானத்திற்கு விரோத மின்மையால், பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானமாகிய மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியானது இல்லையாயினும், அஞ்ஞான நிவிருத்தியின்றியும் விரோதிஞானத்தால் பூர்வஞானம் நிவிருத்தியாதல் அநுபவசித்தமாம்.

233. முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானத்திற்கு மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தைக் கெடுக்குந் தன்மை

எங்கு இரஜ்ஜுவின் அஞ்ஞானத்தினால் சர்ப்பப் பிரமத்திற்குப்பின் தண்டப்பிரம முண்டாகின்றதோ, அங்குத் தண்டஞானத்தினால் சர்ப்பத்தின் உபாதானமாகிய அவஸ்தாஞ்ஞானத்தின் நிவிருத்தியோ உண்டாகிறதில்லை. ஏனெனின், அதிஷ்டானத்தின் தத்துவஞானத்தினாலேயே அஞ்ஞானத்

தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், இராஜ்ஜுஞான மின்றி இராஜ்ஜு சேதனத்திருக்கும் அஞ்ஞானத்திற்கு நிவிருத்தி சம்பவிக்கிறதில்லை. தண்டப் பிரமத்தினாலே இராஜ்ஜு சைதனத்திருக்கும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகுமாயின், உபாதானத்தின் அபாவத்தால் தண்டாத்தியாசத்தின் சொரூபமே சித்தியாது. ஆதலால், தண்டஞானத்தினால் அஞ்ஞான நிவிருத்தியின்றி எங்ஙனம் சர்ப்பாத்தியாசத்தின் நிவிருத்தி யுண்டாகின்றதோ, அங்ஙனமே "முகத்திற் பிரதிபிம்பத் தன்மை யில்லை, கண்ணாடியில் முகமில்லை" என்றிவ்வாறு முகம் கண்ணாடிகளின் ஞானம் பிரதிபிம்பாத்தியாசத்திற்கு விரோதியா யிருத்தலின், அதனாலும் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானமாகிய மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய ஞானத்தினால் நிவிருத்தி சம்பவிக்கிறதில்லை. முற்கூறிய ஞானத்தினால் மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியைக் கூறின், மூலாஞ்ஞானத்தின் காரியமாகிய முகம் கண்ணாடிமுதலிய வியாவகாரிக பதார்த்தங்களும் நஷ்டமாதல்வேண்டும். ஆதலால், முகம் கண்ணாடிமுதலியவற்றின் ஞானத்திற்கு விரோதியான விஷயத்தையுடையதா யிருத்தலின், அஞ்ஞான நிவிருத்தியின்றியும் பிரதிபிம்பாத்தியாசத்தைக் கெடுக்குந்தன்மை யிருக்கின்றது. பாவாபாவங்களுக்குப் பரஸ்பர விரோதமுண்டு. ஆதலால், அவற்றின் ஞானமும் ஒன்றற்கொன்று விரோதியாம்.

யாண்டு ஸ்தாணுவில் ஸ்தாணுத்தன்மை ஞானத்திற்குப் பின் புருஷத்தன்மைப் பிரம முண்டாகின்றதோ, ஆண்டு "ஸ்தாணுத்தன்மை யில்லை" என்னும் விரோதியாகிய பிரமஞானத்தினால் முன் பிரமஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. கடமுதலிய பூதலத்தில் கடாபாவத்தின் பிரமஞானத்திற்குப்பின் கடத்தோடு இந்திரியத்தின் சையோக முண்டாகக் "கடமுடையது பூதலம்" என்னும் விரோதியாகிய பிரமாஞானத்தினால் பூர்வப்பிரமஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. யாண்டு இராஜ்ஜுவில் சர்ப்பப்பிரமத்திற்குப்பின் தண்டப்பிரமத்தினால் சர்ப்பப்பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றதோ, ஆண்டுத் தண்டப்பிரமத்தினால் சர்ப்பப்பிரமத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது. இவ்வாற்றாற் சிலவிடத்துப் பிரமஞானத்தினால் பிரமா

ஞானத்தின் நிவிருத்தியும், சிலவிடத்துப் பிரமாஞானத்தினால் பிரமஞானத்தின் நிவிருத்தியும், சிலவிடத்துப் பிரமஞானத்தினால் பிரமஞானத்தின் நிவிருத்தியும் உண்டாகின்றன. யாண்டுப் பிரமத்தினால் பிரமையின் நிவிருத்தியும் பிரமத்தினால் பிரமத்தின் நிவிருத்தியும் உண்டாகின்றனவோ, ஆண்டுப் பிரமத்தின் உபாதானமாகிய அஞ்ஞானத்தின் இருப்பிலேயே பூர்வ ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. யாண்டுப் பிரமாஞானத்தினால் பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றதோ, ஆண்டு அதிஷ்டானத்தின் யதார்த்தஞானம் பிரமையாயிருத்தலின், அஞ்ஞானத்தோடு பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. இவ்வாற்றால் அதிஷ்டான ஞானமின்றி மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியுமின்றி முகம் கண்ணாடி-முதலியவற்றின் ஞானத்தால் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி சம்பவிக்கின்றது.

விரோதிஞானத்தினால் பூர்வஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது என்பது நியமம். அதிஷ்டானத்தின் யதார்த்த ஞானத்தினாலேயே பூர்வப் பிரமத்தின் நிவிருத்தி யுண்டாமென்னும் நியமமில்லை. ஆனால், அதிஷ்டானத்தின் யதார்த்த ஞானமின்றி அஞ்ஞானத்தின் நிவிருத்தி யுண்டாகிறதில்லை. ஆதலால், அஞ்ஞானத்தின் நிவிருத்தி கேவல அதிஷ்டானத்தின் விசேஷப் பிரமையினா லுண்டாகின்றது என்பது நியமமாம். விவரணகாரர் மதத்தில் முகத்தில் பிரதிபிம்பத்தன்மை கண்ணாடியி லிருத்தற்றன்மை எதிர்முகத்தன்மை என்னும் அத்தியாசம் உண்டாகின்றது. அதற்கு விரோதி "முகத்தில் பிரதிபிம்பத்தன்மை முதலியன இல்லை" என்னும் ஞானமாம். வித்தியாரணியசுவாமிகளின் மதத்தில் "கண்ணாடியில் முகம்" என்னும் அத்தியாச முண்டாகின்றது. "கண்ணாடியில் முக மில்லை" என்னும் ஞானம் அதற்கு விரோதியாம். நையாயிக மதத்திலும் பாவாபாவங்களுக்கு ஒன்றற்கொன்று விரோதம் அங்கீகரித்து, அவற்றின் ஞானங்களுக்கும் விஷய விரோதத்தால் விரோதம் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றது. இவ்வாற்றால் மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், பிம்ப உபாதியின் சந்நிதான வடிவப் பிரதிபந்தக மின்றிய காலத்தில் முகம் கண்ணாடி முதலியவற்றின்

ஞானத்தால் அஞ்ஞான நிவிருத்தி யின்றியும் முற்கூறிய அத்தியாசத்தின் நிவிருத்தி சம்பவிக்கின்றது.

234. முற்கூறிய பக்ஷத்தில் பத்மபாதாசாரியராற் செய்யப்பட்ட பஞ்சபாதிகையின்படி தூலாஞ்ஞானத்திற்கு அத்தியாசத்தின் ஏதுத்தன்மையைக் கூறும் வாதியின் சங்கை.

ஆனால், இப் பக்ஷத்தில் இது சங்கையாம்:—சாரீரகபாஷியத்திற்குப் பஞ்சபாதிகை என்னும் உரை பத்மபாதாசாரியரால் செய்யப்பட்டிருக்கின்றது. அதற்குப் பாஷியகாரரது வசனத்தினால் சர்வஞ்ஞத்தன்மை உண்டாயிருக்கின்றது. அந்தச் சர்வஞ்ஞ வசனமாகிய பஞ்சபாதிகையில் இது எழுதப்பட்டிருக்கின்றது:—

யாண்டுச் சர்ப்பம் இரஜதமுதலிய பிரம முண்டாகின்றதோ, ஆண்டு இரஜ்ஜு சுத்திகளின் ஞானத்தினால் சர்ப்ப மிரஜத முதலியவற்றின் உபாதானமாகிய அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அஞ்ஞானத்தின் நிவிருத்தியினால் சர்ப்ப மிரஜதமுதலிய அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. இரஜ்ஜு சுத்திமுதலியவற்றின் ஞானத்தினைச் சர்ப்ப மிரஜத முதலியவற்றின் நிவிருத்தியில் சாக்ஷாத் காரணமெனக் கொள்ளின், உபாதானத்தின் நாசத்தால் பாவகாரியத்தின் நாச முண்டாகும் என்னும் நியமத்திற்குக் கேடுண்டாகும். அதிஷ்டான ஞானத்தினால் அஞ்ஞானத்திற்கு நாச முண்டாகின்றது. அஞ்ஞானத்தின் நாசத்தால் அத்தியாசத்திற்கு நாச முண்டாகின்றது என்று இவ்வாறு அங்கீகரிக்கின், முற்கூறிய நியமத்திற்கு வியபிசார முண்டாகிறதில்லை. அந்தகாரத்தினைப்போல அஞ்ஞானமும் பாவரூபமாயினும், அஞ்ஞானம் அநாதியாயிருத்தலின் காரியமன்று. ஆதலால், அஞ்ஞானத்தின் நிவிருத்தியோ அதிஷ்டான ஞானத்தினாலும் சம்பவிக்கின்றது. ஆனால், பாவகாரியமாகிய சர்ப்பமுதலிய அத்தியாசத்தின் நிவிருத்தி உபாதானத்தின் நாசமின்றி உண்டாகிறதில்லை. கடத்துவம்சத்தின் நிவிருத்தியும் வேதாந்தமதத்தி லுண்டாகின்றது. அபாவ பதார்த்தங்களுக்கு உபாதான காரண மிருப்பதில்லை. ஆதலால், உபாதானத்தின் நாசமின்றியும் கடத்துவம்சவடிவ காரியத்

தின் நாச முண்டாம். ஆனால், கடத்துவம்சம் பாவமன்று. ஆதலால், உபாதான நாசத்திற்குப் பாவகாரியத்தின் நாசத்தில் நியதமாக ஏதுவாகுந் தன்மையைப் பாதுகாத்தற்குப் பஞ்சபாதிகையில் அஞ்ஞான நிவிருத்தி வாயிலாக அதிஷ்டான ஞானம் அத்தியாச நிவிருத்திக் கேதுவாதல் கூறப்பட்டிருக்கிறது. அஞ்ஞான நிவிருத்தியை விட்டு அதிஷ்டானஞானம் அத்தியாச நிவிருத்திக்குச் சாக்ஷாத் ஏதுவாதல் நிஷேதஞ் செய்யப்பட்டிருக்கின்றது. மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தின் மேன்மையை அங்கீகரிக்கின், முற்கூறியபடி அஞ்ஞான நிவிருத்தியின்றியே பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி அங்கீகரிக்க வேண்டியதாகின்றது. ஆதலால், பஞ்சபாதிகை வசனத்திற்கு விரோத முண்டாகும். அவஸ்தாஞ்ஞானத்தினை முற்கூறிய அத்தியாசத்திற்கு உபாதானமாகக் கொள்ளின் விரோத மில்லை. ஏனெனின், அவஸ்தாஞ்ஞானத்தினை முற்கூறிய அத்தியாசத்திற்கு உபாதானமாகக் கூறின், அவர்கள் மதத்தில் விவரணகாரர் மதப்படி முகாவச்சின்ன சேதனத்திருக்கும் அஞ்ஞானம் தர்மாத்தியாசத்திற்கு உபாதானமெனச் சித்திக்கின்றது. வித்தியாரணிய சுவாமிகளின் மதப்படி கண்ணாடி அவச்சின்ன சேதனத்திருக்கும் அஞ்ஞானம் தர்மி அத்தியாசத்திற்கு ஏதுவெனச் சித்திக்கின்றது. பிரதிபந்தகமின்றிய காலத்தில் முகஞானத்தினால் அல்லது கண்ணாடி ஞானத்தினால் அவ்வஞ்ஞானங்களுக்குக் கிரமமாக நிவிருத்தி உண்டாகின்றது. அஞ்ஞான நிவிருத்தி வாயிலாகப் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், அவஸ்தாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரித்தல் பஞ்சபாதிகை வசனத்திற்கு அநுகூலமாம். மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையைக் கூறுதல் பஞ்சபாதிகை வசனத்திற்கு விருத்தமாம். இவ்வாற்றால் முற்கூறிய அத்தியாசத்திற்கு ஏதுவாதலை அவஸ்தாஞ்ஞானத்திற்கு அங்கீகரிக்கின், அதற்கு இது பூர்வபக்ஷமாம்.

235. முற்கூறிய சங்கை பொருந்தாமை

ஆனால், அவஸ்தாஞ்ஞானத்திற்கு ஏதுத்தன்மையை அங்கீகரிக்கினும், பஞ்சபாதிகை வசனத்தோடுள்ள விரோதம் பரி

கார மாகாது. அது வருமாறு:—யாண்டுத் தர்ப்பண சம்பந்த மின்றிய தேவதத்தனது முகத்தின் அல்லது தேவதத்தமுகம் பிரிந்த கண்ணாடியின் சாக்ஷாத்காரம் யஞ்ஞதத்தனுக்குண்டாய், அடுத்த கணத்தில் தேவதத்தனது முகத்திற்குத் தர்ப்பணத் தோடு சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டும் பிரதிபிம்பாத்தி யாசம் உண்டாகின்றது. மூலாஞ்ஞானத்திற்கு உபாதானத் தன்மையை அங்கீகரிக்கின், முகம் கண்ணாடிமுதலிய சாக்ஷாத் காரத்தினால் அதன் நிவிருத்தி உண்டாகிறதில்லை. முகஞானத் தால் முகாவச்சின்னசேதனத்துள்ள அஞ்ஞானத்தின் நிவிருத்தி யும், அங்ஙனமே கண்ணாடி ஞானத்தினால் கண்ணாடி யவச் சின்ன சேதனத்துள்ள அஞ்ஞானத்தின் நிவிருத்தியும் அவசிய முண்டாகின்றன. முக கண்ணாடிகளின் சாக்ஷாத்காரத்திற்குப் பிந்தியகாலத்திலும் முக கண்ணாடிகளின் சந்நிதானத்தால் பிரதிபிம்பாத்தியாச முண்டாகின்றது. ஆதலால், முக கண்ணாடி களின் சாக்ஷாத்காரத்தால் அவஸ்தாஞ்ஞானத்தின் ஆவரண சத்தி விசிஷ்ட அஞ்ஞானாம்சத்தின் நாசம் உண்டாகாமையால், விசேஷ வடிவத்தால் அறியப்படாத அதிஷ்டானத்திலும் அத் தியாசம் சம்பவிக்கின்றது. ஆண்டுக் கண்ணாடிக்கும் முகத்திற் கும் பரஸ்பரவியோக முண்டாக, பிரதிபந்தகாபாவத்தோடு கூடிய அதிஷ்டானஞானத்தினால் அஞ்ஞான நிவிருத்தி வாயி லாக அத்தியாசத்தின் நிவிருத்தி கூறுதல் அவஸ்தாஞ்ஞான வாதிக்கும் சம்பவிக்கிறதில்லை. ஆனால், ஞானத்தினால் சாக்ஷாத் அத்தியாசத்தின் நிவிருத்தி கூறுதலே சம்பவிக்கின்றது. ஏனெ னின், இரஜ்ஜுஞானத்தினால் சுத்தியின் அஞ்ஞானத்தினது நாசம் உண்டாகிறதில்லை. ஆதலால், ஞானத்தினால் அஞ்ஞான மாத்திரத்தின் நாச முண்டாகிறதில்லை. ஆனால், சமான விஷய முள்ள அஞ்ஞானத்திற்கு ஞானத்தினால் நாச முண்டாகின் றது. ஞானத்தினால் எதன் பிரகாச முண்டாகின்றதோ, அது ஞானத்தின் விஷய மெனப்படுகின்றது. அஞ்ஞானத்தினால் ஆவ ரிக்கப்படுவது யாதோ, அது அஞ்ஞானத்தின் விஷய மெனப் படுகின்றது.

யஞ்ஞதத்தனுக்கு அத்தியாசத்திற்கு முற்காலத்தில் உண்டாகிய முக கண்ணாடிகளின் சாக்ஷாத்காரம் யாதோ, அத னால் ஆவரணத்தின் நாசம் உண்டாகுதலால் அஞ்ஞானத்தினா

லாகிய ஆவரண வடிவ அஞ்ஞானத்தினது விஷயத்தின் அபாவம் முக கண்ணுடிகளி லிருக்கின்றது. ஆதலால், ஞான அஞ்ஞானங்களின் விரோதத்தைச் சம்பாதிக்கும் சமான விஷயத் தன்மையின் பங்கத்தால், முற்கூறியவிடத்து அஞ்ஞான நிவிருத்தியின்றி அத்தியாசமாத்திரத்தின் நிவிருத்தி அவஸ்தாஞ்ஞானவாதிக்கும் அங்கீகரிக்க வேண்டியதாகின்றது. இவ்வாற்ருல் அவஸ்தாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கினும் பஞ்சபாதிகை வசனத்தோடுள்ள விரோதம் பரிகார மாகிறதில்லை.

236. தூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தினது ஏதுத்தன்மையை யங்கீகரிக்கின் பஞ்சபாதிகையின் வசனத்தோடு விரோதமும், மூலாஞ்ஞானத்திற்கு ஏதுவாந் தன்மையை அங்கீகரிக்கின் அவிரோதமும் உளதாதல்

அன்றியும், சூக்ஷ்மமாக விசாரிக்கின், அவஸ்தாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் ஏதுத்தன்மையை அங்கீகரித்தமேல பஞ்சபாதிகை வசனத்திற்கு விரோதமாம். மூலாஞ்ஞானத்திற்கு ஏதுத்தன்மையை அங்கீகரித்தல் விரோதமன்று. அது வருமாறு:—ஞானத்தால் கேவல அஞ்ஞானத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது. அஞ்ஞானவடிவ உபாதானத்தின் நிவிருத்தியினல் அஞ்ஞான காரியத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. இவ்வாறு பஞ்சபாதிகைவசன மிருக்கின்றது. அதற்கு இது அபிப்பிராயமன்று. பாவகாரியத்தின் நாசத்தில் உபாதானத்தின் நாசம் நியத ஏதுவாயிருத்தலின், ஞானத்தினல் அத்தியாச நிவிருத்தி சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், உபாதானத்தின் நாசமின்றிப் பாவகாரியத்தின் நாச முண்டாகிறதில்லை யெனின், பாவகாரியத்தின் நாசத்தில் உபாதானத்தின் நாசம் நியத ஏதுவாம். பாவகாரியம் துவியணுகமாம். அதன் உபாதானம் பரமாணுக்களாம். அவற்றிற்கு நித்தியத் தன்மை யிருத்தலால் நாசம் சம்பவியாது. ஆதலால், பரமாணு சையோகத்தின் நாசத்தால் துவியணுகத்தின் நாச முண்டாகின்றது. ஆண்டுப் பாவகாரியத்தின் நாசத்தில் உபாதான நாசத்தின் ஏதுத்தன்மைக்கு வியபிசார மிருக்கின்றது. ஆதலால், பாவ

காரியத்தின் நாசத்தில் உபாதானநாசம் ஏதுவாதலாகிய நியமத்தைப் பாதுகாக்கும் அபிப்பிராயத்தினுல் பஞ்சபாதிகை கூறியதன்று. கேவல ஆக்கிரகத்தினுல் பஞ்சபாதிகையின் வசனத்திற்கு முற்கூறிய நியமத்தைப் பாதுகாத்தலில் அபிப்பிராயமெனக் கூறின், தண்டப் பிரமத்தினுல் சர்ப்பாத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகாது. நையாயிகமதத்திலும் துவியணுகத்திற்கு வேறுகிய திரவியத்தின் நாசத்தில் உபாதானத்தின் நாசத்தினே ஏதுவெனக் கொண்டிருக்கின்றனர். சகல பாவ காரியங்களின் நாசத்தில் உபாதான நாசத்தை ஏதுவாகக் கூறின், பரமாணுவும் மனமும் நித்தியமாம்; அவற்றிற்கு நாசம் சம்பவியாமையால், அவற்றின் கிரியைக்கும் நாச முண்டாகாது. அங்ஙனமே, நித்தியமான ஆத்மாவின் ஞானமுதலிய குணங்களுக்கும், நித்தியமாகிய ஆகாயத்தின் சப்தமுதலிய குணங்களுக்கும் நாச முண்டாகாது. ஆதலால், பாவகாரியங்களின் நாசத்தில் உபாதானத்தின் நாசம் நியத ஏதுவாமென்று கூறுதல் அசங்கதமாம். ஆனுல், சிலவிடங்களில் ஆசிரயத்தின் நாசமுண்டாகக் காரியத்தின் ஸ்திதி யிருக்கிறதில்லை. ஆண்டு உபாதானத்தின் நாசமும் காரிய நாசத்திற் கேதுவாம். அங்ஙனமாயினும் காரிய நாசத்தில் உபாதானத்தின் நாசம் நியத ஏதுவன்று. உபாதானத்தின் இருப்பில் அந்நிய காரணத்தினுலும் காரியத்தின் நாச முண்டாகின்றது. இவ்வாற்றுல் முற்கூறிய நியம சம்ரக்ஷணையின் அபிப்பிராயத்தால் பஞ்சபாதிகை கூறியதன்று. ஆனுல், அதிஷ்டான ஞானத்தினுல் அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகுமிடத்து, அதிஷ்டான ஞானத்திற்கு அத்தியாச நிவிருத்தியில் காரணத்தன்மை யில்லை. அதிஷ்டான ஞானமோ அஞ்ஞான நிவிருத்திக்குக் காரணமாம். அஞ்ஞான நிவிருத்தி அத்தியாச நிவிருத்திக்குக் காரணமாம்.

எங்ஙனம் குலாலன்பிதா கடத்தில் பிறிதோராற்றுற் பெறப்பட்டவனுயிருத்தலின் காரணமாகானே, அங்ஙனமே அத்தியாச நிவிருத்தியில் அதிஷ்டானத்தின் ஞானம் பிறிதோராற்றுற் பெறப்படுவதா யிருத்தலின் காரணமன்று. இவ்வாற்றுல் அதிஷ்டான ஞானத்தினுல் அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகுமிடத்து, ஞானத்தினுல் அஞ்ஞான மாத்திரத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அத்தியாசத்தின் நிவிருத்தி உபா

தானமாகிய அஞ்ஞானத்தின் நாசத்தால் உண்டாகின்றது. இது பஞ்சபாதிகை வசனத்தின் அபிப்பிராயமாம். எங்கும் அத்தியாசத்தின் நிவிருத்தியில் அஞ்ஞான நிவிருத்திக்கு ஏதுத்தன்மையிருக்கின்றது என்னும் அபிப்பிராயத்தால் பஞ்சபாதிகை கூறியுளதேல், தண்டப்பிரமத்தினல் அஞ்ஞான நிவிருத்தியின்மையால் சர்ப்பப்பிரமத்தின் நிவிருத்தி உண்டாகலாகாது. ஆதலால், அதிஷ்டானத்தின் யதார்த்தஞானத்தினல் அத்தியாச நிவிருத்தி உண்டாகின்றது. ஆண்டு அஞ்ஞானத்தின் நிவிருத்தியே அத்தியாச நிவிருத்திக்கு ஏதுவாமென்னும் நியமம் பஞ்சபாதிகை நூலிற் கருதப்பட்டதாம். அவஸ்தாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் ஏதுத்தன்மையை அங்கீகரிக்கின், அவர் மதத்தில் முகம் கண்ணுடிமுதலியவற்றின் ஞானமே அதிஷ்டானத்தின் ஞானமாம். அதனல் அஞ்ஞான நிவிருத்தி வாயிலாக அத்தியாசத்தின் நிவிருத்தியை அங்கீகரித்தல் பஞ்சபாதிகையின் அநுசாரமாம். யஞ்ஞதத்தனுக்குப் பூர்வ ஞானத்தால் ஆவரண நாசஸ்தலத்தில் தேவதத்தனது முகத்தின் உபாதி சந்நிதிப்பட பிரதிபிம்பாத்தியாசம் உண்டாகின்றது. உபாதி பிரிந்தகாலத்தில் அதிஷ்டான ஞானத்தினல் அத்தியாசம் நிவிருத்தியாகின்றது. ஆண்டு அஞ்ஞான நிவிருத்தி வாயிலாக அத்தியாசத்தின் நிவிருத்தி சம்பவிக்கிறதில்லை. ஆனல், அதிஷ்டான ஞானத்தினல் சாக்ஷாத் அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. இதனல் பஞ்சபாதிகையோடு விருத்தமாம்.

மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், முகம் கண்ணுடிமுதலிய ஞானத்தால் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகும். ஆண்டு முகம் கண்ணுடி முதலியவற்றிற்கு இப் பக்ஷத்தில் அதிஷ்டானத்தன்மை யின்மையால், அதிஷ்டான ஞானஜந்நிய அத்தியாசத்தின் நிவிருத்தி யில்லை. ஆனல், விரோதி விஷயத்தின் ஞானத்திற்கு விரோதியாயிருத்தலின் முகம் கண்ணுடி முதலியவற்றின் ஞானத்திற்கு அத்தியாசத்தை நிவர்த்திக்குந் தன்மை யுண்டு. பஞ்சபாதிகையில் அதிஷ்டான ஜந்நிய அத்தியாசத்தின் நிவிருத்தியே அஞ்ஞான நிவிருத்தி வாயிலாகக் கருதப்பட்டதாம். அதிஷ்டானஞானமின்றி வேறுவகையால் அத்

தியாசம் நிவிருத்தியாதலில் அஞ்ஞான நிவிருத்திக்கு வாயிற்றன்மை கருதப்படவில்லை.

இவ்வாற்றல் மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், முகம் கண்ணாடிமுதலியவற்றின் ஞானஜந்நிய அத்தியாசத்தின் நிவிருத்தி அதிஷ்டான ஞான ஜந்நியமன்று. அவஸ்தாஞ்ஞானத்தை முற்கூறிய அத்தியாசத்திற்கு உபாதானமெனக் கொள்ளின், முகம் கண்ணாடி முதலியவற்றின் ஞானஜந்நிய அத்தியாசத்தின் நிவிருத்தி அதிஷ்டான ஞானஜந்நியமாம். அதிஷ்டானத்தினால் அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாயின், அது அஞ்ஞான நிவிருத்தி வாயிலாகவே பஞ்சபாதிகையிற் கருதப்பட்டதாம். முன் அறியப்பட்ட அதிஷ்டானத்தில் அத்தியாச முண்டாய் நிவிருத்தி உண்டாயின், ஆண்டு முற்கூறியபடி அஞ்ஞான நிவிருத்தி வாயிலாக அத்தியாசத்தின் நிவிருத்தி சம்பவிக்கிறதில்லை. ஆகலால், அவஸ்தாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரித்தலே பஞ்சபாதிகை வசனத்திற்கு விரோதமாம்; மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கீகரித்தல் விரோதமில்லை.

237. பிரதிபிம்பாத்தியாசத்தின் வியாவகாரிகத் தன்மை பிராதிபாஸிகத்தன்மைகளின் விசார பூர்வகமான சொப்பனாத்தியாசத்தினது உபாதான விசாரத்தின் பிரதிஞ்ஞை

இவ்வாற்றல் ஆகாயமுதலிய பிரபஞ்சத்தைப்போல மூலாஞ்ஞான ஜந்நியமாம் பிரதிபிம்பாத்தியாசம். ஆனால், ஏகதேசியின் கிரமப்படி பிரஹ்மஞானமின்றி அதன் பாதவடிவ நிவிருத்தி உண்டாகாதிருத்தலின், பிரதிபிம்பாத்தியாசத்தில் வியாவகாரிகத்தன்மைச் சங்கை உண்டாகின்றது. அங்ஙனமாயினும் பிம்ப உபாதியின் சம்பந்த வடிவ * ஆகந்துக தோஷ ஜந்நியமாம்; ஆதலால், பிராதிபாஸிகமாம். ஆகாயமுதலிய பிரபஞ்சத்திற்கு அத்தியாச முளது. அவை அவித்தை மாத்திரத்

* ஆகந்துகம் - செயற்கை, போக்குவரவுடையது, ஒன்றன் தருமம் மற்றொன்றி லேறுதல்.

தாற் றோன்றியனவாம்; ஆதலால், வியாவகாரிகமாம். பின்னர் முற்கூறியபடியோ அதிஷ்டானஞானமின்றி விரோதிஞானத்தினுல் பாதவடிவ நிவிருத்தியின் சம்பவ மிருத்தலின், சம்சார தசையில் பாதிக்கப்படுந்தன்மை வடிவ பிராதிபாஸிகத்தன்மையும் சம்பவிக்கின்றது. எங்ஙனம் பிரதிபிம்பாத்தியாசத்தில் மதபேதத்தால் அவஸ்தாஞ்ஞானமும் மூலாஞ்ஞானமும் உபாதானமென்று கூறப்பட்டனவோ, அங்ஙனமே சொப்பனாத்தியாசமும் சிலர் மதத்தில் அவஸ்தாஞ்ஞான ஜந்நியமும் வேறு மதத்தில் மூலாஞ்ஞான ஜந்நியமுமாம்.

238-257. சொப்பனத்தில் விசாரம்.

238. தூலாஞ்ஞானம் சொப்பனத்திற்கு உபாதானமாதலின் கிரமம்.

அவஸ்தாஞ்ஞானத்திற்குச் சொப்பனத்தின் உபாதானத் தன்மையை இவ்வாறு கூறுகின்றார்:—அஞ்ஞானத்தின் அவஸ்தா விசேஷம் நித்திரையாம். ஏனெனின், ஆவரண விக்ஷேப சத்தியோடு கூடியதன்மை அஞ்ஞானத்தின் இலக்ஷணமாம். சொப்பன காலத்தில் ஜாக்கிர திருஷ்டாதிருசியங்களின் ஆவரணம் அநுபவ சித்தமாம். தேவதத்தனென்னும் பெயருள்ள பிராஹ்மண ஜாதியான் ஜாக்கிர காலத்தில் பிதா பாட்டன் முதலியோரது மரணத்திற்குப் பின், தாகம் சிராத்த முதலியவற்றைச் செய்து பொருள் புத்திரர்முதலிய சம்பத்தோடுங் கூடித் தூங்குகின்றவனுய், தன்னை யஞ்ஞதத்தனென்னும் பெயர், க்ஷத்திரியஜாதி, பாலியாவஸ்தை என்பவற்றோடு கூடியவனுய், அன்னவஸ்திரங்கள் கிட்டாமையால் பசியினுலும் குளிரினுலும் பீடிக்கப்பட்டு, தனது பிதா பாட்டன்மார்களது மடியில் அழுதுகொண்டிருக்க அநுபவிக்கிறுன். ஆண்டு ஜாக்கிரகாலத்தின் வியாவகாரிக திருஷ்டா திருசியங்களுக்கு மூலாஞ்ஞானத்தினுல் ஆவரணத்தைக் கூறின், ஜாக்கிரகாலத்திலும் அவற்றின் ஆவரண முண்டாதல்வேண்டும். வேறெதுவும் ஆவரணத்தைச் செய்வதாகக் காணப்படுகிறதில்லை. ஆதலால், சொப்பன காலத்தில் நித்திரையே ஆவரணம் செய்கின்றது. சொப்பனத்தின் பதார்த்த வடிவ பரிணுமமும் நித்திரையினதே யாகின்றது. இவ்வாற்றால் ஆவரண விக்ஷேபசத்தி விசிஷ்டம் நித்திரையாம். ஆதலால்,

அஞ்ஞான லக்ஷணம் நித்திரையி லிருத்தலால் அஞ்ஞானத்தின் அவஸ்தாவிசேஷம் நித்திரையாம். ஆனால், அவஸ்தாஞ்ஞானம் ஸாதியாம். ஏனெனின், மூலாஞ்ஞானமே ஆகந்துக வடிவ விசிஷ்டமாய்ச் சொற்ப உபாதி அவச்சின்ன சேதனத்தை ஆவரணம் செய்கின்றது. அதனை அவஸ்தாஞ்ஞானமென்றும், தூலாஞ்ஞானமென்றும் கூறுவர்.

இவ்வாற்றால் ஆகந்துக வடிவ விசிஷ்டமாயிருத்தலின் அவஸ்தாஞ்ஞானம் ஸாதியாம். அதன் உற்பத்தியில் நிமித்த காரணம் ஜாக்கிரபோகத்திற்கு ஏதுவான கர்மங்களின் உபராமமாம். மூலாஞ்ஞானத்தின் ஆகார விசேஷமாகவே யிருத்தலின் மூலாஞ்ஞானம் உபாதான காரணமாம். நித்திரை வடிவ அவஸ்தாஞ்ஞானத்தினால் ஆவரிக்கப்பட்ட வியாவகாரிக திருஷ்டாவினிடத்துப் பிராதிபாஸிக திருஷ்டா அத்தியஸ்தமாம். அந்த நித்திரையினால் ஆவரிக்கப்பட்ட வியாவகாரிக திருசியத்தில் பிராதிபாஸிக திருசியம் அத்தியஸ்தமாம். ஆதலால், பிராதிபாஸிக திருஷ்டாவின் அதிஷ்டானம் வியாவகாரிக திருஷ்டாவாம். பிராதிபாஸிக திருசியத்தின் அதிஷ்டானம் வியாவகாரிக திருசியமாம். கர்மம் போகத்திற் கெதிர்முகமாயின் அப்போது ஜாக்கிர முண்டாகின்றது. அக்காலத்தில் பிரஹ்மஞான மின்றிய புருஷர்களுக்கும் வியாவகாரிக திருஷ்டா திருசியங்களின் ஞானமே அதிஷ்டானத்தின் ஞானமாம். அதனால் அவஸ்தாஞ்ஞான வடிவ உபாதானத்தின் நிவிருத்திவாயிலாகப் பிராதிபாஸிக திருஷ்டா திருசியங்களின் நிவிருத்தி உண்டாகின்றது. வியாவகாரிக திருஷ்டாவின் ஞானத்தினால் பிராதிபாஸிக திருஷ்டாவின் நிவிருத்தியும் வியாவகாரிக திருசியத்தின் ஞானத்தினால் பிராதிபாஸிக திருசியத்தின் நிவிருத்தியும் உண்டாகின்றன.

239. முற்கூறிய பக்ஷத்திற் சங்கை

இப் பக்ஷத்தில் இது சங்கையாம்:—முற்கூறியபடி ஜாக்கிர திருஷ்டாவுக்கும் சொப்பன திருஷ்டாவுக்கும் பேத முண்டு. அந்நிய திருஷ்டாவினது அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதி அந்நியனுக் குண்டாகுமாயின், தேவதத்தனது அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதி யஞ்ஞதத்தனுக் குண்டாதல்வேண்டும். ஆதலால், சொப்பனத்தின் அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதி ஜாக்கிர

காலத்தி லுண்டாகின்றது. திருஷ்டாவின் பேதம் அங்கீகரிக்கின் ஸ்மிருதி சம்பவியாது.

240. முற்கூறிய சங்கைக்குச் சமாதானம்

அதற்கு இது சமாதானமாம்:—அந்நியனது அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதி அந்நியனுக் குண்டாகாதாயினும், தன்னால் அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதி தனக்குண்டாகும். அங்ஙனமே தனது தாதாத்மிய முடையவனது அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதியும் தனக்குண்டாம். ஆதலால், தேவதத்த யஞ்ஞதத்தர்களுக்குப் பரஸ்பரம் தாதாத்மிய மில்லை. ஜாக்கிரத்தின் திருஷ்டாவில் சொப்பன திருஷ்டாவிற்கு அத்தியஸ்தத்தன்மை யிருத்தலால், அவனிடத்து அவனது தாதாத்மிய முண்டு. அத்தியஸ்த பதார்த்தத்திற்கு அதிஷ்டானத்தில் தாதாத்மிய முண்டாகின்றது. இவ்வாற்றால் ஜாக்கிர திருஷ்டாவின் தாதாத்மிய முடையவன் சொப்பன திருஷ்டாவாம். அவனது அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதி ஜாக்கிர திருஷ்டாவிற் குண்டாகின்றது. யஞ்ஞதத்தனிடத்துத் தேவதத்தனது தாதான்மிய மின்மையால் தேவதத்தனது அநுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதியினது அடைவு யஞ்ஞதத்தனுக்கில்லை. இவ்வாற்றால் சொப்பனத்தியாசத்தின் உபாதானம் நித்திரைவடிவ அவஸ்தாஞ்ஞானமாம்.

241. வியாவகாரிக ஜீவனும் ஜகத்தும் சொப்பனத்தின் பிராதிபாஸிக ஜீவனுக்கும் ஜகத்திற்கும் அதிஷ்டானமாதல்

சொப்பனகாலத்தில் திருசியமாத்திரத்தின் அஞ்ஞானத்தால் உற்பத்தி அங்கீகரித்து வியாவகாரிக ஜாக்கிரகாலத்தின் ஜீவனைத் திருஷ்டாவாகக் கொள்ளின் சம்பவியாது. ஏனெனின், வியாவகாரிக ஜீவனது சொரூபம் நித்திரைவடிவ அஞ்ஞானத்தால் ஆவரிக்கப்பட்டிருக்கின்றது. அஞ்ஞானத்தினால் ஆவரிக்கப்பட்ட ஜீவனது சம்பந்தத்தினால் விஷயத்தின் அபரோக்ஷ முண்டாகின்றது. இதனால் சொப்பனப் பிரபஞ்சத்தின் அபரோக்ஷ ஞானத்தின் அசம்பவ முண்டாகும். ஆதலால், திருசியத்தைப் போல திருஷ்டாவும் வியாவகாரிக ஜீவனிடத்து அத்தியஸ்தமாம். அது ஆவரிக்கப்படாததாம். அதன் சம்பந்தத்தினால் பிராதிபாஸிகத் திருசியத்தின் அபரோக்ஷஞானம் சம்பவிக்கின்

றது. இவ்வாற்றால் பாரமார்த்திக வியாவகாரிக பிராதிபாஸிக பேதத்தால் மூவகைச்சீவவாதிகளாகிய நூலாசிரியர் சொப்பனத்திற்கு அதிஷ்டானம் வியாவகாரிக ஜீவனும் ஜகத்தும் என்று கூறியிருக்கின்றனர்.

242. முற்கூறிய பக்ஷத்தின் பொருத்தமின்மையோடு சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மை

ஆனால், இம் மதம் பொருத்தமில்லாததாம். ஏனெனின், வியாவகாரிகத் திருஷ்டாவும் திருசியத்தைப்போல அநாத்மாவாக இருத்தலின் ஜடமாம். ஆனால், சத்தாஸ்பூர்த்தியைத் தருதல்வடிவ அதிஷ்டானத்தன்மை வியாவகாரிகத் திருஷ்டா திருசியங்களில் சம்பவியாது. ஆனால், சேதனத்திற்குச் சொப்பனப் பிரபஞ்சத்தின் அதிஷ்டானத்தன்மை கூறுதல் உசிதமாம். இதனாற்றான் இரஜ்ஜுசுத்திகள் சர்ப்ப இரஜதங்களுக்கு அதிஷ்டானமாமென்னும் வசனத்திற்கு இரஜ்ஜு அவச்சின்னசேதன அதிஷ்டானத்தில் தாற்பரியம் கூறப்பட்டிருக்கின்றது. அநேக நூல்களிலும் சேதனமே சொப்பனப் பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், அகங்காராவச்சின்னசேதனம் சொப்பனத்திற்கு அதிஷ்டானமாம். இவ்விரண்டு மதங்களும் நலமுடையனவாம்.

243. அகங்காராவச்சின்ன சேதனத்தைச் சொப்பனத்தின் அதிஷ்டானமாகக் கொண்டு, தூலாஞ்ஞானம் அதற்கு உபாதானமாதலும், ஜாக்கிரத்தின் ஞானத்தால் அதன் நிவிருத்தியும்.

அவற்றில் அகங்காராவச்சின்ன சேதனத்தைச் சொப்பனத்தின் அதிஷ்டானமாகக் கொள்ளின், மூலாஞ்ஞானத்தால் அதன் ஆவரணம் சம்பவியாது. ஆதலால், அகங்காராவச்சின்னத்தை ஆச்சாதிக்கும் அவஸ்தாஞ்ஞானமே சொப்பனத்தின் உபாதானமெனச் சம்பவிக்கின்றது. ஜாக்கிரத்தின் போதத்தால் பிரஹ்மஞானமின்றி அதன் நிவிருத்தியும் சம்பவிக்கின்றது.

244. அகங்கார அநவச்சின்ன சேதனத்தைச் சொப்பனத்தின் அதிஷ்டானமாகக் கொண்டு மூலாஞ்ஞானத்திற்கு அதன் உபாதானத்தன்மையும், உபாதானத்தில் விலயவடிவமான அதன் நிவிருத்தியும்.

அவித்தையில் பிரதிபிம்பசேதனம் அல்லது பிம்பவடிவ ஈசுவர சேதனம் அகங்கார அநவச்சின்ன சேதனமாம். அதற் கதிஷ்டானத்தன்மையிலோ அதனை ஆச்சாதி(மறை)க்கும் மூலாஞ்ஞானமே சொப்பனத்தின் உபாதானமாகக் கொள்ள வேண்டியதாகின்றது. ஜாக்கிரத்தின் போதத்தினால் அதன் பாதவடிவ நிவிருத்தி உண்டாகிறதில்லை. ஆனால், உபாதானத் தில் விலயவடிவச் சொப்பனத்தின் நிவிருத்தி ஜாக்கிரத்தில் உண்டாகின்றது.

245. அகங்கார அநவச்சின்ன சேதனத்தினையே அதிஷ்டானமெனக்கொண்டு விரோதிஞானத்தினால் அஞ்ஞானத்தின் விக்ஷேப ஏதுவான சத்தி ஒன்றனது நாசத்தின் அங்கீகாரம்.

அல்லது பிரதிபிம்பாத்தியாச நிரூபணத்தின் முற்கூறிய படி ஜாக்கிரபோதம் விரோதிஞானமா யிருத்தலின் சொப்பனத் தியாசத்தின் நிவிருத்தியைக் கூறுவாம். ஆனால், விரோதி ஞானத்தினால் ஆவரண ஏதுவாகிய அஞ்ஞான அம்சத்தின் நிவி ருத்தி உண்டாகிறதில்லை; விக்ஷேப ஏதுவாகிய அம்சத்தின் நிவி ருத்தி உண்டாகின்றது. விரோதிஞானத்தினால் சகல அஞ்ஞா னத்தின் நிவிருத்தியைக் கூறின், தண்டப்பிரமத்தினால் சர்ப்பப் பிரமத்தின் நிவிருத்தி ஸ்தலத்தில் உபாதான ஏதுவின்மையால் தண்டப்பிரமத்தின் அசம்பவமே உண்டாகும். விக்ஷேப அம்ச மும் யாவும் நிவிருத்தியாயின், தண்டமும் விக்ஷேபவடிவமாம்; அதன் உபலம்பம் உண்டாகலாகாது. ஆதலால், இவ்வாறு அங் கீகரித்தல் உசிதமாம்:— ஒரு அஞ்ஞானத்தில் அநந்த விக்ஷே பங்களுக்கு ஏதுவாகிய அநந்த சக்திக ளிருக்கின்றன. விரோதி ஞானத்தினால் ஒரு விக்ஷேபத்திற் கேதுவாகிய சத்தியின் நாச முண்டாகின்றது. வேறு விக்ஷேபத்திற் கேதுவாகிய சத்தி இருக்கின்றது. ஆதலால், காலாந்தரத்தில் அதே அதிஷ்டானத் தில் மீண்டும் அத்தியாச முண்டாகின்றது. இதனாற்றான் அதீத

சொப்பனத்திற்கு ஜாக்கிரபோதத்தினல் பாத முண்டாகியும், ஆகாமி (இனி வரும்) சொப்பனவடிவ விக்ஷேபத்திற் கேது வாகிய சக்தி அவசேஷமா யிருத்தலால், வேறு தினத்தில் சொப்பனுத்தியாச முண்டாகின்றது. ஆதலால், அகங்கார அநவச்சின்ன சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானத் தன்மையும் சம்பவிக்கின்றது.

246. முற்கூறிய சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானவாதத்திலும் சரீரத்தின் உள்ளிடத்திருக்கும் சேதனத்திற்கே அதிஷ்டானத்தன்மை சம்பவித்தல்

ஆனல், முற்கூறிய சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மை வாதத்திலும் சரீரத்தின் உள்ளிடத்திருக்கும் சேதனமே அதிஷ்டானமாகச் சம்பவிக்கின்றது. பாகியதேசத்திருப்பதனை அதிஷ்டானமெனக் கொள்ளின், கடமுதலியவற்றினைப்போல ஒவ்வொரு சொப்பனத்தின் பிரதீதி எல்லோருக்கும் உண்டாதல் வேண்டும். கடமுதலியவற்றின் அபரோக்ஷத்தன்மையிலும் சர்ப்பம் ரஜதமுதலியவற்றின் அபரோக்ஷத்தன்மையிலும் எங்ஙனம் இந்திரிய வியாபாரத்தின் அபேக்ஷை இருக்கின்றதோ, அங்ஙனமே சொப்பனத்தின் அபரோக்ஷத்தன்மையிலும் இந்திரிய வியாபாரத்தின் அபேக்ஷையும் வேண்டும். சரீரத்தின உள்ளிடத்திருக்கும் சேதனத்தில் சொப்பனத்தின் அத்தியாசத்தை அங்கீகரிக்கின், பிரமாதாவோடு சம்பந்தியாயிருத்தலின் சுகமுதலியவற்றினைப்போல இந்திரிய வியாபார மின்றியே அபரோக்ஷத்தன்மை சம்பவிக்கின்றது. இவ்வாற்ருல் அகங்காராவச்சின்ன அல்லது அகங்கார அநவச்சின்னசேதனமே சொப்பனத்தின் அதிஷ்டானமாம். இவ்விரண்டு மதங்களும் பிரமாண முடையனவாம்.

247. சரீரத்தின் உள்ளிடத்திருக்கும் அகங்கார அநவச்சின்ன சேதனத்திற்குச் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையின் யோக்கியதை.

அகங்கார அநவச்சின்னத்தைக் கூறின் அதனிடத்தும் இரண்டு பேத முண்டு. அவித்தையிற் பிரதிபிம்ப ஜீவசேதனம் அல்லது அவித்தையிற் பிம்ப ஈசுவரசேதனமென்னும் இரண்டும் அகங்கார அநவச்சின்னமாம். இரண்டும் வியாபகமாயிருத்தலின்

சரீரத்தின் உள்ளிருப்பனவாம். ஏனெனின், சேதனத்தில் பிம்பப் பிரதிபிம்பபேதம் சுவபாவிகமாயின், விருத்ததர்மாசிரயத் தன்மை உள்ளிருப்பதாகிய ஒருசேதனத்தில் சம்பவியாது. அந்தப் பிம்பப் பிரதிபிம்பத்தன்மை வடிவ ஈசுவர ஜீவத்தன்மைகள் உபாதியா லாகியனவாம். ஒரே சேதனத்தில் அஞ்ஞான சம்பந்தத்தால் பிம்பத்தன்மை பிரதிபிம்பத்தன்மைகள் கற்பிதமாம். ஆதலால், சரீரத்திருக்கும் ஒரு சேதனத்திலேயே இருவகை வியவகாரம் உண்டாகின்றது. அங்ஙனமே உள்ளிடத்திருக்கும் சேதனத்திலேயே சொப்பனத்தியாசத்தின் அதிஷ்டானத்தன்மையினது அவச்சேதகமாக அந்தக்கரணத்தை அங்கீகரிக்கின், அகங்காராவச்சின்னத்திற்கு அதிஷ்டானத்தன்மை சித்திக்கின்றது. அந்தச் சேதனத்திலேயே சொப்பனத்தினது அதிஷ்டானத்தன்மையின் அவச்சேதகம் அந்தக்கரணமெனக் கொள்ளாவிடின், அகங்கார அநவச்சின்னத்திற்கு அதிஷ்டானத்தன்மை சித்திக்கின்றது.

ஒரே தேவதத்தனிடத்துப் புத்திர திருஷ்டியினால் சொல்லக்கருதின் பிதாவென்பர். தேவதத்தனது ஜனகன் திருஷ்டியாற் சொல்லக்கருதின் புத்திர னென்பர். கருத்தின் பேதத்தால் ஒரு தேவதத்தனிடத்தில் பிதாத்தன்மை புத்திரத்தன்மை வடிவ விருத்ததர்மங்களின் வியவகாரத்தைப்போல, சரீரத்துள்ளிருக்கும் ஒரு சேதனத்தில் அவச்சின்னத்தன்மை அநவச்சின்னத்தன்மை பிம்பத்தன்மைப் பிரதிபிம்பத்தன்மை வடிவ விருத்த தர்மங்களின் வியவகாரம் சம்பவியாமையில்லை. இவ்வாற்றால் அவித்தையிற் பிரதிபிம்பவடிவ ஜீவசேதனத்திலேனும் பிம்பவடிவ ஈசுவரசேதனத்திலேனும் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையை அங்கீகரித்து, அகங்கார அநவச்சின்னத்தில் சொப்பனத்தியாசம் அங்கீகரிக்கினும், சரீர தேசத்திருக்கும் ஆந்தரசேதனமாகிய இடத்திலேயே சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மை உசிதமாம்.

248. வெளியும் உள்ளும் சாதாரணமான தேசத்திருக்கும் சேதனத்தில் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையைக் கூறுதலில் கௌடபாதர் பாஷியகாரர் முதலியோரது வசனத்திற்கு விரோத முளதாதல்.

வெளியும் உள்ளும் சாதாரணமான தேசத்திருப்பதில் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையைக் கூறின், கௌட

பாதாசாரியர் பாஷியகாரர் முதலியோரது வசனத்திற்கு விரோத முண்டாகும். ஏனெனின், மாண்டூக்கியகாரிகையின் வைதத்தியப் பிரகரணத்தில் கௌடபாதாசாரியர் இது கூறியிருக்கின்றனர்:— சொப்பனத்தின் யானை மலை முதலியவற்றின் உற்பத்திக்குரிய தேசகாலங்க ளில்லாதிருத்தலின் சொப்பனத்தின் பதார்த்தம் மித்தையாம். இவ்வாறு கௌடபாதாசாரியரது வாக்கியத்தின் வியாக்கியானத்தில் பாஷியகாரர் முதலியோர் இது கூறியிருக்கின்றனர். க்ஷணம் கடிகை முதலிய காலத்திலும் சூக்ஷ்ம நாடியாகிய தேசத்திலும் வியாவகாரிக யானை முதலியவற்றின் உற்பத்தி சம்பவியாது. ஆதலால், சொப்பனபதார்த்தம் மித்தையாம். இவ்வாற்றால் சரீரத்தின் உள்ளிடத்தில் சொப்பனத்தின் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றது. சாதாரண சேதனத்தில் அதிஷ்டானத்தன்மையை அங்கீகரிக்கின், சூக்ஷ்ம தேசத்தில் உற்பத்தி கூறுதல் அசங்கதமாகும். ஆதலால், சரீரத்தின் உள்ளிடத்திருக்கும் அகங்கார அநவச்சின்னசேதனத்தில் சொப்பனாத்தியாச மிருக்கின்றது.

249. அகங்கார அநவச்சின்ன சேதனம் அவித்தையில் பிரதிபிம்பமும் பிம்பமுமாகிய இரண்டுமாம். அவற்றில் பிரதிபிம்பவடிவ ஜீவசேதனத்திற்கு அதிஷ்டானத்தன்மையின் சம்பவம்.

அகங்கார அநவச்சின்ன சேதனம் அவித்தியாப் பிரதிபிம்பமும் பிம்பமுமாகிய இரண்டுமாம். மதபேதத்தால் இரண்டற்கும் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மை யிருக்கின்றது. அங்ஙனமாயினும் அவித்தையில் பிரதிபிம்பவடிவ ஜீவ சேதனத்திற்கு அதிஷ்டானத்தன்மையைக் கூறுதலே நலமுடையதாம். ஏனெனின், அபரோக்ஷ அதிஷ்டானத்தில் அபரோக்ஷ அத்தியாச முண்டாகின்றது. சுத்தப் பிரஹ்மத்தினைப்போல ஈசுவர சேதனத்தின் ஞானம் கேவலம் சாஸ்திரத்தினால் உண்டாகின்றது. ஈசுவரசேதனத்தைச் சொப்பனாத்தியாசத்தின் அதிஷ்டானமெனக் கொள்ளின், சாஸ்திரவடிவப்பிரமாண மின்மையால் அதிஷ்டானத்தின் அபரோக்ஷத்தன்மை யின்றி, அத்தியாசத்தினது அபரோக்ஷத்தன்மையின் அசம்பவ முண்டாகும். அவித்தையில் பிரதிபிம்ப ஜீவ சேதனமாகிய அகங்காராவச்சின்னமோ அகமெனும் வடிவ விருத்திக்குக் கோசரமாகின்றது.

அகங்கார அநவச்சின்ன அவித்தையில் பிரதிபிம்பவடிவ ஜீவ சேதனமும் அகமென்னும் வடிவ விருத்திக்குக் கோசரமோ அன்று. ஆனால், ஜீவசேதனம் ஆவரிக்கப்பட்டதன்று. ஆதலால், தானே அபரோக்ஷமாதலில் அபரோக்ஷ அத்தியாசம் சம்பவிக்கின்றது.

250. முற்கூறியபக்ஷத்தில் சம்க்ஷேபசாரீரகத்திற் கூறிய அத்தியாசத்தின் அபரோக்ஷத்தன்மையின் பொருட்டு அதிஷ்டானத்தின் மூவித அபரோக்ஷத்தன்மை.

சம்க்ஷேபசாரீரகத்தில் அத்தியாசத்தின் அபரோக்ஷத்தன்மையின்பொருட்டு, அதிஷ்டானத்தின் அபரோக்ஷத்தன்மைமூன்று விதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சர்ப்பம் இரஜதமுதலியவற்றின் அபரோக்ஷத்தன்மையின் உபயோகியான இரஜ்ஜு சுத்தி முதலியவற்றின் அபரோக்ஷத்தன்மை இந்திரியத்தாலுண்டாகின்றது. ஆகாயத்தில் கருமைமுதலிய அத்தியாசத்தின் அபரோக்ஷத்தன்மையின் உபயோகியான ஆகாயத்தின் அபரோக்ஷத்தன்மை மனதினு லுண்டாகின்றது. சொப்பனத்தின் அபரோக்ஷத்தன்மையின் உபயோகியான அதிஷ்டானத்தின் அபரோக்ஷத்தன்மை சுபாவசித்தமாம். இவ்வாற்றால் சம்க்ஷேப சாரீரகத்தில் சர்வஞ்ஞாத்ம முனியானவர் தானே அபரோக்ஷமாதலில் சொப்பனுத்தியாசத்தைக் கூறியிருக்கின்றனர். ஆதலால், ஜீவசேதனமே சொப்பனத்தின் அதிஷ்டானமாம்.

251. முற்கூறிய பக்ஷத்தில் சங்கை சமாதான பூர்வகமான ஜீவசேதன வடிவ அதிஷ்டானத்தின் சொரூபப் பிரகாசத்தினுல் சொப்பனத்தின் பிரகாசம்.

ஜீவசேதனத்திற்கு ஆவரிக்கப்பட்டதா யிருத்தலின் தானுகப் பிரகாசிக்கும் சுபாவத்தை அங்கீகரிக்கின், அவித்தை வியாபகமாயிருத்தலின் அதனிடத்துப் பிரதிபிம்பவடிவ ஜீவசேதனமும் வியாபகமாம். அதற்குக் கடமுதலியவற்றோடு எப்போதும் சம்பந்த மிருக்கின்றது. ஆதலால், நேத்திர முதலியவற்றுற் றேன்றிய விருத்தியின் அபேக்ஷையின்றியே கடமுதலியவற்றின் அபரோக்ஷத்தன்மை யுண்டாதல்வேண்டும். ஜீவசேதனத்தோடு சம்பந்தமுடையதின் அபரோக்ஷத்தன்மையினும்

விருத்தியின் அபேக்ஷையை அங்கீகரிக்கின், தானே அபரோக்ஷமாகும் ஜீவசேதனத்தினால் சொப்பனாத்தியாசத்தின் அபரோக்ஷத்தன்மையைக் கூறியது அசங்கதமாகும். அங்ஙனமாயினும், சொப்பனாத்தியாசத்திற்கு ஜீவசேதனம் அதிஷ்டானமாம். கடமுதலியவற்றிற்கு அதிஷ்டானம் ஜீவசேதனமன்று; ஆனால் பிரஹ்மசேதனமாம். ஆதலால், சொப்பன பதார்த்தங்களுக்கோ தம் அதிஷ்டானமாகிய ஜீவசேதனத்தில் தாதாத்மிய சம்பந்தமிருக்கின்றது. கடமுதலியவற்றின் அதிஷ்டானம் பிரஹ்மசேதனமா யிருத்தலின், அவற்றின் தாதான்மிய சம்பந்தம் பிரஹ்மசேதனத்தோ டிருக்கின்றது; ஜீவசேதனத்தோ டில்லை. நேத்திர முதலியவற்றாற் றோன்றிய விருத்திவாயிலாக ஜீவசேதனத்திற்குக் கடமுதலியவற்றோடு சம்பந்த முண்டாகின்றது. விருத்திக்கு முந்தியகாலத்தில் உள்ள கடாதிகளின் சம்பந்தம் யாதோ, அது அபரோக்ஷத்தன்மையினைச் சம்பாதிப்பதன்று. ஆதலால், கடமுதலியவற்றோடு ஜீவசேதனத்தின் விலக்ஷண சம்பந்தத்திற் கேதுவாகிய விருத்தியின் அபேக்ஷையினால் அபரோக்ஷத்தன்மை உண்டாகின்றது. சொப்பனாத்தியாசத்தில் அதிஷ்டானத்தன்மையுடைய சம்பந்தத்தால் ஜீவசேதனத்தினது என்றும் சம்பந்த முள்ளனவாகிய பதார்த்தங்களின் பிரகாசம் விருத்தியின்றியே உண்டாகின்றது. இவ்வாறு பிரகாசாத்ம ஸ்ரீ சரணரென்னும் ஆசாரியர் கூறியிருக்கின்றனர். மதபேதத்தால் விருத்தின் பிரயோஜனத்தை மேற்கூறுவாம். இவ்வாற்றால் அவித்தையிற் பிரதிபிம்ப ஜீவசேதனம் சொப்பனத்திற்கு அதிஷ்டானமாம். அதனது சொரூபப் பிரகாசத்தினால் சொப்பனத்தின் பிரகாச முண்டாகின்றது.

252. அத்வைத தீபிகையில் நிருசிம்ஹாசிரம ஆசாரியர் கூறிய ஆகாசகோசர சாக்ஷுஷ விருத்தியை நிரூபித்தலோடு சம்க்ஷேப சாரீரகத்திற் கூறிய ஆகாசகோசர மானசவிருத்தியின் அபிப்பிராயம்.

ஆனால், இப் பிரசங்கத்தில் ஆகாசகோசர மானசவிருத்தி சொல்லப்பட்டது. ஆண்டு நிருசிம்ஹாசிரமாசாரியர் அத்வைத தீபிகையில் இது கூறியிருக்கின்றனர்:—உருவமின்றிய ஆகாசகோசர சாக்ஷுஷவிருத்தி சம்பவியாதாயினும், ஆகாயத்திற்

பரவிய பிரகாச வடிவமுடையதாயிருத்தலின் பிரகாசவடிவ சாக்ஷுஷவிருத்தி உண்டாகின்றது. ஆலோகாவச்சின்ன சேதனத்திற்கு எங்ஙனம் விருத்திவாயிலாகப் பிரமாதாவோடு அபேத முண்டாகின்றதோ, அங்ஙனமே ஆலோக தேசத்திருக்கும் ஆகாசாவச்சின்ன சேதனத்திற்கும் அபேத முண்டாகின்றது. இவ்வாற்றால் ஆலோகவடிவ சாக்ஷுஷவிருத்திக்கு விஷயமாயிருத்தலின், ஆகாயத்தின் அபரோக்ஷத்தன்மையும் நேத்திர ஜந்நியமாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. சம்க்ஷேப சாரீரகத்தில் மானஸ அபரோக்ஷத்தன்மை சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:—ஆகாயமோ உருவமின்றியதாம். ஆதலால், ஆகாயவடிவ விருத்தியோ சம்பவியாது. அந்நியவடிவ விருத்தியினால் சமானதேசத்திருக்கும் அந்நியத்தின் பிரத்தியக்ஷ மங்கீகரிக்கின், கடத்தின் உருவவடிவ விருத்தியினால் கடத்தின் நெடுமை குறுமைப் பரிமாணங்களின் பிரத்தியக்ஷ முண்டாதல்வேண்டும். ஆலோக வடிவ விருத்தியினால் ஆலோகதேசத்திருக்கும் வாயுவின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமு முண்டாதல் வேண்டும். ஆதலால், ஆலோகவடிவ சாக்ஷுஷவிருத்தியினால் ஆகாயத்தின் அபரோக்ஷத் தன்மை சம்பவியாமையால் மானஸ அபரோக்ஷத்தன்மையே சம்பவிக்கின்றது.

253. இரண்டு மதங்களையும் அங்கீகரித்தலோடு அத்வைததீபிகையிற் கூறிய தன்மை நலமுடையதெனல்.

ஸூக்ஷ்மமாக விசாரிக்கின் அத்வைததீபிகையின்படி அந்நிய வடிவ விருத்தியினால் அந்நியத்தின் அபரோக்ஷத்தன்மை அப்பிரசித்தமாம். அதன் அங்கீகாரம் தோஷமாம். அங்ஙனமாயினும், பிரயோஜன வலியால் சிலவிடத்து அந்நியாகார விருத்தியினால் அந்நியத்தின் அபரோக்ஷத்தன்மை அங்கீகரிக்கின், முற்கூறிய தோஷத்தின் பரிகார முண்டாகின்றது. சம்க்ஷேபசாரீரகத்தின்படி பாகிய பாதார்த்தத்தில் அந்தக்கரண கோசரத்தன்மை அப்பிரசித்தமாம். அதனை அங்கீகரித்தல் தோஷமாம். பிரயோஜன வலியால் அந்நியாகார நேத்திரத்தினது விருத்தியுடன் கூடிய அந்தக்கரண விருத்தியின் கோசரத்தன்மை பாகியபதார்த்தங்களில் அங்கீகரிக்கின், கேவல அந்

தக்காணத்திற்குப் பாகியபதார்த்தத்தைக் கோசரிக்குந் தன்மையில்லை யென்னும் நியமத்தின் பங்கவடிவ தோஷ மில்லை. இவ்வாற்றால் இருவகை எழுத்தும் சம்பவிக்கின்றது. அங்ஙனமாயினும் அத்வைததீபிகையின் கிரமமே நலமுடையதாம். ஏனெனின், ஆலோகவடிவ விருத்திக்குச் சககாரித்தன்மைவடிவ காரணத்தன்மையை அங்கீகரித்து, அந்தக்கரணத்தில் பாகியபதார்த்த கோசர சாக்ஷாத்காரத்தின் காணத்தன்மை அதிகமா யங்கீகரிக்க வேண்டியதாகின்றது. அத்வைததீபிகையின்படி அந்தக்கரணத்திற்குப் பாகிய சாக்ஷாத்காரத்தின் காணத்தன்மை அங்கீகரிக்க வேண்டியதில்லை. ஆதலால் இலாகவமாம். நேத்திரத்திற்குச் சககாரித்தன்மை அங்கீகரியாது கேவல அந்தக்கரணத்தினை ஆகாயப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாகக் கொள்ளின், மூடிய கண்களுக்கும் ஆகாயத்தில் மானஸப் பிரத்தியக்ஷ முண்டாதல் வேண்டும். அந்தக்காணத்திற்கு ஞானத்தின் உபாதானத்தன்மை யிருத்தலால் காரணத்தன்மை கூறுதல் முற்றும் அயுக்தமாம். ஆதலால், சம்க்ஷேபசாரீரகத்தில் ஆகாயத்தின் பிரத்தியக்ஷத்திற்கு மானஸத்தன்மையைக் கூறுதல் பிரௌடிவாதமாம். இவ்வாற்றால் அத்தியாசத்தின் அபரோக்ஷத்தன்மைக்கு ஏதுவாகிய அதிஷ்டானத்தின் அபரோக்ஷத்தன்மை இந்திரியத்தினால் அல்லது சொரூபப்பிரகாசத்தினால் உண்டாகின்றதென் றிவ்வளவே கூறுதல் உசிதமாம். இவ்வாற்றால் மதபேதத்தினால் சொப்பனத்தின் உபாதானம் அவஸ்தாஞ்ஞானம் அல்லது மூலாஞ்ஞானமாம்.

254. இரஜ்ஜு சர்ப்பமுதலியவற்றிற்கு எல்லா மதங்களிலும் தூலாஞ்ஞானமே உபாதானமாதல்

இரஜ்ஜுசர்ப்ப முதலியவற்றிற்கோ சகலமதங்களினும் அவஸ்தாஞ்ஞானமே உபாதானகாரணமாம். இரஜ்ஜுமுதலியவற்றின் ஞானத்தால் அவற்றின் நிவிருத்தி உண்டாகின்றது. இரஜ்ஜுவின் ஞானத்தினால் அஞ்ஞான நிவிருத்தி வாயிலாகச் சர்ப்பத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், ஒருமுறை யறியப்பட்ட இரஜ்ஜுவில் காலாந்தரத்தில் உபாதானத்தின் அபாவத்தால் சர்ப்பப்பிரமம் உண்டாகலாகாது என்னும் சங்கைக்குச் சமாதானத்தை விருத்தியின் பிரயோஜன நிரூபணத்திற் கூறுவாம்.

255. சொப்பனத்தின் அதிஷ்டானமாகிய ஆத்மாவின் சுயம்பிரகாசத்தன்மையில் பிரமாணவடிவமாயுள்ள பிரகதாரணிய சுருதியின் அபிப்பிராயம்

சொப்பனத்தின் அதிஷ்டானத்திற்குத் தானே அபரோக்ஷமாதற்றன்மையினுல் சொப்பனத்தின் அபரோக்ஷத்தன்மை முன் சொல்லப்பட்டிருக்கின்றது. சுயஞ்சோதிப் பிராஹ்மண வாக்கியத்திலும் "அத்ராயம்புருஷ: ஸ்வயம்ஜ்யோதிர்பவதி" "இங்கு இப் புருஷன் சுயஞ்சோதி யாகின்றான்" என்பதாகச் சொப்பனத்தின் பிரசங்கத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:—மூன்றவஸ்தைகளிலும் ஆத்மா சுயம்பிரகாசமாயிருக்கினும், தனது பிரகாசத்தில் அந்நியப்பிரகாசத்தின் அபேக்ஷையின்றியதாய் எல்லாவற்றையும் பிரகாசிப்பது யாதோ அதனைச் சுயம்பிரகாசமென்பர். ஜாக்கிராவஸ்தையில் சூரியன்முதலியவற்றையும் நேத்திரமுதலியவற்றையும் பிரகாசிப்பிப்பதாய், அந்நியப்பிரகாசத்தின் அபேக்ஷையின்றிய தன்மை அவ் வாத்மாவினிடத்து நிச்சயிக்கப்படுகிறதில்லை. ஸ்தூலதரிசிக்குச் சுழுத்தியில் ஒருஞானமும் தோற்றுகிறதில்லை. இதனுற்றான் சுழுத்தியில் ஞான சாமாநியத்தின் அபாவத்தை நையாயிகர் அங்கீகரித்திருக்கின்றனர். ஆதலால், ஆத்மப் பிரகாசத்தின் நிச்சயம் சுழுத்தியில் உண்டாகிறதில்லை. இவ் வபிப்பிராயத்தினுல் சுருதியானது சொப்பனுவஸ்தையில் ஆத்மாவைச் சுவயம்பிரகாசமென்று கூறியிருக்கின்றது.

256. சொப்பனத்தில் இந்திரிய அந்தக்கரணங்கள் ஞானசாதன மாகாமையைக் கூறி, தானே அபரோக்ஷமாம் ஆத்மாவினுல் சொப்பனத்தின் அபரோக்ஷத் தன்மையைக் கூறுதல்.

சொப்பனுவஸ்தையிலும் நேத்திரமுதலிய இந்திரியங்களின் சஞ்சார முண்டாயின், சொப்பனத்திலும் ஆத்மாவுக்கு வேறு பிரகாசத்தை அபேக்ஷியாமை யின்மையால் சுயம்பிரகாசத்தன்மையின் நிச்சயம் கூடாததாகும். இவ்வாற்றுல் இந்திரிய வியாபாரமின்றிச் சொப்பனத்தில் ஆத்மப்பிரகாசம் இருக்கின்றது. சொப்பனத்தில் கையில் தண்டத்தைக் கொண்டு ஓட்டை எருமை முதலியவற்றினை அடிக்கின்றவனுய் நேத்தி

ரத்தினுல் மா முதலியவற்றினைப் பார்த்துக்கொண்டு திரிகிருன். கை கண் கால் முதலியவற்றின் கோளகங்கள் அசைவின்றியன வாகக் காணப்படுகின்றன. ஆதலால், சொப்பனத்தில் வியாவ காரிக இந்திரியங்களின் வியாபாரமில்லை. பிராதிபாஸிக இந்திரியத்தின் அங்கீகாரமில்லை. சொப்பனத்தில் பிராதிபாஸிக இந்திரியம் உளதாயின், சொப்பனத்தில் வேறு பிரகாசமின்மையால் சுவயம்பிரகாசத்தன்மை சுருதியிற் கூறப்பட்டிருக்கின்றது; அதற்குப் பாதமுண்டாகும். விசாரசாகரத்தில் சொப்பனத்தில் இந்திரியத்தைப் பிராதிபாஸிகமென்று கூறியிருக்கின்றோம். அது பிரௌடிவாதமாம். சொப்பனத்தில் பிராதிபாஸிக இந்திரியத்தை அங்கீகரித்தும் ஞானத்தின் சமகாலத்தில் அவற்றின் உற்பத்தி உண்டாகுதலால் ஞானத்திற்குச் சாதனமாந் தன்மை அவற்றிற்குச் சம்பவியாது. இவ்வாற்றால் தனது மேன்மையைப் போதித்தற்குப் பூர்வவாதியின் வார்த்தையை அங்கீகரித்துச் சமாதான முளது. ஆதலால், சொப்பனத்தில் ஞானத்தின் சாதனம் இந்திரியமன்று. இந்திரிய வியாபாரமின்றிக் கேவல அந்தக்கரணத்திற்கு ஞானசாதனத்தன்மையின்மையாலும், தத்துவதீபிகையின் மதத்தால் அந்தக்கரணத்திற்குச் சொப்பனத்தில் யானைமுதலிய வடிவ பரிணாமமுண்டாகுதலால் ஞானகருமத்திற்கு ஞானசாதனத்தன்மை சம்பவியாமையாலும் அந்தக்கரண வியாபாரமின்றி ஆத்மப்பிரகாசமிருக்கின்றது. ஆதலால், சுயம் அபரோக்ஷமான ஆத்மாவினால் சொப்பனத்தின் அபரோக்ஷத்தன்மை உண்டாகின்றது. சொப்பனுவஸ்தையில் யானைமுதலியவற்றில் சாக்ஷாத்தன்மை தோற்றுகின்றது. அதுவும் யானைமுதலியவற்றைப்போல அத்தியஸ்தமாம். ஜாக்கிரத்திற் கடமுதலியவற்றின் சாக்ஷாத்தன்மை வியாவகாரிகமாம்; இரஜ்ஜு சர்ப்பமுதலியவற்றின் சாக்ஷாத்தன்மை அத்தியஸ்தமாகுதலால் பிராதிபாஸிகமாம்.

257—259. திருஷ்டி சிருஷ்டி, சிருஷ்டி திருஷ்டி வாதங்களின் பேதம்.

257. திருஷ்டி சிருஷ்டி வாதத்தில் சகல அநாத்மாக்களின் ஞாதசத்தை (சாக்ஷிபாஸ்யத்தன்மை) யைக் கூறி, திருஷ்டி சிருஷ்டி பதத்திற்கு இரண்டு பொருள் கூறுதல்.

திருஷ்டி சிருஷ்டி வாதத்திலோ எந்த அநாத்ம பதார்த்தத்திற்கும் அஞ்ஞாதசத்தையில்லை. ஆனால், ஞாதசத்தையுண்டு.

ஆதலால், இரஜ்ஜு சர்ப்பத்தைப்போலச் சகல அநாத்ம வஸ்துக்களும் சாக்ஷிபாஸியமாம். அவற்றில் இந்திரிய ஜந்நிய ஞானத்தின் விஷயத்தன்மை தோற்றுகின்றது. அது அத்தியஸ்தமாம். திருஷ்டி சிருஷ்டிவாதத்தில் இரண்டு பேதமுண்டு. சித்தாந்த முக்தாவலி முதலிய கிரந்தங்களில் இது சொல்லப்பட்டிருக்கின்றது:— திருஷ்டி அதாவது ஞானசொரூபமே சிருஷ்டியாம்; ஞானத்திற்கு வேருகச் சிருஷ்டி யில்லை.* ஆகர நூல்களில் இது சொல்லப்பட்டிருக்கின்றது:—திருஷ்டி சிருஷ்டியாவது ஞானசமயத்தில் அநாத்ம பதார்த்தத்தின் சிருஷ்டியுளது; ஞானத்திற்குமுன் அநாத்ம பதார்த்த மிருப்பதில்லை என்பதாம். ஆதலால், சகல திருசியங்களுக்கும் ஞாதசத்தையிருக்கின்றது; அஞ்ஞாதசத்தை யில்லை. இவ்வாறு இருவகைத் திருஷ்டி சிருஷ்டிவாத முண்டு. சகல அத்வைத சாஸ்திரங்களுக்கும் இதுவே அபிப்பிராயமாம்.

258. சிருஷ்டி திருஷ்டிவாத (வியாவகாரிக பக்ஷ)த்தைக் கூறுதல்

சில நூலாசிரியர் ஸ்தூலப்பார்வையுடைய புருஷர்களை அநுசரித்துச் சிருஷ்டிதிருஷ்டி வாதத்தை அங்கீகரித்திருக்கின்றனர். முதலில் சிருஷ்டி உண்டாகின்றது. பிந்தியகாலத்திற் பிரமாணத்தின் சம்பந்தத்தினுல் திருஷ்டி உண்டாகின்றது. சிருஷ்டிக்குப்பின் திருஷ்டி உண்டாகின்றதென்பது சிருஷ்டி திருஷ்டி என்னும்சொல்லிற்குப் பொருளாம். இந்தப் பக்ஷத்தில் அநாத்ம பதார்த்தத்திற்கும் அஞ்ஞாதசத்தை யுண்டு. அநாத்ம கடமுதலியவற்றிற்கு இரஜ்ஜுசர்ப்ப முதலியவற்றின் விலக்ஷணவியாவகாரிகசத்தையுண்டு. திருஷ்டிசிருஷ்டிவாதத்தில் எந்த அநாத்ம வஸ்துவும் பிரமாணத்திற்கு விஷயமன்று. ஆனுல், பிரஹ்மமே வேதாந்த வடிவ சப்தப்பிரமாணத்திற்கு விஷயமாம். அசேதன பதார்த்தங்கள் முழுவதும் சாக்ஷிபாஸியமாம். அவற்றில் சாக்ஷ்யத்தன்மைமுதலிய உணர்ச்சி பிரமவடிவமாம். பிர

* உபநிஷத்பாஷிய கீதாபாஷிய சூத்திர பாஷியங்களும், அவற்றின் வியாக்கியானங்களும் பிரமேயகிரந்த மென்றும், பரமதகண்டநமும் ஸ்வமதஸ்தாபனமும் செய்யும் கண்டநம், சித்சுகி, அத்வைதசித்தி, கௌடப் பிரஹ்மாநந்தீய முதலியன ஆகரகிரந்த மென்றும் சொல்லப்படுகின்றன.

மாணப் பிரமேயவிபாகமும் சொப்பனத்தைப்போல அத்தியஸ்தமாம். சிருஷ்டி-திருஷ்டி வாதத்தில் அநாத்மபதார்த்தமாகிய கடமுதலியன பிரமாணத்திற்கு விஷயமாம். அங்ஙனமே குருசாஸ்திரமுதலியனவும் வியாவகாரிகமாம்; சுத்திரஜதமுதலியவற்றின் விலக்ஷணமாம். வியாவகாரிக ரஜதமுதலிய பதார்த்தங்களால் கடகமுதலிய வடிவப் பிரயோஜன சித்தி உண்டாகின்றது. பிராதிபாஸிகத்தினால் பிரயோஜனசித்தி உண்டாகிறதில்லை. அங்ஙனமாயினும் அதிஷ்டான ஞானத்தினால் நிவிருத்தி இரண்டற்கும் சமானமா யுண்டாகின்றது. சத்தசத்து விலக்ஷணத்தன்மை வடிவ அநிர்வசநீயத்தன்மையும் இரண்டிடத்தும் சமானமாம். அங்ஙனமே சுவ அதிகரணத்தில் முக்காலத்தைய அபாவமும் இரண்டற்கும் சமானமாம். ஆதலால், பிராதிபாஸிகத்தினைப்போல வியாவகாரிக பதார்த்தமும் மித்தையாம். ஆதலால், சிருஷ்டி-திருஷ்டி வாதத்திலும் அத்வைதத்திற்கு ஹானி யில்லை.

259 - 266. மித்தியாப் பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையின் சங்கை சமாதானம்.

259. முற்கூறிய இரண்டு பக்ஷங்களிலும் மித்தியா பதார்த்தங்களின் மித்தியாத்தன்மைத் தர்மத்தில் துவைதவாதிகளின் ஆக்ஷேபம்.

இப் பிரசங்கத்தில் இது சங்கையாம். திருஷ்டி சிருஷ்டி வாதத்திலும், அங்ஙனமே சிருஷ்டி திருஷ்டிவாதத்திலும் சகல அநாத்மாக்களும் மித்தையாமென்பதில் விவாதமில்லை. ஆனால், மித்தியா பதார்த்தங்களில் மித்தியாத்தன்மைத்தர்ம மிருக்கின்றது. அதில் துவைதவாதி இவ்வாக்ஷேபம் செய்கின்றார்:—பிரபஞ்சத்தில் மித்தியாத்தன்மைத் தர்மம் சத்தியமா? அல்லது மித்தையா? சத்தியமெனின், சேதனத்துக்கு வேறான அநாத்ம தர்மங்களுக்குச் சத்தியத்தன்மை உண்டாகுதலால் அத்வைதத்திற்கு ஹானி யுண்டாகும். மித்தியாத்தன்மையை மித்தையெனக் கூறினும், அத்வைதத்திற்கு ஹானி யுண்டாகும்.

அது வருமாறு:—மித்தியா பதார்த்தத்திற்குத் தனது விரோதியாகிய பதார்த்தங்களின் பிரதிக்ஷேபகத் (திரஸ்கரிக்கும்) தன்மை யிருத்தலால் பிரபஞ்சத்தின் மித்தியாவடிவ மித்தி

யாத்தன்மையோடு அதன் சத்தியத்தன்மைக்குப் பிரதிக்ஷேபம் (மறுப்பு) உண்டாகாது. எங்ஙனம்: ஒரே பிரஹ்மத்தில் சப்பிர பஞ்சத்தன்மை நிஷ்பிரபஞ்சத்தன்மைத் தர்மங்க ளிருக்கின் றன. மித்தியாவடிவ சப்பிரபஞ்சத்தன்மைத் தர்மத்தோடு நிஷ் பிரபஞ்சத்தன்மைக்குப் பிரதிக்ஷேப (விரோத) முண்டாகிற தில்லை. ஆனால், சப்பிரபஞ்சத்தன்மை நிஷ்பிரபஞ்சத்தன்மை யென்னும் இரண்டு தர்மமுடையது பிரஹ்மமாம். கற்பிதம் சப்பிரபஞ்சத்தன்மை; பாரமார்த்திகம் நிஷ்பிரபஞ்சத்தன்மை யாம். அங்ஙனமே பிரபஞ்சத்திற் கற்பிதம் மித்தியாத்தன்மை யும் பாரமார்த்திகம் சத்தியத்தன்மையுமாம். இவ்வாற்றால் பிர பஞ்சத்தின் பாரமார்த்திக சத்தியத்தன்மைத் தர்மத்தின் சத் பாவத்தினால் அத்வைதத்திற்கு ஹானி யுண்டாகும்.

260. முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு அத்வைத தீபிகையிற் கூறிய சமாதானம்.

இவ்வாக்ஷேபத்திற்கு அத்வைததீபிகையில் இச் சமாதானம் எழுதப்பட்டிருக்கின்றது:—“இருக்கின்றது குடம்” என்பதா கக் குடமுதலியவற்றில் சத்தியத்தன்மை தோற்றுகின்றது. அதிஷ்டானத்துள்ள சத்தியத்தன்மையின் விளக்கம் கடமுத லியவற்றி லுண்டாகின்றது. அல்லது அதிஷ்டானத்தி லுள்ள சத்தியத்தன்மையின் அநிர்வசநீய சம்பந்தம் கடமுதலியவற் றில் உற்பத்தியாகின்றது. கடமுதலியவற்றில் சதசத்விலக்ஷ ணத்தன்மை வடிவ மித்தியாத்தன்மைத் தர்மம் சுருதி சித்த மாம். சத் விலக்ஷணத்தில் மித்தியாத்தன்மை யிருத்தலால் மித் தியாத்தன்மைக்குச் சத்தியத்தன்மையோடு விரோத முண்டு. ஆனால் கடமுதலியவற்றில் தனது சத்தியத்தன்மை யில்லை. அதற்கு மித்தியாத்தன்மையோடு பிரதிக்ஷேபம் உண்டாகின் றது. துவைதவாதியானவர், மித்தியாத்துவதர்மத்திற்குச் சத்தியத்தன்மையை அங்கீகரித்தலின்றி மித்தியாவடிவ மித்தியாத்தன்மையோடு பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மைக் குப் பிரதிக்ஷேபம் சம்பவிக்கிறதில்லை, மித்தியாவடிவ தர்மத்தி னோடும் தனது விரோதியாகிய தர்மத்திற்குப் பிரதிக்ஷே பத்தைக் கூறின், மித்தியாவடிவ சப்பிரபஞ்சத்தன்மையோடு பிரஹ்மத்தின் நிஷ்பிரபஞ்சத்தன்மைக்கும் பிரதிக்ஷேப முண் டாதல் வேண்டும் என்று கூறுகின்றார். அது பொருந்தாது.

ஏனெனின் இது நியமமாம்:—பிரமாண சித்த ஒரு தர்மத்தோடு சுவசமான சத்தையுடைய தர்மியின் சுவவிரோதியாகிய தர்மத்திற்குப் பிரதிக்ஷேப முண்டாகின்றது. யாண்டுத் தர்மியின் விஷமசத்தை யுண்டாகின்றதோ, ஆண்டு அதன் விரோதி தர்மத்திற்குப் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. பிரஹ்மத்தின் சப்பிரபஞ்சத்தன்மை வியாவகாரிகமாம்; பிரஹ்மம் பாரமார்த்திகமாம். ஆதலால், சப்பிரபஞ்சத்தன்மையின் சமான சத்தையுடைய தர்மி பிரஹ்மமன்று. அதன் நிஷ்பிரபஞ்சத்தன்மைக்குச் சப்பிரபஞ்சத்தன்மையோடு பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. வியாவகாரிகப் பிரபஞ்சத்தில் மித்தியாத்தன்மையும் வியாவகாரிகமாம். ஏனெனின், ஆகந்துகதோஷமின்றிய கேவல அவித்தியாஜந்நியம் பிரபஞ்சமும் மித்தியாத்தன்மையுமாம். ஆதலால், இரண்டும் வியாவகாரிகமாயிருத்தலின் மித்தியாத்தன்மையின் சமானசத்தையுடையது பிரபஞ்சமாம். அதன் சத்தியத்தன்மைக்கு மித்தியாத்தன்மையோடு பிரதிக்ஷேப முண்டாகின்றது. சத்தியதர்மத்தினாலேயே விரோதிதர்மத்திற்குப் பிரதிக்ஷேபம் அங்கீகரிக்கின் "இரஜத மிருக்கின்ற" தென்பதாகச் சுத்திரஜதத்தில் சத்தியத்தன்மையின் பிரதீதி உண்டாகியதற்கு இரஜதத்தின் மித்தியாத்தன்மையோடு பிரதிக்ஷேபம் உண்டாகலாகாது. ஏனெனின், கற்பித இரஜதத்தில் மித்தியாத்தன்மைத் தர்மமும் கற்பிதம்; சத்தியமன்று. ஆதலால், விரோதி தர்மத்தின் பிரதிக்ஷேபத்தில் பிரதிக்ஷேபக தர்மத்தின் சத்தியத்தன்மை அபேக்ஷிக்கப்பட்டதன்று; ஆனால், எந்தத் தர்மியின் தர்மம் விரோதி யாகின்றதோ, அந்தத் தர்மி பிரதிக்ஷேபக தர்மத்தின் சமான சத்தையுடையதாதல்வேண்டும். ஆதலால் பிரஹ்மத்தின் சப்பிரபஞ்சத்தன்மையோடு நிஷ்பிரபஞ்சத்தன்மையினது பிரதிக்ஷேபத்தின் ஆபத்தி யில்லை. பிரபஞ்சத்தின் வியாவகாரிக மித்தியாத்தன்மையினால் சத்தியத்தன்மைக்குப் பிரதிக்ஷேபம் சம்பவிக்கின்றது.

261. மித்தியாப் பிரபஞ்சத்தின் மித்தியாத் தன்மைத் தர்மத்தில் வேறு வகையால் துவைத வாதிகளின் ஆக்ஷேபம்

துவைதவாதி வேறுவகையாக ஆக்ஷேபம் செய்கின்றார். அது வருமாறு:—பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மைத் தர்மத்

தினை மித்தையெனக் கொள்ளினும் பிரபஞ்சத்தின் பாரமார்த்திக சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம் உண்டாகிறதில்லை. ஏனெனின், சமான சத்தையுடைய தர்மங்களுக்கு விரோத முண்டாகின்றது. விஷமசத்தையுடைய பதார்த்தங்களுக்கு விரோத முண்டாகிறதில்லை. விஷமசத்தையுடைய பதார்த்தங்களுக்கு விரோத முண்டாயின், சுத்தியிற் பிராதிபாஸிக ரஜத தாதான்மியத்தினால் வியாவகாரிக ரஜதபேதத்திற்குப் பிரதிக்ஷேபம் உண்டாதல் வேண்டும். இவ்வாற்றால் பிரபஞ்சத்தின் வியாவகாரிக மித்தியாத்தன்மையினால் பாரமார்த்திக சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம் சம்பவியாமையால் பிரபஞ்சம் சத்தியமாம். இதனால் அத்வைதத்தின் அசம்பவ மிருக்கின்றது.

262. முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு முற்கூறிய சமாதானமே பொருந்துமாறு.

இச்சங்கைக்கும் முற்கூறியதே சமாதானமாம். ஏனெனின், முற்கூறியபடி சர்ப்பம் இரஜதமுதலியவற்றின் மித்தியாத்தன்மையினால் அவற்றின் சத்தியத்தன்மைக்குப் பிரதிக்ஷேப முண்டாகலாகாது. ஆதலால், பிரமாணத்தினால் நிச்சயிக்கப்பட்ட தர்மத்தினால் விரோதி தர்மத்தின் பிரதிக்ஷேபகத்தன்மையில் பிரமாணத்தினால் நிச்சயிக்கப்படுந்தன்மைப் பிரயோஜக முண்டு. இரஜதத்தின் மித்தியாத்தன்மை பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டதாம். அதற்கு விரோதியான சத்தியத்தன்மையைப் பிரதிக்ஷேப மென்பர். அங்ஙனமே பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையும் சுருதிமுதலிய பிரமாணங்களால் நிச்சயிக்கப்பட்டதாம். அதனால் பிரபஞ்ச சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேப முண்டாகின்றது. சுத்தியில் இரஜதத்தின் தாதாத்மியம் பிரமசித்தமாம்; பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டதன்று. அதனால் இரஜத பேதத்தின் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. மாறாகியசுத்தியில் இரஜதபேதமே பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டதாம். அதனால் இரஜத தாதாத்மியத்தின் பிரதிக்ஷேப முண்டாகின்றது. பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையின் மித்தியாத்துவத்தை வியாவகாரிகமாகக் கொண்டு, அதன் தர்மியாகிய பிரபஞ்சத்தைச் சத்தியமெனக் கூறுதல் முற்றும் விருத்தமாம். ஏனெனின், வியாவகாரிக தர்மத்தின் ஆசிரயம் வியாவகாரிகமே

யாகின்றது. ஆதலால், துவைதவர்தியின் இரண்டாவது ஆக்ஷேபமும் அசங்கதமாம்.

263. அத்வைததீபிகையிற் கூறிய சமாதானம் சத்தையின் பேதத்தை அங்கீகரிக்கிற் சம்ப வித்தலும், ஒரு சத்தையை அங்கீகரிக்கின் சம்பவியாமையும்.

இவ்வாற்றால் அத்வைததீபிகையின்படி பிரதிக்ஷேபக தர்மத்தின் சமான சத்தையுடையது தர்மியாமாயின், அதன் விரோதியாகிய தர்மத்திற்குப் பிரதிக்ஷேப முண்டாமென்னும் நியமத்தை அங்கீகரிக்கின், பிரபஞ்சத்தின் மித்தியா வடிவ மித்தியாத்தன்மையினுல் பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மை யின் பிரதிக்ஷேபம் சம்பவிக்கின்றது. பிரஹ்மத்தின் சப்பிர பஞ்சத்தன்மையினுல் நிஷ்பிரபஞ்சத்தன்மையின் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. ஆனுல், சத்தாபேத மங்கீகரிக்கின், அத் வைததீபிகையிற் கூறிய சமாதானம் சம்பவிக்கின்றது. பிரஹ்ம வடிவ சத்தையின் விளக்கமே கடமுதலியவற்றி லுண்டாகின் றது. வியாவகாரிகப் பிராதிபாஸிக பதார்த்தங்களில் பின்ன சத்தை யில்லையென்னும் இப் பக்ஷத்தில் ஒரு சத்தையை அங்கீகரிக்கின் முற்கூறிய சமாதானம் சம்பவியாது.

264. முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு நூலாசிரியர் நிச்சலதாசர் கூறிய சமாதானம்

ஆனுல், எமது பாவனையினுல் இது சமாதானமாம்:—பிர மாணத்தால் நிச்சயிக்கப்பட்ட தர்மத்தோடு தனது விரோதி யாகிய தர்மத்திற்குப் பிரதிக்ஷேப முண்டாகின்றது. இரண்டு தர்மங்களும் பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டன வாகுமிடத் தப் பிறதர்மத்திற்குப் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. பிரபஞ் சத்தின் மித்தியாத்தன்மை சுருதிமுதலிய பிரமாணங்களால் நிச்சயிக்கப்பட்டதாம். பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையில் ஒரு சுருதிவாக்கியமும் பிரமாணமாவதில்லை. மாறுன சுருதி வாக்கியங்களால் சத்தியத்தன்மையின் அபாவம் தோற்றுகின் றது. ஆதலால், பிரபஞ்சத்தின் மித்தியாத் தன்மையினுல் சத்தி யத்தன்மையின் பாத முண்டாகின்றது. “கட மிருக்கின்ற” தென்பதாகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினுல் பிரபஞ்சத்தில்

சத்தியத்தன்மை தோற்றியபோதிலும், அபௌருஷேய சுருதி வசனங்களினும் புருஷப்பிரத்தியக்ஷம் வலியின்றியதாம். ஆத்லால், பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மை பிரமாண சித்தமன்று. பிரஹ்மத்தின் சப்பிரபஞ்சத்தன்மை நிஷ்பிரபஞ்சத்தன்மை யிரண்டும் பிரமாண சித்தமாம். ஆதலால், ஒரு தர்மத்தினுல் மற்ெறுன்றின் பாத முண்டாகிறதில்லை. ஆனுல், நிஷ்பிரபஞ்சத்தன்மை ஞானத்தினுல் பரம புருஷார்த்தத்தின்பிராப்தி உண்டாகின்றது. ஆதலால், நிஷ்பிரபஞ்சத்தன்மையைப் பிரதிபாதித்தலில் சுருதிக்குத் தாற்பரியமாம். அத்வைத நிஷ்பிரபஞ்சப் பிரஹ்மத்தினது போதத்திற்கு உபயோகி, சப்பிரபஞ்சத்தின் நிரூபணமாம். ஆதலால், சப்பிரபஞ்சத்தன்மை நிரூபணத்தில் சுருதிக்குத் தாற்பரிய மின்மையால் சப்பிரபஞ்சத்தன்மை பாரமார்த்திகமன்று; கற்பிதமாம். ஆனுல், தோஷமுதலியவைகளின்றிய கேவல அவித்தியா ஜந்நியமா யிருத்தலால் பிராதிபாஸிகமன்று; வியாவகாரிகமாம். இவ்வாற்ருல் நிஷ்பிரபஞ்சத்தன்மையினுல் சப்பிரபஞ்சத்தன்மையின் பாதம் சித்திக்கின்றது. ஏனெனின், சப்பிரபஞ்சத் தன்மையைக் கூறும் வாக்கியத்திற்கு வியாவகாரிக சப்பிரபஞ்சத்தன்மையில் தாற்பரியங் கூறுதலால் சப்பிரபஞ்சத்தன்மையின் சங்கோச முண்டாகின்றது. பிரஹ்மத்தின் சப்பிரபஞ்சத்தன்மை எப்போது மில்லை. ஆனுல், வித்தைக்குமுன் அவித்தியாகாலத்தி லிருக்கின்றது. ஆதலால், நிஷ்பிரபஞ்சத்தன்மைத் தர்மத்தால் பாதிக்கப்படுவது பிரபஞ்சத்தன்மையாம். அதனுல் நிஷ்பிரபஞ்சத்தன்மையின் பிரதிக்ஷேபம் சம்பவிக்கிறதில்லை. ஆதலால், துவைதவாதியின் ஆக்ஷேபம் அசங்கதமாம்.

265. முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு வேறு நூலாசிரியர் கூறிய சமாதானம்

அன்றியும், நிருசிம்ஹாசிரமாசாரியருக் கந்நியமான நூலாசிரியர் முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு இச்சமாதானங் கூறியிருக்கின்றனர்:—சுவாசிரயகோசர தத்துவ சாக்ஷாத்காரத்தினுல் எந்த தர்மத்திற்குப் பாத முண்டாகிறதில்லையோ, அந்தத் தர்மத்தினுல் விரோதி தர்மத்தின் பிரதிக்ஷேபம் உண்டாகின்றது. சுவாசிரயகோசர தத்துவ சாக்ஷாத்காரத்தினுல் எந்தத் தர்மத்தின் பாதம் உண்டாகின்றதோ, அதனுல் சுவ விரோதி தர்

மத்தின் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. மித்தியாத்துவத்தின் ஆசிரயமாகிய பிரபஞ்சம் யாதோ அதனதிஷ்டானமாகிய பிரஹ்மத்தைக் கோசரிக்கும் தத்துவ சாக்ஷாத்காரத்தினால் பிரபஞ்சத்தினது மித்தியாத்தன்மையின் பாத முண்டாகிற தில்லை. மாறான பிரஹ்ம சாக்ஷாத்காரத்தினால் பிரபஞ்சத்தில் மிகத் திடமான மித்தியாத்துவ புத்தி உண்டாகின்றது. ஆதலால், பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையினால் அதற்கு விரோதியான சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேப முண்டாகின்றது. சப்பிரபஞ்சத்தன்மையின் ஆசிரயம் பிரஹ்மம், அதன் சாக்ஷாத்காரத்தால் சப்பிரபஞ்சத்தன்மையின் பாத முண்டாகின்றது. ஆதலால், பிரஹ்மத்தின் நிஷ்பிரபஞ்சத்தன்மையினால் சப்பிரபஞ்சத்தன்மையின் பாத முண்டாகின்றது.

எங்ஙனம்! சுத்தியில் சுவதாதாத்மிய மிருக்கின்றது; கற்பிதத்திற்கும் தனது அதிஷ்டானத்தில் தாதாத்மிய மிருத்தலால் இரஜததாதாத்மிய மிருக்கின்றது. ஆண்டுச் சுத்தி சாக்ஷாத்காரத்தினால் சுத்திதாதாத்மியத்தின் பாத முண்டாகிற தில்லை. ஆதலால், சுத்திதாதாத்மியத்தினால் சுவவிரோதிசுத்தி பேதத்தின் பிரதிக்ஷேப முண்டாகின்றது. சுத்தி சாக்ஷாத்காரத்தினால் இரஜததாதாத்மியத்தின் பாத முண்டாகின்றது. ஆதலால், இரஜத தாதாத்மியத்தினால் சுவவிரோதி இரஜதபேதத்தின் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. அங்ஙனமே, பிரபஞ்சத்தின் மித்தியாவடிவ மித்தியாத்தன்மையால் சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேப முண்டாகின்றது. பிரஹ்மத்தின் சப்பிரபஞ்சத்தன்மையினால் நிஷ்பிரபஞ்சத்தன்மையின் பிரதிக்ஷேப முண்டாகிறதில்லை. இவ்வாறு துவைதவாதியின் ஆக்ஷேபத்திற்கு அநேக சமாதான முண்டு. அவர்கள் வசனங்களினின்றும் ஜிஞ்ஞாஸுக்களைப் புறமுகமாக்குதல் தகுதியாம்.

266-271. மதபேதத்தால் ஐந்துவகைப் பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம் (திரஸ்காரம்)

266. தத்துவசுத்திகாரர் கிரமப்படி பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம்

பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையினால் அதன் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம் உண்டாகுமென்று சொல்லப்

பட்டது. ஆண்டுச் சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம் மத பேதத்தால் ஐந்துவகையாம். தத்துவசுத்திகாரர் மதத்தில் "கட மிருக்கின்றது" என்றல்முதலிய பிரத்தியக்ஷஞானத்தின் விஷயம் கடமுதலியவற்றின் அதிஷ்டானமாகிய சத்து வடிவ சேதனமாம். சத்ரூபசேதனத்தில் அத்தியஸ்த கட முதலியன தனது அதிஷ்டானத்திற்கு அபிந்நமாய்ப் பிரம விருத்திக்கு விஷயமாகின்றன. எங்ஙனம், சுத்தி ரஜ்ஜுமுதலியவற்றை விஷயஞ்செய்வதாகிய இதுவெனும்வடிவ சாக்ஷுஷ விருத்தி உண்டாகின்றதோ, இரஜத சர்ப்பமுதலியன சாக்ஷுஷ விருத்திக்கு விஷயமாகாது, பிரமவிருத்திக்கு விஷயமாகின்றனவோ, அங்ஙனமே நேத்திரமுதலிய பிரமாண ஜந்நிய சகல ஞானங்களுக்கும் விஷயம் அதிஷ்டான சத்தையாம். கடமுதலியவற்றைக் கோசரிப்பது பிரமாணஜந்நிய விருத்தியாகாது. ஏனெனின், அஞ்ஞாதகோசரம்பிரமாணமாகின்றது. ஜடபதார்த்தத்திற்கு அஞ்ஞானத்தாலாகிய ஆவரணம் சம்பவியாமையின் அஞ்ஞாதத்தன்மையின் அபாவத்தால் பிரமாண கோசரத் தன்மை சம்பவிக்கிறதில்லை. ஆதலால், இரஜதம் சர்ப்ப முதலியவற்றினைப்போலப் பிரமத்தின் விஷயம் கடாதிகளாம். அவற்றின் அதிஷ்டானம் சத்துவடிவமாம். அதுவே நேத்திராதிப் பிரமாண ஜந்நிய விருத்திக்கு விஷயமாம். இவ்வாற்றால் சகல பிரமாணங்களுக்கும் விஷயம் சத்ரூபசேதனமாம். சத்ரூபசேதனத்தில் தாதாத்மியத்தினால் அநேக பேதவிசிஷ்ட கடமுதலியவற்றின் பிரதீதி பிரமவடிவமாம். ஆதலால், கடமுதலியவற்றிலுள்ள சத்தை எப்பிரமாணத்திற்கும் விஷயமன்று. இதனாற்றான் கடமுதலியவற்றின் மித்தியாத்துவத்தை அநேக சுருதிஸ்மிருதிகள் அநுவாதம் செய்கின்றன. தத்துவசுத்திகாரர் இவ்வாறு நேத்திரமுதலிய பிரமாணத்திற்குக் கோசரமாவது அதிஷ்டான சத்தையென்று கூறியிருக்கின்றனர். கடமுதலியவற்றின் சத்தை நேத்திரமுதலிய பிரமாணத்தின் கோசரமன்று. ஆதலால், பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மைக்கும் பிரதிக்ஷேபம் சொல்லப்பட்டிருக்கின்றது.

267. பிற நூலாசிரியர் கிரமப்படி பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினது பிரதிக்ஷேபம்

அன்றியும், ஓர் நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:— "கட மிருக்கின்றது" என்றல் முதலிய உணர்ச்சிக்குக் கோசர

மாவது கடமுதலியவற்றின் சத்துவமாம். சுருதி யுக்தி ஞானிக ளது அநுபவம் என்பவற்ருல் கடமுதலியவற்றில் மித்தியாத் துவ மிருக்கின்றது. ஆண்டுப் பாதிக்கப்படாத தத்துவவடிவ சத்துவத்திற்கு மித்தியாத்தன்மையோடு விரோதமிருத்தலின் கடமுதலியவற்றில் ஜாதி வடிவ சத்துவ மிருக்கின்றது. எங் ஙனம், சகல கடங்களிலும் கலந்திருக்கும்தர்மம் கடத்துவமோ, அங்ஙனமே "கட மிருக்கின்றது" "பட மிருக்கின்ற" தென்று ஒருவடிவமான உணர்ச்சிக்குக் கோசரமாவது சகல பதார்த்தங் களிலும் கலந்திருக்கும் தர்மமாகிய ஜாதிவடிவ சத்துவமாம். அல்லது தேசகாலங்களின் சம்பந்த மின்றியோ கடமுதலிய வற்றின் பிரதீதி உண்டாகிறதில்லை. தேசகாலங்களின் சம்பந்த விசிஷ்ட கடமுதலியவற்றின் பிரதீதி உண்டாகின்றது. "ஈண் டுக் கட மிருக்கிறது" இப்போது கட மிருக்கிற" தென்பதாகத் தேச சம்பந்தத்தினையும் காலசம்பந்தத்தினையும் கடமுதலிய வற்றைக் கோசரிக்கும் பிரதீதி விஷயஞ் செய்கின்றது. அத் தேசசம்பந்த வடிவமே அல்லது காலசம்பந்த வடிவமே கட முதலியவற்றிற் சத்துவமாம். அல்லது கடமுதலியவற்றின் சொரூபமே "கடமிருக்கின்ற" தென்னும் உணர்ச்சிக்கு விஷய மாம். கடமுதலியவற்றின் வேருகிய சத்துவத்தை முற்கூறிய பிரதீதி விஷயஞ் செய்கிறதில்லை. ஏனெனின், ந என்னும் சொல் லின்றிய வாக்கியத்தினுல் எதன் பிரதீதி உண்டாகின்றதோ, அதன் நிஷேதம் ந (இல்லை) என்னும் சொல்லோடுகூடிய வாக் கியத்தினுல் உண்டாகின்றது. "கடமில்லை" என்னும் வாக்கி யத்தினுல் கடத்தினது சொரூபத்தின் நிஷேத முண்டாகின் றது. இது எல்லோருக்கும் சம்மதமாம். ஆதலால், "கடமிருக் கின்ற" தென்னும் ந என்னும் சொல்லின்றிய வாக்கியத்தினுல் கடத்தினது சொரூபமாத்திரத்தின் போதத்தினையே அங்கீ கரித்தல் உசிதமாம். இவ்வாற்ருல் "கடமிருக்கின்ற" தென்னும் பிரதீதியின் கோசரம் கடத்தின் சொரூபமாம். ஆதலால், சொரூ பத்திற்கு அதிக்கிரமித்த கடமுதலியவற்றில் சத்துவத்தின் அபாவத்தால் அதன் பிரதிக்ஷேபத்தைக் கூறியிருக்கின்றனர்.

268. நியாயசுதாகாரர் கிரமப்படி பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம்

அன்றியும், நியாயசுதாகாரர் மதத்தில் அதிஷ்டானத்தின் கண்ணுள்ள சத்தையின் சம்பந்தம் கடமுதலியவற்றில் முற

கூறிய பிரதீதியின் கோசரமாம். தத்துவசுத்திகாரர் மதத்திலோ கடமுதலிய அநாத்மகோசரப் பிரதீதி பிரமாணஜந்நியமன்று. கேவல அதிஷ்டான சத்தையைக் கோசரிப்பது பிரமாணமாம். இம் மதத்தில் அதிஷ்டானசத்தையின் சம்பந்த விசிஷ்டகடாதிகள் பிரமாணத்தின் விஷயமாம். இத்துணைப் பேத முளது. இவ்வாற்ருல் கடமுதலியவற்றில் அதிஷ்டான சத்தையின் சம்பந்தமிருத்தலின், கடமுதலியவற்றில் சத்துவம் தோற்றுகின்றது. கடமுதலியவற்றின் சத்துவத்தின் அபாவத்தால் அதன் பிரதிக்ஷேபம் சொல்லப்படுகின்றது. அதிஷ்டான சத்தையின் பிரதீதி கடமுதலியவற்றில் அங்கீகரிக்கின், அந்நிய தாக்கியாதியின் அங்கீகார முண்டாகின்றது. ஆதலால், அதிஷ்டான சத்தையின் அநிர்வசநீய சம்பந்தம் கடமுதலியவற்ருேடு உற்பத்தியாகின்றது என்று கூறுதலே உசிதமாம்.

269. வேறு ஆசிரியர் கிரமப்படி பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம்

அன்றியும், ஓர் ஆசிரியர் இவ்வாறு சத்துவத்தின் பிரதிக்ஷேபத்தைக் கூறுகின்றனர். சுருதியில் இது சொல்லப்பட்டிருக்கின்றது:—"ப்ராணாவை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம்- பிராணன் சத்தியமாம், அவற்றினும் இது சத்தியமாம்" என்பதாம். பிராணன் என்னும் சொல்லிற்குப் பொருள் இரணியகர்ப்பம்; இரணியகர்ப்பம் சத்தியமாம்; அதனை அபேக்ஷித்துப் பரமாத்மா மேலான சத்தியமாம் என்பது சுருதியின் அர்த்தம். ஸத்யஸ்ய ஸத்யம் - சத்தியத்திற்குச் சத்தியம்" என்பதாக வேறு சுருதி யிருக்கின்றது. அநாத்ம சத்தியத்தன்மையினும் ஆத்ம சத்தியத்தன்மை மேலானதாம் என்பது சுருதியின் அர்த்தம். எங்ஙனம் அந்நியராஜனை அபேக்ஷித்து மேலான ராஜனை இராஜ இராஜனென்று சொல்லுகின்றனரோ, அங்ஙனமே மேலான சத்தியத்தைச் சத்தியத்தின் சத்தியமென்று சொல்லியிருக்கின்றது. இவ்வாற்ருல் சுருதிவாக்கியங்களில் சத்தியத்திற்கு உயர்வு தாழ்வு கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டு வேறுவித உயர்வு தாழ்வு சம்பவியாது. எப்போதும் பாதிக்கப்படுந் தன்மையின்மையும் சிறிதுகாலம் பாதிக்கப்படுந் தன்மையின்மையுமாகிய வடிவமே சத்தியத்தன்மையில்

உயர்வு தாழ்வுகளாம். அநாத்ம பதார்த்தங்களில் ஞானத்திற்கு முற்காலத்தில் பாதிக்கப்படுந் தன்மையின்மை வடிவ சத்தியத்துவ மிருக்கின்றது. பரமாத்மவஸ்துவில் எப்போதும் பாதிக்கப்படுந்தன்மை யின்மை வடிவ சத்தியத்துவ மிருக்கின்றது. ஆதலால், இரணியகருப்பனே தாழ்ந்த சத்தியமாம்; பரமாத்மா மேலான சத்தியமாம். இவ்வாற்றால் இருவகைச் சத்தியத்துவமும் சுருதிசம்மதமாம். அவற்றில் சிறிது காலம் பாதிக்கப்படுந் தன்மையின்மை வடிவ சத்தியத்தன்மைக்கு மித்தியாத்தன்மையோடு விரோத மில்லை. ஆனால், எப்போதும் பாதிக்கப்படுந்தன்மை யின்மை வடிவ சத்தியத்தன்மைக்கு மித்தியாத்தன்மையோடு விரோதமிருத்தலின், அதற்குப் பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மையோடு பிரதிக்ஷேபமுண்டாகின்றது.

270. சம்க்ஷேப சாரீரகத்தின்படி பிரபஞ்சத்தினது சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேபம்

சம்க்ஷேப சாரீரகத்தில் இது சொல்லப்பட்டிருக்கின்றது: பிரத்தியக்ஷமுதலிய பிரமாணங்களால் கடமுதலியவற்றில் சத்தியத்தன்மை தோற்றுகின்றது. அங்ஙனமாயினும், பிரஹ்மத்தைப் போதிக்கும் வாக்கியங்களிலேயே பிரமாணத்தன்மையிருக்கின்றது. அநாத்மாவைக் கிரகிக்கும் பிரத்தியக்ஷ முதலியன பிரமாணாபாசங்களாம்; பிரமாணங்களன்று. ஏனெனின், அறியப்படாத அர்த்தத்தின் போதத்தை யுண்டுபண்ணுவது பிரமாணமாம். அஞ்ஞானத்தினலாகிய ஆவரணத்திற்கு ஜடபதார்த்தங்களில் சம்பவமின்மையால், சேதனத்திற்கு வேறாகியவற்றில் அஞ்ஞானத்தன்மையின் அபாவத்தால் அவற்றை அறிவிக்கும் பிரத்தியக்ஷ முதலியவற்றிற்குப் பிரமாணத்தன்மை சம்பவியாது. இவ்வாற்றால் பிரமாணாபாசத்தினல் கடமுதலியவற்றில் சத்தியத்தன்மையின் சித்தி உண்டாகின்றது. சுருதி வடிவப் பிரமாணத்தினல் கடமுதலியவற்றில் மித்தியாத்தன்மையின் சித்தி உண்டாகின்றது. முக்கியப் பிரமாணத்தினல் பிரமாணாபாசத்தின் பாதவாயிலாகச் சத்தியத்தன்மையின் பிரதிக்ஷேப முண்டாகின்றது. இவ்வாறு பிரபஞ்சத்தில் அத்தியந்தம் பாதிக்கப்படுந்தன்மை யின்மை வடிவ சத்தியத்தன்மை

யின் பிரதிக்ஷேபம் ஐக்துவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், பிரபஞ்சம் மித்தையாம்.

271—280. கர்மம் ஞானசாதனமாதலில் விசாரம்.

271. மித்தையாகிய பிரபஞ்சத்தின் நிவிருத்தியில் கர்மத்தின் உபயோகமின்மையை அநுவதித்தலோடு சித்தாந்தத்தின் இருவகைச் சமுச்சயத்தை நிச்சயித்தல்

மித்தையின் நிவிருத்தியில் கர்மத்தின் உபயோக மில்லை. ஆதலால், கேவல கர்மத்தால் அல்லது கர்மசமுச்சித (கலப்புள்ள) ஞானத்தினால் அநர்த்த நிவிருத்தி சம்பவியாது. கேவல ஞானத்தினால் அநர்த்த நிவிருத்தி உண்டாகுமென்னும் பொருள் அத்வைத வாதத்தின் நூல்களில் மிகப் பிரசித்தமாம். பாஷையிலும் விசாரசாகரத்தின் ஆறுவது தரங்கத்தில் ஸ்பஷ்டமாம்; ஆதலால் இங்கு எழுதப்படவில்லை. இந்த ஸ்தானத்தில் இது சித்தாந்தமாம். அநேக சுருதி ஸ்மிருதிகளில் கர்ம சமுச்சித (கலப்புள்ள) ஞானத்தினால் மோக்ஷப்பிராப்தி சொல்லப்பட்டிருக்கின்றது. பாஷ்யகாரரால் அநேக இடங்களில் சமுச்சயவாதத்தின் நிஷேதம் பிரதிபாதனம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆண்டு இது நிச்சயமாம்:—சமசமுச்சயம் கிரமசமுச்சயமென்னும் பேதத்தால் சமுச்சய மிருவகையாம். ஞானங் கர்மமிரண்டும் ஒன்றற்கொன்று சேர்ந்து மோக்ஷத்திற்குச் சாதனமா மென்றறிந்து ஒரே காலத்தில் இரண்டையும் அநுஷ்டித்தல் சமசமுச்சயம் எனப்படுகின்றது. ஒரே அதிகாரிக்கு முன் கர்மத்தை அநுஷ்டித்தலும் பிற்காலத்தில் சகல கர்மங்களையும் விட்டு ஞானத்திற் கேதுவாகிய சிரவணாதிகளை அநுஷ்டித்தலும் கிரமசமுச்சய மெனப்படுகின்றது. அவற்றில் சமசமுச்சயத்திற்கோ நிஷேத முண்டு. சுருதிஸ்மிருதிகளில் ஞானகர்மங்களுக்கு யாண்டுச் சமுச்சய மெழுதப்பட்டிருக்கின்றதோ, அதற்கு முற்கூறிய கிரமசமுச்சயத்தில் தாற்பரியமாம்.

272. பாஷியகாரர் கூறிய சாதனத்தன்மை

பாஷியகாரர் சித்தாந்தம் இதுவாம்:—மோக்ஷத்திற்கு நேர் சாதனம் கர்மமன்று. மோக்ஷத்திற்கு நேர் சாதனம் ஞானமாம். ஞானத்திற்குச் சாதனம் கர்மமாம்.

273. வாசஸ்பதிமிசிரர் ஞானவிருப்பத்திற்குச் சாதனமா மெனல்

ஆனால், பாமதிநிபந்தனமென்னும் நூலில் வாசஸ்பதிமிசிரர் இது கூறுயிருக்கின்றனர்:—ஞானத்திற்குச் சாக்ஷாத்சாதனம் கர்மமன்று. ஜிஞ்ஞாஸைக் (ஞானவிருப்பிற்)குச் சாதனம் கர்மமாம். ஏனெனின், கைவல்யசாகையில் சகல ஆசிரம தர்மங்களும் விவிதிஷைக்குச் சாதனமாமென்று ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்றது. ஞானவிருப்பத்தினை விவிதிஷையென்பர். மூன்றாவது அத்தியாயத்தில் சர்வகர்மங்களுக்கும் ஞானத்தில் அபேக்ஷையைச் சூத்திரகாரர் கூறியிருக்கின்றனர். ஆண்டுச் சூத்திர வியாக்கியானங்களில் பாஷியகாரர் இது கூறியிருக்கின்றனர்:—சமதமாதி சாதனங்களோ ஞானத்திற்குச் சாதனமாமாகலின், ஞானத்திற்குச் சமீபமாம். ஜிஞ்ஞாஸைக்குச் சாதனம் கர்மமாம்; ஆகலால், சமம் தம முதலியவற்றின் அபேக்ஷயால் ஞானத்திற்குத் தூரமாம். இவ்வாற்றால் சுருதி வசனத்தினாலும் பாஷிய வசனத்தினாலும் ஜிஞ்ஞாஸைக்கு நேர்சாதனம் கர்மமாம்; ஜிஞ்ஞாஸை வாயிலாக ஞானத்திற்கும் சாதனமாம். ஞானத்திற்குச் சாக்ஷாத்சாதனமே கர்மமெனின், ஞானமுதிக்கும் வரையில் கர்மாநுஷ்டானத்தின் அடைவுண்டாகுதலால் ஞானத்தோடு கர்மத்தியாகவடிவ சந்நியாசத்திற்கு லோப முண்டாகும். ஆதலால், ஜிஞ்ஞாஸைக்குச் சாதனம் கர்மமாமென்பது வாசஸ்பதியின் மதம்.

274. விவரணகாரர் கூறிய கர்மம் ஞானத்திற்குச் சாதனமாந்தன்மை

விவரணகாரர் மதம் இதுவாம்:-"வெஹாநுவசநெந விவிஷிஷந்தி - வேதவாக்கியத்தால் அறிய விரும்புகின்றனர்" என்பதாகச் சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆண்டு அக்ஷரமரியாதையோடு வேதாத்தியயன் முதலிய தர்மங்களுக்கு விவிதிஷையின் சாதனத்தன்மை தோற்றுகின்றது. அங்ஙனமாயினும் இச்சைக்கு விஷயமாகிய ஞானத்தின் சாதனத்தன்மையிலேயே சுருதிக்குத் தாற்பரியமாம். கர்மத்திற்கு இச்சையின் சாதனத்தன்மையில் சுருதிக்குத் தாற்பரிய மில்லை. எங்ஙனம்: குதிரையினாற் போக விரும்புகின்றான்" என்னும் வாக்கியத்தி

ஞல் அக்ஷரமரியாதையினுல் போகுதலைக் கோசரிக்கும் இச்சைக்குச் சாதனமாதல் அசுவத்திற்குத் தோற்றுகின்றது. சஸ்திரத்தால் கொல்ல விரும்புகிறு னென்னும் வாக்கியத்திஞல் கொல்லுதலைக் கோசரிக்கும் இச்சையின் சாதனத்தன்மை சஸ்திரத்திற்குத் தோற்றுகின்றது. ஆண்டு இச்சைக்குக் கோசரமாகும் போகுதல் யாதோ அதன் சாதனத்தன்மை குதிரையிற் கருதப்பட்டதாம். இச்சைக்கு விஷயமாகிய கொல்லுதலின் சாதனத்தன்மை சஸ்திரத்தில் கருதப்பட்டதாம். அங்ஙனமே இச்சைக்கு விஷயமான ஞானத்தின் சாதனத்தன்மை கருமங்களுக்குக் கருதப்பட்டது. இன்னும் இப் பக்ஷத்தில், கருமங்களுக்கு ஞானத்தின் சாதனத்தன்மையை அங்கீகரிக்கின், ஞானோதய பரியந்தம் கர்மாநுஷ்டானத்தின் ஆபத்தியிருத்தலால் சந்நியாசத்திற்கு லோபமுண்டாகும் என்று தோஷஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கு இது சமாதானமாம்.—எங்ஙனம் விதை விதைத்தற்குமுன் பூமியின் * கர்ஷணம் (பிளப்பு) உண்டாகின்றதோ, விதை விதைத்தபின் பூமியின் (மண்ணின்) ஆகர்ஷணம் (குவிதல்) உண்டாய் நெல்முதலியவற்றின் சித்தி பூமியின் ஒதுங்குதல் சேருதல்களால் உண்டாகின்றதோ, அவ்விதமே கர்மத்தினுலும் கர்மசந்நியாசத்தினுலும் ஞானத்தின் சித்தி உண்டாகின்றது. அந்தக்கரணத்தின் சுத்திவாயிலாகப் பிரத்தியக்தத்துவத்தின் தீவிர ஜிஞ்ஞாஸை வைராக்கியத்தோடு உண்டாகின்றது. அதுபரியந்தம் கர்மம் செய்யவேண்டியதாம். வைராக்கியத்தோடு தீவிர ஜிஞ்ஞாஸை உண்டாகியபின், சாதனத்தோடு கர்மங்களை விடுதலாகிய சந்நியாசம் செய்யவேண்டியதாம். இவ்வாற்றல் ஞானத்திற்குச் சாதனம் கர்மமாம். அங்ஙனமாயினும் தீவிரஜிஞ்ஞாஸைக்கு முன்னரே செய்யவேண்டியதாம். தீவிர ஜிஞ்ஞாஸைக்குப் பிற்காலத்தில் சந்நியாசத்தின் அங்கமான சமமுதலியனவே செய்யவேண்டியனவாம்; கர்மமன்று. ஆதலால், கர்மத்தின் அபேக்ஷையால் சமமுதலியவற்றிற்கு அந்தரங்கத்தன்மையைப் பிரதிபாதிக்கும் மூன்றும் அத்தியாயத்திலுள்ள பாஷிய வசனங்களுக்கு விரோத மில்லை. இவ்வாற்றல் விவரணகாரர் மதத்தில் கர்மம் ஞானத்திற்குச் சாதனமும், வாசஸ்பதியின் மதத்தில் விவிதிஷைக்குச் சாதனமுமாம்.

* கர்ஷணம் - உழுதல்.

இரண்டு மதங்களிலும் விவிதிஷைக்கு முந்திய காலத்தில் கர்மத்தின் அநுஷ்டானமும், பிந்தியகாலத்தில் சமமுதலிய வற்றோடு சந்நியாச பூர்வகமான சிரவணமுதலியவற்றின் அநுஷ்டானமும் உண்டு. விவிதிஷைக்குப் பிந்திய காலத்தில் எவருடைய மதத்திலும் கர்மம் கர்த்தவ்விய மன்று.

275. வாசஸ்பதி விவரணகாரர்களது மதத்தின் விலக்ஷணத்தன்மையிற் சங்கை

இந்தஸ்தானத்தில் இச்சங்கையுண்டாகின்றது:—இரண்டு மதங்களிலும் விவிதிஷைக்கு முந்திய காலத்திலேயே கர்மம் செய்யவேண்டியதாயின், மதபேத நிரூபணம் நிஷ்பலமாகும். ஏனெனின், வாசஸ்பதியின் மதத்தில் கர்மத்தின் பலம் விவிதிஷையும், விவரணகாரர் மதத்தில் கர்மத்திற்குப் பலன் ஞானமுமாம். பலம் சித்தியாயின் சாதனத்தின் தியாகமுண்டாகும். ஆதலால், வாசஸ்பதியின் மதத்தில் விவிதிஷை சித்திக்கும்வரையில் கர்மாநுஷ்டானத்தை அங்கீகரித்து, விவரணகாரர் மதத்தில் விவிதிஷைக்குப் பிந்திய காலத்திலும் ஞானம் சித்திக்கும் வரையில் கர்மாநுஷ்டானத்தை அங்கீகரிக்கின், இரண்டு மதங்களிலும் விலக்ஷணத்தன்மை சம்பவிக்கின்றது. வாசஸ்பதியின் மதத்தையநுசரித்த ஜிஞ்ஞாசு கர்மத்தைவிட்டு, விவரணகாரர் மதத்தை யநுசரித்த ஞானத்திற்கு முந்திய ஜிஞ்ஞாசு கர்மாநுஷ்டானத்தைச் செய்யின் மதபேத நிரூபணம் ஸபலமாகும். முற்கூறியபடி இரண்டு மதங்களிலும் விவிதிஷையின் சித்தியினால் கர்மத்தியாக மங்கீகரிக்கின் பரஸ்பர விலக்ஷணத்தன்மை தோற்றுகிறதில்லை. ஆதலால், மதபேத நிரூபணம் நிஷ்பலமாம்.

276. முற்கூறிய சங்கைக்குச் சமாதானம்

அதற்கு இது சமாதானமாம்:—இரண்டு மதங்களிலும் விவிதிஷை பரியந்தமே கர்மத்தின் அநுஷ்டானமாம். அங்ஙனமாயினும் மதபேதத்தால் கர்மத்தின் பலத்தில் விலக்ஷணத் தன்மையிருக்கின்றது. அது வருமாறு:—வாசஸ்பதியின் மதத்தில் கர்மத்தின் பலம் விவிதிஷையாம். விவிதிஷையின் உற்பத்தி யுண்டாகக் கர்மஜந்நிய அபூர்வத்திற்கு நாச முண்டா

இன்றது. விவிதிஷை உண்டாகியும் உத்தம குரு லாபமுதலிய சாமக்கிரி உண்டாயின் ஞான முண்டாகும். எந்தச் சாதனத்தின் குறைவாவது இருக்குமாயின் ஞான முண்டாகாது. கர்மத்தின் வியாபாரம் விவிதிஷையின் உற்பத்தியி லுளது. தத்துவஞானம் கர்மத்தின் பயனன்று. ஆதலால், ஞானத்தின் உற்பத்தியில் கர்மத்தின் வியாபார மில்லை. இவ்வாற்றால் வாசஸ்பதியின் மதத்தில் விவிதிஷைக்கு ஏதுவான கர்மாநுஷ்டானம் செய்தும், ஞானத்தின் சித்தி நியமமாக உண்டாகிறதில்லை. ஆனால், உத்தம பாக்கியத்தினால் சகல சாமக்கிரிகளும் சித்திக்கின் ஞான முண்டாம். ஆதலால், ஞானத்தின் பிராப்தி நியதமன்று. விவரணகாரர் மதத்தில் விவிதிஷைக்கு முற்காலத்தில் அநுஷ்டிக்கப்பட்ட கர்மத்திற்கும் ஞானம் பலமாம். ஆதலால், பலத்தின் உற்பத்தியின்றி கர்மஜந்நிய அபூர்வத்திற்கு நாசம் உண்டாகாமையால், ஞானத்தின் உற்பத்தி பரியந்தம் கர்ம ஜந்நிய அபூர்வ மிருக்கின்றது. எவ்வளவு சாமக்கிரியின்றிக் கர்மத்தின் பலமாகிய ஞான முண்டாகிறதில்லையோ, அவ்வளவு சாமக்கிரியைக் கர்மம் சம்பாதிக்கின்றது. இவ்வாற்றால் இப் பக்ஷத்தில் ஞான ஏதுவாகிய கர்மத்தை அநுஷ்டானஞ் செய்யின் நிகழும் சரீரத்திலேனும், இனி வரும் சரீரத்திலேனும் அவசியம் ஞான முண்டாகின்றது. ஆதலால், ஞானத்தின் உற்பத்தி நியதமாம். இவ்வாற்றால் வாசஸ்பதியின் மதத்தில் சுபகர்மத்தினால் விவிதிஷை நியமமாக உண்டாகின்றது. ஞானத்தின் சித்தி நியதமன்று. விவரணகாரர் மதத்தில் அதே கர்மத்தினால் ஞானத்தின் உற்பத்தி நியமமாக உண்டாகின்றது. ஆதலால், இரண்டு மதங்களுக்கும் பரஸ்பர பேத முண்டு; கலப்பில்லை. விவிதிஷைக்கு ஏது கர்மமாம்; அல்லது ஞானத்திற்கு ஏதுவாம். இரண்டுமதப்படி வேதாத்தியயனம், யாகம், தானம், கிருச்சிர சாந்திராயணமுதலிய ஆசிரம கர்மங்களுக்கே வித்தையில் உபயோக மிருக்கின்றது.

277. ஓர் ஆசிரியர் மதப்படி வர்ணமாத்திரத்தின் தர்மங்கள் வித்தையில் உபயோகமாமெனல்

வர்ணமாத்திரத்தின் தர்மங்கள் வித்தையில் உபயோகமாமென்று ஒரு ஆசிரியர் கூறுகின்றனர்.

278. கல்பதருகாரர் மதப்படி சகல நித்திய கருமங்களும் வித்தையில் உபயோகமாமெனல்.

கல்பதருகாரர் மதம் இதுவாம்:—சகல நித்திய கர்மங்களுக்கும் வித்தையில் உபயோக முண்டு. ஏனெனின்; சூத்திரகாரரும் பாஷியகாரரும் ஆசிரமமின்றிய புருஷர்களுக்கும் வித்தைக்கு ஏதுவாகிய கர்மத்திலும், அங்ஙனமே சிரவண முதலியவற்றிலும் அதிகாரம் சொல்லியிருக்கின்றனர். அங்ஙனமே ரைக்வர் வாசக்நவிமுதலிய ஆசிரம மின்றியவர்களுக்கும் பிரஹ்மவித்தை சுருதியிற் கூறப்பட்டிருக்கின்றது. வாசக்நவி புத்திரி கார்க்கியினை வாசக்நவி யென்பர். ஆசிரம தர்மங்களுக்கே வித்தையில் உபயோக முளதாயின், ஆசிரமமின்றிய புருஷர்களிடத்தில் ஞானத்தை யுண்டுபண்ணும் கர்ம மின்மையால் ஞான முண்டாகலாகாது. ஆதலால், ஜபம், கங்காஸ்நானம், தேவதாத்தியான முதலியவற்றோடு கூடிய சகல சுப கர்மங்களுக்கும் வித்தையில் உபயோக முண்டு. இது கல்பதருகாரர் மதம். ஆனால், கல்பதருகாரர் மதத்திலும் காமிய கர்மத்திற்கு வித்தையில் உபயோக மில்லை. ஆனால், நித்திய கர்மத்திற்கே வித்தையில் உபயோக முண்டு. ஏனெனின், வேறு விதமாகவோ வித்தையில் கர்மத்தின் உபயோகம் சம்பவிக்கிறதில்லை. வித்தையின் பிரதிபந்தகமான பாவத்தின் நிவிருத்திவாயிலாகவே வித்தையில் கர்மத்தின் உபயோக முண்டாகின்றது. காமிய கர்மத்தினால் சுவர்க்கம், புத்திரன் முதலியவற்றின் அடைவாகிய பய னுண்டாகின்றது. அதனால் பாவத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. நித்திய கர்மத்தினாலேயே பாவத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், சகல நித்திய கர்மங்களுக்கும் வித்தையில் உபயோக முண்டு.

279. சம்க்ஷேபசாரீரக கர்த்தாவின் மதப்படி காமியமும் நித்தியமுமாகிய சகல சுபகர்மங்களுக்கும் வித்தையில் உபயோக முண்டெனல்.

சம்க்ஷேபசாரீரக கர்த்தா இது கூறியிருக்கின்றனர்:—காமியமும் நித்தியமுமாகிய சகல சுபகர்மங்களுக்கும் வித்தையில் உபயோகமிருக்கின்றது. ஏனெனின் "யஜ்ஞேந விவிதிஷந்தி—யாகத்தினால் அறிய விரும்புகின்றனர்." என்றிவ்வாறு கைவல்ய சாகையிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆண்டு நித்திய காமியங்களின் சாதாரணமாம் யஜ்ஞமென்னும் சொல். "யஜ்ஞேந—

வாவலேவ-நூஉதி-தர்மத்தினுல் பாவம் கெடுகின்றது." என்றல் முதலிய வாக்கியங்களால் சகல சுபகர்மத்திற்கும் பாவத்தைக் கெடுக்குந்தன்மை தோற்றுகின்றது. ஆதலால், ஞானத்தின் பிரதிபந்தகமான பாவத்தை நிவர்த்திக்கும் வாயிலாக நித்திய கர்மத்தைப்போல, காமிய கர்மத்திற்கும் வித்தையில் உபயோக முண்டு. இது சம்க்ஷேபசாரீரக கர்த்தாவாகிய சர்வஞ் ஞாத்ம முனியின் மதம்.

280—283. சந்நியாசம் ஞானத்திற்குச் சாதனமா மென்பதில் விசாரம்.

280. பாவநிவிருத்தி வாயிலாக ஞானத்திற்கு ஏது வாதலால் கிரமமாகக் கர்மமும் சந்நியாசமுமாகிய இரண்டும் கர்த்தவ்வியமா மெனல்.

ஆதலால், தீவிர ஜிஞ்ஞாஸைபரியந்தம் சகல சுபகர்மங்களும் செய்பத்தக்கனவாம். மிகதிட வைராக்கியத்தோடுகூடிய தீவிர ஜிஞ்ஞாஸை உண்டாயின், சாதனத்தோடு கர்மத்தை விடுதலாகிய சம்நியாசம் கர்த்தவ்வியமாம் (செய்யத்தக்கதாம்). எங்ஙனம், சுபகர்மத்தினுல் பாவத்தின் நிவிருத்தி உண்டாகின்றதோ, அங்ஙனமே சந்நியாசத்தினுலும் ஞானத்திற்குப் பிரதிபந்தகமான பாவத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஞானத்திற்குப் பிரதிபந்தகமான பாவம் அநேகவிதமாம். அவற்றிற் சில பாவம் கர்மத்தினுலும், சில சந்நியாசத்தினுலும் நிவிருத்தியாகின்றன. ஆதலால், ஞானத்திற்குப் பிரதிபந்தகமான பாவத்தின் நிவிருத்திவாயிலாகக் கர்மமும் சந்நியாசமுமாகிய இரண்டும் ஞானத்திதகு ஏதுவாயிருத்தலின் கிரகமாகக் காத்தவ்வியமாம்.

281. ஓர் ஆசாரியர்மதத்தில் சந்நியாசத்திற்குப் பிரதிபந்தகமாகிய பாவத்தின் நிவிருத்தியும், புண்ணியத்தின் உற்பத்திவாயிலாகச் சிரவணத்தின் சாதனத்தன்மையும்.

ஓர் ஆசிரியர் மதம் இதுவாம்:—கேவல பாவ நிவிருத்தி வாயிலாகவே சந்நியாசத்திற்கு ஞானத்திற்குச் சாதனமாந் தன்மை யில்லை. ஆனல், சந்நியாச ஜந்நிய அபூர்வத்தோடுகூடிய புருஷனுக்கே சிரவண்முதலியவற்றினுல் ஞான முண்டா

கின்றது. ஆதலால், சிரவணத்தின் அங்கம் சந்நியாசமாயிருத்தலின், முற்றும் பாவமின்றியவனுக்கும் சந்நியாசம் கர்த்தவ்வியமாம்.

282. விவரணகாரர் மதத்தில் சந்நியாசம் ஞானப்பிரதிபந்தக விக்ஷேபத்தின் நிவிருத்தி வடிவ திருஷ்டபலத்திற்கு ஏதுவாதல்.

விவரணகாரர் மதம் இதுவாம்:—சந்நியாசமின்றி விக்ஷேபத்தின் அபாவ முண்டாகாது. ஆதலால், ஞானப்பிரதிபந்தக விக்ஷேபத்தின் நிவிருத்தி வடிவ திருஷ்ட பலமே சந்நியாசத்திற்காம். ஆதலால், ஞானப்பிரதிபந்தக பாபத்தின் நிவிருத்தி அல்லது ஞானத்திற் கேதுவாகிய தர்மத்தின் உற்பத்தி வடிவ அதிருஷ்ட பலத்திற்கு ஏது சந்நியாசமாமென்று கூறுதல் அயோக்கியமாம். யாண்டுத் திருஷ்டபலம் சம்பவிக்கிறதில்லையோ, ஆண்டு அதிருஷ்ட பலத்தின் கற்பனை யுண்டாகின்றது. விக்ஷேப நிவிருத்தி வடிவ திருஷ்டபலம் சந்நியாசத்திற்குச் சம்பவிக்கின்றது. அதற்கு அதிருஷ்டபலம் கூறுதல் சம்பவியாது. சில பிரதான புருஷர்களுக்குப் பிற ஆசிரமங்களிலும் காமக் குரோதவடிவ விக்ஷேபத்தின் அபாவ முண்டாயின், கர்மங்களின் இடையில் வேதாந்தத்தின் விசாரம் சம்பவிக்கின், முற்கூறியபடி சந்நியாசம் வியர்த்தமாம். அங்ஙனமாயினும், "ஆஸுப்தேராம்ருதே: காலம் நயேத்வேதாந்தசிந்தயா - சுழுத்தி பரியந்தமும் மரணபரியந்தமுமாகிய காலத்தை வேதாந்த சிந்தனையாற் கழிக்கவேண்டும்." என்னும் கௌடபாதீயத்தின் வசனத்தினாலும், "தச்சிந்தநம் தத்கதநம் அந்யோந்யம் தத்ப்ரபோதநம் — அதனைச் சிந்தித்தலும் அதனைக் கூறுதலும் ஒருவருக்கொருவர் அதனை யறிவித்தலும்" என்னும் பகவானது வாக்கியத்தினாலும், "ப்ரஹ்மஸம்ஸ்தோऽம்ருதத்வமேதி - பிரஹ்ம நிஷ்டையினையுடையவன் அமிர்தத்தன்மையை யடைகிறான்." என்னும் சுருதிவசனத்தினாலும் நிரந்தரம் செய்யப்படுகின்ற பிரஹ்மத்தின் சிரவணமுதலியவற்றால் ஞான முண்டாகின்றது. எவனுக்குப் பிரஹ்மத்தின் நிலை அதாவது அநந்நிய வியாபாரத்தன்மையால், நிலைத்திருத்தல் உண்டாகின்றதோ, அந்தப் புருஷன் ஞானவாயிலாக அமிர்தத்தன்மையை யடைகின்றா

னென்பது சுருதியின் அர்த்தமாம். கர்மத்தின் இடைக்காலத்தில் ஒரு காலத்துச் செய்யப்படும் சிரவண முதலியவற்றால் ஞான முண்டாகிறதில்லை. நிரந்தரம் சிரவண முதலியவற்றின் அப்பியாசத்திற்கு எது சந்நியாசமாம். ஆதலால், அதிருஷ்டமின்றியே திருஷ்டபலத்திற் கேது சந்நியாசமாம்; என்றாலும் வியர்த்தமன்று.

283-294. க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்திலும் சிரவணத்திலும் அதிகாரத்தை விசாரித்தல்.

283. க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்திலும் சிரவணத்திலும் உள்ள அதிகார விசாரத்தின் பிரதிஞ்ஞை.

இப் பிரசங்கத்தில் க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்திலும் சிரவணத்திலும் அதிகார முண்டு அல்லது இல்லையென்னும் இவ் விசாரத்தை மதபேதமாக எழுதுவாம்:—

284. ஓர் நூலாசிரியரின் மதப்படி சந்நியாசத்திலும், அங்ஙனமே பிரஹ்ம சிரவணத்திலும் பிராமணனுக்கே அதிகார முண்டு; க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகார மில்லையெனல்.

ஒரு நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:—சந்நியாசத்தை விதிக்கும் அநேக வாக்கியங்களில் பிராஹ்மணனென்னும் பதமிருத்தலால் பிராஹ்மணன் மாத்திரத்திற்குச் சந்நியாசத்தில் அதிகார முண்டு. சந்நியாசமின்றிய கிருகஸ்தர்முதலியோர்களுக்குப் பிரஹ்மவிசாரத்திற்கு அவகாச மில்லை. ஆதலால், சந்நியாசத்திலும் அங்ஙனமே பிரஹ்ம சிரவணத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகார மில்லை.

285. வேறு நூலாசிரியர் மதப்படி சந்நியாசத்தில் கேவலம் பிராஹ்மணனுக் கதிகார முண்டு; க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தை விட்டுக் கேவல பிரஹ்ம சிரவணத்தில் அதிகார முண்டெனல்.

வேறு நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:—சந்நியாசத்தில் கேவலம் பிராஹ்மணனுக்கே அதிகார முண்டெனி

னும், பிரஹ்ம சிரவணத்தில் க்ஷத்திரிய வைசியர்களுக்கும் அதிகார முண்டு. ஆனால், ஜன்மாந்திர சம்ஸ்காரத்தினால் எந்த உத்தம புருஷனுக்கு விஷயங்களில் தீனத்தன்மை (பற்றுடைமை) முதலிய தோஷங்களில்லையோ, அப்படிப்பட்ட சுத்த புத்தியுடையவனுக்குச் சந்நியாசமின்றி ஞான முண்டாகின்றது. இதனாற்றான் கிருகஸ்த ஆசிரமத்திலேயே அநேக ராஜ ரிஷிகள் பிரஹ்மவித்துக்களாகச் சொல்லப்படுகின்றனர்.

286. அவர்களினும் வேறு நூலாசிரியர் மதப்படி க்ஷத்திரிய வைசியர்களுக்குப் பிரஹ்ம சிரவணத்திற்போல வித்வத்ஸந்நியாசத்திலும் அதிகார முண்டெனல்.

அவர்களினும் வேறு நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:— எங்ஙனம் பிரஹ்ம சிரவணாதிகளில் க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகாரமுண்டோ, அங்ஙனமே சந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு நிஷேத மில்லை. ஞான உதயத்தினால் கர்த்திருத்துவ போக்திருத்துவ புத்தியின் அபாவமும், அங்ஙனமே ஜாதி ஆசிரம அபிமானங்களின் அபாவமு முண்டாகின்றன. கர்த்திருத்துவ போக்திருத்துவ புத்தியின்றியும், ஜாதி ஆசிரமங்களின் அபிமானமின்றியும் கர்மாதிகாரம் சம்பவியாமையால், சர்வ கர்மபரித்தியாக பூர்வக அக்கிரிய அசங்க ஆத்மவடிவமாக நிலைத்தலாகிய வித்வத்ஸந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகார முண்டு. கேவல விவிதிஷா ஸந்நியாசத்தில் அவர்களுக்கு அதிகார மில்லை.

287. வார்த்திககாரர் மதத்தில் விவிதிஷா ஸந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகார முண்டெனல்

வார்த்திககாரர் மதம் இதுவாம்:—விவிதிஷாஸந்நியாசத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு அதிகாரமுண்டு. அநேக சுருதி வாக்கியங்களில் பிராஹ்மணர்களுக்குச் சந்நியாசம் கூறியிருக்கினும், சந்நியாசத்தை விதிக்கும் ஜாபால சுருதியில் பிராஹ்மணனென்னும் பத மில்லை. கேவலம் வைராக்கிய சம்பத்தியினால் சந்நியாசம் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், அநேக சுருதிவாக்கியங்களில் துவிஜன் (இருபிறப்பாளன்) என்பதின்

உபலக்ஷணமாகப் பிராஹ்மணபத மிருக்கின்றது. ஸ்மிருதியில் இது கூறப்பட்டிருக்கின்றது:—ப்ராஹ்மண: க்ஷத்ரியோ வாபி வைஶ்யோ வா ப்ரவ்ரஜேத் க்ருஹாத் த்ரயாணாம் வர்ணாநாம் வேதமதீத்ய சத்வார ஆஶ்ரமா: . பிராஹ்மணனாயினும் க்ஷத்திரியனாயினும் வைசியனாயினும் கிருகத்தினின்றும் போகக் கடவன்; மூன்று வர்ணங்களுக்கும் வேதத்தை ஓதி நான்கு ஆசிரமங்கள்" என்பதாக ஸ்மிருதி வசனத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தி லதிகார மிருக்கின்றது. இது வார்த்திககாரராகிய சுரேசுவராசாரியர் மதம்.

288. வேறோர் நூலாசிரியர் மதப்படி பிராஹ்மணர்களுக்கு ஞானத்தில் சந்நியாசத்தின் அபேக்ஷையும், க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தில் அதிகாரமின்மையும், ஞானத்திற்கு உபயோகமுள்ள கர்மத்திலும் வேதாந்த சிரவணத்திலும் அதிகார முண்மையும்

வேறு ஒரு நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:—சந்நியாசத்தை விதிக்கும் சுருதி வாக்கியங்களில் பிராஹ்மணபத மிருக்கின்றது. அது துவிஜமாத்திரத்திற்கு உபலக்ஷணமா மென்று கூறுதலிற் பிரமாண மில்லை. ஜாபால சுருதியில் பிராஹ்மணபத மில்லையாயினும், அநேக சுருதிகளை அநுசரித்து ஆண்டும் பிராஹ்மண கர்த்தாவின் அத்தியாகார முண்டு. ஆதலால், க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தில் அதிகா மில்லை. ஆனால், அநேக ஸ்தானங்களில் "கிருகஸ்தனாகிய ராஜா ஞான முடையவன்" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனால் இது கொள்ளவேண்டியதாம்:—பிராஹ்மணனுக்குப் பிரஹ்ம விசாரத்தின் அங்கம் சந்நியாசமாம். சந்நியாச மின்றிக் கிருகஸ்த முதலிய ஆசிரமத்துள்ள பிராஹ்மணனுக்குப் பிரஹ்ம விசாரத்தில் அதிகார மில்லை. சந்நியாசியாகிய பிராஹ்மணனுக்கே பிரஹ்ம விசாரத்தில் அதிகார முண்டு. க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசமின்றியே பிரஹ்ம விசாரத்தில் அதிகார முண்டு. ஏனெனின், சந்நியாசத்தை விதிக்கும் வசனங்களில் பிராஹ்மணபத மிருத்தலால் க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தின் விதி யில்லை. ஆத்மகாமனுக்கு ஆத்மசிரவணத்

தின் அபாவத்தைக் கூறுதல் சம்பவியாது. ஆதலால், க்ஷத்திரிய வைசியர்களுக்கு ஞானத்திற் குபயோகமுள்ள அதிருஷ்டம் கேவலம் கர்மத்தினாலேயே உண்டாகின்றது. சந்நியாசஜந்நிய அதிருஷ்டத்தின் அபேக்ஷை க்ஷத்திரிய வைசியர்களுக்கு ஞானத்தி லில்லை. இதனாற்றான் கீதையில் "𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 - கர்மத்தினாலேயே ஜனகர் முதலியோர்கள் நற்சித்தியைப் பெற்றார்கள்" என்பதாகப் பரமேசுவரன் கூறியிருக்கின்றார். இவ்வாக்கியத்தில் அந்தக்கரணத்தின் சுத்தி அல்லது ஞானம் நற்சித்தி என்னும் சொல்லிற்குப் பொருளாமென்று பாஷியகாரர் எழுதியிருக்கின்றனர். சந்நியாசமின்றிய கேவல கர்மத்தினால் அந்தக்கரணத்தின் சுத்தியை ஜனகர்முதலியோர் அடைந்தனர்; அல்லது, சந்நியாசமின்றிய கேவல கர்மத்தினால் ஞானப் பிரதிபந்தகம் நீங்குதல் வாயிலாகச் சிரவணத்தினால் ஞானத்தை அடைந்தார்கள் என்பது கீதாவாக்கியத்தின் பொருளாம். இரண்டு கிரமத்தினாலும் க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாச அபேக்ஷையின்றிய கேவல கர்மமே ஞானத்தைப் பிரதிபந்திக்கும் பாவத்தின் நிவிருத்திக்கு ஏதுவாம். பிராஹ்மணனுக்குச் சந்நியாசத்தோடு கூடிய கர்மத்தினால் ஞானத்திற்குப் பிரதிபந்தகமான பாவத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. சிரவணத்தின் அங்கம் சந்நியாசமா மென்னும் பக்ஷத்திலும் சந்நியாசம் பிராஹ்மணனது சிரவணத்திற்கு அங்கமாம்; க்ஷத்திரிய வைசியர்களது சிரவணத்திற்கு அங்கமன்று. ஆனால், பலத்தின் அபிலாஷையின்றியதும், குரோதமுதலிய தோஷங்க ளின்றியதுமான ஈசுவரார்ப்பண புத்தியினால் தனது வருணாசிரம தர்மங்களின் அநுஷ்டானத்தோடு கூடிய கர்மத்தின் அவகாசகாலத்தில் சிரவணத்தினாலேயே க்ஷத்திரியவைசியர்களுக்கு ஞான முண்டாகின்றது. எவ்வாற்றாலும் ஞானத்திற்கு உபயோகியான கர்மத்திலும் சிரவணத்திலும் க்ஷத்திரிய வைசியர்களுக்கும் அதிகார முண்டு. பிராஹ்மணனைப்போல க்ஷத்திரியவைசியர்களுக்கும் ஞானவிருப்புடைமை சமமாம். பிரயோஜன விருப்புடையோனுக்குச் சாதனத்தில் அதிகார முண்டாகின்றது. ஆதலால், ஆத்மகாமராகிய க்ஷத்திரிய வைசியர்களுக்கு வேதாந்தசிரவணத்தி லதிகார முண்டு.

289. ஓர் நூலாசிரியர் மதத்தில் சூத்திரனுக்குச் சிரவணத்தி லதிகார முண்டெனல்

மனிதர்மாத்திரத்திற்கு ஆன்மவிருப்பின் சம்பவ மிருத்தலால் க்ஷத்திரிய வைசியர்களைப்போல ஞான விருப்புடைமையின் இருப்பால் சூத்திரனுக்கும் முற்கூறியபடி வேதாந்தசிரவணத்தின் அதிகார முண்டாதல்வேண்டும். அங்ஙனமாயினும் "நஶூத்³ராய மதிம் த³த்³யாத்-சூத்திரனுக்கு மதியைத்தரலாகாது" என்றல்முதலிய வசனத்தினால் சூத்திரனுக்கு உபதேசத்தின் நிஷேத முண்டு. முற்றும் உபதேசமின்றிய புருஷனுக்கு விவேகமுதலியவற்றின் அசம்பவ மிருத்தலால் ஞானவிருப்புடைமை சம்பவியாது. அங்ஙனமே சூத்திரனுக்கு யாகமுதலிய கர்மங்களின் நிஷேதமு மிருத்தலின், வித்தைக்கு உபயோகமுள்ள கர்மத்தின் அபாவத்தால் அவனுக்கு ஞானத்திற் கேதுவாகிய சிரவணத்தி லதிகார மில்லை. இது ஓர் நூலாசிரியர் மதமாம்.

290. வேறு நூலாசிரியர் மதப்படி சூத்திரனுக்கும் வேதத்திற் கந்நியமான புராண இதிகாசமுதலிய வடிவ அத்தியாத்ம நூல்களின் சிரவணமுதலியவற்றி லதிகார முண்டெனல்

வேறு நூலாசிரியர் மதம் இதுவாம்:—உபநயன பூர்வகமாக வேதத்தின் அத்தியயனம் சொல்லப்பட்டிருக்கின்றது. சூத்திரனுக்கு உபநயனம் சொல்லப்படவில்லை. ஆதலால், வேதசிரவணத்திலோ சூத்திரனுக் கதிகாரமில்லை. அங்ஙனமாயினும், "ஶ்ராவயேச்சதுரோ வர்ணாந்-நான்கு வருணத்தவர்களையும் கேட்பிக்க" என்றல்முதலிய வசனத்தால் இதிகாச புராணமுதலியவற்றின் சிரவணத்தில் சூத்திரனுக்கு மதிகார மிருக்கின்றது. முற்கூறிய வசனத்திற் சூத்திரனுக்கு உபதேசத்தில் நிஷேதம் சொல்லப்பட் டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:—வைதிக மந்திரத்தோடுகூடிய யாகமுதலிய கர்மங்களி னுபதேசம் சூத்திரனுக்குச் செய்யலாகாது. அங்ஙனமே, வேதத்திற் கூறிய பிராணன்முதலிய சகுண உபாசனையின் உபதேசம் சூத்திரனுக்குச் செய்யலாகாது; உபதேசமாத்திரத்தின் நிஷேத மில்லை. உபதேச மாத்திரத்தின் நிஷேத முளதாயின்

தர்மசாஸ்திரத்தில் சூத்திர ஜாதியினது தர்மத்தின் நிரூபணம் நிஷ்பலமாகும். வித்தைக்கு உபயோகமுள்ள கர்மத்தின் அபாவத்தால் வித்தையில் அநதிகாரம் கூறியிருப்பது யாதோ அதற்குச் சமாதானம் இதுவாம்:—சாதாரண அசாதாரணமான சகல சுபகர்மங்களுக்கும் வித்தையில் உபயோகமுண்டு, சத்தியம், அஸ்தேயம் (திருடாமை), க்ஷமை, சௌசம், தானம், விஷயத்தினின்றும் திரும்புதல், பகவந்நாம உச்சாரணம், தீர்த்த ஸ்நானம், பஞ்சாக்ஷரமந்திராராஜ முதலியவற்றின்ஜெபமென்றல் முதலிய சகல வர்ணங்களின் சாதாரணதர்மங்களிலும் அங்ஙனமே சூத்திர கமலாகாத்திற் கூறிய நான்குவர்ணங்களின் அசாதாரண தர்மங்களிலும் சூத்திரனுக்கதிகாரமுண்டு. அக்கருமங்களின் அநுஷ்டானத்தால் அந்தக்கரணத்தின் சுத்திவாயிலாக ஞானத்தின் பிராப்தி சம்பவிக்கின்றது. ஆதலால், இதிகாசபுராணமுதலியவற்றின் சிரவணத்தால் விவேகமுதலியன சம்பவித்தலின், சூத்திரனுக்கும் ஞான விருப்புடைமையிருத்தலின், வேதத்திற் கந்நியமான அத்தியாத்ம கிரந்தங்களின் சிரவணமுதலியவற்றில் சூத்திரனுக்கும் அதிகாரமுண்டு. பாஷியகாரரும் முதலத்தியாயத்தின் மூன்றாவது பாதத்தில் இது கூறியிருக்கின்றனர்:—உபநயன பூர்வகமாக வேதத்தின் அத்தியயனம் சொல்லப்பட்டிருக்கின்றது. சூத்திரனுக்கு உபநயனமின்மையால் வேதத்திலதிகாரமில்லையாயினும், புராணமுதலியவற்றின் சிரவணத்தால் சூத்திரனுக்கும் ஞானமுண்டாய்விடுமாயின், ஞானசமகாலத்திலேயே சூத்திரனுக்கும் பிரதிபந்தமின்றிய மோக்ஷமுண்டாகும். இவ்வாறு பாஷியகாரர் வசனத்தினும் வேதத்திற்கந்நியமான ஞானத்திற் கேதுவான அத்தியாத்ம கிரந்தங்களின் சிரவணத்தில் சூத்திரனுக் கதிகாரமுண்டு.

291-293. மனிதர்மாத்திரத்திற்குப் பக்தி ஞானங்களின் அதிகாரமுண்டெனல்.

291. அந்தியஜர்முதலிய மனுஷர்களுக்குத் தத்துவஞானத்தி னதிகாரம்.

ஜன்மாந்திர சம்ஸ்காரத்தினால் அந்தியஜர்(கடைச்சாதியர்) முதலியோருக்கும் ஞானவிருப்புண்டாய் விடுமாயின், பௌரு

ஷேய வசனத்தினுல் அவர்களுக்கும் ஞானமுண்டாய்க் காரியத்தோடு அவித்தையின் நிவிருத்திவடிவ மோக்ஷ முண்டாகின்றது. ஆதலால், தேவர் அசுரர்களைப்போல சகல மனுஷர்களுக்கும் தத்துவஞானத்தின் அதிகார முண்டு. ஆத்மசொரூபத்தின் யதார்த்த ஞானத்தினைத் தத்துவஞான மென்பர். ஆத்மாவின்றிய ஓர் சரீர முளதாயின் ஞானத்தின் அதிகாரமின்மையுளதாம். ஆதலால், ஆத்மஞானத்தின் சாமர்த்தியம் மனுஷமாத்திரத்தி லுண்டு.

292. தத்துவஞானத்தில் தெய்வசம்பத்தை அபேக்ஷித்தலோடு மனுஷமாத்திரத்திற்குப் பகவத்பக்தி தத்துவ ஞானங்களின் அதிகாரத்தினது நிச்சயம்

ஆனால், எவன் சரீரத்தில் தெய்வசம்பத்துளதோ, அவனுக்குத் தத்துவஞான முண்டாம். அசுரசம்பத்தில் தத்துவஞான முண்டாகாது. சர்வபூதங்களிடத்திலும் தயை, க்ஷமை, சத்தியம், ஆர்ஜவம் (நேர்மை), சந்தோஷமுதலிய தெய்வசம்பத்தின் சம்பவம் பிராஹ்மணனிடத் திருக்கின்றது. க்ஷத்திரியனுக்குப் பிரஜைகளைப் பாலித்தற்பொருட்டுப் பிரவிருத்தி தர்மமிருத்தலால் பிராஹ்மணனினும் சிறிது குறைந்த தெய்வ சம்பத்து சம்பவிக்கின்றது. தர்மபுத்தியாகப் பிரஜைகளைச் சம்ரக்ஷித்தற்பொருட்டு துஷ்டஜீவர்களை இம்சித்தலும் அஹிம்சையாம். ஆதலால், தெய்வ சம்பத்தின் அசம்பவ மில்லை. அங்ஙனமே வைசியனுக்கும் கிருஷிவாணிபமுதலிய சரீரவியாபாரம் க்ஷத்திரியரினும் அதிகமாயிருத்தலால், ஆத்மவிசாரத்தில் அவகாசத்தின் அசம்பவமிருத்தலின், அவனுக்குச் சாமர்த்தியம் சம்பவிக்கிறதில்லை. அங்ஙனமாயினும் பாக்கியசாலிகளாகிய சில வைசியர்களுக்குச் சரீரவியாபார மின்றியே சகல வியவகாரத்தின் நிர்வாக முண்டாகின்றது. அவர்களுக்குத் தெய்வ சம்பத்தைப் பெறுதலாகிய சாமர்த்தியம் சம்பவிக்கின்றது. எந்த ஆசாரியர்களது மதத்தில் க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சந்நியாசத்தி னதிகார மிருக்கின்றதோ, அவர்கள் மதத்திலோ அநாயாசமாகவே தெய்வசம்பத்துச் சம்பவிக்கின்றது. நான்காவது வருணத்திலும் அங்ஙனமே அந்தியஜர் முதலியோரிடத்தும் தெய்வசம்பத்துத் துர்லபமாயினும், கர்மத்தின் பலன்

ஆநந்தவிதமாம். சிலருக்கு ஜந்மாந்திரத்தின் கர்மத்தால் தெய்வ சம்பத்தின் பேறு உண்டாய்விடின், புராணமுதலியவற்றின் விசாரத்தால் நான்காவது வருணத்திற்கும் சம்ஸ்கிருதமல்லாத பாஷாப்பிரபந்த முதலியவற்றின் சிரவணத்தால் அந்தியஜர் முதலியோர்களுக்கும் பகவத்பக்தி தத்துவ ஞானங்களின் இலாப வாயிலாக மோக்ஷத்தின் இலாபம் நிர்விக்கினமாக உண்டாகின்றது. இவ்வாற்றால் பகவத்பக்தி தத்துவஞானங்களின் அதிகாரம் சகல மனுஷர்களுக்கு மிருக்கின்றது. இது சாஸ்திரத்தின் நிச்சயமாம்.

293—295. தத்துவஞானத்தினால் சுவ (தனது) ஏதுவான அஞ்ஞானத்தின் நிவிருத்தியில் சங்கை சமாதானம்.

293. அஞ்ஞானத்தின் காரியமான அந்தக்கரணத்தின் விருத்திவடிவ தத்துவஞானத்தினால் அதற்குக் காரணமான அஞ்ஞானத்தின் நிவிருத்தியிற் சங்கை.

தத்துவஞானத்தினால் காரியத்தோடு அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது என்பது அத்வைத நூல்களின் சித்தாந்தம். ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்தைக் கோசரிக்கும் அந்தக்கரணத்தின் விருத்தியைத் தத்துவஞான மென்பர். அந்தக்கரணத்திற்கு அஞ்ஞானத்தின் காரியத்தன்மை யிருத்தலால் விருத்திவடிவ தத்துவஞானமும் அஞ்ஞானத்தின் காரியமாம். காரியகாரணங்களுக்கு ஒன்றற்கொன்று அவிரோதமே உலகத்தில் பிரசித்தமாம். ஆதலால், தத்துவஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி கூறுதல் சம்பவியாது.

294. முற்கூறிய சங்கைக்குச் சமாதானம்.

இச் சங்கைக்கு இது சமாதானமாம்:—காரிய காரணங்களுக்கு ஒன்றற்கொன்று விரோதமின்மை யுண்டென்னும் நியமம் சாமாநியமாம். சமானவிஷயமுடைய ஞானாஞ்ஞானங்களுக்குப் பரஸ்பரம் விரோத முண்டென்பது விசேஷ நியமமாம். ஆதலால், விசேஷ நியமத்தால் சமாநிய நியமத்திற்குப் பாத முண்டாகின்றது. படம் அக்கினிகளின் சையோகத்தால் படத்திற்கு

நாச முண்டாகின்றது. ஆண்டுச் சையோகத்திற்கு உபாதான காரண மிரண்டாகின்றது. ஆதலால், படமும் உபாதானகாரணமாம். அங்ஙனமாயினும் அக்கினி சையோகத்திற்கும் படத்திற்கும் ஒன்றற்கொன்று நசிக்கப்படுவது நாசஞ்செய்வதெனுந் தன்மை வடிவ விரோதம் இருக்கின்றது; அவிரோதமில்லை. ஆதலால், காரியகாரணங்களுக்கு ஒன்றற்கொன்று அவிரோத முண்டென்னும் நியமம் சம்பவியாது. வைசேஷிக சாஸ்திரத்தின்படி அக்கினி சையோகத்தினாற் படத்தினது நாச முண்டாகிறதில்லை. ஏனெனின், அக்கினி சையோகத்தினால் படாரம்பக தந்துவில் கிரியை யுண்டாகின்றது. கிரியையினால் தந்துவிபாகத்தால் (நூலின் பிரிவால்) படத்தின் அசமவாயிகாரண தந்து சையோகத்தின் நாச முண்டாகின்றது. தந்து சையோகத்தின் நாசத்தால் படத்தின் நாச முண்டாகின்றது. இவ்வாற்றால் வைசேஷிக மதத்தில் அசமவாயிகாரணத்தின் நாசத்தினால் திரவியத்தின் நாச முண்டாகின்றது. ஆதலால், படத்தின் நாசத்தில் தந்து சையோகத்தின் நாசத்திற்கு ஏதுத்தன்மை யுண்டு. பட அக்கினி சையோகங்களுக்குப் படநாசத்தில் ஏதுத் தன்மை யில்லை. அங்ஙனமாயினும், முற்கூறிய கிரமத்தால் படத்திற்கு நாச முளதாயின் அக்கினி சையோகத்தினால் ஐந்தாவது க்ஷணத்தில் படத்தின் நாசம் சம்பவிக்கின்றது. அக்கினி சையோகத்திற்கு மறைப்பின்றிய பிற்காலத்தில் படத்தின் நாசம் தோற்றுகின்றது. ஆதலால், வைசேஷிக மதம் அசங்கதமாம். அக்கினி சையோகத்தினால் பஸ்மமாகிய படத்தின் அவயவம் கூடியதாகவே தோற்றுகின்றது. அங்ஙனமே தண்டத்தினால் பொடியாகிய கடத்தின் கபாலம் விபாகத்தாற் றோன்றிய சையோக நாசமின்றியே நாசமாகின்றது. ஆதலால், அவயவ சையோகத்தின் நாசத்திற்கு அவயவியின் நாசத்தில் காரணத் தன்மையின் சம்பவமின்மையால், தந்து சையோகத்தின் நாசத்திற்குப் படநாசத்திற் காரணத்தன்மையில்லை. ஆனால், பட அக்கினிகளின் சையோகமே படத்தின் நாசத்திற் காரணமாம். பட அக்கினிகளின் சையோகத்திற்கு அக்கினியோடு படம் உபாதானகாரணமாம். ஆதலால், காரிய காரணங்களுக்கும் நசிக்கப்படுவது நாசம் செய்வதெனுந்தன்மை விரோதம் பிரசித்தமா யிருத்தலின், அவற்றிற்குப் பரஸ்பரம் அவிரோத முண்டென்னும் நியமம் சம்பவியாது. இவ்வாற்றால் அவித்தியா

ஜந்நிய விருத்தி ஞானத்தினால் காரியத்தோடுகூடிய அவித்தையின் நாச முண்டாகின்றது.

295-303. அவித்தியாலேச சம்பந்தியின் விசாரம்.

295. தத்துவஞானத்தினால் அவித்தை வடிவ உபாதானத்திற்கு நாச முண்டானபின் ஜீவன்முக்தியுடைய வித்வானது தேகஸ்திதியின் சங்கை

ஆனால், சகல அவித்தைக்கும் தத்துவஞானத்தினால் நாச முண்டாயின், ஜீவன்முக்தனாகிய வித்வானது தேகத்திற்குத் தத்துவஞானகாலத்தில் அபாவ முண்டாதல்வேண்டும். ஏனெனின், உபாதான காரணமாகிய அவித்தைக்கு நாச முண்டாகிய பின் காரியத்தின் ஸ்திதி சம்பவியாது.

296. முற்கூறிய சங்கைக்கு ஓர் ஆசாரியரின் கிரமப்படி சமாதானம்

ஒருவர் இச் சமாதானங் கூறுகின்றனர்:—எங்ஙனம் வில் லழிந்தாலும் விடப்பட்ட அம்பின்வேகம் நிலைத்திருக்கின்றதோ, அங்ஙனமே காரணத்திற்கு நாச முண்டாகியும் வித்வானது சரீரத்தின் ஸ்திதி சம்பவிக்கின்றது.

297. முற்கூறிய சமாதானத்தின் அசம்பவம்

இச் சமாதானமும் சம்பவியாது. ஏனெனின், நிமித்தகாரணத்திற்கு நாச முண்டாயின் காரியத்தின் ஸ்திதி யிருக்கும். உபாதான மழிந்தபின் காரியத்தின் ஸ்திதி சம்பவியாது. பாணத்தின் வேகத்தினது உபாதானகாரணம் பாணமாம். அதன் நிமித்தகாரணம் வில்லாம். அதன் நாசத்தால் பாணத்தினது வேகத்தின் ஸ்திதி சம்பவிக்கின்றது. ஆதலால், அவித்தை வடிவ உபாதானத்திற்கு நாசமுண்டாகியும், வித்துவானது சரீரத்தின் ஸ்திதியினது அசம்பவ மிருத்தலால், தத்துவ ஞான முண்டாகியும் அவித்தையின்லேச மிருக்குமென்று நூலாசிரியர்கள் எழுதியிருக்கின்றனர்.

298. அவித்தியாலேசத்தின் மூவகை

ஆண்டு மதபேதத்தால் அவித்தியாலேசத்தின் சொரூபம் மூன்று வகையாம். எங்ஙனம் கழுவப்பட்ட வெள்ளைப்பூண்டுப்

பாத்திரத்தில் கந்தமிருக்கின்றதோ, அங்ஙனமே அவித்தையின் சம்ஸ்காரத்தை அவித்தியாலேச மென்பர். அல்லது, அக்கினியினால் தகிக்கப்பட்ட படத்தைப்போல, தனது காரியத்தில் சாமார்த்திய மின்றியதாய் ஞானத்தினால் பாதிக்கப்பட்ட அவித்தையினை அவித்தியாலேச மென்பர். அல்லது, ஆவரண சக்தி விக்ஷேபசக்தி வடிவ அம்சங்க ளிரண்டினையுடையது அவித்தையாம். தத்துவஞானத்தினால் ஆவரணசக்தி விசிஷ்ட அவித்தை அம்சத்திற்கு நாச முண்டாகின்றது. பிராரப்தகர்ம வடிவப் பிரதிபந்தமிருக்க, விக்ஷேபசக்தி விசிஷ்ட அவித்தை அம்சத்தின் நாச முண்டாகிறதில்லை. தத்துவஞானத்திற்குப் பிந்திய காலத்திலும் தேகமுதலிய விக்ஷேபத்திற்கு உபாதான மாகிய அவித்தை அம்சத்தின் சேஷ மிருக்கின்றது. அதனால் சொரூபத்தின் ஆவரண முண்டாகிறதில்லை. அதனையே அவித்தியாலேச மென்பர்.

299. இவ் வர்த்தத்தில் சர்வஞ்ஞாத்மமுனிவர் மதம்

சர்வஞ்ஞாத்ம முனிவர் மதமோ இதுவாம்:—தத்துவ ஞானத்திற்குப் பிற்காலத்திலும் சரீரமுதலிய தோற்றம் உண்டாகாது. ஜீவன்முத்தியைப் பிரதிபாதிக்கும் சுருதிவசனத்திற்குச் சுவார்த்தத்தில் தாற்பரிய மில்லை. ஏனெனின், சிரவண விதியின் அர்த்தவாதவடிவ ஜீவன்முக்தியைப் பிரதிபாதிக்கும் வசனமாம். எந்தச்சிரவணத்தின் பிரதாபத்தால் ஜீவித்திருக்கும் புருஷனுக்கு முக்தி உண்டாகின்றதோ, அத்தன்மைய உத்தமமானது ஆத்மசிரவணமாம். இவ்வாற்றால் ஆத்தசிரவணத்தின் ஸ்துதியில் தாற்பரிய மிருத்தலின் ஜீவன்முக்தியைப் பிரதிபாதிக்கும் வசனத்தில் ஞானிக்குத் தேகமுதலியவற்றின் தோற்றங் கூறுதல் சம்பவியாது. இவ்வாற்றால் தத்துவஞானத்திற்கு மறைவின்றிய அடுத்த (பிற்) காலத்திலேயே விதேக மோக்ஷ முண்டாகின்ற தென்னும் மதத்தில் ஞானத்திற்குப் பின் அவித்தையின் லேச மிருப்பதில்லை.

300. முற்கூறிய மதத்திற்கு ஞானியின் அநுபவத்திலுள்ள விரோதம்

ஆனால், இம் மதம் ஞானியின் அநுபவத்திற்கு விருத்தமாம். எந்தத் தத்துவஞானத்தினால் காரியத்தோடு அவித்தை

யின் நிவிருத்தி உண்டாகின்றதோ, அந்தத் தத்துவஞானத்தின் நிவிருத்திக் கிரமத்தைக் கூறுவாம்:—

தத்துவஞானத்தால் அவித்தையின் நிவிருத்தி யுண்டாகத் தத்துவஞானத்தின் நிவிருத்தி உத்தரகாலத்தி லுண்டாகின்றது என்னும் கிரமத்தால் தத்துவஞானத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. ஏனெனின், தத்துவஞானத்தினால் அந்நிய அநாத்ம வஸ்துக்களின் சேஷமோ இருக்கிறதில்லை. கேவல சேதனத்திற்கு அசங்கத்தன்மை யிருத்தலால் நாசஞ்செய்யுந் தன்மை சம்பவிக்கிறதில்லை. தத்துவஞானத்திற்குத் தன்னைக் கெடுக்குந் தன்மையும் சம்பவியாது. இதனால் தத்துவஞானத்திற்கு நாச முண்டாகாது.

301. அவித்தையின் நிவிருத்திகாலத்தில் தத்துவஞானத்தின் நிவிருத்திக்கிரமம்

இவ்வாற்றால் அவித்யா நிவிருத்திக்குப் பிந்திய காலத்தில் தத்துவஞானத்தின் நிவிருத்தி சம்பவியாமையால், அவித்தையின் நிவிருத்தி காலத்திலேயே தத்துவஞானத்தின் நிவிருத்தி இவ்வாறு உண்டாகின்றது:—ஜலத்திற் போடப்பட்ட தேற்றும் பொடியினால் ஜலத்தின்கண்ணுள்ள சேற்றின் பிரிவு உண்டாகின்றது. அதன் கூடவே தேற்றும்பொடியும் பிரிந்துபோகின்றது. தேற்றும்பொடியின் பிரிவில் வேறு சாதனங்களின் அபேக்ஷை யில்லை. புற்கற்றையில் நெருப்பைப் போடுவதினால் புற்கற்றை பஸ்பமாகின்றது; அதன்கூடவே நெருப்பும் பஸ்மமாகின்றது. அங்ஙனமே காரியத்தோடு அவித்தையின் நிவிருத்தி உண்டாக அதன்கூடவே தத்துவஞானத்தின் நிவிருத்தியும் உண்டாகின்றது. ஆதலால், தத்துவஞானத்தின் நிவிருத்தியில் வேறு சாதனத்தின் அபேக்ஷை யில்லை.

302. பிரகிருத அர்த்தத்தில் பஞ்சபாதிகைக்காரர் மதம்

பஞ்சபாதிகைக்காரராகிய பத்மபாதாசாரியர் மதம் இதுவாம்:— ஞானத்திற்கு அஞ்ஞானமாத்திரத்தோடு விரோதமுண்டு. அஞ்ஞானத்தின் காரியத்தோடு ஞானத்திற்கு விரோதமில்லாதிருத்தலின், தத்துவஞானத்தால் கேவல அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அஞ்ஞானத்தின் நிவிருத்திக்

குப் பிற்காலத்தில் உபாதான மின்மையால் காரியத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆனால், தேகமுதலிய காரியங்களின் நிவிருத்தியில் பிராரப்த்த கர்மம் பிரதிபந்தகமாம். இதனால் முற்கூறியபடி அவித்தியாலேச மிருக்கின்றது. சில ஜீவன் முக்தர்களுக்குத் தேகமுதலியவற்றின் பிரதீதியும் சம்பவிக்கின்றது. பிராப்தவடிவப் பிரதிபந்தகத்தின் அபாவ முண்டாக, தேகாதிகளின் நிவிருத்தியும் தத்துவஞானத்தின் நிவிருத்தியும் உண்டாகின்றன. இம் மதத்தில் பிராரப்தத்தின் அபாவத்தோடு அவித்தையின் நிவிருத்தியே தத்துவஞானத்தின் நிவிருத்திக்கு ஏதுவாம்.

303—309. தத்துவஞானத்தின் கரணமும் சககாரியுமாகிய சாதனத்தில் விசாரம்.

303. உத்தம மத்திம அதிகாரிகளின் பேதத்தால் தத்துவஞானத்தின் இரண்டு சாதனங்களைக் கூறுதல்.

எந்தத் தத்துவஞானத்தினால் அவித்தையின் நிவிருத்தி உண்டாகின்றதோ, அந்தத் தத்துவஞானத்திற்கு இரண்டு சாதனமுண்டு. உத்தம அதிகாரிக்கோ சிரவணமுதலியன சாதனங்களாம். மத்திம அதிகாரிக்கு நிர்க்குணப் பிரஹ்மத்தின் அகங்கிரக (யானென்பதைக் கொள்ளும்) உபாசனையே தத்துவஞானத்தின் சாதனமாம். இது சகல அத்வைத சாஸ்திரத்தின் சித்தாந்தமாம்.

304. முற்கூறிய இரண்டு பக்ஷங்களிலும் பிரசங்கியானத்தைத் தத்துவஞானத்திற்குக் காரணமாகிய பிரமாண மெனல்

ஆனால், இரண்டு பக்ஷங்களிலும் தத்துவஞானத்திற்குக் காரணமாகிய பிரமாணம் பிரசங்கியானமென்பது சில நூலாசிரியர் மதமாம். விருத்தியின் பிரவாகத்தைப் பிரசங்கியானமென்பர். எப்படி மத்திம அதிகாரிக்கு நிர்க்குணப் பிரஹ்மாகார நிரந்தர விருத்திவடிவ உபாசனை கர்த்தவ்வியமும் அதுவே பிரசங்கியானமுமாமோ, அங்ஙனமே உத்தமாதிகாரிக்கும் மனனத்திற்குப் பின் நிதித்தியாசன வடிவப் பிரசங்கியானமே பிரஹ்ம சாக்ஷாத்காரத்திற்குக் காரணமாம். அறுவகைப் பிரமாணங்களிலும் பிரசங்கியான மில்லாமையால், அதற்குப்

பிரமையின் காரணத்தன்மை சம்பவியாதாயினும் சகுணப் பிரஹ்மத்தின் தியானத்திற்குச் சகுணப் பிரஹ்மத்தினது சாக்ஷாத்காரத்தின் காரணத்தன்மையும், நிர்க்குணப் பிரஹ்மத்தின் தியானத்திற்கு நிர்க்குணப் பிரஹ்மத்தினது சாக்ஷாத்காரத்தின் காரணத்தன்மையும் சகல சுருதி ஸ்மிருதிகளிலும் பிரசித்தமாம். அங்ஙனமே, வியவகிதகாமினி (ஸ்திரீ) யின் பிரசங்கியானத்திற்குக் காமினியினது சாக்ஷாத்காரத்தின் காரணத்தன்மை உலகத்திற் பிரசித்தமாம். ஆதலால், நிதித்தியாசன வடிவப் பிரசங்கியானமும் பிரஹ்ம சாக்ஷாத்காரத்தின் காரணமெனச் சம்பவிக்கின்றது. பிரசங்கியான ஜந்நிய பிரஹ்மஞானத்திற்குப் பிரமாண ஜந்நியத்தன்மை யின்மையால் பிரமாத்தன்மையின் சம்பவ மில்லையாயினும், சம்வாதிப்பிரமத்தைப்போல விஷயத்தின் பாத மில்லாமையால் பிரமாத்தன்மை சம்பவிக்கின்றது. நிதித்தியாசனவடிவப் பிரசங்கியானத்திற்கு மூலம் சப்தப் பிரமாணமாம். இதனாலும் பிரஹ்மஞானத்திற்குப் பிரமாத்தன்மை சம்பவிக்கின்றது.

305. பாமதீகார வாசஸ்பதியின் மதத்தில் பிரசங்கியானத்திற்கு மனதின் சககாரியாதலும் மனம் பிரஹ்மஞ்ஞானத்திற்குக் காரணமாதலும்

பாமதீகார வாசஸ்பதியின் மதம் இதுவாம்:—மனதின் சககாரி பிரசங்கியானமாம். பிரஹ்மஞானத்தின் காரணம் மனமாம். பிரசங்கியானத்திற்கு ஞானத்தின் காரணத்தன்மை அப் பிரசித்தமாம். சகுண நிர்க்குணப் பிரஹ்மத்தின் தியானமும் மனதின் சககாரியாம். அவற்றின் சாக்ஷாத்காரத்தினது காரணம் தியானமன்று; மனமே காரணமாம். அங்ஙனமே வியவகித காமினியின் தியானமும் காமினியின் சாக்ஷாத்காரத்திற்குக் காரணமன்று. ஆனால் காமினியின் சிந்தனத்தோடுகூடிய மனமே அச் சாக்ஷாத்காரத்திற்குக் காரணமாம். இவ்வாற்றால் மனமே பிரஹ்மஞானத்திற்குக் காரணமாம்.

306. அத்வைதக்கிரந்தங்களின் முக்கியமதம்.

(ஏகாக்கிரத்தன்மையோடு கூடிய மனம் சககாரியாதலும் வேதாந்த வாக்கிய வடிவ சப்தம் பிரஹ்மஞானத்திற்குக் காரணமாதலும்)

அத்வைதக்கிரந்தங்களின் முக்கியமதம் இதுவாம்:—வாக்கிய ஜந்நிய ஞானத்திற்குப்பின் பிரசங்கியானத்தின் அபேக்ஷை

யில்லை. மகாவாக்கியத்தினாலேயே அத்வைதப் பிரஹ்மத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றது. சகல ஞானங்களிலும் சககாரி மனமாம். ஆதலால், நிதித்தியாசன ஜந்நிய ஏகாக்கிரதத்தன்மை யோடு கூடிய மனம் சககாரியாம். வேதாந்த வாக்கிய வடிவ சப்தமே பிரஹ்ம ஞானத்திற்குக் கரணமாம்; மனமன்று. ஏனெனின், விருத்தி வடிவ ஞானத்திற்கு உபாதானமா யிருத்த லின் ஆசிரயம் அந்தக்கரணமாம். ஆதலால், ஞானத்திற்குக் கர்த்தா மனம். அதற்கு ஞானத்தின் கரணத்தன்மை சம்பவி யாது. வேறு ஞானங்களின் மனதிற்குக் கரணத்தன்மை அங்கீ கரிக்கினும் பிரஹ்மஞானத்தின் கரணத்தன்மை முற்றும் விருத்தமாம். ஏனெனின் "யந்மநஸா ந மநுதே - எதனை (பிரஹ் மத்தை) மனதினாலே உலகம் அறிகிறதில்லையோ" என்றல் முதலிய சுருதிகளில் பிரஹ்மம் மானதஞானத்திற்கு விஷய மாதல் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. பிரஹ்மத்திற்கு ஔப நிஷதத் (உபநிஷதத்தினால் அறியப்படுந்) தன்மை சொல்லப் பட்டிருக்கின்றது. ஆதலால், உபநிஷத்துவடிவ சப்தமே பிரஹ்மஞானத்திற்குக் கரணமாம். கைவல்யசாகையில் யாண்டு மனதிற்குப் பிரஹ்மஞானத்தின் கரணத்தன்மை நிஷேதிக்கப் பட்டிருக்கின்றதோ, அதே ஸ்தானத்தில் வாக்கிற்கும் பிரஹ்ம ஞானத்தின் கரணத்தன்மை நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், சப்தத்திற்கும் பிரஹ்மஞானத்தின் கரணத்தன்மை சுருதி விருத்தமாம். அங்ஙனமாயினும், சப்தத்திற்குப் பிரஹ்ம ஞானத்தின் கரணத்தன்மையில்லை என்னும் அர்த்தத்தில் சுருதிக்குத் தாற்பரிய முளதாயின், பிரஹ்மத்திற்கு உப நிஷத்தினால் அறியப்படுந் தன்மைவடிவ ஔபநிஷதத்தன்மை யைக் கூறுதல் அசங்கதமாகும். ஆதலால், சப்தத்தின் இலக்ஷணாவிருத்தியினால் பிரஹ்மகோசாஞான முண்டாகின் றது. சக்தி விருத்தியினால் பிரஹ்மத்தின் ஞானம் சப்தத்தால் உண்டாகிறதில்லை. இவ்வாறு சுருதிக்குத் தாற்பரிய மிருக்கின் றது. ஆதலால், சக்திவிருத்தியினால் சப்தத்திற்குப் பிரஹ்ம ஞானத்தின் கரணத்தன்மைநிஷேதிக்கப்படுகின்றது. இலக்ஷணா விருத்தியினால் சப்தத்திற்குப் பிரஹ்மஞானத்தின் கரணத்தன் மை யிருத்தலால் பிரஹ்மத்திற்கு ஔபநிஷதத்தன்மை சம்ப விக்கின்றது. பிரஹ்மசாக்ஷாத்காரத்தினை மானதமாகக் கொண்

டுள்ளவர் மதத்திலும் பிரஹ்மத்தின் பரோக்ஷஞானம் சப்தத்தி னலேயே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், பிரஹ்ம ஞானத்தில் சப்தத்திற்குக் காணத்தன்மை இரண்டு மதங்களி லும் ஆவசியமா யிருத்தலின் பிரஹ்மசாக்ஷாத்காரத்திற்குக் கரணம் சப்தமாம்; மனமன்று. இவ்வாற்றால் பிரஹ்மசாக்ஷாத் காரத்தின் கரணம் சப்தமாம்.

307. சப்தத்தினல் அபரோக்ஷஞானத்தின் உற்பத்தியில் சங்கை சமாதானம்

சப்தத்தில் பரோக்ஷஞானத்தை உண்டுபண்ணும் சாமர்த் திய முண்டு. சப்தத்தினல் அபரோக்ஷஞானத்தின் உற்பத்தி சம்பவியாது. அங்ஙனமாயினும், சாஸ்திரத்திற் கூறிய சிரவண மனன பூர்வக அந்தப் பிரஹ்ம கோசர பரோக்ஷஞானத்தின் சமஸ்கார விசிஷ்ட ஏகாக்கிர சித்தத்தோடு கூடிய சப்தத்தினல் அபரோக்ஷஞானம் உண்டாகின்றது. பிரதிபிம்ப பிம்பங்களின் அபேதவாதத்தில் ஜலமாத்திரத்தோடும் கண்ணுடி முதலியவற் ருேடும் கூடிய நேத்திரத்தினல் சூரியன்முதலியவற்றின் சாக்ஷாத்கார முண்டாகின்றது. ஆண்டுக் கேவல நேத்திரத்திற் குச் சூரியன்முதலியவற்றின் சாக்ஷாத்காரத்தில் சாமர்த்திய மில்லை. சஞ்சலமான அல்லது மலினமான உபாதியின் சந்நி தானத்திலும் சாமர்த்திய மில்லை. நிச்சலமும் நிர்மலமுமான உபாதியோடு கூடிய நேத்திரத்தில் சூரியன்முதலியவற்றினது சாக்ஷாத்காரத்தின் சாமர்த்திய முண்டு. அங்ஙனமே சம்ஸ்கார விசிஷ்ட நிர்மல நிச்சல சித்தவடிவ கண்ணுடியின் சகாயத்தால் சப்தத்தினலும் பிரஹ்மத்தின் அபரோக்ஷஞானம் சம்பவிக்கின் றது. வேறு திருஷ்டாந்தம்:—எங்ஙனம் இலௌகிக அக்கினி யில் ஓமித்தலால் சுவர்க்க ஏதுவான அபூர்வத்தின் உற்பத்தி உண்டாகிறதில்லை. வைதிக சம்ஸ்காரத்தோடுகூடிய அக்கினி யில் ஓமித்தலால் சுவர்க்கத்தை யுண்டுபண்ணும் அபூர்வத்தின் உற்பத்தி உண்டாகின்றது. ஓமத்திற்குச் சுவர்க்க சாதனத் தன்மை சுருதியிற் சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டாவது க்ஷணத்தில் அழிவதாகிய ஓமத்திற்குக் காலாந்தரத்தில் உண் டாவதாகிய சுவர்க்கத்தின் சாதனத்தன்மை சம்பவியாது. ஆத லால், சுவர்க்க சாதனத்தன்மையின் அநுபபத்தியாகிய அர்த்

தாபத்திப் பிரமாணத்தினால் எங்ஙனம் அபூர்வத்தின் சித்தி உண்டாகின்றதோ, அங்ஙனமே பிரஹ்மஞானத்தினால் அத்தியாச வடிவ சகல துக்கங்களின் நிவிருத்தி சுருதியிற் சொல்லப்பட்டிருக்கின்றது. கர்த்துருத்துவமுதலிய அத்தியாசம் அபரோக்ஷமாம். அவ் வபரோக்ஷ அத்தியாசத்தின் நிவிருத்தி பரோக்ஷஞானத்தினால் சம்பவிக்கிறதில்லை. அபரோக்ஷஞானத்தினாலேயே அபரோக்ஷ அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால், பிரஹ்மஞானத்திற்கு அபரோக்ஷ அத்தியாச நிவிருத்தியின் அநுபபத்தியினால் வேறு பிரமாணத்திற்குக் கோசரமாகாத பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானம் சத்தசக்தியாற் சித்திக்கின்றது. எங்ஙனம் கேள்வியர்த்தாபத்தியினால் அபூர்வத்தின் சித்தி உண்டாகின்றதோ, அங்ஙனமே சப்த ஜந்நிய பிரஹ்மத்தினது அபரோக்ஷஞானத்தின் சித்தியும் கேள்வியர்த்தாபத்தியினால் உண்டாகின்றது.

308. வேறு நூலின்படி சப்தத்திற்கு அபரோக்ஷ ஞானத்தை யுண்டுபண்ணுந் தன்மை

வேறு நூல்களில் சப்தத்திற்கு அபரோக்ஷஞானத்தை உண்டுபண்ணுந்தன்மை இத் திருஷ்டாந்தத்தினால் கூறப்பட்டிருக்கின்றது:—எங்ஙனம் பாஹ்ய பதார்த்தத்தின் சாக்ஷாத்காரத்தில் மனம் சாமர்த்திய மின்றியதாயினும், பாவனையோடு கூடிய மனதினால் நஷ்ட வனிதையின் சாக்ஷாத்கார முண்டாகின்றதோ, அங்ஙனமே கேவல சப்தமோ அபரோக்ஷஞானத்திற் சாமர்த்திய மின்றியதாம். ஆனால், முற்கூறிய மனதோடு கூடிய சபதத்தினால் பிரஹ்மத்தின் அபரோக்ஷஞான முண்டாகின்றது.

309—325. விஷய ஞானங்களின் அபரோக்ஷத் தன்மையில் விசாரம்.

309. வேறு நூலாசிரியர் மதப்படி ஞானமும் விஷயமுமாகிய இரண்டிலும் அபரோக்ஷத்தன்மை வியவகாரத்தைக் கூறுதல்.

வேறு நூலாசிரியர் இவ்வாறு கூறுகின்றனர்:—ஞானமும் விஷயமுமாகிய இரண்டிலும் அபரோக்ஷத்தன்மை விவகார முண்டாகின்றது. ஏனென்னின், நேத்திரமுதலிய இந்திரியங்க

ளால் அறியப்பட்ட கட முளதாயின், ஆண்டுக் கடத்தின் பிரத்தியக்ஷஞான மிருக்கின்றது; கடமும் பிரத்தியக்ஷமாம். இவ்வாறு இருவகை வியவகாரம் அநுபவசித்தமாம். ஆண்டு ஞானத்தில் அபரோக்ஷத்தன்மை கரணத்தின் அதீனமன்று. ஏனெனின், இந்திரிய ஜந்நிய ஞானம் அபரோக்ஷமாம். அநுமானுதி ஜந்நிய ஞானம் பரோக்ஷமாம். ஆகவே, ஞானத்தில் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகள் கரணத்தின் அதீனமாம். அவ் விந்திரிய ஜந்நிய ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையை நூலாசிரியர்கள் கண்டனம் செய்திருக்கின்றனர். ஆதலால், அபரோக்ஷ அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானம் அபரோக்ஷ மெனப்படுகின்றது. இவ்வாற்ருல் ஞானத்தில் அபரோக்ஷத்தன்மை விஷயத்தின் அதீனமாம். ஆதலால், அபரோக்ஷ விஷயத்தின் ஞானம் அபரோக்ஷமேயாகும். இந்திரியத்தால் தோன்றியதாகுக; அல்லது வேறு பிரமாணங்களாற்ருேன்றியதாகுக; இதில் அபிநிவேச (ஆக்கிரக) மில்லை. இதனுற்ருன் சுகமுதலியவற்றின் ஞானமும், ஈசுவரஞானமும், சொப்பனத்தின் ஞானமும் இந்திரிய ஜந்நியமன்று; அங்ஙனமாயினும் பிரத்தியக்ஷமாம். ஆதலால், ஞானத்தில் இந்திரிய ஜந்நியத்தன்மை வடிவ அபரோக்ஷஞானமே யுளது. ஆனல், அபரோக்ஷ அர்த்தகோசரஞான முளதாயின் அது அபரோக்ஷ ஞான மெனப்படுகின்றது.

310. முற்கூறிய அர்த்தத்தில் சங்கை சமாதானம்

அபரோக்ஷஞானத்தின் விஷயத்தினை அபரோக்ஷ மென்பர். ஆதலால், அபரோக்ஷ அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானத்திற்கு அபரோக்ஷத்தன்மையைக் கூறுதலில் அந்நியோந்நியாசிரய தோஷ முண்டாகின்றது. ஏனெனின், ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையை நிரூபித்தலில் விஷயத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையின் ஞானம் ஏதுவாம். விஷயத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையை நிரூபித்தலில் ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையின் ஞானம் ஏதுவாம். அங்ஙனமாயினும் விஷயத்தில் அபரோக்ஷத்தன்மையை அபரோக்ஷஞானத்தின் விஷயத்தன்மை வடிவமாகக் கொள்ளின், அந்நியோந்நியாசிரயதோஷ முண்டாகும். ஆதலால், விஷயத்தின் அபரோக்ஷத்தன்மை முற்கூறிய சொரூப

மன்று. ஆனால், பிரமாத்திரு சேதனத்தோடு அபேதமே விஷயத்தின் அபரோக்ஷத் தன்மையாம். ஆதலால், ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையை நிரூபித்தலில் விஷயத்தின் அபரோக்ஷத் தன்மை ஞானத்தின் அபேக்ஷை யுண்டாகியும், விஷயத்தின் அபரோக்ஷத்தன்மையை நிரூபித்தலில் ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையினது ஞானத்தின் உபயோக மின்மையால் அந்நியோந்நியாசிரயதோஷ மில்லை.

311. விஷயத்தில் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத் தன்மைகளைச் சம்பாதிக்கும் பிரமாத்திருசேதனத்தின் பேத அபேதத்தோடு விஷயத்தின்கண் உள்ள பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகளின் அதீனமே ஞானத்தின் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகளா மென்பதின் நிரூபணம்

சுகமுதலிய அந்தக்கரணத்தின் தர்மம் சாக்ஷி சேதனத்தில் அத்தியஸ்தமாம். அதிஷ்டானத்தின் வேறு சத்தை அத்தியஸ்தத்திற் கில்லை யாகலின், சுகமுதலியவற்றிற்குப் பிரமாத்திருசேதனத்தோடு என்றும் அபேத மிருத்தலால், அவற்றில் என்றும் அபரோக்ஷத்தன்மை யிருக்கின்றது. அபரோக்ஷ சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் ஞானமும் அபரோக்ஷமே யாகின்றது. பாகிய கடமுதலியன பாகிய சேதனத்தில் அத்தியஸ்தமாயிருத்தலின், பிரமாத்திரு சேதனத்தோடு அவற்றிற்கு என்றும் அபேத மில்லையாயினும், விருத்திவாயிலாகப் பாகிய சேதனத்திற்குப் பிரமாத்திரு சேதனத்தோடு அபேதம் உண்டாகின்றது. அக்காலத்தில் பிரமாத்திருசேதனமே கடமுதலியவற்றின் அதிஷ்டான மாகின்றது. ஆதலால், இந்திரிய ஜந்நிய கடாதி கோசரவிருத்தி உண்டாயின், அக்காலத்திலேயே கடமுதலியவற்றில் அபரோக்ஷத்தன்மைத் தர்ம முண்டாகின்றது. அபரோக்ஷத்தன்மை விசிஷ்ட கடமுதலியவற்றின் ஞானமும் அபரோக்ஷ மெனப்படுகின்றது. கடமுதலியவற்றைக் கோசரிக்கும் அநுமிதிமுதலிய விருத்தி உண்டாயின், அக்காலத்தில் பிரமாத்திரு சேதனத்தோடு கடமுதலியவற்றின் அபேதம் இல்லாதிருத்தலின், அவற்றில் அபரோக்ஷத்தன்மைத் தர்மம் உண்டாகாது. ஆதலால், கடமுத

வியவற்றின் அநுமிதிமுதலிய ஞானத்தினை அபரோக்ஷம் என்று கூறுவதில்லை; ஆனாற் பரோக்ஷ மென்பர். பிரஹ்மசேத னத்திற்குப் பிரமாத்திருசேதனத்தோடு என்றும் அபேத மிருத்தலின், பிரஹ்மசேதனம் என்றும் அபரோக்ஷமாம். ஆத லால், மகாவாக்கிய வடிவ சப்தப்பிரமாண ஜந்நிய பிரஹ்மத் தின் ஞானமும் அபரோக்ஷமென்றே சொல்லப்படுகின்றது. இவ்வாற்றால் ஞானத்தின் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத் தன்மைகள் பிரமாணாதீன மன்று. ஆனால், விஷயத்தின்கண் உள்ள பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகளின் அதீன மாகவே ஞானத்தின் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைக ளுள. விஷயத்தில் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மை களைச் சம்பாதிப்பன பிரமாத்திரு சேதனத்தின் பேதமும் அபேதமுமாம். ஆதலால், சப்தஜந்நிய பிரஹ்மத்தின் ஞான மும் அபரோக்ஷமாமென்று கூறுதல் சம்பவிக்கின்றது.

312. முற்கூறிய மதத்தில் அவாந்தரவாக்கிய ஜந்நிய பிரஹ்ம ஞானத்தினது அபரோக்ஷத்தன்மையின் பிராப்திவடிவ தோஷம்

ஆனால், இம் மதத்தில் அவாந்தரவாக்கிய ஜந்நிய பிரஹ்ம ஞானமும் அபரோக்ஷமாதல் வேண்டும். ஏனெனின், முற்கூறிய படி பிரமாத்திருசேதன சொரூபமா யிருத்தலால் பிரஹ்மம் என்றும் அபரோக்ஷமாம். அபரோக்ஷவஸ்துவைக் கோசரிக் கும் ஞானம் அபரோக்ஷமேயாம். ஆதலால், நித்திய அபரோக்ஷ சுபாவமுடைய பிரஹ்மத்திற்கு பரோக்ஷஞானம் சம்பவியாது. அவாந்தர வாக்கியத்தினால் எல்லா நூலாசிரியர்களும் பிரஹ் மத்தின் பரோக்ஷஞானத்தை அங்கீகரித்திருக்கின்றனர். அங் ஙனமே "பத்தாமவன்" இருக்கின்றானென்னும் வாக்கியத்தி னால் பத்தாமவனது பரோக்ஷஞானமே உண்டாகின்றது. பஞ்ச தசிமுதலிய நூல்களிலும் முற்கூறிய வாக்கியத்தினால் பத்தாமவ னது பரோக்ஷஞானமே சொல்லப்பட்டிருக்கின்றது. பிரமாத் திருசேதனத்திற்கு அபின்னமாய்ப் பத்தாமவ னிருக்கின்றான், ஆதலால், தசமனாகிய விஷயத்திற்கு அபரோக்ஷத்தன்மை யிருத்தலின், அவனது ஞானமும் அபரோக்ஷமாதல்வேண்டும்.

313. முற்கூறிய தோஷத்தினல் அபரோக்ஷத் தன்மைக்கு வேறு இலக்கணம்

ஆதலால், இவ்வாறு அங்கீகரித்தல்வேண்டும்:—எங்ஙனம், சுகமுதலியன பிரமாத்திரு சேதனத்தில் அத்தியஸ்தமாகின்றனவோ, அங்ஙனமே தர்ம அதர்மங்களும் பிரமாத்திரு சேதனத்தில் அத்தியஸ்தமாம். ஆதலால், சுகமுதலியவற்றைப்போல, தர்மமுதலியனவும் பிரமாத்திரு சேதனத்தோடு அபின்னமாயிருத்தலின் அபரோக்ஷமாதல்வேண்டும். அங்ஙனமாயினும் யோக்கிய விஷயத்திற்குப் பிரமாத்திரு சேதனத்தோடுள்ள அபேதமே விஷயத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையைச் சம்பாதிப்பதாம்; தர்மமுதலியன யோக்கிய மன்று. ஆதலால், அவற்றிற்குப் பிரமாத்திரு சேதனத்தோடு அபேதமிருக்கினும் அவற்றில் அபரோக்ஷத்தன்மை யில்லை. எங்ஙனம் விஷயத்தின்கண் உள்ள யோக்கியதை விஷயத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையில் அபேக்ஷிக்கப்படுகின்றதோ, அங்ஙனமே, பிரமாணத்தின்கண் உள்ள யோக்கியதை ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையில் அபேக்ஷிக்கப்படுவதாம். அவாந்தர வாக்கியத்திலும் "பத்தாமவ னிருக்கின்றான்" என்னும் வாக்கியத்திலும் அபரோக்ஷஞானம் உண்டாவதற்கு யோக்கியதை யில்லை. ஆனல், மகாவாக்கியத்திலும் "நீ பத்தாமவன்" என்னும் வாக்கியத்திலும் அபரோக்ஷஞானம் பிறத்தற்கு யோக்கியதை யிருக்கின்றது. எங்ஙனம்: விஷயத்தின் யோக்கியதை முதலியன பிரத்தியக்ஷமுதலிய வியவகாரத்தால் அறியப்படுகின்றன. எந்த விஷயத்திற்குப் பிரமாதாவோடு அபேதமுளதாகப் பிரத்தியக்ஷ விவகார முண்டாகின்றதோ, அவ் விஷயம் யோக்கிய மெனப்படுகின்றது. எவ் விஷயத்திற்குப் பிரமாதாவோடு அபேத முண்டாகியும் பிரத்தியக்ஷ வியவகார முண்டாகிறதில்லையோ, அவ் விஷயம் அயோக்கிய மெனப்படுகின்றது. எங்ஙனம்: தர்மாதர்ம சம்ஸ்காரம் அயோக்கியமாம். விஷயத்தைப்போலப் பிரமாணத்திலும் யோக்கியத்தன்மை முதலியன அநுபவாநுசாரமாக அறியவேண்டியனவாம். பாகிய இந்திரியங்களில் பிரத்தியக்ஷஞானம் உண்டாதற்கு யோக்கியதை யிருக்கின்றது. அநுமானமுதலியவற்றில் பரோக்ஷஞானத்தை உண்டுபண்ணுவதில் யோக்கியதை யிருக்கின்றது. அநுபலப்தி

யினும் சப்தத்திலும் இருவகை ஞானத்தை யுண்டுபண்ணு 5
யோக்கியதை இருக்கின்றது.

314. அபரோக்ஷஞானத்தின் சர்வஞ்ஞாத்ம முனிவரது மதத்தின் அநுவாதம்

ஆனால், இத்துணை விசேஷ முண்டு:—பிரமாதாவோடு சம்பந்த மின்றிய பதார்த்தத்திற்குச் சப்தத்தினால் கேவலம் பரோக்ஷஞானம் உண்டாகின்றது. எப் பதார்த்தத்திற்குப் பிரமாதாவோடு தாதாத்மிய சம்பந்த முண்டாகின்றதோ, அதனிடத்து யோக்கியதை உண்டாகியும், பிரமாதாவோடு அபேதத்தைப் போதிக்கும் சப்த முண்டாகாவிடின், சப்தத்தினால் பரோக்ஷஞானமே உண்டாகும்; அபரோக்ஷஞானம் உண்டாகாது. எங்ஙனம், "பத்தாமவ னிருக்கின்றான்" என்றல்முதலிய வாக்கியங்களில் பிரமாதாவோடு அபேதத்தைப் போதிக்கும் சப்த மின்மையால் முற்கூறிய வாக்கியங்களைக் கேட்போனுக்குத் தனக் கன்னியமின்றிய பத்தாமவன் பிரஹ்மமென்பவற்றின் பரோக்ஷஞானமே உண்டாகின்றது; அபரோக்ஷஞானம் உண்டாகிறதில்லை. எந்த வாக்கியத்தில் பிரமாதாவோடு அபின்னமான யோக்கிய விஷயத்திற்குப் பிரமாதாவோடு அபேதத்தைப் போதிக்கும் சப்த முண்டாகின்றதோ, அந்த வாக்கியத்தினால் பரோக்ஷஞான முண்டாகிறதில்லை; அபரோக்ஷஞானமே உண்டாகின்றதென்னும் மதம் சர்வஞ்ஞாத்ம முனிவரதாம். இம் மதத்தில் கேவல சப்தமே அபரோக்ஷஞானத்திற்கு ஏதுவாம். பரோக்ஷஞானத்தின் சம்ஸ்கார விசிஷ்ட ஏகாக்கிர சித்தத்தோடு கூடிய சப்தத்தினால் அபரோக்ஷஞான முண்டாகின்றது. இம் மதம் முதலிற் கூறப்பட்டிருக்கின்றது.

315. சமீபத்திலேயே தூஷிக்கப்பட்ட விஷயத்தின்கண் உள்ள அபரோக்ஷத்தன்மையின் அதீனமாம் ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷத் தன்மை என்னும் மதத்தின் அநுவாதம்

அபரோக்ஷ அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானத்திற்கு அபரோக்ஷத்தன்மையை அங்கீகரித்துப் பிரஹ்மஞானத்திற்கு அபரோக்ஷத்தன்மை சம்பவிக்கின்றதென்று இடையில் மூன்றுவதுமதம் சொல்லப்பட்டது. இம் மதத்தில் நித்தியாபரோக்ஷப்

பிரஹ்மகோசர அவாந்தரவாக்கிய ஜந்நிய பிரஹ்மஞானமும் அபரோக்ஷமாதல் வேண்டுமென்று தூஷணம் சொல்லப் பட்டது.

316. அத்வைத வித்தியாசாரியர் மதப்படி விஷயத்தின்கண் உள்ளதும் ஞானத்தின்கண் உள்ளதுமான அபரோக்ஷத் தன்மையை வேறுவிதமாகச் சொல்லுதலும், தூஷிக் கப்பட்ட முற்கூறிய மதத்தில் வேறு தூஷணத்தைச் சொல்லுதலும்

அத்வைத வித்தியாசாரியர் விஷயத்தின்கண் உள்ள அப ரோக்ஷத்தன்மையையும் ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷத் தன்மையையும் வேறு வகையாற் கூறியிருக்கின்றனர். தூஷிக் கப்பட்ட முற்கூறிய மதத்தால் வேறு தூஷணத்தையும் கூறி யிருக்கின்றனர். அது வருமாறு:—பிரமாதாவோடு அபின்ன மான அர்த்தத்தை அபரோக்ஷசொரூபமெனக் கொண்டு, அப ரோக்ஷ அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானத்திற்கு அபரோ க்ஷத்துவத்தைக் கூறின், சொப்பிரகாச ஆத்மசுகரூபஞானத் தில் அபரோக்ஷஞானத்தினது இலக்ஷணத்தின் அவ்வியாப்தி உண்டாகும். ஏனெனின், அபரோக்ஷ அர்த்தம் எதற்குக் கோ சர (விஷய) மாகின்றதோ, அந்த ஞானத்தினை அபரோக்ஷ மெனின், ஞானத்திற்கும் விஷயத்திற்கும் ஒன்றற்கொன்று பேதத்தை அபேக்ஷிக்கும் விஷய விஷயித்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. அதே ஸ்தானத்தில் ஞானத்தின்கண் உள்ள அபரோக்ஷலக்ஷண முண்டாகும். சொப்பிரகாச சுகத்திற்கு ஞானத்தோடு அபேத மிருத்தலின் விஷய விஷயித்தன்மைச் சம்பவ மின்மையால், அதனிடத்து முற்கூறிய இலக்ஷணம் சம்பவியாது. பிரபாகரர்மதத்தில் ஞானத்தைச் சொப்பிரகாச மென்பர். தனது சொரூபத்தையும், அங்ஙனமே ஞாதாவையும், அங்ஙனமே ஞேயமாகிய கடமுதலியவற்றினையும் ஞானம் விஷ யஞ்செய்கின்றது. ஆதலால், சகலஞானமும் திரிபுடி கோசரமா மென்பது பிரபாகரர் மதம். அம் மதத்தில் அபேத முளதாயி னும், விஷய விஷயித்தன்மைகளின் அங்கீகார முண்டு. ஆத லால், சுவப்பிரகாச ஞானவடிவ சுகத்தில் விஷய விஷயித் தன்மை அசங்கதமன்று. சுவ, அதாவது தனது சொரூபம்

எதற்குப் பிரகாசம் (விஷயி) ஆகின்றதோ, அது சுவப்பிரகாச மெனப்படுகின்றது. இவ்வாற்றால் சுவப்பிரகாச மென்னும் சொல்லின் அர்த்தத்திலும் அபேதத்தில் விஷய விஷயித் தன்மை சம்பவிக்கின்றது. அங்ஙனமாயினும் பிரகாசிக்கப்படுவது பிரகாசிப்பது என்பவற்றின் பேதம் அநுபவசித்தமாயிருத்தலின், பேதமின்றிப் பிரபாகரர் விஷய விஷயித்தன்மைகளைக் கூறுதல் அசங்கதமாம். ஆதலால், சுவப்பிரகாச மென்னும் சொல்லிற்கு முற்கூறியது பொருளன்று. ஆனால், சுவ (தனது) சத்தையினால் பிரகாதித்தலே (சம்சயமுதலியன இல்லாமையே) சுவப்பிரகாசமென்னும் சொல்லிற்குப் பொருளென்று அத்வைத நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது.

317. அபரோக்ஷத்திற்கு முற்கூறிய இலக்ஷணம் சம்பவியாதென்பதை அநுவதித்தல்

இவ்வாற்றால் சுவப்பிரகாச ஞானத்திற்கு அபின்னமான சொரூப சுகத்தில் விஷய விஷயித்தன்மைகள் சம்பவியாமையின், அபரோக்ஷத்திற்கு முற்கூறிய இலக்ஷணம் அதில் சம்பவியாது.

318. முற்கூறிய தோஷமின்றிய அபரோக்ஷத்தின் இலக்ஷணம்

அபரோக்ஷத்தின் இலக்ஷணம் இதுவாம்:—தனது வியவகாரத்திற்கு அநுகூலமான சைதன்னியத்தோடு அபேதம் அபரோக்ஷ விஷயத்தின் இலக்ஷணமாம். அந்தக்கரணமும் சுகமுதலியனவும் சாக்ஷி சேதனத்தில் அத்தியஸ்தமாயிருத்தலின், தர்மத்துடன் அந்தக்கரணத்திற்குச் சாக்ஷி சேதனத்தோடு அபேதமிருக்கின்றது. சாக்ஷிசேதனத்தால் அவற்றின் பிரகாச மிருத்தலின், அவற்றின் வியவகாரத்திற்கு அநுகூலம் சாக்ஷி சேதனமாம். ஆதலால், சுவ அதாவது அந்தக்கரண சுகமுதலியவற்றின் வியவகாரத்திற்கு அநுகூலமான சாக்ஷி சேதனம் எதுவோ, அதனோடு அபேத வடிவ அபரோக்ஷத்தின் இலக்ஷணம் சுகமுதலியவற்றோடு கூடிய அந்தக்கரணத்திற் சம்பவிக்கின்றது. தர்மமுதலியவற்றிற்குச் சாக்ஷி சேதனத்தோடு அபேதமோ உளது. ஆனால், அவற்றில் யோக்கியத்தன்மை யின்மையால் அவற்றின் வியவகாரத்திற்கு அநுகூலம் சாக்ஷி சேதனமன்று.

ஆதலால், தனது வியவகாரா நுகூல சேதனத்தோடு தர்மமுத வியவற்றிற்கு அபேத மில்லாதிருத்தலின் அவற்றில் அபரோக்ஷத்தன்மையில்லை. அங்ஙனமே, கடமுதலியவற்றைக்கோசரிக்கும் விருத்திகாலத்தில் கடமுதலியவற்றின் அதிஷ்டான சேதனத்திற்கு விருத்தி யுபகித சேதனத்தோடு அபேத முண்டாகின்றது. ஆதலால், கடமுதலியவற்றைக்கோசரிக்கும் விருத்திகாலத்தில் கடமுதலிய சேதனம் கடமுதலிய வியவகாரத்திற்கு அநுகூலமாம். அதற் கபின்னமான கடமுதலியன அபரோக்ஷமெனப்படுகின்றன. கடமுதலியவற்றைச் கோசரிக்கும் விருத்தியின் அபாவகாலத்திலும் தனது அதிஷ்டான சேதனத்தோடு கடமுதலியன அபின்னமாம். ஆனால், அக்காலத்தில் அவற்றின் வியவகாரத்திற்கு அநுகூலமான அதிஷ்டான சேதன மில்லை. ஏனெனின், விருத்தி உபகிதத்தோடு அபின்னமாய் வியவகாரத்திற் கநுகூல மாகின்றது. ஆதலால், கடமுதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தியின் அபாவகாலத்திற் கடமுதலியன அபரோக்ஷமன்று. அங்ஙனமே பிரஹ்மத்தைக் கோசரிக்கும் விருத்தி யுபகித சாக்ஷி சேதனமே பிரஹ்மத்தின் வியவகாரத்திற்கு அநுகூலமாம். அதனோடு அபின்னமாகிய பிரஹ்மத்திற்கு அரோக்ஷத்தன்மை சம்பவிக்கின்றது. எங்ஙனம் வியவகாரத்திற் கநுகூலமான சைதன்யத்தோடு விஷயத்திற்குள்ள அபேதம் விஷயத்தின்கண் உள்ள பிரத்தியக்ஷத்தன்மையின் பிரயோஜகமோ, அங்ஙனமே கடமுதலிய விஷயத்தோடு கடமுதலிய வியவகாரத்திற் கநுகூலமாகிய சைதன்னியத்திற்குள்ள அபேதம் ஞானத்தின்கண் உள்ள பிரத்தியக்ஷத்தன்மையின் பிரயோஜகமாம்.

319. விருத்திவடிவப் பிரத்தியக்ஷஞானத்தில் முற்கூறிய அபரோக்ஷத்தின் இலக்ஷணத்தினது அவ்வியாப்தி

சேதனத்தில் கடமுதலியன அத்தியஸ்தமாம். விஷயவடிவவிருத்தி காலத்தில் விருத்தி சேதனத்தோடு விஷய சேதனத்திற்கு ஏகத்துவ மிருத்தலின், தனது அதிஷ்டானமாகிய விஷய சேதனத்தோடு அபின்னமான கடமுதலியவற்றிற்கு விருத்தி சேதனத்தோடு அபேத முண்டாகியும், விருத்தியோடு அபேதம் கடமுதலியவற்றிற்குச் சம்பவியாது. எங்ங

னம், இராஜ்ஜுவிற் கற்பிதமான சர்ப்ப தண்ட மாலைகளுக்கு இராஜ்ஜுவோடு அபேதம் உண்டாகியும் சர்ப்ப தண்ட மாலைகளுக்குப் பரஸ்பரம் பேதமே உண்டாகின்றது; அபேத முண்டாகிறதில்லை. பிரஹ்மத்திற் கற்பிதமான சகல துவைதங்களுக்கும் பிரஹ்மத்தோடு அபேத முண்டாகியும், ஒன்றற்கொன்று அபேத முண்டாகிறதில்லை. அங்ஙனமே, விருத்தி சேதனத்தோடு விருத்திக்கும் கடமுதலியவற்றிற்கும் அபேதம் சம்பவிக்கின்றது; ஆனால், விருத்திக்கும் கடமுதலிய விஷயங்களுக்கும் பரஸ்பரம் அபேதம் சம்பவிக்கிறதில்லை. ஆதலால், விருத்தி வடிவப் பிரத்தியக்ஷ ஞானத்தில் முற்கூறிய இலக்ஷணத்திற்கு அவ்வியாப்தி இருக்கின்றது.

320. முற்கூறிய அவ்வியாப்திக்கு அத்வைத வித்தியாசாரியர் முறைப்படி பரிகாரம்

அங்ஙனமாயினும், அத்வைத வித்தியாசாரியர் முறைப்படி அபரோக்ஷத்தன்மைத் தர்மம் சேதனத்திற்காம்; விருத்திக்கன்று. எங்ஙனம், அநுமிதித்தன்மை இச்சைத்தன்மை முதலியன அந்தக்கரண விருத்தியின் தர்மமோ, அங்ஙனமே அபரோக்ஷத்தன்மைத் தர்மம் விருத்தியிலில்லை. ஆனால், விஷயாகார விருத்தி உபகிதசேதனத்திற்கு அபரோக்ஷத்தன்மைத் தர்மமிருத்தலின், சேதனத்தின் அபரோக்ஷத்தன்மைக்கு உபாதி விருத்தியாம். ஆதலால், விருத்தியில் அபரோக்ஷத்தன்மையை ஆரோபித்தலால் விருத்திஞானம் அபரோக்ஷமா மென்று வியவகரிக்கின்றனர். இவ்வாற்றால் விருத்திஞானம் இலக்ஷியமன்று. ஆதலால் அவ்வியாப்தியில்லை. விருத்திஞானத்தில் அபரோக்ஷத்தன்மைத் தர்மம் இஷ்டமாம். அபரோக்ஷத்தின் இலக்கணம் செல்லாதாயின் அவ்வியாப்தி யுண்டாம். விருத்திஞானம் இலக்ஷியமன்று; விருத்தி உபகித சேதனமே இலக்ஷியமாம். ஆதலால், அவ்வியாப்திச் சங்கை யில்லை. சேதனத்தின் தர்மமாகிய அபரோக்ஷத்தன்மையை அங்கீகரித்தலினாலேயே சுகமுதலியவற்றின் ஞானத்தில் அபரோக்ஷத்தன்மை சம்பவிக்கின்றது. விருத்தியின் தர்மமாகிய அபரோக்ஷத்தன்மையை அங்கீகரிக்கின், சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தியின் அங்கீகாரமின்மைப் பக்ஷத்தில் சாக்ஷிவடிவ சுகமுதலியவற்றின் ஞானத்தில் அபரோக்ஷத்தன்மை வியவகாரம் உண்டாகலாகாது. ஆத

லால், அபரோக்ஷத்தன்மைத் தர்மம் சேதனத்திற்காம்; விருத்திக்கன்று.

321. முற்கூறிய பக்ஷத்திற் சங்கை

இப் பக்ஷத்தில் இது சங்கையாம்:—சம்சாரதசையிலும் ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு அபேத மிருத்தலின், சகல புருஷர்களுக்கும் பிரஹ்மம் அபரோக்ஷமா மென்னும் வியவகார முண்டாதல் வேண்டும். அவாந்தரவாக்கிய ஜந்நிய பிரஹ்மத்தின் ஞானமும் அபரோக்ஷமாதல் வேண்டும். ஏனெனின், அவாந்தரவாக்கிய ஜந்நியவிருத்தி உபகிதசாக்ஷி சேதனத்திற்குப் பிரஹ்மவடிவ விஷயத்தோடு அபேத மிருக்கின்றது.

322. முற்கூறிய சங்கைக்குச் சமாதானம்

அங்ஙனமாயினும் இது சமாதானமாம்.—தனது வியவகாரத்திற்கு அநுகூலமான சேதனத்தோடு ஆவரிக்கப்படாத விஷயத்திற்கு உள்ள அபேதமோ அபரோக்ஷ விஷயத்தின் இலக்ஷணமாம். ஆவரிக்கப்படாத விஷயத்தினேடு தனது வியவகாரத்திற் கநுகூலமான சேதனத்தின் அபேதம் அபரோக்ஷ ஞானத்தின் லக்ஷணமாம். சம்சாரதசையில் ஆவரிக்கப்பட்ட பிரஹ்மத்திற்குத் தன்து வியவகாரத்திற் கநுகூலமான சேதனத்தோடு அபேத முண்டாகியும், ஆவரிக்கப்படாத விஷயத்தின் அபேத மிருத்தலின், பிரஹ்மத்தில் அபரோக்ஷத்தன்மை யில்லை. அங்ஙனமே அவாந்தரவாக்கிய ஜந்நிய ஞானத்திற்கும் ஆவரிக்கப்பட்ட விஷயத்தோடு அபேத மிருத்தலின், அந்த ஞானத்திற்கு அபரோக்ஷத்துவ மில்லை. ஆதலால், முற்கூறிய சங்கை சம்பவியாது.

323. முற்கூறிய பக்ஷத்தில் வேறு சங்கை

வேறு சங்கை:—முற்கூறியபடி ஆவரிக்கப்படாத விஷயத்தின் அபேதத்தினல் அபரோக்ஷத்தன்மை அங்கீகரிக்கின், அந்நியோந்நியாசிரய தோஷ முண்டாகும். சமான கோசர ஞானமாத்திரத்தினே ஆவரணத்தை நிவர்த்திப்பதாகக் கொள்ளின், பரோக்ஷஞானத்தினலும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாதல்வேண்டும். சித்தாந்தத்தில் அசத்துவாபாதக அஞ்ஞான சக்தி அல்லது திரோதானம் பரோக்ஷஞானத்தினல் நாசமாகின்றது. அபாருபாதக சக்திவிசிஷ்ட அஞ்ஞானத்தின்

நாசம் பரோக்ஷஞானத்தினால் உண்டாகிறதில்லை. அபரோக்ஷ ஞானத்தினாலேயே அஞ்ஞானத்தின் நாச முண்டாகின்றது. இவ்வாற்றால் அஞ்ஞானநிவிருத்தி ஞானத்தினது அபரோக்ஷத்தன்மையினது சித்தியின் அதீனமா யிருக்கின்றது. ஆவரிக்கப்படாத விஷயத்தோடு தனது வியவகாரத்திற் கநுகூலமான சேதனத்திற்கு அபேதம் உளதாக, ஞானத்தின் அபரோக்ஷத்தன்மை லக்ஷணத்தைக் கூறுதலால், அஞ்ஞான நிவிருத்தியின் அதீனமான ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையினது சித்தி சொல்லப்பட்டது. இதனால் அந்நியோந்நியாசிரய தோஷமாம்.

324. முற்கூறிய சங்கைக்குச் சமாதானம்

அதன் சமாதானம் இதுவாம்:—முற்கூறியபடி அஞ்ஞான நிவிருத்திக்கு ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையில் அபேக்ஷை உளதாயினும், அஞ்ஞானத்தின் நிவிருத்தியில் அபரோக்ஷத்தன்மையினது அபேக்ஷையில்லை. ஏனெனின், ஞானமாத்திரத்தினால் அஞ்ஞானத்தினது நிவிருத்தியை அங்கீகரிக்கின், பரோக்ஷஞானத்தினாலும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாதல்வேண்டும். இத் தோஷத்தின் பரிகாரத்தின்பொருட்டு அபரோக்ஷஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி சொல்லப்பட்டிருக்கின்றது. அதனிடத்து அந்நியோந்நியாசிரய தோஷ முண்டாகின்றது. ஆதலால், ஞானமாத்திரத்தால் அஞ்ஞானத்தின் நிவிருத்தியென்றும், அபரோக்ஷஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தியென்றும் கூறவில்லை. ஆனால், பிரமாணத்தின் மகிமையினால் யாண்டு விஷயத்தோடு ஞானத்தின் தாதாத்மிய சம்பந்த முண்டாகின்றதோ, அந்த ஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. பிரமாணமகிமையினால் பாகியேந்திரிய ஜந்நிய கடமுதலியவற்றின் ஞானம் விஷயத்தோடு தாதாத்மிய சம்பந்த முடையதாகின்றது. சப்தஜந்நிய பிரஹ்மஞானமும் மகாவாக்கிய வடிவப் பிரமாணத்தின் மகிமையினால் விஷயத்தோடு தாதாத்மிய சம்பந்த முடையதாகின்றது. ஆதலால், முற்கூறிய இரண்டு ஞானங்களாலும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. எல்லாவற்றிற்கும் உபாதானம் பிரஹ்மமாயிருத்தலால் பிரஹ்மகோசர சகல ஞானங்களுக்கும் தாதான்மியசம்பந்த முண்டு. ஆதலால், அநுமிதி

வடிவப் பிரஹ்ம ஞானத்தினாலும் அவாந்தர வாக்கிய ஜந்நிய பிரஹ்மத்தின் பரோக்ஷ ஞானத்தினாலும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாதல்வேண்டும். அங்ஙனமாயினும், முற்கூறிய ஞானத்திற்கு விஷயத்தோடு தாதாத்மிய சம்பந்த மிருக்கின்றது. அது விஷயத்தின் மகிமையினாலாம்; பிரமாணத்தின் மகிமையினா லன்று. ஏனெனின், மகாவாக்கியத்தினால் ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்தைக் கோசரிக்கும் ஞான முண்டாகின்றது. அதற்கு விஷயத்தோடு தாதான்மிய சம்பந்தமோ பிரமாணத்தின் மகிமையினாற் கூறப்படுகின்றது. வேறு ஞானத்திற்குப் பிரஹ்மத்தோடு தாதாத்மியசம்பந்த மிருக்கின்றது. அது பிரஹ்மத்திற்கு வியாபகத்தன்மை யிருத்தலாலும், எல்லாவற்றின் உபாதானத்தன்மை யிருத்தலாலும் விஷயத்தின் மகிமையினாற் கூறப்படுகின்றது. இவ்வாற்றால் விலக்ஷணப்பிரமாண ஜந்நிய விஷய சம்பந்தியாகிய ஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றதென்று கூறுதவில் ஞானமாத்திரத்தால் அஞ்ஞான நிவிருத்தியின் ஆபத்தி யில்லை. ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையின் அபேக்ஷை அஞ்ஞான நிவிருத்தியில் இல்லாமையால் அந்நியோந்நியாசிரய தோஷமு மில்லை. இவ்வாற்றால் தனது வியவகாரத்திற் கநுகூலமான ஆவரிக்கப்படாத சைதன்யத்தோடு விஷயத்தின் அபேதம் அபரோக்ஷ விஷயத்தின் லக்ஷணமாம். முற்கூறிய சைதன்னியத்திற்கு விஷயத்தோடுள்ள அபேதம் அபரோக்ஷஞானத்தின் இலக்ஷணமாம். ஆதலால், சப்தஜந்நிய பிரஹ்மஞானத்திலும் அபரோக்ஷத்தன்மை சம்பவிக்கின்றது.

325. சப்தத்தினால் அபரோக்ஷஞானத்தின் உற்பத்தியில் சொல்லப்பட்ட மூன்று மதங்களில் முதல் மதத்தின் நலமுடைமை

இவ்வாறு சப்தத்தினால் அபரோக்ஷ ஞானத்தின் உற்பத்தியில் மூன்று மதங்கள் சொல்லப்பட்டன. அவற்றுள், முதல்மதமே நலமுடையதாம். ஏனெனின், ஞானத்தின்கண் உள்ள பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைகள் பிரமாணாதீனமாம். சககாரிசாதன விசிஷ்ட சப்தத்திலும் அபரோக்ஷ ஞானத்தைப் பயத்தலின் யோக்கியதை யுண்டென்பது முதல் மதம். விஷயத்தின் அதீனமாகவே ஞானத்தின் அபரோக்ஷத்

தன்மைமுதலிய தர்மங்களிருக்கின்றன, பிரமாணத்தின் அதீன மன்று என்னும் அபிப்பிராயத்தினால் இரண்டாவது மதமும் அத்வைத வித்தியாசாரியரது மூன்றாவது மதமு மிருக்கின்றன. அவ் விரண்டு மதங்களிலும் கேவல விஷயத்தின் அதீனமாகவே அபரோக்ஷத்துவ முதலியவற்றை அங்கீகரிக்கின், அவாந்தர வாக்கியத்தினாலும் பிரஹ்மத்தின் அபரோக்ஷஞான முண்டா தல் வேண்டும். ஆதலால், ஞானத்தின் அபரோக்ஷத்தன்மை யில் பிரமாணத்தின் அதீனத்தன்மை அவசியமாகவே வேண் டும். ஆதலால், முதல் மதமே நலமுடையதாம்.

326-342. விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல்.

326. கிரந்தத்தின் ஆரம்பத்தில் கூறிய மூன்று வினாக்களையும் அவற்றிற் சொல்லப்பட்ட இரண்டின் விடையையும் அநுவதித்தல்

கிரந்தத்தின் ஆரம்பத்தில் விருத்தியின் சொரூபம் கார ணம் பயன் என்னும் மூன்றின் வினா வுளது. அவற்றுள் அந்தக் கரண வித்தைகளின் பிரகாச வடிவ பரிணாமம் விருத்தி யெனப் படுகின்றது என்று கூறுதலால் விருத்தியின் சாமானியவடிவம் சொல்லப்பட்டது. அதன்பின் யதார்த்தத்தன்மை அயதார்த்தத் தன்மைமுதலிய பேதத்தைக் கூறுதலால் விருத்தியின் விசேஷ வடிவம் சொல்லப்பட்டது. பிரமாண நிரூபணத்தால் விருத்தியி னது காரணத்தின் சொரூபம் சொல்லப்பட்டது.

327. விருத்தியின் பிரயோஜன சம்பந்தியாகிய மூன்றாவது வினாவினது விடையின் ஆரம்பம்

விருத்தியின் பிரயோஜனம் வினாவப்பட்டது. அவ் விருத்தி யின் பிரயோஜனம் இதுவாம்:—ஜீவனுக்கு அவஸ்தை மூன்றின் சம்பந்தம் விருத்தியினால் உண்டாகின்றது. புருஷார்த்தப் பிராப்தியும் விருத்தியினால் உண்டாகின்றது. ஆதலால், சம் சாரப் பிராப்திக்கு ஏது விருத்தியாம். மோக்ஷப்பிராப்திக்கும் ஏது விருத்தியாம். ஏனெனின், அவஸ்தாத்திரயத்தின் சம்பந் தத்தால் ஜீவனுக்குச் சம்சார மிருக்கின்றது.

328. விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறும் அவசரத்தில் ஜாக்கிரத்தின் இலக்ஷணம்

ஆண்டு இந்திரியஜந்நிய ஞானத்தின் அவஸ்தையினை ஜாக் கிராவஸ்தை யென்பர். அவஸ்தையென்னும் சொல் காலத்தின்

வாசகமாம். சுகமுதலியவற்றின் ஞான காலமும் உதாசீன கால மும் ஜாக்கிராவஸ்தை யெனப்படுகின்றது. சுகமுதலியவற்றின் ஞானம் இந்திரிய ஜந்நிய மன்று; அங்ஙனமே சுகமுதலியவற் றின் ஞானகாலத்தில் அந்நிய விஷயத்தின் ஞானமும் இந்திரிய ஜந்நிய மாகாது. அங்ஙனமே உதாசீன காலத்திலும் இந்திரிய ஜந்நிய ஞான மில்லை. அங்ஙனமாயினும், சொல்லப்படும் சொப் பனுவஸ்தை சுழுத்தி யவஸ்தைகளுக்கு வேருய் இந்திரிய ஜந் நிய ஞானத்தின் ஆதாரகாலம் எதுவோ, அது ஜாக்கிராவஸ்தை யெனப்படுகின்றது. சுகமுதலியவற்றின் ஞானகாலத்திலும் உதாசீனகாலத்திலும் இந்திரிய ஜந்நியஞான மில்லையாயினும், அதன் சம்ஸ்கார மிருக்கின்றது. இந்திரிய ஜந்நிய ஞானத்தின் சம்ஸ்காரம் சொப்பனுவஸ்தையிலும் சுழுத்தி அவஸ்தையிலும் இருக்கின்றது. ஆதலால், சொப்பனுவஸ்தை சுழுத்தி அவஸ் தைகளுக்கு வேருன காலம் சொல்லப்பட்டது. இவ்வாற்ருல் ஜாக்கிராவஸ்தை என்னும் வியவகாரம் இந்திரிய ஜந்நிய ஞா னத்தின் அதீனமாம். அவ் விந்திரிய ஜந்நிய ஞானம் அந்தக்கர ணத்தின் விருத்தி வடிவமாம். அந்தக்கரணத்தின் விருத்திக்கு மதபேதத்தால் இவை பிரயோஜனமாம்.

329. சில நூலாசிரியர் மதப்படி ஆவரணத்தின் அபிபவம் விருத்தியின் பிரயோஜனமா மெனல்

சிலரோ ஆவரணத்தின் அபிபவ (நாச) த்தை விருத்தி யின் பிரயோஜன மென்பர். ஆவரணுபிபவத்திலும் நாநாமத முண்டு. எங்ஙனம்; மின்மினியின் பிரகாசத்தால் மகாந்தகாரத் தினது ஏகதேசத்தின் நாச முண்டாகின்றதோ, அங்ஙனமே அஞ்ஞானத்தினது ஏகதேசத்தின் நாசம் ஆவரணுபிபவம் என் னும் சொல்விற்குப் பொருளாமென்பது சம்பிரதாயிக மதம்.

330. சமஷ்டி அஞ்ஞானம் ஜீவனது உபாதியாகும்பக்ஷத்தில் பிரஹ்ம அல்லது ஈசுவர அல்லது ஜீவசேதனங்களின் சம்பந்தத்தால் ஆவரணத்தினது அபிபவம் சம்பவியாமை

சமஷ்டி அஞ்ஞானம் ஜீவனது உபாதியாம் என்னும் பக்ஷத்தில் கடமுதலிய விஷயங்களோடு சேதனத்திற்கு எப் பொழும் சம்பந்த மிருக்கின்றது. ஆதலால், சேதன சம்பந்தத்

னலோ ஆவரணத்தின் அபிபவம் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், பிரஹ்மசேதனமோ ஆவரணத்தின் சாதகமாம்; விரோதியன்று. ஈசுவர சேதனத்தினுல் ஆவரணத்தின் அபிபவ முண்டாயின், "அது என்னுல் அறியப்பட்டது" என்னும் வியவகாரம் ஜீவர்களுக்கு உண்டாகலாகாது; ஈசுவரனுல் அறியப்பட்டது என்னும் வியவகாரம் உண்டாதல் வேண்டும். ஏனெனின், ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் வியாவகாரிக பேத முண்டு. ஆதலால், ஈசுவரனுல் அறியப்பட்ட வஸ்து ஜீவனுக்கறியப்படுவதாகாது. ஆதலால், ஜீவ சேதனத்தின் சம்பந்தத்தால் ஆவரணத்தின் அபிபவம் கூறின் இப் பக்ஷத்தில் ஜீவசேதனங்களுக்குக் கடமுதலியவற்ருேடு சதா சம்பந்த முளதாம். ஏனெனின், ஜீவசேதனத்தின் உபாதி மூலாஞ்ஞானமாம். அதனிடத்து ஆரோபிக்கப்பட்ட பிரதிபிம்பத்தன்மை விசிஷ்ட சேதனத்தை ஜீவ னென்பர். மூலாஞ்ஞானத்திற்குக் கடமுதலியவற்ருேடு எப்போதும் சம்பந்த மிருத்தலின், ஜீவசேதனத்திற்கு எப்போதும் சம்பந்த மிருக்கின்றது. ஆதலால், கடமுதலியவற்றினது ஆவரணத்தின் அபிபவம் எப்போதும் வேண்டும். இதனுல் விருத்தியினுல் ஆவரணத்தின் அபிபவத்தைக் கூறின், பரோக்ஷ விருத்தியினுலும் ஆவரணத்தின் அபிபவம் உண்டாதல்வேண்டும்.

331. இப் பக்ஷத்தில் அபரோக்ஷ விருத்தியினுல் அல்லது அபரோக்ஷ விருத்தி விசிஷ்ட சேதனத்தினுல் ஆவரணத்தினது அபிபவத்தின் சம்பவம்

ஆதலால், அபரோக்ஷ விருத்தியினுல் ஆவரணத்தின் அபிபவ முண்டாகின்றது. அல்லது அபரோக்ஷ விருத்தி விசிஷ்ட சேதனத்தினுல் ஆவரணத்தின் அபிபவ முண்டாகின்றது. எங்ஙனம், மின்மினியின் பிரகாசத்தினுல் பேரிருளின் ஏகதேசம் நாசமாகின்றதோ, மின்மினியின் அபாவகாலத்தில் மகாந்தகாரம் (பேரிருள்) மீண்டும் விரிகின்றதோ, அங்ஙனமே அபரோக்ஷ விருத்தி சம்பந்தத்தினுல் அல்லது அபரோக்ஷ விருத்தி விசிஷ்ட சேதனத்தின் சம்பந்தத்தினுல் மூலாஞ்ஞானத்தினது அம்சத்தின் நாச முண்டாகின்றது. விருத்தியின் அபாவதசையில் அஞ்ஞானம் விரிகின்றது. இது சம்பிரதாயத்தை அநுசரித்த மதமாம்.

332. முற்கூறிய பக்ஷத்தின்படி ஆவரண நாசமாகிய விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல்

அதனுல் அஞ்ஞானத்தினது அம்சத்தின் நாசம் அபரோக்ஷ விருத்தியின் பிரயோஜனமாம். அசத்துவாபாதக அஞ்ஞானும்சத்தின் நாசம் பரோக்ஷாபரோக்ஷ விருத்திகளின் பிரயோஜனமாம். இவ்வாறு ஆவரண நாசம் விருத்திக்குப் பிரயோஜனமா மென்னும் பக்ஷம் சொல்லப்பட்டது.

333. இரண்டாவது பக்ஷத்தின்படி ஜீவசேதனத்தோடு விஷயத்தின் சம்பந்தமாகிய விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல்

ஜீவசேதனத்தோடுவிஷயத்தின் சம்பந்தம் விருத்தியின் பிரயோஜனமாமென்னும் இரண்டாவது பக்ஷத்தினைக் கூறுகின்ருர்:—சமஷ்டி அஞ்ஞானத்தோடு பிரதிபிம்பம் ஜீவனென்னும் பக்ஷத்தில் ஜீவசேதனத்திற்குக் கடமுதலியவற்ருேடு எப்போதும் சம்பந்த மிருக்கின்றது. ஆனுல், ஜீவனது சாமானிய சம்பந்தத்தால் விஷயத்தின் பிரகாச முண்டாகிறதில்லை. ஆதலால், விஷயத்தின் பிரகாசத்திற் கேதுவான ஜீவனேடுள்ள விஜாதீய சம்பந்தம் விருத்தியின் பிரயோஜனமாம். ஜீவசேதனத்திற்கு விஷயத்தோடு சம்பந்தம் எப்போது மிருக்கின்றது. ஆனுல், அந்தச் சம்பந்தம் விஷயப் பிரகாசத்திற்கு ஏதுவன்று. விருத்தி விசிஷ்ட ஜீவனுக்கு விஷயத்தோடு சம்பந்த முண்டாயின் விஷயத்தின் பிரகாசம் உண்டாகின்றது. ஆதலால், பிரகாசத்திற் கேதுவான சம்பந்தம் விருத்தியின் அதீனமாம். அந்தப் பிரகாசத்திற் கேதுவான ஜீவனுக்கு விஷயத்தோடுள்ள சம்பந்தம் அபிவியஞ்சக அபிவியங்கிதத் தன்மையாம். விஷயத்தில் அபிவியஞ்சகத்தன்மையும் ஜீவசேதனத்தின் அபிவியங்கியத்தன்மையு மிருக்கின்றன. எதனிடத்தில் பிரதிபிம்ப முண்டாகின்றதோ அதனை அபிவியஞ்சகம் (வெளிப்படுத்துவது) என்பர். எதன் பிரதிபிம்ப முண்டாகின்றதோ அது அபிவியங்கியம் (வெளிப்படுத்தப்படுவது) எனப்படுகின்றது. எங்ஙனம் கண்ணுடியில் முகத்தின் பிரதிபிம்ப முண்டாகுமிடத்துக் கண்ணுடி அபிவியஞ்சகமும் முகம் அபிவியங்கியமு மாகின்றனவோ, அங்ஙனமே கடமுதலிய விஷயங்களில் சேதனத்தின் பிரதிபிம்ப முண்டாகின்ற தாகலின், கடமுதலியன அபிவியஞ்சகமும் சேத

னம் அபிவியங்கியமுமாம். இவ்வாற்றால் பிரதிபிம்பத்தைக் கிரகித்தலாகிய வியஞ்சகத்தன்மை கடமுதலிய விஷயங்களி லிருக்கின்றது. பிரதிபிம்பத்தைச் சமர்ப்பித்தலாகிய வியங்கி யத்தன்மை சேதனத்தி லிருக்கின்றது. கடமுதலியவற்றில் சுபாவமாகப்பிரதிபிம்பத்தைக் கிரகித்தலின் சாமர்த்தியமில்லை. ஆனால், தனது வடிவ விருத்திசம்பந்தத்தினால் சேதனப் பிரதி பிம்பத்தின் கிரகணம் தகுதியாகின்றது. எங்ஙனம்: கண்ணாடி சம்பந்த மின்றிச் சுவரில் சூரியனது பிரதிபிம்பம் உண்டாகாது, கண்ணாடி சம்பந்தத்தினால் உண்டாகின்றதாதலின் சூரியப் பிரதி பிம்பத்தைக் கொள்ளுதலின் யோக்கியதை குட்டியத்தில் (சுவ ரில்) கண்ணாடி சம்பந்தத்தால் உண்டாகின்றதோ, எங்ஙனம் திருஷ்டாந்தத்தில் சூரியப்பிரபைக்குக் குட்டியத்தோடு என் றைக்குஞ் சாமானிய சம்பந்தம் உளதாய், அபிவியஞ்சக அபி வியங்கியத் தன்மைச் சம்பந்தம் கண்ணாடி அதீனமா யிருக்கின்ற தோ, அங்ஙனமே ஜீவசேதனத்திற்கு விஷயத்தோடு எப்போ தும் சம்பந்த மிருக்கின்றது. ஆனால், விருத்தி சம்பந்தத்தால் கடமுலிதயவற்றில் ஜீவசேதனத்தின் பிரதிபிம்பத்தைக் கிரகித் தற்றகுதி யுண்டாகின்றது. ஆதலால், ஜீவசேதனத்திற்குச் கட முதலியவற்றோடுள்ள அபிவியஞ்சக அபிவியங்கியத்தன்மைச் சம்பந்தம் விருத்தியின் அதீனமாம். இவ்வாற்றால் ஜீவசேத னத்தோடு கடமுதலியவற்றின் விலக்ஷண சம்பந்தத்திற்கு ஏது விருத்தியாம். ஆதலால், விஷய சம்பந்தத்தின் பொருட்டு விருத்தி யிருக்கின்றது. அச் சம்பந்தத்தால் விஷயத்தின் பிர காச முண்டாகின்றது. ஜீவசேதனம் விபுவாம். இப் பக்ஷத்தில் விலக்ஷண சம்பந்தத்தை உண்டுபண்ணுவது விருத்தியாம்.

334. அந்தக்கரண விசிஷ்ட சேதனம் ஜீவனு மென்னும் பக்ஷத்தில் விஷய சம்பந்தத்தின் பொருட்டு விருத்தியின் அபேக்ஷை உண்டெனல்

அந்தக்கரண விசிஷ்ட சேதனம் ஜீவனுமென்னும் பக்ஷத்தி லோ விருத்தியின்றி ஜீவசேதனத்தோடு கடமுதலியவற் றிற்கு முற்றும் சம்பந்த மில்லை. இந்திரிய விஷயங்களின் சம் பந்தத்தால் அந்தக்கரணத்தின் விருத்தி கடமுதலிய தேசத்திற் செல்லுமாயின், அப்போது ஜீவசேதனத்திற்குக் கடமுதலிய வற்றோடு சம்பந்த முண்டாகின்றது, விருத்தியின் வெளிச்

செல்லுதலின்றி உள் ஜீவனுக்கு வெளிக்குட முதலியவற்றோடு சம்பந்த முண்டாகிறதில்லை. இவ்வாற்றால் அந்தக்கரணாவச்சின்ன பரிச்சின்னன் ஜீவனாவன். இப் பக்ஷத்தில் விருத்தி விஷய சம்பந்தத்தின்பொருட்டாம் என்னும் பொருள் வெளிப்படையே யாம்.

335. முற்கூறிய இரண்டு பக்ஷங்களின் விலக்ஷணத்தன்மை

இவ்வாற்றால் அஞ்ஞான உபாதி யுடையவன் ஜீவனென்னும் பக்ஷத்தில் ஜீவசேதனத்திற்கு விஷயத்தோடு சம்பந்தமோ என்று மிருக்கின்றது. அபிவியஞ்சக அபிவியங்கியத்தன்மைச் சம்பந்தம் எப்போது மிருப்பதில்லை. அதன்பொருட்டு விருத்தி யிருக்கின்றது. அந்தக்கரணாவச்சின்னம் ஜீவன் என்னும் பக்ஷத்தில் ஜீவனுக்கு விஷயத்தோடு முற்றும் சம்பந்த மில்லை. அதன்பொருட்டு விருத்தி யிருக்கின்றது. இவ்வாறு விருத்தியின் பல சம்பந்தத்தில் விலக்ஷணத்தன்மையை நூலாசிரியர்கள் கூறியிருக்கின்றனர்.

336. மதபேதத்தால் சம்பந்தத்தில் விலக்ஷணத் தன்மையைக் கூறுதல் அசங்கதமா மெனல்

ஆனால், மதபேதத்தால் சம்பந்தத்தில் விலக்ஷணத்தன்மையைக் கூறுதல் அசங்கதமாம். ஏனெனின், அந்தக்கரணம் ஜீவனது உபாதியா மென்னும் பக்ஷத்திலும் அஞ்ஞானமோ ஜீவத்தன்மைக்கு உபாதியாக அவசியம் விரும்பப்படுகின்றது. இல்லையாயின் பிராஞ்ஞவடிவ ஜீவனது அபாவ முண்டாகின்றது. ஆதலால், ஜீவத்தன்மையின் உபாதி சகல மதங்களிலும் அஞ்ஞானமாம். கர்த்திருத்தன்மை முதலிய அபிமானம் அந்தக்கரண விசிஷ்டத்தி லுண்டாகின்றது. ஆதலால், அந்தக்கரணாவச்சின்னத்தினை ஜீவ னென்பர். அஞ்ஞானத்தில் பிரதிபிம்பம் ஜீவனா மென்னும் பக்ஷத்திலும் அஞ்ஞான விசிஷ்டம் பிரமாதாவன்று; அந்தக்கரண விசிஷ்டமே பிரமாதாவாம். ஜீவசேதனத்திற்கோ விஷயத்தோடு எப்போதும் சம்பந்த மிருக்கின்றது. ஆனால், பிரமாத்திரு சேதனத்திற்கு விஷயத்தோடு சம்பந்த மில்லை. பிரமாத்திரு சேதனத்தின் சம்பந்தத்தினாலேயே விஷயத்தின் பிரகாச முண்டாகின்றது. ஜீவசேதனத்தின் சம்பந்தத்தினால்

விஷயத்தின் பிரகாச மூண்டாகிறதில்லை. எங்ஙனம், பிரஹ்ம சேதனமும் ஈசுவர சேதனமும் அஞ்ஞானத்திற்குச் சாதக மோ, அங்ஙனமே அவித்தையை உபாதியாகவுடைய ஜீவசேதன மூமாம். அதன் சம்பந்தத்தால் விஷயத்தில் ஞாதத்தன்மை முதலிய வியவகாரம் உண்டாகிறதில்லை. ஜீவசேதனத்திற்கு ஞாதத்தன்மை முதலியவற்றின் அபிமானமு மூண்டாகிற தில்லை. பிரமாதாவின் சம்பந்தத்தினாலேயே விஷயத்தில் ஞாதத்தன்மை முதலிய வியவகார மூண்டாகின்றது. வியவகாரத் தின் அபிமானமும் பிரமாதாவிற்கு உண்டாகின்றது. அந்தப் பிரமாதா விஷயத்திற்கு வேறானவிடத்தி லிருக்கின்றான். ஆத லால், பிரமாதாவிற்கு விஷயத்தோடு சம்பந்தம் எப்போது மிருப்பதில்லை. பிரமாதாவோடு விஷயத்திற்குள்ள சம்பந்தம் விருத்தியின் அதீனமாம். இவ்வாற்றால் ஜீவனது உபாதிக்கு வியாபக மங்கீகரிக்கின் அல்லது பரிச்சின்ன மங்கீகரிக்கின் இர ண்டு பக்ஷங்களிலும் பிரமாதாவோடு விஷயத்திற் குண்டாம் சம் பந்தம் விருத்தியின் அதீனமாதல் சமாதானமாம். அதனிடத்து விலக்ஷணத்தன்மையைக் கூறுதல் கேவலம் புத்தி சாமர்த் தியத்தைக் காட்டுதற் பொருட்டாம்; சாமர்த்திய மின்மைக் குச் சாதகமாம். பிரமாதாவுக்கு விஷயத்தோடு சம்பந்த மில்லை.

337. நான்கு சேதனங்களைக் கூறுதலோடு முற்கூறிய பொருளின் சித்தி

இதனாற்றான் பிரமாத்திருசேதனம், பிரமாணசேதனம், விஷயசேதனம், பலசேதனமென்னும் பேதத்தால் நான்கு வகைச் சேதனம் சொல்லப்பட்டிருக்கின்றது. பிரமாதாவிற்கு விஷயத்தோடு சம்பந்த முளதாயின், பிரமாத்திருசேதனத் தோடு விஷயசேதனத்திற்கு விபாகத்தைக் கூறுதல் அசங்கத மாகும். அந்தக்கரண விசிஷ்டசேதனம் பிரமாத்திருசேதனமாம். விருத்தி யவச்சின்னசேதனம் பிரமாணசேதனமாம். கடமுத லியவற்றின் அவச்சின்னசேதனம் விஷயசேதனமாம். விரு த்தி சம்பந்தத்தினால் கடமுதலியவற்றில் சேதனத்தின் பிரதி பிம்ப முண்டாயின், அதனைப் பலசேதன மென்பர். சிலர் இவ் வாறு கூறுவர்:—கடாவச்சின்ன சேதனமே அறியப்படாத தாயின், அப்போது விஷயசேதன மெனப்படுகின்றது. அறியப் பட்டதாயின், அப்போது கடாவச்சின்ன சேதனத்தினையே

பலசேதனமென்பர். அதனையே பிரமேயசேதனமென்பர். ஆனால், வித்தியாரணிய சுவாமியும் வார்த்திககாரரும் பிரமாண விருத்திக்குப் பிந்தியகாலத்தில் குடமுதலியவற்றி லுண்டாகும் சேதனத்தின் ஆபாசம் யாதோ, அதுவே பலசேதனமெனக் கூறியிருக்கின்றனர். இவ்வாற்றால் பிரமாத்திருசேதனம் பரிச்சின்னமாம். அதன் சம்பந்தத்தினாலேயே விஷயத்தின் பிரகாச முண்டாகின்றது. ஜீவசேதனத்தை விபுவெனக் கொள்ளினும் பிரமாதாவோடு விஷயத்தின் சம்பந்தம் விருத்தியினாலாகியதாம். ஆதலால், இரண்டு மதங்களிலும் விஷய சம்பந்தத்தில் விலக்ஷணத்தன்மை யில்லை.

338. ஜாக்கிரத்தில் உண்டாவதாகிய விருத்தியின் அநுவாதத்தோடு சொப்பனாவஸ்தையின் இலக்ஷணம்

முற்கூறிய பிரயோஜனமுடைய இந்திரிய ஜந்நிய அந்தக்கரணத்தின் விருத்தி ஜாக்கிராவஸ்தையி லுண்டாகின்றது. இந்திரியத்தினால் ஜந்நியமாகாத விஷயகோசர அந்தக்கரணத்தின் அபரோக்ஷவிருத்தி யாதோ, அதன் அவஸ்தையினைச் சொப்பனாவஸ்தை யென்பர். சொப்பனத்தில் ஞேயமும் ஞானமும் அந்தக்கரணத்தின் பரிணாமமாம்.

339. சுழுத்தியவஸ்தையின் இலக்ஷணம்

சுககோசரமும் அவித்தியாகோசரமுமான அஞ்ஞானத்தின் சாக்ஷாத்பரிணாம வடிவ விருத்தியின் அவஸ்தையினைச் சுழுத்தியவஸ்தை யென்பர். சுழுத்தியில் அவித்தையின் விருத்தி சுககோசரமும் அஞ்ஞானகோசரமு மாகின்றது. அவித்தியா கோசர விருத்தி ஜாக்கிரத்திலும் "நான் அறியேன்" என்பதாக உண்டாகின்றதெனினும் அவ் விருத்தி அந்தக்கரணத்தினதாம்; அவித்தையினதன்று. ஆதலால், சுழுத்தி இலக்ஷணத்திற்கு ஜாக்கிரத்தில் அதிவியாப்தி யில்லை. அங்ஙனமே பிராதிபாஸிக ரஜதவடிவவிருத்தி ஜாக்கிரத்தில் அவித்தையின் பரிணாமமாம். அது அவித்தியாகோசரமன்று. அங்ஙனமே சுக வடிவவிருத்தி ஜாக்கிரத்தி லிருக்கின்றது. அது அவித்தையின் பரிணாம மன்று. இவ்வாற்றால் சுககோசரமும் அவித்தியா கோசரமுமாகிய அவித்தியாவிருத்தியின் அவஸ்தையினைச் சுழுத்தியவஸ்தை யென்பர்.

340. சுழுத்திசம்பந்தமுள்ள பொருளினைக் கூறுதல்

சுழுத்தியில் அவித்தையின் விருத்தியில் ஆரூடசாக்ஷி அவித்தையினைப் பிரகாசிக்கின்றது. சொரூபசுகத்தையும் பிரகாசிக்கின்றது. சுழுத்தியவஸ்தையில் சுகவடிவ அவித்தைவடிவ பரிணமம் எந்த அஞ்ஞான அம்சத்தினதாய் உண்டாயிருக்கின்றதோ, அவ் வஞ்ஞானம்சத்தில் அந்தப் புருடனது அந்தக்கரணமும் ஒடுங்குகின்றது. ஜாக்கிரகாலத்தில் அந்த அஞ்ஞானம்சத்தின் பரிணமம் அந்தக்கரண மாகின்றது. ஆதலால், அஞ்ஞானத்தின் விருத்தியினால் அநுபவிக்கப்பட்ட சுகத்தின் ஸ்மிருதி ஜாக்கிரத்தில் உண்டாகின்றது. உபாதானத்திற்கும் காரியத்திற்கும் பேத மில்லாதிருத்தலின், அநுபவ ஸ்மரணங்கட்கு வியதிகரணத்தன்மை (வேற்றுநிலைக்களத் திருத்தற்றன்மை) யில்லை. இவ்வாறு மூன்றவஸ்தைக ளுண்டு. மரணத்தினையும் மூர்ச்சையினையும் சிலர் சுழுத்தியி லடக்கிக் கூறுவர்; சிலர் வேறாகக் கூறுவர்.

341. முற்கூறிய அவஸ்தையின் பேதம் விருத்தியின் அதீனமாமெனல்

இவ் வவஸ்தையின் பேதம் விருத்தியின் அதீனமாம். ஜாக்கிர சொப்பனங்களிலோ அந்தக்கரணத்தின் விருத்தி யிருக்கின்றது; ஜாக்கிரத்தில் இந்திரிய ஜந்நியமாம்; சொப்பனத்தில் இந்திரிய அஜந்நியமாம்; சுழுத்தியில் அஞ்ஞானத்தின் விருத்தியாம்.

342. விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல்

அவஸ்தையின் அபிமானமே பந்தமாம். அபிமானமென்றும் பிரமஞானத்தினைக் கூறுவர். அதுவும் விருத்தி விசேஷமாம். ஆதலால், விருத்தியினாலாகிய பந்தமே சம்சாரமாம். வேதாந்த வாக்கியத்தினால் "நான் பிரஹ்மம்" என்னும் அந்தக்கரண விருத்தி உண்டாகின்றது. அதனால் பிரபஞ்சத்தோடு அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அதுவே மோக்ஷமாம். ஆதலால், விருத்திக்குச் சம்சாரதசையிலோ வியவகாரசித்தி பிரயோஜனமாம்; பரமப்பிரயோஜனம் மோக்ஷமாம்.

343—352. கற்பிதத்தின் நிவிருத்தியில் விசாரம்.

343. கற்பிதத்தினது நிவிருத்தியின் அதிஷ்டான வடிவத்தன்மை பூர்வகமாக மோக்ஷத்தில் துவைதாபத்தி (துவைதம் நேர்தல்) தோஷத்தைக் கூறுதலின் அயுக்தத்தன்மை

கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டானவடிவமாகின்றது. ஆதலால், சம்சாரவிருத்தி மோக்ஷமாமென்று கூறுதலால் பிரஹ்மவடிவம் மோக்ஷமாமென்பது சித்திக்கின்றது. இதனால் கற்பிதத்தின் துவம்சமெனக்கொண்டு மோக்ஷத்தில் துவைதாபத்தி தோஷத்தினைக் கூறுதல் அஞ்ஞானத்தாற் பிரயோகிக்கப் பட்டதாம்.

344. நியாயமகரந்தகாரர் கூறிய அதிஷ்டானவடிவ கற்பிதத்தின் நிவிருத்திபக்ஷத்தில் தூஷணம்

நியாயமகரந்தகாரர் கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டான வடிவமென்று கொள்ளவில்லை. துவைதாபத்திக்கும் சமாதானத்தைக் கூறியிருக்கின்றார். ஆனால், அவர் எழுத்து அநுபவாநுசாரமன்று. ஏனெனில், இது அவருடைய எழுத்தாம்:— கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டானத்தினும் வேறாம். அதிஷ்டான வடிவமெனக் கூறின், அதிஷ்டானமும் கற்பித நிவிருத்தியும் ஒரே பதார்த்தமாம்; இரண்டு பதார்த்த மன்றென்பது சித்திக்கின்றது.

ஆண்டு இது கேட்பாம்:—அதிஷ்டானத்தில் அடக்கமாகக் கொண்டு கற்பித நிவிருத்தியின் லோபம் விரும்பப்படுகின்றதா? அல்லது கற்பித நிவிருத்தியில் அடக்கமெனக்கொண்டு வேறாகிய அதிஷ்டானத்தின் லோபம் விரும்பப்படுகின்றதா? வேறு வகையோ சம்பவியாது. ஒன்றில் மற்றொன்றின் அடக்கமே சொல்லுதலாகும். முதற்பக்ஷத்தைக் கூறுவோமாயின் சம்பவியாது. ஏனெனின், சம்சாரத்தின் அதிஷ்டானம் பிரஹ்மமாம். சம்சாரத்தின் நிவிருத்தி பிரஹ்மத்தின் வேறன்றாமெனின், சம்சார நிவிருத்தியின் சாதனத்தில் பிரவிருத்தி உண்டாகலாகாது. ஏனெனின், சம்சார நிவிருத்தி பிரஹ்மத்தின் வேறாகவேயில்லை. பிரஹ்மம் சித்தமாம், வியாபார சாத்தியத்தின்பொருட்டுப் பிரவிருத்தி உண்டாகின்றது. சுபாவசித்தப் பிரஹ்மத்தின்

பொருட்டு ஞானசாதனமான சிரவணமுதலியவற்றில் பிரவிருத்தி சம்பவியாது. ஆதலால், சம்சார நிவிருத்திக்கு நித்திய சித்தப் பிரஹ்மத்தில் அடக்கம் சம்பவியாது. அன்றியும், நிவிருத்தியில் பிரஹ்மத்தின் அடக்கத்தைக் கூறுவோமாயின், சம்சாரப் பிரமத்தின் அசம்பவ மிருத்தலின், அதன் நிவிருத்தியை உண்டுபண்ணும் ஞானத்தின் சாதனமாகிய சிரவண முதலியவற்றில் பிரவிருத்தி உண்டாகலாகாது. ஏனெனில், சம்சாரத்தின் நிவிருத்தியோ ஞானத்திற்குப் பிந்தியகாலத்தில் உண்டாகின்றது. ஞானத்திற்குமுன் கற்பிதத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை யென்பது அநுபவசித்தமாம். சம்சார நிவிருத்திக்கு வேருகப் பிரஹ்மமில்லை யாகலின் ஞானத்திற்குமுன் பிரஹ்மவடிவ அதிஷ்டான மின்மையால் சம்சாரப் பிரமம் சம்பவியாது. ஆதலால், அநுபவசித்த 'சம்சாரத்தின் அபாவமோ சொல்லப்படுகிறதில்லை; சத்தியமென்று சொல்லவேண்டியதாகும். அதற்கு ஞானத்தினுல் நிவிருத்தி சம்பவியாது. ஆதலால், சம்சார நிவிருத்தியில் பிரஹ்மத்தின் அடக்கம் சம்பவியாது. சம்சாரநிவிருத்தி ஞானத்திற்குமுந்தியகாலத்தி லில்லை; ஞானத்திற்குப் பிந்தியகாலத்தி லிருத்தலின் ஸாதியாம் (ஆதியுடையதாம்.) பிரஹ்மம் அநாதியாம். ஸாதிபதார்த்தத்தில் அநாதிபதார்த்தத்தின் அடக்கம் கூறுதல் அயுக்தமாம். இவ்வாற்ருல் இரண்டற்கும் ஒன்றற்கொன்று அடக்கம் சம்பவியாது. ஆதலால், கற்பித நிவிருத்தி அதிஷ்டான வடிவமாமென்னும் பக்ஷம் சம்பவியாது. ஒன்றற்கொன்று அடக்கம் எதற்கும் கூறவில்லை என்று கூறுவராயினும், "கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டானத்தினும் வேறன்று; அதிஷ்டானத்தின் அவஸ்தாவிசேஷம் கற்பித நிவிருத்தியாம். அறியப்படாததும் அறியப்பட்டதுமாகிய இரண்டவஸ்தைகள் அதிஷ்டானத்திற் குண்டாகின்றன.

ஞானத்திற்குமுன் அஞ்ஞாத அவஸ்தை யிருக்கின்றது. ஞானத்திற்குப் பிந்தியகாலத்தில் ஞாத (அறியப்பட்ட) அவஸ்தை யிருக்கின்றது. அறியப்பட்ட அதிஷ்டான வடிவம் கற்பிதத்தின்' நிவிருத்தியாம். அறியப்பட்ட அதிஷ்டானம் ஸாதியாம். ஆதலால், ஞானசாதனமாகிய சிரவணமுதலியன நிஷ்பலமன்று. சம்சார நிவிருத்தி பிரஹ்மத்தினும் வேறன்று. இவ்வாற்ருல் அறியப்பட்ட அதிஷ்டான வடிவமே கற்பிதத்

தின் நிவிருத்தியாம்'' என்று கூறுதலும் சம்பவியாது. ஏனெனின், ஞானத்தின் விஷயத்தை ஞாதமென்பர். அஞ்ஞானத்தின் விஷயத்தை அஞ்ஞாதமென்பர். அஞ்ஞானத்தினுலாகிய ஆவரணமே அஞ்ஞானத்தின் விஷயத்தன்மை யெனப்படுகின்றது. எப்போது ஞானத்தினல் அஞ்ஞானத்தின் அபாவமுண்டாகிறதோ, அப்போது அஞ்ஞாத வியவகாரமுண்டாகிறதில்லை. அங்ஙனமே விதேககதசையில் தேகமுதலியன இல்லாமையால் ஞானத்தின் அபாவ மிருத்தலின், ஞாதத்தன்மையின் அபாவ முண்டாகின்றது. ஆதலால், விதேககதசையில் அஞ்ஞாத அவஸ்தையினைப்போல ஞாத அவஸ்தையு மில்லாதிருத்தலின், ஞாத அதிஷ்டானமாகிய கற்பித நிவிருத்தியின் அபாவம் மோக்ஷத்தில் உண்டாகுதல் வேண்டும். மோக்ஷத்தில் அபாவத்தை அங்கீகரிக்கின், கற்பித நிவிருத்திக்கு அநந்தத்தன்மை யின்மையால் ஔஷத ஜந்நியரோக நிவிருத்தியினைப்போலப் பரம புருஷார்த்தத்தன்மையின் அபாவ முண்டாகும்.

345. நியாய மகரந்தகாரர் முறைப்படி அதிஷ்டானத்திற்கு வேருகிய கற்பிதத்தினது நிவிருத்தியின் நிருபணம்

ஆதலால், கற்பிதநிவிருத்தி அதிஷ்டானவடிவ மன்று; அதனினும் வேறும். அதிஷ்டானத்திற்குப் பின்னமாயினும் கற்பிதத்தின் நிவிருத்தி துவைதத்தைச் சம்பாதிப்பதன்று. ஏனெனின், அதிஷ்டானத்திற்கு வேருகச் சத்திய முளதாயின் துவைத முண்டாம். சத்தியத்தின் விலக்ஷண பதார்த்தம் துவைதத்திற்கு ஏதுவாமாயின், சித்தாந்தத்தில் எப்போதும் அத்வைத முளதென்னும் அர்த்தத்திற்குப் பாத முண்டாகும். ஆதலால், சத்தியபதார்த்தத்தின் பேதமே துவைதத்தின் சாதகமாம். கற்பித நிவிருத்தி அதிஷ்டானத்தினும் வேறும்; சத்தியமன்று. ஆதலால், துவைதம் சித்திக்கிறதில்லை.

346. நியாய மகரந்தகாரர் கிரமப்படி கற்பித நிவிருத்தியினது சொரூப நிச்சயத்தின் பொருட்டு அநேக விகற்பங்களை எழுதுதல்

கற்பித நிவிருத்தியின் சொரூப நிச்சயத்தின் பொருட்டு இவ்வாறு விகற்பம் எழுதப்படுகின்றது:— அதிஷ்டானத்திற்கு

வேருகிய கற்பிதத்தின் நிவிருத்தி சத்து வடிவமா? அல்லது அசத்து வடிவமா? அல்லது சத்தசத்து வடிவமா? அல்லது சத்தசத்து விலக்ஷணமா? சத்துவடிவமெனக் கூறின், வியாவ காரிக சத்தா? அல்லது பாரமார்த்திக சத்தா? வியாவகாரிக சத் தெனின், பிரஹ்மஞானத்திற்குப்பின் வியாவகாரிக சத்தின் சம்பவம் இல்லாதிருத்தலின், பிரஹ்மஞானத்திற்குப்பின் சம் சார நிவிருத்தியின் அபாவம் வேண்டும். ஏனெனின், பிரஹ்ம ஞானத்திற்கு முன் எதற்குப் பாத முண்டாகிறதில்லையோ, பிரஹ்மஞானத்திற்குப் பின் எதற்குச் சத்தாஸ்பூர்த்தி உண்டா கிறதில்லையோ, அது வியாவகாரிக சத்தெனப்படுகின்றது. ஆத லால், கற்பித நிவிருத்தியை வியாவகாரிக சத்தெனக் கொள் ளின், ஞானத்திற்குப்பின் அது சம்பவியாது. ஆதலால், அதி ஷ்டானத்திற்கு வேருகக் கற்பித நிவிருத்தியைப் பாரமார்த்திக சத்து வடிவமாகக் கூறின் துவைத முண்டாகும். இவ்வாற்ருல் அதிஷ்டானத்திற்கு வேருகிய கற்பிதநிவிருத்தி சத்துவடிவ மன்று. அதிஷ்டானத்திற்கு வேருன கற்பித நிவிருத்தியை அசத்தெனக் கூறின், அசத்தென்னும் சொல்லிற்குப் பொருள் அநிர்வசநீயமா? அல்லது துச்சமா? அநிர்வசநீயமெனின், அதற்குத் தோஷத்தை மேல் நான்காவது விகற்பத்தின் கண்ட நத்திற் கூறுவாம். துச்சமெனின், சம்சார நிவிருத்திக்குப் புரு ஷார்த்தத்தன்மை உண்டாகாது. ஆதலால், இரண்டாவது விகற்பம் சம்பவியாது. அதிஷ்டானத்திற்கு வேருகியதைச் சத்தசத்து வடிவமெனக் கூறின், ஒரு பதார்த்தத்திற்குச் சத்துவடிவத்தன்மையும் அசத்துவடிவத்தன்மையும் விரோதி யா யிருத்தலின் சம்பவியா. சத்தசத்து வடிவமாகக் கொள் ளின், முற்கூறிய சத்தென்னும் பக்ஷத்தின் தோஷமும் அசத் தென்னும் பக்ஷத்தின் தோஷமு முண்டாகும். ஏனெனின், கற்பித நிவிருத்தியில் சத்தம்ச மிருக்கின்ற தாகலின் துவைத முண்டாகும். அசத்தம்சத்தினல் புருஷார்த்தத்தன்மை யின் மை யுண்டாகும். சத்தசத்தென்னும் சொல்விற்குச் சத்தென் பது வியாவகாரிக சத்தையின் ஆசிரயமாம், அசத்தென்பது பாரமார்த்திக சத்தினும் வேரும் என்று இவ்வாறு பொருள் செய்யின், அதனல் சத்தசத்துகளுக்கு விரோத மில்லை. ஏனெனின், கடமுதலியன வியாவகாரிக சத்தையின் ஆசிரய

மாய்ப் பாரமார்த்திக சத்துக்கு வேறுமென்பது பிரசித்தமாக வின் முற்கூறிய விரோத மில்லை. பாரமார்த்திக சத்தையை நிஷேதஞ் செய்தலால் துவைதமன்று; வியாவகாரிக சத்தை யாம்; துச்சமன்று. ஆதலால், புருஷார்த்த மின்மையுமில்லை.

இவ்வாற்றுல் அதிஷ்டானத்தினும் வேறுகிய கற்பிதநிவி ருத்தி பாரமார்த்திக சத்தாசூநிய வியாவகாரிக சத்தையை யுடையதாமென்னும் அபிப்பிராயத்தால் சத்தசத்து வடிவமெ னின் முதல் விகற்பத்தில் வியாவகாரிக சத்தெனக் கொள்ளின், ஞானத்திற்குப்பின் வியாவகாரிக பதார்த்தத்தின் அசம்பவ முண்டாகின்ற தென்னும் எந்தத்தோஷம் சொல்லப்பட்டதோ, அந்தத் தோஷத்தினுல் இவ் வர்த்தமும் சம்பவியாது. ஆதலால், மூன்றுவது விகற்பமும் சம்பவியாது. அதிஷ்டானத்திற்கு வேறுன கற்பித நிவிருத்தி சத்தசத்துக்கு விலக்ஷணமா மென் னும் நான்காவது பக்ஷத்தைக் கூறின், சத்து விலக்ஷணமெ ன்று கூறுதலால் துவைத மில்லை, அசத்து விலக்ஷணமென்று கூறுதலால் புருஷார்த்தத் தன்மையின்மையு மில்லை, அங்ஙன மாயினும் சம்பவியாது. ஏனெனின், சத்தசத்து விலக்ஷணம் அநிர்வசநீய மாகின்றது. ஆதலால், கற்பிதத்தின் நிவிருத்தி அநிர்வசநீயமா மென்பது சித்தமாகும். மாயை அல்லது அதன் காரியம் அநிர்வசநீயமாம். ஆதலால், அஞ்ஞானத் தோடு கூடிய சம்சாரத்தின் நிவிருத்தியும் அநிர்வசநீயமாயின், மாயாவடிவம் அல்லது மாயையின் காரிய வடிவம் அஞ்ஞானத் தோடு கூடிய பிரபஞ்சத்தின் நிவிருத்தி என்று அங்கீகரிக்க வேண்டியதாகும். மாயாவடிவம் அல்லது மாயையின் காரிய வடிவம் முற்கூறிய நிவிருத்தியென்று கூறின், கடவடிவம் கடத்தின் நிவிருத்தியாம் என்று கூறுதலைப்போல முற்கூறி யது சிரிப்பிற் கிடமாகும். பிரஹ்மஞானத்தினுல் அஞ்ஞானத் தோடு பிரபஞ்சத்தின் நிவிருத்தி உண்டாயின், அதற்குப்பின் புருஷார்த்தத்திற்குச் சாதனமான சாமக்கிரி ஒன்று மிராதென் பது சித்தாந்தம்.

பிரஹ்மஞானத்தின் பயனுகிய கற்பிதத்தின் நிவிருத்தி மாயா வடிவம் அல்லது மாயையின் காரிய வடிவமாம். அதனை நிவிர்த்திப்பது ஒன்று மிராது. ஆதலால், மோக்ஷதசையிலும் மாயையின் அல்லது அதன் காரியத்தின் நித்திய சம்பந்த

மிருத்தலின் நிர்விசேஷப் பிரஹ்மத்தின் பிராப்தி வடிவமோக்ஷத்தின் அபாவ முண்டாகும். இதனால் நான்காவது பக்ஷமும் சம்பவியாது. இவ்வாற்றால், அஞ்ஞான தற்காரியங்களின் நிவிருத்தி பிரஹ்மத்தினும் வேறும். சத்து வடிவ மன்றாகலின் துவைதமன்று. அசத்தன்றாகலின் புருஷார்த்தத்தன்மையின்மை யில்லை. சத்தசத்து வடிவமன்றாகலின் இருபக்ஷத்தின் தோஷமு மில்லை. அநிர்வசநீயமன்றாகலின் மோக்ஷதசையில் அஞ்ஞான தற்காரியங்களின் சேஷ மில்லை. ஆதலால், முற்கூறிய நான்குவகைக் கிரமத்தினும் வேறாகிய அஞ்ஞான தற்காரியங்களின் நிவிருத்தி பிரஹ்மத்திற்கு வேறா யிருக்கின்றது.

347. நியாயமகரந்தகாரர் கிரமப்படி முற்கூறிய நான்கு விதத்தினும் விலக்ஷணமானதும் பிரஹ்மத்திற்கு வேறானதுமான ஐந்தாவது வகையாகிய கற்பித நிவிருத்தியின் சொரூபம்

ஐந்தாவது விதமென அதனைக் கூறுவர்:—எங்ஙனம் சத்தசத்து விலக்ஷண பதார்த்தத்திற்கு அத்வைத மதத்தில் அநிர்வசநீய பரிபாஷை யிருக்கின்றதோ, அங்ஙனமே ௧. சத்துவடிவம், ௨. அசத்துவடிவம், ௩. சத்தசத்துவடிவம், ௪. சத்தசத்து விலக்ஷண அநிர்வசநீயம் என்னும் நான்கு வகையினும் விலக்ஷணமான வகையினை யுடையதாம் அஞ்ஞான தற்காரியங்களின் நிவிருத்தி. நான்குவித வகையினும் விலக்ஷணமான வகைக்கு ஐந்தாவது வகையென்று பெயர். ஆதலால், அஞ்ஞான தற்காரியங்களின் நிவிருத்தி பிரஹ்மத்திற்கு வேறும். அந் நிவிருத்தியில் ஐந்தாவது வகை யுண்டு. இது நியாயமகரந்தத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

348. நியாயமகரந்தகாரர் மதத்தின் நலமின்மை

அது நலமுடையதன்று. ஏனெனின், வியாவகாரிகசத் பதார்த்தமோ உலகத்திற் பிரசித்தமாம். அநிர்வசநீய பதார்த்தமும் இந்திரஜாலத்தினாலாகிய உலகத்திற் பிரசித்தமாம். அங்ஙனமே பாரமார்த்திக சத்பதார்த்தம் பிரஹ்மமென்பது சாஸ்திரத்திற் பிரசித்தம். வித்வான்களுக்கு அநுபவசித்த

மானது பிரஹ்மாத்மாவாம். இவ்வெல்லாவற்றினும் விலக்ஷண மான ஓர் வஸ்து உலகத்திலேனும் சாஸ்திரத்திலேனும் பிர சித்தமன்று. அத்தியந்த அப்பிரசித்தமாகிய அஞ்ஞானத்தோடு சம்சாரத்தின் நிவிருத்தியை அங்கீகரிக்கின் புருஷார்த்தத்தன் மையின் அபாவமுண்டாகும். ஏனெனின், புருஷனது அபிலா ஷைக்கு விஷயம் புருஷார்த்தமெனப்படுகின்றது. அத்தியந்த அப்பிரசித்தத்தில் புருஷனது அபிலாஷை உண்டாகாது. ஆனால், பிரசித்தத்தில் அபிலாஷை உண்டாகும். ஆதலால், பிர சித்த பதார்த்தங்களுக்கு விலக்ஷணமான கற்பித நிவிருத்தி யானது இல்லை. கற்பித நிவிருத்தியை அதிஷ்டான வடிவமெனக் கொள்ளினும், சம்சாரத்தின் அதிஷ்டானம் பிரஹ்மமென்பது பிரசித்தமன்று. அங்ஙனமாயினும், முன் அநுபவிக்கப்பட்ட தில் அபிலாஷை உண்டாகின்றதென்னும் நியமமில்லை. ஆனால், அநுபவிக்கப்பட்டதின் ஸஜாதீயத்தில் அபிலாஷை உண்டா கின்றது. எங்ஙனம் பயவடிவ அநர்த்தத்திற்கு ஏதுவாகிய சர்ப்பத்தின் நிவிருத்தி அதிஷ்டான இரஜ்ஜுவடிவமோ, அங் ஙனமே ஜனனமரணாதி வடிவ அநர்த்தத்திற்கு ஏதுவாகிய சர்ப்பத்தின் நிவிருத்தி அதிஷ்டானப் பிரஹ்ம வடிவமாம். இவ்வாற்றால் அதிஷ்டானத்தன்மைத் தர்மத்தினால் பிரஹ்ம வடிவ சம்சாரத்தின் நிவிருத்தி அநுபவிக்கப்பட்டதின் சஜா தீயமாயிருத்தலின் புருஷனது அபிலாஷை சம்பவிக்கின்றது. ஐந்தாவதுவகை வாதியின் மதத்தில் அநுபவிக்கப்பட்டதின் சஜாதீயமில்லாமையால் பிரவிருத்தி சம்பவியாது. அதிஷ் டானத்திற்கு வேறெனக் கொள்ளின் பாஷியகாரரது வசனத் திற்கு விரோதமாகும். பாஷியகாரர் கற்பித நிவிருத்தியை அதிஷ்டான வடிவமாகவே கூறியிருக்கின்றனர்.

349. நியாயமகரந்தகாரர் ஞாத அதிஷ்டான வடிவ கற்பிதத்தின் நிவிருத்திபக்ஷத்தில் கூறிய தோஷத்தின் பரிகாரமும், பிரசங்கத்தால் விசேஷண உபாதி உபலக்ஷணங்களின் லக்ஷணமும்

ஞாத அதிஷ்டான வடிவ கற்பிதத்தின் நிவிருத்தியை அங்கீகரித்தலில், மோக்ஷதசையில் ஞாதத்தன்மை யின்மை யால் கற்பித நிவிருத்தியின் அபாவமிருத்தலின், கற்பிதத்தின்

உஜ்ஜீவன முண்டாகும் என்று தோஷம் சொல்லப்பட்டது. அதற்குச் சமாதானம் இதுவாம்:—ஞாதத்தன்மை விசிஷ்டமும் ஞாதத்தன்மை உபகிதமுமாகிய பிரஹ்மமோ மோக்ஷகாலத்தி லில்லை. ஏனெனின், ஞாதத்தன்மை விசேஷண முடையதனை ஞாதத்தன்மை விசிஷ்ட மென்பர். ஞாதத்தன்மை உபாதியுடைய தனை ஞாதத்தன்மை உபகிதமென்பர். காரியத்திற் சம்பந்தியாய் வர்த்தமான (இருக்கும்) வியாவர்த்தகம் யாதோ அது விசே ஷண மெனப்படுகின்றது. எங்ஙனம்:—நீலவடிவமுடைய கடம் உற்பத்தியாகின்றது என்னுமிடத்தில் நீல வடிவம் விசேஷண மாம். ஏனெனின், உற்பத்திவடிவ காரியத்தோடு சம்பந்தமுடை யதா யிருக்கின்றது. கடத்தி லிருப்பதாய்ப் பீதகடத்தினின் றும் வியாவர்த்தகமாய் (வேறு பிரித்தறிவிப்பதாய்) இருக்கின் றது. காரியத்தில் சம்பந்த மின்றியதான வர்த்தமான வியா வர்த்தகம் உபாதி யெனப்படுகின்றது. எங்ஙனம்: பேரி யுபகித ஆகாசத்தில் சப்த மிருக்கின்றது. இந்த ஸ்தானத்தில் பேரி உபாதியாம். ஏனெனின், சப்தத்தின் அதிகரணத்தன்மையில் பேரியின் சம்பந்த மில்லை. வர்த்தமான பேரி புறவாகாயத்தினும் வியாவர்த்தகமா யிருக்கின்றது. காரியத்தில் சம்பந்த மின்றிய தாய் வியாவர்த்தகமாவது யாதோ அது உபலக்ஷண மெனப் படுகின்றது. உபலக்ஷணத்தில் வர்த்தமானத் தன்மையின் அபேக்ஷை யில்லை. அதீதமும் (சென்றதும்) உபலக்ஷண மாகும். உபாதியோ விசேஷியத்தின் எல்லாவிடத்து மிருக்கும்; உப லக்ஷணம் ஏகதேசத்திருக்கும். எங்ஙனம்: "காகமுடைய வீட் டிற்குப் போ" என்று கூற, எந்த வீட்டில் காகத்தின் சையோ கத்தைக் கண்டானே, அந்த வீட்டினின்றும் காகம் போய்விடு மாயினும், இவன் போகின்றான். ஈண்டு வீட்டிற்குக் காகம் உப லக்ஷணமாம். ஏனெனின், அது போதலாகிய காரியத்தில் சம் பந்தமில்லாததா யிருக்கின்றது; கிருகத்தின் ஏகதேசத்தி லிருக் கின்றது. அங்ஙனமே வர்த்தமானமும் அதீதமுமாகிய காகம் மற்ற வீடுகளினின்றும் வியாவர்த்தகமாம். இவ்வாற்றால் விசே ஷணமும் உபாதியுமோ வர்த்தமான மாகின்றது; ஆதலால், விசேஷியத்தின் சகல தேசத்திலும் சர்வ காலத்திலும் இருக் கும். விசேஷியத்தின் எந்தத் தேசத்தில் எந்தக் காலத்தில் இருப்பதில்லையோ, அந்தத் தேசத்திலும் அந்தக் காலத்திலும்

விசிஷ்டவியவகார முண்டாகிறதில்லை; உபகித வியவகாரமும் உண்டாகிறதில்லை.

ஆனால், எவ்வளவு காலத்தில் எவ்வளவு தேசத்தில் வியாவர்த்தக மாகின்றதோ, அவ்வளவு தேசத்திலும் காலத்திலும் விசிஷ்ட வியவகாரமும் உபகித வியவகாரமு முண்டாகின்றன. அந்த மோக்ஷதசையில் ஞாதத்தன்மையின் சம்பந்தமில்லை. ஆனால், முன் ஞாதத்தன்மை உண்டாயிருக்கின்றது. ஆதலால், ஞாதத்தன்மை விசிஷ்டமும் ஞாதத்தன்மை யுபகிதமுமோ அதிஷ்டானமன்று. வியாவர்த்தக மாத்திரத்தினை உபலக்ஷண மென்பர். வர்த்தமானத்தில் ஆக்கிரக மில்லை. ஆதலால், விசேஷியத்தின் ஏகதேசத்தில் சம்பந்த முண்டாகியும், ஏக காலத்தில் சம்பந்த முண்டாகியும் வியாவர்த்தகமாவதனை உபலக்ஷண மென்பர். பிற பதார்த்தத்திலும் பேத ஞானத்தினை (வேறு பிரித்தறிதலை) வியாவிருத்தியென்பர். விசேஷணம், உபாதி, உபலக்ஷணம் என்னும் மூன்றும் பிறவற்றினின்றும் வியாவிருத்தி செய்கின்றன. அவற்றுள் விசேஷணமோ எவ்வளவு தேசகாலங்களில்தான் இருக்கின்றதோ, அவ்வளவு தேசகாலத்துள்ள தனது விசிஷ்ட விசேஷியத்தின் வியாவிருத்தியைச் செய்கின்றது. எதன் வியாவிருத்தி விசேஷணத்தினா லுண்டாகின்றதோ, அது விசிஷ்ட மெனப்படுகின்றது. எந்தத் தேசகாலத்தில் வியாவர்த்தக முண்டாகின்றதோ, அந்தத் தேசகாலத்துள்ள வியாவர்த்தமாகத்தக்கதனை வியாவிருத்தி செய்து, தான் வெளியிலேயே யிருப்பது எதுவோ அது உபாதி யெனப்படுகின்றது. எதன் வியாவிருத்தி உபாதியினா லுண்டாகின்றதோ அது உபகித மெனப்படுகின்றது. எது வியாவர்த்தக மாகத்தக்கதின் ஏகதேசத்தில் ஒரு காலத்திருந்து வியாவிருத்தி செய்வதாய், உபாதியினைப்போலத் தான் புறம்பாகவே யிருக்கின்றதோ அது உபலக்ஷண மெனப்படுகின்றது. எதன் வியாவிருத்தி உபலக்ஷணத்தினா லுண்டாகின்றதோ அது உபலக்ஷித மெனப்படுகின்றது. இதனால் இது நிச்சயமாயிற்று:—வியாவர்த்தகம் வியாவர்த்தகமாகத்தக்க தென்னு மிரண்டிலும் விசிஷ்ட வியவகார முண்டாகின்றது. எவ்வளவு தேசத்தில் வியாவர்த்தக முண்டாகின்றதோ, அவ்வளவு தேசத்திலுள்ள வியாவர்த்தக

மாகத்தக்கது மாத்திரத்தில் உபகித வியவகார முண்டாகின்றது. ஆனால், வியாவர்த்தகத்தின் இருப்புக்காலத்தில் வியாவர்த்தகத்தினை விட்டு உபகித வியவகார முண்டாகின்றது. வியாவர்த்தகமாகத் தக்கதின் ஏகதேசத்தில் ஒருகாலத்து வியாவர்த்தக மிருக்கின், ஆண்டு வியாவர்த்தகம் செய்யப்படுவது மாத்திரத்தில் உபலக்ஷித வியவகாரம் உண்டாகின்றது. ஈண்டு வியாவர்த்தகத்தினது இருப்பின் அபேக்ஷை யில்லை. இவ்வாற்றால் விசேஷண முதலியவற்றின் பேதத்தால் அந்தக்கரணவிசிஷ்டம் பிரமாதாவாம். அந்தக்கரண உபகிதம் ஜீவசாக்ஷியாம். அந்தக்கரண உபலக்ஷிதம் ஈசுவரசாக்ஷியாம். ஈண்டு இது பிரசங்கமாம்:—மோக்ஷதசையில் ஞாதத்தன்மை யின்மையால் ஞாதத்தன்மை விசிஷ்டமும் ஞாதத்தன்மை உபகிதமுமோ அதிஷ்டானமாதல் சம்பவியாது. அங்ஙனமாயினும் ஞாதத்தன்மை உபலக்ஷிதம் அதிஷ்டானமாதல் மோக்ஷதசையினுமாம்.

350. அதிஷ்டான வடிவ நிவிருத்தியின் பக்ஷத்தில் ஐந்தாவது வகை வாதியின் சங்கை

ஐந்தாவதுவகை வாதி இச்சங்கை செய்கின்றார்:—எதனிடத்து ஒருகால் ஞாதத்துவ முண்டாகின்றதோ, அதனிடத்து ஞாதத்தன்மையின் அபாவகாலத்திலும் ஞாதத்தன்மை உபலக்ஷிதத்தை அங்கீகரிக்கின், ஞாதத்தன்மைக்கு முந்திய காலத்திலும் இனி வரும் ஞாதத்தன்மையினை அங்கீகரித்து, ஞாதத்தன்மை உபலக்ஷிதத்தைக் கூறுதல்வேண்டும். முற்காலத்தில் ஞாதத்தன்மை உபலக்ஷிதத்தை அங்கீகரிக்கின், சம்சாரகாலத்திலும் ஞாதத்தன்மை உபலக்ஷித அதிஷ்டான வடிவ சம்சார நிவிருத்தி யிருத்தலால் அநாயாசமாகப் புருஷார்த்தப் பிராப்தி யுண்டாகும். ஆதலால், ஞாதத்தன்மையின் அபாவகாலத்திலும் ஞாதத்தன்மை உபலக்ஷித அதிஷ்டான வடிவ கற்பித நிவிருத்தியைக் கூறுதல் தகுதியன்று.

351. முற்கூறிய சங்கையின் சமாதானம்

அதற்கு இது சமாதானமாம்:—வியாவர்த்தக சம்பந்தத்திற்குப் பிந்திய காலத்தில் உபலக்ஷித வியவகார முண்டாகின்றது; பூர்வகாலத்தி லுண்டாகிறதில்லை. எங்ஙனம் காக்கையின்

சம்பந்தத்திற்குப் பிந்திய காலத்தில் காக்கை யுபலக்ஷித வியவகார முண்டாகின்றதோ, அங்ஙனமே ஞாதத்தன்மையின் உற்பத்திக்கு முந்திய சம்சாரதசையில் ஞாதத்தன்மை யுபலக்ஷிதம் அதிஷ்டானமன்று. பிந்திய காலத்தில் ஞாதத்தன்மை யில்லாத காலத்திலும் ஞாதத்தன்மை உபலக்ஷிதம் அதிஷ்டானமாம்; அதன் சொரூபமே சம்சார நிவிருத்தியாம்.

352. நியாயமகரந்தத்தினும் வேறுவகையாக அதிஷ்டானத்திற்கு வேறான கற்பித நிவிருத்தியின் சொரூபம்

கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டானத்தினும் வேறுமென்னும் பக்ஷத்தில் ஆக்கிரக முண்டாயினும், நியாயமகரந்த நூலில் கூறியபடி அத்தியந்த அப்பிரசித்தமான ஐந்தாவது வகையை அங்கீகரித்தல் நிஷ்பலமாம். ஏனெனின், அநிர்வசநீயத்தின் நிவிருத்தி அநிர்வசநீயமாம். நிவிருத்தி யென்பது துவம்ஸத்திற்காம். அந்தத் துவம்ஸத்தினை அநந்த அபாவ வடிவமாகக் கொண்டு, அதிஷ்டானத்தினும் வேறாகக் கொள்ளின், மோக்ஷதசையில் துவைத முண்டாம். அந்தத் துவம்ஸம் அநந்த அபாவவடிவமன்று; க்ஷணிகபாவ விகாரமாம். யாஸ்கரென்னும் முனிவர் வேதத்தின் அங்கமாகிய நிருக்தத்தைச் செய்திருக்கின்றனர். அதில் ஜந்மம் (பிறப்பு), சத்தை (இருப்பு), விருத்தி (வளர்ச்சி), பரிணாமம் (விகாரம்-திரிபு), அபக்ஷயம் (குறைவு), விநாசம் (அழிவு) என ஷட்பாவவிகாரத்தைக் கூறியிருக்கின்றனர். பாவமென்பது அநிர்வசநீயவஸ்து. அதன் விகார மென்பது அவஸ்தா விசேஷமாம். அநிர்வசநீயத்தின் அவஸ்தா விசேஷமாயிருத்தலின் ஜன்மமுதல் நாசபரியந்தம் அநிர்வசநீயமாம்.

எங்ஙனம்: ஜன்மம் க்ஷணிகமாம். ஏனெனின், முதற்கண சம்பந்தத்தை ஜன்ம மென்பர். முதற்கணத்திற் "பிறக்கின்ற" தென்னும் வியவகார முண்டாகின்றது. இரண்டாவது கணத்தில் "பிறந்த" தென்னும் வியவகார முண்டாகின்றது; "பிறக்கின்ற" தென்னும் வியவகார முண்டாகிறதில்லை. அங்ஙனமே தண்டமுதலியவற்றாற் கடத்திற்குச் சூரணமுதலியதன்மை யுண்டாகின்றது. அப்பேர்து ஒரு க்ஷணத்தில் "கடம் நசிக்

இன்றது" என்னும் வியவகார முண்டாகின்றது. இரண்டாவது முதலிய க்ஷணங்களில் "நசித்தது குடம்" என்னும் வியவகார முண்டாகின்றது; "நசிக்கின்றது குடம்" என்னும் வியாவகார முண்டாகிறதில்லை. ஆதலால், ஜன்ம நாசங்கள் க்ஷணிகமாம். வர்த்தமான ஜன்மம் கடத்திற் குளதென்பது "பிறக்கின்றது கடம்" என்னும் வாக்கியத்தினால் தோற்றுகின்றது. அதீத ஜன்மம் கடத்திற்காமென்பது "பிறந்தது கடம்" என்னும் வாக்கியத்தாற் றோற்றுகின்றது.

எங்ஙனம்: கடத்திற்கு வர்த்தமான நாச மிருக்கின்றதென்பது "நசிக்கின்றது குடம்" என்னும் வாக்கியத்தினால் தோற்றுகின்றது. "நசித்தது குடம்" என்னும் வாக்கியத்தினால் கடத்தின் அதீதநாசம் தோற்றுகின்றது. துவம்ஸவடிவநாசம் அநந்தமா (ஈறில்லாததா)யின், நாசத்தில் அதீதத்தன்மை வியவகார முண்டாகலாகாது. ஆதலால், நாசம் அநந்தமன்று; க்ஷணிகமாம். பாவவிகாரமா யிருத்தலின் அபாவ வடிவமன்று அநுபலப்தி நிரூபணத்தில் அநந்த அபாவத் துவம்ஸம் சொல்லப்பட்டிருக்கின்றது. அது நியாயக் கிரமமாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. வேதாந்த மதத்தில் அத்தியந்தாபாவ மொன்றே அபாவ பதார்த்தமாம். இவ்வாற்றால் கற்பிதத்தின் நிவிருத்தி க்ஷணிகமாம்.

எங்ஙனம் வித்வானது அநிர்வசநீய சரீரமுதலியன ஞானத்திற்குப் பின்னும் பிராரத்த பலத்தினால் சிறிதுகால மிருக்கின்றனவோ, துவைதத்திற்குச் சாதகமன்றோ, அங்ஙனமே ஞானத்திற்குப் பிந்தியகாலம் கற்பிதத்தின் நிவிருத்தி ஒருக்ஷண மிருக்கின்றது. ஆதலால், துவைதத்தின் சாதன மில்லை. ஒரு க்ஷணத்திற்குப் பின் கற்பித நிவிருத்தியின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. அது பிரஹ்மவடிவமாம்.

353. முற்கூறியமதத்தில் புருஷார்த்தத்தின்சொரூபம் (துக்காபாவம் அல்லது கேவல சுகம்)

இம் மதத்தில் துக்க நிவிருத்தி க்ஷணிகபாவமா யிருத்தலின் புருஷார்த்தமன்று; துக்காபாவம் புருஷார்த்தமாம். அல்லது துக்காபாவமும் புருஷார்த்தமன்று; கேவலம் சுகமே புருஷார்த்தமாம். ஏனெனின், அநந்த துக்கத்தோடு கூடிய கிராம

மிய தர்ம முதலியவற்றின் சுக மிருக்கின்றது. அதில் சுபாவமாகச் சகல ஜீவர்களுக்கும் பிரவிருத்தி உண்டாகின்றது, துக்காபாவமும் புருஷனது அபிலாஷைக்கு விஷயமாயின், முற்றும் துக்கத்தினால் விழுங்கப்பட்ட சுகத்தில் புருஷனது அபிலாஷை உண்டாகலாகாது. யாண்டுத் துக்காபாவத்தில் அபிலாஷை உண்டாகின்றதோ, ஆண்டும் சொரூப சுகாநுபவத்தின் பிரதிபந்தகம் துக்கமாம். அதன் அபாவகாலத்தில் சொரூப சுகத்தின் வெளிப்படுதல் உண்டாகின்றது. ஆதலால், துக்காபாவத்தில் புருஷனது அபிலாஷை சொரூப சுகத்தின் பொருட்டாம். இவ்வாற்றால் முக்கிய புருஷார்த்தம் சுகமாம்; துக்காபாவ மன்று. ஆதலால், துக்கத்தின் அத்தியந்தாபாவத்தினையும் பிரஹ்ம வடிவமாகக் கொள்ளாது, அநிர்வசநீயமாகக் கொள்ளின், அதற்கும் பாதம் சம்பவிக்கின்றது. ஆனால் அநிர்வசநீயத்தின் பாதவடிவ அபாவமோ அதிஷ்டான வடிவமென்பது அநுபவசித்தமாம். ஆதலால், அஞ்ஞானத்தோடு பாவா ப வடிவப் பிரபஞ்சமும் அதன் நிவிருத்தியுமாகிய சகலமும் நிர்வசநீயமாம். அவ்வெல்லாவற்றிற்கும் அதிஷ்டான வடிவமாத முண்டாகத் துவைதமின்றிய சொரூபமான பரமாநந்த வடிவ பரமபுருஷார்த்தம் மோக்ஷமாம்.

எட்டாவது பிரகாசம்

ஜீவேசுவரசொரூப விருத்திப் பிரயோஜனத்தோடு

கற்பித நிவிருத்தி சொரூப நிரூபணம்

முடிந்தது.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.